அம்மா

(அன்னை சாரதாமணி தேவியின்
வாழ்க்கைக் காவியம்)

ரா. கணபதி

கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

முதற் பதிப்பு: மே 10, 1978

விலை ரூ. 30/-

வெளியிட்டோர்:
கலைமகள் காரியாலயம்,
55-56, முண்டகக்கண்ணி அம்மன் கோயில் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600004

அச்சிட்டோர்:
எம். எல். ஜே. பிரஸ் (பி) லிட்.,
மயிலாப்பூர், சென்னை-600004

பதிப்புரை

'அம்மா' என்று கூறும்பொழுது நம் மனத்தில் எவ்வளவு இன்ப நினைவுகள்! நம்மைப் பெற்று வளர்த்துப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்து ஆளாக்கி, அமுதூட்டி, அரவணைத்து, அன்பு காட்டி வாழ்க்கையில் இன்பமூட்டிய அவரவர்களுடைய 'அம்மா'வின் நினைவு எவருக்குமே மனத்தை நெகிழச் செய்யாமற் போகாது.

நம் அம்மாவை நினைக்கையிலேயே இவ்வளவு உணர்ச்சிகள் ஏற்படுமானால், நம் நாட்டுக்கே-ஏன்-உலகத்துக்கே 'அம்மா'வாக இருந்து, அன்பையும் அமுதையும் மட்டுமின்றி, பக்தியையும் சேர்த்து ஊட்டி உய்விக்க வந்த 'அம்மா' சாரதாமணி தேவியை நினைத்தால் எப்படி இருக்கும் என்பதைத் திரு ரா. கணபதி அவர்கள் இப்புத்தகத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதை வெறும் வரலாறாக-வாழ்க்கைச் சரிதமாக மட்டுமின்றி, ஒரு பக்திக் காவியமாகவே இயற்றித் தந்திருக்கிறார்கள். படிக்கப் படிக்க, மன நெகிழ்ச்சியையும் பக்தியையும் ஊட்டும் ஒரு காவியமாகவே இது படைக்கப்பட்டிருப்பது தெரியும். 'தேவியின் பிறப்புமுதல் மறைவு வரை' அன்னையின் வாழ்க்கை மட்டுமின்றி அவரது 'பதி'யும், குருவுமான பகவான் ராமகிருஷ்ணரைப்பற்றியும் அவரது வாழ்க்கையுடன் தொடர்பு கொண்ட பலரைப்பற்றியும் இதில் விரிவாகத் தரப்பட்டுள்ளது.

'கல்கி'யில் சுருக்கமாக வெளிவந்த இந்தத் தொடர், ஆரம்பம் முதல் கடைசிவரை, ஒவ்வொரு பகுதியும் நன்கு விரிவாகத் திருத்தி எழுதி வெளியிடப்படுகிறது. நீண்ட பல புதிய பகுதிகளும் சேர்க்கப்பட்ட ஒரு பூரணமான நூலாக இது வெளிவருகிறது.

முன்னுரை எழுதிச் சுமார் ஆறாண்டுகளுக்குப் பின்புதான் 'அம்மா' நூல் உருவில் உலா வர உள்ளம் கொண்டிருக்கிறாள். தன் வாழ்நாளில் ஒளிந்து ஒளிந்து வாழ்ந்தவள், எழுத்திலும் வெளிச்சத்திற்கு வர இத்தனை காலம் எடுத்துக்கொண்டுவிட்டாள்!

எழுதப் படிக்கவே தெரியாதவளாகப் பொதுநோக்கில் தென்பட்டாலும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸராலேயே ஆதி சாரதையின் அவதாரம் எனக் கூறப்பட்ட நம் சாரதாதேவியின் சரிதம் சரஸ்வதி தேவிக்குரிய அக்ஷய திரிதியை அன்று வெளியாகும் பொருத்தத்தை எண்ணி வியக்கிறோம்.

—பதிப்பாளர்.

ௐ

யா தேவீ ஸர்வபூதேஷு மாத்ருரூபேண ஸம்ஸ்திதா |
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம: ||

அனைத்துயிர்களுள்ளும் அன்னையுருவில் எந்த தேவி நிலைகொண்டிருக்கிறாளோ அவளுக்கு வந்தனம், வந்தனம், முக்காலும் வந்தனம்.

(தேவீ மாஹாத்மியம்)

தீயோரில் தீயோராகத் தோன்றுபவருள்ளும் துளித்துளி துலங்குவதான, ஸகல ஜீவப் பிரேம ஸாரமான தாய்த் தத்துவத்துக்கும்,

அதன் ஆதரிச வடிவான சரிதநாயகி சாரதா மா—வுக்கும்,

அவளது அநவரத அன்புக்காப்பினை எனக்கு அநுதின அநுபவமாக அநுக்ரஹித்துவரும் ஸத்ய ஸாயி மா—வுக்கும்,

லோகமாதாவாம் பிரேம ஸாகரத்துக்கு வடிகால்களென என்னிடம் உள்ளன்பு பூண்ட ஏராளமான அன்னையருக்கும்—

அவர்களில் குறிப்பாக,

எளிமையும் உயர்வும் ஒருங்கே கூடிய ஆண்டவன் பிச்சி அம்மாவுக்கும்,

அலுத்துக்கொள்ளாமல் ஓயாதுழைக்கும் சாரதையின் அருமைப் பாங்குக்கு உருவகங்களான—

என் வளர்ப்புத் தாய் போன்ற சிற்றன்னை கமலத்துக்கும்,

ஜனகமாதா ஜயலக்ஷ்மிக்கும்

ஸமர்ப்பணம்

பொருளடக்கம்



ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ண குருமஹராஜ்



தூய அன்னை சாரதை

முகவுரை

ஸமுந்மீலத் ஸம்வித் கமல மகரந்தைக ரஸிகம்
பஜே ஹம்ஸ த்வந்த்வம் கிமபி மஹதாம் மாநஸ சரம் |
யதாலாபாத் அஷ்டாதசகுணித வித்யா பரிணதி :
யதாதத்தே தோஷாத் குணமகிலம் அத்ப்ய : பய இவ ||

அற்புத ஹம்ஸத் தம்பதியாம் !
அறிவுக்கமல மது அருந்துவராம் !
அருளுடை மனப்பொழில் நீந்துவராம் !
அருங்கலை அனைத்தும் அளிப்பவராம் !
அற்பர்நம் குற்றமாம் அப்பினை நீக்கி
சொற்பமே காணும் குணப்பால் கொள்ளும்
அன்ன வடிவான அன்னையை அண்ணலை
அன்புடன் உன்னி இன்புறுவோமே !

(ஆதிசங்கரர் அருளிய ஸௌந்தர்ய லஹரி—சுலோ. 38)

*   *   *

சாந்தாம் சாரத பார்வணேந்து வதநாம்
பத்மாஸநே ஸம்ஸ்திதாம்
பக்த்யா பாவன ராமக்ருஷ்ண
சரணாம்போஜாம் பஜந்தீம் சிவாம் |
ஸம்ஸாராநல தக்த பக்த ஹ்ருதயே
சச்வத் க்ருபா வர்ஷிணீம்
அம்பாம் நிஸ்துல கீர்த்தநீய சரிதாம்
ஸ்ரீ சாரதாம் பாவயே ||

(தேவி சாரதாமணி தியானம்)

சாந்தை, சரத்கால சந்திர முகத்தினள்;
சாற்றரும் பதுமாசனத்தினில் வீற்றவள்;
பாவனர் ராமகிருஷ்ணரின் பதமலர்
பக்தியுடன் பணி பரமசிவை அவள் ;
அனலெனப் பவத்தீ அல்லல்செய் உள்ளத்தில்
அனவரதம் அருள் மழையினைப் பொழிபவள்;
நிகரிலை இவளது வாழ்வெனப் போற்றிப்
பகரரும் சரிதைகொள் சாரதை அம்பிகை
நினைவினை நெஞ்சினுள்
நிறைத்திடு வோமே !

புண்ணிய தீர்த்தத்தின் படித்துறையில் நிற்கிறோம், அலை எழாத தெளிந்த திருக்குளம் அது. தடாகத்தைப் பார்க்கும்போதே ரம்மியமாக இருக்கிறது. ஆனாலும் குளத்தில் அமுழ்ந்திக் குளித்துப் பழகாதவருக்கு உரிய கூச்சமும் உண்டாகிறது. புண்ணிய தீர்த்தத்தில் காலை வைத்துப் பிரவேசிப்பதா, தெளிந்த தடாகத்தில் துளைந்து கலக்கலாமா என்று மனக் கலக்கம் உண்டாகிறது. சாரதையின் சரிதை மகத்தான புண்ணிய தீர்த்தம்.

சொல்லினுக்(கு) எளிதாகவும் நின்றிடாள்
சொல்லை வேறிடம் செல்ல வழிவிடாள்

என்று கவி பாடியது போல, வார்த்தையில் வடிக்க முடியாத சரிதத்தை எழுதச் செய்துவிட்டாள். ''வேதாந்திகளுக்குப் பிரம்ம சூத்திரம்—உபநிஷதம்—கீதை ஆகியவை 'பிரஸ்தான த்ரயம்' என்ற முப்பெரும் பிரமாண நூல்களாவது போல், ராமகிருஷ்ண பக்தர்களுக்கு, குருமகாராஜ்—தூய அன்னை—விவேகாநந்தர் ஆகிய மூவர் சரிதங்கள் பிரஸ்தான த்ரயமாகும். இவற்றில் இரண்டினை எழுதியதால் மூன்றாவதையும் எழுதி நிறைவு செய்ய வேண்டும்'' என்று மயிலை ராமகிருஷ்ண மடத்துப் பிரம்மசாரி தயாள் வலியுறுத்தியதை மறுக்க இயலவில்லை, பிழையே செய்திராத தூய மாதா, பிழை மலிந்த நான் அவளது பாவன சரிதத்தை எழுதத் திருவுளம் கொண்ட தயாள குணத்தின் அடையாளமாகவே ஸ்ரீ தயாள் என்னை வற்புறுத்துமாறு செய்தாள் எனக்கொண்டு சாகஸத்தில் இறங்குகிறேன்.

தேவியின் காரணமற்ற கருணையைத்தான் என்னென்பது! அவளைப்பற்றி எண்ணுவதும் எழுதுவதும் எப்பேர்ப்பட்ட புண்ணியம்! தன்னைப்பற்றி எண்ணவும் எழுதவும் அவள் என்னிடம் தயைகூர்ந்தது, நான் எப்படி இருந்தாலும் அவள் எனக்கும் அம்மாவே என்ற தாயன்பில் பிறந்ததேயாகும்.

இக்காலப் பெண்கள் பெரும்பாலோர் தம் தர்மங்கள் பலவற்றை மறந்தோ மறுத்தோ வருகிற தருணத்தில், இந்த ஸ்திரீதர்ம உபநிஷதத்தை எழுத நேர்ந்ததில் எனக்கு மிகுந்த ஆறுதல் உணர்வு ஏற்பட்டிருக்கிறது. இதைப் படிக்கும் பெண்கள் அனைவரும் பாரதப் பண்பின் பூரணநிலைக்குத் திரும்பிவிடுவர் என்று நான் மனப்பால் குடிக்கவில்லை. என்றாலும் என்னிடம் ஏதோ சிறிது எழுதுகிற சக்தியைத் தந்துள்ள அம்பிகை அந்தச் சக்தியைப் பராசக்தியின் பிரத்தியேக வடிவான பெண் குலத்தின் நன்மைக்கு ஓ:ளவேனும் ஹேதுவாகச் செலவிடச் செய்திருக்கிறாள் அல்லவா? அந்த அளவில் நிறைவு காண்கிறேன்.

என் சுயதிருப்திக்கு இன்னொரு காரணமும் உண்டு: இதற்கு முன் மீராவின் சரிதையைக் 'காற்றினிலே வரும் கீதம்' என்ற

பெயரில் எழுதினேன். அவள் 'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய' என்ற கீதா வாக்கியத்தின் இலக்கணமாக, பெண்களுக்கு என்றே ஏற்பட்ட அடக்கம், குடும்பப் பொறுப்பு முதலியவற்றையும் தூக்கி எறிந்து விட்டு, கண்ணன் அன்பு மதுவிலேயே போதை கொண்டு கூத்தாடி வாழ்ந்தவள். எந்த விதிக்கும் விலக்கு உண்டு அல்லவா? பாரத ஸ்திரீ தர்ம விதிகளுக்கும் ஓரளவு விலக்காகப் பராசக்தியால் அனுப் பப்பட்டாள் மீரா. அவள் செய்ததெல்லாம் மக்கட் சமூகத்துக்கு முன்னுதாரணம் ஆகமாட்டா. பொதுவாகப் பெண் குலத் தினர் யாவரும் பெண்மையின் மென்மை பணிவு அடக்கம் இவற் றைக் கைக் கொண்டு, குடும்பப் பொறுப்புக்களை வகித்துக்கொண்டு, ஊடே ஊடே தெய்விகத்தில் ஊற வேண்டியவர்களே யாவர். மீராவுக்கு, இயற்கையாக ஏற்பட்ட அதீத பரவசங்களை மற்றப் பெண் கள் வலிந்து ஏற்று, குடும்பக் கடமைகளைச் சரிவர ஆற்றாமல், ஆண் கள் கூட்டத்தில் அதிகமாக ஈடுபட்டு, பஜனை சங்கீர்த்தனம் என்று கிளம்பினால் வீட்டு வாழ்வு, சமூக வாழ்வு இரண்டிலுமே விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படும்.

இந்த அம்சத்தில் நம் அம்மா சாரதாமணி தேவி வெகு கண்டிப் பாக விதி செய்திருக்கிறாள். நல்ல எண்ணத்தோடு பல சாதுக்களை அடுத்து வந்த ஒரு பக்தை, இளைஞர்களான மகான்களையும் நாடிப் போவதுண்டு. அவளிடம் சாரதாதேவி, 'என் மகளே! நீ அவா ளிடம் தூய எண்ணத்தோடும், பக்தியோடும் போறது வாஸ் தவம். ஆனால் மற்றவாள் மனசு எப்படி ஆகுமோ? பாவம் சம்ப விச்சால் இதிலே உனக்கும் பங்கு வந்துவிடும். அது தவிர, உலகம்னு ஒண்ணு இருக்கு. அதுக்குக் கட்டுப்பட்டு இருக்கிறதே நல்லது" என்றாள். தெய்விக காரியங்கள் உட்பட எதிலுமே பெண்கள் ஆட வரோடு நெருங்கிப் பழகுவதை அம்மா திட்டவட்டமாக ஆட்சேபித் திருக்கிறாள்; அது மட்டுமின்றி, பெண்களுக்கு இயல்பாகப் பரவச பக்தி பாவங்கள் எழும்பாவிட்டால், அவர்கள் அதற்காக ஆர்வம் கொண்டு தவிக்கவேண்டியதில்லை என்றும் தன் வாழ்க்கையில் காட்டியிருக் கிறாள். பெண்கள் இவ்விதம் ஆத்மாநுபவம், உலகியல் இரண்டி லுமே அடங்கியிருப்பதைத்தான் ராமகிருஷ்ண பகவானும் ஸ்திரீ தர்மமாகக் கருதினார். தொன்றுதொட்டுப் பாரதப் பெண்டிர் அநு சரித்த அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவற்றேயே பரமஹம்ஸரும் விதித்தார். சாரதாஹம்ஸம் அதையே வாழ்ந்து காட்டிற்று. இன்று நம் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களும் இந்தத் தர்மந் தான் நம் பெண்குலத்துக்கு ஏற்றது எனக் கருதுகிறார்கள்.

நம் ஸ்திரீ சமூகம் இத்தர்மத்தை ஓரளவு மறந்தும் மறுத்தும் வரும்போது தர்ம அதீதமான வாழ்வு நடத்திய மீராவின் சரிதையை

நான் எழுதினேன். அவள் சாமானிய தர்மத்தை அநுஷ்டிக்காததற்குக் காரணம் அவள் அதற்கு மேம்பட்டவள் என்பதே. ஆனால் தர்மத்துக்குக் கீழ்ப்பட வேண்டியவர்களும் அவள் சரிதையை முன்னோடியாகக் கொள்ள நேரலாம் அல்லவா? ஆனபடியால் 'காற்றினிலே வரும் கீதம்' எழுதிய பிறகு, ஒரு நல்ல காரியம் செய்யப் போய், வேண்டத்தகாத விளைவுக்கும் ஹேது உண்டாக்கி விட்டோமோ என்று சிறிது குற்ற நெஞ்சுடன் வருந்திக் கொண்டிருந்தேன். இச் சமயத்தில், குடும்பப் பெண்ணுக்கான சகலப் பண்புகளுமே ஒரு ஸ்வரூபமாகத் திரண்டுவந்த ஸ்ரீ சாரதாமணீ, தனது சரிதையை எழுதச் செய்து, என்னைப் பிராயச்சித்தம் புரிய வைத்தாள்! மீராவின் சரிதையை ரசித்துக் கரையாலாமே தவிர, அதை வலிந்து மேற்கொள்ளலாகாது (தாமாகவே மீராவின் நிலைக்கு எழும்புகிறவர்களைப்பற்றிப் பேச்சே இல்லை). சாரதா சரிதமோ அனைவர்க்கும் ஓர் ஆதரிச வாழ்வு. "என் குழந்தைகளே! இப்படி இப்படி வாழுங்கள்!" என்று அவர்களுக்கு வழிகாட்டியாக வாழ்வின் சகல அம்சங்களையும் சாரதையாக வந்து அம்பாள் நடித்துக் காட்டியிருக்கிறாள். மீரா, "லோகலாஜ் கோயி"—உலக வெட்கம் தொலைந்தது—என்று பிரேம மதத்தில் மதர்த்துப் பாடியவள். நம் அம்மாவோ "லஜ்ஜாபட ஸமாவ்ருதை"யாக வெட்கத்தில் முக்காடிட்டுத் தன்னை நன்கு மறைத்துக்கொண்டதன் மூலமே பெண் தர்மத்தை வெளியிட்டு வாழ்ந்தாள்.

மறைப்பினாலேயே வெளியீடு செய்கிற அற்புதத்தை எழுத்தில் கொண்டு வருவது சாதாரணமான காரியமா? குளிரன்பு பொழிபவள் அம்மா எனினும், சுகப்பிரம்மத்தை நிகர்த்த தூய பிரம்மசரியம் காத்த தீயும் அவள் அல்லவா? உள்ளத்தில் நெருப்பை வைத்துக்கொண்டுள்ள அந்தத் தடாகத்தில் பிரவேசிப்பது எளிதா? இருந்தாலும் அம்மா எப்பிழையும் பொறுத்தருள்வாள் என்ற நம்பிக்கையில் அசட்டுத் துணிச்சலுடன் தடாகக் கரைக்கு வந்தாகி விட்டது!

அவளது சரிதைக்கு நிகரில்லை (நிஸ்துல சரிதாம்) என்கிறது ஸ்ரீசாரதாமணி தேவியின் தியான சுலோகம். இது உபசார வார்த்தை அல்ல; மெய்யாகவே, மற்ற பல மகாபுருஷர்களின் வரலாறுகளிலிருந்து மாறுபட்டு, தனித்தன்மையுடன் நிற்பது சாரதையின் சரிதை. 'மகா' புருஷர்கள் என்னும்போதே, அதில் சாமானிய மக்களுக்கு அப்பாற்பட்ட மகிமையின் பேரொளி வீசுகிறது. ஆனால் சாரதையின் வாழ்வில் இப்படிப்பட்ட ஜாஜ்வல்லியம் இல்லை. அற்புதங்கள் இயற்றிய மகான்களிடையே அற்புதங்களை எல்லாம் அள்ளி விழுங்கி விட்டு, இவளா விழுங்கியவள் என்றுகூடத் தெரியாதபடி எளிமையி

லும் எளிமையாக வாழ்ந்தாள் சாரதா தேவி. மகிமையின் பேரொளியைவிட எளிமையின் சாந்த ஒளியும், அன்பின் தண் ஒளியுமே அவள் வாழ்வில் அதிகம்.

உலக மினுமினுப்பைவிட்டு மற்ற மகாபுருஷர்களின் வரலாறுகளில் நாம் பிரவேசிக்கும்போது, மின்விளக்கு அலங்காரம் கொண்ட உல்லாசப் பூங்காவிலிருந்து, அடுக்கடுக்காக லட்ச தீபம் ஏற்றிய ஆலய சந்நிதிகளுக்குள் போகிற உணர்வு உண்டாகும் எனலாம். நெருக்கமான அந்தத் தீப வரிசைகளைக் கண்டபின், காற்றோட்டமான வெளிப் பிராகாரத்துக்கு வரும்போது, நம்மை அறியாமலே தலைதூக்கி வானத்தைப் பார்க்கச் சில்லென்று நட்சத்திரங்கள் தென்படும்போது ஏற்படும் நிம்மதி சாரதையின் சரிதையில் கிடைக்கிறது. பரிபூரண எளிமைதான் அதற்குக் காரணம்.

எளிமை என்பதால் குண விசேஷங்களில் குறைந்தது என்று அர்த்தம் அல்ல. குண விசேஷங்கள் அடர்ந்து செறிந்தபோதிலும் எளிமையாக இருக்கும் அதிசயம் அவ்வாழ்க்கை. அதை வார்த்தையில் சொல்லப் புகுந்தால் அடர்த்தி நீர்த்துப் போய்விடும். தண்ணீரைக் காட்டிலும் ஓர் அணு அதிகமாகப் பிராணவாயு அடர்ந்திருப்பது ஹைட்ரஜன்-பெர்-ஆக்ஸைட். சீசாவுக்குள் அதைப் பார்த்தால் தண்ணீரைப் போலவே தெளிவாக, எளிமையான பண்டமாகத்தான் தோன்றும். உண்மையிலோ நீரைவிட அதன் சக்தி பெரிது. அழுக்குகளை நொடியில் கரைத்து அகற்றிவிடும். சீசாவில் அதைப் பத்திரமாக மூடியிட்டுக் காப்பாற்றியாக வேண்டும். கொஞ்சம் திறந்து வைத்தாலும் அதிகப்படி பிராணவாயு ஓடியே போய்விடும். சாரதா சரித்திரத்தை மனத்துள் பத்திரமாகப் பொதிந்து வைத்துக்கொண்டால் சித்தத்தின் அழுக்கெல்லாம் போகும். வாக்கில் வெளிக்கொண்டு வந்தாலோ அதன் எளிமை அடர்த்தி போய்விடும்.

இன்னோர் உதாரணமும் சொல்லலாம்: பிராணவாயுவில் ஒவ்வொரு மூலக் கூற்றிலும் இரண்டு அணுக்களே இருக்கும். இரண்டுக்குப் பதில் மூன்று அணுக்கள் ஒரே மூலக்கூற்றில் நெரிந்து இருந்தால் அது ஓஜோன் (Ozone) எனப்படும். தனியாக ஓஜோனைப் பிரித்து வைத்தால் அது எதையும் எரித்துவிடும். இந்த எரிச்சக்தியே, நீரணுக்கள் கசிந்துள்ள கடற்காற்றாகி மக்களின் சுவாசத்தில் இதமாகக் கலந்து உட்செல்லும்போது அற்புதமாக உயிர்ச்சக்தி ஊட்டுகிறது. கருணைசமுத்திரத்தின் நுண்திவலைகள் மேவிய ஞான சக்தியான ஓஜோன் நம் அம்மா சாரதை. அவளது அபரிமித ஞான சக்தியைத் தனியே பிரித்துப் பார்க்க நமக்குத் திராணியில்லை. ஓஜோனில் பஸ்மமாகும் பண்டம்போல் நம் அறிவுத் திறனும் அங்கு எரிந்து போகும்.

நமது அறிவை இதயத்துள் முழுக்கிக்கொண்டாலே, கடற்காற்றென அவளும் கருணைத் துளிகளைத் தனது ஞானசக்தியில் நிறைவித்து நமக்குள் இதமாகப் புகுந்து உயிரை வளர்ப்பாள். ஒரு முறை ராஜாஜி கூறினர் : ''பாதரக்ஷை உபயோகமுள்ளதுதான். ஆயினும் ஆலயத்துள் பிரவேசிக்கும்போது அதை வெளியே விட்டுத்தான் செல்லவேண்டும். அவ்வாறே புத்தி சாதுரியம் எத்தனையோ உபயோகமுள்ளதாயினும், நம் புராண, சாஸ்திரங்களில் பிரவேசிக்கும்போது அதை வெளியே வைத்துவிட்டு, அடக்கத்துடன்தான் நுழைய வேண்டும்.” தேவி சாரதையின் வரலாற்றைப் படிப்பவர்களும் இந்த விநயசம்பத்தை மேற்கொண்டாலே பூரணபலன் பெறலாம். இங்கே மூளைக்கு அதிகம் வேலை இல்லை. அதன் துராக்கிரகத்தைத் தடுத்து, இதயத்தாலேயே அணுகவேண்டும். இதயத்தாலுங்கூட அவளை முழுமையாகக் கட்டிப் பிடிக்க முடியாது. ‘அவளைப் பிடிக்கிறோம்,’ என்று எண்ணும்போதே, ‘அவளது எளிமையைப் பீடிக்கிறோம்’ என்றும் ஆகிவிடுகிறது.

ஷெல்லி பாடினன் :

> Ye happy Dead, whom beams of brightest verse
> Are clouds to hide, not colours to portray.

''மறைந்து போன மகிழ்ச்சி ஜீவன்களே! பேரொளி வீசும் காவியத்தால் உங்களை வருணிக்க முற்பட்டால் என்ன ஆகிறது தெரியுமா? நானா வண்ணம் வீசும் அந்தக் கவி வாக்குகள் உங்களை விளக்குவதாகக் காணோம்! நேர் மாறாக அந்த வருணனை வர்ணங்களே உங்களை மூடி மறைக்கும் மேக மூட்டமாகிவிடுகின்றன.”

தெள்ளிய சாரதையின் திவ்விய சரிதையை வார்த்தையால் வர்ணிக்க முயல்வது இத்தகைய காரியந்தான். ஆனால் இதைத் தவிர்க்க இயலாது. வீடு கட்டுவதற்காக எழுப்பும் சாரம், கட்டி முடிக்கும் வரையில் அந்த வீட்டையே மறைப்பது போல், சாரதையின் சரிதையைச் சமைக்க உதவும் வார்த்தைகளே அவளை மறைக்கவும் செய்கின்றன. கவிதைக் கட்டிடம் பூர்த்தியான பின் வாசகர்கள் வார்த்தைச் சாரத்தைப் பிரித்து எறிந்துவிட்டு, உள்முகமாகத் தியானித்தால் சாரதையின் ஸாரத்தை அநுபவிக்கலாம். எளிமையே அந்த ஸாரம்.

இங்கே எழுத்தில் விரிய இருக்கும் கதை வாசகர்களுக்கு அற்புதமாக, அதிசயமாக, வியப்பாக, விநோதமாக இருக்கலாம். இந்த அம்சங்களில் ‘உண்மைச் சாரதை’யைவிடக் ‘கதைச் சாரதை’க்கு அடர்த்தி அதிகம். பெரிய பரந்த சமுத்திரமாக, பிரேமைக் கடலாக

அடிமட்டத்தில் இருந்தவள் மேற்பரப்பிலே எழுப்பிய அதிசய அலை வரிசைகளைத்தான் நாம் எழுத்தில் அதிகம் பார்ப்போம். அடிமட்டத்துக்குச் செல்லவோ, சென்றாலும் அதை வர்ணிக்கவோ வார்த்தைக்குத் திராணி இல்லை, அடியில் இருப்பது அநுபவம், மேலே தெரிவது சம்பவம். சம்பவங்களை ஊடுருவி அநுபவத்தைப் பக்தியுடன் தியானித்து, இச்சரிதையை வாசகர்கள் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

எளிமையால்மட்டும் சாரதையின் சரிதை தனித்து நிற்கவில்லை. வேறு பல விதங்களிலும் அது 'நிஸ்துல'மானது. அதிலே பல புதுமைகள். அவள் இல்லறம் நடத்தியவள்; ஆனால் அதில் உலகோர் நடத்தும் 'தாம்பத்தியம்' கிடையாது. பதிதேவர் மறைந்த பின்பும் அவள் கைம்பெண் கோலம் போடவில்லை; கைவளையலைக் கழற்றாத சுமங்கலியாகவே இருந்தாள். சுமங்கலியானபோதிலும் அவள் சந்நியாசினி. அவ்வாறெனில், சந்நியாச தீக்ஷை பெற்றாளா? இல்லை. காவி உடுத்தாளா? இல்லை. ஆனால் விவேகாநந்தர், பிரம்மாநந்தர் போன்ற சந்நியாச சிம்மங்கள் அவள் எதிரிலே வரவே கூசும் அளவுக்குத் துறவிலே கொழுந்து விட்டெரிந்தாள். அவளால் துறவற தீக்ஷை அளிக்கப்பட்ட சீடர்கள் பலர் பரம ஞானிகளாயினர். 'சீடர்கள்' என்றால் அவள் குரு ஸ்தானம் வகித்தவளா? வகித்தாள். ஆனால் அதிலும் புதுமை. 'இதோ உபதேசம்' என்று அவள் புத்தகம் எதுவும் எழுதியதில்லை; மேடையில் ஏறி ஒரு பிரசங்கம் செய்ததில்லை; அறிக்கை விட்டதில்லை. அவளே உபதேசமாக வாழ்ந்தாள். மற்ற குருமார்களுக்காகச் சீடர்கள் மெய் வருத்தம் பாராமல் சேவை செய்வர். இவளோ சீடர்கள் செய்யாமல் விட்ட மந்திர ஜபத்தைத் தானே இரவு பகல் பாராமல், உடற்பிணியைப் பாராமல், மரணப் படுக்கையில்கூட லட்ச லட்சமாக ஜபித்தாள். ஏன்? சீடர்கள் என்பதற்குமேல் அவர்கள் இவளுடைய குழந்தைகள்; குரு என்பதற்கு மேல் இவள் அவர்களுக்கு அம்மா. தாம்பத்தியம் புரியாத சாரதை மலடிதான். ஆனால் அவளைப்போல் அன்றும், இன்றும், இனியும் எண்ணற்றவர்களுக்கு அம்மாவாக இருந்தவர், இருப்பவர், இருக்கப் போவார் யாருண்டு?

அதிசய சுமங்கலி, அதிசய சந்நியாசினி, அதிசய குரு, அதிசயங்களை விழுங்கிவிட்டு, அதிசயமில்லாத சாமானிய அம்மாவாக, 'தெய்வமே' என்று இருந்தாள். ஆனாலும் அவளே தெய்வம் எனக் கொண்டு அவளை முறைப்படி வழிபட்டவர்களும் உண்டு. அவர்களுக்கு அதிசயத்தெய்வமாக இருந்தாள். சாரதாமணி அஷ்டோத்தர சத நாமாவளியில் 'பக்த கிங்கரி' என்பது ஒரு பெயர். பக்தர்கள் தாம் தெய்வத்துக்குக் கைங்கரியம் செய்வது வழக்கம். இந்த அதிசயத்

தெய்வமோ தனது அடியாருக்கே அடியாளாக இருந்தாள். அவர்கள் அவளைச் சம்பிரதாயப்படி பூஜிக்க எல்லா ஏற்பாடுகளும் செய்யும் போது, அவளோ அவர்களுக்காக அடுப்படியில் சப்பாத்தி இட்டுக் கொண்டிருப்பாள். அவளை அலங்கார பீடத்தில் வைத்துப் பூஜை செய்வார்கள். பூஜை முடிந்தவுடனேயே அவள் அவர்களுக்கு இலை போடுவாள்; வயிறு முட்டப் பரிமாறுவாள்; அவர்கள் உண்ட எச்சில் இலைகளையும் எடுப்பாள். போதாக்குறைக்கு, சமையல் பாத்திரங் களையும், அவளுக்கே பூஜை செய்ய உபயோகித்த பாத்திரங்களையும் 'நெற நெற' என்று தேய்க்கத் தொடங்கிவிடுவாள். 'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்று சரஸ்வதி தேவியைப் பாடினார் பாரதி. இதுவோ 'கைவருந்தி உழைத்த தெய்வ'மாக இருந்தது. இவளையும் ஸரஸ்வதி தேவி என்றே ராமகிருஷ்ணர் கூறினார். அதிலும் அதிசய ஸரஸ்வதி. இந்த ஸரஸ்வதிக்குக் கடைசி வரையில் கையொப்பமிடக் கூடத் தெரியாது.

எப்படியானாலும், ஸரஸ்வதி என்று சாட்சாத் பரமஹம்ஸரே சொன்னபின் அவள் அவதார வியக்திதான்; சந்தேகமில்லை. நம்மைப் போல் கரும கதிக்கு ஆளாகிப் பிறந்து பிறந்து மறையும் ஜீவனா அவள்? நாஸ்திகர்கள்கூட அப்படிச் சொல்லத் தயங்குவார்கள். பக்குவம் பெற்ற ஒருசில பக்தர்களுக்கு அவளே தன் தெய்வத் தன்மையை ஆணி அடித்தது போல் வியக்தமாக வெளிப்படுத்தியதும் உண்டு.

தர்ம ஸம்ஸ்தாபனம் என்ற பொதுக் காரியத்துக்காகவே அவதார புருஷர்கள் உதிப்பார்கள். பொதுவான தர்மத்தில் குறிப் பாகச் சில அம்சங்களை ஒவ்வோர் அவதாரமும் வலியுறுத்தும். ராகவன் தர்மத்தை வலியுறுத்தினான், கோவிந்தன் பிரேமையை வலியுறுத்தினான், ஆதி சங்கரர் ஞானத்தை வலியுறுத்தினார், மாருதி சேவையை வலியுறுத்தினான். ஆதி சங்கரரும் மாருதியும் தனியே வந்து போனார்கள். ராகவன் ஜானகியுடன் வந்தான். கோவிந்த னுடன் கோபியர், ருக்மிணி, பாமை எல்லோரும் வந்தனர். ராமகிருஷ்ணருடன் சாரதை வந்தாள். ஆனால் அவர் ஆதிசங்கரரைப் போல் சந்நியாசியாகவும், மாருதியைப் போல் நைஷ்டிகப் பிரம்ம சாரியாகவும் வாழ்ந்தார். சாரதை மனமொப்பி அனுமதித்ததால் தான் அவர் அப்படி வாழ முடிந்தது. எனவே, ராமகிருஷ்ணரை ராமகிருஷ்ணராகவே விட்டு வைத்திருந்த பெருமை அவளுடையது. மனம் மாசுபடாமலே மண வாழ்வு நடத்த முடியும் என்ற உன்னத உண்மையை விளக்குவதற்காகவே இப்படி இருவராக வர நேர்ந்தது. இந்த உண்மையை இரட்டை-அவதாரத்தால் நிரூபித்ததோடு, அவர்கள் தனித் தனியாகவும் சில குறிப்பிட்ட அவதார காரியங்களைச்

செய்தனர். தன்னலம் மிக்க உலகில் பூரணத் துறவையும், உலகாயதம் பரவிய உலகில் ஆத்மிகத்தையும், சமயச் சழக்கு நிறைந்த சூழலில் சர்வ மதங்களின் சத்தியத்தையும் வாழ்ந்து காட்டப் பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் அவதாரம் ஏற்பட்டது. சாரதை எளிமையை வாழ்ந்து காட்டவே வந்தாள். அதோடு பெண்கள் பெண்களாகவே இருக்க வேண்டும் என்பதையும் வாழ்ந்து காட்டினுள்.

இப்போது கல்வி, பதவி, சமூக இயல் முதலியவற்றில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வந்திருப்பதற்குச் சாரதையின் அவதாரமே வழி வகுத்தது என்று பலர்—மதிப்புக்குரிய பெரியோர்களுங்கூட—எழுதியும் பேசியும் இருக்கிறுர்கள். இவர்களுடன் பணிவுடன் பிணங்க முற்படுகிறேன். ஆண்களோடு பெண்கள் லௌகிக விஷயங்களில் போட்டியிட வேண்டுமென அவள் கடுகளவும் விரும்பியதாகச் சான்று இல்லே. ஒரேயடியாக மூடநம்பிக்கைகளேப் பிடித்துக்கொண்டும், ஊர் வம்பை உழக்கால் அளந்துகொண்டும் இருட்டில் தள்ளப்பட்டிருந்த அக்காலப் பெண்களுக்குச் சாரதை ஓர் அழுத்தமான எதிர்வெட்டு என்பதில் ஐயமில்லே. ராமகிருஷ்ணருக்குச் சரிநிகர் சமானமாக அவள் உயர்ந்ததும் வாஸ்தவம். ஆனுலும் அப்படி உயர வேண்டும் என அவள் லவலேசமும் சங்கற்பம் செய்து போட்டியிடவில்லே. அந்த ஞான நிலேயில் போட்டி என்ற வார்த்தையே அசம்பாவிதம். இப்போது பெரிதாகப் பேசப்படும் பெண்கள் முன்னேற்றம், ஞானத் துறையில் ஏற்பட்டதல்ல. லௌகிகத்தில்தான் போட்டி. இந்தப் போட்டியில் ஈடுபடுவதைவிடப் பெண்ணனவள் பெண்ணுகவே இருப்பதுதான் அவளுக்கும் அழகு, உலகுக்கும் க்ஷேமம் என்பதே சாரதா சரிதத்தில் நான் காண்கிற உண்மை. இந்தச் சரிதை முடிந்தபின் நீங்களே இவ்விஷயத்தில் முடிவு கட்டலாம். ஆதரிச மகளாக, ஆதரிச மனேயாளாக, ஆதரிச சோதரியாக, ஆதரிச அன்னேயாக, எந்த லௌகிகப் போட்டியும் இன்றி அமரிக்கையாக வாழ்வு நடத்தினுள் தேவி. உலக வாழ்வு ஒரு மாயம் என்பதை உள்ளத்தின் அடியில் உணர்ந்தவள் அவள். எனினும் விவகாரத்தில் உலக வாழ்வைப் புறக்கணிக்காமல், பரம எளிமையுடன் மற்றவர்களுக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டினுள். லௌகிகமாகப் 'போட்டி'யிடுவதில் அவளுக்கு ஈடுபாடே இல்லே. ஞானத் துறையில் வேதகால பிரம்மவாதினிகளேப்போல ராமகிருஷ்ணருடனும், மற்ற பக்தர்களுடனும் அத்யாத்ம விஷயங்களே விசாரம் செய்தாள். அப்போதும் தொன்றுதொட்டு ஸ்திரீ லட்சணமாகக் கூறப்படும் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியவற்றை அவள் விட்டாளில்லே. 'லஜ்ஜாபடாவ்ருதே

என்றல்லவா அவளைத் துதிக்கிறார் அபேதாநந்தர்: ('நாணத்தினால் முக்காடிட்டவளே' என்பது இதன் பொருள்). அவளது முகத்தையே முதுமையில்தான் ஆண் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

அறிவிலிகளாகவும், கட்டுப்பெட்டிகளாகவும் இல்லாமலே பண்டைய பாரத மகளிர் பெண்மைப் பண்புகளைக் காத்தனர். இடைக்காலத்தில் பாரத ஸ்திரீ குலத்துக்கு ஏற்பட்டிருந்த இருட்டடிப்பு சாரதை தோன்றிய பின்னர் மறைந்தது. இருட்டு போச்சு என்பதால், ஒரேயடியாக விளக்கை மேலே திருப்பிவிட்டுக் கொள்வதற்கு அவள் முன்னோடி என்று ஆகாது. கும்மிருட்டின் புழுக்கத்தைவிடப் பெரிய வெளிச்சத்தின் சூடு அதிகக் கொடுமை யானது.

ஆதிகால அவதாரங்கள் மிக்க சக்தியுடன் செயலாற்றின. அப்போதெல்லாம் மக்களில் ஒரு பகுதியினரே அதர்மத்தில் ஈடு பட்டனர். மற்றவர்கள் அந்த அதர்மம் நீங்குவதற்காக அவதாரம் நிகழ வேண்டுமென மனமுருகிப் பிரார்த்திப்பார்கள்; அவதாரமும் நிகழும். தர்மம் அடியோடு நலியாத அந்தச் சூழலில் அவதாரத்தின் சக்தி நன்கு பொலிந்தது. அவதார வியக்தி தர்மத்தை நிலைநிறுத்திய பின் நீண்ட நாள் தர்ம வாழ்வு நீடித்தது. சமீப காலத்தில் அதர்மம் சர்வ வியாபகமாகிவிட்டதால் அவதாரத்தின் சக்தி கொந்தளித்துப் பொலிவதில்லை. மூளையின் சிறப்புக்குப் பெயரெடுத்த இந்தக் காலத்தில், பராசக்தி நம்மைக் கேலி செய்வதேபோல் தன்னை ஒடுக்கிக்கொண்டு அவதரிக்கிறாள். நம்முடைய நுண்ணிய மூளை அவளது நுண்ணிய அவதாரத்தைப் புரிந்துகொள்ளவே பெருமளவு தவறி விடுகிறது. தர்மங்கள் அடியோடு போய்விடாமல் ஓரளவு காத்து, அதன் நினைவையாவது மீண்டும் ஏற்படுத்திய திருப்தியுடன் அவதார வியக்தியும் மறைந்து போகிறது. சாரதை மறைந்து அரை நூற்றாண்டுதான் ஆகிறது. அதற்குள் இன்னொரு சாரதை அவதரிக்க அவசியம் ஏற்பட்டுவிட்டது! இந்தச் சமயத்தில் அந்தப் பழைய சாரதையின் சரிதத்தையாவது நினைவுக்குத் தந்துகொள்வோமே!

பழமைக்கும் பழைய சாரதையான சரஸ்வதிக்கு நவராத்திரியில் பூஜை செய்கிறோம். மது, கைடபன், மகிஷாசுரன், சண்டன், முண்டன், சும்பன், நிசும்பன் ஆகிய அசுரரை வதம் செய்து தர்மத்தை நிலைநாட்ட ஸாக்ஷாத் அம்பிகை பல உருவங்களில் அவதரித்ததை நவராத்திரி நினைவுபடுத்துகிறது. இந்தத் தீய சக்திகளை வதைத்ததுமட்டுமல்ல; ''இனியும் தீமை ஓங்குகிறபோதெல்லாம் தோன்றி அதைக் களைவேன்'' என்று அம்பாள் அமிருத வாக்குத் தந்தாள்.

இத்தம் யதா யதா பாதா தானவோத்தா பவிஷ்யதி |
ததா ததாவதீர்யாஹம் கரிஷ்யாம்யரி ஸம்க்ஷயம் ||

சரத் காலத்தில் நிகழும் இந்த நவராத்திரிக்கே சாரத நவராத்திரி எனப் பெயர். சாரத நவராத்திரியில் வாக்குத் தந்த பராசக்திதான் நம் சாரதாவாக வந்தாள். இதைப்பற்றிச் சம்சயம் வேண்டாம். நாஸ்திகர்களைப்பற்றிக் கேள்வி இல்லை. ஆஸ்திகர்கள் என்று நம்மைச் சொல்லிக்கொண்டே அவதாரத்தைப்பற்றி ஐயுறவேண்டாம். கடவுள் உண்டு, அவருக்குக் கருணை உண்டு என்று நம்புகிற நாம், உலகம் பாழ்பட்டு நிற்கும்போது பராசக்தியே அதற்கு வழிகாட்ட அவதரிக்கிறாள் என்பதில் எள்ளளவும் ஐயம் கொள்ள இடமில்லை. கர்மகதியில் சிக்குண்டு ஜனன மரணச் சுழலில் மீண்டும் மீண்டும் தோன்றி மறையும் மக்களுக்கு இயல்பாக உள்ள காமக் குரோத அழுக்குகளே இல்லாமல், பிறந்த நாள் முதலாகத் தூய வாழ்வு நடத்திய சாரதை போன்ற உத்தமப் பிறவிகளை ஈசுவராவதாரமாகக் கொள்வதில் தயக்கமே தேவையில்லை. தூய சரத்கால சந்திரனாக வாழத்தான் அவாவினாள் ஸ்ரீ சாரதாமணி. ''அதுவும் போதாது. அந்தச் சந்திரனில் உள்ள களங்கமும் என்னிடம் இருக்கக்கூடாது'' என்று பிரார்த்தித்தாள். களங்கமே இல்லாததால்தான் அவளைத் 'தூய அன்னை' (Holy Mother) என்றே சொல்கிறோம். அந்தத் தூய்மை மானுட எல்லையைத் தாண்டித் தெய்விகத்தில் பூரித்து நிற்பதாகும்.

தூய்மையை விஞ்சியது அவளது தாய்மை. தூய்மையால் பதிவிரதைகளின் திலகமானாள். அந்தப் பதிவிரதத்தைவிடப் பெரிதாகப் 'புத்திர விரதம்' என்ற ஓர் அதிசயத்தையும் அநுஷ்டித்துக் காட்டினாள். பெருமலே பெற்ற புத்திரர்களிடம் அன்பு செய்யும் விரதத்தில் பதியின் ஆணையைக்கூடப் பணிவுடன் புறக்கணித்தாள். இந்த அம்சத்தில் ராமகிருஷ்ணரினும் சிறந்து நின்றாள் அவள். அவரால் பாவியரின் ஸ்பரிசத்தையும் தாங்க முடியாது, அவளுக்கோ, பாவி–புண்ணியசாலி என்று பேதமேயில்லை. குற்ற நீரைக் களைந்து குணப் பாலைக் கொள்வதில் சாரதாஹம்ஸம் பரமஹம்ஸத்தைவிடப் பெரியது; காரணம், தன்னை அம்மாவாக்கிக் கொண்டதுதான்.

''நகஸ்சித் நாபராத்யதி''—''குற்றம் செய்யாதார் யார்?'' என்று கேட்ட சீதாதேவி போல் தோஷம் காணாது வாழ்ந்தாள் சாரதை.

குற்ற நீரைக் களைந்து குணப்பாலைக் கொள்கிற ஹம்ஸம் அவள் என்பதுதான் இந்தச் சரிதையை எழுதவே தைரியம் கொடுக்கிறது. பிழை பொறுக்கும் அம்மா, இதிலுள்ள தோஷங்களை எல்லாம் க்ஷமிப்பாள்.

'கல்கி'ப் பத்திரிகையில் இந்தச் சரிதை தொடராக வந்தபோது,

ஒரு பெரிய தோஷம் ஏற்பட்டுவிட்டது. ஒரு காரியத்துக்கு முன்கூட்டியே வரையறை செய்து திட்டம் வகுத்துக்கொள்ள வேண்டுமல்லவா? நான் இவ்விதம் திட்டம் ஏதும் இல்லாமலே இந்தச் சரிதத்தை எழுதலானேன். இந்தத் தொடர் 'கல்கி'யில் மூன்று மாதங்களில் (அதாவது பதின்மூன்று இதழ்களில்) நிறைவுறக்கூடும் என்று அசட்டுத்தனமாக எண்ணி, எழுத ஆரம்பித்தேன். ஆரம்பித்தபின் ஒரே உற்சாகமாயிற்று. அம்மாவைப்பற்றி இத்தனை சங்கதி உண்டா என்று எனக்கே ஆச்சரியமாயிற்று. ஆமாம்; உண்மையைச் சொல்கிறேன்: அம்மாவின் ஜீவிய காலத்தில் பலர் அவளை ராமகிருஷ்ண சதி என்பதற்கு அதிகமாகத் தனிப்பெருமை படைத்த மகாத்மா என்று உணரவில்லை. நானும் அதே நிலையில்தான் இருந்தேன். ஆனால் அவளைப்பற்றி மேலும் மேலும் நூல்களைப் படிக்கப் படிக்க, அவளுடைய குணகணங்களையும் அருட்சக்தியையும் தியானிக்கத் தியானிக்க, ''ஆஹா! ராமகிருஷ்ணருக்கு எவ்விதத்திலும் குறைவில்லாத–ஒருகால் அவரைவிடவுங்கூட மகிமை பொருந்திய–மாதா அல்லவா இவள்?'' என்ற மரியாதையும், பக்தியும், அன்பும் பெருகின. ''இவளைப்பற்றி எழுத என்ன தவம் செய்தோம்?'' என்று நெஞ்சு விம்மலாயிற்று. ஆனந்த விம்மலில் சரிதையும் விம்மிப் பருத்துக்கொண்டே போயிற்று. பதின்மூன்று இதழ் என்பது இருபத்தாறுக ஆயிற்று. அப்படியும் பாதி சரிதைகூட வந்தபாடில்லை. பெருமனத்தவரான ஸ்ரீ சதாசிவம் அவர்களோ, பத்திரிகையில் ஒரு தொடரை முடித்தாலே இன்னொரு தொடர் தொடங்க முடிவதையும் பொருட்படுத்தாமல் எனக்கு மேலும் அவகாசம் அளித்தார். பதின்மூன்று இருபத்தாறுகிப் பிறகு முப்பத்து ஒன்பதும் ஆக இருந்தபோது இத்தொடரை முடித்தேயாகவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டது. ஆனால் இன்னும் எழுதியாக வேண்டிய அருமையான பகுதிகள் ஏராளமாக இருந்தன. அதற்காக ஒரு பத்திரிகையின் அவசியத் தேவைக்கு இடையூறு செய்யமுடியுமா? ஆரண்ய காண்டத்திலிருந்து பட்டாபிஷேகத்துக்கு அதிவிரைவாகத் தாண்டிவிட்டேன். எத்தனை எத்தனையோ ஸாரபூதமான நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டு விருவிருவென்று இறுதி அத்தியாயங்களை எழுதி மங்களம் பாடினேன். இதனுல் இலக்கிய ரீதியில் அந்தத் தொடர் திட்டவட்டமான ரூபமின்றி lop-sided ஆக ஆனதோடு மனத்திலும் குறை ஏற்பட்டது. குறை காணுத தேவி மன்னித்தருள்வாள்!

இந்தப் புத்தகத்தில் குறையை நிறை செய்திருக்கிறேன். 'கல்கி'த் தொடரில் விட்டுப்போன ஏராளமான பகுதிகள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிற்பகுதியிலுள்ள பல நெடிய அத்தியாயங்கள் இதில் முற்றும் புதியனவாகச் சேர்த்தவை. 'கல்கி'க்கு லட்சக்கணக்கான வாசகர் உண்டு. இந்நூலை அத்துணை வாசகர்கள் படிப்பார்கள்

என்று எதிர்பார்ப்பதற்கில்லை. முன்கூட்டியே வரையறை செய்து கொள்ளாமல், தொடக்கத்தில் மிக விரிவாகவும் இறுதியில் மிகச் சுருக்கியும் இந்தச் சரிதையைக் 'கல்கி' வாசகர்களுக்குத் தந்தது என் பிழையே. நம் பிழைகாணு அன்னையிடம் மீண்டும் மன்னிப்புக் கோரு கிறேன்.

'ஜயஜய சங்கர'வுக்குப் பிறகு நான் எழுதிய பல சரிதங்களில் 'அம்மா'வே 'ஜயஜய சங்கர'வுக்கு இணையான அமோக வரவேற்பைப் பெற்றுள். இதில் எனக்கு ஒரு சொந்தக் காரணம் தோன்றுகிறது. என் அன்னையின் நாமம் ஜயலக்ஷ்மி என்பது. ''ஜய ஜய'' என்று அதை இரட்டிப்பாக்கி வெற்றிக் கோஷத்துடன் தலைப்புக் கொண்ட தாலேயே சங்கர சரிதம் பெரிய வரவேற்புப் பெற்றது போலும். சாரதா சரிதமோ அம்மா என்றே பெயரிடப்பட்டது. பிள்ளைக்குப் பெருமை தரவேண்டும் என்றே அம்மா இதற்கு நல்ல வர வேற்பை உண்டாக்கியிருப்பாளோ? ஆனால் உண்மையில் நான் பெருமைப்பட எதுவுமே இல்லை. அந்தக் கருணாமயீ போட்ட பிச்சைதான் இந்த எழுத்து. சொந்தமாக ஏதோ சாதித்ததாகப் பெருமைப்படுவதைவிட அம்மாவின் முன் நிரட்சரகுட்சியான பிச் சைக்காரனாக நிற்பதிலேயே ஆனந்தம் இருக்கிறது, அன்பு சொட்டு கிறது, பாரமில்லாமல் நிம்மதியாக இருக்கிறது.

எட்டாக் கையில் நில்லாமல் நம்மில் ஒருவராக அன்பில் இழைந்து, இசைந்து, இணைந்து வாழ்ந்தாள் அம்மா என்பதே அவளது சரிதத் துக்குக் கிட்டிய நல்வரவுக்கு முக்கியமான காரணமாகும். எனக் குக் கடிதம் எழுதியவர்களில் அநேகர் இதையே குறிப்பிட்டிருந்தனர். ''அன்னை சாரதாமணி எங்களுக்கு மிகவும் நெருக்கத்தில், ஓர் உற வினர் போல் இருந்துகொண்டு அன்பு செய்வதாகத் தோன்றுகிறது. அவரது எளிமையே எங்களை அவரிடம் இழுக்கிறது'' என்கிற ரீதியில் எழுதியவர்கள் பலர்.

இந்த எளிமை குலையலாகாது என்பதால்தான் அவளது உரை யாடல்களை இலக்கணத் தமிழில் எழுதாமல், பேச்சு வழக்கில் உள்ள கொச்சைத் தமிழில் எழுதினேன். இதில் சிலருக்கு அதிருப்தி ஏற்பட் டது. ஆயினும் இதை என்னால் குற்றமாகவோ குறையாகவோ எண்ண முடியவில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரின் மொழியமுதை வங்கத் தில் உள்ளபடியே தந்துள்ள 'ம' அவர்கள், குருமகாராஜ் கூறும் 'கிராம்யமான' வசனங்களைக்கூட மாற்றாமலே தந்திருக்கிறாராம். அதற்காக யாரும் அந்த அற்புத கிரந்தத்தில் குறை கண்டதில்லை. எளிய அம்மாவை இலக்கணத் தமிழில் பேச வைத்திருந்தால், அது துளிக்கூடப் பொருத்தமாக – பாந்தமாக – இருந்திராது என்று

உறுதியாகக் கருதியே, பேச்சு வழக்கைக் கைக்கொண்டிருக்கிறேன். இலக்கணத் தமிழுக்கு உயர்வான அழகு இருப்பது உண்மையே! ஆனால் பொருத்தம் வேண்டாமா? நம் அம்மாவின் கன்னத்து மேட்டு எலும்பை உள்ளடக்கியும், நாசியின் கீழ்ப்புறத்தைச் சமப்படுத்தியும் சித்திரம் வரைந்தால் அவள் இப்போதிருப்பதைவிட மிகவும் சுந்தரமாக இருப்பாள் என்பது உண்மைதான். ஆனால் அந்த அதிரூப சுந்தரியை நம் சாரதாமணி என்று எவராவது சொல்வரோ? அவளது மொழியை இலக்கணப்படி லட்சணப்படுத்துவதும் அவளது உருவத்தை ஸாமுத்திரிகா லட்சணப்படி அழகுபடுத்துவது போன்ற காரியமே!

பலர் இந்த எளிமையான பேச்சினாலேயே தாங்கள் சாரதை சரிதத்தில் விசேஷமாக ஈர்க்கப்பட்டதாகக் கூறினர். குறிப்பாகப் பெண்மக்கள் இந்த வரலாற்றில் தனித்ததோர் ஈடுபாடு காட்டியதற்குக் காரணம், இது நவயுகப் பெண் அவதாரத்தைக் குறித்தது என்பது மட்டுமல்ல; பேச்சாலும் செயலாலும் சிந்தனையாலும் அவள் பரம எளிமையாக இருந்ததே தம்மைச் சிறப்பாக ஆகர்ஷித்ததாகப் பெண்மக்கள் தெரிவித்தனர். நாகரிகக் கதாநாயகிகள்தான் நம் இக்காலப் பெண்டிரைக் கவரமுடியும் என்று எண்ணிய எனக்கு நம் எளிய, கர்நாடக அம்மாவினாலும் ஸ்திரீகுலம் கவரப்படுகிறது என்று காண மிகுந்த ஆறுதலாக இருந்தது. ஆயினும் இதைப் படித்த பெண்களில் எத்தனைபேர் நடை உடை பாவங்களில் நம் அம்மா வழி காட்டியதுபோல் அடக்கத்தையும், எளிமையையும் மேற்கொண்டிருப்பார்கள், எத்தனைபேர் அவளைப்போல் உழைப்பதில் உற்சாகம் கொண்டிப்பார்கள், எத்தனை பேர் அவள் விதித்ததுபோல் தங்களது தொட்டால் சுருங்கிக் குணத்தை விடுத்துப் பொறுமையே அணிகலனாகக் கொண்டிருப்பர் என்று கணக்குப் பார்த்தால் திருப்தி கொள்ள முடியுமா என்பது சந்தேகந்தான். ஆயினும் ஓரிரு பெண்களாவது எல்லையில்லாத பச்சாத்தாபத்துடனும், பிராயச்சித்த உணர்வுடனும், "அம்மாவின் கதையைப் படித்த பிறகுதான் நாம் ஸ்திரீ தர்மத்தை எவ்வளவுக்கு விட்டுவிட்டோம் என்று தெரிந்தது. முடிந்த மட்டில் அவள் காட்டிய வழியில் போக முயலுகிறோம்" என்று என்னிடம் சொன்னபோது, இந்த நூலை எழுதியது வியர்த்தமாகவில்லை என்ற திருப்தி உண்டாயிற்று. இது வெறுமே படித்துப் பார்த்துவிட்டு, 'பேஷ்' சொல்கிற அல்லது 'சை' என்று தள்ளுகிற புத்தகமல்ல. இலக்கியத் தரத்தால் அல்லது தரக்குறைவால் இந்த நூல் பெறுகிற 'பேஷ்' அல்லது 'சை' இரண்டாம் பட்சமே. இதன் முதல் பயன், நம் பெண்குலத்தவர் அம்மா வாழ்ந்து காட்டியபடி தாங்களும் நடந்து காட்ட முயலுவதேயாகும். இந்த நூலை நல்ல பொழுது போக்காகமட்டும் எண்ணாமல், வாழ்க்கைத்துணைச் சாஸ்திரமாகவே

கொள்ளவேண்டும். எளிமையாக வாழ்ந்தே ஏற்றம் காண வழி சொன்ன அம்மாவின் சரிதைக்கு அதுவே பயன்.

எளிமை குலேயலாகாதென்றே இதற்கு 'அம்மா' என்று தலேப்புத் தரப்பட்டது. 'தூய அன்னே', 'திவ்விய மாதா' என்பது போல் பிரகாசமாகத் தலேப்பிடாமல் வெறுமே 'அம்மா' என்று நாமகரணம் செய்ததிலும் சிலருக்கு அதிருப்தி. இருப்பினும் பெரும்பாலானவர்கள், அம்மா என்ற மூன்றெழுத்துக்கு ஈடிணே இல்லே என்றே மகிழ்ந்தார்கள். குழந்தை வாயிலும், பசுங்கன்றின் வாயிலும் நிற்கும் சொல், **அம்மா**. 'அன்னே', 'மாதா' எல்லாம் ஏட்டில் இருக்கிற பதங்களே யன்றி, நேரில் தாயை அழைக்கிற பதங்கள் அல்லவே! நாம் முகமுகமாக நெருங்கிப் பழகவேண்டிய சாரதை, அம்மாவாகவே இருக்கட்டும். அம்மா என்ருல் அதிலேயே தூய்மையும், தெய்விகமும் அடக்கந்தான். எனவே, வெள்ளேப் பால், தித்திக்கும் சர்க்கரை என்றெல்லாம் தேவையற்ற அடைமொழி போடுவது போல், தூய அன்னே, திவ்விய மாதா என்றெல்லாம் அடைமொழி தரவும் அவசியம் இல்லே. ''என்னே ஒருத்தர் வெறுமே அம்மான்னு கூப்பிட்டு விட்டால் போறும். அப்புறம் என்னுலே என்னேயே கட்டுப்படுத்திக்க முடியாது" என்று கூறிய சாரதைக்கு உரிய பிரணவம் 'அம்மா' தான். அம்மா என்று அழைத்து, தயாமயமான அவளது தாயன்பைப் பெறுவோம்.

ஆகா, அவளது தாயன்புதான் எப்பேர்ப்பட்டது ?

அன்பு வடிவாகி நிற்பள்
துன்பம் எல்லாம் அவள் இழைப்பள்

என்று ஆதி பராசக்தியைப் பாடினுர் பாரதி. நமது நவீன பராசக்தியோ, அன்பு வடிவாகி நின்று, துன்பம் எல்லாம் **தனக்கே** இழைத்துக்கொண்டாள்.

இந்தத் தாயன்பு காரணமாகத்தான் அவளேப் பைத்தியக்காரி ஸுரபாலாவும் பிடிவாதக்காரி ராதுவும் பாடாய்ப் படுத்திப் பம்பரமாய்ச் சுழற்ற முடிந்தது. பிரஸன்ன குமாரும், காளிகுமாரும் அவளே இம்சித்ததற்கெல்லாம் இடம் தந்தது அந்த அன்புதான். தாயன்பினுலேயே இந்தச் சரிதையில் சோதனேகளும் சோகங்களும் ஏற்பட்டன; தாயன்பினுலேயே அவள் சோதனேயைச் சாதனேயாகவும், சோகத்தைச் சுகமாகவும் ஆக்கிக்கொண்டாள். சோதனேயும் சோகமும் அன்பெனும் சாந்தத் தடாகத்தில் சிறு அலேகளாகவே எழும்பி, அடுத்த விநாடி இடம் தெரியாமல் மடங்கி விழுந்து மறைந்தன. அன்பு, அன்பு, அன்பு—அது ஒன்றே தண்ணீர்த் தகடாய் நின்றது.

தடாகத்தில் இறங்காமல் இன்னமும் உங்களைப் படித்துறையில் காக்கவைப்பது தவறுதான். வாருங்கள், ''குள்ளக் குளிரக் குடைந்து நீராடுவோம்!'' ஞான வாவியில் வாழும் ஹம்ஸ தம்பதி 'வா வா' என நம்மை அழைக்கிறது.

ரா. கணபதி

'கல்கி'

சென்னை–31

30–8–'72



தன் குழந்தையுடன் ராதுவும், 'அம்மா'வும்



உத்போதனில் ஆராதனையில் அமர்ந்திருக்கும் அன்னை



ஜயராம்பாடியில் அன்னையின் புதிய இல்லம்




பேலூரில் - அன்னையின் சமாதி




தூய அன்னை



தம் வீட்டு உள் திண்ணையில் அன்னை



நஹபத்



உத்போதன் இல்லம்

1. சங்கு ஒலித்தது!

மனிதர் தம்மை அமரர்க ளாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னைநல்
அருளினுல் ஒரு கன்னிகை யாகியே....

--பாரதியார்

ஜயராம்பாடி என்பது வங்கத்தில் பாங்குரா மாவட்டத்தில் ஒரு கிராமம். அவ்வளவாகச் செழிப்பற்ற பாங்குரா மாவட்டத்தில் ஜயராம்பாடியில் மட்டும் தானியலக்ஷ்மியின் கடாட்சம் அதிகம். இயற்கை அன்னையின் நாட்டியமும் அங்கு விசேஷமாகப் பொலிந்தது. தெளிந்த நீரோடு ஆமோதர் என்ற ஓடை ஜயராம்பாடியை அணைத்து ஓடும். ஆங்காங்கே அது சுழித்து ஓடும். ஆழ்ந்த பகுதிகளில் மீன் வளம் அதிகம் உண்டு. வங்காளிகளில் பிராமணர்கள் உட்பட எல்லோருக்கும் இந்த 'ஜலபுஷ்ப'த்தில் ருசி உண்டு. அது அந்தத் தேசாசாரம். கிராமத்தின் வடக்கே ஆமோதர் நதி அழகிய திபகற்பத்தை அமைத்துத் தந்தது. அங்கே பச்சென்று வானேங்கிய விருட்சங்கள், உழைப்பாளிகளான மக்களை உழைப்புக்கிடையே ஓய்வுகொள்ள 'வா' என்றழைத்துக் குளிர் நிழல் தந்தன. பசுமையின் பறக்கும் ரூபமாகப் பலவிதப் புள்ளினங்கள் அங்கு நிறைந்திருக்கும். பசுமையின் குரலை அவை பாடிப் பரப்பும். சாதுக்கள் அங்கு ஓடையிலே ஸ்நானம் செய்துவிட்டு நிச்சிந்தையாக, ஆனந்தமாக அமர்ந்திருப்பார்கள். அவர்களது மனத்தின் காருண்யத்துக்கு அந்தப் பசுஞ் சோலை வெளி உருவம் எனில், அதே மனத்தில் நிலவிய வைராக்கியத்துக்குச் சின்னம் போல் அப்பசுமைக்குப் பக்கலிலேயே ருத்ரபூமியும் இருந்தது.

பசுமைக்கு—ஜீவசக்திக்கு—ஆதாரமான அம்பாள், அனைத்தையும் அழிக்கும் காளியாக, சிம்மவாஹினியாக, ஜயராம்பாடியில் கோயில் கொண்டிருந்தாள்.

வங்காளிகள் சக்தி வழிபாட்டில் தலைசிறந்து நிற்பவர்கள். நாம் அம்பாளைப் பொதுவில் லலிதையாக ஸௌம்ய ரூபத்தில் வழிபடுகிறோம். வங்காளிகள் மகாகாளியாகவே வழிபடுவார்கள்.

சிம்மவாஹினியை ஜயராம்பாடியின் நாயகியாக ஆக்கியவர் கேலாராம் முகர்ஜி. வங்காளத்தில் பிராமணர்களை முகோபாத்தி

யாயர் (முகர்ஜி), வந்தியோபத்தியாயர் (பானர்ஜி), சட்டோ பாத்தியாயர் (சட்டர்ஜி) என்ற பிரிவுகளாகக் குறிப்பிடுவார்கள். முகோபாத்தியாயப் பிரிவைச் சேர்ந்தவர் கேலாராம். ஒருசில நூற்ருண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். பரம பக்தர், சிஷ்டர். அவர் வாழ்ந்த காலத்தில் வங்கம் பௌத்த மதத்திலிருந்து மீண்டும் ஹிந்து சமயத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தது.

புத்தரின் போதனையில் உருவம் படைத்த கடவுளுக்கு இடமே இல்லை. ஆனால் பௌத்தம் பொதுமக்களின் மதமாவதற்குப் புத்தரே கடவுளாக்கப் படவேண்டியிருந்தது. ராமாயண, பாரதக் கதைகளைத் தழுவி, புத்தரின் ஜாதகக் கதைகள் உருவாயின. அதுவும் போதாமல் ஹிந்து மதத்தில் பல தெய்வ மூர்த்தங்களை வழிபடுவதுபோல், பௌத்தத்திலும் பல தேவதைகள் கூறப்பட்டு, அவற்றுக்கு வழிபாட்டு முறைகள் வகுக்கப்பட்டன. அவற்றில் 'தர்மம்' என்பது ஒன்று. பூர்வத்தில் ஜயராம்பாடியின் சமய வாழ்வுக்கு மையமாக இருந்தது 'தர்ம'த்தின் ஆலயம்தான். நாளடைவில் பௌத்தமும் ஹிந்து மதமும் பின்னிப் பிணைந்தன. 'தர்மம்' ஹிந்துக்களுக்கும் தெய்வமாயிற்று. 'தர்ம'த்துக்கு வழிபாடு நடத்துவதற்கென்றே சைதன்ய சிம்மன் என்ற விஷ்ணுபுர் அரசன் உத்தம அந்தணராகிய கேலாராம் முகர்ஜியை ஜயராம்பாடிக்கு அனுப்பி வைத்தான். அவருக்கு ஆறு காணி பூமியும் சாசனம் செய்தான்.

கேலாராமின் குலதெய்வம் ராமன். அவரது இஷ்டதெய்வம் சிம்மவாஹினி. இதிலும் ஒரு பொருத்தம்: அவருடைய பெயரிலேயே 'ராமன்' இருக்கிருன்; அவரை அனுப்பிய மன்னன் பெயரில் 'சிம்மம் இருக்கிறது!

கேலாராமும் அவரது சந்ததியாரும் தங்களது நல்லியல்புகளால் ஜயராம்பாடி மக்களைக் கவர்ந்தனர். அவர்களையே மக்கள் புரோகி தராகவும், அர்ச்சகராகவும் கொண்டனர். இது காரணமாக அவர் களது இஷ்ட தெய்வமான சிம்மவாஹினிக்கும் யோகம் அடித்தது. ஏற்கனவே அந்தக் கிராமத்தில் இரண்டாம் பட்சமாக விளங்கிய சிம்மவாஹினி ஆலயம் இப்போது சிறப்புப் பெறலாயிற்று. கேலாராம் வந்தபின்பு ஹிந்து சமய உணர்வு அங்கு அதிகமாயிற்று. எனவே, அந்த ஹிந்துக்களின் வழிபாட்டில் பௌத்த 'தர்மம்' இடம் பெற்றபோதிலும், 'அசல்' ஹிந்து தெய்வமான சிம்மவாஹினிக்கு 'மௌசு' அதிகமாயிற்று. அவளே அந்த ஊரின் முக்கியமான தெய்வ மானுள். ஆயினும் சிம்மவாஹினி ஒரு சாமானியக் குடிசையிலேயே குடிகொண்டிருந்தாள். வங்கத்தில் சிறிய கோயில்கள் வீடுபோலவே

தோற்றம் அளிக்கும். எளிய மக்களுக்கு ஏற்ற எளிய தெய்வங்கள். நம் 'அம்மா'வினுல் ஜயராம்பாடி பெருமை பெற்றபின், இப்போது சிம்மவாஹினிக்கும் சற்றே விசாலமான ஆலயம் ஏற்பட்டிருக்கிறது.

சிம்மவாஹினி குடிசையில் இருந்தபோதே 'தர்ம'த்துக்குச் செங்கல்லால் கட்டிய கோயில் இருந்தது. 'தர்மம்' என்ருல் அந்த விக்கிரகம் எப்படியிருக்கும், அதற்கு எத்தனை கைகள், என்னென்ன ஆயுதங்கள் வைத்திருக்கும் என்ற கேள்விகள் எழுகின்றன அல்லவா? தர்மத்துக்குக் கையும் கிடையாது, காலும் கிடையாது; ரூபமே கிடையாது. நாலு கால்களுடன் கூடிய ஒரு மணைப் பலகையைத்தான் 'தர்மம்' என்று வழிபட்டனர். மணைப் பலகை, நம் பக்கத்தில் ஏழை எளியவர்கள் வழிபடும் மஞ்சள் பூசிய செங்கல், வடக்கே புரிஜகந் நாதம் போன்ற ஸ்தலங்களிலுள்ள அங்கலட்சணமற்ற மூர்த்தங்கள்—இவற்றைப் பார்த்தால் தீஞ்சுவை உணர்வுபெற்ற நமக்குப் பக்தி ஏற்படாமல் இருக்கலாம். ஆனுலும் கோடாநுகோடி மக்கள் இவற்றை வழிபட்டு, அருள் பெற்று வருகிருர்கள்.

தவம், தூய்மை, தயை, சத்தியம் என்ற நாலு கால்கள் கொண்டது தர்மம் என்று நம் சமய நூல்கள் கூறுகின்றன. பரமேசுவரனைத் தாங்கும் நாலு கால் கொண்ட ரிஷபம் தர்மத்தின் வடிவமே. சிம்மவாஹினியான காளியைத் தாங்கும் சிம்மமும் தர்ம வடிவமே. உயர்ந்த அநுபூதியில் ஞானிகள் கம்பீர ரிஷபமாக, சிம்ம மாகக் கண்ட தர்மத்தையே, நாலு கால் மணையாகப் பாமரர்கள் வணங்கினர். ஜயராம்பாடி ஹிந்து கிராமமானபின் 'தர்மம்' ஹிந்து தெய்வமாகிவிட்டது. இப்போது அதற்கு 'யாத்ரா ஸித்திராயன்' என்று பெயர் வைத்துவிட்டனர்.

அம்மக்கள் யாத்திரை போவது அபூர்வம்தான். யாத்திரையை நல்லபடி முடித்துத் திரும்புவது அதைவிட அபூர்வம். கல்கத்தாவிலிருந்து சுமார் அறுபதே மைலில் உள்ள கிராமம் அது. ஆனுல் இந்தக் கதை தொடங்கும்போது இந்த அறுபதே மைல்களைக் கடக்க மூன்று, நாலு நாட்கள் பிடிக்கும். காட்டு வழி. ஒரே கள்ளர் பயம். பணக்காரர்கள்தாம் வண்டியோ பல்லக்கோ வைத்துக் கொள்ள முடியும். மற்றவர்கள் நடந்துதான் செல்ல வேண்டும். ஆனுல் அப்படிச் செல்கிறவர்களும் மிகக் குறைவு. ஏனெனில், அம்மக்கள் கல்கத்தா செல்வதற்கு அவசியமே இருக்கவில்லை. இந்த நாள் 'வசதி'களோடு ஒப்பிட்டால் அன்றைய ஜயராம்பாடியில் சுகவாழ்வுக்கு ஏதுமே இல்லை என்றுதான் தோன்றும். ஆனுலும் அந்தக் காலத்தில்– 'அந்த'க் காலம் என்பது வேறேதோ யுகத்தையோ, சகாப்தத்தையோ குறிப்பிடவில்லை; ஒரு நூற்ருண்டுக்கு

முந்தைய காலம்தான் அது—மக்களுக்குத் தங்கள் கிராம எல்லையை விட்டு வெளிச் செல்ல வேண்டிய தேவையே இருக்கவில்லை. வேண்டிய நெல்லும், கோதுமையும், கரும்பும், காய்கறியும், பருப்பு வகைகளும், மிளகாயும், மஞ்சளும் அந்தக் கிராமத்திலேயே கிடைத்தன. வங்காளிகளுக்கு மெத்தப் பிடித்த இனிப்புக்கள் வாங்க வேண்டுமானுல் மூன்றே மைலில் காமார்புகுர் இருந்தது (ராமகிருஷ்ணர் என்ற இனிப்புப் பிறந்த ஊர் அதுதான்)! துணிமணி, உப்பு, மசாலாப் பொருட்கள் வாங்க வேண்டுமானுல் ஐந்து மைலில் உள்ள கோதுல்பூர் அல்லது கயாபாத்–பதன்கஞ்ஜுக்குப் போவார்கள். அந்த மக்களுக்கு வாழ்க்கை நடத்த இதைத் தவிர வேறெதுவுமே தேவையாக இருக்கவில்லை. இன்று இத்தனை வசதிகளுடன் நாம் இருப்பதைவிட நிம்மதியாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தார்கள். அவர்கள் எப்போதேனும் கல்கத்தாவுக்குச் சென்ருலும் அதை ஏதோ அக்கரைச் சீமைக்குப் போவது போல் கருதி (அதுவும்கூட இன்று தண்ணீர் பட்ட பாடாகிவிட்டது) ஸ்வாமிக்கு நேர்ந்துகொண்டுதான் கிளம்புவார்கள். எனவேதான் யாத்திரைகளை நல்லபடி முடித்துக் கொடுத்த யாத்ரா ஸித்திராயனுக ஒரு தெய்வம் அவர்களுக்குத் தேவைப்பட்டது.

ராமசந்திர முகர்ஜி அத்தகைய ஒரு யாத்திரைக்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். ‘யாத்திரை’ என்றவுடன் வழிபாட்டை லட்சியமாகக் கொண்ட பயணம் என்று எண்ண வேண்டாம். வழிபாட்டுக்கு அல்ல, வயிற்றுப்பாட்டுக்காகவே ராமசந்திர முகர்ஜி ஜயராம்பாடியிலிருந்து கல்கத்தா செல்ல உத்தேசித்திருந்தார்.

அவர் கேலாராமின் பரம்பரையில் வந்தவர். பாரம்பரிய குண நலன்கள் அவரிடம் கூடுதலாகவே பொலிந்தன. ராமா ராமா என்று சொல்லிக்கொண்டே இருப்பார். நேர்மையாளர். ஆசாரக்காரர். ஆனுலும் எல்லோருக்கும் சமமான அன்பை வழங்குவதில் குறைவில்லை. வங்காள வழக்கப்படி இந்த ஆசாரப் பிராமணரும் குழாய் பிடித்துப் புகைப்பார். வீட்டு வழியே போகிறவர்களையும், “தம்பீ, ஓர் இழுப்பு இழுத்துவிட்டுப் போ” என்று பரிவுடன் அழைத்து உட்கார வைத்து அவர்களிடம் குழாயைக் கொடுத்து, அதில் புகையிலையைத் திணித்துக்கொண்டே யிருப்பார்.

இந்தப் புருஷக் கைக்கே இத்தனை தாராளம் என்ருல் அந்த இல்லத்துப் பெண்மணியின் கையைக் கேட்க வேண்டுமா? ராமசந்திரரின் மனைவி சியாமாசுந்தரிக்கு இதயம் சொக்கத் தங்கம். சொக்கத் தங்கம் என்ருல் பித்தலாட்டம் சேராதது என்பது நேர்

அர்த்தம். 'ஆடகம்' என்ற பொன்னேடு பித்தளே சேர்ந்தால் 'பித்தலாடகம்'–'பித்தலாட்டம்' என்று பொது வழக்கில் சொல்வது. சியாமாசுந்தரி 'வஞ்சனேயின்றி, பகையின்றி, சூதின்றி' வளர்ந்தவள். உலக வாழ்வின் 'சாதுரியம்' ஏதும் அவளுக்குத் தெரியாது. அவளுக்குத் தெரிந்தது, கிராமத்துக் கட்டையான தன் உரமேறிய உடம்பால் உழைத்து, வந்தவர்களுக்கு அன்னம் பாலிப்பதுதான்.

"என் அம்மா லக்ஷ்மியென்றே சொல்லணும். வருஷம் முழுதும் அந்த அந்தப் பருவத்தில் கிடைக்கும் பண்டங்களே வாங்கி வீட்டைச் சுபிட்சமாக வைத்திருந்தாள். 'இந்த அகம் பகவானுக்கும் பாகவதாளுக்கும் என்றே ஏற்பட்டது' என்று சொல்லிக்கொண்டு எல்லாருக்கும் வாரி வாரிக் கொடுப்பாள்" என்று தன் அம்மாவைப்பற்றி நம் அம்மா சாரதை சொல்லியிருக்கிருள்.

இதென்ன, பாப்பா மலர் கதை போல இப்படி ஒரு நல்ல அப்பா அம்மாவா என்று எண்ண வேண்டாம். இந்த உலகில் அறிவு, ஆற்றல், ஞானம், வித்தை இவற்றில் பெரியவர்களாகச் சிலர் இருப்பது போல், இந்தச் சிறப்புக்கள் விசேஷமாக இல்லாமலே முழுக்க முழுக்க நல்லவர்களாகவும் ஒரு சிலர் எங்கோ இருக்கத்தான் செய்கிருர்கள். பெரிய தவத்தாலும், பிரம்மசரியத்தாலும், சத்தியத்தாலும் அடையப்படுகிற பிரம்மலோகத்தைச் சூதும், பொய்யும், வஞ்சனேயுமற்ற இந்த எளிய நல்லவர்களும் பெறுகிருர்கள் என்கிறது பிரச்ன உபநிஷதம். மகாத்மாக்கள் வந்து பிறப்பதற்கென்றே இப்படிப்பட்ட உத்தம கிருகங்கள் சில இருக்கும்.

ராமசந்திரருக்கு மூன்று தம்பிகள். எல்லோரும் ஒன்ருகவே வாழ்ந்தனர். எல்லோரும் சேர்ந்து வாழும் அவிபக்த குடும்ப முறையே அப்போது நம் தேசத்தில் எங்கும் நிலவி வந்தது. இது பெரிய குடும்பந்தான். இதில் தலேமகன், தலேமகள் இருவருமே பரம தயாளுக்கள். ஆனல் அப்படித் தயாளம் காட்டும்படியாக இந்தக் குடும்பத்துக்குச் சொத்து சுதந்திரம் கிடையாது.

எனவே, கஷ்டதசை வந்தது. கஷ்டதசையிலும் முடிந்தமட்டும் அன்னதானம் செய்து வந்தனர்.

இப்போது ராமசந்திர முகர்ஜிக்குப் பெரிய 'பொருளாதார நெருக்கடி.' கல்கத்தாவுக்குப் போய் ஏதோ ஒரு விதத்தில் பணம் சேர்த்து வரத் தீர்மானித்தார். யாத்திரைக்கு ஆயத்தம் செய்தார்.

கிளம்புவதற்கு முதல் நாள் அவருக்கு ஒரு கனவு. கனவு என்று தள்ளிவிட முடியாத கனவு. இந்தப் பொய்யான உலகத்தில் நனவு

என்று சொல்லும் விழிப்பு நிலையில் நடக்கிறவற்றை விட அவரது உள்ளத்தை வெள்ளமாக மகிழ்ச்சியில் நனைத்த கனவு அது.

ஆனந்த சாகரத்தின் மதகைத் திறந்துவிட்டதுபோல் தமது முதுகில் ஏதோ ஒரு வெள்ளம் வந்து கனமாகப் படிந்திருப்பதை ராமசந்திரர் உணர்கிறார். கழுத்தை வளைத்துப் பார்க்கிறார். பார்த்த கண்கள் பார்த்தபடி நிலைக்குத்திட ஆசைப்படுகின்றன. ஆனாலும் அந்தப் பிரகாசம் கண்களைக் கூச வைக்கிறது.

பெண் குழந்தை ஒன்று அவரறியாமலே பின்புறமாக வந்து அவரது முதுகைக் கட்டிக்கொண்டிருக்கிறது. ஸ்வர்ண விக்கிரகம் போல் தகதகக்கிறது அதன் தேகம். விலை மதிக்கவொண்ணாத வைர வைடூரிய ஆபரணங்கள் அணிந்திருக்கிறாள் சிறுமி—'என் தேக காந்தியில் எந்த ரத்தினமும் எடுபடாது' என்று காட்டுவதற்கே போல். நகைகளுக்கெல்லாம் மேலான நகையாக அவளது திரு முகத்தில் புன்னகை கொழிக்கிறது. ஒரே அழகு, ஒரே அன்பு. அவை ராமசந்திரரைக் கட்டி இறுக்குகின்றன. அதே சமயத்தில் இது சாதாரண விஷயமல்ல என்ற விலவிலப்பு உண்டாகிறது. ஆனாலும் விலக முடியவில்லை. விலக மனசு இடம் தராததுமட்டும் காரண மல்ல; அந்தப் பெண்ணே அவர் விலகிப் போகாதவாறு அவரை இறுகக் கட்டி இருக்கிறாள்.

போயும் போயும் தன்னையா இந்த அற்புதக் குழந்தை அணைத்து விளையாடுகிறது? அடையாளம் தெரியாமல் இங்கே வந்துவிட்டதா?

ராமசந்திரர் ஆச்சரியத்துடன் அந்தக் குழந்தையிடம், "நீ யாரம்மா? எங்கே வந்தே?" என்கிறார்.

"உங்காத்துக்குத்தான் வந்திருக்கேன். உன்கிட்டத்தான் வந் திருக்கேன்" என்கிறது வக்கணையாக.

தாமரை போன்ற நேத்திரத்தை விரித்து அதற்குள் குண்டு வண்டுபோல் குறுகுறுக்கும் விழிகளால் விநோதமாகப் பேசுகிறாள் குழந்தை.

ராமசந்திரருக்கு உடல் குலுங்குகிறது.

நித்திரை கலைகிறது.

ஸ்வர்ண வர்ணத்தில் வந்த அந்தப் பெண் யார்?

"ஹிரண்யவர்ணாம் ஹரிணீம், ஸுவர்ண ரஜதஸ்ரஜாம்" என்று அவரது உள்ளம் ஸ்ரீஸூக்தத்தைக் கிசுகிசுக்கிறது.

அப்புறம் அவர் கல்கத்தாவுக்குப் போனதும், அங்கே ஏதோ திரவிய லாபமடைந்து திரும்பியதும் சாதாரண விஷயங்கள்.

அவர் அடைந்த உண்மை லாபம்—ஆத்ம லாபம் அந்தக் குழந்தையேதான்.

இந்தச் சம்பவம் நடந்தபோது சியாமாசுந்தரி ஜயராம்பாடியில் இல்லை. அங்கிருந்து மேற்கே ஒரு மைலில் இருந்த ஷியாட் என்னும் கிராமத்துக்குச் சென்றிருந்தாள். ஷிஹார் என்பது அதன் பெயர் ; ஷியாட் என்றே கிராம ஜனங்கள் சொல்வார்கள். அதுதான் சியாமா சுந்தரியின் பிறந்தகம்.

ஜயராம்பாடியில் லீலை செய்த பாலை அங்கும் விளையாடினுள்.

சியாமாசுந்தரி கணுக் காணவில்லை.

நன்ருகக் கண்களை விழித்துக்கொண்டே யிருந்தாள். அந்தி மங்கிவிட்டது. ஜயராம்பாடிக்குத் திரும்பும் வழியில் அமைதியான ஓரிடத்தில் குயவர்களின் சூளைப் பக்கத்தில் ஒரு வில்வ மரத்தடியில் சியாமாசுந்தரி அமர்ந்துவிட்டாள் தனியளாக.

வானத்தில் நட்சத்திரங்கள் பூத்தன. மௌனத்தில் கிணுகிணு என மணிநாதம் பூத்தது.

சப்தம் வந்த திசையில் கண்ணுல் துழாவினுள் சியாமாசுந்தரி.

விருட்சத்தில் சறுக்கிக்கொண்டே இறங்கி வந்தாள் ஒரு குழந்தை. அவளது 'சீர் சிறக்கும் மேனி பசேல் பசேலென, நூபுரத்தின் ஓசை கலீர் கலீரென'ச் சியாமாசுந்தரியை நெருங்கி நெருங்கி, இன்னும் நெருங்கி வந்தாள்.

அவள் அடி எடுத்து வைக்க வைக்க, இவள் இதயத்திலேதான் அதென்ன நெருக்கம் !

கிட்டத்தில் வந்த குழந்தை, கபடமறியாத சியாமையின் கழுத்தில் தனது கொழுகொழுக் கையை வளைத்து அப்படியே கட்டிக் கொண்டது.

அந்த இனிமையைச் சியாமாசுந்தரியால் தாங்கவே முடியவில்லை.

சியாமாசுந்தரிக்கு ஏன் இப்படி இருட்டிக்கொண்டு வருகிறது. வெளி இருட்டு அவ்வளவும் அவளுக்குள் புகுகிறதா ? அல்லது அந்த இருட்டேதான் பிரகாசமா-கருநிறக் காளியேதான் உதயசூரிய வண்ணத்து லலிதையும் என்பதே போல் ? அவளை அந்த ஒளிக் குழந்தையே இருள் உருவில் ஆட்கொள்கிறதா ? இல்லை, அவள்தான்

அதை உட்கொள்கிறுளா ? சியாமாசுந்தரியின் இதயத்தில் நெருக்க மாக இருந்த ஸ்வர்ணசுந்தரி இப்போது அவளது உதரத்தில் சியாமள சுந்தரியாகப் புகுந்துவிட்டாற் போல் இருக்கிறது !

மூர்ச்சித்து விழுந்தாள் சியாமாசுந்தரி.

அவளேக் காணுமல் வீட்டார் அலறிப் புடைத்துக்கொண்டு வந்து பார்த்தனர். அவர்கள் சுசுரூஷை செய்தபின்புதான் அவளுக்கு மயக்கம் தெளிந்தது.

அன்றிலிருந்து சியாமாசுந்தரியிடந்தான் எப்பேர்ப்பட்ட அமா நுஷ்யமான தெளிவு குடிகொண்டது !

ஜயராம்பாடிக்குத் திரும்பிய சியாமாசுந்தரியைப் பார்த்து ஊரே ஆச்சரியப்பட்டது. 'சியாமா மாமிக்கு என்னமா அழகிட்டுருக்கு, பார்த்தியா ? பெண்தான் பிறக்கும்' என்று பெண்டுகள் பேசிக் கொண்டனர். அந்த 'மகாலக்ஷ்மி'க்குத் துணியும் மணியுமாக ஏகப் பரிசுகள் தந்தனர்.

அந்த அழகின் அமாநுஷ்யத்தன்மை ராமசந்திரருக்குத் தெற் றெனத் தெரிந்தது. அன்றிலிருந்து அவள் தலேச்சனேப் பெற்றெடுக் கும் வரையில் அவர் அவளுக்கு அருகிலேயே வந்தாரில்லே. எட்ட நின்றே மானசிகமாக வணங்குவார்.

மாதங்கள் ஓடின. வங்காளிக் கணக்கில் பௌஷ்ய மாதம்; நமது மார்கழி. தேதி எட்டு. 1853 டிசம்பர் 22. அன்று குரு வாரம். கிருஷ்ணபக்ஷ ஸப்தமியும், உத்தர பல்குனி நக்ஷத்திரமும் கூடிய அச் சுபதினத்தில் இருள் விரிகிற சமயத்தில், வெள்ளே வெளே ரென்று ஒரு சங்கு ராமசந்திர முகர்ஜியின் வீட்டு வாசலில் ஓங்கா ரத்தை ஒலித்தது. புதுப் பிரஜை ஒன்று இந்த மண்ணிலே உதித் திருக்கிறது என்பதே அந்தச் சங்கநாதத்தின் அர்த்தம்.

2. "அதோ என் அகத்துக்காரர்!"

மன்னுயிர் புவனம் ஏனை மற்றுள பொருளுக் கெல்லாம்
அன்னையாய் உதவி நாளும் அவற்றினை வளர்த்து நிற்பாள்
தன்னையும் வளர்ப்பார் உண்டோ? வளர்ந்தது சழக்கே! அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை காட்டினள் போலும் அன்றே.

—கந்தபுராணம் : பார்வதிப் படலம்

ஸ்ரீயாமாசுந்தரிக்குச் சீமந்த புத்திரி பிறந்த தினத்தில் பல விசேஷங்கள் உண்டு. அது மாதங்களில் சிறந்தது என மாதவனே சொன்ன மார்கழி மாதம். அதைத் தேவர்களின் வைகறைப் பொழுது எனச் சொல்வார்கள். சூரியன் வடக்கு நோக்கிப் பயணம் தொடங்கும் நாளை, தேவர்கள் துயில் கலைந்து எழுகிற தினம் என்பார்கள். மகரசங்க்ரமணம் - சங்க்ராந்தி - அல்லது பொங்கல் பண்டிகை என்பது அன்றுதான். இப்போதும் நம் பஞ்சாங்கக் கணக்குப்படி ஜனவரி மத்தியில் சங்கிரமணம் வந்தாலும், உண்மையில் வானநூல் கணக்குப்படி டிசம்பர் 22-ஆந் தேதியே சூரியன் தனது வடக்கு நோக்கிய பயணத்தைத் தொடங்கிவிடுகிறான். நவீன மனப்பான்மை கொண்ட ஸ்வாமி விவேகாநந்தர் பழைய பஞ்சாங்கப்படி சங்க்ராந்தியன்று பிறந்தார். பழமையே வடிவெடுத்த அம்மா நவீனக் கணக்குப்படி மகராயணமாகிய டிசம்பர் 22-ஆந் தேதியன்று உதித்தாள். தேவர்கள் துயில் கலைந்து, அருள் செய்வதற்காக விழிப்புப் பெறும் நாளில் பிறப்புக் கொண்டாள்.

பூமத்திய ரேகைக்கு வடக்கே உள்ள தேசங்களில் வெகு நீண்ட இரவுப்பொழுது முடிகிற தினம் அதுவே. எத்துணைப் பொருத்தம்!

தேவர்களின் உதயகாலமாயினும் நம் உலகில் அவள் பிறந்தது இரவு விரிகிற சமயத்திலேதான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிராஹ்ம முகூர்த்தம் எனப்படும் வைகறையில் அவதரித்தார். வெளி உலகுக்குப் பிரகாசமான உண்மைகளைக் காட்ட வந்தவர் பலபலவென விடியத் தொடங்கும் வேளையில் பிறந்தார். உள்ளுக்குள்ளேயே அமிழ்ந்து அடங்கும் உண்மைகளைக் காட்டுவதற்காக வாழ்ந்த அம்மா, இயற்கையன்னை வெளிச்சங்களை உள்ளே வாங்கிக்கொண்டு இருள் படுதாவை விரித்துக்கொள்ளும்போது ஜனனம் கொண்டாள். இரவோடு

இரவாகக் கலந்து சியாமாசுந்தரியின் மணி வயிற்றில் பிரவேசித்தவள், அதே அந்தி மயக்கத்தில் குழந்தையாக உலகில் பிறந்தாள்.

நம் சீமையில் சுக்ரவார சாயரட்சையை எவ்வளவு மங்களமாகக் கொள்கிருேமோ, அதுபோல் குருவார மாலே வேளேயை வங்காளத்தில் போற்றுவர். சக்தி வழிபாட்டில் ஈடுபட்ட தாந்திரிகர்களும், பொது மக்களும் புனித பௌஷ்யத்தில், வியாழன் அந்தி முடிவில் சிம்ம வாஹினி ஆலயத்துக்குக் கூட்டமாகச் சென்று பிரார்த்தனே செலுத்தி வீடு திரும்புகையில், சியாமாசுந்தரி பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

"அம்மாவையே உரிச்சு வைச்சிருக்கு" என்று சொல்லி ஊர்ப் பெண்கள் ஆனந்தப்பட்டனர்.

அம்மா, அம்மாவைப் போலன்றி எப்படி இருப்பாள்?

குழந்தைக்கு நாமகரணம் செய்யவேண்டிய நாள் வந்தது. ஜோதிடர் ஜாதக ரீதியில் பெயரைக் கணித்தார், "டாகுர்மணி" என்று பெயரிடச் சொன்னுர்.

டாகுர் என்ருல் இறைவன் என்று பொருள். இறைவனின் மனத்தில் மன்னுகிற, மின்னுகிற ரத்தினமான தேவியே 'டாகுர் மணி'. ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணரை இன்றும் வடநாட்டில் அத்யந்த பக்தர்கள் 'டாகுர்,' 'டாகுர்' என்றே சொல்லுகிருர்கள். நம் கதையின் நாயகி பிறந்தபொழுது பொருத்தமாக அமைந்தது போலவே, பெயரும் பொருத்தமாக அமைந்துவிட்டது.

அந்தக் குடும்பத்தில் இரண்டு பெயர்கள் வைக்கிற வழக்கம் உண்டு. அதன்படி, 'க்ஷேமங்கரி' என்று இன்னெரு பெயர் வைத்தார்கள். க்ஷேமத்தையே செய்பவள் என்று அர்த்தம். க்ஷாமம் மூட்விருந்த நாட்டில் அம்மாவைப் போல க்ஷேமம் செய்தவர் யாருண்டு?

மூன்ருவதாக இன்னெரு பெயரும் முளேத்தது? அதுவே நிலேத்து நின்றது. குழந்தையையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள் சியாமாசுந்தரியின் சித்தி. பேறு பார்ப்பதற்காகவோ அல்லது குழந்தை பிறந்த சுபச் செய்தி விசாரிப்பதற்காகவோ வந்தவர்களில் அந்தக் கிழவியும் ஒருத்தி.

அவள் கண்களில் கண்ணீர் பெருகி வந்தது. சியாமாசுந்தரியைப் பார்த்துக் கரகரத்த குரலில், "அந்தக் 'கடன்காரி' மாதிரியே

இருக்கு. அவ பெயரையே வைச்சுக் கூப்பிடறயா ?'' என்று கேட்டாள்.

சமீபத்தில்தான் சித்தி தன் அருமைப் பெண் சாரதாமணியை இழந்திருந்தாள். புத்திரசோகத்துடன் சித்தி கேட்டுக்கொண்டதைச் சியாமாசுந்தரியால் மறுக்க முடியவில்லை.

மறைந்துபோன தனது ஒன்றுவிட்ட சகோதரியான சாரதா மணியின் பெயரையும் குழந்தைக்குச் சூட்டினுள் சியாமாசுந்தரி.

ஆகா, 'சாரதா' என்ற நாமத்துக்கு உள்ள பெருமையைத்தான் என்னென்பது ?

'சாரதா' என்ற நாமத்தில் ஆதி சங்கராசாரியர்களுக்கு ஒரு தனி ஈடுபாடு. சிருங்ககிரியில் சாரதா பீடத்தை ஸ்தாபித்தார். காம கோடி பீடத்தை அதிஷ்டித்துத் தாம் காஞ்சியில் ஸ்தாபித்த மடத்துக்குச் சாரதா மடம் என்றே பெயரிட்டார்.

உருவமும் பெயருமற்ற பிரம்மமே ஜீவன் என அறிவதற்கு உபாயமாக ஞான மார்க்கத்தை வகுத்த ஆதிசங்கரர், அந்தப் பிரம்மம் பல உருவில், பல பெயரில் எடுத்துக்கொண்ட தெய்வ வடிவங்கள் அனைத்தையும் கிரமப்படி வழிபடும் முறைகளைத் தொகுத்து, 'பிரபஞ்சஸாரம்' என்ற உத்தம நூலை அருளியிருக்கிருர். அந்த நூலில் முதல் சுலோகமாகக் கலைவாணித் துதியை அளிக்கிருர். அங்கே கலைவாணியைச் 'சாரதா' என்றே பெயரிட்டு அழைக்கிருர்.

'' சாரதா தேவி நமது சித்தத்தின் அழுக்கை எல்லாம் நீக்கி அதைப் பரிசுத்தமாக்குவாளாக !'' என்கிருர்.

விதரது பரிசுத்திம் சேதஸ : சாரதா வ :

என்ற ஆசாரிய வாக்கை நம் தூய அன்னையின் அடியார்கள் மந்திரம் போலவே ஜபிக்கலாம் !

ஸ்தூல உலகம், கர்ம பலன் இவற்றைத் தீர்க்கும் பிரம்ம வித்யா ரூபிணிதான் 'சாரதா' என்று இதற்கு விரிவுரை கூறுகிருர் பகவத் பாதரின் சீடரான ஸ்ரீ பத்மபாதாசாரியர்கள்.

குளிர்ந்த சரத்காலத்தில் ஆராதனை பெற்று, குளிர அருள் வழங்கும் அம்பாளைச் 'சாரதை' என்பார்கள்.

வங்கத்தில் 'ஸாரதா' என்றே சொல்கிருர்கள். ஸாரமான ஆத்ம ஞானத்தின் நாயகியான சரஸ்வதி தேவியே ஸாரதா என்று விளக்குகிருர்கள்.

* * *

தலைச்சன் குழந்தையானபடியால் ராமசந்திர முகர்ஜியும், சியாமாசுந்தரியும் சாரதையை வெகு செல்வமாக வளர்த்தனர். குழந்தையைப்பற்றி அவர்களுக்கு முன்கூட்டியே தெய்விகமான சூசகங்கள் இருந்தனவே, அப்படிப்பட்ட தெய்வக் குழந்தையை அவர்களால் சகஜமாக வளர்க்க முடிந்ததா என்ற கேள்வி எழலாம்.

சகஜமாகவே வளர்த்தார்கள். இது பராசக்தியின் அற்புத மாயைகளில் ஒன்று. ஸ்காந்த புராணத்தில் பார்வதியின் குழந்தைப் பருவ வருணனையில் இது அழகாகக் கூறப்படுகிறது.

பார்வதி ஆவிர்ப்பவித்தபோது அவள் சாட்சாத் பரப்பிரம்ம சத்தியே என்று ஹிமவானுக்கும், அவனுடைய மனையாளான மேனைக்கும் தெரியும். ஆனுலும் அவர்கள் அவளை வாத்ஸல்யத்துடன், வாஞ்சையுடன் 'இவள் எங்களுடைய பெண்' என்ற நெருக்கமான எண்ணத்துடனேயே வளர்த்தனராம்.

'தன்னைக் குறித்து அவர்களுக்கு உண்டான மெய்யான அறிவை அம்பாளே போக்கிவிட்டாள். இந்த மாயையால் ஞானமிழந்த பெற்ருேர் அவளைத் தங்கள் குழந்தைதானுக்கும் என்றே எண்ணி வாத்ஸல்யத்துடன் வளர்த்தனர்' என்கிருர் வியாச மகரிஷி.

மாயையைப் போக்கி ஞானத்தைத் தரவே உலகுக்கு வந்தவள், தன்னைப்பற்றிய ஞானத்தைப் பெற்ருேரிடமிருந்து போக்கி, அவர்களுக்கு ஒரு மாயத்தை உண்டாக்குவதைத்தான் முதல் லீலையாகச் செய்தாள்!

மண்ணுண்ட வாயில் ஈரேழு புவனத்தையும் யசோதைக்குக் காட்டிய கோவிந்தனும், உடனுக்குடனே அந்தத் தெய்விகத்தை அவளது சித்தத்திலிருந்து மறைத்து, அவளிடம் கெஞ்சலையும், கொஞ்சலையும்– ஏன், திட்டையும், அடியையுங்கூடப் பெற்றதை பாகவதம் கூறுகிறது.

தெய்வம் அவதாரம் எடுக்கும்போது மனிதரோடு மனிதராக வாழவே விரும்புகிறது. மக்கள் தன்னைக் கண்டு பயந்து பக்தி செய்தால் அதற்குத் திருப்தி உண்டாவதில்லை. தன்னை அன்பு உள்ளங்கள்

அணுகிக் கொஞ்சிச் செல்லம் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறது. அவர்களது பயபக்தியை மாயையால் மறைத்து வாஞ்சையாக மாற்றுகிறது.

தெய்வத்துக்கும் இப்படி ஓர் ஆசை உண்டு என்பது சரிதானா? அல்லது நெருங்கி அன்பு செய்வதன் இன்பத்தை எளிய அடியார்கள் அநுபவிக்க வேண்டும் என்றே தன் தெய்விகத்தை மூடி மறைத்துக் கொள்ளுமோ என்னவோ? அந்த அடியார்களை அது அடியோடு ஏமாற்றி விடுவதில்லை. அவ்வப்போது தன் தெய்விகத்தைக் காட்டி விடுகிறது; உடனுக்குடன் மூடி மறைக்கிறது.

* * *

க்ஷேமங்கரி என்று குழந்தைக்குப் பெயரிட்டது அப்போதைக்கப்போதே அந்தக் கிராமத்தின் விஷயத்தில் மெய்யாயிற்று. அந்த வருடப் பொங்கலின்போது எதிர்பாராத அறுவடை கிடைத்திருந்தது. அதன் பின்பே ஜயராம்பாடியின் செழிப்பு ஓங்கலாயிற்று. பச்சை நிறைந்த கிராமத்தில் பச்சைக் கிளியாக வளர்ந்தாள் குழந்தை. ஆம்; அவள் மிழற்றும் மழலை, கிளிக் குஞ்சின் குரலாகவே இருந்தது.

ராமகிருஷ்ணர், விவேகாநந்தர், சாரதை மூவருக்குமே சாரீர மாதுரியம் பொது அம்சமாக இருந்தது.

ஓம் கர்ண பீயூஷ ஸுஸ்வராயை நம:

என்பது அம்மாவின் அஷ்டோத்தர சதத்தில் ஒரு நாமம். 'காதுக்கு அமுதான இனிய குரல் படைத்தவள்' என்று பொருள்.

ஆனால் கிளிக் குஞ்சின் பரபரப்பும் துருதுருப்பும் அவளிடம் இம்மியும் இல்லை. குழந்தைப் பருவத்துக்கு ஒவ்வாத விசித்திரமான அமைதியும் நிம்மதியும் அவளிடம் குடிகொண்டிருந்தன.

வீட்டிலோ அமைதியும் நிம்மதியும் குலைகிற அளவுக்கு வறுமை வலுத்தது.

கிராமத்தில் செழிப்பாயினும், வீட்டில் தரித்திரம் தாண்டவம் ஆடிற்று. நிறைந்த உள்ளமும், குறைந்த செல்வமும் கொண்ட குடியாக இருந்தது அது.

நெல் வருவாய் போதாமல், பருத்தியும் பயிரிட்டார் ராமசந்திரர். ஊராரின் மதிப்பைப் பெற்றிருந்த அந்த இல்லத் தலைவி சியாமாசுந்தரியே பருத்தித் தோட்டத்துக்குச் சென்று காய்கள் பறிக்கும் நிலை ஏற்பட்டது.

குழந்தையைத் தூக்கிக்கொண்டு போவாள். நிழலில் மகவைப் படுக்க வைத்துவிட்டுக் காய் பறிக்கத் தொடங்குவாள்.

விழித்துக்கொண்ட சாரதா, அம்மா என்ன செய்கிருள் என்று கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பாள்.

மூன்று வயசாகும்போதே அம்மாவுக்கு உதவுவதற்காகத் தானும் கிளம்பிவிட்டாள். சின்னஞ் சிறு சிவப்பு முன்னங் கால்கள் மேலும் சிவக்க, எம்பி எம்பிப் பருத்திக் காய்களை அவளும் சேகரிப்பாள்.

வீட்டுக்குப் போனதும் சியாமாசுந்தரி பஞ்செடுத்துத் தக்ளியில் நூல் நூற்று, பூணூலாக்குவாள். பூணூலை நாலு வீட்டில் கொடுத்துத் தட்சிணை பெறுமளவுக்கு ஏழைமை மிகுந்திருந்தது.

குழந்தையும் தக்ளியை வைத்துக்கொண்டு நூற்பதற்கு முயலுவாள். இல்லாத சிரமமும் படுவாள். காலக் கிரமத்தில் பிஞ்சுப் பருவத்திலேயே பஞ்சு நூற்கத் தெரிந்துகொண்டுவிட்டாள்.

தெய்வ சாரதையின் கையில் நூல் (சுவடி) உண்டு; குழந்தை சாரதையின் கையிலும் நூல் இருந்தது. அது அறிவின் அடையாளம். இது உழைப்பின் அடையாளம். இந்த உழைப்பிலிருந்து பிறக்கிற பூணூல் பக்திக்கு அடையாளம்.

சாரதாமணியின் வாழ்க்கைத் தத்துவம் இதில் அடங்கிவிட்டது:

பயனெண்ணுமல் உழைக்கச் சொன்னுள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னுள்

என்பதுதான் அந்தத் தத்துவம். அவள் வாழ்நாள் முழுவதும் அதைத்தான் செய்தாள். பாலப் பருவத்திலிருந்து தொடங்கி உழைப்போ உழைப்போ அப்படி ஓர் உழைப்பு உழைத்தாள்! எஞ்சிய நேரம் முழுதும் பக்திதான். ஏன், உழைப்பின் ஊடேயும் பக்தி தான்.

நவராத்திரிக் கொலுவில், பிரபஞ்ச வஸ்துக்கள் அனைத்துக்கும் பொம்மை செய்து வைத்து மகிழ்கிருேம். பராசக்தி தந்திருக்கிற பிரபஞ்சம் முழுவதையுமே பொம்மையாக ரசிக்கிறது குழந்தை.

சந்திரன் என்றெரு பொம்மை - அதில்
தண்ணமுதம் போல் ஒளி பரந்தொழுகும்

அல்லவா? அம்புலி 'பொம்மை' சாருவுக்கு மிகவும் பிடிக்கும். அது போலவே வெளுப்பு ஆக ஆசைப்படுவாள். வெளுப்பு என்றுல் வெறும் உடம்பின் வெளுப்பு அல்ல!

ஆமோதர் நதிக் கரைக்குச் சென்று அந்த நதிப் பொம்மை நளின மாக ஓடுவதை ரசிப்பாள்.

சுறவுகள் மீன்வகைகள் - எனத்
தோழர்கள் பலவும் இங்(கு) எனக்களித்தாய்

என்று மீனினங்களோடு மகிழுவாள்.

ஞால முற்றிலும் நிறைந்தே - மிக
நயந்தரு பொம்மைகள் எனக்கெனவே

சிம்மவாஹினி தந்திருப்பதாகக் கருதி ஆனந்தமாக வளர்ந்தாள். அம்பாள் தரும் அழகிய பிரபஞ்ச பொம்மை போதாமல், தானே பொம்மை செய்தும் விளையாடினுள். 'அம்மா அப்பா' விளையாட்டு விளையாடுவாள். அவள்தான் எப்போதும் அம்மா! குழந்தைக்குள் ளேயே 'அம்மா ஆசை' குமுறிக்கொண்டிருந்தது போலும்! சம வயதுக் குழந்தைகளிடையே ஓர் அம்மாவின் கௌரவத்துடன் அவள் தனித்து நின்ருள். அவள் விஷமம் செய்த நாளே கிடையாது. விஷ மம் செய்கிற மற்றக் குழந்தைகளுக்கும் புத்தி சொல்வாள். விளை யாட்டில் சண்டை வந்துவிட்டால் அவள் அப்போதே சமாதானம் செய்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பாள்.

அம்மா அப்பா விளையாட்டைவிடப் பூஜை விளையாட்டு அவளுக்கு மிகவும் பிடித்தது. களிமண்ணை 'அமுக்கு திமுக்கு' என்று பிசைந்து பொம்மை யாக்கிவிடுவாள். ராமகிருஷ்ணருக்கும் குழந்தைப் பருவத்திலேயே அற்புதமாகப் பொம்மை செய்யும் ஆற்றல் இருந்தது இங்கு நினைவு வருகிறது.

'இது லக்ஷ்மி', 'இது காளி' என்று தன் பொம்மைகளுக்குப் பெயர் வைத்துப் பூஜையை ஆரம்பித்துவிடுவாள். ஏகமாகப் புஷ்பங் களையும், வில்வ பத்திரங்களையும் பறித்து வந்து தனது புஷ்பக் கரத் தால் தூவுவாள்.

'ஜகத்தாத்ரி' என்ற பெயரில் காளிக்கு நடைபெற்ற பூஜை ஒன்றின்போது குழந்தை அப்படியே கண்களை மூடிக்கொண்டு தன்மய மாக அமர்ந்துவிட்டாள்.

ஹல்தேபுகுர் என்ற கிராமத்தைச் சேர்ந்த ராமஹ்ருதயர் என்ற பெரியவர் குழந்தை சாரதையை இந்த நிலையில் கண்டு அதிசயித்தார். வெகு நீண்ட நேரமாகியும் சாரதையின் சாரஸ தளம் போன்ற இமை

கள் திறந்த பாடில்லே. மண்ணினுல் செய்த பொம்மையின் முன்னுல் பால்கோவாவினுல் செய்த பொம்மையாக அவள் அமர்ந்துவிட்டாள். திடீரென்று, 'எது காளி, எது ராமசந்திர முகர்ஜியின் பெண் ?' என்ற ஐயப்பாடே ராமஹ்ருதயருக்கு உண்டாகிவிட்டது.

உடம்பில் ஓர் உதறல் எடுத்தது.

அச்சத்துடன் அங்கிருந்து நழுவிவிட்டார்.

* * *

ஸ்ரீயாமாசுந்தரியின் பிறந்தகம் இருந்த 'ஷியாட்' எனப்படும் ஷிஹாருக்கு ஒரு முறை குழந்தை சாரதை சென்றிருந்த போது, ஹ்ருதயராம் முகர்ஜியின் வீட்டில் நாமசங்கீர்த்தனம் நடந்தது. பெரியவர்களோடு குழந்தையும் அதற்குச் சென்றுள்.

சங்கீர்த்தனம் முடிந்தபின் அங்கு வந்திருந்தவர்கள் யாவரும் அந்த அழகுக் குழந்தையை, சமர்த்துக் குழந்தையை மாற்றி மாற்றி எடுத்துக் கொஞ்சினுர்கள்.

கிழவி ஒருத்தி சாரதையை மடியில் அமர்த்திக்கொண்டு, ''என்ன அதிசயக் குழந்தையடி அம்மா இது! தடிமாடு மாதிரி வயசாகிற நமக்கே பஜனேயில் கொஞ்ச நாழிக்கு மேலே பொருந்தி இருக்க முடியவில்லே. இந்தப் பச்சைக் குழந்தை என்னமா சங்கீர்த் தனத்திலேயே மனசைக் கொடுத்துண்டு உட்கார்ந்திருந்தது!'' என்று சிலாகித்துவிட்டு, சாரதையிடம் செல்லமாக, ''ஏண்டீ சிறுக்கி, பஜனே கேட்கிற பாட்டியா நீ! பஜனே பார்க்கத்தான் வந்தியா, இல்லே உன் அகமுடையான் இங்கே வந்திருக்காஞன்னு துப்புத் துலக்க வந்தியா? சொல்லுடீ, திருட்டுக் கள்ளி!'' என்றுள்.

கிராமாந்தரக் கிழவிகளுக்கே உரிய முறையில் கேலி செய்தாள்.

ஒரே சிரிப்பு ஆரவாரம் எழுந்தது.

சாரதை பட்டு முகத்தை அந்தப் பாட்டியின் தோளிலே புதைத் துக்கொண்டது.

''என்னடீ, வெட்கம்! ஆத்துக்காரரைப் பார்த்துட்டீயா? அடியே......அடியே......நான் சமர்த்துப் பாட்டியோன்னே, எனக் கும் உன் அகத்துக்காரரைக் காட்டுவாயாம்! இங்கே வந்திருக்கிற இத்தனே பேருலே எந்த மகராஜன் எங்க சாரு கையைப் பிடிக்கப் போறுன்னு தெரிஞ்சுக்கிறேன்'' என்று கிழவி குழைந்தாள்.

சாரதை சட்டென்று கிழவியின் தோளிலிருந்து முகத்தை எடுத்துக்கொண்டாள். தன்னுடைய இரண்டு 'துக்குணியூண்டு'க் கைகளையும் தூக்கி, விரல்களைக் கோத்துக்கொண்டு, ஆள்காட்டி விரல்களை மட்டும் நீட்டி, ''அதோ, என் அகத்துக்காரர்!'' என்று காட்டினுள்.

அவள் காட்டிய திசையில் எல்லாப் பெண்களின் கவனமும் சென்றது.

கும்மாளி சடேரென்று ஓய்ந்தது.

'இத்தனை சூட்டிகையான சாரு போயும் போயும் இந்தப் பைத்திய கதாயியையா புருஷனுகக் காட்டவேண்டும்?' என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் எழுந்தது.

சாருவோ வைத்த விழி வாங்காமல் அந்தப் 'பைத்திய' கதாயியையே பார்த்துக்கொண்டிருந்தது.

யார் அந்தப் பைத்திய கதாயி?

3. கதாயி

பித்தரே என்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்.
—சுந்தரர், திருக்கருகாவூர்ப் பதிகம்

குழந்தை சாருவின் சித்தம் கவர்ந்த பித்தரான அந்த 'கதாயி' தான் நம் கதாநாயகர்.

கதாயி என்பது செல்லப் பெயர். கதாதர சட்டோபாத்தியாயர் என்பது அவருடைய முழுப் பெயர்.

இப்போது அவரை உலகம் பைத்தியமாக எண்ணினுலும், இந்தப் பிள்ளை பிறந்ததே தங்களது பெரும் பாக்கியம் என்று ஆதியில் அவருடைய பெற்றோர் வியந்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

காமார் புகுரைச் சேர்ந்த எளிய அந்தணர்களான க்ஷுதிராமுக்கும் சந்திரமணிக்கும் வாய்த்த சத்புத்திர பாக்கியந்தான் கதாதரர். க்ஷுதிராமும் சந்திரமணியும் அந்தக் குழந்தை கயா க்ஷேத்திரநாதனை நாராயணனின் அம்சம் எனக் கண்டுகொண்டு, அதற்கு கதாதரன் என்று பெயரிட்டனர்.

புரளும் குழலும், குழலனைய தீங்குரலுமாகக் குழந்தை கதாதரன் இயற்கை அன்னையின் மடியில் வளர்ந்தான். மாந் தோப்புகளிலும், வயல்வரப்புகளிலும் அவனது பாலப் பருவம் தவழ்ந்து விளையாடிற்று. அம்பிகை உலகெங்கும் பரப்பியுள்ள அழகுகளையெல்லாம் அப்போதே கதாதரன் உணரத் தொடங்கினன். ஆருவது வயதில் கருமுகில்களின் பின்னணியில் தூய வெண்ணிற நாரைகள் பறப்பதைக் கண்டபோது, தன் உணர்விழந்து அழகுகளின் ஆதாரமான அம்பிகையிலேயே தோய்ந்தான் கதாதரன்.

பள்ளிப்படிப்பை விரும்பாத பாலன் கதாதரன் தெய்விகமான இசையிலும் தெய்வக் கதைகளை விவரிக்கும் நாடகத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தான். நாடகத்தில் சிவ வேஷம் தாங்கியவன் தன் நிலையை இழந்து சிவத்திலேயே லயமானன். சஞ்சரித்துக்கொண்டேயிருக்கும் சாது ஜனங்களின் சங்கத்தில் குதூகலித்தான். தேவ தேவியரைத் தியானிக்கத் தொடங்கிய அளவிலேயே மனசு குவிந்துவிடும் உயரிய நிலை கதாதரனுக்கு இரத்தத்தில் ஊறியிருந்தது.

க்ஷுதிராம் காலகதிக்கு இலக்கானுர். குடும்பத்தின் வறுமை பயங்கரமாயிற்று. கல்வி கற்று ஏதேனும் ஒரு தொழிலை நடத்த வேண்டிய அவசியம் கதாதரனுக்கு ஏற்பட்டது. கல்கத்தாவில் சம்ஸ்கிருத பாடசாலை நடத்திக்கொண்டிருந்த தன் தமையனுரான ராமகுமாரரைச் சென்றடைந்தான் பதினுறு வயது கதாதரன். அவர் அவனை லௌகிகக் கல்வி கற்குமாறு தூண்டினுர். கதாதரன் சிந்திக்கலானுன்: 'பள்ளிப் படிப்பினுல் நான் மேலும் தூய்மை பெறுவேனே? அது என் பக்தியை வளர்க்குமா? கடவுளுக்குப் பயந்து என் தந்தை எளிய வாழ்வு வாழ்ந்தாரே—அதைப் போல நானும் வாழ இந்தக் கல்வி சிறிதேனும் உதவுமா? அஞ்ஞானத்தையும், போக போக்கிய அபிலாஷையையும் வென்று, பரம்பொருளை நுகர இந்த எழுத்தறிவு உபயோகமாகுமா?'

'ஆகவே ஆகாது' என்ற உறுதியான மறுமொழியை கதாதரனின் உள்ளம் அளித்தது. 'அப்படியானுல், எழுத்தறிவில்லாவிடினும் கடவுளைக் காணும் பாதையில் செல்வதே யல்லவா சாலச் சிறந்தது?' என்று அவன் மனசு திடசங்கல்பம் பூண்டது.

சகோதரரிடம் கூறினுன் கதாதரன்: ''வெறும் சப்பாத்தியும் வெண்ணெயும் சம்பாதிச்சுத் தரும் படிப்பை வைச்சுண்டு நான் என்ன செய்யறது? இருதயத்தில் ஒளியை நிரப்பித் திருப்தியூட்டுகிற ஞானம் அல்லவா எனக்குத் தேவைப்படறது!''

ராமகுமாரரால் விடை சொல்ல இயலவில்லை.

இந்தச் சமயத்தில் ராணி ராஸமணி என்ற கரையர் குலச் சீமாட்டி கல்கத்தாவை அடுத்த தக்ஷிணேசுவரத்தில் பவதாரிணி என்னும் தேவி காளிக்கு ஓர் ஆலயம் எடுத்தாள். 'பவதாரிணி' என்ருல் சம்சாரக் கடலிலிருந்து மோக்ஷ இன்பத்துக்குக் கடத்துவிப்பவள். இவ்வாலயத்தின் அர்ச்சகராக ராமகுமாரர் நியமிக்கப்பட்டார். கதாதரர் ராமகுமாரருடன் தக்ஷிணேசுவரம் வந்தடைந்தார். அதாவது, கரையில் கிடந்த மீன் மீண்டும் சாகரத்தில் சேர்ந்து விட்டது.

ராமகுமாரர் 1856-ஆம் ஆண்டு காலமானுர். கதாதரரே பவதாரிணியின் அர்ச்சகரானுர். அப்போது அவருக்கு வயது இருபது.

ஆரம்ப காலத்தில் அவர் சமய நூல்களை அறிந்திருக்கவில்லை. நானுவித ஆன்ம சாதனைகளின் நுணுக்கங்களை அறிந்திருக்கவில்லை. அவருக்கு முறைப்படி உபதேசம் கூறி வழி காட்டுபவர்களும் அப் போது இல்லை. எனினும் அவரிடமே இவற்றுக்கெல்லாம் மேம்பட்ட

அற்புதமான ஒன்று இருந்தது. அம்பிகையை நேருக்குநேர் காண வேண்டும் என்று அவரது உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து பிரவகித்த ஆர்வந்தான் அந்த அற்புதம். 'அழுதாலுன்னைப் பெறலாமே' என்று மணிவாசகர் கூறியவாறு நெட்டுயிர்த்துக் கதறி அழ அறிந்திருந்தார் கதாதரர். சின்னஞ் சிறு குழந்தை தாய்க்காக எப்படி அலறுமோ அப்படியே காளி மாதாவின் தரிசனத்துக்காக அலறலானுர் கதாதரர்.

அதிகாலையில் கோமளமான குளிரொளியில் கங்கைத் தடத்தோடு நடந்து செல்வார் கதாதரர்–தேவியின் நினைவே நிறைந்தபடி. பகலெல்லாம் பூஜையிலும், பஜனையிலும், பிரார்த்தனையிலுமே செல்லும். மாலையின் நளினமான தண்ணொளியில் மீண்டும் கங்கா தீரத்தோடு சஞ்சரிப்பார் கதாதரர்–அம்பிகையின் எண்ணமே உள் முழுதும் பூரித்தபடி. அப்புறம் இரவு முழுவதும் அம்பாள் தியானந் தான். இப்படி வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் திவ்விய தரிசனத்துக்காகவே தவமிருந்தார் கதாதரர். அந்த தரிசனம் மட்டும் கிட்டியபாடில்லை. தவத்தின் உக்கிரமும் ஏறியது. 'ஆகா! இன்னும் ஒருநாள் சென்றுவிட்டது! அம்மா, நான் உன்னைக் காண வில்லை. என் அல்ப ஆயுளில் மேலும் ஒரு தினம் கழிந்துவிட்டது. நான் சத்தியத்தைத் தரிசிக்கவில்லை. பொழுது வீணுகிறது. ஐயோ வீணுகிறதே!' என்று அரற்றித் துடியாகத் துடித்தார் கதாதரர்.

'நீ உண்மையான அன்னையாக இருந்தால் என்னை இப்படித் தவிக்கவிடுவாயா? அப்படியானுல் அம்பிகையே கிடையாதா? நீ ஒரு கற்பனைதானு? மதம் என்பது ஒரு மாயந்தானு?' என்றெல்லாம் நெஞ்சம் உருகிக் கேட்பார் கதாதரர். உடனேயே ஞானியர்களும், பக்தர்களும் அவரது மனக் கண்முன் வரிசை வரிசையாக வந்து நிற்பார்கள். ஞானப் பிழம்பில் ஜொலிப்புப் பெற்ற அந்த அறிவுச் செல்வர்களையும், அம்பிகையின் அருள் வெள்ளத்தில் அளைந்த அந்த அன்புச் செல்வர்களையும் நினைந்தவுடன் அவருடைய ஐயங்கள் நீங்கும். தவக் கனலை மேலும் விசிறி உக்கிரமாக்குவார்.

ஒரு நாள் தாங்கொணுத துயரம் அவரை நெரித்தது. 'அம்பாளைக் காணுமல் இதென்ன வாழ்க்கை? தெய்வத்தைப் பாராமலே எதற்காக உயிர் வாழ வேண்டும்?' என்ற எண்ணம் கொழுந்துவிட்டெரிந்தது. உடலில் உயிர் தரிக்க முடியாமல் நிலை தடுமாறிய கதாதரர் பவதாரிணியின் சந்நிதிக்கு வந்தார். அங்கே தொங்கிக் கொண்டிருந்த வாளைக் கையில் எடுத்துக்கொண்டார். இன்னும் ஒரு விநாடிதான் இந்தப் பாடு! அப்புறம்? அந்த வாள் அவருக்கு அமைதி அளித்து விடும்.

அந்த ஒரு விநாடிக்குள் மகத்தான சம்பவம் நடந்துவிட்டது. எந்தச் சம்பவத்துக்காக கதாதரர் வேக்காட்டில் வெந்துகொண்டிருந்தாரோ அந்தச் சம்பவம் நிகழ்ந்தேவிட்டது !

சந்நிதி முழுவதும் பரம பாவனமானதோர் ஒளி பாய்ந்தது. அந்த ஒளி எங்கிருந்து வந்தது ? இதோ, இந்த பவதாரிணியிடமிருந்தேதான் வந்தது. ஆம், அங்கே பவதாரிணியின் விக்கிரகம் நிற்கவில்லை. பவதாரிணியே நின்ருள்.

அஞ்ஞானிகளுக்குக் கரு நிறத்தவளாகத் தோன்றும் காளி மாதா ஞானியான கதாதரருக்கு ஒளி மயமாகக் காட்சி அளித்தாள். எட்ட இருந்து பார்க்கும்போது கடல் நீர் கருநிறமாகத் தெரிகிறது. கையில் எடுத்தாலோ ? நமக்கெல்லாம் எட்ட இருக்கும் கரிய அன்னைத் தெய்வம் அப்படித்தான் கதாதரரின் கைக்கருகே ஒளிமயமாக வந்து விட்டாள்.

அவளுடைய மேனி அழகின் ஒளியைச் சொல்வதா ? அவள் மனத்தில் கொப்புளிக்கும் அருளின் ஒளியைச் சொல்வதா ?

கோர காளியாம் பவதாரிணியின் மேனி அழகையும், அருளழகையும்பற்றிச் சொல்வது நம் தக்ஷிண தேச வாசகர்களில் பலருக்கு வியப்பாக இருக்கலாம்.

காளி மாதாவிடம் எழும் உள்கனிந்த பக்தியைத் தத்துவ விளக்கத்தில் பூரணமாகக் கொண்டு வர முடியாது. எனினும் ஓரளவேனும் விளங்கிக்கொள்ள முயலுவோம்.

சத்திப் பேய்தான் தலையொடு தலைகள் முட்டிச்—சட்டச்
சடசட, சட்டென் றுடைபடு தாளங் கொட்டி - அங்கே
எத்திக்கினிலும் நின்விழி யனல்போய் எட்டித்-தானே
எரியுங் கோலங் கண்டே சாகும் காலம்
அன்னை ! அன்னை ! ஆடுங்கூத்தை
நாடச்செய்தாய் என்னை !

என்று கவி பாரதியார் பாடிய ரௌத்ராகாரக் கோலம் கொண்டவள் காளி. 'ரௌத்திராகாரம்' என்ருலும் போதாது ; ஏனெனில் ருத்ரனையே காலின்கீழ்ப் போட்டு மிதித்தபடி ஆடுபவள் காளி!

ஸர்வமங்கள மூர்த்தியாக ஆடும் நடராஜனுடைய திருவடியின் கீழும் ஓர் உருவம் உண்டு. அபஸ்மார புருஷன் அவன். அதாவது,

ஸ்மரிக்கத் தகாத—நினைக்கத் தகாதவற்றின் உருவம் அவன். நடராஜ நிலையில் நினைக்கத் தகுந்த வஸ்து, நினைக்கத் தகாத வஸ்து என்கிற பேதம் கிடையாது. நினைவு என்பதே தகாத வஸ்து என்கிற நிச்சலன, அத்வைத, ஆத்மானந்த நிலை அது. நினைவை அழித்து நிஷ்டை தருவதற்கு அடையாளமாக முயலகனை மிதித்து ஆடுகிறான் ஞான மூர்த்தியான நடராஜன்.

அவன் அப்படி ஞானமூர்த்தியாக இருந்துவிட்டால் பிரபஞ்சம் என்ன ஆவது? அவனுடைய சக்தி பிரபஞ்ச விளையாட்டை ஓயாமல் நிகழ்த்தி மகிழ்கிறது. நடராஜனின் உடுக்கு உலக சிருஷ்டியையும், அவனது அபய ஹஸ்தம் பரிபாலனத்தையும், அக்கினியானது ஸம்ஹாரத்தையும் செய்துகொண்டேதான் இருக்கின்றன. தன்னிலேயே திளைத்த ஞான மூர்த்திக்கு துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம் ஏதுமே இல்லை. ஆனாலும் பரம்பொருள் எதிலும் பற்றாமல் தனித்திருக்கும்போதே, அதன் சக்தி இந்த உலக நாடகத்தை நடத்தி, துஷ்ட நிக்ரஹம், சிஷ்டபரிபாலனம் என்ற இரு விதங்களிலும் அநுக்கிரகம் புரிந்து வருகிறது. இந்த அநுக்கிரகத்தின் இரண்டு வடிவங்கள்தாம் லலிதையும், காளியும். லலிதமான வடிவம் கொண்டபோது எது லலிதையாக, திரிபுரஸுந்தரியாக, ராஜராஜேசுவரியாக, காமகோடி காமாக்ஷியாக வந்ததோ, அதுவே கோர ரூபம் கொண்டு சண்டியாக, சாமுண்டியாக, மகிஷமர்த்தினியாக, துர்க்காபரமேசுவரியாக, மகா காளியாக ஆயிற்று.

நினைவை மிதித்தால் ஆனந்த ஆத்மாநுபவமான நடராஜன்; நினைவற்ற நடராஜனை மிதிப்பதே உலகைக் காக்கும் அருள் நினைவு; அதன் வடிவமே காளி! லலிதை இப்படி மிதிப்பதாகச் சொல்லாமல், பரமசிவனையே ஆசனமாகக் கொண்டு அமர்ந்திருக்கிறாள் என்று நளின எழில் தோன்றச் சொல்கிறோம்.

தீமையைப் பொசுக்குவேன் என்று காட்டுவதற்கே காளி கொடிய ரூபம் கொண்டாள் என்றும் சொல்லலாம். கொடியவர்களுக்கே அவள் கொடியவள். அடியவர்களுக்கு அருள்பிரவாகம். இல்லாவிடில் வங்கத்திலே சின்னக் குழந்தைகள்கூட இந்த கோர ரூபிணியை 'அம்மா, அம்மா' என்று தொட்டுக் கொஞ்சி அன்போடு வழிபடுமா?

அழகு – கோரம், நன்மை – தீமை எல்லாவற்றுக்கும் ஒரே பராசக்திதான் காரணம். நல்லதைமட்டுமே கடவுள் செய்தார், கெட்டதைச் சைத்தான் செய்தான் என்று நம் மதம் சொல்லவில்லை.

இரண்டும் ஒன்றிடமிருந்தே உண்டாயின. இதை உணர்த்தவே கோர காளியை வழிபடுகிறோம்.

நினைவற்ற பிரம்மத்திடம் எப்படியோ ஒரு நினைவு வந்ததால் பிரபஞ்சம் என்ற தோற்றம் ஏற்பட்டது. இந்தத் தோற்றத்துக்குள் தருமம் நிலவ வேண்டும் என்பதற்காகத் தீமையை அழித்து நல்லதைச் செய்கிறாள் பராசக்தி. ஆனால் இந்தப் பிரபஞ்சத் தோற்றமே அடியோடு அழிந்தால்தான் உயிரினம் பிரம்மத்துடன் இரண்டறக் கலக்க முடியும். எனவே பொதுவாக, உலகைப் பொறுத்தமட்டில் தீமையை அழித்துத் தருமத்தை நிலைநாட்டும் காளி, மெய்யடியார்கள் விஷயத்தில் தருமத்தையும் நல்லதையுங்கூட அழித்து, ஸர்வ ஸம்ஹாரிணியாகி அவர்களை நினைவற்ற நிலையில் சேர்க்கிறாள். பவம் என்றால் ஸம்ஸாரம், உலக வாழ்க்கை. அதில் நன்மை தீமை இரண்டும் உண்டு. நம் உடம்பில் தைத்த ஒரு முள்ளை இன்னொரு முள்ளால் கல்லி எடுத்துப் பின்னர் இரு முள்ளையும் வீசி எறிவதுபோல், முதலில் தீமையை நன்மையால் களைந்து, பிறகு அந்த நன்மையையும் சேர்த்துத் தூக்கி எறிந்தாலே ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறலாம். இவ்வாறு ‘பவ’த்திலிருந்து கடத்துவிப்பவளே பவதாரிணியான காளி மாதா. கறுப்பாக இருப்பதால் காளி எனப் பெயர். நிறமற்ற அகண்ட வானம் நமக்குக் கறுப்பாகத் தெரிவதுபோல், அஞ்ஞான தசையில் அவளைக் கறுப்பாகக் காண்போம். ஞானம் வந்தால், ஆகாய ரூபமான, சித் – அம்பரமான நடராஜனே அவள் என உணருவோம். காளி என்றால் காலஸ்வரூபிணி என்றும் பொருள். காலம் என்ற ஒன்றைப் படைத்து அதனுள் நம்மை ஆட்டுவிக்கும் அவளேதான் மெய்யடியார் விஷயத்தில் கால ஸம்ஹாரிணியாகி, அவர்களைக் காலம் கடந்த பரமநிலையில் சேர்க்கிறாள். அவளருள் பெற்றவர்கள்–கதாதரர் போன்ற மகாபுருஷர்கள் – தங்களுக்குள் நன்மை, தீமை இரண்டையும் அழித்துவிட்டாலும், காலம் என்ற ஒன்றில் கட்டுப்பட்டாற்போல் இவ்வுலகில் உருக்கொண்டு உலவுகையில் இவ்வுலகில் நன்மைமட்டுமே வளர வழிகாட்டுவார்கள்.

மாடியிலிருந்து கீழே இறங்குவதற்கு உதவுகிற அதே ஏணி, கீழே இருப்பவரை மாடிக்கு ஏற்றவும் பயன்படுகிறது. பரப்பிரம்மத்தை உலகுக்கு அநுக்கிரகம் புரியுமாறு சலன நிலைக்கு இறக்குகிற அநுக்கிரக சக்தியான காளி மாதாவே, உலகினரைப் பிரம்ம நிலைக்கு உயர்த்தும் ஞான சக்தியாகவும் இருக்கிறாள்.

காளி மாதா வேறு, பிரம்மம் வேறு அல்ல. பிரம்மம் வேறு, அதன் அநுக்கிரக சக்தி வேறு, ஞான சக்தி வேறு என்று எண்ண

லாகாது. பால் வேறு, அதன் வெண்மை வேறு, இன்சுவை வேறு என்பார்களா? பூ வேறு, அதன் மணம் வேறு, வடிவம் வேறு என்பார்களா? தீபம் வேறு, அதன் சூடு வேறு, ஒளி வேறு என்பார்களா?

அன்பே வடிவான கதாதரர் இறுதி மூச்சுவரை 'காளி காளி' என்றே வாழ்ந்ததால் காளியைப்பற்றி இவ்வளவு சொல்ல வேண்டிய தாயிற்று. இப்போது அவர் காளியின் அழகு வெள்ளத்தில், அருள் வெள்ளத்தில் ஆழ அமிழ்ந்ததைச் சிறிதேனும் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா?

அருளொளியில் திக்குமுக்காடிப் போனூர் கதாதரர்.

ஆஹா! அவரது பாக்கியத்தை என்னென்பது! எந்த மகாசக்தி இத்தனை ஆயிரம் அண்டங்களேயும் இத்தனை கோடி ஜீவராசிகளேயும் இத்தனை யுக யுகாந்தரங்களாகப் படைத்துக் காத்து அழித்து வருகிறதோ, அந்த மகாசக்தியைக் கண்ணுக்கு நேராக, நாம் ஒருவரையொருவர் பார்ப்பது போல், ஓர் உருவத்தில் கண்டு, அதன் மகத்தான அன்பினைப் பிரத்தியட்சமாக அநுபவித்தார் கதாயி!

* * *

வாசகர்களே! இந்த நிகழ்ச்சிகளேயெல்லாம் பூரணமாக நம்பிப் படியுங்கள்! பிராண வாயுவுக்கு வழி தரும் இதயக் கதவுகளை நன்கு திறந்து வைத்துக்கொண்டு, விஷ வாயுவுக்கு வழி திறக்கும் மூளை வாதத்தை மூடித் தாழிட்டுவிட்டுப் படியுங்கள்!

கதாதரரைப் போல நாம் யாரும் தெய்வத்தைக் காணத் துடிக்கவில்லை; கதறவில்லை; உயிரை விடத் துணியவில்லை. அவ்வாறிருக்க அவருக்கு ஏற்பட்ட அநுபவத்தில் நாம் ஐயம் கொண்டால் அது எவ்வளவு அபசாரமாகும்? எங்கோ ஒரு பரிசோதனுலயத்தில் யாரோ ஒரு விஞ்ஞானி ஜடப் பொருளை வைத்துக்கொண்டு சோதனை நடத்தித் தம் முடிவுகளை வெளியிட்டால் உடனே அவற்றை நாம் ஒப்புக்கொண்டு விடுகிறோம். அந்தச் சோதனைகளை நாமே நடத்திப் பார்க்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. தம்மையே பரிசோதனுலயமாகவும், தாமே சோதிக்கப்படும் பொருளாகவும் கொண்டு நம்முடைய ஞானச் செல்வர்கள் புரிந்த சாதனை முடிவுகளை ஏற்கமட்டும் ஐயம் கொள்ளலாமா? விஞ்ஞானிகளில் ஒருவர் கண்ட முடிவு தவறு என்று இன்னொரு காலத்தில் வரும் விஞ்ஞானி கூறுகிறூர். நியூடனின் ஒளிக்கதிர்க் கொள்கை உள்படப் பல மாபெரும் விஞ்ஞான முடிவுகள் இந்தக் கதிக்கு ஆளாகியிருக்கின்றன. ஆனுல் ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக எல்லா ஞானிகளும் கண்ட முடிவுமட்டும் ஒன்ருகவே இருந்திருக்கிறது. அதை நம்பத் தயங்கலாமா?

ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகெங்கிலுமுள்ள ஞானிகள் யாவரும் கண்ட முடிவுகள் ஒன்றேதான் என்று நிரூபிக்கவே கதாதரரின் அவதாரம் நிகழ்ந்தது. அன்னையின் தரிசனத்துடன் அவதாரப் பணி மலரத் தொடங்கியது.

* * *

'நோக்கறிய நோக்கும்', 'நுணுக்கறிய நுண்ணுணர்வு'மான தேவி பராசக்தியை பௌதிகக் கண்களால் எவ்வளவு காலம் காண இயலும்? கதாதரர் தம் நினைவிழந்து தரையில் சாய்ந்தார். அப்புறம் அன்று என்ன நடந்தது, மறுநாள் முழுவதும் என்ன நிகழ்ந்தது என்பதேதும் கதாதரருக்குத் தெரியாது. வருணிக்கவொண்ணாத ஓர் ஆனந்தக் கடல் அவர் அகத்தே மதர்த்துத் திமிர்த்து மங்கள நாதத்துடன் அலைவீச, அந்த அலைத் தொட்டிலிலேயே தியானத் துயிலிருந்தார் கதாதரர்.

மக்கள் ஒருவரை யொருவர் பார்ப்பதுபோல அம்பிகையை நேருக்கு நேர் கண்ட பின் கதாதரர் தெய்விக போதையிலேயே ஆழ்ந்துவிட்டார். பரவச நிலையிலும், சர்வ சகஜமான நிலையிலும் கூட அவர் கண்டறியாதன காணத் தொடங்கினர். தேவ சக்திகள் உருவெடுத்து வந்து அவருடன் உறவாடின. அவரும் அவற்றுடன் உரையாடி மகிழ்ந்தார். களிப்புக் கடலில் மூழ்கிக் கிடந்த கதாதரரின் செயல்கள் சுற்றியிருந்தோருக்குச் சற்றும் புரியவில்லை. அவர் ஏன் சிரிக்கிறார், ஏன் அழுகிறார் என்பதெல்லாம் அவர்களுக்குப் புதிராக இருந்தன. அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக முடிவு கட்டிவிட்டார்கள்.

இதைப்பற்றியும் கதாதரர் வருத்தப்படவில்லை. அவர் வருந்தியது வேறொன்றுக்காக. தேவியின் தரிசனம் கிடைத்தபோதிலும் அது தமக்கு இடையறாமல், அநவரதமும் கிடைக்கவில்லையே என்பது தான் அவரது வருத்தம். 'நான் அரைமனசாகத்தான் தவமிருந்தேனா? என்னுடைய பக்தி போதாதா?' என்று தம்மையே தாம் குடைந்துகொண்டார். முன்னைவிடத் தீவிரமாக, தீயாக அவரது தரிசன நாட்டம் பற்றி யெரிந்தது. அதன் பலனையும் காலக் கிரமத்தில் பெற்றே விட்டார். சாக்ஷாத் சர்வேசுவரியின் திருக்கோலம் நினைத்தபோதெல்லாம் கண்களில் கட்டி நின்றது; இதயத்தில் ஆனந்தத்துக்குக் கரை கட்டி நின்றது.

விக்கிரகத்தில் தேவதையைக் காண்பது நமக்கு எவ்வளவு இயலாத காரியமோ, அவ்வளவுக்கு விக்கிரகத்தில் தேவியைக் காணமல் இருப்பது கதாதரருக்கு இயலாத காரியமாயிற்று.

பிரம்ம ஸ்வரூபிணி எவளோ, பிரம்மத்தை மறைக்கும் மாயை எவளோ, ஞானம் அஞ்ஞானம் அனைத்தும் எவளோ, கருணை கடுமை அனைத்தும் எவளோ, அழகு கோரம் அனைத்தும் எவளோ, இன்பம் துன்பம் அனைத்தும் எவளோ – அப்பேர்ப்பட்ட பராசக்தி உயிரும் உடலும் கொண்டு எளிய கதாயி முன், அன்பு கதாயி முன் நின்றாள்; மந்தஹாஸம் புரிந்தாள்; கருணை துளும்ப நோக்கினாள்; அமிருத மயமாகப் பேசினாள். விக்கிரகத்தின் கழுத்தில் ஒரு ஹாரத்தை கதாதரர் சரி செய்தாரானால் அவரது புறங் கையில் ஒரு குளிர் காற்றுக் குறுகுறுக்கும். ஆம், அந்தப் புறங் கைக்கு அருகேயுள்ள தேவியின் திருநாசி விரிந்து மலர்ந்து பரப்பும் சுவாஸக் காற்றின் குளுமைக் குறுகுறுப்புத்தான் அது. சிலையின் பாதத்தில் அவர் நீண்ட நேரம் சிரம் பதித்து வணங்கியிருந்தால் அவரது செவிகளில் தேன் சொட்டுக்கள் விழும். மயானருத்திரன் கலியாண சுந்தரேசுவரனாகி எந்தப் பாதங்களில் நலங்கு இட்டானோ அந்தத் தன் சரண கமலங்களை அம்பாள் நலுங்காமல் பொருத்திக்கொள்ளும்போது அவற்றில் தரித்த நூபுரங்கள் அசைய அவற்றின் முத்துப் பரல்கள் எழுப்பும் இன்னொலிதான் அந்தத் தேன் சொட்டுக்கள்.

தெய்வத்துக்கும் மானுடனுக்கும் உள்ள தொலைவு குறைந்து கொண்டே வந்து தாய்க்கும் சேய்க்குமுள்ள நெருக்கம் ஏற்பட்டது. கதாதரர் அம்பாளுடனேயே வாழ்ந்தார்; அம்பாளிலேயே வாழ்ந்தார்; அம்பாளாகவே ஆனார்.

அம்பாள் என்பது யார்? அன்புதானே?

அந்த அன்பின்முன் இக உலக ஆசைகள் யாவும் தீ முன் பஞ்சுப் பொதியாக பஸ்மீகரமாயின. அன்புக்கு ஆண் என்றும் பெண் என்றும் பேதமுண்டா? அன்புமயமான கதாதரரை ஆண், பெண் என்ற பகுப்பு அண்ட முடியுமா?

* * *

ராஸமணியின் சம்ஸ்தானத்தைப் பரிபாலித்து வந்த மதுரநாத விசுவாஸர் கதாதரரைப் பலவிதத்தில் பரீட்சித்துப் பார்த்துக் காமமகற்றிய தூயர் அவர் என்று கண்டார். 'எந்தத் தேவி எல்லா உயிரினங்களிடத்திலும் பெண்மையாகத் திகழ்கிறாளோ, அந்தத் தேவிக்கு வணக்கம், வணக்கம், முக்காலும் வணக்கம்' என்ற ஸப்தசதீ மந்திரத்தை கதாதரர் முற்றும் உன்னி உணர்ந்து வாழ்ந்தார். பெண்களெல்லாமே தேவியாகத் தெரிபவரிடம் காமம் எப்படித் தலை காட்ட முடியும்?

காமமே தெரியாத அந்த இருபது பிராயத்து கதாயியைத்தான் கள்ளமறியாக் குழந்தை சாரதை, "அதோ என் அகத்துக்காரர்" என்று இரு கரங்களையும் தூக்கிக் காட்டிக் கூறினாள்.

ஷியாடைச் சேர்ந்த ஹ்ருதயராம் முகர்ஜி, கதாயிக்கு அத்தங்காள் மகன். அவ்விருவர் குடும்பத்துக்கும் நெருங்கிய பந்தம் உண்டு. அநேகமாக ஹ்ருதயர் தக்ஷிணேசுவரத்தில் கதாயி ' மாமா 'வுடனேயேதான் இருப்பார்.

இப்போது ஹ்ருதயரின் சொந்தக் கிராமமாகிய ஷியாடில் சங்கீர்த்தனம் நடந்தபோது அங்கே கதாதர சட்டர்ஜியும் வருகை தந்திருந்தார்.

மற்றவர்களுக்கு பஜனை என்பது தற்கால சாந்தியாகத்தான் இருந்தது ; அல்லது பஜனை நேரத்திலுங்கூட மனசு ஓடாத ஓட்டமெல்லாம் ஓடிக்கொண்டிருந்தது. கதாதரரோ அதில் ஆழப் புதைந்துவிட்டார்.

உருக்கி வார்த்த பொன்னில் செதுக்கினாற் போன்ற மேனியில், கண்களிலிருந்து வடியும் நீர்த் துளிகள் முத்து மாலையை அணிவித்து அழகு செய்ய, அற்புதமாக அழுதுகொண்டும், அற்புதமாகச் சிரித்துக் கொண்டும் சங்கீர்த்தனத்தில் சொக்கியிருந்தார் கதாயி.

மற்றவர்களுக்குப் பைத்திய சேஷ்டையாக இருந்த அந்த அற்புதங்கள் சின்னஞ் சிறிய சாரதாமணியைமட்டும் புனிதமான பிரேம பாசத்தில் கட்டிப் போட்டன.

" ஐயையே ! இந்த மரத்தின் பட்டை சொரசொரவென்று இருக்கு " என்று சொல்லிக்கொண்டு அந்த மகிழ மரத்திடமிருந்து மற்றவர்கள் அப்பால் போனார்கள். சாரு என்கிற ஒரு சிறிய முல்லைக் கொடி உள்ளுணர்ச்சி உந்தித் தள்ள அந்த மகிழ மரத்தைப் போய்ப் பற்றிக் கொண்டது. அதைப் பற்றிக் கிறுகிறுவென்று வளர்ந்தது. மகிழத்துக்கும் மகிழ்ச்சியாயிற்று ; முல்லைக்கும் மகிழ்ச்சியாயிற்று. இந்தக் கொடிதான் மகிழம் பூவைப் புஷ்பிக்கிறதா, அல்லது அந்த மரந்தான் முல்லை மலரைப் பூக்கிறதா என்று வித்தியாசம் கண்டு கொள்ள முடியாமல் விருட்சமும் லதையும் பிணைந்து அநுபவ மலர் களைச் சொரிந்தன. இதுவே இனி விரிய இருக்கும் கதை.

4. பொம்மைக் கலியாணம்

மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வம் என்ருல்
மனையாளும் தெய்வமன்ருே ? மதிகெட்டீரே....
காதல் செயும் மனைவியே சக்தி கண்டீர்
கடவுள்நிலை அவளாலே எய்தவேண்டும்.

—பாரதியார்: சுயசரிதை

"ஆள்காட்டி விரல் என்பது பெருமாளாகிய பகவானைக் காட்டும் விரல். 'தத்' – 'அது' என்று வேதம் சுட்டிக் காட்டுகிற பொருளைத்தான் ஆள்காட்டி விரல் குறிப்பிடுகிறது. 'நான்', 'நான்' என்று தன்னையே மார்பில் குத்திக் காட்டிக் கொள்வது கட்டை விரல். கட்டை விரல் அளவுக்கே ஜீவாத்மாவுக்குள் சித்சக்தி விளங்குகிறது என்று வேதம் சொல்கிறது. பரமாத்மாவைக் காட்டும் ஆள்காட்டி விரல், ஜீவாத்மாவைக் குறிக்கும் கட்டை விரல் இரண்டையும் சேர்த்துவிட்டால் சின் முத்திரை-அதுவே இரண்டும் ஒன்றுதான் என்ற அத்வைதத்தைக் குறிக்கும் முத்திரை" என்று ஸ்ரீ காமகோடிப் பெரியவர் கூறியிருக்கிருர்.

பரமாத்மாவைக் காட்டும் அந்த விரலால்தான் தன் அகத்துக் காரரை, 'ஆள் காட்டி' விட்டாள் குழந்தை சாரதாமணி. இரண்டு கைகளையும் கோத்துக்கொண்டு காட்டியதால் அப்போதே மனம் குவிந்து அவருக்கு ஸர்வ ஸமர்ப்பண அஞ்சலியும் செலுத்திவிட்டாள் போலும்!

அவள் அந்தப் 'பைத்திய'த்தைக் காட்டியதை மற்றவர்கள் அப்போதைக்கு ரசிக்காவிட்டாலும், அதைக் குழந்தை விளையாட்டாக விரைவிலேயே மறந்து போனுர்கள். கதாதரரோ தம்மை மையமாக வைத்து அப்படி ஒரு விளையாட்டு நடந்ததைத் தாம் அறிந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. விளையாடிய குழந்தையும் அதை மறந்தாற் போலவே ஜயராம்பாடிக்குப் போய்ச் சேர்ந்தாள்.

* * *

ஜயராம்பாடியில் அந்த இளசான கைகளும் கால்களும் மீண்டும் உழைக்கத் தொடங்கிவிட்டன.

சாருவிடம் யாரும் ' இன்ன வேலை செய் ' என்று பணிக்க வேண்டிய அவசியமே இருக்கவில்லை. தானுகவே, ஏதோ ஓர் உள்ளுணர்ச்சியில் செய்வதுபோல் ' பரபர ' வென்று ஒன்றையடுத்து ஒரு வேலையில் ஈடுபடுவாள் சாரதாமணி.

அம்மா ' அகத்தில் இல்லாத ' சமயங்களில், சிற்றன்னையை முந்திக்கொண்டு, அந்தப் பச்சைக் குழந்தை சமையலிலும் ஈடுபடும். அடுப்பும், அதற்குமேல் இருக்கும் சோற்றுப் பானையுமாகச் சேர்ந்து ஏறக் குறைய அவளுடைய கழுத்தளவு உயரத்துக்கு வந்துவிடும். பானையில் கரண்டியை விட்டுக் கிளறுவது அந்தக் குழந்தைக்கு எத்தனை சிரமமா யிருந்திருக்கும் ? பனித்துளி பரவிய கமல மலர் போல் முகத்தில் வியர்வை அரும்பக் குழந்தை எழும்பி எழும்பிப் பானையைக் கிண்டுவாள். அந்தப் பசுங்குழந்தை பருக்கையைக் கவனமாக எடுத்து வெந்துவிட்டதா என்று குட்டி விரலால் நசுக்கிக் கொட்டைக் கண்களால் பார்க்கிற காட்சி ஒரு சித்திரமாகவே அகக் கண்ணில் விரிகிறது. சோற்றுப் பானையை அடுப்பிலிருந்து இறக்குவதுமட்டும் அவளால் நிச்சயம் முடியாத காரியம்.

" அப்பா, அப்பா " என்று கூப்பிடுவாள். ராமசந்திரர் ஓடி வருவார்.

தமது அருமந்த பெண் யாரும் சொல்லாமலே சோறுக்கி விட்டு, வியர்வையும், கரிப் புகையுமாகப் பெருமையுடன் நிற்பதைப் பார்த்துத் தாமும் பூரிப்பார். சோற்றுப் பானையைத் தாமே அடுப்பிலிருந்து இறக்கி வைப்பார்.

" கையில் ஏதும் சுட்டுக்கொள்ளவில்லையேடி, கண்ணூ " என்று கேட்டு அந்தத் தளிர்க் கைகளை – அயராத வேலையில் தடித்துப் போகவிருக்கும் தளிர்க் கைகளை – விரித்துப் பார்ப்பார். அதில் 'அன்ன ரேகை' என்று ஏதாவது ஓடிற்றோ என்னவோ ? அன்னம் பாலிக்கவே வந்த அன்னையின் கை அன்றோ அது !

'அன்னம்' என்றல் ' ஹம்ஸம் ' என்ற அர்த்தமும் இருக்கவே இருக்கிறது. அது வேறு கதை என்கிறீர்களா ? ஆன்ம அன்னமும் உதர அன்னமும் ஒன்ருனதுதான் இந்தப் பரமஹம்ஸ 'அம்மா' வின் கதை.

* * *

பசுக்களுக்குக் கோரைப் புல் பிடுங்குவதற்காகப் போவாள் சாரு ஆமோதர் ஆற்றைத் தவிர, பாண்டுஜ்யே புகுர் என்றும், புண்ய புகுர் என்றும் ஏரிகளும் உண்டு ஜயராம்பாடியில். ஏரிப் படுகை

சொத சொதவென்றிருக்கும். அந்தச் சொதசொதப்பில் ஒருவிதமான கோரைப் புற்கள் வளமாக வளரும். பசுக்களுக்கு இந்தப் புல்லில் மிகுந்த பிரியம். சாருவுக்குப் பசுக்களிடம் மிகுந்த பிரியம். தன் புஷ்பப் பாதங்கள் தண்ணீரில் ஊறிச் சேற்றுப்புண் உண்டாவதையும் பொருட்படுத்தாமல், அந்த உளேயில் இறங்கிப் புல் பிடுங்குவாள் குழந்தை. நகத்தில் அழுக்குப் படாத நாசூக்குக்காரர்கள் அம்மா வின் கதையில் உழைப்பின் மகிமையைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். உழைப்பில் சேருகிற அழுக்கு அழுக்கே அல்ல ; அது உள்ளத்தை ஸ்படிகமாக்குகிற அழுக்குநீக்கியாகும் !

கற்றை கற்றையாகப் புல்லே மார்போடு சேர்த்து – கோமள உடம்பிலே அந்தப் புல் படுகிறபோது ஏற்படுகிற அரிப்பையும் பொருட்படுத்தாமல்–கரையிலே கொண்டு வந்து போடுவாள்.

மறுபடியும் தண்ணீரில் இறங்குவாள். கழுத்தளவு நீர் வருகிற வரையும் மளமளவென்று சென்றுவிடுவாள். மீண்டும் ஒரு கற்றை கரை வந்து சேரும்.

" அடி சாரு, என்னமா அதுக்குள்ளே இத்தனே புல் கொண்டு வந்து போட்டே ? " என்று ஆச்சரியப்படுவாள் சியாமாசுந்தரி.

சாரு அதற்குப் பதில் சொல்லாமல் ஓர் அழுத்தமான சிரிப்பைச் செப்பு உதடுகளில் இறுகப் புதைத்துக்கொள்வாள்.

' கவடு தெரியாத ' சாருவின் இந்தச் சிரிப்பில்மட்டும் கவடு சுவடு விடுக்கிறதே ! ' என்ன, அமுத்தலான சிரிப்பு ' என்று வியந்து கொள்வாள் சியாமா.

அந்தச் சிரிப்பிலே புதைத்துக்கொண்ட அழுத்தமான ரகசியத்தை வெகு காலத்துக்குப் பிறகுதான் அன்னே சாரதாமணி அவிழ்த்து விட்டாள். அன்னே சொல்வாள் :

" என்னுல் எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் அவ்வளவு புல் சேகரிக்க முடிகிறதுன்னு மற்றவா ஆச்சரியப்பட்டா. விஷயம் இதுதான்: நான் ஒருமுறை புல் கற்றையைக் கரையில் வைத்துட்டு, ஏரிப் படுகைக்குள் மறுபடியும் போனேனே இல்லேயோ, உடனேயே அங்கே ஒரு பெண் இன்னொரு கற்றைப் புல்லே என் கையில் திணிப் பாள். அந்தப் பெண் எப்படி இருப்பாள் தெரியுமா ? அசல் என் அச்சாகவே இருப்பாள் ! புல் பிடுங்குவதில் மட்டுமில்லே ; எல்லாக் காரியத்திலும் அவள் எனக்கு உதவி செய்வாள். குழந்தைப் பருவம்

முழுவதும் அவள் அனவரதமும் என்னுடையே இருந்தாள்; வேலை செஞ்சாள், விளையாடினாள், ஆடிப் பாடினாள். அசலார் யாராவது வருகிற அரவம் கேட்டால் உடனே அந்தர்தானமாகிவிடுவாள்."

இப்போது தெரிகிறதா, கவடற்ற சாரு எத்தனை ரகசியங்களை ஒளித்துக்கொண்டு கவடு செய்தது என்று?

சாரதையுடனே தத்ரூபம் அவளாகவே இருந்து உதவி செய்தது அம்பிகையின் சேடிகளில் ஒருத்தி; அம்பிகை உலகுக்கு வந்தவுடன் அந்தச் சேடியும் பணி புரிய உடன் வந்தாள் என்று சாதுக்கள் விளக்கம் தருகிறார்கள்.

* * *

சாரதாமணிக்குத் தம்பி, தங்கைகள் பிறந்தார்கள். 'சமர்த்தி, தலைச்சனைப் பெண்ணாகப் பெற்றுக்கொண்டாள்' என்ற பொது வழக்கு சியாமாசுந்தரியின் விஷயத்தில் நூற்றுக்கு நூற்றிருபது சதவிகிதம் மெய்யாயிற்று. 'முன்னணை'க் குழந்தையான சாரு தம்பி, தங்கைகளைச் சவரணையாகப் பார்த்துக்கொண்டாள். குழந்தைக் காரியம் என்பது மிகவும் சள்ளை பிடித்த ஒன்று. குழந்தையிடம் இருக்கிற மாதுரியத்தினாலேயே இந்தத் தொல்லையைத் தாயால் ஏற்க முடிகிறது. இங்கோ அந்தக் குழந்தைகளின் மாதுரியத்தைவிடக் குழந்தைகளுக்குத் தொண்டு செய்த சாரதையின் மாதுரியம் பெரிதாக இருந்தது.

குழந்தைகளைக் கவனித்துக்கொண்டதோடு, சிற்றப்பாக்களுக்கும் உரிய பணிவிடைகளைத் தவறாது செய்வாள். அது அவிபக்த குடும்பம் என்றும், ராமசந்திரரின் சோதரர்கள் அவருடனேயே வாழ்ந்தனர் என்றும் முன்னமே கண்டிருக்கிறோம் அல்லவா? 'சிறிய தந்தை' என்பவரை வாஸ்வத்திலேயே தந்தைக்கு அடுத்தபடியாகக் கருதித் தொண்டு செய்தாள் குழந்தை. இதைப்பற்றிப் பிற்காலத்தில் தூய அன்னை குறிப்பிடுகையில், "நான் என் சித்தப்பாக்களுக்கு மனசு வித்தியாசம் இல்லாமல் சுசுரூஷை செஞ்ச மாதிரி, இந்தக் காலத்துப் பெண்கள் செய்வாளா என்பது சந்தேகம்" என்பாள்.

'இந்தக் காலத்துப் பெண்கள்' என்று அவள் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு நாலைந்து தலைமுறைகள் ஓடிவிட்டன.

* * *

சாரு பஞ்சு நூற்கும்போது, அதன் துசும்புகள் தலையிலிருந்து கால்வரையில் ஒட்டிக்கொள்ளும். 'நசுக் நசுக்' என்று சின்ன நாசி தும்மும். நெல் குத்துகிற இடத்தில் கிளறிக் கொடுக்கும்

போது தவிடும் உமியும் சிறிய ரூபத்தை அபிஷேகம் செய்யும். தானியத்திலிருந்து சிறு பூச்சிகள் கிளம்பிக் குழந்தையை மொய்த்துக் கொள்ளும். அடுக்களையின் கழிவு நீரில் பாவாடை நனைந்து கனமாக ஒட்டிக்கொள்ளும். புல் பிடுங்கும் இடத்தில் சேறு தெறித்து உடம்பெல்லாம் வறவறவென்று பிடித்துக்கொள்ளும். இத்தனை அழுக்கினிடைப் புது மலராக மனத்தை வைத்துக்கொண்டு, அன்பு மணம் வீசிக்கொண்டு உழைத்து வளர்ந்தாள் குழந்தை சாரு. 'ஒரு குழந்தை செய்கிற காரியமாவா இருக்கு? கலியாணம் பண்ணிக் கொடுத்தா நறுவிசா ஒரு குடும்பத்தையே மேய்ச்சுக் கட்டிடுவா போல் இருக்கு' என்று ஊர் வியந்து பேசிற்று.

* * *

கலியாணப் பேச்சும் வந்தது.
அப்போது சாருவுக்கு வயசு ஐந்தரை.

காமார்புகுரிலிருந்து பெண் பேச வந்திருக்கிறார்கள்.

ஆம், சாக்ஷாத் கதாதர சட்டர்ஜியின் வீட்டிலிருந்தேதான்!

காமமகற்றிய தூயரான கதாதரருக்கு எப்படிக் கலியாணம் பேசினார்கள்? அவருக்குத் தெரியாமலே இப்படிச் செய்துவிட்டார்களா என்று எண்ணலாம்.

உண்மை இதற்கு நேர்மாறானது. சாக்ஷாத் கதாதரரேதான் இந்தப் பெண்ணைத் தமக்குப் பேசுவதற்காக அனுப்பி வைத்தார்.

பக்தி பரவசத்தில் ஜொலித்த உள்ளத்துடனும், அந்தப் பரவசத்தைத் தாங்க முடியாமல் இளைத்துப் போன பாஞ்ச பௌதிக உடலுடனும் காமார்புகுருக்கு வந்து சேர்ந்தார் கதாதரர். பிள்ளையின் ஆவேசத்தைச் சந்திரமணியால் புரிந்துகொள்ள முடியவில்லை. 'ஊரெல்லாம் பைத்தியம் என்று சொல்கிறதே; உண்மையிலேயே இவனுக்குப் பைத்தியந்தானோ?' என்று தவியாய்த் தவித்தது தாயுள்ளம்.

"அம்மா, அம்மா" என்று அலறுவார் கதாதரர்.

விழுந்தடித்துக்கொண்டு அவரிடம் ஓடிவருவாள் சந்திரா தேவி.

"அம்மா வந்திருக்கேண்டா, கதாயீ" என்று அருகே அமர்வாள்.

அவளையே மலங்க மலங்கப் பார்ப்பார் கதாதரர். "நீ...நீயா அம்மா? ஆமாம், நீயும் அம்மாதான், எல்லாரும் அம்மாதான்......

யாதேவி ஸர்வ பூதேஷு
மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா ''

என்று சொல்லிக்கொண்டே ஜகன்மாதாவின் அருட்சுழலில் சிக்கிச் சொக்கிவிடுவார், கதாதரர்.

சந்திரமணி வைத்தியர்களை வரவழைத்தாள். வைத்தியத்துக்கு அடங்கவில்லை அந்த அதிசயப் 'பைத்தியம்'. அப்புறம் மந்திரவாதிகளை வரவழைத்தாள். அவர்களது உச்சாடனத்துக்குப் பயந்து ஓடவில்லை அந்த அற்புதப் 'பேய்'. மருத்துவரும், மாந்திரிகரும் படுத்தும் பாட்டையெல்லாம் பொறுமையாக ஏற்றுக்கொண்டார் கதாதரர்.

திடீரென்று வியாதி சமனமாயிற்று. பேய் ஓடிவிட்டது. கதாதரர் பரமசாந்தமானார். அவரது மகா பெரிய அம்மா அவருடைய உடலின் ஒவ்வோர் அணுவுக்குள்ளும், அவரது ரத்தத்தின் ஒவ்வொரு துளிக்குள்ளும், அவரது உள்ளத்தின் இண்டு இடுக்குகளிலெல்லாம் அன்பு மயமாகத் தன்னை அலர்த்திக்கொண்டு விட்டாள் போலும்! எனவே, அம்மாவை எங்கோ வெளியே தேடி அலற வேண்டிய அவசியமே அவருக்கு இல்லை.

பிள்ளை சிறிது அடங்கியிருக்கிற இந்தச் சமயத்தில் சந்திரமணிக்கு ஒரு யோசனை தோன்றியது. கதாதரருக்குத் தெரியாமலே மூத்த பிள்ளை ராமேசுவரருடன் ஆலோசனை செய்தாள். இருவரும் ஒரு முடிவுக்கு வந்தனர். கதாயி கொஞ்சம் 'சமர்த்தாக'த் தொடங்கியிருக்கும்போதே அவருக்கு ஒரு கலியாணத்தைச் செய்துவிட்டால் அவரது சித்தத்தை உலகத்திலேயே இழுத்து வைக்கலாம் என்பது தான் அந்த முடிவு.

கதாயிக்குத் தெரியாமலே திருமணத்தை நிச்சயம் செய்துவிட்டு, முகூர்த்தம் வைத்தான பிறகு அவரிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று தாயும் மகனுமாகச் 'சூழ்ச்சி' செய்தார்கள்.

ஆனால், ஏனோ கதாதரருக்கு ஒரு பெண்ணுவது குதிரவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம்: ஒன்று, கதாயியின் 'பைத்தியம்'பற்றி வெளி உலகு ஓரளவு அறிந்திருந்தது. இரண்டாவது, வங்கத்துப் பிராமணர்கள் பெண்களுக்கு எதிர் ஜாமீன் தருவது வழக்கம். வசதியற்ற சந்திரமணியால் கணிசமான சுல்கம் கொடுக்க இயலாததால் பெண் வீட்டார் எவரும் அவர்களுடன் சம்பந்தம் செய்துகொள்ள முன்வரவில்லை.

இந்த இரண்டுக்கும் மேலாக அம்பாளுடைய சங்கற்பம் என்ற மூன்றுவது காரணம் — அல்லது அதுதான் முழு முதற் காரணம் — இருந்தது.

'' யாதேவீ ஸர்வ பூதேஷு மாத்ரு ரூபேண ஸம்ஸ்திதா" என்று அம்பாளிடம் சிரித்துப் பாடினர் கதாயி.

அம்பாளும் பதிலுக்குச் சிரித்துப் பாடினுள் :

'' பத்நீம் மனோரமாம் தேஹி
மனோ வ்ருத்தாநுஸாரிணீம் ׀
தாரிணீம் துர்கஸம்ஸார ஸாகரஸ்ய
குலோத்பவாம் ׀׀ ''

அம்மா பிள்ளை இரண்டு பேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். 'எல்லா உயிர்களிடமும் (ஸர்வ பூதேஷு) அன்னையாகத் திகழு பவள் தேவி' என்கிறது துர்க்கா ஸப்தசதி; அதே ஸப்தசதியின் பூர்வ பாகத்தில்தான் ' பத்நீம் மனோரமாம் தேஹி ' என்ற சுலோகமும் உள்ளது.

'' உள்ளத்துக்கு உகப்பான மனைவியை எனக்களிப்பாய். அவள் நற்குலத்தில் உதித்தவளாக இருக்கவேண்டும். என் மனத்தின் போக்கையே அநுசரிப்பவளாய் இருக்கவேண்டும். என்னை ஸம்ஸாரம் என்கிற துக்க ஸாகரத்திலிருந்து கடத்துவிப்பவளாக இருக்கவேண் டும் " என்பது அந்தச் சுலோகத்தின் அர்த்தம். ஸம்ஸாரத்திலிருந்து கடத்துவிப்பவளே பவதாரிணி.

சாதாரணமாக மனைவி என்பவள்தான் ஒருவனை ஸம்ஸாரத்தில் ஆழப் புதைப்பவள். மனைவியைப் பொதுவில், ' நிம்ஸாரம் ' என்றே சொல்வதுண்டே ! ஆனல் ' ஸர்வ பூதேஷு'விலுள்ள தேவியை மனைவியினுள்ளும் பார்த்து, மனைவியையே பவதாரிணியாக்கிக் கொண்டு, ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறவும் முடியும். இப்படிப் பட்ட மனைவியை அளிக்குமாறு தேவியிடம் பக்தன் கோருகிறுன் ' ஸப்தசதி 'யில். ஆனல் திரிபுரா ரகசியத்தில் காணும் உருவகக் கதை தவிர இதுவரை புராண இதிகாசங்களில் இந்த வரத்தை மெய்யாலுமே எந்த பக்தனும் பெற்றதாக விருத்தாந்தம் இல்லை. பூர்வத்தில் என்றுமே நடந்திராத இந்த அற்புதத்தை கதாதரர்தாம் செய்து காட்ட வேண்டும் என்பது அம்பாளின் சங்கற்பமாயிருந்தது.

இந்த அற்புதம் செய்வதற்கு கதாதரர் ஒருவர்மட்டுமே போதாது. சித்திரம் எழுதச் சுவர் ஒன்று வேண்டுமே ! தாளம்

போட இரண்டு கைகள் வேண்டுமே! கதாதரரின் அற்புத பிரம்மசரியத்துக்கும் துறவுக்கும் தாய்ச் சுவராக நிற்க ஒரு பெண் வேண்டும். அவரது ஆத்ம சங்கிதத்துக்குத் தாளம் போட அவருக்கு இன்னொருத்தி கைகொடுக்க வேண்டும்.

அப்படிப்பட்ட ஒருத்தியை, சாதாரண லௌகிகக் கலியாணத்தையே எண்ணிய சந்திரா தேவியும் ராமேசுவரரும் கண்டு பிடித்து விட முடியுமா?

அம்பாளே அந்தப் பெண்ணின் இருப்பிடத்தை கதாயிக்குத் தெரிவித்தாள்.

* * *

ஒருநாள் சந்திரமணியும் ராமேசுவரரும் தங்களது விவாகப் பிரயத்தனங்கள் தோற்றே வருவதுபற்றி விசனித்துக் குசமுசவென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

உள்ளேயிருந்து கதாதரர் புன்னகை வழியும் பொன் முகத்துடன் வெளி வந்தார்.

'' ஏன் கிடந்து அலட்டிக்கொள்கிறீர்கள்? எனக்கான அகமுடையாள் ஜயராம்பாடியில் ராமசந்திர முகர்ஜியின் வீட்டில் வைக்கோல் துரும்பைச் சுற்றிக்கொண்டு காத்திருக்கிறாள். அங்கே போங்கள்'' என்றார்.

வங்கத்தில் வெள்ளரி முதலிய பழங்களில் செழுமையாக வளருவதை பகவானுக்கு அர்ப்பணம் செய்வார்கள். அப்படிப்பட்ட பழத்தைக் கொடியிலேயே அடையாளம் தெரிந்துகொள்வதற்காக அதன்மீது ஒரு வைக்கோல் துரும்பைச் சுற்றி வைப்பார்கள். இவ்விதமே சாரதையை கதாதரருக்கென வைக்கோலைச் சுற்றி வைத்திருந்தாளாம் அம்பிகை!

சந்திரமணிக்கும், ராமேசுவரருக்கும் சந்தோஷம் தாங்க முடியவில்லை. கலியாணத்துக்குப் பிள்ளை சம்மதிப்பதே சந்தேகம் என்று அவர்கள் பயந்து வந்தபோது, அந்தப் பிள்ளையே பெண்ணின் வீட்டை அடையாளம் சொல்லிவிட்டதே!

* * *

பெண் பேசப் போனார்கள்.

விந்தையைப் பாருங்கள்! கதாயியின் பைத்தியத்தைப்பற்றி ராமசந்திரர் ஓர் ஆட்சேபமும் எழுப்பவில்லை. முந்நூறே ரூபாய்

தான் கன்யாசுல்கம் தரப்படும் என்பதற்கும் ஆட்சேபிக்கவில்லை. இவற்றுக்கெல்லாம் மேலாக அவரது அருமந்தப் பெண்ணுக்கு அப்போது வயசு அஞ்சரைதான் ; கதாயிக்கோ வயசு இருபத்துமூன்று. இருவருக்குமிடையே பதினெட்டுப் பிராயம் வித்தியாசம் இருந்ததையும் அவர் பொருட்படுத்தவில்லை.

இதில் அம்பாளின் திருக்கரம் வேலை செய்கிறது என்று அந்தப் புண்ணியாத்மா மோப்பம் பிடித்திருப்பார் போலும்! திருமணத்துக்கு இசைவு தந்துவிட்டார்.

* * *

1859-ஆம் வருடம் மே மாதம். சௌபாக்கியவதி சாரதாமணிக்கும், சிரஞ்சீவி கதாதர சட்டோபாத்தியாயருக்கும் 'ஈசுவர கிருபையை முன்னிட்டுப் பெரியோர்கள் நிச்சயித்தபடி' விவாக சுப முகூர்த்தம் நடந்தேறியது. உலகம் முழுவதற்கும் ஈசுவரி கிருபை பொழிய உத்தேசித்து இந்த அற்புதத் திருமணத்தை நிச்சயித்திருந்தாள்.

ஏழை வீட்டுக் கலியாணமாக, வெகு அடக்கமாக நடந்தது, உலகுக்கு ஒரு புது யுகம் தொடங்கி வைத்த அந்த விவாகம். பிள்ளை வீட்டிலிருந்து கதாதரர், ராமேசுவரர் ஆகிய இருவர்மட்டுமே வந்திருந்தனர். ஆனால் ஊர்ப்பெண்டுகள் அருமைச் சாருவின் கலியாணத்துக்குத் திரளாக வந்திருந்தனர்.

விவாக மந்திரங்கள் ஆத்மிகத்தையும் லௌகிகத்தையும் பாவும் ஊடுமாகப் பிணைப்பவை. இதுவோ லௌகிகக் கலப்பே இல்லாத விவாகம். தம் மனைவியுடன் பௌதிகச் சேர்க்கை கொண்டு புத்திர சம்பத்தை விருத்தி செய்வதுபற்றிப் பல மந்திரங்களை ஓதுவான் மணமகன். இந்த மந்திரப் பொருளை நடைமுறையாக்குவதற்கு உறுதிகொள்ளவே முதலில் கங்கணம் கட்டிக்கொள்கிறான். 'கங்கணம் கட்டிக்கொண்டு' ஒரு காரியத்தில் இறங்குவது என்றாலே முழு மூச்சுடன் அதில் ஈடுபடுவது என்று பொது வழக்கில் அர்த்தமாகி விட்டதே!

கதாதரர் எப்படி இந்த மந்திரங்களைக் கூற முடியும்? சத்தியத்தில் தோய்ந்த அவர், வேத மந்திரங்களை அக்னி முகத்தில் பொய்யாக மொழிய முடியுமா? பின் எப்படி அவர் கங்கணத்தைக் கட்டிக்கொண்டு நிம்மதியாக அமர்ந்திருக்கிறார்?

கதாயி சிரிப்பாகச் சிரித்தார். பக்கத்திலேயே குழந்தை சாரு 'தஸா புஸா' என்று சேலையைச் சுற்றிக்கொண்டு, மாமியார்

அனுப்பி வைத்திருந்த கூடை நகைகளைக் குலுங்க அணிந்துகொண்டு அமர்ந்திருந்தது.

நேற்று வரை பொம்மைக் கலியாணம் செய்து விளையாடிய அந்தப் பெண்ணே இப்போது கலியாணப் பெண்ணாக, தந்தப் பொம்மை போல் அமர்ந்திருந்தது. ஆமாம், அம்பாள் இஷ்டப்படி விளையாடட்டும் என்று தங்களை அவளது கைப்பொம்மைகளாகவே ஆக்கிக்கொண்ட தம்பதியல்லவா இவர்கள்?

கதாயி சிரிக்கிறார் — கைக் கங்கணத்தைப் பார்த்து.

சுமங்கலிப் பெண்கள் தீபக் குச்சிகளை ஏற்றிக்கொண்டு புது மணத் தம்பதியைச் சுற்றி வருகிறார்கள்.

அதில் ஒரு குச்சியிலிருந்து சுடர்கள் பறக்கின்றன!

பறந்து வந்து நேரே கதாயியின் கங்கண நூலில் தெறிக்கின்றன. அந்தச் சரடு கிறுகிறுவென்று பற்றிக்கொண்டு எரிகிறது.

கதாயி விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே கங்கணத்தைச் சிறுகச் சிறுக அவிழ்க்கிறார்; தீயும் பையப் பையப் பரவிச் சரடு முழுதும் பொசுங்குகிறது!

அந்தக் கலியாணத்தைத் தன் உத்தேசப்படியே புதிய விதத்தில் நிறைவேற்றிவிடுவது என்று தேவி பராசக்தி 'கங்கணம் கட்டிக் கொண்டு' விட்டாள்!

5. விசிறினுள், அன்பை வீசினுள் !

" அஞ்சு வயசினிலே அறியாப் பருவத்திலே
பிஞ்சிலே கூடினேண்டீ — கிளியே
பிரிய மனம் இல்லேயே."

—நாட்டுப் பாடல்

அஞ்சு வயசில் சரீர 'இன்பம்' எனப்படும் துன்பத்தைப்பற்றி ஏதுமே அறிவதற்கில்லை. ஆனல் உண்மையாக உள்ள ஒரே இன்பம் எதுவோ, அந்த பகவானைக் கலக்கும் இன்பத்தை அஞ்சு வயசிலேயே அநுபவித்தாள் முருகனுக்காக உருகிய வள்ளியம்மை. பர்வத ராஜகுமாரியாக வந்த பராசக்தியும் சரியாக ஐந்தாவது வயதில் சிவத்துக் காகத் தவம் இருக்கத் தொடங்கினுள். முருகன்–வள்ளி, பரமேசுவரன்–பார்வதி இவர்களின் சரீரங்களே தத்துவ மயமானவை. எனவேதான் முருகனும் வள்ளியும், ஈசனும் தேவியும் அணைந்த திருக்கோலத்தை, இணைந்த திருக்கோலத்தைச் சிற்பங்களில் கண்டும், துதிகளில் கேட்டும் மகிழ்கிறேம்.

மக்களோடு மக்களாக வாழ்ந்து தேக இச்சை அடியோடு அற்றுப் போன பூரண பரிசுத்தத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக கதாதரரும் சாரதாமணியும் இவ்வுலகுக்கு மானுட சரீரத்துடனேயே வந்திருந்தார்கள். அஞ்சாவது வயசில் அக்கினி சாட்சியாக கதாயியைக் கரம் பிடித்தாள் சாரு.

ஆத்மாவோடு ஆத்மா கூடியது.

* * *

ஜயராம்பாடியில் புண்ணியபுகுர் என்ற ஏரியின் கரை அருகே சுந்தர நாராயணனுக்கு ஒரு கோயில்–அதாவது குடிசை–உண்டு. ஆமை வடிவில் உலகை எல்லாம் தாங்கும் தர்ம ஸ்வரூபமாக அங்கே சுந்தர நாராயணன் குடி(சை)கொண்டிருப்பான். பக்கத்திலேயிருந்த ஓர் அறைதான் அந்தக் கிராமத்தில் பள்ளிக்கூடம். அந்த அறையின் ஈசான்ய மூலேயில் ஒரு கறுப்புக் கல் பிரதிஷ்டையாகி இருந்தது. அதை ' ஷஷ்டி தேவி ' என்பார்கள்.

ஷஷ்டிதேவி புத்திர சம்பத்தை அநுக்கிரகிக்கும் தெய்வம்.

புது மணத் தம்பதியரை அங்கு அழைத்துவந்து வணங்கச் செய்வார்கள்.

மொடமொடக்கும் புது வஸ்திரமும், சந்தனமும், புஷ்பமுமாக அங்கே கதாயியும் சாருவும் அழைத்து வரப்பட்டனர். புத்திர சம்பத்து என்றால் என்னவென்றே அந்த மணப் பெண்ணுக்குத் தெரியாது. மணமகனுக்கோவெனில் மகத்தான ஒரே ஒரு 'மாதா சம்பத்'தைத்தான் தெரியும்.

கதாயிக்கு இதெல்லாம் அம்பாளின் லீலா விநோதம் என்று வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. ஷஷ்டி தேவியை எல்லாப் புது மணமகனைப் போலவும் வணங்கினர். 'இந்த உலகில் வேறெந்த அம்மாவும் பெற்றெடுக்காத அத்தனை லக்ஷம் குழந்தைகளைச் சாரு பெருமலே பெற்றெடுக்க வேண்டும்' என்று ஷஷ்டி தேவியிடம் புஷ்டியாக வேண்டிக்கொண்டிருப்பாரோ?

* * *

கலியாணமானதற்கு மறு நாள் மாலை சாருவையும் அழைத்துக் கொண்டு பிள்ளை வீட்டார் கிருகப் பிரவேசத்துக்காகக் காமார்புகுர் திரும்பினர். சாருவின் சிற்றப்பா ஈசுவரசந்திர முகர்ஜி அவளைத் தூக்கிக்கொண்டே போனர்!

காமார்புகுரில் ஈச்சம் பழங்கள் குலை குலையாகத் தொங்கின. சாரதாவுக்கு அவற்றைப் பறித்துத் தின்னமாட்டோமா என்று ஆவல்!

மான் குட்டிபோல் மருண்டு வந்து நின்ற மாற்றுப் பெண் சாரதையைச் சந்திரமணி தேவி மிகுந்த அன்புடன் வரவேற்றாள். சுமங்கலிகள் ஆரத்தி சுற்றினர்: ஒருசில உறவினர்களுக்குச் சிறிய விருந்து நடந்தது. ஏழைகள் அதற்குமேல் செய்யத் தாங்குமா?

* * *

இரவு அடுக்களையிலிருந்து விம்மல் ஒலி கேட்டது. கதாயி எழுந்து வந்து பார்த்தார்.

"அம்மா, அம்மா, அழாதே அம்மா" என்று அன்னை சந்திரமணியை ஆசுவாசம் செய்தார்.

பல ஆண்டுகளுக்குமுன் பதிதேவர் மறைந்து போனதையும், சென்ற ஆண்டு ஜேஷ்ட புத்திரன் ராமகுமாரன் மாண்டு போனதையும், பெண்களுக்கே உரியபடி கலியாண சமயத்தில் நினைவு கூர்ந்து அம்மா அழுகிறாள் என்றே எண்ணினர் கதாதரர்.

"இதெல்லாம் அம்பாள் சங்கல்பம், அம்மா. இதற்கு அழக் கூடாது. நீ விவேகியாச்சே! எப்படியோ முடிஞ்சு போனதை

நினைச்சு ஏன் அம்மா இப்படி மூசு மூசுன்னு அழறே ?" என்று வாஞ்சையுடன் சமாதானப்படுத்தினர்.

சந்திரா தேவி கரகரத்த குரலில் சொன்னுள் : "பழைய கஷ்டத்துக்கெல்லாந்தான் மனசைப் பாருங்கல்லாக்கிண்டுட்டேனே ! இன்னிக்குக் கஷ்டத்துக்காகத்தான் இப்போ அழறேன். இந்தப் பச்சைக் குழந்தை, அஞ்சு வயசுப் பிஞ்சு, அது இங்கே வந்த ஒரு நிமிஷம்தான் தயங்கி நின்னுதே தவிர, அடுத்த நிமிஷமே எங்கிட்ட 'அம்மா'ன்னு ஆசையா வந்து ஒட்டிண்டுடுத்து. அந்தக் குழந்தைக்கு நம்பிக்கைத் துரோகம் பண்ண..." – சந்திரமணியால் மேலே பேச முடியவில்லை.

தன் பக்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாற்றுப் பெண்ணின் தூக்கம் கலையாமல் தட்டிக் கொடுக்கலானுள்.

அப்போதுதான் கதாயி தமது 'பாரியாள்' அங்கே உறங்குவதையே கவனித்தார்.

சிம்னி விளக்கொளியிலுங்கூடச் சாரு அணிந்துகொண்டிருந்த கூடை நகைகளும் மினுக்கிட்டன.

அம்மா அழுதது எதற்காக என்று அவருக்குப் புரிந்துவிட்டது.

கதாதரருக்கும் பரிதாபமாக, அநுதாபமாகத்தான் இருந்தது.

மாற்றுப் பெண்ணுக்கு நகை நட்டுகள் செய்து போடச் சந்திரமணிக்கு வசதியில்லை. காமார்புகுரில் பெரிய தனவந்தரான லாஹாவின் வீட்டிலிருந்து நகைகளை இரவல் வாங்கி ஜயராம்பாடிக்கு அனுப்பியிருந்தாள். அந்த நகைகளைத்தான் சாரு ஆசை ஆசையாக அணிந்துகொண்டிருந்தது. நாளைக்கு நகையை எல்லாம் சொந்தக்காரர்களிடம் திருப்பி ஆக வேண்டும். அந்த நகை எல்லாம் தனக்கே தனக்கு என்று நம்பிக்கொண்டிருக்கும் குழந்தையை எப்படி வஞ்சிப்பது ?

இந்தத் துக்கந்தான் பதியும், புத்திரனும் மாண்டுபோனதை விடப் பெரிய துயரமாகச் சந்திராவை உலுக்கியது !

கதாயி ஏதுமே பேசவில்லை. சாக்ஷாத் பவதாரிணிக்கு அபிஷேகம் செய்யும் முன்பு அவளது திருவாபரணங்களை எப்படிக் கழற்றுவாரோ, அப்படியே தூங்குகிற சாரதாமணி அணிந்திருந்த நகைகளைக் கழற்றத் தொடங்கினர்.

தூக்கத்தில் துவளும் அந்த இளங் கழுத்தை ஒரு தந்தை போலத் தூக்கிச் சங்கிலிகளையும், அட்டிகையையும் கழற்றினுர். ஒருக்களித்துப் படுத்திருந்த சாருவின் மேல் காதுக் கம்மலைக் கழற்றியபின், மறுபுறம் அந்த மதி முகத்தைத் திருப்பினுர். அந்தப் பக்கத்தைத் தரையில் அழுந்த வைத்துப் படுத்திருந்ததால் கதுப்புக் கன்னத்தில் தோடு ஆழப் புதைந்து இன்னெரு கெம்புத் தோடுபோல் புள்ளி புள்ளியாகச் சிவக்க வைத்திருந்தது. அந்தத் தோட்டையும் நிச்சலனமாகக் கழற்றினுர். சந்தனக் கட்டை போன்ற கரங்களிலிருந்து கல் வளையல்களை உருவினுர். குஞ்சு விரல்களில் மின்னிய மோதிரங்களை ஒவ்வொன்ருகக் கழற்றினுர். அவை சற்றே பிடிப்பாக இருந்ததால் குழந்தை விழித்துக்கொண்டுவிடும்போல் சிணுங்கியது. தட்டிக் கொடுத்துக்கொண்டே ‘ திருவரங்கசுத்தி ’ செய்தார்.

அத்தனை நகைகளையும் அம்மாவின் கையில் அள்ளிப் போட்டார்!

கிண்டாகக் கனத்த நகைகளின் பளுவில் சந்திரமணியின் கை தொய்ந்தது. இதயம் அதைவிடத் தொய்ந்து.

காலையில் அடுப்படியில் காரியமாக இருந்த சந்திராவிடம் சாரு ‘ஓ’ வென்று அழுதுகொண்டு வந்தது. திடீரென்று வானத்தில் நட்சத்திரங்களெல்லாம் மறைந்து, மழைப் போர்வை கொண் டாற்போலிருந்தது, அவளைப் பார்க்க.

“ அம்மா, நான் இங்கே...இங்கே...(தன் சின்ன அங்கங்களைத் தொட்டுக் காட்டி) அப்புறம் இங்கே...போட்டுண்டிருந்த நகையெல் லாம் எங்கேம்மா ? திருடன் கொண்டு போய்ட்டானு ? ” என்று கேட்டு விசித்து அழுதாள், அழத் தகாத அருமைச் சாரு.

சந்திராதேவி மாற்றுப் பெண்ணை அப்படியே வாரி மடியில் வைத்துக்கொண்டு தடவிக் கொடுத்தாள். “ கண்ணம்மா, அந்த நகையெல்லாம் விஷக் கல்லிலே பண்ணினதாம். அதைக் கொஞ்ச நாழிதான் போட்டுக்கலாமாம். அப்புறம் உடம்பெல்லாம் சிரங்கு வந்திடுமாம். அதனுலேதான் எங்க சாருவுக்கு இந்தச் சனியெல்லாம் வேண்டாம்னு தூக்கிப் போட்டுட்டேன். கதாயி இருக்கான் பாரு, அவனுக்கு ஒங்கிட்டே ரொம்ப ஆசை. அப்புறம் ஒனக்கு அவன் எப்படிப்பட்ட நகையெல்லாம் பண்ணிப் போடப் போருன் தெரியுமா ? இந்த விஷ நகை போச்சேன்னு நீ அழவே கூடாது. என்ன, நீ சமர்த்துச் சாருதானே ? ” என்ருள். “ ஆமாம், நான் சமர்த்துச் சாருதான், அழவே மாட்டேன் ” என்று சொல்லிக்கொண்டே வெறிச்சிட்டுப் போன விரல்களைப் பார்த்துக்கொண்டு தேம்பியது குழந்தை.

சந்திரமணி மகா புண்ணியவதி. அவளுடைய வாக்குப் பொய்யாகவில்லை. பிற்காலத்தில் கதாதரர் சாரதைக்கு எப்பேர்ப்பட்ட விலை மதிப்பற்ற ஆபரணங்களை எல்லாம் பூட்டி அணி செய்தார்! அன்பு, அடக்கம், பக்தி, ஞானம், தவம், சீலம் – இப்படிப்பட்ட அற்புத மணிகளையெல்லாம் சாரதாமணிக்கு அணிவித்தார் அல்லவா? அதுமட்டுமல்ல. பொன்னையும் மண்ணையும் ஒன்ருகவே கருதிய அந்த வைராக்கிய சீலர் தாயின் வார்த்தைகளை நினைவு வைத்திருந்து மெய்யாலுமே சாரதைக்குப் பொன்னுபரணங்களும் செய்து போட்டார்.

* * *

ஊச்சம் பழத்தைச் சாப்பிட்டுச் சாருவின் இச்சை பூர்த்தியாயிற்று. நகையை மறந்து சமாதானம் அடைந்தாள். ஆனுல் அவளது சிற்றப்பா ஈசுவர முகர்ஜி சமாதானமடையவில்லை.

எள்ளுருண்டையாகக் குதித்தார் அவர். "ஏதோ நீங்களேதான் நகை போட்டிருக்கேள்னு நினைச்சுண்டிருந்தோம். ஏமாத்திப்புட்டேளே! கன்யா சுல்கமும் முந்நூறு ரூபாய்ப் பிச்சைக் காசுதான் தந்தேள். எங்க கொழந்தை அப்படி ஒண்ணும் உதவாக்கரை இல்லை. போதும், உங்க சம்பந்தம்! இப்பவே எங்காத்துப் பெண்ணை அழைச்சுண்டு போறேன்" என்று ரகளை கட்டினுர்.

சாரதாமணியை உப்பு மூட்டை தூக்கிக்கொண்டு கிளம்பிவிட்டார் சிற்றப்பா.

"அடா ராமு, அடே கதாயி! சம்பந்திப் பிராமணர் கோவிச்சுண்டு போருரேடா, போய்ச் சமாதானப்படுத்தி அழைச்சுண்டு வாங்கோடா!" என்று கதவிடுக்கிலிருந்து குரல் கொடுத்தாள் சந்திரா.

ராமேசுவரர் அசையவில்லை.

கதாயி இடித்த புளியாக அமர்ந்திருந்தார். "சங்கடப்படும்படியா ஒண்ணுமே நடக்கலையம்மா. கலியாணம் என்கிறது தீர்ந்து போன விஷயந்தானே? அதை இல்லேன்னு அவாளாலே மாத்தி விட முடியாதோன்னே?" என்று நிம்மதியாக, நிதானமாகக் கேட்டார். விவாகரத்து என்பதாக ஒன்றை ஹிந்துக்கள் சொப்பனத்தில்கூட எண்ணிப் பாராத காலம் அது.

* * *

தம்பி செய்த காரியம் ராமசந்திர முகர்ஜிக்குப் பிடிக்கவில்லை. சாரதை பிறப்பதற்கு முன்பே சர்வாலங்கார பூஷிதையாக அவருக்குத் தரிசனம் தந்திருந்தாள். எனவே, இப்போது அவளுக்கு

நகை போடுவதையோ, கழற்றுவதையோ அவரால் பெரிய விஷய மாக நினைக்கவே முடியவில்லை போலும் !

எனவே கதாதரர் சொன்னபடியே, இந்த விவகாரம் துளிக்கூடச் சங்கடத்துக்கு இடம் இல்லை என்பதுபோல் எளிதில் தீர்ந்துபோயிற்று.

* * *

1860-ஆம் வருடம் டிஸம்பர் மாதத்தில் கதாதரர் ஜயராம் பாடிக்கு இரண்டாம் முறையாகச் சென்ருர். சாரதைக்கு ஏழாவது பிறந்த தினம் வந்தது. வங்கத்து வழக்கப்படி மாப்பிள்ளை கதாயி வேட்டகம் சென்ருர்.

சாரு தன் அகத்துக்காரரைப் பார்த்து இப்போது சுமார் ஒன்றரை வருடமாயிருந்தது. ஆனாலும் அவளுக்கே இனம் தெரியாத வகையில் அவரைப்பற்றி ஒரு புனித நினைவு அவளுள் கமழ்ந்துகொண்டே இருந்தது.

கதாயி வீட்டுக்குள் வந்தாரோ இல்லையோ, ஏதோ ஓர் ஆவேசம் சாரதையைப் பற்றிக்கொண்டது. யாரும் சொல்லாமலே அந்தக் குழந்தை ஒரு கும்பம் நீர் கொணர்ந்தாள். பதியின் பாதங்களைக் கழுவித் தலையில் புரோக்ஷித்துக்கொண்டாள்.

'' ஹம்மா " என்று ஆசுவாசத்துடன் கதாயி விசுப்பலகை யில் அமர்ந்துகொண்டவுடன், சாரு தானகவே விசிறியைத் தூக்கிக் கொண்டு போய் அவருக்கு விசிறலானுள்.

ஊர்ப் பெண்டுகள் எல்லாரும் வந்து சூழ்ந்துகொண்டு கேலி பேசினுர்கள். '' முளைச்சு மூணு இலை விடலை. இந்தச் சாரு செய்யற ' முத்ஸட்டை 'யைப் பாத்தேளா ? அகமுடையானுக்குச் சொக்குப் பொடின்னு போடறு !" என்ருர்கள்.

தூய கதாயி இந்தத் தமாஷை ரசித்தார். '' மூணு இலை விடாத கொழந்தையா அவ ? கதாதர பட்டாச்சாரியாருடைய தர்மபத்தினி யாக்கும் ! டேய் ஹ்ருதே ! உனக்கு மாமியடா அவள். விழுந்து நமஸ்காரம் பண்ணு " என்ருர்.

கதாயியுடன் வந்திருந்த ஹ்ருதயராம் முகர்ஜி மேல் வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொண்டு சாரதா 'மாமி'க்கு நமஸ்காரம் செய்ய வந்தார்.

இத்தனை நாழி வெட்கமறியாமலிருந்த குழந்தை, அந்த 'மாமா' தனக்கு நமஸ்காரம் பண்ண வந்தவுடன் லஜ்ஜையுடன் உள்ளே ஓடினாள்.

ஹ்ருதயர் விடாமல் அவளைத் தேடிச் சென்று தண்டனிட்டார்.

சாரு மீண்டும் வெளியில் வந்தாள். அவளையும் கதாயியையும் மாற்றி மாற்றிப் பார்த்துக் கண் பனிக்க நின்றாள் பானு மாமி. பரமபக்தி வாய்ந்த பானு ஜயராம்பாடிக்கே 'மாமி'!

"ஹ்ருதயராம், நீங்கள் பாக்கியசாலி! உறவுமுறையை வச்சுண்டு சாரதையை நமஸ்காரம் பண்ணிவிட்டேள். நாங்கள் அப்படி நமஸ்காரம் பண்ண முடியலை" என்று கூறிவிட்டு, சாருவைப் பார்த்துப் பழைய காலத்துப் பாட்டு ஒன்றைப் பாடினாள்:

தித்திக்கும் அழகுப்பெண்ணே -- உனக்குப்
பித்தன்தான் மாலையிட்டானே?

பிக்ஷாடனனை மணந்த பார்வதியைப் பார்த்து அவளது அன்னை மேனை பாடிய பாட்டு அது. கண்ணீர் வழிய அர்த்தபுஷ்டியுடன் பாடினாள் பானு.

ஜயராம்பாடி அப்போது அந்த அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவில்லை!

* * *

ஆதாயி திரும்புகையில் சாரதையையும் சம்பிரதாயப்படி காமார்புகுருக்குக் கூட்டி வந்தார்.

"சாரதே! காமார்புகுரில் யார் இருக்கா, அங்கே ஏன் போறோம்னு தெரியுமா?" என்று அவளை வினவினார்.

"ஓ, தெரியுமே!" என்று கண்களை அகல விரித்தாள் குழந்தை. "அங்கே இன்னொரு அம்மா இருக்கா, நம்பளுக்குக் கலியாணமோல்லியோ? அதனாலேதான் ஒங்க ஊருக்குப் போகிறோம்" என்று நீட்டி முழக்கினாள்.

"ஆமாம், 'நம்பளுக்கு' எப்பக் கலியாணம்?" என்று கண்ணைச் சிமிட்டினார் கதாயி.

"இப்பத்தான் கலியாணம்; இன்னிக்குத்தான் கலியாணம்."

" அசடே ! ' நம்பளுக்கு'க் கலியாணமாகி ஒண்ணரை வருஷமாயிடுத்து. இப்போ ஒனக்கு வயசு ஏழு. அஞ்சு வயசிலேயே ஒனக்குக் கலியாணமாயிடுத்து, இப்பத்தான் கலியாணம்னு யார் கிட்டேயும் உளறி வைக்காதே ! "

" உளறமாட்டேன். நீங்க சொன்ன மாதிரியே சரியாச் சொல்லுவேன் " என்று தலையை ஆட்டினுள் தேவி.

" என்ன சொல்லுவே ? " – பரீட்சை வைத்தார் கதாயி.

" எனக்கு இப்போ வயசு ஏழு ; அஞ்சு வயசிலேயே கலியாணமாயிடுத்துன்னு சொல்லுவேன். " – பளிச்சென்று பதில் சொன்னுள் சாரு.

பெண்டாட்டியின் புத்திசாலித்தனத்தில் புருஷருக்குக் கொள்ளைப் பெருமை !

காமார்புகுரிலிருந்து சிறிது காலத்திலேயே கதாதரர் தக்ஷிணேசுவரத்துக்குத் திரும்பிவிட்டார் ; தக்ஷணமே மனைவியை மறந்தும் விட்டார்.

* * *

சாரதை ஜயராம்பாடிக்குத் திரும்பினுள்.

தன்னையொத்த குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதைப் பார்த்துவிட்டுத் தானும் கிளம்பினுள்.

பள்ளியில் குழந்தைகள் கக்கத்தில் இடுக்கிய இலையும் (இலைதான் அவர்களுக்குச் 'சிலேட்'), துணியில் முடிந்த டிஃபனுமாகப் பெருமையுடன் குழுமியிருந்தார்கள்.

அந்தக் குழந்தைகளுக்கு டிஃபன் என்ன தெரியுமா ? அவல் பொரி தான். 'முடி' என்று வங்கத்தில் சொல்வார்கள். அந்த 'முடி'யைப் போடும் டிஃபன் பாத்திரம் என்ன தெரியுமா ? அவர்கள் உடுத்தியிருக்கும் துண்டில் – அல்லது பாவாடையிலேயே – ஒரு மூலைதான். துணியின் மூலையில் 'முடி'யை முடிந்திருப்பார்கள்.

இந்தத் தேசத்தில் இரண்டு தலைமுறைக்கு முன்பு வரையில் இப்படிப்பட்ட எளிமை இருந்தது ; மக்களுக்குத் திருப்தியும் நிம்மதியும் இருந்தன.

சாரு சில நாட்கள் இப்படி 'முடி'யை முடிந்தபடி பள்ளிக்குப் போய் வந்தாள்.

பிறகு, "கலியாணமான பெண், இப்படியெல்லாம் திரியக்கூடாது" என்று அம்மா சொன்னதை ஒப்புக்கொண்டு பள்ளியிலிருந்து நின்று விட்டாள்.

* * *

1864-ஆம் ஆண்டு. சாரதைக்கு வயது பதினொன்று.

ஊரிலே பெரிய பஞ்சம் வந்தது. 'வங்கத்து வற்கடம்' என்று அதைப்பற்றிச் சொல்வார்கள்.

பஞ்சத்தில் மக்கள் பரிதவிப்பதை ராமசந்திரரால் காணச் சகிக்க முடியவில்லை. தாம் அறுவடை செய்திருந்த நெல்லை அப்படியே ஏழைகளின் அன்னதானத்துக்குச் செலவிட்டார். அரிசி புழுக்கு வதும், தானியங்களோடு சேர்த்து அதைக் கிச்சடியாகச் சமைப்பதுமே சியாமாவுக்கும் சாரதைக்கும் வேலை ஆயிற்று.

"சாருவுக்குமட்டும் சுத்த அன்னமாக வடித்துப் போடு; பாக்கி நம் எல்லோருக்கும் புழுங்கரிசிக் கிச்சடிதான்" என்று சியாமையிடம் ராமசந்திரர் உத்தரவு போட்டுவிட்டார்.

எத்தனையோ மிராசுதார்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் இல்லாத பெரிய மனசு ஏழை ராமசந்திரருக்கு இருந்தது. வயிறு காய்ந்த ஏழைப் பட்டாளம் 'அன்ன தாதா' என்று வாழ்த்திக்கொண்டு அவரது குடிலை மொய்த்தது.

சாருவின் சந்திர முகத்தைப் பார்த்தாலே அவர்களுக்குப் பாதிப் பசி தீரும். அவள் பரிந்து பரிந்து பரிமாறினால் அன்னபூர்ணேசுவரியே உணவிட்டதுபோல், உதரம் மட்டுமின்றி இதயமும் நிரம்பி வெளி யேறுவார்கள்.

'டோம்' என்று சொல்லப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்ணொருத்தி பசிக் கொடுமையில் வெறிபோல் ராம சந்திரர் வீட்டுக்குள் பிரவேசித்தாள். செக்கச் சிவந்து பிதுங்கி யிருந்த அவளது கண்களில் மாட்டுத் தொட்டியில் நிரம்பியிருந்த தவிட்டுக் கழிவு நீர்தான் நேரே தெரிந்தது. ஓடினாள் அவ்விடம். முரட்டுத் தவிட்டைத் தோண்டி எடுத்து அவசரம் அவசரமாக விழுங்கலானாள்.

"கிச்சடியிருக்குடியம்மா! தவிட்டைத் தின்னாதே!" என்று சாரதை கூவியதுகூட முதலில் அவள் காதில் விழவில்லை. நாலு பிடி

தவிடு உள்ளே போனபின்தான் அவளது காதடைப்புப் போய் குரலே கேட்டது.

அந்த ஹரிஜனப் பெண்ணுக்குச் சம்பிரமமாக இலை போட்டாள் சாரதை. கொதிக்கக் கொதிக்கக் கிச்சடியைக் கொண்டு வந்து பரிமாறினுள். உண்பதற்கு அவள் எப்படிப் பறக்கிருள் என்பதைப் புரிந்துகொண்டு விசிறி கொண்டு வந்து, ஆவி பறக்கும் கிச்சடியை விசிறினுள். ஒரு விசிறி போதாது என்று இரண்டு கைகளில் இரண்டு விசிறி வைத்துக்கொண்டு, தடுமாற்றமில்லாமல் இரண்டு கைகளாலும் விசிறினுள் இனிமையே உருவான சாரதாம்பிகை.

இப்படி எத்தனையோ ஏழைகளுக்கு இரட்டை விசிறி மரியாதை யைச் செலுத்தினுள்! ராஜாக்களுக்கு இரட்டைச் சாமரம் இரட்டு வது மரியாதை எனில், தீனர்களுக்கு இது அதைவிடப் பெரிய மரியாதை அன்ருே?

அன்று யாரும் சொல்லாமலே பதிதேவருக்கு விசிறினுள். இன்று பட்டினிப் பட்டாளத்தின் உணவை இரு கைகளாலும் விசிறினுள். அது பாதிவிரத்தியம்; இது அம்மா தத்துவம். இந்த இரண்டும் பின்னிப் பிணைந்ததே சாரதையின் சரிதை.

* * *

பதின்மூன்ரும் பருவத்தில் சாரதாமணி மீண்டும் காமார் புகுருக்கு வந்தாள். அப்போது கதாதரர் தக்ஷிணேசுவரத்தில் இருந்தார். சந்திரமணி தேவியும் பிள்ளையுடனேயே தக்ஷிணேசுவரத் தில்தான் இருந்தாள். காமார்புகுரில் சாரதாவின் மூத்த மைத்துனர் ராமேசுவரரும், அவரது மனைவி சாகம்பரியும் குழந்தைகளுமே இருந்தனர்.

மதனி சாகம்பரிக்குச் சாருவைப் போல் சுறுசுறுப்புக் கிடையாது. சாரதைக்கோ காலையில் எழுந்தவுடனேயே குளித்தாக வேண்டும். பெண்களுக்கு என்று பிரத்தியேகமாக இருந்த புறக்கடைக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு அப்படியே யோசனையில் நின்ருள் சாரதை. 'மசமசவென்று இன்னும் எத்தனை நாழி குளிக்காமலிருப் பது? மன்னி எப்போது வருவாரோ? அதுமட்டும் காத்திருப்பதா? தனியாகத் தடாகத்துக்குப் போகலாம் என்ருலோ, மணமானவள், பதின்மூன்று வயசானபின் அப்படிச் செல்வது யுக்தமில்லை. வெட்டி யாகக் காலைவேளையில் குளிக்காமல் வேலையோ, பூஜையோ ஏதுமே செய்ய முடியவில்லையே! சிம்மவாஹினி, இதென்ன சங்கடமடி, தாயே?' என்று குறைப்பட்டுக்கொண்டு நின்ருள்.

திடீரென்று எங்கிருந்தோ எட்டுப் பெண்கள் அவள்முன் வந்து நின்றார்கள். அதில் நாலு பேர் பிரிந்து அவளுக்கு முன்பாக அணி வகுத்து நின்றார்கள்.

ஏதோ ஓர் உள்ளுணர்ச்சி சாரதையைப் பிடித்துத் தள்ள அவள் ஐந்தாமவளாகப் போய் நடுவில் நின்றாள்.

எட்டுப் பேரில் மீதமிருந்த நாலு பெண்கள் அவளுக்குப் பின்னே வரிசையாக நின்றனர்.

நவதுர்க்கைகளைப் போல் அந்த ஒன்பது பேருமாக ஹால்தார் புகுர் ஏரிக்குச் சென்றனர். நீராடினர். குடத்தில் நீரெடுத்துக் கொண்டு திரும்பினர்.

வீட்டுப்புறக்கடை வந்ததுதான் தாமதம்; அந்த எட்டுப்பேரும் எப்படித் திடீரென வந்தனரோ, அவ்வாறே திடீரென மறைந்தும் விட்டனர்.

அன்று மட்டுமல்ல, சாரதை அம்முறை காமார்புகுரிலிருந்த அத்தனை தினங்களும் இப்படியே நடந்தது.

அவர்கள் யார் என்று சாருவுக்கு தெரியவில்லை. ஆனால் ஏனோ அவர்களிடம் அவள் அதுபற்றிக் கேட்கவுமில்லை. அவர்களும் துணை வந்தது தவிர, ஒரு வார்த்தை பேசவில்லை.

“ஜகன்மாதாவுக்கு எட்டுப் பாங்கியர் பணிவிடை புரிவார்கள்” என்று இந்நிகழ்ச்சியைக் கூறும் ஸ்வாமி கம்பீராநந்தர் குறிப்பிடுகிறார்!

6. சந்நியாசிக் கணவர்! கன்னித் தாயார்!

"....அன்னையே !
பின்னையும் கன்னி என மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே !"
—தாயுமானவர்

சாரதாமணிக்கு நீராடித் திளைப்பதில் தனித்ததோர் ஆனந்தம்! ஜயராம்பாடியில் இருந்த வரையில் ஆமோதர் நதியில் ஆற அமர முழுகி ஆனந்திப்பாள். ஆமோதர் ஆற்றை அவள் 'கங்கை', 'கங்கை' என்றே களிப்புடன் கூறுவாள்.

இப்போது காமார்புகுரில் ஹால்தார்புகுர் ஏரியில் விந்தை நங்கையர் எண்மருடன் நீராடும்போது நீந்தவும் கற்றுக்கொண்டாள்.

சுத்தமாக ஸ்நானம் செய்து, ஈர முடியைப் பிழிந்து நுனியில் மட்டும் முடிச்சிட்டு, தண்புனலாடியதற்கு மாற்றுகக் காலைச் சூரியனின் கதகதப்பில் திளைத்துக்கொண்டு, கண்ணுடி நெற்றியில் சிந்தூரக் குங்குமத்தோடும், துடியிடையில் குடத்தோடும், திவ்விய மங்கையர் எட்டுப்பேர் புடைசூழச் சாரதை வீடு திரும்பிய காட்சி எப்படித்தான் இருந்திருக்கும் ?

'ஓரகத்தி' என்ற பதம் பண்டைய நாட்களில் சகோதரர்கள் தங்கள் மனைவியரோடும் குழந்தைகளோடும் ஒரே அகத்தில் இணைந்திருந்த பந்துத்வத்தைக் குறிப்பதாகும். சாரதை 'மதனியோ, மாதாவோ' என்றபடி ஓரகத்திக்கு அடங்கியும், அவளுக்கு உதவியாகவும் சிட்டுப் போலக் காரியங்களைச் செய்வாள். அப்போது சாரதையின் கணவர், மாமியார் இருவருமே காமார்புகுரில் இல்லை. பெண்ணுகப் பிறந்தவர்களுக்குப் புக்ககம் என்ற ஒன்றிடம் பிறந்தகத்தைப் போலவே பிரியத்தை வைக்கப் பழக்குவது பாரதப் பண்பு. இதன்படியே சியாமாசுந்தரி தேவி, சாரதாவைக் காமார்புகுரில் மைத்துனர் ராமேசுவரரின் அகத்துக்கு அனுப்பி வைத்திருந்தாள். புக்ககத்தினரை அரவணைத்து, வெகு நல்ல பெயர் வாங்கிக்கொண்டாள் சாரு.

சாரதையைவிடப் பத்து வயது சிறியவள் ராமேசுவரரின் பெண் 'லக்ஷ்மி'. 'சித்தி, சித்தி' என்று லக்ஷ்மி தன்னையே சுற்றி வருமாறு செய்துவிட்டாள் சாரு.

இப்படிச் சில காலம் புக்ககத்திலிருந்துவிட்டு ஜயராம்பாடிக்குத் திரும்பினாள். அங்கே சில காலம் இருந்துவிட்டு மீளவும் காமார் புகுருக்கு வந்தாள். புகுந்தவிடம், பிறந்தவிடம் இரண்டுக்கும் பொலிவூட்டி வந்தாள்.

* * *

பிறந்த இடத்தில் அவளால் பொலிவு இருந்தாலும் வேறு விதத்தில் நலிவும் ஏற்பட்டு வந்தது. சியாமாசுந்தரிக்குப் பல குழந்தைகள் பிறந்தன. அவற்றில் சில குழந்தைகள் குழிக்குப் போயின.

புத்திர சோகத்தில் அம்மா கதறிப் புலம்பியது சாரதையின் மலர் மனத்தை வாட்டி எடுத்தது. சியாமளா பெற்றுப் போடுவாளே தவிர அக் குழந்தைகளை எடுத்து வளர்த்தது முழுவதும் சாருதான். பட்டு மேனியும், பவள உதடுகளும், வண்டுக் கண்களுமாக விளையாடிய சின்ன உருவங்கள் மண்ணிலே மட்கியது சாரதையின் அடிவயிற்றில் சுரீலென்று எரிந்தது.

அடிவயிற்றில் கண்ட நோவுக்கு மேலாகக் கோமள சாரதையின் நுண்ணிய இதயத்தின் அடியிலும் ஒரு பலமான அடி விழுந்து நோவு உண்டாக்கியது. அவளது கணவரைப்பற்றி ஊரார் பேசிக்கொண்ட பேச்சுக்கள் அவளைத் தாக்கித் துன்புறுத்தின. "சாரு ஆமடையானுக்குப் பைத்தியம் முத்திப் போச்சு தெரியுமோ? அம்பாளுக்காக அரைச்ச சந்தனத்தைத் தானே பூசிக்கிறாராம். அம்பாளுக்கு நைவேத்தியம் பண்ணறதுக்கு முன்னாடியே பாயசத்தைத் தான் குடிச்சுட்டு அப்புறம் விக்கிரகத்தின் வாயிலே கிண்ணத்தைக் கொண்டு போய் வைக்கிறாராம். சியாமா மாமியோட தங்க மனசுக்கு இப்படியா ஒரு மாப்பிள்ளை வாய்க்கணும்? சமர்த்துக் கண்ணு சாருவுக்கு இப்படியா ஒரு வெறி ஆமடையான் வாய்க்கணும்?" என்று ஊரிலே பேசியது சாரதையை உலுக்கியது.

அந்த ஊரிலே பல பெண்களுக்குக் கலியாணமாயிற்று. அந்தக் கலியாணங்களுக்குச் சாரு சென்றால் நூறு நூறு கண்கள் தன்னைப் பரிதாபத்துடன் மொய்ப்பதை உணருவாள். அந்தப் பரிதாபமே அவளுக்குப் பெரிய தாபமாக இருந்தது. சியாமாசுந்தரியின் பெருமூச்சுக்கள் அந்தத் தாபத்தைத் தூபமாகத் தூண்டிவிடும் காற்றாயின.

ராமசந்திரர் மனத்தில் என்ன இருந்ததோ, பகவானே அறிவார். எப்போதும்போல் அமைதியாகவே இருந்தார்.

* * *

தூராசில் ஒரு தட்டு கீழே போகும்போது இன்னொரு தட்டில் பளுவை வைத்தால் அது மீண்டும் சம மட்டத்துக்கு எழும்புகிறது. இப்படியே மனச் சுமையை லேசாக்கிகொள்ள உழைப்புச் சுமையை அதிகமாக்கிக் கொண்டாள் சாரதாமணி.

பாலப் பருவத்தில் கால பாசத்துக்குத் தப்பிய தம்பி தங்கைகளுக்குப் பல் தேய்த்துவிட்டு, ஸ்நானம் செய்வித்து, உணவூட்டி, அவர்களது உடைகளைத் துவைத்து – இப்படிப் பம்பரமாகச் சுற்றிச் சுற்றி உழைத்தாள். காதம்பினி என்ற தங்கையும், பிரஸன்ன குமார், உமேஷ்சந்திரன், காளிகுமார், வரதாப்பிரஸாத், அபயசரண் என்ற தம்பிகளும் ஆசை அக்கா சாருவை அனவரதமும் எதிர்பார்த்தார்கள். பிற்பாடு காதம்பினி, உமேஷ் ஆகிய இருவரும் அல்பாயுளில் மறைந்தனர். யந்திரமாகமட்டும் உழைக்காமல் மனம் பெருக்கும் அன்பின் ஈரத்தையும் பிழிந்து பணி செய்தாள் சாரதை.

இப்படியும் ஒரு சாதாரண மானுடப் பெண்ணால் உழைக்க முடியுமா என்று சியாமாசுந்தரிக்கு நம்பவே முடியவில்லை.

"என் கண்ணே, நீ யாருன்னே தெரியவில்லையேடி, அம்மா! உன்னை நான் புரிஞ்சிப்பேனா, சொல்லு ராஜாத்தி" என்று ஒருநாள் தன் பெண்ணைப்பற்றிய அற்புத உணர்வுடன் கேட்டாள்.

பெற்ற தாயிடம் கற்ற வித்தை பலிக்காது என்பார்களே! சாரதைக்குக் 'குளிர்' கண்டது – அம்மா தன் ரகசியத்தைத் துப்புத் துலக்கிவிடுவாளோ?

சட்டென்று அதை மறைக்கு முகமாக, "ஆமாம், உனக்கு என்னைப் புகழறது தவிர வேறு என்ன வேலை? நான் யாருன்னு என்ன கேள்வி வேண்டிக் கிடந்தது? நான் யாரு? யாரா இருக்க முடியும்? எனக்கு என்ன அம்பாளாட்டம் நாலு கை முளைச்சிருக்கா என்ன? அப்படியே நான் அம்பாளாவே யிருந்தாலும் உன்னைத்தான் தேடிண்டு வந்து பிறக்கணுமா என்ன?" என்றாள்.

மறைத்துப் பேச வேண்டும் என்று நினைத்து ரகசியத்தை மேலும் அம்பலமாக்கிவிட்டாள்.

"அதென்னவோ, தேடிண்டு வந்திருக்கியே" என்று தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக் கூறினாள் சியாமா. "இந்த ஜன்மா

விலே நான் இத்தனை பாடு பட்டதற்கு, இனிமே எனக்கு ஜன்மாவே வேண்டாம்னுதான் சொல்லணும். ஆனு ஒவ்வொரு ஜன்மாவிலேயும் நீ என் வயிற்றில் பிறப்பாயேயானுல் எத்தனை ஜன்மாவும் எடுப்பேன் '' என்று திணறினுள்.

சாரதை இந்த மண்ணுலகத்துக்கும், தன்னுடைய மணித்வீபத்துக்கும் இடையில் அவதிப்பட்டாள், அந்த ஒரு நொடிப் பொழுதிலே! இரண்டு உலகத்திடையும் சமநிலை காணுமல் நிர்த்தாட்சிண்யமாகப் பேசினுள்.

'' என்ன சொன்னே ! என்னை மறுபடி வேறே கீழே இழுத்துண்டு வரப் போறயா ? நான் திரும்பத் திரும்ப வரணும், நீ பெற்றுப் போடற குஞ்சு குளுவான்களுக்கு ஊழியம் செய்யணும் – அப்படித்தானே !'' என்று உறுமினுள்.

சாரு அப்படி உறுமியது சியாமாவுக்கு அதிசயத்திலும் அதிசயமாக இருந்தது. அவளையே உற்றுப் பார்த்தாள். சாருவின் அன்புப் பணி அவளை அன்னைத் தெய்வமாகக் காட்டிக் கொடுத்தது எனில், இப்போது அவள் அன்னைத் தெய்வத்தை மறைப்பதற்காகச் சிம்ம கர்ஜனை செய்தபோது அவளில் சிம்மவாஹினியையே கண்டாள் சியாமை.

'' ஆமாம், மகளே ! மறுபடி நானும் பிறக்கணும், நீயும் எனக்குப் பெண்ணுகப் பிறக்கணும்'' என்ருள், அம்பாளிடம் வேண்டிக் கொள்ளும் குரலில்.

சாரதை அழுக்கு மூட்டையையும், துவைக்கும் தடியையும் எடுத்துக்கொண்டு கிணற்றடிக்கு விரைந்தாள்.

* * *

துள்ளிக் குதித்து விளையாடிய நாட்கள் தீர்ந்தன.

சாரதாமணியின் பால லீலைகளிலிருந்து விடை பெறும்போது நமக்கு நெஞ்சு சிறிது கனக்கத்தான் செய்கிறது. கண்ணபிரான் பெரியவரான பின்புதான் ருக்மிணி, சத்தியபாமாவை மணந்து அன்பைப் பரப்பினுர். பாண்டவர்களுடன் கூடிக் களித்து இன்பம் பரப்பினுர். பகவத் கீதையை உபதேசித்து ஞானம் பரப்பினுர். ஆயினும் குட்டிக் கிருஷ்ணனின் லீலைகளிலிருந்து விடைபெற்றுப் பிருந்தாவனத்திலிருந்து மதுராபுரிக்கு, ' ஸ்ரீமத் பாகவதம் ' தாண்டுகையில் நெஞ்சு சிறிது கனக்கத்தான் செய்யும். பெரிய சாரதாமணி

தேவி எத்தனையோ அருஞ் செயல்களைச் செய்து அன்பைப் பரப்பியது வாஸ்தவம். இருந்தாலும் குழந்தை சாருவின் மென்மையும் மதுரமும் தூய்மையும் அலாதியானவைதாம்!

குழந்தை தேகம் போயிற்று. இப்போது சாரதாமணி பதினறு வயசுப் பருவ மங்கையாளுள்.

ஆனல் இங்கேதான் அவதார ரகசியம் இருக்கிறது; பருவத்துக்கு இயல்பான ஆசை ஏதுமே அவளுக்கு உண்டாகவில்லை.

இனப்பெருக்கம் என்பதே இயற்கையின் முதற்பெரும் நியதி. தாவரமாயினும், கிருமியாயினும், மிருகமாயினும் எதுவுமே தன் இனத்தைப் பெருக்கிக்கொள்ளவே துடிக்கிறது. அதனல்தான் இந்த மாயா லோகம் மாயாமல் நடந்து வருகிறது. இதற்கு அடிப்படையாகவே சரீர இன்பத்தை மானுட மனத்துக்குள் விதைத்திருக்கிருள் மகா மாயை.

இனப் பெருக்கத்தில் மனம் வைக்காமல் ஆதி மூலத்திலேயே சில வியக்திகள் மீண்டும் ஒடுங்குவதற்கும் பராசக்தி அருள் பாலிக்கிருள் இவர்கள் பௌதிகமாகக் குழந்தைகளைப் பெறுவதில்லை என்பதோடு, தாங்கள் பெருத பல குழந்தைகளிடம் கருணை கொண்டு தங்களைப் போலவே அவர்களும் பிறப்பு இறப்பிலிருந்து விடுபட வழி காட்டுகிருர்கள்.

ஒரு ஜன்மாவில் இந்திரிய நிக்கிரகத்தை நீண்ட காலம் பயின்றும் முக்தி நிலையைப் பெருத ஒரு சாதகர் மீளவும் ஜன்மம் எடுக்கும் போது, அவரிடம் பல இயற்கை வேகங்கள் பிறப்பிலிருந்தே சமனம் அடைந்திருக்கும். கீதை கூறும் இவ்வித யோகப்பிரஷ்டர்கள் மறு ஜன்மாவில் தங்களது சாதனையை விட்ட இடத்திலிருந்து தொடங்குவார்கள்.

யோகப் பிரஷ்டர்களைத் தவிர, பகவானே உருவெடுத்து வந்து பிறக்கும் அவதார புருஷர்களுக்கும், உலகை நல்வழிப்படுத்துவதற்காக பகவான் அனுப்பி வைக்கும் தூதர்களுக்கும் பிரகிருதி வேகங்கள் தொடக்கத்திலிருந்தே இரா.

சாரதாமணிக்குத் தேக இச்சை அடியோடு இல்லை.

ஆயினும் ஒரு விந்தை: அம்மாவாக வேண்டும் என்ற ஆசை மட்டும் அவளுள் கிளர்ந்தது! சிறிய பொறி மகா ஜோதியாக வளருவதுபோல் இந்த ஆசை நாளாவட்டத்தில் கொழுந்து விட்டெரியவும் தொடங்கியது.

'அம்மா, அம்மா' என்று அழைக்கும் இளங் குரலுக்காக அவாவியது சாரதையின் உள்ளம்.

அவள் குழந்தையாக இருக்கும்போதே அம்மா விளையாட்டு விளையாடியவள். உடன்பிறப்புக் குழந்தைகளை எடுத்து வளர்த்தவள். குழந்தைப் பருவத்தைத் தாண்டியவுடனேயே அம்மாப் பருவத்துக்கு ஆர்வம் கொண்டுவிட்டாள்.

சரீர போகம் கசந்தது அவளுக்கு; ஆனால் புத்திர சம்பத்தை மட்டும் எண்ணும்போதே இனித்தது.

இது எப்படிச் சாத்தியம்?

* * *

சாதனையின் முடிவாக எய்தப்படுவது எதுவோ அதுவே 'சாத்தியம்' எனப்படும். பற்பல சாதனைகளைச் செய்த கதாதரர்தாம் சாரதாமணியின் அற்புத ஆசையையும் சாத்தியமாக்கப் போகிறார்!

சாரதாமணி கணவனைக் கண்டிராத இந்த ஏழு வருஷ இடைக் காலத்தில் கதாதரரை அம்பாள் படுத்தி வைத்த பாட்டைச் சொல்லி முடியாது; அவருக்கு அவள் அள்ளி அளித்த ஆனந்தத்தையும் அளவிட முடியாது! நானாவிதமான சாதனை சமுத்திரங்களின் அடிவரை கதாதரரை முக்கி முக்கி எடுத்து, அந்த ஆழத்திலிருந்த முத்துக்களைச் சரம் சரமாக அவருக்கு அணிவித்து அலங்கரித்தாள் அவருடைய மகா பெரிய அம்மா.

அந்த அம்மா, தான் பவதாரிணி என்ற ஓர் உருவத்தில் மட்டுமில்லை என்பதை அவருக்கு உணர்த்தினாள். அத்தனை தெய்வ வடிவங்களாகவும் இருப்பது ஒரே மகா சக்தி என்பதை கதாதரர் உணர்ந்து, எல்லா தெய்வ மூர்த்திகளையும் வழிபட்டு, தரிசித்து, சம்பாஷித்து, அநுபவித்து ஆனந்திக்குமாறு செய்தாள். ஹிந்து சமயத்தின் நீண்ட சரித்திரத்தில் கதாதரரைப் போல் சகல தெய்வங்களையும் ஒன்றாக வழிபட்ட மகான்களை அருமையாகவே காண்கிறோம்.

அது மட்டுமல்ல, பகவானுக்குத் தாசனாக இருந்து அவனது மேன்மையை அநுபவிக்கலாம். தோழனாக இருந்து அவனது நேசத்தை அநுபவிக்கலாம்; காமினியாக இருந்து அவனது பிரேமையை அநுபவிக்கலாம்; தாயாக இருந்து அவனது எளிமையை அநுபவிக்கலாம்; குழந்தையாக இருந்து அவனது தாய்மையை அநுபவிக்கலாம்; அவனாகவே ஆகி அவனது சாந்தத்தை அநுபவிக்க

லாம். ஒவ்வொரு மெய்யடியார் இவற்றில் ஒவ்வொரு வகையில் பக்தி செலுத்திப் பரமனை அடைந்ததாகக் காண்கிறோம். கதாதரரோ எனில், தாம் ஒருவரே இத்தனை பாவங்களிலும் பகவானை அநுப வித்தார்.

* * *

இதில் அவருக்கு முக்கியமான குருவாக இருந்தவள் பைரவி பிராம்மணி என்ற யோகேசுவரி.

தெய்வத்தைப் பெண் வடிவில் அம்பாளாக வழிபட்ட கதாதரர், பெண்ணாகப் பிறந்த பைரவி பிராம்மணியிடமே தந்திர – யோக சாதனைகளைப் பயின்றது குறிப்பிடத் தக்கது. அதோடு, அவர் தாமே முழுக்க முழுக்கப் பெண்ணின் பாவத்தில் தோய்ந்து அம்பிகைக்குச் சேடியாக இருந்து வழிபட்டார் ; ராதையாகிக் கண்ணனை வழிபட் டார். அவர் பெண்ணுக்குத் தந்த பெருமையின் சிகரமாகவே சாரதாமணி பிற்காலத்தில் மகோன்னத அன்னையாக எழுச்சி கொண் டாள்.

பைரவி பிராம்மணிக்கு கதாதரரிடம் ஒருபுறம் தாயன்பு ; மறு புறம் பகவானிடம் வைப்பது போன்ற பக்தி. அது ராமசந்திரனிடம் கௌசல்யாதேவி வைத்த அன்பு ; கிருஷ்ணனிடம் யசோதை வைத்த அன்பு.

''அந்த ராமசந்திரனும், கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்த ராம கிருஷ்ணரே கதாதரர்'' என்று பைரவி பிராம்மணி ஒரு மகத்தான பண்டித சதஸில் பிரகடனம் செய்தாள்.

தக்ஷிணேசுவர ஆலயத்தை எழுப்பிய ராணி ராஸமணியின் மாப்பிள்ளையும், அந்த ஆலயத்தை நிர்வகித்து வந்தவருமான மதுரா நாதரின் அழைப்பை மறுக்க முடியாமலே அந்த வித்வத் சதஸிலே பண்டிதோத்தமர்கள் குழுமியிருந்தார்கள். அவர்களுக்கு முதலில் கதாதரரைப்பற்றி உயர்ந்த அபிப்பிராயம் ஏதும் இருக்கவில்லை. அவரை வெற்று ஆவேசத்துக்கு ஆளாகும் பலவீனப் பிரகிருதி என்றே அவர்களில் பலரும் எண்ணினர். ஆனால் இப்போது கதாதரரின் பரவச பாவங்களைக் கண்ணுக்கு நேராகக் கண்டதிலும், பைரவி பிராம்மணி காட்டிய சாஸ்திரப் பிரமாணங்களைக் கேட்டதிலும் அவர்களுடைய பழைய அபிப்பிராயம் பறந்தோடிற்று ! இவர் ஓர் அவதார புருஷரே எனத் தெளிந்தனர்.

('ராமனாகவும் கிருஷ்ணனாகவும் வந்தவரே இவர்' என்று பைரவி பிராம்மணி நிலை நாட்டிவிட்டாள். இனி நம் கதாநாயகரை

கதாதரர் என்று கூருமல் 'ராமகிருஷ்ணர்' என்று கூறுவதே பொருத்த மன்ருே ?)

ராமகிருஷ்ணர் நிஷ்கபடக் குழந்தையாகச் சிரித்தார். "அவ தாரமோ இல்லேயோ — அது கிடக்கட்டும்; மகா பெரியவளான நீங்கள்ளாம் நான் பைத்தியம் இல்லேன்னு ஒப்புக்கறேளோன்னே ? அந்த மட்டும் பேஷ், பேஷ்" என்று சொன்னுர்.

* * *

அவதார புருஷர் என்பதாக, ஈசுவரனின் பிரதியாகச் சிலர் தாம் வருவார்கள். அவதாரத்துக்குக் காரணமான ஈசுவரன் உலகில் நன்மையை நிலேநாட்டத் தானும் மனிதனுக வரு கிருன். ஈசுவரன்தான் உலகை ஆட்டிப்படைத்து இயக்குபவன். எந்த ஆட்டமும் இல்லாதது பிரம்மம். உலக ஆட்டத்தை ஒழுங்குபடுத்து வதற்காகத் தானும் ஆட்டம் போடுகிறவனே ஈசுவரன். ஈசுவரன் ஒரு சில அவதாரமாகவே வருவான். ஆனுல் ஈசுவரனுக்கும் மேம்பட்ட சச்சிதானந்த பரப்பிரம்மமாக அனேவருமே ஆக முடியும். உண்மையில் நாம் காண்கிற அனேத்தும் பிரம்மம்தான். மாயை யினுல் நம்மை வேருக நினேக்கிருேம். ஞான சாதனேயால் மாயையை நீக்கிவிட்டால் பிரம்மமாகவே ஆகிவிடலாம் — இதுதான் வேதாந்தம். பகவானேப் பல பாவங்களில் அநுபவித்து, பக்தி செய்ததன் எல்லே நிலமாக, தானே அவனுகிவிடுவதுதான் வேதாந்த லட்சியம்.

இந்த வேதாந்தத்தில் ராமகிருஷ்ணரைப் பயிற்றுவித்து, அவதார ராமகிருஷ்ணரை, பரப்பிரம்ம பரமஹம்ஸராக்குவதற்காக தக்ஷிணே சுவரத்துக்கு வந்து சேர்ந்தார் மகான் தோதாபுரி.

அவரே ராமகிருஷ்ணருக்குச் சந்நியாசம் தந்தவர்.

ஏதுமறியாப் பச்சிளம் பாலே சாரதை தன்னே மாலேயிட்டு மணுளனுக்கிக் கொண்ட நினேப்பே இல்லாமல் ராமகிருஷ்ணர் சந்நி யாச தீக்ஷை வாங்கிக்கொள்கிருர் !

மனேவியின் நினேவு இல்லாவிட்டாலும் தன்னேப் பெற்ற தாயின் நினேவு அவருக்குப் போகவில்லே. ஆதிசங்கரர், பட்டினத்தடிகள் போன்ற வைராக்கிய பர்வதங்களுக்கும் தாயன்பு மாருமலே இருந்ததுபோல, ராமகிருஷ்ணருக்கும் அன்னேயிடம் தனித்ததொரு பாசம் இருந்தது. தெய்வமாம் பவதாரிணி, குருவாகிய பைரவி பிராம்மணி, அன்னேயாகிய சந்திரமணி, பத்தினி சாரதாமணி என்றிப்படிப் பெண்ணன்பின் பல சாயல்களிலேயே தமது அவ தாரத்தை அலர்த்திக் காட்டியவர் ராமகிருஷ்ணர்.

ஜேஷ்ட புத்திரர் ராமகுமாரர் மறைந்த துயரத்தை ஆருத வடுவாகக் கொண்டிருந்தாள் சந்திரமணி. அவளது செல்ல கதாயி சந்நியாசியாகிவிட்டான் என்ருல் அந்த வடு மீண்டும் பச்சைப் புண்ணுகிவிடும். இதை ராமகிருஷ்ணர் உணரத் தவறவில்லை.

தாம் சந்நியாசம் கொள்வது ரகசியமாகவே இருக்க வேண்டும் என்று குருவைக் கேட்டுக்கொண்டார். துரீயாசிரமம் ஏற்ற பின்பும் தாம் காஷாயம் அணியாமல் சாதாரண வேட்டியைக் கச்சத்துடன் அணிய அநுமதி கோரினர்.

தோதாபுரி அநுமதிபூர்வமாகச் சிரித்தார். ''நீ அம்மா என்பவளைக் காரணம் காட்டி இப்படிக் கேட்கிருய். நான் இன்னொரு காரணத்துக்காகவும் இதை வரவேற்கிறேன். உண்மையான சந்நியாசம் காஷாயத்திலும், முண்டனத்திலும் இல்லை ; அது மனத்தில் இருப்பது. பக்கத்தில் பத்தினியை வைத்துக்கொண்டே சந்நியாசியாக இருப்பதுதான் சந்நியாசத்தின் உச்ச நிலை. இந்த உச்ச நிலையை இந்த உலகுக்கு நீதான் பிரத்தியட்சமாக வாழ்ந்து காட்ட வேண்டும். நீ வெளி உலகம் அறியச் சந்நியாசியாகிவிட்டால், அதன்பின் வீட்டுக்குச் சென்று மனைவியுடன் இருந்துகொண்டே துறவை அநுஷ்டித்துக் காட்ட முடியாது. எனவே, இப்போதைக்குச் சிகை களைந்து, உபவீதம் நீக்கி, காஷாயம் புனைந்து, விரஜா ஹோமம் செய்து நீ சந்நியாச தீக்ஷை கொண்டாலும், இது நம்மோடு ரகசியமாக இருக்கட்டும். பிற்பாடு நீ கிருஹஸ்தனைப் போலவே வீட்டுக்குப் போ. அங்கு உன் புனிதத்தை நிலை நாட்டு" என்ருர் தோதாபுரி.

சந்நியாச தீக்ஷை பெற்று மகா வாக்கியங்களைப் பெற்ருர் ராமகிருஷ்ணர். அந்த வாக்கியங்களின் பொருளான பரம்பொருளிலேயே இரண்டறக் கலந்து சமாதி நிலையை அடைந்தார். அந்த மகத்தான அத்வைத நிலையில் ஆறு மாதங்கள் அப்படியே ஊறிக் கிடந்தார்.

அதன்பின் உலக சமய சரித்திரத்திலேயே கண்டிராத புனித தாம்பத்யத்தை அவர் தொடங்குமுன், அவரை உலகம் முன்னேடியாகக் கொள்ளத்தக்க இன்னொரு சாதனையிலும் தோய்த்து எடுத்தாள் அம்பிகை. அதாவது, ஹிந்து மதத்தினர் வழிபடும் சகல தெய்வங்களும் ஒரே பராசக்தியின் வடிவங்கள்தாம் என்று அவர்மூலம் உணர்த்தியது மட்டுமின்றி, ஹிந்து மதத்தைப் போலவே சகல மதங்களும் ஒரே மகா சத்தியத்தைப் பற்பல கோணங்களில் காட்டுகிற மார்க்கங்கள்தாம் என்பதையும் இந்த அருமைப் பிள்ளை மூலமே லோகத்துக்கு நிரூபித்துக் காட்டினுள் தேவி. கிறிஸ்துவ மதம்,

இஸ்லாம் முதலியவற்றின் ஆசரணைகளையும் ராமகிருஷ்ணர் வழுவறப் பின்பற்றி அவற்றின்மூலமும் ஆத்மசாந்தி என்ற இலட்சியத்தைப் பிரத்தியட்சமாக அடைந்தார்.

* * *

ஆவர் சாந்த நிலையில் அழுந்திவிட்டால் உலகுக்கு பக்தி ஆவேசத்தை, புனித இல்லற வாழ்வை, எளிய உபதேசங்களை அளிப்பது யார்? எனவே, அவரை வியாதிப் பிண்டமாக்கி, நோவின் உபாதியால் உடலுணர்வு தந்து, உலகுக்குத் திருப்பினுள் சர்வேசுவரி. குண்டலினியைக் கிளப்பிக்கொண்டு யோக சாதனை செய்ததால் அவரது வயிறு எரிந்து புண்ணுகிவிட்டது. அவரது ஜீரண சக்தி அடியோடு பாதிக்கப்பட்டது.

தக்ஷிணேசுவர ஆலய நிர்வாகி மதுராநாதர் ராஜ வைத்தியம் செய்தார். ஏதோ சிறிது பலன் இருந்தது. ‘‘இடம் மாறி இருந்தால் நல்லது’’ என்ருர்கள்.

ராமகிருஷ்ணர் காமார்புகுருக்கு வந்து சேர்ந்தார்.

ஹ்ருதயரும் பைரவிப் பிராம்மணியும் உடன் வந்தனர்.

சாரதாமணியும் அங்கு வந்தாள்.

சந்நியாசிக் கணவரும், கன்னிமை குலையாமலே தாய்மையை விரும்பும் மனைவியும் ஏழாண்டுகளுக்குப் பின் மறுபடி சந்தித்தனர்.

ஏதுமறியாச் சாரதை தூய அன்பின் திருவுருவமாக நின்ருள்; மதுர பாவ சாதனைகளில் தேறிய பைரவி பிராம்மணியின் உள்ளத்திலோ அசூயையின் இருட்சாயல் விழுந்தது!

7. வெளிமழையும், உள்மழையும் !

''வானமாய் நின்(று) இன்ப மழையாய் இறங்கி எனை
வாழ்விப்ப(து) உன் பரம் காண் !''

--தாயுமானவர்

ராமகிருஷ்ணர் பைரவி பிராம்மணியுடனும், ஹ்ருதயராமருடனும் தக்ஷிணேசுவரத்திலிருந்து காமார்புகுருக்குப் புறப்படுமுன் பவதாரிணியின் சந்நிதியில் மனம் பாகாகக் கரைந்து நின்றார். பெற்ற தாயிடம் பேசுகிற குழந்தையாக வாய்விட்டுச் சொன்னார்:

''என் அம்மாடி, ஊருக்குப் போறேன்! அங்கே என் அகத்துக்காரியும் வருவா; அவளுக்கு லவலேசம்கூட என்கிட்டக் காமம் ஏற்பட்டுவிடக்கூடாது. உங்கிட்ட சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம். உனக்கு எதுவும் சொல்லவே வேண்டாம். ஆனா இப்படி நான் உருகிக் கண்ணும் கண்ணீருமாச் சொல்லணும்னு உன் லீலா மனசுலே ஒரு ஆசை. அதனாலே என்னை இப்படிக் கேக்க வைக்கிறே... தாயே, நான் வரேன். 'வரேன்'னா உன்னை விட்டுட்டா போறேன்? என்னமோ உளர்றேன்...'' என்று சிரித்துக்கொண்டே, மதியத்தைப் பிழிந்து செய்தாற்போன்ற தமது ஒளித் திருமுகத்தை அமிருதக் கண்ணீரில் நனைத்துக்கொண்டு வெளியே வந்தார்.

சாரதாமணி காமார்புகுருக்கு வரப்போகிறாள் என்பதே பைரவி பிராம்மணிக்குப் பிடிக்கவில்லை. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது!

பொதுப்படையாகப் பேசுவதுபோல் ராமகிருஷ்ணரிடம் பல விஷயங்களைப் பேசிக்கொண்டே நடந்தாள் பைரவி. அதனிடையில், ''ஒருவன் அத்யாத்ம மார்க்கத்திலே போறச்சே, அதுக்கு அவனுடைய தர்மபத்தினி தடங்கல் செய்யறாள்னு வெச்சுப்போம். புருஷன் தன்னோடு லோகரீதிக்கு ஒப்ப நடக்கலேன்னா 'தற்கொலை செய்துப்பேன்' என்றே அவள் பயமுறுத்தறதா வெச்சுப்போம். இவனோ அவளோடு கிருஹஸ்தாசிரமம் வகிக்கிறதா மந்திரபூர்வமாகப் பிரமாணம் பண்ணினவன்; இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே அவனுக்கு எத்தனை பெரிய பிரச்னை ஏற்படும்?'' என்றாள்.

ராமகிருஷ்ணரை பயமுறுத்தி, சாரதாமணியை வரவொட்டாமல் தடுப்பதற்கே இப்படித் தந்திரமாகப் பேசினுள் பிராம்மணி.

தமக்குச் சாக்த-வைஷ்ணவ தந்திரமெல்லாம் போதித்த பிராம்மணியின் இந்த அசட்டுத் தந்திரம் ராமகிருஷ்ணருக்குப் புரியாமற் போகவில்லை. ஆனுலும் புரிந்துவிட்டது என்று பட்டவர்த்தனமாகக் காட்டாமல், அவளைப் போலவே ஒளித்துப் பேசினுர்:

''அத்யாத்ம மார்க்கத்திலே ஒருத்தனுக்கு உண்மையான நாட்டம் வந்துட்டா, அப்புறம் பெண்டாட்டி தற்கொலை பண்ணிக்கிறதாச் சொன்னுலும் அவனைத் தடுத்து நிறுத்த முடியாது''— இவ்வாறு சொல்லிவிட்டு, பைரவியின் இதயத்துக்குள் துளைக்கும்படி குறுகுறுவென்று அவளைப் பார்த்தபடி தொடர்ந்தார்: ''ஆனு, ஒண்ணு நிச்சயமாச் சொல்வேன், பைரவியம்மா! ஒருத்தனுக்கு அம்பாளிடத்திலே வாஸ்தவமான பக்தி இருந்தா, தேவி அவனை இப்படிப்பட்ட பிரச்னையிலே தள்ளவே மாட்டா. அவனுடைய பத்தினியும் அவனுக்கு அநுகூலமா இருக்கும்படியே அருள் பண்ணுவா.''

பைரவியின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

* * *

ஏழாண்டுகளுக்குப் பின் வந்துள்ள 'கதாயி'யைப் பார்க்கக் காமார்புகுர்வாசிகள் ஆவல் மிகக் கூடினர். கதாயி மகா பெரிய ராமகிருஷ்ணர் ஆகிவிட்டாரா, அல்லது பைத்தியமாகி விட்டாரா என்று தெரிந்துகொள்வதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை. அவர் எப்படி இருந்தாலும், 'தங்கள்' கதாயி என்று அவரிடம் அன்பைக் கொட்டுவதற்கே அந்த நல்ல கிராமவாசிகள் கூடினர்.

ஜொலிக்கின்ற தேகமும், கருணையில் நனைந்த கண்ணும், உலகில் ஒட்டாத நகை இழையிடும் திருவாயுமாக ராமகிருஷ்ணர் பிரவேசித்தவுடனேயே அவர்களுக்கு அவரது பைத்தியத்தைப்பற்றிய ஐயங்கள் பறந்தன; அவரது மகிமைபற்றிய மதிப்பில் பிறந்த பய உணர்ச்சியும் ஓடிப் போயிற்று. 'தங்கள்' கதாயியேதான் என்று நெருங்கி வந்து அமர்ந்தனர்.

எட்டத்திலே நின்று, முக்காட்டைச் சிறிதே திறந்து அவரைப் பார்த்தாள் சாரதாமணி.

அவரது தோற்றத்தைக் கண்டமாத்திரத்தில் எல்லையில்லாத அன்பையும், சுயநலம் என்பதே இம்மியும் கலக்காத துறவையும் பிரத்தியட்சமாக நுகர்ந்தாள் சாரதாமணி.

விவரம் தெரிந்தபின் இப்போதுதான் அவள் அவரை முதலாவதாகப் பார்க்கிருள். முதற் பார்வையிலேயே 'சுயம்' போயிற்று. சுயநலமே இல்லாத அன்பு இவளிடமிருந்து அவர்பால் பொங்கிக் கொண்டு எழுந்தது. அவர்தாம் தனக்குச் சகலமும், அவரே தன் பிராணபதி, அவரே தன் ஆத்மநாயகன் என்று தெரிந்துகொண்டு விட்டாள்.

பிராணபதி, ஆத்மநாயகன் என்பதையெல்லாம் வேறெந்த மொழியிலாவது பெயர்க்க முடியுமோ? தேகத்தின் பதியையும், சரீரத்தின் நாயகனையுமே உலகம் பொதுவில் அறிந்திருக்கிறது. ஆனால் நம் தேசத்துப் பெரியவர்கள் 'பிராண நாயகன்' என்று ஒருவனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்! பரம பக்தர்கள் ஈசுவரனையே பிராண நாயகனுக்கிக்கொண்டு அவனுடைய நாயகியானார்கள். ஆனால் மநுஷ்ய சரீரம் கொண்ட சாரதை மநுஷ்யசரீரம் கொண்ட ராமகிருஷ்ணரைப் பிராண காந்தனுகக் கொண்டதற்கு ஈடு உண்டா?

அவளது பிராணனின் மூலத்தில் ஓர் அமிருதசரஸின் ஊற்றுக் கண்கள் திறந்துகொண்டன.

''அவரை அப்போ பார்த்ததிலிருந்து என் இருதயத்துக்குள்ளே ஒரு ஆனந்த கும்பத்தை ரொப்பி வெச்சுட்ட மாதிரியே அனவரதமும் இருந்தது. துளிக்கூட மாருத அந்தத் தெய்விக ஆனந்தத்தை என் மனசு எப்படி மொண்டு மொண்டு குடிச்சுதுங்கறதை வார்த்தையாலே கோடி காட்டக்கூட முடியாது" என்று பிற்காலத்தில் நம் அம்மா மொழிந்திருக்கிருள்.

வயிற்றுக்கு நிறைவு தருகிற சிசு பத்து மாதமானல் வயிற்றைக் காலி செய்துவிட்டு வெளியே போய்விடும். ஆனல் ராமகிருஷ்ணர் சாரதையின் இதயத்தில் வைத்த ஆனந்த நிறைவு என்றுமே அவளை விட்டு நீங்கவில்லை.

அவரது பாங்குதான் முதலில் அவளுக்குத் தெரிந்தது; பிறகே சரீரம் தெரிந்தது. 'இப்படி இளைத்துவிட்டாரே! என்னமோ பெரிய பெரிய சாதனையெல்லாம் பண்ணினராமே; அதனுல்தான் இளைத்தாரா? அந்தச் சாதனையெல்லாம் எனக்குப் புரியாது. ஆனல்

இளைத்திருப்பதுமட்டும் புரிகிறது. என்னை அதுவே உருக்குகிறது. இந்த உருக்கத்துக்குள்ளேதான் எத்தகைய தூய பிரேமை!'

சாரதாமணி முக்காட்டுடனே வந்து ராமகிருஷ்ணருக்கு நமஸ்கரித்தாள்.

எந்தப் பருவ மங்கையும் எந்த யௌவன புருஷனுக்கும் அவ்வளவு பாவனமாக நமஸ்கரித்திருக்க முடியாது!

''சாரதா, இவாளெல்லாம் நம்ப மநுஷ்யாள்! நான் இவாளோடேதான் லூட்டி அடிச்சுண்டு இருப்பேன். 'புது மாட்டுப் பொண்ணு'ன்னு நீ உள்ளேயே இருந்துடாதே. நீ அடங்கியிருக்கறது தான் எனக்குப் பிரீதி. வெளியிலே சுத்தாமே அகத்தோடுதான் இருக்கணும். ஆனா ரொம்பக் கட்டுப்பெட்டியா இருந்துடாதே! நம மநுஷ்யாளோடே நீயும் சேர்ந்துண்டு நான் பண்ணற ரகளையையெல்லாம் ரசிச்சுண்டு இரு'' என்று கூறினார் ராமகிருஷ்ணர்.

ஒவ்வோர் அக்ஷரத்திலும் அன்பைத் துளும்பத் துளும்ப நிரப்பிப் பேசினார். எந்த யௌவன புருஷனும் எந்தப் பருவ மங்கைக்கும் தரமுடியாத பாவன அன்பு அது.

''இந்தா, இதோ இவாளுக்கு நமஸ்காரம் பண்ணு, இவர்தான் பைரவி பிராம்மணி என்கிற மகா யோகினி. என் குரு. எங்கம்மா மாதிரி நெனச்சு, மாட்டுப் பொண்ணா இவாளுக்குக் கைங்கரியம் பண்ணு. பரம புண்ணியம் கிடைக்கும்'' என்றார் ராமகிருஷ்ணர்.

தன்னைப் போலவே பெண்ணாகப் பிறந்தும், தான் கனவில்கூட நினைக்க முடியாத பெரிய நிலைகளை அடைந்த பைரவியிடம் சாரதைக்கு பயமும் மதிப்புணர்ச்சியும் உண்டாயின. நடுங்கிக் கொண்டே நமஸ்கரித்தாள்.

பைரவியைச் சாரதாவுக்கு மாமியார் ஸ்தானத்தில் வைத்தார் ராமகிருஷ்ணர். சாரதையின் மாமியார் சந்திரமணி உண்மையில் அவளுக்கு அம்மாவாகவே இருந்தாள். பைரவியோ மாமியார் என்கிற ஓர் 'அந்தஸ்தை' அப்போதே தன் மனத்தில் ஏற்படுத்திக் கொண்டாள்.

மாமியார் வெளியில் அந்தஸ்தைக் காட்டினாலும் அந்த அந்தஸ்துக்கு அடிப்படையாக ஒரு பெரிய குறைவுணர்ச்சியும் தாபமும் ஆசாபங்கமும் இருக்கும். இது மனத்தத்துவ விஷயம். தான் எடுத்து

வளர்த்த பிள்ளையின் வாழ்வில் முக்கியத்துவம் பெறப் புதிதாக இன்னொருத்தி வந்தவுடன் தாய் மனசில் எதையோ பறிகொடுத்த துக்கம் ஏற்படுகிறது. துக்கத்தில் சித்தம் சிதறுகிறது. புது மாற்றுப் பெண்ணிடம் அர்த்தமில்லாத கசப்பு ஏற்படுகிறது. அந்தஸ்தைக் காட்டி அதிகாரம் செய்யத் தலைப்படுகிறுள்.

பக்குவ ஜீவிகளுக்கு இத்தகைய எண்ணங்கள் ஏற்படுவதில்லை. சந்திரமணிக்கு ஏற்படவில்லை; ஆனால் பைரவி பிராம்மணிக்கு ஏற்பட்டுவிட்டது!

அதுதான் யோக மாயை என்பது! மகாமாயா தேவி இந்த மகா யோகினியை ஆட்டி வைக்கலானுள்!

எத்தனையோ அருஞ் சாதனைகளைச் சாதித்த பைரவிக்கு 'எனது' என்பதற்ற அன்பைச் சாதிக்கத் தெரியவில்லை. அவளுக்கும் 'எனது' என்ற ஆசை விட்டபாடில்லை. ராமகிருஷ்ணரைத் தனது சொத்தாக நினைத்து வாஞ்சை வைத்துவிட்டவள் அவள். அவருக்கோ ஆசையே தெரியாது; அன்புதான் தெரியும். அந்த அன்புக்கு இப்போது ஒரு பங்காளியாக வந்து நின்ற சாரதையை, பிராம்மணி போட்டியாகவே எண்ணினுள். உண்மையில் அன்போ எத்தனை பங்கு போட்டாலும் குறையாது என அவள் அறிந்தாளில்லை.

பிற்பாடு தனிமையில் ராமகிருஷ்ணரிடம், ''அப்பனே, உன் மனைவி நன்ருக வளர்ந்துவிட்டாள். அவளைப் பார்த்தால் எந்தப் புருஷ மனசும் சஞ்சலிக்கும். நீ ஜாக்கிரதையாயிருக்கணும்'' என்ருள் பிராம்மணி.

அவளது உள்நோக்கம் அவருக்கா தெரியாது?

வெறுமே புன்னகை புரிந்தார்.

'என்னை அவதார புருஷன் என்று மகாபட்ட வித்வத் சபைக்கு நிரூபித்துக் காட்டினுயே! ஆனல் நீ உன் மனத்தில் என்னைப்பற்றி அப்படி நினைக்கவில்லையோ? அவதார புருஷன் பெண்மோகத்துக்கு ஆளாக முடியுமா? பெண்கள் எல்லாரையும் சர்வேசுவரியின் வடிவமாகப் பார்க்கிற எனக்கா உபதேசம் செய்கிருய்?' என்றெல்லாம் ராமகிருஷ்ணர் அவளைக் கேட்டிருக்கலாம்; ஆனல் கேட்கவில்லை. 'அவளுக்கு ஒரு பாடத்தை அம்பாள் புகட்டிக்கொண்டிருக்கிருள். கட்டி நன்ருகப் பழுத்த பின்புதான் அதை அம்பாள் அறுப்பாள்.

இப்போதே நாம் நேரடியாகத் தலையிடக் கூடாது' என்பதால் அடங்கியிருந்தார்.

* * *

கோவிந்தனைச் சுற்றி, கோப கோபியர் சூழ்ந்தது போல் தம்மைச் சூழ்ந்திருந்த மக்களுடன் இரவெல்லாம் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தார் ராமகிருஷ்ணர். பெரிய பெரிய விஷயங்களை எளிய உவமைகளால், இனிய கதைகளால் விளக்கிப் பேசினர். தங்கள் கதாயி – பைத்தியம் என்று நினைக்கப்பட்ட கதாயி – இத்துணை மதுரமாகப் பேசுவதைக் 'கள்ளால் மயங்குவது போலே கண்மூடி வாய்திறந்தே' அவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

எத்தனையோ மகா அநுபூதிகளில் திளைத்த அவதார புருஷன் அந்த எளிய மக்களைவிடக் கொஞ்சங்கூடத் தம்மை உயர்ந்தவராக நினைக்காமல் அணுக்கத்தில் அமர்ந்து பேசினர்.

அவர் பேசிய எல்லாவற்றுக்கும் சாரம் என்ன? பகவானிடத்தில் பக்தி, மக்களிடத்தில் பிரேமை இவற்றைக் குழைத்து வாழ வேண்டும் என்பதே.

"நீங்கள்ளாம் வீடு வாசலை விட்டுட்டு ஓடிடணும் என்கிறது இல்லை; வீட்டில் இருந்துகொண்டே சுத்தமா வாழலாம். நம்ப அகத்து மநுஷாளுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யறதில் தப்பில்லை. ஆனா மற்ற மநுஷாளை வித்தியாசமா நினைக்கக்கூடாது. 'இவா மட்டுந்தான் நம்ப மநுஷா' என்று வீட்டிலே மிகையான பாசத்தை வெச்சுடக் கூடாது......" என்பார்.

"அதெப்படி கதாயி முடியறது? நமக்கு நெருக்கமா இருக்கிறவா கிட்டத் தனியான பாசத்தை எப்படி ஏற்படுத்திக்காம இருக்க முடியும்?" என்றான் பாலியத் தோழன் கயாவிஷ்ணு.

"முடியும் கயா, முடியும். அதுக்குத்தான் பகவத் பக்தி வேணும் என்கிறது. பலாச் சுளையை எடுக்கச்சே பிசின் கையிலே ஒட்டிக்கிற மாதிரி, வீட்டுக் காரியத்தைச் செய்யறச்சே பாசம் ஒட்டிக்கத்தான் செய்யும். ஆனல் பலாச்சுளை எடுக்கறவா கையிலே விளக்கெண்ணெய் பூசிண்டு சுளையை எடுக்கறாளோன்னே? பலாப் பிசின் அப்போ ஒட்டறதே யில்லை. மனுஷ பாசப் பிசின் ஒட்டாம இருக்கிறதுக்காக ஈசுவர பக்தி என்கிற எண்ணெயைத் தடவிக்கணும்."

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு."

என்ற பொய்யாமொழியைத்தான் வேறுவிதத்தில் சொன்னுர் கதாயி.

"நான் சொல்றது சாரதாவுக்குப் புரியறதோ என்னவோ?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

சாரதை பக்தி என்று விசேஷமாக ஏதும் செய்யவில்லே. வீட்டுக் காரியத்திலேயேதான் அனவரதமும் ஈடுபட்டிருந்தாள். ஆயினும் அவளுள் பாசம் என்கிற சுயநல உணர்வு கலந்த மாயை புகவில்லே. இது அதிசயமில்லேயா? அவதார வியக்திகளுக்கும் சாதாரண மானுடர்களுக்கும் உள்ள வித்தியாசம் இது.

ராமகிருஷ்ணர் கேட்டதற்குச் சாரதை ஏதும் பதில் சொல்ல வில்லே. முக்காட்டுக்குள் மௌனமாக இருந்தாள், அவதாரத்தை அம்பலப்படுத்தாமல் ஒரு முக்காட்டைப் போட்டுக்கொண்டிருந்த சாரதை.

உள்ளே யிருந்து மதனி சாகம்பரி மெல்லக் குரல் கொடுத்தாள்: "சாரதா கொழந்தை. அவளுக்கு என்னத்துக்குத் தத்துவ போதனே யெல்லாம். அதுக்கு இன்னும் வயசு வர வேண்டாமோ?"

"மன்னி அவர்களே! நீங்க வெண்ணெய் கடைஞ்சு எடுக்க றேளே; காலங்கார்த்தாலே எடுப்பேளா, மத்தியான்னம் எடுப் பேளா?" என்று புன்சிரிப்புடன் கேட்டார் ராமகிருஷ்ணர்.

கேள்வியின் பொருள் மதனிக்கு விளங்கவில்லே. "நன்னு யிருக்கே, மத்தியான்னத்திலே வெண்ணெய் எடுக்க முடியுமோ? கடை யறச்சேயே சூடேறி வெண்ணெய் உருகிடுமே! காலங்கார்த்தாலே தான் கடைவா" என்ருள் மதனி.

"அப்படிச் சொல்லுங்கோ. வயசு ஏறி லௌகிகச் சூடெல்லாம் ஏறின பிற்பாடு மனசைக் கடைஞ்சு பக்தியை எடுக்கறது கஷ்டம். உலகச் சூடு ஏற ஆரம்பிக்கறதுக்கு முன்னேயே, கொழந்தைப் பிரா யத்திலேதான் பக்தியைக் கடைஞ்சு எடுக்கணும்."—மற்றவர்களேப் பார்த்து ராமகிருஷ்ணர் தொடர்ந்தார். "மன்னி மட்டுமில்லே. பொதுவா எல்லாருமே பாலியத்திலேயும், யௌவனத்திலேயும் லௌகிகமா இருந்துட்டு, வயோதிகத்திலே பகவான் கிட்டத் திரும்பி ஞல் போறும்னுதான் நினேக்கரு. இது அடியோடு தப்பு. பகவானே முதலிலே தெரிஞ்சுண்டுட்டு அப்புறந்தான் உலகத்துக்குத் திரும் பணுமே தவிர, உலகத்திலே திரிஞ்சுட்டு, பகவான்கிட்டே திரும்ப முடியாது. பகவானேத் தெரிஞ்சுண்ட அப்புறம், லோகத்தைப் பார்த் தாத்தான் அதன் உண்மை ஸ்வரூபம் தெரியும்: அதுக்கும் நல்லது செய்யலாம்; தனக்கும் நல்லது பண்ணிக்கலாம்."

"பகவானேத் தெரிஞ்சுண்டா, அப்புறம் லோகமே மாயைன்னு வெறுத்துடுவாளாமே? அதுக்கு எப்படி நல்லது செய்யறது?"

என்று கேட்ட பைன் வீட்டுப் பெண், சட்டென்று தன் நாக்கைக் கடித்துக்கொண்டு, '' நீங்க ஒருத்தர் காளி மாதாவைப் பார்த்த பிற்பாடும் எங்ககிட்டல்லாம் பிரியமாவே இருக்கேள் ! எல்லாரும் உங்களைப்போல இருப்பாளா?'' என்று முடித்தாள்.

'' சரி, நான் சொல்றதைக் கவனமாக் கேளுங்கோ. உலகம் வெறும் ஸைபர்தான். இதையே பெரிசா நினைச்சு உழண்டுண்டு இருந்தா ஒரு நாளும் நிம்மதி, திருப்தி, சந்தோஷம், ஆத்மசாந்தி கிடையாதுதான். என் ஜகன்மாதாவை அநுபவிச்சா, அந்த அநுபவ நிலையிலே உலகம் ஸைபராகத்தான் ஆயிடறது. ஜகன்மாதா என்கிற ஒண்ணே ஒண்ணுதான் உண்மையா இருக்குன்னு தெரியறது. ஆனா அந்த அநுபவ நிலையிலிருந்து இறங்கி உலகத்தைப் பார்க்கச்சே அந்த ஒண்ணின் நினைவும் இருக்கு ; இந்த ஸைபரின் நினைவும் பக்கத்திலேயே வர்றது. வெறும் ஸைபர் ஒண்ணுக்குப் பக்கத்திலே வந்தா 'பத்து'ன்னு ஆயிடறதோன்னோ? அப்படியே சர்வேசுவரியோட சேர்ந்த நினைவிலே உலகத்தைப் பார்க்கச்சே அதுக்கும் மதிப்பு வந்துடறது. இப்படிப் புரிஞ்சுண்டா உலகத்துக்கும் மதிப்புத் தந்து அதற்கான நல்லதைச் செய்ய முடியறது. ஆகக் கூடி முதல்லே பகவானைத் தெரிஞ்சுண்டுட்டு அப்புறம் லோக விவகாரத்துக்குத் திரும்பறதுதான் முறை. என்ன பிரஸன்னா மாமி, நான் சொல்றது சரிதானே ? நீங்க பல க்ஷேத்திரங்கள் போய்ப் பார்த்திருக்கேளே ! அப்ப முதல்லே ஒரு சத்திரத்தைத் தேடிப் பிடிச்சு உங்க பெட்டி படுக்கையையெல்லாம் இறக்கிட்டுத்தானே நிம்மதியா ஊர் சுத்தினேள் ? இந்த உலகத்துக்கு வந்திருக்கிற நாமும் முதலில் நம் மனசு தங்கியிருக்கிறதுக்கு மகாகாளி என்கிற விடுதியைப் பிடிச்சுக்கணும் ; அப்புறம் லௌகிகத்திலே வேடிக்கை பார்க்கலாம். ஆனா ரொம்பவும் வேடிக்கையிலேயே இறங்கிப் பொழுதைக் கழிச்சுடக்கூடாது. அப்பப்போ விடுதிக்குப் போய் 'ரெஸ்ட்' பண்ணிக்கத்தான் வேணும். இல்லாட்டா புகை சூழ்ந்த அறையிலே எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் கொஞ்சமாவது கரி ஏறுகிற மாதிரி, நம்மேலே மாயை கரியைப் பூசிடத்தான் செய்யும்...''

ராமகிருஷ்ணரை இடைமறித்தாள் பிராம்மணி: '' அப்பனே ! இப்போ சொன்னியே, அது நூற்றிலே ஒரு வார்த்தை. புகை மூடின ரூமிலே எத்தனை ஜாக்கிரதையா யிருந்தாலும் உடம்பிலே கரி ஏறத்தான் செய்யும். ஸ்திரீ சங்கம் என்பது இப்படிப்பட்டதுதானே ? ''

அவரைப் பாக்குவெட்டியில் பிடித்துவிட்டதாக இறுமாந்து பேசிய அவளுக்குப் பதிலாகப் பாக்கின் உவமையையே கூறினார் ராமகிருஷ்ணர் : '' பைரவியம்மா ! நீங்க சொல்றது வாஸ்தவந்

தான். ஸ்திரீ சங்கத்துக்குச் சபலிக்கச் செய்யும் சக்தி ஜாஸ்திதான். ஆனு மனசு பச்சைப் பாக்கா இருக்கற வரைக்குந்தான் அது இந்தச் சபல ஓட்டிலே ஒட்டிண்டிருக்கும். என் அம்பிகையோட கதகதப்பான கிருபைக் கிரணம் உள்ளே புகுந்து, மனசை உலர்த்தி, காய்ஞ்ச பாக்காக்கி விட்டால், மேல் ஓட்டிலிருந்து அது அப்படியே பிரிஞ்சு விடும். ஆட்டிப் பார்த்தா அப்போ பாக்குப் பழத்துக்குள்ளே பருப்பு தனியாக ஆடும். மனுஷ மனசை ஒரு இரும்பு ஆணியா வெச்சுப் போம். பத்தினிங்கிற ஒரு சின்னக் காந்தத் துண்டை – பத்தினிக்குக் 'காந்தா'ன்னே பேர்–கிட்டக் கொண்டு வந்தா மனசு அதிலே போய் ஒட்டிக்கும். இது வாஸ்தவம். ஆனுல் இந்த உலகங்களை எல்லாம் ஒண்ணையொண்ணு ஆகர்ஷிக்கும்படியா பண்ணிண்டிருக்கே ஒரு பெரிய காந்தம், என்னுடை சர்வேசுவரி என்கிற காந்தம்—அந்தக் காந்தத்துக்கு முன்னுடி இரும்பு ஆணியை உருட்டிவிட்டா அப்புறம் இந்த இத்தனூண்டு பத்தினிக் காந்தம் என்ன பண்ணும் ?''

பைரவி தனிமையில் குடைந்தபோது ராமகிருஷ்ணர் கம்பீரமாக மௌனம் சாதித்தார். இப்போது அவள் பொதுச்சபையில் குடைந்த போது கம்பீரமாக, ஆனுல் மறைமுகமாகப் பதில் சொன்னுர். அவள் அந்த எளிய மக்களின் உள்ளத்தில் விஷம் ஏற்றிவிடக்கூடாதல்லவா ?

பைரவியை நேருக்கு நேராகப் பார்த்துக்கொண்டு, '' ஸ்திரீ – புருஷ வித்தியாசமே தெரியாத பரமஹம்ஸாளுக்கு எந்தச் சூழ்நிலை யிலும் ஆபத்து இல்லை. அவா அஞ்சு வயசுக் குழந்தை மாதிரி'' என்ருர் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்.

அவரை ஐந்தாம் வயசில் மணந்த சாரதை இன்னும் ஐந்து வயசுக்காரியாகவே நின்றுகொண்டு மனத்தால்மட்டும் தாயாவதற்கு அவாவுகிருள். இவர் முப்பத்திரண்டாவது வயதிலும் ஐந்து பிராயப் பிள்ளையாகமட்டுமே இருக்கிருர். தாம் காளி மாதாவின் பிள்ளை என்பது தவிர ஒன்றும் தெரியாத குழந்தை இது.

'' கதாயி, நீ என்ன அழகா எல்லாம் சொல்றே! நீ எங்களோடேயே இருந்து நிறைய நிறைய உபதேசம் பண்ணிண்டே இரு. நாங்க தெரிஞ்சுக்க வேண்டியது ரொம்ப இருக்கு...'' என்று உருக்கத்துடன் கூறினுள் தனியம்மாள்.

'' ரொம்பத் தெரிஞ்சுக்க வேண்டிய அவசியமே இல்லைம்மா. நான்கூட ஒண்ணுமே தெரிஞ்சுக்காம இருக்கச்சேதான் அம்பாள் அநுக்கிரகத்தை அடைஞ்சேன். என் அம்மாகிட்ட பக்தியா யிருக்க ணும்; அவள் விட்ட வழின்னு இருக்கணும். இதைமட்டும் தெரிஞ்

சுண்டு அநுஷ்டானத்திலே கொண்டு வந்துட்டாப் போறும். பிறத்தியாருக்கு உபதேசம் பண்ணறவா நிறையச் சாஸ்திரமெல்லாம் படிக்கணும். ஏன்னு, மற்றவா பல தினுசு சந்தேகம் கேட்பா. அதையெல்லாம் போக்கணும். ஆனு, அவாவாளும் தாம் சம்ஸாரத்திலேருந்து விடுபடறதுக்குக் கொஞ்சம் படிச்சுத் தெரிஞ்சுண்டு அதை ஒருமுகமாக அநுஷ்டிச்சாலே போதும். தற்கொலை பண்ணிக்கிறதுன்னு ஒரு சின்ன ஊசியை முழுங்கினுல்கூடப் போதும். ஆனு இன்னெருத்தனைக் கொலை பண்ணறதுன்னு கத்தி, கபடா எல்லாத்தையும் தூக்கிண்டுன்னு போகவேண்டி யிருக்கு? கொலைக்குச் சொல்கிறதுதான் அமிருதமாகிறதுக்கும் பொருந்தறது" என்று கூறிச் சிரித்தார் ராமகிருஷ்ணர்.

சிரிப்பு பலத்துக்கொண்டே வந்தது.

ஏன் இப்படிச் சிரிக்கிறுர்?

அவருக்குப் பைத்தியம் என்று தக்ஷிணேசுவரத்துக்காரர்கள் சொன்னது மெய்தானே?

ராமகிருஷ்ணர் பகபகவென்று சிரித்துக்கொண்டிருந்தார்.

வெளியிலே பெருங் காற்று சுழித்துக்கொண்டு சிரித்தது. இடிகள் கர்ஜித்து அட்டகாசம் செய்தன. மின்னல்கள் பளிச்சிட்டு, வானமாதேவியின் சிரிக்கும் உதடுகளாக நெளிந்தன.

ராமகிருஷ்ணரின் சிரிப்பு ஓய்ந்தது.

முத்து முத்தாக அவரது கண்ணிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது.

இடிகள் ஓய்ந்தன.

மின்னல்கள் மறைந்தன.

'சோ' என்று மழைபெய்ய ஆரம்பித்தது.

எல்லோரும் அப்படியே தூங்கிப் போனுர்கள்.

ராமகிருஷ்ணர் பாவ சமாதியிலே ஆழ்ந்தார்.

* * *

காலையில் மழை ஓய்ந்திருந்தது.

சமாதி கலைந்த ராமகிருஷ்ணர் காலைத் தென்றலைப் போலவே காலை வீசி, பூதிர்க்கால் என்ற கால்வாய்க்குச் சென்றுர்.

எங்கும் தண்ணீர் ஊறிக் கிடந்தது.

மழையாகப் பொழியாவிட்டாலும் வானில் அப்பிக் கிடந்த மூகில் கூட்டத்தில் நீரின் செறிவு பிதிர்ந்திருந்தது.

அது, இரவு முழுவதும் உபதேச மழை பொழிந்த ராமகிருஷ்ணரின் உள்ளத்துக்குள் இப்போதும் உபதேச உண்மைகள் மழைச் சூல் கொண்டிருப்பது போல் இருந்தது.

ஏரி விளிம்புவரை நீர் நிரம்பியிருந்தது.

ஏரியின் கரை யெல்லாம் நீர் ஊறிய சொதசொதப்பு.

தெரு மண்ணிலும் ஜலம் ஊறியிருந்தது.

மரங்கள் பச்சைப் பசேலென்று மரகத மயமாக நனைந்து நின்றன.

புற்கள் ஜல பிந்துக்களைக் கிரீடமாக அணிந்து ராஜ கம்பீரமாக நின்றன. சாய்ந்து கிடந்த புற்களுங்கூடத் திண்டில் சாய்ந்த ராஜாக்களைப் போல ஒய்யாரமாகக் கிடந்தன.

மரத்திலிருந்து நீர்த் துளிகள் ராமகிருஷ்ணர்மீது ஜிலு ஜிலு வெனக் குலுங்கி விழுந்தன.

ராமகிருஷ்ணரின் உடல் குலுங்கியது. அந்த அநுபவத் தருவின் கண்களிலிருந்து நீர்ச் சொட்டுக்கள் விழலாயின.

விக்கி விக்கி அழுதார்.

நீர் எடுப்பதற்காகக் கும்பத்துடன் வந்த சாரதை அவரைப் பார்த்தாள்.

இதயத்திலே ஆனந்த கும்பம்; இடுப்பிலே நீர்க் கும்பம் — அவளுக்குள்ளும் வெளியும் ஒரே ஈரம் ஊறிக் கிடந்தது.

அவரையே பார்த்தபடி அசையாமல் நின்றாள்.

8. அவதாரம் எனும் அரிய புதிர்

மானுட உடலை அடைந்துள்ள நானே பொருட்களின் மகேசுவரனாக அவற்றை ஆளுபவன் என்ற உயர்ந்த பாவத்தைப் புரிந்துகொள்ளாமல், அறிவற்றோர் என் அவதாரத்தை அவமதிப்பர்....ஆனால் பார்த்தா ! மகாத்மாக்களோ எனில் எனது தெய்விக உள்ளியல்பைத் தேடிப் புரிந்துகொண்டு, மனத்தில் வேறு எண்ணமின்றி என்னையே பொருட்களின் ஆதி என்றும், நான் அழிவற்றவன் என்றும் கண்டுகொண்டு பஜிக்கிறார்கள்.

–ஸ்ரீமத் பகவத் கீதை 9-11, 13.

'பூதிர்க்கால்' என்ற கால்வாய் சலசலவென அரித்து ஓடும் மதுரத்வனி.

மரங்களிலிருந்து மழைநீர் சொட்டும் இனிய ஒலி.

மழையில் மலர்ந்த புது வாழ்வில் மகிழ்ச்சி கொண்ட பட்சிகளின் கலகல த்வனி.

தவளைகளின் கோஷ்டி சங்கீர்த்தனம் — இந்த அழகிய ஓசைகளின் மத்தியில் பேசாமலே நின்றனர் ராமகிருஷ்ணரும், சாரதையும்.

ஆனால் அங்கே தம் அருமை மாமாவைத் தேடிக்கொண்டு வந்த ஹ்ருதயர் மௌனத்தைக் கலைத்துவிட்டார்.

"என்ன மாமா, கண்ணெல்லாம் சிவந்திருக்கு! மூக்கை வேறே உறிஞ்சறேள்!...அழுதேளா? ராத்திரியும் அழுதேளே? என்ன சமாசாரம்?" என்று வினவினார் ஹ்ருதயர்.

அவ்வளவுதான்; ராமகிருஷ்ணர் உற்சாகமாகப் பேசலானார் :

"ராத்திரி ஏன் அழுதேன் தெரியுமா? அவாவாளும் தங்களைக் கடைத்தேற்றிக்கொள்ளக் கொஞ்சம் படிப்பு போறும், உபதேசம் செய்யறவாளுக்குத்தான் நிறையப் படிப்பு வேணும்னு சொன்னேனோன்னோ? நான் இத்தனை பேருக்கு இத்தனை உபதேசம் பண்ணறேனே, நான்மட்டும் என்ன பெரிசா படிச்சுட்டேன்? படிக்காவிட்டாலும் என் வழியா உபதேசம் தரணும்னு எங்கம்மா சங்கல்பம் பண்ணிட்டா. அதனாலே மேகம் வர்ஷிக்கிறமாதிரி என்னைப் பேச வைக்கிறா. நானா பேசறேன்? களஞ்சியத்திலேருந்து வேலைக்காரன் படிப்படியா நெல்லை அளந்து போட்டுண்டேயிருப்பான். நெல்

சரிஞ்சுண்டேயிருக்கும். இவன் அளந்து போடுவான். ஆனா இவனா நெல்லைப் பண்ணினான்? அல்லது அந்த நெல் இவனுக்குத்தான் சொந்தமா? இந்த சர்வசாதாரண கதாயியை எங்கம்மா கருவியாக் கிண்டு இப்படிப் பேச வைக்கிறாளேன்னு நினைச்சுத்தான் ராத்திரி சிரிச்சேன்; அழுதேன்.

"இப்போ ஏன் அழுதேன் தெரியுமா? இதோ பாரு, எங்கே பார்த்தாலும் மழை ஜலம் ஊறிக் கிடக்கு. என்னோட சர்வேசுவரியும் இப்படித்தான் சர்வத்திலேயும் ஊறியிருக்கா. ஆமாண்டா ஹ்ருதே! எங்கம்மாவுடைய சைதன்ய விலாஸம் ஊறாமல் அண்ட பகிரண்டத்திலேயும் ஒரு பரமாணுகூடக் கிடையாதுடா. அதோ பாரு, மழை ஜலத்திலே முழுகிட்டு, உடம்பைச் சிலிர்த்துண்டு அந்தக் காக்கா உக்காந்திருக்கே, அப்படித்தான் இந்த உலகம் முழுக்க. இதிலே இருக்கிற சாதுக்கள், துஷ்டாள், பசு, பட்சி, மரம் மட்டை, மலை, அலை எல்லாம் எங்கம்மாவோடே சக்தியிலே அப்படியே சிலிர்த்துண்டு இருக்காப்பலே எனக்குத் தெரியறது. நல்லது - கெட்டது, அழகு – கோரம், ஞானம் – அஞ்ஞானம், பிரேமை–துவேஷம், ஆஸ்திகம்–நாஸ்திகம் எல்லாத்திலேயும் எங்கம்மாதான் உயிருக்கு உயிரா ஊறிக் கிடக்கறாள்னு பிரத்தியட்சமாகப் பார்த்துட்டு ஆனந்த பாஷ்பம் கொட்டினேண்டா, ஹ்ருதே! வெள்ளையாயிருக்கிற மேகமே கறுப்பா ஆகி, நிறமில்லாத மழையைக் கொட்டறது. அப்படியே எங்கம்மா கௌரி மகா காளியாகி நிர்க்குண அநுபவத்தை மழையாக் கொட்டுவா. மழைக்கு நிறமில்லாட்டாலும் இத்தனை நிறமுள்ள செடியும் கொடியும் பூவும் காயும் அதிலேருந்துதானே வந்தன? நிர்க்குண அம்மாதான் இத்தனை குணங்களாகவும் ஆயிருக்காள்னு பிரத்யட்சமா புரிஞ்சுண்டு அழுதேன், இந்த மழையிலே எத்தனையோ தாவரங்களுக்குக் கிளுகிளுன்னு புதுசா உயிர் வந்திருக்கு; நண்டும் நத்தையும் மீனும் கொசுவும் தவளையும் கள கனன்னு வளர்றது. கெட்ட கிருமி, நல்ல ஜீவராசி எல்லாம் ஒரே மழையிலே உண்டாறது; பச்சுனு உயிரும் தழைக்கிறது; காலராவும் உண்டாறது. சில பூச்சிகள் மழையிலே உண்டாகும்; சில பூச்சிகள் மழையிலே செத்தும் போகும். எனக்கு இந்த மழை பரப்பிரம்ம சக்தியாகவும், மகா மாயையாகவும் இருக்கிற எங்கம்மா காளியாவே தாண்டா தெரியறது!"

ராமகிருஷ்ணர் பேசவே முடியாமல் பரவசத்தில் திணறினார்.

> ......நந்தம்மை ஆளுடையாள்
> தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
> முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
> என்னப் பொழியாய் மழையே!

என்று மாணிக்கவாசகரும் மழையைத் தேவியின் திருவடிவமாகவே பாடினுர்.

ராமகிருஷ்ணருக்கு பாவ சமாதி கூடிவிட்டால் சில சமயங்களில் தடாலென்று விழுந்துவிடுவார். அவரது உடம்பு விறைத்துப் போகும். இப்போது இவ்வாறு நடந்துவிடப் போகிறதே என்று ஹ்ருதயர் பயந்தார்.

ஆனுல் ராமகிருஷ்ணரோ பரம சாந்தராக நடந்தார். சற்றே காய்ந்திருந்த ஓரிடத்தில் போய் அமர்ந்துகொண்டார். ஆனந்த ரூபியாக விளங்கினுர்.

மாமாவையும் மாமியையும் தனியே விட்டுவிட்டு ஹ்ருதயர் நகர்ந்தார்.

அவர்கள் மௌனமாக இருக்கும்போதே, இத்தொடருக்கு ஜீவா தாரமான சில விஷயங்களை நாம் கவனித்துவிடுவோம்.

* * *

எல்லாவற்றுக்குள்ளும் 'எங்கம்மா'தான் ஊறிக் கிடக்கிருள். உருவம், குணம், குறி, கிரியை ஏதுமே இன்றித்தான் பரப் பிரம்மம் கிடந்தது. அதிலே எப்படியோ சிருஷ்டி என்கிற ஒரு சிந்தனை வந்தது. அந்தச் சிந்தனைக்குத்தான் மகா மாயை என்று பேர். அதுதான் 'எங்கம்மா'. ஒன்ருன பிரம்மம் 'எங்கம்மா' வான தன் சக்தியைத் தானே உணர்ந்து பலவாகத் தோற்றம் எடுத் தது! அப்படித் தோன்றும்போதே, இந்தப் பலவற்றிலிருந்து ஒன்றுக்குத் திரும்பி ஒன்றுகிற ஞானத்தையும் தோற்றுவித்தாள் 'எங்கம்மா'. பலவாகத் தோன்றும் உலகைக் கடந்து ஒன்றேயான அகண்ட ஆன்மாவில் ஜீவன் பிர்வேசிப்பதற்கு அவள் வழி வைத்திரா விட்டால் ஜீவர்கள் விடுபடுவதற்கு முடியாமலே அல்லவா போயிருக் கும்? மகாமாயையாகத் தோன்றும்போதே, மகா காருண்ய சாலினியாகவும், மகா ஞானம்பிகையாகவும் அவள் தோன்றினுள்.

எல்லாவற்றுக்குள்ளும் தான் ஊறியிருந்தாலும், எல்லாவற்றை யும் அந்த உள்ளுக்குள் அவள் முழுக்கிக்கொள்ளவில்லை; மேல் பரப்பில் பெரும்பான்மை ஜீவர்களிடம் 'மனம்' என்பதாக ஒன்றைச் சுதந்திரச் சொத்தைப்போல் கொடுத்து, அந்த மேல்மட்டத்திலேயே அவர்களை மிதக்க விடுகிருள். மனம் இருக்கிற வரையில் எண்ணங் கள், காரியங்கள் இருந்துகொண்டுதான் இருக்கும். எண்ணமும் காரியமும் உள்ளளவும் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு எண்ணமற்ற, செயலற்ற, சாசுவத நிலைக்குத் திரும்ப முடியாதுதான்! இவ்வாறு மன மாயையால் பிறந்து பிறந்து இறந்துகொண்டிருப்பவர்களை விடு

விக்க வழிகாட்டுவதற்காக அவளே அவதாரங்கள் கொள்கிருள். எல்லாமே ‘ எங்கம்மா ’ என்ருலும், இந்த அவதார வியக்திகள் விசேஷமாக ‘ எங்கம்மா ’ ஆவர். தம்மை மறந்துள்ள பல ‘எங்கம்மா’க்களுக்குத் தங்களை உணர்த்த வந்துள்ள சில ‘எங்கம்மா’க்களே அவதாரங்கள். மற்ற ஜீவராசிகளுக்குத் தனி மனம் என்று ஒன்று சுதந்திரமாகச் செயல்படுவது போல் அம்பாள் வேடிக்கை காட்டுகிருள். வேடிக்கைக்கு ஆளாவதும் அவளேதான்! தனி மனத்தினுல் சுயப் பற்று என்ற ஒன்றை உண்டாக்கிக்கொண்டு, அதனுல் கர்மங்களைச் செய்து, கர்ம பயன்களை அநுபவிக்கப் பிறந்து பிறந்து சாகிருள், எண்ணிறந்த ஜீவராசிகளாக.

ஜீவனின் மனம் என்பது தவிர அவளுக்கென்றே ஒரு மனம் இருக்கிறது. இத்தனை மனங்களுக்கும் மூலமனம் அதுதான். அதில் ஜீவ மனத்துக்கு இருப்பது போன்ற சுயப்பற்று இம்மியும் கிடையாது. அம்பிகையின் மனத்தில் பரநலம் என்பதொன்றே உண்டு; அநுக்கிரகம் ஒன்றே உண்டு. ஜீவ மனத்தின் சம்பந்தமில்லாமல், நேரே இந்த அநுக்கிரக மனத்திலிருந்து அவதார வியக்திகளை உண்டாக்கி அனுப்புகிருள். அவர்கள் பரநலமே செய்கிருர்கள்.

ராமகிருஷ்ணரும், சாரதையும் இப்படி எங்கம்மாவின் அநுக்கிரக மனத்திலிருந்தே கறந்த பாலைக் கறந்தபடி கொடுப்பதுபோல் நேராக வந்தவர்கள்.

‘ ராமகிருஷ்ணரே அம்பாளின் அவதாரம் எனில் அவர் எதற்காக பக்தி செய்தார்? ஏன் அம்பாளின் தரிசனம் கிடைக்காமல் தவித்தார்? ரஸ கனமாகத் தரிசனம் கிடைத்தபோது அவரது உடலால் அதைத் தாங்க முடியாமல் இருந்தது ஏன்? ’

‘ சாரதை அவதார வியக்தி எனில் அவளுக்குப் பல விஷயங்கள் தெரியாமல் இருந்தது ஏன்? அவள் தான் ஓர் அவதாரம் என்று உணர்ந்த சந்தர்ப்பம் அரிதாகத்தானே காணப்படுகிறது? ’

“ அம்மா ” என்னும் இந்த நூல் ஒரு தொடராகத் தொடங்கிய பின் சிலருக்கு இந்த ஐயங்கள் எழுந்தன. விதண்டாவாதம் செய்கிற நாஸ்திகர்களைப்பற்றி நமக்குக் கவலை இல்லை; ஆனுல் ஆஸ்திகர்களின் உண்மையான ஐயங்களைக் கூடியமட்டும் தீர்க்கப் பார்ப்பதே கடமை. எனவே, அவதார ரகசியங்களை நாம் முற்றும் அவிழ்க்க முடியாதாயினும் ஓரளவுக்கு விடை கண்ட பின்னரே மேலே தொடருவது யுக்தமாகும்.

" தூய பசும் பொன்னைக் கொண்டு நகைகள் செய்ய முடியாது. அது மிகவும் மிருதுவானது. எனவே, அதில் சிறிது செம்பைக் கலந்து பிகுவாக்கியே நகை செய்வார்கள். இவ்வாறே பூரண ஞானப் பொன்னாக இந்த உலகில் ஒருவர் உலவி உத்தாரணம் செய்ய முடியாது. அதில் சிறிதே மாயைச் செம்பைக் கலந்துதான் ஆக வேண்டும்" என்பது ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு.

குறிப்பிட்ட ஒரு வேகத்தை ஒரு வஸ்து கடந்துவிட்டால் அதன் பின் அதனால் பூமியின் ஆகர்ஷண சக்திக்கு உட்பட்டிருக்க முடியாது. அது விண்வெளிக்குத் தாவிவிடும். இவ்வாறே பூரண தெய்விகத்தால் இந்த உலகில் மனித உடல் தரித்து இருக்க முடியாது போலும். எனவே, எண்ணற்ற ஜீவர்களாக வந்து தனித் தனி மனங்களைக் கனத்த போர்வையாகப் போர்த்தித் தன்னையே அவித்துக்கொள்ளும் பராசக்தி, அவதார வியக்தியாக வரும்போதும் தனது நேர் மனத்துக்கு மேல்பரப்பில் ஒரு மாயா மனத்தைப் போர்த்திக்கொள்கிறாள். ஆனால் இது கனத்த போர்வை அல்ல. சல்லாத் துணிதான். கறந்த பால்தான்; ஆனால் அதன் மேலும் பாலை மறைத்து ஒரு நுரை இருக்கிறதல்லவா? அப்படியே அவதாரங்களுக்கும் சிறிது மாயைப் போர்வை இருக்கும். கனத்த மாயையால் நாம் எப்போதுமே நம்முள் இருக்கும் பராசக்தியை மறந்திருக்கிறோம் எனில், அவதாரங்களும் மெல்லிய மாயையால் அதை மறந்தாற்போல் இருப்பார்கள். அப்போது அவர்கள் செய்கிற காரியங்களைப் பார்த்து, 'இவர்களும் ஜீவ பாவத்தில்தானே இருக்கிறார்கள்' என்று சொல்வது முறையல்ல.

பொன்னோடு செம்பைச் சேர்க்கலாமே ஒழிய இரும்பைச் சேர்க்க மாட்டார்கள். சேர்த்தால் பொன்னின் தன்மை அடியோடு போய் விடும். அவ்விதமே அம்பாளின் வித்யா மாயையில் உலகத்தினருடைய அவித்யா மாயையின் அவ்வளவாகத் தோஷமற்ற குணங்கள் தாம் சேரும். காமம், குரோதம், பொய், புனைசுருட்டு, தனது பிரபாவத்தைத் தம்பட்டம் அடித்துக்கொள்வது இதெல்லாம் அவதார புருஷர்களின் அண்மையிலேயே வரா. ஏதோ சில சில்லறை மாயா குணங்களே அவர்களிடம் காணப்படுமேயன்றி, ஆழ்ந்த மோகம் ஏதும் அவர்களிடம் இராது.

ராமகிருஷ்ணர் அவதாரமானால் ஏன் பக்தி செய்தார், மற்றச் சாதனைகள் செய்தார் என்பது ஒரு கேள்வி. ஓர் ஆதரிச பக்தனாக, ஓர் ஆதரிச சாதகனாக அவதரித்துக் காட்ட வேண்டும் என்று பராசக்தி திருவுள்ளம் கொண்டிருக்கக் கூடும். அப்போது அவள் சகலவிதமான பக்தி பாவங்களையும் நிகழ்த்திக் காட்டத்தானே வேண்டும்?

சாதாரண வியக்திகள் தங்களது கர்மத்தை அழித்துக்கொண்டால்தான் பகவத் தரிசனம் பெற முடியும். அவ்விதம் கர்மத்தை அழித்துக்கொள்ள எத்தனையோ அழுகை அழுதாக வேண்டும். இதை உணர்த்துவதற்காகவே அவதாரம் கொண்ட ராமகிருஷ்ணர், பூர்வ கர்மம் இல்லாதபோதும் அழுது காட்டி, தரிசனம் பெற்றார்.

சாதாரண வியக்திகளின் உடலால் பக்தியின் உன்னத நிலையில் ஏற்படும் மகா பாவங்களைத் தாங்க முடியாது; ஆயினும் உடலையும் பொருட்படுத்தாது அந்த பாவங்களை விரும்பி ஏற்றால் அவர்கள் பேரானந்தத்தில் முழுகுவர் என்பதை நேரில் காட்டுவதற்காக தேவியே ராமகிருஷ்ணராக வந்து, மனித தேகத்தால் தாங்க முடியாத பரவச அநுபவங்களை நுகர்ந்தாள்.

'ஒன்றும் தெரியாத எளியவளாக வாழ்ந்து உலகுக்கு அன்பை மலர்த்திக் காட்ட வேண்டும்' என்ற திருவுளக் கருத்துடன் சாரதையாக தேவி உருக் கொண்டபின், சாரதை எவ்வாறு சர்வ சக்தையாக, 'சர்வக்ஞை'யாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முடியும்?

'நான் நாராயணன் என்பதையே மறந்து ஆதரிச மனிதனாக வாழ வேண்டும்' என்று கருதிப் பராசக்தி ஸ்ரீராமனாகப் பிறக்கவில்லையா? ஜீவர்கள் தாம் ஈசுவரனே என்று உணர வேண்டும் என்பது அத்வைதம். இங்கோ அதற்கு நேர்மாறாக ஈசுவரனான ராமன் தேவாதியரிடம், 'நான் என்னைச் சாதாரண மனிதனாகத் தான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்' என்றான்.

புருஷ அவதாரங்களில் ராமனைப் போல், பெண்களில் சாரதை எனலாம். கதாதரரை 'ராம–கிருஷ்ணர்' என்பது, சிவபெருமானை 'கௌரி–சங்கரன்' என்று சதியைச் சேர்த்துச் சொல்வது போலாகும். ஈசவரனில் ஒரு பாதி அம்பாள் என்பதுபோல் 'ராம–கிருஷ்ண' என்ற பெயரில் முதல் பாதி சாரதைக்கே விசேஷமாகப் பொருந்தும். ராமகிருஷ்ணர் கிருஷ்ணனாக, பிரேம ஸ்வரூபியாக இருந்தார். ஞான போதனை தந்தார். கிருஷ்ணனைப் போலவே அவருக்குக் குடும்ப வாழ்வு விசேஷமாக இருக்கவில்லை. சாரதையோ ராமனைப் போல் குடும்பத்தில் இருந்துகொண்டு, அதற்காக வாழ்ந்தாள். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு நேர்மை, பொறுமை, அன்பு, ஒழுக்கம், தர்மம், சத்தியம் இவற்றை ஸ்ரீராமன் வாழ்ந்து காட்டியது போல் வாழ்ந்தாள். சாதாரணமான ஒரு குடும்பப் பெண் எப்படியிருக்க வேண்டுமோ அதைப் போதிக்கவே பராசக்தி அந்த வடிவத்தில் வந்தாள். அப்போது அதற்குப் போதுமான ஞானத்தைமட்டுமே வெளிக்காட்டினாள். ஆசிரியர் பட்டதாரியாக இருந்தாலுங்கூட

முதல் வகுப்பு மாணவனுக்குப் பாடம் சொல்லித் தருவது என்ருல் அதற்குரிய புஸ்தகத்தைத்தானே தாமும் வைத்திருப்பார் ; அதைத் தானே அவரும் படித்துப் பார்ப்பார் ?

அதெப்படி ஸர்வக்ஞையான தேவியால் பலவற்றை மறக்க முடியும் ? பொதுவாக நாம் ஒன்றை மறக்க வேண்டும் என்று நினைக்கும்போதே அதன் நினைவு வரத்தானே செய்கிறது ? எனவே, 'ஞாபகமாக ஒன்றை மறப்பது சாத்தியமல்லவே ?' என்கிறீர்களா ? நம்மால் ஒன்றை 'ஞாபகமாக' மறக்கமுடியாதுதான்; ஆனுல் சர்வேசுவரியால் சகலமும் முடியும். அவளால் ஒன்று முடியாதென் ருல், அப்போது அவள் சர்வேசுவரியே அல்ல.

காளிதாஸன் எழுதிய சாகுந்தல நாடகத்தில் துஷ்யந்தன் சகுந்தலையை மறந்து போகிருன். காளிதாஸனே துஷ்யந்தனுக வேஷம் போட்டுக்கொண்டிருந்தாலும் சகுந்தலையை மறந்ததாகத் தான் நடித்திருப்பார். 'இவரே எழுதிய நாடகம்–இவர் எப்படிச் சகுந்தலையை மறக்க முடியும்?' என்று கேட்கலாமா? இந்தப் பிரபஞ்சம் முழுவதும் 'எங்கம்மா' எழுதுகிற நாடகம். அதில் தனது பிரபாவங்களைத் தானே மறத்தாற்போலவும் அவள் ஒரு பாத்திரம் தாங்கி நடிக்க முடியும். அவதார வடிவில் வரும்போது அவள் குறிப்பிட்ட ஒரு பாத்திரமாகவும் இருப்பாள் ; ஒரொரு சந்தர்ப்பத்தில் சகல பாத்திரங்களையும் படைத்த ஆசிரியராகவும் தன்னைக் காட்டிக் கொள்வாள். துஷ்யந்த வேஷம் தரித்த காளிதாஸனிடமே திரை மறைவில் இன்னொரு பாத்திரம் தன் வசனங்களைக் கேட்டுக்கொண் டால் அவர் சொல்லியும் தருவார் அல்லவா ? அப்படியே மறைவிலே மெய்யடியார்களுக்குத் தன் தெய்விகத்தை வெளியிட்டு அவர்களுக் கான மார்க்கத்தைப் போதித்தாள் சாரதை.

சர்வமும் சாத்தியமான ஈசுவர சக்தி, 'ராமகிருஷ்ணராகத் தோன்றி இத்தனை ஆண்டுகள் இப்படி இப்படி இருக்கப் போகிறேன் ; சாரதையாகத் தோன்றி இத்தனை வருடங்கள் இந்த மாதிரி எல்லாம் வாழப் போகிறேன்' என்று சங்கற்பித்திருக்குமாயின், அதன் பின் அவர்களைப்பற்றி ஏன், எப்படி, எதற்காக என்றெல்லாம் நாம் துருவுவதில் பொருள் என்ன ? பயன் என்ன ?

'ஒன்றும் படித்தறியா கதாயியாவேன் ; படிப்பு இல்லாவிட்டா லும் தூய்மையாலேயே மகா காளியைத் தரிசித்து, அதன் பின் படிப்பறிவில் வராத பேரறிவை எல்லாம் பக்தியில் பெறமுடியும் என்று கதாயிமூலம் காட்டுவேன்' என்று பராசக்தி திருவுளம் கொண்டனள் போலும்! தனக்குத் தானே நெற்களஞ்சியத்தைச் சரித்துவிட்டுக்

கொண்டு அளந்து போட்டாள். அவளே ஒன்றும் தெரியாத சாரதையாக வந்து, படிப்பில் விசேஷமாக ஒன்றும் தெரியாமலே என்றும் அன்பில் வாழ எண்ணினுள். இந்த அவதாரத்தில் நெல்லை அதிகம் சரிக்கவும் இல்லை, அளக்கவும் இல்லை. ராமகிருஷ்ணரின் பக்தி பரவசங்களும் இவ்வாழ்விலே அடங்கித்தான் இருந்தன.

மல்லிகைப் பூ தானே நன்ருகத் திறந்து மலர்வதுபோல் சில அவதாரங்கள் தமது அவதாரத் தன்மையைத் தாமே நன்கு மலர்த்திக் காட்டும். வாமனனும் நரசிம்மனும் கண்ணனும் இப்படிப் பட்டவர்கள். தாமரையின் புற இதழ்களைப் பிறர் கையால் விரித்து மலர்த்துவதுபோல் பக்தர்கள் விரித்துப் பார்த்துப் பூரணத்துவத்தை அநுபவிக்கிற அவதாரங்களும் உண்டு. சங்கர பகவத்பாதர்கள், ராமகிருஷ்ணர் ஆகியவர்கள் இப்படிப்பட்டவர். சம்பகமோ முழு மலரான பின்னும் தன் இதழ்களை அதிகம் திறப்பதேயில்லை. மடலவிழாத ஒரு மொட்டின் தோற்றத்திலேயேதான் இருக்கும். நாம் மலர்த்த முற்பட்டாலும் பிய்ந்து போகும். சாரதாமணி இப்படித்தான் இருந்தாள். தோற்றத்தில் மடலவிழ்ந்து காட்டாவிட்டாலும் சம்பகத்தின் மணமாக அவளிடமிருந்து கமகமத்த அவதாரத் தன்மையைப் பக்தருலகம் புரிந்துகொள்ளும்.

மதிப்பிற்குரிய ஒருவர் பின்கண்ட கருத்தைத் தெரிவிக்கிருர்: ''ராமகிருஷ்ணரும், சாரதையும் 'அவதாரம்', 'அவதாரம்' என்று திரும்பத் திரும்ப எழுதாதீர்கள்! அவதாரம் என்று அப்பட்டமாகச் சொல்லிவிட்டால், அதன்பின் அவர்கள் செய்த எந்தக் காரியத்திலும் பெருமை இல்லை. சாதாரண மனிதர்கள் இப்படியெல்லாம் இருப்பதுதான் பெருமை.''

இந்தக் கருத்தில் நியாயம் இருக்கிறது. ஆனுல் வெளிப் போராட்டங்களில் ஒரு பாத்திரம் எப்படி நடக்கிறது என்பதைவிட, உட் போராட்டத்தின் எதிரெதிர்ச் சக்திகளைச் சமாளித்துச் சமநிலை அடைவதில்தான் மானுட கதா பாத்திரங்களின் பெருமை வெளியாகிறது. உட்போராட்டம் என்பதாக ஏதுமின்றி, பிறந்த தினத்திலிருந்தே ராமகிருஷ்ணரும் சாரதையும் சத்ய–தர்ம–சாந்தி–பிரேமைகளின் மூர்த்தங்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிரகிருதி வேகங்களில் பிரதானமான சரீர இச்சை தினையளவும் ஏற்பட்டதில்லை. எத்தனையோ உட் போராட்டங்களுக்குப் பின்னரே சாதாரண மக்கள் பெறுகிற ஆத்ம சம்பத்துக்களை அவர்கள் சுபாவத்திலேயே அள்ளிச் சொரிந்துகொண்டு வந்திருந்தனர். பாலப் பருவத்திலிருந்தே அவர் பக்தி பரவசத்துக்கு மூர்த்தியானுர்; அவளோ, சேவைக்கு ரூபகமானுள். இப்படிப்பட்டவர்களை மனமாயைக்கு ஆட்பட்டு ஸம்ஸா

ரத்தில் சுழன்றுகொண்டே, எதிர் நீச்சுப் போட்டு வெற்றி கண்ட உன்னத மானுடர்களாக மட்டும் வருணிப்பது எப்படிப் பொருந்தும்?

அப்பட்டமாக அவதாரம் என்று எழுதாமல், வாசகர்களே தொனிப் பொருளாக உணரும்படி கோடி காட்டுவதில் இலக்கியச் சுவை அதிகம் இருக்கலாம். ஆனால் அதிக சூட்சும உணர்வு அற்ற பல வாசகர்களின் பொருட்டு, பக்திக்கு முன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பலி தரவேண்டும் என்பது போல், இலக்கியச் சுவையையும் பலி தந்தால் அதுவுங்கூடத் தகுமே !

இத்தனை விரிவான விளக்கங்கூடச் சாரதா சரித்திரத்தின் இலக்கியச் சுவையைக் குறைப்பதாகத் தோன்றலாம் ! எங்கம்மாவின் லீலா விபூதிகளில் ராமகிருஷ்ணர் திளைத்திருந்த பூதிர்க்காலுக்குத் திரும்பலாம்.

* * *

முதல் நாள் இரவு மழையில் கால்வாய், கரைக்கு மேலே வழிந்தபோது வெளியில் வந்த மீன்களில் ஒன்று நில இடுக்கு ஒன்றில் மாட்டிக்கொண்டிருக்கிறது ! இப்போது தண்ணீர் வடிந்துவிட்டது. இடுக்கிலே மாட்டிக்கொண்ட மீன் ஈரத்தில் தன் உயிரை இறுக்கிப் பிடித்துக்கொண்டு துடிக்கிறது.

ராமகிருஷ்ணர் ஒரே பரிவு மயமாக எழுந்திருந்து வந்தார்.

மீன் மாட்டிக்கொண்டிருந்த நிலப்பிளவு கால்வாய்வரையில் எட்டியிருப்பதைப் பார்த்தார். திருப்திப் புன்னகை புரிந்துகொண்டார்.

தமது காற் பெருவிரலால் அந்த இடுக்கிலேயே மீனை அங்குலம் அங்குலமாக நுந்தித் தள்ளிக்கொண்டு வந்தார். கடைசியில் மீனைக் கால்வாய்க்கே கொண்டுவந்து விட்டார் !

பிரவாகத்தை அடைந்ததுதான் தாமதம், மீன் தன் வாலை வளைத்து ஆனந்தக் குதியல் போட்டுக்கொண்டு அதற்குள் முழுகி விட்டது. பூரித்து நின்றார் ராமகிருஷ்ணர்.

ஓர் அற்ப ஜீவனுக்கு இத்துணைப் பரிவு காட்டும் பதியைக் கண் பனிக்கப் பார்த்து நின்றாள் சாரதை. குடத்திலும் செம்பிலும் நீர் முகந்து அவற்றை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துக்கொண்டு வந்து நின்ற சாரதையை அவரும் ஒரு புதிய நினைவோடு பார்த்தார். 'இவளும் தன் இடத்தை விட்டு வெளிவந்து மாட்டிக்கொண்டிருக்கிறாள். இவளை இவளுடைய இடத்துக்கு நுந்தி நுந்தித் தள்ளவேண்

டும்' என்று எண்ணி அவளை நேருக்கு நேர் பார்த்து நிர்மலமாகச் சிரித்தார் ராமகிருஷ்ணர்.

இரட்டைச் சல்லாவுடன் நிற்கிற அவதாரத்தின் ஒரு சல்லாவை எடுக்க முடிவு செய்தார். 'உலகத்தில் இத்தனை ரூபங்களையும் முக்காடாகப் போட்டுக்கொண்டு எங்கம்மா அவற்றின் இடுக்கால் என்னைப் பார்க்கிருள்' என்று கூறியவர் அவர். அவற்றில் முக்காடிட்ட சாரதையும் ஒரு விசேஷமான எங்கம்மா எனக் கண்டார். அவளது விசேஷத்தைத் தம்மைக் கொண்டு மலர்த்திக்கொள்ளத் திருவுளம் கொண்டிருக்கிருள் எனக் கண்டு மலர்ந்து சிரித்தார்.

அந்த அற்புதச் சிரிப்பைக் கண்ட சாரதைக்கு ராமகிருஷ்ணரிடம் ஒரு ஸ்வாதீனம் வந்தது. "என்ன சிரிக்கிறேள்?" என்று தன் மௌனத்தைக் கலைத்து, இனிக்கக் கேட்டாள்.

"உன்னை நீயாக்கறத்துக்குப் பாடம் ஆரம்பிக்கட்டுமா?" என்று கேட்டார் ராமகிருஷ்ணர்.

"ஊம்" என்று ஆமோதித்துத் தலையை ஆட்டினுள் சாரதை.

ஈரம் செறிந்திருந்த காமார்புகுர் நிலத்தில் பலர் விதைகளை நட்டனர். ஈரம் செறிந்த சாரதையின் நெஞ்சில் மெய்யறிவாம் விதைகளை நடத்தொடங்கினுர் ராமகிருஷ்ணர்.

9. ஆசாரியக் கணவர்; சிஷ்ய மனைவி

ஞான போதனையே வித்தைகளின் அரசு. அது அதிநுட்பமானது; பவித்திரமானது; உத்தமமானது; நேர்முகமாக அநுபவிக்கத் தக்கது. தர்ம மயமானது; கடைப்பிடிப்பதற்கு இனியது; என்றும் மாறாமல் இருப்பது.

அதை உனக்கு உபதேசிப்பதற்காக மெய்ப்பொருளை அநுபவித்த ஞானிகள் வருவார்கள். அவர்களுக்குப் பணிவிடை செய்து, உபதேசத்தைப் பணிவுடன் உன்னிக் கேட்டு உய்த்துணருவாயாக!

—ஸ்ரீமத் பகவத் கீதை 9, 2; 4, 34.

'தற்கொலைக்கு ஊசி போதும், பிறரைக் கொல்லவோ கத்தி கபடா வேண்டும்; தன்னைத் தானே கடைத்தேற்றிக் கொள்ளச் சிறிது படிப்பறிவு போதும்; பிறருக்கு உபதேசிக்கவோ நிறையப் படிப்பறிவு வேண்டும்' என்றவரல்லவா ராமகிருஷ்ணர்?

'சாரதாமணிக்குக் கத்தியும் கபடாவும் வேண்டாம். ஆனால் எதிர்காலத்தில் அவளிடமிருந்து ஞான போதனை பெறப் பலர் வருவார்கள். தம்மைத் தேடி நாஸ்திகர்களும், சந்தேகப் பிரகிருதிகளும் உட்பட ஏராளமானவர் வரப்போவது போல் இல்லை. சாரதையைத் தேடி வரப்போகிறவர்கள் பெரும்பாலும் தாமே விரும்பிப் 'பலி' ஆகிறவர்கள். அவர்களைக் 'கொல்வதற்கு' — அதாவது, அவர்களின் அகங்காரத்தைக் கொல்வதற்கு — அவளுக்குச் சில சிறிய ஆயுதங்களையாவது தரவேண்டும்' என எண்ணம் கொண்டார் ராமகிருஷ்ணர். அதற்கு அவளைத் தயார்ப்படுத்தவே போதனையைத் தொடங்கினார்.

ஆகா, சாரதாவும் ராமகிருஷ்ணரும் எத்தனை விதமான பாவன உறவுகளில் தொடர்பு கொண்டார்கள்? வெளிப்பார்வைக்குக் கணவன் – மனைவி; இவரது உள்ளுக்குள்ளோ மகன் – தாய் என்றே எண்ணினார்; அவள் உள்ளுக்குள்ளே தெய்வம் – அடியாள் என்று கருதினாள்; இப்போது குரு – சிஷ்யர்களாகிறார்கள். பிறகு இவர் பக்தராகவும் அவள் அம்பாளாகவும் ஆவதையும் பார்க்கப் போகிறோம்.

யாக்ஞவல்கிய மகரிஷி தம் தூய பத்தினி மைத்ரேயிக்கு உபதேசம் செய்த உபநிஷத காலம் மீண்டும் உயிர்கொண்டது.

மதுரத் தேமொழி மங்கையர் உண்மைதேர்
மாதவப் பெரியோருடன் ஒப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய முறைமை

மீண்டும் காமார்புகுரில் நடந்தது.

சாரதை சிறிது காலமே ஏட்டுக் கல்வி பயின்றாள். அக்காலத்தில் பெண்களுக்குத் தாய்மார்கள் சொல்லித் தருகிற பாடல்களிலேயே புராண இதிகாச போதனையும், பண்பு போதனையும் நடந்துவிடும். தயிர் கடைந்துகொண்டே அம்மா பாடுவாள். குழந்தை கேட்டுக் கேட்டுக் கற்றுக்கொண்டு விடும் ; அதன் மனத்தையும் கடைந்தாகி விடும். 'பாவுல்'கள் என்கிற நாடோடிக் கூட்டத்தார் வீடு வீடாக வந்து யாசகம் கேட்கும்போது, அரிய பெரிய உபதேசங்களையும், கதைகளையும் பாட்டிலே தந்துவிட்டுப் போய்விடுவார்கள். 'யாத்ரா' எனப்படும் தெருக் கூத்துப் போன்ற நாடகங்களும் கல்வியை உள்ளடக்கியவையே. இவ்வாறு உழைப்பிலே குழைத்தும், கலையிலே இழைத்தும் வழங்கப்பட்ட கல்வியை அன்னை சாரதையும் பெற்றிருந்தாள். இப்போது மகாகுருவான பகவான் ராமகிருஷ்ணரிடம் 'படிக்க'த் தொடங்கினாள். சாரதைக்கு வேதாந்த, தந்திர, யோக சாஸ்திரங்களைப் பாடமாக ராமகிருஷ்ணர் போதிக்கவில்லை. கத்திகபடாவே கிடையாது. பெரிய போதனைகளையும் எளிமையில் தந்தார். அவள் ஓயாமல் உழைக்கிற உழைப்புக்கு ஊக்கம் தந்தார். அந்த உழைப்பிலேயே, பல உவமைகளைத் தேடி உபதேசம் தந்தார். தனியாகப் புத்தகம், வகுப்பு, பாடம் என்றில்லாமல் உலகில் நிகழும் சகல சம்பவங்களுக்குள்ளும் பாடங்களை யாத்து அவளுக்குப் போதித்தார்.

"சாரதே! மழை ஜலத்தைப் பார்த்தியா, அது மேட்டு நிலத்திலே தங்கி நிற்கிறதே யில்லை. பள்ளமா இருக்கிற இடங்களைத் தேடித்தான் போய்த் தேங்குகிறது. அதுமாதிரிதான், தங்களை உசத்தியா நினைச்சுண்டு, தற்பெருமையும் கர்வமும் பிடிச்சவாகிட்டே ஈசுவர கிருபை நிற்காது ; பணிவாக இருக்கிறவா கிட்டத்தான் அது தேங்கி நிற்கும்" என்று படிப்புக்கு அக்ஷராப்பியாசம் தொடங்கினார்.

போதிக்கப்படாமலே, அவளுக்குப் பணிவும், அவர் உபதேசித்த மற்ற பல பண்புகளும் தெரியும். ஆனால் அந்தப் பணிகளையும், பண்புகளையும்பற்றி அவர் விளக்குவதுபோல் அவளுக்கு எடுத்துச் சொல்லத் தெரியாது. மல்லிகைப் புஷ்பத்திடம், 'உன்னுடைய

சுகந்தத்தைப்பற்றி வியாசம் எழுது' என்ருல் அதற்கு எழுதத் தெரியுமா? அப்படித்தான் இருந்தாள் சாரதை. ஆனுல் எதிர் காலத்தில் பிறரை உத்தேசித்து அவள் சிறிது விளக்கவும் அறிந்திருக்க வேண்டும் என்றே அவர் போதனையைத் தொடங்கினுர்.

நீரை ஏந்திக்கொள்ளும் பள்ளம் போலவே அவரது உபதேசத்தை ஏந்திக்கொண்டது சாரதையின் உள்ளம்.

அவர் சொன்னதை உன்னிப்புடன் செவிமடுத்த சாரதை, ''நீங்க சொன்னதிலேருந்து எனக்கு இன்னெண்ணுகூடத் தோண றது...'' என்று கூறி அவரது முகத்தைப் பார்த்தாள் ஆர்வமாக. அவருக்கோ சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''ஊம், ஊம், சொல்'' என்று ஊக்கி உற்சாகப்படுத்தினுர்.

'' ஜலம் பள்ளத்தை நோக்கிப் பாயறது. அதோ பாருங்கோ, அங்கெல்லாம் ஜலம் வற்றிக்கொண்டே இருக்கு. சூரியனின் கிரணந் தானே அந்த ஜலத்தை மேலே தூக்கிண்டு போறது? மனுஷ மனசு கீழேதான் போகும்; ஆனுல் ஸ்வாமியோட அநுக்கிரகம் அதை மேலே தூக்கிண்டு...'' — மகா பெரிய அகத்துக்காரரிடம் நாமும் பெரிய விஷயம் பேசுகிருேமே என்றெண்ணிக் கண்களை மூடிக் கொண்டாள் சாரதை.

மூடிய கண்களுடன் பாலாக விளங்கிய அந்த முகத்தில் சூரிய கிரணங்கள் திண்ணெனப் படிந்தன.

'' சபாஷ், சபாஷ், பலே பேஷ்!'' என்று ஆர்ப்பரித்தார் ராம கிருஷ்ணர். அற்புதமான சிஷ்யரைக் கண்டுபிடித்துவிட்டால் குரு அடைகிற ஆனந்தத்துக்கு ஈடு உண்டா? சத்குரு கிடைக்க வேண்டும் என்று சிஷ்யன் ஏங்குவதுபோல் சத்தான சிஷ்யன் கிடைக்க வேண் டும் என்று குரவர்கள் ஏங்குவதும் உண்டே?

'' சூரிய ரச்மி தன்னைத் தூக்கறதுக்கு ஜலம் எந்தத் தடையும் உண்டாக்கிக்கல்லை. ஆனுல் பகவான் அநுக்கிரகம் கிடைக்க முடியாத படி ஜீவன் எத்தனையோ தடைகளை உண்டாக்கிக்கிறுன். ஜனங்களுக் காகத் தன்னலமில்லாமல் உழைக்கிறது, பகவானை நினைச்சுப் பிரார்த் திக்கிறது இந்த இரண்டுந்தான் தடையை விலக்கும்...''

சாரதை குறுக்கிட்டாள்: '' ராத்திரிகூடச் சொன்னேளே, 'உலகத்துக்காகவும் உழைக்கணும்; ஆனு புகை மூட்டத்திலே இருக் கிற மாதிரி அதுலேயே இருந்துட்டா ஆபத்து; அப்பப்போ வீட்டை விட்டுட்டு மூணு நாளாவது ஏகாந்த தியானம் பண்ணணும்'னு......'

ராமகிருஷ்ணர் அவளை அகழ்ந்துவிடுவதுபோல் பார்த்தார். இவள் உலகத்தை விட்டு மூன்று நாட்கள் ஏகாந்த தியானம் என்று அமர்ந்தால் என்ன ஆகும்? ஏக அந்தமாக, முடிவான ஒன்றேயாக ஒடுங்கிவிடுவாள்! இவள் உலகத்தில் உதாரணமாக இருக்க வேண்டியவள் அல்லவா?

''ஆமாம், ஆனால் நீ வீட்டைவிட்டுப் போகவே வேண்டாம். தினந்தோறும் வீட்டிலேயே தெய்வ ஞாபகத்தை விடாமல் தியானம் செஞ்சாலே போதும்'' என்றார் ராமகிருஷ்ணர்.

இருவரும் வீடுநோக்கி நடந்தார்கள். ''குடத்து மேலே செம்பை வெச்சுண்டு வர்றே; என்னோட பேசிண்டு இருக்கே; எதிரே வர்றதை யெல்லாம் பார்க்கறே. ஆனாலும் குடங்கள் உருளாமலும் ஏதோ ஓர் உள்நினைவிலே அதைக் கவனிச்சுண்டே இருக்கே! அப்படியே தான், காரியங்கள் எத்தனை இருந்தாலும் உள்நினைவு ஒண்ணு அம்பாளைச் சுற்றியே இருக்கணும். ஒரு கையினாலே கம்பத்தை இறுக்கிப் பிடிச்சுண்டு, இன்னொரு கையை இஷ்டத்துக்கு வீசியபடி குழந்தைகள் கிறு கிறுன்னு சுற்றும் பாரு. அந்த மாதிரி ஒரே சமயத்திலே ஒரு கை சர்வேசுவரியிடமும், ஒரு கை உலகத்திடமுமாகப் பழக்கிக்கணும். அன்னன்னிக்கும் உலக வேலை ஓயறப்போ இரண்டு கையாலும் அம்பாளின் பாதாரவிந்தங்களை அழுந்தப் பிடிச்சுக்கணும்...''

வீடு வந்துவிட்டது.

சாரதை சமையற்கட்டுக்குப் போய்விட்டாள்.

அவர் சொன்னதெல்லாம் அவளுக்குள் பயிராகத் தொடங்கின. முதலில் அன்பைக் கொட்டி அவளது மனத்தை நன்றாக ஈரமாக்கி விட்டுப் பிறகு அவர் தூவிய உபதேச விதைகள் ஜம்மென்று முளை விட்டன. விதை தூவிய பூமியும் மிக உயர்வானதாயிற்றே!

'லௌகிகத்தில் ஈடுபட்டவர்களுடைய மனசு ஈர நெருப்புக் குச்சி மாதிரி. ரொம்பத் தேச்சாத்தான் நெருப்பு வரும். சுத்தமான மனசைப் பட்டும் படாமலும் உரசினாலே போறும். ஞான அக்னி பிடிச்சுண்டுடும்' என்று ராமகிருஷ்ணர் கூறுவதுண்டு. சாரதை அப்படிப்பட்ட காய்ந்த குச்சியாக இருந்தாள்.

ஒரு விதத்தில் ஈரம், இன்னொரு விதத்தில் அடியோடு ஈரமின்மை! ஆம்; பிறர் என்று வரும்போது ஈரம், சுயம் என்கிறபோது ஈரமின்மை!

மகான்கள் ஆயிரமாயிரம் மக்களுக்கு உபதேசிக்கிறுர்கள். ராம கிருஷ்ணரும் எத்தனையோ பேர்களுக்கு உபதேசித்தார். ஆனுல் உபதேசத்தை அப்படியே பிடித்துக்கொண்டவர் ஆயிரத்தில் ஒருவர் தாமே! ''மலய மாருதம் வீசறப்போ, வஜ்ரம் உள்ள மரங்களெல்லாம் அந்தக் காற்றை உள்ளுக்குள்ளே வாங்கிக்கும் ; உடனே அந்த மரங் கள் சந்தனமாயிடும் – இப்படி ஒரு நம்பிக்கை. மூங்கில், வாழை, பப்பாளி மாதிரி வஜ்ரமில்லாத மரங்களெல்லாம் எத்தனை மலய மாருதம் வீசினுலும் அப்படியேதான் இருக்குமாம். உள்ளுக்குள்ளே ஓர் அழுத்தம் – வஜ்ரம் மாதிரி உறுதி–இருக்கிறவா மகான்களோடே உபதேசத்தை உறிஞ்சிண்டு ஞான சந்தனமா மணம் வீசரு ; உள்ளத் திலே உறுதியே இல்லாம, பொத்தலா இருக்கிறவாளுக்கு எத்தனை உபதேசமும் பிரயோஜனப்படறதில்லை'' என்று ராமகிருஷ்ணர் முன் கட்டில் பைரவி பிராம்மணியிடம் கூறிக்கொண்டிருந்தார்.

அந்த வாக்கு மலயமாருதமாக அன்னை சாரதையின் வஜ்ர உள்ளத் தில் புகுந்து அவளில் அறிவின் பரிமளத்தைப் பரிணமிக்கச் செய்தது.

ஆம், ஒரு விதத்தில் சாரதையின் மனசு மிக மிக மிருதுவான அனிச்ச மலர் ; இன்னொரு விதத்திலோ கல்லைப் போல் கனத்த வஜ்ரம். பிறருக்கு மலர் ; தனக்குத் தானே வஜ்ரம் !

பைரவி பிராம்மணியோ மாருக மற்றவர்களிடம் வஜ்ரமாக இருந்தாள். வஜ்ரத்தை வைரம் என்றும் சொல்லுவார்கள். இவள் சாரதையிடம் அர்த்தமில்லாத வைரம் பாராட்டினுள். உள்ளுக்குள் சிறு வேதனையையும் தாங்க முடியாத மலராக அவதிப்பட்டது பைரவியின் மனம். 'தான் உயர்ந்தவள்' என்று அவள் எண்ணிய வுடன் அந்த உயர்ந்த மேட்டில் தங்காமல் பகவத் கிருபை வெளி யேறத் தொடங்கிவிட்டது !

பூஜைக்கு ஆயத்தம் செய்யலானுள் பிராம்மணி.

''அம்மா, உங்கள் பூஜைக்கு என்ன நிவேதனம் செய்ய வேண்டுமோ, உத்தரவிடுங்கள், செய்கிறோம்!'' என்று சாகம்பரியும், சாரதாமணியும் பணிவுடன் கேட்டுக்கொண்டனர்.

''நீங்கள்ளாம் தொட்டதை நான் நைவேத்தியம் பண்ணற துக்கோ, சாப்பிடறதுக்கோ இல்லை. சுயம்பாகம் பண்ணிப்பேன். எனக்கு வேண்டிய வஸ்துவெல்லாம் கொடுத்துடுங்கோ'' என்ருள் பிராம்மணி கடுமையாக.

''அவா கேக்கறதையெல்லாம் கவனிச்சுக் கொடுங்கோ. முக்கியமா அவாளுக்கு மிளகாயும், மற்றக் கார தினுசுகளும் நிறைய

வேணும். வஞ்சனையில்லாமல் அந்த வியஞ்சனங்களெல்லாம் இடிச்சுத் தாங்கோ" என்றார் ராமகிருஷ்ணர். சுறீலெனப் பேசும் பைரவிக்கு நிறையக் கார வஸ்துக்கள் கொடுக்கச் சொன்னபோது உள்ளுக்குள் சிரித்துக்கொண்டார் அவர். அந்த உள்சிரிப்பை பிராம்மணியோ, சாரதாமணியோ, அவளது ஓரகத்தியோ புரிந்துகொள்ளவில்லை:

'' சாரு, பைரவியம்மாவுக்குப் பூர்விகம் கிழக்கு வங்காளம். அதனாலே அவர்களுக்குக் காரம் நிறைய வேணும். ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு ருசி. குழந்தையிலே நீ ஈச்சம் பழத்தை ஓயாமத் தின்னுவே. எனக்குச் சில மசாலாவிலே பிரீதி. இவாளுக்குக் காரம் வேண்டியிருக்கு. இப்படியேதான் பக்தி பண்ணறதிலேயும் பல மார்க்கம்.''

சாரு உணவு சமைக்கிறாள் ; இவர் அவளது உள்ளத்தைச் சமைக்கிறார் !

'' கிச்சடி பண்ணப் போறயாக்கும்! அரிசி, உருளைக் கிழங்கு, பருப்பு எல்லாத்தையும் பானையிலே போட்டுக் கொதிக்க வெச்சிருக்கே ! பானைக்குள்ளே சாப்பிடறதுக்கான சகல வஸ்துவும் இருக்கு. ஆனா, வேகாமல் அதைச் சாப்பிட முடியவில்லை. வெந்த பிற்பாடும் இதே வஸ்துக்கள்தான் இருக்கு. புதுசா ஒண்ணும் வந்து விடவில்லை. ஆனா வெந்தாத்தான் உள்ளேயிருக்கிற ருசி வெளியே வர்றது ; கெட்டியாக இருக்கிற பதார்த்தம் சாப்பிடறப்பலே மிருதுவாகிறது. இப்படிச் செய்யறது எது? சூடுதான். இப்போ பானையும் சுடறது; அதுக்குள்ளே இருக்கிற அரிசி, பருப்பு, ஜலம், கறிகாய் எல்லாம் சுடறது. ஆனா, சூடு அதுகளிடம் உண்டாகல்லே. அடியிலே இருக்கிற நெருப்பிலே இருந்துதான் வர்றது. நம்ம உடம்பு ஒரு பானை. பத்து மாசம் பிரம்மா பிசைஞ்சு செஞ்ச ஆண்டியோட தோண்டி இந்த உடம்பு. இதுக்குள்ளே இந்திரியங்கள், மனசு, புத்தி எல்லாம் இருக்கு. பகவானுடைய அநுக்கிரக அக்னியை மூட்டிண்டாத்தான் அதெல்லாம் பக்குவமாகும். 'அநுக்கிரகம்'னு தனியா பெறுதபோதுகூட, உடம்புக்குள்ளே பல சக்திகள் இயங்குகிறதற்குக் காரணம் ஈசுவர சக்தி என்கிற அக்னிதான். பானையைச் சரியா அந்த அக்னியிலே வெச்சுட்டா 'நறுக்கரிசி' தட்டாம பக்குவமாவோம். இந்திரியம், புத்தி, மனசு என்கிற வியஞ்சனங்களைச் சரியான விகிதாசாரத்தில் கலந்துட்டோம்னு உலகத்துக்கெல்லாம் ருசிக்கிற மாதிரி பக்குவமாக ஆவோம். பரிமாறச்சே அக்னி கண்ணுக்கே தெரியல்லை. ஆனா அது இல்லைன்னா உணவே கிடையாது. கண்ணுக்குத் தெரியாமே பகவத் சக்தி எல்லாத்திலேயும் ஊறிப் பக்குவம் பண்ணுகிறது."

அந்தக் குழந்தைக்கு ரொம்பவும் உபதேசித்துவிட்டோமோ என்றெண்ணி, ''சரி, இதிலே இன்னும் கொஞ்சம் லவங்கம், ஓமம், சேம்பு எல்லாம் போடேன்'' என்று பரம லெளகிகமாகப் பேச்சை மாற்றினர்.

'' உங்களுக்கு ரத்தக் கடுப்பா யிருந்ததுன்னு ஹ்ருதய் சொன்னனே! தக்ஷிணேசுவரத்துக் கங்கையிலே ரொம்ப உப்பேறிப் போச்சு; அதை உங்களுடைய மிருதுவான குடல் தாங்காதுன்னுதான் முக்கியமாக இங்கே வந்ததாச் சொன்னனே! மசாலா வஸ்துக்கள் உங்களுக்கு ஒத்துக்குமா ?'' என்று கேட்டாள் மதனி.

'' என்ன மன்னி, இப்படிச் சொல்லிட்டேள்?'' என்று சிறு பையனைகச் சிணுங்கினர் மகான் ராமகிருஷ்ணர். '' நான் என்னோட பவதாரிணி அம்மாவையும், ராஜோபசாரம் செய்யற மதுர்பாபுவையும், பக்தாள் கொண்டு வர்ற பஞ்சபட்சிய பரமான்னங்களையும் விட்டுட்டு இங்கே எதுக்கு வந்தேன் தெரியுமா? மன்னியோட மசாலா சமையலை ஒரு கை பார்க்கறதுக்குத்தான். நீங்களானு இப்படிச் சொல்லிவிட்டேளே?'' என்று குழந்தையாகக் குழைந்தார். சாகம்பரி தேவிக்கு ஒரே வெட்கமாகிவிட்டது. வீட்டில் மசாலா வஸ்துக்களே இல்லை. யாரையோ உடனே துரத்தி ஓட்டமாக ஓடி அவற்றை வாங்கி வரச் செய்து சமையலில் சேர்த்தாள்.

சுத்தப் பொன்னில் சேர்க்கிற செம்புபோல், அவதாரப் பொன்னில் சிறிது மாயைச் செம்பு உண்டல்லவா? ராமகிருஷ்ணர் விஷயத்தில் மசாலாவில் உள்ள பற்று, புகைக்குழாய் பிடிக்கும் ஆசை இவைதான் அந்தச் செம்பு! அவரே அப்படிச் சொல்லியிருக்கிறர்.

''ஆகா! உருளைக் கிழங்கெல்லாம் எவ்வளவு நன்ன வெந்துடுத்து!'' என்று கும்மாளியிட்டுக் குதித்தார் ராமகிருஷ்ணர்.

''ஆமாம், நன்ன ஸித்தியாயிடுத்து'' என்றுள் சாரதை. -

வங்கத்தில் வெந்து பக்குவமானதை 'ஸித்தி'யாகியது என்றே சொல்வர்.

''ஆங், அதுதான் சரியான வார்த்தை...ஸித்தி, ஸித்தி! ஸித்தியான உருளைக்கிழங்கு எத்தனை மிருதுவாயிடறது பார்த்தியோ; அப்படித்தான் ஸித்தி அடைந்த ஆத்மாக்களோட மனசும் மிருதுவாயிடும்...சரி, இன்னும் என்னெல்லாம் சமைக்கப் போறேள்?''

''லுசி பொரிக்கணும்'' என்று கூறிக்கொண்டே மதனி 'லுசி' எனும் அப்பங்களை எண்ணெயில் போட்டாள்.

'சளபுள' என்று சத்தம் எழுந்தது. அப்பம் வேக வேகச் சத்தம் குறைந்தது. அது முற்றும் பக்குவமானவுடன் சத்தம் அடியோடு நின்றது.

''லுசி மாதிரிதான் பகவத் அநுபவம் நன்னு ஊறிப் பக்குவமாற மட்டும் ஏகமா சத்தம் போட்டு வாத விவாதங்கள் பண்ணுவோம். தரிசனம் கிடைச்சுடுத்துன்னு அப்படியே வாய் அடங்கிடும்'' என்றார் ராமகிருஷ்ணர்.

''வாணலியைப் பார்த்து இறக்கு, சாரு! இந்த மாதிரிக் காய்ஞ்ச துணியாலே இறக்கினு, ஒரு வேளை துணியிலேயே நெருப்புப் பிடிச்சுண்டாலும் பிடிச்சுண்டுடும். அதனாலே எப்பவும் ஒரு ஈரத் துணியை அடுக்களையிலே கையோட வெச்சுக்கணும்''—வேதாந்தம் மட்டுமின்றி, சின்னச் சின்ன லௌகிக காரியங்களிலும் வக்கணையாக உபதேசம் தந்தார்.

''சரி, சமையல் வேலை ஆச்சா! பைரவியம்மா பூஜையிலே உட்கார்ந்துட்டா. அவா பூஜைக்குச் சுசுரூஷை பண்ணு. முதலிலே அந்தத் தீபத்தைப் பாரு. திரியிலே நெருப்பு எவ்வளவு பெரிசா படர்ந்து எரியறது! திரி நுனியெல்லாம் கரிஞ்சு போயிருக்கு. விளக்கை அணைக்காமலே அந்தத் திரிநுனியை மட்டும் அலாக்கா வெட்டிடலாம். எப்படித் தெரியுமா...?'' என்று கேட்டவர் தாமே போய் ஒரு கத்தரிக்கோல் கொண்டு வந்தார். திரியின் கரிந்த நுனிப் பகுதியைமட்டும் நறுவிசாகக் கத்தரித்தார்.

''எங்கே, அதோ அந்தப் பக்கம் இருக்கிற தீபத்திலே நீ இப்படியே திரியை வெட்டிப் பாரு'' என்று சாரதையிடம் கத்தரியை நீட்டினார்.

பக்கத்திலேயே பைரவ ஸ்வரூபமாயிருக்கிற பைரவி! இவரோ சோதனை வைக்கிறார். பூஜை வேளையில் தீபம் அணைந்துவிட்டால் என்னவாகும்? நடுங்கியபடியே கத்தரியை வாங்கிக்கொண்டாள் சாரு. பலவிதத்தில் உழைத்து உழைத்து, 'நிகா' தெரிந்துகொண்டவள் அல்லவா? நடுக்கத்திலும் வெகு சரியாகத் திரியைக் கத்தரித்து விட்டாள்.

சபாஷ் போட்டார் ராமகிருஷ்ணர்.

இரட்டை தீபங்கள்.

இரட்டை தீபங்களைப் போல் இந்தத் தம்பதி.

சிதாபதியை ஆராதித்த பைரவி அவ்விருவரையுமே ஒரு விநாடி சீதையும் அவள் பதியுமாகப் பார்த்தாள் போலும்! அவள் அவர் களைப் பார்த்த பார்வையில் அன்பின் முலாம் ஏறியிருந்தது.

"பூஜை பண்ணுகிற எடத்திலே சத்தம் போட்டது தப்புத் தாம்மா" என்று பாசாங்காக மன்னிப்புக் கேட்டார் ராமகிருஷ்ணர்.

"பூஜைப் பிரசாதம் எடுத்துக்கோங்கோ" என்று பைரவி பிராம் மணி எல்லோருக்கும் விநியோகம் செய்தாள்.

படு காரமான அந்தப் பொரியலை யாராலும் உண்ணவே முடிய வில்லை.

"உங்கள் ராமசந்திரன் மகா பொறுமைசாலி. அவனாலே இதைத் தின்ன முடியும். என்னுடைய பலஹீனக் குடலுக்கு இது தோதுப்படாது" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டார் ராம கிருஷ்ணர்.

சாகம்பரி வெளிப்படையாக, "ஆனாலும் மகா காரம் தாயே, குடலே எரிஞ்சுடும் போலேயிருக்கு" என்று கூறிவிட்டாள்.

ஊருக்கு இளைத்த பிள்ளையார்கோயில் ஆண்டியாக இளஞ் சாருதான் வகையாக மாட்டிக்கொண்டாள்.

"இந்தாம்மா சாரு, நீ பிரசாதம் வாங்கிக்கோ. ருசி பார்த்தா பிரசாதத்தைச் சாப்பிடுவா? பகவானுக்கு அர்ப்பணமாச்சுங்கறதை நெனைச்சுத்தான் சாப்பிடணும்" என்றாள் பைரவி.

பயந்துகொண்டே கையை நீட்டினாள் சாரு. அதில் விழுந்தது மிளகாய்க்கே காரம் போதிக்கக்கூடிய அற்புதச் சுவை பொருந்திய நிவேதனம்.

"சிம்மவாஹினி!" என்று மனத்துக்குள் பிரார்த்தித்துக் கொண்டே அதை வாயில் போட்டுக்கொண்டாள் சாரு. சுள்ளென்று மூளை வரையில் உறைத்தது. விக்கல் கண்டுவிடும்போல் இருந்தது. மூச்சை எக்கிப் பிடித்துக்கொண்டு விக்காமல் சமாளித்துக்கொண் டாள்.

"எப்படியிருக்கு?" என்று கேட்டாள் பைரவி.

"ரொம்ப நன்னாயிருக்கு" என்று பரிதாபமாகச் சொன்னாள் சாரதா.

ஜன்மத்தில் முதல் பொய் சொன்னதற்குப் பிரதியாகவோ என்னவோ, பைரவி இன்னொரு உருண்டை பொரியலை அவள் கையில் ஆசையாக வைத்தாள். "நீதான் சமர்த்து" என்று நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தாள்.

சாரதை தவியாகத் தவித்தாள்.

அந்த இரண்டாவது கவளத்தையும் வாங்கி வாயில் போட்டுக் கொண்டாள். நாக்கு பட்டைவிட்டது. அதை வேணுமானால் வெளியே காட்டாமலிருக்கலாம். ஆனால் இந்தக் கண்கள் இப்படிக் கண்ணீரைக் கொட்டித் தொலைக்கின்றனவே!

"என்னவோ புழுதி விழுந்துவிட்டது" என்று இரண்டாவது பொய்யைச் சொல்லிக்கொண்டு, முகத்தைச் சுத்தம் செய்வதுபோல் புறக்கடைக்குப் போனாள் சாரு.

10. பிரம்மாணியும் பிராம்மணியும்

கல்லாத பேர்களே நல்லவர்கள்; நல்லவர்கள்...
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தை என் முக்தி தருமோ ?

—தாயுமானவர்

பைரவி பிராம்மணி படுத்திவைத்த பாட்டை எல்லாம் பல்லாண்டுகளுக்குப் பின்னால் வெறும் வேடிக்கை போலக் கருதி விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே சொல்வாள் நம்முடைய திவ்விய மாதா. பைரவி பிராம்மணியைப்பற்றித் துளிக்கூட மதிப்புக் குறைவோ, துவேஷத்தின் சாயலோ தொனிக்காமலே சொல்வாள். அந்தப் படுத்தலைத் தான் பொறுமையுடன் தாங்கிக்கொண்டு அவளுக்குக் குறிப்பறிந்து சேவை செய்தது பற்றியும் சிறிதுகூடத் தற்பெருமை இல்லாமல் சொல்வாள். அம்மா தான் அப்படிப் பேச முடியும் !

அந்த ஏழைக் குடும்பத்தின் சக்திக்கு ஒப்பிட்டால் அன்று பெரிய விருந்து என்றே சொல்ல வேண்டும். வயிறு நிறைய உண்டபின் எல்லோரும் உறங்கப் போனார்கள்.

''நீ கவனிச்சயா, சாரு. சாப்பிட உட்கார்ந்தபோது எத்தனை பேச்சு இருந்தது? சாப்பாட்டுத் தினுசு ஒண்ணொண்ணும் வரச்சே பேச்சுக் குறைஞ்சுது. இப்போ வயிறு ரொம்பி அவாவாளும் தூக்கத்திலே ஆழ்ந்துட்டா. இப்படித்தான் ஈசுவரனைத் தேடிப் போறச்சே முதலில் விசாரணையும் விவாதமும் தடபுடலாக இருக்கும். அவன் பல தினுசுலே அநுக்கிரகத்தைக் காட்டக் காட்ட இதெல்லாம் குறையும். பூரண அநுக்கிரகம் வந்துட்டா மனசு அப்படியே சமாதியிலே தூங்கிடும்'' என்று கூறிய ராமகிருஷ்ணர் 'சமாதி' என்று சொன்ன மாத்திரத்திலேயே அதில் தோயலானார்.

கண்ணைக் கசக்கிக்கொண்டு வந்த ஹ்ருதயர், ''என்ன மாமா, சின்னூண்டு மாமிக்கு எப்பொப் பார்த்தாலும் தத்வோபதேசம் பண்ணறேள்? தாங்கிக்க முடியாம சிரமப்படப் போறா'' என்றார்.

அவரைக் கண்டதும் சாரதை உள்கட்டுக்கு விரைந்தாள். அவள் அங்கிருந்து அகன்றது ராமகிருஷ்ணருக்கும் மிக நல்லதாயிற்று. சமாதி நிலைச் சாயலிருந்து பரவசநிலைக்குத் தாவினர்.

ஹ்ருதயருடைய கையைப் பிடித்துக்கொண்டு மெல்லிய குரலில், "அவ யாருன்னுடா நினைக்கறே? அவ சாட்சாத் சரஸ்வதி தேவி. அவளாலே தாங்க முடியாத ஞானம் எதுவும் இல்லை. என்னுடை திவ்விய மாதாவான சரஸ்வதியிடமிருந்து வருகிற ஒரே ஓர் ஒளிக் கிரணம் மகா மேதாவியான பண்டிதனையும் நசுங்கிப்போன புழுப் போல அடக்கிவிடுமாக்கும்! அவளாலே தாங்க முடியாத ஞான போதனை கிடையாதுடா, பயலே! அவளைத்தான் இந்தச் சூழலினுல் தாங்கிக்க முடியாது. அதனுலேதான் தன் அறிவுப் பிரபாவத்தை அடக்கிண்டு, தன் சௌந்தரியப் பிரவாகத்தை ஒடுக்கிண்டு, தன் அருள் பிரகாசத்தை மறைச்சுண்டு இப்படிப் படு சாமானியமா வந்திருக்கா. அதுலேயும் ஒரு நோக்கம் இருக்கு. துளிக்கூடப் படிப்பே இல்லாம, இயற்கையா யிருக்கிற குழந்தைத்தனத்தை அப்படியே காப்பாத்திண்டாலே பகவானை அடைஞ்சுடலாம். அதைத்தாண்டா உன் 'சின்னுரண்டு' மாமி பண்ணிண்டிருக்கா. அது உங்களுக்கெல்லாம் புரியலையேன்னுதான் நான் அவளுக்குக் கொஞ்சம் பாடமும் சொல்லித் தர்றேன்" என்றுர்.

சாரதை உதிக்குமுன் ராமசந்திர முகர்ஜி அவளைப் பசும் பொன் வண்ண மகாலக்ஷ்மியாகத் தரிசித்தார்; சியாமா சுந்தரியோ கரு வண்ண துர்க்கையாக அநுபவித்தாள்; இப்போது ராமகிருஷ்ணர் அவளையே சரஸ்வதி என்கிருர்.

துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் ஒருவர்தான். ஸச்சிதானந்தப் பிரம்மத்தின் ஆனந்தத்துக்கு துர்க்கை என்று பெயர்; அதன் சித் விலாசத்துக்கு லக்ஷ்மி என்று பெயர்; அதன் சத்தியமான இருப்புக்கு சரஸ்வதி என்று பெயர். ஜடமாக இருப்பது சத்திய நிலை அல்ல. ஜடமும் எந்த ஞானத்தில் பிறந்ததோ, அந்த ஞானமாக இருப்பவளே சரஸ்வதி. ஜடமான அணுவுக்குள்ளும் மகா பெரிய பௌதிக சக்தி கொந்தளிப்பதை இப்போது விஞ்ஞானிகள் கண்டுள்ளனர். அந்த மாபெரும் பௌதிக சக்தியை அங்கு வைத்துள்ள ஜீவசக்தியும் அதனுள் இருக்கவே செய்கிறது. சகல அணுக்களிலும் இந்த ஜீவ சக்தி இருப்பதால்தான், 'சகலத்திலும் எங்கம்மா ஊறியிருக்கா' என்று ராமகிருஷ்ணர் சொன்னுர். 'சரஸ்' என்றுல் பொய்கை. தெளிந்த ஞானப் பொய்கையாக அனைத்துள்ளும் ஊறி இருப்பாள் சரஸ்வதி.

தொண்ணூற்றென்பது சதவிகிதம் எவ்விதக் குழப்பமும் இன்றித் தெள்ளத் தெளிந்த தெளிவாக இருந்தவள் நம் சாரதையான சரஸ்வதி. நூறுசத விகிதத் தெளிவானது இந்தப் பூவுலகில் பூத உடல் கொண்டு உலவ முடியாது. எனவேதான் சாரதை என்ற பொய்கை யிலும் சிறுசிறு சுழல்கள் அதன் தெளிவை ஆங்காங்கு மறைத்தன. தன் தம்பி, தங்கைகள் மரணமுற்றபோது சாரதை அடைந்த கலக்கம், தூய பொய்கையும் ஆங்காங்கே சுழலாகக் கலங்குவது போன்றதே. ஓடுகிறதா என்பதே தெரியாமல் ஒரே தகடாக நகரும் நீர், ஆங்காங்கே சுழல்களில்மட்டும் கண்ணுக்குத் தெரியும்படி ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுப் பிறகு அந்தக் கலக்கத்தின் சுவடேயின்றி மேற் கொண்டு தெளிந்தோடுகிறதல்லவா? சாரதையும் அவ்வப்போது சகோதர வாஞ்சையால் கலங்கினாளே தவிர உடனுக்குடனே அந்தக் கலக்கச் சுவடேயின்றித் தெளிவுமயமாகிவிடுவாள். அவள் தன் கண் முன்னே தாயின் மகத்தான புத்திர சோகத்தைக் கண்டு கலங்கிய போதிலும் உள்ளுக்குள் தானும் தாயாக வேண்டுமெனத் தவித்த தற்குக் காரணம், அவளை இந்தக் கலக்கம் ஆழ்ந்து பாதிக்காதது தான். தாயாக வேண்டும் என்று தவித்தாளே, அதுவும் தெளிந்த சரஸில் கலக்கந்தானே? இல்லவே இல்லை. சூரியஜோதிக்குப் பொய்கை தன் ஆவியையே அர்ப்பணிக்கிறது ; அதனால்தான் ஆவி யாக எழும்புகிறது. அப்போது நீரணுக்களுக்குள் எல்லையற்ற மோதல் ஏற்படத்தான் செய்கிறது. ஆனாலும் பொய்கை அதனால் கலங்குகிறதா என்ன? தன்னையே தந்துகொள்ளும் தியாகமாதலால் அதில் எல்லையற்ற உள்துடிப்பு இருந்துங்கூடக் கலக்கம் என்பது இல்லை. அன்பின் ஜோதியில் அம்மாவாகத் தன் ஆவியைத் தரச் சாரதை துடித்தது கலக்கத்தில் சேராது ; தியாகத் தெளிவேயாகும்.

சரஸ்வதியை பிரம்மாணி என்பார்கள். பிரம்மனின் பத்தினி என்று பொருள். பிரம்மன் படைப்புத் தெய்வம். படைப்பினத்துக்குள் அறிவாக உட்புகுந்து கலைகளைப் படைக்கிற சரஸ்வதியே பிரம்மாணி. எனவேதான் ஞானப் படையல் செய்யும் அம்மாவாக ஆவதற்குத் தவித்தாள் 'சாரதா பிரம்மாணி'. இவளை பைரவி பிராம்மணி புரிந்துகொள்ளவில்லை.

ஹ்ருதயராம்மட்டும் என்ன, அவராலும் சாரதையின் பெருமையை 'மாமா' சொன்ன பிற்பாடும் புரிந்துகொள்ளத்தான் முடியவில்லை. பைரவி பிராம்மணிக்கு 'ராமகிருஷ்ணன் நம்முடைய வனே' என்கிற பாசம் சமுத்திரமாக இருந்ததெனில், ஹ்ருதயருக்கும் அவர் 'தன் மாமா' என்ற பாசம் ஒரு பெரிய ஏரி அளவாவது இருக்கத்தான் செய்தது. பைரவி தட்சிணேசுவரம் வருவதற்குப் பல்லாண்டுகள் முன்பிருந்தே மாமாவோடு இணைபிரியாது ஒட்டிக்

கொண்டவர் ஹ்ருதயர். ராமகிருஷ்ணரின் நோயின்போதும், மகா பாவ எதிர் விளைவுகளின்போதும் 'மாமா'வுக்கு ஹ்ருதயர் செய்த சுசுரூஷை கொஞ்ச நஞ்சமல்ல. ராமகிருஷ்ணரிடம் ஜகதீசுவரியான வள் அம்மாவாக அணுகி வந்துவிட்ட பிறகு அவரால் பவதாரிணிக்குச் சம்பிரதாயப்படி பூஜை செய்ய முடியாமற் போய்விட்டது. மாமா வுக்குப் பதில் ஹ்ருதயராமே அர்ச்சகராகப் பணி புரிகிறார். இவ்வாறு பலவிதங்களில் ராமகிருஷ்ணருடன் நெருங்கித் தொடர்பு கொண்ட ஹ்ருதயருக்கும், அதே நெருக்கத்தை அடைந்த பைரவிக்கும் உள்ளூறப் பரஸ்பரப் போட்டி உண்டு. இப்போது சாரதாமணியிடம் ராமகிருஷ்ணர் பரிவு காட்டியது ஹ்ருதயராமின் பாச மோகம் பிடித்த மனசுக்கு அவ்வளவாகப் பிடிக்கத்தான் இல்லை. ஆனாலும், 'என்னுடைய பகைவனுக்குப் பகைவன் எனது தோழன்' என்றபடி, பைரவி பிராம்மணி சாரதையைப் பகைத்ததாலேயே ஹ்ருதயராம் தன் 'சின்ன மாமி'யிடம் தோழமை காட்டினார். அதனால் தான் ராமகிருஷ்ணர் சாரதாமணியை ஆதிசாரதையின் அவதார மாகச் சொன்னவுடன், 'இதென்ன பிதற்றல்?' என்று வாய்விட்டுச் சொல்லாமல் அடக்கிக்கொண்டார்.

இத்தனையும் தெரியும் பகவான் ராமகிருஷ்ணருக்கு! இருப்பினும் அவரவர்களின் கர்மம் கழிகிற வரையில் கர்வத்தைக் கழிக்காமல் அநுபவிக்கட்டும் என்று வேடிக்கை பார்த்தார்.

வேண்டுமென்றே ஹ்ருதயரிடம், "பீதாம்பர பண்டாரியை அழைச்சுண்டு வா. அந்தப் பயல் ரொம்ப நன்னாப் படிக்கிறானாம். அதோடே தன் கிளாஸ் பசங்களுக்கும் பொறுமையாகப் பாடம் சொல்லித் தர்ரானாம். அவனை நம்ம சாரதாவுக்கும் லக்ஷ்மிக்கும் அரிச்சுவடி சொல்லித் தர ஏற்பாடு பண்ணப் போறேன்" என்றார்.

குறும்புதான்! 'இப்போதுதானே மாமியைச் சரஸ்வதின்னேள்? அதுக்குள்ளே, பன்னிரண்டு வயசு பண்டாரி கிட்ட பாடம் கேட்க ஏற்பாடு பண்ணறேளே!' என்று ஹ்ருதயர் மனசுக்குள் எண்ணுவது அவருக்கா தெரியாது?

ஹ்ருதயர், பீதாம்பர பண்டாரியை அழைத்து வந்தார். சுறு சுறுப்பும் சூட்டிகையும் சொட்டும் முகத்துடன் அந்தப் பிள்ளை வந்தது.

பாடம் படிக்கப் போகிறோம் என்பதில் சாரதாவுக்கு எல்லையில் லாத குஷி. ஆயினும் தன் இயல்பான அடக்கத்துடன், புக்ககத்தி லிருந்துகொண்டு பாடம் படிப்பது அதிகப்பிரசங்கித்தனமோ என்ற அச்சத்துடன் குனிந்த தலை நிமிராமல் வந்து உட்கார்ந்தாள்.

நாலரை வயசுக் குழந்தை லக்ஷ்மி குதி போட்டுக்கொண்டு வந்து அமர்ந்தது.

'' பொம்மனுட்டிகளுக்குப் படிப்பு எதுக்கு ? '' என்று மதனி முனகினுள்.

'' மன்னி, நானும் உங்க மாதிரி கர்நாடகந்தான். பொம்மனுட்டிகள் புருஷாளாட்டம் தஸ்புஸ்ஸுனு கிளம்பறது எனக்கும் பிடிக்காதுதான். ஆனு, எழுத்தறிவு எல்லாருக்கும் வேணும், மன்னி. நம்ப ராமாயணம், பாரதம், தேவி மாகாத்மியம் இதெல்லாமாவது படிக்கத் தெரிய வேண்டாமா ? '' என்ருர் ராமகிருஷ்ணர்.

''லக்ஷ்மி பச்சைக் குழந்தை...'' என்று மதனி மீண்டும் ஆட்சேபக் குரல் எழுப்ப ராமகிருஷ்ணர் சொல்வார்: ''பச்சைக் கிளி இருக்கே, அதுக்குக் கழுத்துலே கோடு வர்றத்துக்கு முந்தியேதான் பேச்சுச் சொல்லித் தருவா. அதுக்கு அப்புறம் கிளியோட நாக்கு முற்றிப் போயிடும். பேச வராது. அதே மாதிரி புத்தி பிகுவாறத்துக்கு முந்தியேதான் பாடம் ஆரம்பிக்கணும். மன்னி, 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கறச்சேயே தும்மாதேயுங்களேன்'' என்று மன்ருடினுர் ராமகிருஷ்ணர்.

அவர்தான் ஜயித்தார். புரட்சிகரமாகத் தாம் ஏதோ செய்வதாக வெளியில் துளிக்கூடத் தெரியாமல் எத்தனை எத்தனையோ புதுமைகளை ஜயித்துக் காட்டியவரல்லவா ?

அரிச்சுவடிப் புத்தகத்தைக் கையில் எடுத்தாள் சாரதை. பல வருடங்களுக்குமுன் ஜயராம்பாடி பள்ளியில் சிறிது காலம் படித்த ஆனு, ஆவன்னுவெல்லாம் நினைவுக்கு வந்தன. பல ஆண்டுகளுக்கு முன் பார்த்த அருமை உறவினர்களை மீண்டும் சந்திக்கிற ஆனந்தம், எப்போதோ கேட்டு ஆனந்தித்த ராகத்தை மீண்டும் கேட்கிற மகிழ்ச்சி அவளுக்கு உண்டாயிற்று.

''இந்த எழுத்தெல்லாம் எனக்கு நினைவு இருக்கு. கடைசியிலேதான் புரியல்லே...'' என்று பண்டாரியிடம் புத்தகத்தை நகர்த்தினுள்.

''இது ஶ; இது ஷ; இது ஸ'' என்று விளக்கினுன் பண்டாரி.

''பொம்மனுட்டிகளுக்கு இந்த மூன்று எழுத்தும் மறந்து போகவே கூடாதே!'' என்று அர்த்த புஷ்டியுடன் கேட்டுவிட்டுச் சிரித்தார் ராமகிருஷ்ணர்.

'பொறுமை'க்கு வடமொழி 'ஸஹனம்' என்பது. அதை வங்காளியில் 'ஶஹனம்' 'ஷஹனம்' 'ஸஹனம்' என்று மூன்றுவிதமாகவும் சொல்வார்கள். ஶ—ஷ—ஸ என்றுலே பொறுமை என்று அர்த்தம் கொள்வார் ஸ்ரீராமகிருஷ்ணர். முக்காலும் பொறுமையாக இருக்க வேண்டும் என்பதுதான் சாரதாமணிக்கு ஆரம்ப பாடமாக அமைந்தது!

ஆம்; அவளது பொறுமையைச் சோதிக்க இனி எத்தனை எத்தனை சம்பவங்கள் நடக்கப் போகின்றன!

* * *

அன்று மாலை ஊராருக்கு ராமகிருஷ்ணர் உபதேசித்தபோது — 'உபதேசம்' என்கிற ஹோதா எண்ணமேயின்றி உரையாடியபோது — பைரவி பிராம்மணி அசூயையே உருவாக அமர்ந்திருந்தாள்.

ராமகிருஷ்ணரோ அலுங்காமல் நலுங்காமல், அன்பு தரும் சமன நிலையில் பேசிக்கொண்டிருந்தார். யாரோ சாதுவின் லட்சணத்தைக் கேட்டார்கள். அவர் நம்மையே வர்ணித்துக்கொள்கிறோம் என்ற பிரக்ஞை அணுவளவும் இல்லாமல் சொல்லிக்கொண்டு போனார்: "மனசில் எந்தச் சுமையும் இல்லாதவன்தான் சாது. சுமையை ஏற்றிக்கொண்டால் உடனே துன்பம் வந்து சேரும். தலையில் ஸ்தூலமாகச் சுமையை வெச்சிண்டால் உடம்பை அது பாதிக்கிற மாதிரியே தான் மனச்சுமையும் உடம்பை பாதிக்கிறது; முகத்திலே அழகு மங்கிப் போறது; நெற்றியிலே சுருக்கம் விழறது. இப்படியெல்லாம் இல்லாம காலங் கார்த்தாலே வீசற தென்றல் மாதிரி சுயேச்சையா, அன்றலர்ந்த புஷ்பம் மாதிரிப் புதுசா, பனித்துளியைப் போலப் பரிசுத்தமா மனசை வைச்சுண்டவன்தான் பாக்கியசாலி. மனசைப் பாலா வெச்சுக்கணும். அதாவது, பாலகனா வெச்சுக்கணும். குழந்தைக்கு மனசுலே என்ன சுமை இருக்கு? குழந்தையாயிடணும். பார்க்கிற இடமெல்லாம் எங்கம்மா, ஆனந்தமயி, ஜகதம்பிகை, சர்வேசுவரி, பவதாரிணியே இருக்கான்னு தெரிஞ்சுண்டு அவளுக்குக் குழந்தையாயிருந்துடணும். குழந்தைப் பிராயம் மனசிலேருந்து போயிட்டா, அப்புறம் கிருஹஸ்தனுக்கு இருக்கிற அத்தனை பாரமும் வந்துடும்—"

பணிவே உருவான ஸ்ரீநிவாஸ் சாங்காரி இடைமறித்துக் கேட்டார்: "அப்படின்னா, கிருஹஸ்தாளாக இருக்கிற எங்க கதி என்ன?"

"கவலைப்படாதே, சாங்காரி!" என்று அபயமொழி தந்தார் ராமகிருஷ்ணர்: "கிருஹ—ஸ்தன்னா 'வீட்டிலே இருக்கிறவன்னு' அர்த்

தம். இவன்தான் வீட்டிலே இருக்கான். இவனுக்குள்ளே வீடு இல்லை படகு தண்ணிலே இருந்தா ஆபத்து இல்லை. படகுக்குள்ளே தண்ணி வந்தாதான் ஆபத்து. வெளியிலே கிருஹஸ்தனுக இருக்கலாம். மனசிலே கிருஹஸ்தனுயிடப்படாது. அப்படிப்பட்டவன் பெண்டாட்டிக்குப் பக்கத்திலே இருந்தாலும் அவன்தான் சாது. 'நேங்க்டா' அப்படித்தான் எனக்கு உபதேசம் பண்ணினுர். ஒருத்தனிடம் அன்பும் அறிவும் நன்னு முற்றி, அவன் இருதயத்தைப் பூரணமாக அம்பாளுக்கே அர்ப்பணம் பண்ணிட்டு இருந்தால் போதும்—அவன் எங்கேயிருந்தாலும் சாதுதான். புருஷாளுக்குச் சொல்லறதேதான் பொம்மனுட்டிகளுக்கும். அவா புருஷாளைவிட உசந்தவா. எல்லாத்திலேயும் தேவி இருந்தாலும்,

தவ தேவி பேதா : ஸ்த்ரிய: ஸமஸ்தா ஸகலா ஜகத்ஸு

என்று 'சண்டி'லே சொல்லியிருக்கிற மாதிரி, பெண்டுகள்ளாம் விசேஷமாக அம்பாளோட ஸ்வரூபம். ஏன்னு, அம்மாவாகி அவா செய்யற அன்பும் தியாகமும் புருஷாளுக்குக் கிடைக்கிறதில்லையோன்னே? அவா தங்களோட பெருமையைத் தாங்களே தெரிஞ்சுக்கணும். புருஷனேட இருக்கிறபோதே சரீர இச்சையைத் தூக்கி எறிஞ்சுட்டு திவ்ய மாதா ஆயிடணும்."

அங்கே கூடியிருந்த நல்ல பெண்கள் அனைவரும் ஆழ்ந்த பெருமூச்சு விட்டனர். 'அப்படி ஆவோமா?' என்ற ஏக்கத்தில் எழுந்த பெருமூச்சு அது! பைரவியோ இத்தனை நாழிகையும் ராமகிருஷ்ணர் தம்மையும் சாரதையையும்பற்றியே மறைமுகமாகத் தம்பட்டம் அடித்துக்கொள்வதாக எண்ணிக் கொல்லன் துருத்தியாக ஆத்திரப் பெருமூச்சு விட்டாள். 'நேங்க்டா'வைப்பற்றி ராமகிருஷ்ணர் கூறியது அவளுடைய ஆத்திர அக்கினிக்கு ஆகுதி சொரிந்தது. ராமகிருஷ்ணருக்குத் துறவு தந்து வேதாந்தம் போதித்த தோதாபுரியை அவர் 'நேங்க்டா' என்றே சொல்வார். 'நக்ன' (திகம்பரர்) என்பதன் மரூஉ 'நேங்க்டா'. பைரவிக்கோ, தன்னிடம் தந்திரங்கள் பயின்ற ராமகிருஷ்ணர், தோதாபுரியிடம் வேதாந்தம் அப்பியசித்ததே பிடிக்கவில்லை. அதோடு, பெண் சங்கத்தை ராமகிருஷ்ணர் அடியோடு விடவேண்டும் என்று தான் கண்டிப்பாக இருக்கும்போது, இந்தத் திகம்பர சாமியார் பெண் சங்கத்திலும் துறவை நிலைநாட்டுமாறு ராமகிருஷ்ணருக்கு உபதேசித்தது பைரவியின் எரிச்சலை அதிகமாக்கியது.

பெண்கள் பக்கம் திரும்பிய ராமகிருஷ்ணர் பேசினுர்: "என் அம்மாக்களே! நீங்கள்ளாம் மஞ்சள், வாசனைப்பொடி பூசிண்டு குளிக்கிறேளோன்னே? அது மங்களத்துக்கு மங்களம், ஆரோக்கியத்

திற்கு ஆரோக்கியம்; அதோட ஜலத்திலே இருக்கிற கெட்ட கிருமி களும் மஞ்சள் காரத்திலே, வாசனைப் பொடி நெடியிலே செத்துப் போகும். இப்படியே விவேகம்னு ஒரு மஞ்சள், வைராக்கியம்னு ஒரு வாசனைப் பொடியைப் பூசிண்டு குடும்ப சாகரத்தில் முழுகுங்கோ— அதிலே இருக்கிற கெட்டதுகள் செத்தே போயிடும்; சம்ஸார சாகரமே சச்சிதானந்த சாகரமாயிடும்.''

''கதாயீ, நீ சொல்றச்சே எல்லாம் புரியறது. அநுபவத்திலேதான் வர மாட்டேங்கறது. சம்ஸார சாகரத்திலே இந்தப் பெரிய விஷய மெல்லாம் சாத்தியமே யில்லேன்னு அடியோட அவநம்பிக்கை வந்து டறது...''என்று நெட்டுயிர்த்தாள் தனியம்மை.

''மாமீ, உங்க புருஷரோட பட்டறைக்கு நீங்க போயிருக் கேளோ?'' என்று வினவினார் ராமகிருஷ்ணர்.

''ஓ!'' என்றாள் தனி. அவள் கருமார் வகுப்பைச் சேர்ந்தவள்.

''பட்டறையிலே நடுநாயகமா பட்டறைக் கல்லுனு ஒண்ணு இருக்கு இல்லியா? அத்தனை பண்டங்களையும் அதுமேலே வைச்சுத் தான் எல்லா ஆயுதங்களாலேயும் அடிக்கிறா. அடி வாங்கற பண்ட மெல்லாம் வளையறதுகள், நகருகிறதுகள், புதுப் புது ரூபம் எடுக்கறது கள். ஆனா அந்தப் பண்டங்களைவிட ஜாஸ்தி அடியை ஓயாமல் வாங் கிண்டிருக்கிற பட்டறைக் கல்மட்டும் அந்த ரூபத்திலேயே இருக்கு; இருக்கிற இடத்தை விட்டு அங்குலம்கூட நகருகிறதுமில்லே. பட்டறைக் கல் மாதிரி ஒரு பொறுமையை மனசுலே உண்டாக்கிக்கணும். சம்ஸாரத்திலே எத்தனை அடிபட்டாலும், எதெது எப்படி மாறினா லும் பொறுமை மாறாமல் இருக்கணும். அப்போ நம்ப மனசுக்கு வர வஸ்துவையெல்லாம் பிரயோஜனமாகிற ரூபத்திலே மாற்றி அனுப்பி விடலாம். பொம்மனாட்டிகளுக்குப் பொறுமைதான் பெரிய பூஷணம்.''

ஊருக்கே பெரிய மனுஷியான பிரஸன்னாவின் கண்கள் அருவி யைப் பொழிந்தன. ''என் அப்பனே! ஸ்திரீ தர்மத்தை இவ்வளவு நன்னாச் சொல்ல உனக்கு எப்படித் தெரிஞ்சுதோ?'' என்று சிலாகித் தாள். பிறகு பைரவியைப் பார்த்து, ''நிர்மூடங்களான எங்களுக்கு நீங்களும் ஸ்திரீ தர்மம் சொல்லுங்கோ'' என்று வேண்டினாள்.

ராமகிருஷ்ணர் அவ்வளவு அழகாகப் பேசுமிடத்தில் தான் எதைச் சொல்வது என்ற சிறுமை உணர்ச்சி பைரவியைப் பிடுங்கித் தின்றது. சிறுமையானது பொய்ப் பெருமைக்குத் தூபம் போட்டது. ''நான்

தனியாக என்ன சொல்லணும் ? இத்தனை நாழி உங்க கதாயி பேசின தெல்லாம் நான் சொல்லிக் கொடுத்ததுதானே ! கிராமாந்தரத்து கதாயியை நான்தானே சகல சாஸ்திரங்களிலேயும் அநுபவங்களிலே யும் தோய்ச்சுத் தோய்ச்சு எடுத்து இப்ப நீங்க பார்க்கிற ரூபத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கேன்?'' என்று வெட்கமே இல்லாமல் சொன்னாள் பிராம்மணி.

அங்கே கூடியிருந்த அனைவருக்கும் அது சரியென்று பட்டது. ஹ்ருதயரின் இதயமோ குளவி துளைத்த பூவாகத் துடித்தது. 'அகம் பாவப் பைசாசமே, சமயம் வரட்டும், உன்னை ஒரு கை பார்க்கிறேன்' என்று அது வன்மம் பூண்டது.

ராமகிருஷ்ணர்மட்டும் அமைதியுடன், ''ஆமாம், நானே சொல்லியிருக்கணும் — இத்தனையும் இவா போட்ட பிச்சைதான் '' என்று பவ்யமாகச் சொன்னார்.

சாரதாமணி தன் பிராண நாயகனை ஒரு புழுவுக்குச் சமான மாகப் பைரவி பேசியதில் புழுங்கவில்லை. புழுக்கத்தின் சிறிய சுவடு வந்தவுடனேயே 'பொறுமை' என்கிற சாளரத்தைத் திறந்து வைத்துக்கொண்டு நிம்மதிக் காற்றை அநுபவித்தாள் அவள். 'ச—ஷ—ஸ ; கருமானின் பட்டடைக் கல்' — இந்த உபதேசங்கள் அவள் மனத்தில் ஆழப் பதிந்துவிட்டன. கற்ற வித்தையைக் காரியத்தில் கைவிடுபவள் அல்ல அவள் ! 'வித்யா விநய ஸம்பந்ந' என்று கீதாசாரியன் சொன்னபடி விநயத்துடன் சிறிதளவு வித்தை யையும் தன்னுள் தேக்கிக்கொண்டு பயனடைந்தவள் சாரதா பிரம்மாணி ; பெரிய வித்தைகளைக் கற்றும் அகங்காரத்தினால் அதன் பலனைத் தோற்றவள் பைரவி பிராம்மணி.

11. கட்டி பழுத்தது!

தாபத்தால் நாடியெலாம் சிதைந்து போகும் ;
கவலையினுல் நாடியெலாம் தழலாய் வேகும் ;
கோபத்தை வென்றிடலே பிறவற்றைத் தான்
கொல்வதற்கு வழிஎன நான் குறித்திட்டேனே.

—பாரதியார்

பொழுது புலர்ந்தது.

'' ஹரி – காளி ; ஹரி – காளி ; ஹரி – காளி '' என்று கையைத் தட்டிக்கொண்டே படுக்கையை விட்டு எழுந்தார் ராமகிருஷ்ணர். அவர் விழித்துக்கொண்டவுடனே உற்சாகக் கதிர்களை வீச ஆரம்பித்துவிடுவார் ; வேதாந்தி என்ருல் உம்மணுமூஞ்சி ஆகிவிட வேண்டுமென்பதில்லை என்பதை வாழ்ந்து காட்டியவர் அவர்.

உடனேயே, '' மன்னி, இன்னிக்குப் பொன்னுங்கணிக்கீரை மசிச்சிடுங்கோ '' என்று குரல் கொடுத்தார்.

' ஹரி – காளி ' தம்மை பாவ சமாதிக்குத் தூக்கிச் சென்றுவிடக் கூடாதென்றே கீரை மசியலுக்கு மனத்தைத் திருப்பினுர்.

சாரதை நீர் முகந்து வரச் சென்ருள்; ராமகிருஷ்ணர் கால்வாய்க் கரைக்குப் போனுர்.

வழியெங்கும் வரப்புக்களில் நிறைய ஜலம் இருந்ததால் மீன் பறி வைத்திருந்தார்கள்.

'' மகாமாயையும் மனுஷனைப் பிடிக்கறதுக்கு எத்தனையோ மீன் பறி வைச்சிருக்கா. இவனும் அசட்டு மச்சமா அதிலே போய் மாட்டிக்கருன். பறிக்குள்ளே போறது மீனுக்குப் பரம சுலபமா யிருக்கு. அப்புறம் என்ன பாடு பட்டாலும் வெளிலே வர முடியறதா ? '' என்ருர் ராமகிருஷ்ணர்.

'' இந்த மாயையிலெல்லாம் எப்படி மாட்டிக்காம இருக்கிறது?'' என்று வினவினுள் சாரதை.

''மனசைப் பக்தி, பிரேமை இந்த இரண்டுலேருந்தும் அந்தண்டை இந்தண்டை நகர்த்தாமலே இருக்கணும். அதுதான் மாயையில்

விழாம இருக்கிற வழி. காலங்கார்த்தாலே உனக்குப் பாடம் ஆரம் பிச்சுட்டேனேன்னு அலுத்துக்காதே. பிரேமையும் பக்தியும் வாழ் நாள் முழுதும் பாடம் கேட்டுண்டே இருக்க வேண்டிய விஷயம். ஜனங்களை ஒதுக்கிட்டு, ஏகாந்தத்துக்குப் போய்ப் பக்தி பண்ணற தைப் புரிஞ்சுண்டு கடைப்பிடிச்சுடலாம். ஜனங்களோடு இருந் துண்டே அவாகிட்டே பிரேமை காட்டறதுதான் ரொம்பக் கஷ்டம். தன் மனுஷா, பிற மனுஷா என்கிற வித்தியாசம் தோணிண்டேதான் இருக்கும். தன் மனுஷான்னு சில பேர்கிட்ட வைக்கிற பிரேமைதான் மாயை ; எல்லா மனுஷாகிட்டேயும் சமமா வைக்கிற பிரேமையே தயை......''

பேச்சை நிறுத்தி யோசனையில் ஆழ்ந்தார். தயை தத்துவத்தை ஆராய்ந்தாரா ? அல்லது சாரதையின் எதிர்காலத்தை ஆராய்ந் தாரா ?

அவர் 'தன்' மனுஷ்யர்கள் என்ற குடும்பப் பொறுப்பே இல்லா தவர். இவளோ வருங்காலத்தில் அடியாருக்கெல்லாம் அன்னையாக இருக்கும்போதே, ஒரு குடும்பத்தின் தலைவியாகவும் இருந்து, அந்தக் குடும்பத்தின் கோளாறு படைத்த அங்கத்தினர்கள் செய்த நானாவித இம்சைகளையெல்லாம் அநுபவிக்கப் போகிறவள் ஆயிற்றே !

* * *

சாரதை நீர் முகந்தாள். சிறிய வாய் கொண்ட குடம் 'குக்குளு குக்குளு' என்று சப்தமிட்டபடி நீரை முகந்தது. ''ஜலம் ரொம்பாத வரையில் குக்குளு சத்தம் போட்டது. ரொம்பினவிட்டுச் சத்தமேயில்லே பார்த்தியா? அப்படித்தான் நிறை குடமா அமைதியா இருக்கணும்.'' — அமைதியே உருவாக நிற்கும் சாரதையை அன்புடன் பார்த்துச் சொன்னார் ராமகிருஷ்ணர்.

'எந்த ஆசை வடுவும் அவளிடம் இல்லே. இரவு வேளையைப் புனிதமாகக் கழித்துவிட்டுப் புது மலராக எழுந்து வந்திருக்கிறாள். தக்ஷிணேசுவரத்திலிருந்து கிளம்புமுன் அம்பாளிடம் நான் வேண்டிக் கொண்டேனே, தேவி அதற்கு நன்றாகச் செவிசாய்த்துவிட்டாள் !'

திரும்பி வரும் வழியில் எங்கோ எட்டத்தில் பொன்னாங்கண்ணிப் பாத்தி தெரிந்தது. முக்காடிட்டு, பூமியைப் பார்த்தே நடக்கிற சாரதைக்கு உள்ளன்பானது அந்தப் பாத்தியை எப்படியோ காட்டிக் கொடுத்துவிட்டது.

கீரையைக் களைந்தெடுக்கலானாள். பக்கத்தில் இருந்த ஒரு வாழை யிலிருந்து நார் எடுத்துக் கீரையைக் கட்டினாள்.

''ஒரு தரத்துக்கு ரெண்டுதரமா, நன்னு அலசிக் கழுவிட்டு வாணலியிலே போடு. அப்பத்தான் மண் வாசனே போகும்'' என்று 'அயனுக'ச் சமையல் குறிப்புக் கொடுத்தார் வேதாந்த ஸ்வரூபர். குடும்ப வாழ்வே தெரியாதவர், குடும்ப வாழ்விலேயே ஊறியவளுக்கு அரிய ஆலோசனே தருகிருர்—சந்தேகமில்லே, அம்பாள்தான் அவருக்காக நெல்லேச் சரித்தாள்!

லாஹூரா வீட்டு வண்டி அந்த வழியாக வந்தது. இந்தத் தம்பதியைக் கண்டதும் வண்டி நின்றது.

வண்டிக்காரன், ''ஏறுங்க சாமிங்களே, தேவிங்களே'' என்ருன்.

''சாரு, ஏறிக்கோம்மா! நீங்கள்ளாம் பர்தாப் பொம்மனுட்டிகள். வண்டி உச்சியைத் தலே நிமிர்ந்து பார்க்காமலே, உத்தேசமா இவ்வளவு உயரம் இருக்கும்னு நினேச்சு ஏறுவேள். ஆனுல் மிதியிலே காலே வெச்சவுடனே உங்க பாரத்திலே வண்டி கொஞ்சம் கீழே இறங்கும் என்கிறது உங்களுக்கு நினேப்பு இருக்கிறதில்லே; தலேயில் இடிச்சுண்டுடறேள். அதனுலே, எப்பவுமே வண்டி உச்சி வாஸ்தவமா இருக்கறதைவிட அரை சாண் கீழே இருக்கறதாவே மனசுலே கணக்குப் போட்டுண்டு ஏறணும்'' — சின்னச் சின்ன விஷயங்களேயும் செவ்வை செய்தார் ராமகிருஷ்ணர்.

வண்டியில் பேசிக்கொண்டே போனுர். ''இந்த உலகத்திலே சின்ன விஷயம், பெரிய விஷயம்னு வித்தியாசமேயில்லே. சின்னதுன்னு நினேக்கிறது பெரிசாயிடறது; பெரிசாக நினேக்கிறது பிசுப் பிசுத்துப் போறது. ஆனபடியாலே, சின்னதோ, பெரிசோ எந்தக் காரியத்தை எடுத்துண்டாலும் ஒரே மாதிரி கவனமா, சிரத்தையா அதைப் பண்ணணும்.''

வீட்டு வாசலில் வண்டி நின்றது.

சாரதை குடத்துடன் உள்ளே போனபோது, ''பார்த்தியா, நான் நெனேச்ச மாதிரியே ஆச்சு! வண்டியோட முதுகுப் பலகை யிடுக்கிலே கீரைக் கத்தையைச் சொருகினதை மறந்துட்டியே! சாதாரணமா இப்படித்தான் வண்டிலே போறவா விசிறி, கைக் கம்பு இதையெல்லாம் சொருகிட்டு மறந்தே போயிடுவா. வண்டிலே பிரயாணம் பண்றவா மறக்கக் கூடாத ஒரு விஷயம் இது'' என்று இன்னெரு சின்ன – பெரிய விஷயத்தைப் போதித்தார் ராமகிருஷ்ணர்.

''ஆனு, நீ கூடியமட்டும் எங்கேயும் வெளியிலேயே போகாதே!'' என்று தொடர்ந்த ராமகிருஷ்ணரின் உள்ளம் மிகப் பெரிய விஷயத்

துக்குத் தாவிவிட்டது. ''எங்கே போகணும், எதுக்காகப் போக ணும்?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டார். தமது தேனினும் இனிய தீங்குரலில் கமலாகாந்தரின் கீதம் ஒன்றைப் பாடலானர் :

எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே ;
தங்கியுள்ள இடத்திலேயே தங்கமாய்த் ததும்புவாய்.

உன்னிலேயே உன்னிப் பார்த்தால்
உள்ளதெலாம் உளத்தில் காண்பாய்.
எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே.

ஸ்பரிசவேதியும் தராத தேவி ஸ்பரிசச் செல்வம் ;
தரிசனமும் தரு சுரங்கம் உன் மன அரங்கம்.
அவனி முழுதும் அலேந்து திரிந்து அடைந்திட வொண்ணுத

நவநிதியும் புறக்கடையில் குப்பையாகக் குவியும்
புவனமாதா புனித ராஜ்யம் புந்தியுள் இருக்க-
எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே !

கமலகாந்தன் கண்டுகொண்டான் உலகமாய மந்த்ரம்
விமல மந்த்ரவாதி வதியும் நிலேயம் உனது உள்ளம்
எங்கும் செலாதே மனமே எங்கும் செலாதே !

கீத மாதுரியம் சாரதையின் உள்ளத்தைக் கொள்ளே கொண் டது. புக்ககத்தில் இருக்கிறேம் என்பதையும் மறந்து, கீரையைக் களேந்துகொண்டே, 'எங்கும் செலாதே' என்று முனகினுள்.

''ரொம்ப நன்னயிருக்கே உன் குரல்! நான் உனக்குப் பாட்டும் சொல்லித் தர்றேன்'' என்று ஆர்வமாகக் கூறினர் ராமகிருஷ்ணர்.

சமயகுரு, சமையல் குரு, சங்கீத குருவும் ஆகிறுர் !

''இது வீடாவா இருக்கு? கூத்தாடிகளோடே ஒத்திகைக் கூட மான்னு ஆயிடுத்து'' என்று எரிச்சலுடன் கூறினுள் பைரவி.

கூத்து என்ற வார்த்தையைக் கேட்டதும் ஹ்ருதயர், ''இன்னிக் குப் 'பாரிஜாத அபஹரணம்' யாத்ரா (நாடகம்) நடக்கப் போறது, திறந்தவெளி அரங்கத்திலே'' என்ருர்.

வீட்டில் எல்லோரும் நாடகத்துக்குப் போக வேண்டும் என்று முடிவு செய்தனர்.

சாரதையும் ராமகிருஷ்ணரின் முகத்தைப் பார்த்தாள்—ஒப்பு தல் கேட்கிற பாவனேயில்.

ராமகிருஷ்ணரின் முகத்தில் நிர்த்தாட்சிண்ய பாவமே நிலவியது. ''பலபேர் கண்பட நீ திறந்தவெளியில் யாத்ரா பார்ப்பது எனக்குச் சம்மதமில்லை'' என்ருர் கண்டிப்பாக.

''கொழந்தைதானே, ஆசையிருக்காதா? ஒரு நாளைக்கு...'' என்று மன்னி வக்காலத்துப் பேசினுள்.

''ஒரு நாள் செய்யறதுதான், அப்புறம் இன்னொரு நாள், அதுக் கப்புறமும் இன்னொரு நாள்னு பல நாள் வழக்கத்துக்கு அஸ்திவார மாயிடும். அடக்கத்தை விட்டு ஒரு காரியம் பண்ண ஆரம்பிச்சா, அதுவே மேலே மேலே தப்புலே இழுத்துண்டு போகும். சாதுவாகப் பூனைமாதிரி நடக்கற பையன் ஒருத்தனுக்கு பூட்ஸைப் பார்த்து ஆசை வர்றது. வாங்கிப் போட்டுக்கருன். உடனேயே திம், திம்னு நடக்கத் தோணறது. எங்கேயாவது மாடி ஏறினு, வெள்ளைக்காரன் மாதிரி தாட்பூட்னு ஓசை பண்ருன். அதுக்கப்புறம் தானுகவே சீட்டி அடிக்கவும் ஆரம்பிக்கிருன். இந்தச் சமயத்திலே கையிலே பேனு இருந்துட்டாப் போறும்—தன் கையெழுத்தே புரியாத மாதிரி பேப்பர்லே கிறுக்கருன். ஒண்ணுலேயிருந்து இன்னொண்ணுன்னு சங்கிலித் தொடராகத் தப்புக் காரியங்கள் வளரும். சாரதா திறந்த வெளியிலே நாடகம் பார்க்கறதை நான் ஒரு நாளும் அநுமதிக்கற துக்கு இல்லை '' என்று தீர்மானமாகச் சொன்னுர்.

சாரதை எதிர்த்து ஒரு வார்த்தை பேசவில்லை.

உள்ளூற அந்தக் குழந்தைக்கு என்ன ஆசை இருந்திருக்குமோ என்று ராமகிருஷ்ணரின் வெண்ணெய் உள்ளம் கரையலாயிற்று. 'அந்தப் பெண், சக்தி வாய்ந்த ஓர் ஆசையைத் துறந்துவிட்டு, தங்கள் இருவர் புனிதத்தையும் காக்கிருள். அவளுக்கு ஓர் அல்ப ஆசை இருந்தால் அதைத் தாம் முறித்துப் போடலாமா? சரி, அதற்காக ஸ்திரீ தர்மத்திலிருந்து அவள் ஓர் இம்மிகூட வழுவ அநுமதிக்க லாமா?'

அவளது ஸ்திரீ தர்மத்தையும் காத்து, தமது கருணை தர்மத்தை யும் காத்துக்கொள்ள ராமகிருஷ்ணர் ஓர் அற்புதத் தீர்வு கண்டார்.

''சாரதா, வருத்தப்படாதேயம்மா! இப்பவே, இங்கேயே 'பாரிஜாத அபஹரணம்' நாடகம் நடக்கப் போறது'' என்று உற்சாகமாகக் கூறினுர்.

ஆம், நாடகம் நடந்தது — அப்போதே, அங்கேயே!

ஒரே சர்வேசவரிதானே இத்தனை பாத்திரங்களாகவும் ஆகி இந்த உலக மேடையில் நடிக்கிறுள்? அப்படியே ராமகிருஷ்ணர் ஒருவரே கிருஷ்ணராகவும், ருக்மிணியாகவும், சத்தியபாமையாகவும், நாரதராகவும், இந்திரனுகவும், மற்றவர்களாகவும் மாறி அற்புதமாக நடித்தார். முன் எப்போதோ ஒரே ஒருமுறை அவர் அந்த நாடகம் பார்த்ததுதான். ஆனுலும் ஒரு வசனம், ஒரு பாடல் விடாமல் அற்புதமாகப் பொழிந்து தள்ளினுர்.

நாடகத்தில் வெளிப்படச் சொன்ன தர்மங்களோடு, உள்ளூறவும் மறைமுக உபதேசம் பலவற்றை உணர்த்தினுர். திரை மறைவிலே நடக்கிற விஷயங்களையும் காட்டிச் சிரிக்கச் செய்து சிந்தனையைத் தூண்டினுர்.

முதலில் நாடகசாலை 'ஆர்கெஸ்டிரா'வைப் போல்', "ஹே க்ருஷ்ணு, ப்ரியா! ஓடி வா" என்று அமர்க்களமாகப் பாடினுர். இதில் அதிசயம் 'ஆர்கெஸ்டிரா'க்காரர்களைப் போலவே அதில் பக்தியைப் பெய்து நிரப்பாமல் வெறும் சுத்தமாகப் பாடினுர், பக்திமயமான ராமகிருஷ்ணர். அந்தச் சமயத்தில் உள்ளே கிருஷ்ண வேஷம் போட்டுக்கொண்டவன், பாட்டைக் கவனியாமல் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருப்பதாகவும் பாவனை செய்து காட்டினுர்.

ஆர்கெஸ்டிராவின் ஆர்ப்பாட்டப் பாட்டு ஓய்ந்தது. 'அசல்' நாடகம் ஆரம்பித்தது. மிகவும் மிருதுவாக, "அச்யுதா, அனந்தா, கோவிந்தா" என்று வீணைக் குரலில் நாரதராகப் பாடினுர் ராமகிருஷ்ணர். நாரதருக்கு வீணை தனியாக வேண்டியிருந்தது! ராமகிருஷ்ணரின் குரலே வீணையாக இழைந்தது.

மனம் குழைய, குரல் குழைய நாரதர் பாடியவுடன் கண்ணன் உள்ளேயிருந்து வந்துவிட்டான்.

'ஆர்ப்பாட்ட பக்தர்களிடம் அவன் வருவதில்லை; அடங்கிய பக்தரிடமே வருகிறுன்' என்பதையும் அற்புதமாக உணர்த்திவிட்டார் ராமகிருஷ்ணர்.

இப்படியே பாரிஜாத அபஹரண நாடகம் முழுவதும் நடந்து முடிந்தது. உபதேசங்களை, உரையாடல்களை, கீதங்களை மலர்க் குவியலாகச் சொரியும் பாரிஜாத மரமாக நின்ருர் ராமகிருஷ்ணர்.

கண்ணன் அன்பால் கர்வம் கொண்ட சத்தியபாமையையும், விநயத்திலுலேயே ஐயனைத் தனதாக்கிக் கொண்ட ருக்மிணியையும்

சித்திரித்தது அந்த நாடகம். பைரவி பிராம்மணிக்குத் தனது செருக்கையும், சாரதையின் பவ்வியத்தையுமே ராமகிருஷ்ணர் கேலி செய்து பிரகடனப்படுத்தியதாகத் தோன்றியது.

எல்லோரும் மகிழ்ச்சிமயமாக இருக்கும்போது, கிளிக் கூட்டத்தில் நுழைந்த பூனைபோல் பைரவி உறுமினுள்: ''வீட்டிலேயா இப்படிக் கூத்தடிப்பா! நாடகம் பார்க்கப் போனுல் இந்தப் பெண்ணுடைய கௌரவம் போயிடும்னு சொல்லிட்டு வீட்டுக் கௌரவத்தையே பாழாக்கிக் கொட்டம் அடிச்சாச்சு! இதைப் பார்த்ததே பாவம்! பூஜைக்குப் போறேன்...'' என்று எழுந்திருந்தாள். ராமகிருஷ்ணரின் கலைத்திறன் அவளையும் அத்தனை நாழிகை கட்டிப் போட்டிருந்த தென்னவோ வாஸ்தவம்!

ராமகிருஷ்ணர் அவளிடம் குழந்தைமாதிரி வந்து நின்று கொண்டு, ''கீரை ஜலத்தைப் பிழிஞ்சு வாணலிலே மன்னி போடரு. மண் வாசனை எப்படி மூக்கைப் பொளக்கறது பாருங்கோ! அந்தக் கீரையே 'சொய்'னு சத்தம் போட்டு 'என் வாசனையைப் பார்த்தேளா'ன்னு எல்லாரையும் கூப்பிடறது, பாருங்கோ'' என்று சொல்லி ஆனந்தத் தாண்டவம் செய்தார்.

பைரவி மோவாயைத் தோளில் இடித்துக்கொண்டாள். ''நன்ளுக் குதி! உனக்குத்தான் மண் வாசனை, பெண் வாசனை எல்லாம் பிடிக்க ஆரம்பிச்சுடுத்தே!'' என்ருள்.

'காமாக்ஷியின் கடாக்ஷம் பெற்றவர்களுக்குச் சகலமும் சமமாகி விடும் – காடும் வீடும் ஒன்ருக இருக்கும்; சத்துருவும் மித்திரனும் ஒன்ருக இருப்பர்; சிவந்த ஓடும், யுவதியின் சிவந்த உதடும் ஒன்ருக இருக்கும்' என்று பாடினுர் மூககவி. அப்படிப்பட்ட சமதரிசனம் வாய்த்த மகானிடம் சொல்லத் தகாத வார்த்தையைச் சொன்னுள் பிராம்மணி. அதற்குக் கூலி அப்போதே காத்திருந்தது! ஆம், அவளது கட்டி பழுத்துவிட்டது; அம்பிகை அதை அறுக்கப் போகிருள்!

''ஏம்மா, எப்பவும் கோவிச்சுக்கிறீங்க? உங்கமாதிரி பெரிய மனுஷங்க பொறுமையும் பிரியமும் காட்டலேன்ன, அப்புறம் எங்களைப்பற்றி என்ன சொல்ல?'' என்ருர் ஸ்ரீநிவாஸ சாங்காரி.

உடனே பைரவி, ''எனக்கா, கோபமா? கிடையவே கிடையாது! மண்ணைத் தின்கிற குழந்தையின் கையைத் தாயார் கட்டிப் போடற மாதிரி, தப்புப் பண்ணறவாளைக் கண்டிக்கிறேன். அது தவிர என் மனசிலே லவலேசம் கோபமில்லே'' என்ருள். சாந்தமும்,

பொறுமையும் உருவான சாரதையின் எதிரே, தான் சின்னவளாகி விடக் கூடாதென்றே இப்படிக் கதைத்தாள்.

அவள் செய்கிற பூஜை முடிந்தது.

ராமகிருஷ்ணரின் குலதெய்வமான ரகுவீரனின் பூஜையும் முடிந்தது.

ராமகிருஷ்ணரே தமது அமிருதக் கையினுல் அனைவருக்கும் பிரசாதத்தைப் பரிமாறி அதைத் திருவமுதாக்கினுர். அனைவரும் அமர்ந்து உண்டனர். ஸ்ரீநிவாஸ சாங்காரி உண்டு முடிந்தவுடன், உணவு பரிமாறப்பட்ட இலையைத் தாமே சுருட்டி எடுத்தார். ராம கிருஷ்ணரின் குடும்பத்துப் பெண்மணி எவரும் தம் எச்சில் இலையை எடுக்கலாகாது என்று அப்படிச் செய்தார்.

அப்போது பைரவி சற்றுமுன் பெருமை யடித்துக்கொண்ட வாத்ஸல்யத்தைப் பறைசாற்று முகமாக, ''ஸ்ரீநிவாஸா, நீ எதுக்கு இலை எடுக்கணும்? எங்களுக்கு அந்த வித்தியாசமெல்லாம் இல்லை...'' என்றுள்.

சாகம்பரிக்குக் குளிர் கண்டது. 'இதென்ன தர்மசங்கடம்!' என்று உள்ளூறத் தவித்தாள். அவள் ஸ்ரீநிவாஸின் எச்சில் இலையை எடுத்துச் சுத்தம் செய்தால், அங்கு வந்திருந்த மற்றப் பெண்டுகள் அவளை 'மொலு மொலு' என்று பிடித்துக்கொண்டு விடுவார்கள். அது மட்டுமல்ல, விஷயம் வெளியே போனுல், ஊரே அவளை எதிர்க்கும். ஏற்கனவே மைத்துனர் செய்கிற பல காரியங்கள் ஊராருக்குப் புரியவில்லை. இப்போது பிராம்மணி அம்மை வேறு புது வம்பை விலைக்கு வாங்குகிறுள்!

வீட்டுக்குப் பெரியவளான மன்னி செய்யாத காரியத்தைத் தான் எப்படிச் செய்வது என்று குழம்பிய சாரதை ராமகிருஷ்ணரின் முகத்தைப் பார்த்தாள்!

ராமகிருஷ்ணர் சமத்துவத்தின் ஸ்வரூபம். தமக்கு உயர்வு - தாழ்வு உணர்ச்சி அறவே போய்விட்டதா என்று நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நம்மை அதிர வைக்கும் சோதனைகளைச் செய்து பார்த்தவர். தக்ஷிணேசுவரத்திலே பலரது விசர்ஜனங்களைக் கூசாமல் கழுவிச் சுத்தம் செய்தவர் அவர். அது மட்டுமன்று; படுமோசமான ஆடல் மகளிரின் இல்லத்து வாசற்படியிலே அவர்கள் மிதித்துச் செல்லும் புழுதியைத் தமது திருமுடியாலேயே துடைத்திருக்கிறுர் - ''வேசியும் என் ஸர்வேசியே'' என்று சொல்லிக்கொண்டு,

அப்படிப்பட்ட சமத்துவ ஸ்வரூபர் இப்போது சாரதைக்கும் மதனிக்கும் புரட்சி போதனை ஏதும் தரவில்லை. லௌகிகத்தை விட்டு விட்ட யதியான தமக்கு வைத்துக்கொண்ட நியதிகளை இல்லத்தினர் மீது அவர் திணிக்கவில்லை. ஆசாரம் என்கிற ஆயிரம் காலத்துப் பயிரில் தலையிடவில்லை.

அன்றொரு நாள் தூய சாரதை சமைத்தாலும் தான் அதை நிவேதிப்பதற்கில்லை என்று கூறிய பிராம்மணி, இன்று உள்ளத்தில் சமத்துவம் இன்றி வெறும் பகட்டுப் பொய் அன்புக்காகச் செய்த காரியம், அவளுக்குமட்டுமின்றி, ராமகிருஷ்ணரின் குடும்பத்தவருக்கும், ஸ்ரீநிவாஸ சாங்காரிக்குமே இக்கட்டான ஒரு நிலையை உண்டாக்கிவிட்டது.

'' இல்லீங்கம்மா, என் இலையை நானே எடுக்கறதுதான் தர்மம்'' என்று எளிமையுடன் கூறிக்கொண்டு, இலையை எடுத்தார் இனிய ஸ்ரீநிவாஸர்.

'' ஊம். நான் சொல்லி நடக்காம இருக்கிறதா ? இவா எக்கேடு கெட்டுப் போகட்டும்! நானே உன் இலையை எடுப்பேன்'' என்று அவரிடமிருந்து இலையைப் பிடுங்கக் கிளம்பினாள் பைரவி. '' நான் '' அவ்வளவு அழுத்தமாகத் துருத்திக்கொண்டு வந்தும், விநயமாக இருப்பதாக நடித்தாள்.

அவ்வளவுதான், அங்கே கூடியிருந்த பெண்டுகள் 'குசமுச' என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

வன்மம் பூண்ட ஹ்ருதயரின் இதயம் 'சமயம் கிடைத்தது' என்று ஆர்த்தெழுந்தது. கூச்சலிடலானார் : '' பைரவியம்மா, நீங்க அத்துமீறிப் போறேள்! உங்களை இத்தனை நாள் அதிதியாகக் கொண்டாடி ஆசார உபசாரம் பண்ணினதுக்கு நன்னாப் பழி வாங்கிட்டேள் – எங்க குடும்பத்தையே ஊரார் ஜாதிப் பிரஷ்டம் ஆக்கி, பகிஷ்காரம் பண்ணற நிலைக்குக் கொண்டு வந்துடுவேள் போலிருக்கு. உங்களுடைய பொய்ச் சமத்துவத்தைக் கொண்டு போய்க் குப்பையிலே போடுங்கோ. எங்க கதாயி மாமா, லோகத்திலே சர்வத்தையும் அம்பாளாப் பார்க்கிற மாமா எதிரே நாடகம் நடிக்காதேள். ஆமாம், சொல்லிட்டேன்! எங்க மாமாவுக்குப் பூணூல் போட்டபோது அவர் முதன்முதலிலே கருமார்குடும்பத்துத் தனியம்மாகிட்டத்தான் 'பவதி பிக்ஷாம் தேஹி'ன்னு பிட்சை வாங்கினார். அப்படிப்பட்டவருக்கு எதிரே வேஷம் போடாதேள். எங்களுக்கும் ஸ்ரீநிவாஸுக்கும் மன வித்தியாசத்தைக் கற்பிக்காதேள்,

எங்களுக்காக ஸ்ரீநிவாஸ் உயிரைக் கொடுப்பார். அவருக்காக நாங்க உயிரைக் கொடுப்போம். ஆனா, அவாவாளுக்குன்னு வெச்சிருக்கிற தர்மத்தை நாங்க மீறத் தயாரா இல்லே. இப்போ அநாவசியமா அவருக்கு அவமானத்தை உண்டாக்கிட்டேள். அவர் மனசுலே பேதம் வர மாதிரி......"

பணிவுருவான ஸ்ரீநிவாஸ சாங்காரி இடைமறித்தார்: "ஹ்ருதய்! அதுமட்டும் ஒரு நாளும் நடக்காது, அப்பனே! இந்தக் குடும்பத்துக்கிட்டே என் விசுவாசம் ஒரு நாளும் குறையாது. இந்த வீட்டுக்காரர்—உன் பெரிய மாமா ராமேசுவர் இருக்காரே, அவரைப் போல உபகாரி எங்களுக்கு யார் உண்டு? அவருக்கு ஆஸ்தி பாஸ்தி எதுவும் இல்லாட்டாலும் எங்களுக்கு ஒரு கஷ்டம்னா, தம் குடும்பத்துக்குக்கூட வெச்சுக்காமல் வாரிக் கொடுக்கிற பிரபு. அந்த நன்றி மறக்க மாட்டோம்" என்றார். பைரவியைப் பார்த்து, "ஏ அம்மா, நாங்கபாட்டுக்கு வஞ்சனையில்லாம வாஞ்சையோடு இருந்துகிட்டு இருந்தோம். நீங்க என்ன ரோதனை எல்லாம் பண்ணறீங்க?" என்று எரிந்து விழிந்தபடி எச்சிலைத் திரட்டி எடுக்கலானார்.

எச்சில் இலை நாடகத்தை பைரவி முடிப்பதாக இல்லை. ஸ்ரீநிவாஸருக்குக் குறுக்கே பாய்ந்தாள்.

ஹ்ருதயர் வெகு கண்டிப்புடன் சொன்னார்: "பைரவியம்மா, போனாப் போறதுன்னு பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம். இனிப் பொறுக்க முடியாது. நீங்க இப்போ லோக ரீதியை மீறி ஒரு காரியம் பண்ணி, அதுக்காக இந்தக் குடும்பம் பிரஷ்டமாக விட மாட்டேன்; உங்களை இப்பவே இந்த வீட்டை விட்டு பிரஷ்டம் பண்ணி வெளியே அனுப்பிச்சுடுவேன்......ஆமாம்!"

"வீட்டை விட்டா, என்னையா?" என்று வீறிட்டாள் பைரவி. பைரவிக்கோலம் பூண்டாள். "என்னை யாருன்னு நினைச்சேள்? நான் யோகேசுவரி. என்னை வெளியே அனுப்ப யாராலேயும் முடியாது. அப்படி நினைச்சா, அதோ அந்தப் பூஜை அறையிலே இருக்கிற சீதளா தேவிக்குப் பக்கத்திலே நானும் மனஸா தேவியாக மாறி உட்கார்ந்துண்டு சிறுவேனுக்கும்!" என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கூச்சலிட்டாள்.

மனஸா என்பது நாக தேவதை.

ஹ்ருதயர் கேலிச் சிரிப்புச் சிரித்தார்,

'' யோகேசுவரியம்மா, உங்களை ரொம்ப சரியா வர்ணிச்சுண்டுட்டேள், விஷப் பாம்புன்னு......''

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பைரவியால் அந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. அத்தனை கோபத்தையும் திரட்டி, ராமகிருஷ்ணரைப் பார்த்து, '' ஏய் இடிச்ச புளியா உட்கார்ந்திருக்கியே! நான் உன் குரு இல்லே? குரு நிந்தனை உனக்கு இத்தனை சந்தோஷமாயிருக்கா? உன்னோட நான் வருஷக்கணக்கிலே முட்டிண்டு போதிச்சதெல்லாம் இதுக்குத் தானா?...'' என்றாள்.

அவ்வளவு நேரமும் மௌனமாக இருந்த பகவான் ராமகிருஷ்ணர் வாய் திறந்தார்.

12. சாரதையும் எதிர்த்தாள் ; ராமகிருஷ்ணரும் சினந்தார் !

எந்த தேவி எல்லா உயிர்களுக்குள்ளும்
தாய்மையாகத் திகழ்கிருளோ, அந்த
தேவிக்கு வந்தனம், வந்தனம்,
மீண்டும் மீண்டும் வந்தனம். —தேவி மாகாத்மியம்

ஆலகால வெள்ளம் திடுமென வற்றியது. அமிருதப் பிரவாகம் குமுகுமுவெனப் பெருகத் தொடங்கியது. ராமகிருஷ்ணர் பைரவி பிராம்மணியிடம் தண்ணென்று பேசலானுர் :

''என் தேவி, குரு தேவீ! நீங்க பண்ணின போதனையாலே தாம்மா எனக்கு இப்ப பேசாம இருக்கிற ஞானம் வந்திருக்கு'' என்று விநயத்துடன் சொன்னுர் ராமகிருஷ்ணர். தொடர்ந்து, ''இந்த உலக மாயத்தை விட்டு உயர ஏறணும்னு ஆசைப்பட்டேன். அம்பாள் உங்களை எங்கிட்டே அனுப்பி வைச்சா. கீழே இருந்த என்னை ஒவ்வொரு மாடியா நீங்க கஷ்டப்பட்டு ஏத்தி உச்சிக்குக் கொண்டு போய்விட்டேள். உங்களாலேதான் எனக்கு மகா அநுபவங்கள் கிடைச்சுது. அந்த ஞான உச்சிலேருந்து கீழே இருக்கிற மாய தளங்களைப் பார்க்கறேன். அதென்ன அதிசயமம்மா? அப்படிப் பார்க்கச்சே என்ன தெரியறது தெரியுமோ? ஞான உச்சிக்கு எந்த மண்ணையும், செங்கல்லையும், காரையையும் சேர்த்துத் தரை பாவியிருக்கோ, கைப்பிடி போட்டிருக்கோ-சாட்சாத் அதே மண், செங்கல், காரையை எல்லாம் சேர்த்துத்தான் கீழ்த் தளங்களையும் கட்டி யிருக்குன்னு தெரியறது. மாயா லோகத்துலே யாரைப் பார்த்தாலும், எதைக் கேட்டாலும், எதை மோந்தாலும், – கீரை வேகிற ஓசையைக் கேட்டாலும், மண் வாசனையை மோந்தாலும், ஸ்ரீநிவாஸோட பணிவைப் பார்த்தாலும், உங்களோட கஷ்டத்தை நினைச்சாலும் – எங்க ஞானம்பாளோடே ஸ்வரூபத்தையேதான் பல தினுசுலே அநுபவிக்கிறதாக இருக்கு. நான் என்ன சொல்லக் கிடக்கு? அம்பாளே சொல்றதை எல்லாம் சொல்லட்டும்னு விட்டுட்டு இருக்கேன். அவளுக்குன்னு ஒரு பாஷை, ஒரு சொல் உண்டு. நாம் சத்தம் போடாம பேசாமல் இருந்தாத்தான் அந்த மௌன பாஷை நமக்குக் கேக்கறது. தேவீ, குரு மாதாவே, நீங்க என்னைப் பேசச் சொல்

றேளே ! நான் பேசி என்ன சாதிக்க முடியும்? நீங்களும் நம்ம அம்மா வைப் பேசச் சொல்லிக் கேளுங்களேன். ஆனு அவளோட ரகசியக் குரலைக் கேக்கணும்னு நாம மௌனமானுத்தான் முடியும்...''

பரமஹம்ஸமாகப் பரவெளியில் பறந்தார் அவர்.

பைரவியின் கண்கள் தாரை தாரையாக வருஷித்தன.

'இவன் அவதார புருஷன். இவனுக்கு நான் குரு என்பது பெயருக்குத்தான். ஸ்ரீராமன் வசிஷ்டரிடத்திலும், ஸ்ரீ கிருஷ்ணன் ஸாந்தீபனியிடத்திலும் உலக ரீதியைக் காட்டுவதற்கே குருகுல வாசம் செய்தது போல், இவன் என்னை நிமித்த மாத்திரம் குருவாகக் கொண்டான். என்னுல் ஏன் வசிஷ்டரைப் போலவும், ஸாந்தீபனி யைப்போலவும் ஞானநிலை சலியாது இருக்க முடியவில்லை ?'—பைரவி தன்னையே கேட்டுக்கொண்டாள்.

இந்த நூலில் பைரவியின் பூர்வப் பெருமைகளை நாம் பார்க்கவில்லை. உண்மையில் அவள் மிகப் பெரியவள். யோக சாஸ்திரத்தையும் தந்திர மந்திர சாஸ்திரங்களையும் ஏட்டளவில் கரைத்துக் குடித்தது மட்டுமின்றி, நடைமுறையில் அப்பியசித்து உன்னத நிலைகளை எய்தியவள்.

ஒரு காலத்தில் அவள் பக்தி புரிந்து கரைந்தவள்தான். ஆயினும் வித்யா கர்வத்தில் அகந்தை உண்டாகி, அகந்தையிலிருந்து ' இது என்னுடையது ' என்று அதிகாரமாக உரிமை காட்டும் போக்கும் பிராம்மணியிடம் வலுத்தது. ஆதியில் கர்வமற்ற பக்தி அவளுக்கு ராமகிருஷ்ணரின் அவதார விசேஷத்தைக் காட்டிக் கொடுத்தது. கர்வம் வந்த பின், சாரதையின் அவதார மகிமை அவளுக்குக் கிரகிக்க முடியாத ஒன்ருக ஆகிவிட்டது. ஏன், முன்பு அவள் உணர்ந்திருந்த ராமகிருஷ்ண மகிமையைக்கூட இறுமாப்பு என்ற இரும்புத் திரை அவளது பார்வையிலிருந்து மறைத்துவிட்டது.

சங்கிலித் தொடராக ஆணவம் படர்ந்து பல ரூபங்கள் கொண்டது. கடைசியில் ஸ்ரீநிவாஸ சாங்காரியின் இலையை எடுக்க முற்பட்டபோது ஆணவமே அதிவிநயமாக வேஷம் போட்டதுதான் அதிசயம் !

கீதாசாரியன் சொன்ன சங்கிலித் தொடரை அப்படியே மெய்ப் பித்தது பைரவியின் போக்கு. '' ஒன்றிடம் நெருக்கம் கொண்டால் அதனிடம் பற்று உண்டாகும். அப்புறம், அந்தப் பற்றுக்குப் பங்கம்

விளைவிப்பதாகத் தோன்றுவதிலெல்லாம் சினம் உண்டாகும். சினத்தின் விளைவு : மனம் மயங்கத் தொடங்குகிறது. மன மயக்கத்தின் விளைவாக எண்ணங்கள் கெடுகின்றன. இதன் விளைவு : எண்ணங்களைச் சீர்தூக்கி முடிவு செய்யவேண்டிய புத்தியே பாழாகத் தொடங்குகிறது. அதற்கப்புறம் ? மனிதன் நாசமாகவேண்டியதுதான்" என்றான் கண்ணன். அதே கண்ணன் இன்னொன்றும் சொன்னான் : ''என் பக்தன் ஒருகாலும் நாசம் அடைவதில்லை" என்றான்.

பைரவி பிராம்மணி நாசத்தின் ஒட்டு விளிம்பு வரை வந்து விட்டாள். அப்புறம் அதள பாதாளம்தான். ஆனால் அவள் பூர்வத்தில் பக்தி செய்தவளல்லவா? எனவே, அவள் நசித்துப் போகாதபடி அந்த மயிரிழையிலே ராமகிருஷ்ணர் வந்து நின்று அவளைக் காப்பாற்றினார்.

தன்னை நாகமாக வர்ணித்துக்கொண்ட யோகேசுவரி, இப்போது மந்திரத்தில் கட்டுண்ட சர்ப்பம் போல ராமகிருஷ்ணரின் வாக்கில் அப்படியே ஸ்தம்பித்து அமர்ந்தாள். சித்தத்தைப் பிசிரே இல்லாமல் ஒருமுகமாக்கி யோகங்கள் புரிந்த அந்த மகா வியக்தி இப்போது சிலையாக அமர்ந்தாள். அடுக்கடுக்காகப் பிரிகிற மலர் போல அவள் செய்த சகல காரியங்களும் அவளுக்குள் மடலவிழ்ந்தன. தான் செய்த தவறுகள் அனைத்தையும் மனமார உணர்ந்தாள். புனித ராமகிருஷ்ணருக்குத் தான் விதித்த கட்டுப்பாடுகள் எவ்வளவு மூடத்தனமானவை என்று உணர்ந்தாள். தான் எரிந்து விழுந்தபோதிலும் குளிரக் குளிரத் தனக்குப் பணிவிடை செய்த சாருவுக்குத் தான் செய்த பொல்லாங்குகள் அவளுடைய நெஞ்சைச் சுட்டன. ஞானிகளுக்கும், தாங்கள் ஞானி என்ற அகந்தை தோன்றுமிடத்து மகா மாயாதேவி அவர்களை மயக்கி மோகத்தில் ஆழ்த்தி விடுவாள் என்ற சண்டீ வாக்கியத்தை எண்ணி உளம் உருகினாள். மகா மாயை தன்னை மயக்கியதோடு நில்லாமல் மயக்கம் தீர்த்தும் வைத்தாளே என்று எல்லையில்லாத நன்றி கொண்டாள்.

> உள்ளத்திலே கர்வம் கொண்ட போதினில்
> ஓங்கி அடித்திடுவான்

என்பதை முதலில் இறைவன் நிரூபித்தான். பிறகு

> ஆபத்திலே வந்து பக்கத்திலே நின்று
> அதனை விலக்கிடுவான்

என்பதையும் செய்து காட்டி, பைரவியைக் காத்தருளினான்.

ஸ்ரீமத் பாகவதத்தில் 'யக்ஞ பத்தினிகள்' வரலாறு என்றோர் அற்புதப் பகுதி உண்டு. அந்தணாளர்கள் வேள்வி வேட்ட இடத்

தருகே கண்ணன் ஆயச் சிறுவருடன் மாடு மேய்த்தான். குழந்தைகளுக்குப் பசி கண்டது. கண்ணன் பணித்தவாறு அவர்கள், யக்ஞம் செய்த வேதியர்களின் பத்தினிகளிடம் சென்று உணவு யாசித்தனர். 'கோபாலனுக்குப் பசி' என்றவுடனே யக்ஞ பத்தினிகளுக்கு மற்ற நினைப்பு அனைத்தும் மறந்தேவிட்டது. யக்ஞத்தில் பணிவிடை செய்வதையும் மறந்து, வேள்விக்காகத் தயாரான உணவு வகைகளைத் தூக்கிக்கொண்டு கோவிந்தனிடம் ஓடினர். தெய்வானுக்கிரகம் பெறுவதற்காக வேள்வி வேட்ட வேதியர்களோ சாட்சாத் வேத நாயகனும் யக்ஞ நாராயணனுமான பரம புருஷனேதான் கோவிந்தனாக வந்திருக்கிறான் என்று உணரவில்லை. தங்கள் மனைவியரின் 'அடாத' செயலை நினைத்துக் கோபாவேசம் அடைந்தனர். பிறகு தான் அவர்களுக்குப் பகவான் அறிவுத் தெளிவு தந்தான்; ஆனாலும் தன் தரிசனத்தை அவர்களுக்குத் தந்தானில்லை.

ஏராளமான சாஸ்திரங்களை மேற்கோள் காட்டி ராமகிருஷ்ணரை அவதார புருஷரென ஊருக்கெல்லாம் பிரகடனம் செய்த பைரவி அவரை அவமதித்த சமயத்தில், ஏதும் படிக்காத சாரதை அன்பு ஒன்றினால் மாத்திரமே அவரை தெய்வமாகக் கண்டிருந்தாள் அல்லவா? பைரவி தன் கலக்கம் தெளிந்தபின் இதைப்பற்றி என்ன சொல்லியிருப்பாளோ, அதைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாகவத காலத்தில் அறிவுத் தெளிவு பெற்ற அந்தணர்கள் பச்சாத் தாபத்துடன் படம் பிடித்துக் காட்டிப் பேசினர்: "இவர்கள் சாமானிய பெண்டுகள். இவர்கள் நம்மைப் போல் குருகுலவாசம் செய்யவில்லை. தவம் செய்யவில்லை. ஆத்ம தத்துவங்களை ஆராயவில்லை. பெரிய சடங்குகளைப் புரியவில்லை. ஆனாலும் உத்தம சுலோகனும் யோகீசுவரர்களின் ஈசுவரனுமான கிருஷ்ணனிடம் இவர்களுக்கு ஏற்பட்ட திடபக்தி நமக்கு உண்டாகவில்லையே! நாம் மற்றவர்களுக்குக் குருவாக இருந்தபோதிலும், உபதேசத்தினால் நமக்கே பயன் பெறத் தவறினோம். பகவானுடைய மாயை யோகிகளையும் மயக்குகிறது என்பது எவ்வளவு உண்மை!"

பகவானை அறிய முடியாதபடி தங்களுக்கு அகந்தை உண்டானதும் அதே பகவானின் மாயைதான் என்கின்றனர்! ஏறக்குறைய இதே வார்த்தைகளைத்தான் தேவீ மாகாத்மியமும் கூறுகிறது: 'யோகிகளின் சித்தத்தையும் தேவி பகவதி வலுவில் இழுத்து மோகத்தில் ஆழ்த்துவாள்' என்கிறது அது.

எதற்காக இப்படிச் செய்ய வேண்டும்? கடவுள் ஞானம் அளிப்பதுதான் பொருத்தமே தவிர, ஞானத்தில் முன்னேறியவர்களை மோகத்தில் ஆழ்த்தி மோசம் செய்யலாமோ எனத் தோன்றும்.

உலகுக்குப் பாடம் புகட்டவே பராசக்தி இப்படிச் செய்கிருள். தாங்கள் சாதாரண உலக மக்களைப் போல் இக வாழ்வில் ஈடுபடாமல் ஆத்மிகத்தில் இறங்கியிருக்கிறேம் என்ற எண்ணமே சாதகர்களுக்கு ஒருவிதச் செருக்கை ஏற்படுத்தக் கூடும். அவர்களின் இந்தச் செருக்கைக் களைந்து, பரிபூரண எளிமையுடன் பகவானிடம் சரணுகதி செய்விக்கவே, அவன் அவ்வப்போது யோகிகளை, ஞானிகளைக்கூட இடறி விழச் செய்கிருன். ஆனுல் அவர்களை அடியோடு மோசம் போகவிடாமல், பிற்பாடு நிச்சயமாகக் கைதூக்கி விடுகிருன். பைரவியைத்தான் எப்படிக் கைதூக்கி விட்டான்! 'யோகேசுவர ஈசுவரன்' என்று பாகவதத்து அந்தணுளர்கள் சொன்னபடி யோகீசுவரியான பைரவிக்கும் ஈசுவரனுகிக் காத்தான்.

எச்சில் இலையைச் சாங்காரியே எடுத்துப் போட்டுச் சுத்தம் செய்தார். பைரவியின் உள்ளிருந்தும் எச்சில் இலை எடுத்தெறியப் பட்டுச் சுத்தமாயிற்று.

பைரவி பிராம்மணி ஆழ்ந்த பக்தியுடனும், பணிவுடனும் அற்புதமான மாலை ஒன்றினைத் தொடுத்தாள். அதன் நறுமணமும் அவளுக்குப் போதவில்லை. சந்தனக் குழம்பை அதன்மீது தெளித்தாள். அவள் உள்ளமும் சந்தனமாகியிருந்தது!

அந்த அழகிய மலர் மாலையை ராமகிருஷ்ணருக்குச் சூட்டினுள். அவரது கமல பாதங்களில் இரு கமல மலர்களை வைத்தாள். முன்பு சிஷ்யரா யிருந்த அவர் இப்போது பகவானுகவே இருந்து அதை ஏற்றுக்கொண்டார்.

"அப்பனே! என்னை மன்னித்துவிடு" என்று அகம் குழைந்து வேண்டிக்கொண்டாள், தனது கமலக் கண்களிலிருந்து தேன் துளி களைப் பொழிந்தவாறு.

"அம்மா, யாரை யார் மன்னிக்கிறது? இதெல்லாம் அம்மா வோட லீலைதானே! உங்களை இப்படி ஆட்டம் போட வெச்சு, அதிலேருந்து சாருவுக்கு விநயத்தை ஆணி அடிச்சாப்பலே போதிச் சிருப்பா. நீங்க என் குரு... அதுக்கு மேலே, எங்கிட்ட உள்ளன்பு வெச்சவா; பெற்ற தாய்க்கு மேலே. 'மன்னிப்பு'ங்கற வார்த்தை யைச் சொல்லப்படுமோ?" என்றூர்.

"மன்னிப்புக் கேட்க வேண்டியது என் தர்மம் இல்லையா? உன்னை மட்டுமில்லை, அந்த இளம் நுங்கு இருக்கே—சாரு, சாருன்னு பேர் வெச்சுண்டு! அந்தப் பரிசுத்த பிரேமாத்மாவின் காலிலே

விழுந்து கதறி மன்னிப்புக் கேக்கணும். ஆனல், நான் மன்னிப்புக் கேட்டா, அந்தப் பெண் பிராணனேயே விட்டுடும். அந்தக் குழந்தை யோட அன்பும், எளிமையும் அப்படிப்பட்டது. அவள் காலிலே வைக்கிறதா நினேச்சுத்தான் இந்த இரண்டு தாமரைப் பூவை உன் பாதத்திலே வெச்சேன்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினள் பைரவி.

''பைரவி தேவீ! இப்படியெல்லாம் பேசாதேள். சாரு உங்க மாட்டுப் பெண். அவகிட்ட என்ன மன்னிப்பு வேண்டிக்கிடக்கு? உரிமையோட, ஸ்வாதீனப் பிரியத்தோடே அவளேக் கூப்பிடுங்கோ! 'உன் அகமுடையானுக்குப் புஷ்ப ஹாரம் போட்டிருக்கேன்; அப்படியே கிருஷ்ண சைதன்யர் மாதிரி இருக்கான் வந்து பாரு'ன்னு அழைச்சுண்டு வாங்கோ!'' என்ருர் ராமகிருஷ்ணர் ஓரளவு பாவ சமாதியிலே.

எவ்வளவோ முறை அதிகாரத்தில் ஓங்கி எழுந்து அவ்வீட்டை நிரப்பியிருக்கும் பைரவியின் குரல் இப்போது முதல் முறையாகவும், கடைசி முறையாகவும் அன்பிலே ஓங்கி ஒலித்தது. ''அம்மா, சாரதே! செல்ல மாட்டுப் பொண்ணே! இங்கே ஓடி வா! உன் அகமுடையான் கிருஷ்ண சைதன்யமா ஜொலிக்கிருன், வந்து பாரு'' என்று ஆரவாரமிட்டாள்.

இலே மறைவு காய் மறைவாகவே புருஷனேப் பார்த்துள்ள சாரு, இப்போது ஒரு பெரிய மனுஷியின் முன்னல் நேருக்கு நேராகக் கணவரைப் பார்க்க லஜ்ஜை கொண்டாள்.

ஆனல் பைரவி விடவில்லே. அந்தக் கோமளக் கொடியை அள்ளிப் பிடித்துக்கொண்டு வந்து, அன்பு விருட்சத்தின் எதிரே நிறுத்தினள்.

ராமகிருஷ்ணரின் நயனங்கள் சமாதி நிலேயில் செருகிக்கொண் டிருந்தன. தேகத்திலிருந்து கருணேக் கிரணங்கள் பிரவகித்துக் கொண்டிருந்தன.

அந்த உன்னதம் ஒரு புறம், பைரவியின் புதிய அன்பு எழுச்சி ஒரு புறம், அதன் பிரதியாகத் தன்னிடமே உதித்த நிறைவின் அழுத்தம் ஒரு புறம், இயல்பான நாணம் ஒரு புறம் என்று நான்கு திசைகளிலும் நான்கு சக்திகள் சாரதையை மொத்தி மோதின.

''அகத்துக்காரர் எப்படி இருக்கிருர்?'' என்று பட்டாபி ராமனேக் காட்டி, சீதா தேவியிடம் கௌசல்யை எப்படிக் கேட்டிருப் பாளோ அப்படிக் கேட்டாள் பிராம்மணி.

சாரதை திக்கு முக்காடினள். ''நன்ஞ'' என்ற ஒரே வார்த்தையைச் சொன்னள். ஒரு விநாடிதான் அங்கு நின்ருள். உள்ளே ஓடி மறைந்தாள்.

பைரவியும் வெளியேறினள். அதோடு சாரதையின் சரித்திரத்திலிருந்தே வெளியேறி மறைந்தாள்.

மறைந்துதான் விட்டாளா? அவளது ஆணவமும், அதை வென்ற அன்பும், அவள் செய்த சிறுமைகளும், அந்தச் சிறுமைகளை உணர்ந்த அவளது பெருமையும் சாரதாவின் சரித்திரத்தில் மறையாத சுவடுகளைப் பதித்துவிட்டனவே! மாறுபட்ட குணங்களைக் கொண்ட பாத்திரங்களை அருகருகே காட்டி வருணிப்பதில் (**Study in contrast**) கதாசிரியர்கள் மகிழுவர். தேவி பராசக்தி இப்படிப்பட்ட சுவையான கதையை, பிராம்மணி, சாரதை இவர்களைச் சேர்த்துக் காட்டிப் புனைந்திருக்கிருள்!

"இதென்ன மாமா தாமரைப் பூ! உங்களுக்கு மாலை போட்டதோடு நில்லாமல் பைரவி அர்ச்சனை வேறு பண்ணிருளா?" என்று கேட்டார் ஹ்ருதயர். பைரவி போனதிலே அவருக்கு உள்ளூறப் பரம திருப்தி. தான் விரட்டி அவள் போகாமல், தானகவே பக்குவமாக வெளியேறி நல்ல பெயர் வாங்கிக்கொண்டதில் சிறிது வருத்தமுங்கூட.

ராமகிருஷ்ணர் அதற்கு ஒன்றும் பதில் சொல்லாமல், ''ஹ்ருதே! ஏழு வருஷத்துக்கு முன்னடி நாம் ஜயராம்பாடி போனேமே, அப்போ வழியிலே நீ தாமரைப் பூப் பறிச்சுண்டு வந்தியே, அதை என்ன பண்ணினே!'' என்ருர்.

அதுகாறும் சொல்லாதிருந்த இரகசியத்தை ஹ்ருதயர் அவிழ்த்தார்: ''சின்ன மாமியோட பாதத்திலே வெச்சு நமஸ்காரம் பண்ணினேன்.''

ராமகிருஷ்ணர் மந்தஹாச முகத்தவராக யோசனையில் ஆழ்ந்தாற்போலிருந்தார். ''ஒகோ, அவளை நமஸ்காரம் பண்ணனும்னு நீ ஆசைப்பட்டே! அதைப் புரிஞ்சுண்டுதான் நான் உன்னை அவளுக்கு நமஸ்காரம் பண்ணச் சொன்னேன். உடனே அவ நடுங்கிண்டு உள்ளே ஓடின. நீ துரத்திண்டே போனியே, அப்போ தாமரைப் பூவாலே அவளுக்கு அர்ச்சனை பண்ணினயாக்கும்!'' என்ருர்.

ஹ்ருதயர் வெட்கத்தில் குனிந்த தலையுடன் 'ஆமாம்' போட்டார்.

சாரதையிடம் பைரவி இறுதியாக விடைபெறும்போது இருதய கமலத்தையே அர்ப்பணித்துப் போனுள். ஹ்ருதயரோ தொடக்கத்திலேயே கமலத்தைச் சாதாரணப் பூவாக நினைத்து அர்ப்பணித்தார். இவர் இனி என்னென்ன செய்யப் போகிருரோ?

'சின்ன மாமி' பாடம் படிப்பது ஹ்ருதயருக்குப் பிடிக்கவில்லை. பைரவி இருந்த வரையில் பேசாதிருந்த ஹ்ருதயர் இப்போது மாமியிடம் தமக்குள்ள பொருமை வெளிப்படாமலே நாசூக்காகப் பல முறை ஆட்சேபக் குரல் எழுப்பினர். ராமகிருஷ்ணர் சிரித்துச் சிரித்து மழுப்பினர்.

ஒரு நாள் மாமாவும் மருமானும் போஜனம் செய்துகொண்டிருந்தனர். ராமகிருஷ்ணர் சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டே உண்டார். மதனியின் சமையல் திறனுக்குச் சபாஷ் கொடுத்துக் கொண்டும், மனைவியின் சமையலைக் கேலி செய்துகொண்டும் உண்டார். மதனி பக்குவம் செய்திருந்த உணவு வகைகளை உண்ணும் போது, ''ஆங்! இது வைத்ய ராமதாஸ் சரக்கு'' என்பார். சாரதை தயாரித்த வியஞ்சனங்களை உண்கையில், ''இது ஸ்ரீநாத் ஸேன் சரக்கு'' என்பார்.

ராமதாஸ் என்பவர் மருத்துவத்துறை நிபுணர். ஸ்ரீநாத் ஸேன் ஒரு கற்றுக்குட்டி வைத்தியர்.

உடனே ஹ்ருதயர் மாமியிடம் தம் பரிவைக் காட்டுமுகமாக, ''அது சரி, ஆனுல் ஸ்ரீநாத் ஸேன் நாம் கூப்பிட்ட குரலுக்கெல்லாம் கிடைப்பார். சின்னச் சுளுக்கை வழிச்சுவிடக் கூட அவர் காத்திண்டிருக்கார்; வைத்ய ராமதாஸை நம்மாலே சமாளிக்க முடியுமா? உங்க சுசுருஷைக்கு இந்தக் கத்துக்குட்டி எப்பவும் சித்தமாயிருக்கே'' என்ருர்.

''ஆமாம், ஆமாம், இவ எப்பவுமே கூட இருக்கா'' என்று அழுத்தம் திருத்தமாக, சுவைத்துச் சொன்னுர் ராமகிருஷ்ணர் — மதனியின் சமையலை விடவும் சுவைத்துக்கொண்டு!

ஹ்ருதயர் ஏதோ ஓர் இனிப்பைத்தான் உண்டார்; இருப்பினும் அவர் முகம் கசந்து வழிந்தது.

ராமகிருஷ்ணர் வீட்டில் இல்லாதபோது தம் 'சொரூப'த்தைச் சிறிது காட்டலானுர் ஹ்ருதயர்.

''எழுத்தறிவு இருந்தாத்தான் ராமாயணம், தேவீ மாகாத்மியம் படிக்கலாம்னு மாமா சொல்ருர். ஆனு, இந்த நாளிலே

கன்னுபின்னுன்னு நாவல் நாடகம்னுட்டு எழுத ஆரம்பிச்சிருக்கா! அதையெல்லாமும் படிக்க ஆரம்பிச்சுடுவேள். போறும் இந்தப் படிப்பு! நான் மாமாகிட்டச் சொல்லி ஜயிக்க முடியல்லே. நீங்களே தான் சொல்லணும்" என்றார் சாரதையிடம்.

'நான் படிப்பை எப்படிப் பயன் செய்துகொள்ளப் போகிறேன் என்பதை அவர் அறிவதுபோல், ஹ்ருதயர் அறிய முடியுமா? இவர் வார்த்தையை எப்படிக் கேட்பது?' என்று கலங்கினாள் சாரதா.

குழந்தை லக்ஷ்மியோ ஹ்ருதயரிடம், "நீ சும்மா இரேன். சித்தப்பா வர்றத்துக்குள்ளே நானும் சித்தியும் இந்தப் பாடத்தைப் படிச்சுடணும்னு இருக்கோம். நீ இடைஞ்சல் பண்ணுமே இரு" என்று அடித்துக் கூறினாள்.

'சின்னூரண்டு மாமி'யின் எதிரில் அந்த முந்திரிக் கொட்டை தன்னைத் தாக்கியதில் ஹ்ருதயர் தம் வசம் இழந்துவிட்டார். உள்ளத்தில் பம்மியிருந்த பொறுமை விம்மி வெளி வந்தது.

மரியாதை முறைகளை அடியோடு மறந்து சாரதையிடமிருந்த புத்தகத்தைப் பிடுங்கி எறிந்தார்.

லக்ஷ்மியின் புத்தகத்தையும் பிடுங்கப் போனார். "எங்கிட்டே வந்தியோ, தெரியும் சேதி!" என்று லக்ஷ்மி கூச்சலிட்டாள்.

ஆனனப்பட்ட பைரவியையே ஆட்டி வைத்த ஹ்ருதயரும் அஞ்சி நிற்க வேண்டியதாயிற்று.

ராமகிருஷ்ணர் வந்தார்.

அவரிடம் சாரதை எதுவும் சொல்லவில்லை. மன்னிப்பும், பொறையும், புறங்கூறாமையும் சாரதைக்கு எலும்பையும் சதையையும் விட நெருங்கிய இயற்கை அங்கங்கள்!

ஆனால் மறுநாளிலிருந்து பண்டாரி பாடம் சொல்லிக் கொடுக்க வரவில்லை. வீட்டில் நிம்மதியாகப் படிக்க முடியாது என்பதால் லக்ஷ்மி பள்ளிக்குப் போகத் தொடங்கினாள்.

பள்ளியிலிருந்து திரும்பி வந்து, அன்றன்று நடந்த பாடத்தைச் சித்திக்குச் சொல்லிக் கொடுப்பாள்.

பண்டாரியை நிறுத்த முடிந்தது, ஹ்ருதயரால். ராமகிருஷ்ணர் பாடம் போதிப்பதை யாரே நிறுத்த முடியும் ?

ஆனால் இரண்டு கட்டங்களில் ராமகிருஷ்ணரே பாடத்தை நிறுத்திவிட்டு, மலைத்து நிற்குமாறு செய்தாள் எளிய சாரதாமணி !

சாரதை நெல் குத்திப் புடைத்துக்கொண்டும் சலித்துக் கொண்டும் இருந்தாள். பாலகிருஷ்ணன் குளம்புப் புழுதியில் திளைத்துத் தனியழகு கொண்டிருந்ததுபோல், உமியும் தவிடும் அபிஷேகித்த சாரதையும் பொலிந்தாள்.

ராமகிருஷ்ணர் வந்தார். ''இந்தச் சல்லடை நல்லதை யெல்லாம் கீழே விட்டுட்டு, கல்லையும் கட்டியையும் பிடிச்சு வெச்சுக்கிறது. முறம், கல்லைத் தூக்கி எறிஞ்சுட்டு நல்லதைமட்டும் தன்கிட்ட வெச்சுக்கிறது. சிலபேர் சத்சங்கத்தை உதறிவிட்டுச் சல்லடையா யிருப்பா. சில பேர் அசத்சங்கத்தை உதறிவிட்டு முறமாயிருப்பா. நீ முறமாயிருக்கணும்" என்றார்.

சாரதை அவரை ஒரு கணம் நேருக்கு நேராகப் பார்த்தாள். அதிலே ஓர் எதிர்ப்பு, ஓர் உறுதி—அதே சமயத்தில் மன்னிப்புக் கோரும் பாவனை, ஆயினும் எதிர்ப்பை விட மாட்டேன் என்கிற சங்கற்பம் அனைத்தும் மிளிர்ந்தன.

அடுத்த கணம் கண்ணைத் தாழ்த்திக்கொண்டாள்.

''என்ன அப்படிப் பார்த்தே! நான் சொல்றது உனக்கு ஏற்க வில்லை போலேயிருக்கு! அதற்காகப் பரிதாபமாக மன்னிப்பும் கேட் கிறே. ஆனாலும் 'நான் இப்படித்தான் இருப்பேன்'னும் சொல்றாப் பலே இருக்கு. என்ன சமாசாரம், ஊம்!" என்றார் ராமகிருஷ்ணர்.

சாரதை தட்டுத் தடுமாறிப் பதில் சொன்னாள்: "என்னாலே... என்னாலே... நல்லவா, கெட்டவான்னு... பிரிச்சு வெக்க... பிரிச்சு வெக்க... ஆமாம்...பிரிச்சு வைக்க முடியாது... ஆமான்னா... என்னாலே முடியல்லே...குழந்தை அழுக்கிலே...... விழுந்திடுத்துன்னா...... போய் அதைத் தூக்காம...தூக்காம...?"

சாரதை அழுதுவிடுவாள் போல் கழுத்துத் தசைநார்கள் கனத் தன. பேச்சு பொங்கிப் பொங்கி வந்தது.

ராமகிருஷ்ணர் மலைக்காமல், பிரமிக்காமல் என்ன செய்ய முடியும் ?

தான் ராமகிருஷ்ணரிடம் கற்றதையெல்லாம் தேவி பிற்காலத் தில் பெரிதுபடுத்தி வர்ணித்ததில்லை. ஆனால் ஆயுள் முழுவதும் தான் கற்காத ஒரு பாடத்தை இறுமாப்பே இல்லாமல் சொல்வாள் :

"குழந்தை நாளிலிருந்து நான் யார்கிட்டேயும் இருக்கிற குற்றத்தைப் பொருட்படுத்தினதே இல்லே. என் ஜன்மாயுசில் நான் கத்துக்காத பாடம் அதுதான்" என்பாள்.

பிறர் தவறு அவளுக்குத் தெரியாமலில்லே. திருத்த முடிந்தவர்களைத் திருத்தினுள். பரம இதமாகத் தவற்றை உணர்த்தித் திருத்தினுள். ஆனுல் ஒருவர் தவறு செய்கிறுர் என்பதால் அவரிடம் அவளது அன்பில் குறைவு ஏற்பட்டதே யில்லே. அப்படிப்பட்டவரைப் புடைத்துத் தள்ளும் முறமாக அவள் இருந்ததே இல்லே!

ராமகிருஷ்ணர் தம்மாலும் அவளுக்கு ஒரு பாடம் போதிக்க முடியவில்லே என்பதில் பூரித்தார்.

அவரால் இன்னெரு பாடமும் போதிக்க முடியாமல் போயிற்று:

லாஹா வீட்டு வேலேக்காரி ஏதோ காரியமாக ராமகிருஷ்ணரின் இல்லத்துக்கு வந்து போனுள். அவள் இடுப்பில் லாஹா வீட்டுக் குழந்தை ஒன்று: அவள் கையைப் பிடித்துக்கொண்டும் அதே வீட்டுக் குழந்தை இன்னென்று. 'ராசா, ராசா' என்று அந்தக் குழந்தைகளே அவள் அருமையாகச் சீராட்டினுள்.

ராமகிருஷ்ணர் சாரதையிடம் சொன்னுர்: "இந்தக் குழந்தைகள் கிட்ட அந்த வேலேக்காரி எவ்வளவு ஒட்டுதலாயிருக்கா? அதுகளுக்காக எத்தனேயோ வேலே செய்யறு. இருந்தாலும் உள்ளுக்குள்ளே 'இதுகள் என் குழந்தைகள் இல்லே; நான் தாதிதான்'னு அவளுக்கு நன்னுத் தெரியுமோ இல்லியோ? நாமும் இந்த லோகத்திலே அப்படித்தான் இருக்கணும். 'என்னமோ இந்த மனுஷாளுக்கு மத்தியிலே வேலே செய்யறேம். இருந்தாலும் இவா நம்முடையவாள் இல்லே. அம்பாள் ஒருத்திதான் நம்மவள்'னு நினேச்சுண்டு இருக்கணும்...என்ன அப்படிப் புதிராப் பார்க்கறே... சரி, சரி. அன்னிக்கு மாதிரி இதுவும் உனக்கு ஏற்கவில்லே...ம்...அப்படித்தானே?"

"இவா என்னுடையவா இல்லேன்னு யாரை எப்படித் தள்ளறது? தாதியும் யஜமான் வீட்டுக் குழந்தையும் மாதிரியா?...இல்லே... இல்லவே இல்லே... சொந்த அம்மா, சொந்தக் குழந்தைதான்" என்று குழறினுள் சாரதை.

'அம்மா, குழந்தை' என்றவுடன் அவள் உள்ளம் குழைந்து விட்டது. உள்ளே குமைந்த குழந்தை ஆசை குமுறிக்கொண்டு கண்ணீராக வந்தது.

"என்னம்மா இப்படி அசடாட்டமா அழறே?" என்று ராமகிருஷ்ணர் பதறிக் கேட்டார். "அம்மாவாவது, குழந்தையாவது? அம்பாள் ஒருத்திதான் அம்மா. நாமெல்லாம் குழந்தை. நீ ஏன்

வேறே ஏதோ அம்மா–குழந்தையைப்பற்றி நினைக்கிறே. ஊஹூம்! உனக்கு இந்த எண்ணம் வரவே படாது. கொஞ்சம் கொஞ்சமா அது உன்னை இழுத்துண்டு போகும். நீ என்னை இழுக்கப் பார்ப்பே! ஊஹூம், ஊஹூம்!" தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டார் ராமகிருஷ்ணர். "உனக்கு அம்மாவாகணும்னு ஆசையிருந்தா உங்காத்திலே நடந்த துக்க சம்பவத்தையெல்லாம் உடனுக்குடனே நெனைச்சுக்கோ. நீ கொஞ்சி விளையாடின குழந்தைகள் சவமாகி உன்னைப் பயமுறுத்தினதை நெனைச்சுக்கோ" என்றார்.

இருவரது இதய ஆழம் வரையில் இந்தச் சம்பவம் பாய்ந்து விட்டது.

மறுநாள் காலை.

சாரதை வாசலில் சாணம் தெளித்து இழைகோலம் போட்டுக் கொண்டிருந்தாள். உள்ளத்திலே ஓர் அலங்கோலம் இழையிட்ட படியே இருந்தது.

ராமகிருஷ்ணர் ஆலங்குச்சியால் பல் விளக்கியபடி, "அங்கே என்ன மேளச் சத்தம்? ஓகோ, ஆண்டு நிறைவா? ஆமாம், இப்படித் தான் எத்தனையோ வீட்டில் புண்யாகவாசனம், தொட்டில், ஆண்டு நிறைவுன்னு அமர்க்களப்படறது. அப்புறம் ஒரு நாள் எல்லாரும் மௌனமாகத் தூளி கட்டி அதே குழந்தையைத் தூக்கிண்டு போறா..." என்றார்.

அடக்கத்தின் உருவான சாரதை, பணிவின் பெட்டகமான சாரதை, பொறுமையின் பூஷணமான சாரதை வாய்விட்டுக் கொட்டினாள்: "உலகத்திலே பிறக்கிற அத்தனை குழந்தைகளும் இப்படித்தான் செத்துப் போயிடறதா? அப்படி இருந்தா இந்த உலகம்னே ஒண்ணு இருக்க முடியாதே!"

"ஹா!" என்றார் ராமகிருஷ்ணர். அவர் ஒரேயடியாக அதிர்ந்து விட்டார். "விஷப் பாம்பின் வாலை மிதிச்ச உடனே அது சீறிண்டு வர மாதிரின்னா பேசறா! இவ ஒண்ணுமே தெரியாதவள்னு நினைச் சேனே, எத்தனை தப்பு! ரொம்பத் தெரிஞ்சவளாயிட்டா! 'மகாப் பிராக்ஞி'யாயிட்டா! 'எல்லாக் குழந்தைகளுமா செத்துப் போறது?'– கேட்டாளே ஒரு கேள்வி, போட்டாளே ஒரு போடு!"

ராவண வதத்துக்குப் பின் ஜானகியை இம்மியும் புரிந்து கொள்ளாததுபோல் ராகவன் கொடுமை பேசிய ரீதியில் ராம கிருஷ்ணர் பேசுகிறார்!

சாரதையால் தாங்க முடியவில்லை. கோலத்தை அரைகுறை யாக விட்டு உள்ளே ஓடினாள்!

13. கிருகலக்ஷ்மி

இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்? உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை? —திருக்குறள்

இளஞ் செடிகளில் 'சூதுக்காய்' என்று ஒன்று காய்ப்பதுண்டு. காய்த்து வருவதுபோல் இருக்கும். ஆனால் கருகி விழுந்து விடும். செடி வலுப்பெற்று முற்றிய பிறகுதான் காய் அதற்குரிய திட்பத்துடன் அமைந்து நிற்கும். இளம் சாரதையின் 'பிள்ளை ஆசை' சிறிய செடியின் சூதுக்காய் போல் பருவத்துக்கு முன்பே தோன்றிப் பயனின்றி உதிர்ந்துவிடக் கூடாது என்று ராமகிருஷ்ணர் விரும்பினார். அந்த ஆசையை நன்கு புரிந்துகொண்டு போஷிக்கிற திறன் அவளுக்கு உண்டாகும்போதே அதற்கு அவள் இடம் தர வேண்டும் என்று கருதினார். நிச்சயமாக அவள் தாய்மரமாக விளங்கத்தான் போகிறாள்; தாயன்பின் பசுமையைக் கொத்துக் கொத்தான இலைகளாகக் கிளைக்கத்தான் போகிறாள்; தாய்மைத் தியாகத்தைப் பழங்களாகக் குலுங்கவிடத்தான் போகிறாள். அவள் உலகத்துக்கு வந்திருப்பதே இதற்காகத்தான்! ஆனால் இப்போதே அவள் அவசரப்படுவதை அவர் விரும்பவில்லை. மலர் உண்டாகும் முன்பே தேன் துளித்தால் அதைச் செடியானது, எதில், எப்படித் தேக்கி வைத்துக்கொள்வது? தாய்மைத் தேனைத் தாங்குவதற்கு ஒரு விவேக மலர் வேண்டும். அந்த விவேகம் சாரதையிடம் பிறக்க வில்லை. அதனால்தான் தாய் – குழந்தை என்பதை ஒரு சரீரத்தில் உண்டாகிற இன்னொரு சரீர விஷயமாக எண்ணுகிறாள். சரீர 'இன்ப'த்தை அதியற்புதமாகத் துடைத்தெறிந்த பின்பும் சரீர ரீதி யான தாயை, சரீர ரீதியான குழந்தையை எண்ணித் தவிக்கிறாள்! இது அபத்தம் அன்றோ? இதனால்தான் ராமகிருஷ்ணர் சாரதையை நிர்த்தாட்சிண்யமாக நடத்திவிட்டார். ராவண வதத்துக்குப் பின், 'உனக்கு இஷ்டப்பட்ட இடத்தில் நீ போய் வசிக்கலாம்' என்று ஜானகியிடம் கூறிய ராமசந்திரன் உண்மையில் அவளைப் புரிந்து கொள்ளாமற் போகவில்லை. அப்படிச் சொன்னதன்மூலமே, அவள் தனது தூய்மையை உலகுக்கெல்லாம் எடுத்துக்காட்டுமாறு செய் தான். ராமகிருஷ்ணரும் சாரதையைப் புரிந்துகொள்ளாமற் போக வில்லை. இப்போது உள்ள சாரதையை மட்டுமின்றி, இனி எதிர் காலத்தில் உருவாகப் போகிற சாரதையைக்கூட அவர் நூறு சத விகிதமும் புரிந்துகொண்டதால்தான் கடுமையாக நடந்துகொண்

டார். சரீரப் பிரக்ஞையின்றியே அன்பு மயமான இல்லறம் நடத்துவதுபோல, சரீர பிரக்ஞை நசித்த தாய்மையை அவள் உரிய பருவத்தில் ஏற்க வேண்டும் என்று கருதி, அவளது பிள்ளை ஆசையைக் கிள்ளி எறிய முனைந்தார். 'எல்லோரையும் உன் குழந்தைகளாகப் பார். உன் குழந்தை என்று வயிற்றில் பெற்றெடுக்க வேண்டியதே இல்லை' என்று அவளுக்கு உபதேசிப்பதற்கு இது சமயமல்ல. இப்போதே அவள் வெளிப்படையாக அனைவரிடமும் தாய்மை கொண்டாட ஆரம்பத்தால் அந்தப் பதினைந்து வயதுப் பெண்ணின் அடக்கமும் பணிவும் பறி போய்விடும். அவர் சொல்லாமல் அவளே 'அனைவரும் என் குழந்தைகள்' என்று உணரத்தான் போகிறுள். அந்த பாவத்துக்கு ஒரு கம்பீரமான வயது, அந்தஸ்து எல்லாம் வேண்டும். அம்மா என்ற பாவம் வந்தபின் கம்பீரம், வயது, அந்தஸ்து எல்லாமே மறைந்து அன்பு ஒன்றுதான் சுயம்பிரகாசமாக நிற்கும். ஆனாலும் கோபுரம் கட்டி முடிந்தபின் சாரத்தை எடுத்துவிட்டாலும், கோபுரத்தை எழுப்பச் சாரம் கட்டிக்கொள்ளத்தானே வேண்டும்?

சாரதை புறக்கடையில் சோக மயமாக அமர்ந்திருந்தாள். கணவரிடம் தான் நடந்துகொண்டது தவரு? கணவர் தன்னிடம் நடந்துகொண்டது தவரு? ஏன் 'அம்மா – ஆசை'யை இப்படிக் கிள்ளுகிறுர்?

காலடிச் சத்தம் கேட்டது.

எழுந்து நின்று, முக்காட்டை இழுத்து விட்டுக்கொண்டாள்.

ராமகிருஷ்ணர் பேசினுர், கனிய: ''அம்மா, உனக்கு எத்தனையோ பாடம் சொல்லிக் கொடுத்தேன். இப்போதைக்கு இரண்டைமட்டும் கெட்டியாகப் பிடிச்சுக்கோ — வைராக்கியம், பக்தி இந்த இரண்டைத்தான்.''

தன்னையும் அறியாமல், ''அப்படியே, ஸ்வாமீ'' என்றுள் சாரதை. அவள் குரல் கம்மியது.

காலடிச் சத்தம் விலகிச் சென்றது.

''என்னைவிட எல்லாவிதத்திலும் அவர் மகா பெரியவர். அவர் சொல்வதைக் கேட்பதுதவிர நான் என்ன செய்யக் கிடக்கிறது? இப்போது அவர் சொன்னதற்கு என்ன அர்த்தம்? பக்தி என்பது பகவானிடம் அன்பு; அதைச் செய்யச் சொன்னுர். வைராக்கியம் என்பது மனிதர்களிடம் பாசம் இல்லாமலிருப்பது. குழந்தை, குழந்தை என்று ஏங்குகிற எனக்கு வைராக்கியம் அப்பியசிப்பது

கஷ்டந்தான். ஆனாலும், 'பகவானிடம் பக்தி, மனிதர்களிடம் பிரேமை இவற்றையே வளர்க்க வேண்டும்' என்று வழக்கமாகச் சொல்கிற அவரே இன்று, 'பகவானிடம்' பக்தி, மனிதர்களிடத்தில் வைராக்கியம்' என்று சொல்கிறார் என்றால், அதற்குக் காரணம் இல்லாதிருக்குமா ? காரணம் உண்டோ இல்லையோ, அவர் கிழித்த கோட்டை நான் ஏன் மீற வேண்டும் ? "

தான் பெறாத குழந்தைகளை அப்போதே தன்னிடமிருந்து விரட்டிவிடத் தீர்மானம் கொண்டாள் அந்தப் பேதை, கண்ணீரும் கம்பலையுமாக.

காமம் எனும் தீய ஆசையைத் தீய்த்தாள், எளிதிலே. அப்படிச் சொல்வதும் தவறு. அந்த ஆசை அவளுக்குத் தோன்றவே இல்லை. ஆனால் தாயாகிற தூய ஆசையைத் தள்ளுவது தாங்கொணாத் துயரமாக இருந்தது. முன்பு தன் வீட்டுக் குழந்தைகளைக் குழியில் வைத்த போது துடித்தவள், இப்போது குழந்தை ஆசையையே குழியிலிட்டுக் குமுறினாள்.

ராமகிருஷ்ணர் தாமும் உற்சாகமாக இருப்பார். மற்றவர்களையும் உற்சாகமாக வைத்திருப்பார். 'உற்சாகம்' என்பதால் கௌரவக் குறைவான அரட்டையோ, மதிப்புக் குறைவான செயலோ அந்தச் சூழலில் இராது.

சாரதையின் உற்சாகம் குலைந்தது அவருக்குப் பொறுக்குமா ? "இன்னிக்கு உனக்கு என்ன பாடம் தெரியுமா? தாம்பூலச் சுருள் மடிக்கச் சொல்லித் தரப் போகிறேன் " என்றார்.

ஓர் அழகான பீடா ராமகிருஷ்ணரின் அழகுக் கையிலிருந்து சாரதையின் உழைப்புக் கரத்துக்குப் போயிற்று.

" பார்க்கத்தான் அழகுன்னு நினைக்காதே! ருசியும் பொகு அழகு " என்றார்.

தாம்பூல முகியாக, ஜாதிபத்திரி மணத்தைப் பரப்பிக்கொண்டு விளங்கினாள் சாரதை. காலையில் ஏற்பட்ட அமங்கல வாடை அனைத்தும் அடங்கியது. சௌமங்கல்யம் கொழித்தது.

" நன்னாக் கவனிச்சுக்கோ! நன்னா கவனிக்கிறது என்ன, நீதான் ஒரு சின்ன நோட்டம் விட்டாலே புரிஞ்சுண்டுடுவியே! முதல்லே வெத்திலையை இப்படித் துடைக்கணும், அப்புறம் இப்படிக் காம்பைக் கிள்ளணும்..."

தாம்பூலக் கலை சகல சிங்கிநாதங்களுடனும் போதிக்கப்பட்டது. சாரதையின் கரங்கள் அத்தகைய கலைப் பண்டம் ஒன்றைச் சிருஷ்டித்தன. கிராம்பு ஒன்றைக் குத்தி அதற்குக் கலசம் வைத்துக் கணவரிடம் நீட்டினுள்.

'விடமு சேயவே' என்று மைதிலியிடமிருந்து ராகவன் தாம்பூலம் ஏற்றதைத் தியாகையர் பாடியது இந்தக் கட்டமே !

"இப்போ வெத்திலே போட்டுண்டால்? சாப்பாடு?" என்ருர்.

"ஆமாம், ஆமாம்" என்று சமையற் கட்டுக்கு விரைந்தாள் அவள். ஏதோ அசட்டுச் சண்டையில் மனம் மட்கி, மதனியை ஒன்றியாகச் சமையலில் விட்டுவிட்டோமே என்ற வெட்கத்துடன் அடுக்களைக்கு ஓடினுள்.

வழக்கமாக என்ன சமையல் செய்ய வேண்டும் என்று கூறும் ராமகிருஷ்ணர், "நீ எது போட்டாலும் ஆனந்தமாகச் சாப்பிடப் போறேன். எனக்கு ஏதுக்கு இந்தச் சோற்று ஆசை?" என்ருர்.

அன்றிலிருந்து அவர் சமையலைப்பற்றிப் பேசவேயில்லை. க்ஷண காலச் சங்கற்பத்துக்கு அத்தனை உறுதி !

அன்றிலிருந்து அவளும் பிள்ளைப் பேச்சை எடுக்கவில்லை. அவளுடைய சங்கற்ப பலம்மட்டும் சாதாரணமா ?

உண்டபின் அவள் தந்த தாம்பூலத்தை அன்புடன் அங்கீகரித்தார் பகவான்.

"மன்னிகிட்டே சமையல் நன்ருக் கத்துண்டுட்டே. மன்னி எம்பிராய்டரிகூட நன்ருப் போடுவா. அதுவும் கத்துக்கோ. பொம்மனுட்டிகளுக்குத் தையல் தெரிஞ்சிக்கிறது நல்லது" என்ருர்.

அவர் கிழித்த கோட்டைத் தாண்டாத தையலாள் அந்தக் கலைகளையும் கசடறக் கற்ருள்.

சாரதையை நன்ருக உருவாக்கிவிட்டோம் என்ற திருப்தி ராமகிருஷ்ணருக்கு உண்டாகிவிட்டது. தெய்வ வழிபாடு, அந்தணுளர் உபசரிப்பு, அனைவரிடமும் அன்பு, அதிதி சத்காரம், பெரியோர்களிடம் மரியாதை, சிறியோரிடம் பரிவு, கையிலே ஓயாத உழைப்பு என்றிப்படி அனைத்திலும் தேர்ச்சி பெற்று, அடக்கத்துடனும், நிம்மதியுடனும் அவள் கிருஹலக்ஷ்மியாகப் பரிணமிப்பதைக் கண்டு நிறைவு கொண்டார். தக்ஷிணேசுவரத்துக்குத் திரும்ப முடிவு செய்தார்.

ஆஹா ! எப்பேர்ப்பட்ட அற்புத தம்பதி ! ஏழு மாதங்கள் ஒரே கூரையின்கீழ் இருந்திருக்கிறார்கள் — முழுக்க முழுக்க குரு சிஷ்யர்களாகவே ! அதிலேயே எந்தத் தம்பதியும் பெற்றிராத பேரானந்தப் பேரன்பில் திளைத்திருக்கிறார்கள் ! 'அன்பும் அறனுமே இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாகும்' என்று கூறி, அதற்குப் பின்னரே மனைமாட்சியின் நன்கலமாக மக்கட் பேற்றினை வைத்தார் வள்ளுவர் பெருமான். ராமகிருஷ்ணரும் சாரதையும் அன்பும் அறனும் பூரித்த இல்வாழ்க்கையைக் கண்டனர். மக்கட்பேறு மட்டும் இங்கே புதுவிதத்தில் உருவாகப் போகிறது !

இரவெல்லாம் மக்களுடன் பேசிக் களித்தார் ராமகிருஷ்ணர். அவர் தக்ஷிணேசுவரத்துக்குத் திரும்பப் போகிறார் என்பதால் ஊரார் தேன் குடத்தை மொய்க்கும் எறும்புகளாக அவரைச் சூழ்ந்துகொண்டனர்.

அன்று பிரஸன்னா அவரைக் கேட்டாள் : "சமாதியில் பேரானந்தம் அடைகிறாயே, கதாயீ ! அது எப்படித்தான் இருக்கும் ?"

"எனக்கும் அதைப் பூரணமாகச் சொல்லணும்னுதான் ஆசை, மாமீ ! ஆனால் சொல்ல முடியல்லியே, என்ன பண்ணுவேன் ? சாதாரணமாக, சாதகாளுக்கு மூலாதாரத்திலேருந்து மேலே மேலே ஒவ்வோர் ஆதாரமாகக் குண்டலினி சக்தி ஏறும்போது பலவித அநுபவம் உண்டாகிறது. இருதயத்துக்குக் குண்டலினி வரச்சே ஒரே திவ்விய ஜோதியா இருக்கும். அப்புறம், கழுத்துக்கிட்டே வரச்சே பகவத் ஸ்மரணை தவிர வேறெதுவும் இராது. எனக்கு அந்தமாதிரி சமயங்களிலே லௌகிகப் பேச்சைக் கேட்டா மண்டையில் தடியாலே ஓங்கி அடிக்கிற மாதிரி இருக்கும். இந்த திவ்ய ஜோதியையும், திவ்ய ஸ்மரணையையும்பற்றி முழுக்கச் சொல்ல..."

ராமகிருஷ்ணர் எச்சிலைக் கூட்டிச் சிரமத்துடன் விழுங்கிக் கொண்டே, தமது இதயப் பிரதேசத்தையும் கழுத்தையும் தடவிக் கொள்கிறார். அவருக்கு அவ்வளவு எளிதாகக் குண்டலினி அங்கு வியாபித்துவிட்டாள்.

"எனக்கு ஆசைதான்...ஆனாலும்...ஆனாலும் சொல்ல முடியறதில்லை...அதுக்கப்புறம் இங்கே புருவ மத்தியிலே பரமாத்மாவுக்கும்... ஜீ—வா—த்—மா..."

ராமகிருஷ்ணரால் பேசவே முடியவில்லை. அவரது மென்னியை அம்பாள் அமுக்கிப் பிடிப்பதுபோல இருக்கிறது. இருப்பினும்

பிரஸன்னுவுக்குச் சொல்ல வேண்டும் என்பதற்காகப் பிரஸன்ன முகத்துடன் தொடர முயலுகிறூர்.

'' ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் நடுவிலே...மெல்லீசா... ஒ...ரு தி...ரை"

ராமகிருஷ்ணர் சமாதி நிலே எய்திவிட்டார்.

அவரது உன்னத நிலேயின் அலேகள் அங்கிருந்தோரின் உட்புகுந்தது. அவர்களும் க்ஷண காலம் விதிர்விதிர்த்துப் போனுர்கள்.

அவருக்குச் சமாதி கலேந்தது. சாந்த மயமானுர்.

கூடியிருந்தவர்களுக்கோ இன்னமும் உள்ளூற ஒரு கம்பனம் இருந்தது.

ராமகிருஷ்ணர் கண்களில் நீர் ததும்ப, '' பிரஸன்னு மாமி! எனக்கு வஞ்சனேயில்லே. உங்களுக்கு ஒளிக்காம எல்லாத்தையும் சொல்லணும்னுதான் ஆசை. ஆனு அம்மா என்னே விடமாட்டேங்கரு !" என்ருர் குழந்தையாக.

பிரஸன்னு அவர் பாதத்தில் பணிந்து விக்கினுள் :

'' இந்த ஊருக்கே மங்கள தீபமா இருந்துண்டிருந்தே ; தக்ஷிணேசுவரத்துக்குப் போறேயேன்னு இருக்கு. இந்த ஆனந்தம்—அதுவும் இன்னிக்கு நீ தந்த பரவசம்—இனிமேலே என்னிக்கு, யாராலே கிடைக்கப் போறது ? ''

'' மாமா போருரேன்னு உங்களுக்கெல்லாம் கிலேசம். சின்ன மாமி தேவலே. ஒரு பரவசமும் பரிதவிப்பும் இல்லாம அவ பாட்டுக்குத் தூங்கிண்டிருக்கா...'' என்று கேலியாகச் சொன்னுர் ஹ்ருதயர்.

ஆம், சுவரோடு ஒட்டியபடி தூங்கிப் போயிருந்தாள் சாரதை. '' அடாடா, எத்தனே பெரிய விஷயங்களேயும் அநுபவங்களேயும் கோட்டை விட்டுட்டு இந்த அசட்டுப் பெண் உழைப்பா உழைச்சு அலுத்துப் போய்த் தூங்கிடுத்து! " என்று அங்கலாய்த்தாள் பைன் வீட்டுப் பெண் ஒருத்தி.

' அவ தூங்கினது எங்கம்மா வேலேன்னு!' என்று எண்ணி ராம கிருஷ்ணர் சிரித்தார். '' அவமட்டும் தூங்கல்லேன்னு இன்னிக்கு

இங்கே நடந்த பரவசத்திலே ஒரேயடியா உயரக் கிளம்பிப் போயே போயிருப்பா. நீங்கள்ளாம் ஆவேச நிலைக்குப் போனதைப் பெரிசா நினைச்சுக்கறேள். நான் சொல்றதைத் தப்பா எடுக்காதேள், உள்ளதைச் சொல்றேன்; அரை ஆழாக்குப் பாலை ஒரு பத்துப் படி அண்டாவிலே விட்டுக் கோட்டை அடுப்பு மேலே வெச்சா, உடனே அந்தப் பால் பொங்கி அண்டா விளிம்புமட்டும் வந்துடும். அப்போது பார்த்தா அண்டா முழுக்கப் பால் இருக்காப்பலே இருக்கும். ஆனா, அடுப்பிலேருந்து பாத்திரத்தை எடுத்தவுடனே அது இருந்த இடம் தெரியாமல் அமுங்கிப் போகும். உங்களுடைய ஆவேச அநுபவம் அப்படித்தான் பொங்கித்து; அடங்கியும் போச்சு! இந்தக் குட்டி இருக்காளே, அவ பத்துப் படியும் பால் ரொப்பின அண்டா. பொங்கறத்துக்கு நாழி ஆகும்; ஆனா பொங்கித்துன்னா அப்படியே முக்கால் வாசி வெளியிலே போயிடும். ஆனபடியால் அவ பரவசத்திலே விழாமே அசட்டுப் பெண்ணா உழைச்சுக் கொட்டிட்டுத் தூங்கினதே நல்லது" என்றார்.

14. தக்ஷிணேசுவரம் அழைத்தது !

கணவனுக்குச் சேவை புரிவதிலேயே ஈடுபட்ட எனக்கு மூவுலக இன்பங்களி லும் எண்ணமில்லை. என் தந்தையின் இல்லத்தில் இருந்ததுபோலவே கடுங் கானகத்திலும் சுகமாக வசிப்பேன்.

—ஸ்ரீமத் ராமாயணத்தில் தேவி ஜானகி.

"ஏன்னடி சாரு, இப்படி அடியோட மாறிப் போயிட்டியே!" என்று ஜயராம்பாடித் தோழிகள் சாரதையைச் சூழ்ந்து கொண்டு ரகளை செய்தனர்.

காமார்புகுரிலிருந்து ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரம் சென்றபின், ஜயராம்பாடிக்குத் திரும்பிவிட்டாள் சாரதை. இப்போது அவளிடம் பொலிந்த மௌன காம்பீர்யத்தைக் கிராமாந்தரத் தோழிகள் புரிந்துகொள்ளவில்லை. தங்கள் சாரு மாறிவிட்டது தெரிந்தது; மாற்றம் எப்படிப்பட்டது என்று தெரியவில்லை. "ஆத்துக்காரரோடு ஏழு மாசம் குஷியா இருந்துட்டு, இப்போ தனிச்சுத் தவிக்கிறு! நம்ம பேச்சுப் பிடிக்குமா?" என்றனர். இன்னும் எதையோ கொச்சையாக, பச்சையாகச் சொன்னுர்கள்.

சாரதைக்கு அந்தப் பேச்சு குமட்டியது. "பேத்தாதேள்டீ" என்ருள், பொறுக்க முடியாமல்.

"உள்ளூறப் பிடிச்சுருக்கு, பேத்தல்னு வெளிக்குச் சொல்கிரு யாக்கும்!"

"உள்ளூறத்தான் சொல்றேன் – பேத்தல்னு" என்ருள் சாரு அழுத்தமாக.

அவர்களுக்கு மட்டுமல்ல, அன்னை சியாமாசுந்தரிக்கும் அது வியப் பளித்தது.

பிறகுதான் அவர்களுக்குச் சிறிது சிறிதாகப் புரிந்தது — ஊரா ரைப் போல் சாரதையும், கதாதர சட்டர்ஜியும் தாம்பத்தியம் நடத்தவே இல்லை என்று. அந்தப் புதுமைத் தாம்பத்தியம் அவர் களுக்குப் புரியவுமில்லை; பிடிக்கவுமில்லை. 'இப்படி விசித்திர மாப்பிள்ளை வாய்க்கணுமா?' என்று குறைப்பட்டனர்.

விசித்திர மாப்பிள்ளைதான்! சாரதாமணியே அதை விசித்திர மாக நினைத்துக் குறைப்படும்படி காரியம் நடந்தது. அதாவது எந்தக்

காரியமும் நடக்கவில்லை. சாரதாமணி பிறந்தகம் வந்து வாரங்கள் பல ஓடி மாதங்களாகி, மாதங்கள் பருவங்களாகி, பருவங்கள் பல ஓடி வள்ளிசாக நான்கு முழு வருஷங்கள் ஆகிவிட்டன ! 'மாப்பிள்ளை' யிடமிருந்து இருக்கிருயா, செத்தாயா என்று ஒரு தகவல் இல்லை !

'அத்தனை அன்பும் அக்கறையும், பாசமும் பரிவும், வாஞ்சையும் வாத்ஸல்யமும் காட்டிய ஸ்வாமி என்னை எப்படி அடியோடு மறந்து விட்டார் ?' என்று சாரதை ஏங்கி நின்ருள்.

அவரைப்பற்றி விசாரித்து அறிந்ததிலிருந்து, ஒரேயடியாக பக்தி பரவசத்தில் ஆழ்ந்துவிட்டார் என்று தெரிந்தது. அதைப் பைத்தியம் என்று ஊரார் குறிப்பிடலாயினர். வயசு வந்த மனைவியை மறந்து அவர் புரிகிற ஸித்தி சியாமாசுந்தரிக்குங் கூடப் 'பைத்தியந்தானே ?' என்ற ஐயத்தைக் கிளப்பியது.

''சியாமா மாமிக்கு இப்படி ஒரு கஷ்டம் வரப்படுமா ? முழுப் பைத்தியத்துக்குப் பெண்ணைக் கொடுத்தாளே ! கிளியாட்டம் பொண்ணு வாழாவெட்டியா நிக்கறதே'' என்று கிராமம் பேசிய போது அந்தத் தாய் உள்ளம் துடிதுடித்தது. அவளது அபூர்வமான வெளிப் புலம்பல்களும், அனவரத உட்புலம்பலும் சாரதையை உலுக்கின.

சாரதையின் புனித விரகத் துயர் போதாதென்று ஊராரின் பேச்சுக்கள் வேறு அவளைச் சித்திரவதை செய்தன. ஆறுதல் என்று நினைத்து அவர்கள் பேசியது வெந்த புண்ணில் வேலை நுழைத்தாற் போல் இருந்தது. வாயே திறக்காமல் ஓயாத உழைப்பில் காலத்தின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்தாள்.

'இன்னும் எத்தனை நாட்கள் இப்படி இருக்கப் போகிறேன் ? ஜன்மா முழுதுமே இப்படித்தான் கழிய வேண்டுமா ? அவர் என்னை அழைத்துக்கொள்ளவே மாட்டாரா? அல்லது அப்பா, அம்மாவாவது அவருக்கு ஒருகாலும் பைத்தியம் பிடிக்காது என்று தீர்மானமாக உணர்ந்து அவரிடம் என்னை அனுப்பி வைக்கமாட்டார்களா ? என்றெண்ணிப் படாதபாடு பட்டாள் சாரதை.

இந்தப் பாடுகள் போதாவென்று, ஜயராம்பாடிக்கே உரிய மலேரியாக் காய்ச்சல் வேறு அவ்வப்போது அவளைப் பீடித்து வறுத் தெடுக்கலாயிற்று. சகல விதத்திலும் சோதனை ! உடம்பு நோயை அவள் அதிகம் பொருட்படுத்தவில்லை. பதிதேவரை நினைத்தே உருகினுள்.

ருக்மிணிக்கு ஓர் அந்தணர் தூதாகக் கிடைத்தார். சீதாதேவிக்கு ஆஞ்சநேயன் தூது கிடைத்தான். அவதாரங்களிலெல்லாம் நாயகனும் நாயகியும் பிரிந்து துயர்ப்படுவது ஒரு தவிர்க்க முடியாத கட்டம். ஆனுல் அந்த அவதாரங்களில் தூதுவிட்டதுபோல் சாரு தூது அனுப்பவும் முடியவில்லே !

அவளேப் போல் நாணத்தின் உருவமாக இன்னெருவர் இருந்ததில்லே ; இருக்கப் போவதும் இல்லே. தன் வீட்டாரிடமே பதியைப் பற்றிச் சொல்லித் தன்னே அனுப்பி வைக்கச் சொல்ல அவளுக்குத் திராணி இல்லே. இப்படிப்பட்டவள் மூன்ரும் மனிதர்மூலம் ராமகிருஷ்ணருக்குத் தூது அனுப்பி அழைத்துக்கொள்ளச் சொல்வது சாத்தியமா ?

கணவருக்கு நிச்சயமாகத் தூதனுப்ப இயலாது என்பதால், கடைசியில் தன் வீட்டிலேயே இருந்த தந்தைக்குத் தூது விட்டாள் ! இத்தனே மன வேதனேக்கிடையிலும் வாயே திறவாதிருந்தவர் ராமசந்திர முகர்ஜி. வாயே திறவாத மகள் இப்போது பானு 'மாமி'யை விட்டு அவரிடம் தூது பேசினுள்.

பானு மாமியிடம் அவள் தனது லஜ்ஜை மயமான இதயத்தைத் திறந்து காட்டியதற்குக் காரணம் உண்டு. உத்தமப் பிறவியான அந்த அம்மாளுக்கு எப்படியோ அவதார ரகசியமே ஓரளவுக்குத் தெரிந்திருந்தது. அதை அம்மாது அவ்வப்போது சிறிது அவிழ்த்து விடுவாள். எனவே, தனது ரகசியத்தை அங்கே திறந்து காட்டச் சாரு அவ்வளவாகத் தயங்கவில்லே.

பத்து வருடங்களுக்கு முன்பே சாரதையையும் ராமகிருஷ்ணரையும் சேர்த்துப் பார்த்து அவர்களேப் பார்வதி பரமேசுவரர்களாகப் பாடியவள் அல்லவா பானு மாமி? அவள் ஒரு நாள் சியாமாசுந்தரியிடம், " மன்னி, நீங்க சாருவைப்பற்றித் துளிக்கூட விசனப்படாதேள். உங்க மாப்பிள்ளே பைத்தியமோன்னு லவலேசங்கூடச் சந்தேகப்படாதேள். அவர் ஒரு நாளும் பைத்தியமில்லே, மன்னி. உங்க மாப்பிள்ளே சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மா. ஒரு நாளில்லாட்டா ஒரு நாள் நீங்களே இதை நிச்சயமா உணரப் போறேள் " என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

சிவத்துக்காகத் தவம் இயற்றிக்கொண்டிருந்த பர்வத ராஜகுமாரியிடம் அந்தச் சிவமே ஓர் அந்தணக்கிழவராக வந்து, "பைத்தியக்காரச் சிவனுக்காகவா உன் கோமள உடம்பையும் உள்ளத்தையும் வருத்திக் கொள்கிருய் ? " என்று பேசியதாகக் கூறுவர். தன் பிராண

காந்தனைப்பற்றிப் பைத்தியம் என்று கேட்டவுடன் ஜகன்மாதா எரிமலையாகக் கனன்றாள். ஊர் ஜனங்கள் ஓயாமல் பைத்தியம், பைத்தியம் என்று தன் ஸ்வாமியைச் சொல்லக் கேட்டு இப்படித்தான் பூகர்ப்பமாகக் கொதித்தது சாரதையின் உள்ளம். இப்போது பானு மாமியின் வார்த்தைகள் அந்த அக்கினிக் கோளத்தில் அமுத வெள்ளத்தைப் பெய்தன. அதன் பின்புதான் அவளைத் தந்தையிடம் தூதனுப்பினாள். அப்போதுங்கூட, ' புருஷனிடம் போகிறேன் ' என்று நேரடியாகச் சொன்னாளில்லை !

'' அண்ணா, சைத்ர சங்கிரமணத்துக்காக ரொம்பப்பேர் இங்கேயிருந்து ஆதி கங்கை ஸ்நானத்துக்குப் போறா. சாருவும் போகணும்னு ஆசைப்படறா......"

வாழாவெட்டியைப் பார்த்தாலே அமங்கலம் என்பதால், எந்த கிருகலக்ஷ்மி ஐம்பது மாதங்களாக இருளில் தன்னை அடைத்துக் கிடந்தாளோ, அப்படிப்பட்டவளா இப்போது மற்றவர்களோடு பிரயாணம் கிளம்புகிறேன் என்கிறாள்? ராமசந்திர முகர்ஜிக்கு உடனேயே காரணம் புரிந்துவிட்டது! சங்கிரமணம்பற்றியும், கங்கா ஸ்நானம்பற்றியும் தன் மகளுக்குக் கவலை இல்லை ; கல்கத்தா வரை துணை கிடைக்கும் இச்சமயத்தில் அவள் தக்ஷிணேசுவரத்துக்குச் சென்று விட விழைகிறாள் !

தந்தை உள்ளம் நெகிழ்ந்து கரைந்தது. ''நானே கூட வர்றேன். நானே அவளை தக்ஷிணேசுவரத்துக்கு அழைச்சுண்டு போறேன்'' என்றார்.

அன்று சாரதைக்கு ஒரே அமிருத மழை !

ஸ்ரீயாமாசுந்தரி கண் கலங்க மகளை அனுப்பி வைத்தாள். எந்தத் தாயும் மகளைப் பிரிகிறோமே என்று கண் கலங்குவாள். இந்தத் தாயோ, ' பிரிவு நீடிக்க வேண்டுமே! தக்ஷிணேசுவரத்துக்குப் போய், அந்தப் பிள்ளையாண்டானுக்குப் பைத்தியந்தான் என்று தெரிந்துகொண்டு பெண் திரும்பவும் பிறந்த வீடு வந்துவிடாமல் இருக்க வேண்டுமே' என்று எண்ணிக்கொண்டே அவள் நெற்றியில் திருநீறு இட்டாள்.

சாரதைக்கு அந்தச் சந்தேகம் இம்மிகூட இல்லை. தெளிவுடன், பிறந்த ஊருக்குப் பிரிவுபசாரம் செய்தாள். ஆகா, எப்பேர்ப்பட்ட உபசாரம்! எந்த தேவி தன்மீது நடப்பதற்காக ஜயராம்பாடி தவமிருந்திருக்க வேண்டுமோ, அந்த தேவி அந்த ஜயராம்பாடி

மண்ணை எடுத்து, விபூதிக்கு மேலாக இட்டுக்கொண்டு, தலையிலும் தூவிக்கொண்டு, "ஜனனீ ஜன்ம பூமிஸ்ச ஸ்வர்காதபி கரீயஸி" என்று வாய்விட்டு, கண்ணீர் ததும்பச் சொன்னாள். 'பெற்ற தாயும், பிறந்த மண்ணும் வானுலகினும் மேலானவை' என்பது அதன் பொருள்.

பெற்ற தாயை வணங்கினாள். பிறந்த மண்ணை வணங்கினாள். நாலரை வருடத் துன்பத்தைத் தூக்கி எறிந்துவிட்டு — தெளிவுடன், திருப்தியுடன், கனிவுடன், கம்பீரத்துடன்—ஊரெல்லாம் பைத்தியம் என்ற கணவனது இருப்பிடத்துக்குப் புறப்பட்டாள் கற்பரசி.

அறுபது மைல்கள் நடந்தாக வேண்டும், ஜயராம்பாடியிலிருந்து தக்ஷிணேசுவரம் அடைய. சாரதைக்கு அது ஆனந்தப் பயணமாகவே இருந்தது. வயல்களையும், குளங்களையும், கிராமங்களையும் கடந்து தந்தையுடனும், மற்ற ஆதி கங்கா யாத்ரிகர்களுடனும் தன்னுடைய அதிசய அகத்துக்காரரின் அகத்துக்குப் போகிறாள்! அவரது 'அகம்' பவதாரிணியின் ஆலயமே என்பது சகலவிதத்திலும் உண்மையன்றோ ?

சாலை ஓரத்து மரத்தடியிலேயே இரவில் உறங்குவார்கள். காலையில் மீண்டும் நடையைக் கட்டுவார்கள். இப்படி மூன்று நாட்கள் சென்றன. ஆனந்தத்தின் இடையிலேயே இன்னும் தக்ஷிணேசுவரம் வந்த பாடில்லையே என்ற ஆதங்கச் சாயலும் விழத் தொடங்கியது. அந்த ஆதங்கத்தை அதிகப்படுத்துவதேபோல் சாரதைக்குக் காய்ச்சல் வேறு கண்டுவிட்டது !

அவளுக்கு மலேரியா ஜுரம் அவ்வப்போது ஏற்படுவது உண்டல்லவா? இந்தச் சமயம் பார்த்துப் பரதேவதை அதை அனுப்பி வைத்து விளையாட்டுப் பார்த்தாள். அதோடு நீண்ட நடையின் சலிப்பு வேறு! ஆயினும் சகிப்புத்தன்மையின் வடிவமான நம் தேவி சுகவீனத்தை வெளிச் சொல்லாமல் நடந்துகொண்டே யிருந்தாள். நடை தடுமாற ஆரம்பித்தது. தடுமாறித் தடுமாறி நடந்தாள். அதற்கப்புறம் தடுமாறிக்கூட நடக்க முடியவில்லை. அப்படியே துவண்டு விழுந்தாள், தாமரைத் தண்டு நூலிழைபோல். தாப ஜ்வரமும் கண்டது.

பெருங் கவலையுடன் ஒரு குடிசைக்கு அவளை அழைத்துச் சென்று படுக்க வைத்தார் ராமசந்திரர். முக்கி முனகிக்கொண்டு தம் திருக்குமாரி படுத்திருப்பதைக் கண்டு தந்தை மனம் கனத்தது.

இந்தப் பாரத தேசத்தின் ஸ்திரீ தர்மத்தைத்தான் என்னென்பது? புருஷன் என்றால் இப்படி ஒரு பிரேமை! அவன், 'இருக்கிறாயா, செத்தாயா?' என்று இவளைக் கேட்காவிட்டாலுங்கூட அவனிடமே ஓடுகிறது இந்தப் பெண் நெஞ்சு. அவனுக்குப் பைத்தியம் என ஊரெல்லாம் சொன்னாலும் இவளுக்கு நம்பிக்கை வருவதில்லை. அப்படியே அவனுக்குப் பைத்தியமானாலும் அதற்காக அவனை விடுவதா, அப்போது தானே உடன் இருந்து அவனைப் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று முடிவு செய்கிறது பிரேமை உள்ளம். மற்றப் பெண்கள் கணவனிடம் காட்டும் அன்பிலே தேக நசைக்கும் இடம் உண்டு. அந்த ஏதோ ஓர் 'ஆனந்த'த்துக்காக அவர்கள் பல இன்னல்களை ஏற்பதில்கூட விசேஷமில்லை. ஆனால் நம் சாரதைக்கு இப்படிப்பட்ட 'இன்ப' நாட்டம் இல்லாமலே அவள் பதி தேவருக்காகக் கிளம்பினாளே, அது பூஜைக்குரிய புனித அன்பு அல்லவா? அந்தப் புனிதத்தைப் பொன்னாகப் புடம் போடவே இப்போது பராசக்தி அவளைத் தணலாக எரியும் காய்ச்சலில் புரட்டி எடுக்கலானாள்.

"மலேரியா எனக்கு நன்றாகப் பழகிப் போனதுதான். அதைப் பற்றிக் கவலையும் இல்லை; பயமும் இல்லை. இந்தச் சரீரமே போனாலுங்கூட அதைப்பற்றி விசாரம் இல்லை. ஆனால் இந்தச் சமயத்தில்தானா காய்ச்சல் நேர வேண்டும்? என் ஸ்வாமியைத் தரிசித்த பின் எந்தக் கேடு வந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்பேன். ஆனால் அவரைப் பார்க்கும் முன்பே இந்தக் கண்ணை மூடி விடுவேனா? சிம்மவாஹினியின் திருஉள்ளம் அதுதானா?'- சாரதையின் உடல் காய்ந்தது; உள்ளமும் காய்ந்தது.

திடீரென்று உடலிலே ஒரு குளிர்ச்சி. உள்ளத்திலும் குளிர்ச்சி. சந்தனமும் சந்திரிகையும் பச்சைக் கர்ப்பூரமும் பனிநீரும் கலந்து மேனியிலும் மனத்திலும் ஊடுருவுவது போன்ற உணர்ச்சி! கனத்த இமைகளைத் திறந்து பார்த்தாள் சாரு! அவள் கண்ட காட்சியில் அப்போதே இமையின் கனம் இலேசாகியது.

சொல்லரிய அழகியான சியாமள வண்ண மங்கள மங்கை ஒருத்தி சாரதைக்கு நெருக்கமாக அமர்ந்து அவளது தலையைக் கோதிக் கொடுக்கிறாள்; அவளது உடல் முழுவதையும் தடவிக் கொடுக்கிறாள். அந்த ஸ்பரிசத்தின் மென்மையும் தண்மையும் வார்த்தையில் வடிக்க முடியாதனவா யிருக்கின்றன! மழையில் நெருப்பு அணைவது போல் இந்த அணைப்பில் தணலான காய்ச்சல் தணிகிறது; உடல் நோவு பறந்தோடுகிறது!

''என் அன்பே, நீ எங்கேயிருந்து வர்றே?'' என்று கேட்டாள் சாரதை, எல்லையற்ற நன்றியுடனும் பிரேமையுடனும்.

''தக்ஷிணேசுவரத்திலிருந்துதான்!'' என்றாள் சியாமள சுந்தரி. அவள் குரலிலும் சந்தனம், சந்திரிகை, பச்சைக் கர்ப்பூரம், பனிநீர் இவற்றின் தண்மை; அதோடு தேனின் தீஞ்சுவையும் கூடியிருக்கிறது!

''ஆஹா! தக்ஷிணேசுவரத்திலிருந்தா? நான்கூட அங்கே போறதாத்தான் கிளம்பினேன். அவரைப் பார்ப்பேன், அவருக்குப் பணிவிடை பண்ணுவேன்னுதான் நினைச்சுண்டிருந்தேன். ஆனா, இப்பப் பயங்கரமாப் படுக்கை போட்டதைப் பார்த்தா அந்த ஆசை பகல் கனவாப் போயிடுமோன்னு கவலையாயிடுத்து'' என்றாள் சாரதாமணி.

''கவலைப்படாதே; ஆமாம், கவலையே படாதே'' என்ற அற்புத அபயமொழி கருநிற அழகியின் திருமுகத்திலிருந்து வடிந்தது. ''நீ நிச்சயமா தக்ஷிணேசுவரத்துக்குப் போகத்தான் போறே! சீக்கிரமே உனக்கு உடம்பு வாசியாகப் போறது. அவனைப் பார்க்கத்தான் போறே. உனக்காகத்தானே நான் அவனை அங்கே இறுக்கிப் பிடிச்சு வெச்சிருக்கேன்?'' என்றாள்.

''அப்படியா?'' என்று அதிசயித்தாள் சாரதை. ''என் அன்பே, நீ எங்களுக்கு என்ன உறவாகணும்?'' என்று வினவினாள்.

''நான் உன் கூடப் பிறந்தவள் – உனக்குத் தெரியவில்லை?''

''வாஸ்தவம். அதனாலேதான் சமயம் பார்த்து வந்தே!''

கருமையின் கருணையிலேயே கரைந்து உறக்கத்தின் ஆறுதலான இருளோடு இழைந்தாள் சாரதை.

குஞ்சு விரல்கள் தன் தலையில் தாளம் போடுகிற உணர்விலே உறக்கம் கலைந்தாள் சாரதாமணி. கருணைக் கருமையுடன் ஒரு பெண் குழந்தை தலைமாட்டில் அமர்ந்திருந்தாள். அவளுடைய காலில் புழுதி கப்பியிருந்தது.

''என் பிரியக் குழந்தே! உன் காலை அலம்பிக்கிறதுக்கு இங்கே யாரும் ஜலம் தரவில்லையா?'' என்று கேட்டாள் சாரதாமணி.

''கால் அலம்பிக்க வேண்டியதில்லை, அம்மா! ஏன்னா இப்பவே நான் கிளம்பிண்டிருக்கேன். உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். பயப்படாதே அம்மா, உனக்கு ஜுரம் இப்பவே சரியாப் போயிடும்'' என்று தித்திக்கச் சொல்லிவிட்டுக் குழந்தை மறைந்தாள்.

'கூடப் பிறந்தவள்' என்ருள்! 'அம்மா' என்று கூப்பிட்டுக் கொண்டு பெண்ணுக வந்தாள்! அம்மா, பெண், அக்கா, தங்கை எல்லாம் கடைசியில் ஒன்றேதான்!

சிம்மவாஹினி இவள் நினைத்தவுடனே வந்துவிட்டாள்! 'ஹிம்ஸ' என்ற சப்தமே மாறி, 'ஸிம்ஹ' என்று வந்தது. தீமைக்கு ஹிம்ஸை தருவாள் ஸிம்ஹவாஹினி. அதுவே ஹம்ஸ மென்மையுடன் வந்தருள் புரிந்தது இங்கே. இவள் பரமஹம்ஸ பத்தினி அல்லவா? ஹம்ஸவாஹினியான பிரம்மாணிக்கு ஸிம்ஹவாஹினி, சகோதரி என்றும் மகள் என்றும் உறவு கொண்டாடிக் கொண்டு வந்து ஹிம்ஸை தீர்த்தாள்! அவள் நினைத்த இடத்திலேயே ஆவிர்ப்பவிக்கக்கூடியவள்! ஆயினும் அன்பின் அடர்த்தியில் தன் தெய்விகத்தைக்கூட மறந்ததே போல் தக்ஷிணேசுவரத்திலிருந்தே புழுதிக் காலுடன் வந்திருக்கிருள். மனிதன் தெய்வத்தன்மை எய்தும் அற்புதத்தைவிடத் தெய்வம் மனிதத்தன்மை எய்தும் அற்புதம் பேரழகாகத்தானே இருக்கிறது!

* * *

தெய்வ தரிசனம் தந்த தெம்புடன், தெளிவுடன் மறுநாள் காலை வேகு வேகு என்று உற்சாகமாக நடையைத் தொடர்ந்தாள் சாரதை. சிறிது தூரம் சென்றதும் வாடகைக்கு ஒரு பல்லக்குக் கிடைத்தது. சாரதை அதில் பிரயாணத்தைத் தொடர்ந்தாள். 'உழைக்கின்ற சாருவுக்கும் பல்லக்குச் சொகுசா?' என்று எண்ணியோ என்னவோ, காய்ச்சல் திருப்பிக் கொண்டது. ஆனுல் அது கடுமையாக இல்லை. தந்தையிடம் அதுபற்றி அவள் சொல்லவும் இல்லை.

கடைசியாகப் பல்லக்குப் பயணம் முடிந்தது. நிர்மல கங்கையைப் பரிசலில் கடந்தனர். பரிசல் ஹம்ஸமாக மிதந்தது, பரஹம்ஸத்தை நோக்கி.

இரவு ஒன்பது மணி. வெளியே எங்கும் அமைதி. கங்கா மாதா சலசலத்து ஓடுகிருள். சாரதையின் இதயத்தில் ஒரே ஆர்வத் துடிப்பு. நாலு முழு ஆண்டுகள் காணுதிருந்த பிரேம ரூபத்தைக் காணப் போகிறோம் என்ற கிளுகிளுப்புடன் புண்ணிய தக்ஷிணேசுவரத்து மண்ணிலே புண்ணிய பாதத்தை வைத்தாள் சாரதை. காற்றிலே சிறிது நழுவிய முக்காட்டையும் இழுத்து நன்ருக முகத்தை மூடிக்கொண்டாள் நாண· ராணி சாரதை – அந்த இருட்டு வேளையிலும், பதிதேவரைக் கண் குளிரக் காண்போமா என்ற துடிப்பிலும்!

அவரைக் காணவொண்ணுதபடி முக்காட்டை இழுத்து விட்டாலும், இதோ அந்த அமிருதக் குரல், காமார்புகுரில் அவளுள் புகுந்து

புத்துயிர் பொலிவித்த புனிதக் குரல், அவள் காதுகளில் பாய்கிறது. எட்ட இருந்த தமது அறையிலிருந்தே அவளுடைய ஸ்வாமி பேசுகிறார்:

''அடேய் ஹ்ருதே! நல்ல முகூர்த்தம் வந்துடுத்தாடா? இதுதான் அவள் முதல் தடவையா இங்கே வர்றது!''

அவர் இருக்கிற இடத்தில் எப்போதும் சுபமுகூர்த்தந்தானே? 'ததேவ லக்னம் ஸுதினம் ததேவ' அல்லவா? அதோடு படகிலே வரும்போதே பஞ்சாங்க ரீதியிலான அமங்கள வேளையைக் கடந்தாகி விட்டது என்றும் அவளுக்குத் தெரியும்.

நாண ராணி சாரதை – அடங்கி ஒடுங்கிப் பின்னாலேயே நிற்கும் சாரதை – தன்னுடன் வருகிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற பிரக்ஞையே இன்றி, விறுவிறு என்று தனது ஸ்வாமியின் குரல் வந்த திக்கில் விரைந்தாள்.

நாலாண்டுகளுக்குப் பின் நாயகனின் முன் சென்று விழுந்து எழுந்தாள். நாலாண்டுத் தாபமும் அதோடு நொறுங்கி விழுந்தது.

''என் அம்மா! ஆஹா, கடைசியில் நீ இங்கே வந்தே விட்டாய். பேஷான காரியம் செய்தாயம்மா!'' என்று அன்பின் ரசகுண்டுகளாக ஒவ்வோர் அட்சரத்தையும் மொழிந்தார் பகவான் ராமகிருஷ்ணர்.

ஊரெல்லாம் அவருக்குப் பைத்தியம் என்று சொன்னபோதிலும் அதை அவளால் நம்ப முடியவில்லை. கங்கைக் கரையில் அந்தக் கனிவுக் குரலைக் கேட்டவுடன், 'இந்தத் தெளிவு மூர்த்திக்கா மூளை குழம்பியதாகச் சொன்னார்கள்? அப்படிச் சொன்னவர்களுக்குத்தான் மூளை குழம்பியிருக்கிறது!' என்று எண்ணினாள். இப்போது நேருக்கு நேரே அவரது அன்புப் பேச்சைக் கேட்டவுடன், 'என்னுடைய பகவான் என்னுடைய பகவானாகவேதான் இருக்கிறார். பகவானுக்குப் பைத்தியம் பிடிப்பதில்லை' என்று நிதரிசனமாகக் கண்டு கொண்டாள்.

அவளது உடம்பு ஆடியது – சமீபத்து நோயும், இப்போதைய உவகைப் பெருக்கும் சேர்ந்து அவளை ஆட்டி வைத்தன.

''உட்காரம்மா, உட்காரு'' என்ற ராமகிருஷ்ணர், ''யாரடா அங்கே, அம்மா தரையிலே உட்காரப்படாது; பாய் கொண்டு வந்து விரியுங்கோ'' என்று கோஷித்தார்.

ஒரே அன்பு வெள்ளம்தான்.

சாரதை பாயில் அமர்ந்தாள்.

பதிதேவரிடம் பேசினுள்.

அவரும் பேசினுர்.

எந்தக் கணவனும் எந்த மனைவியும் பேசியிராத தூய திருமொழிகளை, பாவனப் பெருமொழிகளை, அதாவது எளிய அன்பு மொழிகளைப் பரிமாறிக்கொண்டனர்.

''தாயே, உனக்கு வர்ற வழியில் காய்ச்சலா கண்டது? உனக்கு உடம்புக்கு வரப்படுமோ? நன்னு குணமாயிடுத்தா...?'' என்று பரிந்து பரிந்து கேட்டார் ராமகிருஷ்ணர்.

“நன்னுத் தேவலைன்னு... அதைப்பத்திக் கவலைப்படாதேள்...”

''நீ அப்படிச் சொன்னுலும் உன் குரலே நடுங்கறதே! என்ன பரிதாபம்! நீ காலம் தாழ்த்தி வந்திருக்கே! என் மதுர்மட்டும் இப்போ உயிரோடு இருந்தா உனக்கு ராஜோபசாரம் பண்ணுவார். அவர் போனது எனக்கு வலது கையே உடைஞ்ச மாதிரி...''

தக்ஷிணேசுவர ஆலய ஸ்தாபகியான ராணி ராஸமணியின் மாப்பிள்ளை மதுராநாதர்தாம் இந்த மதுர். இவர் ராமகிருஷ்ணரின் மகிமையை முற்றும் உணர்ந்து அவருக்கு மனமாரத் தொழும்பு புரிந்தவர். சாரதை தக்ஷிணேசுவரம் சென்றடைந்தது 1872–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில். மதுராநாதர் சில மாதங்களுக்கு முன்பு காலமாகிவிட்டிருந்தார்.

ராமகிருஷ்ணர் எதையோ நினைத்துக்கொண்டு சிரித்தார். வலது கை போச்சு! ஆனுல் அவரது இடது பாகம் முழுவதும் இப்போது வந்து எதிரே உட்கார்ந்திருக்கிறது.

இடது பாகம் மட்டுந்தானு? 'லலிதே! நீ பரமேசுவரனின் இடது பாதியாக இருப்பவள் என்று சொல்கிறுர்களே; அதுவும் தப்பு. உன் சிவப்பு அவனது வலது பாகத்தையும் விழுங்கிவிட்டது. நீயே பூரண ரூபியாகச் செக்கச் செவேலென்று விளங்குகிறுய்!' என்று ஆதி சங்கரர் பாடினுர். யாக்ஞவல்கியரும் இவ்விதமே மைத்ரேயியிடம் கூறியதாக ஸுரேசுவராசாரியர் உபநிஷத பாஷ்யத்தில் சொல்கிறுர். மகரிஷி யாக்ஞவல்கியரின் ஞானச் செல்வம் அனைத்திலும் போதனை பெற விழைகிறுள் அவரது பத்தினி மைத்ரேயி. அந்த ஞானத்தைப் பெற்றுவிட்டால், அதன்பின், 'இருப்பதெல்லாம் ஒன்றுதான்; கண

வனும் அதுதான், தானும் அதுவேதான் ; அதாவது, கணவனும் தானுங்கூட ஒன்றேதான்' என்ற அநுபவத்தை எய்திடுவாள். இதை எண்ணி யாக்ஞவல்கியர், ''பிரியே, உமாதேவி தனது பரமப் பிரேமையினுல் சூலபாணியின் இடப் பாகத்தைப் பெற்றுக்கொண் டாள் ; நீயோ என் ஆத்மாவைப் பூரணமாகவே வௌவிக்கொள்ள விரும்புகிருய்'' என்ருராம் !

ஜயராம்பாடியில் தொடங்கிய பாடத்தைப் பூர்த்தி செய்து, ஜபயோக சாதனை, ஞான போதனை இவற்றைப் பரிபூரணமாக ராம கிருஷ்ணரிடம் அப்பியசித்து அவராகவே ஆகிவிடுவதற்குத்தான் சாரதை இப்போது தக்ஷிணேசுவரத்துக்கு வந்திருக்கிருள். 'தான் அறப்பெய்யும் முகில்'போல், தனது ஆத்ம பூரணத்துவத்தை அவளுள் பொழியவே ஆர்வத்துடன் முன்வந்தார் கருணை முகிலாம் ராம கிருஷ்ணர்.

இத்துணை அன்பும், பரிவும், கரிசனமும் உள்ளவர் ஏன் நாலாண்டுகள் அவளைச் சோதித்தார் ? இதற்குப் பாகவதத் தில் விடை காண்கிருேம்.

ராஸக் கிரீடைக்கு முன்பு கண்ணன் திடுமெனக் கோபியரிட மிருந்து பிரிந்து சென்று அவர்களை அழ அழ வைக்கிருன். பிறகே தரிசனம் தருகிருன். அவனை இழந்துவிட்டுப் பிறகு பெற்றதில் அவர்களது ஆனந்தம் அளவுகடந்து போகிறது. ''அன்புப் பெண் களே, ஓர் ஏழை புதையல் கண்டெடுத்துவிட்டு, அதன்பின் அதனை இழந்தால் அவனுக்குப் புதையலைத் தவிர வேறெந்தச் சிந்தையுமின்றி அதையே எண்ணுவான் அல்லவா ? அவ்வாறே ஜீவராசிகள் என்னை ஆழ்ந்து தியானம் செய்ய வேண்டும் என்பதற்காகவே என் தரிசனத்தை மறைத்து விலகியும் போவேன்'' என்கிருன் கண்ணன்.

கோபிகைகளை அவன் நாலு யாமம்கூடக் காக்க வைக்கவில்லை. சாரதையையோ இவர் நாலு வருடம் காக்க வைத்துவிட்டார் ! சரீர விரகம் வேறு, ஆத்ம விரகம் வேறல்லவா ? பிரிந்திருக்கிருேம் என்று தவிக்கும்போதே, 'இதில் பிரிவு எப்படி இருக்க முடியும் ?' என்ற ஞானமும் உள்ளூறத் தோய்ந்து நிற்பதல்லவா ஆத்ம விரகம் ?

எத்தனை கலக்கத்துக்குள்ளும் ஒரு தெளிவு சாரதைக்கு உண்டு என்று முன்னரே கண்டிருக்கிருேம் அல்லவா ? அந்தத் தெளிவினுல் தான் நாலு வருட காலம் பிரிவுத் துயர், பாசத் துயர், உடல் நோய், உளநோய் அனைத்தையும் தாங்கிக்கொண்டு ஈடு கொடுத்துவிட்டு, இப்போது புத்தம் புதுப் புஷ்பமாக ராமகிருஷ்ணரின் சரண மலரில் வந்து விழுந்திருக்கிருள்.

“படுக்கப் போகிறேன்” என்று கிளம்பினுள் சாரதை.

அவளுடன் வந்தவர்கள், நஹவத் என்ற சங்கீத மண்டபத்திலும், பவதாரிணி கோயிலைச் சூழ்ந்த மற்ற இடங்களிலும் தங்கியிருந்தார்கள். நஹவத் மாடியில்தான் ராமகிருஷ்ணரின் தாயான சந்திரமணி தேவி வசித்து வந்தாள். சாரதையும் இரவை அங்கே கழிக்கவே புறப்பட்டாள், உடல் தடுமாற.

‘‘அம்மா, நீ உடம்பு பூரணமாகக் குணமாகிறவரைக்கும் இங்கேயே தங்கியிருக்கலாம். நஹவத் ரொம்ப நெரிசலாக இருக்கும். அங்கே நீ ஓய்வு எடுத்துக்கறதுக்கும், வைத்தியர் வந்து பார்க்கறதுக்கும் சிரமமாயிருக்கும். உன்கூடப் பல பேர் வந்திருக்கிருர்களே, அதுலே யாராவது ஒரு கிழவியைக்கூட வெச்சுண்டு நீ இங்கேயே இருந்துவிடு’’ என்ருர் ராமகிருஷ்ணர்.

மறுக்க முடியாத அன்புக் கட்டளை.

அதன்படியே கிழவி ஒருத்தியின் ‘துணை’யுடன் கணவரது அறையில் அந்த இரவு சயனம் கொண்டாள் சாரதை. வேகங்கள் புயலாகப் புழுதி வீசுகிற இதயங்களிலெல்லாம் அமிருத விந்துக்களைத் தெளித்துப் புழுதியை அடக்கும் அற்புதத் தம்பதி!

‘‘அடடா, உன் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணவே இல்லையே! ஹ்ருதே, மாமிக்கும் கூட வந்திருக்கிறவாளுக்கும் அம்பாள் பிரசாதம் இருக்கா பாரு” என்ருர் ராமகிருஷ்ணர்.

‘‘மணி பத்தாகிறதே, மாமா! பிரசாதமெல்லாம் தீர்ந்து போச்சு’’ என்று கூறிய ஹ்ருதயராம் அவலைக் கொண்டுவந்து கொடுத்தார்.

மறு நாள் காலை சாரதையின் சிகித்ஸைக்கு வைத்தியரை வரவழைத்தார் ராமகிருஷ்ணர். வைத்தியம் இரண்டாம்பட்சம்தான்; ராமகிருஷ்ணரின் அன்பான கவனிப்பே சாரதைக்கு நாலு நாட்களில் பூரண ஆரோக்கியம் கொடுத்துவிட்டது.

உடல் சூடு முற்றும் குறைந்தது. ‘தண்ணென்றிருந்ததடி’ புதியதோர் சாந்தி பிறந்ததடி’ என்ருயிற்று. மனத்தில் மண்டி எரிந்த புனித விரகத் தீயும் தணிந்தது. அதைவிட முக்கியமாக விராகத் தீயும் அணைந்தது. காமார்புகுரில் சாரதையின் பிள்ளையாசை கொழுந்துவிட்டபோது அதனை நிர்த்தாட்சிண்யமாகச் சமனம் செய்த ராமகிருஷ்ணர், எவரிடமும் பாசமே வைக்காமல் விராகியாகுமாறு

அவளைப் பணித்தாரல்லவா? எல்லோரையும் தன் அன்பில் முழுக் கடிக்கும் அவளுக்கு எவரிடமுமே பாசம் உண்டாகாமல் விராகமா யிருப்பது சாத்தியமில்லைதான். ஆயினும் ராமகிருஷ்ணரின் வாக்கு முகூர்த்தம், அந்தச் சாத்தியமற்றதும் சாத்தியமாகக்கூடிய சூழ்நிலை ஜயராம்பாடியில் ஏற்பட்டது. தன் கணவரைப் பைத்தியம் என்று கூறித் தனது இதயத்தை அனைவரும் புண்படுத்திய சூழ்நிலையில் சாரதாமணியின் பாச ஊற்றும் வற்றியது. பரம விராகியாக, யந்திர கதியில் காரியங்களைச் செய்து வந்தாள். இந்த நாலாண்டுகளில் அநுபவித்த விரகமும், விராகமும் அவளது ஞான வாழ்வின் மறு மலர்ச்சிக்கு அற்புத அடிப்படை ஆயின. சில செடிகள் நன்றாகத் தளிர்த்து வருகிற வரையில் வேர் நனைய நீரை நிறைய ஊற்று வார்கள். பிறகு சிறிது நாள் ஒரேயடியாகக் காயப்போடுவார்கள். மறுபடி நீர் ஊற்றுவார்கள். காமார்புகுரில் அன்பு மழை பொழிந்த ராமகிருஷ்ணர் அதன் பின் நான்கு ஆண்டுகள் சாரதையைக் காயப் போட்டார். இப்போது காய்ச்சல் அனைத்தும் தீர்ந்தது. உடல் காய்ச்சலும், விரகக் காய்ச்சலும் தீர்ந்ததோடு, அவளது விராகக் காய்ச்சல் தீர்ந்ததே அதுவே நமக்கு முக்கியம்! ஆம், இதனால்தான் அவள் இனி அம்மா ஆகப் போகிறாள்! ராமகிருஷ்ணர் விரும்பிய படியே, சரீர சம்பந்தமற்ற குழந்தைகளை எங்கெங்கும் காணும் ஸ்ரீமாதாவாகப் போகிறாள்!

'ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராக்ஞி' என்று தொடங்குகிறது லலிதா ஸஹஸ்ரநாமம். ஸ்ரீமாதாவைச் சொல்லி, அதையடுத்து, அந்த அம்மாவின் சாம்ராஜ்யம் அகிலமெல்லாம் பரவியிருக்கிறது என்கிறது. பொன்மலை முடியிலுள்ள ஸ்ரீபுரத்தைத் தலைநகராகக் கொண்டது அந்த மகா சாம்ராஜ்யம். நம் எளிய ஸ்ரீமாதா சிறிய தக்ஷிணேசுவரத்தின் சின்னஞ் சிறிய 'நஹவத்' தலைநகரத்தில் இருந்து கொண்டு தனது அன்பு ஆட்சியைத் தொடங்கப் போகிறாள்!

உடல் நன்கு ஆரோக்கியம் பெற்றவுடன் நஹவத்துக்குப் போனாள் சாரதை.

நஹவத்தின் அடித்தள அறை சாரதைக்கு ஒதுக்கப்பட்டது. அந்த அறை மிகவும் குறுகிய இடம். அதில் ஏகப்பட்ட கண்டான் முண்டான் வேறு. ராமகிருஷ்ணரைப் பார்க்கக் கல்கத்தாவிலிருந்து ஏராளமானவர் வந்துகொண்டிருப்பராதலால் பர்தாப் பெண்ணான சாரதை அந்த இருட்டறைக்கு வெளியிலேயே தலை காட்ட முடியாது. இவை எல்லாவற்றையும்விட அங்கே குளிப்பதற்கும், இயற்கை அழைப்புகளை நிறைவேற்றவுங்கூட வசதியில்லை. புலரு முன்பே இந்தக் காரியங்களைக் கங்கையில் முடித்துக்கொண்டால்தான் உண்டு.

தன் செல்வ மகள் அங்கே படுகிற கஷ்டத்தைக் காண ராம சந்திரருக்குச் சிரமமாக இருந்தது. அவளும் மாப்பிள்ளையும் உலக ரீதியில் குடித்தனம் நடத்தப் போவதில்லை என்றும் அவருக்கு நிச்சயமாயிற்று. எனவே, ''ஊருக்குப் போகலாமா?'' என்றார் மகளிடம்.

''போய் வாருங்கள்!'' என்று தீர்மானமாகப் பதில் சொன்னாள் தேவி.

கற்பு என்பது சௌகரிய, அசௌகரியங்களையா கவனிக்கும்? பிறந்த மண்ணை, சொர்க்கத்துக்கும் மேலே என்று சொல்லித் தலையிலே தரித்தாள்; கணவன் அருகே இருக்கும் இடமோ சொர்க்கத்தின் மேலுக்கும் மேலே அல்லவா?

ராமசந்திரர் தனியாக ஜயராம்பாடி திரும்பினார். சியாமாசுந்தரி ஆனந்த சோகக் கண்ணீருடன் அவரை வரவேற்றாள்.

''மகள் என்பவள் பிறனுடைய சொத்துத்தான். சகுந்தலையைக் கணவனிடம் அனுப்பியபின் அந்நியச் சொத்தை வைத்துக் காப்பாற்றி அதை உரிமையாளரிடம் திருப்பிய பின் ஏற்படும் திருப்தி பிறக்கிறது'' என்று கண்வ மகரிஷி சொன்னார் அல்லவா? அந்தத் திருப்தி ஏற்பட்டது ராமசந்திரருக்கும் சியாமாசுந்தரிக்கும்.

சாரதையின் பதி சுசுரூஷை வாழ்வு மீண்டும் தொடங்கியது. அதோடு, மாமியாரின் சுசுரூஷையும் சேர்ந்தது. ராம கிருஷ்ணரைத் தேடிவரும் அடியார்களுக்கான சுசுரூஷைகளையும் தொடங்கினாள். அதாவது, ஒரே சமயத்தில் மனைவி, (மாற்றுப்) பெண், அன்னை மூவருமாகத் தொடங்கினாள். ஆனால் மனைவி என்று இல்லற இன்பம் கேட்கவில்லை. பெண் என்று சலுகை கேட்கவில்லை; அம்மா என்று அந்தஸ்து கேட்கவில்லை. மனைவியாக, பெண்ணாக, அம்மாவாக அன்புடன் உழைக்கமட்டுமே செய்தாள். இந்த மூன்று உறவுகளுக்கு ஆதாரமா யிருந்தது இன்னோர் உறவு: குரு-சிஷ்ய உறவே அது!

கணவரிடம் போதனையை மீளப் பெறத் தொடங்கினாள் சாரு. முன்பு விவரம் தெரியாத பெண்ணாக இருந்தாள். இப்போது நாலு வயது கூடிவிட்டதால் சுற்றுப்புறம் இப்படிப்பட்டது, சூழ்ந்துள்ள வர்கள் இப்படிப்பட்டவர்கள் என்பதையெல்லாம் அவள் எடை போட்டு உணர முடியுமல்லவா? எனவே, அவளுக்கு முதல் உபதேச மாக, ''எதைச் சொன்னாலும், எதைச் செஞ்சாலும் எந்தச்

சமயத்திலே அதைப் பண்ணறேம், எந்த இடத்திலே அதைப் பண்ணறேம், யாரைக் குறிச்சு அதைப் பண்ணறேம் என்கிற மூணு அம்சத்தையும் கவனிச்சு, அதுக்கெல்லாம் இசைவான மாதிரியே பண்ணணும். மநுஷ்ய வாழ்க்கையிலே இதுதான் ரொம்பப் பெரிய பாடம். தர்மம், பிரேமை என்கிற ஆதாரத்தை மாற்றிக்காமலே, அதுக்கு மேலே எழுப்பற பேச்சையும், காரியத்தையும் சந்தர்ப் பத்துக்கு ஏற்றுப்போலே சரி செஞ்சுக்கணும்" என்றார் பதி.

அந்த உபதேசத்தின் உண்மை விளக்கமாகவே இதன் பின் அமைந்தது அம்மாவின் வாழ்க்கை.

15. "திவ்யாலங்கார பூஷிதா"

ஓம் ரணத்கிங்கிணி மேகலாயை நம :
(ஒலிக்கும் கிங்கிணி கொண்ட மேகலை
அணிந்தவளுக்கு வணக்கம்)
ஓம் முக்தாஹார விபூஷிதாயை நம :
(முத்துமாலை அணிந்தவளுக்கு வணக்கம்)
ஓம் முக்தாமணி அங்கித சாரு நாஸிகாயை நம :
(முத்து மூக்குத்தி அணிந்த அழகிய நாசியுடைய
வளுக்கு வணக்கம்)
ஓம் ரத்நவலய பூஷிதாயை நம :
(ரத்தின வளை அணிந்தவளுக்கு வணக்கம்)

—ஸ்ரீ சரஸ்வதி தேவி அஷ்டோத்தர சத நாமாவளி

குரு–சிஷ்ய உறவு வறட்சியாக நிற்கவில்லை. இவள் அவருக்குப் பார்த்துப் பார்த்துச் சமைத்துப் போட்டாள்; வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்தாள். அன்பைக் கலந்து பணிவிடைகள் செய்தாள். அவரும் இவளைக் கண்ணின் மணியாக அருமையுடன் நடத்தினார்.

குடித்தனம் செய்ய மனைவி வந்தவுடன், ஆதியில் அம்மா குறைப்பட்டுக்கொண்டதை நிறை செய்தார் ராமகிருஷ்ணர். கலியாணமான புதிதில் லாஹா வீட்டு இரவல் நகைகளைக் குழந்தை சாருவிடமிருந்து அவர் 'பறிமுதல்' செய்தபோது அன்னை சந்திரா அழுது துடித்தாள் அல்லவா? பிறகு சாருவிடம், "கதாயீ இதைவிட நல்ல நகையெல்லாம் உனக்குப் பண்ணிப் போடுவான்" என்றாள் அல்லவா? இப்போது மாத்ரு வாக்ய பரிபாலனம் செய்தார் ராமகிருஷ்ணர்.

ராமகிருஷ்ணர் எண்ணிறந்த பாவங்களில் இறைவனை அநுசந்தானம் செய்தாரல்லவா? அவற்றில் அவர் அம்பிகையின் சேடியாகத் தம்மை பாவித்ததும் ஒரு சாதனையாகும். இன்னொரு சமயத்தில் தம்மை ராதா ராணியாகவே கருதிக் கிருஷ்ண பரமாத் மாவிடம் அன்பு செய்தார். இவ்விரு சாதனைகளின்போதும் அவர் சேலை உடுத்தியும் பின்னலிட்டும் பெண்ணாகவே வாழ்ந்தார். அந்த உணர்வு அடர்த்தியில் அவரது சரீரத்தில் பெண்களுக்குரிய தன்மைகளே ஏற்பட்டு, ஆடவர் சரீரத்திலுள்ள தனித் தன்மைகள் மறைந்தும் விட்டன. இந்தக் காலங்களில் அவர் அணிவதற்கென

ஹாரம், நத்து, கங்கணம் முதலிய ஆபரணங்களை அர்ப்பணித்திருந்தார் மதுர்பாபு.

இப்போது ராமகிருஷ்ணர் அந்த ஆபரணங்களைச் சாரதாமணிக்கு அன்புடன் அளித்தார். பொன்னையும் மண்ணையும் சமமாக பாவித்த சந்நியாசச் சக்ரவர்த்தி, பரிபக்குவம் வாய்ந்த பத்தினிக்குப் பொன்னாபரணங்களைத் தந்தார்!

அதோடு நிற்கவில்லை. ஹ்ருதயரை அழைத்தார். ''இங்கே வருகிற பலபேர் நான் எத்தனை மறுத்தாலும் கேட்காமல் பணக் காணிக்கை செலுத்தறதை எடுத்து வைச்சுப்பியே, மொத்தம் எவ்வளவு சேர்ந்திருக்கு பாரு'' என்றார்.

பணம் என்றாலே பதறும் மாமா, தவறிப்போய்ப் பணத்தைத் தீண்ட நேர்ந்தால் உடல் கொப்புளித்துப் போகும் மாமா, கணக்குப் பார்க்கச் சொல்வது ஹ்ருதயருக்கு வியப்பாக இருந்தது.

கணக்குப் பார்த்தார். முந்நூறு ரூபாய் இருந்தது.

''சரி, மாமிக்கு அதிலே பொன் காப்புப் பண்ணிப் போடு. அந்தக் காப்பு முனையிலே வைரக் கல் பதிக்கணும். ஏன் தெரியுமா? ஸீதை அப்படிப்பட்ட கங்கணம்தான் போட்டுண்டு இருந்தா. ராவணன் தூக்கிண்டு போகச்சே ஸீதா தேவி எல்லா நகைகளையும் கழட்டிப் போட்டாலுங்கூட, இந்த மங்கள கங்கணத்தைமட்டும் கழட்டலே. ஆமாண்டா, நான் முதன்முதல்லே கண்ணைத் திறந்துண்டே தரிசனம் பண்ணின அசோக வனத்துப் புழுதி ஸீதையின் கையிலே இந்தக் கங்கணம் பளிச்சினு மின்னித்து'' என்றார்.

லௌகிகமாகத் தோன்றுகிற ஒன்றுக்குள்ளே எத்தனை புனிதம்!

சேவையில் சோகத்தை மறந்து தக்ஷிணேசுவரத்தை அசோகமாக்கப் போகிறவள் சாரதை! அசோக வனத்தில் சிறைப்பட்டது போல் நஹவத்துக்குள் சிறைப்படவும் போகிறாள்!

திருமணத்தின்போதே கங்கணச் சரட்டை எரித்துக்கொண்ட ராமகிருஷ்ணர், தமது ஸீதா தேவிக்கு வைரம் பதித்த கங்கணத்தை அளித்தார்.

''ஹ்ருதூ, இதுக்கு என்ன செலவு ஆச்சு?'' என்று கேட்டார்.

''இருநூறு ரூபாய்'' என்று பதில் வந்தது.

''அப்படீன்னு பாக்கி நூறு ரூபாயையும் மாமிகிட்டக் கொடுத்துடு. அவதானே இனிமே யஜமானியம்மா?'' என்ருர்.

பற்றி எரிகிற இதயத்துடன் ஹ்ருதயர் அந்தப் பணத்தை மாமியிடம் கொடுத்தார். அவள் அதைத் தனக்காகச் செலவழித்துக் கொள்ளவில்லை. பரம ஏழைமையிலிருந்த தன் பிறந்தகத்துக்கும் அனுப்பிவிடவில்லை. ஹ்ருதயர் உள்ளிட்ட ராமகிருஷ்ண பக்தர்களுக் காகவே உணவுப் பண்டம் முதலியன வாங்கிப் போட்டாள்.

அகலமாகச் சிவப்புக் கரை போட்ட மங்கள வஸ்திரம் உடுத்து, வகிட்டிலே செங்குங்குமம் அப்பிக்கொண்டு, மூக்கிலே பெரிய நத்தும், கழுத்திலே காசு மாலையும் மின்ன, கரங்களில் கங்கணங்கள் கிணுகிணுக்க, முழங்காலை எட்டும் அடர்ந்த பின்னலுடன் தேவி சாரதாமணி நஹவத்தின் மாடிக்குச் சென்று மாமியாரின் பாதத்தில் பணிந்தாள்.

அந்த ஸர்வ மங்களையைக் கண்டு சந்திரமணியின் கண்கள் யளித்தன.

எத்தனையோ காலத்துக்குப் பின் இப்போது கற்பிதமாக எண்ணும்போதே நம்முடைய கண் பனிக்கிறது எனில், அந்த இனிக்கும் கோலத்தை நேரில் கண்ட சந்திரா ஏன் கரையமாட்டாள்?

''தீர்க்க ஸுமங்கலீ பவ'' என்ற வார்த்தைகளைச் சொல்லவும் முடியாமல் தடுமாறினுள் அவள்.

ஆஹா, அந்தப் புண்ணியவதி தடுமாருமல் அப்படி ஆசிர்வதித் திருக்கக்கூடாதா?...சரி, மங்கள வேளையில் அதை ஏன் நினைக்க வேண்டும்?

மங்களமும் கரித்தது ஹ்ருதயருக்கு. என்ன இருந்தாலும் மாமிக்கு இந்த நகை ஆசை வேண்டியதில்லை என்று தோன்றியது.

அவரிடம் ராமகிருஷ்ணர் – நம் காலத்து யுவதிகளுக்கே சொல் வது போல் – சொன்னுர்: ''பெண்கள் நகை நட்டுகளுக்கு ரொம்ப வும் ஆசைபடக் கூடாது. வண்டி நகையை வாரிப் போட்டுக்கப் படாது. ஆனு அதுக்காக மூளியாகவும் நிக்கக் கூடாது. மங்கள ஸ்வரூபமா யிருக்கணும். ஸரஸ்வதி தேவி ஒரே வெள்ளை, ஒரே எளிமைதான். ஆனு அவளுக்கு 'திவ்யாலங்கார பூஷிதா'ன்னு பேர்

உண்டு தெரியுமா? அதனாலேதான் மாமியும் சந்தோஷமா நகை போட்டுக்கறா."

சொல்லும்போதே அவரும் சந்தோஷப்பட்டார்!

சாரதை நஹவத்துக்குப் போன பின் அவள் ராமகிருஷ்ணரைச் சந்திப்பது மிக மிகக் குறைந்து போயிற்று. தக்ஷிணேசுவரக் காளி கோயிலுக்கும், ராமகிருஷ்ணரைப் பார்ப்பதற்கும் பகலெல்லாம் பலர் வந்தபடி இருந்ததால், வெகு கடுமையாக 'கோஷா' முறையை அநுசரித்த சாரதை, பதிதேவருக்கு உணவு எடுத்துச் செல்வது தவிர மற்றப் போதுகளில் தன் அறையை விட்டு வெளி வருவதை அடியோடு நிறுத்திக்கொண்டாள். ஆனால் ராமகிருஷ்ணரோ அவளுக்குப் பலவித மந்திரோபதேசங்களையும், வேறு பல போதனைகளையும் தர விரும்பிப் பக்கலில் வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இவைதாம் அவர் அவளுக்கு அளிக்கவிருந்த நிரந்தர ஆபரணங்கள். சாரதைக்குப் பகலில் பயிற்சி தர முடியாததால் வெளியுலகம் எண்ணிப் பார்க்க முடியாத ஒரு புதுமை - அச்சமும் ஆனந்தமும் சேர்ந்த புதுமை - இவர்களது வாழ்வில் தொடங்கியது! இரவு வேளைகளில் ராமகிருஷ்ணர் சாரதையைத் தமது அறையிலேயே வைத்துக்கொண்டார்!

முதலில் அவள் வந்தபோது ஒரு கிழவியைத் துணை வைத்துக் கொள்ளச் சொன்னவர், இப்போது தங்கள் இருவரது மனங்களின் புனிதமே துணை இருக்க வெளித் துணை எதற்கு என்று கருதினார்.

தாழிடாத அறையில் அந்த ஒப்பில்லாத தம்பதியரின் இரவுகள் கழிந்தன.

ராமகிருஷ்ணரைப் பைத்தியம் என்று சொன்னவர்கள் இருந்தார்கள். அவர் ஒன்றும் தெரியாத அப்பாவி என்று நினைத்தவர்கள் இருந்தார்கள். அவரது தெய்விக அவதாரத் தன்மையைப் புரிந்துகொள்ளாதவர்கள் அதைவிட ஏராளமாக இருந்தார்கள். ஆனாலும் எவருமே அவரது தூய்மையைப் புரிந்துகொள்ளாமல் இல்லை. பைத்தியம் என்றும் பேதை என்றும் அவரைச் சொன்னவர்களும், அவரைப் பிரம்மசரியத்தில் குறைந்தவராக ஒருபோதும் சொல்லவில்லை - இளம் மனையாளுடனேயே அவர் இரவுகளைக் கழித்த போதிலும்! இப்படி ஒரு பேச்சு எழும்பாததொன்றே போதும் அவரது சீலத்தின் சிறப்புக்கு!

பக்கத்தில் மனைவியை வைத்துக்கொண்டே சந்நியாசத்தைக் காக்க வேண்டும் என்பதை அவர் முன்பே காமார்புகுரில் நடைமுறை

யாக்கியதில் அவ்வளவு விசேஷமில்லை. அப்போது சாரதை ஓரளவு குழந்தை நிலையிலேயே இருந்தாள். மேலும் பகல் நேரங்களில் மட்டும் பலருக்கிடையேதான் அவர்கள் பழகினர். இப்போதோ அவள் பத்தொன்பது வயதுப் பெண்மணி. இரவில் ஏகாந்தத்தில் அவர்கள் காந்தன் – காந்தை என்ற நினைப்பின்றி வாழ்ந்தது சமய சரித்திரம் கண்டிராத சாதனை!

சாதனையில் அவளைச் சோதனையும் செய்தார் ராமகிருஷ்ணர் ஒரு முறை.

''பிரியே! உன்னை நான் தொட்டுத் தாலி கட்டியிருக்கேன்! எனவே, உனக்குத் தாம்பத்திய இச்சை இருந்தா அதைப் பூர்த்தி செய்யறது சாஸ்திரப்படியும் சட்டப்படியும் என் கடமை. என்னை லௌகிகத்துக்கு இழுக்கத்தான் நீ ஜயராம்பாடியிலிருந்து இங்கே வந்திருக்கேன்னு, நீ இழுத்த இழுப்புக்கு நான் இசையத்தான் வேணும்...''

தன்மேல் தணலை வாரிக் கொட்டினாற்போல் துடித்தாள் சாரதை. இடை மறித்தாள்: ''ஏன்னா இப்படிப் பேசறேள்? நான் ஏன் உங்களை லௌகிகத்துக்கு இழுக்கணும்? நீங்க உங்களுக்குன்னு ஒரு மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்திருக்கேளே, அதிலே உங்க பிரயாணத் துக்குச் சகாயம் பண்ணறத்துக்காகவேதான் வந்திருக்கேன்.''

ஒன்றும் தெரியாதவள்போல் இருந்துகொண்டே எப்பேர்ப்பட்ட ஒப்பற்ற மொழிகளைச் சொல்லிவிட்டாள்!

'சகதர்ம சாரிணி'யாக முழுக்க முழுக்க அவருடன் தர்மத்தில் உடன் நடந்து உதவவே வந்தவள் அவள்.

தன்னைப் பார்த்து அவர் அந்த வார்த்தை சொன்னது அவள் மனத்தில் உறுத்திக்கொண்டே இருந்தது போலும்! ஒரு நாள் இரவு 'எதிர்த் தாக்குதல்' கொடுத்தாள்.

அவருடைய பாதங்களைப் பிடித்துவிட்டுக்கொண்டிருந்தாள் அவள். அவர் புன்முறுவலுடன் அவளையே பார்த்துக்கொண் டிருந்தார்.

அந்தப் புன்னகையின் புனிதம் புரியாததுபோல் சாரதா தேவி, ''என்னை எந்த எண்ணத்துடன் இப்படி உற்றுப் பார்க்கறேள்?'' என்று கேட்டாள்.

ராமகிருஷ்ணர் தணல் பட்டதுபோல் துடித்துப் பதில் சொல்ல வில்லே. சாந்தமாக, பக்தி புஞ்சிதமாகச் சொன்னர்: ''கோவிலுக் குள்ளே ஒரு அம்மா இருக்கா. அந்த அம்மாவே இன்னெரு ரூபத்திலே வந்து என்னைப் பெற்றுப் போட்டுவிட்டு இப்போ நஹவத் மாடியிலே இருக்கா. சாக்ஷாத் அதே அம்மாதான் இன்னெரு வேஷத்தைப் போட்டுண்டு இதோ என் கால்மாட்டிலே உட்கார்ந் துண்டு பிடிச்சு விடரு. சத்தியமாகச் சொல்றேன். உன்னை என் ஆனந்த மாதாவோட ஸ்வரூபமாகத்தான் பார்க்கறேன்."

சாந்தமாக ஆரம்பித்தவர் விக்கினர். 'குடைய' எண்ணியவளும் விக்கினள்.

இன்னேர் இரவு. அவள் ஒரே அமைதியாக உறங்கிக்கொண் டிருந்தாள். உழைத்துக் கொட்டிய களைப்பிலே நல்ல தூக்கத்தைத் தேகம் அநுபவித்தது. கண்டதை எண்ணிக் களைக்கத் தெரியாத மனமாதலால் அந்த நித்திரையில் நிர்மல நிம்மதி நிலவியது. சீராகச் சுவாசித்துக்கொண்டு தேவி உறங்கியது, ஏதோ சமாதி நிலேபோலத் தோன்றியது.

ராமகிருஷ்ணர் அந்த உருவத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார். 'ஹ்ம்' என்று தம் உடலைக் குலுக்கிக்கொண்டார். 'வெறும் மாமிசப் பிண்டமாகப் பார்த்தால் இதுதான் பெண் உடல் என்பது. இதை அநுபவிப்பதுதான் வாழ்க்கையில் தலே சிறந்த இன்பம் என்று கருதி மக்கள் இதன் பின் ஓடுகிருர்கள். ஆனல் இதை இன்பம் என்று ஏற்றுவிட்டாலோ, அப்புறம் தேக உணர்வு என்கிற பொறியிலே சிக்கிவிட வேண்டியதுதான். பிறகு சத்–சித்–ஆனந்த பரிபூரணமான பரம்பொருளை அடைவது முடியாத காரியம். ஏ கதாயீ! உனக்கு நீயே போலித்தனம் பண்ணிக் கொள்ளாதே! உள்ளுக்குள்ளே ஒரு நாட்டத்தை மறைத்து வைத்துக்கொண்டு வெளியே பொய்யாக இன்னெரு சித் தாந்தத்தைப் பின்பற்ருதே! நிஜமாகச் சொல்லடா, உனக்கு இந்தப் பெண் உடம்பு வேண்டவே வேண்டாம், பரம் பொருள்தான் வேண்டும் என்று சர்வ நிச்சயமாகத் தீர்மானம் இருக்கிறதா? இந்த உடம்பு வேண்டுமென்ருல் இதோ உன் முன்னே நீ அநுபவிக்கவே அது கிடக்கிறது. உன்னைப் பரம சந்நியாசியாக நினைத்துக் கொண்டுள்ள நீ அதை எந்த விகல்பமும் இல்லாமல் தொட முடியுமா, பார்' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார்.

பரீட்சித்துப் பார்ப்பதற்காகக் கையை நீட்டினர். அவ்வளவு தான்! பூமியின் ஆகர்ஷணத்தை மீறி விண்வெளியில் ஆயிரமாயிரம்

காத வேகத்தில் பறக்கும் கலம் போல ராமகிருஷ்ணரின் உள்ளம் கிறுகிறுவென்று உயரே, அப்பாலும் உயரே, அதற்கும் உயரே, மேலும் உயரே பறக்கலாயிற்று.

'தொடுவதா? தொடுவதா? அப்படியானால் தொடுகிறவன், தொடப்படும் வஸ்து, தொடுதல் என்ற பேதங்கள் உள்ளனவே! அண்ட சராசரங்கள் அனைத்திலும் பரவியிருக்கும் ஏக வஸ்துவான எனக்குப் புறம்பாக, நான் தொட்டுப் பார்க்கும்படியாக, எது இருக்கிறது?' ராமகிருஷ்ணர் அதி உன்னத சமாதி நிலைக்கு ஆரோகணித்து விட்டார்.

விகல்பமின்றி அவளைத் தொட முடியுமா எனப் பரீட்சை பார்த்தவர் நிர்விகல்ப சமாதியே எய்திவிட்டார்.

வழக்கம் போல் பின்மாலை நாலு மணிக்கு எழுந்த சாரதை, கணவர் பிரக்ஞையற்று ஆணி அறைந்தாற் போல் அமர்ந்திருக்கும் நிலை கண்டு நடுங்கிவிட்டாள். பிரக்ஞை இல்லையா? அதுதான் உண்மைப் பிரக்ஞை. 'பிரக்ஞானம் பிரம்ம' என்ற நிலை அது. ஆனாலும் வெளி வியாபாரம் ஒடுங்கிவிட்ட அந்த நிலையில் கணவரைக் கண்டு கதிகலங்கி விட்டாள் சாரதை.

ஹ்ருதயர் வந்து 'மாமா'வின் காதில் பகவந் நாமங்களை நீண்ட நேரம் கோஷித்த பின்தான் ராமகிருஷ்ணரின் சமாதி கலைந்தது.

அதன் பின் ராமகிருஷ்ணர் மனையாளுக்குத் தமது சமாதியின் பலவித பாவங்களை விளக்கி, தம்மிடம் புறத்தில் இன்னின்ன அடையாளங்களைக் கண்டால் அது இந்த வகைச் சமாதியைக் குறிக்கும் என்று விவரித்து, அவை ஒவ்வொன்றிலிருந்தும் தம்மைக் கலைத்தெழுப்ப என்னென்ன நாமங்களை அல்லது மந்திரங்களைக் காதில் ஓதவேண்டும் என்பதையும் சாங்கோபாங்கமாகச் சொல்லிக் கொடுத்தார்.

அதித நிலை எய்தவே மந்திரோபதேசம் செய்வார்கள். இந்த விசித்திரக் கணவரின் அதித நிலையைக் கலைப்பதற்கு அவரது காதில் மந்திரம் ஓதுவாள், அதைவிட விசித்திரமான மனைவி.

சாரதைக்கு ராமகிருஷ்ணர் சகல மந்திரங்களையும் உபதேசித்தார். முன்பு காமார்புகுரில் அவள் இருந்தபோது பூர்ணானந்தர் என்ற தேஜஸ்வியான உத்தம சாது அங்கு எழுந்தருளிப் பலருக்கு மந்திரோபதேசம் செய்தார். அவர் சாரதைக்கும்

குழந்தை லக்ஷ்மிக்குங்கூட, சக்தி மந்திரத்தை உபதேசித்திருந்தார். மந்திரோபதேசம் என்பது மகான்களின் வாழ்வில் மிகவும் முக்கிய மான ஒரு கட்டம். ஆனுல் சக்தியவதாரமான சாரதை சக்தி மந்திரம் பெற்றதில் விசேஷமாக ஏதும் நிகழவில்லே. வித்தின்மீதும் பயிரின்மீதும் விழுந்தவுடன் பச்சை அற்புதத்தைப் புனேயும் மழை, நீர்ப் பரப்பின்மீதே விழுந்தால் எந்த அற்புத மாறுதலேயும் விளேவிப்பதில்லே! பல சாதகர்களின் உட்புகுந்து அற்புத மாற்றங் களேச் செய்யும் சக்தி மந்திரம், சக்தியவதாரமான சாரதையினுள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லே போலும்! அல்லது, நமக்குத் தெரியாமலே மாற்றம் உண்டாக்கி இருக்கலாம். அவளது பௌதிக மான குழந்தை ஆசை பஸ்மமாகி, அவள் ஜயராம்பாடியில் வாழ்ந்த பரம வைராக்கிய வாழ்வுக்கு அந்த மந்திரந்தான் காரணமோ என்னவோ?

சாரதையின் தாய்மையை அடக்கி வைக்கவேண்டுமென்று ராம கிருஷ்ணர் நினேத்த காலம் இப்போது போய்விட்டது. இப்போது அவளுக்குள் உள்ள தாய்மையைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தட்டி எழுப்ப முற்பட்டார். அதை உலகனேத்தும் தழுவும் ஜகன்மாத்ருத்வ மாக்கக் கருதினுர். அதற்குச் சாதனங்களாகவே பல மந்திரங்களே உபதேசித்தார். அவளது திருநாவிலும் ஒரு மந்திரத்தை எழுதி யருளினுர். தாம் திரட்டிய ஆத்மிகச் செல்வத்தையெல்லாம் இவ்வாருகச் சாரதைக்குள் செலுத்தினுர்.

மந்திரம் என்ருல் என்ன? மனனம் செய்பவனேக் காப்பது எதுவோ அதுவே மந்திரம். மந்திரம் என்பது ஒலிகளின் சேர்க்கை தானே, அதை ஜபித்தால் எப்படி இறைவனே அடைய முடியும் என்று தோன்றலாம். ஒலிகளின் சக்தி அபரிமிதமானது. அசைவு ஏற்படும் இடங்களில் எல்லாம் ஓர் ஒலியும் உண்டாகும் என்பது விஞ்ஞானம். அசைவற்ற பிரம்மம் ஆகாயமாகவும், காற்ருகவும், தீயாகவும், நீராகவும், மண்ணுகவும், இன்னும் எண்ணிறந்த பொருட் களாகவும், சக்திகளாகவும், எண்ணங்களாகவும் தோன்றிய போதெல்லாம் வெவ்வேறு அசைவுகள் உண்டாகித்தானே இருக்க வேண்டும்? இந்த அசைவுகளின்போது ஏற்பட்ட ஒலிகளே ஒத்த மானுட சப்தங்களே மகரிஷிகள் கண்டுகொண்டார்கள். இந்தச் சப்தக் கோவைகளே மந்திரங்கள். அவை எந்த மொழியையும் சேர்ந்தவையில்லே. இந்தச் சப்தக் கோவைகளேச் சுத்தமாக மொழி வதன்மூலமே, மூல அசைவிலிருந்து பிறந்த சக்திகளேயும் படிப் படியாகக் கிரகித்து, கடைசியில் அந்தச் சக்திகளுக்கெல்லாம் மூலமான அசைவற்ற ஏகத்தையும் பிடித்துவிடலாம். செல்வத்தைத் தரும் சக்தி, வித்தையைத் தரும் சக்தி, ஞானம் தரும் சக்தி, அழகு தரும்

சக்தி—இப்படி ஒவ்வொன்றுக்கும் ஏற்றபடி அதிர்வுகளை உண்டாக்கும் சப்தக் கோவைகளின்மூலம், ரேடியோப் பெட்டியில் அதிர்வுகளைக் கொண்டு பல நிலையங்களைப் பிடிப்பது போல், பலவித சக்தி அசைவுகளின் ஆதாரத்தைப் பிடிக்கலாம். நல்ல சக்தியைப் பிடிக்கவும் மந்திரம் உண்டு; தீய சக்தியைப் பிடிக்கவும் மந்திரம் உண்டு. நல்லது—அல்லது என்ற வேற்றுமை அற்ற ஞான நிலை எய்தவும் மந்திரம் உண்டு. ராமகிருஷ்ணரோ சாரதையை நல்லதும் தீயதும் அற்ற ஆத்மாவைத் தனக்குள்ளும், எது நல்லது எது தீயது என்று பிரித்துக் காணும் பாங்கை வெளியிலும் காண்பதற்காகவே மந்திரங்களை உபதேசித்தார். அதோடுகூட, அவளது ஜீவசாரமாக, வெளியில் நன்மை தீமை மாறுபாட்டைக் கண்டபோதிலும் அவளைப் பொறுத்தமட்டில் தீமையை விரட்டி ஒதுக்காமல் வெளி உலகம் முழுவதற்கும் நல்லது மட்டுமே செய்வதற்கும் மந்திரங்களைக் கொடுத்தார். எல்லா மகா புருஷர்களிடமுமே இந்த விசித்திரக் கலவையைக் காண்கிறோம். அவர்கள் நன்மை, தீமை இரண்டும் கலந்த மாய உலகைக் கடந்தவர்கள்; ஆயினும் உலகில் எது நல்லது, எது தீயது என்று அவர்களுக்குத்தான் தெரிகிறது; அதே சமயத்தில் நல்லவர், தீயவர் இரு சாராரையும் அவர்கள் ஒரே போல் அன்புடன் அரவணைக்கிறார்கள்; உலகுக்கு நல்லதுமட்டுமே புரிகிறார்கள்.

இந்த உத்தமச் சிறப்புகள் மந்திரோபதேசத்தால் சாரதைக்குக் கிட்டின என்பது சரிதானா? அவளது சுபாவத்திலேயே அவை இருக்கவில்லையா? சுபாவத்தில் இருந்ததையே மந்திரங்கள் நிலைப்படுத்தின எனலாம்.

அவள் பலவிதமான மந்திரங்களில் உபதேசம் பெற்றதற்கு இன்னொரு காரணமும் உண்டு. எதிர்காலத்தில் அவள் தன்னிடம் வந்தோரில் ஏராளமானவருக்கு அவரவருக்குரிய மந்திரங்களை உபதேசித்து நல்வழிப்படுத்தப் போகிறாள். இதற்காகவே முதலில் அவற்றைத் தானும் மந்திரமூர்த்தியான நாயகனிடமிருந்து பெற்றாள் போலும்!

சாரதை தனக்கே உரிய சிரத்தையுடன் மனம் குவிந்து அந்த மந்திரங்களை ஜபித்தாள். நாள் முழுதும் ஓயாத வேலையாதலால், காலையில் மூன்று மணிக்கே எழுந்திருந்து, சுமார் ஒன்றரை மணி ஜப யோகத்தில் கரைந்திருப்பாள். பின்மாலையிலிருந்து இவ்விதம் தீவிர ஜபம், ஓயாத உழைப்பு என்றிருப்பினும் அவள் எப்போதும் புது நிலவாகவே இலங்கியதுதான் அதிசயம்!

பவதாரிணியின் அருள் பொலியும் தக்ஷிணேசுவரத்திலே பாலாக நிலா பொழிந்துகொண்டிருந்தது. கங்காதேவி க்ஷீரசாகரமாக ஓடிக்கொண்டிருந்தாள்.

சந்திரன் தன் வெண்மையால் மௌனம் பரப்புவதாயும், தாவரம் தனது பசுமையால் கவிதை பொழிவதாகவும் ரவீந்திரநாதர் பாடினுர். இங்கே சந்திரனின் வெண் மௌனத்தை கங்கை வாங்கிக் கொண்டு தன் வெள்ளலைகளாலேயே கவிதை பாடினுள். அந்தக் கவிதைக்குள்ளேயே மோன சௌக்கியமும் திகழ்ந்தது. வம்பிலேயே மௌன சுகம் தரும் ராமகிருஷ்ணர் கங்கைக் கரைக்குச் சாரதா தேவியுடன் வந்தார்.

கருணைச் சந்திரனை ராமகிருஷ்ணர், சில கங்கையான ராதைக்கு முழுமதியைக் காட்டினுர்.

அந்த ஒளியில் தாய்மையின் தண்மையையும், ஒழுக்கத்தின் வெண்மையையும் ஒருங்கே அநுபவித்த தேவி, சந்திரனைக் கை எடுத்துக் கும்பிட்டாள். ''நானும் உன்னைப் போலவே ஆகணும். உனக்குங்கூடக் களங்கம் இருக்கு. அந்தக் களங்கமும் இல்லாமல் நான் பரிபூரண சந்திரனுகவே ஆகணும்'' என்று பிரார்த்தித்தாள்.

''என்ன பேசறே! குழந்தை 'அம்புலி மாமா வா வா' கூப்பிடறதா?'' என்று கேட்டார் ராமகிருஷ்ணர்.

சாரதை மௌனம் சாதித்தாள்.

ராமகிருஷ்ணரே பேசினுர்: ''அம்புலி மாமா, சந்த மாமா இப்படி எல்லாம் சந்திரனுக்குப் பேரு. இந்தியா தேசம் முழுக்க எல்லாப் பிரதேசத்திலேயும் சந்திரனை 'மாமா' 'மாமா'ன்னே குழந்தைகள் கூப்பிடறதுகள். இந்தக் குழந்தைகள் தங்களுக்குள்ளே எத்தனையோ வித்தியாசம் பாராட்டறதுகள். அதுகள் வெவ்வேறே பாஷை பேசறதுகள். அதிலே சில குழந்தைகள் பணக்கார வீட்டிலே சௌக்கியமா வளர்றதுகள், சில குழந்தைகள் சேரியிலே படாத கஷ்டமும் படறதுகள். ஜாதி, அந்தஸ்து, பாஷை எல்லாத்திலேயும் வித்தியாசம் இருந்தாலும் சந்திரனை 'மாமா'ன்னு உறவு கொண்டா டறதுலே மட்டும் அத்தனை குழந்தைகளுக்கும் வித்தியாசமே இல்லை. அப்படியேதான் ஈசுவரன் அத்தனை பேருக்கும் ஒரே உறவா இருக்கான். அந்த ஒரு உறவைப் புரிஞ்சுண்டா, உலகத்திலே இருக்கிறவா அத்தனை பேருக்கும் அவன் அதே உறவுன்னு புரிஞ் சுண்டா, அப்புறம் அத்தனை பேரும் நமக்கு உறவுன்னு புரிஞ்சுடும்.''

முன்பு அவள் தாய்மைக்குத் தவித்தபோது உலகிலிருப்பவர்களை எல்லாம் மாயையாக ஒதுக்கச் சொன்னவர் இப்போது அனைவரையும் அன்புடன் உறவு பாராட்டச் சொன்னது சாரதையின் உள்ளத்தில் நிலவைப் பொல்லென்று பெய்தது.

வேண்டுமென்றே, ''ஜனங்கள் எல்லாம் உறவு என்றால் எந்த முறையில்? கூடப் பிறந்தவாளா, பெற்றெடுத்தவாளா, அல்லது...'' என்று அவள் கேட்கும்போதே அவளை ஊடுருவித் துளைத்துப் பார்த்துப் புரிந்துகொண்ட ராமகிருஷ்ணர், 'அடி கள்ளி! இந்த நாலு வருஷத்தில் நல்ல திட்பமாக வளர்ந்து என்னையே ஆழம் பார்க்கிறாயா?' என்று நினைத்தார். அதில் அவருக்கு எல்லையில்லாத உவகை.

பிரியத்துடன் புகல்வார்: ''ஈசுவரன் நமக்கு எப்படி உறவு – மநுஷ்யாள் எப்படி உறவு – என்கிறதை எப்படி விவரிக்க முடியும்? எந்த உறவா வேணாலும் வைச்சுக்கலாம். அன்பு பூரணமாகச் செழிச்சு நிற்கிற உறவு அது. பொதுவாக, ஈசுவரனை அம்மான்னு நினைச்சுண்டாலே இப்படி அன்பு முழுமையாகச் செழிச்சு நிற்கும்; அதே மாதிரி மற்ற மநுஷ்யாளைக் குழந்தைகள்னு, ஆமாம், குழந்தைகள்னுதான் சொல்றேன்...''

சாரதாமணியின் அந்தராத்மாவுக்குள் குறுகுறுத்துக்கொண்டு பாய்ந்தன, அந்த வார்த்தைகள். 'நாலரை வருஷங்களுக்குப்பின் அவர் என் வழிக்கு வந்துவிட்டார்; இல்லை, இல்லை, என்னை என் வழிக்கே தகுதியுள்ளவளாக்கி அதில் சேர்க்கிறார்!'

விம்மிவிட்டாள் தேவி சாரதாமணி.

16. ஸ்ரீ ராஜராஜேசுவரி

சிந்தூரம் போல் செவேலென்ற திருமேனியள்; பிரம்மன் முதலிய சகல தேவதைகளாலும் சேவிக்கப்பெறும் உயர்நலமாகிய பரதேவதை; கரும்பு வில், மலரம்பு, பாசம், அங்குசம், புத்தகம், சிறந்த மாணிக்க அக்ஷமாலை இவற்றை நாலு கரங்களில் தரிப்பவள்; மற்றும் இரு கரங்களால் மார்பகத்தின்மீது மேவும் ரத்தினம் இழைத்த வீணையை மீட்டுபவள்; ஒரு கரத்தால் அபயம் அருள்பவள்; ஒரு கரத்தால் வரம் வழங்குபவள்; ஆளும் தன்மை, தர்மம், கீர்த்தி, செல்வம், வைராக்கியம், மோக்ஷம் ஆகிய ஆறு 'பக'ங்கள்க்கும் உறைவிடமான பகவதி; இப்பேர்ப்பட்ட ஸ்ரீ லலிதா மகா திரிபுரசுந்தரியாம் ஸ்ரீ ராஜராஜேசுவரியை-பதினாறு அட்சரத் தொகை கொண்ட ஸ்ரீ ஷோடசி மகா மந்திரத்தின் தேவதையை ஆசிரயிக்கிறேன்.

— ஸ்ரீ ஷோடசி தியானம்

சாரதை விம்முகிறபோது ராமகிருஷ்ணர் புன்சிரிப்புடன் பேசினார். எந்தப் பிரேமையினால் அவள் விம்மினாளோ, அதே பிரேமையால் அவர் புன்னகைத்துப் புகல்வார்:

''அம்மா, அசட்டுச் சாரு அம்மா, ஞானத்திலே சமர்த்தாயிருந்தாலும் அன்புக்காக அசடாகிறதிலேயே ஆசை வைச்ச சாரு அம்மா! நான் உன்னை அம்மான்னு கூப்பிடறமாதிரி குழந்தைகளும் அம்மான்னு கூப்பிடணும்னுதானே ஆசைப்பட்டே? அந்த ஆசை நிறைவேறாதுன்னு நினைச்சு இனிமே விசனப்படாதே. அம்மான்னு யார் கூப்பிடறாளோ இல்லையோ, அதைப் பொருட்படுத்தாம நீ எல்லாருக்கும் அம்மாவா இருந்துண்டு இரு. இப்போ உனக்கு இளம் பிராயமானபடியால் 'அம்மா'ன்னு யாரும் வெளிப்பட ஆவேசப் பட்டுண்டு உன்னண்டை வரணும் என்கிறதில்லை. நீயும் உன் உடம் போடு பின்னி வைச்ச லஜ்ஜையை விட்டுட்டு, 'மகனே, மகளே'ன்னு யாரையும் வெளிப்படக் கூப்பிட்டுத் தாய்மையைக் காட்டணும் என்கிறது இல்லை. எப்படிச் சாக்ஷாத் விசுவமாதா தன்னைக் காட்டிக்காம, ஒளிஞ்சுண்டிருந்தே, அத்தனை பேருக்கும் அம்மாவா அன்பு பண்ணறாளோ, அப்படியே நீயும் திரைக்குள்ளே இருந் துண்டே, மனசுக்குள்ளே அம்மா சாம்ராஜ்யத்தைப் பரப்பிக்கோ! அன்புக்கு அடக்கம் கிடையாதுன்னு சொல்லுவா. நீ லோகத்துக்கே புதுமையா அடக்கம், அன்பு இரண்டுக்கும் ஸ்வரூபமா இருந்துண்டு இரு. அப்புறம் ஒரு காலம் வரும். சாரு என்கிற பெண், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சாரதாமணி தேவியார் என்கிற பெரிய மநுஷியா ஆவா. அப்போது நீ வெளியேயும் உன்னை அம்மாவாக் காட்டிக்கலாம். அப்போது

மநுஷ்யாளும் தானுகவே உன்னே அம்மா அம்மான்னு கூப்பிட்டுண்டு ஓடி வருவா...''

—இப்படியெல்லாம் ராமகிருஷ்ணர் வாய்விட்டுச் சொல்லவில்லே. ஆனாலும் அவள் குழைந்து அழுதபோது அவர் குழறிக் குழறி எதையோ சொன்னுர்; எதையோ சொல்ல முடியாமல் தவித்தார். அவர் சொன்னதிலும் சொல்ல முடியாமல் த்வித்ததிலும் இத்தனே வார்த்தைகளேயும் சாரதையின் அகச் செவி கேட்டுக் கொண்டது.

அவளுக்கு முன் அன்னேயின் அன்பு சாம்ராஜ்யம் விரிந்தது. அவள் ஸ்ரீ மாதாவாகவும், ஸ்ரீ மகாராக்ஞியாகவும் அந்தச் சாம்ராஜ் யத்தில் வீற்றிருக்கிருள். அவளேச் சுற்றிக் குழந்தைகள், குழந்தைகள், குழந்தைகள் – கணக்கே இல்லாத குழந்தைகள், பல ஜாதிக் குழந்தைகள், பல வேறு மனநிலேயிலும் செல்வ நிலேயிலும் உள்ள குழந்தைகள். 'ஆகா, இதோ இந்தக் குழந்தைகள் என்ன இத்தனே வெளுப்பாக இருக்கிருர்கள்! மதி நிலவில் முழுகியிருப்பதால் வெள்ளே வெளேரென்று தோன்றுகிருர்களா?'

ராமகிருஷ்ணரின் மனமோகனக் குரல் அவளது மனோராஜயத் தைக் கலேத்தது – அல்லது நிலேக்க வைத்தது: ''அம்மா அம்மான்னு ஏங்கி அழைச்சுண்டு உன்னே ரொம்பப் பேர் தேடி வருவா. இந்தத் தேசத்துக்காரா மட்டும் இல்லே. வெள்ளேக்காரத் தேசத்திலேருந்து கூட வெள்ளேக் குழந்தைகள் வரும்.''

முதல் வெள்ளேக் குழந்தையாக ராமகிருஷ்ணரே அவள் முன் நின்றுர் – அம்மா, அம்மா என்றழைத்துக்கொண்டு!

''பத்துக் குழந்தைகளேப் பெற்றெடுத்துக் கொள். பிறகு புருஷனேப் பதினோராவது குழந்தையாக ஆக்கிக்கொள்'' என்று மணப் பெண்ணே ஆசிர்வதிக்கிருள் வேதமாதா. சாரதாவோ முதல் குழந் தையாகவே கணவரைப் பெற்றுவிட்டாள்!

உலகத்துக்கெல்லாம் ஒரே போல் மாமாவான அம்புலியைக் காட்டி, உலகத்துக்கெல்லாம் ஒரே போல் அம்மாவான அம்பாளே உணர்த்தி, உலகுக்கெல்லாம் ஒரேபோல் அம்மாவாகச் சாரு ஆவதற்கும் ஆசி கூறி அநுமதி தந்த ராமகிருஷ்ணர், தம்மைப் பெற்ற அன்னேயைக் குசலம் விசாரிக்க நஹவத் மாடிக்குச் சென்றுர்.

ஆலயத்து அன்னை, கைப்பிடித்த சாரதையன்னை இவர்களிடம் ராமகிருஷ்ணர் கொண்டிருந்த மதுர உறவு அவரை மணிவயிற்றில் தாங்கிய ஜனக மாதா சந்திரமணிதேவிக்கும் கிடைத்தது. தேவி சந்திரமணிக்கு அந்த மதுரம் இரட்டிப்பாகவே கிடைத்தது – ராமகிருஷ்ணரோடு சேர்ந்து சாரதையும் அல்லவா அந்தக் கிழவியை அன்பிலே முழுக்காட்டினுள் !

ராமகிருஷ்ணரின் தாயன்பு மனத் தொடர்பு மட்டுமே கொண்டது. சாரதைதான் சரீரத்தாலும் பணிவிடை செய்து சந்திராவிடம் அன்பைக் கொட்டியவள். ராமகிருஷ்ணர் தாயுடன் சேர்ந்தே உண்பார். சாரதாமணி உணவு பரிமாறுவாள். அந்த மூன்று பிரேம மய ஜீவர்களையும் இப்படிச் சித்திரித்துப் பார்த்துக் கொள்ளும்போது நமக்கும் உள்ளம் நிறைகிறது!

சாரதைக்கு மாமியாரிடம் இருந்த பக்தியும், பரிவும் சொல்லத் தரமன்று. தன் பதிதேவரையும், பிறகு மூத்த புத்திரர் ராம குமாரரையும் இழந்த சந்திராதேவி சமீபத்தில் அருமைப் பேரன் அக்ஷயனையும் வாரிக் கொடுத்திருந்தாள். எனவே, அந்தப் புண்பட்ட இதயத்தை எவ்வளவு பண்பட நடத்த வேண்டுமோ அப்படிப் பாங்குடன் நடத்தினுள் சாரதை.

நஹவத் மாடியிலிருந்து, ''சாரதா'' என்று மாமியாரின் குரல் கேட்டுவிட்டால் போதும்; உடனே கீழேயிருந்து சாரதாமணி துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடுவாள். நஹவத் வாசல் நிலைக்கு உயரம் போதாது. ''இப்படி ஓடுகிருயே; தலையில் இடித்துக் கொண்டால் என்னுவது?'' என்று யாராவது கேட்டால் சாரதா தேவி, ''இடிச்சுண்டாலும் பரவாயில்லை! அவா வயசானவா; அம்மாவுக்கும் மேலே : அதோட சோகப்பட்டவா ; அவாளைக் காக்க வைக்கவே கூடாது'' என்று சொல்லிக்கொண்டு விரைவாள்.

நிதானத்துக்குப் பெயரெடுத்த சாரதை மாமியாரின் அழைப்பு வந்துவிட்டால் புயலாகி அதை நிறைவேற்றுவாள். 'இதோ வந்து விட்டேன்' என்று கீழேயிருந்து கத்துவது அவளால் முடியாத காரியம். எனவே, குரல் கொடுக்கிற நேரத்துக்குள் மாமியின் முன் தானே ஆஜராகிவிடுவாள்.

ராமகிருஷ்ணரைப் பெறும் யோக்கியதை பெற்ற சந்திரா ஒரு வெள்ளை ஆத்மா. மாற்றுப் பெண்ணிடம் அவளுக்கு எல்லையில்லாத பிரியம். தன் பிள்ளை அவளுடன் நடத்தும் 'அழகு'க் குடித்தனம் அவளுக்குத் தெரியும். அதனுலேயே அவளுக்குச் சாரதையிடம் பரிவு

கூடுதலாயிற்று. தங்கள் வீட்டுப் பூர்வ கதைகளையெல்லாம் எந்த மாமியாரும் எந்த மாற்றுப் பெண்ணுக்கும் சொல்லாத விதத்தில் ஒளிவு மறைவில்லாமல் சவிஸ்தாரமாகச் சொல்வாள்.

ஒரு நாள் சாரதை மாமியாரின் சுருங்கிக் காய்ந்த முதுகில் கடுகெண்ணெயைச் சுக உஷ்ணமாக அழுந்தத் தேய்த்துவிட்டுக் கொண்டிருந்தாள். கிழவி உற்சாகமாகப் பேசலானுள் :

'' ஹ்ருதே குறைப்பட்டுண்டான், நீ இங்கே கதாயியைப் பார்க்க வரவா கொண்டு வர பழம் பட்சணத்தையெல்லாம் வரவாளுக்கும் வேலைக்காரர்களுக்கும் வாரிக் கொடுத்துடறயாம். பெரிய மநுஷா, சின்ன மநுஷான்னு நீ வித்தியாசம் பார்க்காதது அந்த அசட்டுப் பிள்ளைக்குப் பிடிக்கல்லே. போயும் போயும் எங்கிட்ட வந்து குறைப் பட்டுக்கறுனே, நானும் உன்மாதிரியேதான். ஊரிலே இருக்கிறவா வயத்திலே வாழையைப் புதைக்கணும்னு எனக்குச் சிறு வயசிலேயே ஏக ஆர்வம்; உன் மாதிரிதான். ஆனு இந்த விஷயத்திலே கதாயி உனக்கு அநுகூலம். உங்க மாமனுர் இருந்தாரே, அவர் எனக்குப் பிரதிகூலம். அப்படின்னு அவர் துஷ்டர்னு அர்த்தமில்லே. அந்த மகாபுருஷரை அப்படிச் சொன்னு நான் நல்ல கதிக்குப் போக மாட்டேன். ஆனு உன் மாமனுர் மகா ஆசாரக்காரராக இருந்ததால் எனக்கும் அவருக்கும் நடுப்பற ஒரு உரசல். அவர் இதராள் கிட்டே யிருந்து எந்த பகுமானமோ, தட்சிணையோ, காணிக்கையோ யாசக மாக வாங்கிக்கவே மாட்டார். ஆத்திலே யாரும் வாங்கிக்கக் கூடாதுன்னும் உத்தரவு போட்டிருந்தார். அப்படியும் அவரோட சீலத்தையும், பக்தியையும், அன்பையும் பார்த்து ஊருக்கெல்லாம் அவர்கிட்ட ஒரு மதிப்பு. அவருக்குச் செஞ்சா தெய்வத்துக்குச் செஞ்ச மாதிரின்னு ஜனங்களுக்கு ஒரு தீர்மானம். அதனுலே பல பேர் பழமும், காய்கறியும், தானியங்களும் கொண்டு வருவா. எனக்கு அதையெல்லாம் பார்க்கச்சே, 'அடடா, நாம் இதை வேண் டாம்னுட்டா இதை அவாவாளும் எடுத்துண்டு போய்த் தாங்களே தானே சாப்பிடுவா? நாம் வாங்கிண்டா, இதை எல்லாம் ஏழைகளுக்கு விநியோகம் பண்ணலாமே'ன்னு தோணும். அதனுலே உன் மாமனு ருக்குத் தெரியாமலே, அவர் வார்த்தையை மீறி அதை எல்லாம் வாங்கி ஏழை எளியவாளுக்குத் தானம் பண்ணுவேன். தானியமா இருந்ததுன்னு, உன் மாமனுருக்குத் தெரியாமலே சிரமப்பட்டுச் சமையலும் பண்ணி நாலு ஜீவனுக்கு அதைப் போடுவேன். ஒரொரு சமயத்திலே அவருக்குத் தெரிஞ்சுவிடும். கோவிச்சுப்பார். 'ஊராரின் பண்டத்தை விநியோகம் பண்றதுக்கு நீ என்ன சத்திரத்து மணியக் காரியா? உனக்குத் தானம் பண்ணின புண்ணியம் கிடையாது. தானம் வாங்கின பாபந்தான் சேரும்'னு சொல்வார். நான் பாப – புண்

ணியத்துக்காகவா அப்படிப் பண்ணினேன்? ஆத்ம திருப்திக்காகத்தானே அப்படிப் பண்ணிண்டிருந்தேன்? இருந்தாலும் அந்த மகா பெரியவர்கிட்டே வாக்கு வாதம் பண்ணமாட்டேன். 'தானம் வாங்கினதை ரகுவீரனுக்கு நைவேத்தியம் பண்ணிட்டுப் பிரசாதமாகத்தான் விநியோகம் செஞ்சேன். ஸ்வாமி கண்ணுலே எந்த திரவியத்தைக் காட்டினாலும் தோஷ நிவிருத்தின்னு நீங்க சொல்லியிருக்கேளே!'ன்னு நைச்சியமா, பக்குவமாச் சொல்லுவேன். 'எக்கேடு கெட்டுப் போ' என்று அவரும் விட்டுக் கொடுத்துவிடுவார், அம்மாடி, நான் பாட்டுக்குச் சொல்லிண்டே போறேனே, நீ 'ஊம்' கொட்டக்கூட இல்லையே!''

எல்லையற்ற மரியாதை காரணமாகவே மௌனமாகக் கேட்டு வந்த சாரதை, ''கவனமாக் கேட்டுண்டுதான் இருக்கேன். அம்மா அப்பாவோட கோபத்தைப்பத்திச் சொன்னேள்...'' என்றாள்.

''அடி பெண்ணே! உன் மாமனாரைக் கோபிஷ்டர்னு நினைச்சுடாதே! பாத்திரம் பார்க்காம யாசகம் வாங்கிண்டாத்தான் அவருக்குக் கோபம் வரும். மற்றபடி மகா சாந்தர். அவரோட பக்தியைச் சொல்லி முடியாது. நம்ம குலதேவதை சீதளாதேவி அவர் பின்னாடியே போயிண்டிருக்கிற மாதிரி எனக்குத் தோணும். ஒரு நாள்... சாரதே! இத்தனை நாழியா எண்ணெய் தேய்க்கறயே, கை வலிக்கப் போறது; அதோடே என் தேக உஷ்ணமெல்லாம் உனக்குள்ளே இறங்கிடும். தேய்ச்சது போதும். இப்படி என் எதிரே வந்து உட்கார்ந்துண்டு சொச்சக் கதையைக் கேட்பியாம்...''

சாரதைக்கு எத்தனையோ வேலை காத்துக் கிடந்தது. இருந்தாலும், ''இல்லேம்மா, இன்னொரு பத்து நிமிஷம் இதமாத் தேய்ச்சுடறேன். நீங்க பழைய விருத்தாந்தங்கள் சொல்லிண்டே இருங்கோ'' என்று சொல்லிக்கொண்டு கிழவியின் நடு முதுகில் எண்ணெயை வைத்துச் சொஸ்தமாக அழுத்தினாள்.

சந்திரமணி தொடர்ந்தாள்: ''ஒரு நாள் உன் மாமனார் லாஹா வீட்டிலே புஷ்பம் பறிக்கப் போயிருந்தார். விடியறதுக்கு முன்னாடியே பூப்பறிச்சுண்டு வர்றது அவர் வழக்கம். அன்னிக்கும் அப்படித்தான் போயிருந்தார். அப்போ இவர் செடி ஒண்ணுக்கு ஒரு பக்கத்திலே கீழே இறைஞ்சிருந்த பூவைச் சேகரிச்சுண்டிருந்தார். பூ ரொம்ப சொல்பமாத்தான் இருந்தது. 'அப்பா, இந்தப் பக்கம் வந்து பாருங்கோ, கிளையெல்லாம் ஏகப்பட்ட புஷ்பம் இருக்கு. நான் கிளையைத் தாழ்த்தறேன். நீங்க பறிச்சுக்கலாம்'னு செடிக்கு மறு பக்கத்திலிருந்து ஒரு குழந்தைக் குரல் கேட்டதாம். அப்பா அந்தப்

பக்கம் போனாராம். சர்வ லக்ஷணமான ஒன்பது வயசுப் பெண் குழந்தை ஒண்ணு கிளேயைத் தாழ்த்திப் பிடிச்சுண்டதாம். அப்பா குடலை நிறையப் பூவை ரொப்பிண்டாராம். 'நீ யாரும்மா? இத்தனை இருட்டோடு இங்கே வந்திருக்கயே!'ன்னாராம். அந்தப் பெண், '**நான்தான் நான்**. ஹால்தார் ஆத்திலே இருக்கறவதான் நான்' – அப்படின்னாளாம். சாரு, உனக்குத் தெரிஞ்சிருக்குமே ஹால்தார் ஏரிதான் நம்ம ஊருக்கே நடுநாயகம். அதைத்தான், 'ஹால்தார் ஆத்திலே'ன்னு அந்தப் பெண் சொல்லித்து போல இருக்கு. அப்பாவுக்குச் சிலிர்த்துப் போச்சாம். நம்ம ஊரை ரக்ஷிக்கிற தேவியேன்னு தெரிஞ்சுதாம். அப்பவே அந்தப் பெண் மறைஞ்சு போயிட்டாளாம். உன் மாமனார் அப்படிப் பரம பாகவதராயிருந்ததாலேதான்...” –சந்திரமணி தொண்டை அடைக்கத் தொடர்ந்தாள்:

“...பகவான் இந்த ஆத்திலே வந்து பிறந்தான்.”

மாமியார், மருமகள் இருவரும் விசித்து விசித்து அழுதனர்.

இங்கே நஹவத் மாடியில் மாமியாரும் மாற்றுப் பெண்ணும் அழுதார்கள் — தங்கள் கூடவே மானுடராக வசிக்கும் பகவானை நினைத்து.

அங்கே தமதறையில் அந்த பகவான் சிரித்துக் கொண்டிருந்தார். கோயிலிலிருக்கும் அதே அம்மாதான் தம்மைப் பெற்ற சந்திரமணி, அவளே தம்மை மணந்த சாரதாமணி என்று சொல்லி அவர்களுக்குப் பக்தராக இருந்தவர் இந்த பகவான். பெற்ற தாயை அம்பிகையாக பாவிப்பதில் புதுமை ஏதுமில்லை. 'மாத்ரு தேவோ பவ' என்று வேத மாதா விதித்த நாளாக அம்மாவை அம்பாளாகக் கொண்டவர் எண்ணிறந்தோர். அம்மாவை 'அம்பாள்' என்று பிரகடனம் செய்து பூஜிக்க வேண்டிய அவசியமில்லாதபடிக்கு, அந்தப் பக்தி நமது உணர்வோடு கரைந்து வந்திருக்கிறது. ஆனால் மனையாளை மகாமாதாவாக பாவிப்பது அருமையிலும் அருமையே. இந்த அருமையைப் பிரகாசமாகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று பகவான் ராமகிருஷ்ணர் திருஉளம் கொண்டார். 'நானும் அம்பாள்; அவளும் அம்பாள். இந்த அம்பாள் அந்த அம்பாளை அம்பாளேதான் என்று பிரகடனம் செய்ய வேண்டியிருக்கிறது!' – இதை எண்ணிச் சிரித்துக் கொண்டிருந்தார் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

இப்போது சாரதாமணி தக்ஷிணேசுவரத்துக்கு வந்து ஒரு மண்டலம் பூர்த்தியாகிவிட்டது. தம்முடனேயே சயனம் கொண்டும் அந்த ஒரு மண்டலத்தில் அவள் காட்டிய ஒப்பற்ற தூய்மையைக் கண்டு வியந்த ராமகிருஷ்ணர் அவளிடம் தமது மரியாதையையும், பக்தியையும் வெளிப்படக் காட்டி மகிழவும் எண்ணம் கொண்டார்.

அந்த எண்ணம் செயலான தினம் சமய சரித்திரத்திலேயே சிறப்பிடம் கொண்ட திருநாள்.

பதினெட்டுப் புராணங்களும் சம்பூர்த்தி பெறும் பிரம்மாண்ட புராணத்தின் பூர்த்தி ஸ்தானமாக விளங்கும் ஸ்ரீ ராஜராஜேசுவரி பட்டாபிஷேகம் மீண்டும் இந்த உலகத்தில் நிகழ்ந்த அற்புத தினம் அது! சாரதை தக்ஷிணேசுவரத்துக்கு வந்து தூய்மை காத்ததற்கு மண்டலாபிஷேகமாக அது நடந்தேறியது. நூறு வருஷங்களுக்கு முன் 1872–ஆம் ஆண்டு ஜூன் ஐந்தாம் தேதியன்று அந்த மகோற்சவம் நிறைவேறியது.

வங்கம் முழுவதும் அன்று உற்சவம் கொண்டாடப்பட்டது. ஆம். ஜ்யேஷ்ட மாதத்து அமாவாசை இரவில் காளிகாதேவியைப் பலஹாரிணி என்று பெயரிட்டுப் பூஜிப்பது சாக்தர்களின் வழக்கம். ஜ்யேஷ்ட மாதம் என்பது தேவர்களின் இரவான தக்ஷிணாயனம் தொடங்குவதற்கு அண்மைக் காலம். அமாவாசையின் இருள் அனைவரும் அறிந்ததே. இருளின் கருமையே ஒருருவான அம்பிகைக்குத் தான் காளி என்று பெயர். இப்படி எல்லா விதத்திலும் அது இருளில் ஒளி காணும் திருநாள்.

உலகுக்குத் தெரியாத ஓர் இரவாக இருந்த சாரதாமணியை ஞானப் பிரகாசமாகக் கண்ட ராமகிருஷ்ணர், அன்று பலஹாரிணி தேவிக்கு விசேஷமாகப் பூஜை செய்யத் திருவுளம் கொண்டார். கர்ம பலன்கள் அனைத்தையும் சம்ஹாரம் செய்யும் தேவிக்கே பலஹாரிணி என்று பெயர். பலம் என்பது பழத்தையும் குறிக்குமாதலால், அன்று கனி வகைகளை அம்பிகைக்கு ஏராளமாக நிவேதிப்பர். பலஹாரிணி பூஜைக்கான பழங்களும் மற்றச் சாமக்கிரிகளும் சேமிக்குமாறு ஆலயச் சிப்பந்திகளுக்கு உத்தரவிட்டார் ராமகிருஷ்ணர்.

அதோடு இன்னொன்றும் சொன்னார், அவர்களை ஆச்சரியப்படுத்துமாறு! ''இத்தனை திரவியமும் பவதாரிணி சந்நிதியில் சேர்க்கிறதுக்கு இல்லை. இதையெல்லாம் இங்கே என் அறைக்கே கொண்டு வந்து ஒழுங்குபடுத்தி வையுங்கள்! இன்னிக்கு ராத்திரி ஹ்ருதயனே பவதாரிணியைப் பலஹாரிணியாப் பூஜிக்கட்டும். அதுக்குத் தனியாகத் திரவியங்கள் சேகரிச்சுக்கோங்கோ. இங்கே நான் வேறே பூஜை பண்ணப் போறேன்'' என்றார்.

அதென்ன வேறு பூஜை என்று அவர்களுக்குப் புரியவில்லை. 'அவரது அருமை பவதாரிணியை விட்டு, எந்த மூர்த்திக்கு அல்லது எந்த யந்திரத்துக்கு இந்த அறையில் பூஜை நடத்தப் போகிறாராம்?

இது புரியாவிட்டாலும் விசித்திரமான 'பட்டாசாரியர்' செய்த அநேக விசித்திரங்களில் இதுவும் ஒன்று என்று கருதி, அவர்கள் பூஜா வஸ்துக்களைக் கொண்டு வந்து அவரது அறையிலே நிரப்பினர்.

எப்போதும் இதுபோன்ற காரியங்களில் ராமகிருஷ்ணருக்கு உதவி புரியும் ஹ்ருதயர் காளி கோயில் பூஜைக்காகப் போய்விட்டார். தீனு என்கிற பூஜாரி ராமகிருஷ்ணர் செய்யவிருந்த பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

புஷ்பம் கமகமத்தது-புனிதமாக.

தூபம் கமழ்ந்தது – பாவனமாக.

தீபம் பொலிந்தது – பவித்திரமாக.

கண்ணுக்கும், நாசிக்கும், நாவுக்கும் மதுரமான பழங்களும், நிவேதனங்களும் தட்டுத் தட்டாக வைக்கப்பட்டிருந்தன.

அறையின் மையத்தில் தேவிக்கெனப் பீடம் அமைத்து இழைக் கோலம் இட்ட மணை இடப்பட்டிருந்தது.

பீடத்தில் எந்த விக்கிரகத்தை அல்லது யந்திரத்தை ராம கிருஷ்ணர் வைத்துப் பூஜிக்கப் போகிறார் என்று தீனுவுக்குப் புரிய வில்லை. கேள்விக் குறியுடன் ராமகிருஷ்ணரை நோக்கினார்.

ராமகிருஷ்ணரின் முகமண்டலத்தில் எப்போதும் நிலவும் தெளிவு அன்று அதீதமாகப் பொலிந்தது.

"சாரதாம்மாவை இங்கே வரச் சொல்லிட்டு நீயும் பவதாரிணி பூஜைக்குப் போ. இந்தப் பக்கம் யாருமே வரவேண்டாம்" என்றார் தீனுவிடம்.

கணவர் தமதறையிலே நடத்தும் ரகசிய பூஜைக்கு அழைப்பைப் பெற்ற சாரதை, அதே சமயத்தில் வேறெங்கிருந்தோ ஏதோ ஓர் அழைப்பையும் பெற்றாள். எங்கிருந்தோவா? மிக மிக நெருக்கமான, 'இங்கிருந்தே' வருகிற அழைப்பு அல்லவா அது? அழைக்கிறவரும், அழைக்கப்படுபவரும் பிரிந்து நிற்கிற அழைப்பு அல்ல. இரண்டும் ஒன்றாகும் இழைப்பு அல்லவா அது? சாரதை இனம் புரியா உன்னத உணர்வோடு பதியின் அறைக்குப் புறப்பட்டாள்.

சாதாரணமாக ஒரு பத்தினி தன் பதியின் அறைக்குச் செல்லும் உணர்வோடு அவள் என்றுமே சென்றதில்லை. ஆலயத்துக்குச் செல்கிற உணர்வோடுதான் செல்வாள். இன்றும் ஆலயத்துக்குச் செல்லும் உணர்வில்தான் சென்றாள். ஆனால் வழக்கமாக ஆலயத்தில் உறையும்

தெய்வம் 'அவர்' என்று கருதிச் செல்வாள்! இன்றோ... இதென்ன விசித்திர உணர்வு!

வெளியே விண் மீன்களையும் கோள்களையும் மணியாபரணங்களாக இழைத்துப் போட்டுக்கொண்டிருக்கும் ராத்திரிதேவி தனது தண்மையான ஆட்சியில் உலகையெல்லாம் அணைத்துக்கொண்டிருந்தாள். அவளே சாரதாமணியாக அறைக்கு உள்ளே பிரவேசிப்பதாகக் கண்டார் ராமகிருஷ்ணர்.

வாசல் நிலையிலே அப்படியே நின்றாள் சாரதை. வேறோர் உலகத்தின் வாசல் நிலை மெல்லத் திறந்தது. ராமகிருஷ்ணர் விதிவத்தாக மந்திரங்கள் கூறிச் சங்கல்பம் செய்துகொண்டார். ஆனால் 'பலஹாரிணிப் பிரீதிக்காக' என்று அவர் சங்கற்பம் செய்யவில்லை. 'ஸ்ரீ லலிதா மகாத்ரிபுரசுந்தரி, ஸ்ரீ ஷோடசீ ராஜராஜேசுவரியின் பிரீதிக்காக' என்றே சங்கற்பம் செய்துகொண்டார்.

மந்திர சாஸ்திரங்களின் முடிமணியான ஷோடசாக்ஷரீ என்ற பதினாறு அட்சரத் தொகைகளைக் கொண்ட மகாமந்திரத்தை மனனம் செய்வதன்மூலம் ஸ்ரீ ராஜராஜேசுவரியின் திவ்விய தரிசனம் சித்திக்கும். ஷோடசம் என்றால் பதினாறு என்று அர்த்தம். இதனால் அவளுக்கு ஷோடசி என்றும் ஒரு திருநாமம் உண்டு. என்றும் பதினாறாகப் பொலிபவள் என்றும் பொருள் கொள்வர். (ஷோடசி பூஜா சங்கற்பத்தைக் கூறும் இப்பகுதி 'அம்மா'வின் பதினாறும் அத்தியாயமாக அமைந்திருப்பதை என்னென்பது!)

பூதசுத்தி, ஸ்தலசுத்தி ஆகியன முறைப்படி செய்கிறார் ராமகிருஷ்ணர். எப்போதுமே சுத்தமான உடல் அவருடையது. அவர் இருப்பதால் எப்போதுமே அந்த ஸ்தலமும் சுத்தமானதுதான். இருந்தாலும், சாஸ்திரப்பிரகாரம் இவற்றைச் செய்கிறார்.

இதோ கலச பூஜை முதலிய பூர்வாங்கங்கள் முடிந்துவிட்டன.

இனி ஷோடசி மூர்த்திக்குப் பூஜை தொடங்க வேண்டும். எங்கே அந்த மூர்த்தி? விக்கிரகமோ, யந்திரமோ ஏதுமே இங்கே காணோமே! எதை வைத்துப் பூஜிக்கப் போகிறார்?

ராமகிருஷ்ணர் சாரதாமணியைப் பார்த்தார். அவளது பார்வையோடு தமது பார்வையை இழைத்தார். அந்தப் பார்வையைத் திருப்பி இழைக்கோலமிட்ட மணையைக் குறிப்பாகப் பார்த்தார்.

அந்தப் பார்வை சாரதையின் உட்புகுந்தது. உடனே அணு சரீர உணர்வு உதிர்ந்தது! கர்ம சரீரம் இவளுக்கு என்றுமே கிடையாது.

இப்போது பரப்பிரம்மத்தின் கருணை என்கிற காரண சரீரம் மட்டுமே தன்னைப் புலர்த்திக்கொள்ளலாயிற்று. அணு, கர்மம், பேதமாகிய ஆதிகாரணம் எனும் மூன்று புரங்களின் அழகுச்சாறான திரிபுரசுந்தரியில் தோய்ந்தவளாக, தன்னை அறியாமலே கதவைத் தாழிட்டாள். தன்னை அறியாமலே தாளிணைகளைப் பெயர்த்து நடந்தாள்.

ஸ்ரீ ராஜராஜேசுவரியை எழுந்தருளச் செய்வதற்காகப் போட்டிருந்த பீடத்திலே சற்றும் தயக்கமின்றி, துளக்கமின்றிக் கம்பீரமாக அமர்ந்தாள் — அடக்கமும் நாணமுமே உருவான சாரதாமணி.

17. பட்டாபிஷேகமும் சந்நியாசமும்

அம்பிகை; பகவதி; கல்வித் தெய்வமும் செல்வத் தெய்வமும் வழிபடும் கல்யாணி; கல்பகக் கொடியாக வேண்டியன வழங்கும் அழகி; கைலாச நாதனுக்கு அன்பானவள்; வேதாந்தத்தால் விளக்கமுறும் வைபவம் பொருந்தியவள்; ஞானிகளின் உள்ளத்தில் உலக அநுக்கிரகம் என்ற செம்மையைச் செய்பவள்; ஸ்ரீசக்ரத்தில் மணிபீடத்தில் எழுந்தருளுபவள் -- இப்படிப்பட்ட ஸ்ரீ ராஜராஜேசுவரி மாதாவை வணங்குகிறேன்.

—'வந்தே மாதரம்' எனத் தொடங்கும் ஆதிசங்கரரின் சுலோகம்

'கணவனே கண்கண்ட தெய்வம்' என்பது பொது வழக்கு. எல்லாப் பெண்களுமே பதியைத் தெய்வமாகக் கொள்ள வேண்டும் என்பது பாரத மரபு. சாரதையின் விஷயத்தில் இது வெறும் உபசாரச் சொற்றொடராக இல்லை. மெய்யாலுமே 'இவர் தெய்வ அவதாரம்' என்று உணர்ந்து பயபக்தியுடன் கணவரை வணங்கிப் பூஜித்தாள். அவளது இயற்கையான அடக்கமும், நாணமும், பணிவும் கணவர்முன் சிகரமேறிவிடும். அப்படிப்பட்டவள் தான் அவதார புருஷன் வணங்கிப் பூஜிக்க வேண்டிய ஸ்ரீ ராஜ ராஜேசுவரியாக வந்தமர்ந்தாள் கம்பீரமாக!

அவள் தன்னை வேறுவிதமாக எண்ணிக்கொள்ளவில்லை.

அவரும் அவளை வேறுவிதமாக எண்ணவில்லை.

இருந்தாலும் சாஸ்திரப் பிரகாரம் விக்கிரகத்திலும் யந்திரத்திலும் செய்வதுபோல் அந்த ராஜ ராஜேசுவரியினுள் ராஜராஜேசுவரியைப் பிராணப் பிரதிஷ்டை செய்தார்.

கலசத்திலிருந்து மந்திர ஜலம் எடுத்து அவள்மேல் தெளித்து, "நித்ய கன்னிகே! தாயே, திரிபுரசுந்தரி! சர்வ சக்திகளுக்கும் ஆதாரமே! பூரணத்துவத்தின் கதவங்களை இவளுக்கு முழுமையாகத் திறந்துவிடு! இவளது சரீரத்தையும் மனத்தையும் புனிதப்படுத்தி, இவளில் உன்னையே ஆவிர்ப்பவித்துக்கொண்டு, சர்வ மங்களங்களையும் பொலிவிப்பாயாக" என்று வேண்டிக்கொண்டார்.

உயிர்களுக்கெல்லாம் உயிராக விளங்கும் பிராணுதார சக்தியான அவளுக்குப் பிராணப் பிரதிஷ்டை செய்து, ஒலிப் பிரபஞ்சம் அனைத்துக்கும் ஆதாரமான அவளது அங்கங்களில் திவ்விய அட்சரங்களை நியாஸம் செய்தார்.

பரமசிவ ஜோதியிலிருந்து மாறுபடாத தமது ஆத்ம சக்தியைச் சுழுமுனை நாடிவழியாகச் சிரசின் உச்சியிலுள்ள மோக்ஷ ஸ்தானத்தில் கொண்டு வந்து நிறுத்தி, பிரம்ம சக்தியில் அதனை இரண்டறக் கரைத்து, அதன் அநுபவ ஆனந்தத்தைப் புஷ்பாஞ்சலியுடன் சாரதையின் உட்புகுத்தினர். ''என்றும் அழியாமல் பிரகாசிக்கும் ஞான வடிவம்'', ''அமிருத சைதன்ய மூர்த்தி'' என்று அவளை வாய் நிறைய அழைத்து, அப்படியே ஆக்கினர்.

திவ்ய போதம் என்ற போதையில் மேலும் மேலும் ஆழ்ந்து போகிறாள் சாரதாமணி. சாக்ஷாத் ஸ்ரீ வித்யாலலிதா மகா த்ரிபுரசுந்தரியாம் ராஜராஜேசுவரியே ஆகிவிடுகிறாள்.

அழகுக்கும், அன்புக்கும், ஆனந்தத்துக்கும் எது மூலமோ அதுவே ஸ்ரீ.

தன்னையன்றி வேறென்றும் அறியாத அத்வைத ஞான உணர்வு எதுவோ அதுவே வித்யா.

லட்சியப் பொருளாம் 'ல'வும், அடையாளமாம் லிங்கம் ஏது மற்ற நிர்குண 'லி'யும், சம்சாரத்திலிருந்து கடத்துவிக்கும் தாரகமாகிய 'தா'வும் இணைந்து 'லலிதா' ஆகிறது. அன்னையுருவில் குழந்தைகளைக் கொஞ்சி லாலனம் செய்து பாலனம் தரும் மதுர மாதாவே லலிதா. எளிதில் இன்பமாக அடையப்படுபவளே லலிதா.

மூவுலகிலும் அழகிய வஸ்து திரிபுரசுந்தரி என்பது வெளியர்த்தம். அழகு என்றால் அது பௌதிக சௌந்தரியம்மட்டும் அல்ல; அது அன்பின் அடர்த்தியில் உண்டான அழகு; ஆனந்தத்தின் எல்லையில் உண்டான அழகு; சத்தியத்தின் செறிவில் உண்டான சௌந்தர்யம் என்பது உள்ளர்த்தம். அதற்கும் உள்ளே ஆழத்தில் இன்னோர் அர்த்தமும் உண்டு. முப்புரங்கள் என்பது ஜீவ தசையின் மூன்று நிலைகள். அணுக்களாலான பௌதிக உடல் ஒரு புரம். இதனுள் கர்மங்களை அநுபவிப்பது இன்னொரு புரம். பௌதிக உடல் அழிந்த பின்னும் கர்மத்தை அநுபவிப்பதற்காக மறு பிறப்பெடுப்பது இந்தச் சூட்சும உடல்தான். இந்தச் சூட்சும உடம்புக்கும் ஆதாரமாக ஒரு காரண சாரீரம் மூன்றாவது புரமாக உள்ளது. கர்மமே அற்ற ஆத்மாவில் எப்படியோ ஒரு பேத உணர்வு வந்தது அல்லவா? அந்த உணர்வுதான் இந்த மூன்றாவது புரம். இந்த முப்புரங்களையும் அழகு செய்யும் ஒழுங்குக்கு, தர்மத்துக்குத்தான் மகாத்ரிபுரசுந்தரி என்று பெயர்.

முப்புரங்களை அழித்து, பேதத்தை நீக்கி, சிவமாக்கி நம்மை ஆளுபவன் திரிபுர சம்ஹாரன். இவளோ திரிபுரசுந்தரி. சிவமான

பின் - பிரம்ம நிலை அடைந்த பின் – எல்லாமே சுந்தரமாகத்தான் தெரியும். அணுவும் கர்மமும் பேதமுங்கூட பிரம்மமாகவேதான் தெரியும். ஞானம் அடையும் முன் சாதகன் எவற்றையெல்லாம் மாயை எனக் கருதி அழித்தானோ அவையுங்கூட ஞானம் எய்திய பின் அழகுக்கு நிலைக்களன்களாகத் தோன்றி அன்புக்குப் பாத்திரமாகி விடும். 'எல்லாம் மாயை' என்று ஒதுக்கும் நிலை தாண்டி 'எல்லாம் ஈசனால் பூரித்து நிற்பவை' என்ற சௌந்தரியப் பிரேம உணர்வைத் தருவதுதான் திரிபுரசுந்தரி மதம்.

அந்தத் திரிபுரசுந்தரி எப்படி இருக்கிறாள்? உதிக்கின்ற சூரியன் போல், ஜோதிச் சிவப்பாக ஒளி காந்துகிறாள். ஆயினும் அதில் வெப்பமே இல்லை. குளுமை வெள்ளமே பெருகுகிறது. குளிர்ந்த பிறை அவளது சிரசில் திகழ்கிறது. சூரிய, சந்திர, அக்கினி மயமான தன் முக்கண்களின் அசைப்பாலேயே படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலையும் புரிகிறாள். இந்த முத்தொழிலுக்கும் மேல் இரு தொழில்களைச் சொல்வதுண்டு. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் மூன்றுமே மாய உலகைச் சேர்ந்தவை. இவற்றுக்கு ஆதாரமான மாயையை உண்டாக்கும் திரோதானம் என்பதும் பிரம்ம சக்தியாகிய அவளது ஒரு தொழில். அந்த மாயையை நீக்கி அடியாரை மோக்ஷ நிலையில் உய்விக்கும் அநுக்கிரகம் இன்னொரு தொழில். பிரபஞ்சத்தின் சகல சக்திகளும் தன்னை ஸ்ரீசக்ரத்தின் பல கோணங்களில் சூழ்ந்திருக்க, படைக்கும் சக்தியும் காக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் மாயா சக்தியும் நாலு கால்களாகித் தாங்கும் அநுக்கிரக பீடத்தில், 'பராபட்டாரிகை' எனப்படும் உத்தமோத்தம பரப்பிரம்ம சக்தியாம் தேவி பரப்பிரம்மஸ்வரூபனான காமேசுவரனின் மடியிலே எழுந்தருளியிருக்கிறாள்.

அவளது நாற்கரங்களில் ஒன்று பாசத்தைத் தாங்கி, அடியாரின் பாசத்தைக் களைகிறது. அத்வைத நிலையில் எது எதைப் பற்றிப் பாசம் வைக்க இயலும்?

மற்றொரு கரம் அங்குசத்தைத் தாங்கி, துவேஷத்தை அடக்குகிறது. அத்வைத நிலையில் எது எதைத் துவேஷித்து விலகும்?

தேவியின் பிறிதொரு கரம் தாமரை, செவ்வல்லி, கல்ஹாரம், இந்தீவரம், ஒட்டு மாம்பூ ஆகிய பூக்களை அம்புகளாகத் தாங்குகிறது. விந்தையான அம்பு! அம்பு என்றால் கூரிய முனையுடன் உலோகத்தாலானதாக இருக்கும். இங்கோ நளின மலர்களை அம்புகளாக வைத்திருக்கிறாள்! அது சரி, அம்பு தனியாக இயங்காதே; வில்லுடன் சேர்ந்துதானே இயங்கும்? இவள் வைத்திருக்கும் வில் எது? நாமக்

கரும்பையே வில்லாகப் பிடித்திருக்கிறாள். அதிமதுரமான கரும்பு வில், அதிசுகந்தமான ஐந்து பூ அம்புகள். மனத்தோடு சேர்ந்து இயங்கும் ஐந்து புலன்களையும் தன்னிடம் ஆட்படுத்திக்கொள்வதற்கு இந்த தநுசையும் பஞ்ச பாணங்களையும் தரித்திருக்கிறாள். உலகைக் காமத்தில் ஆழ்த்துவதற்காகக் கரும்பு வில்லும் மலரம்பும் ஏந்தினவன் காமதேவன். உலகினரின் காமத்தை நீக்குவதற்காகவே கரும்பு வில், மலரம்பு தாங்கியவள் இந்தக் காமாக்ஷி. உலகம் என்று ஒரு தோற்றம் ஏற்பட்டபின் அதை ரக்ஷிக்கவேண்டும் என்ற ஒரு காமம் பிரம்மத்துக்கு ஏற்பட்டதல்லவா? பிரம்மத்துக்கு அந்தக் காமத்தை ஊட்டிக் காமேசுவரனாக்கியவளே இந்தக் காமாக்ஷி. தன்னைத் தானே பலவாறாகத் தோற்றுவித்துக்கொள்ள வேண்டும் என்று பிரம்மத்துக்கு ஏற்பட்ட சிந்தனையே இவள்தான். அதனால்தான் பிரபஞ்சம் உண்டாகிச் சம்சார சக்கரம் சுழல்கிறது. சக்கரத்தின் இருசாக – அந்த மூல காமத்தின் அச்சாக, அட்சமாக – இருப்பவள் இந்தக் காமாட்சி. சக்கரத்திலிருந்து விடுவிக்கிற அநுக்கிரக எண்ணத்தைப் பிரம்மத்துக்கு ஊட்டி, அவனைக் காமேசுவரனாக்கியிருப்பவளும் இவளே. அவனும் அவளும் வேறல்ல. மணியும் அதன் ஒளியும், பாலும் அதன் சுவையும், மலரும் அதன் மணமும்போல் பிரம்மமும் பிரம்ம சக்தியும் ஒன்றேதான்!

இந்தப் பிரம்ம சக்தியைத்தான் ராஜராஜேசுவரி என்பது. ராஜா என்பவன் நாட்டை ஆள்பவன். அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாக அனைத்துச் சக்திகளையும் இயக்கி ஆளுபவள் ஸ்ரீ ராஜராஜேசுவரி.

லலிதாம்பிகைக்கு நாற்கரம் இருப்பதாகப் பொது வழக்கு. ஆயினும் நாலு கரம் கொண்ட கணேசனைப் பத்துக் கரம் படைத்த மகா கணபதியாகவும், நாற்கரம் கொண்ட சிவபெருமானைப் பத்துக் கரம் கொண்ட ஸாம்ப பரமேசுவரனாகவும் அநுபூதிமான்கள் தரிசிப்பதுபோல், லலிதா த்ரிபுர சுந்தரியே ராஜராஜேசுவரியாக தரிசனம் தரும்போது பத்துத் திருக்கரங்களுடன் திகழ்கிறாள். அப்போது மேலே சொன்ன நாலு கரங்களுடன் ஞான வடிவாம் சாரதைக்கு உரிய சுவடி, ஜபமாலை இவற்றை இரு கரங்களில் ஏந்துகிறாள்; அழகுகளில் பேரழகாகிய சங்கீதத்தின் மூர்த்தியாகி வீணையை இரு கரங்களால் மீட்டுகிறாள்; மேலும், ஆதிசங்கரர் நவின்றதுபோல் அவளது திருவடிகளே அபயமும் வரமும் அளிக்குமாயினும், இந்தச் சூட்சுமத்தைப் பேதையர் புரிந்துகொள்ளாதிருந்துவிடுவரோ என்று கருதித் தன் கைகளிலும் அபய, வரத முத்திரைகளைக் காட்டுவாள் ஸ்ரீ ராஜராஜேசுவரி.

ராமகிருஷ்ணர் பரம்பொருளின் பல தெய்வ ரூபங்களேயும் கண்ணுரக் கண்டவர். அவர் தம் திவ்விய தரிசனங்களின் இறுதி நிலேயாகவும் உச்ச நிலேயாகவும் ஷோடசியாம் ராஜராஜேசுவரியைக் கண்டதாகக் கூறியுள்ளார். "அம்மாவின் அத்தனே ரூபங்களுமே மகா அழகுதான். ஆனுலும் மற்ற ரூபங்களேயும் ஷோடசியின் சுந்தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கிறதுக்கே இல்லே. ராஜராஜேசுவரி யான எங்கம்மா ஷோடசிதான் பரஞானமான மகாவித்யா ரூபிணி. அவள் ஜொலிக்கிற செங்கொழுந்தாக என் முன்னே திவ்ய தரிசனம் தந்தாள். நான் பார்த்துண்டே யிருக்கச்சே அந்தச் சௌந் தரிய ஸ்வரூபம் அப்படியே உருகிச் செக்கச்செவேலென்ற அலேகளாகச் சகல திக்குத் திகந்தங்களிலேயும் பொங்கிப் பரவித்து" என்று ராம கிருஷ்ணர் தொண்டை யடைக்கச் சொல்லுவார்.

வெண்மையான சிவத்துடைய சாந்தம் சகல பிரபஞ்சத்தையும் அநுக்கிரகிக்க எண்ணம் கொள்கிறபோது ஜோதிச் சிவப்பாகும். 'சம்புவின் கருணே செக்கச்செவேல் என மூர்த்திகரித்து அம்பாளாக திக்விஜயம் செய்கிறது' என்கிறது சௌந்தர்ய லஹரி.

செம்பட்டு உடுத்தி, செம்பருத்தி வண்ணத்தில் ஜொலிக்கும் ஷோடசியாகிய ராஜராஜேசுவரியைச் சகல கர்ம பலன்களுக்கும் ஆதாரமாகவும், அந்தமாகவும் கருதி இன்று பலஹாரிணி பூஜை செய்கிருர் ராமகிருஷ்ணர். மனிதனேச் சம்சாரத்தில் ஆழ்த்தும் மனேவியையே 'சம்சாரம்' என்பது உலக வழக்கு. இவரோ அவ ளேயே சம்சாரத்திலிருந்து கடத்துவிக்கும் பவஹாரிணியாக, பலதாரிணியாகப் பூஜிக்கிருர்.

அது வெறும் பாவனேயல்ல, இதோ, சாரதை மெய்யாலுமே அகண்ட பிரம்மத்தின் ஆதிசக்தியிலே ஆழ்ந்து தோய்ந்து அதுவே ஆகி இருக்கிருள்! தன் குழந்தை கதாயீ தன்னே அன்போடு பூஜிப்ப தாகவே உணர்கிருள்!

ராமகிருஷ்ணர் அவளது பக்தன் என்கிற ஒரே உணர்வை வைத் துக்கொண்டு பூஜிக்கலானுர்.

ஆவாகனத்துக்குப் பின் ஆசன உபசாரம்.

பிறகு அவளது பாதங்களில் நீர் வார்த்துத் துடைத்தார். அப் படிச் செய்வதில் அவருக்குத் தயக்கமேதும் இருக்கவில்லே. அதனி னும் ஆச்சரியம், அவரைப் பக்தனுகவும் தம்மைப் பகவதியாகவுமே கண்டுகொண்ட சாரதைக்கும் அதை ஏற்பதில் தயக்கம் இருக்க வில்லே.

அர்க்கியம் அளித்தார்.

ஆசமனீயம் அளித்தார்.

திவ்விய தீர்த்தத்தை அவள்மீது புரோட்சித்தார் – அபிஷேக மாக.

அவளது சேலையின்மீதே புதிதானதொரு பீதாம்பரத்தைப் போர்த்தினர்.

கமுகுக் கழுத்திலே செழுஞ்சீதச் சந்தனத்தைக் குழைத்துப் பூசினர்.

வகிட்டிலே சிந்தூரம் அப்பினர்.

அவளது பாதத்தைப் பவ்வியமாகப் பிடித்து, தமது திருக்கரத் தால் அதிலே செவ்வரக்குக் குழம்பு பூசினர்.

சங்கு வளையல்களை அவளது கரங்களில் சூட்டினர்.

மணக்கும் மாலைகளைச் சூட்டினர் – தாய்க்கு மகவின் மாலையாக மட்டும் அல்ல, ஜீவாத்ம–பரமாத்ம மணமாலையாகச் சூட்டினர்.

ஷோடசியாகிவிட்ட சாரதாமணிக்கு ஷோடச உபசாரங்களும் செய்தார்.

குருதேவர் பிரணவத்துடனும் பீஜாக்ஷரங்களுடனும் திவ்ய நாமங்களைச் சேர்த்துக் கூறி அவளுக்கு மலர் தூவி அர்ச்சனை புரிய லானர். 'நம:' என்னும்போது மலர்மட்டும் அவள்மீது விழ வில்லை; அவரது மனமும் சேர்ந்து விழுந்து கும்பிட்டது.

ஓம் ஸிம்ஹாஸநேச்யை நம:
ஓம் லலிதாயை நம:
ஓம் மஹாராஜ்ஞ்யை நம:
ஓம் வராங்குசாயை நம:
ஓம் சாபிந்யை நம:
ஓம் த்ரிபுராயை நம:
ஓம் மஹாத்ரிபுரஸுந்தர்யை நம:
ஓம் ஸுந்தரீசக்ரநாதாயை நம:
ஓம் ஸம்ராஜ்ஞை நம:
ஓம் சக்ரிண்யை நம:
ஓம் சக்ரேச்வர்யை நம:
ஓம் மஹாதேவ்யை நம:
ஓம் காமேச்யை நம:
ஓம் பரமேச்வர்யை நம:

ஓம் காமராஜப்ரியாயை நம:
ஓம் காமகோடிகாயை நம:
ஓம் சக்ரவர்த்திந்யை நம:
ஓம் மஹாவித்யாயை நம:
ஓம் சிவாயை நம:
ஓம் அநங்கவல்லபாயை நம:
ஓம் ஸர்வ பாடலாயை நம:
ஓம் குலநாதாயை நம:
ஓம் ஆம்நாய நாதாயை நம:
ஓம் ஸர்வாம்நாய நிவாஸிந்யை நம:
ஓம் ச்ருங்கார நாயிகாயை நம:

சிருங்காரமே அறியாத தம்பதியர்! இவர் அவளை 'ச்ருங்கார நாயிகை' என்று இறுதியாக அழைத்து மலர் தூவினர்! ராஜராஜே சுவரிக்கு இந்த உலகத்துச் சிருங்காரம் தெரியாதுதான்! திரிபுர தகனம் என்ற மயானத்தில் அன்பு முளை விட்டு அது திரிபுரசுந்தர மாயிற்றல்லவா? அன்பு முளை விளையவேண்டுமானல் அதற்கொரு அப்பாவும் அம்மாவும் வேண்டும். அப்பாதான் உணர்வற்ற பிரம்ம சிவம். உணர்வற்ற அவரிடம் அன்பு தோன்ற முடியாது. அன்பை அவரிடம் பெற்றெடுக்க ஓர் அம்மா உண்டானள். உணர்வற்ற அப்பா 'நான் இருக்கிறேன்' என்பதாக ஓர் உணர்வை முதலில் பெற்றார். சத்திய வஸ்துவுக்கு ஏற்பட்ட அந்த ஞானந்தான் அம்பிகை. சத்தியமும் ஞானமும் செய்துகொண்ட இந்தக் கல்யாண சிருங்காரத்திலிருந்துதான் அன்பு, அருள், பிரேமை, பரிவு, கருணை, கிருபை, அநுக்கிரகம் என்றெல்லாம் சொல்கிற ஆனந்தக் குழந்தை பிறந்தது!

ஆனலும் இந்த அப்பாவையும் அம்மாவையும் கணவன்–மனைவி என்று சொன்னல்மட்டும் போதாது. இந்த அப்பா அன்பு என்ற தன் தொழிலைச் செய்யத் தொடங்குவதற்கு முன்னரே அவரிடம் 'நான் இருக்கிறேன்' என்ற ஞானமாக அம்பிகை வெளிப் போந்துவிட்டாள். செயலில்லாமல் தன்னிலேயே திளைத்திருந்த மட்டில் அவர் இருந்ததாகவே சொல்வதற்கில்லை. ஆகையினல் ஞான அம்பிகை தான் அவரையுமே பெற்றெடுத்தவள் என்று ரிஷிகள் சொல்வார்கள். இந்த உண்மையையே 'அபிராமி அந்தாதி',

"... இவள் எங்கள் சங்கரனர் மனைமங்கலமாம்
அவளே அவர் தமக்(கு) அன்னையும் ஆயினள் ..."

என்று கூறும்.

''இமவான் மகளுக்குத் தன்னுடைய கேள்வன் மகன்'' என்பது திருவாசகம்.

''சத்திதான் சிவத்தை ஈன்றும்'' என்று 'சிவஞான சித்தியார்' கூறும்.

ஈசனும் அம்பாளும் பல விதங்களில் உறவு கொண்டிருப்பதுபோல், ராமகிருஷ்ணர் சாரதையை மனையாளாகவும், சிஷ்யையாகவும், சகாவாகவும், தாயாகவும் கொண்டார். அதோடு மட்டுமின்றி, பரமேசுவரன் அம்பிகையைத் தன் தெய்வமாகவும் கருதிப் பூஜிப்பதுபோல் இவர் அவளைத் தெய்வமாகவே வைத்து வழிபட்டும் விட்டார்.

சாரதையை சர்வ ஆதார சக்தியான பூமியாக பாவித்து, அவளுக்குச் சுகந்தம் பூசிய ராமகிருஷ்ணர், இப்போது சர்வ ஆனந்த சக்தியான ஆகாயமாக அவளை பாவித்து மலர் தூவி அர்ச்சனை முடித்தார். அடுத்து அவளைச் சர்வ பிராணசக்தியான வாயுவாக பாவித்து அவளுக்குத் தூபம் காட்டினர். பிறகு சர்வஞான சக்தியான அக்கினியாக அவளை பாவித்துத் தீபாராதனம் செய்தார். முடிவாக, சர்வ காருண்ய சக்தியான அமுதமாக அவளை பாவித்து அவளுக்கு நைவேத்தியங்களைச் சமர்ப்பித்தார். சாதாரணமாகப் பூஜை செய்யும்போது தூபம் காட்டுவதைப் போலவும், தீபம் காட்டுவதைப் போலவும், நிவேதனமும் இறைவனுக்குக் 'காட்டத்தான்' படுகிறது. ஆனல் இந்த அற்புத பூஜையிலோ இனிய ராமகிருஷ்ணர், இனிப்புப் பட்சணங்களை அள்ளி எடுத்து இனிய சாரதையின் திருவாயிலேயே சமர்ப்பித்தார். அவளும் அமிருத சைதன்ய மூர்த்தி நிலையிலே திரு அமுதை உண்டாள். 'முகே தே தாம்பூலம்' என்று ஆதி சங்கரர் துதித்தவண்ணம் அவளுக்குத் தாம்பூலமும் ஊட்டினர். வெண் சுண்ணமும், சிவப்புப் பாக்கும், பச்சை வெற்றிலையும் சத்துவ – ரஜோ – தமோ குணங்களாகி அவளால் மெல்லப்பட்டு, கருணையின் அடர்ந்த சிவப்புமட்டுமே அவளது அதரத்தில் நின்றது. தாம்பூலத்தை அவள் உண்ணும்போது சகல தத்துவங்களையும் உண்டுவிட்டாள்; சர்வ கர்மங்களையும் உண்டாள்; சர்வ தர்மங்களையும் உண்டாள்; காலத்தையும், இடத்தையும் உண்டாள்; எது உண்டதோ அதையும் உண்டுவிட்டாள். தான்மட்டுமே தனி ஒன்ருக நிர்விகல்ப சமாதியில் முழுகிவிட்டாள்!

நைவேத்தியத்துடன் தம்மையே நிவேதித்துக்கொண்ட ராமகிருஷ்ணரும் அவதார வியக்திக்குரிய சிறிய 'நானும்'கூட விலகி, ஒரே பெரிய நாளுக ஆகிப் பிரம்ம நிர்வாணத்தில் ஆழ்ந்துவிட்டார்.

யாமம், யாமமாக ஓடிக்கொண்டேயிருந்தது!

வழிபாட்டின் அடர்த்தி அதிகமாக ஆக வழிபடவே முடியாத நிலை ஏற்பட்டது. இவர் பக்தன் என்ற உணர்விலிருந்து பகவதியின் நிலையிலேயே கரைந்தார்; அந்த பகவதியும் பிரம்மசக்தி என்ற ஆனந்த நிலையிலிருந்து பிரம்மம் என்ற சாந்த நிலையில் கரைந்து விட்டாள்.

இருவரும் சமாதி நிலையில் ஆழ்ந்தனர். நள்ளிரவு வேளையும் வந்துவிட்டது.

ஜேஷ்ட மாதத்து அமாவாசை நடுநிசி!

தீபாவளியும் கார்த்திகையும் ஒளித் திருநாள் என்றால், இதுவோ இருள் திருநாள். ஆனால் இந்த இருள் அசத்தும், அஞ்ஞானமும், துன்பமுமான தமோ குணத்தின் இருள் அல்ல. இது அன்னையன்பு என்கிற ஆறுதலான அணைப்பைத் தரும் அற்புத இருளாகும். வேத மதத்தை ஒளி வழிபாட்டுச் சமயம் என்றே வெளி நாட்டார் பெரும் பாலும் சொன்னாலும், வேறு எந்த மதமும் பருகா விதத்தில் இருளின் அழகை மாந்தித் திளைப்பதும் வேத மதந்தான். 'ராத்ரீ சூக்தம்' என்று ரிக்வேதத்தில் உள்ள மந்திரங்கள் இரவு அளிக்கும் இனிமையை, இன்பத்தை, நிம்மதியை, நிர்மலத்தைக் கவித்துவக் கண்ணுடன் வருணிக்கும். பகலெல்லாம் ஓடிக் களைத்தவர்களுக்கு இருள் என்கிற பெரிய விருட்சம் அருள் நிழல் தந்து ஆறுதல் தருவதை அது அழகுபடச் சித்திரிக்கும். பகலிலே ஒளியில் பலவாகக் கண்ட காட்சி அனைத்தும் இருளில் மறைந்து ஒன்றாகிவிடும். இப்படிப் பார்த்தால் இரவே ஞானாம்பிகையாகத் தோன்றுகிறது. அவளை 'ஞான ஒளி' என்று சொல்வதைவிட 'ஞான இரவு' என்று சொல்வதே அதிகப் பொருத்தம்போல் தோன்றுகிறது. ஜீவனின் விழிப்பு நிலை என்கிற பகலில் அவன் பலவாகக் காண்கிற மாய உலகு எந்தச் சமாதி நிலையில் அப்படியே விலகிவிடுகிறதோ அந்தச் சமாதி நிலை தான் ராத்ரி தேவி என்னும் ஞானாம்பாள். விழிப்பு - கனவு - உறக்கம் என்ற மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்ட சாக்ஷி மாத்ரமான சைதன்ய ஒளியே இந்த இருள். மூன்று நிலைகளுமே 'த்ரி'; இவை அற்ற நிலை 'அத்ரி'. ஒளியின் ஒலி வடிவான 'ர' என்ற அட்சரம் இதோடு சேர்ந்தால், 'ராத்ரி'யாகிறது. 'உலகின் இரவு ஞானியின் பகல்' என்று கண்ண பெருமான் சொன்னது இந்த ஞான சமாதியான ராத்ரியைத்தான். இந்தச் சமாதியில்தான் ராமகிருஷ்ணரும் சாரதையும் ஒன்றியிருந்தனர்.

கால தேச வர்த்தமான உணர்வே இல்லாமல் சாரதையும் சக்தியாகி, ராமகிருஷ்ணரும் சக்தியாகி, அந்தச் சக்தியும் தனது சத்திய ஞான சாந்த ஸ்வரூபத்தில் மூழ்கிக் கிடந்தது.

'காலமாம் வனத்தில் அண்டக்கோல மாமரத்தின்மீது ரீங்கார மிட்டு உலவும் வண்டாகிய' காளி பவதாரிணிக்குப் பூஜை முடிந்து ஹ்ருதயரும் மற்றும் சேவார்த்திகளும் வெளி வந்தனர். ஆனால் 'பட்டாசாரிய'ரின் அறைக்கதவு இன்னும் சாத்தியபடியேதான் இருந்தது. உள்ளே என்ன நடக்கிறது என்று பார்க்க முடியாமல் அவர்கள் காத்துக் காத்துப் பார்த்து வெளியேறிவிட்டனர்.

பொழுது புலரும் முன்னே ராமகிருஷ்ணருக்கு வெளிப் பிரக்ஞை வந்தது. அவர் உடலைக் குலுக்கிக்கொண்டு எழுந்தார். அதே சமாதிச் சங்கிலியில் கட்டுண்டிருந்த சாரதையும் அந்த அசைவிலே உலுக்கப்பெற்று அசைந்து கொடுத்தாள்.

ராமகிருஷ்ணர் மீண்டும் பக்தரானார். சாரதையைப் பிரதக்ஷிணம் செய்து சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டார்.

''நீ பலஹாரிணி! என் கர்ம பலன் அனைத்தையும் உனக்களித்தேன். நான் செய்த ஜபம், தியானம், பூஜை, பாராயணம், நாம சங்கீர்த்தனம் அனைத்தின் பலனையும் எனக்கென்று அணுவளவும் வைத்துக்கொள்ளாமல் பரிபூரணமாக இதோ உனக்கே அர்ப்பணித்தேன்'' என்று சொல்லிக்கொண்டு தமது ஜப மாலையை, தேவி சாரதா மணியின் திருவடிகளில் சமர்ப்பித்தார்.

ஆதி சாரதைக்கு ஜப மாலை உண்டு. ஆனால் அதுவும் நம் அம்மா சாரதை பெற்ற ஜபமாலைக்கு ஈடாகாது! ஆதி சாரதையின் ஜப மாலை வித்யைக்குமட்டும் உருவகம். சர்வ வித்யைகளுக்கும் மூர்த்தியான ராமகிருஷ்ணரின் வித்யாவிலாசம் மட்டுமின்றி, அவற்றை அடியோடு தியாகம் செய்த அவரது ஒப்பற்ற சந்நியாசமுங்கூட இப்போது இந்த ஜப மாலையில் ஐக்கியமாகிவிட்டன. ஸ்தூலமாக ரூபாய் நாணயத்தை நாம் இன்னொருவருக்கு எடுத்துக் கொடுப்பது போல், ராமகிருஷ்ணர் தமது ஆத்ம நிதியத்தைச் சாரதாமணிக்கு அளித்துவிட்டு, வித்யாபாரமும் ஞானச் சுமையுங்கூட இல்லாமல் பரம லேசாக, ஆகாயம் போல் ஆகிவிட்டார்! இவளுக்குப் பட்டாபிஷேகம்; அவருக்குப் பூரண சந்நியாசம்!

வேலைச் சுமைகளைத் தாங்கிப் பழகிய சாரதை வித்யைச்சுமையையும் மலர்ச்சியுடன் அநாயாசமாகத் தாங்கிக்கொண்டாள். அவதார சிரேஷ்டரான ராமகிருஷ்ணர் செய்த ஒரு கால பூஜையை மட்டுமின்றி, பல காலமாக அவர் சேமித்த ஞானக்களஞ்சியத்தையும் எளிதில் தாங்கிக்கொண்டாள்.

ஸர்வ மங்கல மங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே।
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே ||

''அன்பும் அழகும் நலனும் இழைந்த மங்களங்களுள் எல்லாம் மகாமங்களமே! சிவசக்தியே! அனைத்துப் பொருள்களையும் அடைவிப்பவளே! அடைக்கலப் பொருளே! மூவருக்கும் மூத்த முக்கண் மாதாவே! சுவர்ண வர்ணத்தளே! நாராயண சக்தியே! உனக்கு வந்தனம்.''

சாரதையான பிரம்மனின் சக்தியைச் சிவசக்தியாகவும் நாராயண சக்தியாகவும் துதித்தார் ராமகிருஷ்ணர்.

வழிபாடு முடிந்தது.

முடிகிற வழிபாடுதானா அது? 'ஒரு காலமன்றிது சதா கால பூஜையாய் ஒப்புவித்தேன்' என்று தாயுமானவர் சொன்னபடி சதா கால பூஜகரான ராமகிருஷ்ணர், குறிப்பிட்ட நிமித்தமாகச் செய்த ஒரு பூஜை முடிந்தது; அவ்வளவே!

கணவனே கண்கண்ட தெய்வம் என்பதற்கு உட்கிடை, மனைவியைக் 'கண்கண்ட' தெய்வமாகக் கொள்வது என்று நிரூபித்துவிட்டார் ராமகிருஷ்ணர்.

சமாதி நிலை கலைந்த பின்னும் சாரதை மருளவில்லை; மிரளவில்லை.

தன்னைச் சாங்கோபாங்கமாகப் பூஜித்த நாயகனின் பாதங்களில் இயல்பாக விழுந்து நமஸ்கரித்தாள்.

மகான்களின் வாழ்வில் மகோன்னதங்கள் நிகழும். அந்த மகோன்னதங்களையும் அவர்கள் அலாக்காக விழுங்கிவிட்டு எளிமையாக நிற்பதுதான் அவற்றிலும் உன்னதமா யிருக்கும்!

''ஸ்வாமீ! இந்தப் பீதாம்பரத்தையும், சங்கு வளையலையும் என்ன செய்யட்டும்?'' என்று வினவினாள்.

ராமகிருஷ்ணர் சிறிது நேரம் சிந்தித்தார். ''உன் அம்மாவுக்கு இதுகளைக் கொடுத்துவிடு. ஆனா அவளை வெறும் மனுஷின்னு நினைக்காமல், ஜகன்மாதான்னு நினைச்சுக் கொடு'' என்றார்.

''அப்படியே, ஸ்வாமீ! நான் வர்றேன்'' என்று விடைகொண்டு நஹவத்துக்கு விரைந்தாள் சாரதை.

பிரம்மாதி தெய்வங்களும், இந்திராதி தேவர்களும் தொழும்பு செய்யும் ஸ்ரீ ராஜராஜேசுவரியாகப் பூஜைபெற்றவள், மாமியாருக்கும் கணவருக்கும் சேவார்த்திகளுக்கும் தன் சேவையைத் தொடங்கிவிட்டாள்!

18. பக்தியின் சக்தி ; பொறுமையின் பெருமை

எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் பொறுமை வடிவில் உறைகிருளோ. நம்பிக்கை வடிவில் உறைகிருளோ அந்தத் தேவிக்கு வந்தனம், வந்தனம், மீண்டும் வந்தனம்.

--ஸ்ரீ துர்க்கா சப்தசதி. அத். 5.

சாரதாமணியைப் பூஜித்ததோடு ராமகிருஷ்ணரின் நீண்ட நெடுங்கால சாதனைகள் அனைத்தும் முடிந்தன. சகல சாஸ்திரங்களிலும், சகல மதங்களிலும் கூறப்பட்டுள்ள மார்க்கங்களை எல்லாம் அநுஷ்டித்து, அவை ஒவ்வொன்றின்மூலமும் சத்திய சாக்ஷாத்காரம் பெற்ற ராமகிருஷ்ணர் இந்தச் சாதனைகளுக்குப் பட்டாபிஷேகமாகவே மனையாளை மகாத்ரிபுரசுந்தரியாக வழிபட்டார். அவள் பட்டம் சூடியதே இவருக்குச் சாதனைகளின் துறவாக ஆயிற்று!

இந்த மண்ணிலே ஏதுமறியாத சாரதையாக வந்த பராசக்தி, அவரிடமிருந்து சகல ஞானத்தையும் ஏற்றுக்கொண்ட பின்னும், பொதுவாக ஏதும் அறியாதவள் போலவே வாழ்க்கையைத் தொடர்ந்தாள்; ஆயினும், இதன்பின் தகுந்த பாத்திரம் கிடைத்தபோது அவள் தனது மகத்தான ஞானப் பிரபாவத்தைக் காட்டலானுள்! அபூர்வமான சாதகர்களுக்கே இந்த பாக்கியம் கிட்டியது. ஆனால் வெளியுலகம் முழுவதற்கும் இன்னொரு பாக்கியம் கிட்டியது: அன்றிலிருந்து சாரதையின் அன்னையன்பு முன்னிலும் சிறப்பாகப் பிரவகிக்கலாயிற்று! 'அன்னையன்பு' என்ருல் அன்னையாக இருந்து அவள் செய்த அன்பு என்றும் பொருள் கொள்ளலாம்; அல்லது, உலகை எல்லாம் அன்னையாகக் கண்டு அவள் செய்த அன்பு என்றும் பொருள் கொள்ளலாம். ராமகிருஷ்ணர் மெய்வருந்திப் பல்லாண்டுகள் கடினமான சாதனைகளைச் செய்து பெற்ற இலட்சியம் உலகனைத்தையும் திவ்விய மாதாவாகக் கண்ட பாவமே யாகும். அதை எவ்விதப் பரிசிரமமும் இன்றி அவரிடமிருந்து சுலபமாகப் பெற்றுவிட்டாள் சாரதை! ஒன்றும் தெரியாதவள் போலிருந்து எத்தனை பெரிய கொள்ளையிட்டு விட்டாள்! ஆனுல் இதனினும் அதிசயம் யாதெனில், கொள்ளை கொடுத்தவரிடமும் அந்த மகாபாவம் நீங்காமல் நின்றது! மகாநுபவங்களை இப்படி வாரி வழங்கிவிட்ட அருமை மகனின் தியாகத்தை மெச்சி ஜகன்மாதா அதற்குப் பரிசாக அதே மகாநுபவங்களை வெகுமதியாக அளித்துவிட்டாள் போலும்! சாரதைக்குத் தாம்

செய்ய வேண்டிய பொறுப்பு முழுவதையும் ஈடேற்றிவிட்டோம் என்ற ஆனந்தமும் அதோடு அவருக்கு ஏற்பட்டது!

சாட்சாத் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் தன்னை வைத்துப் பூஜித்தார் என்றால் வேறெந்தப் பெண்ணும் இறுமாப்படைந்திருப்பாள்; அதைப் பறைசாற்றிப் பெருமை கொண்டிருப்பாள். அன்னை சாரதாமணியோ இதுபற்றி அபூர்வமாகவே பேசுவாள். பேசுகையில் இறுமாப்பும் இராது, அதிவிநயமும் இராது. அதைப் பற்றிச் சகஜமாகப் பேசுவாள்.

அவளது மைத்துனர் மகள் லக்ஷ்மி பெரியவளானபின் ஒரு முறை கேட்டாள்: "சித்தி, உனக்குக் கூச்சம் ரொம்ப அதிகமாச்சே! சித்தப்பா உன்னைத் தொட்டுப் பீதாம்பரம் போர்த்தினதையும், உன் காலில் செவ்வரக்குப் பூசினதையும், உன் வகிட்டிலே சிந்தூரம் இட்டதையும், உன் வாயிலே பட்சணமும் தாம்பூலமும் ஊட்டினதையும் நீ எப்படித் தாங்கிண்டே?"

சாரதை அதற்குச் சொன்ன பதில் இவ்வளவே: "அப்போ நான் நானாகவே இல்லை."

அதற்குமேல் என்ன சொல்லக் கிடக்கிறது?

வசந்த காலத்திலே மாமரம் கனிகளை உதிர்க்கிறது. உண்கிறோம். அடுத்த ஆண்டு மறுபடி வசந்த காலத்தில் மாமரம் மீண்டும் கனிகளை உதிர்க்கிறது! ராமகிருஷ்ணர் தமது அநுபவக் கனிகளைச் சாரதையிடம் உதிர்த்த பின்னும் மீண்டும் அவரிடம் அக் கனிகள் தோன்றிக் குலுங்கலாயின. இவை சாதனைகளை அப்பியசித்ததால் தோன்றவில்லை. எவ்விதச் சாதனையும் அற்ற சாரதைக்கு அவர் எப்படிக் கனிகளைத் தந்தாரோ, அவ்விதமே பராசக்தி அவரிடம் தானாக அந்த அநுபவங்களை அருளினாள்.

ஆறு மாத காலம் இரவுகளிலெல்லாம் இப்பேர்ப்பட்ட பரவச பாவ நிலைகளில் திளைத்தார் ராமகிருஷ்ணர். அந்த உயர் நிலைகளிலிருந்து அவரது மானுட சரீரத்தை மீட்டுத் தருவதற்காகச் சாரதை இரவெல்லாம் கண் விழிக்கவேண்டியிருந்தது. அவரது அற்புத அழுகைகளில் அந்தக் கோமள சரீரமே கரைந்துவிடுமோ என்று அவள் பொறி கலங்கியதுண்டு! அவரது அட்டகாசச் சிரிப்பிலே அந்த மலர் உடல் அப்படியே வெடித்துவிடுமோ என்று அவள் பதறித் துடித்ததுண்டு.

•

"ஐயோ, அம்மாடி! அப்ப நான் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. டாகுர் (ராமகிருஷ்ணரை அவரது அணுக்கத் தொண்டர்

ன் 'டாகுர்' என்றே அழைப்பர்) எந்தெந்த நிலைகளில் ஆழ்ந்திருந்தார்னு வார்த்தையால் வர்ணிக்கவே முடியாது. தெய்விக பரவசத்திலே என்னென்னவோ சொல்லிண்டு போவார், சிரிப்பார், அழுவார்; சில சமயத்திலோ ஒரு செயலும் இல்லாமெ கல்லாக ஸ்தம்பிச்சுடுவார். ஒரு ராத்திரி முழுக்க இப்படி இருந்திருக்கார். சுவாசம் இருக்கா, இதயத் துடிப்பு இருக்கான்னுகூடத் தெரியாது. நான் எப்படி நடுநடுங்கிண்டு உட்கார்ந்திருப்பேன் தெரியுமோ? அவர் காதிலே திவ்ய நாமங்களையும் மந்திரங்களையும் உரக்கக் சொல்ல முடியாதபடி என் நாக்கு வறண்டு போயிடும். பொழுது விடியாதா, ஹ்ருதய் மாதிரி அழுத்தக்காரா வந்து அவரைச் சமாதியிலேயிருந்து கலைச்சு பஹிர்முகமாக்க மாட்டாளான்னு தவிச்சுண்டு உட்கார்ந்திருப்பேன். ஒரு ராத்திரி டாகுர் போயிட்டார்னே நினைச்சு 'ஓ'ன்னு அழுதுட்டேன்! அப்புறம் காளியம்மாங்கிற வேலைக்காரியை விட்டு ஹ்ருதயரைக் கூப்பிட்டுண்டு வரச் சொன்னேன். ஹ்ருது வந்து மணிக்கணக்கா டாகுர் காதிலே கத்தினபின்தான் அவருக்கு இக லோக ஸ்மரணை வந்தது. நான் கண்ணீரும் கம்பலையுமா கண் இடுங்கி முகம் வீங்கியிருப்பதைப் பார்த்து அந்தக் காருண்யமூர்த்தி தவிச்சுப் போயிட்டார். 'அம்மா, இப்படி எத்தனையோ ராத்ரி எனக்காக நீ கண் முழிச்சுண்டு உட்கார்ந்திருக்கியா? பகலெல்லாம் உனக்கு ஓயாத உழைப்பு. ராத்திரியும் என்னாலே உன் தூக்கம் கெட்டுப் போறதா? கூடாது கூடாது! போறும், நீ என் ரூமிலே ராத்தங்கியது. உனக்கு நான் போதிக்கவேண்டியதெல்லாம் போதிச்சும் ஆச்சு. இனிமேலே நஹவத்திலேயே தூங்கு. இங்கே எனக்கு என்ன ஆயிடறதோன்னு கவலைப்படாதே. அம்மா பார்த்துக்குவா. உனக்கும் அது தெரியும். ஆனாலும் நீ என் பக்கத்திலேயே இருந்தா கவலையும் பயமும் படத்தான் செய்வாய். அதனாலே இனிமேல் நஹவத்திலேயே நித்திரை வைச்சுக்கோ' என்றார். நானும் அன்னிலேருந்து அப்படியே செஞ்சேன்" என்று பிற்காலத்தில் சாரதை சொல்லுவாள்.

பகலில் வெளிவராத கோஷா ஸ்திரீயான சாரதாமணி இப்போது இரவிலும் கணவருடன் தங்காததால் அவரைப் பார்ப்பதே துர்லபமாகத் தொடங்கியது. ஒரு நாள் அபூர்வமாக இருவரும் தனித்திருந்தனர். தனிமையில் அவர் தமக்குப் பூஜை செய்தது அவளுக்கு நினைவு வந்தது போலும்! அதற்குப் பிரதிபோல் அவரை ஜகன்மாதாவாகவே பார்த்து வணங்கினாள்.

அவர் சிரித்தார். "நாம் பகவதி மட்டுமல்ல, திவ்விய மாதாவுக்குப் பாங்கியராகப் பணிவிடை செய்கிற சகிகளும் நாமே" என்றார்.

'தாஸோஹம்' என்றால் 'நான் உன் அடிமை' என்று இறைவனிடம் சொல்கிற நிலை. இந்த நிலையிலிருந்தே 'ஸோஹம்' என்கிற நிலை – 'நானும் இறைவனும் ஒன்றே' என்று அநுபவிக்கிற இறுதி நிலை–சித்திக்கும். 'ஸோஹம்' என்கிற ஹம்ஸ ராமகிருஷ்ணருக்கு இப்போது என்னவோ 'தாஸோஹம்' ஆசை வந்தது. அதனால்தான் சர்வேசுவரியின் சேடியாகத் தம்மையும் சாரதையையும் சொல்லிக் கொண்டார்.

அவரையே கண்கொட்டாமல் பார்த்த தேவி, ''ஆமாம், நீங்கள் அம்மாவின் சேடிதான்'' என்றாள்.

பட்டுச் சேலை ஒன்றைக் கொண்டு வந்து அவருக்கு உடுத்தினாள்; நெற்றியில் திலகம் தீற்றினாள் ; வளையலும், ஹாரமும் அணிவித்தாள் — அன்றொரு நாள் அவளுக்கு அவர் செய்ததை எல்லாம் இன்று திருப்பிவிட்டாள்! சாது சாரதை அவரிடம் கடனாளியாகி விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்த மகா சமர்த்திதான்!

''நாம இரண்டு பேரும் அம்பாளோட சேடிகள்'' என்று உற்சாகமாகச் சொன்னாள்.

அந்தத் தம்பதியரிடைப் புனித ஆனந்தம் பேரலைகளை மோதியது.

அலை மிகவும் உயர்ந்தால், அதை அடுத்து மடிந்து விழவுந்தானே வேண்டும்?

ஆனந்த சாரதைக்கு மலேரியாக் காய்ச்சல் கண்டது. மதுர் பாபுவுக்குப் பிறகு காளி கோயில் நிர்வாகியாக வந்த சம்புநாத மல்லிக், பிரசாத் பாபு என்ற வைத்தியரைக் கொண்டு சாரதைக்குச் சிகித்ஸை தந்தார். ஆனால் பணிவிடை செய்யவே பிறந்த அவளால், பிறரது பணிவிடைக்குப் பாத்திரமாகிப் 'புக்கக'த்தில் இருக்க முடியவில்லை. ''நான் ஜயராம்பாடிக்கே போயிடறேனே!'' என்றாள் கணவரிடம்.

''ஓ, பேஷாக!'' என்றார் அவர். அதுதான் சந்நியாசி என்பது!

1873 ஜூன் மாதத்தில் சாரதை பிறந்தகத்துக்குப் புறப்பட்டாள்.

பிறந்தகத்துக்குப் போகும் வழியில் காமார்புகுருக்குச் சென்றாள் சாரதை. அங்கே ஒரு துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

ஹ்ருதயரோடுகூட தக்ஷிணேசுவரத்தில் ஆலய பூஜையை நடத்தி வந்த ராமகிருஷ்ணரின் தமையனுரான ராமேசுவரர் அப்போது காமார்புகுரில் இருந்தார். கபவாத ஜுரம் கண்டது அவருக்கு. தமக்கு இறுதி சமீபித்துவிட்டது என உணர்ந்தார் ராமேசுவரர். அதுகுறித்து அவர் இம்மியும் கலங்கவில்லை. ஊருக்குப் போவதற்கு ஏற்பாடு செய்வதானல்கூட நம்மை அறியாமல் ஒரு படபடப்பு இருக்கும். ராமேசுவரரோ பரம நிதானமாகத் தமது தகனம், சஞ்சயனம், மற்ற அபரக்கிரியைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

ஏதோ காரணத்துக்காக வாசலில் இருந்த மாமரம் வெட்டப்பட்டது. ரொம்பவும் சந்தோஷித்தார் ராமேசுவரர். "பேஷாப் போச்சு! இதன் நிழலிலே எத்தனையோ விளையாடினேன். இதன் பழங்களை நிறையத் தின்னு இருக்கேன். இதன் கட்டைகளே எனக்குச் சிதையாக இருக்கட்டும்" என்றார். தாரக நாமமாகிய ஸ்ரீராம நாமாவை ஜபித்தபடி இருந்தார். கடைசியாகச் சுற்றி யிருந்தவர்களைப் பார்த்து, "இந்தச் சரீரத்தைச் மசானத்து மத்தி யிலே வெச்சுக் கொளுத்த வேண்டாம். சாலை ஓரமான இடத்திலே புதையுங்கோ. அந்தச் சாலை வழியா பல சாதுக்கள் போவா. அவாளோட பாத தூளி இந்தச் சரீரத்தைப் புதைச்ச இடத்துக்கு மேலே பட்டுண்டே இருக்கட்டும்" என்றார்.

அன்றிரவே அந்தப் புனித ஜீவன் மண்ணுலகிலிருந்து விடை கொண்டது.

ராமேசுவரரின் முடிவு விதியை யாராலும் மாற்ற முடியாது — அம்பாளோடு அம்பாளான ராமகிருஷ்ணராலும் மாற்ற முடிய வில்லை — என்பதைக் காட்டுகிறது. ஏனெனில், அவருக்கு தக்ஷிணேசு வரத்தில் விடை தரும்போதே ராமகிருஷ்ணர் பரவச நிலை அடைந் தவராக, "உனக்குப் பத்தினியின் சங்கம் ஏற்பட்டால் மாண்டு போவாய்" என்றார்.

எத்தனையோ உத்தம குணங்களுக்கு உறைவிடமான விவேகி ராமேசுவரரையும் காமன் கணை உசுப்பிவிட்டது. ராமகிருஷ்ணரின் ஆணையை மீறுமாறு பிரகிருதி வேகம் அவரை இழுத்தது. உடனே அவருக்குக் சுபவாத ஜுரமும் வந்து, அந்திமத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டது.

காமார்புகுரில் முன்பு சாரதையும், ராமகிருஷ்ணரும் பிரம்ம சரியம் காத்த பெருமையைப் பார்த்தோம். இங்கே ராமேசுவரரின்

பலவீனத்தையும் பார்க்கிறோம். ராமேசுவர் தம்பதி வாழ்ந்த கூரையடியிலேயே அவரைவிட இளைய நம் கதாநாயக – நாயகியர் நெருப்பாக வாழ்ந்ததை எண்ணும்போது அதன் பெருமை இன்னமும் பெரிதாகத் தெரிகிறது அல்லவா?

மதனியின் ஆறாத் துயரத்தில் சாரதை பங்கு கொண்டாள். துயரம் செறிந்த சூழலில் நோயாளியான தன்னால் வேறு இம்சை நீடிக்க வேண்டாம் எனக் கருதி ஜயராம்பாடிக்கு விரைந்தாள்.

அவளுக்கு உடம்பு தேறவில்லை. மனத்திலும் வழக்கமான தெளிவில்லை. வழக்கம்போல் ஊராரின் வம்பு, அம்மாவின் குமுறல் எல்லாம் சேர்ந்துகொண்டன. தக்ஷிணேசுவரத்து ஆனந்த வாழ்வுக்கும், ஷோடசி பூஜையின் உன்னதத்துக்கும் சம்பந்தமேயில்லாத சுவையற்ற அவல் வாழ்வாயிற்று! சாரதை, ஷோடசியாகி அணிந்த பீதாம்பரத்தையும் சங்கு வளையலையும் தனது அம்மாவுக்குத் தந்தாள். ராமகிருஷ்ணரின் உத்தரவுப்படியே அப்படிச் செய்தாள். ஆனால் அதிலுங்கூட ஆனந்தமில்லை. ஒரு மங்களவாழ்வு முடியுமுன் இந்த மங்களத்தைச் செய்துவிட வேண்டும் என்பது போலவே செய்தாள்.

ஒரே ஒரு சந்தோஷ சம்பவம் இதனிடை நிகழ்ந்தது. சாரதையின் மூன்றாவது தம்பி காளிகுமாருக்குப் பூணூல் கல்யாணம் நடத்தினார்கள்.

அதற்கு நான்காம் நாள் ஸ்ரீராம நவமி. எதிர்பாராத துக்க சம்பவம் நிகழ்ந்தது. சாரதையின் அருமைத் தந்தை ராமசந்திர முகர்ஜி ஸ்ரீ ராமபிரானின் இணையடி அடைந்துவிட்டார்! ராமன் பெயரைச் சூட்டிக்கொண்டு, ராமா ராமா என்று வாழ்ந்த அந்த நல்ல மனிதர் ராமநவமியன்றே ராமனைச் சென்றடைந்தது, அவரைப் பொறுத்தமட்டில் பெரிய பாக்கியந்தான். ஆனால் சியாமா சுந்தரியின் கரத்திலிருந்து சங்கு வளையல் கழன்றது; பீதாம்பரம் பெட்டிக்குள் பதுங்கியது. அவளும், சாரதையும், மற்றக் குழந்தைகளும் தவித்தனர்.

வறுமைத் துயரம் பயங்கரமாக வந்து பீடித்தது. ராமசந்திரர் பெரிய சொத்து எதுவும் வைத்துப் போகவில்லை. பயிரிடவே லாயக்கில்லாத நிலையில் சிறிது நிலம் இருந்தது, அவ்வளவுதான்! புருஷக் குழந்தைகள் எதுவுமே இன்னும் உத்தியோகம் பார்க்கிற அளவுக்குத் தலை எடுக்கவில்லை. கல்கத்தாவில் புரோகிதம் செய்து வந்த ராமசந்திரரின் சகோதரர் ஈசுவரசந்திரர் தமது அற்ப சம்

பாத்தியத்திலே ஏதோ சிறிது மிச்சம் பிடித்து அனுப்பினார். அது எப்படி எட்டு ஜீவன்களின் வயிற்றை நிரப்பும்?

இத்துணை இன்னலில் அங்கே தானும் ஒரு பாரமாக இருக்கக் கூடாது என்று கருதி, தக்ஷிணேசுவரம் திரும்பிவிட்டாள் சாரதை.

தேவி சியாமாசுந்தரி கூலிக்கு உழைத்துக் கொட்டலானாள். ஊர் பெரியதனக்காரரான பானர்ஜியின் வீட்டு நெல்லைக் குற்றிக் கொடுத்து, அதில் கால் பாகம் கூலி பெற்றாள். குஞ்சும் குளுவானும் நிறைந்த தன் வீட்டைவிட்டு வெளியே சென்று சமைத்துப் போட இயலாததால், தன் வீட்டுப் புறக்கடையிலேயே பன்னிரண்டு அடுப்புக்களை ஏககாலத்தில் மூட்டிக்கொண்டு பல குடும்பங்களுக்குச் சமையல் செய்து அனுப்பி வைத்தாள். குடித்தனம் நடத்தவும் பிள்ளைகளைப் படிக்கவைக்கவும் இதில் கிடைத்த கூலி போதவில்லை. மூன்று பிள்ளைகளை உறவினர் வீடுகளுக்கு அனுப்பிவைத்தாள்.

சாரதை சாம்பிக் கிடந்தாள் தக்ஷிணேசுவரத்திலே. அவளுக்குப் பயங்கரமான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. சம்பு பாபு சிறந்த சிகித்சைக்கு ஏற்பாடு செய்தபோதிலும் நோய் குணமாவதாகக் காணோம். புத்திர சோகப்பட்ட மாமியாரிடம் தன் நோயைப்பற்றிப் பிரஸ்தாவமே செய்யாமல், மூச்சைக் கையில் பிடித்துக்கொண்டு கைங்கர்யம் செய்தாள் சாரதை. அப்பாவின் மரணமே அவளை உருக்குலைத்துவிட்டது என்று அந்தக் கிழவி நினைத்திருப்பாள்.

ராமகிருஷ்ணர் இப்போது சாரதையிடம் நடந்துகொண்ட விதம் விசித்திரமாயிருந்தது. எவளை ஸ்ரீ ராஜராஜேசுவரியாக வழிபட்டாரோ அவளை இப்போது அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. இதற்குக் காரணம் அந்த ராஜராஜேசுவரியேதான். அவர் ஷோடசி பூஜை முடிவில் தம் சாதனைகள் அனைத்தின் பலனையும் சாரதையின் உட்செலுத்திவிட்டு, தாம் திறந்த வானைப்போல் இலேசாகிவிடப் பார்த்தார் அல்லவா? ராஜராஜேசுவரி அதை அநுமதிக்கவில்லை. ஊரில் திருடர்கள் மிகுந்திருக்கையில் காவல் அதிகாரி நிம்மதி தேடிக் கொள்ள முடியுமா? கலி முற்றப் போகிறது, இந்த கதாயிதான் அதைத் தடுக்கும் காவல் பட்டாளத்தை அமைக்கவேண்டும் என்று அம்பிகை திருவுள்ளம் கொண்டனள்; அவர் எந்தச் சாதனையும் புரியாமலே அவருள் மீண்டும் மகா வித்யைகளைப் பயிரிடத் தொடங்கினாள். அவற்றின் அறுவடையை அவர் பல புண்ணிய சீடர்களுக்குப் படைத்து அவர்களை விவேகாநந்தர், பிரம்மாநந்தர், ராமகிருஷ்ணாநந்தர், சாரதாநந்தர் முதலிய தர்மபோதகர்களாக ஆக்கவேண்டும்

என்பது திவ்விய மாதாவின் சங்கற்பம். எனவே, இப்போது ராம கிருஷ்ணர் மீண்டும் பல அதீத அனுபவங்களையும் உபதேசங்களையும் தம்முள் பெற்றார். அதன் கனம் தாங்கொணாததாக இருந்தது. அம்பாள் நியமித்துள்ள சீடர்களுக்கு வழங்கவேண்டிய தர்மகர்த்தாவிடம் உள்ள சொத்துப்போல் இந்த ஆத்மிக தனம் தம்மிடம் வந்து சேர்ந்திருக்கிறது என்றும் அறிந்துகொண்டார். அந்தச் சீடர்கள் சீக்கிரமே வந்து தனத்தைப் பெற்று, தம் கனத்தைக் குறைக்க மாட்டார்களா என்று பரிதவிக்கலானார். பசுமாடு மடியிலே பால் முட்டிக் கனக்கிறபோது, கன்று வந்து பருகாதா என்று எப்படி ஆவலோடு, ஆதுரத்தோடு, ஆதங்கத்தோடு எதிர்பார்த்து நிற்குமோ அப்படியே சீடர்களுக்குத் தமது ஆத்ம தனத்தை ஊட்ட ஆர்வத் துடிப்புக் கொண்டிருந்தார் ராமகிருஷ்ணர். பசு அடி வயிற்றி லிருந்து 'அம்மா' என்று கத்துவது போலவே ராமகிருஷ்ணர் 'ஒளிந்திருக்கும் என் குழந்தைகளே, வாருங்கள், வாருங்கள்' என்று கதறலானார்.

இந்தப் பெரிய கதறலுக்கிடையே, சாரதை ஒளித்து வைத் திருந்த துயரம் அவருக்கு எப்படித் தெரியமுடியும்?

ராமகிருஷ்ணர் மனம் வைத்திருந்தால் ஒரு சில பிரபுக்களிடம் சொல்லி மாமியார் குடும்பத்தின் வறுமையைத் தீர்த்திருக்கலாம். ஆனால் அவருக்கு அப்போது மனம் என்பதே சாதாரண ரீதியில் செயல்படவில்லை. சாரதையும் இவ்விஷயமாக வாய்திறந்தாளில்லை.

ஓராண்டு உடல் உபாதையைப் பொறுத்துக்கொண்டு பதிக்கும், பக்தர்களுக்கும் சுசுரூஷை செய்தாள். பிறகு இடம் மாறி இருந்து பார்த்தால் வித்தியாசம் தெரியலாம் எனக் கருதி ஜயராம்பாடிக்குத் திரும்பினாள்.

வித்தியாசம் தெரிந்தது! அதாவது, பயங்கரமாக இருந்த வயிற்றுப்போக்கு மகா பயங்கரமாகியது—அவளை மரணத் தின் நுழை வாயிலுக்கே அழைத்து வந்துவிட்டது!

நடைப்பிணமாகிக் கிடந்தாள் சாரதை.

ராமகிருஷ்ணருக்கு எப்படியோ விஷயம் தெரிந்தது. அப்போது அவரது மனமும் விஷயத்தை வாங்கிக்கொள்ளும் நிலையில் இருந்தது! பெண் பிள்ளையைப்போல் அலமந்து போனார். "ஹ்ருதே, கடை சிலே எல்லாம் இப்படியா முடியணும்? அவள் ஜன்மா எடுத்ததுக்கு எத்தனையோ செய்யணுமே! அதொண்ணும் செய்யாமல், சாதாரண

மநுஷ்யாள் வந்து போறுப்பலேயா அவளும் போயிடப் போறு? இதுவா அம்பாளோட சங்கல்பம்?'' என்று விம்மினர்.

அதுவல்ல அம்பாளின் சங்கற்பம் என்றும் அப்போதே புரிந்து கொண்டார். உடனேயே பத்தினியின் கவலையை அடியோடு மறந்து, சிடர்களுக்காகப் படுகிற கவலையை எடுத்துப் போட்டுக்கொண்டார்.

பின்னிக்கொள்கிற கால்களோடு கலுகேடே ஏரியின் கரைக்கு வந்த சாரதை கிழிந்த நாராகக் கீழே சாய்ந்தாள். ஏரித் தண்ணீருக்குள் அவளது பிரதிபிம்பம் தெரிந்தது. 'அடி, சாரதே! உன் சரீரத்தைப் பார்த்தியா? ஒரு காலத்தில் எப்படித் தளதளன்னு இருந் தது? இப்போ எலும்பும் தோலுமா ஆகியிருக்கு. கதுப்புக் கன்னத் திலே எலும்பு மேடு இட்டிருக்கு! கமுகுக் கழுத்து நேர்ந்து நலிஞ் சிருக்கு! தங்க வர்ணம் பித்தளையாப் பல்லை இளிச்சிடுத்து! இதுதாண் டியம்மா மநுஷ சரீரம் என்கிறது! இதுக்குத்தான் ஊர்ப்பட்ட சிங் காரமும், சவரணையும் பண்ணியாறது. சை, இதோடே உன்னை ஏன் சம்பந்தப்படுத்திக்கணும்? இது இங்கேயே இப்படியே கிடக்கட் டும்; இதை விட்டுட்டு நீ போயிடேன்' என்று சொல்லிக்கொண்டாள்.

அவளைப் போகவிடுவாளா தேவி?

வயிற்றுப்போக்கு நின்றது.

மெலிந்த உடல் பருக்கலாயிற்று.

ஆனல் இதென்ன? அது ஆரோக்கியப் பருமனுக நிற்கக் காணுேமே! ஊளைச் சதை போடுகிறதா என்ன?

ஊளைச் சதையும் அல்ல. உடம்பெல்லாம் நீர் சுரந்து குத்தல் கொடுக்கிறது.

தலைவலி போய்த் திருகுவலி. வயிற்றுப்போக்கு நின்றது. இப் போது உடம்பெல்லாம் துர்நீர் பரவி வதைக்கிறது.

பொறுமையின் அவதாரத்தை உலகுக்குக் காட்ட வேண்டும் என் பதற்காக அம்பாள் அவளை வறுத்தெடுக்கிருள். வறுத்தெடுக்கவில்லை, விஷ நீர்ப் பாண்டத்துக்குள் அமுக்கி எடுக்கிருள்!

சாரதையின் மூக்கிலிருந்தும் கண்ணிலிருந்தும் ஊனீர் பிரவாக மாக வழிந்தபடி இருக்கிறது. உடம்பை அசைக்கவும் முடியாமல் கிடக்கிருள்.

தம்பி உமேஷ் அருமை அக்காவின் பக்கத்தில் வந்து அமருகிறுன். தனக்குக் குளிப்பாட்டி, உடை உடுத்தி, உணவூட்டி வளர்த்த தமக்கை திணறிக்கொண் டிருப்பதைப் பார்த்து அவன் உள்ளம் குழைகிறது. தேம்பியழாத குறையாகச் சொல்கிறுன்: ''அக்கா, பக்கத்திலேயே சிம்மவாஹினி இருக்கச்சே உனக்கு உடம்புக்கு வரப் படுமா? அவள் உன் உடம்பைச் சரியாக்கிஞெழியச் சாப்பிடற தில்லே, உபவாசமிருந்து செத்தாலும் சரின்னு விரதம் எடுத்துக் கோயேன்!"

அந்தப் பிள்ளே திடுமென அப்படிப் பேசியது சாரதைக்கு ஆச்சரிய மாயிருந்தது. 'இதுவும் சிம்மவாஹினியின் லீலேதானே? எனக்கு உடம்பு குணமாகிறதோ, இல்லேயோ, இவன் சொல்கிறபடி உபவாச மிருந்து மாண்டு போனுலும் நல்லதுதானே! அம்பாளுக்காக விரதம் இருந்து மரணமடைந்தால் அதில் தற்கொலே என்ற தோஷமும் வராது அல்லவா?'

''அக்கா, நான் சொல்றதைத் தட்டாதே! இதோ, என் கையைப் பிடிச்சுக்கோ. நானே உன்னேத் தாங்கலாக அணேச்சுண்டு அம்பாள் கோயிலிலே கொண்டு போடறேன். அங்கேயே கிட. ஒண்ணு, அவள் உன் உடம்பைக் குணமாக்கட்டும், இல்லாட்டா இந்தப் பாழாப் போற குடும்பத்துக்கு உழைச்சுக் கொட்டி ஓடா யிட்ட நீ...."

உமேஷ் வார்த்தைகளே முடிக்க மாட்டாமல் திக்கியபோதே, சாரதை அவனது கையைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்ருள்.

சில காலத்துக்குப்பின் இதே உமேஷ் பதினெட்டு வயசுக் காளே யாக வளர்ந்து பொலிந்தபோது சிம்மவாஹினி அவனே பலி வாங்கிக் கொண்டு, நம் சாரதையைக் கதறக் கதற அடித்தாள். அந்தக் கதை இப்போது எதற்கு? சிம்மவாஹினியின் இன்னல்களேப் பார்ப்போம்:

அக்காள் இசைந்ததில் உமேஷுக்கு ஒரே குஷியாகி விட்டது.

''பௌர்ணமியா, அமாவாசையான்னு வித்தியாசம் தெரியாத படி என் கண்ணிலேருந்து ஜலம் கொட்டி நான் குருடியாவே இருந் தேன். உமேஷ் என்னேப் பிடிச்சுண்டு போய்ச் சிம்மவாஹினி சந்நிதி யிலே கிடத்திட்டுப் போயிட்டான். தன்னந் தனியாக் கிடந்தேன். அவஸ்தைக்கு மகுடாபிஷேகம் பண்ணற மாதிரி வயிற்றுப்போக்கும்

திருப்பிண்டது. மூணு நாலு தடவை குழந்தை மாதிரி தவழ்ந்தே வெளிலே போயிட்டு வந்தேன். இப்படி நான் தனியாக் கிடக்க றேன்னு பக்கத்து வீட்டு அம்மாளுக்குத் தெரிஞ்சுது. அவளை நான் செவிலித் தாயாவே நினைச்சு 'ஆயா'ன்னு கூப்பிடற வழக்கம். வயசுப் பெண்ணான நான் கண்ணும் தெரியாமல் தனியாக இருப்ப தனால் எங்கே பயந்து நடுங்குவேனோன்னு அவளுக்குக் கவலை. அத னாலே அடிக்கொரு தடவை இருமிக் காட்டிண்டே இருந்தா."—நம் அம்மாவின் பிற்கால வர்ணனை இது.

நேரம் போய்க்கொண்டேயிருந்தது. சிம்மவாஹினியிடமிருந்து சாரதைக்கு எந்தச் சூசகமும் வரவில்லை.

அவளுக்குத் தெரியாதா, சாரதையைவிடத் தவிக்கிற இன்னொரு ஜீவனுக்குத்தான் தன் தரிசனத்தை முதலில் தரவேண்டும் என்று?

'ஊரொப்பக் குடித்தனம் பண்ணாமல், இப்படி மாளாத வியாதிப் பிண்டமாகவும் இந்தப் பெண் வந்து சேர்ந்ததே!' என்று பெற்ற வயிறு பற்றி எரிய அமர்ந்திருந்தாள் சியாமாசுந்தரி. கூலி கொடுக்கும் யஜமானர்களுக்குச் சமைத்து அனுப்ப வேண்டியிருந்த தால் அவள் வீட்டை விட்டும் வர முடியவில்லை. வீட்டில் வேலை செய்தவாறே கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள்.

திடுமென ஒரு பன்னிரண்டு வயதுப் பெண் அவள் முன் வந்து நின்றாள். பார்த்தால் கருமார் வகுப்புப் பெண் போலத்தான் இருந் தது. ஆயினும், கருமை ஆர்ந்த காளியாக, கருமம் தீர்க்கும் காளி யாக அவளே சியாமாசுந்தரியின் உள்மனத்துக்குத் தென்பட்டாள்.

அந்தப் பெண் சியாமாசுந்தரியின் கையில் ஒரு மருந்துப் பொட்ட ணத்தைத் திணித்தாள். "சட்டுனு போ, ஊம், ஜல்தி! அவளை எழுப்பி இங்கே அழைச்சிண்டு வந்து இந்த மருந்தைக் கொடு" என்றாள். உடனே மறைந்தும் போனாள்.

மறைந்தவள் இங்கே சாரதையிடம் வந்தாள். "சாரதா! சுரைப் பூ இருக்கே, அதோடு உப்பை வெச்சு அரைச்சுப் பிழிஞ்சு, அந்தத் துளியைக் கண்ணிலே விட்டுக்கோ; குணமாயிடுவே" என்றாள்.

சாரதை தனது விதிர்விதிர்ப்பை உணரவும், அவளுக்கு நன்றி சொல்லி நமஸ்கரிக்கவுங்கூட அவகாசம் தராமல் நொடியிலே மறைந் தாள்.

சியாமாசுந்தரி கோயிலுக்கு வந்தாள். பெண்ணை வீட்டுக்கு அழைத்து வந்து மருந்து தந்தாள். சாரதை சொன்னவண்ணம் உப்புச் சேர்ந்த சுரைப்பூச் சாரத்தைக் கண்ணில் பிழிந்தாள்.

அவ்வளவே! மளமளவென்று கண்களிலிருந்து என்னென்னவோ உதிர்ந்தன. வற்றுத ஊற்று வற்றியது. அந்தக் கணமே சாரதையின் தெள்ளிய திருநயனங்கள் தமது பழைய காந்தியை, சாந்தியைப் பெற்றுவிட்டன.

உடல் வீக்கமும் மாய மந்திரமாக வடியலாயிற்று.

இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? 'சர்வ வியாதி பிரசமனி'யும், 'சர்வ மிருத்யு நிவாரிணி'யுமான தேவி சங்கற்பித்துவிட்டாலே போதும்; எந்த வியாதியும் பறந்துபோகும்! அப்படியிருக்க அவள் மருந்து கொடுத்தும், சாறு பிழியுமாறு சொல்லியும் சிறிது வேலை வாங்கி, சிறிது போது சென்ற பின்பே நிவாரணம் தந்தாளே அதுதான் ஆச்சரியம்! அவள் இஷ்டம், அப்படி விளையாடினுள்!

சாரதைக்கு எல்லையில்லாத விச்ராந்தி உண்டாயிற்று. பிறருக்குத் தந்த தொந்தரவு ஓய்ந்தது; ''சாக்ஷாத் அம்மாவே மருந்து தந்தாள்'' என்று வருபவர் போகிறவரிடமெல்லாம் வாயாரச் சொல்லி, தேவியின் கருணையை நினைந்து நெஞ்சுருகினுள்!

ஊரெல்லாம் சிம்மவாஹினியின் புகழ் பேசப்பட்டது. சாரதாமணிக்கு உடல் உபாதை வந்து நிவாரணமானதன் பயனுக ஊரிலேயே பக்தி தழைத்தது! இதற்காகத்தான் அவளுக்கு நோய் வந்து, அவளும் தம்பி வார்த்தையைப் பொருட்படுத்தி, நோயை அலட்சியப்படுத்தாமல் தேவிக்கு நேர்ந்துகொண்டாளோ?

இந்த நிகழ்ச்சியைப் பிற்காலத்தில் நினைவு கூரும்போது அன்னை, ''எனக்கு மருந்து கிடைச்சுது; ஊர் முழுதுக்கும் அநுக்கிரகம் கிடைச்சுது'' என்பாள்.

எவ்வளவு பொருள் பொதிந்த வாசகம்!

நம் கையில் இல்லாத ஒரு விஷயத்தில் மகாசக்தியே கதி என்று விட்டுவிட்டால் நிச்சயம் அந்தச் சக்தி அருள் புரிந்தே தீரும் என்று இச்சம்பவம் உலகுக்கு நிரூபித்துக் காட்டுகிறது. உடற்பிணி தீருதல், பணக்கஷ்டம் தீருதல் முதலியவற்றைக் கடவுளிடம் கோரக் கூடாது என்பார்கள். ஆயினும் உயர்பக்குவம் பெருதவர்கள், தங்கள் வாழ்க்

கைப் பிரச்னைகளையுங்கூட அதீதசக்தியிடம் நம்பி ஒப்புக்கொடுத்தால் அது வழிகாட்டிக் காக்கும் என்பதைச் சாரதை மெய்ப்பித்து விட்டாள்!

தன் மகிமையை மறைத்து மறைத்தே வாழ்ந்த நமது அம்மா பிற்காலத்தில் ஒருமுறை தன்னையும் அறியாமல் சொன்னாள்: ''மற்றவாளுக்கு ஓர் ஆதரிசமான உதாரணத்தைக் காட்டறதுக்கு எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமாகவே செஞ்சு காட்டிவிட்டேன்.'' அவளது எளிமை, அன்பு, உழைப்பு இவை மட்டுமின்றி உடல்நோய் தீருவதற்காக உறுதியுடன் அம்பாளிடம் அவள் நேர்ந்துகொண்டதும் கூட மக்களுக்கு ஓர் உதாரணமாகிறது. நம்பிக்கையின் சக்தியை அது எடுத்து இயம்புகிறது.

நம் அம்மாவுக்கு ஆயுள் உள்ளளவும் சிம்மவாஹினியிடமிருந்த பக்தி சொல்லத்தரமன்று. அந்த ஆலயத்து மண்ணை ஒரு பேடகத்தில் போட்டு அதனை எப்போதும் தன்னுடன் வைத்திருந்தாள். சில சமயங்களில் அதில் சில தூள்களை வாயில்கூடப் போட்டுக்கொள்வாள்.

பெண்களுக்குப் பக்தி வேண்டும்; பொறுமை வேண்டும். பக்தியின் அவசியத்தை ஒரு நோய்மூலம் நிரூபித்த சாரதைக்கு இன்னொரு நோயைத் தந்து பொறுமையின் பெருமையை நிரூபித்தாள் அம்பிகை.

சாரதைக்கு வழக்கமான மலேரியாக் காய்ச்சல் கண்டு, எக்காரணத்தாலோ அவளது மண்ணீரல் வீங்கியது. அந்தக் காலத்தில் காயாபட்-பதன்கஞ்ஜ் என்ற ஊரில் அதற்கு ஒரு ராட்சத வைத்தியம் செய்வார்கள். அதாவது நோயாளியைச் சிவாலயத்தில் தீர்த்தமாட்டுவித்துப் படுக்கவைப்பார்கள். வயிற்றின்மீது ஒரு வாழை இலையைப் போடுவார்கள். வைத்தியர் இலந்தைக் கொள்ளிக்கட்டையால் வாழையிலை மேல் கொடூரமாகத் தேய்ப்பார். கீழே உள்ள சதையே பிய்ந்து போவது போல வெந்துவிடும். பிறகு ஈரல் வீக்கம் தணியும் என்று நம்பிக்கை. நம்பிக்கைதானே ஒழிய, இந்தப் பயங்கர மருத்துவத்துக்கு ஆளான எவராவது நடைமுறையில் குணமடைந்தாரா என்பது சந்தேகமே.

சாரதாமணி துணிச்சலுடன் கொள்ளிக்கட்டை வைத்தியத்துக்கு உடன்பட்டாள். அன்னையை அழைத்துக்கொண்டு காயாபட்-பதன்கஞ்ஜுக்குப் போனாள். சிவாலயத்தில் முழுகினாள்.

ஒரு சில நோயாளிகள் இந்தக் குரூரமான வைத்தியத்துக்கு ஆளாகித் துடிதுடிப்பதைப் பார்த்தாள் சாரதை. அந்த நோயாளி

களைப் பலர் அழுத்திப் பிடித்துக்கொண்டும், அவர்கள் கொள்ளிக் கட்டை எரிச்சல் தாளாமல் திமிறுவதையும் பார்த்தாள்.

சாரதையின் முறை வந்தது. சியாமாசுந்தரி பொறி கலங்கி அருமை மகளைப் பார்த்தாள். 'இந்தப் பாவியின் வயிற்றில் வந்து பிறந்ததற்காக இந்தப் பெண் படுகிற அவஸ்தைகளுக்கு எல்லையே இல்லையா?' என்று எண்ணி உடல் துடிக்க நின்றாள். சாரதையிடமோ சிறிதும் துடிப்பு இல்லை. நிதானமாக மருத்துவரை நோக்கி நடந்தாள். அவளை அழுத்திப் பிடித்துக்கொள்வதற்காகச் சிலர் முன் வந்தனர்.

''அதெல்லாம் அவசியமில்லை'' என்று பளிச்செனச் சொல்லி விட்டு, நீள நெடுக நிம்மதியாகப் படுத்தாள் சாரதாமணி.

சிகித்சை என்ற பெயரில் சித்திரவதை நடந்தது. விசித்திரமான சகிப்புத் தன்மையோடு அதைத் தாங்கிக்கொண்டாள் தேவி. 'ஹ்ம்' என்று ஒரு முனகல்கூட அவளிடமிருந்து பிறக்கவில்லை. கொள்ளிக்கட்டைக்குக் கீழே மரக்கட்டையாகப் படுத்திருந்தாள்.

வைத்தியத்தின் பலனோ, பொறுமையின் பலனோ, ஈரலும் சுருங்கி விட்டது! சாரதை ஆரோக்கியம் பெற்றாள்.

19. ஜகத்தாத்ரி

துர்க்காதேவீ! உன்னை நினைத்த மாத்திரத்தில் மக்களின் அச்சத்தை அகற்றுகிறாய். அச்சம் நீங்கிய இன்ப வாழ்வில் உன்னை ஸ்மரித்தால் நன்மதி அளிக்கிறாய். வறுமையும், துயரமும், பயமும் நீக்குபவளே! சதா காலமும் நனைந்த நெஞ்சுடன் சகல உபகாரமும் புரிய உன்னையன்றி எவர் உளர்?

—துர்க்கா ஸப்தசதி 4.17

மனத்தாலோ, உடலாலோ ஏதோ ஒரு விதத்தில் சாரதையை துன்புறுத்திப் புடம் போட்டுக்கொண்டேயிருந்தாள் பராசக்தி. தக்ஷிணேசுவரத்திலிருந்து துயரச் செய்தி வந்தது—சந்திரமணி தேவி காலமாகிவிட்டாள்! சாரதை எத்தனையோ பரிவுடன் பணிவிடை செய்து அன்பு செலுத்திய மாமியின் உடலைக் கூட அவள் தரிசிப்பதற்கில்லாமல் உத்தரக்கிரியை யாவும் ஆகி விட்டன! அந்திம சமயத்தில் மாமியுடன் இருந்து அவளை வாரிப் போடாத தான் இப்போது எதற்காக தக்ஷிணேசுவரம் போக வேண்டும் என்று சாரதை எண்ணினாள் போலும்! அவளது அதிசயக் கணவரும் அவள் வரவேண்டும் என்று சொல்லி அனுப்பவில்லை.

அம்பிகையின் 'விஷமங்'களை எண்ணியபடி சாரதை ஜயராம்பாடியில் காலம் தள்ளிக்கொண்டிருக்கையில் குதூகலத்துக்குரிய ஒரு லீலையை நிகழ்த்தினாள் அந்த அம்பிகை.

நகர வாழ்வில் அவரவருக்கும் தம் குடும்ப அலுவல்களுக்கே பொழுது போதுமாயிருப்பதில்லை. எனவே, நகர மக்களுக்குப் பொதுவாகப் பிற குடும்பங்களுடன் விசேஷப் பற்றுதலும் இருப்பதில்லை; துவேஷமும் இருப்பதில்லை. கிராம மக்கள் இப்படியல்ல. அங்கே குடும்பங்கள் நெருங்கிப் பழகும். இதனாலேயே பல குடும்பங்களிடை மிகுந்த சௌஜன்யம் நிலவினாலும் சில குடும்பங்களிடையே ஆழ்ந்த துவேஷமும் ஏற்படுவதுண்டு. இது பல தலைமுறைகளுக்கு நீடிக்கவும் செய்யும். நவ முகர்ஜியின் குடும்பத்துக்கும் ராமசந்திர முகர்ஜியின் குடும்பத்துக்கும் இடையே இப்படி ஒரு பூசல் இருந்து வந்தது.

நவ முகர்ஜியின் வீட்டில் விமரிசையாகக் காளி பூஜை நடத்த ஏற்பாடாயிற்று. ஊரெல்லாம் அந்தப் பூஜைக்கு புஷ்பம், பழம்,

பணியாரம் முதலியன சமர்ப்பித்தனர். பால் போன்ற மனம் கொண்ட சியாமாசுந்தரிக்கு நவ முகர்ஜி குடும்பத்திடம் வைரம் பாராட்ட முடியவில்லே. காளிக்கு நிவேதிப்பதற்காக அன்னம் செய்து நவ முகர்ஜியின் வீட்டுக்கு எடுத்துச் சென்றுள்.

இவளுக்குப் பகை உணர்ச்சி இல்லாவிட்டாலும் அந்த மனித ருக்கு மனம் மாருமலே இருந்தது. ''இந்த நிவேதனத்தை இங்கே சேர்ப்பதற்கில்லே'' என்று நிஷ்டுரமாகக் கூறிவிட்டார்.

ஊரெல்லாம் சேர்ந்து விழாக் கொண்டாடும்போது சியாமாசுந்தரி துக்கத்துக்கும் அவமானத்துக்கும் ஆளாகிச் சோற்றுப் பாத்தி ரத்தை வீட்டுக்கே திரும்பத் தூக்கி வந்தாள்.

கதறிக் கதறி அழுதாள். 'அம்மா, எத்தனேயோ தரித்திரத்தில் கஷ்டப்பட்டு அரிசி சேர்த்து உன் பக்தர்களுக்கென்று அன்னம் தயா ரித்தேன். மறுத்துவிட்டாயே!' என்று வாய்மொழியில் சொல்லா மல், கண்ணீரால் சொல்லிக்கொண்டு படுத்தாள்.

காளிக்காகச் சமைத்த அன்னத்தை வீட்டில் யாரும் புசிக்க வில்லே. அனேவரும் காய்ந்த வயிற்ருேடும் காய்ந்த மனத்தோடும் படுத்தனர்.

'இத்தனே அன்னத்தை வீண் செய்கிற அந்தஸ்து இந்தப் பிச்சைக் காரர்களுக்கு வந்துவிட்டதா? ஆனுலும் இதை நீ ஏற்ருலன்றி எங்க ளுக்கும் இது வேண்டியதில்லே' என்று சூள் உரைத்துவிட்டுக் கண் அயர்ந்தாள் சியாமாசுந்தரி.

தன்னே யாரோ தட்டி எழுப்ப, துணுக்குற்றுக் கண் விழித்தாள். கதவருகே கால்மேல் காலே மடித்துப் போட்டுக்கொண்டு கன கம்பீர மாக அமர்ந்திருந்தாள் செக்கச் சிவந்த சிங்காரி ஒருத்தி.

சியாமாசுந்தரி முன்பு அழுது கன்னத்தில் காய்ந்திருந்த கண்ணீர்ச் சுவட்டிலே புதுக் கண்ணீர் வழியலாயிற்று.

''ஏன், அழறே! காளியோட அன்னத்தை நான் சாப்பிடறேன். வருத்தப்படாதே'' என்றுள் சிவப்புச் சிங்காரி.

அவள் யார் என்று சியாமையின் உள் மனத்துக்குத் தெரிந்தது. இருந்தாலும் அவளது நா, ''நீ யாரும்மா?'' என்று வினவியது—அந்தச் சிங்காரியின் செம்பவள வாயிலிருந்தே அவளது அடையாளம் வெளியாக வேண்டும் என்ற ஆசையில் போலும்!

''நான்தான் ஜகன்மாதா. இந்தப் பிரபஞ்சத்துக்கெல்லாம், அம்மா. பிரபஞ்சத்தையெல்லாம் படைச்சுத் தாங்குகிற ஜகத்தாத்ரி நான்தான். ஜகத்தாத்ரியாக இருந்து உன் பூஜையை நான் அங்கீ கரிக்கிறேன்'' என்று அழுத்தந் திருத்தமாக விடை வந்தது.

காட்சி மறைந்தது.

மறுநாள் காலே சியாமாசுந்தரி மகளிடம் கேட்டாள்: ''செக்கச் செவேல்னு கால்மேல் கால் போட்டுண்டு இருக்கிற தேவதை யாரு?''

சாரதை பளிச்சென்று பதில் சொன்னாள்: ''வேறே யாரு? ஜகத்தாத்ரிதான்.''

தான் தரிசித்த தேவதையிடமே அடையாளம் தெரிந்துகொண்ட பின்னும் மகளிடம் அதை உறுதிப்படுத்திக்கொள்ள விழைகிறாள் சியாமை! ஏதும் தெரியாதவள்போல் இருக்கும் மகளும் உடனுக் குடனே உறுதிப்படுத்துகிறாள்!

அன்றிலிருந்து ஜகத்தாத்ரி பூஜைக்கான ஏற்பாடுகளில் இறங்கி விட்டாள் சியாமா. எப்போது பார்த்தாலும் அவளுக்கு அதுவே பேச்சாகவும், காரியமாகவும் ஆகிவிட்டது. விசுவாஸ் குடும்பத்தின ருக்கு விசுவாசமாக உழைத்து, அவர்களிடமிருந்து நானூறு ராத்தல் நெல் பெற்றாள், நிவேதனத்துக்காக.

வீட்டு வாசலில் நெல்லேப் பாயில் பரப்பிக் காயப் போட்டுவிட்டு இவள் உள்ளே வந்தாளோ இல்லேயோ, மழை கொட்டத் தொடங் கியது.

''என் அம்மா, இந்த அபலேயை ஏன் இப்படிச் சோதிச்சு எடுக் கறே?'' என்று சோகித்தபடி வாசலுக்கு ஓடிவந்தாள் சியாமாசுந்தரி.

அவளால் தன் கண்களேயே நம்ப முடியவில்லே. அந்தக் காட்சியைக் கண்ட மற்றவர்களாலும் நம்பத்தான் முடியவில்லே. ஆனால் அம்பி கையின் கருணேக்கு நாம் எல்லே கட்ட முடியுமா? நம்ப முடியாதது நடந்தது.

சுற்றிலும் எங்கும் மழை பொழியும்போது, சியாமாசுந்தரி நெல் பரப்பியிருந்த பாயில்மட்டும் ஒரு தூறல்கூட விழவில்லே. அதன்மீது திண்ணெனச் சூரிய வெளிச்சம் விழுந்துகொண்டிருக்கிறது! (நமது திருநெல்வேலி ஸ்தல புராணத்திலும் இதே அநுக்கிரகம் கூறப்படு கிறது. பக்தரின் நெல்லுக்கு மழையிலிருந்து தடுப்பு வேலி போட்ட ஊரே திருநெல்வேலி ஆயிற்று)

நெல் காய்ந்தது ; நெஞ்சம் குளிர்ந்தது.

களிமண் காளி விக்கிரகமாயிற்று ; அதற்கு வர்ணம் தீற்றப் பட்டது. பூஜைக்கு நாளும் வைத்தாயிற்று.

''இந்தப் பூஜைக்கு அத்திம்பேர் அவசியம் நம்மோடு இருக்க ணும்டா. அவரை அழைச்சுண்டு வா'' என்று கூறித் தம்பி பிரஸன்ன குமாரைத் தக்ஷிணேசுவரத்துக்கு அனுப்பினுள் சாரதை.

ராமகிருஷ்ணர் சேதி கேட்டுக் கும்மாளி போட்டார். ''பயலே, பிரஸன்னு! அம்மாவே பிரஸன்னமாகப் போரு, ஆமாண்டா, சாட்சாத் அம்மா பிரஸன்னமாகப் போரு. பேஷான காரியம் பண் ணறேள். அது சரி...ஆனு, அன்புக் குழந்தே, உங்க குடும்பம் ரொம்ப தரித்திரத்திலே திண்டாடறதுன்னு கேள்விப்பட்டேனே, ஆராத னேக்கு எப்படித் திரவியங்கள் சேகரிச்சேள்?'' என்று வினவினுர்.

தாயாரின் தளராத உழைப்பாலேயே பூஜையை விமரிசையாகச் செய்ய முடிகிறது என்று பிரஸன்னன் கூறினுன்; ''நீங்க நிச்சயமாக வரணும், அத்திம்பேர். உங்களே அழைச்சிண்டு போகத்தான் வந் திருக்கேன். அக்கா அதுக்காகத்தான் அனுப்பிச்சா'' என்ருன்.

''நான் அங்கேயே இருக்கற மாதிரிதான்'' என்று கூறிக் கலகல வென நகைத்தார் ராமகிருஷ்ணர். 'அக்கா அனுப்பினுள்' என்ற வுடன் அவர் அப்படிக் கூறியதன் உள்ளர்த்தம் பிரஸன்னனுக்கு எப் படிப் புரியும்? ஜகத்தாத்ரி, சாரதை, ராமகிருஷ்ணர் இவர்களது தொடர்பை ('தொடர்பு' என்ருலும் போதாதுதான்!) அவன் அறிய முடியுமா? 'அத்திம்பேர்' வரவேண்டும் என்று பிடிவாதம் செய் தான். அவரோ அதைவிடப் பிடிவாதம் பிடித்தார். ''பேஷான காரியம்! போய்ப் பூஜையை ஆரம்பி. உங்களுக்கெல்லாம் சகல மங் களமும் உண்டாகும்'' என்று கூறி மைத்துனனேத் திருப்பி அனுப் பினுர்.

ஜகத்தாத்ரி பூஜை கோலாகலமாக நடந்தது. நவ முகர்ஜி வீட்டுப் பூஜையைக் காட்டிலும் அதிசிறப்பாக இங்கே பூஜை நடத் திக்கொண்டாள் தேவி. பிச்சைக்காரியான சியாமாசுந்தரி ஊராருக் கெல்லாம், வெளிக் கிராமங்களிலிருந்து வந்தவர்களுக்குங்கூட, அம்பாள் பிரசாதத்தை வயிருரப் படைத்துப் பூரித்தாள்.

பூஜை முடிவில் தேவியின் பிரதிமையை நீர்நிலேயில் விசர்ஜனம் செய்வது வழக்கம்.

14

அன்று வியாழக்கிழமை. நம் சீமையில் சுக்ரவாரத்தைச் சொல்வதுபோல் வங்கத்தில் வியாழனை பரம லக்ஷ்மீகரமான தினமாகக் கருதுவர் (நம் அம்மா அவதரித்ததும் குருவாரத்தில்தான்). இந்தச் சுபதினத்தில் பிரதிமையை விசர்ஜனம் செய்யலாகாது என்று சாரதை கூறிவிட்டாள். மறுநாள் மாதத்தின் கடைசித் தினமாக இருந்தது. எனவே, அன்றும் விசர்ஜனம் தள்ளிப் போடப்பட்டது. அதற்கு மறுநாள் மாதப் பிறப்பு என்பதால் அன்றும் விசர்ஜனம் இல்லை. இவ்விதமாக ஜகத்தாத்ரி அதிகப்படியாக மூன்று நாட்கள் சியாமாசுந்தரியின் கிருகத்தில் தங்கி வழிபாடு பெற்றுக் கிருபை பொழிந்தாள்.

பதுமையைத் தீர்த்தத்தில் முழுக்கும் கடைசி நிமிஷத்தில் சியாமாசுந்தரி அதனிடம் நெருங்கி வந்து, அதன் காதோடு தன் வாயை வைத்துக்கொண்டு, ''என் பிரியே, ஜகாயி! அடுத்த வருஷமும் இதே மாதிரி வாடியம்மா. இன்னியிலிருந்து அடுத்த வருஷ பூஜைக்காக ஏற்பாடு ஆரம்பிச்சுடறேன்'' என்று கிசுகிசுத்தாள்.

எத்தனையோ துன்பங்களுக்கு ஆளான சியாமைக்கு இப்படிப் பேரின்பத்தைப் பொழிந்தாள், நம் சீமையில் ஜக்கம்மா எனப்படும் ஜகாயி! அன்றிலிருந்து சியாமாசுந்தரி உழைக்கும்போதெல்லாம் வீட்டுக்காகச் செய்கிறோம் என்பது மட்டுமின்றி, அம்பாள் பூஜைக்குச் சேமிப்பதற்காகச் செய்கிறோம் என்ற ஆனந்த நினைவும் இழையோடி உற்சாகமூட்டியது.

''இந்தப் பூஜையால் சகல மங்களமும் ஏற்படும்'' என்று ராமகிருஷ்ணர், ஜகத்தாத்ரிக்கு முந்திக்கொண்டு தந்த வரம் பலித்தது. பிரஸன்னகுமாருக்குக் கல்கத்தாவில் 'பசை' உள்ள சில குடும்பங்களில் புரோகிதத் தொழில் கிடைத்தது. அடுத்த இரு தம்பியரான காளிகுமாருக்கும், வரதா பிரசாதுக்கும் விவசாயத்தில் புதியதோர் ஊக்கம் பிறந்து அவர்கள் குடும்பத்து நிலத்தை மீண்டும் விளைச்சலுக்குக் கொண்டுவந்தனர். கடைசிப் பிள்ளையும், அனைவரிலும் புத்திசாலியுமான அபயா சரணன் பள்ளிப் படிப்புப் பெறுவதற்கான உபகாரத்தை உறவினர் தாமாக முன்வந்து அளித்தனர்.

அடுத்த வருடத்துப் பூஜை தினம் நெருங்கி வந்தது.

சியாமை சாரதையிடம் வந்து, ''இந்த வருஷத்துப் பூஜையிலே உன் பங்கும் இருக்கணும்'' என்றாள்.

''இந்த உபத்திரவமெல்லாம் எனக்கு வேண்டாம். உனக்குங்கூட வேண்டாம். ஏதோ ஒரு வருஷம் திருப்தியா பூஜை பண்ணினே.

அம்பாள் கைகொடுத்து நம்ப மானத்தைக் காப்பாத்தினு. மறுபடி என்னத்துக்குச் சிரமங்களை வாரிச் சிரசிலே போட்டுக்கறே? இதெல்லாம் அவசியமே இல்லை. நீ என்ன பண்ணுவியோ பண்ணிக்கோ. என்னாலே இதிலே சம்பந்தப்பட முடியாது" என்று தன் இயற்கைக்கே விரோதமான, விநோதமான கண்டிப்புடன் கூறினாள் சாரதை.

அம்பாள் ஆராதனை என்ற பெயரில் கூடப் பிறந்தகத்துக்குச் சல்லிக்காசும் சேர்க்கக்கூடாது என்று சாரதைக்குப் பிடிவாதம் இருந்தது போலும்!

அன்றிரவு அவள் ஒரு கனவு கண்டாள். மூன்று தேவ ரூபங்கள் அவள் முன் காணப்படுகின்றன. மத்தியிலே செக்கச் சிவந்த சொக்கி கால்மீது கால் போட்டு வீற்றிருக்கிறாள். அவளுக்கு இருபுறம் இரு தேவியர் பணிப் பெண்களாக நிற்கிறார்கள்.

''நல்லது; அப்போ நாங்க போகலாமா?'' என்று அவர்கள் சாரதையைக் கேட்கிறார்கள்.

முன்பு சியாமைக்கு அடையாளம் சொன்ன அதே சாரதை இப்போது இவர்களிடம், ''நீங்கள் யாராக இருக்கக் கூடும்?'' என்று வினவுகிறாள்.

நடுநாயகமாக இருந்த நாயகி, ''நான்தான் ஜகத்தாத்ரி. இதோ வலது பக்கம் இருப்பவள் ஜயா, இடது பக்கம் இருப்பவள் விஜயா'' என்கிறாள்.

சாரதைக்கு உடல் வெடவெடக்கிறது. ''போறதா? நீங்கள்ளாம் என்னை விட்டுட்டுப் போறதா? எங்கே போவேள்? போகாதேள். கெஞ்சிக் கேட்டுக்கறேன், இங்கேயே இருங்கோ! நான் உங்களைப் போகச் சொல்லவே மாட்டேன்'' என்று கண்ணீர் சொரிந்து மன்றாடினாள்.

கனவு மறைந்து, அதன் நினைவு நிறைந்தது நெஞ்சகத்திலே.

'' அம்மா, ஜகத்தாத்ரி பூஜைக்கு ஏற்பாடெல்லாம் செய்வோம்' என்றாள் சாரதை மறு நாள் காலை.

அந்த ஆண்டும், அதற்குப் பிறகு பல்லாண்டுகளும், ஜயராம்பாடியில் ஜகத்தாத்ரி ஆராதனை சம்பிரமாக நடந்து வந்தது.

ஆரம்ப காலத்தில் சாரதையின் பங்கு என்ன தெரியுமா? அவள் கணவரைக் கேட்டுக் கால் காசுகூட வாங்கித் தந்ததில்லை. ஆனால் வேறொன்று செய்தாள். பூஜைப் பாத்திரங்களும், சமையல் பாத்திரங்களும் மலையாகக் குவிந்திருக்கும். அவற்றைத் துலக்க வேலைக்காரி வைத்துக் கூலி கொடுப்பதற்குப் பதிலாக நம் அம்மாவே தன் கை அயர, தோள் தளரத் தேய்த்துப் போடுவாள். இது ஆரம்ப

காலத்தில். பிற்பாடு நம் அம்மா கேளாமலே அவளிடம் பக்தர்களின் காணிக்கை குவியத் தொடங்கியபோது அவள் திரவிய கைங்கரியமும் செய்தாள். ஆனால் அப்போதும் தேக கைங்கரியத்தை விட்டாளில்லை!

முதல் நாலாண்டுகள் சியாமாசுந்தரியின் பெயரில் சங்கற்பித்து ஜகத்தாத்ரி பூஜை செய்யப்பட்டது. அடுத்த நான்காண்டுகள் சாரதாமணியின் பெயரில் வழிபாடு நடத்தப்பட்டது. அதன் பின் நாலாண்டுகள் சாரதையின் சிற்றப்பா நீலமாதவரின் பெயரில் இவ்வாராதனை நடைபெற்றது.

அதோடு பூஜையை நிறுத்திவிடப் போவதாகச் சாரதை அறிவித்தாள்.

அன்றிரவே தேவி அவளது சொப்பனத்தில் தோன்றினாள். ''சரி; நீதான் பூஜையை நிறுத்தப் போறேன்னுட்டே. மது முகர்ஜியோட அத்தைக்கு ஜகத்தாத்ரி பூஜை நடத்தணும்னு ஆசை வந்திருக்கு. நான் போகட்டுமா? ம்...நான் போகட்டுமா? என்ன, உன்னைத்தான் கேட்கிறேன், போகட்டுமா?'' என்று மும்முறை கேட்டாள் சாரதையை.

சாரதைக்கு அடிவயிறு துடித்தது. 'ஜகத்தாத்ரி பூஜையை நிறுத்த நினைக்கிறேன் அற்பமான நான். அப்படியிருந்தும் சாக்ஷாத் ஜகத்தாத்ரி என்னிடம் வந்து என் சம்மதத்தைக் கேட்டே போக வேண்டும் எனக் கருதி மும்முறை அநுமதி கேட்கிறாள்; எப்பேர்ப்பட்ட அபசாரம், அபராதம் செய்தேன்?'

தேவியின் பாதங்களைச் சிக்கெனப் பிடித்துக் கட்டிக்கொண்டாள் சாரதை. ''அம்மா, இனி ஒரு நாளும் உன்னைப் போகச் சொல்லவே மாட்டேன். பிரதி வருஷமும் நானே உனக்குப் பூஜை பண்ணுவேன்'' என்று தேம்பினாள்.

பிற்பாடு சாரதா தேவிக்கு அடியார்கள் தாமாகப் பொன்னும் பொருளும் பூமியும் வழங்கிய காலத்தில் அவள் மூன்றரை ஏக்கர் நிலம் வாங்கி, அதனை மூலதனமாக வைத்து ஜகத்தாத்ரி பூஜைக்கென்றே ஒரு நிவந்தம் ஏற்படுத்தினாள். இப்போதும் பேலூர் ராமகிருஷ்ண மடத்தினர் ஜயராம்பாடியில் உள்ள நமது அம்மாவின் ஆலயத்தில் ஜகத்தாத்ரி பூஜை நடத்தி வருகின்றனர். அபிநவ ஜகத்தாத்ரியாம் சாரதாமணிக்கும் சேர்த்து வழிபாடு நடத்தப்படுகிறது என்று சொல்லவும் வேண்டுமோ?

20. பகைவனுக்கு அருள்; பகைவனின் அருள்!

நிர்மலமான புன்னகையுடன் கூடிய, முழுமதியை நிகர்த்த, நினது மாற்றறியாத செழும் பசும் பொன் முகத்தைக் கண்ட பின்னும். கோபவசமான மகிஷாசுரன் உன்னைத் தாக்க வந்தனனே. அது விந்தையிலும் விந்தையே!

—ஸ்ரீ துர்க்கா சப்தசதி. 4.12

ஜயராம்பாடிவாசிகள் சிலர் கல்கத்தாவில் கங்கா ஸ்நானம் செய்வதற்காகப் புறப்பட்டனர். தக்ஷிணேசுவரத்துக்குத் திரும்ப விரும்பிய சாரதையும் அவர்களது துணையில் புறப்பட்டாள். அந்தத் 'துணை'யின் லட்சணம் பிற்பாடுதான் தெரிந்தது!

காமார்புகுரில் தந்தை ராமேசுவரரை இழந்து தவித்துக் கொண்டிருந்த லக்ஷ்மியும், அவளது சிறிய தம்பி சிவராமும் 'சாரு சித்தி'யுடன் சேர்ந்துகொண்டனர்.

எல்லோரும் கால்நடையாகப் புறப்பட்டனர். காமார்புகுரிலிருந்து எட்டு மைலில் உள்ள ஆராம்பாக் என்ற இடத்தை அடைந்தனர்.

ஆராம்பாக்கை அடுத்துத் தேலோ-பேலோ என்ற வனாந்தரப் பொட்டல் இருந்தது. அங்கே பயங்கரமான கொள்ளைக் கூட்டத்தினர் வசித்துவந்தனர். பகடி எனப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இந்தக் கள்வர்கள் முற்காலத்தில் ராணுவ சேவையில் வீர தீரங்களைக் காட்டியவர்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபின் இவர்கள் ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அதனால் கொள்ளைக்காரர்களாக மாறினார்கள். தேலோ-பேலோ மத்தியில் உள்ள பயங்கரக் காளிக்குப் பூஜை நடத்திவிட்டுத் தங்களது கொலை, கொள்ளைகளை நடத்தி வந்தனர்.

விரைவாக நடந்தால் இருட்டு முன்னரே தேலோ-பேலோவைக் கடந்து தாரகேசுவரத்துக்குப் போய்விடலாமென நம் யாத்திரிகர்கள் முடிவு செய்தனர்.

பன்முறை நோய்களுக்கு ஆளாகியிருந்த சாரதை மிகவும் அசக்தமாயிருந்தாள். அவளுக்கு ஆராம்பாக்கிலேயே தங்கிச் செல்லலாம்

என்றுதான் இருந்தது. எனினும் தன் வழக்கப்படி, பெரியோர்கள் பேசும்போது அவள் குறுக்கிட்டு ஏதும் கூறவில்லை.

மற்ற யாத்திரிகர்களோடு நடந்தாள். ஆனால் நடக்க நடக்க அவளுக்குக் காலே இற்றுவிடும் போல் ஆயிற்று. மெல்ல நடக்க லானாள்.

''வேகமாய் நட'' என்று உடன் வந்தவர்கள் உசுப்பினார்கள். ''இந்த நிதானத்தில் நடந்தால் நட்ட நடுநிசியில் நடுக் காட்டில் மாட்டிக்கொள்ள வேண்டியதுதான்'' என்று கடிந்துகொண் டார்கள். பின்தங்கி வந்த சாரதைக்காக மூன்று நான்கு முறை நின்று தாமதித்தும் பார்த்தனர். பிறகு அவளுக்காகத் தங்களையும் ஆபத்துக்கு உட்படுத்திக் கொள்வதற்கில்லை என்பதால் அவளைத் தன்னந் தனியாக விட்டுவிட்டு வேகமாக நடையைக் கட்டிவிட்டனர்.

''கொலைகாராள்ளாம் இங்கே நிறைய இருக்காளாம். சித்தி யோடே நாம பின்னாடி வந்தா நமக்கும் ஆபத்துத்தான்'' என்று லக்ஷ்மியும் சிவராமும் பேசிக்கொண்டனர். சிறிது தயக்கத்துக்குப் பிறகு அவர்களும் மற்ற யாத்திரிகர்களோடு சேர்ந்துகொண்டு சாரதையை விட்டுச் சென்றனர்!

ஜன சஞ்சாரமே இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் காட்டுப் பகுதி. அதோ சூரியன் மலை வாயிலை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறான். துன்பங்களையும் துயரங்களையும், இன்னல்களை யும் இடுக்கண்களையும், கஷ்டங்களையும் கவலைகளையும் வழிய வழிய அநுபவித்துக் காட்டவே பிறந்த சாரதை காட்டு வழியில் தனி யொருத்தியாக நடக்கமாட்டாமல் நடக்கிறாள். காலிலே வலி கனக் கிறது. மனத்திலே பயம் கனக்கிறது. ஏழையான அவளுக்கு மடியில் கனம் இல்லை. ஆனால் அவள் பருவ மங்கை அன்றோ? கொள்ளையர் கண்ணில் பட்டுவிட்டால்!

தகதகவெனச் செக்கர்க் கோளமாக ஜொலித்துவிட்டுச் சூரிய பக வானும் அவளைக் கைவிட்டுப் போய்விட்டான்! மாலை மயக்கம். தான் செல்கிற வழி சரியானதுதானா என்றுகூடத் தெரியாமல் எல்லை யில்லா அயர்வோடும் அச்சத்தோடும் ஊர்ந்தாள் சாரு.

ஆஜானுபாகுவான ஒரு நெடிய உருவம் தன்னை நோக்கி வரக் கண்டாள். நின்ற இடத்தில் நிலைக்குத்திட்டு விட்டாள். அவளது கால்கள் நகர மறுத்துவிட்டன. 'நகர்ந்தும் பிரயோஜனமில்லை எந்தத் திசையில் ஓட்டம் பிடித்தாலும் மாட்டிக்கொள்ள வேண்

யதுதான்' என்று அவளது உள் மனத்துக்குத் தெரிந்திருந்தது. அதற்கும் உள்ளேயிருந்த மனம் சிம்மவாஹினியிடம் சரண் புகுந்தது.

கன்னங் கறேல் என்ற உருவம்; நீண்ட பரட்டை முடி; மணிக்கட்டுகளில் வெள்ளிக் காப்பு; ஒரு கையிலே குண்டாந்தடி—இத்தியாதி லட்சணங்களுடன் வந்த அந்த உருவம் ஒரு தேறிய கொள்ளைக்காரன்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

கிலியில் சப்த நாடியும் ஒடுங்கிய சாரதையை மேலும் அச்சமூட்டும் குரலில் அந்தக் கொள்ளைக்காரன் அடித் தொண்டையில் கர்ஜித்தான்: "லே! இம்மாம் பொளுதிலே இங்கிட்டு வந்து நிக்கறது யாருண்ணேன்? எங்கிட்டுப் போறியாம்?"

அந்தக் குரலில் விஷ வாடை வீசியது.

சாரதையின் ஸ்தம்பித்த நாவு தன்னை அறியாமலே அசைந்து, "கிழக்காலே போகணும்" என்றது.

"கிளக்கா போவணும்? இது வளி இல்லை. அந்தப் பக்கம் போறியா?"—கொள்ளையன் கேலிக் குரலில் பேசுகிறான். அவனிடம் சிக்குவது தவிர வேறு வழியில்லை என்று கெக்கலிக்கிறான்!

'தங்கள் ராஜ்யம்' என்று சுவாதீனமாக முகமூடி போடாமலே வருகிற கள்வன் முன், முகத்தை இழுத்து மூடி நின்றாள் அபலை.

காற்று வீசியது; அம்பிகையின் கருணை மூச்சுப்போல வீசியது.

சாரதையின் முகத்தை மூடிய சேலைப் பகுதி பின்னே பறந்தது.

அவளது திருமுகத்தை நேருக்கு நேர் பார்த்தான் கொள்ளையன்.

இருள் பரவத் தொடங்கியிருந்தாலும் அந்த முகம் அவனுக்குத் தெற்றெனத் தெரிந்தது. தீபத்தைப் பார்க்க வேறு தீபத்தின் துணை வேண்டுமா, என்ன? நோயில் வாடிக் கறுத்த சாரதை திகிலில் நிலை குலைந்திருந்தபோதிலும், அவளது முகத்தில் எங்கிருந்தோ ஒரு திவ்ய சோபை வந்து மேவியிருந்தது.

பார்த்த கண் பார்த்தபடி அந்தத் திருமுகத்திலேயே திருஷ்டியைப் பதித்தான் திருடர் தலைவன். பொருள் விரும்பும் கொள்ளைக்காரனின் பார்வை அல்ல அது. வேட்கை கொண்ட காமுகனின் பார்வையும் அல்ல அது.

> தின்னவரும் புலிதன்னையும் அன்பொடு சிந்தையில் போற்றிடுவாய்
> அன்னை பராசக்தி அவ்வுரு ஆயினள் அவளைக் கும்பிடுவாய்

என்று கவி பாடினர். இங்கோ புலியே, தான் புசிக்க இருந்த ஜீவனை

அன்னை பராசக்தியாகப் பார்த்துவிட்டது! விஷப் புலிக்கும் தன் குட்டியினிடம் அமுதப் பால் பெருகும். இந்தப் புலி தன் குட்டியைக் காணவில்லை; அம்மாவைக் கண்டது.

ரசவாதம் நடந்தது! இரும்பு மனசு பொன்னாயிற்று!

கள்வனின் விஷ மனத்தில் அமுதம் ஊற்றெடுத்தது.

"பயம் வேணும், தாயே! நானும் பொம்புள்ளையோட வாளற வன்தான். அது பின்னாடிதான் வந்துட்டிருக்கு" என்றான் மிருது வான குரலில்.

காலடிச் சத்தமும் கேட்டது. கள்வனின் மாறுதலிலேயே ஓரளவு தெளிவு பெற்ற சாரதைக்கு, தன்னைப் போன்ற பெண் ஜன்மா ஒன்று வருகிறது என்ற எண்ணத்தில் மேலும் ஆறுதல் உண் டாயிற்று.

திருடர் தலைவனைப் பார்த்து முத்துப்போல் பேசினாள். அவனைத் தாஜா செய்ய வேண்டும் என்று சாதுரியம் செய்யாமல், மெய் யாலுமே மனத்தில் வந்ததை வார்த்தையில் வடித்துப் பேசினாள் "அப்பா, என்னோட வந்தவங்க கல்கத்தா வழி போயிட்டாங்க. தனியா நின்னுட்டேன். போற வழியைத் தப்ப விட்டுட்டேன்னு தோணறது. தயவுசெஞ்சு என்னை அழைச்சுண்டு போய் அவாகிட்டே சேர்த்துடறியா? உன் மாப்பிள்ளை தக்ஷிணேசுவரத்துலே, ராணி ராஸமணி கட்டின காளி கோயிலிலே இருக்கார். அவரைப் பார்க் கத்தான் போயிண்டிருக்கேன். நீ எங்களோட அங்கே வந்தா அவர் உன் மேலே அன்பைக் கொட்டுவார்" என்றாள்.

அவன் இவளை அம்மாவாகப் பார்த்ததுபோல், இவளும் அவனை அப்பாவாகவே பார்த்து, அவனிடம் நம்பிக்கை வைத்தாள். அத னால்தான் இப்படிப் பாலாகப் பேசினாள்.

கள்வன் கனிந்து நின்றான். ஓங்கிப் பிடித்த குண்டாந் தடி தழைந்தது.

அவனது மனைவி அருகே வந்தாள். அவளும் சாரதையின் முகத் தைப் பார்த்த மாத்திரத்தில் அடியோடு உருகிப் போனாள். நம்பிக் கையுடன் அவளது கையைப் பிடித்துக்கொண்டாள் சாரதை. "அம்மா! நான்தான் உன் மகள் சாரதா. தன்னந் தனியா பயந்து நிக்கறச்சே அதிருஷ்டவசமா அப்பாவும் நீயும் வந்தேளோ, நான் பிழைச்சேனே? இல்லாட்டா என்ன ஆபத்து வந்திருக்குமோ?" என்றாள்.

ஆபத்து இந்த இருவரிடமிருந்தே வந்திருக்கும்! ஆபத்துக்காரர்களையே ஆப்தர்களாக்கிக்கொண்டுவிட்டாள்!

கொள்ளைக்காரரின் மனத்தைக் கொள்ளை கொண்டாள் அன்பும் நம்பிக்கையும் உருவான சாரதை.

"தாயே, நீ எங்களுக்கு மவதான். நாங்க உன்னைக் கவனிச்சுக் கறோம். துளிக்கூடக் கவலைப்படாதே! இப்போ நடந்து களைச்சிருக்கே! துண்ணுட்டுப் படுத்துக்குவியாம். காலையிலே நாங்களே உன்னை அளைச்சிக்கிட்டுத் தாரகேசமோ, தெட்சணேசமோ போறோம்" என்று பரிவு மயமாக முன்வந்தனர் பறிமுதல்காரர்கள்,

சாரதையும் உடன்பட்டாள். அவள் பிராமணப் பெண், அதிலும் பரம சத்துவமானவள் என்பதும், அவர்கள் பகடித் தம்பதியர், அதிலும் கொள்ளைத் தொழில் செய்பவர் என்பதும் அன்பின் சந்நிதானத்தில் அடிபட்டே போயின.

மூவரும் நடந்தனர்.

பொட்டல் மறைந்து சிறிது மனித நடமாட்டம் உள்ள ஓரிடம் வந்தது. அங்கே ஒரு பெட்டிக் கடை இருந்தது. கொள்ளைக்காரன் மனைவி தன் துணி மூட்டையைப் பிரித்துச் சாரதைக்கு 'மெத்தை' தயார் செய்தாள். அன்புக்குக் கட்டுப்பட்ட சாரு அந்தத் துர்நாற்றத் துணிக் குவியலில் தனது களைத்த உடலைச் சாய்த்தாள்.

கொள்ளைக்காரன் எங்கிருந்தோ அவலும், வெல்லம் கலந்த பொரியும் சம்பாதித்து வந்தான்.

சாரதை அதனை உண்டாள், தேவாமுதமாகக் கருதி.

"நல்லாத் தூங்கம்மா! இங்கே திருட்டுப் பசங்க நடமாட்டம் சாஸ்தியாச்சேன்னு பயந்துட்டுத் தூக்கத்தைக் கெடுத்துக்காதே! நான் முளிச்சிட்டே உக்காந்திருந்து காவலிருக்கேன், ஆமாம்!" என்றான் அன்று மாலை வரையில் பக்காத் திருடனாக இருந்தவன்.

நிச்சிந்தையாக நித்திரை கொண்டாள் சாரதை.

காலையில் எழுந்திருக்கையில் கால்வலி வெகுவாகக் குறைந்திருந்தது.

புதிய பெற்றோருடன் தாரகேசுவரத்துக்குப் பயணம் தொடங்கினாள்.

வழியிலே கொள்ளையன் மனைவி பச்சைப் பட்டாணிக் காய்களைப் பறித்து அதன் பருப்புக்களைச் சாரதையின் கையில் போட்டுக்

கொண்டே வந்தாள். சாரதை பரம சந்தோஷமாக அதைக் கொறித்துக்கொண்டு நடந்தாள்.

எட்டு மணி சுமாருக்குத் தாரகேசுவரம் அடைந்தனர்.

''ராவுக்கே என் மவ முக்காப் பட்டினி கெடந்திச்சு. இண்ணிக் காவது வயிருர எதுனுச்சியும் கொனுருவியாம். முதல்லே கோயி லுக்கே போய்க் கும்பிடு. அப்புறம் சந்தைக்குப் போயி, அவலு, பொரி, பளம், கிளம் எல்லாம் வாங்கியா'' என்று பகடியை அனுப்பி வைத்தாள், அவன் மனைவி.

சாரதையுடன் 'துணை' வந்த கோஷ்டி அவளைக் கண்டு பிடித்தது. அவளை நல்லபடியாகக் கண்டதில் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. சாரதை அவர்களிடம் சிறிதும் மனத்தாங்கல் கொள்ளாமல் தன் னுடைய புதிய அம்மாவை அறிமுகம் செய்து வைத்தாள்.

உலகனைத்தையும் தழுவ இருக்கும் சாரதையின் தாயொளி இந் தக் கள்வர்களின் இருளைத் துளைத்து விரட்டிவிட்டது என்பதைச் சக யாத்திரிகர்கள் உணர்ந்திருப்பதற்கில்லை. ஆனாலும் இந்தப் பகடித் தம்பதி அவளைக் கண்ணும் கருத்துமாகக் காத்துத் தந்தது அவர் களுக்கு அதிசயமாகவே இருந்தது.

கள்வர்தலைவன் சாரதைக்கு உணவுப் பண்டங்கள் வாங்கி வந் தான். யாத்திரிகர்கள் சமையல் செய்தனர். பகடித் தம்பதி உள் பட அனைவரும் ஆனந்தமாகப் பகலுணவு கொண்டனர்.

பிரயாணம் தொடங்கியது. பகடித் தம்பதி விடை கேட்டனர்.

''ஊஹூம், நீங்க ரெண்டு பேரும் தக்ஷிணேசுவரத்துக்கு வர ணும்'' என்ருள் சாரதை.

''இல்லேம்மா, இப்போ நாங்க வர்றத்துக்கில்லே. அப்பறம் எப் பனுச்சியும் நிச்சயமா வர்ரேம்'' என்ருன் பகடி.

ஓர் இரவிலேயே ஒரு வாழ்நாள் முழுதும் பழகியது போன்ற வாஞ்சை அவர்களிடையே தழைத்தது.

கள்வனின் கன்னம் கண்ணீரில் நனைந்தது. அவன் மனைவி வாய் விட்டு அழுதாள். இளகிய நெஞ்சு கொண்ட சாரதையைப்பற்றிக் கேட்க வேண்டுமா?

பிரிய மனமின்றி அவளுடனேயே மேலும் சிறிது தூரம் நடந் தனர் அத்தம்பதி. பட்டாணிக்காய்களைப் பறித்து அவற்றின் பருப்

புக்கலை எடுத்துச் சாரதையின் முன்றானையில் முடிந்தாள் பகடிப் பெண்மணி. ''என் செல்ல மவளே சாரூ! ராத்திரி ஸோறு துண்ணறச்சே இந்த அம்மாவை நெனைச்சுட்டு இந்தப் பட்டாணிப் பருப்பையும் சேர்த்துக்கோ'' என்று திக்கு முக்காடிக் கூறினாள்.

தக்ஷிணேசுவரத்துக்கு வருவதாக அவர்களிடமிருந்து உறுதி மொழி வாங்கிக்கொண்டு விடைபெற்றாள் சாரதை.

சில காலத்துக்குப் பிறகு சொன்ன சொற்படியே செய்தனர் அந்தப் பகடித் தம்பதியர். 'மவளு'க்கும் 'மருமவப் புள்ளை'க்கும் 'பளம்-கிளம்' எல்லாம் வாங்கிக்கொண்டு தக்ஷிணேசுவரத்துக்குச் சென்றனர். சாரதையிடமிருந்து அவர்களைப்பற்றி அறிந்திருந்த ராமகிருஷ்ணர், அவள் சொன்னவாறே அவர்கள்மீது அன்பைக் கொட்டினார்.

அதன் பின் பலமுறை அவர்கள் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து போயினர்.

''என்னோட கொள்ளைக்கார அப்பா-அம்மா எவ்வளவு சூது வாதில்லாதவா தெரியுமா? நேர்மையிலும் அவா மகா உசத்தி. இருந்தாலும் இவாகூட இதுக்கு முன்னாடி கொலையும் கொள்ளையும் நடத்தி யிருக்காளேன்னு நினைக்கிறபோதெல்லாம் எனக்கு விசித்திர மாயிருக்கும்'' என்று நம் அம்மா சொல்வதுண்டு. இதிலிருந்து என்ன தெரிகிறது? அவர்கள் சாரதையைக் கண்டதிலிருந்து, அவளிடம் நேயமுடன் நடந்துகொண்டது மட்டுமின்றித் தங்களது வழிப் பறித் தொழிலையே விட்டுவிட்டார்கள் என்றாகிறதல்லவா?

சாரதையிடம் அவர்கள் அப்படி என்ன கண்டார்கள்?

அன்று அந்த அந்தி மயக்கத்திலே அவளது சுந்தர முகத்திலே அவர்கள் என்ன கண்டார்கள்? அவர்கள் கண்டதென்ன என்று சாரதைக்குத் தெரியும். ஆயினும் ரகசியமாகவே வைத்திருந்தாள்! ஒருமுறை அவர்கள் தக்ஷிணேசுவரத்திலிருந்து விம்மியபடி விடை கொண்டபோது உடன் இருந்த பக்தர் ஒருவர் இந்த ரகசியத்தை அறிந்து வெளியே அவிழ்த்து விட்டிருக்கிறார்!

'' என்னிடம் இத்தனை பாசம் வைக்கும்படி என்ன கண்டுட்டேள்! வனாந்தரத்திலே என்னைக் காப்பாத்தினேளேன்னு நான் உங்ககிட்ட பிரியம் வைக்கறது நியாயம். உங்களுக்கு எதனாலே எங்கிட்ட இத்தனை வாஞ்சை?'' என்று அவர்களை வினவினாளாம் சாரு.

"உன்கிட்ட 'வான்சைஷ' வெக்காம இருக்க முடியுமாங்காட்டியும்! உன் மொவத்திலே எங்கம்மா காளியாத்தாளேன்னு பாத்தோம்? நீ எல்லாரையும் போல மனுஸப் பொறவியா என்ன?" என்று அத்தம்பதி ஒரு குரலில் பேசினர்.

"என் அன்புங்களே! அப்படியெல்லாம் சொல்லாதீங்க. எங்கிட்டவாவது, காளிமாதாவைப் பார்க்கறதாவது?" என்று மறுத்துப் பேசினள் சாரதை.

"ஆங். அப்படீன்னு நாங்க பொய்யா பேஸறோம்?" என்று ரோஷத்தோடு அந்தத் தம்பதியரும் மறுத்துப் பேசினர். "நாங்க நல்லாக் கண்ணைத் தொறந்துட்டுப் பாக்கச்சேயேதான் நீ காளி ஆயியா நிண்ணே! அதிலே ரவைகூட சந்தேகம் கெடையாது. ஆனு நாங்க கொலைகாரப் பாவிங்க, கொள்ளைக்காரப் பாதகங்க, அதனுலே எங்ககிட்ட ரெகஷியத்தை மறைக்கப் பாக்குறே!" என்றனர்.

நம் அம்மா சற்றும் பட்டுக்கொள்ளாமல் சொன்னுள்: "யாரு கண்டா? யாரு கண்டாளோ, காணலியோ, எனக்கு இதெல்லாம் லவலேசங்கூடத் தெரியக் காணேம்."

பகைவன் அவளுக்கு அருள் செய்தான் எனில், அதற்குக் காரணம் அவள் அந்தப் பகைவனுக்குச் செய்த பேரருள்தான்! அந்தப் பேரருளால் காளி மாதாவை அல்லவா தரிசித்திருக்கிருன்!

சாக்ஷாத் சகல தேவ சக்தியான பதினெண்கர மகாலக்ஷ்மி தனது அருள் நிறைந்த மதிமுகத்தைக் காட்டியபோதும் மகிஷாசுரன் மனம் மாருமலே அவளுடன் போரிட்டான். மகிஷனுக்குக் கிடைக்காத அருள் பகடிக் கொள்ளைக்காரனுக்குக் கிட்டியது.

"கொள்ளைக்காரர்களின் தலைவனுன பரமேசுவரனுக்கு நமஸ்காரம்; வஞ்சகனுகவும், படு வஞ்சகனுகவும், வஞ்சனையாகக் கொள்ளையிடுபவர்களின் தலைவனுகவும் உள்ள பரமேசுவரனுக்கு நமஸ்காரம்" என்று, அனைத்திலும் ஈசுவர ஸ்வரூபத்தைக் காணும் வேத மந்திரங்கள் கோஷிக்கின்றன. சாரதையின் சரிதையில் இவள் கொள்ளைக்காரனில் அப்பாவை—ஈசனைப் பார்க்கிருள். அவனும் இவளில் அம்மாவை—அம்பாளைப் பார்த்து நமஸ்கரிக்கிருன்!

தேலோ பேலோவின் பயங்கரக் காளியை அவன் வழிபட்டான். அந்த வழிபாட்டுக்கிரங்கி, அவளே அபயங்கரியான சாரதையாக வந்து அவனைக் காத்துவிட்டாள்!

கருவேல மரத்தைச் சந்தன விருட்சமாக்கிய இந்தச் சம்பவத்தைப்பற்றி, தேவி சாரதை அதிகம் குறிப்பிடவே மாட்டாள். காரணம், தன் மகிமையை ஒளிப்பது மட்டுமல்ல; இன்னொரு பரம கௌரவமான காரணமும் இருந்தது.

ஒரு முறை சலிப்புடன் நம் அம்மா சொன்னாள்: ''இதைப் பத்திச் சும்மா எங்கிட்ட கேக்காதேள். ஏன்னு, அந்தச் சமயத்திலே லக்ஷ்மியும் ஷிபுவும் (சிவராமும்) என்னோட வந்தான்னு ரொம்பப் பேருக்குத் தெரியும். இந்த விருத்தாந்தத்தை நான் சொன்னா மத்தவாளைப் போல அவாளும் என்னைத் தன்னந்தனியா காட்டு வழியிலே விட்டுட்டுப் போனாளேன்னு உங்களுக்குத் தோணும். எது எப்படியானாலும் அவா என் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு அவமானம் சம்பாதிச்சுக் கொடுத்தா என் பிரபாவத்தைக் காட்டிக்கணும்?''

தன் பெருமையை ஒளிப்பது போலவே பிறரது சிறுமையை ஒளிப்பதும் அவளுக்குச் சுபாவமல்லவா!

இப்போது சாரதையைத் தனியாக விட்டுச் சென்ற சிவராம், இன்னொரு முறை அவளைத் தனியே விட்டுச் செல்வதாகப் 'பயமுறுத்தி'யதும் உண்டு. அந்த நிகழ்ச்சியையும் இங்கேயே கூறிவிடுவது பொருந்தும்.

ராமகிருஷ்ணர் உடலை உகுத்துவிட்டபின் நிகழ்ந்தது இது; சாரதை காமார்புகுரிலிருந்து ஜயராம்பாடிக்குப் போகிறாள். 'ஷிபு' தான் அவளுக்குத் துணை. (வங்காளிகளுக்கே உரிய உச்சரிப்பில் நம் சாரதாதேவி, 'சி'யை 'ஷி'யாக்கி, 'வு'வை 'பு'வாக்கி, 'சிவு'வை 'ஷிபு' என்பதில் அவளது அன்பும், குழந்தைத் தன்மையும் அப்படியே தொனிப்பதுபோல் உள்ளது!)

'ஷிபு' இன்னும் சிறியவன்தான். சித்தியிடம் மிகுந்த வாஞ்சை வைத்திருந்தான். அவன்தான் அவளுடைய துணி மூட்டையைத் தூக்கிப் போகிறான். அந்திமங்கும் சந்தி வேளை. ஜயராம்பாடியின் அண்மைக்கு வரும்போது, வயற்காட்டிலே அவனுக்குத் திடீரென்று என்னவோ தோன்றுகிறது. அப்படியே நின்றுவிடுகிறான்.

'என்னவோ' என்று ஏன் சொல்லவேண்டும்? அவனுக்குப் பூர்வத்தில், தேலோ-பேலோவில் சித்தியைத் தனியே விட்டுப்போனதும், பிறகு பகடித் தம்பதியர் அவளுக்குத் துணை வந்ததும் நினைவு வந்தது. அந்த கள்வர்கள் சித்தியிடம் வைத்த அதீதமான பிரியத்துக்கான காரணத்தையும் அவன் பராபரியாகக் கேள்விப்பட்டிருந்

தான். 'நம்முடைய அருமைச் சித்தி அந்தப் பகடிகளுக்குக் காளி மாதாவாகத் தெரிந்தாளாமே!' – இதை எண்ணித்தான் இப்போது நின்றுவிட்டான்! எதையும் பரீட்சை செய்து பார்ப்பதில் ஆர்வம் கொண்ட இளம் உள்ளத்தில் ஒரு குதூகலம் உண்டாயிற்று!

அப்படியே நின்ருன்.

மறைந்த தனது டாகுரையே நினைத்துக்கொண்டு நடந்த சாரதை, முதலில் 'ஷிபு' நின்றுவிட்டதைக் கவனிக்கவே இல்லை. உடன்வந்த 'சரக்' 'சரக்' காலடிச் சத்தம் நின்றதைச் சிறிது போதுக்குப் பின்னரே கவனித்தாள். திரும்பிப் பார்த்தாள். ஷிபு தன்னையே விநோதமாகப் பார்த்தபடி நிற்பதைக் கண்டு அவனிடம் சென்ருள்.

"என்ன சமாசாரம், ஷிபு? ஏன் நின்னுட்டே! கால் வலிக்கிறதா? இருட்டப் போறது பாரு! விருவிருன்னு ஆத்துக்குப் போயிடுவோம். அப்புறம் ஒருவழியா உட்காரலாம்" என்ருள்.

"கால் வலி இல்லே, சித்தி. வேறே ஒரு சமாசாரம்: நீ எனக்கு ஒரு விஷயம் சொன்னுத்தான் நான் மேலே நடையைக் கட்டுவேன்" என்று புதிர் போட்டான் சிவராம்.

"என்னடா குழந்தே, என்னைத் தனியா விட்டுடுவேன்னு நீ பயமுறுத்தற மாதிரி அப்படி என்ன விஷயம்?" என்ருள் சாரதை.

"நிஜத்திலே நீ யாரு? அதைச் சொன்னுத்தான் ஆச்சு" என்ருன் ஷிபு அழுத்தமாக.

"நிஜத்திலேன்னு? நான் வேறே யாரு? சாட்சாத் உன் சித்திதான்"—சாரதை வேறெப்படிப் பேசுவாள்?

"சரி, சரி. அப்படின்னு நீ மட்டும் போயிக்கோ! நான் வரமாட்டேன். உங்க அகம் கிட்டத்திலேதானே இருக்கு?" என்று முரண்டு பிடித்தான் சிறுவன் சிவராமன்.

"கண்ணு ஷிபு, படுத்தாதேடா! இருட்டிண்டு வர்றது. நான் எப்படித் தனியாப் போறது? சமர்த்தோல்லியோ? 'இவ நம்ம சொந்த சித்திதான். நம்ம துணை இவளுக்கு வேண்டியதுதான்'னு புரிஞ்சுண்டு கூட வாடா, ராஜா" என்று தாஜாச் செய்தாள் சாரதை.

ஷிபு மசியவில்லை. "நீ சாதாரணப் பொம்மனுட்டி, சாதாரணச் சித்தி—அப்படீன்னு, நீ போறபடியே போயிக்கோ" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

ஷிபு ஆணி அறைந்தாற்போல நிற்பது கண்டு, அவனுக்கு வெகு அருகில் நெருங்கி வந்தாள் சாரதை. அந்தி நெருங்கி இருளாக அடர்வது போல், காளிமாதா் அவளுள் அடர்ந்து நெருங்கினுள். தன் மலர் வாயைக் குவித்து, ஷிபுவிடம் தேவரகசியத்தைச் செப்பினுள்: "நான் நிஜமா யாருன்னுதானே சொல்லணும்? **என்னைப் பல பேர் காளின்னு சொல்ரு!**" என்ருள்.

சிறிய சிவராமுக்கும் சிலிர்ப்பு ஏற்பட்டது. ராமகிருஷ்ணரின் வாய்மொழியாகவே அவர் ராமனுகவும் கிருஷ்ணனுகவும் வந்த பகவானின் அவதாரம் என்று நரேன் (விவேகாநந்தர்) உறுதி பெற்றது போல், முதல் முறையாகச் சாரதாதேவியிடமிருந்தே அவளது அவதார விசேஷத்தைக் கக்கச் செய்து, பெற்றுக்கொண்ட பாக்கியம் ஷிபுவுக்கே கிடைத்தது. பக்குவம் வாய்ந்த பெரியவர்களாக இருந்தால் அதைக் கேட்ட மாத்திரத்தில் அப்படியே கரைந்து போயிருப்பார்கள். விடலையான சிவராமோ இரண்டாம் முறையும் கேட்டு அதை உறுதிப்படுத்திக்கொண்டான்.

"காளின்னு? நிஜமாவா?" என்ருன்.

"ஆ—மாம்" என்று உறுதியாகச் சொன்னுள் சாரதை.

ஷிபு ஆனந்தமாகச் சிரித்தான். "ரொம்ப சரி; அப்படின்னு நான்கூட வர்றேன். போகலாம்" என்று சொல்லிக்கொண்டே நடையைத் தொடர்ந்தான்! மாகாளியும் பதவிசாகப் பின் தொடர்ந்தாள்!

வேடிக்கைதான்! சாதாரணச் சித்திக்குத்தான் இவன் துணை வேண்டும். காளிக்கு எதற்குத் துணை? ஆனுல் அனைத்துக்கும் துணையான அந்த அன்னையே அந்தச் சிறுவனின் சிற்றறிவில் தோன்றும் எண்ணத்துக்கேற்பத் தானும் விளையாடுகிருளே!

சாரதையின் சரிதையில் விட்ட இடத்துக்குத் திரும்புவோம்.

* * * *

கிராமத்தில் சுயேச்சையாக வாழ்ந்த சாரதை தக்ஷிணேசுவர நஹபத்துக்குள் சுயேச்சையாகச் சிறைப்பட்டாள்! ஆனுல் சாரதை முடங்கிக் கிடப்பது சம்பு பாபுவின் மனைவிக்குப் பொறுக்க வொண்ணுத கஷ்டமாக இருந்தது. மங்களவாரந்தோறும் அவளைத் தன் இல்லத்துக்கு அழைத்துச் சென்று அவளது பாதத்தில் மலரிட்டு வணங்குவாள் அந்த அம்மாள்.

நஹபத்தைவிட விசாலமான ஒரு கூரை வீடு அமைத்து, சாரதாதேவிக்குத் தர விரும்பினுர் சம்பு பாபு. ஆலயத்தின் அண்மையிலேயே ஒரு மனைக்கட்டை இருநூற்றைம்பது ரூபாய்க்கு வாங்கினுர்.

ராமகிருஷ்ணரைக் குருநாதரென மதித்த காப்டன் விசுவநாத உபாத்தியாயருக்கு இவ்விஷயம் தெரிந்தது. பேலூரில் இருந்த நேபாள சர்க்கார் மரக் கிடங்கின் அதிகாரியாகிய அவர் சாரதையின் குடிலுக்கான மரம் முழுவதையும் தாமே வழங்குவதாக முன்வந்தார். தக்ஷிணேசுவரத்துக்கு எதிர்க் கரையில் இருந்தது பேலூர் மரக் கிடங்கு. நீரோட்டத்தின் திசை சாதகமாக இருந்தபோது மூன்று பெரிய மரக்கட்டைகள் தக்ஷிணேசுவரத்துக்கு மிதக்க விடப்பட்டன. துரதிருஷ்டவசமாகச் சிறிது போதுக்குப் பிறகு வெள்ளத்தின் கதி மாறியது. இரண்டு கட்டைகள்மட்டுமே தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தன. ஒன்று வேறெங்கோ அடித்துச் செல்லப்பட்டது.

''உங்களுடைய துர்ப்பாக்கியந்தான் எல்லா இடத்திலேயும் தொடர்ந்து வர்றது'' என்று சாரதையிடம் நறுக்கெனக் கூறினார் ஹ்ருதயர். 'சின்ன மாமி'க்கு விசேஷ அந்தஸ்து ஏற்பட்டு, தனி வீடு கிடைப்பது அவருக்கு ஆத்திரமூட்டியதால் அப்படிப் பேசினார். ''உங்களுக்கு உதவி செய்யறேன்னு வந்த தோஷம், சம்பு பாபுவுக்கு என்ன கெடுதல் வரப் போறதோ?'' என்று கடுமையாகக் கூறிச் சாரதையின் மனத்தைப் புண்படுத்தினார். சாக்குருவி போல் ஹ்ருதயர் பேசியதாலோ என்னவோ அடுத்த ஆண்டே சம்பு பாபு காலமாகி விட்டார்.

மனஸ்வியான காப்டன் உபாத்தியாயர் இன்னொரு கட்டை அனுப்பினார். சாரதைக்கெனக் கூரை வீடு எழும்பியது. வேலைக்காரப் பெண் ஒருத்தியுடன் தேவி அங்கே குடிபுகுந்தாள். ஹ்ருதயர் தம் மனைவியையும் அங்கே குடி ஏற்றினார். இதிலே அவருக்குச் சிறிது ஆறுதல்!

தினமும் சாரதை அந்தக் குடிசையில் ராமகிருஷ்ணருக்கு உணவு தயாரிப்பாள். அதை அவரது இருக்கைக்கு எடுத்துச் சென்று பரிமாறுவாள். சிறிது உரையாடிவிட்டுத் திரும்பிவிடுவாள்.

ராமகிருஷ்ணரும் அவ்வப்போது அங்கே வந்து அவளது செளக்கியத்தைக் கவனித்துக்கொள்வார். ஒரு நாள் மாலை அவர் அங்கே வந்த பின் கனமழை பொழியலாயிற்று. குடிலிலேயே உண்டுவிட்டுப் படுத்தார்.

எதையோ நினைத்துக்கொண்டு அவர் சிரித்துக்கொள்வதைக் கவனித்த தேவி, ''என்ன சிரிக்கிறேள்?'' என்றாள்.

''எல்லாக் காளி கோயில் பூஜாரிகளும் அன்றாடப் பூஜை ஆன அப்புறம் அகத்துக்குப் போய்ச் சாப்பிட்டுப் படுத்துப்பாளோன்னோ?

இன்னிக்கு ஒரு நாள் நானும் அந்த மாதிரிக் கோயிலே விட்டுட்டு வந்து......" விழுந்து விழுந்து சிரித்தார் ராமகிருஷ்ணர்.

ராமகிருஷ்ணருக்கு உக்கிரமான வயிற்றுக் கடுப்புக் கண்டது. சாரதை அவரிடமிருந்து விலகிக் குடிலில் வசிப்பது சாத்திய மாயிருக்கவில்லை. கண்டான் முண்டான்கள் நிரம்பிய நஹவத்தை மீண்டும் அவள் வசிப்பதற்கு லாயக்காக ஒழித்துவைக்கும் வரையில் எப்படி அவரை விட்டு இருக்கப் போகிறோம் என்று கலங்கினாள். கலக் கத்தைத் தீர்ப்பதற்கென்றே எங்கிருந்தோ வந்து குதித்தாள் ஒரு கிழவி. "காசியிலிருந்து வருகிறேன்" என்றுமட்டுமே தன்னைப்பற் றிச் சொல்லிக்கொண்டாள். அவளது பூர்வோத்தரம் ஏதும் தெரியவில்லை. சர்வ சகஜமாக ராமகிருஷ்ணரின் மனத்தையும் உடற் போக்கையும் அநுசரித்து அவருக்குப் பணிவிடை புரியலானாள்.

"என்னதான் பணிவிடை பண்ணினாலும் உன்மாதிரி பண்ண என்னால் ஆகாதடி, அம்மா. குடிசையைக் காலி பண்ணிண்டு நஹவத் துக்கே வந்து சேரு. நானும் என்னிடத்துக்குப் போய்ச் சேருகிறேன்" என்றாள் கிழவி, சாரதையிடம்.

"எனக்கும் அப்படித்தான் உத்தேசம், பாட்டி. ஆனா ஹ்ருதய ரோட ஆத்துக்காரி எப்படித் தனியா இருப்போ?"

"அதைப்பற்றி உனக்கென்ன கவலே? நீ இங்கே வந்து சேரு." சாரதை நஹவத்துக்கு மீண்டும் வந்துவிட்டாள்.

அன்றிரவு காசி நகரக் கிழவி சாரதையை ராமகிருஷ்ணரிடம் அழைத்துச் சென்றாள். தேவி மீனாக்ஷியைச் சோமசுந்தரேசுவரனுக்கு அளித்த காஞ்சனமாலையைப் போல, சாரதையை ராமகிருஷ்ணரின் முன் நிறுத்தினாள்.

ராமகிருஷ்ணரைப் பார்த்து "அப்பனே, உன் முன்னாடிகூட, முக்காடு போட்டுண்டே இருக்கிற இந்த மோகனாங்கியின் முக மண்ட லத்தை இதோ பாரு" என்று சொல்லிக்கொண்டே சாரதையின் தலே மீதிருந்த சேலையை விலக்கினாள் கிழவி.

21. சாரதையின் சபதம்

"தாங்கள் என்னைத் திரஸ்காரம் செய்கிறீர்கள். மங்களமான அறிவு வாய்ந்த தாங்கள் ஒருகாலும் மனமொப்பி இவ்வாறு செய்ய மாட்டீர்கள். இதில் ஐயமே இல்லை. என்னுடைய பூர்வஜன்ம பாவங்களே இப்படித் தாங்கவொண்ணாத இடியாக வந்திருக்கின்றன."
--சீதாதேவி ஸ்ரீராமனுக்கு லக்ஷ்மணன்மூலம் சொல்லியனுப்பியது.

(ரகு வம்சம் 14.62)

நோயிலும் துயரிலும் காந்தி இழந்திருந்த சாரதையின் முகத்தில் திடீரென்று ஒரு ஜோதிப் பிரகாசம் வந்து படிந்தது. ஸ்படிகத்தின் தெளிவும், மல்லிகையின் மணமும், பூர்ண சந்திரனின் தண்மையும் அந்தத் திவ்யவதனத்திலிருந்து பெருக்கெடுத்தன.

கொடுங் கள்வனே காளிமாதாவை அம்முகத்தில் கண்டான் எனில், ராமகிருஷ்ணருக்குக் கேட்பானேன்? தன்னை ஒளித்துக் கொண்டே சாரதாவதாரம் செய்திருந்த தேவி, ஏதோ ஓர் அளப்பரிய உந்துதலின்மீது அவ்வப்போது தன்னைப் புலர்த்திக்கொண்டாள் போலும். அந்தப் புலர்ச்சி சாரதைக்கே தெரியாதது போல் இருந்ததுதான் பேரதிசயம்! இப்போது சாரதையின் முகத்தில் ராமகிருஷ்ணர் தமது திவ்விய மாதாவையே முகமுகமாகக் கண்டுவிட்டார். அதீத பரவசத்தில் ஆழ்ந்தார். தேவியின் சௌந்தரியத்தைப்பற்றிப் பேசத் தொடங்கினர். அழகு வெள்ளத்தைப் பற்றி அவரது வதனத்திலிருந்து வசன வெள்ளம் பெருகலாயிற்று. பேசினரோ, பேசினரோ, அப்படிப் பேசினர். அந்தத் தெய்விகப் பேச்சிலே கட்டுண்டு கிடந்தனர் சாரதையும், காசிக் கிழவியும்.

பேச்சு முடிந்தது; இரவும் முடிந்தது.

கிழவி காசிக்குப் புறப்பட்டுவிட்டாள். காசியில் அவளது இருப்பிடத்தை விசாரித்துக்கொண்டாள் சாரதை.

பல வருடங்களுக்குப் பின் நம் அம்மா காசியம்பதிக்குச் சென்றபோது அக்கிழவியைச் சல்லடை போட்டுத் தேடினள்; ஆனல் அவள் கிடைக்கவில்லை. அவளது அடையாளங்களைச் சொல்லி விசாரித்த போது, அங்கு எவருக்குமே அப்படி ஒரு வியக்தியைத் தெரியவில்லை.

ராமகிருஷ்ணர் நோயுற்றபோது தருணம் அறிந்து எங்கிருந்தோ வந்து சுசுருஷை புரிந்து, வந்ததுபோலவே மறைந்த அந்தக் கிழவி யார்?

ஹ்ருதயரது ஊராகிய ஷியாடுக்குப் புறப்பட்டார் ராமகிருஷ்ணர். ஹ்ருதயர், சாரதாமணி இருவரும் அவருடன் சென்றனர். ஷியாடில் ஹ்ருதயரின் வீட்டில் நடந்த ஒரு பஜனையின் போதுதான் பச்சைக் குழந்தை சாரு முதன் முதலாக ராமகிருஷ்ணரைக் கண்டு, 'அதோ என் அகத்துக்காரர்' என்று கைதூக்கிக் காட்டினுள். ஆனல் ஏனே ஹ்ருதயருக்கு அவளைக் கண்டாலே ஆகவில்லை. தனக்கே பாத்தியமாக இருந்த 'மாமா'விடம் அவளுக்கு ஏற்பட்டு விட்ட நெருக்கம் ஹ்ருதயரின் இருதயத்தை நெருக்கி, நாளாவட்டத்தில் அவளிடம் மாருத மனக் கசப்பை உண்டாக்கிவிட்டது. பைரவி பிராம்மணிக்கு அடுத்த வாரிசாக வந்து வாய்த்தார் ஹ்ருதயர். இப்போது ஷியாடுக்கும் புலியையும் ஆட்டுக்குட்டியையும் சேர்த்து அழைத்துச் சென்ருர் ராமகிருஷ்ணர். இந்த ஆட்டிடம் புலியின் ஜம்பம் சாயவே சாயாது; ஆடு தனது கோமளத்தாலேயே புலியின் கொடூரத்தை வென்றுவிடும் என்று அவர் அறிவார். அந்த வெற்றியைப் பார்த்துப் பூரிப்பதில் அவருக்குத் தனி ஆசை போலும்!

நீராவிப் படகு ராஜ ஹம்ஸமென கங்கையில் மிதக்க, பரம ஹம்ஸ தம்பதியர் பரமஹிம்ஸை தரும் ஹ்ருதயருடன் பிரயாணம் தொடங்கினர்.

ஆடவர்கள் ஏறிக்கொண்டபின் நாணராணி சாரதை தயங்கித் தயங்கிப் படகேறினுள். "அம்மா, இப்போ நான் சொல்கிற பாடத்தைக் கவனமாகக் கேட்டுக்கோ. எங்கேயானும் போகறச்சே நீதான் முதல்லே வண்டியிலே ஏறணும். இறங்கறச்சே நீதான் கடைசியில் இறங்கணும். எல்லாச் சாமானும் ஏற்றியாச்சான்னு கவனிச்சு, அதுகளை வாங்கி வண்டியிலே ஒழுங்குபடுத்தி வைக்கிறதுக்கும், அதே மாதிரி கடைசியிலே எல்லாத்தையும் இறக்கியாச்சான்னு பார்த்துக்கறத்துக்கும் இதுதான் வழி" என்ருர் ராமகிருஷ்ணர்.

அப்பப்பா! அவர்தான் எத்தனை சிறிய-ஆனல் அரிய-பாடங்களை அவளுக்குப் புகட்டினுர்!

நீராவிப் படகு நீந்தத் தொடங்கியது. 'மாமிக்கு ஸ்டீமர் பிரயாணமா?' என்று ஹ்ருதயருக்குத் தாங்கவில்லை. நீராவிப் படகைப் போலவே இவரும் ஆவி கக்கிக்கொண்டு வந்தார். படகு தன்னைக் கிழித்துச் சென்ருலும் உடனுக்குடனே ஒரு சுவடுமின்றி அலையால் தன்னை மூடிக்கொள்ளும் தூய கங்கையாக வந்தாள் சகிப்பு ஸ்வரூபமான சாரதை. ஆனல் ராமகிருஷ்ணரின் மெல்லிய இதயத்தை ஹ்ருதயரின் கொடூரம் கிழிக்கத்தான் செய்தது.

மத்தகஜம் பிளிறுவதுபோல் கனன்று பேசினுர் ராமகிருஷ்ணர்: "அடேய், ஹ்ருதூ! நீ எனக்கு ரொம்பப் பிரியமானவன்.

இந்த நிமிஷங்கூட நீ என் பிரிய ஹ்ருதுதான். அதனாலேயே உன்னை எச்சரிக்கிறேன்: கேட்டுக்கோ. (தமது சரீரத்தைத் தொட்டுக் காட்டி) இந்தக் கட்டையை நீ அவமதிக்கலாம். அதனாலே பரவா யில்லே. ஆனால் இவகிட்டே மட்டும் அந்த வேலை வெச்சுக்காதே! ஆமாம். (தம்மைத் தொட்டு) இதுக்குள்ளே இருக்கிற சக்தி தன் படத்தை விரிச்சுண்டு சீறினாலும், உனக்கு ஒருவேளை கதி மோட்சம் கிடைக்கலாம்; ஆனா இவளுக்குள்ளே இருக்கிற சக்திமட்டும் படமெடுத்து வந்தால், அப்புறம் பிரம்ம, விஷ்ணு, மஹேசுவராளாலேயும் உன்னைக் காப்பாத்த முடியாது."

சாரதையின் மகிமை அப்படிப்பட்டது! தம்மை அவமதித்தாலும் காப்புக் கிடைக்கலாம் என்று அவர் சொன்னாரே, அப்படிக் காப்பது அவள்தான்! அவருக்கு ஒருவரிடம் சீற்றம் வந்தாலும் அதைத் தணிப்பவள் தேவிதான். அவளே சீறிவிட்டால்?

ராமகிருஷ்ணர் இப்படி ஆணி அறைந்ததுபோல் சொல்லியும் அது ஹ்ருதயரின் மனத்தில் புகவில்லை. ஒருவிதத்தில் அவர் ராமகிருஷ்ணரை விடவும் சாரதையை நன்கு அறிந்திருந்தார் எனலாம். அவள் சீறிவிட்டால் விமோசனமே இல்லை என ராமகிருஷ்ணர் கூறினார். ஹ்ருதயரோ அவள் ஒருநாளும் சீறவே மாட்டாள் என்பதாக அவளது மகிமையை அதைவிடச் சிறப்பாக உணர்ந்திருந்தார் போலும்!

பந்தர் என்ற இடத்தில் ஸ்டீமர் பயணத்தை முடித்து, நாட்டுப் பரிசலில் ஏறி, பாலி தேவாகஞ்ஜ் என்ற ஊரை அடைந்தனர். வைஷ்ணவர்கள் மிகுந்த அவ்வூரில் மோதக வகுப்பைச் சேர்ந்த ஒரு வியாபாரி இம்மூவருக்கும் விருந்தோம்பல் செய்தார்.

நல்ல மழை பிடித்துக்கொண்டது. அங்கிருந்து மூன்று நாட்களுக்குப் பிறகே அவர்கள் கிளம்ப முடிந்தது.

வியாபாரி நமது ஹம்ஸ தம்பதியை வணங்கி நாத் தழுதழுக்கச் சொன்னார்: "புது வீடு கட்டினால் அதில் மூணு நாளாவது ஒரு மகானை அழைத்து வந்து தங்கச் செய்யணும்னு எனக்குச் சொல்லி முடியாத ஆசை. நீங்களாகவே வந்து தங்கி அநுக்கிரகிச்சுட்டேள்."

ஹ்ருதயரின் சொந்த ஊராகிய ஷியாடில் இவர்களது வருகை பக்தி வெள்ளத்தைப் புரளவிட்டது. சியாம் பஜாருக்குச் சென்று அங்கும் ஓர் அற்புத சங்கீர்த்தனம் நிகழ்த்தினர் ராமகிருஷ்ணர்.

பெண்ணும் மாப்பிள்ளையும் ஜயராம்பாடிக்குச் சேர்ந்து வந்ததும் சியாமாசுந்தரியின் சந்தோஷம் கரை புரண்டது. ஆனால் சாரதையோ, சியாமையோ ரொம்பவும் சந்தோஷப் பட்டுவிட்டால் அம்பாளுக்குப் பொறுக்காது போலும்! ஊர் வாயைக் கிளறிவிட்டாள்.

"தம்பதியா வந்திருக்கான்னு என்ன பெருமை வேண்டியிருக்கு? தம்பதின்னாலும் இதுகள் ஏகாங்கிகளாகத்தானே இருக்கு? இருந்தாலும் இந்த மாப்பிள்ளை சாருவை இப்படி வெச்சிருக்க வேண்டாம்! ஒரு மங்கள காரியத்துக்கும் பிரயோஜனமில்லாத மலடியான்னு உன் பெண்ணை நிறுத்தியிருக்கார்?" என்று கிராமப் பெண்டிர் சியாமையிடம் தொணதொணத்தனர்.

'மங்கள காரியத்துக்கே ஆகாதவள்' என்ற வார்த்தைகளைச் சாரதையும் கேட்டுவிட்டாள்; 'ஸர்வ மங்கல மாங்கல்யே' என்று துதித்து அவளை வணங்கிய ராமகிருஷ்ணரும் கேட்டுவிட்டார்.

சாரதையின் கண்களிலிருந்து முத்து முத்தாக நீர் உதிரலாயிற்று.

"இந்தப் பேச்சை, இந்த ஏச்சை எத்தனை தடவை இங்கேயும் காமார்புகுரிலும் கேட்டுட்டேன்?" என்று சொல்லி விம்மினாள். சுய அநுதாபம் என்ற இழிதகைமைக்கு இழையளவும் இடம் தராத தேவி இப்படிப் பேசியது ராமகிருஷ்ணருக்கே வியப்பாயிருந்தது.

"இன்னமுமா இந்த வருத்தம்? அசடே! கவலைப்படாதே! தலையை வெட்டிண்டு தபஸ் இருந்தாக்கூடப் பெற முடியாத புத்திர ரத்தினங்களையாக்கும் உனக்காக நான் விட்டுட்டுப் போகப் போறேன். கடைசிலே 'அம்மா, அம்மா'ன்னு உன்னைக் கூப்பிட்டுண்டு வர்ற கூட்டத்தைச் சமாளிக்கவே முடியாமல் திண்டாடப் போறே, பாரேன்" என்று பன்னீராகப் பேசினார் பகவான்.

சியாமாசுந்தரி மாப்பிள்ளையிடம் நேரே நின்று பேசமாட்டாள். மறைவில் புலம்பித் தள்ளினாள். "ஊரார் ஏன் சொல்லமாட்டா? எனக்குந்தான் இந்தப் பட்டு வயித்திலே ஒரு புழு நெளிஞ்சு பார்ப்போமான்னு ஆதங்கமாயிருக்கு. தலை விதி, இப்படி ஒரு பைத்திய மாப்பிள்ளையைப் படைச்சுட்டேன். இந்தக் குழந்தை, தனக்கு என்று ஒரு குடித்தனமில்லாமல், 'அம்மா'ன்னு கூப்பிட ஒரு குரல் இல்லாம பட்ட மரமா நின்னுடுத்தே" என்று ராமகிருஷ்ணரின் காது பட வாய்விட்டுச் சொன்னாள். 'அதி'யாகத்தான் பேசிவிட்டாள்!

ஆனால் மாப்பிள்ளை கொஞ்சமேனும் முறுக்கிக்கொள்ள வேண்டுமே! முறுவலோடேயே சியாமை முன் நின்றார். பதவிசான குரலில் சொன்னார்: "மாமீ! வருத்தப்படாதேள். உங்க பெண்ணுக்கு ஏராளமான புத்திர சம்பத்து கிடைக்கத்தான் போறது. அப்புறம் ஒரு காலத்திலே 'அம்மா, அம்மா'ன்னு அவளைப் பிச்சுப் பிடுங்கற குரல்களுக்கு மத்தியிலே அவ திண்டாடப் போறா. அதையும் பார்க்கத்தான் போறேள்."

சாரதையிடம் பேசுகையில் புத்திர ரத்தினங்களை அவளுக்கு விட்டுச் செல்வதாகச் சொன்னார்; இப்போது எதிர்காலத்தில் சாரதையை மக்கள் சூழுவதையும் மாமிமட்டுமே பார்க்கப் போகிறாள் என்று தொனிக்கப் பேசினார். அந்தத் திரிகால ஞானி தமது சரீர யாத்திரையின் முடிவைப்பற்றி அறியாரா?

நள்ளிரவு ஒன்றிலே ராமகிருஷ்ணர், "பசி பசி" என்று பதறினார்.

மகா பாவங்களில் உள்ள மகானின் சரீரத்துக்கு ஏற்படும் உணர்வுகளை யாராலும் புரிந்துகொள்ள முடியாது.

சாரதா தேவிக்கு வெட்கமாக இருந்தது. இரவு விருந்துண்ட கணவர் நள்ளிரவில் மீண்டும் உணவு கேட்பதால் தன் வீட்டார் அவரைப் பைத்தியமாகவே கருதிவிடுவாரோ என்று அல்ல; அவரைப் பற்றி யார் என்ன கருதுகிறார்கள் என்பதில் அவளுக்குச் சிறிதும் கருத்தில்லை. அவள் வெட்கப்பட்டதற்குக் காரணம், ஒரு பிடி பழையமுது தவிர வீட்டில் ஏதுமே இல்லாததுதான்.

"கொஞ்சம் பொறுத்துக்கறேளா? நாலு அரிசி களைஞ்சு வெச்சுட்டு, ரெண்டு கறிகாயும் வேகவிடறேன்" என்றாள்.

"ஊஹூம், பொறுக்கவே முடியாது. இருக்கிற சாதத்தை இப்பவே கொண்டா" என்றார் அவர்.

கூசிக்கொண்டே பழையதைப் பிழிந்து படைத்தாள் தேவி. "நீங்க ஊறுகாய் போட்டுக்க மாட்டேள். தொட்டுக்கக் காய்கறி ஏதுமே இல்லையே?" என்றாள் கண் கலங்கி.

"போய் நன்னாப் பாரு. வாணலிலே ஏதாவது ஒட்டிண்டு இருந்தாக்கூடப் போதும்" என்றார் ராமகிருஷ்ணர்.

என்ன ஆச்சரியம்! அவள் சமையற் கட்டில் போய்ப் பார்த்த போது மெய்யாகவே வாணலியில் சிறிது பொரியல் இருந்தது. அதைக் கொணர்ந்து அவருக்குப் படைத்தாள்.

கண்ணன் திரௌபதியிடமிருந்து கீரைத் துவட்டலில் ஒரு துளி வாங்கி உண்டவுடன் தூர்வாசருக்கும் அவருடைய சிஷ்யகோடிகளுக்கும் வயிறு நிறைந்துவிட்டது என்று வியாசர் கூறுகிறார். ராமகிருஷ்ணர் இன்று உண்டது எவர் பொருட்டு என்பதை அறிந்து சொல்ல ஒரு வியாசர் இல்லையே!

ஜயராம்பாடியிலேயே சாரதையை விட்டுவிட்டு ராமகிருஷ்ணர் காமார்புகூர் சென்று அதன்பின் தக்ஷிணேசுவரம் திரும்பினார். பிற்கால விவேகாநந்தர் பிரம்மாநந்தர் சாரதாநந்தர் முதலியோர் ராமகிருஷ்ணரை வந்தடைந்து அவர் திரட்டி வைத்திருந்த ஞான நிதியத்தை ஆர்ஜிதம் செய்துகொள்ளத் தொடங்கி விட்டனர். ராமகிருஷ்ணர் குருமகராஜ் எனவும், பரமஹம்ஸர் எனவும், டாகுர் எனவும் பெயர் கொண்டு சீடர் பலரது இதயங்களில் இடம் கொள்ளலானார். சீடர்களுக்காகவே ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த ராமகிருஷ்ணர் தம் ஞானம் அனைத்தையும் அவர்களிடம் அறவே பொழிந்துவிட்டு, மழை பெய்தபின் மறைந்தே போகும் முகிலாக ஆவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்.

சிறிது காலத்துக்குப் பின் சாரதை தக்ஷிணேசுவரத்துக்கு வந்தாள். தன் தாயையும் தக்ஷிணேசுவரத்திற்கு அழைத்து வந்தாள்.

வருகிற வழியில் தாரகேசுவரத்திலே தன் முடியைக் களைந்து பகவானுக்குச் சமர்ப்பித்தாள் சாரதை. முன்பு அவள் சுகவீனமுற்றிருந்தபோது தாரகேசனுக்குக் கேசம் களைவதாக வேண்டிக்கொண்டிருந்ததால் இவ்விதம் செய்தாள். வங்காள வழக்கப்படி சிகையோடு நகங்களையும் வெட்டிப்போட்டாள்.

சாரதையையும், அதோடு மட்டுமின்றிச் சியாமையையும் கண்டவுடன் ஹ்ருதயருக்கு உண்டான கடுப்புக்கு எல்லையே இல்லை. 'சின்ன மாமி' தன் குடும்பப் பட்டாளத்தையே தக்ஷிணேசுவரத்தில் குடியேற்றுவதாகக் கருதிக் கொதித்தார் ஹ்ருதயர்.

ராமகிருஷ்ணரின் அறைக்குள் அவர்கள் நுழைகையில், ஹ்ருதயர் வாய்விட்டு, "இதுகள் எதுக்காக இங்கே வந்திருக்காம்? இங்கே என்ன கொட்டி வெச்சிருக்குன்னு இப்போ வந்து சேர்ந்திருக்குதுகளாம்?" என்றார்.

தன் ஊர்ப் பிள்ளை அப்படிப் பேசியது மானவதியான சியாமாசுந்தரியை ஆட்டிவிட்டது. மாப்பிள்ளை வீட்டில் இப்படியா முதல் வரவேற்பு என்று வெதும்பினாள்.

''சரியப்பா, இதோ நான் போறேன். ஆனா இந்தப் பெண் இங்கே இருக்கலாமோன்னே? இவளை யார்கிட்டே விட்டுப் போவேன்?'' என்றாள் சியாமை.

ராமகிருஷ்ணரின் மனைவி என்று உலக ரீதியில் குடித்தனம் செய்யாவிட்டாலும், அவளுக்கு அவரோடு வசிக்கக்கூடவா உரிமை இல்லாமல் போய்விட்டது என்ற குமுறலோடு பேசினாள் சியாமை. ஹ்ருதயர் இத்தனை காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்ட போது, இதைப் பார்த்துக்கொண்டே ராமகிருஷ்ணரும் கல்லுப் போல் அமர்ந்திருந்ததால்தான் 'யாரிடம் விட்டுப்போவேன்?' என்று அவள் கேட்டாள். அவர் தாலி கட்டிய மனைவியை வெருட்டுகிறான் ஒன்று விட்ட மருமான். அவர் வாய்மூடி அமர்ந்திருந்தது சியாமைக்கு ஆத்திரமூட்டியது.

அப்போதும் பேசவில்லை அந்த அதிசய மாப்பிள்ளை!

சாரதையின் நெஞ்சு நைந்தது. நான், எனது என்ற நினைப்பு முளைகூட விடாமல் அடங்கி ஒடுங்கி நடுங்கியே வாழ்ந்த தேவிக்கும் மானம் பீறிக்கொண்டு வந்தது. அந்நாள் வரை அவமானம், அபிமானம் இரண்டும் அறியாத சாரதை இன்றைய மன நோவிலேயே ஓர் அதிசய எழுச்சி கொண்டாள். பவதாரிணியின் ஆலயப் பக்கம் திரும்பிச் சபதம்போல் மொழிந்தாள்: ''என் அம்மா! நான் போறேன். இந்த இடத்துக்கு நானாகத் திரும்புவதில்லை. நீயாக மறுபடி நான் வரும்படியாகப் பண்ணினால்தான் இங்கே இனி கால் வைப்பேன்.''

அவள் ராமகிருஷ்ணரையோ, ஹ்ருதயரையோ தூற்றவில்லை. அனைத்தையும் ஆட்டுவிக்கும் அம்பாளையே அடைக்கலம் புகுந்து பேசினாள். இப்படிச் சொல்லிக்கொண்டே வேகமாக வெளி நடந்தாள் தேவி சாரதாமணி.

அப்போதும் வாய் திறக்கவில்லை, அவளது பரம அதிசயக் கணவர்!

அந்த அதிசயக் கணவரது தமையன் மகன் ராம்லால் கங்கைக் கரையிலே படகு அமர்த்திக் கொடுத்துச் சாரதை ஊருக்கு 'சொஸ்த'மாகத் திரும்ப ஏற்பாடு செய்தான்!

எத்தனையோ கஷ்டத்துடன் பிரயாணம் செய்து தக்ஷிணேசுவரம் வந்த சாரதை, ஒரு முகூர்த்த காலங்கூட அங்கு இருக்கமாட்டாமல், அவமானத்துக்கும் அலட்சியத்துக்கும் ஆளாகித் திரும்புகிறாள்!

ராமகிருஷ்ணர் ஏன் இப்படி இடித்த புளியாக இருந்தார்? சாரதையும் சியாமையும் அங்கு அப்போது தங்கினல் ஹ்ருதயரின் வெஞ்சினம் கொண்ட வஞ்சனை நெஞ்சு அவர்களை மேலும் குரூரமாகப் பழி வாங்கும் என எண்ணினரோ! தாம் அவர்களுக்குச் சிறிதே ஆதரவு காட்டினலும் ஹ்ருதயர் ராட்சதனுகி விடுவார் என நினைத்தாரோ? தம் அன்னை சந்திரமணி தேவி எதைக் கற்பனை செய்துகொண்டு பயந்தாளோ அது வாஸ்தவமாகவே நிகழ்ந்துவிடும் என எண்ணினரோ? சந்திரமணி தேவியும், பொறுமை பிடித்த ஹ்ருதயரின் கொடுமைக்கு ஆளாகித் தவித்தவள்தான். பொறுமைப் பிசாசின் ஆளுகைக்குள் விழுந்துவிட்ட ஹ்ருதயர், ராமகிருஷ்ணரையும் சாரதாமணியையும் கொலைகூடச் செய்துவிடக்கூடும் என்றே நடுநடுங்கியிருக்கிருள் சந்திரமணி – இந்தத் தம்பதியின் புனிதமான இனிய தொடர்பைப் பார்த்த பின். அதெல்லாம் இப்போது ராமகிருஷ்ணருக்கு நினைவு வந்ததோ? ஹ்ருதயரும் சாரதையும் ஒரே சமயத்தில் தக்ஷிணேசுவரத்தில் இருப்பது முடியாத காரியம் என்கிற அளவுக்கு முன்னவரின் சின்னத்தனம் முற்றிவிட்டது. திரிகால ஞானியான ராமகிருஷ்ணருக்கு ஹ்ருதயரின் தக்ஷிணேசுவர வாசம் எத்துணை நாள் நீடிக்கப் போகிறது என்பது தெரியாதா என்ன?

அடுத்த ஒரு சில வாரங்களில் தக்ஷிணேசுவர ஆலயம் ஸ்தாபிதமான வருடாந்தர உற்சவம் வந்தது. அன்று ஹ்ருதயர் ஒரு விசேஷ பூஜை செய்தார். ஆலயம் எடுப்பித்த மூல புருஷரில் ஒருவரான காலஞ்சென்ற மதுர்பாபுவின் பேத்தியைக் கன்யா பூஜைக்குத் தேர்ந்தெடுத்து, அந்தச் சிறுமிக்கு கௌரி பூஜை செய்தார். இதனல் மதுர்பாபுவின் புதல்வர் திரைலோக்யநாத் பெரிதும் மகிழ்ந்து தம்மை வெகுமானிப்பார் என்று எண்ணினர்.

ஆனல் நடந்தது முற்றும் வேறு! 'ராமகிருஷ்ணர் சமாசாரம் தனி. அவர் மனைவியைக்கூடப் பூஜிக்கலாம். இந்த ஹ்ருதே நம் மாதிரி ஒரு வெற்று ஆள். இவன் மீனவர் பெண்ணைப் பூஜிப்பதாவது? அக்கிரமமாக அல்லவா இருக்கு?' என்று அனைவரிடமிருந்தும் கண்டனப் பேச்சே எழுந்தது.

திரைலோக்யநாத் துடிதுடித்தார். ஹ்ருதயர் செய்த பூஜையை ஏற்றதால் தம் செல்வ மகளுக்கே உற்பாதம் ஏற்படக்கூடும் என்று அஞ்சினர்.

உடனுக்குடனே ஹ்ருதயரின் சீட்டைக் கிழித்தார்.

ராமகிருஷ்ணர் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் திரைலோக்யர் ஹ்ருதயரை மன்னித்திருப்பார்.

ஆனால் இப்போதும் வாய் திறக்கவில்லை அதிசய 'மாமா!'

கெடுவான் கேடு நினைப்பான் என்பது ஹ்ருதயர் விஷயத்தில் பிரத்யட்சமாயிற்று. தக்ஷிணேசுவரத்தை விட்டு நிரந்தரமாகப் போய்ச் சேர்ந்தார்.

பாசத்தினால் மோகம் அடைந்து மோசம் போன பைரவி பிராம்மணி, இறுமாப்பின் எல்லையில் இருந்துகொண்டே, பொய்யான சமத்துவத்தைக் காட்டிய உடனே இச்சரிதையிலிருந்து விடை பெற்றது நினைவிருக்கும். அதேபோல் செருக்குக் கொண்ட ஹ்ருதயரும் சூதான சமத்துவத்தைக் காட்டியவுடன் நம்மிடமிருந்து விடை பெறுவது அற்புதமான பொருத்தம் அல்லவா? ராமகிருஷ்ண ரைப் போன்ற அவதார வரிஷ்டரின் பக்கலிலேயே இருந்தாலும் ஒரு வருக்கு அகங்காரம் முளைத்துவிட்டால் எத்துணை விபரீதமாகிறது என்பதற்கு பிராம்மணியும், ஹ்ருதயரும் இரண்டு அயனான உதாரணங்கள்.

ராம்லால், ராமகிருஷ்ணரின் தமையனார் ராமேசுவரின் புதல்வன். ராமேசுவர் காலகதியடைந்தவுடன் ராமலால் தக்ஷிணேசு வரத்துக்கு வந்து பூஜைக் காரியங்களில் உதவி புரிந்து வந்தான். இப்போது ஹ்ருதயர் போனவுடன் அர்ச்சகராகவே பதவி உயர்வு பெற்றான். ஆனால் சிறு வயதிலேயே காளியிடம் தம்மை ஒப்புவித்துக் கொண்ட சிற்றப்பா போல் அவன் இருக்கவில்லை. நேர்மாறாக இந்தப் பெரிய அந்தஸ்து கிடைத்ததில் அவனுக்குத் தலைக் கனம் மேலிட்டது. அந்த மயக்கத்திலே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை புரியும் புனிதக் கடமையையும் மறந்தான்.

ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை புரியும் விஷயத்தில் ஹ்ருதயர் இதய சுத்தமுடன் இருந்தவர். ராமகிருஷ்ணர் அடிக்கடி பாவ பரவசங்களில் மூழ்கிவிடுவார். அவரைத் தட்டி எழுப்பி யாரேனும் குளிப்பாட்டி, உணவூட்டி, சயனிக்கச் செய்தால்தான் உண்டு. அவரைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக் காத்த ஹ்ருதயர், சாரதை இருவரும் இன்று அங்கில்லை. உறவு முறையால் நெருக்கம் கொண்ட ராம்லாலைத் தவிர மற்ற சீடர்களுக்கும் பக்தர்களுக்கும் அவரிடம் சுவாதீனமாகப் பழக இன்னும் துணிவு வரவில்லை. ராம லாலோ அவரை எவ்வளவு அலட்சியம் செய்யலாமோ அவ்வளவும் செய்தான்.

ராமகிருஷ்ணருக்கு உடல்நிலை பாழாயிற்று. சரீர உணர்வு ஏற்பட்ட சமயங்களில் அந்த மகாபுருஷரும் அவதிப்படுவது போல் தோன்றியது. சாரதையைத் தாம் திரஸ்கரித்ததும் இப்போது

அவரை உறுத்தியது போலும்! வெள்ளை உள்ளத்தினரான அவர் அதன்பின் தயங்கவில்லை. பிரதிக்ஞை செய்து போன சாரதைக்கு முன், கணவன் என்கிற தமது அந்தஸ்தை அவர் எண்ணவில்லை. தாமாகவே சாரதாமணிக்குத் தூது அனுப்பினார் ராமகிருஷ்ணர். ருக்மிணி துவாரகாதீசனை வருமாறு கோரி அந்தணரிடம் தூது சொல்லியதுபோல், லக்ஷ்மண் பாயின் என்பவர்மூலம் ராமகிருஷ்ணர் சாரதைக்குப் பின்வரும் செய்தி அனுப்பினார் :

"நான் இங்கே அவஸ்தைப்படுகிறேன். காளி மாதாவின் பூஜாரியானவுடன் ராம்லால் மற்றப் பூஜாரிகளோடு சேர்ந்து விட்டான். என்னை அவன் முறைப்படி கவனித்துக்கொள்ளவில்லை. நீ வரத்தான் வேண்டும். டோலியோ பல்லக்கோ வைத்துக்கொண்டு வந்து சேர். அதற்கான செலவுகளை நான் ஏற்கிறேன் – பத்து அல்லது இருபது ரூபாய் ஆனாலுங்கூட."

அவதார புருஷன் நம் அம்பிகைக்கு அனுப்பிய செய்தி எத்தனை எளிமையாயிருக்கிறது! துளிக்கூட நாடகபாணி மன்னிப்பு, பச்சாத் தாபம் இல்லை பாருங்கள்!

முந்திய ஆண்டு சாரதை அவமானத்தோடு தக்ஷிணேசுவரத்தி லிருந்து பிறந்தகம் திரும்பினாள். அப்போது அவள் சபத மிட்டது ராமகிருஷ்ணருக்குத் தெரியாமலில்லை. அதற்காக இப்போது அவராக அவளுக்குத் தூது அனுப்புகையில் அவர் 'மன்னிப்பு' கேட்டு நாடகம் போடவில்லை. ஸ்வாதீன உரிமை யோடும் அன்போடும் எழுதினார். தம்மைக் கவனிக்க ஆளில்லை என்றால் உடனே அவள் ஓடி வந்துவிடுவாள் என்று அவருக்குத் தெரியும். என்றாலும் அப்படி வந்தால் அன்று அவள் காளியிடம் கேட்டுக்கொண்டது நிறைவேறாமல் அல்லவா போய்விடும்? 'நானாகத் திரும்புவதில்லை' என்றல்லவோ சபதமிட்டிருந்தாள்? அதனால் இப்போது ராமகிருஷ்ணர் தாமே அவளை 'நீ வரத்தான் வேண்டும்' என்கிறார். தம்மைத் தாழ்த்திக்கொண்டு அவளது சபதத்தைக் காக்கிறார். தாம் அழைத்து அவள் வருவதால் நடந்து வராமல் வாகனத்தில் வரவேண்டும், டோலியோ பல்லக்கோ வைத்துக்கொண்டு வரவேண்டும் என்கிறார். என்ன மரியாதைப் பண்பு பாருங்கள்! பரமேசுவரனுடன் மனம் பிணங்கியே சதிதேவி தக்ஷயக்ஞம் சென்றபோதுகூட, சிவபெருமான் அவளைச் சிவிகை ஏற்றி அன்றோ அனுப்பி வைத்தார்? மாமியார் குடும்பத்துக்குத் திரவிய சகாயம் செய்திராத ராமகிருஷ்ணர், அவர்களுக்குத் தம்மால் செலவு ஏற்படுவதையும் அநுமதிக்கவில்லை. எனவேதான், காசு என்றாலே கூசும் ராமகிருஷ்ணர் சாரதையின் பயணச் செலவு எத்தனை யானாலும் அதைத் தாமே ஏற்பதாகச் சொல்கிறார்.

ஏழெட்டு மாதங்களாக ஜயராம்பாடியில் மனம் குமைந்து அக்ஞாதவாஸம் செய்துகொண்டிருந்த சாரதை இந்தத் தூது கிடைத்தவுடன் பதறிக்கொண்டு புறப்பட்டு விட்டாள். தானாக தக்ஷிணேசுவரம் செல்லாமல் தனது பிரதிக்ஞையைக் காளிமாதா நிறைவேற்றிவிட்டாள் என்ற பெருமிதமா அவளுக்கு இப்போது இருந்தது? இல்லை; இம்மியும் இல்லை. நோய்வாய்ப்பட்ட கணவர் சகாயமில்லாமல் கஷ்டப்படுகிறாரே என்ற சிந்தனை ஒன்றே அவள் மனத்தை நிரப்பியது.

எனவேதான், முன்பு ஜகத்தாத்ரி விசர்ஜனத்தை மங்களமான வியாழனன்று செய்யக் கூடாது என்று விதித்த சாரதை, இன்று வியாழக்கிழமையன்றே பிறந்தகத்தை விட்டுப் புறப்பட்டாள்.

ஆனால் சமூகத்துக்கு வழிகாட்டப் பிறந்த அவள் ஒரு நியதியை மீறினால் தேவி சும்மா இருப்பாளா? தன் கை வரிசையை அவள் காட்டத்தான் செய்தாள்!

அம்பிகை கைவரிசையைக் காட்டியது ராமகிருஷ்ணரின் கையில் வந்து விடிந்தது.

ராமகிருஷ்ணர் பாவ சமாதியில் குதித்தாடிக்கொண்டிருந்தார் அவர் நிலைதடுமாறி விழுந்து விடாமல் பார்த்துக்கொள்ள ஹ்ருதயரும் சாரதாமணியும் இல்லையல்லவா? நீள நெடுக விழுந்து விட்டார். இடது கையில் ஓர் எலும்பு பிசகிக்கொண்டது. ஓசை கேட்டு அருகிருந்தோர் ஓடி வந்தனர். வலிக்கும் கையைப் பிடித்துக் கொண்டு ராமகிருஷ்ணர் அமர்ந்திருக்கும்போது, அவரது கைப் பிடித்த புண்ணியவதி வந்து சேர்ந்தாள்.

வந்தவுடன் வந்தனம் செய்தாள் பதி தேவருக்கு, இனிமை மிக்க உறவின் இடையிலே வந்த சிறிய உறுத்தல் அந்த வந்தனத்தோடு பறந்தே போயிற்று!

"எப்போ புறப்பட்டே?" என்று வினவினார் ராமகிருஷ்ணர்.

"வியாழக்கிழமை சாயங்காலம்" என்றாள் தேவி.

"பார்த்தியா, அதுதான் இந்தக் கையிலே அடிபட்டதற்குக் காரணம். ஆத்திலே பிறந்த பெண் இப்படி குருவாரம் சாயரட்சையிலே கிளம்பலாமோ? சரி, திரும்பி ஊருக்கே போயிட்டு, ஒரு நல்ல நாள் பார்த்துண்டு மறுபடி வா" என்று கூறினார் ராமகிருஷ்ணர்.

''சரின்னு, இப்பவே கிளம்பறேன்'' என்று தன்னுடைய எளிய துணி மூட்டையைத் தூக்கிக்கொண்டாள் தேவி.

சென்ற முறை அவள் தக்ஷிணேசுவரம் வந்தபோதும் உடனுக்குடன் திரும்பும்படி ஆயிற்று ஆனல் அப்போது வேதனையில் விண்டு விரிந்துகொண்டு கிளம்பினுள். இப்போது அன்புக் கணவரின் அறிவுரைக்கு அடிபணிந்து தாபம் இல்லாமலே புறப்படுகிருள்.

முன் தடவை அவள் சென்ற கசப்பான நினைவு ராமகிருஷ்ணருக்கும் ஏற்பட்டது போலும். ''அம்மா, நீ இப்பவே போகணும்னு இல்லே. இன்னிக்கு இங்கேயே சிரம பரிகாரம் பண்ணிக்கோ. நாளைக்குப் போகலாம்'' என்ருர்.

அவ்விதமே சாரதாமணி மறு நாள் ஜயராம்பாடிக்குப் புறப்பட்டாள். பிறகு நல்ல நாள் பார்த்துக்கொண்டு தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தாள். இதன்பின் ராமலாலின் விவாகத்துக்காக ஒரே ஒரு முறை காமார்புகுர் போய் வந்தது தவிர ராமகிருஷ்ணரின் ஆயுள் முடிய அவள் அவருடனேயே இருந்தாள்.

மாமியார், மூத்த ஓரகத்தி, பைரவி பிராம்மணி, ஹ்ருதயர் என்று இப்படி யாரேனும் ஒருவரின் கட்டுப்பாட்டின்கீழேயே இதுவரை கணவரின் இருப்பிடத்தில் இருந்துவந்த சாரதை இப்போது தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்ந்தாள்.

அமைதியாக வாழ்ந்தாள்; அமைதி என்பதால் அதில் ஜீவ களை இல்லாமலில்லை.

கட்டுக்கோப்பாக வாழ்ந்தாள். அதனுல் அதில் சுதந்திர சௌக்கியம் இல்லாமலில்லை.

பளிங்குபோல் வாழ்ந்தாள். தூய்மை பளிச்சிட்டாலும் அந்த வாழ்வில் கண்ணைக் கூச வைப்பதற்கு ஏதுமில்லை.

22. அம்மா ஆகிருள்!

கன்னித் தாயானாய்!
    மகனுக்கே மகளானாய்!
சின்னவளாய் எளியவளாய்,
    சீரா உன்னதங்களுமாய்
மன்னுயிர் அனைத்தினலும்
    மேப்பட்டாய், மேதக்காய்!
பின்னமற்ற சத்தியத்தின்
    சங்கறபம் சார்ந்துநின்றாய்!
காணுதற்கரிய மேநிலையில்
    மேவிய நீ
மானுட இயல்புக்குள்
    மிளிர்வித்த பகிமைகளின்
மாண்பு கண்டே பலைத்து, மங்கை,
    நினைப் பகைத்தபிரான்
தானும் உன் திருக்கரத்தில்
    தயங்காமல் சேயானான்!

(—தாந்தே; பாரடிஸோ 33)

தக்ஷிணேசுவரத்திலே தேவி அநுசரித்த தினசரி நடவடிக்கைகள் அற்புதமில்லாமலே அற்புதமானவை. அவற்றைச் சாங் கோபாங்கமாகப் படிக்கும்போது, நம் அம்மாவுடனேயே நாம் சேர்ந்து வாழ்வதுபோல் இருக்கிறது!

சரியாக மூன்று மணிக்கு விழித்துக்கொண்டு விடுவாள் தேவி. அப்போதுதான் நிம்மதியாக ஒன்றரை மணி ஜபம் புரிந்துவிட்டு, மற்ற வேலைகளை அவள் கவனிக்க முடியும். மூன்று மணிக்கு எழுவதில் அம்மா ரொம்பக் கறார். ஏனெனில், ஆரம்பத்தில் ஒரே ஒருநாள் விட்டுக் கொடுத்ததில், மறு நாளும் சோம்பிப் படுத்திருக்கத் தோன்றியதால் 'உனக்காச்சு, எனக்காச்சு' என்று அன்றிலிருந்து மூன்று மணிக்கே விழித்துக்கொள்ளலானாள்.

ஏராளமான பண்டங்களின் அடைசலோடு மிக மிகக் குறுகலாக இருந்த நஹவத் அடியறை ஜபம் செய்வதற்குச் சிறிதும் உகந்த இடமல்ல. எனவே, வெளியே வந்து படியருகே அமர்ந்து ஜப யோகத்தில் தன்னை மறப்பாள்.

ராமகிருஷ்ணரும் புலருவதற்கு நீண்டநேரம் முன்பே தோப்புக்குச் செல்வது வழக்கம். அப்போது ஒரு நாள், பகற் போதுகளில் அறையை விட்டு வெளியிலேயே வராத தேவி படியருகே சிலையாக அமர்ந்து ஜபித்துக்கொண்டிருப்பதைக் கண்டார். அகலமாகச் சிவப்புக் கரை போட்ட அவளது சேலை முந்தாணி முகத்திலிருந்து நழுவி விழுந்ததுகூடத் தெரியாமல் அந்தப் படி தாண்டாப் பத்தினி படி தாண்டி வந்து ஜபிப்பது கண்டு சிரித்துக்கொண்டார்!

காலை நாலரை மணிக்குள் கங்கையில் நீராடிவிட்டுத் தேவி நஹவத்துக்குள் புகுந்துவிட்டால் அதன்பின் அவளைப் பரபுருஷர் யாருமே பார்க்க முடியாது. மாடிப் படிக்குக் கீழே சின்னஞ் சிறிய இடத்தில் தனது பென்னம் பெரிய குடும்பத்துக்காகத் தன்னந் தனியளாகச் சமைப்பாளோ, சமைப்பாளோ அப்படிச் சமைப்பாள்!

ஆம், பெரிய குடும்பந்தான். ராமகிருஷ்ணரின் முக்கியமான சீடர்கள் யாவரும்—பிரம்மசாரிச் சீடர்கள், கிருஹஸ்தச் சீடர்கள் யாவரும்—தக்ஷிணேசுவரத்துக்கு வரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் உணவு தயாரிக்க வேண்டும். அவரவர்களுக்குப் பிடித்த உணவைப் பார்த்துப் பார்த்துச் சமைப்பாள். பிற்காலத்தில் பிரம்மாநந்தராக ஆவதற்கு இருந்த ராகாலுக்குக் கிச்சுடியில் மிகுந்த விருப்பம்; விவேகாநந்தராகப் பரிணமித்த நரேனுக்குப் பருமனகவும், அதே சமயத்தில் உள்ளே குழல் குழலாக நன்கு வெந்துமுள்ள சப்பாத்தியிலும், பயத்தம் பருப்புக் கூட்டிலும் அலாதி இஷ்டம்; ராம் தத்தருக்கு மெல்லிய சப்பாத்தி பிடிக்கும். இப்படி அவரவருக்கும் பிடித்தமானதாகப் பார்த்துச் சமைப்பாள். ''சர்தாரணமாக ஒரு நாளைக்கு மூன்று பெரிய படி கோதுமை மாவு பிசைந்து சப்பாத்தி செய்வேன்'' என்று பிற்காலத்தில் அன்னை சொல்லியிருப்பதிலிருந்தே, அன்னம், லுசி (அப்பம்), மற்ற வியஞ்சனங்கள் எவ்வளவு செய்திருப்பாள் என ஊகிக்கலாம். ராமகிருஷ்ணரின் மிருதுவான குடலுக்கேற்ப அன்றன்றும் கவனத்துடன் உணவு தயாரிப்பதுடன், இப்படிச் சீடர்களுக்கும் சமைப்பதென்றால் சாரதை தவிர வேறெவரும் முகத்தைச் சுளித்துக்கொண்டுதான் இருப்பர். ஆனால் அவளோ முகம் மலர்ந்து. மனம் அலர்ந்து சமைத்தாளோ சமைத்தாளோ அப்படிச் சமைத்தாள்!

இந்த மலர்ச்சிக்குக் காரணம் இருந்தது. மகத்தான காரணம் அது. அந்தச் சீடர்கள் ராமகிருஷ்ணரை குரு மகராஜ் என்றும் டாகுர் என்றும் பரமஹம்ஸர் என்றும் அழைத்ததோடு நிற்கவில்லை. அவர்கள் சாரதையை அம்மா என்று அழைத்தனர். ராமகிருஷ்ணருக்கு அவர்கள் சீடர்கள், பக்தர்கள், பணியாட்கள். சாரதைக்கோ

அவர்கள் புத்திரர்கள், புத்திரர்கள், புத்திரர்கள்மட்டுமே. அவர்கள் அவரை 'அப்பா' என்று அழைத்ததில்லை; அவளை மட்டுமே அம்மா என்று அழைத்தார்கள்.

அவர்கள் அம்மா என்று அழைத்தது அவளது சதைக்குள்ளே, தசைக்குள்ளே, ரத்தத்துக்குள்ளே, சித்தத்துக்குள்ளே, எலும்புக் குள்ளே, இதயத்துக்குள்ளே ஊடுருவிச் சென்றது.

'நான் அம்மா... ஆஹா, கடைசியில் நான் அம்மாவாகவே இருக்கிறேன் எல்லா அம்மாக்களையும் போல அல்ல. பக்தியும் ஞான மும் கொண்ட அற்புதக் குழந்தைகளுக்கு அம்மாவாக இருக்கிறேன்' என்ற நிறைவுகொண்ட சாரதைக்கு எந்தச் சிரமம் தெரியப் போகிறது?

ராமகிருஷ்ணர் அவளுக்கு இந்த அம்மாத் தன்மையை உணர்த்தி யது அதியழகு! தம் சீடர்களை அவர் அவளுக்கு அறிமுகம் செய்கிற பாங்கும், அதன்பின் அவர்கள் பழகிக்கொள்கிற கிரமத்தை அவர் வகுத்துத் தந்த முறைமையும் அற்புதமானவை. சாரதைக்குத் தாம் வாக்குக் கொடுத்தபடியே அவளுக்கு மக்களை ஸ்வீகரித்துத் தந்தார். அவளை அவளாக ஆக்கினார். ஏற்கெனவே அவர் செய்த மந்திரோப தேசத்தாலும், ஞானோபதேசத்தாலும், வாழ்க்கை முறைகளைப் போதித்தாலும் அவளைப் பூரண அவளாக்கி விட்டதாகச் சொல்வதற்கில்லை. இந்தக் குழந்தைகளை அவளுக்குத் தந்தபோதே அவளைப் பூரண அவளாக ஆக்கினார்.

பூரணு எனப்பட்ட ஒரு பாலசீடனை அவர் அவளுக்கு அறிமுகம் செய்து வைத்த ஓர் உதாரணமே போதும்!

அந்தப் பிள்ளையைச் சாரதையின் முன்பு கொண்டு வந்து நிறுத்தினார் ராமகிருஷ்ணர். "இவனுக்குச் சந்தனம் பூசு; ஹாரம் போடு; வயிறார விருந்து போடு" என்றார்.

அவனுக்குச் சந்தனம் பூசியபோது, பிள்ளைச் சுமை அறியாமல் தகித்துக்கொண்டிருந்த சாரதையின் உதரம் சில்லெனக் குளிர்ந்து பூரித்தது.

அவனுக்கு மலர்மாலை போட்டபோது, மொட்டுகள் கட்டியிருந்த மாதாதத்துவம் சாரதையின் உயிருக்குள் மலர்களாக விகசித்தது.

அவனுக்கு நானாவித உணவு வகைகளைப் படைத்து, அவன் மகிழ்ச்சியுடன் உண்ணக் காணும்போது, சாரதை தன் அன்பின் அறுவடையை உயிர் புடைக்க உண்கிற ஆனந்தம் கொண்டாள்.

ராமகிருஷ்ணர் இதையெல்லாம் கண்டு உள்ளுக்குள் உருகிக் கொண்டே நஹுவத்துக்கும் தமது அறைக்குமாக உலவியபடியிருந் தார். அவ்வப்போது அவளிடம் வந்து பூரணனுக்குச் செய்ய வேண்டிய சின்னச் சின்ன – ஆனால் பொருள் பொதிந்த – உபசாரங் களை எடுத்துச் சொல்லுவார். அவளுக்குப் பிற்பாடு குறையே இருக்கக்கூடாது என்பதில் அவருக்கு அத்தனை கரிசனம்!

அம்மாவாக ஆவதற்கு அவாவினாள் சாரதை. ஆனால் அம்மா வாக எப்படி இருந்து காட்டுவது என்பதிலும் அவளுக்கு அவரே பாடம் சொலலித் தர வேண்டியிருந்தது!

பூரணன் கைகழுவப் போனான். ராமகிருஷ்ணரின் உந்தல் இன்றியே பாவனையில் மட்டுமின்றிச் செய்கையிலும் பூரண அம்மாவாகி விட்ட சாரதை, செம்பிலே நீரெடுத்து அவன் கையில் வார்த்தாள். அவன் வாய் கொப்புளிக்க நீர் வார்த்தாள்.

நம் தேசத்தில் குருமார்களும், குரு பத்தினிகளும் தங்களது சீடர்களைப் போற்றி வளர்த்த அருமையை உபநிஷத காலத்திலிருந்து பார்க்கிறோம். ஆனாலும் இந்த குருவைப் போல், குரு பத்தினியைப் போல் இத்தனை அன்புமயமாக வேறு எவரேனும் இருந்திருப்பரா? இவர்கள் சீடர்களை மக்களாக மட்டுமா பார்த்தார்கள்? அவர்களை நாராயண ஸ்வரூபமாகவும் பார்த்து, அவர்களுக்கே தங்கள் மக்கள் போலவும் அல்லவா ஒரொரு சமயங்களில் நடந்திருக்கின்றனர்? பூரணனுக்கு அவர்கள் செய்த உபசாரம் பரிபூரணனுக்கே செய்த பூஜையாகத் தோன்றுகிறது!

இன்னோர் அழகு உதாரணம்: ராகாலுக்குக் கல்யாணமாகி அவர் புதுமணப் பெண்ணை தக்ஷிணேசுவரத்துக்கு அழைத்து வந்தார். "மாமியார் மாட்டுப் பெண்ணை முதல் தடவை பார்க்கச்சே ரூபாய் கொடுக்கறது சம்பிரதாயம். அவளை (சாரதை) ஒரு ரூபாய் கொடுத் துட்டு இந்தப் புது மாட்டுப் பெண்ணைப் பார்க்கச் சொல்" என்றார் ராமகிருஷ்ணர். வியக்தமாகப் பிள்ளை–மருமகள் உறவு சொல்லப் படுகிறது!

ராமகிருஷ்ணர் தமது பக்தர் குழாத்துடன் அவளுக்கு நிலைத்த உறவு ஏற்படுத்துவதில் மிகுந்த அக்கறை காட்டினார். உதாரணமாக, கல்கத்தாவில் பலராம் பாபுவின் மனைவிக்குக் கடுமையான காய்ச்சல் கண்டபோது, சாரதையிடம், "நீ இப்போதே அவளைப் போய்ப் பார்த்து வா" என்றார். தக்ஷிணேசுவரத்திலிருந்து அந்த வீடு ஐந்து மைல்களுக்குமேல் இருந்தது. சாரதைக்கு நடப்பது ஒரு பொருட்

16

டல்ல. ஆனால் ஆனைப்பட்ட டாகுரின் பத்தினி – அதுவும் பர்தா முறை அநுசரிக்கும் கோஷாப் பெண்மணி-ஒரு மாநகரின் நடுவீதியில் நடந்து சென்று வருவது யுக்தமாக இராது எனக் கருதினள். "வண்டி ஏதாவது வரட்டும்; அப்புறம் போறேன்" என்றாள். "வண்டியாவது, இன்னொண்ணுவது? என் பலராம் வீட்டிலே ஒரு கஷ்டம் வந்திருக்கச்சே இதையெல்லாமா கவனிக்கிறது? நடந்து போ" என்றார் அவர் கண்டிப்புடன். நல்ல வேளையாக அருகில் இருந்த அடியார் ஒருவர் பல்லக்குத் தேடிப் பிடித்துக் கொணர்ந்தார்.

சாரதை சீடர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறையில் கண்டிப்புக் காட்டிய ராமகிருஷ்ணர், அதே கண்டிப்பைச் சீடர்களிடமும் காட்டி, அவர்கள் சாரதைக்குச் செய்ய வேண்டிய பணிகளை அறிவுறுத்தினர்.

ஒரு திருஷ்டாந்தம்: சாரதை ஒரு குன்று கோதுமை மாவைப் பிசைய மாட்டாமல் பிசைந்துகொண்டிருக்கிறாள் நஹபத்திலே. சற்றுத் தள்ளி லாடு என்கிற சீடப் பையன் தியானம் செய்கிறான். லாடுவைத் தியானத்திலிருந்து கிளப்புகிறார் ராமகிருஷ்ணர். "எலே! அங்கே அம்மா அவஸ்தைப்பட்டுண்டிருக்கா. இப்போதான் உனக்குத் தியானம் வேண்டிக் கிடந்ததாக்கும்! நஹபத்துக்குப் போய்க் கூடமாடக் கைங்கரியம் பண்ணு" என்றார்.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது போல், லாடு அன்றிலிருந்து ஒன்றிக்காரியான சாரதாவுக்குச் சகாயம் செய்யலானான். ராமகிருஷ்ணரின் தமையன் மகள் லக்ஷ்மியும் ஓரளவு உதவி செய்தாள். லக்ஷ்மிக்குப் பன்னிரண்டாவது வயதில் திருமணம் நடந்தது. அடுத்த ஆண்டே துரதிருஷ்டவசமாக அவள் கணவன் போன இடம் தெரியாமல் எங்கோ வெளியேறிவிட்டான். திரும்பி வராத இடத்துக்கே போய்விட்டான் என்று பிற்பாடு தெரிந்தது. விளையாட்டுக் குழந்தை லக்ஷ்மி அமங்கலையானாள். அதன்பின் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து விட்ட லக்ஷ்மி சாரதைக்கு ஓரளவு ஒத்தாசை செய்ததோடு பிராண சகியாகவும் இருந்தாள்.

ராமகிருஷ்ணரை நாடிவந்த யோகின்-மா, கோலாப்-மா, கௌரி-மா போன்ற பெண்மணிகளும் இதே போல் சாரதையிடம் அத்யந்த நெருக்கம் கொண்டனர். பரதேவதையின் இரு முக்கிய சேடியரான ஜயாவும், விஜயாவுமே சாரதை அவதாரத்திலே யோகின்-மா கோலாப்-மா என வந்தனர் என்று அடியார்கள் கூறுவர். ராமகிருஷ்ணரைப் போல் சாரதையும் அனைவருடைய அன்புக்கும் பாத்திரமாகி, அவரைப் போலவே அனைவரிடமும் அன்பைப் பொழிந்

தாள். இச்சரிதத்தைத் தொடர்ந்து படிக்கும்போது, 'அவரைப்போல' என்னுமல் 'அவரைக் காட்டிலும்' என்றே தயங்காமல் சொல்வீர்கள்! அவர்களுக்கும் ராமகிருஷ்ணரைவிடச் சாரதையிடமே அதிக அன்பு பெருகிற்று என்று கூறலாம். ராமகிருஷ்ணர் இவ்விஷயத்தை வியக்தமாகவே வெளிக் கொண்டு வந்திருக்கிருர். ஒரு நாள் சாரதையை வைத்துக்கொண்டே கௌரி மாவிடம் அவர் பட்டவர்த்தனமாகக் கேட்டார்;

''கௌர்தாஸி! எங்கள் இருவரில் உனக்கு யாரிடம் அதிகப் பிரியம்?''

கௌரி-மா மிகவும் புத்திசாலினி. எனவே, நேரடியாக வசன நடையில் பதில் சொல்லி இந்த உயரிய விஷயத்தைச் சாமானியமாக்கி விடாமல், ஒரு பழம் பாடலைப் பாடினுள்:

அரிய குழலோனே! உன் அன்புரு ராதைக்கு நீ
பெரியவனே புகல்வாய்! தெரியகில்லோம் யாமே!
வேதனையில் மக்கள் 'மதுசூதன' என்பர்;
வேதனையுற்ற நீயோ, 'காதலி ராதே' என்பாய்.

ராமகிருஷ்ணர் வேடிக்கை போல் சிரித்துக்கொண்டே பெரிய கேள்வியைப் போட்டார். கௌரியம்மாளும் வேடிக்கை போல் சிரித்துக்கொண்டே பெரிய விடையைப் பாடிவிட்டாள்!

எல்லையில்லாத வெட்கம் கொண்ட சாரதை, கௌரி மாவின் கையைப் பிடித்து அழுத்திஞள்.

''ஊம், அபஜயத்தை நானுக வாங்கிக் கட்டிக்கொண்டேன்'' என்று கூறியவாறு பொன்னகையுடன் நகர்ந்தார் ராமகிருஷ்ணர்.

'எங்கள் இருவரில் யாரிடம் அதிகப் பிரியம்?' என்று கௌரியம்மாளிடம் கேட்டது போலவே, 'எங்கள் இருவரில் யாருக்கு அதிக தேஜஸ்?' என்று ஒரு முறை அவர் சாரதையிடம் கேட்டார். அவருக்குப் பக்கத்திலே நின்றுர் பக்தர் ஒருவர். அவரையும் தம்மையும் சேர்த்துத்தான் 'எங்கள் இருவர்' என்றுர்.

அக்காலத்தில் ராமகிருஷ்ணர் ஸ்வர்ண விக்கிரகமாக விளங்கினுர். அவர் கையிலே யாரோ தங்கத் தாயத்துக் கட்டியிருந்தார்களாம். அந்தத் தங்கத்துக்கும் அவரது சருமத்துக்கும் மாறுபாடே தெரியாது. அந்தப் பொன்னுர் மேனியரின் சீடர்களுள் மேலே குறிப்பிட்ட மனிதர் நல்ல சிவப்பு. ராமகிருஷ்ணர் குழந்தைபோல் அன்னைவரிடமும், 'எங்கள் இருவரில் யாருக்கு அதிக தேஜஸ்?' என்று

கேட்பார். எல்லோரும் ராமகிருஷ்ணருக்கே 'வோட்'டுப் போட்டனர். அவர், 'சாரதைதான் சரியான மத்தியஸ்தம் செய்வாள்' என்று அவளிடம் வந்தார் — மண்டனமிச்ரர் ஆதிசங்கரருடன் வாதம் நடத்தியபோது, சரஸ்வதியின் அவதாரமான தம் சரஸவாணியை மத்தியஸ்தராக வைத்ததுபோல். இந்தச் சரஸவாணிதான் சிருங்ககிரியில் சாரதையானுள். பெயர்ப் பொருத்தம் எப்படி?

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா? நம் அம்மா சாரதையின் கண்களுக்குச் சீடரே அதிக தேஜஸ்வியாகத் தெரிந்தார்! "உங்களைவிட அவருக்குத்தான் தேஜஸ் அதிகம்" என்று பதியிடம் சொன்னுள்! அவள் சொல்லவில்லை. அன்னையன்பு சொல்லிற்று!

அவளுள் இழந்த அன்னையை வெளிப்படுத்தியதுபோலவே அவளில் ஒளிந்திருந்த அநுக்கிரக சக்தியையும் வெளிப்படுத்தலானுர் ராமகிருஷ்ணர். ஓர் உதாரணம்:

காளிபாத கோஷ் துன்மார்க்கத்தில் ஆழ்ந்துவிட்டார். குடும்பம் சர்வநாசம் ஆகாமல் அவரை மீட்டுத் தர வேண்டுமென ராமகிருஷ்ணரிடம் வந்து முறையிட்டாள் ஸ்ரீமதி கோஷ். அசட்டுத்தனமாக, "எனக்கு ஏதேனும் வசிய மந்திரம் சொல்லித் தாருங்கள்" என்று வேண்டிக்கொண்டாள்.

அந்த வார்த்தையைக் கேட்டதுமே புண்ணியமூர்த்தியின் உடல் அருவருத்துக் கூசியது. காருண்ய மூர்த்தியன்றோ அவர்? உடனே தம்மைச் சமாளித்துக்கொண்டு, ஹாஸ்யம்போல் தோன்றும் தமது இயல்பான உயர்நிலைக்குத் திரும்பினுர்.

"ஆத்துக்காரரை வசியம் பண்ணனும்; அவ்வளவுதானே? எங்கிட்ட உபாயம் கேட்டு என்ன பிரயோஜனம்? என்னை வசியம் பண்ணி வச்சிருக்காளே, அந்த நஹவத் – அம்மாதான் வசிய மந்திரத்திலே நிபுணி. அவளிடம் போய்க் கேளுங்கோ!" என்றுர்.

பூஜை முடித்து, ஒரே கருணை வெள்ளத்தில் மிதந்துகொண்டிருந்த சாரதையிடம் வந்து தன் பிரார்த்தனையைத் தெரிவித்தாள் கோஷின் மனைவி.

சாரதைக்கு அவளிடம் மிகுந்த பரிவும் பரிதாபமும் உண்டாயின ஆனுலும் அவளுக்கு வசிய மந்திரம் ஏதும் தெரியாதே! 'துன்புற்று-

வந்த இந்தக் குழந்தையிடம் டாகுருக்கு என்ன விளையாட்டு வேண்டிக் கிடக்கிறது? வசிய மந்திரம் என்றில்லாவிடினும், அவளுக்கு ஞானம் உண்டாகும்படியான மந்திரம் எதையாவது அவர் உபதேசித்திருக்கக் கூடாதா?' என்று எண்ணிஞள்.

"குழந்தே! எனக்கொண்ணும் மந்திரம் தெரியவில்லே! டாகுர் கிட்டேயே திரும்பிப் போய் முறையிடு! அவர் உன்னேக் காப்பாத்துவார்" என்ருள்.

அவரோ இன்னும் குறும்பை முடிப்பதாக இல்லே. "நஹவத் - அம்மா எப்பவுமே இப்படித்தான் பிசுக்காரம் பண்ணிக்குவா. நீ விடாதே! அந்த அம்மாவையே கெட்டியாகப் பிடிச்சுக்கோ. என் வார்த்தையை நம்பு. வசியம் பண்றத்துலே என்னேவிட அவளுக்குத் தான் ஜாஸ்தி ஸித்தி" என்ருர்.

கோஷின் பேதை மனேவி மீண்டும் சாரதையிடம் வந்து நின்ருள்.

சாரதையின் மனசு கரைந்து உருகிற்று. இந்த மனசு கரைந்து விட்டபின், சர்வத்துக்கும் தாயாக ஒருத்தி இருக்கிருளே, அந்தத் தாயின் மனசுமட்டுமே நின்றது. வழக்கத்துக்கு மாருன எழுச்சி கொண்டாள் சாரதை. பூஜையின்போது தான் அர்ச்சித்திருந்த ஒரு வில்வ பத்திரத்தை எடுத்து, கோஷின் மனேவியிடம் கொடுத்தாள். "குழந்தாய், இதை வீட்டுக்கு எடுத்துண்டு போ! உன் ஆசை பூர்த்தி ஆயிடும்" என்ருள்.

சாரதையை மகிழ்ச்சியுடன் வணங்கி, வில்வ இலேயுடன் வீடு சென்ருள் ஸ்ரீமதி கோஷ்.

அன்றிலிருந்தே காளிபாதரின் மனப்போக்கு மாறத் தொடங்கி விட்டது! நாளாவட்டத்தில் அவர் சன்மார்க்கத்துக்குத் திரும்பி விட்டார். ராமகிருஷ்ணரின் மெய்யடியார் ஆனுர்.

இந்த நிகழ்ச்சி மூலந்தான் சாரதை தனக்கு அநுக்கிரக சக்தி என்பதாக ஒன்று இருக்கிறது என்பதையே அறிந்துகொண்டாள்.

23. அகத்திலும் அடக்கம்; புறத்திலும் அடக்கம்

நான் தேவத் தன்மை பெற்றது எப்படித் தெரியுமா? நான் காஷாயம் உடுத்தவில்லை. மரவுரி போர்த்தவில்லை. தலையை மழித்துக்கொண்டோ, அல்லது ஜடை வளர்த்தோ துறவிக் கோலம் பூணவில்லை. நான் தெய்வத்தன்மை பெறுவதற்காகச் செய்ததெல்லாம் இதுதான்; என் கணவருக்கு வேண்டாத சொல்லை நான் பேசியதில்லை; அவருக்கு வேண்டாத செயலை நான் செய்ததில்லை. தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் முறைப்படி கடமை செய்தேன். மாமனார் மாமியாருக்கு அடங்கி நடந்தேன்; நான் கோள் சொன்னதில்லை நிற்கத் தகாத இடத்தில் நின்றதில்லை. அதிகம் பேசியதில்லை. தவறாகச் சிரித்ததில்லை. இந்த தர்ம மார்க்கத்தைச் சிரத்தையுடன் பின்பற்றும் எவளும் அருந்ததியின் அருகில் வைத்து ஆராதிக்கப்படுவாள்.

—மகாபாரத அநுசாஸன பர்வத்தில் சாண்டிலி எனும் பதிவிரதை.

ஸாரதை மந்திரம் என்று எதுவும் போடவில்லை. ஆயினும் அவள் அளித்த வில்வ பத்திரம் காளிபாத கோஷின் நடத்தையையே மாற்றிவிட்டது! அவரை மனைவிக்கு 'வச'மாக்கி விட்டது! சாரதையின் 'வசிய' சக்தியைப் பற்றி இங்கே கவனிக்கலாம்.

ஒரு நாள் அவள் தாம்பூலச் சுருள் தயாரித்துக்கொண்டிருக்கையில் ஏலம், கிராம்பு, ஜாதிபத்திரி முதலிய வாசனைப் பொருள்கள் மிகக் குறைவாக இருக்கக் கண்டாள். எனவே, சிலவற்றில் மட்டுமே வாசனைப் பொருள்களை வைத்து மடித்தாள். இதைக் கவனித்தாள் யோகின்-மா.

"ஏன் இப்படி இரண்டு தினுசாகப் பீடா செய்யறேள்? இருக்கிற வாசனைத் திரவியங்களை நிரவி எல்லாத்திலேயும் வைக்கப் படாதோ?" என்று சாரதையைக் கேட்டாள் யோகின்-மா.

"யோகின்-மா, வாசனை போட்ட பீடா இங்கே வரும் பக்தர்களுக்கு. சின்னச் சின்ன விஷயத்திலேகூட அன்பும் அக்கறையும் காட்டி அவாளை என்னுடையவாளா ஆக்கிக்கணும். அதனால்தான் இருக்கிற அத்தனை வாசனைத் திரவியத்தையும் அவாளுக்கே பகிர்ந்து வச்சுடறேன். வெறும் பீடா இருக்கே, அது டாகுருக்கு. அவர்தான் ஏற்கனவே என்னவர் ஆச்சே!" என்று அற்புதமாகப் பதில் சொன்னாள் அம்மா.

அன்பின் சக்தியே அவளது வசிய மந்திரமாக இருந்தது. 'மந்திரம்' என்று சொல்லப்படும் அட்சரத் தொகைகளைக் கொண்டும் அற்புதம் செய்யலாம். ஆனால் அன்பினால் மட்டுமின்றி, சுயலாபத்துக்காகவும் இந்த அக்ஷரபூர்வமான மந்திரங்களைப் பயன் செய்து கொண்டு, பிறகு ஆண்டவனின் எதிரில் கைதிக் கூண்டில் நிற்கவும் இடம் ஏற்படலாம். சுயலாபம் எண்ணாத பூரண அன்பு வந்து விட்டால், அப்புறம் எந்த மந்திரமும் வேண்டாம்! மந்திரம் போடாமலே எந்த அநுக்கிரகமும் செய்துவிடலாம். நமது சிறிய மனசு இருக்கிற வரையில் அதில் சுய ஆசைகளும் எழும்பும். எனவே, பூரண அன்பு செலுத்த முடியாது. இந்த மனசை ஸ்வாதீனம் செய்து கொண்டு விசுவ மனசில் கரைந்துவிட்டால் பூரண அன்பு தானே வந்துவிடும். மணி, மந்திரம் இல்லாமலே அது எந்த அற்புதமும் செய்துவிடும். இப்படித்தான் சொல்கிறார் ஸ்ரீ தியாகையர், 'மனசு ஸ்வாதீனமை' என்கிற கிருதியில்.

ஒருவரைத் தவறான வழியிலும் செலுத்தக்கூடிய ஹேதுவுடைய மந்திர சக்திக்கும், ஒருகாலும் தவற்றுக்கு ஆட்படுத்திவிடாத அன்பின் சக்திக்கும் உள்ள வித்தியாசத்தைச் சாரதையின்மூலம் நிரூபித்திருக்கிறார் ராமகிருஷ்ணர்.

ஒரு நாள் ராமகிருஷ்ணர் கை கழுவுவதற்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தாள், யோகின்–மா.

கொப்புளிக்கும்போது அவரது நெஞ்சிலே ஒரு நமைச்சல் உண்டாயிற்று.

''பொன்னுக்கு வீங்கி வரும் போல இருக்கு. யோகின், இதைக் குணப்படுத்தற மந்திரம் உனக்குத் தெரியுமே? அதை ஜபியேன்'' என்றார்.

'எனக்கு அந்த மந்திரம் தெரியும் என்று அவருக்கு எப்படித் தெரிந்தது?'-யோகின் மா வியந்தாள். அதைப்பற்றி அவரிடம் கேட்டால் விடை கிடைக்காது என்று அவளுக்குத் தெரியும். மந்திரத்தை ஜபித்தாள்.

பிறகு சாரதையிடம் வந்து, ''எனக்கு இந்த மந்திரம் தெரியும்னு அவருக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினாள்.

அம்மா இளநகை பூத்தாள். ''அன்பே! அவருக்கு எல்லாரைப் பத்தியும் எல்லாமும் தெரியும். ஆனாலும் யார் கிட்டேயும் அவருக்குக் கோபம் வந்ததில்லே. குறிப்பாக ஒருத்தருக்கு எண்ணம் நல்லதாயிருந்தா, அவா எதைச் செஞ்சாலும் அதை அவர் ஆட்சேபிக்கவோ, கோபிக்கவோ மாட்டார். பயப்படாதே, யோகின்! எனக்குங்கூட

இந்த மந்திரம் தெரியும். கிராமத்திலே இருக்கச்சே கத்துண்டேன். அவர், 'இதிலே தீங்கு ஒண்ணும் இல்லே. ஆனாலும் உனக்கு எதுக்கு இதெல்லாம்? இஷ்ட தெய்வத்தின் காலிலே அதைச் சமர்ப்பணம் பண்ணிச் சமாப்தி ஆக்கிடு'ன்னார். அப்படியே பண்ணிட்டேன்."

மந்திர சக்தியால் வியாதி முதலியவற்றைத் தீர்ப்பதுங்கூட மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு அவ்வளவாக உகவாத விஷயம் என்று தெளிவாகிறதல்லவா? ஆயினும் ஞானத்துக்குமட்டுமே உதவும் விஷயங்களில் மந்திர ஜபத்தின்மூலம் சீடர்களுக்கு அநுக்கிரகம் தரு மாறு சாரதையை ராமகிருஷ்ணரே ஊக்கியிருக்கிறார். ஆனால் இந்த ஞானம் பிறக்குமுன், அதற்குப் படிகள் பாவுவதற்கே பலரது வியாதி, வறுமை, இன்னல் முதலியவை தீரவும் சாரதை மந்திரங்கள் வழங்கியது உண்டு.

சாரதாப்ரஸன்னன் என்ற சீடப் பையன் ராமகிருஷ்ணரிடம் மந்திரோபதேசம் கோரினான்.

"எலே, அம்மாவைக் கேளுடா! அசாத்தியமா அநுக்கிரகம் பண்ணுவா" என்றார் அவர்.

நஹபவத்தில் அடைந்து கிடந்த அந்த அம்மாவுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்று சாரதாப்ரஸன்னனுக்குத் தோன்றவில்லை. தயங்கி நின்றான்.

ராமகிருஷ்ணர் ப்ரஸன்னனின் முகத்தைப் பார்த்துப் பிரஸன்ன முகத்துடன் பாடினார்:

ராதையின் மாயா சக்திக்'(கு) எல்லை
பேதையர் அறிவோமோ?
கோடி கண்ணனை ராமனைப் பெற்று,
கோடி கண்ணனை ராமனை வளர்த்து,
கோடி கண்ணனை ராமனைக் கரைத்த
ஈடில் ஆற்றல் அதுவன்றோ?

அந்த ஈடில்லாத ஆற்றல் அன்பு தந்த ஆற்றலேயாம். அந்த ஆற்றலால்தான் தேவி சாரதை காலை மணி மூன்றிலிருந்து இரவு பன்னிரண்டு மணிவரையில், அலுப்பின்றி, சலிப்பின்றி, கசப்பின்றி கடுப்பின்றி அடியாருக்காக உழைத்தாள்.

ஐந்து மணிக்குள் ஸ்நானம், ஜபத்தை முடித்துவிட்டு நஹபவத் மாடிக்குக் கீழே சமையலைத் தொடங்கிவிடுவாள். சமையல் இடத் துக்கும் சாமான் உள்ளுக்குமாக அலையும்போது, ஆரம்ப காலத்தில்

அங்குள்ள தாழ்ந்த வாசற் படியில் எத்தனையோ முறை முட்டிக் கொண்டிருக்கிறாள்!

சமையல் முடிந்த பின் கணவரின் அறையில் ஆடவர் நடமாட்டம் இல்லாமலிருந்தால் அவரது திருமேனியில் தைலம் தேய்த்து விடுவாள். அவர் கருக்காகப் பத்தரை மணிக்கு உண்ண வருவார். எனவே அவர் தைலம் ஊறி, ஸ்நானத்துக்குச் சென்றவுடனேயே இவள் அவருக்காகத் தாம்பூலச் சுருள் செய்யத் தொடங்கிவிடுவாள். அவர் அமருவதற்கு விரிப்புப் போட்டு, உண்கலம் வைத்து, அருந்துவதற்குக் குவளையில் நீரும் எடுத்து வைப்பாள். பிறகு நஹவத்துக்கு வந்து தாலத்தில் உணவெடுத்துப் போவாள். சாப்பாட்டு விஷயத்தில் குழந்தைபோல் பயப்படும் கணவரை 'ஏமாற்றி' அவரது திருவுதரத்தை நிரப்புவதில் சாரதையின் சாதுரியம் அதிசயமானது. அவர் கண்களில் அன்னம் அதிகமாகத் தோன்றி விடக் கூடாது என்பதால் அதை அமுக்கிப் பிசைந்தே எடுத்துச் செல்வாள்.

இந்த ஏமாற்று வித்தைக்கு இன்னோர் உதாரணம்: ஒரு முறை அவருக்கு உடல்நலம் குன்றியபோது அவர் பாலைத் தவிர வேறு எவ்விதத்திலும் திரவச் சேர்க்கையுள்ள பண்டங்களை உண்ணக் கூடாது என்று வைத்தியர் கங்காபிரசாத் ஸேன் விதித்தார். "ஜலமே இல்லாமல் எப்படி இருப்பேன்?" என்று ஐந்து வயதுக் குழந்தை உட்படச் சகலரையும் வினவினர் பச்சைக் குழந்தை ராமகிருஷ்ணர். சாரதையிடம், "மாதுள முத்திலேகூட ஜலத்தைப் பிழிஞ்சு எடுத்துட்டுத்தான் தரணும்" என்றார்.

சாரதை அந்தப் பரிதாப நிலையிலும் சிரித்துக்கொண்டாள். மாதுளை முத்தில் ஜலத்தை வடித்தால் அப்புறம் கொட்டைதானே நிற்கும்? "நீங்க ஏன் அதையெல்லாம்பற்றிக் கவலைப்படறேள்? காளி கிருபையில் எல்லாம் சரியா நடக்கும், எங்களாலே முடிஞ்சதை நாங்க செய்யறோம்" என்றாள்.

அவளால் முடிந்த ஏமாற்றுச் சாதுரியத்தைத் தொடங்கி விட்டாள். கோயில் பால்காரனைக் கூப்பிட்டு, "உன்னால் எவ்வளவு பால் தர முடியும்?" என்று கேட்டாள்.

"எவ்வளவு வேணாலும் தர்றேன். தாயே! அங்கே காளிக்குன்னு தர்றதிலே முக்கால்வாசிப் பாலை ஐயமாருங்களே குடிக்கிறாங்க. இங்கே தந்தா நம்ம ஸாமி வவுத்துக்குன்னா போவும்?" என்று சொல்லி அவன் சுமார் இரண்டு சேர் பால் கொடுக்கலானான். சாரதை அவனுக்கு ஏகப்பட்ட பிரசாதங்களைக் கொடுப்பாள்.

ஆலயத்திலிருந்து வந்த பாலோடு ராமகிருஷ்ணருக்கென்றே வழங்கப்பட்ட பாலையும் சேர்த்துச் சுண்டக் காய்ச்சுவாள். நாலு சேரை இரண்டு சேராக்கிப் பதிதேவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தம்ளரில் விட்டுத் தருவாள்.

"நீ பாட்டுக்கு விட்டுண்டே இருக்கியே! எனக்கு ஒரு சேருக்கு மேலே ஏத்துக்காது" என்று கூறும் அந்தக் குழந்தை.

"இது ஒரு சேர்தான்னு" என்பாள் தாய்.

"இல்லே. ஜாஸ்தி. எனக்கு வயிறு முட்டறது."

"ஒண்ணும் ஜாஸ்தி இல்லே. ஒண்ணுங்கிறதுக்குப் பதில் ஒண்ணே கால் சேர் இருக்கும். திருஷ்டியாட்டமா இந்தக் கணக்கெல்லாம் கேட்காதேள்."

ராமகிருஷ்ணக் குழந்தைக்குங்கூடச் சந்தேகம் உண்டாகி விட்டது. ஒருநாள் கோலாப்-மாவை அழைத்து, "அம்மா எனக்காக எவ்வளவு பால் வாங்கறு, தெரியுமா?" என்றார்.

விஷயம் தெரியாத கோலாப் அம்மை, "நாலு சேர்" என்று பொத்தைப் பூசணிக் காயை உடைத்துவிட்டாள்.

"ஆஹா! நாலு சேரா! அதுதான் எனக்கு அஜீர்ணமாயிருக்கு! எங்கே, கூப்பிடு அவளை" என்று அமர்க்களப்படுத்தினர் ராமகிருஷ்ணர்.

சாரதை வந்தாள். குற்றக் கூண்டில் நின்றுகொண்டு, அன்பு என்ற குற்றத்தைத் தொடர்ந்து துணிச்சலுடன் செய்தாள். "இந்தக் கோலாப்புக்குத் தோராயமாக்கூட அளவு சொல்லத் தெரியாது. இவ வார்த்தையைக் கேட்டுண்டா இப்படி மாய்ஞ்சு போறேள்?" என்று பதியைக் கேட்டாள்.

கோலாப் விடாப்பிடியாக, "இங்கேயிருந்து ஒரு பேலா பால் போறது, காளி கோயில்லேயிருந்து ஒரு பேலா போறது. நீங்களே கணக்குப் பார்த்துக்கோங்கோ" என்ருள்.

சாரதையைக் கண்டிப்புடன் பார்த்தார் ராமகிருஷ்ணர். அதை விடக் கண்டிப்புடன் அவரைப் பார்த்தாள் சாரதை. "இதோ பாருங்கோ! அந்தப் பேலா எத்தனை 'பாவு' பிடிக்கும்னு கணக்குப் போட வேண்டாம். சாப்பாட்டுக்கா கணக்குப் பார்ப்பா? நான் கொடுக்கிறதைச் சாப்பிடுங்கோ" என்ருள்.

"நீ சொல்றது வாஸ்தவந்தான். ஆனு எனக்கு அஜீர்ணம் வந்துடுத்து" என்ருர் அவர்.

அதுவரை அஜீர்ணமே வரவில்லை. இன்று விஷயத்தைத் தெரிந்துகொண்ட பின் மெய்யாகவே அஜீர்ணமும் வந்துவிட்டது. மகாபுருஷர்களுக்குச் சிந்தனையே சரீரத்தைவிடச் சக்தி வாய்ந்தது. அவர்கள் சிந்திக்கிறபடியே சரீரமும் ஆகிவிடும். அவர்கள் நினைப்பது சத்தியமாகிவிடும். ராமகிருஷ்ணர் அன்றிரவு ஜவ்வரிசிக் கூழ்மட்டுமே சிறிது உண்டார்.

கோலாப் அம்மை அழமாட்டாக் குறையாகச் சாரதையிடம் வந்து, "நீங்க முன்னாடியே எங்கிட்டச் சொல்லியிருக்கக் கூடாது? என்னாலே டாகுர் ஆகாரமே பாழாச்சு" என்றாள்.

"பரவாயில்லை. இத்தனை நாளா நிறையப் பால் சேர்த்ததுலே அவர் உடம்பு தேறிடுத்து. ஆனா, பொதுவாக ஒண்ணு தெரிஞ்சுக்கோங்கோ : சாப்பாட்டு விஷயத்திலே பொய் சொன்னா தோஷமே கிடையாது. அவரை ஏமாற்றியும், கெஞ்சியும், தாஜாப் பண்ணியுந் தான் சாப்பிடச் செய்யவேண்டியிருக்கு" என்றாள் அன்னபூரணியான சாரதை.

அவள் ஒருத்தியால்தான் அந்தப் பணியைச் செய்ய முடியும். அவரும் அவள் ஒருத்தி கையாலேயேதான் உணவு பெற்றார். அதிலே அவளுக்கு ஏக மகிழ்ச்சி.

அந்த மகிழ்ச்சியுடன் அவள் பரிமாறிக்கொண்டிருந்தபோது, அவர் சிந்தனை வயப்பட்டவராக மெல்ல மொழிந்தார் : "என்னிக்கு நான் எல்லார் கையிலேயிருந்தும் சாப்பாடு வாங்கிக்கறேனோ, அப்போ எனக்குப் போங்காலம் வந்துடுத்துன்னு தெரிஞ்சுக்கோ!"

சாரதையின் ரத்தம் உறைந்தது!

உணவு வேளையில் ராமகிருஷ்ணருடன் இருக்கும் ஆடவர்களுக்கு அம்மா வரப் போவதைத் தெரிவித்ததும் அவர்கள் வெளியேறிவிடுவார்கள். அதன் பின்பே தேவி உணவு எடுத்து வருவாள்.

சாரதாமணி இவ்விதம் கடுமையாகக் கோஷா முறை அநுஷ்டிப்பதை ராமகிருஷ்ணர் மிகவும் விரும்பி வரவேற்றார். ஆதியில் காமார்புகுரில் அவள் சிறுமியாக இருந்தபோது, அவள் இருந்த அறையில் ஒரு சாளரம் அமைக்கப்பட்டதையே அவர் ஆட்சேபித்திருக்கிறார். "தெருவைப் பார்த்துச் சாளரம் வைக்கறது சரியில்லை. குடும்ப ஸ்திரீகள் தெருவோடு போறவா வரவாளைப் பார்க்கறதும், அவா இவாளைப் பார்க்கறதும், நல்லதுக்கில்லை" என்று முடிவாகக் கூறி விட்டார்.

கிராமத்தில் தலையை வெளிக்காட்டாத பெண்கள் கல்கத்தா போன்ற நகரத்துக்கு வந்தபிறகு ஆடவர்களோடு ஓரளவு பழகுவதை அவர் பார்த்திருக்கிறார். சாரதை தக்ஷிணேசுவரத்துக்கு வந்த புதிதில், கிராமத்துப் பெண்ணாகிய அவள் இங்கே பலவிதமான மனிதர்கள் கூடுவதைப் பார்த்து, 'நாகரிக'த்தில் ஆர்வம் கொண்டு அவர்களோடு பழகத் தொடங்கிவிடுவாளோ என்று ராமகிருஷ்ணர் சிறிதே ஐயமுற்றார். ஆனால் சில நாட்களிலேயே அவரது ஐயம் தீர்ந்து அவர் ஹ்ருதயரிடம் 'சின்ன மாமி'க்கு நற்சாட்சிப் பத்திரம் தந்தார். "ஏதடா, இந்தக் கிராமந்தரக் குட்டி, நாகரிகம் என்ற பெயரில் அநாகரிகமாக நடந்துவிடப் போகிறதேன்னு பயந்துண்டு இருந்தேன். சின்ன மாமி இந்தப் புதுச் சூழலுக்குத் தன்னை அற்புதமா சரிப் பண்ணிண்டுட்டா" என்றார். இதைக் கேள்விப்பட்டபின், அதுவரை தன்னை யறியாமல் இயல்பாக அடங்கியிருந்த சாரதை கோஷா முறையில் அதிக சிரத்தையும் கவலையும் எடுத்துக்கொண்டாள். 'அவர் நினைக்கிறதை எல்லாம் அம்பாள் நடத்தி வைச்சுடுவளே! நான் அசட்டுப் பிசட்டுன்னு நடந்துடுவேனோன்னு அவர் பயப்பட்டால், அந்த பயமும்கூட நிஜமானாலும் ஆயிடும். அகஸ்மாத்தாக எப்போவாவது நான் வெளியிலே நின்னாக்கூட அது அவர் கண்ணுலே பட்டுவிடுமே!' என்று பயந்தாள் அவள். "ஜகதீசுவரி, அவர் எதிர்பார்க்கிற அளவுக்கு என் மானத்தைக் காப்பாற்றடியம்மா" என்று வேண்டிக்கொண்டாள். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவற்றுக்கு ஒரு மூர்த்தியே ஆனாள். இன்று நம் அம்மா உலகப் பிரசித்தி பெற்று, ஓரளவு நவகால அவதார வியக்தியாக வணங்கப் படுவதால், நவீன காலப் 'பெண் விடுதலை'க்கும் அவளை மூர்த்தியாக்கிப் பலர் எழுதியும் பேசியும் வருகிறார்கள். ஆனால் இந்த 'விடுதலை'க்கு நம் அம்மா முன்னோடி என்று எண்ணுவதற்கு அவளது சரிதத்தில் சான்று எதுவும் காணோம்! பெண்கள் அவளைப்போல்தான் இருக்க வேண்டும் என்றே ராமகிருஷ்ணரும் கூறி வந்திருக்கிறார்.

ஒரு முறை சாரதையோடு லக்ஷ்மியும் நஹவத்தில் இருந்தபோது, அம்பாள் பிரசாதங்களை அவர்களுக்கு அளித்துவர ஹ்ருதயரை அனுப்பினார் ராமகிருஷ்ணர். ஹ்ருதயர் அவர்களோடு பல விஷயங்களைச் சிரித்துப் பேசிவிட்டுத் திரும்பினார். ராமகிருஷ்ணருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. "பெண்டுகளிடத்தில் பட்டுக் கத்திரிச்சாப் போல் காரியத்தை முடிச்சுண்டு வரணும். இனிமேல் இந்த மாதிரி அவாகிட்ட வம்பளந்திண்டு நின்னாயோ, தெரியும் சேதி" என்று கடிந்துகொண்டார். ராம்லாலிடம், "சித்தி, அக்கான்னு அவாகிட்டே சும்மா பேசப்படாது" என்று கண்டித்து வைத்திருந்தார்.

உலக மாதா தன்னை ஒளித்துக்கொண்டே உயிரினங்களுக்கு அருள் செய்வது போலத்தான் சாரதை, முக்காட்டில் தன்னை மறைத்

துக்கொண்டே அம்மாவாக அன்பு செய்து வந்தாள். முக்காட்டுக்குள் பதுக்க முடியாத அன்னையன்பை இந்தக் கோஷா ராணி பரிபூரணமாகப் பொழிந்தது உலக அதிசயந்தான்! சாரதை தக்ஷிணேசுவரத்துக்கு வந்து பல்லாண்டுகள் ஆன பிற்பாடு ஒரு நாள் ஆலயக் கணக்காயர் சொன்னாராம்: ''பட்டாசாரியருடைய பத்தினியும் இங்கேதான் இருக்காங்கன்னு சொல்லிக்கறா. ஆனால் அவங்களைப் பற்றிக் கேள்விதான் படறேனே ஒழிய, கண்ணாலே கண்டதில்லே.''

கோஷா முறையின் கடுமையை எப்போது தளர்த்த வேண்டும் என்பதும் ராமகிருஷ்ணருக்குத் தெரியும். கோஷா முறைக்கு நளினமாக, லளிதமாக 'விடுமுறை'யும் அவ்வப்போது தருவார். மேனி வண்ணத்தில் பக்தர் ஒருவரையும், தம்மையும் எடை போட்டுத் தீர்ப்புச் சொல்லுமாறு அவர் சாரதையைப் பணித்ததை இதற்கு ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.

பெண்கள் அடங்கி வாழ்வதற்கும், ஆண்கள் அவர்களை அடக்கி வைப்பதற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. ராமகிருஷ்ணர் ஒருபோதும் அவளை அடக்கி வைத்துக் கொடுமை செய்ததில்லை. அவளுக்கு அவர் செலுத்திய மரியாதை எந்தக் கணவரும் காட்டாத ஓர் உயர் பண்பாகும். ராஜராஜேசுவரியாகவே அன்றோ அவளைப் பூஜித்தார்? அதுவுமின்றி, தமக்கு அபசாரம் செய்தாலும் பாதகமில்லை, அவளுக்குக் கடுகளவும் அபசாரம் செய்துவிடக் கூடாது என்று சீடர்களைக் கண்டித்து வைத்தார். பொதுவாகவே அவளை அழைக்கும்போது அவர், 'துயி' என்று கூப்பிட்ட நாளே கிடையாது. தமிழில் 'நீ', 'நீங்கள்' என்று இரு முன்னிலைப் பதங்களே உள்ளன. வங்காள மொழியில் இவை 'துமி', 'ஆபனி' என்ற பதங்களால் குறிப்பிடப் பெறும். 'துமி'க்கும் கீழே 'துயி' என்று ஒன்று உண்டு. நாம் 'அடா', 'அடி' என்று கூறுகிறோமே, அது போன்றது 'துயி'. சாதாரணமாக மனைவியைத் 'துயி' எனச் சொல்லியே அழைப்பர். ராமகிருஷ்ணரோ சாரதையைத் 'துமி' என்றே சொல்லுவார். பைத்திய புருஷனை மணந்து சாரதை அவதிப்படுகிறாள் என்று ஊரார் எண்ணிய காலத்தில் அவளோ, ''அகத்துக்காரர் வாய்க்கறதுலே என்னைப்போல் பாக்கியசாலி யாருமே கிடையாது. என் மேலே ஒரு பூவைக்கூட அவர் விட்டெறிந்ததில்லை. ஒரு நாளிலே என்னைத் 'துயி'ன்னு கூப்பிட்டதில்லை'' என்று பெருமைப்பட்டுக்கொண்டாள்.

ஒரு நாள் அவள் அவருக்கு அப்பமும், சேமியாக் கஞ்சியும் வைத்துவிட்டு அறையிலிருந்து வெளியேறியபோது கதவைச் சாத்திக் கொண்டு வர மறந்துபோனாள். அவள் ஒரு சிறு தவறுகூடச் செய்ய மாட்டாள் அல்லவா? எனவே, அவர் லக்ஷ்மிதான் வந்து போகிறாள் என எண்ணி, ''கதவைச் சாத்திண்டு போடி'' என்று கூறினார்.

"சரின்னு" என்று வெளியிலிருந்து சாரதையின் குரல் கேட்டது.

அவ்வளவுதான்! ஏதோ தகாத பிழை செய்துவிட்டாற் போல் ராமகிருஷ்ணர் பதறிவிட்டார். வெளியே வந்து, "ஆஹா. நீ வந்திருக்கேன்னு தெரிஞ்சுக்காமப் போனேனே! லக்ஷ்மின்னு நினைச்சு 'டி' போட்டுட்டேன். நீ இதை மனசுலே வைச்சுக்காதே, அம்மா!" என்று கெஞ்சினார்!

"என்னன்னு! இதைப் போய்ப் பெரிசா நினைச்சுக் கஷ்டப் படறேள்?" என்று சொல்லிவிட்டு நஹவத்துக்கு விரைந்தாள் சாரதை.

ஆனால் அவர் விஷயத்தை அதோடு விட்டுவிடவில்லை. மறுநாள் அவள் அவரது இருப்பிடம் சென்றபோதும் இதையேதான் பேசினார். "பிரியே! நேற்று ராத்ரி முழுக்க எனக்குத் தூக்கமே வரவில்லை. உன்கிட்டப் போய் இப்படி முரட்டுத்தனமாப் பேசிட்டேனேன்னு நினைச்சு வருத்தப்பட்டுண்டே இருந்தேன்" என்றார்!

'துயி' போட்டுப் பேசாதது மட்டுமல்ல, யாரிடமும் அவளைப் பற்றிப் பேசும்போது அவளது பெயரை அவர் சொல்லவே மாட்டார். சாதாரணமாக நம் பக்கத்துப் பெண்டிர் (சமீப காலம் வரையில்) கணவர் பெயரைச் சொல்லாமல், தங்கள் குழந்தை பெயரைச் சொல்லி, 'இதன் அப்பா' என்றே சொல்வது வழக்கம். ராமகிருஷ்ணரும் இதே முறைப்படி சாரதையைப்பற்றிச் சொல்லும் போது, 'ஹ்ருதே மாமி' அல்லது 'ராமலால் சித்தி என்றெல்லாம் தான் சொல்வார்! சாரதையை வெட்கத்தோடு வாழச் சொன்ன அவருக்கும் இப்படிப்பட்ட ஒரு கௌரவமான வெட்கம் இருந்தது!

சாரதை அவரது கால்களைப் பிடித்துவிட்டுச் செல்வது வழக்கம். அப்படிப் பதி சுசுரூஷை செய்தாலே அவளுக்குத் திருப்தி என்பதால் அவரும் அதை அநுமதித்தார். ஆனால் அவள் தமது காலைப் பிடித்து விட்டு எழுந்ததும், அவர் தவறாமல் அவளைக் கும்பிடுவார்!

அநேக காரியங்களில் அவளது யோசனையைக் கேட்டு அதன் படியே நடப்பார் அவர். வேதம் விதிக்கும் உத்தம தாம்பத்யம் நடத்தினார். "பிரியே, நாம் இருவரும் தோழர்களானோம்! உன் தோழமையை நான் என்றும் இழக்கமாட்டேன்! நீயும் என் தோழமையை இழக்காதிருப்பாய்! நமது சங்கற்பம் ஒன்றாகவே இருக்கட்டும். ஒருவருக்கொருவர் அன்பையும், ஒளியையும் தந்துகொண்டு, பரஸ்பர நல்லெண்ணத்தோடு, ஒரே உணவை உண்டு, ஒரே போல் சக்தி பெறுவோம். நமது மனங்கள் ஒன்றுபடட்டும். நாம் விரதங்களை ஒன்று சேர்ந்து அநுஷ்டிப்போம். நமது விருப்பங்கள் ஒன்றாகட்டும். நீ இசையாக இருக்கிறாய், நான் சந்தமாக இருக்கிறேன். நீ வாகம்

நான் பூமி...நீ சொல், நான் மனம்'' என்றெல்லாம் மணமகளைப் பார்த்து மணமகன் வேத மந்திரம் மொழிகிறான். அந்த மந்திரங் களின் உயிருள்ள உருவகமாக இருந்தது ராமகிருஷ்ணர் சாரதை யுடன் நடத்திய இல்லறம்.

சில சமயங்களில் அவளைப் பரீட்சை பார்ப்பதற்கே யோசனை கேட்பதுபோல் பாவனை செய்வார் அவர். லக்ஷ்மிநாராயண் என்ற மார்வாரி பக்தருக்கு லக்ஷ்மி கடாக்ஷம் அமோகமாக இருந்தது. அவர் ராமகிருஷ்ணருக்குப் பதினாயிரம் ரூபாய் வழங்க முன் வந்தார். தமக்குப் பண மூட்டை வருகிறது என்று கேட்ட மாத்திரத்தில், ராம கிருஷ்ணரை ரம்பம் கொண்டு அறுப்பதுபோல் இருந்ததாம். பதி னாயிரம் ரூபாயைப் பறி கொடுத்தால்கூட யாரும் அப்படிப் பரிதவிக்க மாட்டார்கள். ''அம்மா காளி, இத்தனை காலம் கழித்து இன்னுமா எனக்குச் சோதனை வைக்கிறாய்?'' என்று அலறினார். அலறியவுடனே குறும்புச் சிரிப்பும் சிரித்துக்கொண்டார். காளியின் இன்னோர் உரு வான சாரதையைத் தாம் பதிலுக்குச் சோதனை செய்ய எண்ணினார். ''அம்மா! லக்ஷ்மிநாராயண் பத்தாயிரம் ரூபாய் தருவேன்னு பிடி வாதம் பண்ணறார். எனக்கு வேண்டாம்னு மறுத்துட்டேன். அப்படியானால் உனக்காவது அதைக் காணிக்கையாகத் தந்தே தீருவேன் என்கிறான். வாஸ்தவமாகவே நீ வாங்கிக்கறதுலே அப்படி ஒண்ணும் தப்பு இல்லே'' என்றார்.

அவர் வாய் மூடு முன்பே அம்மா படபடத்துக் கூறினாள்: ''அதெப்படித் தப்பு இல்லையாம்? நான் பணம் வாங்கிண்டாலும் உங்களுக்காக, உங்க சிஷ்யாளுக்காகத்தானே செலவழிக்கப் போறேன்? எனக்குமட்டும் தனியாப் பணம் எதுக்கு? நான் வாங் கிண்டு உங்களுக்காகச் செலவழிச்சாலும் அந்தப் பணத்தை நீங்களே அங்கீகாரம் பண்ணிண்டதாகத்தான் அர்த்தம். பிரபு! இன்னிக்கு இத்தனை மநுஷா உங்க பாதத்திலே வந்து விழறதுக்குக் காரணம் உங்களோட சந்நியாசந்தான். அதுக்குப் பங்கம் ஏற்பட வேண் டாம்."

ராமகிருஷ்ணர் பேருவகை அடைந்தார். பத்தாயிரம் ரூபாய் கால்காசு போலத் திரஸ்கரிக்கப்பட்டது, அந்த ஏழைத் தம்பதியால்.

ராமகிருஷ்ணர் எத்தனையோ விஷயங்களில் சாரதையை யோசனை கேட்பார். இதனால் அவள் அகந்தை கொள்ள வில்லை. தன் 'அகத்தை அகத்துக்காரரிடம் கரைத்து அவரது அபிப் பிராயத்தையே தனது கருத்தாகச் சொல்வாள். அவருக்கு எது

பிரியமானது என்று உணர்ந்து அதையே தனக்குப் பிரியமாக்கிக் கொண்டவள் அன்றோ?

ஓர் உதாரணம்: கல்கத்தாவிலிருந்து சில மைல் தொலைவில் உள்ள பாணிஹாடி என்ற ஊரில் ஜேஷ்ட மாதத்தில் தண்ட மஹோத்ஸவம் என்ற பெரிய விழா நடக்கும். ஒரு முறை ராம கிருஷ்ணரும் அவரது அடியார் கூட்டமும் மூன்று படகுகள் அமர்த்திக்கொண்டு இந்த உத்ஸவத்துக்குப் புறப்பட்டனர். அவர்களிலே பல பெண்மணிகளும் இருந்தனர். தானும் உடன் வரலாமா என்று கணவரிடம் கேட்டு அனுப்பினுள் சாரதை.

''அவளுக்கு ஆசை இருந்தால் வரட்டுமே!'' என்று பதில் சொல்லி யனுப்பினுர் ராமகிருஷ்ணர். அந்த பதிலைக் கேட்டதும் ஒரு விநாடிகூட யோசிக்கவில்லை சாரதை. ''நான் வரவில்லை. ஏராளமான புருஷா கூட வரா. எனக்குச் சிரமமாயிருக்கும்'' என்று கூறி விட்டாள்.

மற்றவர்கள் அனைவரும் மகோத்ஸவம் பார்த்துவிட்டு இரவுதான் திரும்பினர். அன்று நடந்த விழாவின் வைபவத்தையும் அப்போது ராமகிருஷ்ணர் அடைந்த திவ்விய போதை நிலையையும் அம்மாவுக்குத் தெரிவிப்பதற்காகப் பெண்கள் நஹவத்துக்குக் கிளம்பியபோது, அவர்களுக்குள் ஒரு தாபம் ஏற்பட்டது. 'ஆஹா, இத்தனை இன்பத்தையும் இழந்துவிட்டு அம்மாமட்டும் தனியாக நஹவத்தில் அடைபட்டுக் கிடந்தாளல்லவா?' என்றெண்ணி அப்பெண்கள் குறைபட்டுக்கொண்டனர். இதைப் புரிந்துகொண்ட ராமகிருஷ்ணர், ''அம்மா எத்தனை புத்திசாலினி பாருங்கள்! இன்னிக்குத் திருவிழாக் கூட்டத்திலே அத்தனை கண்ணும் என் மேலேயே இருந்ததாமே! அம்மாமட்டும் என் பக்கத்திலே இருந்திருந்தா சாதாரண ஜனங்களுக்கு எத்தனை கேலிக் கூத்தா இருந்திருக்கும்! 'பரமஹம்ஸர் பரமஹம்ஸர்னு சொல்றுங்களே! அந்த ஹம்ஸத்தோடே ஒரு ஹம்ஸியும் இருக்குதுடோய்'னு எகத்தாளம் பண்ணியிருப்பா. அம்மா வராதது எவ்வளவு நல்லதாப் போச்சு! ஆமாம், அவள் மகா புத்திசாலினி'' என்றுர்.

அறியா மக்கள், 'ஹம்ஸ – ஹம்ஸி' என்று நகைத்திருப்பார்கள். எல்லாம் அறிந்த ஆதிசங்கரரோ ஆதிதம்பதியை 'பஜே ஹம்ஸ த்வந்தம்' என்றே வணங்கினுர்!

பெண் பக்தர்கள் நஹவத்துக்குச் சென்று எல்லா விஷயங்களையும் கூறிவிட்டு, ''நீங்கள் ஏனம்மா வராமல் இருந்துட்டேள்?'' என்று கேட்டனர்.

சாரதை புன்னகையுடன் மொழிவாள் : "அவர் சொல்லியனுப்பிச்ச வாசகத்திலிருந்தே அவர் மனசு எனக்குப் புரிஞ்சுடுத்து. 'அம்மா வரட்டுமே'ன்னு அவர் தாமாகப் பிரியபட்டுச் சொல்லவில்லே. 'அவளுக்கு ஆசை இருந்தால் வரட்டுமே'ன்னர். அதனுலேதான் நான் வரவில்லே."

பரஸ்பரம் எத்தனை மதிப்புத் தந்திருக்கிருர்கள்! எப்படி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டும் இருக்கிருர்கள்! தாம் ஆசைப்படாவிட்டாலும் அவளுக்கு ஒன்றில் ஆசையிருந்தால் அதை அவள் நிறைவேற்றிக்கொள்ள அவர் அநுமதிப்பார். ஆனுல் அவர் ஆசைப்படாத ஒன்றுக்கு இவள் ஆசைப்பட மாட்டாள்!

கோஷா முறையை மதித்து, அதே சமயத்தில் அவளுடைய ஆசைகள் சிலவற்றையும் மதித்தார் ராமகிருஷ்ணர். உதாரணமாக, அவளுக்கு இசையில் உள்ள ஈடுபாட்டை அவர் அறிவார். ராமப்பிரசாத், கமலாகாந்தர் போன்றவர்களின் காளி கீதங்களைத் தாம் பாடும்போது சாரதை எப்படிச் சொக்கிப் போவாள் என்பதை அவர் அறிவார். அவர் தமது அறையில் கானம் செய்யத் தொடங்கும் பொழுதெல்லாம் அவருக்குக் காளியின் நினைவோடு, சாரதையின் நினைவும் சேர்ந்துவிடும். அவள் இந்தப் பாட்டைக் கேட்க வேண்டாமோ என்று எண்ணுவார். ஆனுல் ஆடவர் எதிரில் அவளை அழைத்து வைத்துக்கொள்ளவும் மாட்டார். "அப்பா ராமலால்! என்னுடைய திவ்விய போதத்தையும், கீதத்தையும் சித்தி அநுபவிக்காமல் இருக்கலாமா? கீர்த்தனத்தைக் கேட்டால் அவளும் தனக்குத் தானே பாடிண்டு அதிலே அமுந்திப் போவாளே! இந்த வடவண்டைக் கதவைத் திறந்து வை. நான் உரக்கப் பாடறேன். நஹவத்திலேயும் என் குரல் கேட்கும்" என்பார்.

அப்படியே அவரது தேமதுரக் குரல் நஹவத்தில் கேட்டது! வடவண்டை வாசலால் வந்த ஒலியின் பரிமாணம் தேவிக்குப் போதவில்லே. தன் அறையில் இருந்த மூங்கில் தடுப்பிலும் சில குச்சிகளை அகற்றிவிட்டு அதில் காதைப் பொருத்திக்கொண்டு அவரது கானத்தில் பொதிந்தாள். பிற்பாடு ஒரு நாள் ராமகிருஷ்ணர், "ராமு! சித்தியோட மூங்கில் தட்டி எலும்பை முறிச்சுண்டிருக்கு" என்று ஹாஸ்யம் செய்தார். அவரது ஹாஸ்யரஸனே, அவளது பண்பு இரண்டும் புரியாத ராமலால், "நீங்க கதவைத் திறந்து வைச்சதிலே தான் சித்திக்கு ஆசை வளர்ந்து, இப்படித் தட்டியைப் பிய்ச்சிருக்கா! இனிமேலே கதவைச் சாத்திண்டே பாடுங்கோ" என்ருன். "ஒரு நாளும் அப்படிச் செய்யறதுக்கில்லே" என்று முடிவாகக் கூறினர் ராமகிருஷ்ணர்.

ராமகிருஷ்ணரின் கானமுதத்தில் கரைந்து போனவள் சாரதை. பற்பல ஆண்டுகளுக்குப் பின் ஒரு முறை அவள் வேறு யாரோ பாடும்போது அதைக் கேட்டுவிட்டு, ''டாகுரின் குரல் எப்பவும் என் காதிலே ரீங்காரம் செய்யறது. அந்தக் குரலோட நினைவிலே மற்ற எந்தக் குரலும் கசப்பாத்தான் இருக்கு. அடடா, அவரைப் போல் ஒரு பாடகர் உண்டா? பாடறச்சே அவர் பாட்டோடு அப்படியே ஒன்றிப் போயிடுவாரே! அவர் குரலை நினைச்சுட்டு இன்னொரு குரலைக் கேட்கவும் முடியலை...ஓரளவுக்கு நரேனும் கிரீஷும் மாதுரிய மாகப் பாடுவா'' என்றாள்.

(நரேன்தான் விவேகாநந்தர். கிரீஷ் என்பவர் பிரபல நாடகத் துறை நிபுணரான கிரிஷ்சந்திர கோஷ்.)

ஒரு நள்ளிரவில் சாரதையும் லக்ஷ்மியும் ஆழ்ந்த பொருள் கொண்ட ஒரு பாடலை அற்புதமாக மெல்ல இசைத்துக்கொண்டிருந் தனர். மாருதம் அந்த மாதுரியத்தை ஏந்திச் சென்று ராம கிருஷ்ணரின் செவியில் நிரப்பியது. சொக்கிப் போனார். மறுநாள் சாரதையிடம் வந்து ஏகப்பட்ட சபாஷ் போட்டார்! கோஷா நள்ளிரவில் பாடலாமா என்று சண்டை போடவில்லை.

கோஷா முறையில் நியாயமான விலக்குகளை அவர் அங்கீகரித் தார். ஒரு சமயம் அவர் பவதாரிணியின்மீது இருந்த அழகிய மலர் மாலையைக் கண்டு பேரானந்தம் கொண்டார். மல்லிகையையும், சிவப்பு ரங்க மலரையும் மாற்றி மாற்றித் தொடுத்திருந்த அந்த ஹாரத்தைக் கட்டியது சாரதை என்று அறிந்து புளகித்தார். ''அம்பாள் இதைப் போட்டுண்டிருக்கிற அழகை அவள் பார்க்க வேண்டாமோ? இப்பவே அவளை அழைச்சுண்டு வா'' என்று ஒரு சீடரை அனுப்பினார். பிருந்தே என்கிற வேலைக்காரியின் 'துணை' யோடு அங்கு வந்தாள் சாரதை. அதே சமயம் பலராம் பாபு, சுரேந்திர பாபு முதலியோரும் ஆலயத்துக்கு வருவதைப் பார்த்து விட்டு, பிருந்தேயின் முன்றானையில் ஒளிந்துகொண்டாள் சாரதை: ஆலயத்தின் பின் வாசலுக்கு விரைந்தாள்.

ராமகிருஷ்ணர், ''அம்மா! அந்தப் பக்கம் போகாதே. அங்கே முழங்கால் முறிச்சான் மாதிரி உயரமான படிகள் இருக்கு. முன்னே ஒரு தடவை ஒரு செம்படவப் பெண் அதிலேயிருந்து விழுந்து மாண்டு போச்சு. நீ வாசல் வழியாகவே வா'' என்றார்.

விஷயத்தைப் புரிந்துகொண்ட பலராம் முதலியோர் தள்ளிச் சென்று நின்றனர். அதன் பின் சாரதாமணி பவதாரிணியின்

சந்நிதிக்கு வந்து தரிசித்துப் பூரித்தாள். அந்தக் காட்சியைப் பார்த்துப் பூரித்தார் ராமகிருஷ்ணர்.

உலக நடப்புக்களில் மட்டுமின்றி ஆத்மிக அநுபவங்களிலுங் கூட அவள் 'கோஷா'வாக இருப்பதையே ராமகிருஷ்ணர் விரும்பினார். 'ஆத்மிகத்தில் கோஷா' என்றால் என்னவென்று வியப்பாக இருக்கிறதா? ஆத்ம சாதனையில் பரவச பாவங்கள் ஏற்படுவது உண்டு அல்லவா? சாரதைக்கு இதிலும் ஆர்ப்பாட்ட பரவசம் ஏற்படாமல் உள்ளடங்கிய உன்னதங்களே சித்திக்க வேண்டும் என்று ராமகிருஷ்ணர் விரும்பினார். அவர் அவளுக்கு அளித்த ஆன்மிகப் பயிற்சிகள் பலப்பல. ஆனால் இவற்றை அவ்விருவரும் வெளி உலகுக்கு அதிகம் தெரிவிக்காமல் முக்காட்டுக்குள்ளே கோஷாவாகவே வைத்திருந்தனர். உதாரணமாக 1883-ஆம் ஆண்டு சாங்கோபாங்கமாக ஸாவித்திரி விரதம் என்ற ஒன்றை தேவி சாரதை அநுஷ்டித்தாள். ஆனால் இதன் விவரங்கள் தெரியவேயில்லை.

சாரதை வேலையில் ஈடுபட்டிருக்கும்போதும் அவளது உள் மனம் சக்தி மந்திரத்தை ஜபித்தபடி இருக்கும். இதனால்தான் அவள் தினமும் லக்ஷம் ஆவிருத்தி ஜபம் செய்ய முடிந்தது. வேலையே இல்லாமல் ஜபம் என்று அவள் அமரும்போது அவளது மனம் பரிபூரணமாக மந்திரத்திலேயே கரைந்துவிடும். உலகப் பிரக்ஞையோடு அவளே அறியாத முறையில் மனத்தின் ஒரு மெல்லிய இழை தான் ஒட்டிக்கொண்டிருக்கும். இச்சமயங்களில் வெளி உலகில் ஏதேனும் அரவம் ஏற்பட்டுவிட்டால் அந்த மெல்லிய இழை துடி துடித்துப் போய்விடும். ''ஒரு நாள் நான் ஜபம் பண்ணும்போது பிருந்தே ஒரு வெண்கலத் தட்டைக் கீழே போட்டுட்டா. அந்தச் சத்தம் என் இருதயத்தையே கிழிச்சுடறமாதிரி இருந்தது'' என்று அம்மா சொல்லியிருக்கிறாள். இத்துணை ஜாக்கிரதையுடன் ஜபம் புரிந்தபோதிலும் அவள் பரவசக் கூத்தாடியதில்லை! ஒரு முறை சாரதைக்கே குறை உண்டாயிற்று. குறிப்பாக, கௌரியம்மைக்கு ஏற்படும் தெய்விகமான உணர்ச்சி எழுச்சிகளைக் கண்டபோது அவளுக்குத் தன்னைப்பற்றிச் சிறுமை எண்ணங்கூட உண்டாகி விட்டது. கணவரிடம் நேரில் பேச நாணி, லக்ஷ்மியைத் தூது அனுப்பினாள்.

லக்ஷ்மி ராமகிருஷ்ணரிடம் சென்று, ''சித்தப்பா! சித்திக்கும் கொஞ்சமாவது பரவசக் கிளர்ச்சி உண்டாக அநுக்கிரகம் பண்ணுங்கோ'' என்றாள்.

''ஹாம், முடியவே முடியாது. கூடவே கூடாது. பெண்டுகள் எல்லாத்திலேயும் அடங்கித்தான் இருக்கணும். ஆட்டமில்லாமல் அழுத்தமா இருக்கணும். பெண்களுடைய பலமே அடக்கம்தான். இல்லாட்டா ஊர் சிரிச்சுப்போயிடும். கௌரியைப்பற்றி நமக்கென்ன வந்தது? அவ காளிகாட்டைச் சேர்ந்தவள். காளிகாட்டிலே சாக்தாள் ஏராளமாக வந்து கன்னிகைகளுக்குக் காளி பூஜை பரவசமாகப் பண்ணுவா. அதையே பார்த்துண்டிருக்கிற ஸ்திரீகளுக்கும் பரவசக் கூத்து தன்னாலே வந்துடறது. பொதுவிலே பெண்களுடைய ஸ்வ பாவமே நளினமானது. அவா அபலைகள். அந்த நளினத்தையும், அபலைத் தன்மையையும் காப்பாத்திண்டு மிருதுவாவே இருக்கறது தான் அவாளுக்குச் சுபிட்சம்; அதுதான் அவாளுக்கு வெற்றியுங்கூட'' என்றார்.

பிறகு சாரதையிடம் வந்து அவர் சொன்னார்: ''நீ தூது அனுப்பின லக்ஷ்மிக்கும் புருஷ குணம் எத்தனையோ இருக்கு. அவ யாத்ரா (சமய நாடகம்) நடிகர்கள் மாதிரி அப்படி அப்படியே வசனங்களைப் பேசியும், பாட்டுப் பாடியும் காட்டறா. துருதுருப்பும் பரபரப்பும் அவகிட்டே அதிகம். உனக்கு இதெல்லாம் உதவாது. பெண்களுக்கு அடக்கந்தான் பூஷணம்.''

இன்னொரு நாள் யோகின்மா ராமகிருஷ்ணரிடம் சொன்னாள்: ''சாரதாம்மாவின் மகிமை மற்றவாளுக்குத் தெரியாமலே இருக்கு. அம்மாவுக்கும் உலகம் கொண்டாடற மாதிரி பாவ சமாதி, தெய்விக பரவசம் இதெல்லாம் வரும்படியாக நீங்கதான் கிருபை செய்யணும்!''

ராமகிருஷ்ணர் கட்டிலில் கட்டை போல உட்கார்ந்திருந்தார்.

ஏனோ அவரைப் பார்க்கவே அச்சமாயிருந்தது யோகினம்மைக்கு. தவறாகப் பேசிவிட்டோமோ என்ற கலக்கத்துடன் அவரை நமஸ்கரித்துவிட்டு நஹபத்துக்கு விரைந்தாள்.

நஹபத்திலே கதவு அரை குறையாகத் திறந்திருந்தது. உள்ளே பூஜையில் அமர்ந்திருந்தாள் சாரதை.

யோகின் கதவிடுக்கு வழியாகப் பார்த்தாள். என்ன ஆச்சரியம்! சாரதா தேவி கலகலவென்று அமாநுஷ்யமாக நகைத்துக்கொண்டிருக் கிறாள். பாவ சமாதியில் ராமகிருஷ்ணர் நகைப்பாரே அதே நகைப்பு!

இதோ கலகல நகை மாறுகிறது. பலபலவெனக் கண்ணீர் கொட்டுகிறது, சாரதையின் கண்களிலிருந்து! விம்மி விம்மி அழுகிறாள். ராமகிருஷ்ணர் பாவ நிலையில் விம்முவாரே அதே விம்மல்!

சாரதை மாறி மாறிச் சிரித்தாள்; அழுதாள். சிரித்துக் கொண்டே அழுதாள்; அழுதுகொண்டே சிரித்தாள்.

பிறகு அந்த பாவங்கள் அனைத்தும் மறைந்தன. அடுத்த சில பாகத் தன்னில் தானே ஊன்றி, ஊறி, சமாதியில் ஆழ்ந்துவிட்டாள் தேவி.

யோகினுக்கு இனம் தெரியா அச்சம் உண்டாயிற்று. ஓசைப் படாமல் கதவைச் சாத்திவிட்டு அகன்றாள்.

சிறிது போதுக்குப் பின் அவள் திரும்பியபோது தேவி சமாதி நிலை கலைந்து பூஜை முடித்து, சாந்தமாக அமர்ந்திருந்தாள். ''டாகுர் கிட்டே போயிட்டு வர்றேளா?'' என்று யோகினம்மையை அர்த்த புஷ்புடன் வினவினாள்.

யோகின்மா பொய்க் கோபத்துடன் சிணுங்கினாள். ''உங்க ளுக்குப் பரவச அநுபவங்களே வர்றதில்லேன்னு சொல்லுவேளே, அதை நம்பிண்டு பைத்தியக்காரியாட்டமா டாகுர்கிட்டே போய்ச் சிபாரிசு பண்ணினேன்'' என்று அவள் தொடங்கியபோதே சாரதை சிரித்து மழுப்பிவிட்டு வேறு ஏதோ விஷயத்துக்குத் தாவிவிட்டாள்.

எதிலுமே அடங்கி வாழ வந்த அவதாரம் இது! சிற்சில சமயங் களில் அவளையும் மீறி, பரவச நிலை எய்திவிடுவாள்—பாத்திரத்தின் மேல் மூடியையும் தள்ளிக்கொண்டு பால் பொங்குவது போல்!

யோகின்மா மகா அதிருஷ்டசாலி. அம்மா மேகமூட்டத்துக்குப் பின் மறைந்த முழுமதியாக இருந்த அந்த ஆதி நாளிலேயே இவள் அவளது தெய்விகத்தைத் தெற்றென உணர்ந்தவள். உணர்த்தியவள் அம்மாவேதான். ஒரு நாள் அம்மா, ''என்ன யோகின், காய்ஞ்சு போன வில்வ பத்திரத்தாலே அர்ச்சனை பண்ணுவேளோ?'' என்று வினவினாள்.

யோகினம்மையின் வீட்டருகே வில்வம் கிடைப்பதில்லை. எனவே, அவள் தக்ஷிணேசுவரத்துக்கு வரும்போதெல்லாம் நிறைய வில்வ இலைகள் பறித்துப் போவாள். வில்வத்துக்கும் துளசிக்கும் பழையது என்ற தோஷம் கிடையாது. அவற்றை எத்தனை நாட்களும் வைத்திருந்து அர்ச்சிக்கலாம் என்பது சாஸ்திரம். இதன்படியே யோகின்மா காய்ந்த வில்வத்தால் தன் வீட்டில் காளியை அர்ச்சித்து வந்தாள்.

''ஆமாம், அம்மா! ஆனல் அது உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?'' என்று ஆச்சரியத்துடன் கண்களை அகல விரித்தாள் யோகினம்மை.

சாரதையின் முகத்தில் ஆனந்தம் சுழியிட்டது. ''இன்னிக்குக் கார்த்தாலே நான் தியானத்திலே உட்கார்ந்திருக்கச்சே ஒரு காட்சி வந்தது. நீங்க காய்ஞ்சுபோன வில்வத்தாலே எனக்......'' என்றவள் சட்டென்று பேச்சை மாற்றி, ''காய்ஞ்ச வில்வத்தாலே அர்ச்சனை பண்ணுகிறதைப் பார்த்தேன்'' என்று முடித்தாள்.

அம்மாவையே எல்லையற்ற அதிசய உணர்வுடன் உற்று நோக்கினுள் யோகின்மா.

அம்மாவின் முகம் வெட்கத்தில் குங்குமமாகக் குழம்பியது. யோகின்மீது சாய்ந்து அணைத்துக்கொண்டாள். யோகினுக்கோ தன் மகள் கனுவே தன்னைக் கட்டிக்கொண்டிருப்பதுபோல் தோன்றியது. அம்மாவுக்கே அம்மாவாகிவிட்ட அந்த ஆழ்ந்த உணர்வில், தன்னையும் அறியாமல் சாரதையை இறுகக் கட்டிக் கொண்டு முத்தமிட்டுவிட்டாள்!

உடனே, நாம் என்ன இப்படிச் செய்தோமே என்று திடுக்கிட்டு அம்மாவின் பாதத்தில் விழுந்து, பாத துளியைத் தலையில் தரித்துக் கொண்டாள். பிறகு நடையைக் கட்டினுள். அம்மாவுக்கும், இனம் தெரியா ஓர் உணர்வு உண்டாயிற்று. வழக்கத்துக்கு விரோதமாக அறையைவிட்டு வெளியே வந்து நின்றுகொண்டிருந்தாள்!

யோகினம்மை சாரதையுடன் ஓரிரவு நஹவத்தில் சயனித்திருந் தாள். யாரோ எங்கோ குழலூதினர்கள். நள்ளிரவில் அந்த இன்னெலி தெய்விகமாகப் பரவியது. படுத்திருந்த சாரதை எழுந் திருந்து அமர்ந்தாள். அமானுஷ்யமாகச் சிரிக்கலானுள். யோகினும் எழுந்திருந்து மூலையில் போய்ப் பெட்டிப் பாம்பாகச் சுருட்டிக் கொண்டாள். இல்லற வாழ்வில் இருந்த தனது அண்மையும் அப் போது அம்மாவின் பரிசுத்தத்துக்கு ஹிம்சையாக இருக்கும் என்று அவளுக்குத் தெரிந்ததாம்! அதனுல்தான் தள்ளிச் சென்றுள்.

சாரதைக்கு பாகவதம், ராமாயணம், தேவி மாகாத்மியம் முதலிய கதைகளை அழகுபடப் போதிப்பார் ராமகிருஷ்ணர். பாகவதம் சொல்லி வரும்போது ராமகிருஷ்ணர் லக்ஷ்மியிடம், ''மாடுகள் உண்டபின் அசை போடுவது போல், பகலில் நான் சொல்கிற கதைகளை நீயும் சித்தியும் ராத்திரியிலே மறுபடியும் நினைப்பூட்டிண்டு பேசிக்கணும். அப்போதான் அது எப்பவும் மனசை விட்டு விலகாமல் நிற்கும்'' என்றுர். சித்தியும் மகளும் அவ்விதமே செய்து வந்தனர்.

மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரம் வரையில் உள்ள சக்கரங்களை ராமகிருஷ்ணர் தம் கைப்பட ஒரு காகிதத்தில் வரைந்து சாரதையிடம் கொடுத்திருந்ததாகத் தெரிகிறது. இதிலிருந்து அவர் யோக சாஸ்திரத்திலும் அவளுக்குப் பயிற்சி அளித்தார் என்று புலனாகிறது.

வெளி மனிதர்கள் அவளைச் சாமானிய ஸ்திரீயாக எண்ணிய காலத்திலும் அவளுடைய திவ்யானுபவங்களை அவர் அறிந்திருந்தார். அதே போல், ராமகிருஷ்ணரின் பக்தர்கள்கூட 'டாகுருக்குப் புத்திக் கலக்கந்தானோ?' என்று கலங்கிய சமயங்களிலும்—ஏன், அவரே தம்மைப்பற்றி இவ்விதம் சம்சயித்த சமயங்களிலும்—சாரதைக்கு அவரது உத்தமமான புனித நிலை புரியவே செய்தது. ஒரு நாள் அவர், ''பீடா சுருட்டி வெச்சுட்டு, என் படுக்கையை நன்னாத் தட்டிப் போட்டுட்டு, இந்த அறையையும் மெழுகிச் சுத்தப்படுத்தி வை. நான் காளியை நமஸ்காரம் பண்ணிட்டு வர்றேன்'' என்று சொல்லி, பவதாரிணி சந்நிதிக்குச் சென்றார். அம்மா அந்தக் காரியங்களைச் செவ்வனே செய்து முடிக்கிற சமயத்தில் ராமகிருஷ்ணர் திரும்பினார். அவரது நடை தடுமாறியது. கண்கள் சிவந்திருந்தன. எதையோ குழறியது அவரது திருவாய். அவர் வழக்கமில்லாத வழக்கமாக அம்மாவை இழுத்து நிறுத்தினார். அவருக்கே தம் நிலை புரியவில்லை. ''அம்மா! நான் ஏன் இப்படியெல்லாம் பண்ணறேன்? குடிச்சுத் தொலைச்சுட்டேனா?''

சிவந்த கண்கள், உடம்பிலே ஆட்டம், உளறுகிற உதடுகள்—இத்தியாதி லட்சணத்தோடு அவரே 'குடித்தா விட்டேன்?' என்று கேட்டபோது எந்தப் பெண்ணுக்கும் ஐயமே உண்டாகும்!

ஆனால் அவரால் பலவந்தமாக இழுத்து நிறுத்தப்பட்டிருந்ததால் தள்ளாடிக்கொண்டிருந்த தேவியோ மனத்தில் சிறிதும் தள்ளாட்டமில்லாமல், தெளிந்து சொன்னாள்: ''என்னன்னா இப்படிக் கேக்கறேள்! நீங்களாவது குடிக்கிறதாவது?''

கணவருக்கு உரிய உன்னத ஹாஸ்ய உணர்வைத் தானும் பெற்றுத் தொடர்ந்தாள்: ''இல்லை; குடிச்சுத்தான் இருக்கேள். காளியம்மாவோட பிரேமை அமிருதத்தை நன்னாகக் குடிச்சுட்டு வந்திருக்கேள்.''

ராமகிருஷ்ணருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. ''ஆகா, எத்தனை சரியாச் சொல்லிட்டே!'' என்று பாராட்டினார்.

சாரதா தேவியின் அன்றாட நடப்புக்களைப் பார்த்து வரும்போது அவள் அவருக்கு அமுதம் படைப்பதாகச் சொல்லிவிட்டு, வேறே ஏதேதோ அமுத சம்பவங்களுக்குப் பாய்ந்துவிட்டோம். பரவாயில்லை, தேவி அவருடன் ஏகாந்தமாக இருந்ததே இந்தப் போஜன வேளையில் தான். அதை இத்தனை நீளம் நீட்டி அந்தத் திவ்விய தம்பதியை இத்துணைக் காலம் தனியாக விட்டதும், அம்மாவின் ஆசியையே நமக்கு வாங்கித் தரும்!

24. உடலில் உழைப்பு; உள்ளத்தில் உவப்பு

தனக்குரிய ஊழியம் யாது எனக் கண்டுகொண்டவன் பாக்கியசாலி; அவன் வேறெந்த பாக்கியத்தையும் கோராதிருப்பானாக!

—கார்லைல்: 'அன்றும் இன்றும்'

ராமகிருஷ்ணர் பகலுணவு உண்டு முடிக்கும்போது சுமார் பதினொரு மணியாகிவிடும். காலை மூன்று மணிக்கு விழித்து எத்தனையோ காரியம் செய்த சாரதையின் திருஉதரத்தில் இதுவரை தின்பண்டமோ, பானமோ எதுவுமே இறங்கியதில்லை. அந்தக் காலத்தில் காப்பி, டீ உண்டா, ரொட்டி, பிஸ்கத்து உண்டா? பதி உண்டவுடன், அவர் மிகுதி வைத்துள்ள உச்சிஷ்டத்தில் சிறிதளவை அவசரமாக உண்டு, ஒரு குவளை நீர் பருகுவாள் தேவி. பிறகு தன் இருக்கைக்குத் திரும்பி, வெற்றிலைச் சுருள் மடிப்பாள். இந்த வேலையை முடித்துச் சிறிது நேரம் மிக மெல்லிய குரலில் கானம் செய்வாள். ஆலையில் ஒரு மணிக்குச் சங்கு ஊதும்போது உணவு உட்கொள்வாள்; அதன் பின் சிறிது நேரம் 'கட்டை'யைக் கீழே போடுவாள். ஜன நடமாட்டம் இல்லாதபொழுது தேவி நஹவத்தி லிருந்து வெளி வந்து, படியிலே அமர்ந்து, தனது அடர்ந்த நீண்ட கேசத்தை வெயிலில் உலர்த்திக்கொள்வாள். அதிகாலையில் நீராடிவிட்டு இதுகாறும் ஒரு சும்மாடு கூந்தலை ஈரத்துடன் சுமந்து கொண்டிருப்பது எத்தனை சிரமம் என்பதைப் பெண்களே அறிவர். பிறகு விளக்குத் திரிகள் திரிப்பது போன்ற சின்னச் சின்னக் காரியங் களைச் செய்வாள். மாலை ஸ்நானத்துக்கு, கூப்பிடு தூரத்திலே உள்ள கங்கைக்குச் செல்ல மாட்டாள். ஜனசஞ்சாரம் இருக்குமே! நஹவத் திலே ஒரு மூலையிலே எப்படியோ குளித்துவிட்டு, உடைகளையும் துவைத்துக்கொள்வாள். பிறகு நஹவத்தில் வைத்திருந்த தெய்வத் திருவுருவங்களின் முன் விளக்கேற்றி வைத்துத் தூபம் காட்டுவாள். புனித சந்தியா காலத்தில் சிறிது தியானம் செய்வாள். அடுத்து, பக்தருக்காகவும் பதிதேவருக்காகவும் உணவு தயாரிக்கும் வேலை தொடங்கிவிடும். மாலையில் கல்கத்தாவிலிருந்து டாகுரைக் காண வரும் பலர் வெகு நேரம் தங்கிவிடுவர். அதன்பின் அவர்கள் வீடு போய்ச் சேர மிகுந்த நேரமாகிவிடும் அல்லவா? எனவே, காளி கோயில் பிரசாதம் அனைவருக்கும் போதாது என்பதால் அவர்களுக் காகவும் பலவித உணவு வகைகளைச் சமைப்பாள் அம்மா. பெண்மணி கள் இரவிலே ஆறு தாண்டித் திரும்புவது சிரமம் அல்லவா? அவர்கள் தக்ஷிணேசுவரத்திலேயே படுப்பார்கள். சின்னஞ் சிறிய நஹவத்தில்

என்ன மந்திரமோ செய்து அத்தனை பேருக்கும் சயனம் தயாரித்து விடுவாள் அம்மா. அவர்கள் ராமகிருஷ்ணருடன் இரவு பத்து மணி வரை கும்மாளமாக உரையாடிவிட்டு நஹவத்துக்குத் திரும்புவார்கள். இவளோ உணவு பரிமாறும் வேளை தவிர மற்றப் பொழுதுகளில் அவரது தரிசனமே பெறுமல், ஆனால் அதற்காகவும் வருந்தாமல், அந்தப் பெண்களுக்கு உணவு சமைத்தும், படுக்கை விரித்தும் பணி செய்வாள். பதினொரு மணிக்குப் பிறகு தானும் ஏதோ உண்டுவிட்டு, கித்தான் ஒன்றின்மீது முரட்டுப் பாயை விரித்துக்கொண்டு அப்படியே படுத்து உறங்கிவிடுவாள்.

அவள் அடங்கித்தான் இருக்க வேண்டும் என்று ராமகிருஷ்ணர் விரும்பியது போலவே, அவள் இவ்விதம் உழைத்துக்கொண்டேயிருப்பதையும் அவர் மனமார வரவேற்றார். "'எல்லோரும் உழைக்கணும். அதுவும் பெண்டுகள் சோம்பி உட்கார்ந்திருக்கவே கூடாது. வேலை இல்லாமல் உட்கார்ந்திருப்பதால் வீணான எண்ணங்கள்தாம் உண்டாகும். ஏன், கெட்ட சிந்தனைகள்கூட வரும்'' என்பார். வீணான எண்ணமோ, கெட்ட எண்ணமோ எழவே முடியாத தேவி சாரதை மற்றவர்களுக்கு உதாரணமாக உழைத்துக் காட்டினாள்.

அவள் சிறிது நேரம் வேலை இல்லாமல் இருந்தாலும் அவர் மெனக்கெட்டு நஹவத்துக்கு வந்து ஏதாவது ஒரு வேலையைக் கொடுத்துவிட்டுப் போவார். பிற்காலத்தில் அம்மா நினைவுகூர்ந்து சொல்வாள்: ''ஒரு நாள் அவர் ஏகப்பட்ட சணல்கண்டைக் கொண்டு வந்தார். 'இந்தச் சணலையெல்லாம் நன்னா முறுக்கி, என் அறையில் இதனாலே நாலு அஞ்சு உறி பண்ணித் தொங்கவிடு. காளி கோயில்லேயிருந்தும், பக்தாள் கிட்டேயிருந்தும் வருகிற பட்சணம் பழ வகைகளை உறியிலே வச்சிருந்தா பசங்கள் வர்றச்சே கொடுப்பேன்' என்றார். (பிற்காலத்தில் ராமகிருஷ்ணரின் பெயரில் எழுந்த உலக ஸ்தாபனத்தின் ஆதார ஸ்தம்பங்களாக நின்ற மகாபுருஷர்கள் இந்தப் 'பசங்கள்' தாம்.) அவர் சொன்னபடியே பண்ணினேன். கூளம் கூளமாச் சணல் பாக்கியிருந்தது. அதையெல்லாம் ஒரு பைக்குள்ளே அடைச்சு எனக்குத் தலைகாணியாத் தைச்சுண்டேன்.''

வேலைக்குக் கூலி தலையணை! அதுவரை அவளுக்குத் தலையணை கிடையாது.

பிற்காலத்தில் பக்தர்கள் பிடிவாதமாக வாங்கிப் போட்டிருந்த கட்டிலின்மீது பஞ்சு மெத்தையில் அமர்ந்துகொண்டு இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்த அம்மா, ''அந்த முரட்டுப் பாயிலே படுத்துண்டபோதும், இப்போ இந்த மெத்தையிலே படுக்கிற

மாதிரியே, சௌக்கியமாகத்தான் தூங்கினேன். எனக்கு ஒன்னும் வித்தியாசம் தெரியல்லே, குழந்தைகளே! எனக்குக் கஷ்டம் என்பது துளிக்கூடத் தெரிஞ்சதில்லே. அவருடைய சேவைன்னு ஏற்பட்டு விட்டால், அதிலே எனக்கு இம்மியும் அசௌகரியமே தெரியாது. ஒவ்வொரு நாளும் நிம்மதியா ஓடித்து; ஆனந்தமா ஓடித்து" என்றாள்.

'அவருடைய சேவை' என்றாள்! ஆனால் ராமபிரானின் பாதத் தருகிலேயே அமர்ந்துள்ள மாருதி போல் ராமகிருஷ்ணரின் அண்மையில் இருந்தா அவள் சேவை செய்தாள்? அவரை அவள் கண்ணாலும் காணாமல் ஓடிய நாட்கள் எத்தனையோ! ஆயினும் அவருக்காகச் செய்கிறோம் என்ற எண்ணமே அவளை எப்போதும் உற்சாகமாக வைத்திருந்தது. எவ்விதக் கட்டுப்பாடும் இன்றித் திறந்த மடைபோல் ராமகிருஷ்ணர் தம் பக்தர்களுடன் ஒருபுறத்தில் அமளி துமளி செய்துகொண்டிருக்க, எழுபத்தைந்தே அடி தொலைவில் சகல கட்டுப்பாடுகளையும் விதித்துக்கொண்ட தேவி அந்த பக்தர்களுக்காகவும், பதி தேவருக்காகவும் செய்த அற்புத எளிமைகளைப் பார்ப்போம்!

ராமன் கிஷ்கிந்தையில் இருந்தான்; எட்டாத் தொலைவில் இலங்கையில் சிறைப்பட்டிருந்தாள் சீதை. ராமனையே எண்ணி உள்ளம் குமைந்தாள்.

சிவபெருமான் கயிலையில் இருந்தான்; தேவி காமாக்ஷி காஞ்சியில் கம்பைக் கரையில் இருந்தாள். சிவத்துக்காகத் தவமிருந்து தவித்தாள்.

கண்ணன் துவாரகையில் இருந்தான்; பல காதம் தள்ளித் திரு ஆய்ப்பாடியில் வாழ்ந்தாள் ராதை. கண்ணனையே நினைந்து உருகினாள்.

ராமகிருஷ்ணரும், சாரதாமணியும் எழுபத்தைந்தே அடி தொலைவில்தான் இருந்தனர். ஆனால் அவரைக் காணாமலே அவள் துடித்த நாட்கள் பலப்பல.

ஜானகியை ராவணன் சிறைப்படுத்தி வைத்தது போல் சாரதையை யாரும் சிறை வைக்கவில்லை. அவளாகவே நஹபத்துக்குள் சிறைப்பட்டுக்கொண்டாள். 'நிறை காக்கும் காப்பு'க்காக, 'சிறை காத்து'க் கொண்டாள்.

தேவி காமாக்ஷி, நாயகனின் சாபத்தினால் காஞ்சியில் வந்துதித்துத் தவமிருந்தாள். சாரதையின் நாயகருக்கோ சபிக்கவே தெரியாது. வரம் தரத்தான் தெரியும். அவர் அவளுக்கு 'அடக்கம்' என்ற வரத்தைத் தந்திருந்தார். அந்த வரத்தினாலேயே அவள் அவரைப் பிரிந்து தனித்திருந்தாள்.

வெளிச் சூழலின் நிர்ப்பந்தம் கண்ணனை ராதையிடமிருந்து பிரித்தது. தேவி சாரதைக்கு அப்படிப்பட்ட நிர்ப்பந்தமில்லை. உள்ளுக்குள்ளேயே ஒரு பந்தம் அல்லது கட்டுப்பாடுதான் அவளை அவரிடமிருந்து பிரித்தது.

அவரிடம் வைத்த அன்புக்குக் குறைவின்றி, அவரது அடியாரிடமும் அவள் அன்பு வைத்திருந்தாள். இந்த அன்னையன்பே அவளை ஒருமுறை அவரிடமிருந்து அடியோடு பிரித்து வைத்தது. வியப்பாக இருக்கிறதா? விஷயம் இதுதான்: அவரது பெண்ணடியார்களில் ஒருத்திக்குச் சாரதைமட்டுமே அவருக்கு உணவு படைப்பது பொறுக்கவில்லை. துளிக்கூடக் கூச்சமின்றிச் சாரதா தேவியிடமே வந்து, ''நீங்க எதுக்காக டாகுர் கிட்டப் போறேள்?'' என்று கேட்டாள்.

பெண்ணடியார்கள் ராமகிருஷ்ணரை நாடிவந்து நீண்ட நேரம் உரையாடுவதைப்பற்றி அவரது கைப்பிடித்த நம் அம்மா ஒரு போதும் வித்தியாசமாக எண்ணியதில்லை. அவர்களைப்போல் அவரிடம் பேசிக்கொண்டிருக்க அவளுக்கு அநுமதியில்லை. அப்படி இருந்தும் அந்தப் பெண்களுக்காகவும் இவள் உழைத்தாள். மனோதத்துவ இயல் கூறுகிற இயல்பான அசூயை உந்தல்கள் சிறிதும் இல்லாமல், சுபாவமாகவே அவள் அப்படி வாழ்ந்ததுதான் அவளை வெறும் மானுடப் பிறவியாக அன்றித் தெய்வத்துள் வைத்திருக்கிறது. இப்படிப்பட்டவளிடம் – ராமகிருஷ்ணரின் சாக்ஷாத் பத்தினியிடம் – எவளோ ஒருத்தி, ''உங்களுக்கு அவரிடம் என்ன வேலை?'' என்று கேட்டுவிட்டாள்.

அம்மா சிறிதும் ஆத்திரம் கொள்ளவில்லை. இப்படிக் கேட்டவளுக்கும் அவள் அம்மாவாகவே இருந்தாள். 'நாம் ஏகாந்தத்தில் அவருக்கு உணவு படைப்பதால் இவர்களுக்கெல்லாம் மன வருத்தம் போல் இருக்கிறது. அந்த வருத்தத்துக்கு நாம் ஏன் காரணமாக இருக்க வேண்டும்?' என்று எண்ணியது அவளது எளிய நெஞ்சு. அந்த எளிமை செய்த தியாகத்தை நம்மால் எண்ணிப் பார்க்கவே இயலவில்லை.

''ஏனம்மா! டாகுருக்குப் பரிசாரகம் பண்ணணும்னு உங்களுக்கு ஆசையா இருந்தா நீங்களே பண்ணுங்களேன்'' என்று பரிவுடன் சொன்னாள் அந்தத் துடுக்குக்காரியிடம்.

அவரைக் கண்டு பேசத் தனக்குக் கிடைத்திருந்த ஒரே ஒரு வாய்ப்பையும் தியாகம் செய்தாள். அதன் பின் பல நாட்கள் அம்மா அவருக்கு உணவு எடுத்துச் செல்லவில்லை.

ராமகிருஷ்ணரும் விளையாட்டுப் பார்த்தார். ஆனால் உணவு கொள்ளும் சமயங்களில் அவருக்குப் பரவச நிலை ஏற்படாமல் பேச்சை வளைத்துப் போகிற சாதுரியம், அல்லது மாதுரியம் சாரதைக்கே இருந்தது.

ஒருகால் கோலாப்-மா தம்மைச் 'சரிக்கட்ட'க்கூடும் என்று எண்ணினார் ராமகிருஷ்ணர். அவருக்காகப் பார்த்துப் பார்த்துச் சமைத்த அம்மா அவரைப் பார்க்கவும் முடியாதபோதிலும் மன வேற்றுமையே இன்றி உணவை கோலாப்மூலம் அனுப்பிக்கொண்டிருந்தாள்.

ராமகிருஷ்ணரின் அறையில் பாட்டும் பேச்சும் கும்மாளியுமாக இருக்கும். மற்றவர்கள் யாவரும் அந்த ஆனந்தத்தில் திளைத்துக் கிடக்க, அம்மாமட்டும் நஹவத்தில் இளைத்துக் கிடப்பாள். 'அந்த திவ்விய மூர்த்தியைப் பார்க்காமலே ஒவ்வொரு நாளாகப் போகிறதே' என்ற தவிப்பு அவ்வப்போது பீறி எழும். அவளை வருமாறு அவர் ஒரு வார்த்தைகூடச் சொல்லாதபோதிலும் அவளுக்கு அவர் மீது தாபமே உண்டாகாது. 'இத்தனை நாட்கள் அவருக்கு அருகிருந்து பணிவிடை செய்தேனே, அதற்கு எத்தனை பாக்கியம் செய்திருக்கவேண்டும்! இன்னமும் பாக்கியம் வேண்டும் என்று கேட்க எனக்கேது தகுதி?' என்றெண்ணுவாள்.

மாலை மங்குகையில் நஹவத் கதவிடுக்கின் வழியாக வெளியே பார்வையைச் செலுத்தித் துழாவுவாள். காலடி ஓசை கேட்கும். அவளது இதயம் அடித்துக்கொள்ளும். 'அவர்தாம். வழக்கம் போல் தோப்புக்குப் போகிறார்!' இடுக்கு வழியே செல்லும் பார்வையைக் கூராக்கிக்கொள்வாள். அரையிருளில் பொற்பொடி மூட்டம் போல அவரது திவ்விய ரூபம் தெரியும். ஒருசில விநாடிகள்தாம். சாரதையின் நெஞ்சு நிரம்பிப் போகும். இரவுச் சமையலுக்காக மாவு பிசையத் தொடங்கிவிடுவாள்.

அங்கே ராமகிருஷ்ணரின் அறையில் பக்தர்கள் பூரித்துக்கொண்டிருப்பார்கள். இங்கே நஹவத்தில் பூரிகள் குண்டு குண்டாக வெந்து கொண்டிருக்கும். 'நரேனுக்குப் பிடிக்கும்' என்று எண்ணி அம்மாவும் பூரிப்பாள்!

ராமகிருஷ்ணர் ஒருவர்தாம் பூரிக்காதவர்போலும்! வெளிப் பார்வைக்கு அவர் கும்மாளமிட்டுக்கொண்டுதான் இருந்தார். அம்மாவிடம் அவர் நிர்த்தாட்சிண்யமாக இருந்ததாகக்கூடச் சிலருக்குத் தோன்றலாம். ஆனால் படித்தறியா அவள்மூலம் உலகமெலாம் படிப்புப் பெறவே அவர் இப்படிக் 'கொடுமை', செய்தார். உள்ளூற

அவர் பூரிக்கவில்லை என்பது அவ்வப்போது அவர் நெகிழ்ந்து கூறும் வார்த்தைகளிலிருந்து தெரியும்.

காளி கோயில் பிரசாதம் அவர்முன் கொண்டு வந்து வைக்கப் படும். அருகே உள்ள அடியார்களுக்குப் பகிர்ந்து தருவார். தாலத் தில் மீதம் இருக்கும்.

" ராமலாலா ! கூட்டிலே கிளி இருக்கே ! அதுக்குப் பருப்பும் பழமும் கொடுத்துட்டு வா " என்பார்.

ராமலால் தாலத்தை எடுத்துக்கொண்டு வெளியேறுவார்.

ராமகிருஷ்ணர் கிளி வளர்க்கிறார் என்றுதான் விஷயம் தெரியா தவர்கள் எண்ணினார்கள். அவர் குறிப்பிட்ட கூட்டுக் கிளி நஹவத் அம்மாதான்.

'கிளி' என்ற வார்த்தையில் எத்துணை வாஞ்சை சொட்டுகிறது 'சுகபாணி' என்று வாணியைச் சொல்வார்கள். இங்கோ சுகமாகவே இருந்தாள் ! கூண்டிலேயே ஸுகமாகவுந்தான் !

" ஜோடிக் கிளி கூண்டிலே இருக்கு " என்று அவர் அடிக்கடி சொல்வார். அவ்வப்போது அவரது தமையன் மகள் லக்ஷ்மியும் சாரதையோடு இருந்ததால் 'ஜோடிக் கிளி' என்பார்.

அவரது அறையிலிருந்து ப்ரவச நாதங்கள் எழும்பி அவற்றின் மெல்லிழைகள் நஹவத்துக்குள்ளும் ஊடுருவும். கண்ணன் குழல் கேட்டுப் பொறி, புலன் அனைத்தையும் அதிலேயே பறிகொடுத்த மீராவைப் போல் சாரதை கரைந்துருகிப் போவாள். வேலைகளை விருவிருவென முடித்துக்கொண்டு மூங்கில் தட்டியண்டை வந்து நின்றுவிடுவாள்.

நின்றுகொண்டே யிருப்பாள் ! மணிக்கணக்காக நின்றாள் இப்படி நாட்கணக்கில் நின்றாள் !

கங்கையிலிருந்து ஓதம் நிறைந்த காற்று வீசும். உடல் நடுங்கும். மனம் நடுங்காது. நின்றுகொண்டே யிருப்பாள். உடலால் அந்தப் பனிவாடைக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. சாரதையின் பொன் வண்ணம் உதிரலாயிற்று. சதை சுருங்கிக் கருமை கொள்ள லாயிற்று. ஆனால் அவள் அழகையா பொருட்படுத்தினாள் ? எலும்புக் குள்ளும் பனி வாடை புகுந்தது. சாரதைக்கு மூட்டு வலி, கீல்வாதம் இவை நீங்காத ரோகங்களாக வந்து சேர்ந்தன. ஏற்கனவே அவள் மலேரியா நோயாளி. வசதியற்ற தக்ஷிணேசுவரத்தில் தனது விசர் ஜனங்களைக்கூடக் கட்டுப்படுத்திக்கொண்டு (ஆகா, வெளியில் சொல்லிக்கொள்ள முடியாதபடி நம் அம்மா அநுபவித்த அவஸ்தை கள்தாம் எத்தனை !) அவளாக வயிற்றுக் கோளாற்றை உண்டாக்கிக் கொண்டாள். இப்போது வாதப் பிடிப்பும் சேர்ந்துகொண்டது ; பொறுத்துக்கொண்டாள். உள்ளத்தில் உவகை பூத்துக் கொண்டு, உடலால் உழைத்துக் கொட்டினாள்.

25. "அம்மா என்று அழைத்துவிட்டால்..."

காயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.

—திருவாசகம்

ஆனால் ராமகிருஷ்ணரால் ஓரளவுக்குமேல் பொறுக்க முடியவில்லை. மீண்டும் சாரதையைத் தமக்கு உணவு கொண்டு வருமாறு பணித்துவிட்டார்!

சாதம் படைக்கவும் செய்திடுவோம்—அமுதச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்

என்று பாரதியார் பாடினார். விவேகாநந்தர், பிரம்மாநந்தர், சாரதாநந்தர் முதலிய அமுதச் சாதியினர் அம்மாவின் சாதத்தால், பிரசாதத்தால் உருவானவர்களே!

அவள் பூரணத்துவம் பெற்ற ஸ்தானம் அன்னபூரணியாகத்தான். இங்கே ராமகிருஷ்ணர்கூட அவளுக்கு இரண்டாம் பட்சம் தான். ஆம், அவள் பதிவிரதைமட்டுமல்ல; அதைவிடப் பெரிய புத்திரவிரதை. உலகில் அவளைப் போல் பதிவிரதம் காத்த உத்தமிகள் பலர் இருக்கலாம். ஆனால் தன் வயிறு திறவாமலே அவள் அம்மாவாகி, 'புத்திர விரதம்' என்ற ஒன்றை அநுஷ்டித்தாளே, அதில் அவளுக்கு ஈடுமில்லை, இணையுமில்லை. புத்திர விரதம் என்று வரும்போது பதியையே மீறுவாள், அடக்கத்தின் உருவான நம் அம்மா.

பிரம்மசாரிச் சீடர்களுக்கு மிதமாகவே உணவளிக்க வேண்டும் என்பது ராமகிருஷ்ணரின் உத்தரவு. இந்த உத்தரவுக்கு அம்மா அடங்கி நடக்கவில்லை. அவர்களுக்கு வயிறுர அன்னமிடுவாள். ராகாலுக்கு ஆறு சப்பாத்திகளும், லாடுவுக்கு ஐந்தும், பாபு ராமுக்கு நாலும் வழங்க வேண்டும் என்பது அவரது உத்தரவு. 'பசங்களைப் பார்க்கும்போது அவரது உத்தரவை 'நஹவத் யஜமானி' நிறைவேற்றவில்லை என்று அவருக்குத் தெரிந்துவிட்டது. பாபுராமிடம் அவர் கேட்டபோது, அவன் ஒளிவின்றி, "அம்மா எனக்கு ஆறு சப்பாத்திகூடப் போடறதுண்டு" என்றான்.

ராமகிருஷ்ணருக்குக் கன கோபம் வந்துவிட்டது. நேரே நஹவத்துக்குப் போனார். "நீ பாபுராமுக்கு ஆறு சப்பாத்தி போடறயாமே!" என்றார்.

''ஆமாம், போடறேன்'' என்றாள் அம்மா சர்வ நிதானமாக.

''பசங்க நாக்கைக் கட்டுப்படுத்த வொட்டாமே அவாளைக் கெடுக்கிறே! நீ மூளையில்லாமெ பிரியம் காட்டி அவாளோட ஆத்மிகத்துக்கு எத்தனை ஹானி பண்ணிண்டிருக்கே தெரியுமா?''

அவள் துளிக்கூடக் கலங்கவில்லை. ''ஏதோ இரண்டு சப்பாத்தி அதிகமாகப் போட்டுட்டேன்னு நீங்க ஏதுக்கு இப்படிக் கலங்கறேள்? அவாளோட எதிர்காலத்தை நான் பார்த்துக்கறேன். 'வயிறு முட்டத் தின்னறேளா?'ன்னு அந்தக் குழந்தைகளை வையாதேயுங்கோ. ஆமாம், சொல்லிட்டேன்'' என்றாள்.

ராமகிருஷ்ணர் விக்கித்து நின்றார். அது ஆனந்த விக்கல். எல்லோரையும் ஜகன்மாதாவாகப் பார்ப்பது போல் சாரதையையும் ஜகன்மாதாவாகப் பார்த்த அவர், அவள் இப்போது வாஸ்தவமாகவே தன் ஜகன்மாத்ருத்துவத்தை உணர்ந்து கூறிய உன்னத மொழிகளைக் கேட்டு விக்கித்து நின்றார். அவர் அந்தப் பிள்ளைகளுக்கு உபதேசம் தந்தார்—வாசகங்களாக, அநுஷ்டானங்களாக. அவளும் உபதேசம் தந்தாள்—சப்பாத்தியாக, பயத்தம் பருப்புக் கூட்டாக, லூசியாக, கிச்சுடியாக.

சமைப்பவரின் மனப்பான்மையும், பரிமாறுபவரின் மனப்பான்மையும் உண்பவரின் உள்ளே புகும் என்று நம் சாஸ்திரங்கள் சொல்கின்றன. அதனால்தான் போஜனத்துக்கு மிகுந்த நியதிகளை விதித்திருக்கின்றன. எதிர்கால விவேகாநந்த — பிரம்மாநந்த — பிரேமாநந்த (பாபு ராம்தான் பிறகு பிரேமாநந்தரானவர்) குழாத்தின் சத்தியம், தியாகம், பிரம்மசரியம் இவற்றில் ராமகிருஷ்ணரின் உபதேசத்துக்கு எவ்வளவு பங்கு, சாரதை படைத்த உணவுக்கு எவ்வளவு பங்கு என்று யாரே கணக்கிட்டுச் சொல்ல முடியும்? அந்த உணவை அதிகமாக உண்ண உண்ண ஆத்ம குணங்களும் அதிகமாகுமேயன்றி, ஆத்ம அபிவிருத்திக்கு ஹானியா உண்டாகும்? அம்மாவானவுடன் தன் சக்தியின் முழுமையை அவளே உணர்ந்து அமர வாசகங்களை அவரிடம் சொல்லிவிட்டாள்!

ராமகிருஷ்ணர் மானசிகமாக அவளை நமஸ்கரித்தார். இளநகையுடன் விடை கொண்டார்.

புத்திர விரதத்தில் புத்திரி விரதமும் அடக்கம். ராமகிருஷ்ணரைத் தேடி வந்த பெண்களிடம்—அவரிடமிருந்து அவர்களைவிட ஒதுங்கியிருந்த அவரது சகதர்மிணியான அவள் காட்டிய எல்லையற்ற அன்பை என்னென்பது?

அரக்கி போல் ஒருத்தி வந்தாள்—கையில் திரிசூலமும், தலையில் ஜடாமுடியுமாக. அவள் வரப் போகிறாள் என்று முன்பே சொல்லியிருந்தார் ராமகிருஷ்ணர். அவள் அரக்கி அல்ல; பைரவ உபாசகி. உலகிலுள்ள கொடூரங்களும் இறைவனிடமிருந்து வந்தவையே என்ற அடிப்படையை மனத்தில் கொண்டு, கொடூரங்களைக் கைக்கொள்ளும் பைரவி அவள்.

''பைரவி ஒருத்தி வருவா. அவளுக்காக ஒரு வஸ்திரம் சாயம் தோய்த்து வை. கொடுக்கலாம்'' என்றார் ராமகிருஷ்ணர் சாரதையிடம். அவர் கூறியவண்ணமே செய்தாள் சாரதை. அவர் சொன்ன வண்ணமே பைரவி வந்தாள்.

மகா கோபக்காரியான அவள் ராமகிருஷ்ணரிடம்மட்டும் நீண்ட நேரம் அளவளாவுவாள். சாரதையைக் கூசாமல் மிரட்டுவாள். சாரதை அவளிடம் அச்சம் கொண்டாளே ஒழியக் கோபமோ, துவேஷமோ கொண்டதில்லை.

''ஏ சாரு, ராத்திரி சாதத்திலே தண்ணி கொட்டி வை. காலம்பற எனக்குப் பழையது வேணும். தவறினாயோ, சூலத்தாலேயே உன்னைக் குத்திக் கொலை பண்ணிடுவேன்'' என்பாள்.

இப்படிப்பட்டவளுக்கும் மனம் கோணாமல் பணி செய்தாள் அம்மா.

சாரதை பைரவியிடம் அஞ்சுவது கண்ட ராமகிருஷ்ணர், அவளுக்கு அந்த அச்சமும் உதவாது எனக் கருதினார்: ''பயப்படாதேயம்மா. அவள் உண்மையான பைரவ சம்பிரதாயக்காரி. அதனாலே அவளுக்கு முன்கோபம் கொஞ்சம் ஜாஸ்தியா யிருக்கு'' என்றார்.

கொடூரத்தைக்கூடச் சகித்துக்கொள்ளலாம். ஒழுக்கக் குறைவை எப்படிச் சகித்துக்கொள்வது? பனிக்கட்டியை விடப் பரிசுத்தமான சாரதை, நடத்தை கெட்ட பெண்களிடமும் காட்டிய பரிவு இதிகாசம் கண்டிராத அற்புதம்!

ராமகிருஷ்ணர் ஓரொரு சமயத்தில் தமது சமபாவத்தைப் பரிசோதித்துக்கொள்வதற்காகப் பரத்தையர் வீட்டுப் படிகளையும் தமது முடியால் துடைத்திருப்பது உண்மை. கிரீஷ் கோஷ் போன்ற பதிதர்களையும் அன்புடன் அரவணைத்து அவர் உயர்த்தியிருக்கிறார் என்பதும் உண்மை. என்றாலுங்கூட, அவரும் தம் சீடர் குழாத்தில் சீலம் உள்ளவர்களுக்கே சிறப்பிடம் தந்தார். சிலரை ஒதுக்கி வைத்தார்.

அம்மா ஒதுக்கி வைத்த குழந்தை ஒன்றுகூடக் கிடையாது. சேற்றில் விழுந்த குழந்தைகளுக்குத்தான் தனது தேவை அதிகம் என்று அவற்றினிடமே அதிகப் பரிவுடன் ஓடினுள் அவள்.

மிகவும் அவப்பெயர் எடுத்த ஓர் ஆடல் மகள், அவளது யௌவனம் கழிந்தபின், நம் அம்மாவிடம் வந்தாள். ''தெறிகெட்டு வாழ்ந்துட்டேன். என்னைச் சன்மார்க்கத்திலே திருப்புங்கோ!'' என்று கேட்டுக்கொண்டாள்.

அம்மாவின் அன்பு வழக்கத்துக்கும் அதிகமாகவே பாய்ந்தது. வழக்கத்துக்கும் அதிகமாகவே அவளோடு பேசிக்கொண்டிருந்தாள் தேவி. சர்வ பாபங்களையும் அபஹரிக்கும் ஹரியைப்பற்றித்தான் பேசினுள்.

விலைமாது ஒருத்தியுடன் சாரதை இப்படிப் பேசுவது ராமகிருஷ்ணருக்கு அருவருப்பாக இருந்தது.

அந்த ஸ்திரீ போனபின், ''அவளை ஏன் இங்கே சேர்த்துண்டே?'' என்று சாரதையிடம் கேட்டார்.

''ஏன், அதிலே என்ன தப்பு? ஹரியைப்பத்தித்தான் அவள் ஆர்வத்தோடு கேட்டுண்டிருந்தா'' என்றுள் தேவி.

''பெருங்காயம் வைச்ச பாண்டம் மாதிரி பழைய வாசனை நெடுநாள் இருந்துண்டேதான் இருக்கும். நீ பண்ணறது வெட்கக்கேடு. ஊர் சிரிச்ச ஒரு சிறுக்கிகிட்டே பிரசங்கம் பண்ணிட்டு அதுக்குச் சமாதானம் வேறே சொல்றியே, தூ, தூ'' என்று வழக்கத்துக்கு விரோதமாக மிகவும் காரமாகப் பேசிவிட்டுத் திரும்பினர் ராமகிருஷ்ணர்.

மறு நாளும் அந்த மாது வந்தாள். அன்றும் முதல் நாள் போலவே சாரதை அவளுடன் உரையாடினுள்.

அதற்கடுத்த நாளும் வந்தாள். அன்றும் அப்படியே நடந்தது.

ராமகிருஷ்ணரிடம் அம்மா எதிர்த்துச் சண்டை போடவேயில்லை. அவரே சண்டை போட்டுவிட்டுக் கடைசியில் அவராகவே ஓய்ந்து சமாதானமும் அடைந்தார்.

இன்னும் ஓர் உதாரணம்: அம்மாவின் அம்மாத் தன்மையைச் சிகரத்தில் ஏற்றிக் காட்டும் உதாரணம்.

ஒரு நாள் இரவு அம்மா ராமகிருஷ்ணருக்கு உணவெடுத்துச் சென்றுள். அவரது அறைக்கு முன் உள்ள வராந்தா. அங்கே இதற்கெனவே காத்திருந்தது போல் ஓர் உருவம் வெளிப்பட்டது; சாரதையின் முன் அது நின்றது.

சாரதை அந்த உருவத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே ஒழுக்கம் கெட்ட ஒருத்தி எனப் புரிந்துகொண்டாள்.

அவள் சாரதையிடம், "அம்மா, தட்டை என் கிட்டே கொடுங்கோ. டாகுருக்கு இன்னிக்கு ஒரு வேளை நான் சாதம் வைக்கிறேன்" என்றாள்.

சாரதை சற்றும் தயங்காமல் உணவுத் தட்டை அவளிடம் கொடுத்தாள்.

அந்தணர்கள், அதிலும் ஒழுக்கமானவர்கள் சமைத்துப் பரிமாறும் உணவைத்தான் ராமகிருஷ்ணர் உண்பார் என்பது சாரதைக்கு மிக நன்றாகத் தெரியும். ஒவ்வொரு வேளையும் அவரைத் தாஜா செய்து சாப்பிட வைப்பதில் அவள் கொண்டிருந்த ஈடுபாடோ அசாமானியமானது! இருந்தபோதிலும் இன்று பதிதையிடம் உணவுத் தாலத்தைத் தந்துவிட்டு, பதியின் அறைக்கு வெளியே நின்றாள்.

தட்டை ராமகிருஷ்ணரின் முன் வைத்தாள் அந்தப் பெண். பிறகு என்ன தோன்றியதோ, வெளியே ஓடியே விட்டாள்.

ராமகிருஷ்ணர் கற்சிலையாகச் சமைந்துவிட்டார்.

அம்மா அவர் பக்கத்தில் போய் அமர்ந்தாள்.

"என்ன காரியம் செஞ்சுட்டே!" என்றார் ராமகிருஷ்ணர், சாரதையைப் பார்த்து. "அவள் நடத்தை கெட்டவள். உனக்குத் தெரியாது? அவளோட ஸ்பரிசம் பட்டு அசுத்தமாகிவிட்ட இந்தச் சாப்பாட்டை நான் தீண்டுவேனா?" என்றார்.

சாரதை தெளிவுடனும் பணிவுடனும் சொன்னாள்: "உங்களோட ஆகார நியமம் எனக்குத் தெரியும். அந்தப் பெண்ணைப்பற்றியும் தெரியும். ஆனாலும் என்னவோ இப்படிப் பண்ணிட்டேன். தயவு செஞ்சு இந்த ஒருவேளை இதைச் சாப்பிட்டுடுங்கோ."

"ஒருகாலும் முடியாது."

"தயவுசெஞ்சுன்னா...." மன்றாடினாள் தேவி.

அவர் பேசவும் இல்லை. உணவைத் தொடவுமில்லை. பொய்க் கோபமோ, மெய்க் கோபமோ, உர்ரென்று அமர்ந்திருந்தார்.

"ஏன்னா, உங்களைத்தானே?" என்று ஈனஸ்வரத்தில் இழுத்தாள் சாரதை. அழுகை தொண்டையில் முட்டியது.

'வழிக்கு வருகிறாள்' என்று எண்ணினார் ராமகிருஷ்ணர். இருந்தாலும் வீறுப்பை விடக் கூடாது என்று அடம் செய்ய நினைத்தது அந்தக் குழந்தை. பிகு தளராமலே அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே உணவுத் தாலம். அவர் அதைத் தொடவொண்ணாதபடி செய்துவிட்டாள் அவள்!

கலத்திலே சோற்றையிட்டுக் கரத்தைப் பிடித்திழுக்கும் மாபாதகத்தைச் செய்துவிட்டோமே என்று வேதனை கொண்டாள், அன்னபூரணியாகவே வாழ்ந்து வந்த அன்னை.

''இந்தாங்கோன்னா....'' நெஞ்சு நோக அவரை மெல்ல அழைத்தாள்.

ராமகிருஷ்ணர் அசைந்து கொடுத்தார். ஆனாலும் அவளிடம் பூரணமாக விட்டுக் கொடுக்க அவர் விரும்பவில்லை.

''சரி, அப்போ எனக்கு ஒரு சத்தியம் பண்ணித் தா! இனிமேலே இந்த மாதிரி கண்டவாகிட்டே என் சாப்பாட்டைத் தர்றதில்லேன்னு வாக்குத் தா. சாப்பிடறேன்'' என்றார்.

உடனுக்குடனே சாரதை தன் கையைக் குவித்து அஞ்சலி செய்து, அழுகைப்பசை அற்ற கணீரென்ற குரலில், ''பிரபு! அந்த மாதிரி வாக்குத் தர என்னால் ஒருகாலும் முடியாது. உங்களுக்காக நானே சமைச்சு, நானே அதை எடுத்துண்டு வந்து பரிமாறுகிறதற்கே என் மனசாரப் பூரண முயற்சி செய்வேன். நானாக வேறே யார் கிட்டேயும் இந்த வேலைகளைக் கொடுக்க மாட்டேன். ஆனாலும் என்னை யாராவது 'அம்மா' ன்னு கூப்பிட்டு, அந்தச் சாப்பாட்டைக் தன்கிட்டே தரச் சொன்னா அப்புறம் என்னாலே என்னையே கட்டுப்படுத்திக்க முடியாது'' என்றாள்.

''அம்மான்னு கூப்பிட்டுட்டா அப்புறம் என்னைக் கட்டுப்படுத்திக்க முடியாது''-அந்த வாசகம், ஆதியில் தோதாபுரி உபதேசித்த வேத மகாவாக்கியங்களைவிடப் பெரிதாக ராமகிருஷ்ணரின் அகத்துள் பாய்ந்தது. கட்டுப்பாடே உருவான அவளை அம்மாவாகப் பார்த்துவிட்டால் அவள் எதற்கும் கட்டுப்படாத பராசக்தியாகி, அன்பர்களின் கட்டுக்களை எல்லாம் அறுத்தெறிந்து விடுவாள். பதிவிரதத்தைவிடப் பெரிதான அப்பேர்ப்பட்ட புத்திரவிரத மகிமை அவளுடையது!

அவரது மகிமையையும் உணர்த்தும் மதுர வாசகங்களை மிருதுவாகச் சொன்னாள் மாதா: ''ஏன்னா! நீங்க நான் தொட்டதை மட்டுமே சாப்பிடுவேன் என்கிறேளே. நீங்க எனக்கு மட்டுந்தான் ஸ்வாமியா? இல்லேன்னா! நீங்க எல்லாருக்கும் ஸ்வாமியாச்சே!''

அவருக்கே சமத்துவ குருவாகி விட்டாள் அம்மா! அவரைத் தன்னோடு எல்லோரும் சமமாக அநுபவிக்க வேண்டும், தனக்கு விசேஷப் பங்கு கூடாது என்று எண்ணினாள் தியாகி!

ராமகிருஷ்ணர் கசிந்து போனார்.

கடகடவென்று சமர்த்துப் பிள்ளையாக உண்டுவிட்டுக் கல கல என நகைத்தார் பகவான்.

பகவதியும் நகைத்தாள் கலகலவென.

பாக்கியம் செய்த தக்ஷிணேசுவரக் காற்று, பகவானும் பகவதியும் சிரித்த புண்ணியச் சிரிப்பை ஏந்திச் சென்று கங்கையில் விட்டது.

கங்கா மாதா கலகலவென ஓடினாள்!

26. அமங்கலத்தின் அவக் குரல்

அன்னபூரணியே, எப்போதும் பூரணமாக இருக்கும் நிறைவே! சங்கரனின் பிராணநாயகியே, எனக்கு ஞானமும் வைராக்கியமும் சித்திப்பதற்காகப் பிட்சை அளிப்பாய்.

—ஆதிசங்கரரின் அன்னபூர்ணுஷ்டகம்

மனுேதத்துவ இயல் சொல்கிற இயல்பான அசூயை அம்மாவிடம் இம்மியும் இல்லை என்பதைக் கொடிக் கம்பத்தின் உச்சியில் பட்டொளி வீச ஏற்றிக் காட்டுவது இன்னெரு நிகழ்ச்சி.

தக்ஷிணேசுவரத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கிய ஒரு சாதகியை, பைத்தியம் என்று ஆரம்பத்தில் அனைவரும் நினைத்தனர். அதனுல் அவளிடம் எல்லோரும் பரிவுடன் நடந்துகொண்டனர். பிறகுதான் அவள் பைத்தியம் அல்ல என்றும் கடவுளைக் காந்தனுகக் கருதும் மதுரபாவ சாதகி என்றும் தெரிந்தது. அவள் ராமகிருஷ்ணரைக் கடவுளாகக் காணத் தொடங்கியவுடன் ஒரு பயங்கரத் திருப்பம் ஏற்பட்டது. கடவுளே காதலன் என்றுல் ராமகிருஷ்ணர் அன்றுே அவளது காதலராக வேண்டும்? பிரம்மசரியத்தின் நடமாடும் உருவமான அவரைக் காந்தனுக வரித்தாள் அந்த மங்கை. ஒரு நாள் அவரிடமே தன் மனத்திலிருந்ததைக் கொட்டியும் விட்டாள்.

பாவன பகவான் பதறிப் போனுர். சர்வேசுவரியின் குழந்தையாக அன்றி வேறேதாகவும் தம்மைப் பாவித்துக் கொள்ள முடியாத பரிசுத்த புருஷர், தம்மையும் ஒருத்தி காந்தனுக எண்ணினுளா என்று பரிதவித்தார். தம் வசமிழந்து ஆசனத்திலிருந்து குதித்தார். அவளை வாயில் வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டு அறை முழுவதும் வெறி கொண்டவர்போல் சுற்றிச் சுற்றி ஓடினுர்.

இந்த அமர்க்களத்தை நஹவத்திலிருந்து கவனித்தாள் தேவி. அவள் கண்களில் நீர் மல்கியது. கணவரின் ஒப்பற்ற தூய்மையை எண்ணி மட்டுமல்ல; மதுரபாவ சாதகி அவரிடம் நிந்தை மொழிகளை வாங்கிக்கொள்கிறுளே என்றும் கண் கலங்கினுள், நம் அருமை அம்மா!

பக்கத்திலிருந்த கோலாப் மாவைப் பார்த்துத் தேவி சொன்னுள்: ''கோலாப், அவள் முன்யோசனையில்லாமல் பேசி

விட்டதாகவே வெச்சுக்கலாம். அதுக்காக இவர் ஏன் அவளை இப்படித் தூஷிக்கணும்? அவ யோசிக்காம பேசியிருந்தாலும் இவர் அவளை நேரே என்கிட்ட அனுப்பிச்சுட்டுப் பேசாம லிருக்கவேண்டியதுதானே? சரி, இப்போதாவது நீங்க போய், அந்தக் குழந்தையை இங்கே அழைச்சுண்டு வாங்கோ'' என்றாள்.

கோலாப் அவ்வாறே செய்தாள். ராமகிருஷ்ணரிடம் காதல் பிச்சை கேட்டவள் அவரது பத்தினி சாரதையிடம் வந்து தலை குனிந்து நின்றாள்.

''என் மகளே! உன்னைக் கண்டால் அவருக்குத்தானே கரிக்கிறது? நீ அங்கே போக வேண்டாம். எங்கிட்டயே வந்திண்டிரு'' என்றாள் அம்மா.

உலகம் கண்டிராத மகா அம்மா!

''நான் உன்னுடையவன் என்று ஒருவன் சரண் புகுந்து விட்டால் அவனை எக்காலும் காப்பதே என் கடன்'' என்று விரதம் கொண்டார் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி. ராஜகுல தர்மத்தில் எவ்வளவு கருணை காட்ட முடியுமோ அதன் எல்லை நிலத்தில் இருந்துகொண்டு இப்படிச் சொன்னார். அதாவது, அவரிடம் ஒருவர் சரண் என்று வந்து விழ வேண்டும் என்று நிபந்தனை விதித்தார். அம்மாகுல தர்மம் இதனினும் மகத்தானது. 'சரண்' என்றுகூடக் கூறவேண்டாம். வெறுமே 'அம்மா' என்றாலே போதும். அவர்களுக்குக் கட்டுப்பட்டு விடுவேன் என்று முன்பு தேவி சொன்னதைப் பார்த்தோம். இங்கோ இந்த மதுர பாவ சாதகி அவளை 'அம்மா' என்றுகூடக் கூப்பிடவில்லை. அப்படியிருந்தும் அவளையும் அணைத்துக்கொண்டாள். மகா அம்மாதான்!

முன்பு நாம் பார்த்த சாரதாமணிக்கும் இன்றைய அம்மாவுக்கும் எத்துணை வித்தியாசம்! அன்று போலவே இன்றும் அடக்கம், அன்பு, உழைப்பு இவற்றை மூர்த்திகரித்து நிற்கிறாள். ஆனாலும் இப்போது தாய்மையின் கனம், கௌரவம், கம்பீரம் அவளிடம் முழுமையுடன் பொதிந்துவிட்டன. உருவத்தில் எத்தனையோ மாறுபாடு. உழைப்பாலும், அசௌகரியச் சூழலாலும் அவளது கோமளத் தோற்றம் மாறியே விட்டது. 'நாட்டுக் கட்டை' என்பார்களே, அதுபோல் எலும்புகள் முற்றி, கைகால்கள் காய்த்துப் போய், மேனி வண்ணமும் கறுத்துவிட்டது. 'அழகுடன் அவதரித்தால் இந்தக் கலியில் மானுடரின் கண்கள் அதை விரசமின்றிப் பாரா என்றே சரஸ்வதி தேவி இப்படி அழகு குன்றி வந்திருக்கிறாள் என்று

ராமகிருஷ்ணர் சொல்லுமளவுக்குத் தேவி உருமாறிவிட்டாள். ''ஒரு காலத்திலே நான் செக்கச் செவேல்னு அழகாக் கூட இருந்தேனுக்கும்'' என்று அம்மாவே பிற்பாடு சிரித்து மொழிந்ததுண்டு.

'வித்யாப் பிரகாசம் - ஞான ஒளி என்பதுகூட அம்மாவிடம் இன்றிச் சாமானியமாகவே இருக்கிருள்' என்று அடியார்கள் எண்ணினர். ஆனாலும் அவள் சரஸ்வதியாக இருந்தாள், மகாலக்ஷ்மியாகவும் இருந்தாள். செல்வத்தைத் திரஸ்கரித்தாலும் அவளிருக்குமிடத்தில் பழங்களும் தின்பண்டங்களும் வந்து குவிந்தன.

பவதாரிணி ஆலயத்திலிருந்து வரும் பிரசாதங்களையும், ராமகிருஷ்ணருக்கு அடியார் செலுத்தும் கையுறைப் பொருள்களையும் வாரி வழங்குவதில் அம்மாவுக்கு அபரிமிதமான பிரியம். சரஸ்வதியும், மகாலக்ஷ்மியுமான அவள் அப்போது அன்னபூரணேசுவரியாகவும் ஆவாள்.

பிரசாத விநியோகத்தில் பெரியவர், சின்னவர் என்ற வித்தியாசம் எள்ளளவும் பார்க்க மாட்டாள் தேவி. கங்கைக் கரையில் மீனவர் நடமாட்டம் அதிகம். கரையர் பெண்கள் மீன் கூடைகளை நஹவத் வாசலிலேயே கொண்டு வந்து வைப்பார்கள். கைவருந்தி உழைக்கும் அந்தப் பெண்களைக் கைவருந்தி உழைத்த சாரதை கடிந்துகொள்ளவே மாட்டாள். மாருக அவர்களிடம் கனிவுடன் உரையாடுவாள். பிரசாதங்களை அவர்களுக்கும் வழங்குவாள்.

என்னதான் ராமகிருஷ்ணர் அவளை அம்மா என்று கூப்பிட்டாலும், அவரது குழந்தைத் தன்மையை அவளும் எவ்வளவோ புரிந்துகொண்டிருந்தாலும், அவர் அவளுக்குப் பூரண மகனாக இல்லாமல் நாதனாக, குருவாக, பிரபுவாக, டாகுராக, ஸ்வாமியாகவும் இருந்தார். இத்தனை பெரிய ஸ்தானத்திலிருந்தாலும் அவளது 'அசல்' பிள்ளைகளான மற்றச் சீடர்களுக்குப் பின் தங்கியே நின்ருர்! இதனால்தான் போலும், சில சமயங்களில் ராமகிருஷ்ணருக்கு வழங்குவதற்கே மீதம் வைத்துக்கொள்ளாமல் மற்ற அடியார்களுக்கு உணவு வகைகளைப் பங்கு போட்டுவிடுவாள் சாரதை.

கோபால மாதா என்ற உத்தம பக்தை பாலகிருஷ்ணனை மகனாக வழிபட்டவள். பிற்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரையே தன் கோபாலனாகக் கண்டாள். இந்த மூதாட்டி அவரைத் தன் பிள்ளையாகவே பாவித்து அன்பு செலுத்தினாள். ''அன்பு மாட்டுப் பெண்ணே! என் கோபாலனுக்குக் கண்ணிலே

காட்டாமலே எல்லாத்தையும் விநியோகிச்சுட்டியே!'' என்று சாரதையிடம் கேட்டாள் இக் கிழவி.

சாரதையின் சிரம் கவிழ்ந்தது.

''விநியோகிக்காமல் வைச்சிருந்தாலும் கெட்டுப் போகாத பழம், பட்சணத்தைக்கூட இப்படி உடனுக்குடனே வாரி வழங்கிடாதே, பெண்ணே! நாளைக்கே ஒரு மழை, காற்று வந்து ஒருத்தரும் இங்கே வரல்லேன்னு இதுகளை வைச்சிருந்து என் கோபாலனுக்குக் கொடுக்கலாமோன்னோ?'' என்று தொடர்ந்து கூறினாள் மூதாட்டி.

பணிவுடன் செவி சாய்த்தாள் தேவி.

'அவர் கண்ணிலே காட்டாமே இப்படி விநியோகம் பண்ணினேனே! அவரை உத்தேசிச்சுத்தானே இத்தனையும் வந்தது?' என்று வெட்கிக்கொண்டிருந்தாள் தேவி. அந்தச் சமயம் பார்த்து நவகோபால் பாபுவின் மனைவி இனிப்புப் பட்சணங்களுடன் வந்து சேர்ந்தாளோ, சாரதை ஆறுதல் அடைந்தாளோ?

ஆனல் அன்றோடு அது போயிற்று. மறு நாளிலிருந்து வழக்கப்படி உதார குணத்தை - பிறருக்கு ஊதாரித்தனமாகத் தோன்றிய குணத்தைக் காட்டலானாள் அம்மா.

'நாளைக்கு' என்று எதையுமே எடுத்து வைப்பதில் கருத்தில்லாத ராமகிருஷ்ணரே அவளை ஒரு நாள் கடிந்துகொண்டார். ''நீ என்ன, என்னென்னிக்கும் இப்படியே போயிண்டிருக்கும்னு நினைச்சிண்டிருக்கியா? இந்த மாதிரி வாரி விட்டுண்டிருந்தா எப்படிச் சமாளிக்கிறதுன்னு எண்ணம்?'' என்று பலத்த குரலில் கேட்டார்.

அம்மா உடனே புறமுதுகிட்டு நஹபவத்துக்கு நடக்கலானாள்.

ராமகிருஷ்ணருக்குத் தவிப்பு வந்துவிட்டது. ''எலே, ராமலாலா, போய்ச் சித்தியைச் சமாதானப்படுத்துடா! அவளுக்குக் கோபம் வந்துடுத்துன்னு, இது (தம் சரீரத்தைத் தொட்டுக் காட்டி) அழிஞ்சு போக வேண்டியதுதான்'' என்று கூவினார்.

பதியின் ஆக்ஞையை வெற்றி கொண்ட மாத்ரு வாத்ஸல்யத்துடன் அவரெதிரே வந்து நின்றாள் சாரதை.

இம்மாதிரி அநேக விஷயங்களில் அவரது உத்தரவுக்கும் மேம்பட்ட உன்னதத்தைச் சாரதையின் அம்மாத்தன்மை எய்திவிட்டது! அவளாக எதிர்த்தாள் என்று பொருளில்லை

எதிர்க்கிறோம், பணிகிறோம் என்பது போன்ற உணர்வுகளே அற்ற, மாத்ருத்துவம் என்பதன் இயல்பான எழுச்சியே அது.

இன்னொரு சின்ன உதாரணம்:

பெண்கள் பிராம்ம முகூர்த்தத்திலேயே (காலை நாலு மணி சுமாருக்கு) எழுந்து விட வேண்டும் என்பது ராம கிருஷ்ணரின் கருத்து. சாரதை யாரும் சொல்லாமலே மூன்று மணிக்கு விழித்து ஜபம் தொடங்கிவிடுவாள். குளிர்காலமொன் றில் அவளோடு லக்ஷ்மியும் நஹவத்தில் இருந்தாள். 'கணவனை இழந்த அந்தக் குழந்தை கடுங்குளிரில் காலமே எழுந்திராமல், வெயில் வருகிற வரை உறங்கட்டும்' என்று சாரதையின் தாயுள்ளம் எண்ணும். எனவே, கதவைத் திறந்து அரவம் செய்துகொண்டு வெளியே வந்து ஜபம் செய்யாமல், அவளும் நஹவத்துக்கு உள்ளேயே இருப்பாள். வைகறைக்கு முன்பே தோப்புக்குப் போகும் ராமகிருஷ்ணர் நஹவத் அருகே குரல் கொடுப்பார்: "மகராஜிமார்களே, எழுந்திருங்கோ!" என் பார்.

லக்ஷ்மி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருப்பாள்.

சாரதை அவளை அழுத்திப் படுக்க வைத்துவிட்டு, அடித் தொண்டையில், "இன்னும் பொழுதே ஆகவில்லை. ஏதாவது பட்சிக் குரல் கேட்கிறதா, பாரேன். உன் சித்தப்பாவுக்குத் தூக்கமே கிடையாது. மற்றவாளையும் தூங்கவொட்டாமல் ரகளை பண்ணுறார். நீ குரல் கொடுக்காம படு" என்பாள்.

குறும்புப் பிரியரான ராமகிருஷ்ணர் விடமாட்டார். கதவுத் துவாரம் வழியாகக் குளிர்ந்த நீரை வீசுவார். குளிருக்குப் பயந்து எழுந்திராதவர்கள் நனைந்து போவார்கள்.

வேடிக்கை விசித்திர விநோதங்களுடன் அந்த அற்புத தாம்பத்தியம் நடந்தது என்றாலும், சாரதாமணி அந்த அசாதாரணக் கணவரை, நெருப்பை மடியில் கட்டிக்கொண்டது போலவே கவனித்து வந்தாள். அவரது லோகாதீதமான உள்ளம் எந்தச் சமயம் எந்த நிலைக்குத் தாவும் என்று அவளொருத் தியே ஆழம் கண்டு அதற்கேற்றாற்போல் பரம பக்குவமாக நடந்து வந்தாள். அவளுமேகூட ஒரு முறை இவ்விஷயத்தில் இடறி விழுந்ததுண்டு. சர்வ சாதாரணமான ஒரு சம்பவம் அசாதாரண ஆபத்தை ஏற்படுத்திவிட்டது. இது ஹ்ருதயர் தக்ஷிணேசுவரத்திலிருந்தபோது நடந்த நிகழ்ச்சி.

விஷயம் இதுதான்: ஜீரணகாரியான ஓமம், கிராம்பு, ஏலம் போன்ற வஸ்துக்களை யாரோ சாரதையிடம் கணிச

மாக அளித்திருந்தார்கள். நஹவத்துக்கு வந்த ராமகிருஷ்ண ருக்கு அவற்றில் சிறிதளவு தந்தாள் அம்மா. அதோடு நின்றிருக்கக் கூடாதா? ''உங்களுக்குத்தான் சாப்பாட்டு விஷயத்திலே ஏறினுல் குற்றம், இறங்கினுல் அபராதம்னு இருக்கே. அப்பப்போ அஜீர்ணமாக இருக்கச்சே இதுகளை வாயிலே அடக்கிண்டா நல்லது. நான் ஒரு காகித உறையிலே போட்டுத் தரேன். உங்க ரூமுக்கே எடுத்துண்டு போய் வைச்சுக்கோங்கோ'' என்ருள். ''சரி'' என்று அவரும் அதை வாங்கிக் கொண்டு நஹவத்திலிருந்து வெளியே நடந்தார்.

ஆனுல் ஆஹா! இதென்ன கூத்து? அவர் ஏன் தமது அறைக்குப் போகாமல் கங்கையை நோக்கி வெகு வேகமாக நடக்கிருர்! கூத்தா, இல்லை, விபரீதமாக அல்லவா இருக்கிறது! ஆவேச வேகத்துடன் கங்கையின் விளிம்புக்கே போய்விட்டார். கங்கையோ கரையைத் தொட்டுக்கொண்டு பூரித்து ஓடுகிறது! சாரதைக்குச் சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. வெளி மனிதர் கேட்கக் குரலை எழுப்பியே பழக்கமற்ற அவள், அந்தப் பயங்கர நிலையில் எப்படியோ ஹ்ருதயரைக் கூப்பிட்டு, ''மாமாவைக் காப்பாத்துங்கோ!'' என்று அலறினுள்.

ஹ்ருதயர் ஓடோடிச் சென்று, கங்கையில் விழ இருந்த ராமகிருஷ்ணரை மயிரிழையில் காப்பாற்றி, அவரது அறைக்கு அழைத்து வந்தார்.

''ஏன் மாமா, எங்களை இப்படி மோசம் பண்ணப் பார்த்தேள்?'' என்று ஹ்ருதயர் கண்ணும் கண்ணீருமாகக் கேட்டார்.

ராமகிருஷ்ணர் நீண்ட பெருமூச்சுவிட்டுச் சொன்னுர்: ''உன் மாமி எனக்கு ஜீர்ண வஸ்துக்கள் போட்டு ஒரு உறை கொடுத்தா. நான் ஒரு சந்நியாசி. நாளைக்கு வேணும்னு எந்த ஒரு வஸ்துவையும் சேகரிச்சுக்கிறதில்லைன்னு ஜன்ம விரதம் எடுத்துண்டவனுச்சே! இன்னிக்கு அதுக்குப் பங்கமா இந்த உறையை எடுத்துண்டு வரோமேன்னு தோணித்து. அவ்வளவு தான்; என்னையும் மீறின ஓர் ஆவேசம் வந்து கங்கையிலே விழுந்து பிராணனை விட்டுடறதுன்னு போயிட்டேன்.''

இப்படிப்பட்டவரை அநுசரித்துக் குடித்தனம் நடத்துவது எத்தனை கடினமான காரியம்! அதைத்தான் ஏதுமறியா ஜயராம்பாடிப் பெண் அற்புதமாகச் சாதித்தாள்.

மனிதர்களை நடத்துவதற்கு ஒரு முறை உண்டு. பகவானை வழிபடுவதற்கு ஒரு கிரமம் உண்டு. மனிதராகவும் பகவானுகவும் இருந்த ஒருவரை எப்படி நடத்துவது என்று யாரே

அறிய முடியும்? அறிய முடியாத இந்த அருமையைத் தான் அதிலாகவமாகச் சாரதை நடத்திக் காட்டினுள் என்கிருர் அவளது சரிதையைக் கூறும் ஸ்வாமி கம்பீரானந்தர்.

ராமகிருஷ்ணரும் அவளை வெகு அருமையுடன்தான் நடத்தினுர். அவளை உழைக்கச் சொன்னுலும், அடைபட்டுக் கிடக்கச் சொன்னுலும் அவசியமில்லாத உழைப்புக்கு இடம் தரமாட்டார்; அவசியமில்லாமல் அடைபட்டுக் கிடக்கச் சொல்ல மாட்டார்.

"பட்சி கூட்டிலேயே எப்பவும் இருந்தா அதுக்குக் கீல் வாதம் வரத்தான் செய்யும். சந்தடி இல்லாதபோதாவது அண்டைப் பக்கத்திலே உலாவ வேணும்" என்று சாரதையிடம் அவர் கூறுவார். அதோடு மட்டுமின்றி, சில நாட்களில் ஜன சஞ்சாரமில்லாத சமயங்களில் அவரே நஹவத் சென்று, அவளைப் பின்வழியாக அருகே இருந்த பாண்டியே என்பவரின் மனைவியுடன் சம்பாஷித்து வருமாறு அனுப்பி வைப்பார்.

அவளுக்கு அவசியமற்ற உழைப்பைத் தரவே மாட்டார் அவர். ஒரு முறை அவர் ராகாலுடன் வேணி பால் என்பவரின் பூங்காவில் ஓர் இரவு தங்கி, மறுநாள் காலை திரும்பிவரும் உத்தேசத்துடன் சென்ருர். அந்தப் பூங்காவிலிருந்த ஆவிகள் சிலவற்ருல் அவரது சாந்நித்தியத்தைத் தாங்க முடியவில்லை. "தாங்கள் தயவு செய்து இங்கிருந்து போய்விடுங்கள்" என்று வேண்டிக்கொண்டன. பேய்களிடமும் கருணை கொண்ட ராமகிருஷ்ணர் உடனே புறப்பட்டு விட்டார். அவரும் ராகாலும் மீண்டும் தக்ஷிணேசுவரம் வரும்போது நள்ளிரவாகிவிட்டது. வாசல் கேட் திறக்கும் ஓசை கேட்டதும் தேவி விழித்துக்கொண்டாள். காலடி ஓசையிலிருந்தே அவர் தான் என்று தெரிந்துகொண்டாள் கற்பரசி. இரவு அவர் வெளியே தங்கப் போகிருர் என்பதால் அவருக்கு அவள் அன்னம் வைத்திருக்கவில்லை. கணவர் இப்போதே திரும்பி விட்டதால், 'உண்ணுமல் வந்திருப்பாரோ? இனிமேல் சமைத்துப் போடும் வரை அவர் காத்திருக்க வேண்டுமே' என்று பதறினுள். யது அம்மாள் என்ற வேலைக்காரி அப்போது அவளுடன் துணையாகப் படுத்திருந்தாள். "யது அம்மா! நான் என்னடி செய்வேன்? இந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கப் போறேன்?" என்று கலங்கியபடி கேட்டாள். அவரது மெல்லிய காலடி ஓசை கற்பரசியின் காதில் விழுந்தது போலவே, நஹவத்துக்குள் அவள் கிசுகிசுத்தது அந்தக் கற்பரசரின் காதில் விழுந்துவிட்டது. நஹவத்துக்கு வெளியே வந்து

நின்று, ''கவலைப்படாதேயம்மா, நாங்க சாப்பிட்டுவிட்டுத் தான் வரோம்'' என்ருர். உண்டாரோ, இல்லையோ அவனை நள்ளிரவில் வேலை வாங்கவில்லை!

''உன் கண்ணில் நீர் வழிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி'' என்று கவி பாடியது போலவே சாரதை படுகிற சிறு துன்பமும் அவருக்குப் பெரிய வாதையாக இருக்கும். அயராத உழைப்பில் அவள் இன்பமே கண்டதால்தான் அவர் அதைப்பற்றிக் கவலைப்படவே யில்லை. ஒரு முறை அவளுக்குத் தலைவலி வந்து கஷ்டப்பட்டாள். அவளுக்குத் தலைவலி வந்தது அவருக்குப் பொறுக்கவில்லை. ராமலாலிடம், ''அப்பா, சித்திக்குத் தலைவலி வரலாமோ? சித்தி அவஸ்தைப்படலாமோ?'' என்று அவனுக்குத் தலைவலி வருகிறவரை தொணப்பிவிட்டார்!

அவளிடமிருந்த பிரியம் காரணமாக அவளது எதிர்காலத்தைப்பற்றி அவர் அவ்வப்போது சிந்திக்கலாஞர். ஆத்மிகமாக அவளது எதிர்காலத்தைப்பற்றிக் கவலை கொள்ள ஏதுமேயில்லை. ஆனல் லௌகிகமாக அவளுடைய எதிர்காலத்தைப்பற்றி எண்ணி அவர் சில ஏற்பாடுகள் செய்தார். இது விஷயமாக அவர் பேசும்போதெல்லாம் தேவிக்குச் சொரேல் என்று இருக்கும். அவர் ஜீவியவந்தராக உள்ள வரையில் அவளது எதிர்காலத் தேவைகளைப்பற்றித் தனியாக எண்ண வேண்டிய அவசியமே இல்லை அல்லவா? பிரத்தியேகமாக அவளுக்கென்று அவர் ஏற்பாடு செய்கிருர் எனில் அதற்கு என்ன பொருள்? 'சர்வேசுவரி, என்னை இப்படி வேறு சோதிக்கப் போகிருயா?' என்று எண்ணக் கூடாத ஒன்றை எண்ணி அஞ்சி நடுங்குவாள் சாரதை.

ஒரு நாள் அவர் சாரதையின் ஒரு மாதப் பராமரிப்புக்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் போட்டார். பணம் காசு விவகாரத்தில் ஈடுபாடே காட்டாத அவர் இப்படிக் கணக்குப் போடுவது அம்மாவுக்கு விந்தை வேதனையாக இருந்தது. ஆனல் தம்மையே சார்ந்து நின்ற அந்த ஜீவனுக்கு - தாம் கைப்பற்றிய தர்மபத்தினிக்கு - கடமையைச் செய்ய வேண்டும் என்றே துறவி ராமகிருஷ்ணர் தமது பணத் துறவுக்கும் சிறிது துறவு தந்தார்.

''மாசம் முழுக்க உனக்கு எத்தனை செலவாகும்னு நினைக்கிறே?'' என்று ஒரு நாள் அவளை வினவினர்.

ஏன் இப்படிக் கேட்கிருர் என்று குழம்பிய சாரதை, ''அஞ்சு இல்லாட்டா ஆறு ரூபாய் இருந்தால் போதும்'' என்ருள்.

விலைவாசிகள் மிக மலிவாக இருந்த அக்காலத்தில் ஆடம்பரத் தேவையே இல்லாத அம்மாவுக்கு இத்துணைச் சொற்பமான தொகை போதுமாயிருந்தது!

ராமகிருஷ்ணர் மீண்டும் ஏதோ கணக்குப் போட்டார். "ஆமாம், ராத்திரியில் நீ எத்தனை சப்பாத்தி சாப்பிடுவே?" என்று வினவினார் மனையாளிடம்.

சாரதையின் முகம் சிவந்தது. அவரது சாப்பாட்டு அளவுக்கு அவள் கணக்குப் பார்த்ததில்லை; சீடர்களின் உணவுக்கும் அளவு வைத்துக்கொண்டதில்லை. அதற்குக் காரணம் அன்னையன்பு. இப்போது தன் சாப்பாட்டின் அளவைச் சொல்ல அவள் கூசினாள். இதற்குக் காரணம் அவளது இயல்போடு பின்னி வைத்திருந்த நாணம்.

"....ம்?" மீண்டும் வினவினார் பதி.

"என்னன்னா இது? ஒரு பொம்மனாட்டியைப் பார்த்து இப்படிக் கேட்பாளா?" என்றாள் பத்தினி.

"காரணமாகத்தான் கேட்கிறேன், சொல்லு" என்று ஊக்கினார் அவர்.

எல்லையில்லாத வெட்கத்துடன், "அஞ்சு, இல்லாட்டா ஆறு சப்பாத்தி சாப்பிடுவேன்" என்று முனகினாள்.

அவர் மீண்டும் கணக்குப் போட்டார். "நீ சொன்னது சரிதான். அஞ்சாறு ரூபாயிலே நீ ஒரு மாசத்தை ஓட்டிடுவே. அப்படீன்னா உனக்கு என்று அறுநூறு ரூபாய் மூலதனம் வெச்சுட்டாப் போறும். அந்த வட்டியிலே பிழைச்சுக்குவே" என்றார்.

அவளுக்குத் திகீர் என்றது.

ராமகிருஷ்ணர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் பவதாரிணி ஆலயத்திலிருந்து அவருக்கு மாதம் ஏழு ரூபாய் மானியம் அளிக்கப்பட்டு வந்தது. அந்தத் தொகையிலிருந்து அவர் அறுநூறு ரூபாயைத் தமது அத்தியந்தச் சீடர் பலராம் பாபுவின் வசம் சாரதையின் பிற்கால உபயோகத்துக்கென அளித்தார். அவ்வாறே பிற்பாடு பலராம் பாபு ஆறு மாதத்துக்கொருமுறை சாரதைக்கு முப்பது ரூபாய் வட்டித்தொகை அனுப்பி வந்தார்.

தனிகர்களான சீடர்கள் பலர் இருந்தபோதிலும், ராமகிருஷ்ணர் தாமே மனையாளின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்தார். எப்பேர்ப்பட்ட தர்மமூர்த்தி!

ஆனல் தர்மத்தை ரசிக்கிற நிலையில் தேவி இல்லை. அவர் செய்கிற ஏற்பாடுகள் அபசகுனங்களாக அவளது அகச்செவியில் அவலக்குரல் கொடுத்து அலறின.

சாரதையோ, அல்லது சீலமுள்ள வேறு வேதியர்களோ, தீண்டிய உணவைமட்டுமே புசித்து வந்த ராமகிருஷ்ணர் இப்போது பலதரப்பட்ட வீட்டாரின் அழைப்பை ஏற்று அங்கெல்லாம் சென்று உணவு ஏற்ருர். அவர் எங்குமே அன்ன பிட்சை ஏற்காமல், மற்ற உணவு வகைகளைத்தான் ஏற்ருர். என்ருலும் இதுவுங்கூட அன்னைக்கு அச்சமூட்டியது. ''எல்லார் கையிலேருந்தும் நான் எப்போ உணவை அங்கீ கரிக்கிறேனே, அப்போ எனக்குப் போங்காலம் நெருங்கிடுத் துன்னு அர்த்தம்'' என்று அவர் கூறியது அவளுக்கு நினைவு வந்தது!

''இந்தத் தக்ஷிணேசுவரத்தை விட்டுட்டுக் கல்கத்தாவிலே நான் ராத்தங்கினு அப்புறம் ரொம்ப நாள் நான் உயிரோடு இருக்க மாட்டேன்'' என்று பிறிதொரு சமயம் சொன்னர்.

இப்போது அவர் கல்கத்தாவில் பலராம் பாபுவின் வீட்டில் இரவிலும் தங்கத் தொடங்கினர். தேவி விலவிலத் துப் போனள்.

ஒரு முறை நரேந்திரநாத் நீண்ட காலம் தக்ஷிணேசு வரத்துக்கு வராமலே இருந்தார். வயிற்றுக் கோளாறுதான் காரணம் என்று தெரிய வந்தது. ''நரேனை இப்போதே அழைத்து வாருங்கள்'' என்ருர் ராமகிருஷ்ணர்.

நரேந்திரநாத் வந்தவுடன் தமக்காக வைத்திருந்த அன்னத்திலும் கஞ்சியிலும் ஒரு பகுதியை அவருக்குக் கொடுத்து, அவர் உண்டபிறகு மீதம் இப்பதைத் தமக்குப் படைக்கச் சொன்னர்.

''சிஷ்யாள் சாப்பிட்ட சேஷத்தை குரு சாப்பிடுவ துண்டா? நான் உங்களுக்கு வேறே சமைச்சுக் கொண்டு வரேன் '' என்ருள் அம்மா.

''வேண்டாம், வேண்டாம். நரேன் உண்ட மிச்சத்தைச் சாப்பிடறதிலே எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை'' என்று கூறி அதையே பிடிவாதமாக உண்டார் ராமகிருஷ்ணர்.

'ஈசுவரி! கடைசியில் உன் சித்தம் இதுதானு?' என்று மௌனமாகக் கண்ணீர் வடித்தாள் அம்மா. ஈசுவரியின் சித்தந்தான் நடக்கும். மௌனத்தையும் கண்ணீரையும் தவிர மற்றவர் அங்கு என்ன செய்ய முடியும்?

27. தாரகேசன் உபதேசம்!

''உன் மனைவி என்பது யார்? உன் பிள்ளை என்பது யார்? நீ யார்? எங்கிருந்து வந்தாய்? சம்சாரம் என்பது வெகு விசித்திரம். சோதரா, இந்த உண்மைகளை உன்னிப் பார்ப்பாயாக.''

—ஆதி சங்கரரின் 'பஜகோவிந்தம்.'

திரிகால ஞானியான ராமகிருஷ்ணர் தமது முடிவுக்கு இன்னொரு சூசகம் தெரிவித்தார். ''எப்போ பக்தாள் ஸ்வாமிக்குச் செய்யற மாதிரி இதுக்கு (தம் சரீரத்தைத் தொட்டுப்) பூஜை பண்ணருளோ அப்போ இதனுடைய மரணம் நெருங்கி வந்துடுத்துன்னு அர்த்தம்'' என்றார்.

சாரதையின் முகத்தில் கலவரம் பரவியது. ஏதும் பேசாமலே அகன்றாள்.

மறு நாள் அவள் நஹபவத் மூலையில் உள்ள தெய்வத் திரு உருவப் படங்களுக்குப் பூஜை புரிகையில், மாடிப் படிக்குக் கீழேயிருந்து நிவேதனம் எடுத்துவரப் போனபோது, நஹபவத்துக்குள் ராமகிருஷ்ணர் வந்து நின்றார், பொருள் பொதிந்த புன்முறுவலுடன்.

இங்கே அன்னத்தை அடுப்பிலிருந்து எடுத்த சாரதை நீர்த் திரையிட்ட கண்களைத் தாழ்த்திக்கொண்டாள். உள்ளே தெய்வங்களின் சித்திரங்களுக்கு இடையில் சாட்சாத் ராமகிருஷ்ணரின் புகைப்படமும் இருந்தது! தினமும் பூ வழிபாடும், நிவேதனமும் அவருக்கும் செய்யப்பட்டு வந்தன. 'ஆனால் இந்தப் பூஜை அவரது இறுதியைக் குறிக்குமாமே! நான் பூஜிப்பதும் ஒரு குற்றமாச்சே? அந்தக் குற்றத்தைக் கையும் மெய்யுமாகக் காண வந்துவிட்டாரே!' என வேதனை உற்றாள் தேவி.

அதுதான் அவருடைய புகைப்படங்களில் முதன் முதலாகப் போடப்பட்ட பிரதி. அது அழுக்குப் படிந்து கறுத்துப் போய் விட்டது. தக்ஷிணேசுவரத்துப் பிராமணர் ஒருவருக்கு அந்தப் பழைய பிரதி கொடுக்கப்பட்டது. அந்த மனிதர் சில காலத்துக்குப் பின் சொந்தக் கிராமத்துக்குப் போகும்போது அம்மாவிடம் இப்படத்தைக் கொடுத்தார். அவள் அதைத் தெய்வங்களின் இடையில் வைத்து வழிபடலானாள்.

நஹவத் உள்ளிருந்து ராமகிருஷ்ணரின் மதுர மோகனக் குரல் கேட்டது. ''ஓஹோ, இங்கே இப்படியாம்மா பண்ணிண்டிருக்கே!'' என்ருர். எட்டிப் பார்த்த சாரதை, அவரே ஆனந்த மயமாகத் தமது படத்துக்கு வில்வார்ச்சனை செய்வதைக் கண்டாள்!

சாரதைக்குத் தெளிவு வந்தது. அவளோ அவரோ அந்தப் படத்தைப் பூஜிப்பதில் அவசூசகம் ஏதுமில்லை, மற்றவர்கள் வழிபடுவதைப்பற்றித்தான் அவர் குறிப்பிட்டார் என்று புரிந்துகொண்டாள்.

இந்தப் புகைப்படமே அம்மாவின் வாழ்நாளில் அவளது மாபெருஞ் சொத்தாக இருந்தது. நாளாவட்டத்தில் ஏதோ ஓர் அற்புத முறையில் அந்தப் படத்தின் அழுக்குப் படிந்த கருமை நீங்கி அது சுத்தமாகிவிட்டது!

சைதன்ய மகாப்பிரபுவை அவருடைய மனையாள் விஷ்ணுப் பிரியாவே முதன் முதலாகப் பூஜித்தது போல், ராம கிருஷ்ணரையும் முதலில் தெய்வமாகப் பூஜித்தவள் சாரதை தான். இதிலே ஒரு பெரிய உண்மை அடங்கிக் கிடக்கிறது. எந்த மதத்திலுமே தத்துவங்கள், சடங்குகள் ஆகிய இரண்டு உண்டு. ஞானம், பக்தி என்ற இரண்டு உண்டு. இன்று ராமகிருஷ்ண மடங்களில் அறிவுப் போதனை, தத்துவப் பிரசாரம் ஆகியன நடைபெறுவது போலவே பரமஹம்ஸ குருமஹா ராஜுக்குப் பூஜையும் நடக்கிறது. தத்துவ ஞானத்துக்குக் குறிப்பாக அவருடைய சந்நியாசிச் சீடர்கள் மூல புருஷராயினர்; பூஜைக்கு அம்மா மூல காரணமானுள். தத்துவத்தில் ஆண்மையின் அழுத்தமும் கண்டிப்பும் அதிகம், பூஜையில் பெண்மையின் குழைவும் இனிமையும் அதிகம் என்பதைக் கவனிக்குமிடத்து இது ஓர் அற்புதப் பொருத்தமன்ருே?

சின்னச் சின்ன விஷயங்கள் அமங்கலத்துக்குக் கட்டியம் கூறின. ஒரு நாள் கோலாப் மா சாரதையிடம் வந்து, ''டாகுர் இத்தனை வைராக்கியத்தோட இருக்கச்சே அம்மா ஏகப்பட்ட நகையும் நட்டும் போட்டுண்டு இருக்கறது நன்னு இல்லேன்னு மனேமோகனுடைய அம்மா குறை சொல்லறு'' என்ருள். அந்த விஷயத்தைக் கோலாப் அம்மை முடிந்துகொண்டு வந்து சொல்லியிருக்க வேண்டியதேயில்லை! சாரதையின் மனநுட்பத்தைப் புரிந்துகொள்ளாமல் பலமுறை கோலாப் இவ்விதம் அசம்பாவிதமாகப் பேசி அவளுக்குத் துன்பம் தந்ததுண்டு.

இந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் சாரதை கையிலிருந்த ஜோடி வளையல்களைத் தவிர மீதி நகைகள் அனைத்தையும் கழற்றிவிட்டாள்.

மறுநாள் யோகின்-மா நம் அம்மாவைப் பார்த்ததும் அவளுக்குத் துணுக்குற்றது. சர்வமங்கள மூர்த்தியாக-சர்வாபரணபூஷிதையாக இருந்த அம்மா ஏன் இப்படி மூளி போல் நிற்கிருள்! யோகின்மா மிகவும் பிடிவாதம் பிடித்ததன் மீது அம்மா ஒரு சில நகைகளை அணிந்துகொண்டாள். ஆனல் எல்லா ஆபரண்ங்களையும் அணியவில்லை.

அதன்பின் என்றுமே அணியவில்லை.

ஆம்; இது நடந்து சில நாட்களில், 1885-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், ராமகிருஷ்ணர் தொண்டை வலி என்று படுத்தார். அதுவே அவரது உயிரைக் குடித்த புற்று நோயாக மாறியது.

தேவியின் உயிரையும் அரித்தெடுக்கலாயிற்று, அந்தக் கொடூர நோய்.

'ஆகா! என் பிரபு விளையாட்டை முடித்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டாரா?' என்று அடிக்கடி எண்ணி நடைப் பிணமானுள் அம்மா.

அவள் அவரிடம் கொண்டிருந்த அன்பு எந்தப் பத்தினிக்கும் எந்தப் பதியிடமும் உள்ள பிரியம் மட்டுந்தானு? அவள் அன்பே உருவானவள். அவர் அன்பே உருவானவர். அன்பே அன்பிடம் கொண்டிருந்த அன்பு அல்லவா அவரிடம் அவள் கொண்டிருந்த அன்பு?

தக்ஷிணேசுவரத்தில் அந்தக் கொடூர நோய்க்கான வைத்தியம் செய்யச் சௌகரியப்படவில்லை. எனவே 1885 அக்டோபரில் ராமகிருஷ்ணரைக் கல்கத்தாவில் சியாம்புகுர் சாலையில் ஓர் இடத்துக்கு ஜாகை மாற்றினுர்கள். புகழ் பெற்ற ஹோமியோபதி நிபுணர் மஹேந்திரலால் சர்க்கார் வைத்தியம் செய்யலானுர்.

சாரதையைத் தக்ஷிணேசுவரத்திலேயே விட்டு ராமகிருஷ்ணரும், சீடர்களும் சியாம்புகுர் சென்றனர். எந்தச் சமயத்தில் அவள் அவருக்கு மிகவும் அணுக்கத்தில் இருக்க வேண்டுமோ, அந்தச் சமயத்திலே பிரித்து வைக்கப்பட்டாள்.

காரணம் இதுதான்: சியாம்புகுர் வீட்டில் கோஷாப் பெண்டுகளுக்கான தனி இடம் ஏதுமில்லை. நீண்ட நெடுங் காலம் கோஷாவாகவே வாழ்ந்துவிட்ட அம்மா பரபுருஷர்

களின் பார்வையில் தத்தளிப்பாள் என்றே அவளை இங்கேயே விட்டுச் சென்றார் ராமகிருஷ்ணர்.

அவள் மரக்கட்டை யாகிவிட்டாள். தக்ஷிணேசுவரத்திலே ராமகிருஷ்ணரும் இல்லை; அன்புக் குழந்தைகளும் இல்லை. அவள்மட்டும் வெட்டு வெட்டென்று பொழுதை நெட்டித் தள்ளிக்கொண் டிருந்தாள். கணவர் உயிருக்குப் போராடும் போது மனைவிக்குக் கோஷா முறையா முக்கியம் என்று தோன்றலாம். ஆனால் அவளுக்கு அவரிடமிருந்த அன்பை விடவா நமக்கு அவரிடம் அதிக பக்தி? பதி சுசுருஷை, அடக்கம் இரண்டுமே அவளது பிறவிப் பணிகள். அடக்கத்தை விசேஷமாகக் கொண்டிராத நவயுகப் பெண்களுங்கூடப் பதியிடம் சிறந்த அன்பு பூண்டு பணி செய்யக்கூடும். எனவே இக்காலப் பெண்களுக்கு வழி காட்டவே அம்மா, பதி சுசுருஷையையும் இரண்டாவதாக வைத்து, அடக்கத்துக்கு முதலிடம் தந்தாளோ?

கோலாப்கூட அம்மாவைப் பற்றித் தவறாக எண்ணி விட்டாள். ''அம்மாவுக்குத் தான் மகாபட்ட கோஷான்னு ஒரு பெருமை. வரவாளுக்கெல்லாம் வாரி வழங்கிண்டு தர்பார் நடத்தறதிலேயும் அம்மாவுக்கு ஒரு குதூகலம். இதெல்லாம் பிடிக்காமல், அம்மாவிடம் கோவிச்சுண்டுதான் டாகுர் அவளை விட்டுட்டுச் சியாம்புகுருக்குப் போய்விட்டார்'' என்று யோகினம்மையிடம் கூறினாள் கோலாப்.

அம்மாவிடம் வந்தாள் யோகின்.

துயரில் ஆழ்ந்திருந்த அம்மா யோகினைப் பார்த்ததும் ஆனந்தம் கொண்டாள். ''நீங்க அன்னிக்கு எனக்குப் போட்ட பிச்சோடாவை அவிழ்க்கப் பிடிக்காமே, அப்புறம் இரண்டு நாள் தலைக்கு ஸ்நானம் பண்ணாமலே இருந்தேன். என் யோகின் கொண்டை போட்டா அதுக்குத் தனி மவுசு தான்'' என்றாள் புன்சிரிப்புடன்.

'அடடா, அம்மா குழந்தைபோல் பேசுகிறாளே! அங்கே டாகுர் உயிருக்குப் போராடுகிறார். இந்தக் கூந்தல் அலங்காரம் என் மங்கள மாதாவுக்கு இன்னும் எத்தனை நாள் தக்குமோ?' என்று உள்ளூற அழுதுகொண்டாள் யோகின்.

பேச்சுவாக்கில் கோலாப்பின் குற்றப் பத்திரிகையையும் அம்மாவிடம் பிரஸ்தாபித்தாள் யோகின்மா.

அம்மா அதைக் கேட்டதும் அனலில் விழுந்த புழுவாகக் காய்ந்து சுருங்கிவிட்டாள். ''டாகுர் என்கிட்ட

கோவிச்சுண்டு போய்விட்டாரா? அப்படியா, ஹா! ஹா!'' என்று கேவிக் கேவி அழுதாள்.

உடனே ஒரு வண்டி அமர்த்திக்கொண்டு சியாம் புகுருக்கு விரைந்தாள்.

படுக்கையோடு அஸ்தி பஞ்சரமாக ஒட்டிக் கிடந்த பதியிடம் வந்து விசித்தாள்.

''ஏனம்மா? ஏதுக்கு அழறே?'' என்று பிரேமை மயமாகக் கேட்டார் ராமகிருஷ்ணர்.

அந்தக் கேள்வியின் இனிமையிலேயே கோலாப் சொன்னது அபத்தம் என்று ருசுவாகிவிட்டது. இருப்பினும் அவர் வாயாலேயே அதைக் கேட்க விரும்பிய தேவி, விஷயத்தைச் சொன்னாள். ''என்கிட்ட உங்களுக்குக் கோபமான்னு? கோலாப் சொன்னாளே!'' கண்ணீரிடையே திணறினாள்.

''உன்கிட்ட எனக்குக் கோபமா! நடக்கிற காரியமா அது? அப்படியா சொன்னாள் அந்த கோலாப்? உன்னை அழ விட்டாளே அந்த அசடி! உன்னை யார்னு தெரிஞ்சுக்கலைபோல் இருக்கு. எங்கே அவள்? என்கிட்ட அனுப்பு'' என்று தமது புண்ணுண்ட தொண்டையால் பேசி அம்மாவின் புண்ணை ஆற்றி அவளைத் திருப்பி அனுப்பினார் புனிதர்.

பிறகு கோலாப்-மா அவரிடம் வந்தபோது அவளை வன்மையாகக் கடிந்துகொண்டார். ''அம்மா யாருன்னு உனக்குத் தெரியலை? அவ ஆதி சாரதாம்பிகையே, தெரியுமா? லோகத்துக்கு ஞானம் தரத்துக்காக அவ வந்திருக்கா? அவ ஞானமயீ. அவளை ஏதோ மனுஷின்னு நினைக்கிறே: அவ என்னுடைய சக்தி, தெரிஞ்சுக்கோ! சாம்பல் நிறப் பூனை சாம்பலுக்குள்ளே அடையாளம் தெரியாமல் பதுங்கிண்டிருக்கிற மாதிரி அவ தன்னைத் தானே ஒளிச்சுண்டிருக்கா. அவளைப் போய் அழவிட்டயே! முதல் காரியமா அவகிட்டப் போய் மன்னிப்புக் கேட்டுக்கோ!'' என்றார்.

கோலாப் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டாள். ''அம்மா, டாகுர் என்னை ரொம்பக் கோவிச்சுண்டுட்டார். நான் யோசனையே இல்லாமல்தான் அப்படி உளறிவிட்டேன்'' என்று அழுதாள்.

அம்மா மறுமொழி ஏதும் சொல்லவில்லை. சிரித்துக் கொண்டே கோலாப்மாவின் முதுகை மும்முறை தட்டிக் கொடுத்தாள். ''பிரிய கோலாப்'' என்று மும்முறை கூறினாள்: கோலாப்பின் இதயம் குளிர்ந்தது.

ஆதியில் கோலாப் தன் ஒரே மகளைப் பறி கொடுத்து விட்டுத் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தாள். அவளுக்கு மல்லுக் கட்டி வயிறு புடைக்க உணவு படைத்தே, அதிலுள்ள உப்பினுல் புத்திர சோக உணர்வைக் குறைத்தவள் சாரதை. சோகத்துக்கு ஆளாக இருந்த அந்தத் தேவியிடமே இப்போது குழந்தையாக ஒட்டிக்கொண்டாள் கோலாப்.

கோலாப் அவ்வப்போது அசட்டுத்தனம் செய்தாலும், அவளுக்கு அம்மாவிடம் உள்ள ஒட்டுதல் அபரிமிதமானது. ஒரு பழைய உதாரணம்: கோலாப் ராமகிருஷ்ணருக்கு உணவு பரிமாறிய காலங்களில் இரவு வெகு நேரம் வரையில் அவருடன் உரையாடிவிட்டு நஹவத்துக்குத் திரும்புவாள். நஹவத் மாடிப் படிக்கட்டுக்குக் கீழேதானே சமையலும் சாப்படும் நடந்தன? அங்கே பாதுகாப்புக் கிடையாது. எனவே அம்மா விழித்திருந்து கோலாப்பின் உணவுக்குக் காவல் இருப்பாள். ஓர் இரவு அம்மாவாலேயே தாங்க முடிய வில்லை; "என்னுலே முடியவில்லை. பூனையோ நாயோ எது வேணுலும் தின்னுட்டுப் போகட்டும்" என்று வாய்விட்டுச் சொன்னுள். அவள் 'ம்' என்ருல்கூட எவ்வாருே கிரகித்துக் கொள்ளும் ராமகிருஷ்ணரின் செவியில் இந்த வார்த்தைகள் விழுந்துவிட்டன. கோலாப்பை மிகவும் கடிந்துகொண்டார். அப்படியும் கோலாப்போ, "நீங்கதான் அம்மா அலுத்துக் கருன்னு சொல்றேளே தவிர, வாஸ்தவத்திலே அம்மா என் விஷயமா சலிச்சுக்கவே மாட்டா. பெற்ற பெண்ணுக்கு மேலே என்னைப் பிரியமா வைச்சுண்டிருக்கா" என்று சொல்லி விட்டு, தனது வழக்கத்தைத் தொடர்ந்தாள்.

அம்மாவே அதிசயமாகக் கோபம் கொண்டாலுங்கூட அவளது அரிய குழந்தைகள் அந்த அதிசயத்தை லட்சியம் செய்யக் காணுேம்!

ராமகிருஷ்ணர் சியாம்புகுரில் இருக்க, தக்ஷிணேசுவரத்தில் கொட்டுக் கொட்டு என்று தனித்திருந்த தேவி, பவ முகர்ஜி என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தி யிடம் பாடம் சொல்லிக் கொள்ளத் தொடங்கினுள். நீண்ட நெடுங்காலமாகப் படிப்பை விட்டிருந்த சரஸ்வதி தேவி மீண்டும் மிகுந்த சிரத்தையோடு ஆரம்பப் பாடப் புத்த கங்களைப் படிக்கலானுள். அந்தச் சிறிய பெண் நம் சரஸ்வதி தேவிக்குப் பரீட்சை வைத்துப் 'பாஸ்' கொடுத்தாள்! ஆயினும் அம்மாவுக்குக் கடைசிவரை படிக்கத்தான் தெரியுமே தவிர, எழுதுவதில் பயிற்சியே இல்லை. வெகு காலத்துக்குப் பின்

பக்தர் ஒருவருக்குத் தன் கையெழுத்துப் போட்டுத் தருவதற்காகப் படாத பாடு பட்டாள் தேவி. ஆனால் எழுத்து வந்தால் தானே! கிறுக்கிக் கிறுக்கிப் பார்த்தாள். ''அடியம்மா! என்னாலே முடியலே'' என்று கடைசியில் தோல்வியை ஒப்புக்கொண்டாள் சரஸ்வதி! புத்தகத்திலும் எழுத்திலுமா ஞானம் இருக்கிறது?

சியாம்புகுரில் அம்மா இல்லாமல் ராமகிருஷ்ணரும் சீடர்களும் அவதிப்பட்டார்கள். குறிப்பாக, ரணமுண்ட அவரது தொண்டைக்கு இதமாக யார் சமைப்பது?

''அம்மாவை அழைத்து வரவா?'' என்று சீடப்பிள்ளைகள் கேட்டார்கள்.

''இங்கே கோஷா அநுஷ்டிக்க முடியாதே! இருந்தாலும் இங்கே வர்றதில் அவளுக்கு ஆட்சேபம் இல்லாவிட்டால் எனக்கும் ஆட்சேபம் இல்லை'' என்றார்.

சீடப் பிள்ளைகள் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து விஷயத்தைச் சொன்னவுடனே அம்மா அவர்களோடு புறப்பட்டு விட்டாள். அதன்பின் அவளால் கோஷா விரதத்தைப் பெரிதாக எண்ண முடியவில்லை.

ஆயினும் சியாம்புகுருக்கு வந்தபின், சூழ்நிலை பாதகமாக இருக்கிறது என்பதால் கோஷா முறையை அடியோடு விட்டுவிட்டு அவள் மனம் போனபடி இருக்கவில்லை. இங்கேதான் அவளது பெருமை பொதிந்திருக்கிறது. சூழ்நிலை முற்றும் பாதகமாக இருந்தபோதிலும், கணவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண்டு, தன் கோஷா விரதத்தையும் காத்துக்கொண்டாள். அங்கு ஒரே ஒரு குளியலிடந்தான் உண்டு. எனவே இரவு இரண்டு மணிக்கே எழுந்து ஜபம் செய்துவிட்டு, மூன்று மணிக்குக் குளியலை முடித்துக்கொண்டாள். இரண்டாவது மாடியில் மற்றவர் பார்வை படாமல் ஒரு தாழ்வாரம் இருப்பதைப் பார்த்து, அங்கேயே தனக்கு 'ஜாகை' வைத்துக் கொண்டாள். அங்கே தான் சமையலும் செய்தாள். பதிக்கு உணவு தயாரித்ததும், மூத்த கோபாலையோ லாடுவையோ கீழே அனுப்பி அவருடன் இருப்பவர்களை வெளியே அனுப்பி வைப்பாள். பிறகு கீழிறங்கி வந்து அவருக்குப் பரிமாறுவாள். மீண்டும் மாடிக்குப் போய்விடுவாள். இரவு பதினொரு மணிக்குச் சந்தடி ஓய்ந்த பின், ராமகிருஷ்ணர் படுத்திருந்த ஹாலுக்கு அருகேயிருந்த சிறிய அறைக்கு வந்து முடங்கிக்கொள்வாள்.

இப்படி இரண்டு மாதங்கள் ஓடின. பகவானின் நோய் முற்றியது. வைத்தியரின் ஆலோசனைப்படி காசிப்பூர்ச் சாலை

யில் இருந்த காற்றேட்டமுள்ள விஸ்தாரமான ஒரு வீட்டுக்கு அவரை இடம் மாற்றினர். இங்கே அன்னைக்கு அதிக சிரமம் இருக்கவில்லை. சரீர சிரமம் குறைந்தது. மனத்துக்குச் சிரமம் அதிகரித்தது, எலும்பும் தோலுமாகி வரும் பதி தேவரைக் கண்டு!

தமது மரணத்தின் நெருக்கத்தைப்பற்றி அவர் குறிப்பிட்ட சூசகங்களில் இதுவரை நிறைவேருதிருந்த இன்னென்றும் இப்போது நடந்துவிட்டது. ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்திலேயே இருப்பதாக எண்ணிக்கொண்டு சில அடியார்கள் இனிப்புப் பணியாரங்களுடன் அங்கே சென்றனர். அவர் சுகவீனமுற்றுக் கல்கத்தாவுக்குச் சென்று விட்டார் என்று தெரிந்துகொண்டனர். உடனே அவர்களுக்கு என்ன தோன்றியதோ, அங்கிருந்த ராமகிருஷ்ணரின் திரு உருவப் படத்தின் முன் பட்சணங்களை வைத்து இறைவனுக்கு நிவேதிப்பது போல் அதனை நிவேதனம் செய்தனர். பிறகு 'டாகுரின் பிரசாதம்' அனைவருக்கும் வழங்கப்பட்டது. இந்தச் செய்தி ராமகிருஷ்ணரின் காதுகளை எட்டியதும் அவர், ''அவா ஏன் அப்படிப் பண்ணினு? தக்ஷிணேசுவரத் திலே அம்மா (காளி பவதாரிணி) இருக்கச்சே அவளுக்கு நைவேத்தியம் பண்ணுமெ ஏன் இதனுடைய (தமது) படத் துக்கு நிவேதிச்சா?'' என்ருர்.

சாரதைக்குப் பூர்வத்தில் அவர் சொன்னது நினைவு வந்தது. அவளது உயிர்நாடிக்குள் அமங்கலிய பீதி குடைந்து சென்றது.

'பொதுவாகவே உயிரும் உடலும் கொண்டு ஒருவர் வாழ்ந்து வரும்போது அவரது படத்துக்கு நிவேதிப்பது அச்சானியம் என்பார்களே!'— பேயறைந்தாற்போல் உட் கார்ந்திருந்த அம்மாவின் எண்ணங்களைப் புரிந்துகொண்டார் ராமகிருஷ்ணர். ''பிரியே, கலங்காதே! இனிமேல் என் படத்தை வீடு வீடாக வச்சு இந்த மாதிரி பூஜை பண்ணப் போரு! ஆமாம், இதை நான் சத்தியப் பிரமாணமாகச் சொல்றேன்'' என்ருர்.

தம்மைப்பற்றி 'இந்தக் கட்டை' என்றே, அல்லது தமது உடலைத் தொட்டு, 'இது' என்றே சொல்லும் ராமகிருஷ்ணர், 'என்' என்றும் 'நான்' என்றும் இத்தனை அழுத்தமாகச் சொன்னது சாரதைக்கு அதிசயமா யிருந்தது. அந்த அதிசயம் அவளை இனம் புரியாமல் ஆட்டியும் வைத்து விட்டது.

பக்கத்திலிருந்த ராமலாலைப் பார்த்து, ''பவதாரிணிக்கு நீ பணி செஞ்சிண்டு இருக்கப் போறே! அதனாலே உனக்கு ஒரு குறைவும் இருக்காது'' எனக் கூறிய ராமகிருஷ்ணர், சாரதையின் புறம் திரும்பி, ''அதுக்கு அப்புறம் நீ காமார் புகுரிலே போய் இரு. லக்ஷ்மியையும் கொஞ்ச நாளைக்கு உன் கவனத்திலேயே வச்சுக்கோ. அவளுக்கு அன்ன வஸ்திரத்துக்கு வசதி இருக்கு. நீ ஒண்ணும் செய்யணும் என்கிறது இல்லை. ஆனால் அவ ஊரை விட்டு எங்கேயும் போயிடாமப் பார்த்துக்கோ!'' என்றார்.

குடும்ப விஷயங்களுக்கு இவ்விதம் அறிவுரை கூறிய கடமை வீரர், மீளவும் ராமலாலைப் பார்த்து, ''சித்தி காமார்புகுரிலேயே இருந்துண்டு இருக்கணும். நீதான் கவனிச்சுக்கணும்'' என்றார்.

இந்த உருக்கமான சூழலில்கூடப் பாறுங்கல் இதயத்துடன் பேசினார் ராமலால்: ''சித்திக்கு எங்கே இஷ்டமோ அங்கே இருந்துப்பா.... எனக்கென்ன வந்தது?''

சித்தப்பாவின் மறைவுக்குப் பின் சித்தி தனது பிறந்தகமாகிய ஜயராம்பாடியில் வசிக்கத்தான் பிரியப்படுவாள் என்று ராமலால் எண்ணினார்—அப்படிச் செய்தால் தமக்கு ஒரு பொறுப்புக் கழிந்ததாகும் என்ற நிம்மதியில் இப்படிப் பேசினார்.

''ஏண்டா கொழந்தே! உனக்கு என்னமா இப்படிப் பேசத் தோணறது? நீ ஒரு புருஷப் பிரஜையாப் பிறந்திருக்கிறது எதுக்காக?'' என்று கேட்டு ராமகிருஷ்ணர் பேச்சை முடித்தார்.

நிரந்தரமாக விடை கொள்ள அவர் தீர்மானித்து விட்டார் என்று சாரதைக்கு வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அவர் தீர்மானித்தாரோ அல்லது அம்பாள் தீர்மானித்ததைத் தமது வழக்கப்படி அவர் எதிர் நீச்சே போடாமல் ஏற்று விட்டாரோ? 'இந்தச் சமயத்தில் நான் எதிர்நீச்சல் போட்டால்மட்டும் பலன் இருக்குமா? இருந்தாலும் மூச்சைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு முயற்சி செய்து வைப்போமே! முன்பு நான் நேர்ந்துகொண்டபோது பிரத்தியட்ச வரப் பிரஸாதினியாக வந்து காத்தாளே சிம்மவாஹினி! இப்போது. இவரை மிருத்யு வந்து தீண்டாதபடி மிருத்யுஞ்ஜயனை தாரகேசுவரனிடம் போய்த் தவமிருந்து பார்க்கிறேன்.'

சாரதை தாரகேசுவரத்துக்குப் போவதை ராமகிருஷ்ணரும் ஆட்சேபிக்கவில்லை.

தாரகேசன் சந்நிதியில் போய் விழுந்தாள் சாரதை. மாங்கலியப் பிச்சை கோரி இரண்டு நாட்கள் எழுந்தாளில்லை. அன்னமும் தண்ணீரும் இன்றிப் பிராயோபவேசம் இருந்தாள்: 'கால ரூபிணியான காளியின் சங்கற்பத்தைக் காலகாலன் மாற்ற மாட்டானா? அதற்கு ஒரு சமிக்ஞை நமக்குத் தெரிவிக்க மாட்டானா?' என்று ஒவ்வொரு விநாடியும் எதிர் பார்த்தபடி இரண்டு நாட்களைக் கடத்தினாள். 'ஒன்று அவர் பிழைக்க வரம் பெறுவேன்; அல்லது என் உயிரை ஈசுவரன் சந்நிதியில் விடுவேன்' என்ற உறுதியுடன் வயிறு காய, நாக்கு உலரக் கிடந்தாள்.

இரண்டு நாட்கள் ஓடின. நள்ளிரவு. திடுமென ஒரு பேரொலி கேட்டது. ஏராளமான பானைகளை ஒருசேர உடைத்தால் உண்டாகும் ஒலிபோல் இருந்தது. மண்பானையா அல்லது மாயக் குயவனார் மண்ணாற் புனைந்த மனிதப் பிண்டம் என்ற பானையா? பிண்டப் பானைதான், அண்டப் பானையும் கூடத்தான். காலகாலனே சம்ஹார ருத்ரனாகி அண்ட பிண்டங்களை உடைத்தெறிவது போல் சாரதைக்குத் தோன்றியது. எங்கேயோ ருத்திரன் ஊதும் கொம்பொலி அவள் செவிகளில் வந்து புகுந்து கூவியது: ''சாரதே! இந்த உலகில் கணவன் என்பது உண்மையில் யார்? அவன் யாருக்குக் கணவன் அல்லது எதற்குக் கணவன்? மனைவி எனப்படுபவள் யார்? இந்த உலகில் யாருக்கு யார் உறவு? யாருக்காக யார் உயிரை விடுவது?''

தாரகேசன் அவள் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. ஆயினும் அவளை அவன் அலட்சியம் செய்யவில்லை. அவளிடம் அந்தராத்மாவாகப் பேசிவிட்டான். பரம வைராக்கியத்தை உபதேசித்துவிட்டான்.

பகவத் சங்கற்பத்துக்கு மாறாகத் தான் எதுவுமே செய்வதற்கில்லை என்று சாரதைக்குத் தெள்ளத் தெளிவாகி விட்டது. ஆண்டவனை நிர்பந்தித்து வரம் பெறத் தனக்கு எந்த உரிமையும் இல்லை என்று உணர்ந்தாள். 'நீ விட்ட வழி, அப்பனே' என்று கண்ணீருடன் கூறிக்கொண்டு, தான் கிடந்த இடத்திலிருந்து எழுந்தாள். சந்நிதானத்துக்குப் பின்புறம் தேங்கியிருந்த அபிஷேக தீர்த்தத்தை அள்ளிக் குடித்து உண்ணாவிரதத்தை முடித்தாள். தோல்வியோடு காசிப்புருக்குத் திரும்பினாள்.

28. “என் அம்மா காளீ! என்ன பிழை செய்தேனடி?”

தூய ராகவா! உன்னைத் தொடர்ந்தே வருவேன். அப்போதுதான் என் பிரேம பாவத்துக்கு மாசு ஏற்படாமல் இருக்கும். எனக்குப் பதியே பகவான். மரணத்துக்குப் பின்னும் உன்னோடு கூடி இருப்பதே எனக்குக் கல்யாணம்,

—சீதா வசனம்: ஸ்ரீமத் ராமாயணம்,
அயோத்தியா காண்டம்.

தாரகேசுவரத்தில் நடந்தது அனைத்தும் ராமகிருஷ்ணருக்குத் தெரியும். அம்மா உள்ளே நுழைந்ததும், முகம் நிறையக் குறும்புச் சிரிப்புடன், ‘‘பிரியே! தாரகேசுவரம் போனாயே, ஏதாவது கிடைச்சுதா?’’ என்றார்.

தமக்குப் புற்றுநோய், உடல் இற்று வருகிறது, உலக வாழ்வு முற்றுப் புள்ளி காணப் போகிறது என்பதில் கவலையே இன்றி, விஷமம் செய்கிறார் பகவான்!

பரமேசுவரனின் சங்கற்பத்துக்குச் சரணாகதி செய்துவிட்டு, தன்னைத் தானே ஒருவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டு திரும்பிய சாரதை பதிதேவரின் கேள்வியில் நிலைகுலைந்து போனாள்.

அவரோ குறுநகையுடன் கேட்கிறார்: ‘‘என்ன, போன இடத்திலே ஒண்ணும் கிடைக்கல்லை; ஒண்ணுமே கிடைக்கல்லை; அப்படித்தானே?’’

மரத்து உட்கார்ந்திருந்தாள் தேவி. மரணப் படுக்கையில் இருந்த பகவான் ரணமுண்ட தொண்டை நோகப் பேசினார். ‘‘ஒரு சொப்பனம் கண்டேன்: மத்தகஜம் ஒண்ணு எனக்கு மருந்து தேடிண்டு போறது. எங்கேயும் மருந்து கிடைக்கல்லை. பூமியைத் தோண்ட ஆரம்பிக்கிறது. ஒரு வேளை பூமிக்கு அடியிலிருந்து மருந்து எடுத்துண்டு வந்து தருமோன்னு நினைச்சுக்கறேன். ஆனால் அது மருந்தை எடுக்கறதுக்குள்ளேயே கோபால் வந்து என்னை எழுப்பிட்டான். அது சரி, உனக்கு ஏதாவது கனா வந்ததோ?’’

தேவி அவரது படுக்கையில் முகத்தை அழுத்திக் கொண்டு தேம்பினாள். அவள் கண்ட கனவை அவரிடம் சொல்ல அவளுக்குத் திராணி இல்லை.

காளியன்னை கழுத்தை வளைத்துக்கொண்டு அவள் கனவிலே நிற்கிறாள். ''ஏனம்மா, கழுத்தை இப்படி என்னமோ மாதிரி வச்சுண்டிருக்கே?'' என வினவுகிறாள் சாரதை. ''அதோ, பார்த்தியா?'' என்று காளி ஆள்காட்டி விரலால் சுட்டுகிறாள். அவள் காட்டிய இடத்தில் ராமகிருஷ்ணரின் புற்று கொண்ட மிடறு தெரிகிறது. ''அது என் நெஞ்சிலே வந்திருக்கு. அதனாலேதான் கழுத்தைத் திருப்பிண்டிருக்கேன்'' என்கிறாள். ஆக, காளியன்னை அந்த நோயைத் தீர்த்து வைக்கப் போவதில்லை என்று நிச்சயமாகிவிட்டது.

நோயின் வலிக்குச் சிறிது ஆறுதலாயிருக்கிறதென்றே காளி கழுத்தை வளைத்துக்கொண்டாள் போலும்! ஆனால் இவர் கழுத்தை வளைத்துக்கொள்ளக்கூட இல்லையே! எதற்கு இப்படி நிவாரணமே இல்லாமல் கொடூரமான இம்சையை அநுபவிக்கிறார்? அன்பு மொழி தவிர வேறெதுவும் சொல்ல அறியாத இவருடைய தொண்டையிலா புற்றுநோய் வர வேண்டும்?

மலயமாருதம் போல் பேசினார் பகவான்: ''அம்மா, இந்தச் சரீரம் நன்னா அவஸ்தைப்படட்டுமே! உங்களுக்கெல்லாம் இந்த மாதிரி இம்சைகள் வரப்படாதுன்னுதான் இந்த ஒரு சரீரத்துக்குச் சேர்த்துவச்சு நோய் வந்திருக்கு. நல்லதுதானே?''

உலகின் பாபம் தீரவே சிலுவையில் அறையுண்ட இயேசுநாதனைப் போன்றவர் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர். அவருக்குப் பூர்வ கர்மம் கிடையாது. ஆனால் அடியார் பலரது வினையை இவர் வாங்கிக்கொண்டு, அவர்களது கர்மம் தீரவே இந்த வியாதியை அநுபவித்தார். பரம கருணை இதுவே. அதே சமயத்தில் பரமஞானமும் இதுவே: சரீரம் வேறு, ஆத்மா வேறு என்கிற பரம ஞான வாசகத்தை வாழ்ந்து காட்டினார். அத்தனை வியாதியையும் பொருட்படுத்தாமல் இன்மொழி பேசி வாழ்ந்தார்.

சாரதை உட்படப் பல சீடர்களுக்கு நேர இருந்த கொடுமைகளைத் தாமே வாங்கிக்கொண்டு கழுவாயாக நோயை அநுபவித்ததைச் சொன்னார். ஆனால் இவர் எப்படி அவர்களது இன்னல்களைத் தாம் ஏற்றாரோ, அதே போல் அவர்களும் பிற்காலத்தில் வேறு பலரது இன்னல்களை அநுபவிக்கத்தான் செய்தனர். ஒரு வாழை தன் கன்றை

வாழ வைத்துவிட்டு மடிகிறது என்றால், அந்தக் கன்றும் பிற்பாடு தன் கன்றுக்காக உயிர் மடியத்தானே செய்கிறது?

சோகச் சுமை தலையை அழுத்த, சாரதை படி ஏறிக் கொண்டிருந்தாள், குண்டான் நிறையப் பாலுடன். உலக மெல்லாம் சுற்றுவதுபோல் இருந்தது. தடாலென்று கீழே சாய்ந்துவிட்டாள். ஓசை கேட்டு ஓடி வந்த பாபுராம் அவளை ஆசுவாசப்படுத்தித் தூக்கினான். அவளால் அடி எடுத்து வைக்கவே முடியவில்லை. கணுவிலே எலும்பு பிசகிக்கொண்டு விட்டது. பாற்கடலில் சர்வ மங்களையான லக்ஷ்மி தோன்றி னாள். அறை முழுதும் ஓடும் பாலில் அமங்கலம் மூடிய சாரதை அலமந்து அமர்ந்தாள்.

ராமகிருஷ்ணருக்கு விஷயம் தெரிந்தது. இந்தத் துர்ச் சம்பவத்தால் சீடர்களிடம் ஏற்பட்டுள்ள பீதியை ஒரு கணத்தில் புரிந்துகொண்டார். அதைத் தெளிவிப்பதே தமது கடமை என்று கருதினார். எனவே, அந்த அவலச் சூழலிலும் ஹாஸ்ய உணர்வை எப்படியோ வரவழைத் துக்கொண்டார்: ''சரி, அம்மா விழுந்தது அவளுக்கு ஓய்வு கொடுத்துடுத்து. அம்மா தன் ஜன்மாவிலே ஓய்வு எடுத்துண்டதில்லையே! அந்தமட்டும் நல்லதுதான். ஆனா இந்தக் கட்டையோடபாடுதான் கஷ்டமாயிடுத்து. இதுக்கு யார் அம்மா மாதிரி பார்த்துப் பார்த்துப் பணிவிடை பண்ண முடியும்? இது யார் வச்சுத் தர கஞ்சியைச் சாப்பிட ணுமோ..ம்'' என்று முனகி முறுவலித்தார்.

சீடப் பிள்ளைகளின் சாம்பியிருந்த முகத்தில் சிறிது ஜீவ களை வந்தது.

''அம்மா உட்கார்ந்த இடத்திலேயே கஞ்சி போட்டுடுவா. ஆனா அதைத் துளித் துளியா உங்க வாயிலே விட்டு முழுங்கப் பண்ணறதுக்கும் அம்மாவாலேதானே முடியும்? அம்மா எப்படி இங்கே படியேறி வருவா?'' என்றான் பாபுராம்.

''எலே பாபுராம், ஒண்ணு பண்ணேன்!'' என்ற ராம கிருஷ்ணர், தமது நாசியைச் சுற்றி ஒரு நத்து இருப்பது போல் அபிநயித்துக் காட்டி, ''இப்படியாப்பட்ட அம்மாளை ஒரு கூடையிலே வச்சுத் தலைமேல் தூக்கிண்டு வாயேன்'' என்றார். சாரதாதேவி நத்துப் போட்டிருந்த காலம் அது!

பாபுராமும் நரேனும் துயரை மறந்து, விலா வலிக்கச் சிரித்தார்கள்.

அதை அடுத்த மூன்று நாட்கள் கோலாப்-மா ராம கிருஷ்ணருக்கு உணவு படைத்தாள். அதற்குமேல் சாரதை

யால் அந்த வீட்டிலிருந்துகொண்டே அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. வீங்கிய கால் 'விண்' 'விண்' என்று தெறிக்க விந்தி நடந்து அவருக்குக் கஞ்சி எடுத்துச் சென்ருள். அவர் கண்களை மூடிப் படுத்திருந்தார். பரம சாந்தம்! பரம சௌந்தரியம்!

''சாப்பிட நாழியாச்சுன்ன! சித்தே எழுந்திருக்கிறேளா?'' என்று மெதுவாகக் குரல் கொடுத்தாள் தேவி.

அவரது மெலிந்த உடலில் சிறிய ஆட்டம் கண்டது. கண்களைத் திறந்தார். எங்கேயோ தூர தேசத்தில் சஞ்சரித்துக்கொண் டிருந்த மனசு இன்னும் இங்கே வர மறுப்பது போல் இருந்தது. தூர தேசத்திலிருந்து பேசுவது போலவே அவரது குரலும் ஒலித்தது. ''இந்தக் கல்கத்தா ஜனங்களைப் பார்த்தியா? இருட்டுலே புழு நெளியற மாதிரி நெளிஞ்சுண்டிருக்குகள். அம்மா, இவாளையெல்லாம் நீதான் கவனிச்சுக்கணும்'' என்ருர் சாரதையிடம்.

'ஆகா! தமது சங்கற்பத்தை அவர் மாற்றிக்கொள்ளவே மாட்டாரா? பொறுப்பை என் தலையில் கட்டிவிட்டுப் போய்விடத்தான் போகிருரா?'—கலங்கினுள் அம்மா.

''நான் அபலை. என்னுலே முடியற காரியமா இது?'' என்று குமுறினுள்.

ராமகிருஷ்ணர் தமது திவ்விய சரீரத்தைத் தொட்டுக் காட்டி, ''இதுமட்டும் என்ன பெரிசாப் பண்ணிடுத்து? நீதான் இது பண்ணினதைவிட நிறையச் செஞ்சாகணும்'' என்ருர்.

தேவி புரிந்துகொண்டு விட்டாள்! பிசுபிசுத்துக் கிடந்த மனத்தில் தாற்காலிகமாக ஓர் அழுத்தம் உண்டாயிற்று. ''நடக்கவேண்டிய காலத்திலே எல்லாம் நடக்கும். அது கிடக்கட்டும். இப்போ இந்தக் கஞ்சியைக் கொஞ்சம் கொஞ்சமாக முழுங்குவேளாம்!'' என்ருள்.

தம்மைவிட அவள் நிறையச் செய்ய வேண்டும் என்று அவர் சொன்னது உயர்வு நவிற்சிப் பேச்சல்ல. அவரது அவதாரப் பணியைவிட அவளது அவதாரப் பணி பெரியது என்ற உள்ளார்ந்த உணர்ச்சியையே வெளியிட்டார். ராமகிருஷ்ணரின் தியாகத்தையும், ஞானத்தையும், மகா பாவங்களையும் முன்னேடியாகக் கொள்பவர்கள் குறைவாகவே இருக்க முடியும். குடும்பப் பொறுப்பு இல்லாத அவரைப் போல் உலக மக்கள் எல்லோரும் வாழ முடியாது. ஆனல் அனைவருமே-குறிப்பாகப் பெண்ணுகப் பிறந்த சகலருமே-

சாரதையின் உழைப்பு, எளிமை, அன்பு, அடக்கம் இவற்றை முன்னேடியாகக் கொண்டு வாழ வேண்டியவர்கள்தாம். அவள் ஒரே சமயத்தில் சந்நியாச தர்மம், கிருஹஸ்த தர்மம் இரண்டுக்கும் ஆதரிச மூர்த்தியன்றோ?

மனித வாழ்வின் உன்னதங்கள், எளிமைகள் இரண்டையும் உலகம் மறந்திருந்தபோது இந்தத் திவ்விய தம்பதியர் அவதரித்தனர். அவர் உன்னதங்களை எளிதாக வாழ்ந்தார். அவள் எளிமைகளை உன்னதமாக வாழ்ந்தாள். உன்னதங்களை வாழக்கூடிய பக்குவப் பிறவிகளுக்கு அவர் போதிய அளவு உதாரணம் காட்டிவிட்டதால் விடை கொள்ள முடிவு செய்து விட்டார். எளிமைகளை வாழ வேண்டிய அனைவருக்கும் அவள் இன்னும் எத்தனையோ உதாரணங்களைக் காட்ட வேண்டும் என்பதாலேயே தமக்குப் பிறகும் அவள் இங்கிருக்க வேண்டும் என்று கட்டளை இட்டார்.

அவர் அவளை விட்டுச் சென்றதற்கு இன்னோர் அற்புதக் காரணத்தை அவளே பின்னொருகால் வெளியிட்டாள்: ''முந்தைய அவதாரங்களின் மனைவிமார்கள், பதிக்கு முந்திக்கொண்டே சுமங்கலிகளாக மறைந்திருக்கிறார்கள். டாகுர் மட்டும் ஏன் தங்களை முந்திக்கொண்டார்?'' என்று பக்தர் ஒருவர் அம்மாவைக் கேட்டார். அவர் சொன்னது முற்றும் சரியல்ல. கண்ணன் மறைவுக்குப் பிறகுதான் ருக்மிணி முதலிய சில பத்தினிகள் தீக்குளித்தனர்; சத்தியபாமை முதலிய வேறு சில கிருஷ்ணபத்தினிகளோ ஐயன் மறைந்த பின் தவ வாழ்வு மேற்கொண்டனர். அது ஒருபுறம் இருக்கட்டும். நம் அம்மா சொன்ன பதிலைப் பார்ப்போம்: ''பிள்ளாய்! டாகுர் இந்த உலகத்திலே சகலத்தையும் அம்மாவாகவே பார்த்தார்னு உனக்குத் தெரியுமோன்னே? அந்த அம்மாவின் தன்மை என்னன்னு வெளிப்படுத்திக் காட்டறத்துக்காகவே என்னை இங்கே வச்சுட்டுப் போயிட்டார்.''

ஆகா, எத்தனை உயர்ந்த உண்மை! உலகையெல்லாம் அம்பாளாகப் பார்க்கிற பாவத்தை அவர் உணர்த்தினர். அந்த அம்பாள் உலகையெல்லாம் எப்படிப் பார்ப்பாள் என்பதை அவள் உணர்த்தினள்.

தம் இருவரின் அவதாரப் பணிகள்பற்றி அவர் அடிக்கடி பேசலானர். எப்படியும் எவரிடமும் செப்ப முடியாத உண்மைகளை அவர் அவளிடம் பாட்டிலும் செப்பினர்:

இப்புவி வந்து நான் ஒப்பி ஏற்ற துயர் எப்படி எவரிடம் செப்பிடுவேன்? அணிந்த காலணி அழுந்தக் கடித்தால் அணிந்தவனின்றி அப்பிணி எவர் அறிவர்? தன் முகம் காட்டத் தயங்கிச் சிவக்கும் அன்னியர் வீட்டுக் கன்னிகையானேன். பெண்ணாய்ப் பிறந்த என் பெரும் இடர்ப்பாட்டைச் சொன்னால் வருமோ? சொல்லவும் அறியேன்.

''ஒப்பி ஏற்ற இந்தத் துயர் எனக்கு மட்டுந்தானா, அம்மா? உனக்கும் அதே துயரந்தான்'' என்றார் ராமகிருஷ்ணர், தமது அன்பு மனையாளிடம். உலகத்தின் துயர்களைவதற்காக அவதார புருஷர்கள் ஏற்கும் துயர்களை யாரே அறிய முடியும்? வெளியிலே கூத்தடித்தாலும் ராமகிருஷ்ணரின் அகத்தில் இந்தத் துயர் ஒரு கோஷாவாக இருந்து வந்திருக்கிறது! அதனால்தான் நம்மைப் பெண்ணாய்ப் பிறந்ததாகப் பாடிக்கொண்டார்.

இன்னொரு நாள். காலனின் காலடி தவிர வேறு அரவமற்ற காசிப்புர் இல்லத்தில் ராமகிருஷ்ணர் சாரதையையே நீண்ட நேரம் பார்த்துக்கொண்டிருந்தார்.

''என்னவோ சொல்லணும்னு நினைக்கறேள். சொல்லாமெ கட்டுப்படுத்திக்கறேள். என்ன தோணினாலும் வெளிப்படச் சொல்லுங்கோன்னா!'' - வேண்டிக்கொண்டாள் சாரதை.

''நல்லது, தேவி! இந்தக் கட்டையே எல்லாத்தையும் தன்னந்தனியாப் பண்ண முடியுமா? நீ ஒண்ணும் செய்ய மாட்டாயா?''

''நான் பொம்மனாட்டி. என்னாலே என்ன செய்ய முடியும்?''

''இல்லை, அப்படி இல்லை. நீ நிறையச் செஞ்சாகணும்.''

தன் தலைமீது மயிரிழையில் தொங்கிக்கொண் டிருக்கும் கைம்மை என்ற வாளைப் பார்த்துக்கொண்டே ஒவ்வொரு விநாடியும் கதி கலங்கிக்கொண் டிருந்தாள் தேவி. ஏராளமான அடியார்களின் பாபங்களை ஏற்றுக்கொண்டிருந்த பகவான் அவற்றைத் தீர்ப்பதற்காக மாதக் கணக்கில் புற்றுநோயுடன் போராடிப் போராடி அடியோடு சக்தி இழந்துவிட்டார்.

தன் அறையிலிருந்த சாரதைக்குத் தூக்கி வாரிப் போட்டது! தான் கண்கண்ட காட்சி மெய்யானதுதானா? சயனத்தில் தமது சரீரத்தைத் திருப்பவும் சக்தியற்றுக் கிடந்த டாகுரா அதோ மின்னல் கொடிபோல் துள்ளி ஓடுகிறார்! வீட்டை விட்டு எங்கே ஓடுகிறார்?

அந்த நிலையிலுங்கூட கோஷாவான தேவியால் வீட்டுக்கு வெளியே வந்து பார்க்க முடியவில்லை. ராமகிருஷ்ணரின் அறைக்கு விரைந்தாள். கட்டில் காலியாக இருந்தது. சந்தேகமே இல்லை. அவர்தாம் அப்படி ராமசரம் போல் பாய்ந்தோடியிருக்கிறார். எதற்காக, எங்கே, எப்படிப் போனார்?

திக்பிரமை பிடித்த தேவி தன் அறையில் வந்து விழுந்தாள். மீண்டும் கண்களில் மின்னல் கொடி பளிச்சிட்டது. ஆம், அவரேதாம்! வெளியேயிருந்து திரும்பவந்து, தமது அறைக்குத் துள்ளிக்கொண்டு செல்கிறார்.

சாரதை அவரது அறைக்குச் சென்றாள். அங்கு ஏதுமே நடக்காததுபோல் ராமகிருஷ்ணர் படுத்திருந்தார்.

அவராக விஷயத்தைச் சொல்லாததால் அவளே கேட்டுவிட்டாள்.

"ஓ! நீ கவனிச்சுட்டியா? ஒண்ணுமில்லே! நிரஞ்ஜனும் மற்றப் பசங்களும், அங்கே தோட்டத்திலே பனை மரத்துலேயிருந்து பதநீர் இறக்கிச் சாப்பிடப் போனா. அந்த மரத்திலே ஒரு கருநாகம் சுற்றிண்டு இருந்தது, எனக்கு இங்கேயே தெரிஞ்சுடுத்து. அதுதான் அந்தப் பசங்களுக்குத் தெரியாம வேறே மார்க்கத்துலே அங்கே ஓடினேன். அந்தப் பாம்புகிட்ட 'இனிமே இங்கே தலை காட்டாதேயம்மா'ன்னு சொல்லி அனுப்பிச்சுட்டு, போன சுவடு தெரியாமல் வந்துட்டேன். இதைப் பகிரங்கப்படுத்த வேண்டாம்" என்றார்.

(நீண்ட காலத்துக்குப் பிறகு தேவி இச் சம்பவத்தை வெளியிட்டாள்!)

'பசங்களிடம்' இருந்த அன்பு அவரை அப்படி அமானுஷியமாக நடந்துகொள்ளச் செய்தது? ஆமாம். அவர்களிடம் அவருக்கிருந்த அன்புதான் எத்தகையது! இளமையில், "அம்மா, காளி, உன்னைப் பாராமலே இன்னொரு நாள் சென்றதே!" என்று கதறிய ராமகிருஷ்ணர், பிற்பாடு இந்தப் பசங்களுக்காகத் தவித்து, "என் பசங்களே! உங்களைப் பாராமலே இன்னொரு நாள் சென்றதே!" என்று கதறினார். அப்புறம் அந்தப் பசங்களும் ஒவ்வொருவராக அவரிடம் வந்தனர். உபதேசங்கள் பெற்றனர். அதன் வழி ஒழுகினர். தூய பிரம்மசரியம் காத்தனர். வீடு வாசல், படிப்பு பதவி எல்லாவற்றையும் விட்டு, சந்நியாசம் கொள்ளவும் தயாராயினர். பிற்பாடு உலக மகா ஆன்மிக ஸ்தாபனமாக ஆன ராமகிருஷ்ண சங்கம், அந்தப் பெயரைச் சூட்டிக்கொள்ளாமலே,

காசிப்புரில் ராமகிருஷ்ணரின் மரணப் படுக்கை யருகேதான் உருவம் பெறலாயிற்று.

பசங்களின் பக்குவத்தில் மகிழ்ந்து அவர்களை ஆண்டி களாக்கிப் பார்க்க அவாவினார் பகவான். புற்று நோயுற்ற தமது தொண்டையால் சிறிதேனும் விழுங்க முடிகிற இப்போதே அந்த ஆண்டிகளிடமிருந்து அமுது பெற அவாவினார். ''கண்மணிகளா! நீங்கள் பிச்சை எடுத்துச் சாப்பாடு கொண்டுவாங்கோ'' என்றார்.

ஒரு காலத்தில் வாலிப முறுக்கும், அறிவுச் செருக்கும் கொண்டிருந்த நரேந்திரன் இதைக் கேட்டதும் தனக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்ததுபோல் களித்து, ''முதலில் நம் அம்மாவிடம் பிச்சை வாங்குவோம்'' என்று குருபாயி-தோழர்களிடம் சொன்னான்.

அந்த அற்புதக் குழந்தைகள் சாரதையின் முன் கை நீட்டி நின்றன - உபநயன காலத்தில் வாமன மூர்த்தி அன்ன பூரணேசுவரியின் முன் ''பவதி பிக்ஷாம் தேஹி'' என்று நின்றதுபோல்!

அவள் அளித்த அன்னத்திலேயே ஞானமும் உட்சென்றது என்று முன்னமே கண்டோம். ஞான மயமான பெயர்களைச் சூட்டிக்கொண்டு பிரம்ம வித்யாம்பிகை, ஞானாம்பிகை என் றெல்லாம் பல ஸ்தலங்களில் அம்பாள் விளங்கியபோதிலும், ஆதிசங்கரர் காசியிலே உள்ள அன்னபூரணியிடமே வந்து தாமே, ''ஞானமும் வைராக்கியமும் பிச்சை தா'' என்று யாசித்தார்!

சாரதா தேவி தன் அருமந்தக் குழந்தைகளுக்கு அன்ன பிட்சை அளித்ததோடு நிற்கவில்லை. எதிர் காலத்தில் மகத்தான ராமகிருஷ்ண மடங்கள், புத்தகப் பதிப்பகங்கள் எழும்ப மகாலக்ஷ்மியின் கடாக்ஷமும் தேவை அல்லவா? எனவே, அவள் அக் குழந்தைகளுக்காகப் பிச்சையும் கொடுத்தாள். பிச்சைக் கலயத்திலே ஒன் றொன்றாகப் பதினாறு அணாக்களைக் கொட்டினாள்; கண்களி லிருந்து அமிருதமும் கொட்டிக்கொண் டிருந்தது. பூரண சந்திரனின் பதினாறாவது கலையே ஞானத்தின் நிறைவு என்பதை நினைவில் கொண்டு ஷோடசியாகிய நம் அம்மா பதினாறு அணாக்களைப் போட்டாள் போலும்! இந்தப் பிச்சை போட்ட தன்மூலம் ராமகிருஷ்ண சங்கத்தின் மூல நிதியாகவும் ஆகி விட்டாள்! ஆம், பிற்காலத்தில் ராமகிருஷ்ண ஸ்தாபனம் தோன்றியபோது துறவிகளாகிவிட்ட சீடர்கள்பேரில் அந்தச்

'சொத்து' இருக்க முடியாதாகையால், அது உலக வழக்கப்படி சந்நியாசம் பூணாத சாரதைக்கே சொத்தாயிற்று!

பசங்கள் ஆனந்த பரவசம் அடைந்தனர். முன்பெல்லாம் அவர்கள் தக்ஷிணேசுவரத்தில் குருநாதருடன் கொட்டம் அடித்து விட்டு இரவு வீட்டுக்குத் திரும்புமுன் அம்மாவிடம் வருகையில், ஏழை அம்மா எப்படியோ ஏழைப் பசங்களுக்கான வாகனக் கூலிகளையும் எடுத்து வைத்திருப்பாள். நள்ளிரவாகி அவள் உறங்கப் போய்விட்டாலுங்கூட, வாசற்படியில் சில்லறை மினுக்கிக் கொண்டு கிடக்கும். இன்று வள்ளிசாகப் பதினாறு அணாவை, கொடுக்கவே பிறந்த அவளது திருக்கரம் ஒன்றென்றாகப் போட்டது பசங்களின் நெஞ்சகத்தில் நீங்காமல் புகுந்துவிட்டது.

பசங்களை இப்படி உலுக்கி எடுத்த அம்மா, மரண வாடை வீசுகிற அந்தச் சூழலில் மணம் கமழும் மனநலத்தால் யோகின் மாவையும் உலுக்கிவிட்டாள்!

யோகின் பிருந்தாவனத்துக்குச் சென்று தவமிருக்க விரும்பினாள். டாகுரின் அநுக்கிரகத்தைக் கோரி வந்தாள் காசிப்புருக்கு. அவர் முகத்தில் ஒளி விசியது. ''பிருந்தாவனமா, பேஷ்! அவசியம் போய் வாம்மா! அங்கே சகலத்தையும் பார்ப்பே'' என்றார்.

தமக்கு உணவு கொண்டு வந்திருந்த சாரதையைக் காட்டி, ''யோகேன், இவா கிட்டச் சொல்லிண்டியா? இவா என்ன சொன்னா?'' என்றார்.

பிருந்தாவன யாத்திரைபற்றி அம்மா விசேஷமாக என்ன சொல்லக் கிடக்கிறது என்றுதான் யோகின் எண்ணினாள்.

அம்மாவும், ''நீங்கதான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லி, ஆசீர்வாதமும் பண்ணியிருக்கேளே? நான் என்ன பண்ணக் கிடக்கு?'' என்றாள்.

ராமகிருஷ்ணர் மீண்டும், ''யோகின்! அம்மாகிட்டே அநுமதி வாங்கிண்டு போ. அப்போதான் யாத்திரை நல்ல படியாகப் பூர்த்தியாகும்'' என்றார்.

சாரதை காலியான உணவுப் பாத்திரங்களுடன் விறுவிறுவென்று வெளிச் சென்றுவிட்டாள். யோகின் அவள் பின்னாலேயே சென்றாள். ஏனோ அவளால் பேச முடியவில்லை. அம்மாவின் பெருமை அவள் நெஞ்சிலே முட்டி நின்றது.

மறு நாள். பிருந்தாவனத்துக்குக் கிளம்புமுன் யோகின் மீண்டும் காசிப்பூர் வந்தாள். டாகுரை வணங்கியபின் சாரதையிடம் வந்து அவளது திருவடியில் விழுந்தாள். சாரதாதேவி உலகுக்கு அபயம் தரவே பிறந்த தனது கையை யோகின்மாவின்

சிரத்தில் அழுந்த வைத்து, அவளுடைய இஷ்ட தெய்வத்தின் மந்திரத்தைப் பன்முறை ஜபித்தாள்.

ராமகிருஷ்ணர் ஜீவியவந்தராக இருக்கும்போதே சாரதையின் அநுமதிக்கும் ஆசிக்கும் இடம் ஒதுக்கித் தந்துவிட்டதால் அவர் விடை கொள்ளும் நாள் நெருங்கிவிட்டதென்று உறுதியாயிற்று. திரண்டு வந்த அடியார்களிடம், பேச முடியாத தொண்டையால் அன்பு பொங்கப் பேசித் தீர்த்தார். உபதேசிக்க வேண்டும் என்ற எண்ணமும் தீர்ந்தது.

''எலே சசி, எனக்கு உபதேசிக்கிற ஆசையும் போயிடுத்து. அம்மாவைக் கூப்பிடு. அவளுக்குத்தான் இது ஏன்னு தெரியும். அவ மகாமதி'' என்றார்.

சசி சாரதையை அழைத்து வந்தார்.

''பிரம்மத்தைத் தவிர வேறெந்தப் பிரக்ஞையும் எனக்கு இல்லே. இது ஏன், ப்ரியே?'' என்றார்.

பிரம்மம் உலகமாக வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறது. இந்த வேஷத்தைத் திருத்தவே அது அவதாரம் நிகழ்த்துகிறது. வேஷத்தைச் செம்மை செய்ய நமது அவதார புருஷர் உபதேசம் தந்தார். இப்போது வேஷம் அவர் மனசிலிருந்து போய்விட்டது. ஸ்வரூபம்மட்டுமே நின்றது. அவதாரம் முடியப் போகிறது என்பதுதவிர இதற்கு வேறென்ன அர்த்தம்?

இதை எப்படி வாய்விட்டுச் சொல்வாள்? 'மகாமதி' ஏதும் பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு கண்ணீரைச் சுண்டி எறிந்தது!

1886 ஆகஸ்டு பதினைந்தாம் தேதி. தலையணைகளின்மீது சாய்ந்திருந்தார் ராமகிருஷ்ணர். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. லக்ஷ்மியைப் பிடித்துக்கொண்டு அம்மா வந்து நின்றாள். ராமகிருஷ்ணருக்கு உலக நினைவு தப்பிவிட்டதென்றும், இனி அவர் பேச முடியாதென்றும் எல்லோரும் நினைத்த அச்சமயத்தில் அம்மாவைக் கண்டதும் அவர் நல்ல நினைவுடன் தெளிவாகப் பேசினார்: ''ஆகா! நீ இங்கேயேதான் இருக்கியா? பார்த்தியா, நான்தான் எங்கேயோ போறாப்பலே இருக்கு....ஜலத்திலே அளைஞ்சிண்டு எங்கேயோ போறாப்பலே இருக்கு.''

அம்மா விம்மி விம்மி அழுதாள்.

தமது ஆயுட்கால அன்பு முழுவதையும் ஆயுள் முடிகிற சமயத்தில் ஒன்று திரட்டிப் பேசினார் பகவான்: ''அம்மா,

துக்கப்படாதே! உனக்கு ஒரு கவலையும் வேண்டாம். இத்தனை நாளா இருந்தாப்பலேயே இனியும் இருக்கப் போறே! பசங்கள் உன்னை நன்னுப் பார்த்துப்பா. எனக்கு எப்படிச் செஞ்சிருக்காளோ அந்த மாதிரி உனக்கும் செய்வா. அம்மா, லக்ஷ்மியை மட்டும் கொஞ்சம் கவனிச்சுக்கோ.''

சிறு பிராயத்தில் கணவனை இழந்த தமையன் மகளிடம் பகவானின் கருணையைப் பாருங்கள்.

அன்று சாரதையின் உள்மனம் அமங்கல நிழல்களை உலகெங்கும் பார்க்கத் தொடங்கிவிட்டது. சகடம் கழன்ற வண்டியாகச் சகல பிரபஞ்சமும் சமநிலை தடுமாறிவிட்டது போல் அவளுக்கு ஓர் அச்ச உணர்வு!

குழந்தைகளுக்காகக் கிச்சடி தயாரித்தாள்; அதன் அடிப்பிடித்துக் காந்திப் போயிற்று. சமையலிலேயே சமயத்தை வாழ்ந்த சாரதையின் வாழ்வில் நடந்திராத விஷயம்! குழந்தைகளுக்குக் கிச்சடியின் மேல்பாகத்தைப் பரிமாறிவிட்டு, அடிக்காந்தலில் சிறிதைமட்டும் தான் உண்டாள். கூரையில் அவள் உலர்த்தியிருந்த மங்கள வஸ்திரம் எங்கோ காணவில்லை. மண் சட்டி ஒன்றை அவள் எடுக்கும்போது தடாலென்று விழுந்து சுக்குநூறுயிற்று.

மண்ணினுல் செய்துகொண்ட சரீரத்தை அன்று பகவான் உடைத்துக்கொண்டு விட்டார்!

இரவு ஒரு மணி இரண்டு நிமிடம். பரமஹம்ஸ ராமகிருஷ்ண குரு மஹராஜ், ''காளி, காளி காளி'' என்று மும்முறை முங்கி மொழிந்தார்; அப்படியே காளியாம் பிரம்ம சக்தியினுள் ஐக்கியமாகிவிட்டார்.

பரமசுமங்கலியாக இருந்தபோது வெளி மனிதர்கள் முன் வந்திராத தேவி, மாங்கலியம் பறிபோன அந்தச் சமயத்தில் தன்னை மறந்து உள்ளேயிருந்து ஓடி வந்தாள்.

ஆனந்த முறுவல் இழையத் தேஜோ மயமாகக் கிடந்த தேவதேவனின் தேகத்தருகே வந்து நின்ருள்.

மங்கல மாதாவைக் கண்ணுல் காணுமல் முதல் முறையாக அவளை அமங்கல மாதாவாகப் பார்த்த அடியார்கள் அவளது மெல்லிய மதுரக் குரலை இதுவரை கேட்டதில்லை. இன்று அவளது அலறலைக் கேட்டனர்!

''என் அம்மா, காளீ! நான் என்ன தப்பு செஞ்சேன்னு என்னை விட்டுட்டுப் போயிட்டே! அம்மாடீ, என்னை ஏன் கைவிட்டுப் போயிட்டே?'' சாரதாமணியின் இதயம் வெடித்து எழுந்த தீனப் பிளிறல் அனைவர் உள்ளத்தையும் பிளந்தது.

29. கண்ணன் பிறந்த மண்ணிலே!

கணவன் இறந்தவுடன் தன் உயிரையும் விடும் பத்தினி தன்னையும் கணவனையும் கரையேற்றுவாள். ஆனால் குழந்தைகள் உள்ள ஒரு பெண், கணவனின் மரணத்துக்குப் பின் மனோவாக்குக் காயங்களின் தூய்மையைக் காத்து அநுஷ்டான நியமங்களுடன் விளங்கினால் தன்னையும் கணவனையும் கரையேற்றுவதோடு தன் புத்திரர்களையும் கரையேற்றுவாள். —மகாபாரதம், ஆதிபர்வம்.

காளி மாதாவுக்குச் சாரதாதேவி எந்த அபசாரமும் செய்யவில்லை. காளி மாதாவுக்குமட்டும் என்ன? இந்தப் பிறவி எடுத்த நாளாக, சாரதா தேவி ஈ எறும்புக்குக்கூடத் தீங்கு நினைத்ததில்லை. இந்தப் பிறவிக்கு முன் கர்ம வசப்பட்ட பூர்வ ஜன்மமோ அவளுக்குக் கிடையாது. அப்படியாயின் பாவமே அற்ற அந்தப் பரிசுத்த ஜீவனைக் காளி ஏன் முப்பத்துமூன்றும் வயதில், தெய்வக் கணவனைப் பறி கொடுத்த கைம்பெண்ணாக நிறுத்தினாள்?

காலக்கிரமத்தில்தான் சாரதாமணியே இதற்கு விடையைப் புரிந்துகொண்டாள். மூளையால் புரிந்துகொண்டாளோ, இல்லையோ, இதன் விடையைப் பிரதி சுவாசத்திலும் வாழ்ந்து காட்டினாள். காளி மாதா தனது அம்சமாகவே ராமகிருஷ்ணரை அனுப்பி ஆத்மிக உன்னதங்களை வாழ்ந்து காட்டினாள். அந்த உன்னதம் எங்கோ எட்டாக் கையில் இல்லை என்று காட்டுவதற்காக ராமகிருஷ்ணரை எளிமையின் பக்கத்திலேயே வைத்து வாழச் செய்தாள். அதே சமயத்தில் எளிமையை உலகுக்கு உணர்த்த, சாரதை என்கிற உருவையும் தன் அம்சமாகவே அனுப்பி வைக்கச் சங்கற்பம் கொண்டாள். அதோடு உடல் துறவைவிடப் பெரியதான மனத் துறவின் மகிமையைக் காட்டவே ராமகிருஷ்ணரை மனைவியுடன் வாழ்ந்த மகாபுருஷனாக வாழ வைத்தாள் பராசக்தி. அதன் உட்கிடையாக இன்னொரு பெண்ணும் அதே போன்ற தூய மண வாழ்க்கை வாழ்ந்து காட்டச் செய்தாள். அவர் உன்னதமாகப் பெற்ற துறவை, அவரது மனையாள் எளிதாகப் பெற்று வாழச் செய்தாள் காளிமாதா.

ராமகிருஷ்ணர் என்ற உன்னதத்துக்குச் சரணாகதி செய்து வாழ்ந்தது சாரதை எளிமை. அந்த உன்னதம் உலகில் உள்ள மட்டும் இந்த எளிமை அதற்குச் சரணாகதி செய்துகொண்டு

அமுங்கித்தான் கிடக்கவேண்டும் என்பதால், இவ்வெளிமையின் பெருமை தனித்துத் தெரிய முடியாது என்ருகிவிட்டது. எனவேதான் உன்னதம் முதலில் போய்விட வேண்டும், பிறகு எளிமைமட்டும் வாழ வேண்டும் என்று காளி சங்கற்பித்தாள். அதோடு பெண்ஜன்மத்திற்குள்ள எல்லாத் துயரங்களையும் சாரதை அநுபவித்துக் காட்ட வேண்டும் என்றும் தேவி எண்ணியிருக்கலாம். வைதவ்யத்தைவிடப் பெருந்துன்பம் பெண்ணுக்கு உண்டோ? அதனுலேயே உன்னத ராமகிருஷ்ணர் முதலில் உடலை விட்டுப் போனுர் போலும்!

எங்கே போயிற்று அந்த உன்னதம்? சாரதை என்ற எளிமையின் அந்தராத்மாவுக்குள்ளேயே போய்க் குடிகொண்டது. இந்த எளிமை எப்படி ஒளிந்து வாழ்ந்ததோ, அப்படியே அந்த உன்னதம் இந்த எளிமைக்குங்கூடத் தெரியாதபடி, அதனுள்ளேயே வந்து ஒளிந்துகொண்டது. ஆனுல் காலக்கிரமத்தில் எளிமை உணர்ந்துவிட்டது, 'உன்னதம் எங்கும் போய்விடவில்லை. தன்னுள்ளேயே வந்து உறைந்துவிட்டது' என்று. தன் உதரத்துள் இன்னெரு ஜீவன் வந்து புகுந்து ஒரு மாதத்துக்குப் பின்தானே ஒரு பெண் அதை உணர்கிருள்? தன் இதயத்துள் இன்னேர் உயிர் குடி புகுந்ததையும் சிறிது காலத்துக்குப் பின்பே சாரதை உணர்ந்தாள்.

ஆனுல் இன்று, பொன் மேனியிலிருந்து புண்ணிய மூச்சு வெளிப் போய்விட்ட இப்போது, அவளுக்கு அவர் போயே போய்விட்டார் என்றுதான் தோன்றியது. பிரபஞ்சமே அவளுக்குச் சர்வ சூனியமாகிவிட்டது.

மறுநாள் மாலை. கதர்யியாகவும், கதாதர பட்டாசாரியராகவும், ராமகிருஷ்ணராகவும், பரமஹம்ஸராகவும், குரு மஹாராஜாவாகவும், பகவாளுகவும் பல பெயர்களில் உலவி வந்த தங்கத் தேகம் நேற்று நள்ளிரவு வரையில் எந்தக் கட்டிலில் சயனித்திருந்ததோ, அதே கட்டிலில் இப்போது ஒரு தாமிரக் குடம் ஆரோகணித்திருந்தது. தங்கத் தேகம் சாம்பலாக மாறி அந்தக் குடத்துள் நிறைந்திருந்தது. ஐம்பது ஆண்டுகள் நிகழ்த்திய அற்புத லீலா விபூதி மறைந்துவிட்டது! பஸ்ம விபூதிதான் நிற்கிறது! சாரதா தேவி தவியாகத் தவித்தாள். பதி மறைந்தபின் துக்க நாட்கள் கழியும் வரையில் மங்கலச் சின்னங்களுடன் இருக்கலாமாயினும், தேவியால் இப்போது அணிபணிகளைத் தாங்க முடியவில்லை. இதுவரை அவற்றை அணிந்திருக்கிறேம் என்ற நினைவும் மரத்திருந்தாள். நினைப்பு வந்தவுடன் அவற்றை ஒவ்வொன்ருகக்

களையலானாள். ராவணனால் அபகரிக்கப்பட்ட சீதாதேவி கழற்றி எறிந்த திருவாபரணம் ஒவ்வொன்றும் ராமபிரானுக்கு ஒரு கதை சொன்னதுபோல், இந்த ஆபரணங்களுக்கும் கதை உண்டு. அன்று இன்பக் கதைகளாக இருந்தவை இன்று துன்பக் கதைகளாகிவிட்டன. ராமகிருஷ்ணர் தமது மூக்கைச் சுற்றி அபிநயித்துக் காட்டினாரே, அந்த நத்தும் திவ்விய மாதாவின் நாசியிலிருந்து இறங்கிவிட்டது. இதோ அவர், ஆசை ஆசையாகப் செய்து போட்ட பொற்காப்புக்களையும் கடைசியில் அம்மா கழற்றத் தொடங்கினாள்.

தனது வலக் கையால் இடக் கையை உருவி ஒரு காப்பைக் கழற்றத் தொடங்கியபோது குபீரெனத் தேவிக்கு ரோமாஞ்சனம் ஏற்பட்டது. இவள் ஒரு கையால் இன்னொரு கையைப் பிடித்திருக்கிறாள். இவளுடைய இரு கைகளையும் வேறு இரண்டு மர்மக் கைகள் அழுந்தப் பற்றியிருக்கின்றன!

பற்றிய கைகள், ஆம், சாட்சாத் ராமகிருஷ்ணருடையவை தாம்!

சாரதா தேவி ஆனந்த பரவசத்தில் திக்கு முக்காடினாள்.

'இழந்த புதையலைப் பெற்ற ஏழையின் ஆனந்தம்' என்பது போன்ற எந்த உவமையைக் கூறினாலும் அது தேவி அடைந்த பேரானந்தத்துக்கு உறை போடக் காணாது. எவரது அஸ்தி அதோ கும்பத்தில் இருக்கிறதோ அவரே அல்லவா இங்கு வந்து இவளது கையைப் பற்றியிருக்கிறார்!

இது சொப்பனமில்லை. தான் உணருவது அவரது சூக்ஷ்ம சரீரத்தையும் அல்ல. ஸ்தூலமான கரங்களின் அழுத்தம் அல்லவோ கைகளில் படிந்திருக்கிறது!

தேவி கண்களை உயர்த்திப் பார்த்தாள். கரங்கள் மட்டுமல்ல; பூரண உருவத்துடன் நோயில் விழுந்ததற்கு முன்பிருந்த ஆரோக்கிய சரீரத்தில் மலர்ந்து நிற்கிறார் அவளுடைய பதி.

அவளுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, ''சுமங்கலிச் சின்னங்களைக் கையிலேருந்து கழட்டறியே! நான் செத்துப் போயிட்டேனா, என்ன?'' என்கிறார்.

ஸ்படிகம் போன்ற அந்த வார்த்தைகள் பரம ஸ்பஷ்டமாக அவள் காதுகளில் விழுகின்றன.

ஆனந்த அதிசயத்தில் ஆழ்ந்து கண்களை மூடிக்கொள்கிறாள். கையைவிட்டுச் சந்தன ஸ்பரிசம் நீங்குகிறது.

கண்களைத் திறக்கிறாள். அவர் இல்லை. 'நான் இல்லாமல் போய்விட்டேனா' என்று கேட்டவர் இல்லைதான்.

இல்லைதானா?

பொற்காப்பை அவள் கழற்றவில்லை.

அந்தக் காலத்தில் ஒரு கைம்பெண் - அதுவும் நம் அம்மாவைப் போல் சமூகத்துக்கு அடங்கி, ஒடுங்கி, நடுங்கி வாழ்ந்தவள் - கங்கணத்தைக் கழற்றாமலிருந்தால் அது புரட்சியாகவே தோன்றும். ஆனால் புரட்சி எண்ணமே இன்றி, நம் அம்மா கைம்மைக்குப் பிறகும் கைவளை தரித்தே விளங்கினாள். ஏனெனில், ராமகிருஷ்ணர் அவள் முன் தோன்றியதும் பேசியதும் அப்பேர்ப்பட்ட உறுதியான உண்மையாச்சே!

ஆதியில் அவளது அஞ்சாம் வயசிலே பாணிக்கிரகணம் செய்துவிட்டு அவளைத் துறவியாகவே வைத்திருந்தார். இப்போது அவள் துறவுக் கோலம் பூண இருந்தபோது மீண்டும் பாணிக்கிரகணம் செய்துகொண்டு 'தீர்க்க சுமங்கலீ பவ' என்கிறார்! விசித்திரமான டாகுர்தான்! திருமணத்தின் போதே தமது கங்கணச் சரட்டை எரித்துக்கொண்டார். தாம் உடலை உகுத்த பின்பும் அவளது பொன் கங்கணத்தைக் கழற்றவொட்டாமல் செய்கிறார்! விசித்திரக் கணவனின் மனைவி இப்போது ஒரு விசித்திரம் செய்தாள். நேற்று வரையில் அவரது தங்க புஜத்தில் மின்னிய தங்கத் தாயத்தை எடுத்துத் தனது தோளில் கட்டிக்கொண்டாள்.

அகலமான சிவப்புக் கரை போட்ட சேலைகளை உடுத்தி வந்த அம்மாவுக்குப் பலராம் பாபு, கரை போடாத வெள்ளைப் புடைவை வாங்கி வந்தார். நீர்த் திரையிட்ட கண்களுடன் அதை கோலாப் - மாவிடம் கொடுத்துவிட்டுப் பேசாமல் நின்றார்.

"ஹே, ஈசுவரா! எங்க அம்மா கிட்ட இதை யார் கொண்டு போய்த் தர முடியும்?" என்று கூவிவிட்டாள் கோலாப்.

பிறகு அவள் அம்மா ஒடுங்கிக் கிடந்த மூலைக்குச் சென்றாள். அம்மாவே தன் சேலையின் அகலமான சிவப்புக்கரையில் ஒரு விரலளவு போக மீதத்தைக் கிழித்தெறிந்தாள்.

அற்புதக் கணவர் உயிர் வாழ்ந்த வரையில் தனது அற்புதங்களை ஒளித்தே வாழ்ந்த அம்மா இப்போது அவர் போனவுடன் நிகழ்ந்த அற்புதத்தை வெளியிட்டாக வேண்டியிருந்தது. இல்லாவிடில் அவள் கங்கணம் அணிவதையும் மெல்லிய

சிவப்புக் கரையிட்ட சேலை உடுத்துவதையும் உலகு ஒப்பாதே! இங்கேயுங்கூட அம்மாவின் அடக்கத்தைப் பாருங்கள். அகலக் கரைச் சேலைகளைக்கூட அவள் அணிந்திருக்கலாம். ஏற்கனவே கழற்றிய நகைகளை மீண்டும் அணிந்து திலகம் தீற்றிக்கொண்டு, கொண்டையும் முடித்திருக்கலாம்! ஆனால் தொண்ணூறு சதவிகிதம் உலக நீதிக்கு ஒப்பவே நடந்து, பத்துச் சதவீதம் தான் கணவர் ஆணையை நிறைவேற்றினாள்!

ராமகிருஷ்ணர் அமரத்துவம் பெற்றவர் என்பதை இவ்வாறு கண்கூடாகக் கண்டு சொன்ன தேவியே மற்றச் சீடர்களுக்கும் இப்போது பெரிய ஆறுதலாக இருந்தாள்.

'அவர் இருந்தால்மட்டும் போதுமா? கண்ணுக்குத் தெரியவில்லையே! அவர் குரல் காதில் கேட்கவில்லையே! அவருக்குத் தான் எந்தப் பணிவிடையும் செய்ய முடியவில்லையே!' -மீண்டும் தேவியைச் சர்வ சூனிய உணர்ச்சி பற்றிக்கொண்டது.

வெளியே நடக்கிற பேச்சுக்கள் அவளுக்கு நாராசமாக இருந்தன.

பிரம்மசாரிச் சீடர்களுக்கும் கிருஹஸ்தச் சீடர்களுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் தலைகாட்டுகின்றன! அந்த நிலைமையில் அம்மாவை இடம் பெயரச் சொல்ல வேண்டாம் என்பதால் காசிப்பூர் வீட்டை இப்போதைக்குக் காலி செய்ய வேண்டாம் என்று நரேன் முதலிய பிரம்மசாரிச் சீடர்கள் சொல்கிறார்கள். ஆனால் வாடகை கொடுக்க அந்த ஆண்டிப் பிள்ளைகளுக்கு ஏது வசதி? காசிப்பூர் வீட்டு வாடகையை ஏற்கக் கிருஹஸ்தச் சீடர்களுக்கு மனமில்லை என்று அவர்களது பேச்சிலிருந்து தெரிகிறது.

உள்ளே அம்மா கோலாப்பிடம், "நான் துக்கப்பட்டுட்டேன் என்கிறதால் அந்தக் குழந்தைகளும் என்னால் துக்கப் படணுமா? நான் இந்த வீட்டைவிட்டுப் போறதுக்கு இப்பவே தயார்னு சொல்லுங்கோ" என்றாள்.

அவள் எங்கே போவாள்? அவள் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் எங்கே இருந்தார்கள், அவளை வைத்துப் பராமரிக்க? அவள் வயிற்றிலே பிறவாமலே பிள்ளைகளாகிவிட்ட குழந்தைகளோ தங்கள் வயிற்றுப்பாட்டுக்கே வகை தெரியாத ஆண்டிகளாக இருக்கிறார்கள். அவர் 'காமார்புகுரில் போய் இரு' என்று அவளுக்குக் கூறியிருந்தார். காமார்புகுரில் மைத்துனரும் போயாயிற்று. மைத்துனரின் மூத்த மகன் ராமலாலுக்கு இவளிடம் பரிவு போதாது. கணவரைப் பறி

கொடுத்த கையோடு இவள் அங்கே போயிருப்பது இயலாத காரியம். புண் சிறிதே ஆறிய பிறகே அங்கே செல்லலாம். ஜய ராம்பாடியில் தம்பிகள் தலையெடுத்துவிட்டார்கள். ஆனாலும் எல்லாரும் வக்கிரமாகவே இருந்தார்கள். அவர்களுடைய பெண் சாதிகளுக்கு வேறு இவள் பதில் சொல்லவேண்டும். இப் போதைக்கு அந்த அவஸ்தையையும் ஏற்பதற்கில்லை. அநாதை யாக நின்றாள் லோகமாதா. ஆனால் அவள் அதைப்பற்றி யோசித்துக் கலங்கவில்லை.

விஷயமறிந்த அத்யந்த சீடர் பலராம் பாபு அம்மா வைத் தம் இல்லத்திலேயே வந்திருக்குமாறு வேண்டினார். அவ ளும் ஒப்புக்கொண்டாள்.

பிரம்மசாரிச் சீடர்களுக்கும் பெரியவர்களுக்குமிடையே இன்னோர் உரசல் ஏற்பட்டது. வீட்டைக் காலி செய்யு முன், அஸ்தியைக் காங்குர்காச்சித் தோப்பில் புதைத்துவிடலாம் என்று கிருஹஸ்தச் சீடர்கள் கூறினர். ராம்பாபுவுக்குச் சொந்த மான இந்தத் தோப்புக்கு ராமகிருஷ்ணரே விஜயம் செய்திருக் கிறார். ஆனால் பிரம்மசாரிச் சீடர்களோ கங்கைக் கரையில் சொந்தமாக ஓரிடம் வாங்கி அங்கே அஸ்தி கலசத்தை வைத்து நினைவுக் கோயில் எழுப்ப வேண்டும் என்றனர். முன்பே கண்டதுபோல் இந்த ஆசையை நிறைவேற்றப் பர தேசிக் குழந்தைகளுக்கு ஏது பொருள் வசதி? அபிப்பிராய பேதம் வலுத்தது. அஸ்தியில் ஒரு பகுதியை இந்த இளம் பிள்ளைகள் தங்களுக்கென்று பிரித்துக்கொண்டு வேறொரு பாத்திரத்திலிட்டுப் பலராம் பாபுவின் வீட்டுக்கு அனுப்பினர்.

அம்மா நெடுமூச்சு விட்டுக் கோலாப்பிடம் சொன்னாள்: ''கோலாப்! அல்ப விஷயத்தில் எத்தனை பூசல் செய்யறா பாருங்கோ! எந்தப் பரம புருஷனுக்கு எடைக்கு எடை தங்கம் கொடுத்தாக்கூடப் போறாதோ, அப்படிப்பட்ட பிரபு போயாச்சு; இவா சாம்பலுக்காகச் சண்டை போட்டுண் டிருக்கா!''

மற்றவர் யாவரும் உணர்ச்சி வசப்பட்ட சமயத்தில் அவர்களைவிட ராமகிருஷ்ணருக்கு நெருக்கமான அம்மா எந்தக் கட்சியிலும் சேராமல், இப்படிப் பூரண விவேகத்துடன் பேசியதில் எத்துணை மாண்பு தெரிகிறது?

'பசங்கள்' அஸ்தியில் பாகப் பிரிவினை செய்துகொண்ட பின் சமரசம் ஏற்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியான ஆகஸ்ட் 23-ஆம் தேதியன்று மீதமுள்ள அஸ்தி காங்குர்காச்சி

யில் அடக்கம் செய்யப்பட்டபோது பசங்களும் அதில் மனப்பூர்வமாகக் கலந்துகொண்டனர்.

இதற்கு இரண்டு நாட்கள் முன்பே சாரதாமணி தாற்காலிகமாகப் பலராம பாபுவின் வீட்டுக்குப் பெயர்ந்தாள்.

ஒவ்வொரு விநாடியும் பரமஹம்ஸருக்காக என்றே வாழ்ந்த தேவியால் இப்போது அவருக்கென ஏதும் செய்யாமல் உயிர் தரிக்க முடியவில்லை. இப்போது இருக்கிற அவருக்கு அவளது பணி ஏதும் தேவைப்படவில்லையே! மற்றவர்களுக்காகவே வாழ்ந்த அவள் இன்று அவர்களுக்குப் பாரமாகி விட்டிருக்கிறாள்!

'போதும் போதும் வாழ்ந்தது. போய்விட வேண்டியது தான். ஆமாம், நிச்சயமாக!' அம்மா உயிரை விடுவதென்று உறுதியாகச் சங்கற்பித்து விட்டாள்.

உடனே கேட்டது அந்தக் குரல். அவர்தாம் பேசுகிறார்:

"பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல்லமரர் குழாத்து உளான்....'இருந்தைக்க' எனப் போனான்" என்றார் இளங்கோ. அமரரிடை இடம் பெற்ற கோவலன் மரணம் என்ற ஊனத்தை ஒழித்து மீண்டும் எழுந்து வந்து, 'நீ இங்கிரு' என்று கண்ணகியிடம் கூறி மறைந்தானாம்! இப்போது ராமகிருஷ்ணரும், ''நீ இங்கிரு'' என்று சொல்லிப் போனார்- இவளைவருக்கெல்லாம் அமுத மழை பொழிய வேண்டுமென்றே!

'அநாதை விதவையான நான் என்ன செய்யப் போறேன், எப்படிச் செய்யப் போறேன்? இப்படி உத்தரவு போடுகிறாரே!' அம்மா குழம்பினாள். ஆனாலும் அந்தப் பதிவிரதையால் பதியின் உத்தரவை மீற முடியவில்லை. தன் குழந்தைகளின் பொருட்டு உயிர் வாழத்தான் வேண்டும் என்று அவர் சொல்வதை அன்பு அம்மா எப்படி மீறுவாள்? உயிரை விடுகிற உறுதியைக் கைவிட்டாள். வாழ முடியவில்லை. சாகவும் அநுமதி இல்லை. தத்தளித்தாள்.

அம்மா படும் பாட்டைக் கண்ட சிஷ்ய கோடிகள் அவளது மனத்தை மாற்றுவதற்காக அவளைப் பிருந்தாவனத்துக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தனர்.

ராமகிருஷ்ணர் தேகம் துறந்த பதினாறாவது நாளன்று சாரதா தேவி பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டாள். கோலாப் அம்மை, லக்ஷ்மி, ராமகிருஷ்ணரின் மொழியமுதத்தை அப்படியே எழுதி வைத்து உலகுக்கு ஈந்துள்ள மகேந்திரநாத்

குப்தா என்பவரின் மனைவி, பிரம்மசாரிகளான யோகின், காளி, லாடு ஆகியோர் அம்மாவுடன் சென்றனர்.

முதலில் வைத்யநாத தேவக்ருஹத்தில் (தியோகர் என்பார்கள்) வழிபாடு செலுத்திவிட்டு வாரணாசியாகிய காசியை அடைந்தனர். அங்கே பத்துத் தினங்கள் தங்கியிருந்து விசுவேசுவரனையும் அன்னபூரணியையும் வழிபட்டாள் அம்மா. அன்னபூரணியான நம் அன்னை இன்று பூரணத்தைப் பறிகொடுத்துவிட்டு இங்கு வந்து நின்றாள்.

அன்னபூரணியீடம் அவள் பதியையே பிட்சை கேட்டாளோ? அப்படித்தான் இருக்க வேண்டும். அவள் விசுவநாதனைத் தரிசித்துத் திரும்புகையில் 'திம்திம்' என்று வேகமாக அடியெடுத்து வைத்து நடந்தது மற்றவர்களுக்கு விந்தையாக இருந்தது. பிறகு, ''என்னம்மா, வழக்கத்துக்கு விரோதமாக அப்படி நடந்தேள்?'' என்று பக்தர்கள் கேட்டபோது, ''நானா நடந்தேன்? **அவர்**தான் என்னைப் பிடிச்சு இழுத்துண்டு வந்தார்'' என்றாள் தேவி.

காசியில் பாஸ்கரானந்தர் என்ற அவதூத சந்நியாசியைக் கண்டு உருகி நின்றாள் தேவி. ''மகாத்மா! சமநிலையிலேயே இருக்கிற மனசு வாய்ந்தவர். வெயிலோ, குளிரோ இப்படி அவதூதமாவே இருக்கார். ஆஹா!'' என்று வியந்தாள். சுகதுக்கங்களில் தான் அல்லல்படுவதை எண்ணிச் சொன்னாள் போலும்!

காசியில் ஒவ்வொரு மண்ணும் ஒரு சிவலிங்கம் என்பதால் அந்தப் புனிதப் பதியைப் பார்வை எட்டும்மட்டும் காண விரும்பினாள் தேவி. வேணி மாதவர் உப்பரிகை உச்சிக்குச் சென்று கண்ணுக்கெட்டும் வரையில் காசியைத் தரிசித்துக்கொண்டாள்.

ஸ்ரீ ராமசந்திரன் அவதரித்த அயோத்திக்கும் சென்று அதன்பின் பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டனர். ராமகிருஷ்ண சதி, ராமனைக் கண்டபின் கிருஷ்ணனைக் காணக் கிளம்பினாள்.

பிருந்தாவனத்தை நோக்கி ரெயில் சென்றுகொண்டிருந்தது. ஜன்னல் ஓரத்தில் அமர்ந்து பதியையே ஸ்மரித்துக் கொண்டிருந்தாள் சாரதை. ஓடுகிற ரெயிலின் வெளியே இருந்து ஜன்னலுக்குள் திருமுகத்தை நீட்டினார் பதி. ''தாயத்தைத் தாரை வார்த்திடப் போறே! அது உங்கிட்டயே இருக்கணும். கவனமா யிரு!'' என்று சொல்லி மறைந்தார்.

ஜன்னல்புறமாக இருந்த கரத்தில்தான் தேவி அவரது தாயத்தை அணிந்திருந்தாள். இவள் அயர்ந்து மறந்து உறங்கி

விட்டால் வெளியே யிருந்து எவரேனும் அதைப் பறித்துக் கொண்டு போய்விடலாம்! அந்த ரகஸ்யமூலம் அவளை ரக்ஷித்து வந்த நாயகர் சமயத்தில் வந்து உணர்த்திவிட்டாரா?

சாரதை அவசர அவசரமாகத் தனது தகர டப்பாவைத் திறந்தாள். அதிலே அவள் நீண்ட காலமாகத் தெய்வ உருவங்களோடு வைத்து வழிபட்ட ராமகிருஷ்ணரின் புகைப் படம் இருந்தது. ஒரு சிறு குடுவையில் குரு மஹாராஜரின் அஸ்தியும் இருந்தது. இவளது உடம்புக்கே அவர் பூஜை புரிந்ததுண்டு. அவரது உடல் நீற்றுப் போன பின் அதன் துகளை வைத்து இவள் பூஜித்தாள். இப்போது தாயத்தைக் கையிலிருந்து அவிழ்த்து அந்தப் படத்தோடும், அஸ்தியோடும் சேர்த்து வைத்தாள் அம்மா. அன்றிலிருந்து அந்தத் தாயத்து அவள் கையில் ஏறாமல், அவள் கை குவிக்கும் வழிபாட்டுச் சின்னமாயிற்று.

பிருந்தாவனத்தில் எல்லோரும் ரெயிலிலிருந்து இறங்கினர். ரெயில் பெட்டியின் ஒரு மூலையில் கிடந்த லாடுவின் புகைக் குழாயை எடுத்து வந்த கோலாப் அதை அம்மாவிடம் கொடுத்தாள்.

அம்மா அதை வாங்கிக்கொண்டவுடன் லக்ஷ்மி, "சித்தி, இப்பவே புகைக் குழாயை எடுத்துண்டுட்டியா?" என்றாள்.

அம்மா நிலைகுத்திட்டு நின்றாள். பழைய நினைவு அலை மோதிக்கொண்டு வந்தது, ஒரு நாள் ராமகிருஷ்ணர், தாம் மீண்டும் அவதரிக்கப் போவதாகவும், அப்போது தாம் ஒரு பாவுலாக இருக்கப் போவதாகவும் கூறினார். 'பாவுல் என்பது 'வாதூல' என்பதன் திரிபு. 'வாதூல' என்றால் வெறி பிடித்தவர் என்று பொருள். வங்கச் சீமையில் சடை முடியும் கிழிசல் உடையுமாக, 'ஏக்தாரா' எனப்படும் ஒற்றைத் தந்தித் தம்புராவை மீட்டிக்கொண்டு பக்திப் போதையில் பரவசமாக ஆடிப் பாடித் திரிகிற ஒரு சாராரை 'பாவுல்' என்பார்கள்.

பாவுல் அவதாரத்திலும் இப்போது தம்முடன் இருப்பவர்கள் உடன் வருவர் என்று ராமகிருஷ்ணர் கூறினார்.

"ஐயோ அம்மாடி! நான் மறுபடி வரமாட்டேன். சித்தப்பா! என்னைப் புகையிலையை வைச்சு நறுக்கற மாதிரி நறுக்கினுக்கூட புனர் ஜன்மா எடுக்க மாட்டேன்" என்றாள் லக்ஷ்மி. வெளிப் பார்வைக்கு உற்சாகமாக இருந்தாலும் சிறு வயதில் பதியை இழந்து உள்ளே அடிபட்டிருந்த பெண் நெஞ்சு அப்படிப் பேசியது.

"வரலைன்னா உன்னை யார் விட்டாடி, பெண்ணே! அதுவும் இல்லாம, நானே கீழே மறுபடி வந்துவிட்டு நீ அங்கே எப்படி

இருப்பே! அங்கேயும் உனக்குப் பிடிக்காமப் போயிடும். ஜலத்திலே வளருகிற கல்மிக் கொடி பார்த்திருக்கியோ? அது கொத்துக் கொத்தாக வளரும். எங்கேயானும் ஏதாவது ஓர் இழையைப் பிடிச்சு இழுத்தாலும் அத்தனை கொடியும் சேர்ந்து தான் வரும். அந்த மாதிரி நான் வந்தேன்னு நீங்க இத்தனை பேரும் சேர்ந்து வரத்தான் வரணும்' என்ற ராமகிருஷ்ணர் சாரதையைப் பார்த்து, ''நான் பாவுலாக் கொட்டம் அடிக்கறச்சே நீயும் மறுபடி வருவே! புகைக் குழாயை நீதான் வச்சிண்டிருப்பே!'' என்றார். பாவுல்கள் ஓயாமல் புகைப்பர்.

லாடுவின் புகைக் குழாயை அம்மா வாங்கிக்கொண்டதும் இதைத்தான் நினைவு கூர்ந்தாள் சாரதை.

அன்று லக்ஷ்மி இருந்த அதே மனோபாவத்தில்தான் இன்று சாரதை இருந்தாள். அவர் எத்தனைதான் தரிசனம் தந்தாலும் அசரீரியாகப் பேசினாலும் பழைய ஆனந்த வாழ்க்கை கொள்ளை போனதாகவே உணர்ந்தாள் தேவி. இந்த ஜன்மாவே போதும் என்றிருந்தது. இன்னும் ஒரு ஜன்மம் வேறா?

சாரதையின் நயனங்கள் ' நனைந்தன. தழுதழுக்கிற குரலில், ''பிரபோ! என் பிரபோ! புகைக் குழாயை வைச்சுக்கணும் என்கிற உத்தரவையும் இதோ நிறைவேற்றிவிட்டேன். இதோடு தீர்ந்து போனதா இருக்கட்டும்'' என்று அரற்றினாள். கையிலிருந்த குழாயைத் தடாலென்று கீழே எறிந்தாள் - ஒரு பிறவியையே சுழற்றி எறிகிற தீவிர உணர்வுடன்.

பரமபதநாதன் ஆயப் பிள்ளையாக வந்து சப்த பிரம்மத்தை ஸப்த ஸ்வரமாக்கி மூங்கில் குழல்மூலம் வாரிப் பொழிந்து புண்ணியம் கூட்டிய பிருந்தாவனத்துக்கு வந்து சேர்ந்தாள் தேவி.

புரட்டாசித் தொடக்கம். புரட்டிக்கொண்டு ஓடினாள் யமுனை நதி. பிருந்தாவனத்திலே மரம், கொடி, புதர்கள் எல்லாம் பச்சை மண்டிக் கிடந்தன. காற்றிலே பூக்களின் மணம் கரைந்து கனத்தது. மயில்களின் 'ஷட்ஜ' ஆலாபனையும், மாடுகளின் கம்பீரமான 'ரிஷப' கோஷமும் எங்கும் நிறைந்திருந்தன. மானிடர்களின் காலடி கேட்டு மான்கள் பெயர்ந்தோடுவதும் இனிய காட்சியாக இருந்தது. சாரதைக்கு மட்டும் இனிமை தெரியவில்லை. தனிமையே தெரிந்தது. கிருஷ்ணனைக் காண வந்தாள். ஆனால் கண்ணனை வட மதுரைக்கு அனுப்பிவிட்டுத் தவித்த கோபியரைமட்டுமே பிருந்தாவனத்தில் பார்ப்பது போல் இருந்தது அவளுக்கு. ஈரமான யமுனைக் கரை முழுவதும் ராதையின் கண்ணீரில் நனைந்ததாகவே சாரதைக்

குத் தோன்றியது. அதை அம்மா அன்பு நினைவால் மேலும் நனைத்தாள்.

முன்பே பிருந்தாவனத்துக்கு வந்திருந்த யோகின் மா அம்மாவை இந்தக் கோலத்தில் கண்டு திடுக்கிட்டுவிட்டாள். இருவரும் கட்டிக்கொண்டு பிழியப் பிழிய அழுதனர். டாகுரைப்பற்றியே ஓயாமல் பேசிப் புலம்பினர்.

கருணாமூர்த்தியான பகவான் ஓர் இரவில் அவர்கள் இருவருக்கும் காட்சி தந்தார். ''அன்புக் குழந்தைகளே! ஏன் இன்னமும் இப்படி அழுதபடி இருக்கணும்? நான் இதோ இருக்கேனே! நான் வேறே எங்கேதான் போகமுடியும்? ஒரு ரூமிலிருந்து இன்னொரு ரூமுக்குப் போற மாதிரி'' என்று சொல்லிக்கொண்டே அந்த 'இன்னொரு ரூமுக்'குப் போய் விட்டார்.

ராஸ லீலையின் மத்தியில் மறைந்த மாதவனை ராதை தேடியது போலவே பிருந்தாவனத்தில் அம்மா ராமகிருஷ்ண ரைத் தேடிக்கொண்டிருந்தாள். தனது வழக்கத்துக்குப் புறம்பான ஆவேசப் பித்து நிலையிலேயே இருந்தாள் அம்மா. மற்றவர் அறியாமல் தன்னந் தனியாக யமுனையின் அகன்ற மணற் கரையைத் தாண்டிச் சென்று ஆற்றோரத்தில் கிடக்க லானாள்.

அவளை அழைத்து வரப் போனவளிடம், ''நான் சாரதையில்லை, ராதையாக்கும்'' என்றாள்.

ஒரு நாள் நீண்ட நேரம் சென்ற பின்னும் அம்மாவுக்கு வெளி உலக உணர்வு ஏற்படுகிற வழியாகக் காணோம். யோகின் மா பல திவ்விய நாமங்களை அவள் செவியில் கூவியும் பயனில் லாமல் சளைத்துப் போனாள். பிரம்மசாரி யோகின் இந்தக் காரியத்தைத் தொடர்ந்தார்.

அரும்பு மலருகிற மாதிரி அம்மாவின் இமைகள் மெல்லத் திறக்கலாயின.

''சாப்பிடணும்'' என்று அவளது உதடு முணுமுணுத்தது.

அனைவருக்கும் தூக்கி வாரிப் போட்டது. ராமகிருஷ்ணர் பாவ சமாதியைக் கலைத்து அவ்வுலகத்திலிருந்து விடுபட்டு இவ்வுலகுடன் தம்மைக் கட்டிப் போட்டுக்கொள்ள எண்ணும்போதெல்லாம் இப்படியேதான், ''சாப்பிடணும்'' என் பார்! மண்ணில் விளைந்த தானியமோ, பழமோ, வெற்றிலையோ வயிற்றில் போனதும் அவரை மண்ணுலகுடன் கட்டிப் போட்டுவிடும்!

யாரோ உணவு கொண்டு வந்து சாரதையின் முன் நீட்டினார்கள். இன்னொருவர் வெற்றிலை கொண்டு வந்தார். (வங்கத்தில் விதவைகளும் தாம்பூலம் போடுவது உண்டு.) மற்றொருவர் தீர்த்தம் எடுத்து வந்தார். சிப்பியிலிருந்து சிறிதே வெளி வந்த முத்துப் போல், இமையைச் சிறிதே நீக்கி வெளிப்பட்ட விழியால் இதை எல்லாம் பார்த்த தேவி ஒரு பீடாவை எடுத்தாள். அதிசயத்திலும் அதிசயமாக ஆசார சீலையான தேவி அந்தப் பீடாவின் முனையை'ராமகிருஷ்ணர் செய்வது போலவே பல்லால் கடித்தாள்.

சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாதென்று பிரம்மசாரி யோகின் அவளிடம் அப்போது பல வினாக்கள் விடுத்தார். அவள் ராமகிருஷ்ணரைப் போலவே - 'போல' என்ன சாட்சாத் ராமகிருஷ்ணராகவே - அவற்றுக்கு உத்தரம் தந்தாள். அப்போது அவளது சைகை, பேசும் பாங்கு எல்லாம் குரு மஹாராஜையே உரித்து வைத்திருந்தன!

வெளி உணர்வு முற்றிலும் பெற்ற பின் அவள், "டாகுர் என் உள்ளும் புறமும் வியாபிச்சிருக்கார்" என்றாள்.

பிறகு ராமகிருஷ்ணரே அவளுக்குத் தரிசனம் தந்து, "நான் உனக்குள்ளேயே சூட்சுமமாயிருப்பேன்" என்றார்.

சிறிது சிறிதாக அந்தச் சூட்சுமத்தை அவள் கிரகித்துக் கொள்ளலானாள். ராமகிருஷ்ண பாவம் இப்போது அவளுள் பெருகியது. அவர் எப்படிச் சில சமயங்களில் உலகத்துக்குப் புரியாத ரீதியில் பேசுவாரோ, அதே போல் இவளும் பேசலானாள். ஒரு நாள் பிரேத ஊர்வலம் ஒன்றைப் பார்த்தாள். "புண்ணியசாலி எவனோ இங்கே வந்து உயிரை விட்டு நிரந்தர பிருந்தாவனத்துக்கே போயிட்டான். நானுந்தான் வந்திருக்கேன், எனக்கு ஒரு சின்ன ஜுரமாவது வந்ததோ? ஊஹூம்! அப்பாடா, எத்தனை வயசாயிடுத்து? அப்பாவைப் பார்த்தாச்சு, ஆத்துக்காரரோட அண்ணாவைப் பார்த்தாச்சு" என்று குழறினாள்.

"என்னம்மா சொல்றேள், அப்பாவையும் மச்சினரையும் பார்க்கறதுலே என்ன அதிசயம்? அதுக்கு வயசாவானேன்?" என்று கேட்டாள் யோகின் மா.

தேவி மௌனமானாள்.

உண்மையில் அப்போது அவளுக்கு வயோதிகம் வந்துவிடவில்லை. ராமகிருஷ்ணர் தேக வியோகமானபோது நம் மாதாவுக்கு வயது முப்பத்து மூன்றேதான். அதன் பின் முப்பத்து மூன்றாண்டு இந்த மண்ணில் வாழ்ந்தாள்.

இவள் எந்த நிலையில் இருந்து இந்த வார்த்தைகளைச் சொன்னாளோ, எவரே அறிவர்?

தேவியும் உடன் வந்தவர்களும் ஒரு பட்ச காலம் தினந்தோறும் பிருந்தாவன எல்லையைப் பிரதட்சிணம் செய்து வந்தனர். அப்போது வனத்தையும் வயலையும் நதியையும் காடுகளையும் அம்மா அலாதி உன்னிப்புடன் பார்ப்பாள். பார்த்துக்கொண்டே மலைத்து நின்றும்விடுவாள். இச்சந்தர்ப்பங்களில் நிகழ்காலத்தைக் கடந்து பாகவத காலத்துக்குப் போய்விட்டாள் என்று உடன் வந்தவர் உணர்ந்தனர். ஆயினும் அவர்கள் அவளைக் குடைந்தாலும் அவள் விஷயத்தைச் சொல்ல மாட்டாள். ''ஒண்ணுமில்லை. மேலே நடையைக் கட்டலாம்'' என்றுதான் சொல்லுவாள்.

* * * * * *

பிற்காலத்தில் நம் அம்மா செய்த முக்கியமான ஆத்மிகப் பணி, எண்ணற்ற பக்தர்களுக்கு மந்திரோபதேசம் செய்ததேயாகும். இந்தப் பணியை ராமகிருஷ்ணர் அவள் பிருந்தாவனத்திலிருந்தபோதே தொடங்கி வைத்தார். ஒரு நாள் அவர் அவள்முன் தோன்றி, ஒரு குறிப்பிட்ட மந்திரத்தைச் சொல்லி, ''இதை யோகேன் பயலுக்கு உபதேசம் பண்ணு'' என்றார்.

எளிமையின் உருவான சாரதை மந்திர உபதேசப் பணியை ஏற்க அஞ்சினாள். 'நான் ஒரு சாமானிய ஸ்திரீ; மந்திரோபதேசம் செய்வதாவது?' என்று நடுங்கினாள். எனவே, பதிதேவர் சொல்லியும் அந்த உத்தரவை அவள் நிறைவேற்றவில்லை.

ராமகிருஷ்ணரா அவளை விடுவார்? மறுபடி தோன்றி உத்தரவிட்டார்:

''என்ன இப்படிச் சொல்கிறாரே! எனக்கு குரு ஸ்தானம் வகிக்க அச்சமா இருக்கு! அதுவும் தவிர, ஊரார் சிரிப்பா! 'அவர் போய் ஒரு வருஷம் ஆகல்லை அந்த அம்மாள் உபதேசம் கிபதேசம்னு சிஷ்யாள் சேர்த்துக்க ஆரம்பிச்சுட்டா'ன்னு பரிகாசம் பண்ணுவாளே!'' அம்மா ஆசாரிய ஸ்தானத்துக்குத் துளிகூட ஆசைப்படவில்லை. டாகுரிடம் எத்தனையோ மகா மந்திரங்களை உபதேசம் பெற்று, லக்ஷோபலக்ஷம் ஆவிருத்தி ஜபம் செய்து ஸித்தி பெற்றிருந்தும், பிறருக்கு உபதேசம் தரக் கூசினாள்! அப்படியோர் அடக்கம்!

மூன்றாவது முறையும் வந்தார் பதி; ''நீ அந்தப் பயலுக்கு உபதேசிக்கப் போறியா இல்லியா?'' என்றார்.

உடலை உகுத்த பின்னரும் அவர் தருகிற அற்புத தரிசனத்துக்காக ஏங்கிய அம்மா இப்போது அவரிடம் வாக்குவாதமே செய்யத் தொடங்கினுள்; "என்னன்னு, இந்தக் காரியம் எல்லாம் ஏன் எனக்குத் தரேள்? நரேன், லாடு, பாபுராம் இவாகிட்டப் பழகுகிற மாதிரிகூட இந்தப் பையன் கிட்ட நான் பழகினதில்லே. இவனுக்கு எப்படி மந்திரோபதேசம் பண்ணுவேன்?" என்ருள்.

"யோகின்மா கிட்டச் சொல். அவ அவனை அழைச்சுண்டு வருவா. உபதேசத்தின்போதும் கூட இருப்பா" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு அந்தர்தானமாஞர் ராமகிருஷ்ணர்.

இனித் தப்ப முடியாது என்ற நிலை ஏற்பட்டது. யோகின்மாவை அழைத்து, "யோகேனுக்கு ஏதாவது மந்திரோபதேசம் ஆகியிருக்கான்னு விசாரியுங்கோ" என்ருள்.

யோகின்மா யோகேனை வினவினுள்.

"இல்லையம்மா. டாகுர் ஏனே எனக்குமட்டும் ரோபதேசம் தரவில்லை. நாஞக ஏதோ ஒரு திவ்வி ஜபிச்சுண்டு இருக்கேன்" என்று கூறிய யோகே மாறியபடி, "இங்கே வந்த பிறகு ஒரு நாள் திணறினுர்.

"சொல்லப்பா, சொல்லு" என்

யோகின்மா.

"டாகுர் தரிசனம் தந்து, அ தெய்வத்தைச் சொல்லி) மந்திரே ஞர். அதுதான் என் இஷ் சொல்றதுக்கு எனக்கு ரெ அம்மாவே கேக்கறதஞ யோகேன். சாரதையின் வையே உரித்து வைத்திரு

யோகேன் குறிப்பி யிருந்ததும் ஒரே மந்திர மின்றி இவள் உபதேச

ஒரு நல்ல நாளில் இவற்றின்முன் அப் தும் உள்ளே வெளிப்ப தாள். அ மந்திரோ பாக்கிய

யோகின் மாவை உடன் வைத்துக்கொள்ளும்படி டாகுர் கூறியிருந்தாலும் அந்த அம்மை மந்திரோபதேசத்தின்போது மிகவும் அண்மையில் இருக்கக் கூடாது என்பதால் பக்கத்து அறையில் இருந்தாள். ஆனால் அம்மா தனது பரவச நிலையில் அந்த மந்திரத்தைப் பெண் சிம்மமெனக் கர்ஜித்துக் கூறியதால், அது யோகின் மாவின் செவியிலும் பளீரென்று விழுந்ததாம்.

''மந்திரமாவது நீறு'' என்றார் பாலறாவாயர். நீற்றுப் போய் அஸ்தியாக அமர்ந்திருந்த ராமகிருஷ்ணர், சாரதையைத் தம் சந்நிதானத்திலே மந்திரோபதேச குருவாக்கி விட்டார்!

ராமகிருஷ்ணர் ஜீவியவந்தராயிருந்தபோதே அவர் சாரதாப் பிரஸன்னனிடம், ''அம்மா உனக்கு உபதேசிப்பாள்; அவளிடம் போ'' என்று சொன்னது நினைவிருக்கலாம். ஆனால்
...ம்மா பிரஸன்னனுக்கு மந்திரம் வழங்கினாளா என்பது
...கத் தெரியவில்லை. மந்திரோபதேச குருவாக அம்மா
...ரோகணம் ஆனது பிருந்தாவனத்துப் புண்ணிய
...எனலாம்!

... ஸ்தானம் வகிப்பதன் அழகே அழகு!
... வடிவில் வந்தே தன் எழுச்சியின்
...ன்கிறான காளிதாஸன்.

...தே அப்யுதயாம்'

...ரியம் இருக்கிறது என்று சொல்
...ச் சென்றார்? அந்தக் காரியங்
...் தொடங்கின. அவளும்
... உணர்ந்து மெல்ல மனம்
...ாக அமைதியுடன் வாழ்க்

30. பதி உத்தரவா? பதி விரதமா?

வரம் வழங்கும் தேவி! உன் பராக்கிரமத்துக்கு உவமை ஏது? உன்னைப் போல் வடிவழகியாக இருந்தும் சத்துருக்களை அஞ்சச் செய்வோர் எங்குண்டு? சித்தத்தில் கிருபையும், போரில் கண்டிப்பும் உன்னிடமே இம்மூவுலகிலும் ஒன்றாகக் காணப்பட்டன!

—துர்க்கா ஸப்தசதீ-4-22

அம்மாவின் உள்ளப் புண் ஆறத் தொடங்கியது. விரகராதையாக இருந்தவள், இப்போது கண்ணனின் கருணையில் அடிக்கடி முங்கி அமைதி கொண்டாள். இவளுடைய கண்ணனின் உத்தரவுப்படி காமார்புகுருக்குச் சென்று காலம் கழிக்க எண்ணம் கொண்டாள்.

தமது மறைவுக்குப் பின் அவள் காமார்புகுருக்குப் போய் வசிக்க வேண்டும் என்று அவர் ராமலாலை வைத்துக்கொண்டு கூறியது நினைவிருக்கலாம். இதே விஷயமாக இன்னொரு முறை அவளிடம், குழந்தைக்கு எடுத்துச் சொல்வதுபோல் விளக்கிப் பேசினார்: ''என் காலத்துக்கு அப்புறம் நீ போய்க் காமார்புகுரிலே ஜீவனம் நடத்திண்டு இரு. உன் ஒருத்திக்குத் தேவையான நாலு மணி நெல் கிடைச்சுடும். தோட்டத்திலே ஏதாவது இரண்டு தினுசு கீரை விதைச்சுக்கோ. அதை வேக வைச்சுச் சாப்பிடு. ஹரி ஹரின்னு சொல்லிண்டு காலத்தைக் கடத்து. வேறே என்ன காரியம் உனக்கு இருக்கு? யார் கிட்டேயும் சல்லிக் காசுக்குக்கூடக் கை நீட்டிவிடாதே. மானத்தைக் காப்பாத்திக்க ஒரு முரட்டுத் துணியும், உன் ஒரு வயிற்றுக்கான சோறும் என்னிக்கும் கிடைக்கும். இதைக் காட்டிலும் அதிக வசதி வேணும்னு யார்கிட்டேயாவது கைநீட்டினயோ, அப்புறம் அவாளுக்கு உன் தலையையே விலை கொடுத்துடற மாதிரி ஆயிடும். உறவுக்காரா, அவா இவாள்னு யார் அகத்திலேயும் போய் இருந்துடாதே. அதைவிடப் பிச்சை எடுத்துச் சாப்பிடறது கௌரவம். நம்ம பக்தாள் யாராவது பூரண அன்பும் மரியாதையும் காட்டி, உன்னைத் தங்கள் கிருகத்திலே வைச்சு உபசரிக்கிறதாச் சொன்னாக்கூட மசிஞ்சுடாதே.''

அவளுக்கெனப் பெரிய அவதாரப் பணி காத்துக் கிடக்கிற தென்று சொன்ன ராமகிருஷ்ணரே அவளைக் காமார்புகுர்

கிராமத்திலே ஹரி ஸ்மரணம் தவிர வேறு காரியமின்றி அடங்கிக் கிடக்கச் சொன்னது முரணாகத் தோன்றலாம். ஆனால் இதில் முரண் ஏதும் இல்லை. அவள் குறிப்பாக அடக்கத்துக்குத்தான் உதாரணம் காட்ட அவதரித்தாள். அடக்கத்தை அடக்கமாகத்தானே வாழ முடியும்? சூரிய பகவான் இருள் தேவியைத் தேடித் தேடிப் போனானாம். ஆனால் அவன் எங்கே போனாலும் அங்கே ஒளி வந்துவிட்டதால் இருளன்னையை அவனால் காணவே முடியவில்லையாம். 'அடக்கத்தை வெளிக் காட்டுவது' என்பது இருளை ஒளி பார்க்கப் போவது போலத்தான். பூரணமாக அடைந்து கிடக்கும் கைம்மை வாழ்வை அவளுக்கு அவர் விதித்தாலும் அவருக்கே தெரியும், அத்துணை கடுமையாக அவள் அதைப் பின்பற்றினால் உலகுக்கு அவளது உதாரணம் எட்டவே எட்டாது என்று. ஆயினும் அவளது அவதாரப் பணியை அவர் அடிக்கடி வற்புறுத்தியதால் எங்கே அவள் அவசரப்பட்டுக்கொண்டு முதுமைக்கு முன்பே வெளிச்சத்துக்கு வந்து பாரதப் பெண் தர்மத்துக்கு பங்கம் விளைவித்து விடுவாளோ என்று கருதியே அவளுக்கு மிகக் கடுமையான யோசனை கூறினார். ஆதியில் அவளது 'அம்மா ஆசை'யைக் கட்டுப்படுத்திவிட்டு, உரிய காலத்தில் அது வெளிப்பட அனுமதித்தார் அல்லவா? அதே போல் இப்போது தமது நிர்யாணத்தை அடுத்து அவளுக்கு மிகுந்த கட்டுப்பாட்டை விதித்தாலே, பிற்பாடு உரிய காலத்தில் அவள் வெளி வந்து தன் பணியைப் பெண்மைக்குப் பங்கமின்றி ஆற்ற முடியும் எனக் கருதினார். தம்மிடம் உபதேசம் பெறாமல் ஏங்கிக்கொண்டிருந்த யோகேனின் தாபம் தீர்க்க அவளை மந்திர குருவாக ஆக்கிப் பார்த்தாரெனினும், அவள் இன்னமும் அடங்கிக் கிடக்க வேண்டியவளே என்று கருதினார் போலும்! இதை அம்மா உணர்ந்தாள். நாற்றுப்படுகையிலிருந்து இன்னும் வயலுக்கு வருகிற வளமை தனக்கு வரவில்லை என்று கண்டுகொண்டாள். வேறு சில க்ஷேத்திரங்களையும் தரிசித்துவிட்டுக் காமார்புகுருக்குத் திரும்ப முடிவு செய்தாள் தேவி.

ஸ்ரீராதாகிருஷ்ணனின் முன் வணங்கி எழுந்தாள். "அப்பனே, உனக்கு பங்கேவிஹாரின்னு பேர். ரூபத்தை மூணு வளைவா வளைச்சுண்டு நிற்கிறதாலே உனக்கு இப்படிப் பேர். ஆனால் ரூபத்திலேதான் கோணல். உன் மனசு ரொம்ப நேர்மையானது. என் மனக் கோணலை எல்லாம் மாற்றடா, அப்பனே. பிறத்தியார் கோணலும் என் கண்ணுக்குத் தெரியாதபடி அருள் பண்ணு, ஐயா" என்று வேண்டினாள். இதன் உச்ச

ஸ்தானத்தை அம்மாவின் வாழ்வு முடிகையில் பார்க்கப் போகி ரும். அடடா, அது எத்தனை பரிதாபம்!

காமார்புகுரில் 'பிறத்தியார் கோணல்' தொடங்கப் போவதை முன் கூட்டியே அறிந்துதான் இப்படி இப்போது வேண்டிக்கொண்டாளோ?

பிருந்தாவனத்திலிருந்து ஹரித்வாரம் சென்றாள். பிரம்ம குண்டத்தில் ராமகிருஷ்ணரின் கேசம், நகங்கள் ஆகியவற்றை விஸர்ஜனம் செய்தாள். கங்கையைக் கடந்து சென்று கீல் வாதக் காலோடு மலை ஏறிச் சண்டி தேவியைத் தரிசித்து வந்தாள். திரும்பும் வழியில் அலாகாபாத் எனப்படும் திரிவேணி யில், கங்கையும் யமுனையும் சரஸ்வதியும் கலக்கும் புனிதப் பெருக்கிலும் ராமகிருஷ்ணரின் கேசத்தைச் சமர்ப்பித்தாள்.

''டாகுரின் கேசம் சாமானியப்பட்டதா என்ன? ஓட்டம் தெளிஞ்சிருந்த சங்கமத்திலே, கேசத்தைப் போடறதுக்காக நான் கையில் எடுத்தேனே இல்லையோ, திடீர்னு ஓர் அலை குதிச்சு எழுந்து என் கையிலே இருந்த கேசத்தை எடுத் துண்டுது. உடனே வந்த சுவடு தெரியாமல், அது அமுங்கி யும் போச்சு. புண்ணிய தீர்த்தம் தன்னை இன்னும் புண்ணிய மாக்கிக்கணும்னுதான் அப்படிப் பண்ணித்து'' என்பாள்.

கைம்பெண்ணாகிய லக்ஷ்மி திரிவேணியில் சம்பிரதாயப்படி தன் முடியை மழித்துக்கொண்டாள். அம்மாவின் எதிரே பகவானின் சிரித்த உருவம் தெரிந்தது. தன் கங்கணத்தைப் பார்த்துக்கொண்டாள். அவள் முடி களையவில்லை. உள்ளத் திலே ஏதோ ஓர் உவகை ஊற்றிட்டது. கல்கத்தாவுக்கு மகிழ்ச்சியுடனே திரும்பினாள்.

ஒரு வாரம் பலராம்பாபுவின் வீட்டிலிருந்த பின் காமார் புகுருக்குப் புறப்பட்டாள்.

காமார்புகுருக்குப் போகுமுன் தக்ஷிணேசுவரத்துக்குச் சென்றாள், நம் சோகமாதா. ஆஹா! ராமகிருஷ்ண பகவானை யும், அவர் அநுதினமும் பெருக விட்ட ஆனந்த கோலாகலத் தையும் அங்கிருந்த ஒவ்வோர் அணுவும் தேவிக்கு நினைப்பூட்டி அவளை வதைத்தது. அன்று போலவே இன்றும் கங்காதேவி ஓடினாள், மாட கூடச் சிகரங்களுடன் பவதாரிணி ஆலயம் இப் போதும் நின்றது; அதிலே பவதாரிணியும் மாறுமலே நின்றாள்; நஹவத்தும் அப்படியேதான் இருந்தது. ஆனால் நஹவத் துக்கு எழுபத்தைந்தடி தொலைவில் அதோ அந்த அறையில் இருந்த மோஹன, ஞான மூர்த்தி இன்று அங்கில்லை. அவர் ஒருவர் இல்லாததால் அன்று பூலோக ஸ்வர்க்கமாக இருந்த

தக்ஷிணேசுவரம் இன்று அம்மாவின் மனத்தில் தகிக்கும் பாலைவனத்தைப் பரப்பியது. பாழ் மனத்தில் பால் வார்த்துக் கொள்வதற்காகப் பவதாரிணியின் முன் கும்பிட்டு விழுந்தாள் அம்மா. அழுகை பொத்துக்கொண்டு வந்தது. கட்டுப்படுத்திக் கொண்டாள். அம்பாள் அவளுக்கு ஓர் அநாயாசத் தெளிவை நல்கினாள் போலும்! கும்பிட்டு எழுந்திருக்கையில் குமுறல் அடங்கியது. சிவலிங்கங்களையும் ராதே கோவிந்தனையும், ராமகிருஷ்ணர் தொடர்புள்ள அறைகள், மரங்கள் இவற்றையுங்கூடக் கலங்காமல் சுற்றிப் பார்த்து வந்தாள் தேவி.

நம் அம்மாவின் துயரம் செறிந்த கதையில் இன்னொரு துயரமான கட்டம் தொடங்கிற்று.

காமார்புகுரில் ஒன்றாக அமைந்த மூன்று குடிசைகள் தான் இவர்களது பிதுரார்ஜிதச் சொத்து. அங்கு மைத்துனர் மக்களான ராம்லால், லக்ஷ்மி, சிவராம் ஆகியோர் இருந்தனர். லக்ஷ்மியும் அம்மாவைப் போல் காமார்புகுரில்தான் இருக்க வேண்டும் என்று ராமகிருஷ்ணர் கூறியிருந்தார். அவளை அம்மா கவனித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருந்தார். ஆனால் லக்ஷ்மி நற்குணம் நிறைந்தவள் எனினும், அம்மாவிடம் பற்றுதல் கொண்டவள் எனினும் தன்னிச்சையாகவே இருப்பாள். அவளை அம்மாவால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளிடம் ஆண்மைக் குணம் அதிகம். வைணவ சம்பிரதாயக் கீர்த்தனங்களைப் பாடம் பண்ணிய லக்ஷ்மி காமார்புகுரில் அம்மாவுடன் இருந்தபோது பாகவதர்கள்போல் பலர் முன் அவற்றைப் பெரிதாக விந்நியாசப்படுத்திப் பாடுவாள். இது சாரதைக்கு ஏற்கவில்லை. ஆனால் சுயேச்சைப்படி இருக்கும் பெண்ணை அவள் கண்டிக்கவும் முயலவில்லை. ராமலாலைப்பற்றிக் கேட்க வேண்டாம். ஏனோ அவருக்குச் சித்தியிடம் என்றுமே அநுதாபம் இருந்ததில்லை. சிறியவன் சிவராம்தான் அவளிடம் ஒட்டிக்கொண்டிருப்பான். ''சித்தி, நீ தான் எனக்கு உபநயனத்தின்போது முதல்லே பிட்சை போட்டே! அதனாலே நீ எனக்கு அம்மா மாதிரி'' என்பான் அவளுடைய அருமை 'ஷிபு'. ஆனால் அந்தப் பிள்ளையின் வாஞ்சைமட்டும் அந்த வீட்டில் அவளது அமைதியான வாழ்க்கைக்குப் போதவில்லை. ஈசுவர ஸ்மரணத்தோடு எஞ்சிய காலத்தைக் கடத்த வேண்டும் என்று நினைத்த சாரதையை லக்ஷ்மியும், ராமலாலும் வேண்டாத அக்கப்போரிலெல்லாம் ஈடுபடுத்தப் பார்த்தனர். அம்மா ஒரு கடுஞ்சொல் கூறவில்லை.

தன் மனநிலையை எவ்விதத்திலும் வெளியிடவுமில்லை. கர்மமே என்று காலத்தை ஓட்டினாள்.

ஜயராம்பாடியில் ஜகத்தாத்ரி வழிபாடு நடந்தது. சியாமா சுந்தரி பிரதி வருஷமும் செய்து வந்த விழா அல்லவா அது? பாலிய விதவையாக வைபவத்துக்கு வந்த பெண்ணைப் பார்த்துக் கதறித் தீர்த்தாள் சியாமை. "சாரு, இனிமே இங்கேயே இருடியம்மா. உன் வயத்துலே பிறந்த குழந்தைகளா உன்னைப் பார்த்துக்கப் போறா? மச்சினன் பசங்கள் கிட்ட மொத்துப் படாமே இங்கேயே கிட" என்று வயிறெரிந்து சொன்னாள்.

"அவர் அப்படித்தான் சொல்லியிருக்கிறார். அவர் விட்ட வழியாகட்டும்" என்று நிர்த்தாட்சிண்யமாகச் சொல்லி விட்டு தேவி காமார்புகுருக்குத் திரும்பினாள்.

இங்கே மைத்துனர் மக்கள் எவரையுமே காணவில்லை. அவர்கள் தக்ஷிணேசுவரத்துக்குப் போய்விட்டார்கள். போகிற போக்கில் பாகப் பிரிவினை வேறு செய்துவிட்டார் புண்ணியவான் ராமலால். தயாள மனத்துடன் மூன்று குடிசை களில் சிறியதான குடிசையை நம் அம்மாவுக்குப் பாகம் பண்ணி யிருந்தார்!

தன்னந் தனியாகச் சாரதை பட்ட அவஸ்தை சொல்லத் தரமன்று. அந்த ஊரிலே காலிகளின் நடமாட்டம் அதிகமா யிருந்தது. பயந்து நடுங்கினாள் தேவி. ஊருக்கே பெரிய மனுஷியும், பண்புச் செல்வியுமான பிரஸன்னமயீயின் வேலைக் காரியை இரவுகளில் துணை வைத்துக்கொண்டு அடைத்துக் கிடந்தாள்.

கிராமப் பெண்டிர் சாரதையின் பெருமையைச் சிறிதும் புரிந்துகொள்ளவில்லை. "அமங்கலி வளை போட்டுண்டிருக் காளே, ஊருக்கு அடுக்குமோ?" என்று அவள் காதுபட விமரி சித்தனர். "புடவையிலேயும் மெல்லிசாக் கரை இருக்காக்கும். தலையையும் பண்ணிக்கல்லே! இவ என்ன கொம்பு?" என்று தூஷித்தனர்.

தேவி அவர்களிடம் தன் நித்திய கல்யாண மகிமையைச் சொல்லிப் புரிய வைக்க முடியுமா? காது கொப்புளிக்க அந்தக் கொடு மொழிகளைக் கேட்டுக்கொண்டாள், கோணல் காணு பங்கேவிஹாரியைத் தியானித்தவாறு.

பிரஸன்னமயீதான் ஊராருக்கு எடுத்துச் சொன்னாள்: "நம்ம ஊர் கதாயீயும் அவனோட அகமுடையாளுந்தானே என்று நினைக்காதீர்கள். அவர்கள் தெய்வப் பிறவிகள்" என்று

அடித்துச் சொன்னுள். அதை அவர்கள் நம்பினுர்களோ இல்லையோ, அந்தஸ்து வாய்ந்த அந்த அம்மை இப்படிச் சொன்ன பின் அவதூறு பேசுவதைச் சிறிது குறைத்துக்கொண்டனர்.

வார்த்தை கேட்டது ஒரு புறம். வயிறு வாடிற்று மறு புறம். ஆம், அன்னபூர்ணேசுவரியான நம் அம்மா தன் ஒரு வயிற்றுக்கு அன்னம் கிடைக்காமல் வறுமையில் வாடவும் நேர்ந்தது. எண்ணவே நம் மனம் வாடுகிறது.

துறவி ராமகிருஷ்ணர் கைப்பிடித்தவளுக்கான தர்மத்தை மறக்கவில்லைதான். முன்பே, ஆறு மாதங்களுக்கொரு முறை அவளுக்கு முப்பது ரூபாய் கிடைக்க ஏற்பாடு செய்திருந்தது நினைவிருக்கலாம். ஆனுல் நம் அம்மாவுக்கு அரை வருட காலம் பணத்தைக் காத்து வைக்கத் தெரியுமோ? ராமகிருஷ்ணருக்கு அளித்து வந்த ஏழு ரூபாய் மாதாந்தர சம்மானத்தை அம்மாவுக்கும் தொடர்ந்து அளிக்க வேண்டும் என்று பவதாரிணி ஆலய நிர்வாகி திரைலோக்யநாத் விசுவாஸ் பெருமனத்துடன் முடிவு செய்தபோது நம் புண்ணிய புருஷர் ராமலால், ''விசுவாஸ்ஜி. அதெல்லாம் என்னத்துக்கு? சித்தப்பாவுக்குப் பணக்காராளா ஏகப்பட்ட சிஷ்யாள் இருக்கா. அவா சித்திக்குக் கனகாபிஷேமாக்கும் பண்ணுரு'' என்று கூறி அந்த மானியத்தை நிறுத்தினுர். இங்கே சாரதை தன் ஒரு குட்சிக்கு வேண்டிய உணவும் போதுமான அளவுக்கு இன்றித் தவித்தாள். நாலு அரிசியைக் களைந்து வைத்துக்கொண்டாள். தோட்டத்துக் கீரையை வெறுமே வேக வைத்துக் கொண்டாள். அதை மசித்துத் தாளிதம் செய்ய எண்ணெய், கடுகு, பருப்பு ஏது? அதெல்லாம் போகட்டும். கையில் காசு இல்லாததால் நம் அம்மா உப்புக்கூட இல்லாமல் உண்ண வேண்டியதாயிற்று-படி உப்பு காலணுவுக்கு விற்ற காலத்தில். ஆனுல் இதை அவள் தானுக வெளியிட்டதே இல்லை. கணவர் விதி செய்தபடி ஒருவரிடம் கால் காசுக்குக் கை நீட்டவில்லை. தாய் வீடு செல்லவும் இல்லை.

இவற்றை அவள் விசேஷமாகப் பொருட்படுத்தவுமில்லை. அவள் பொருட்படுத்தியது ஒன்றைத்தான். தக்ஷிணேசுவரத்திலே வசித்த பதின்மூன்று ஆண்டுகள் கங்கையிலேயே பிரதி நாளும் ஸ்நானம் செய்த அவளுக்கு, கங்கா தேவியைப் பிரிந்திருப்பதே பெரிய துயரமாக இருந்தது. வெண்ணீர்ப் பெருக்கை எண்ணிக் கண்ணீர் உகுத்தாள்.

அரச மரத்தினடியில் ஒரு வெண்மை பளிச்சிட்டது. தேவி அங்கே நோக்கினுள். அவளுடைய ஸ்வாமி அங்கு

வந்து நின்ருர். பக்கத்தில் நரேன், ராகால், பாபுராம் ஆகியோரும் நின்றனர். ராமகிருஷ்ணரின் பாதத்திலிருந்து கங்கை பிரவாகமிட்டு வந்தது!

'ஆஹா, ஸ்ரீமந் நாராயணனின் பாதத்தில் கங்கை பிறந்தாள் என்பார்களே, இவர்தானே அவனும், இன்னும் எல்லாமும்!' என்று எண்ணுகிருள் அம்மா. ரகுவீரனின் பூஜாகிருகத்தருகேயிருந்து செம்பருத்தி மலர்களைப் பறித்துக்கொண்டு பதியிடம் ஓடுகிருள். இன்னமும் அவர் அங்கேயே இருக்கிருர். கங்கையும் இங்கே காமார்புகுரில் அவர் காலடியிலிருந்து பொசிகிறது. செம்மலர்களைக் கங்கைக்கு அர்ச்சிக்கிருள் தேவி.

டாகுர் பேசுகிருர்: "அம்மா, ஊரார் பேசருளேன்னு கங்கணத்தைக் கழட்டிவிடாதே. உனக்கு வைஷ்ணவ தந்திரம் தெரியாதோ?"

"தெரியல்லியே!"

"இன்னிக்குச் சாயங்காலம் கௌர்தாஸி வருவா. அவ சொல்லுவா."

ராமகிருஷ்ணர் நரேனின் உடலுக்குள் புகுந்து மறைகிருர்! அவர்களும் மறைகிருர்கள். கங்கையும் மறைந்தது—ஈரச் சுவடே இன்றி.

அன்று பிற்பகல் கௌரியம்மை மெய்யாலுமே வந்து சேர்ந்தாள்.

"அம்மா, உங்க கையிலேருந்து கங்கணம் இறங்கவே கூடாது. வைஷ்ணவ தந்திரங்களிலே பகவான் எடுக்கிற ஸ்தூல சரீரத்துக்கு முக்கியத்துவமே கொடுக்கவில்லை. அமரமான ஆத்மாவே பகவானுடைய சரீரம். நம்ம டாகுர், ஸ்ரீமந் நாராயணன் இல்லையா? நீங்க மகாலக்ஷ்மி இல்லையா? உங்களுக்கு ஏது வைதவ்யம்? சம்பத்துக்கெல்லாம் அதிதேவதையான உங்க கையிலேருந்து கங்கணம் கழண்டால், உலகத்துக்கே உத்பாதமாயிடும்" என்றெல்லாம் ஆவேசத்துடன் கூறினுள் கௌரியம்மை.

'அகிலாண்டேசுவரியின் தாடங்கம் அவளது திருச்செவியிலிருந்து இறங்கினுல் உலகுக்கே உற்பாதம் உற்பவிக்கும்; அது அம்பாளின் திருச்செவியிலேயே தங்கி இருப்பதால்தான், நஞ்சுண்ட சிவபிரானும் உயிர் தப்பினுன்' என்று ஆதி சங்கரர் போற்றினுர் அன்ருே?

அன்று டாகுர் வந்து இவ்விஷயமாகத் தன்னிடம் பேசிப் போனதை விதிர்த்துக் கூறிய அம்மா, "கௌரீ! அதோ

அங்கேதான் அரசமரத்தடியில் அவர் நின்றார். அங்கே நமஸ்காரம் பண்ணி, அந்த மண்ணை எடுத்து வாயிலே போட்டுக்கோ'' என்றாள்.

சம்பத்துக்கெல்லாம் அதிதேவதையான சாரதா தேவி எத்தகைய வறுமையில் வதங்குகிறாள் என்பதைப் பிரத்தியட்சமாகப் பார்த்துவிட்டாள் கௌரி. அதுவரை சிஷ்ய கோடிகள் அந்த ஒரு ஜீவன் சொந்தக் கிராமத்தில் வாழ்வதற்கு அசௌகரியம் இராது என்றே எண்ணினர். கௌரி திரும்பிய பின்தான் ஏனையோருக்கு உண்மை நிலை தெரிந்தது.

அந்த நாளில் கல்கத்தாவிலிருந்து காமார்புகுருக்கு வருவது அவ்வளவு சௌகரியமல்ல. மேலும் அம்மாவின் மகிமை இன்னமுங்கூட ராமகிருஷ்ணரின் அத்யந்த பக்தர்களுக்கும் அதிகம் தெரியவில்லை. அவளது செல்லப் 'பசங்கள்' இப்போது வீடு வாசலையெல்லாம் விட்டு, வீட்டாரின் எதிர்ப்பையும் வாங்கிக் கட்டிக்கொண்டு, வராஹ நகரத்தில் ஒரு பேய் உலாவும் - அல்லது பேய் உலாவுவதாக வதந்தி உலாவும் - பாழ் வீட்டில் ராமகிருஷ்ண மடம் அமைத்துக்கொண்டிருந்தனர். இப்போது அவர்கள் பிரம்மசரியத்திலிருந்து ஒரு படி மேல் போய்விட்டனர். இன்று அவர்கள் சந்நியாசிகள். ராகால் பிரம்மானந்தராகிவிட்டார்; பாபுராம் பிரேமானந்தராகிவிட்டார்; காளி அபேதானந்தராகிவிட்டார்; சரத் சாரதானந்தராகவும், யோகேன் யோகானந்தராகவும், நிரஞ்ஜன் நிரஞ்ஜனானந்தராகவும், சாரதாபிரஸன்னன் திரிகுணாதீதராகவும், தாரக் சிவானந்தராகவும், சசி ராமகிருஷ்ணானந்தராகவும் பரிணமித்து விட்டனர். அநாமதேயமாகச் சஞ்சாரம் செய்ய விரும்பின நரேன், அப்போது சந்நியாச நாமம் சூட்டிக்கொள்ளவில்லை. டாகுர் உயிர் வாழ்ந்தபோது சுரேந்திரநாத் மித்ரா அவருக்கு அளித்து வந்த சிறு காணிக்கையை இப்போது நம் இளம் சாதுக்களுக்கு அளித்து வந்தார். லௌகிகமாக, சகல சௌகரியங்களுடனும் வாழ வசதி படைத்த அந்த யௌவனத் துறவிகள் பசியிலும் பட்டினியிலும், மாற்று ஆடையுமின்றி, குருநாதரைத் தியானித்துக்கொண்டு பரமானந்தமாக வாழ்ந்து வந்தனர்.

இந்தப் பாவன புருஷர்களிடம் அடிக்கடி வந்தார் ஹரீஷ் என்ற இளைஞர். அவரும் எங்கே துறவு மேற்கொண்டுவிடுவாரோ என்று அஞ்சிய அவரது மனைவி அவருக்கு 'மருந்து' வைத்தாள். அந்தக் காலத்தில் இது போன்ற அபாயகரமான அசட்டுத்தனங்கள் நிறைய நடப்பதுண்டு.

ஹரீஷுக்கு மூளை கலங்கியது. தமக்கு மூளை கலங்குகிறது என்பதைப் புரிந்துகொண்டு அம்மாவிடம் சரண் புகுந்தாலே உய்வு உண்டு என்று அந்த மூளைக்கு எப்படியோ எட்டியது! காமார்புகுருக்கு ஓடி வந்தார் ஹரீஷ்.

ஆனல் அம்மாவைச் சகல விதத்திலும் வதைத்தெடுக்க நினைத்த விதி அல்லது அம்பாளின் சங்கற்பம் ஹரீஷின் மூளைக் கோளாற்றை முற்றச் செய்தது. காமார்புகுரில் தான் இருந்த அவல நிலை போதாதென்று சம்பந்தமற்ற ஒரு பைத்தியத்தை வைத்துச் சமாளிக்கிற துன்பமும் அம்மாவுக்கு வந்துற்றது. இதனினும் பீதிகரமான சோதனையும் உண்டாயிற்று.

ஒரு நாள் அம்மா ஏதோ அத்தியாவசிய காரியமாக அண்டை வீடொன்றுக்குச் சென்று திரும்பினுள். வாசலில் நின்றுகொண் டிருந்த ஹரீஷின் பார்வையே நன்ருக இல்லை. அம்மாவுக்கு வெடவெடத்தது. உள்ளுக்குள் விரைந்தாள். அவள் வராந்தாவைத் தாண்டும்போது ஹரீஷ் வேகமாக அவளைத் துரத்தி வந்தார். சப்த நாடியும் ஒடுங்கியது சாரதைக்கு. ஆனல் ஒடுங்கி நிற்க இது சமயமில்லை என்று தன் முழுச் சங்கற்ப பலத்தையும் திரட்டிக்கொண்டாள். வெறியன் ஹரீஷை எதிர்த்துக்கொண்டு அவள் தெருப்பக்கம் ஓடுவதற்கில்லையாகையால் உட்புறமே ஓடினுள், வேங்கையைக் கண்ட மான்போல்,

ஹரீஷோ பித்தம் தலைக்கேறி அவளைத் துரத்தி வருகிருர். தாம் சரணடைய வந்த தேவியிடமே இப்படி முறை தப்பி நடக்கிருர்! நெற்குதிரைச் சுற்றிச் சுற்றி ஓடினுள் தேவி. ஏழெட்டு முறை சுற்றினுள். இரைத்தது. நாக்கு உலர்ந்தது; கால்கள் இற்றன. மேலே நடந்ததை அம்மாவின் வார்த்தையிலேயே கேட்போம்.

''இனி ஓட முடியாது என்கிற நிலை வந்தது. அவ்வளவுதான். நின்ன இடத்திலேயே நின்னேன். என்னை உறுதிப் படுத்திண்டேன். **என்னுடைய பூரண ரூபத்துக்கு என்னை நானே கிளப்பிண்டேன்.** சட்டுனு அவனைக் கீழே தள்ளினேன். என் முழங்காலாலேயே அவன் மார்பை மிதிச்சுண்டு, அவனுடை நாக்கைப் பிடிச்சு இழுத்தேன். அவன் கன்னத்திலேயே மாறி மாறி அறைஞ்சேன்; அவனுக்கு மூச்சு முட்டித்து; எனக்கும் விரல் செவந்து கன்னிப் போச்சு. விட்டுட்டேன்.''

அடக்கப் பெட்டகமான அம்மா கற்பைக் காத்துக் கொள்வதற்காகப் பெற்ற எழுச்சி எத்தனை அற்புதமானது!

தனது பூரண ரூபத்தைக் கிளப்பிக்கொண்டதாக அம்மா சொன்னதற்கு, அவள் சக்தி அவதாரமாகத் தன்னை உணர்ந்து அசுர ஸம்ஹாரிணியாகத் தன்னை எழுப்பிக்கொண்டதாகவே மெய்யடியார் பொருள் கொள்வர். குறிப்பாகத் தச மஹா வித்யைகளில் ஒரு மூர்த்தியும், கூர்மாவதாரத்துக்குச் சக்தி அளித்தவளுமான பகளா என்ற தேவியாக அப்பொழுது சாரதை உற்பவித்தாள் என்பர். ஏனெனில், அசுரரை வதைத்தபோது பகளா இவ்விதமே முழங்காலால் எதிரியின் மார்பை நசுக்கி நாக்கைப் பிடித்திழுப்பாளாம்.

நம் அம்மா ஹரீஷை வதைக்கவில்லை. அவரது தீய எண்ணத்தை வதைத்தாள். அந்தத் தீய எண்ணத்துக்குக் காரணமான மூளைக் கோளாற்றை வதைத்தாள்.

ஹரீஷ் காமார்புகுருக்குச் சென்று அம்மாவுக்குத் தொல்லை தருவதாகத் தகவல் அறிந்த நிரஞ்சனனந்தர் வராஹ நகரத்திலிருந்து அங்கு விரைந்தார். அவரைக் கண்டதும் ஹரீஷ் பிடித்தாரே ஓட்டம்!

பிருந்தாவனத்துக்குத்தான் ஓடினர் ஹரீஷ். சிறிது காலத்திலேயே அவரது சித்தம் தெளிந்துவிட்டது! அம்மாவின் அநுக்கிரகந்தான்! அவருடன் உக்கிரப் போர் செய்யும் போதே கருணையையும் கொட்டியிருக்கிருள்! அவரது நோயை மிதித்து அடித்து அதன் நாவை இழுத்து வதைத்திருக்கிருள்!

அருமை நிரஞ்ஜன் சந்நியாசக் கோலத்தில் பக்கிரியாக நிற்பதைப் பார்த்து உள்ளம் உருகினுள் அம்மா. உடல் இளைத்து, கந்தல் புடவையைப் பல இடங்களில் முடி போட்டுக் கட்டிக்கொண்டிருந்த அம்மாவைப் பார்த்து நிரஞ்ஜனும் நெஞ்சுருகினுர்.

கல்கத்தாவுக்குத் திரும்பிய பின் அம்மாவின் கஷ்டத்தை நிரஞ்ஜன் மற்ற அடியார்களிடம் தெரிவித்தார். பக்தியே உருவான பலராம் பாபுவின் பத்தினி கிருஷ்ணபாவினி தேவி கை நிறையப் பணத்துடன் காமார்புகுருக்குச் சென்ருள்.

சாரதை தோட்டத்தில் மண் வெட்டியும் கையுமாக ஏதோ வேலை செய்துகொண்டிருந்தாள். கிருஷ்ணபாவினிக்குக் கண்ணீர் முட்டியது. சாரதை காணிக்கையை ஏற்கமாட்டாள் என்று அவளுக்குத் தெரியும். எனவே, ''ரகுவீரனுக்கு அர்ப்பணம் பண்ணக் கொண்டு வந்தேன். ரகுவீரன் பிரசாதத்தைக் கொஞ்ச நாள் இங்கே இருந்து சாப்பிட்டுப் போக ஆசை'' என்று நயம்படச் சொல்லி, பண்டங்களை

வாங்கிப் போட்டாள் கிருஷ்ணபாவினி. மூன்று நாட்கள் இவ்விதம் ராமப்பிரஸாத்ம் என்ற பேரில் அம்மாவுக்குச் சம்பிரமமாக அமுது படைத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டாள்.

அம்பிகை கண் திறந்தாள்.

அறுவடையாகி நிறைய நெல் வந்தது சாரதையின் பங்குக்கு. தரித்திரம் விடிந்தது. வேலைக்கு ஒரு பெண்ணை வைத்துக்கொண்டாள் என்றால் பாருங்களேன்! ஸாகரம்மா என்கிற அந்த வேலைக்காரப் பெண் பிற்காலத்தில் அம்மாவின் அன்புள்ளத்தை வாய் கொள்ளாமல் வருணிப்பாள். ''அம்மா என்ன ஆக்கினாலும் எனக்கு வைக்காம இருக்க மாட்டாங்க. நான் வீட்டுக்குள்ற நுழையறதுக்குள்ளாறயே, 'அடி சாகரம்மா, முதல்லே சாப்பிடு. ஒரு குவளை தண்ணி குடி, களைப்புத் தீர்ந்து அப்பாலே வேலை செய்யலாம்'னுவாங்க. துர்க்கா பூஜையின்போது அம்மா வூட்டுலே லெச்சிமி தாண்டவமாடினாளே! என்னா சமையலு, என்னா ருஸி! நெதமும் எங்களுக்கெல்லாம் என்னமா வாரித் தந்தாங்க தெரியுமா?'' என்று ஸாகரம்மா சொல்லுவாள்.

அந்த ஆண்டு நவராத்திரியில் துர்க்கா பூஜை எனப்படும் மூன்று நாட்களைச் சிறப்பாக அன்னதானத்துடன் கொண்டாடினாள் அம்மா. கொடுத்தே பழக்கப்பட்டு, இடைக்காலத்தில் துருப்பிடித்தாற்போல் நொடித்துக் கிடந்த அந்தக் கைக்கு இப்போது மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியது. அகத்துத் தெய்வமான சீதளாவுக்கே துர்க்கா பூஜை செய்யப்பட்டது. 'சீதளா' என்பது நம் பக்கத்தில் மாரியம்மன் போலாகும். சீதளா தேவி அமிருதத்தை மாவிலையால் தோய்த்து ஊரெங்கும் தெளிப்பதுபோல் கனவு கண்ட க்ஷுதிராம் (ராமகிருஷ்ணரின் தந்தை) ஒரு ஜல கும்பத்தில் மாவிலையைச் செருகி அதில் சீதளாவைப் பிரதிஷ்டை செய்திருந்தார். புண்ணிய காலங்களில் அந்தத் தீர்த்தத்தை மாற்றுவார்கள். இப்போது துர்க்கா பூஜையை அந்தச் சீதளாவுக்குச் செய்தார் சிவராம் - சாரதையின் அருமைப் பிள்ளை 'ஷிபு'.

அந்தணாளருக்கு அன்னம் பாலித்தாள் சாரதை. ''ஷிபு! நீயே உன் கையால் இலை போட்டு ஜலம் எடுத்து வை. இலையிலே உப்புக் கல்லும் உன் கையாலே வை. நான் அன்னம் பரிமாறுகிறேன்'' என்றாள் தேவி, அந்தப் பிள்ளைக்கு அந்தணோத்தமர்களின் ஆசீர்வாதம் பூரணமாகச் சேர வேண்டும் என்ற ஆசையில்.

ஷிபு அங்கிருந்தவரையில் ரகுவீரனுக்கும் முறைப்படி பூஜை செய்தார். பிறகு வைதிகரை வைத்து அந்தப் பூஜையைத் தொடர்ந்து நடத்தினுள் தேவி.

ஒரு நாள் ராமகிருஷ்ணர் தோன்றி, ''எனக்குக் கிச்சுடி பண்ணிப் போடேன்'' என்று கூறி மறைந்தார்.

சாரதைக்குப் புல்லரித்தது. அவளது மாமனருக்கு ரகுவீரனிடம் அபார பக்தி. ''அவன் அயோத்திக்காரன். வாயு திசை(வட மேற்கு)க்காரர்களுக்கு இந்த வங்காளத்துச் சாப்பாடு பிடிக்காது. ரகுவீரனுக்குக் கிச்சுடிதான் நிவேதனம் பண்ணனும்'' என்பார் க்ஷுதிராம். அதை நினைத்துப் புளகித்தாள் சாரதை. கிச்சுடி செய்தாள். ராமகிருஷ்ணரின் புகைப்படத்தை வைத்து அவள் பூஜித்து வந்தாலும், கிச்சுடியை ரகுவீரன் முன்னர்க் கொண்டு வைத்து நமஸ்கரித்தாள். ''ரூபம்தான் வேறே! அவா ரெண்டு பேரும் ஒருத்தர்தான்'' என்று சொல்லிக்கொண்டாள்.

அம்மா சிறிது காலம் மகிழ்ச்சியாக இருந்துவிட்டாளே! இதோ அதற்கு எதிர்த் திசையில் ஒரு நிகழ்ச்சி:

ஒரிஸ்ஸாவிலிருந்து ஒரு கிழச் சந்நியாசி காமார்புகுருக்கு வந்து தங்கியிருந்தார். இளவட்டங்களிடையே சிறிது காலமாகக் காலித்தனம் தலை தூக்கியிருந்தது. காரணமேயில்லாமல் அந்தச் சந்நியாசியைச் சீண்டி இம்சித்தனர், இந்த விடலைகள். அவரும் பாவம், ஊரை விட்டே போய் விடுவதென்று நிச்சயித்தார். இந்தச் செய்தி காதில் விழுந்ததோ இல்லையோ நம் அம்மா சொல்லொணு வேதனையுற்றுள். தனக்கே உரிய அதிசய எழுச்சியைப் பெற்றுள். ''ஒரு புண்ணியாத்மா நம்ம ஊரை விட்டு மனம் நொந்து போகப்படுமா? அவாவாளும் நம்மாலே முடிஞ்சதைப் போட்டு அவருக்கு ஆசிரமம் கட்டித் தருவோம்'' என்று மக்களைத் தட்டி எழுப்பினுள். ஊரார் சேர்ந்து ஹால்தார்புகுர் என்ற ஏரிக்கருகே புதிய குடில் கட்டலானுர்கள்.

வானம் கனுந்தகாரமாகக் கறுத்து வந்தது. தேவி சாரதை குழந்தை போலக் கைகுவித்தபடி வானத்தை நோக்கி, ''ஸ்வாமீ! கொஞ்சம் பொறுத்துக்கோங்கோ! கொஞ்ச நாழிதான்! இந்தக் கூரையை வேய்ஞ்சுடறேம். அப்புறம் உங்க மனம் கொண்டமட்டும் கொட்டித் தீர்க்கலாம்'' என்றுள்.

அவள் சொல்லி ஆண்டவன் கேட்காதிருப்பானோ? மேகம் விலகிற்று. குடில் எழுந்தது. துறவி அதில் வந்து புகுந்தார்.

அவருக்குத் தினமும் அம்மா உணவுப் பண்டங்கள் வழங்கி வந்தாள். காலையும் மாலையும் அங்கே சென்று, ''ஆண்டியப்பா, சௌக்கியமா இருக்கேளா?'' என்று விசாரிப்பாள்.

சில நாட்களிலேயே அவர் மாறாத சௌக்கியமான பரமபதம் அடைந்தார். அதை முன்கூட்டி அறிந்தே தேவி அவர் அவ்வூரை விட்டு நீங்காமல் இருத்தி வைத்தாள் போலும்!

தன் வீட்டிலேயே புகுந்து ஹரீஷ் செய்த அட்டூழியமும் ஒரிஸ்ஸா சுவாமிகளுக்குக் காலிப் பசங்கள் இழைத்த அக்கிரமும் சாரதாவைச் சிந்தாகுலமாக்கின. 'வியாதியையும் வறுமையையும் வதந்திப் பேச்சையும்பற்றிக் கவலையில்லை. இன்று கற்புக்கும் ஆபத்து வந்ததே? தனியளாக எப்படிக் காலம் கழிப்பது?' என்று யோசிக்கலானாள் தேவி.

இதே சமயத்தில் கிருஷ்ணபாவினி தேவி, கோலாப் மா முதலியோர் முன்னின்று அம்மாவைக் கல்கத்தாவுக்கே அழைப்பதென முடிவு செய்தனர். பலராம் பாபுவின் வீட்டிலேயே அவளுக்கு இருக்கை ஏற்பாடு செய்து தர எண்ணினர்.

'அவர் தீர்மானமாகச் சொன்ன வாக்கை மீறிக் காமார்புகுரை விட்டுச் செல்வதா?' என்று குழம்பினாள் தேவி. கிச்சுடி வேண்டும் என்றால் தரிசனம் தந்த அந்தப் பொல்லாத கணவர் இந்த இக்கட்டான சமயத்தில் எந்தச் சமிக்ஞையும் தெரிவிக்கவில்லை.

'அவர் எதற்காகக் காமார்புகுரில் அடைந்து கிடைக்கச் சொன்னார்? எந்த விவகாரமும் இன்றிப் பதிவிரதம் பூண்டு ஹரி ஸ்மரணம் செய்வதற்குத்தானே? ஆனால் அதுதான் இங்கே நடக்கவில்லை. ஊர்ப் பாடு எல்லாம் இங்கே வந்து சேருகிறது. தன் பதிவிரதத்துக்கே ஆபத்து வந்துவிடும் போலும் இருக்கிறது. ஹரிஸ்மரணம் செய்வதில் எங்கே தெளிவிருக்கும்? அவர் சொன்ன நோக்கத்துக்காகவே இந்த ஊரை விட்டுப் போனால்தான் நல்லது' என்று முடிவு செய்துவிட்டாள் அம்மா.

இருப்பினும் ஊர்ப் பெண்டுகளை அழைத்து ஆலோசனை கலந்தாள். ஸ்ரீ ராமசந்திரன் வானரர்களை ஆலோசனை

கலந்தது போல் நம் தேவி உடன் இருப்பவர்களுக்கு மதிப்புத் தந்தாள். அவர்களில் சிலர், "நன்ற யிருக்கே! உங்களுக்கு என்ன வயசாயிடுத்து? நீங்க கல்கத்தா போனு அந்த சிஷப் பிள்ளைகள் உங்களைச் சுத்தி வரும். அது லட்சணமா யிருக்காது" என்றனர். காமார்புகுர் பாலை வனத்தில் சாரதைக்கு எப்போதுமே ஒரு நீர்ச் சுனையாக இருந்தவள் பிரஸன்னமயீ. "நீங்க இந்த ஊரிலே இருந்தா எங்களுக்குப் பாக்கியம்தான். ஆனல் உங்களுக்கு மாளாத ஹிம்சையாகவே இருக்கும். நீங்க கல்கத்தாவுக்கே போயிட றதுதான் சரி. வசதியும் நல்ல மனசும் இருக்கிற பக்தாள் கிட்டப் போய் இருங்கோ. அந்தச் சிஷ்யப் பிள்ளைகள் உங்க வயிற்றிலே பிறந்த பிள்ளைகளுக்கு மேலே. நீங்க போகத்தான் வேணும் என்கிறதிலே இரண்டாவது அபிப்பிரா யத்துக்கு இடமே இல்லை" என்று பட்டுக் கத்தரித்தது போலச் சொல்லிவிட்டாள் அந்தப் பெருமாட்டி.

பதியின் வாக்கை அதன் எழுத்துப்படி பின்பற்றுவதை விட அதன் கருத்துப்படி பின்பற்றுவதே விவேகம் என்று அம்மாவும் சமாதானப்படுத்திக்கொண்டாள். சுமார் ஓராண்டு காலம் அவரது கிராமத்தில் அவதிப்பட்ட பின் கல்கத்தாவில் பலராம் பாபுவின் வீட்டுக்குப் பெயர்ந்தாள்.

31. "அம்மான்னு அம்மா!"

தொடர்ந்து நின்ற என் தாயானே....
சிந்திக்கப் பெற்றேன் நானே

—அப்பர் ஸ்வாமிகள்

கல்கத்தாவாஸினி யாகிவிட்டாள் அம்மா!

ஆனல் கல்கத்தாவின் நாகரிக அற்புதங்கள் ஏதும் தெரியாத கிராமாந்தர அம்மாவாக இருந்தாள். அவளது அப்பாவிக் கண்ணுக்குக் கல்கத்தாவில் சர்வ சகஜமாகிவிட்ட சிறிய விஷயங்கள்கூடப் பெரிய நாகரிக விஞ்ஞான அம்சங்களாகத் தெரிந்தன. நமக்கு ஹாஸ்யமாக இருக்கும்!

ஒரு நாள் கடிகாரம் நின்றுவிட்டது. அப்போது அம்மாவைப் பார்க்க வந்திருந்த ஒரு தனவந்தரின் மாற்றுப் பெண் அதற்குச் சாவி கொடுத்து மறுபடி ஓடவைத்தாள். அம்மா வைத்த கண் வாங்காமல் அந்த அதிசயத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அதற்குப் பின் பல முறை அந்தப் பெண்ணின் புத்திசாலித்தனத்தைப்பற்றிச் சொல்லும் போது, ''அடேயப்பா, அந்தப் பெண்ணுக்கு எத்தனை சாதுரியம்? கடிகாரத்துக்குச் சாவி கொடுக்கத் தெரியறதுன்னு பாருங்களேன்! இந்தக் காலத்துப் பொம்மனுட்டிகள் என்னவெல்லாம் பண்ணரு?'' என்று வியந்து கூறுவாள் அம்மா.

அம்மாவுக்கு ஓர் அரிக்கேன் விளக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அம்மா அதைப் பொத்திப் பொத்திக் காப்பாற்றி வந்தாள். எனவே, சிம்னி உடையாமலே இருந்தது. ஆனல் உள்ளே புகை ஏறிவிட்டதைக் கண்டு யாரோ, ''என்னம்மா, சிம்னியை எடுத்துத் துடைக்கவில்லையா?'' எனக் கேட்டனர்.

''நானு? சிம்னியைக் கழட்டறதா? அச்சச்சோ! அந்த மிஷினைத் தொட்டு, நான் ஒரு அவலப் பொம்மனுட்டி, சிம்னியை எப்படி எடுக்கறது?'' என்று வினவினுள் அம்மா.

ஏதுமறியாத அம்மாவின் கண்களில் சிம்னியைப் பொருத்தும் இரண்டு கம்பி வளையங்கள் அரிக்கன் லாந்தரை ஒரு மிஷினுக்கிவிட்டன!

ஒரு நாள் குளியலறைக் குழாயை அம்மா திறந்தாள். 'புஸ்'ஸென ஓசை வந்தது. அம்மா வெளியே ஓடி வந்துவிட்டாள். ''குழாய்க்குள்ளே எப்படியோ பாம்பு போய்ப்

பதுங்கிண்டிருக்கு. நான் திறந்தேனே இல்லையோ சீற ஆரம் பிச்சுடுத்து'' என்ருள்.

மற்றவர்கள் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து விழுந்து விழுந்து சிரித்தார்கள். குழாயிலே காற்று அடை பட்டுப் பிறகு 'புஸ்'ஸென வெளிப்படுவதுண்டு என்று விஷயம் விளக்கப்பட்ட பின் அம்மாவும் சேர்ந்து சிரித்தாள்.

நம்முடைய இந்தப் புத்திசாலி உலகின் புத்திசாலித்தனங் கள் அவளுக்குத் தெரியாவிட்டால் என்ன? அவளுக்குத் தெரிந்த அக உலக சமாசாரங்கள் நமக்குந்தான் தெரியவில்லை. நவீன உலகின் அரிச்சுவடியும் தெரியாதிருந்த அதே சமயத்தில் அம்மா ஆத்மிகத்தில் எத்தகைய உச்சிக்குச் சென்றிருந்தாள்! ''படிப் பறிவில் சிறந்த கல்கத்தாவின் இருளிலே படிப்பறியா ஒளியைப் பரப்பினுள் அம்மா'' என்று நயம்பட உரைப்பார் ஸ்வாமி சிரத்தானந்தர்.

பலராம் பாபுவின் வீட்டு வெளி மாடியிலே தியானம் செய்ய அமர்ந்த மாத்திரத்தில் அவளை விட்டு நமது புத்திசாலி உலகம் அடியோடு கழன்றுவிடும். எத்தனை எத்த னையோ பௌதிக அதீதமான, அதீந்திரியமான, தெய்விக அநு பவங்களைப் பெற்ருள். அநுபவம், அநுபவிப்பவர் என்ற பேத மும் அற்ற ஸமாதியும் பன்முறை கூடியதுண்டு.

ஒரு நாள் தியானம் கலைந்த பின் அவள் யோகின்-மாவிடம் சொன்னுள்: ''இன்னிக்கு எனக்கு ஒரு காட்சி. நான் ஏதோ தூர தேசத்திலே இருக்கேன். அந்தத் தேசத்துக்காராள் என்னை ரொம்ப அன்போட நடத்தரு. நான் ரொம்ப அழகா ஆயிடறேன். டாகுரும் அங்கே வரார். அவா பிரியமாக என்னை டாகுர் பக்கத்திலே உட்கார்த்தி வைக்கரு. எனக்கு அப்போ ஏற்பட்ட ஆனந்தத்தை வாய் விட்டுச் சொல்ல வராது. அப்புறம் இகலோக ஸ்மரணை வந்தது. என்னேட இந்த அமங்கல சரீரத்தைப் பார்க்கிறேன். 'இந்த அசங்கியமான சரீரத்துக்குள்ளே ஏன் மறுபடி நுழையணும்? வேண்டாம்'னு நினைக்கிறேன். ஆனு, ஏனே தெரியலை, எப்படியோ சமாளிச் சுண்டு இதுக்குள்ளேயே மறுபடி வந்து புகுந்துக்கறேன்.''

தன் குழந்தைகளை வாழ்விக்கத் தான் அப்படி வந்து புகுந்துகொண்டாள்! வேறென்ன காரணம் கூற முடியும்?

* * * *

அம்மாவுக்குப் பேலூரில் கங்கைக் கரையில் ஒரு தனி ஜாகை அமர்த்தினர், அவளுடைய பக்தர்கள். டாகுர் மறைந்த

போது அம்மாவிடம் அவ்வளவாக ஈடுபடாதவர்களுங்கூட இந்த இரண்டாண்டுகளில் அவளது மகத்துவத்தைச் சிறிது சிறிதாகப் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர். அவளது தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆர்வத்துடன் முன்வந்தனர்.

பிற்பாடு ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் தலைமையான மடம் அமையவிருந்த பேலூருக்கு அம்மா இப்போதே சென்றுவிட்டாள்! அங்கொரு நாள் நீண்ட நேரம் சமாதியில் இருந்து தியானம் கலையும் தறுவாயில், ''யோகேன்! என் கை காலெல்லாம் எங்கே?'' என்று வினவினாள்.

''இதோ தானேம்மா இருக்கு!'' என்று யோகேனும், கோலாப்பும் அவளது கர சரணங்களைக் கைகளால் அழுத்திப் பிடித்துக் காட்டினர்.

வெகு நேரத்துக்குப் பின்னரே அம்மாவுக்குச் சரீர உணர்வு உண்டாகி, அதை இயக்க முடிந்தது. நமக்கோ, சரீரத்தைத் தவிர வேறெதையுமே நமதென உணர முடியவில்லை!

புரி ஜகந்நாதத்துக்கு யாத்திரை கிளம்பினாள் அம்மா—பக்தர் புடைசூழ.

ஜகந்நாதர் ஆலயத்துக்குக் கிளம்பினாள். பலராம் பாபுவின் பண்டாவாகிய கோவிந்த சிங்காரி அவளுக்காகப் பல்லக்குக் கொண்டு வரக் கிளம்பினார், பலராமின் குருபத்தினி ஆச்சே என்று மரியாதை செய்யும் முறையில்.

சாரதை தனக்கே உரிய விநயத்துடன் பேசினாள்:

''கோவிந்தா! அவன் ஜகத்துக்கெல்லாம் நாதன். அவனைப் பார்க்கப் போற எனக்கா பல்லக்கு? நீ வழி காட்டிண்டு போ. உன் பின்னாலேயே, தீன ஸ்திரீயாக நான் வரேன்.''

அவ்விதமே சென்றாள்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் இதயமார்ந்த ஈடுபாடு கொண்டிருந்த புரிக்கு, அவரது மறுபிறவி என்றே பலர் கருதிய ஸ்ரீ ராமகிருஷ்ணர் சென்றதில்லை. அம்மா தன் சேலையிலே ராமகிருஷ்ணரின் படத்தை மறைத்தெடுத்துக்கொண்டு ஜகந்நாதனிடம் சென்றாள்—**அவருக்கும்** ஸ்வாமி தரிசனம் செய்து வைக்க வேண்டும் என்றே! அந்தப் படம் அவளுக்கு உயிர் கொண்டு வாழ்ந்தது!

ஜகந்நாதனைக் கண்டதும் சிரித்துக்கொண்டாள்: ''அப்படியானால் என் நாதனும் ஜகந்நாதனும் வேறு வேறா என்ன?''

புரி ஜகந்நாதர், தம் தக்ஷிணதேச விக்கிரகங்களைப் போல் அழகுப் பிம்பம் அல்ல! 'கலைக் கண்' படைத்த நமக்கு அங்கு

நெஞ்சம் நிறையாமலும் போகலாம்! ஆனால் அம்மா அங்கே பெற்ற அநுபவந்தான் எத்தகையது? ஜகந்நாதன் உயிரும் உடலும் கொண்டு நவரத்ன கசிதமான சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான்! அவனுக்குப் பக்கலிலே சாமரம் இரட்டுவது, ஆஹா, அது யார்? ஆம், இங்கே நின்று தரிசனம் செய்கிற சாரதையேதான் அங்கேயும் சாமரம் வீசுகிறாள்! இங்கு, அங்கு என்ற இடைவெளிகளின் அர்த்தமே மாறிவிட்ட நிலையன்றோ?

அன்றிரவு கனவிலே மீண்டும் வந்தான் ஜகந்நாதன். ஆனால் உலகெலாம் கூறும்வண்ணம் கிருஷ்ணபெருமானாக அல்ல, சிவலிங்கமாகத் தரிசனம் தருகிறான்! நவரத்தின சிம்மாதனத்துக்குப் பதில், லட்சம் சாளக்கிராமங்களாலான ஆசனத்தில் எழுந்தருளியிருக்கிறது ஜகந்நாதலிங்கம். பாண்டுரங்கனைப் 'பரப்பிரம்மலிங்க'மாகக் கண்டு துதித்தார் ஆதிசங்கரர். அம்மா ஜகந்நாதனை ஸாட்சாத் சிவலிங்கமாகக் கண்டாள். அந்த லிங்கத்துக்குப் பக்கத்திலே, முன்பு சாரதை சாமரம் வீசிய இடத்திலே தெளிவுமயமாக நிற்கிறாள் பரமேசுவரி. 'இந்தத் தெளிவைத்தான் விமலா தேவி என்கிறார்கள்' என்று சாரதை புரிந்துகொள்கிறாள். விமலா தேவிக்குப் பலியிடப்படுகிறது. 'ஓகோ, இன்று அஷ்டமியல்லவா? அதுதான் அம்மாவுக்கு விசேஷ நிவேதனம்' என்று எண்ணுகிறாள் சாரதை. பிறகு இதுகுறித்துப் பக்தர்களிடம் பேசிய நம் அம்மா, ''ஜகந்நாதனே சிவன்; விமலாதான் துர்க்கா தேவி'' என்றாள்.

உடன் வந்திருந்த அறிஞர் ஒருவர், ஆதியில் ஜகந்நாதர் ஆலயம் சிவமந்திரமாக இருந்ததெனவும், பௌத்த சைத்தியமாக இருந்ததெனவும் இரு கருத்துக்கள் உண்டு என்று கூறினார்.

புரியில் இருந்தபோது லக்ஷ்மியின் சந்நிதியில் அம்மா பல மணி நேரம் தியானம் புரிவது வழக்கம்.

வேறு சில ஊர்களுக்கும் பக்த கோடிகள் அவளை அழைத்துச் சென்றனர். 'இவர்களோடு இப்படிக் குஷியாக இருக்கிறோமே! 'காமார்புகுரில் இரு' என்று அல்லவோ பதி பணித்தார்?' என்று அம்மாவின் நினைவில் உறுத்தியது. தன்னைப் படாத பாடு படுத்திய அந்தக் கிராமத்துக்கு மறுபடியும் சென்றுவிட்டாள் அம்மா.

* * * *

காமார்புகுரில் மகள் படும் பாட்டை அறிந்த சியாமசுந்தரி அவளைத் தன் வீட்டுக்குப் பிடிவாதமாக அழைத்து

வந்தாள். ''அடி சாரதே! உனக்குப் பகவானே பண்ணின சோதனைகள் போறும். நான் கண்ணை மூடறமட்டும் இந்த மாதிரி ஊர் ஜனங்க ஏச்சுக்கு நீ ஆளாகப்படாது. ஆமாம், சொல்லிட்டேன்'' என்றாள் சியாமை அழுத்தமாக.

தாயுள்ளம் நம் அம்மாவுக்கா புரியாது?

''இனிமேலே நீ சொல்கிறபடியே செய்யறேன். ஒண்ணு உன்கூட இருக்கேன். இல்லாட்டா என் பசங்களோடே இருக்கேன்'' என்று தன் அம்மாவுக்கு வாக்குத் தந்தாள்.

கண்கண்ட தெய்வம் என்று சாஸ்திரங்கள் கூறும் கணவர் அவளைக் காமார்புகுரில் இருக்கச் சொன்னாலும், அன்னை என்ற முன்னறி தெய்வம் அவள் முன்னேயே நின்று, பெற்ற வயிறு பரிதவிக்க அவளுக்கு இட்ட ஆணையைச் சிரமேற்கொண்டாள்.

ஆனால் தன்னைப் பார்க்க வருபவர்களிடம், ''காமார் புகுர் மண்ணிலே போய் விழுங்கோ. டாகுர் ஜனிச்ச புண்ணிய பூமி'' என்பார்கள். ''அங்கே ராத் தங்கினா ரொம்ப விசேஷம்'' என்பாள். அவளது பிரபுவின் குடிலுக்கு ஒரு பழுது வராமல் அவ்வப்போது புதுப்பிக்கப் பணம் அனுப்பிக்கொண்டேயிருப்பாள். அது மட்டுமல்ல, அவளைத் திருணமாத்திரமாக மதித்த ராமலால் வீட்டுக்கு மாடி கட்டவும் அம்மாவே பொருளுதவி செய்தாள். பெண் குலத்துக்கு அம்மா கற்பிக்கும் பல பாடங்களில் புக்ககப் பாசமும் ஒன்று.

(பக்தர்கள் பணக் காணிக்கை செலுத்துவது நம் மரபில் ஊறிவிட்ட வழக்கமன்றோ? இவ்விதந்தான் நம் அம்மாவிடம் சிறு சிறு தொகைகள் சேரும்.)

தன் மாதா சொன்னாளே என்று புக்ககத்தினரிடம் அவதிப்படாமல் இருக்கப் பிறந்தகம் வந்தாள். பிறந்தகத்தில் அவதிப்பட்டாள். அவளுடைய தம்பிகளின் லட்சணம் அப்படி!

தன் தாய்க்கு வாக்குத் தந்த அம்மாவுக்கு, ராமகிருஷ்ணரிடம் அவரது தாய்குறித்துத் தான் தந்த வாக்கு நினைவு வந்தது. ஒரு நாள் ராமகிருஷ்ணர் அவளிடம் சொன்னார்: ''என் அம்மாவுக்கு நான் பிள்ளைன்னு என்ன பண்ணினேன்? அவ போனவிட்டு ஒரு நாள் தர்ப்பணமாவது பண்ணுவோமேன்னு கங்கையைக் கையில் எடுத்தேன். ஆனால் நான் எப்பாடு பட்டாலும் கையிலே ஜலம் சேர்ந்தால்தானே? சந்நியாசியான நான் மாத்ரு கர்மம் செய்யறது ஜகன்மாதாவுக்கே சம்மதமில்லை. தர்ப்பணம் பண்ணாமலே திரும்பிட்டேன். சாரு, நீ என் மாதிரி சந்நியாசம் வாங்கவில்லை. அதனாலே நீ எப்ப

வாவது கயைக்குப் போய் அம்மாவுக்குப் பிண்டம் போட்டு டறயா?''

சாரதையின் கன்னங்கள் நனைந்தன. சந்திரமணியின் வயிற்றைத் தேடி வந்து கர்ப்பவாசம் செய்த பரமபுருஷன் அதற்குமேல் அவளுக்கு என்ன செய்ய வேண்டும்? தன் அன்னைக்குக் கடனாளியாகவே நின்றுவிட்டதாகக் கருதும் கணவரிடம், ''கயைக்கு நாம் சேர்ந்து போவோம். நான் அம்மாவுக்குப் பிண்டம் போடறேன்'' என்றாள்.

''அந்த ஒரு க்ஷேத்திரத்துக்குமட்டும் இந்தச் சரீரம் போக முடியாதே'' என்றார் ராமகிருஷ்ணர் தாபத்துடன்.

ஆதியில் ராமகிருஷ்ணரின் தந்தைக்குக் கயையில் வதியும் கதாதரன், தானே மகனாகப் பிறப்பேன் என்று திருவாக்குத் தந்திருந்தான். அதனால்தான் ராமகிருஷ்ணருக்கு, 'கதாதர்' எனப் பெயரிடப்பட்டது. கயை சென்றால் தம் சரீரம், காந்தத்தால் இழுக்கப்படும் காந்தம்போல், கதாதர மூர்த்திக்குள் அடக்கமாகிவிடும் என்பார் ராமகிருஷ்ணர்.

இப்போது அதையெல்லாம் நினைவு கூர்ந்தாள் அம்மா. தன் அடியார் குழாத்தில் சிலருடன் கயைக்குச் சென்றாள். விஷ்ணு பாதத்தில் பரம புண்ணியவதியான தன் மாமியாரை ஸ்மரித்துப் பிண்டமிட்டாள். கணவரது ஆக்ஞையை நிறைவேற்றியது அவளுக்கு மிகுந்த மனநிறைவு அளித்தது.

அம்மா கல்கத்தாவுக்குத் திரும்பிய பின் ஒரு சோக சம்பவம் நிகழ்ந்தது. அன்று டாகுருக்கும், இன்று இவளுக்கும் அணுக்கத் தொண்டராக அரும் பணி செய்த பலராம் பாபு மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டார்.

அம்மாவின் மனம் இடுகாடாயிற்று. கல்கத்தாவுக்கு அணிமையில் குஸூரி என்ற கிராமத்தில் கங்கைக் கரையில் இடுகாட்டை அடுத்த ஓரிடத்தில் சிறிது காலம் வசித்தாள்.

நரேந்திரநாதனுக்கு அனைவரையும் விடுத்து இமாலயத்துக்குச் சென்று தவமிருந்து உன்னத அநுபூதிகளைப் பெறும் ஆர்வம் இச்சமயத்தில் கரை புரண்டது. அம்மாவிடம் வந்தார். பௌருஷபர்வதமான நரேன் அபலையாகவே தோன்றும் அம்மா திருமுன்னர் நாணல் துரும்பு போல் ஆகிவிடுவது வழக்கம். நெடுஞ்சாண் கிடையாக அவள் முன்னே விழுந்து கிடந்தார்.

காமார்புகுரில் அம்மா பெற்ற திவ்வியக் காட்சியில் கங்கையைக் கழலிணையிலிருந்து பெருக்கிய டாகுர், நரேனுக்குள்

அல்லவோ சென்று மறைந்தார்? அந்த நினைவு வரவே அம்மா ஸ்தம்பிதமாக அமர்ந்திருந்தாள்.

நமஸ்கரித்து எழுந்த நரேந்திரர், ''அம்மா, பாடறேன், கேக்கறியா?'' என்றார்.

''திவ்வியமா, குழந்தே.''

நரேன் பாடினார். திவ்வியமாகப் பாடினார். ராமகிருஷ்ணர் கற்றுக்கொடுத்த பாட்டுக்களைப் பாடினார். அவரது எல்லையில்லா இனிமை பொருந்திய குரல், பாடல்களின் ஆழ்ந்த பொருள், டாகுரின் நினைவு எல்லாமாகச் சேர்ந்து, அம்மா 'புன்புலால் யாக்கை புரைபுரை கனிய, என்பெலாம் உருக' அமர்ந்திருந்தாள்.

''அம்மா, எல்லாத்தையும் விட்டுட்டு ஈசுவரானுபவத்தைச் சாசுவதமாக்கிக்கணும்னு ஹிமாசலம் போகப் போறேன். அந்த நிலை ஸித்தித்தாலே நான் உண்மையான மநுஷ்யன். அப்படிப் பட்ட உண்மை மநுஷ்யனா ஆக முடிஞ்சால் திரும்பி வருவேன். இல்லாவிட்டால் இதுதான் நான் உன்கிட்ட பெற்றுக்கற பிரிவுபசாரம்'' என்றார் நரேன்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அம்மா ஆடிவிட்டாள்.

''மகனே! உன் வாயினாலே நீ அம்மாகிட்டே அப்படிச் சொல்லப்படுமா?'' என்றாள்.

நரேன் தமது நாக்கைக் கடித்துக்கொண்டார். ''ஆமாம்மா, நான் சொன்னது தப்புத்தான், உன் ஆசிர் வாதம் இருக்கச்சே என் லட்சியம் எப்படித் தோற்றுப் போகும்?'' என்றார்.

''டாகுர் கிருபையாலே மங்களமாகப் போய், ஜயசாலியாகத் திரும்புவாய், அப்பனே!'' என்று மனமார ஆசி சொன்ன தேவி, ''அது சரி, அம்மா கிட்டே சொல்லிண்டியா?'' என்றாள்.

அதுதான் தாயுள்ளம்! நரேன், ஜனகமாதாவிடம் சொல்லிக்கொண்டிருப்பானோ மாட்டானோ என்று ஜகன் மாதா அந்தத் தாய்க்காகப் பரிந்துரைக்கிறாள்.

நரேன் அவளது திவ்விய முகத்தை நிறைவுடன் பார்த்து, நிச்சயத்துடன் கேட்டான்: ''அம்மாவா அம்மா? உன்னைத் தவிர யார் அம்மா?''

* * * *

குஸுரி வீட்டிலிருந்து வராஹநகரில் ஒரு வீட்டுக்குப் பெயர்ந்தாள் அம்மா. அங்கு ஒரு நாள் கிரீஷ்சந்திர கோஷ் தமது அருமைப் பிள்ளைக் குழந்தையுடன் வந்திருந்தார். கிரீஷ்

வங்கத்திலே பிரபல நாடகக் கலைஞரும் ஆசிரியருமாவார். பூர்வத்தில் தாம் செய்யாத பாவம் பாக்கியில்லை என்று பிற் காலத்தில் ஓயாமல் கூறிப் புலம்பியவர் இவர். ராமகிருஷ்ணர், "உங்கள் வாழ்க்கை முழுவதற்கும் நான் பொறுப்பாளி" என்று சொல்லிக் கிரீஷை 'மேட் ஓவர்' செய்துகொண்டார். அம்மாவின் எதிரிலேயே கிரீஷ் வரமாட்டார். இச்சமயத்தில் அம்மா கோஷா விரதத்தில் மிகவும் தீவிரமாக இருந்தாள். முகம் உட்பட உடல் முழுவதையும் போர்த்தியபடி ஒரு சில ஆடவருக்குமட்டும் தரிசனம் தந்து வந்தாள். ஒரு சில பாக்கிய சாலிகளே அவளது பாத விரல் நுனிகளைமட்டுக்கும் காணும் பேறு பெற்றிருக்கின்றனர். மற்றவர்கள் அவள் இருக்கிற அறைக்கு வெளியே நமஸ்கரித்து, உள்ளே தேவி இருக்கிறாள் என்ற நினைவுடன் அங்கு அமர்ந்து, தியானித்துச் செல்வர். கிரீஷோ, 'பரம அதமனாகிய என் கண்கள் புண்ணிய மாதாவின் மீது தப்பித் தவறியும் படக் கூடாது' என்று கூறி எட்டாத் தொலைவிலேயே நின்று வணங்கிப் போவார்.

இன்று அவரது மூன்று வயசுப் பிள்ளைக்கு அப்பாவின் மடியில் இருப்பாகவே இல்லை. மாடி அறையைச் சுட்டிக் காட்டி, "ஊ ஊ" என்று அவரைத் தார்க்குச்சி போட்ட வாறு இருந்தான், பேசும் சக்தி பெற்றிராத அந்தப் பிள்ளையின் செய்கைகளில் சில அசாதாரணமாக இருக்கும். டாகுரே தமது அம்சத்திலொன்றை இப் பிள்ளையாக அனுப்பி யிருப்பதாய்க் கிரீஷுக்கு ஒரு நம்பிக்கை.

இன்று அவன் மாடி அறையைக் காட்டி, "ஊ" சொன்ன போது, அருகே இருந்தவர்கள் அம்மா அங்கேதான் இருக்கிறாள் என்று கூறினர். மாடியை நோக்கிக் கும்பிட்டார் கிரீஷ். குழந்தையைச் சிஷ்யர்களோடு மாடிக்கு அனுப்பி வைத்தார். அந்தப் பிள்ளை நேரே சென்று அம்மாவின் கால்களைப் பிடித் துக்கொண்டு தலையால் கும்பிட்டது. அம்மா அதை அன் புடன் அங்கமெலாம் தடவித் தந்தாள்.

கீழே இறங்கி வந்த பாலன் கிரீஷை விரலால் குத்தி, சைகைமூலம் அவரையும் மாடிக்கு வருமாறு உந்தினான்.

"குழந்தே! இந்தப் பாவியை இப்படிச் சோதிக்காதே" என்று கிரீஷ் புலம்பியும் பலனில்லை. பாலன் உன்மத்தம் பிடித்தவன்போல் அமளி துமளி செய்தான். கடைசியில் கிரீஷ் அவனைத் தூக்கிக்கொண்டு அம்மாவின் சந்நிதிக்குப் போகும்படியாயிற்று.

புயல்காற்றுத் தருவென அவரது உடம்பெல்லாம் ஆட அம்மாவின் காலருகே விழுந்தார். "அம்மா! இந்தக் குழந்தை

யின் பிடிவாதத்திலேதான் துணிந்து வரும்படியாச்சு. க்ஷமிக்கணும் தேவி'' என்ருர் நாக்குழற.

மிக மெல்லிய குரலில், ''டாகுர், டாகுர்'' என்று அம்மா முனகினுள்.

சிறிது காலத்திலேயே அந்தப் பாலகன் டாகுரைத் தேடிக்கொண்டு போய்விட்டான்!

* * * *

சாரதா தேவிக்குப் பழைய ரத்தக் கடுப்பு திருப்பிக்கொண்டது. பக்தருக்குச் சிரமம் தர வேண்டாமென்று ஜயராம்பாடிக்குச் சென்ருள். உடம்பு சொஸ்தமாயிற்று. பிறந்தகத்திலேயே தொடர்ந்து தங்கியிருந்தாள்.

சியாமாசுந்தரியின் செல்லமாகிவிட்ட ஜகத்தாத்ரிக்குப் பூஜை விமரிசையாக நடந்தது. சாரதையின் பசங்களில் அநேகரும், பக்தர்களும், புத்திர சோகத்துக்கு ஆறுதல் தேடிய கிரீஷும் ஜயராம்பாடிக்கு வந்து பூஜையில் கலந்துகொண்டனர். அம்மாவின் மகிழ்ச்சிக்கு எல்லேயே இல்லே. தன் பிறந்த வீட்டில் தன் அதிதிகளாகப் பிள்ளேகள் வந்திருப்பதில் அவளுக்கு ஒரே பூரிப்பு. முன்பு தக்ஷிணேசுவரத்தில் செய்தது போலவே இப்போதும் ஓயாமல் விருந்து சமைத்துப் போட்டு மகிழ்ந்தாள்.

பதினேந்து வயசுக் காளிகிருஷ்ணன் அப்போதுதான் ராமகிருஷ்ண மடத்துக்கு அடிக்கடி வரத் தொடங்கியிருந்தான். இன்னும் அவன் துறவு பூணவில்லே. வயசில் சிறியவனுனதால் அவனுக்கு அம்மாவிடம் சலுகை அதிகம். அவனேக் கண்டவுடன் அம்மா, அவனது மோவாயைத் தன் விரல்களால் தொட்டு அந்த விரல்களே உதட்டில் வைத்துக்கொண்டாள் என்ருல் பாருங்களேன்! மற்ற ஆடவர்களுக்கும் அம்மாவுக்குமிடையே ஒரு தூதன் போலக் குஷியுடன் ஓடி ஆடிக்கொண்டிருந்தான் காளிகிருஷ்ணன். அம்மாவின் கையிலிருந்து காரியத்தைப் பிடுங்கிக்கொள்வதில் அவனுக்கு ஒரே துருதுருப்பு. அடுப்பு மூட்டுவதற்காக வறட்டி அல்லது தணல் தட்டை அவன் வாங்கிக்கொள்ள அவசரப்படும்போது அம்மா, ''பொறுடா அப்பனே! பெற்ற தாயார், பிள்ளே கையிலே நேரடியா வறட்டியும் அக்கினியும் தரப்படாது. தரையிலே வைக்கிறேன். எடுத்துக்கோ'' என்பாள்.

சியாமாசுந்தரியின் உதார குணத்தை இந்தத் தொடரின் தொடக்க அத்தியாயத்திலேயே பார்த்திருக்கிறேம். அந்த உதாரந்தான் அவளது உதரத்திலே நம் அம்மா வந்து குடி

புகுமாறு செய்தது. இப்போது, ''பாட்டி, பாட்டி!'' என்று தேவாமிர்த பிந்துக்களைத் தெளித்து அவளைக் கூப்பிட்டுக் கொண்டு வந்திருக்கும் பேரக் குழந்தைகளை வெகு அருமையுடன் சீராட்டினாள் சியாமை. ''ஒரு காலத்திலே நீங்களே பார்ப்பேள். எத்தனை குழந்தைகள் உங்க பெண்ணை 'அம்மா, அம்மான்'னு கற்றப் போறதுகள்னு'' என்று அன்றொரு நாள் 'மாப்பிள்ளை' கூறியது சியாமையின் மனச் செவியில் ஒலித்தது.

மாப்பிள்ளை நினைவோடு தனது பதிதேவர் ஞாபகமும் வந்தது. ''அப்பாடா, மறுபடி இந்த அகம் அவர் இருந்த நாள் மாதிரி பகவானுடைய அகமாக, பாகவதாளுடைய அகமாக ஆயிடுத்து' என்று அந்தப் பாட்டி சொல்லிச் சொல்லி ஆனந்தித்தாள்.

தன் அதிசய மாப்பிள்ளையைப்பற்றிய பல விருத்தாந்தங்களைச் சொல்லி அவரது பக்தர்களைப் பரவசமுறச் செய்தாள்.

ஒரு நாள் நடந்த நிகழ்ச்சி சியாமாசுந்தரி, சாரதாமணி இவர்களின் இதயத்து அடியாழம் வரையில் பாய்ந்து சென்று உலுக்கியது. தேஸ்ராவைச் சேர்ந்த ஹரிதாஸ் பைராகி என்ற ஆண்டிப் பண்டாரம் வயலின் வாசித்தபடி ஊர் ஊராகப் பக்தி கீதங்கள் பாடி வருவார். அன்று அவர் சியாமையின் வீட்டுக்கு வந்து ராதிகா பாபு என்ற கவியின் நீண்டதொரு பாடலை நெகிழ்ச்சியுடன் கானம் செய்தார். பார்வதி தேவியைப் பார்த்து அவளது தாயான மேனை பாடுகிற பாவனையில் அமைந்த பாடல்.

என்னே இன்பச் சேதி இது! என்
கண்ணே உமையே கவினழகே!

விண்ணே முலகும் உனைவணங்கி
'அன்னே, அன்னபூரணியே' என,

எந்நேரமும் நீ அமுதம் படைத்தே
தன்னேர் இல்புகழ் தரித்தனையாம்! (என்னே)

முன்னே சிவனை மோகித்தாய்;
''உண்ணேன் அவனைக் காணுதே'' என
மின்னேர் மேனி மெலிவித்தாய், அ

பன்னே* என்று பெயர் பெற்ருய்.
பின்னே வந்தான் பிச்சாண்டி;
''மன்னே!'' என்றவன் பின்போனுய்.
''பெண்ணே, வேண்டாம்'' எனத் தடுத்தேன்.
கண்ணே மடையாய்த் திறந்தழுதேன்.
ஏசினர் ஊரார் உன்பதியை.
'காசிலன், பேசிலன், இடுகாட்டுத்
தூசியன், திகம்பரன், தேசமிலன்:
மாசில் உமைதனே மதிகெட்ட
தோசிக்குத் தந்தனே' என்றனரே.
ஊசியென்றே அவர்உரை உறுத்தக்
கூசிக் குறுகிக் குமைந்து விட்டேன்.
ஏசியவர் இன்று கூசுகிருர்!
கூசியவள் இன்று குதுகலித்தேன்!
காசினி போற்றும் காசியிலே ஸு
வாசினியாய், சிம்மாசனியாய்
ஆசியும் அடிசிலும் அனைத்து உயிர்-
ராசிக்களிக்கும் ராசி கொண்டாய்!
திகம்பர சாமித் திருக்கதவை
திக்பாலகரும் நோக்கி நிற்க,
ஏதலன் ஏழையன் பாதமதில்
ஈதல் இரந்து குபேரன் விழ,
மந்திரம் மயானம் என்றவனே
இந்திரன் சந்திரன் இறைஞ்சினரே!
ஆண்டியும் ஆண்டவன் ஆனது(உ)னைத்
தீண்டிய திவ்விய பாக்யமம்மா!

இதுவரை மேனையின் வாக்கால் பாடி வந்த கவி ராதிகா, இப்போது அன்னைக்காக ஆருமல் தவித்து, ஆராத் தவிப்பு

*கடுந்தவம் செய்வோர் தாஞக உதிருகிற சருகை மட்டும் புசிப்பர். ஆனல் சிவனுக்காகத் தவமிருந்த உமை, இலை (பர்ணம்) யைக்கூட உண்ணுததால் 'அபர்ணு' எனப் பெயர் கொண்டாள். பிராகிருதக் கொச்சையில் இது 'அபன்ணு' என்ருயிற்று. இலையும் உண்ணுத இவள், அன்னத்துக்காகக் கப்பறை ஏந்தும் பிக்ஷாடனனை மணந்து, பிற்பாடு அன்னபூர்ணேசுவரி யாகிவிட்டாள்!

ஆராச் சினமாகப் பரிணமிக்கத் தம் வாய்மொழியாகவே பாடி முடிக்கிருர்:

'ஈண்டிய செல்வமும் என்னிடத்தே' என
மூண்ட செருக்கினில் மூழ்கிய உன்
நீண்ட கண்ணைச் சொந்த மகன் ராதை
வேண்டியும் மலர்த்திட மனமில்லையே!

''அந்த நாளில் மாப்பிள்ளைக்குப் பைத்தியம்னு ஊர்ப் பேச்சைக் கேட்டுக் கேட்டுத் தற்கொலை பண்ணிக்கலாமான்னு கூட எனக்குத் தோணும். நல்ல வேளை, அப்படிச் செய்யாம லிருந்தேனே, இன்னிக்கு நீங்க இத்தனை குழந்தைகள் என் சாருவைத் திவ்விய மாதாவாகப் பூஜை பண்ணறதைப் பார்க்கிறேனே?'' என்ருள் சியாமை. மாப்பிள்ளையின் மகிமை ஊருக்குத் தெரிந்தது, அவர் சாரதையின் கரம் தீண்டியதன் பாக்கியத்தால்தானே என்னவோ? மேனையின் நிலையில் சியாமை இருந்தாலும், கவி ராதிகாவின் நிலையில் நம் அம்மாவின் குழந்தைகள் ஒருகாலும் இல்லை! செருக்கினுல் தன் கண்ணை மூடிக்கொண்டு அவர்களை இவள் ஏங்கச்செய்ததே கிடையாதே!

ஜகத்தாத்ரி பூஜையின்போது அம்மா தேவியின் பிம்பத்தருகே வந்து நின்றுவிடுவாள். நீண்ட நேரம் கையைக் குவித்து, கண் குவித்து, மனம் குவித்து நிற்பாள். பிறகு நெடு நாழிகை கையை வீசிச் சாமரம் இரட்டுவாள்.

மூன்று தினமும் ஊராருக்கு அன்னம் பாலிக்கப் பட்டது.

பிள்ளையைப் பறி கொடுத்து வந்திருந்த கிரீஷ் ஒரு நாள் ஏரியில் குளித்தவுடன், ஈர வஸ்திரத்துடனேயே ஓடிவந்து அம்மாவுக்கு நமஸ்கரித்தார். அம்மாவின் பாத விரல்களைமட்டும் நடுக்கத்துடன் முன்பு தரிசித்த அவர் இன்று ஆறுதல் வேண்டித் தலை தூக்கி அவளைப் பார்த்தார். அம்மாவின் முக்காடும் அப்போது சற்று விலகியது.

கிரீஷின் உடம்புக்குள் ஒரு தெய்விக மின்னல் பாய்ந்தது.

''ஆஹா, கடைசியில் அது நீங்கள்தானு, அம்மா?'' என்று கேட்டார். ஆனுல் குரல் வெளியே வராமல் மனத்துக்குள்ளேயே மடங்கிக்கொண்டது.

பல ஆண்டுகளுக்கு முன் கிரீஷுக்குக் காலராக் கண்டிருந்த போது கனவிலே ஒரு தாய் வந்தாள். அகலமான சிவப்புக் கரைப் புடவை உடுத்தியிருந்த அவள், ''இந்தா, இதைச் சாப்

பிடு'' என்று சொல்லிக்கொண்டு அவர் வாயிலே பிரசாதத்தைப் போட்டாள். அதன் சுவை தேவாமிருதமாக இருந்தது. கிரீஷ் விழித்தெழுந்தார். சந்தேகத்துக்கு இடமின்றி இன்னமும் அவரது அடித் தொண்டையில் தித்திப்பு ஒட்டிக்கொண்டிருந்தது. காலராவும் குணமாகிவிட்டது. அன்று வந்த அதே தாயைத்தான் இந்த அம்மாவின் திருமுகத்தில் கண்டுகொண்டார் கிரீஷ்.

யோகின்மா மூலமாக அவர் இப்பழைய சம்பவத்தைப் பற்றி **அம்மாவிடம்** கேட்டு அனுப்பினர். தன்னைக் காளியாகக் கண்ட பகடித் தம்பதியிடம், ''யார் கண்டா?'' என்று மூடி மறைத்த அம்மா, பிள்ளையை இழந்து தவித்திருந்த கிரீஷிடம் கருணை கொண்டாள். பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காத்தது தானே என்று தெளிவாகத் தெரிவித்தாள்.

அவளிடம் கிரீஷ் பேசும் அளவுக்கு உரிமை பெற்றபோது, ''உங்களை நாங்கள் அம்மா என்கிறோம்; நீங்களும் அம்மாவாகவே சொல்லிக்கொள்கிறீர்கள்! அம்மா என்றால் எந்த முறையில்?'' என்று கேட்டார்.

''எந்த முறையிலா? அம்மான்ஞ அம்மாதான்! நான் உங்களுக்கெல்லாம் உண்மையாகவே அம்மா!'' என்று சிறிதும் தயக்கமின்றி மறுமொழி தந்தாள் தேவி. ''குரு பத்தினியை அம்மான்னு பாவிக்கிற பழக்கம் உண்டே, அந்த மாதிரி இல்லே. அம்மா **மாதிரி**, பிள்ளை **மாதிரி**ன்னெல்லாம் நினைச்சுப் புதிசா ஏற்படுத்திண்ட உறவு முறை இல்லே இது. 'என் தாயே, மாதாவே'ன்னோ, 'என் மகனே, புத்திரனே'ன்னோ வெறுமனே வாயாலே பகட்டுப் பண்ணற விஷயமும் இல்லே. நான் உங்களுக்கெல்லாம் **அசல்** அம்மா'' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லி முடித்தாள் - உண்மையான அம்மாவாக நாம் நினைக்கும் பெற்ற தாயார்களும் வெவ்வேறு பிறவிகளில் பொய்யாகிவிடும்போது, அத்தனை பிறவிகளிலும் தொடர்ந்திருக்கும் ஒரே உண்மை அம்மாவுக்குரிய அழுத்தம் திருத்தத்துடன்.

'ஜகத் ஏக மாத:' என்பதல்லவா காளிதாஸன் வாக்கு?

32. பிள்ளைகளோடு பிறந்த வீட்டிலே!

..ஒரு சொற் கொண்டென்னைத் தடுத்தாண்டபின் வாழ்வித்த
ஞான குருவே, மந்த்ர குருவே! —தாயுமானவர்.

அம்மாவின் அன்பு மழையில் கிரீஷின் புத்திரசோகம் மறைந்தது. கிரீஷுக்கு அவள் எத்துணைப் பரிவுடன் உபசரணை செய்தாள்? அவர் காலையில் எழுந்தவுடன் ஒரு கெட்டில் தேநீர் அருந்துவார். ஜயராம்பாடிவாசிகளுக்கும், அம்மாவின் மற்றக் குழந்தைகளுக்கும் காலையில் பானம் ஏதும் அருந்திப் பழக்கமில்லை. அந்த நாட்களில் ரொம்பவும் வசதி படைத்தவர்களே காப்பி, டீ அருந்துவர். அம்மா கிரீஷுக்குத் தேயிலைப் பொட்டலம் வாங்கிவிட்டாள். ஆனால் அந்தக் கிராமத்தில் பசுச் செல்வமே கிடையாது. இப்போது கிரீஷுக்காகப் பல வீடுகள் ஏறி இறங்கி, அவுன்ஸ் அவுன்ஸாகப் பால் சேகரித்தாள் அம்மா.

தினந்தோறும் தமது படுக்கை விரிப்பு வெள்ளை வெளேரென்று இருப்பதைப் பார்த்துக் கிரீஷ் ஆச்சரியப்பட்டார். ஒரு நாள் அம்மா ஏரியின் கரையில் அதற்குச் சவுக்காரம் போட்டுக் குமுக்கிக்கொண் டிருப்பதைப் பார்த்துக் குமுறி அழுதுவிட்டார். மகா பாவியான தாம் படுத்துறங்கும் துணியை நிர்மல மாதா தன் கையால் பிழிந்து துவைப்பதா?

கிரீஷ் உலகில் அடைந்த கசப்பான அநுபவத்தால் மக்களைப்பற்றி வெறுத்துப் பேசினர். எல்லாவற்றையும் விட்டு ஓடிவிடுவதாகச் சொன்னர். நாடகாசிரியரான அவரது பேச்சுத் திறன் அபாரமானது. மாற்றுக் கருத்துத் தெரிவித்த மற்றவர்களுக்கெல்லாம் பளிச் பளிச்சென்று விளக்கம் தந்தார். இதையெல்லாம் கேட்டுக்கொண் டிருந்த அம்மா நாலே வாக்கியம் சொல்லி அனுப்பினள்: ''உலகம்னு ஒண்ணை வித்தியாசமா நினைக்கிற மட்டுந்தான், அதுகிட்டே பயந்துண்டு ஓடணும். உலகத்தை ஏன் வித்தியாசமா நினைக்கணும்? பகவான் கிட்டே உண்மையான பக்தியை வளர்த்துண்டா, எதுகிட்டேயும் பயப்பட்டுண்டு ஓட வேண்டியதில்லை.''

சண்டப் பிரசண்டமாகப் பேசிய கிரீஷ் அதன் பின் வாய் திறக்கவில்லை. 'ஸ்வாநுபவம்' என்பதில் பிறந்த வார்த்தையின் கனம் அப்படிப்பட்டது!

(கிரீஷுக்கு அப்போது துறவறம் வேண்டாம் என்று அம்மா கூறியது அவர் ஒருவரின் மனநிலையை ஒட்டிச் சொன்னது. இதனால் அம்மா பரிவ்ராஜக சந்நியாசத்தை ஒப்பவில்லை என்று அர்த்தமில்லை. மகான்கள் அந்தந்தச் சீடரின் மனநிலைக்கு ஏற்ப மார்க்கம் அமைத்துத் தருவர்.)

பிரபல நாடகக் கலைஞர் வந்திருக்கிறார் என்றறிந்து மக்கள் அந்த வீட்டுக்கு ஓயாமல் வந்தவண்ணம் இருந்தனர். அவர்களுக்காக, கிரீஷ் பாடிக் காட்டுவார். இந்தப் பாடல்களில் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில் அம்மா பாடம் பண்ணி விட்டாள். இதை அவள் தன் தீங்குரலில் அடிக்கடி பாடுவதுண்டு:

தவழ்ந்தோடுறான் எங்கள் தாமோதரன் (தவழ்ந்து)
உவந்து வெண்ணெய் திருடி உண்டு
பயந்து பயந்து பதற்றமுடன் (தவழ்ந்து)
கோபன்ராணி நந்தன் தேவி
கோபமறிந்தே கோபாலன்
அரும்பும் அச்சத்தோடு பின்னே
திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் (தவழ்ந்து)
'நில்லு நில்லு' என்று பொய்யாய்
நீலவண்ணனை அதட்டி
பொல்லெனச் சிரித்து அந்த
மெல்லியல் பின் தொடர்ந்து வரத் (தவழ்ந்து)

கிரீஷ் அம்மாவை அவதாரப் பிறவி என்று புரிந்துகொண்டார். கண்ணனோடும் ராமனோடும் சேர்ந்து வாழ்ந்தவர்களில் எத்தனை பேருக்கு அவர்களது அவதார மகிமை தெரிந்தது? சாரதா தேவியின் பெருமையை அவ்வீட்டில் அவளுடனேயே இருந்த அவளுடைய தம்பிமார் எவரும் அறிந்திருக்கவில்லை. அவர்களுக்குப் பரஸ்பரச் சண்டையிலேயே ருசி, பணத்திலேயே குறி! அக்காள் கனதனவான்களான சிஷ்யர்களிடம் ஒரு வார்த்தை சொல்லித் தங்களது குச்சு வீட்டை மச்சு வீடாக்க மாட்டாளா என்கிற ரீதியில் அவளைக் கொண்டு உலகியல் லாபம் பெறுவதில்தான் அவர்களுக்குக் கருத்து முழுதும் இருந்தது. இந்த அக்காளா அப்படிப்பட்டவள்? முன்பு லக்ஷ்மீநாராயண் காணிக்கை செலுத்திய பதினாயிரம் ரூபாயை ஒட்டாஞ்சல்லியாக ஒதுக்கியவள் அல்லவா? ஆனாலும் இப்போது அடியார்கள் வழங்கிய கையுறைகளை அவள் அடியோடு நிராகரிக்கவில்லை. தன்னைத் தேடி ஒரு பாசப் பட்டாளம் வந்துகொண்

டிருக்கும்போது அவர்களை உண்பிக்காமல் இருக்க அவளால் முடியுமா? ஆனால் இதற்காகத் தம்பிமாரைச் செலவிடச் சொல்லலாமா? அவள் மனத்துக்குள் ஒரு தர்மமான கணக்கு இருந்தது. அதற்கேற்பச் சகோதரர்களுக்கும் சிரமம் தராமல், அதேபோதில் பக்தர்களிடமும் துராசையுடன் கைநீட்டாமல் நடந்துகொண்டாள். தம்பிகளுக்கு இதில் மிகவும் அதிருப்தி. 'காளி' என்று ஊராரும், 'கேளே' என்று அம்மாவும் செல்லமாக அழைக்கும் தம்பி காளிகுமாருக்கு வாய் பொல்லாதது. ஏதாவது உறுத்திக் கொட்டிக்கொண்டேயிருப்பார்.

சௌகரியமான சூழ்நிலையில் சாந்தமாயிருப்பதில் என்ன பெருமை? முள்ளிலே ரோஜாவாக, சேற்றிலே செந்தாமரையாக மலர்வதுதான் பெருமை. ஓயாத பிடுங்கலுக்கிடையில் அமைதியுடன் வாழ்ந்து காட்டவே வந்தவள் அன்றோ அம்மா? இப்போது பிறந்தகத்தில் இந்த இம்சை உண்டானபோதும் அமைதியாகவே இருந்தாள். இந்த நாட்களில் எத்தனை பிழிந்தாலும் கசங்காத டெரிலின் துணிகள் இருக்கின்றனவே, அது போல் எத்தனை பிழிந்தெடுத்தாலும் அலுங்காமல் நலுங்காமல் இருந்தாள் அம்மா. பிறர் தன்னை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதில் அவள் பார்வை செலுத்துவதேயில்லை. அவனை அவர்கள் எப்படி நடத்தினாலும் சரி, அவள் அவர்களைப் பிள்ளைகளாகவே நடத்தி, அவர்களுக்காக உழைத்து உவகை கொண்டாள்.

சாரதா தேவியை ஏதோ பணம் காய்க்கிற மரம் மாதிரி காளி எண்ணுகிறார் என்று கிரீஷ் புரிந்துகொண்டார். தம் தெய்வ மாதாவின் மதிப்புத் தெரியாத அந்தப் பிரகிருதியிடம் சாரதையின் மகிமையை எடுத்தியம்பலானார்.

காளி மரியாதைப் பண்பே இல்லாமல் பேசினார்: ''நீங்கதான் அக்காளை ஏதோ ஜகன்மாதா, லோகநாயகி, ஹா ஹூ என்கிறேள்! நாங்க ஒரு தாய் வயத்திலே பொறந்து ஒண்ணு வளர்ந்தவாதான். எனக்கொண்ணும் இந்தப் பிரபாவமெதுவும் தெரியல்லே.''

சாரதையைப் புக்ககத்து மனிதர்களான ஹ்ருதய், ராமலால் முதலியோர் அவமதித்ததைவிட, உடன்பிறப்பே அவமதித்ததை என்னென்பது?

கிரீஷால் பொறுக்க முடியவில்லை: ''ஓஹோ, உனக்குத் தெரியலேன்னு அம்மாவுக்குப் பிரபாவமில்லேன்னு அர்த்தமோ? என்னய்யா நினேச்சுண்டிருக்கே? நீ அத்யயனமும், அக்னிஹோத்ரமும் பண்ணிண்டு, மற்றவாளுக்கு வேதம் சொல்லிக் கொடுத்துண்டு, போறும் என்கிற பொன்னான மனசோடு நிஜப்

பிராம்மணனு யிருந்தா அம்மாவின் பெருமை உனக்குத் தெரியும். இப்போ உனக்குக் காசைத் தவிர வேறே நினைப்பு இருக்கா? உபாத்தியாயத்தை விட்டுட்டு, பண்ணை நடத்துகிற நீ ஸ்வதர்மத்தையே கொன்னவன். உனக்கு அம்பாள் தன் பெருமையைக் காட்டுவாளா ? யாராவது ஒரு நீசன் உனக்கு ஒரு பொலி காளை தரேன்னு சொல்லிட்டா அவன் கிட்ட ஆறு மாசம் நடையா நடந்து பல்லைக் காட்டறவன் நீ. வாஸ்தவத்திலேயே கிடைக்காத ஒரு பொலி காளையே உன்னை இப்படி மயக்கும் என்ருல், மகா மாயையான எங்க அம்மாவாலே உன்னை மயக்கி, 'இவ என் சாதாரண அக்காதான்'னு நினைக்க வைக்க முடியாதா? உன் குற்றத்தினுலேயேதான் உனக்குத் தரிசனம் தராமலிருக்கா. இதோ பார் காளி, உனக்கு இந்த லோகத்திலேயும் பரலோகத்திலேயும் நல்லது வேணும்னு இப்பவே போய் எங்க அம்மா காலிலே விழு. உம், போ'' என்று பெரிதாகக் கூப்பாடு போட்டுவிட்டார் கிரீஷ். 'என் யோக மாயையில் என்னைப் போர்த்திக்கொண்டு அறிவீனர்களுக்கு அகப்படாமலே இருக்கிறேன்' என்று கண்ணன் சொன்னதன் அடிப்படையில் பேசினுர் கிரீஷ்.

காளி அதிர்ந்துவிட்டார். அக்காளிடம் ஓடினுர். ''அக்கா! நீதான் சர்வேசுரியாமே! என் தப்பை மன்னிச்சு எனக்கு அடைக்கலம் கொடும்மா'' என்று நமஸ்கரித்தார்.

அம்மா சாவதானமாகச் சொன்னுள்: ''என் பிரிய கேளே! இது என்னடா பதட்டம் வேண்டிக் கிடக்கு? நான் உன் கூடப் பொறந்த ஜீவன். இன்னிக்கு என்ன நான் மாறிவிட்டேனு? என்னிக்கும் உன் அக்கா தான் நான். என்கிட்ட வந்து, 'அடைக்கலம் கிடைக்கலம்'னு பேசலாமா?''

இப்படி அவள் சொன்னதை, நுட்பங்களே அறியாத காளி புரிந்துகொள்ள முடியுமா? திரும்பவும் கிரீஷிடம் வந்து, ''பார்த்தேளா? நீங்கதான் ஏதோ மிகைப்படுத்திண்டு இருக்கேள். அவ, தான் சர்வ சாதாரண மனுஷிதான்னு சொல்ரு'' என்ருர்.

இது உருப்படாத கட்டை என்று கிரீஷும் விஷயத்தை விட்டார்.

சுற்றியுள்ளவர் இம்சையை எப்படிப் பொறுத்துப் புது மலராக வாழ்வது என்று உலகுக்குக் காட்ட வந்த அவதாரம் நம் அம்மா. இந்த அவதாரப் பணி நடக்க வேண்டுமானுல் சுற்றி உள்ளவர்கள் தம் இயல்புப்படி அவளை இம்சிக்கத்தான் வேண்டும்! அவள் அவதார வியக்தி என்று அறிந்துவிட்டாலோ

அவர்கள் அவளை ஒருகாலும் இம்சிக்கமாட்டார்கள். எனவே காளி போன்ற உறவினர் அவளை அறியாததும் அவள் லீலையே!

காளி மட்டுமில்லை, ராமகிருஷ்ணரின் அத்யந்தச் சீடரில் பலருங்கூட இன்னும் அவளை அவதாரமாகக் கருதவில்லைதான். 'ராமகிருஷ்ண மடம்' என்ற புண்ணிய ஸ்தாபனத்தை அப் போது நிறுவியிருந்த சந்நியாசிக் குழந்தைகளில் அனைவரும் கூட அவளைத் திவ்விய வியக்தியாகக் கருதியதாகச் சொல்ல முடியாது. நிரஞ்ஜனானந்தர்தான் முதலிலிருந்தே அவ ளது தெய்விகத்தைத் தாம் உணர்ந்ததுமட்டுமின்றி மற்றவர் களுக்கும் ஆணி அறைந்தாற்போல் பிரசாரம் செய்தவர். ராம கிருஷ்ணரின் 'சொந்தப் பிள்ளை' என்று கருதப்பட்ட பிரம்மா னந்தரும் (ராகால்), பிற்கால விவேகானந்தரான நரேனும் இப் படி வெளிப்படப் பேசியதில்லை. காரணம், அவர்கள் அம்மாவை எண்ணிய மாத்திரத்தில் அப்படியே கரைந்துபோய்விடுவார்கள். உள்ளுக்குள்ளே ஓர் ஆனந்தாதீதத்தை அமுது செய்துகொண்டு, வெளியே அமுதுகொள்வதைத் தவிர அவர்களால் அம்மாவைப் பற்றிப் பேச முடியாது. நரேனுவது அவ்வப்போது சமாளித் துக்கொண்டு அவளிடம் வந்து, ஸ்வாதீனமாகப் பேசுவார். ஞான சிம்மமான பிரம்மானந்தரோ அவள் எதிரே வரவே நடுங்குவார். பிற்காலத்தில் ஒரு முறை பிரம்மானந்தர் சொன் னார்: ''மகா யோகிகளும் அறிய முடியாத அம்மாவை யாரே புரிந்துகொள்ள முடியும்? ராமகிருஷ்ணரின் பூஜையைச் சகஜ மாக ஏற்றவள் அம்மா. அவதார புருஷர் செய்யும் ஆராதனை யைச் சாமானிய மனிதர் எவராவது 'ஜீரணிப்பது' சாத்தியமா? அம்மாவின் உள்ளே மகா சமுத்திரமாக அலைமோதும் அநுபூதி; வெளியிலே ஒரே அமைதி மயம். அவதார புருஷர்களாலும் கூட உணர்ச்சி உன்னதங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போவதுண்டு. ஸ்ரீராமகிருஷ்ணரே வெளிப்படையாகப் பரவச நிலைகளை எவ்வளவோ முறை காட்டியதுண்டு. அம்மாவைப் புரிந்துகொள்வதுதான் மகா கடினம். தன்னுடைய தாயன் பைக் காட்டி நம்மையெல்லாம் அவள் ஏமாற்றியிருக்கிருள். அம்மாவின் அநுக்கிரகம் பெற்றுல் எளிதாகவே மோக்ஷ சாம் ராஜ்யம் பெற்றுவிடலாம்.''

விவேகாநந்தர் ஆவேசம் பீற அம்மாவைப்பற்றித் தமது சகாக்களுக்கு இப்படி எழுதினர்: ''ராமகிருஷ்ணரின் நினைவு உலகுக்கு மறந்தாலும் மறக்கட்டும், அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனல் மக்கள் அம்மாவை மறந்து விட்டால் அது உற்பாதமேயாகும். நீங்கள் யாரும் அம்மாவைப் புரிந்துகொள்ளவில்லை. என்மீது ராமகிருஷ்

ணர் காட்டும் அருளைவிட அம்மா கொட்டுகிற கிருபை லக்ஷம் மடங்கு பெரிது என்பேன். அம்மாவை எண்ணு கையில், 'இவளோடு பார்த்தால் இந்த ராமகிருஷ்ணர் கூட எம்மாத்திரம்?' என்று என்னை நானே கேட்டுக்கொள் கிறேன். நான் குறுகிய அபிமான வெறி பிடித்தவன் என்று வைத்துக்கொண்டாலும் சரி, இதுவே என் அபிப்பிராயம். ராமகிருஷ்ணர் தெய்வமா, மனிதனா என்பதைப்பற்றி நீங்கள் உங்கள் விருப்பப்படி பேசலாம். ஆனால் சோதர, நம் அம்மாவிடம் ஒருவன் பக்தி பூணவில்லை என்றால் அவனை 'வெட்கம், வெட்கம்' என்று தூற்றவேண்டும்.''

அம்மாவின் பெருமை இது! ஆனாலும், ''ஒரு பெண்ணின் மதமே நாணம்தான்'' என்று ராமகிருஷ்ணர் சொல்லி யிருந்ததால் பெருமையை அவள் வெளிக்காட்டவில்லை. அவள் பரவச அநுபவங்களை மிக மிக அற்பமாகவே வெளிப் படுத்தியதால், அவளுக்குப் பேரநுபவங்கள் கிட்டவில்லை எனலாமா? ரவா ஸொஜ்ஜியும், சேமியா கேசரியும் செய்தால் அதில் முந்திரிப் பருப்புப் போடுவதுண்டு. முந்திரிப் பருப் பையே ஹல்வா செய்தால் அதில் முந்திரிப் பருப்புப் போடு வார்களா? பாதம் ஹல்வாவுக்கு முந்திரியின் தாளிதம் நிச்சயமாக வேண்டியதில்லை. மற்றவர்களின் சாதனைகளில் முந்திரியாக அதீத அநுபவங்கள் வந்தன. சுபாவமாகவே துரீயமாக, பாதம் ஹல்வாவாக இருந்த சாரதைக்கு இது எதற்கு? அதன் ருசியை அதிகப்படுத்த இடம் ஏது? அதிகப்படுத்த முடியாது, என்பது மட்டுமின்றி, கொஞ் சத்திலேயே தெவிட்டிப் போய்விடும் என்பதால் அதற்கு நேர் எதிரான ஏதோ ஒரு காரத்தையும் உடன் உண்பது போல், அம்மா சமாதி நிலைக்கு நேர் எதிர்த் திசையிலேயே தன்னை அவ்வப்போது மிகப் பாமரமாக, அதி சாமானியமாகக் காட்டிக்கொண்டாள்.

ஆனால் இச்சரிதையில் அவளது அதீத அநுபவங்களை அடிக்கடி பார்ப்பது போலத் தோன்றலாம். தேவி அறுபத் தாறுண்டுகள் உலகில் உலவினாள். இந்த நீண்ட காலத்தில் ஆயிரக்கணக்கான முறை அதீத அநுபவங்கள் வெளிப்பட இடமுண்டு. இன்றைக்குங்கூடப் பிரதி தினமும், ஏன் ஒரு தினத்திலே பல முறைகூட, பாவசமாதி, பரவச அநுபூதி ஆகியவற்றைப் பெறும் சாதகர்கள் உள்ளனர். இந்தக் கணக்கில், 'சாதகி' என்பதைவிட உயர்ந்த சாத்தியப் பொருளேயான அம்மா லட்சோபலட்சம் முறை மகாநு பவங்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அறுபத்தாறு

ஆண்டுகளில் (மந்திரோபதேச சமயங்களில் தன் தெய்வி கத்தைத் தப்பாமல் வெளியிட்டது தவிர) அவள் பேரநுப வங்களைக் காட்டியது நூறு முறைக்கும் குறைவாகவே இருக்கும் எனலாம். இவற்றில் பல இந்நூலில் காண்கின் றன. எனவே வானத்துத் தாரகைகளுக்கிடையே கோடானு கோடி காதங்கள் இடைவெளி இருந்தாலும் நம் கண் பார்வைக்கு அவை நெருக்கமாகத் தெரிவதுபோல், அம்மாவின் வாழ்க்கையை இறுக்கித் தரும் இச்சரிதையில் அவளது பரவசங்கள் அடிக்கடி நிகழ்வதுபோல் தோன்றக் கூடும்.

அதெப்படியாயினும் அவள் செய்த காரியம் பெரிது. என்றென்றும் அவள் செய்ய வேண்டிய காரியமும் பெரியது. விவேகானந்தர் கூறியது போல், ராமகிருஷ்ணரை மறந்தா லும் மற்ற மகாபுருஷர்களைப் பார்த்துச் சாதகர்கள் உய்வு பெறுவர். ஆனால் சாமானிய மக்கள், குறிப்பாக மாதர்குலம், நம் மாதாவை மறந்தால் விபரீதமே ஆகும்! ஏனெனில், பெண்களுக்கான அன்றாட வாழ்க்கையை அணு அணுவும் வாழ்ந்து காட்டிய அவதாரம் அவள் ஒருத்திதான். அந்தப் பரமசுத்தமான ஸ்திரீ தர்மத்தைப் பார்ப்பதே ஆட வர்க்கும் தங்கள் நெறியை உணர்த்திவிடுகிறது; அதற்கு அநுகூலமாகத் தாங்கள் இருக்கவேண்டும் என்று உணர்த்து கிறது.

இச்சரிதையில் இனி அவள் நிகழ்த்தப் போகும் அவதாரப் பணி ஒருபுறம் இருக்க, இப்போதே அவளால் ஒரு பெரும் பணி மௌனமாக நிறைவு பெற்றிருந்தது. ராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் இளம் சந்நியாசிகள் நெல்லிக் காய் மூட்டைபோல் பிரிந்து போகாமல் சேர்ந்து நின்றதற்குக் காரணம் அம்மாதான். இவளுடைய அன்புதான் அவர்களை ஒன்றுபடுத்தி வைத்து, ராமகிருஷ்ண மடத்தைத் தோற்று வித்தது.

அன்பு மட்டுமில்லை. டாகுரிடம் பன்முறை கண்ணுங் கண்ணீருமாகப் பிரார்த்தனையும் செய்துகொண்டாள். "பிரபோ, தாங்கள் சரீரம் தரித்து வந்து இந்தக் குழந்தை களைப் பார்த்துப் பார்த்துப் பயிராக்கியது, தங்கள் மறை வோடு கனவாகிவிடலாமா? அவர்கள் தங்களுக்குள் ஒட்டிக்கொண்டும் உங்களிடம் ஒட்டிக்கொண்டும், உங்கள் உபதேசத்தில் ஒட்டிக்கொண்டும் வாழ்ந்து, துயருற்றுத் தேடி வருவோருக்கெல்லாம் நன்மை பயக்கக் கிருபை

செய்யுங்கள்'' என்று வேண்டிக்கொண்டாள். அந்த வேண்டு தலே ராமகிருஷ்ண மடத்தின் வித்து எனலாம்.

மடத்தை இவள் தோற்றுவித்தாலும் அந்த மடத்துச் சந்நியாசிகள் இவளிடம் ஒரு விதத்தில் தோற்றுத்தான் போனார்கள்! அவர்கள் மிகுந்த யோசனையுடன் தங்களுக்குச் சூட்டிக்கொண்ட அழகிய சந்நியாச நாமங்களைச் சொல்லவே அம்மாவால் முடியாது! ''சந்நியாசம்னு அப்பா-அம்மாவை விட்டுட்டுப் போறதுதானே? உங்களைச் சந்நியாச நாமத் தாலே கூப்பிடறதுன்னு எனக்கு மனசு புண்ணுறது'' என்பாள் அவள். ஒருமுறை வீரேசுவரானந்தர், ''எங்கள் துறவுப் பெயரையே உங்களால் சொல்ல முடியவில்லையே! எங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார். ''பிள்ளைகளாக'' என்று அவள் கூறுவாள் என்று அவர் எதிர்பார்த்தார். அம்மாவோ, ''உங்களையெல்லாம் நாராயணனாகப் பார்க் கிறேன்'' என்றாள். ''அப்படின்னு பிள்ளைகளாகப் பார்க்கு கலியா?'' என்று அவர் கேட்டார். ''நாராயணனாகவும் பிள்ளைகளாகவும் சேர்த்துப் பார்க்கிறேன்'' என்றாள் அம்மா. இவளிடம் தெய்விகமும் மனிதத்தன்மையும் ஒன்றிக் கிடந் ததுபோலவே இவளது உறவு முறைகளிலும் இரண்டும் இறுகி இருந்தன!

இவள் எப்படிப் பார்த்தாலும் இவளை மிகப் பெரும் பாலான சீடர்கள், திவ்விய மாதாவாக இல்லாவிட்டாலும் அம்மாவாகவே பார்த்தனர்— அதாவது பெற்ற, தாயாகப் பார்த்தனர். மகாதேவானந்தர், பஞ்சானன கோஷ் முதலிய வர்கள் இவளைப் பார்த்தபோது தங்களைப் பெற்றெடுத்த ஜனகமாதாவின் உருவத்தையே கண்டிருக்கின்றனர். இன் னெரு சிறுவன் இவ்விதமே அம்மாவைத் தன் பெற்ற தாயின் வடிவாகப் பார்த்து, மிகுந்த சுவாதீனத்துடன் அவளுடனேயே உண்ண அமர்ந்தான். உண்ண அமர்ந்ததும் உரிமை இன்னும் அதிகமாயிற்று. ''நீயேதான் ஊட்ட வேண்டும்'' என்றான். அம்மாவும் அவ்விதமே செய்தாள்!

பெற்ற பிள்ளையின் மனத்தையும் வயிற்றையும் ஒரு தாய் எப்படி அறிந்திருப்பாளோ, அப்படியே இவளும் அவர்களைப் பூரணமாக உள்ளும் புறமும் அறிந்திருந்தாள். முன் பழக்கமில்லாத பிள்ளைகள் வந்தாலும், அவர்களுக்கு எந்த உணவு வகை மிகவும் பிடிக்குமோ அதையே தயாரிப் பாள். பரிமாறும்போது மிகச் சரியாக அவரவருக்குப் பிடித்த பதார்த்தங்களையே நிறையப் போடுவாள்! அவர் களுக்கு அதிசயமாக இருக்கும்!

இப்படிப்பட்ட அம்மாவிடம் ஒரு படு அசடான பிள்ளை, ''நான் உங்களை அம்மான்னு கூப்பிடறேன். இருந்தாலும் அது சரிதானுன்னு தெரிஞ்சுக்கணும்'' என்றது.

அம்மா சற்றும் சுணங்காமல், ''ஏண்டாப்பா! நான் உன்னோட மெய்யான அம்மா இல்லேன்னு, நான் வேறு யாரு? உன் நிஜ அம்மாதான் வேறு யாரு?'' என்றாள்.

''நீங்க அப்படிச் சொன்னாலும் எனக்குப் புரியவில்லை'' என்று கூறிய அசட்டுப் பிள்ளை, அசத்துப் பிள்ளையாகவே மாறி, ''பெற்ற தாயைப் பார்க்கறச்சே உண்டாகிற உணர்ச்சி உங்ககிட்டே எனக்கு உண்டாகலே'' என்றது.

''ஆகா, என்ன பரிதாபம்!'' என்று அம்மா பெருமூச் செறிந்தாள். ''மகனே, ஏக வஸ்து ஒண்ணு இருக்கு. அது தான் எல்லாத்துக்கும் அம்மா-அப்பா'' என்று கூறி முடித் தாள்.

பிரம்மசாரி ராஸவிஹாரி கேட்டான்: ''அப்படீன்னு நீங்க **எல்லாருக்கும்** அம்மாவா?''

''ஆமாம்'' என்றாள் அம்மா கெட்டியாக.

''**எல்லாத்துக்கும்**கூட அம்மாவா?''

''ஆமாம், ஆமாம், ஆமவே ஆமாம்.''

* * *

ஜகத்தாத்ரி பூஜை முடிந்த பின் பசங்கள் அம்மாவிடம் கண்ணும் கண்ணீருமாக விடை கொண்டனர்.

மாட்டு வண்டிகள் வெகு தூரம் சென்ற பின் காளி கிருஷ்ணன் உடன் இருந்தவரிடம் கேட்டான்: ''அதோ பாண்டுஜ்யே புகுர் ஏரிக் கரையிலே நின்னுண்டு இங்கேயே பார்க்கிறது....?''

ஆம், அம்மாதான்!

காளிகிருஷ்ணன் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்: 'அம்மாவுடைய அன்பு புயல் என்றால் புயல்தான். ஒருத்தரை அடியோடு பிடுங்கித் தன்னிடம் சாய்த்துக்கொள்கிறாளே! என்னைப் பெற்ற தாயிடம் எத்தனையோ ஆசை வைத்திருந் தேன் என்பது உண்மைதான். ஆனால் இங்கே பார்த்தால், சென்று போன ஜன்மங்கள், வரப்போகும் பிறவிகள் எல்லா வற்றுக்கும் அம்மாவாக இருந்த, இருக்கப் போகிற சாசுவத மாதா தெரிகிறாளே!'

அவர்களுடனேயே அம்மாவும் கல்கத்தாவுக்கு வந்திருக் கலாம். சிஷ்யர்கள் அவளுக்கு ஆசிரமம் கட்டிக் கொடுத்து,

அவளை உட்கார்த்தி வைத்து ஏவல் செய்யத் தயாராக இருந்தனர். ஆனால் இதையெல்லாம் ஏற்க அவள்தான் தயாராக இல்லை. இரண்டரை ஆண்டுகள் ஜயராம்பாடியிலேயே அநுதாபம் இல்லாத பிறந்த வீட்டாருக்காக உழைத்துக்கொண்டு கிடந்தாள். கடைசிவரை இப்படியே பிறந்த வீடும், 'பிள்ளைகளின்' வீடுமாக மாறி மாறி, இருந்தாள்.

அம்மாவுக்கு ஏறக்குறைய வயசு நாற்பதானபோது, கிராமத்தை விட்டுக் கல்கத்தாவுக்கு அவ்வப்போது வந்து தங்கலானாள். நாலு தலைமுறைகளுக்கு முந்திப் பாரத மக்களின் சராசரி ஆயுள் இன்றைவிட மிக் குறைவு. அஞ்சாறு வயசிலேயே கல்யாணமாகிவிடும். நாற்பது வயசிலேயே கிழக் கோஷ்டியில் சேர்ந்துவிடுவார்கள். அம்மாவும் இப்படிக் கிழக் கோஷ்டிக்கு வந்த பின்தான் வெளியடியார்கள் அவளை ஓரளவு பார்க்க அநுமதிக்கப்பட்டனர்.

பக்தரின் விருப்பத்துக்கிணங்கி, பேலூரிலிருந்த நீலாம்பர் பாபுவின் தோட்ட வீட்டுக்கு வந்து தங்கினாள் அம்மா.

இங்கு ஒரு நாள் காளிகிருஷ்ணன் அம்மாவுடைய அன்பு வெள்ளத்தின் ஆழத்தைக் காணும் பேறு பெற்றான். அவனைக் கண்டவுடன் அம்மா, "மகனே! எப்படிக் 'கஷுக் முஷுக்' குன்னு இருந்தவன் இப்படி இளைச்சுப் போயிட்டியே! நீ மடத்திலேயே இருக்க ஆரம்பிச்சுட்டே! கூட இருக்கிற குருபாயிக்கள் என்ன இருந்தாலும் புருஷப் பசங்க. அவா எப்படி உன்னைத் தாய் மனசோடு கவனிச்சுப் போஷாக்குப் பண்ணுவா? இங்கே எனக்கு யாரையும் வைச்சுக்க முடியாமலிருக்கு. மகனே, இப்படி இளைச்சுட்டியே! மடத்தை விட்டுட்டு ஆத்துக்குப் போப்பா! அகத்து மனுஷாதான் உன்னை நன்னாப் பார்த்துப்பா! உடம்பு தேறினவிட்டு மடத்துக்கு வா" என்றாள்.

வீட்டைத் தொலைத்து முழுகித் துறவு பூண அவாவிய காளிகிருஷ்ணனுக்கு அழுகை வந்தது. "வீட்டிலே போய் என்ன பண்ணறது?" என்று விம்மினான்.

"ஏன் மடத்துலே பண்ணற தியானம், ஜபம், பூஜை பாராயணம் எல்லாத்தையும் ஆத்திலே பண்ணேன்."

தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வந்தான் காளிகிருஷ்ணன்: அம்மா ஜபம் செய்யச்சொன்னாளே, தனக்கு ஒரு மந்திரமும் உபதேசமாகவில்லையே!

விஷயமறிந்த யோகானந்தர், "அம்மாகிட்டே விஞ்ஞாபனம் பண்ணிக்கோ, அம்மாவே ஜபம் எடுத்துவைப்பா" என்ருர்.

ஆஞனப்பட்ட அம்மாவிடம் மந்திரோபதேசத்துக்குப் பிரார்த்திப்பதா என்று தயங்கிஞன் காளிகிருஷ்ணன். பிறகு தான் யோகானந்தர் சொல்லத் தெரிந்தது - அநேகமாக மடத்திலிருந்த எல்லோருமே அம்மாவிடம் உபதேசம் பெற்றிருக்கிருர்கள் என்பதும், இந்த உண்மை பரம ரகசியமாகக் காக்கப்பட்டது என்பதும்.

அம்மாவிடம் மந்திரம் கோரிஞன் காளிகிருஷ்ணன்.

பெய்யெனப் பெய்யும் மழையாக அந்த அருள்மூர்த்தி உடனே தீக்ஷை அளித்தாள். ஆனல் காளிகிருஷ்ணனுக்கு மனத்தில் சிறிது உறுத்தல் உண்டாயிற்று. அம்மா எடுத்து வைத்த மந்திரம் அவனது இஷ்டதெய்வம் குறித்ததல்ல.

"பிள்ளையே! இப்போ நான் உனக்குத் தந்த மந்திரந்தான் உனக்கு அதைவிட நல்லது" என்று தீர்மானமாகக் கூறிஞள் அம்மா.

காளிகிருஷ்ணனுக்குள் ஓர் அதிசயம் நடந்தது. அவனது சாதனை மார்க்கம் அந்தக் கணமே சூரியோதயமாகப் புத்தொளி பெற்றது. பழைய அபிப்பிராயங்கள், அபிமானங்கள், அப்பியாசங்கள் யாவும் சூரியோதயத்திலே நட்சத்திரங்கள் போல் மறைந்தன. அம்மா தந்த 'இஷ்டா' அவனை நிரப்பி ஆட்கொண்டுவிட்டது! அதன் சக்தியில்தான் பிற்காலத்தில் இந்தக் காளிகிருஷ்ணன், ஸ்வாமி விரஜானந்தராகப் பரிணமித்தது.

உபதேசம் ஆனபின் காளிகிருஷ்ணனின் மோவாயைப் பிடித்து அம்மா விடை கூறிஞள். அவன் தாய்ப் பசுவைப் பிரிந்த கன்றுபோல் பாசத்தின் ஈரத்தில் கனத்த மனத்துடன் பரிசல் துறைக்கு வந்தான். பூஞ்சிதறலாகத் தூறல் விழுந்தது. காளிகிருஷ்ணன் பரிசல் பிடித்துக் கங்கையில் மிதந்து வருகையில், நீலாம்பர் பாபுவின் வீட்டுக்கு எதிரே வந்தபோது தன்னை அறியாமல் தலையைத் தூக்கிப் பார்த்தான். அந்த வீட்டு வெளி மாடியில் அம்மா தூறலில் நின்றுகொண்டு பரிசலையே பார்த்துக்கொண் டிருந்தாள். காளிகிருஷ்ணனின் இதயம் விம்மியது. தாபமெல்லாம் ஓடித் தண்ணென்று ஆயிற்று.

''அம்மா எத்தனை நாழியாக மழையிலே நிக்கிறேள்! உங்களோட வாதரோகத்துக்கு இது மகா கெடுதலாச்சே! உள்ளே வரமாட்டேளா?'' என்று கத்தினுள் கோலாப்-மா.

''என்னை விட்டுப் போகக் குழந்தைக்கு மனசே இல்லே. அதனுேட உணர்ச்சி எனக்குத்தான் தெரியும். அதுதான் பார்த்துண்டே நிக்கறேன்'' என்ருள் அம்மா, தன் கண்களும் தூறல் பொழிய.

கங்கைக் கரையில் கங்குகரையற்ற கனிவுக் கடலாக நின்ருள்.

33. செந்தணல் பிழம்பும் சந்தனக் குழம்பும்

கொடியிடை நாயகியான உமை, கொடிய செந்தழல் நாற்புறமும் சூழ்ந்திருக்க அதனிடை துய சிரிப்புடன் தவமியற்றப் புகுந்தாள். கண்களின் கூச்சத்தை வென்று பார்வையைச் சூரியனிடத்தில் விலகாமல் பதித்தாள். வெகுவாகத் தாபம் தரும் சூரியனை நோக்கியபோதிலும் அவளது முகம் தாமரையின் எழிலையே பெற்றிருந்தது. நீண்ட நயனக் கோடிகளில்மட்டுமே மெல்ல மெல்லக் கருவளையம் பரவலாயிற்று.

—காளிதாஸனின் குமார சம்பவம் 5-10-11

"அம்மா பேலூர்த் தோட்ட வீட்டில் இருந்தபோது யோகானந்தரும் திரிகுணாதீதரும் அவளுக்குத் துணையாக இருந்து பணிவிடை செய்தனர். அவளிடம் அவர்கள் எத்தனை ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதற்கு ஓர் உதாரணம்: அந்தத் தோட்டத்தில் சேபாலிகா என்ற மலர் விருட்சம் பூக்களைச் சொரியும். அம்மா அவற்றால் டாகுருக்கு அர்ச்சனை செய்வாள். அம்மாவின் கரம் ஸ்பரிசிக்கும் அப்பூக்களில் மண் ஒட்டிக்கொண்டிருத்தல் தகாது என்பதால் திரிகுணாதீதர் இரவில் மரத்தின் அடியில் தூய மடித் துணியை விரித்து, அது பறக்காமல் கல் வைப்பார். அதிலே விழுகிற பூக்களை - அப்பழுக்கற்ற மலர்களை - காலையில் திரட்டி அப்பழுக்கற்ற அம்மாவின் அர்ச்சனைக்குச் சேர்ப்பார்.

இந்தத் தோட்ட வீடு மிகுந்த பாக்கியம் செய்தது. மகாபுருஷர்கள் தவமியற்றும் இடங்கள் பாக்கியம் செய்தனவே அன்றோ? பரமேசுவரனுக்காகக் கௌரி பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் இயற்றியதால் இமாலயமே புதுப்புனிதம் கொண்டது. பயங்கரமான இந்தப் பஞ்சாக்கினித் தவத்தை நம் அம்மா பேலூர்த் தோட்ட மாளிகையில் அநுஷ்டித்தாள்.

தலைக்கு மேல் சூரியன் கொளுத்துகையில், நாற்புறமும் அக்கினி குண்டங்களை மூட்டிக்கொண்டு தவம் இயற்றுவதே பஞ்சாக்கினி மத்தியத் தவம். 'பஞ்சதபஸ்' என்றே சுருக்கிச் சொல்வர். தபஸ் என்றால் தபிக்கச் செய்வது, எரிப்பது என்று பொருள்.

அம்மா முன்பு காசி சென்றிருந்தபோது அங்கொரு நேபாள பிக்ஷுணி அம்மாவிடம் பஞ்சதபம் புரியுமாறு

கூறினுள். கணவரை இழந்த துயரம் அப்போது அம்மாவுக்குள்ளே நெருப்பாக எரித்தது. வெளியிலே நெருப்பை மூட்டிக்கொள்கிற 'பஞ்சதபஸ்', தாபமாக உள்ளே எரியும் பிரிவாற்ருமையைச் சமனப்படுத்தும் என்று அவளுக்குத் தோன்றியது. ஆயினும் 'பஞ்சதபஸ்' என்ற பெரிய விஷயத்தை அச்சமயத்தில் மேற்கொண்டால், 'ராமகிருஷ்ணர் காலமானவுடனேயே அவரது பாரியாள் தபஸ், கிபஸ் என்று ஆடம்பரம் செய்கிருள்' என்று ஊரார் இகழ்ந்துரைக்கக் கூடும் என்பதால் ஆசையை அடக்கிக்கொண்டாள். பிறகு காமார்புகுரில் அவள் இருந்த நாளிலிருந்து பரட்டைத்தலையுடன் ருத்ராட்ச மாலையும், காஷாயமும் அணிந்து ஒரு கன்னிகை தன்னைச் சூழ்ந்திருப்பதைப் பலமுறை கண்டிருக்கிருள். இந்தக் காட்சி ஏற்படும்போதெல்லாம் மழுங்க முண்டனம் செய்துகொண்ட ஒரு சாதுவும் அவள்முன் தோன்றி, ''பஞ்ச தபஸ் பண்ணம்மா'' என்பார்.

அம்மா தன் பசங்களிடம் எத்தனையோ அன்பு வைத்திருந்தாலும் உள்ளூற உலகை விட்டுப் போய்விடும் விராகமும் இருந்துகொண்டே யிருந்தது. தன்னுள் குமுறிக்கொண்டிருக்கும் விராகத்தின் உருவமே அந்தக் காஷாயக் கன்னி என்று அம்மாவுக்குத் தெரிந்தது. அன்று கணவரைப் பிரிந்தவுடன் விரகத் தீயை எரித்து அழிப்பதற்காக வெளியிலே தீ மூட்டித் தவமிருக்க விரும்பினுள். இப்போது அதற்கு மாருக, விராகத் தீயை எரித்துவிட்டு, சரீரம் தாஞக விழுகிறவரை நிம்மதியுடன் தன் பசங்களுக்காக வாழ்கிற யான்மையைப் பெறப் பஞ்சதபம் உதவும் என்று எண்ணினுள். கங்கையை வருவிக்கப் பகிரதன் பஞ்சதபம் செய்தான். அம்மா தன் வைராக்கியம் தீய்ந்து அன்புக் கங்கையிலேயே என்றும் திளைத்திருப்பதற்காகப் பஞ்ச தபஸ் செய்யத் தீர்மானித்தாள்.

யோகின் மாவும் அம்மாவோடு சேர்ந்து பஞ்சதபம் புரிந்தாள்.

பேலூர்த் தோட்ட வீட்டின் திறந்த மாடியில் மண்ணைப் பரப்பினுர்கள். ஒன்றுக்கொன்று ஐந்து முழ இடைவெளியில் நாலு பெரிய அக்னி குண்டங்கள் மூட்டப்பட்டன. கோடைக்காலக் கதிரவன் உதிக்கும்போதே வெம்மையுடன் வெளிவந்தான் ஐந்தாவது அக்கினியாக.

கங்கையில் நீராடிவிட்டு அம்மா வந்தாள். தூய்மைக்கு இரண்டு உதாரணம் சொல்வார்கள்: ஒன்று கங்கை. மற்றது அக்கினி. தூய அன்னை கங்கையில் முழுகிவிட்டு, இப்போது அக்கினியின் வெப்பத்தில் முழுக வந்தாள்.

நாலு குண்டங்களிலும் அக்கினி மிகப் பெரிதாக ஜொலித்துக்கொண்டு நாக்குகளை அசைத்து நாற்புறமும் உஷ்ணத்தை அள்ளி வீசியது. அதனிடையே பிரவேசிக்க அம்மாவே தயங்கினுற்போல் இருந்தது.

''ஏனம்மா, வாங்கோ உள்ளே!'' என்று சாவதானமாகச் சொல்லிக்கொண்டு குண்டங்களின் நடுப் பகுதியில் நுழைந்தாள் யோகின்மா.

'ராமனின் தெய்விகத் துணை இருந்ததால் ஆஞ்சநேயன் கடலை ஒரே தாவில் கடந்தான். ஆனுல் ராமன் இலங்கை செல்லும்போது அணை கட்ட வேண்டியதாயிற்று. ஏனெனில், ராமனுக்கே ராமனின் அநுக்கிரகம் இல்லை அல்லவா?' என்று பௌராணிகர் சொல்வார். அதுபோல், அம்மா தயங்கியபோது, அம்மாவின் அருள் துணையில் துணிவு பெற்றிருந்த யோகின்மா முதலில் பஞ்சதபசுக்கு அமர்ந்துவிட்டாள். அம்மா தயங்கியது க்ஷண காலந்தான். தனது அருந்துணையான டாகுரை ஸ்மரித்தாள். கலக்கமின்றி அக்கினி குண்டங்களின் மையத்துக்குச் சென்று அமைதிமயமாக அமர்ந்தாள். அதன்பின் அக்கினியின் வெப்பத்துக்கு அவளிடம் சக்தியே இல்லை என்று தோன்றியது. சீதா தேவியை அக்கினி தேவன் தகிக்கவில்லையே! சீதையின் அருள் பெற்ற அநுமன் வாலில் தீ வைத்தபோது அக்கினி அவனை வதைக்கவில்லையே!

உதயசூரியனுக இருந்த செம்பிழம்பு உச்சிச் சூரியனுக உயர்ந்து உக்கிரமாகத் தகித்தது. அம்மாவின் தவம் ஆனந்தமாகத் தொடர்ந்தது. இவளிடம் தன் கை வரிசை பலிக்காது என்று வெட்கிச் சிவந்து மேலை மலை வாயில் போய் ஒளிந்துகொண்டான் ஒளித்தேவன்.

இப்படி ஒரு நாள் மட்டும் இல்லை, ஏழு நாட்கள் தொடர்ந்து தவமிருந்தாள் அம்மா. அதோடு காஷாயக் கன்னி வருவதும் நின்றுவிட்டது. உலகை விட்டு ஓடி எல்லாரும் தவம் புரிவார்கள். உலகை விட்டு ஓடாதிருக்கவே அம்மா தவம் செய்தாள்! தன் அடி மனத்திலிருந்த தீ வெளித் தீயால் சமனமாகிவிட்டதென்று அம்மா கூறினுள்.

பௌதிகத்துக்கும் ஆத்மிகத்துக்கும் உள்ள தொடர்பை நமக்கு அறிவுறுத்துவது இந்தப் பஞ்சதபஸ். வெளியில் ஐந்தழலாக மூட்டிய செந்தணல் பிழம்பு அம்மாவின் உள்ளத்தைச் சந்தனக் குழம்பாக்கிவிட்டது - அவளது பிள்ளைகளிடம். அவர்களை விட்டு முக்தியில் கரையும் வேட்கையிழை எரிந்தது!

பஞ்சதபஸ் என்ற பெரிய சாதனையை அம்மா பெரிது படுத்திப் பேசியதில்லை. எப்போதாவது இந்தப் பேச்சு எழுந்தாலும் தான் செய்கிற அன்றாடக் காரியங்களில் ஒன்றுபோல இதைப்பற்றியும் எளிதாகப் பேசுவாள். நமக்குத்தான் அது சாதனை! சாதனைகளின் முடிவான ஒன்றுக்கு அது எம்மாத்திரம்?

சிறிதளவே சாதனைகளில் முன்னேறியவர்களும், தங்கள் ஆன்ம பரிபக்குவ நிலையில் பலவிதச் சமய ஆசரணைகளை அநாவசியம் என்று கருதி ஒதுக்கிவிடும்போது, சாட்சாத் ராமகிருஷ்ணரின் சக்தியான தேவி ஏழு நாட்கள் கடுந்தவம் மேற்கொண்டது ஒருவருக்கு வியப்பாக இருந்தது. ''உங்களை போன்ற சிரேஷ்டமான வியக்திக்கு இந்தத் தபஸெல்லாம் ஏதுக்கம்மா?' என்று அவர் கேட்டார்.

அம்மா சொன்னாள்: ''தபஸ் எல்லாருக்கும் தேவைதான். சிவனை அடையறதுக்காகச் சாக்ஷாத் பார்வதி தேவியே தபஸ் பண்ணினாளே!''

'அம்மா எதை அடையத் தவம் இருந்தாள்?' என்ற எண்ணம் பக்தரின் உள்ளத்தில் தோன்றுவதை உணர்ந்த அம்மா தொடர்ந்தாள்: ''ஜனங்களோட க்ஷேமத்துக்காக இதெல்லாம் செய்ய வேண்டியிருக்கு. இன்னொரு காரணமும் சொல்றேன்: நீங்களெல்லாம் என்னைப் பெரிய ஸ்தானத்திலே வைச்சிருக்கேள். நான் தேகத்தைத் தேகம்னு நினைக்காம வருத்திண்டு தபஸ் இருந்தாத்தான் அந்த ஸ்தானத்தில் இருக்கலாம். ஏன், பொதுஜனங்களையே எடுத்துக்கோங்களேன். 'என்னமோ பெரிசாத் தூய அன்னையார் என்கிறா; அந்த அம்மாளும் நம்ம மாதிரிதான் சாப்பிடறா, தூங்கறா, என்ன பெரிசாப் பண்ணிப்பிட்டா?'ன்னு சொல்லுவா. அப்படிச் சொல்றது எங்களைப் பாதிக்கிறதில்லே. ஆனால் சிஷ்யாளை அது ரொம்பப் பாதிக்கும். அதனாலே குரு ஸ்தானத்திலே இருக்கிறவா உடம்பை வருத்திண்டு தவயோகங்களை அப்பியசிக்கணும். குரு மகராஜ் எத்தனையோ சாதனைகளையும் சடங்குகளையும் செய்து காட்டலையா? ஸ்திரீகள் செய்யவேண்டிய பல விரதங்களுக்குள் பஞ்சதபஸ் விசேஷமானது.''

இன்னோர் அணுக்கத் தொண்டர், ''நீங்கள் எதை உத்தேசிச்சுப் பஞ்சதபஸ் இருந்தேள்?'' என்று கேட்டபோது, அம்மா பளிச்சென்று, ''குழந்தைகளா! உங்க க்ஷேமத்தை உத்தேசிச்சுத்தான் இருந்தேன். உங்களாலெல்லாம் இப்படிப் பண்றதுக்குத் தாங்குமா?'' என்றாள்.

மற்றவர்கள் பாபத்தை எரிப்பதற்காக அம்மா இயற்றிய தவம் அது! சேயின் நோய்க்காகத் தாய் மருந்தருந்தும் தத்துவத் தவம் அது!

அம்மா உலகில் ஒட்டிக்கொண்டிருப்பதற்குப் பஞ்சதபஸ் உதவி செய்தது. அந்த உதவியை ஆழமாக உறுதிப்படுத்தியது இன்னொரு நிகழ்ச்சி. தபிக்கிற நிகழ்ச்சி அல்ல; மிகவும் குளிர்ந்த நிகழ்ச்சி. முழுமதியின் சீத கிரணங்கள் கங்கையின் மீது களிநடம் புரிகின்றன. அம்மா அந்த அழகில் மனம் சொக்கிப் படித்துறையில் விடுவிடுவென இறங்குகிறாள். பின்னால் சரக்கென்று ஒரு காலடிச் சத்தம். அடுத்த விநாடி அவளை முந்திக்கொண்டு ராமகிருஷ்ணர் பிரவாகத்தில் பிரவேசிக்கிறார். அவரது திவ்விய மேனி கங்கையில் கரைந்தே போகிறது. 'ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கோடாநுகோடி ஜீவர்களின் பாபங்களைப் போக்கிவரும் பாகீரதி! இன்று பகவானை உன்னுள் கொண்டு மேலும் பாவனமானாயா?' என்று எண்ணுகிறாள் அம்மா. அவளுக்கு மயிர்க்கூச்செடுக்கிறது. ராமகிருஷ்ணர் நதியில் புகுந்து மறைந்த இடத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறாள். திடீரென்று அங்கு அவளது அருமை நரேன் தோன்றுகிறார். "ஜய் ராமகிருஷ்ணா" என்று கோஷித்தபடி அந்தப் புண்ணிய நீரை எடுத்து நாற்புறமும் வீசுகிறார். நானா தேசத்து மக்களின்மீதும் திவலைகள் விழுகின்றன.

இந்தச் சம்பவம் நடந்து சில மாதங்களுக்குள் நரேன் அமெரிக்காவில் சிகாகோ சர்வமத மகாசபையில் வேதாந்த சாம்ராஜ்யத்துக்குக் கொடி ஏற்றினார். ஆனால் அம்மா இக்காட்சி காண்கையில் நரேனின் இருப்பிடமே தெரியாமலிருந்தது.

ராமகிருஷ்ண தர்மத்தை உலகில் பரப்ப நரேனைப் போலவே தானும் உயிர் வாழ்ந்துதான் ஆகவேண்டும் என்று அம்மா ஐயம் திரிபறப் புரிந்துகொண்டாள். வெளியே தெரியும் சூரிய வெளிச்சம்போல் நரேன் அந்தத் தருமப் பயிரை வளர்த்தார். பூமிக்கடியே ஓடும் நீரோட்டம் போல் மறைந்திருந்து பயிருக்கு உயிர் தந்தாள் அம்மா.

இங்கே அம்மா திவ்வியக் காட்சி கண்டபோது தேச சஞ்சாரம் செய்துகொண்டிருந்த நரேனும் அம்மாவைத்தான் நினைத்துக்கொண் டிருந்தார். அமெரிக்காவுக்குச் சென்று வேதாந்தத்தை எடுத்தியம்ப வேண்டுமென்று ஆர்வத் துடிப்புக் கொண்டிருந்தார் அவர். அந்தப் பணி இடையூறின்றி நிறை

வேறும் என்ற தெளிவை அவருக்குத் தர வல்லவர் யார்? அம்மா தானே? அதுதான் அம்மாவை நினைத்துக்கொண்டார். 'குரு மஹராஜ் அம்மாவில் அடக்கம். அவள் எப்படிச் சொல்கிறாளோ அப்படிச் செய்வேன்' என்று எண்ணினார். அம்மாவுக்குக் கடிதம் எழுதினார்.

அந்நிய தேசம் செல்வது சென்ற நூற்றாண்டில் சாதாரண விஷயமா? அருமைப் பிள்ளை பல்லாயிரம் காதங்கள் கடல் கடந்து போகிறேன் என்கிறானே என்றுதான் முதலில் தாய் மனம் கலங்கியது. அன்று அவளது கனவில் டாகுர் தோன்றினார். அலைகளின்மீது நடந்து சென்றார் அவர். திரும்பிப் பார்த்துத் தம் பின் இருந்த நரேனிடம் தம்மைத் தொடருமாறு சைகை காட்டினார். மறுநாளே அம்மா, நரேன் அமெரிக்காவுக்குச் செல்ல அநுமதியும் அநுக்கிரகமும் தெரிவித்து எழுதி விட்டாள். 'அம்மா சொற்படி' எழுதப்பட்ட (அம்மாவுக்குத் தான் சுயமாக எழுத வராதே) அந்தக் கடிதத்தைப் பார்த்து நரேன் பேரானந்தம் கொண்டார். ''இனிமேல் எல்லாம் ஜாம் ஜாம் என்று நடந்துவிடும்'' என்று பூரித்தார்.

தருமப் பயிருக்கு உயிர் தரும் நீரோட்டம் பூமிக்கு மிகவும் அடியிலே ஓடினால் வேருக்கே எட்டாது அல்லவா? எனவே, வயதிலும் ஸ்தானத்திலும் கௌரவம் பெற்றுவிட்ட சாரதை, பாரத ஸ்திரீ தர்மத்துக்கு விரோதமின்றியே, சிறுகச் சிறுக மேல் மட்டத்துக்கு வரலானாள்; அதாவது, வெளி அடியார்களை அநுமதிக்கலானாள்.

இந்தப் பாக்கியத்தை முதலிலே பெற்ற ஒருவர் நாக மகாசயர் எனப்படும் துர்க்காசரண நாகர். இவர் ராமகிருஷ்ணரின் நெருங்கிய பக்தர்.

அன்று ஏகாதசி. பிற்பகல் நேரம். அம்மா சர்க்கரை வள்ளிக் கிழங்கும், எண்ணெயில் வறுத்த 'தட்டை'யும் உண்பதற்காக அமர்ந்தபோது வேலைக்காரப் பெண் வந்து, ''யாரோ நாகர்னு வந்திருக்காரு. தலையைத் தரையிலே ஓயாம முட்டிக்கிட்டிருக்காரு. மவராசு (யோகானந்தரை யோகின் மகராஜ் என்பார்கள்) எத்தனையோ தடுத்தும் கேட்காம அவரு தலையை மோதிக்கிட்டிருக்காரு. பைத்தியமாங்காட்டியும்!'' என்றாள்.

''அவரை இங்கே அழைச்சிண்டு வரச் சொன்னேன்னு யோகின்கிட்டே சொல்லும்மா'' என்றாள் தேவி. அவ்வளவாகப் பழக்கமில்லாத ஒருவரைத் தன் சந்நிதிக்கு அம்மா அநுமதிப்பது வேலைக்காரிக்கே வியப்பாக இருந்தது.

யோகானந்தர், நாகரின் கையைப் பிடித்து அழைத்து வந்தார். நாகரின் நெற்றி வீங்கியிருப்பதைப் பார்த்த அம்மாவுக்கு உள்ளம் உருகிவிட்டது. நீர் நிறைந்த நாகரது கண்களுக்கு அம்மாவே தெரியவில்லை. அவருக்கு வெளி உணர்வு இருக்கிறதா என்றும் புரியவில்லை: தள்ளாடிக்கொண்டு நின்றூர். அம்மா எழுந்திருந்து அவரிடம் சென்று அவரது கைகளைப் பற்றி, தன் அருகே அமர்த்திக்கொண்டாள்.

''அம்மா! அம்மா'' என்று தேம்பினூர் நாகர்.

அம்மா அவரது கண்களைத் தானே துடைத்துவிட்டாள். வள்ளிக் கிழங்கில் சிறிதைப் பிட்டுத் தன் வாயில் போட்டுக் கொண்டு, மீதத்தை அப்பரவசப் பிள்ளையின் வாயில் போட்டாள்.

நாகருக்கோ அதை விழுங்கக்கூடத் தெரியவில்லை. குதப்பிக்கொண்டே இருந்தார். ''அம்மா! அம்மா'' என்கிற அரற்றல்மட்டும் ஓயவில்லை. அவளது இரு பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தார்.

நீண்ட நேரம் இப்படிச் சென்றது.

''அம்மா, நீங்க காலமேயிருந்து சுத்த உபவாசம். இப்பவும் சாப்பிட விடாமப் பண்ணுரூர் இவர். மகராஜோடு இவரை அனுப்பிச்சுடுங்கோ'' என்று அம்மாவுடன் இருந்த பெண்டுகள் கூறினர்.

''முதலில் அவர் தணியட்டும். இப்போ என் சாப்பாடு தானு முக்கியம்?'' என்று கேட்ட அம்மா அவரது தலையையும் முதுகையும் தடவிக் கொடுத்தாள். எதற்குமே அவரது பரவசம் வசப்படவில்லை என்று கண்டபின் கடைசியாகப் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தாள் அம்மா. அவளது டாகுரின் திருநாமந்தான் அந்தப் பிரம்மாஸ்திரம். நாகரின் செவியில் அம்மா, 'ஸ்ரீ ராமகிருஷ்ணு, ராமகிருஷ்ணு' என்று ஓதியது அவர் செய்த மகாபாக்கியம்.

அவருக்கு 'ஜன்னி' உடனே தணிந்தது.

அம்மா தானும் பலகாரம் உண்டு நாகரையும் உண்பித்தாள்.

வெளியே அழைத்துச் செல்லப்படுமுன் அவர் அம்மாவிடம் திரும்பத் திரும்ப, ''நான் என்கிறது எதுவுமே கிடையாது. எல்லாம் நீதான். நானே கிடையாது; சர்வமும் நீதான்'' என்றூர்.

''என்ன பூரண ஞானம் பாருங்கள்'' என்று அருகிலிருந்தோரிடம் பூரிப்புடன் கூறினுள் தேவி. அதாவது சகலமாகவும்

ஆகி, அவற்றை ஆட்டிப் படைத்துக்கொண் டிருக்கும் சக்தியாகத் தன்னை ஒப்புக்கொண்டு விட்டாள்.

நாகர் சுற்றிலும் இருந்தவர்களைப் பார்த்து, ''அம்மா தன் கையாலே உணவூட்டினளே! அப்பா(ராமகிருஷ்ணர்)வைவிட அம்மா பெரிய தயாமூர்த்தி'' என்று தட்டித் தடுமாறிக் கூறி விட்டு விடைகொண்டார்.

இன்னொரு நாள் நாகர் இதே போன்ற பரவச நிலையில் மாம்பழங்களைச் சமர்ப்பித்தார். அப்பழங்களை நறுக்கி ராமகிருஷ்ணருக்கு நிவேதித்துவிட்டு, அவருக்கும் அதைப் பிரசாதமாக வழங்கினள் அம்மா. அதில் ஒரே ஒரு துண்டை ஸ்வாதீனமற்ற தம் கையால் எப்படியோ எடுத்து, தலையில் தேய்த்துக்கொண்டார் நாகர்!

மற்ெருரு சமயம் அம்மா தேக்கிலையில் வைத்து அவருக்குப் பிரசாதம் வழங்கியபோது, அவர் அந்த இலையையும் சேர்த்து உண்டார். 'அம்மாவின் கைபட்ட இலையும் திவ்யப் பிரசாதமே. அதைக் குப்பையில் எறிவார்களோ?' என்றார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அம்மா அவருக்கு ஒரு வேட்டி அளித்தபோது, அந்தப் புனித வஸ்திரம் தம் காலில் படக் கூடாது என்பதால் ஒன்பது முழத்தையும் சும்மாடுபோல் தலையில் சுற்றிக்கொண்டார்.

பிற்காலத்தில் நரேன், கிரீஷ், நாகர் ஆகியோரது படங்களைத் தன் அறையில் மாட்டி வைத்துக்கொண் டிருந்தாள் அம்மா. தெய்வப் படங்களுக்குச் சந்தனமிடும்போது இம் மூன்று படங்களுக்கும் சந்தனம் வைப்பாள் அம்மா. ஒரு வித்தியாசம்—இம்மூவரின் மோவாயையும் தொடுவாள்! ஒரு நாள் இவ்விதம் செய்துவிட்டு நாகரின் படத்தையே வெகு நேரம் உற்று நோக்கினள். ''எத்தனையோ பேர் வரா, போரு. ஆனு இந்த மாதிரி இன்னொருத்தர் உண்டா?'' என்று தன்னையும் அறியாமல் முனகினள்.

* * * *

கிருஷ்ணபாவினி தேவி, அருமைக் கணவர் பலராம் பாபுவைப் பறிகொடுத்த துயரப் புண் ஆறுமுன்பே ஆருயிர் மகள் புவனமோகினியை இழந்தாள். இப்போது அம்மாதான் அவளுக்கு ஆறுதலின் ஒரே உறைவிடமாக இருந்தாள். அம்மா அவளுடன் கைல்வார் என்ற கிராமத்திலிருந்த வீட்டுக்குச் சென்று சின்னட்கள் தங்கியிருந்தாள். சூழல் மாறியதிலும் அம்மாவின் சாந்நித்யத்திலும் கிருஷ்ணபாவினி ஓரளவு தெளிவு பெற்றாள். அங்கே காட்டு மான்குட்டிகள் முக்கோண அமைப்பில்

அணிவகுத்து நிற்பதும், சிறிது ஆளரவம் கேட்டாலும் அவை திசைக்கொன்றாக மின்னல் துணுக்குகளென ஓடுவதும் அம்மாவுக்கு நேத்திரானந்தமாக இருந்தன.

1895-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நம் அம்மா, தங்கை அம்மாவையும், வேறு சில சிஷ்யர்களையும் அழைத்துக்கொண்டு காசிக்கும் பிருந்தாவனத்துக்கும் யாத்திரை சென்று வந்தாள். பிருந்தாவனத்தில் அவள் கோபாலன் பொம்மை ஒன்று வாங்கினாள். அதை ஜயராம்பாடியில் ஒரு புரையில் வைத்தாள். பூஜையில் சேர்க்கவில்லை. ஒருநாள் கட்டிலில் படுத்திருக்கையில் பாலகோபாலன் கட்டிலருகே தவழ்ந்து வந்தான். "நீதான் காசு குடுத்து என்னை வாங்கினே. ஆனா என்னை ஒதுக்கி வைச்சுட்டியே! எனக்குச் சாதம் போடமாட்டேங்கறே; நமஸ்காரம் பண்ண மாட்டேங்கறே. நீயே பூஜை பண்ணலேன்னா, இந்தக் காலத்திலே அப்புறம் யார் எனக்குப் பூஜை பண்ணுவா?" என்று வெடுக்கெனக் கேட்டு மறைந்தான்.

அம்மா பதறி ஓடிச் சென்று கோபாலன் பொம்மையை எடுத்து மோவாயை வழித்து முத்தமிட்டாள். ராமகிருஷ்ணரின் படத்துக்குப் பக்கத்தில் அதை வைத்தாள். அப்போதே புஷ்பம் எடுத்து வந்து அர்ச்சனையும் செய்தாள். அன்றிலிருந்து கோபாலனுக்குத் தினமும் அம்மா கையால் செய்த நிவேதனங்கள், குறிப்பாக ரஸகோளா(ரசகுல்லா)ங்கள் கிடைத்தன.

அமெரிக்காவில் அமோகப் பெயரும் புகழும் பெற்றுவிட்டார் விவேகானந்தர். அங்கு வேதாந்த ஸ்தாபனங்களை நிறுவினார். அதற்குத் துணையாகப் பணியாற்றச் சாரதானந்தரும் புறப்பட்டார். அமெரிக்கா போகுமுன் ஜயராம்பாடிக்கு வந்து அம்மாவை வணங்கினார்.

ஒரு கையால் கண்ணீரை வழித்துக்கொண்டே, இன்னொரு கையைச் சாரதானந்தரின் தலையில் வைத்தாள் சாரதை. ராமகிருஷ்ணப் பணி அவள் மனக்கண்முன் விசாலமாக விரிந்தது. "ஷரத்! டாகுர் உன் கூடவே எப்பவும் இருக்கார். நிச்சிந்தையாகப் போய் வா" என்றாள்.

அவ்விதமே வெளி நாட்டில் அரும்பணியாற்றி விட்டுத் திரும்பி வந்து சாரதா தேவியின் பிரதான கிங்கரர் ஆனார் சாரதானந்தர்.

அம்மா கல்கத்தாவுக்கு வந்தாள். விவேகானந்தரிடமிருந்து சகாக்களுக்கு வந்திருந்த ஒரு கடிதம் அம்மாவுக்

குப் படித்துக் காட்டப்பட்டது. நரர்களை நாராயணர்களாகக் கருதிச் சமூகசேவை செய்வது ராமகிருஷ்ண மடத்தின் முக்கிய மான பணிகளில் ஒன்ருக வேண்டும் என்று இக்கடிதத்தில் வலி யுறுத்தியிருந்தார் ஸ்வாமிஜி: "நரேன் டாகுருடைய கருவி. டாகுரேதான் தம் காரியத்தைச் செய்யறதுக்காக, அதாவது லோகத்து ஜனங்களுக்கெல்லாம் நல்லது செய்யறதுக்காக நரேனுக்கு இந்த வார்த்தைகளைக் கொடுத்து எழுத வைச்சிருக் கார். அவன் ஆசைப்படற மாதிரியே எதிர் காலத்திலே ஆகப் போறது" என்று தீர்க்கதரிசனத்துடன் கூறினுள் அம்மா.

காளீ பூஜைக்காக அம்மா ஜயராம்பாடிக்குப் புறப்பட் டாள். கிளம்புகிற சமயத்தில் கிரீஷ் வந்தார். அம்மாவை வணங்கினுர். கைகுவித்துச் சொன்னுர்: "உங்க கிட்டே வரும் போது பச்சைக் குழந்தையா ஆயிடேறேன். பச்சைக் குழந்தை அம்மாவுக்கு என்ன உதவி பண்ணும்? உங்களுக்கு நான் ஒரு பணிவிடையும் பண்ணலை. நீங்க தான் எனக்குப் பண்ண றேள். எனக்காகச் சமைக்கிறேள், பரிமாறுகிறேள், இலை எடுத்துச் சுத்தி செய்யறேள். நான் மட்டுமில்லை. எல்லாருமே உங்களுக்குப் பச்சைக் குழந்தைகளாகவே இருக்கா. இப்போ ஜயராம்பாடிக்குப் போறேள்! அங்கே மட்டும் பிறந்தகம்னு ஓய்வா எடுத்துக்கப் போறேள்? இங்கே இருக்கிறதைவிட மோசமான அடுக்களையிலே சமைக்கப் போறேள்! ஆனு உங்களுக்கு யார் என்ன பணிவிடை பண்ண முடியும்?"

அவர் கண்களிலிருந்து மாலை மாலையாக நீர் வழிந்தது.

பின்னுல் திரும்பி மற்றவர்களைப் பார்த்து, உணர்ச்சி பொங்கச் சொன்னுர்: "நம் மாதிரியே ஒரு மநுஷ்ய சரீ ரத்தை எடுத்துண்டு பரம்பொருள் பூலோகத்துக்கு வந்து நம் மோடு வாழும் என்று நம்புவது கஷ்டம்தான். ஆனு இதோ, பிரத்தியட்சமாகப் பாருங்கோ! கிராமாந்தர ஸ்திரீ மாதிரி நிற்கிற இந்த உருவம் விச்வஜனனியே என்று உங்களுக்கு உணர முடியலை? ஆமாம், இவா மகாமாதா, மகாமாயா, மகாசக்தி. கதிமோக்ஷம் கிடைக்கறதுக்காகவும் ஆதரிச அம்மாவாக வாழ்ந்து காட்டறதுக்காகவும் ஆதிபராசக்தி இப்படி வந்திருக்கா."

அந்தச் சூழலிலேயே ஓர் உன்னதம் பொங்கிப் பாய்ந் தது. மந்திரத்தில் கட்டுண்டாற்போல் எல்லோரும் அம்மா வைப் பார்த்துக் கொண்டே நின்றனர்.

மகாமாதா, மகாமாயா, மகாசக்தி ஒரு பழைய துணி மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு கீழே இறங்கினுள், பிறந்தகம் போவதற்காக!

34. அமெரிக்க குருவாயினும் அமரிக்கைப் பிள்ளைதான்

அரக்கர் வதம் முடித்து, அயோத்தி திரும்பிவந்து நமஸ்கரித்த ராம லக்ஷ்மணர்களை அவர்களுடைய தாய்மார் கண்ணால் காணமுடியாமல் நீர் மறைத்தது. பிள்ளைகளை ஸ்பரிசித்து அந்தச் சுகத்திலிருந்தே அவர்கள் திரும்பி வந்ததை உணர்ந்தனர்.

—ரகுவம்சம்-14-2

அம்மாவின் செல்ல நரேன் உலகம் போற்றும் ஸ்ரீமத் விவேகானந்த ஸ்வாமியாகத் திரும்பி விட்டார். அவர் வேதாந்த தர்மத்தைப் பாரெங்கும் பரப்பி, ராமகிருஷ்ணரின் திருநாமத்தை மேல்நாட்டிலும் உலவ விட்டதில் அம்மா அடைந்த ஆனந்தம் பெரியதுதான். 'மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயாக'ப் புளகித்தாள். ஆனால் அதைவிட வேறொன்றிலேயே அவளுக்கு அதிக இன்பமும் திருப்தியும் நிம்மதியும் உண்டாயின. விவேகானந்தரின் 'நாவசைந்தால் டாலர்களைக் கொட்டக் கூடிய பக்தர்கள் ஏற்பட்டு விட்டனர். ''அப்பாடா, இனி என் குழந்தைகள் பரதேசிகளாகத் தவிக்க வேண்டாம். என் பிரபுவை அண்டி வந்த குழந்தைகள் ஆண்டிப் பண்டாரங்களாகத் திரியறதிலே துளிக்கூட முகம் சுளிக்கவே மாட்டா என்கிறது வாஸ்தவம். ஆனால் அந்தத் தெய்வக் குழந்தைகளுக்கு வயிறு ரொம்ப ஆகாரம், மானத்தைக் காப்பாற்ற வஸ்திரம், குளிர் வெயிலுக்குக் காப்பாக ஒரு குடிசை இவற்றுக்கு எந்நாளும் குறைவு இருக்கப் படாதுன்னு டாகுரை நான் ஓயாமல் வேண்டிண்டே இருந்தேன். காசி, பிருந்தாவனத்திலே வசதியுடன் இருக்கிற சந்நியாசிகளைப் பார்க்கும்போதெல்லாம் என் தரித்திரக் குழந்தைகளை நினைச்சுத்தான் அழுவேன். கடைசியிலே டாகுர் என் பிரார்த்தனையைக் கேட்டுட்டார். நரேன் மூலமாகக் குழந்தைகள் எல்லாருக்கும் நியாயமான தேவைகளை எல்லாம் பூர்த்தி பண்ணிட்டார்'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினாள் அம்மா.

விவேகானந்தர் உள்ளிட்ட ராமகிருஷ்ணமடத்துச் சந்நியாசிகளுக்காக இச் சமயத்தில் அம்மா செய்து வந்த தியாகம் அற்புதமானது.

தங்களால் சமாளிக்க முடியாத பாபாத்மாக்களான அடியார்களையும், மடத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்காத ஊழியர், பிரம்மசாரி ஆகியோரையும் அந்தத் துறவிப் பசங்கள் அம்மாவிடமே அனுப்பி வைக்கலானார்கள். அல்லது அவர்கள் இப்படிப்பட்டவர்களை மடத்திலிருந்து வெளியேற்றிவிட்டால், இவர்கள் தாமாகவே நேராக அம்மாவிடம் வந்து அடைக்கலம் புகுவார்கள். அன்பையும் அநுதாபத்தையும் பொழிந்தே இவர்களைச் சீர்திருத்தி விடுவாள் அம்மா. அவர்களை மீண்டும் மடத்தில் பணிபுரிய அனுப்பி விடுவாள்.

பிரேமானந்தர் அம்மாவைக் குறித்துச் சகாக்களுக்குச் சொன்னார்: ''நம் புனித மாதாவைப் பூரணமாகப் புரிந்து கொண்டவர் யார்? அவளிடம் மகோன்னதத்தின் இழையைக் கூடக் காண முடியாது. டாகுரிடமாவது வித்யாசக்தி வெளிப்பட்டது. ஆனால் அம்மா! அவளது ஞான பூரணம் மறைந்தே உள்ளது. இப்படிச் சக்தியை அடக்கியதே மகா சக்தியாக இருக்கிறது! ஜய் மாதா! ஜய் மாதா! ஜய் மகாசக்தி மாதா! நம்மால் செரிக்க முடியாத விஷ ஜந்துக்களை எல்லாம் அம்மாவிடம் அனுப்பி வைக்கிறோம். அவள் அதையும் மடியில் எடுத்துப் போட்டுக் கொள்கிறாள். எல்லையற்ற சக்தியோடு கூடிய உவமையற்ற தயை! ஜய் மாதா! அவள் எங்கே, நாம் எங்கே? டாகுரும்கூட இப்படி விஷத்தை எல்லாம் வாரி எடுத்துக்கொண்டு நாம் பார்த்ததில்லையே! அவர் தமது அத்தியந்த சிடர்களை எத்தனை சோதனைகளுக்குப் பிறகு எத்தனை ஜாக்கிரதையோடு ஏற்றுக் கொண்டார்? இங்கு அம்மாவின் சந்நிதியில் என்ன பார்க்கிறோம்? அற்புதம்! அவள் அனைவருக்கும் தஞ்சம் தருகிறாள். அத்தனை கைகளிலிருந்தும் விஷத்தை எடுத்து உண்டு அப்படியே ஜீரணித்துக் கொள்கிறாள். ஜய் மாதா!''

ஆதியில் ஈசுவரன் விஷத்தை உண்டபோது, வேண்டாம் எனத் தடுத்துத் தொண்டையைப் பிடித்தாள் தேவி. இப்போது ஈசுவரனும் ஏற்கத் தயங்கிய விஷத்தை, தான் மகிழ்ச்சியுடன் ஏற்றாள்போலும்! ராம கிருஷ்ணரிடம் செல்லத் தயங்கியிருக்கக் கூடியவர்களும் அம்மாவிடம் வரத் தொடங்கினர்.

மரம் பழுத்தால் வௌவாலை வா என்று கூவி
இரந் தழைப்பார் யாவரு மங்கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்.

தனது அமுத தரிசனமும், அமுத நல்லுபதேசமும், அமித மந்திரோபதேசமும் தந்து பலரது விஷத்தை வாங்கிக்கொள்ள லானுள் அம்மா. ராமகிருஷ்ணர் அவளுக்கென்று குறிப்பிட்டிருந்த அவதாரப் பணி மல்லிகை மலர்வதைப்போல் பொல்லென்று பூத்து விகசிக்கலாயிற்று.

டாகுர் மறைந்தபோது அவளுக்கு வயது முப்பத்து மூன்றுக்குச் சிறிது குறைவு. அவர் போனபின் முப்பத்து மூன்று வருஷங்களுக்குச் சிறிது அதிகம் ஜீவித்தாள். அதில் முதல் பதினேராண்டு குடத்துள் விளக்கு; அடுத்த பதினேராண்டு கூடத்து விளக்கு; கடைசிப் பதினேராண்டு குன்றின்மேல் விளக்கு.

கல்கத்தாவில் அவதாரப் பணியைத் தொடங்கிய போதே அவளிடம் ஓர் அரிய மாறுதல். கிராம மக்களுக்குத் தனிக் கொச்சை அகராதி உண்டு. மேலும் வார்த்தைகளின் இறுதியில் இழுத்துப் பிராசம் போடுவார்கள். அம்மாவும் இப்படிப் பேசியவள்தான். இப்போது, கல்கத்தா நகர வாசிகள் அவளை வந்தடைந்தபோது, அழகாக அந்த நாகரிக பாணியிலேயே பேசினுள். இறுதிப் பிராசம் மட்டும் அவ்வப் போது தேனுக இழையும். கிராமத்துக்குப் போனுல் அங்கே இந்த மேட்டிமை மொழியைக் காட்ட மாட்டாள். பழைய கொச்சைக்கே திரும்பி விடுவாள். பக்தர்களை அத்துணைப் பக்குவத்துடன் இனம் பார்த்துத் தன் வெகு அருகில் வைத்துக் கொண்டாள்.

ஆடவர்களை அம்மா அதிகம் அநுமதிக்காததால் பெண் பக்தைகள் நிறைய வந்தனர். அவர்களுக்கு அம்மா பெரிய ஆறுதலாக இருந்தாள். அவர்களுக்குத் தெரிந்திருந்த மற்ற சந்நியாசிகளையும் ஞானிகளையும்போல் அன்றி அம்மா அவர்களிடம் சுமுகமாக, சுலபமாக, சகஜமாக, சரஸமாக, சரளமாகப் பழகியது அவர்களுக்குப் பாலைவன ஊற்ருக இருந்தது. வந்தவர்களுக்கெல்லாம் உணவுபசாரம் செய்த மகாஸ்திரீ அல்லவோ அம்மா? அதோடு, முதல் முறையே பக்தர்களின் வீட்டு விஷயங்களைச் சொந்த சமாசாரம் போன்ற நெருக்கத்துடன் விசாரிப்பாள். பக்தையிடம், "உங்கள் நாட்டுப் பெண் எங்கே, உங்கள் பேரன் எங்கே?" என்று கேட்கமாட்டாள். "என் நாட்டுப் பெண் எங்கே, என் பேரன் எங்கே?" என்றே கேட்பாள். "சரியான வெயிலில் வந்திருக்கேளே!" என்று சொல்லிக் கொண்டு, தானே அவர்களுக்கு விசிறி விடுவாள். "ஓய்வு எடுத்துக்கோங்கோ"

என்று சொல்லித் தன் தலையணையை அவர்களுக்கு எடுத்துப் போடுவாள். சமய சரித்திரமே கண்டிராத நேசநெருக்கத்தைப் பெருகவிட்ட அம்மாவிடம் அடியார்கள் திரண்டு வந்ததில் அதிசயம் என்ன?

விவேகானந்தருடன் நிவேதிதா தேவியும், ஸ்ரீமதி ஒல்புல், குமாரி மக்லியாட் ஆகிய மேல்நாட்டுச் சிஷ்யைகளும் வந்திருந்தனர். இவர்களை அம்மா தன் புத்திரிகளாகவே வரவேற்ருள். அம்மா அவர்களோடு சேர்ந்து அமர்ந்து உண்டதை அறிந்த விவேகானந்தரின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அம்மாவுக்கு ஆங்கிலம் தெரியாது. மொழி பெயர்ப்பாளரை வைத்துக் கொண்டு பேச்சு நடக்கும். ஆனல் அதுவும் இரண்டாம் பட்சமே; அன்புக்கு மொழி அவசியமில்லை அன்றே?

''பகவான் விவேகானந்தருடைய தர்மபுத்திரி ஸ்ரீமதி நிவேதிதா தேவி'' என்று மகாகவி பாரதியார் போற்றினர். மேல்நாட்டைச் சேர்ந்த அந்த மாதரசி நிவேதிதையோ நம் அம்மாவின் அசட்டுக் குழந்தை—கூகி—என்றே தன்னைச் சொல்லிப் பெருமை கொண்டாள்.

''ஸ்ரீ ராமகிருஷ்ணர் விளக்கிய ஆதரிச பாரத ஸ்திரீ தர்மத்தைப் பூர்த்தி செய்யும் கடைசி வார்த்தை அம்மாவே'' என்பாள் நிவேதிதை.

''**பாரத** ஸ்திரீ தர்மம்'' என்று அவள் சொன்னது குறிப்பிடத்தக்கது. அம்மாவிடம் நமக்குள்ள பக்தி காரணமாக, **உலகுக்கெல்லாம்** அவளே பெண்குல உதாரணம் என்று போற்றத் தோன்றலாம். அவளது அன்பு, உழைப்பு, எளிமை, ஆன்மிகம் இவை உலகப் பெண் குலம் முழுதுமே பின்பற்ற வேண்டியவை என்பதும் உன்மைதான். இருப்பினும் இந்தியச் சூழ்நிலையில் பெண்களுக்கென விசேஷமாக ஒரு கற்பு நெறியும், அடக்கம், நாணம் இவையும் தொன்றுதொட்டு வளர்க்கப் பட்டு வந்திருக்கின்றன. இவற்றையே அம்மா சிறப்பாக மூர்த்திகரித்தாள்.

ஒருநாள் அம்மா, ''உனக்காகத்தான் இதைப் பண்ணினேன்'' என்று கூறித் தனது ஓயாத அலுவல்களுக்கிடையே கம்பளி நூலால் அலங்காரப் பின்னலிட்டுச் செய்த விசிறியை நிவேதிதைக்கு அளித்தாள்.

நிவேதிதை நெகிழ்ந்து போனுள். அந்த விசிறியைச் சிரசில் ஒற்றிக்கொண்டாள். மார்போடு அணைத்துக் கொண்டாள். ''என்ன நேர்த்தி, என்ன கவர்ச்சி!'' என்று பாராட்டினுள்.

நிவேதிதை ஓர் அழகிய நிக்கல் பேடகத்தை அம்மாவுக்கு அளித்தாள்—அன்பு நிவேதனமாக. அதிலே அம்மா ராமகிருஷ்ணரின் கேசத்தைப் போட்டு வைத்தாள். நிவேதிதைக்கு நெஞ்சு நிறைந்தது. "அம்மா, நாங்கள் பூர்வஜன்மத்திலே ஹிந்துக்களாகத்தான் இருந்தோம். மேல்நாடுகளில் குரு மஹராஜின் உபதேசத்தைப் பரப்ப வேண்டுமென்றே இப்போது அங்கே பிறந்திருக்கிறோம்" என்றாள்.

இன்னொரு முறை அஸ்ஸாம் பட்டுத்துணி ஒன்றை அம்மாவுக்கு அளித்தாள் நிவேதிதை. அம்மா தனக்கு அன்புடன் வழங்கப்படும் அளிப்புக்களை எந்நாளும் போற்றி வைத்திருப்பாள். "பண்டம் முக்கியமில்லை. அது ஏற்படுத்தும் ஞாபகம் தான் முக்கியம்" என்று அழகொழுகச் சொல்வாள். வெகு காலத்துக்குப் பின்—நிவேதிதை மண்ணுலகத்தை விட்டுப் பொன்னுலகு புகுந்தபின்—ஒரு நாள் கௌரீசுவரானந்தர் அம்மாவின் பெட்டியிலிருந்த துணிமணிகளைக் காயப்போடும் போது, மட்கிக் கிடந்த இந்தப் பட்டுத் துண்டை வெளியில் எடுத்தார். "அம்மா! இது அள்ளுகந்தல் ஆயிடுத்து. வெளியிலே எறிஞ்சுட வேண்டியதுதான்!" என்றார். "குழந்தே! அப்படிச் சொல்லாதேடா! அது நிவேதிதா கொடுத்தது. எத்தனை பிரியத்தோடு கொடுத்தா? எங்கே, அதைக் கொண்டா" என்றாள் அம்மா. குழந்தையை வாங்கிக் கொள்வது போல அதை வாங்கிக் கொண்டாள். அப்பளமாக நொறுங்கியிருந்த மடிப்புக்களிடை பூச்சி அரிக்காமலிருக்க ஏதோ வாசனைப் பொடியைக் கவனமாகத் தூவினாள். "இந்தா, ஜாக்கிரதையாப் பெட்டியிலே வை" என்று கொடுத்தாள்.

அம்மாவைப் பற்றி நிவேதிதா தேவி அழகுபடப் பலமுறை எழுதியிருக்கிறாள். அவற்றில் ஒன்றை மட்டும் 'மாதிரி' பாருங்கள்:

"மிகவும் எளிய பெண்டிரும் எய்தக் கூடிய ஞானத்தை, தித்திக்கும் அன்பை அம்மாவிடம் எவரும் பிரத்தியக்ஷ அனுபவமாக நுகரலாம். அவளுடைய ஞானத் துறவு எனக்கு எப்படி அற்புதமாகத் தெரிந்ததோ, அது போலவே அவளுடைய உபசரணைப் பண்பில் பொலிந்த ராஜகாம்பீர்யமும், அற்பத்தனமறியாத் திறந்த மனப்பாங்கும் அற்புதங்களாகத் தோன்றின. அவள் முன்னர் புதிய விஷயங்கள் குறித்தும், சிக்கலான பல சமாசாரங்கள் குறித்தும் பிரச்னைகள் வைக்கப் படும். இவற்றுக்குத் தீர்வு சொல்வதற்கு அவள் இம்மியும்

தயங்கி நான் பார்த்ததேயில்லை. எப்படிப்பட்ட பிரச்னை யாயினும் விசால உள்ளத்தோடு உன்னதமான தீர்வு அளித்து விடுவாள். அவளது வாழ்க்கையே ஒரு நீண்ட மௌனப் பிரார்த்தனையாகும்.''

நம் அம்மாவின் அற்புதமே அற்புதம்! பட்டிக்காட்டுப் பாமர ஸ்திரீயாக, பண்டை ஆசாரங்களைக் கடைப்பிடித்துக் கொண்டே, அந்நிய நாட்டினரின் சன்னல் பின்னலான பிரச்னை களுக்கும் அநாயாசமாகத் தீர்வு கண்டிருக்கிறாள். இத்தனை யும் செய்து கொண்டே தன் வாழ்வின் ஆதார சுருதியாக ஒரு மௌன மோஹனத்தைக் கனிய விட்டிருக்கிறாள்!

''அவளது வாழ்க்கையே ஒரு நீண்ட மௌனப் பிரார்த் தனையாகும்'' என்று நிவேதிதை சொன்னதைத்தான் தேவ மாதா என்ற மற்றொரு மேல்நாட்டு மங்கை இப்படிச் சொல் கிறாள்; ''அம்மா உபதேசங்களை உபந்நியசிக்கவில்லை. அவள் வெளிப்படப் புத்திமதிகள் கூறியது கூட மிகவும் அபூர்வமே யாகும். அப்படியானால் அவள் என்ன செய்தாள்? **அவள் வாழ்ந்தாள்; வெறுமனே வாழமட்டுமே செய்தாள்.** அந்தத் தூய வாழ்விலேயே வேறு எத்தனை வாழ்க்கைகள் தூய்மை பெற்று உயர்வு கொண்டன என்பதை யாரே கணக்கிட்டுச் சொல்ல முடியும்? தயை, பக்தி, ஈசுவர சங்கம் ஆகியன அவளது ஸ்வபாவமாக இருந்தன; எனவே இவை அவள் தன் உடைமைகளாக எவர் கண்ணுக்கும் உறுத்திக் கொண்டு தெரியவுமில்லை.''

அம்மாவைப் பற்றி இத்துணை நயம்பட மொழியும் தேவமாதா, குழந்தை ராதுவுக்கு ஒரு பரிசு தந்தாள். (இந்த ராதுவைப் பற்றிப் பிற்பாடு நிறையப் பார்ப்போம். பாடு படுத்தவே வந்த ராது அம்மாவின் தம்பிமகள் என்று மட்டும் இப்போதைக்குத் தெரிந்து கொண்டால் போதும்) 'ஜாக்—இன்—தி—பாக்ஸ்' என்பதுதான் அப் பரிசு. ஒரு பெட்டிக்குள் ஜாக் என்ற குழந்தை வடிவை வைத்துச் செய்த பொம்மை அந்தக் காலத்தில் பிரசித்தம். பெட்டி மூடியைத் திறந்தவுடன், 'கீச் மூச்' என்று கத்திக் கொண்டு ஜாக் வெளியே குதிக்கும். குழந்தை ராதுவுக்குத் தேவமாதா அளித்த இந்தப் பொம்மையை நம் அம்மா என் கிற குழந்தையே அதிகம் ரசித்தது. ஒவ்வொரு முறையும் ஜாக் வெளியே குதிக்கும் போது, அம்மா கைகளைக் கொட்டிக் கொண்டு, தானும் 'கீச் முச்' என்று கூவுவாள்!

இப்படி மனசு திறந்து குழந்தையாக இருந்ததால்தான் அவள் மகா காளியாகவும் இருந்தாள்! அவளது அமெரிக்க,

ஆங்கிலேய புத்திரிகள் அவளைக் காளியாகவே கண்டு களித்தனர். கிராமாந்தரச் சாரதை மேல்நாட்டிரே வியக்கும் வண்ணம் நாகரிகப் பண்புகளைக் காட்டியது அதிசயம் எனில், மேனாட்டு மங்கையர் நம் கோர காளியிடம் காதல் கொண்டது அதனினும் அதிசயம் அல்லவா? ஒரு மகாத்மா தோன்றிவிட்டால், உடனே எத்தனை அதிசயங்கள் இயற்கையாகத் தோன்றிவிடுகின்றன?

''தும் அமார் காளி'' என்று ஒரு முறை நிவேதிதை அம்மாவிடம் வங்காளியில் கூறினாள்.

பக்கத்திலிருந்த கிறிஸ்டைன், ''யு ஆர் அவர் டிவைன் மதர் காளி'' என்று அதையே ஆங்கிலத்தில் சொன்னாள்.

''அன்புச் செல்வங்களே! காளியாய் இருப்பது எனக்குக் கஷ்டமாயிருக்கும். நாக்கை வெளியிலே தொங்கப் போட்டுண்டே இருக்கணுமே'' என்றாள் அம்மா, புன்சிரிப்புடன்.

''நீங்கள் நாக்கைத் தொங்கப் போட்டுக்கணும் என்கிறதே இல்லை. எப்படியிருந்தாலும் நீங்களே எங்களுக்குத் திவ்விய மாதா. ஸ்ரீ ராமகிருஷ்ணர் எங்களுக்குச் சிவன் இல்லையா?'' என்றனர் அந்த அந்நிய நாட்டுப் புண்ணியப் பெண்கள்.

''ஓஹோ! அப்படின்னா ஒரு மாதிரி ஒப்புக்க வேண்டியது தான்'' என்று அம்மா 'விட்டுக் கொடுத்தாள்'.

ஒரு முறை இந்தப் பெண்கள் ஈஸ்டர் கொண்டாடினர். அம்மா அதைக் காண வந்திருந்தாள். சிறிய பிரெஞ்சு ஆர்கன் ஒன்றை வைத்துக்கொண்டு அப் பெண்கள் ஈஸ்டர் துதிகளை இசைத்தனர். இயேசுநாதர் புத்துயிர் கொண்டு, சீடர் துயர் தீர்த்த அற்புதத்தை விளக்கும் பாக்கள் பாடப் பெற்றன. அது அம்மாவுக்குத் தெரிந்திராத கதை. பாட்டுக்களின் பாஷையும் அவளுக்குத் தெரியாதது. சங்கீதமும் அவளுக்குப் புரியாதது. இப்படித்தான் நாம் நினைப்போம். ஆனால் உண்மையிலோ அம்மா அந்தச் சங்கீதத்தையும், அதோடு மட்டுமின்றி, பாக்களின் கருத்தையும், சம்பவங்களையும், தத்வார்த்தங்களையும் கூட அநாயாசமாகப் புரிந்து கொண்டாள். அம்மாவின் தெய்விக சக்தியை நன்குணர்ந்த நிவேதிதையே அதிசயித்துவிட்டாள்!

அம்மா எதனிடமும் தன் இதயத்தைத் திறந்து கொண்டு இழைவாள். எனவே எதுவுமே தன் இதயத்தைத் திறந்து கொண்டு, தன் ரகசியங்களை அவிழ்த்துக் கொண்டு, அவளிடம் இழைய ஆரம்பித்துவிடும். பண்புமயமான நிவேதிதை அம்மாவிடம் இழைந்து குழைந்து ஆன்ம நிவேதனமானதில் விந்தை என்ன?

நிவேதிதை மேரியன்னையைத் தியானித்தபோது நம் அம்மாவின் முகமே அவளுக்கு மறுபடி மறுபடி தோன்றியதாம். அவள்தான் எத்தனை பாக்கியம் செய்திருக்கவேண்டும்?

அந்நிய நாட்டுப் படித்த பெண்கள், பட்டிக்காட்டுக் காரியாகிய தன்னோடு ஒட்டி உறவாடுவதை எண்ணி அம்மா வியந்திருந்தபோது முன்னொரு நாள் ராமகிருஷ்ணர் சமாதி கலைந்தவுடன் கூறிய வாக்குகள் அவள் காதில் ரீங்காரமிட்டன. ''பிரியே! நான் ஏதோ ஒரு வெளிதேசத்துக்குப் போயிருக்கேன். அங்கே அத்தனை பேரும் வெள்ளை வெளேர்னு இருக்கா. அவா எங்கிட்ட எத்தனை பக்தியும் சிரத்தையும் காட்டறு, தெரியுமோ?'' என்றார் ராமகிருஷ்ணர். அவர் நர ஆக்ருதியில் உலவியபோது அந்நியக் குழந்தைகள் அவரிடம் திரண்டு வரவில்லை. இன்று அம்மாவிடமே வந்திருக்கின்றன. இதிலிருந்தே அவ்விருவரின் ஐக்கியம் தெரிகிறதல்லவா?

நிவேதிதா காலமானபோது அம்மா ஆறாத் துயரம் அடைந்தாள். அவளது கண் மட்டும் அழவில்லை. உள்ளத்தின் உள் ஆழமே அழுதது. ''மகாத்மாக்கள் மாண்டால் அந்தராத்மாவே அலறும்னு பழமொழி சொல்றாளே, எத்தனை உண்மை!'' என்றாள்.

ஒரு நாள் கிறிஸ்துவத் திருமணச் சடங்கை விவரிக்குமாறு மேனாட்டுச் சிஷ்யைகளிடம் அம்மா கேட்டாள். அம்மா அன்பு மயமாக, இன்ப மயமாக அமர்ந்திருந்ததால் அந்தப் பெண் குழந்தைகளுக்கு மிகுந்த உற்சாகமாயிற்று. ஒரு சிறிய நாடகமாகவே தங்களது திருமணச் சடங்கை நடத்திக் காட்டினர். ஒருத்தி மணமகன் ஆனாள். இன்னொருத்தி மணமகள் ஆனாள். மூன்றாமவள் திருமணம் நடத்தி வைக்கும் பாதிரி ஆனாள். ''பண்ணி வைக்கிற சாஸ்திரிகள்'' என்றாள் அம்மா, சிரித்து.

'சாஸ்திரிகள்' கிறிஸ்துவத் திருமணத்தில் தம்பதி செய்யும் சத்தியப் பிரதிக்ஞையை ஓதினாள்: ''மேன்மையுற்ற போதும் தாழ்வுற்ற போதும், செல்வம் மிகும் போதும் வறுமை வந்துற்ற போதும், ஆரோக்கியத்திலும் பிணியிலும்—மரணம் நம்மைப் பிரிக்கிற வரையில் நாம் ஒன்று சேர்ந்திருப்போம்.''

இந்த வாக்குகளைக் கேட்டு அம்மா குதுகலித்துப் பூரித்தாள். ''மறுபடி சொல்லுங்கள், மறுபடி சொல்லுங்கள்'' என்று பன்முறை அதைக் கூறக் கேட்டு மகிழ்ந்தாள். ''ஆஹாஹா! என்ன தர்மமயமான வார்த்தைகள்!'' என்றாள்.

ஸ்ரீமதி ஒல்புல், விவேகானந்தரின் அமெரிக்கச் சிஷ்யர்களில் முக்கியமான இன்னொருத்தி. இவள்தான் நம் அம்மாவைப் புகைப்படத்துக்கு அமருமாறு வற்புறுத்தியவள். நிவேதிதா அம்மாவின் சேலையை அவள் திருமேனி படிய நீவிவிட்டு, முக்காட்டுக்குள் மூழ்குவதிலேயே முனைப்பாக இருந்த அவளது சாந்த வதனத்தைப் பிடிவாதமாக வெளிப்படச் செய்தாள். கோலாப்-மா அம்மாவின் முதுகுப் புறத்தில் தொங்கும் நீண்ட கேசத்தைப் படத்தில் விழச் செய்வதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள். நிவேதிதா அந்தக் கூந்தலை எடுத்து அம்மாவின் முன் புறமாக நீள நெடுகப் படிந்து விழுமாறு செய்தாள். அம்மாவும் 'பரப்பிரம்மம், ஜகந்நாதம்' என்று அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இசைந்து உட்கார்ந்திருந்தாள். அப்போது, அதாவது 1898-இல், எடுத்த படம்தான் இப்போது பெருமளவில் எங்கும் காணப்படுவது. அப்போது அம்மாவுக்கு வயது நாற்பத்தைந்து.

பெண்களுக்காக நிவேதிதை ஒரு பள்ளியைக் கல்கத்தா போஸ்பரா சந்தில் ஆரம்பித்தபோது அம்மா மகிழ்ச்சியுடன் அதைத் திறந்து வைத்தாள். பெண்களுக்கு எழுத்தறிவு அவசியம் என்பது அம்மாவின் தீர்மானமான கருத்து; அக்காலத்தில் பெண்கள் பள்ளிக்குப் போனால் உலகமே புரண்டுவிடும் என்று பயந்தவர்கள் உண்டு. அம்மா புரட்சி மனப்பான்மை அற்றவள் எனினும் தன் மனத்துக்கு நிச்சயமாகச் சரியென்று தோன்றுவதைத் தயங்காமல் செய்வாள் என்பதற்கு இந்தப் பள்ளியை அவள் திறந்து வைத்தது ஒரு சான்று. பள்ளியை மௌனமாகவே திறந்து வைத்தாள். சொற்பொழிவு எதுவும் நிகழ்த்தவில்லை. அம்மா தன் ஆயுள் முழுதும் மேடை ஏறிப் பேசியதில்லை.

பராசக்திக்கு ஜயை-விஜயை என்ற சேடியர் போல நம் அம்மாவுக்கு யோகின் - மாவும், கோலாப் - மாவும் என்று முன்னமே பார்த்திருக்கிறோம். விவேகானந்தர் தம்மைத் தாமே பராசக்தியாகக் கருதி, ''எனக்குக் குமாரி மக்லியாடும், ஸ்ரீமதி லெக்கெட்டும் ஜயை-விஜயைகள்'' என்று கூறுவதுண்டு. குமாரி மக்லியாட் அம்மாவிடம் அதிசய அநுபவம் பெற்றவள். ஒரு நாள் மக்லியாட் அம்மாவை வணங்கிவிட்டு, பிறகு பேலூரில் ராமகிருஷ்ண மடத்துக்குச் சென்று நமஸ்கரித்துவிட்டுத் தியானம் செய்தாள். தன் இருப்பிடத்துக்குப் புறப்பட்டாள். இருட்டில் அவள் தனியாகச் செல்வதைப் பார்த்த மடத்துப் பிரம்மசாரி ஒருவர். அரிக்கேன் விளக்கெடுத்துக்

கொண்டு ஓடினார். அவள் தனக்குத் தானே ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டே ஆடி ஆடி நடந்ததைக் கவனித்துக் காதைக் கூர்மையாக்கிக் கொண்டார்: ''அவளை நான் கண்டு கொண்டேன்'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள் மக்லியாட். பக்கத்திலே வந்த பிரம்மசாரியைக் கவனித்தாள். என்ன தோன்றிற்றோ, அவரருகில் வந்து இரகசியக் குரலில், ''புனித அன்னையைத்தான் சொல்கிறேன். அவளை நான் கண்டு கொண்டு விட்டேன்'' என்றாள். அம்மாவுக்கு உலகப் பிரசித்தமாக விளங்கும், புனித அன்னை— ''ஹோலி மதர்'' என்ற பெயர் அப்போது ஏற்பட்டு விட்டது!

மேலும் ஒரு பர்லாங் ஆடிக் கொண்டே நடந்தாள் அமெரிக்க குமாரி. பூமியில் கால் பாவுவதாகவே தெரியவில்லை. அப்படி ஓர் ஆனந்த மிதப்பு! ''அம்மா, அம்மா!'' என்றும் நடுநடுவே நாத் தழுதழுக்கக் கூறுவாள். அன்று அவள் செய்த தியானத்தில் அம்மா, தானே 'ஜகத் ஏக மாதா' என்பதை ஸ்வச்சமாகக் காட்டியிருக்கிறாள்!

ஸ்வாமி விவேகானந்தர் 1898 அக்டோபர் மாதம் பேலூருக்குத் திரும்பினார். துர்க்கா பூஜை கொண்டாடப் பட்டது. ஸ்வாமிஜிக்குக் காய்ச்சல் கண்டிருந்தது. எனினும், பூஜையின் இரண்டாம் நாளன்று பிரத்தியட்ச துர்க்கையை வணங்க விவேகானந்தர் மற்ற குருபாயிக்களுடன் அம்மாவின் இருப்பிடம் சென்றார்.

இதுதான் அவர் அமெரிக்க விஜயத்துக்கு, பின் அம்மாவிடம் முதன் முறையாக வருவது. அவரது இதயம் எப்படி அதைத் தாங்க முடியாமல் நைந்து கிடந்ததோ அதனிலும் நைந்திருந்தது அம்மாவின் இதயம். அவளுடைய சொந்த நரேன் வருகிறான் என்றபோது, யாரோ அசலார் வந்தால் ஓர் அச்சமும் பயிர்ப்பும் கொள்வாளே அதுபோல் உணர்ந்தாள். தலையிலிருந்து கால் வரையில் சேலையை இழுத்து மூடிக்கொண்டு ஒரு மூலையில் ஒடுங்கி நின்றாள் தேவி. தன் ஸ்வருபத்தைத் திடுமெனக் கண்டால் அந்தப் பிள்ளை திணறி விடுமென்றே அப்படிச் செய்தாளோ?

விவேகானந்தர் மேல்நாட்டுத் திக்விஜயத்துக்குபின் கல்கத்தாவுக்குத் திரும்பிய போது அம்மா ஜயராம்பாடியில் இருந்தாள். அந்த விஜயத்தை உண்மையான ஜயமாக்கிய அம்மாவைப் பார்க்க அவர் ஓடோடி வரமுடியாதபடி, ஏராளமான அழைப்புக்கள் அவரை நெரித்தன. பிறகு

ஒரேடியாக உடல் நலிவுற்ருர். மருத்துவர் ஆலோசனைப்படி டார்ஜீலிங்குக்குச் சென்ருர். அதன்பின் காச்மீரத்துக்கு யாத்திரை புறப்பட்டார். ஆகக்கூடி, இந்தியாவுக்குத் திரும்பிய பின்னும் அம்மாவைப் பாராமலே மாதக் கணக்கில் உருண்டு விட்டன. உண்மையில் அலுவல் நெரிசலும் நோயும்தான் அவரை அம்மாவிடம் வர முடியாமல் தடுத்தன என்று சொல்வதற்கில்லை. இச்சமயத்தில் அவர் ஒரு தினம் தம்மைப் பற்றிப் பின்வருமாறு சொல்லிக் கொண்டார்: 'ஒருவனுக்குப் பக்தி பூரணமாக ஏற்படும்போது அவனது இதயமும் நரம்புகளும் பஞ்சாக நைந்துவிடுகின்றன. ஒரு மென்மலரின் ஸ்பரிசத்தையும் அப்போது தாங்கவொண்ணுமல் போகிறது. இப்போதெல்லாம் என்னுல் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசுகையில் உணர்ச்சிப் பரவசமாகாமல் இருக்க முடிவதில்லை.'' ராமகிருஷ்ணரைப் பற்றிப் பேசவே முடியாதவர், அவரைவிடத் தமது பக்தியை அதிகமாகப் பெற்றிருந்த அம்மாவின் திருமுன் எப்படி வந்து நிற்க முடியும்?

அமெரிக்க மாகண்டத்தையும், பாரத உபகண்டத்தையும் தம்மிடம் புரட்டிக் கொண்ட ஞான சிம்மமான ஸ்வாமிஜி பெண்மான்குட்டி என மருண்டு வந்தார் அவள் முன்னுல். அப்படியே சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டார். அவர் எழுந்தபோது அம்மாவால் தன் அம்மாத்துவத்தைத் தடுக்க முடிய்வில்லை. அருமைப் பிள்ளையின் தலையைத் தொட்டுக் கோதினுள். ஆசி சொன்னுள். ஆனுல் அவள் குரல் அவளுக்குள்ளேயே ஒடுங்கிக் கொண்டது.

ஸ்வாமிஜி சற்றுத் தொலைவில் சென்று நின்ருர். அம்மா அவரது சௌக்கியத்தைப் பற்றி வினவிய ஓரிரு வார்த்தைகளையும், அருகில் இருந்த கிருஷ்ணலால்தான் கேட்டு, விவேகானந்தருக்கு உரக்கக் கூறினுர். **(நம் காஞ்சிப் பெரியவர்கள் இடையில் ஒரு சீடரை வைத்துக்கொண்டு, அவர் மூலமே அடியாரிடம் உரையாடுவது போல!)**

''காச்மீரிலே எல்லாம் சௌகரியமாக இருந்ததா? டாகுர் கிருபையிலே உடம்பு சரியா இருக்கியா, அப்பனே!'' என்று அம்மா வினவியதுதான் தாமதம், விவேகானந்தர் பழைய செல்லப் பிள்ளையாக மாறிவிட்டார்.

ஞான மலையானவர் பச்சைப் பாலகனுகிப் பேசலானுர்:

''போ, அம்மா! உன் டாகுர் லக்ஷணத்தை உன்கிட்டே சொல்லாமல் வேறே யாருகிட்டே சொல்வேன்? கேட்டுக்கோ! காச்மீரிலே என்கிட்டே ஒரு சாதாரணப் பக்கிரிக்கு அசூயை

வந்துடுத்து. 'வயிற்று உபாதி வந்து மூணு நாளிலே நீ இங்கே யிருந்து கிளம்பாட்டாப் பாரு'ன்னு என்னைச் சபிச்சான். அவன் சொன்ன மாதிரியே எனக்கு வயிற்று நோய் வந்து தவிச்சேன். அந்த இடத்தை விட்டே ஓடோடி வந்துட்டேன். உன் டாகுர் இந்த அல்பப் பக்கிரிகிட்டே ஒண்ணும் பண்ணிக்க முடியலை'' என்றார்.

அம்மா தனக்குள் சிரித்துக் கொண்டாள். மெல்லிய குரலில் அவள் சொன்னதைக் கிருஷ்ணலால் பலமாக மொழிந்தார்: ''மாந்த்ரிகம், சூனியம், ஆபிசாரகம் எல்லாம் ஒரு ரகசியமான சாஸ்திரம்டா குழந்தை! அதுக்கு உரியபடி ஒருத்தர் அதுகளைப் பண்ணினா அது பலன் தரத்தான் செய்யும். அதுவும் ஒரு தர்மப்படி நடக்கிறதுன்னு நாம் அதுக்குத் தலை வணங்கித்தான் போகணும். டாகுரைப் பார்த்ததில்லையா? ஒரு பல்லி சொல்லுக்குக்கூட அவர் மதிப்புத் தந்தார். யாராவது தும்மினால் காரியத்தை நிறுத்திவிடுவார். ஆனானப்பட்ட ஆதிசங்கரரே சூனிய மந்திரத்துக்குக் கட்டுப்பட்டுத் தம் சரீரம் அவஸ்தைப்படறதுக்கு அநுமதிச்சார்னு சொல்வாளே! ஹாலதரர் சாபம் கொடுத்ததாலே நம்ம டாகுர் ரத்தவாந்தி எடுக்கலியா? அதேமாதிரிதான், உன் சரீரமும் அந்தச் சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு அவதிப்பட்டிருக்கு.''

''போம்மா, நீ என்னமோ சொல்றே! என்னை நானே எப்படிக் கவனிச்சுக்கிறேன் என்கிறதைப்பற்றி இப்போ கேள்வி இல்லை. டாகுர் தம்மையே சாபத்துக்கு ஆளாக்கிண்டதைப் பற்றியும் கேள்வி இல்லை. என்னைச் சாபம் தாக்கின போது உன் டாகுர் என்னை ஏன் காப்பாற்றவில்லைன்னு கேட்கிறேன்'' என்று அம்மாவிடம் ரோஷத்துடன் கேட்டார் நரேன்.

அம்மா மலர்ந்து சிரித்தாள். வாய் விட்டுச் சொன்னாள்: ''சரிடா, குழந்தை! டாகுர் கையாலாகாதவர்னே வைச்சுக்கோ. அதுக்காக என்ன பண்ண முடியும்? அவர்கிட்டேயிருந்து நீ மீளறத்துக்கு வழியே இல்லையே! அவர் உன்னைத் பஞ்சகச்சத்தோடே சேர்த்துக் கொசுவிச் சொருகிண்டிருக்காரே!'' என்றாள்.

விவேகானந்தர் கனிந்துருகி மௌனமானார்.

இச்சரிதத்தில் பிற்பாடு நிகழ்ந்த ஒரு சம்பவத்தையும் இங்கேயே பார்த்து விடலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் துர்க்கா பூஜையை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார் விவேகானந்தர்.

''அம்மா பேரிலேதான் பூஜாசங்கல்பம் பண்ணணும்; நாமெல்லாம் காசில்லாத ஆண்டிகள். அம்மாதான் இத்தனைக்கும் யஜமானி. நம்ம பேரிலே பூஜை செய்யக் கூடாது'' என்றார்.

அம்மாவுக்கு அழைப்பு விடுக்கச் சென்றார். இப்போது ஸ்வாமிஜி இரண்டாம் முறை மேல்நாடு சென்று, தாம் முதலில் தூவிய விதைகள் களகளவென முளைத்திருப்பதைப் பார்த்துத் திருப்தியுடன் திரும்பியிருந்தார். முதல் முறை அவர் அந்நியச் சீமை போய் வந்த போது, பேசவொண்ணாமல் உணர்ச்சி மோதலில் சிக்குண்டிருந்த அம்மா இம்முறை ரஸமாகப் பேசினாள்: ''பாரத தர்மத்துக்கே தூதனாகப் போயிட்டு வந்திருக்கே. மகாவீரை (ஆஞ்சனேயர்)ப் போல் கடல் தாண்டிப் போய்த் தூது சொல்லி வெற்றி வீரனாக வந்திருக்கே!'' என்றாள்.

அவளைவிட அதிநயமாக விடை பகர்ந்தார் விவேகானந்தர்: ''இல்லையம்மா, நான் மகாவீர் இல்லை; மாருதியைவிடப் பாக்கியசாலி. மகாவீருக்குக் கிடைக்காத உன்னுடைய கிருபை எனக்குக் கிடைச்சுதோன்னோ? அதனாலே, அவருக்கு இருந்த சிரமம் எதுவும் எனக்கில்லை. அவர், தானாகச் சமுத்திரத்தைத் தாண்டவேண்டி யிருந்தது. என்னையோ நான் எந்தத் தேசங்களுக்குப் போனேனோ அவாளைச் சேர்ந்த கப்பல்களே சௌகரியமாக அழைச்சுண்டு போச்சு. மகாவீருக்குப் போன இடத்திலே எதிர்ப்பு இருந்தது. ராம துவேஷிகளைப் பார்த்தார்; ஆனால் நான் போன இடத்திலே எல்லாம் டாகுர் மகிமை ஜனங்கள்கிட்டே நன்றாகப் பரவியிருந்தது. அவா என்னை அன்போடு ஆர்வத்தோடு வரவேற்று, டாகுருடைய தூதுமொழியைக் கேட்டுண்டா.''

துர்க்கா பூஜையன்று அம்மா மடத்துக்குச் சென்றாள்.

மௌனத்தின் மதுரமும் மகிமையும் அவளைச் சூழ்ந்திருக்கப் பரம சாந்தையாக ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தை எடுத்துக் கொண்டு சென்றாள். அங்கோர் இடத்தைத் தன் கையாலேயே பெருக்கி மெழுகிச் சுத்தம் செய்தாள். அங்கே டாகுரின படத்தை வைத்துப் பூஜை செய்தாள்.

சுற்றிலும் நடந்துகொண் டிருக்கும் கட்டுமான வேலைகளைக் காண விவேகானந்தர் அவளை அழைத்துச் சென்றார். அவருக்குப் பின்னாலேயே, பசுப்போல் சென்றாள் அம்மா. ''அம்மா, சுதந்திரமா இங்கே சஞ்சாரம் பண்ணும்மா. இது முழுக்க உன் சொந்த பூமி'' என்றார் ஸ்வாமிஜி, தொண்டையடைக்க;

''ரொம்ப நாள் முன்னாடியே டாகுர் வந்து இங்கே குடிபுகுந்துட்டதாகக் காட்சி கொடுத்திருக்கார்'' என்றாள் அம்மா.

விவேகானந்தரைப் பெற்ற புவநேசுவரி தேவிதான் அங்கே சுதந்தரமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். ''எல்லாம் நரேன் காரியம்'' என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டு தோட்டத்திலிருந்த காய்கறிகளைப் பறித்துக் கொண்டிருந்தாள்.

விவேகானந்தர் அவளிடம் வேகமாக வந்தார். ''இங்கே என்ன பண்ணிண்டிருக்கே! அம்மா வந்திருக்காளே, அவாளை வந்தனம் பண்ணிக்காமல், காய்கறி சேகரிச்சுண்டிருக்கியே! எல்லாம் உன் பிள்ளை பண்ணினதுன்னு நினைச்சு ஸ்வாதீனம் கொண்டாடறே போல இருக்கு. அம்மா தாயே, நீ அப்படி நினைச்சா அது முழுத் தப்பு. இதையெல்லாம் செஞ்ச சக்தி வேறே தெரியுமா? இந்த நரேன் அதன் எதிரில் ஒண்ணுமே யில்லை, தெரிஞ்சுக்கோ'' என்றார்.

தன் மெய்யான அம்மாவாக அவர் கருதிய சாரதை யிடத்தில் நெருங்கி நின்றார் விவேகானந்தர். ''அம்மா, எனக்கு ஒரு வரம் தருவாயா?'' என்றார்.

அம்மா புன்முறுவலுடன் நின்றாள்.

''எனக்கு ஜுரம் வரணும்னு வரம் தா'' என்றார் ஸ்வாமிஜி.

அவ்வளவுதான்! இவள் வரம் தர வேண்டும் என்று காத்திராமல், அவரே அவளிடமிருந்து வரத்தை எடுத்துக் கொண்டுவிட்டார். ''அம்மா, ஜுரம் வந்துடுத்து'' என்றார்.

சாரதை அந்த மகாபுத்திரனின் விரிந்த நெற்றியில் விரலை வைத்துப் பார்த்தாள். தணலாகக் காய்ந்தது. ''இது என்னடா குழந்தே!'' என்றாள்.

''கவலைப்படாதேம்மா. இங்கே குருபாயிக்களெல்லாம் பூஜைக்காக அற்புதமாக உழைக்கறதுகள். ஆனாலும் என் அவசரத்துக்கு அவாளுடைய உழைப்புப் போதவில்லை. முன்கோபத்திலே எதையாவது சுள்ளுனு சொல்லி அந்தக் குழந்தைகளைக் கஷ்டப்படுத்திடறேன். ஜுரம் வந்துடுத்துன்னு நான்பாட்டுக்குப் போய்ப் படுத்துக்க வேண்டியது தானே! அவா என் உபத்திரவமில்லாமல் ஜமாய்ச்சுடுவா'' என்ற ஸ்வாமிஜி, சொன்னவாறே படுக்கப் போய்விட்டார்.

அன்றைய விழாக்கள் பூர்த்தியானதும் அம்மா நேரே விவேகானந்தர் படுத்திருந்த இடத்துக்குச் சென்றாள்.

''என் அன்பு நரேன். பூஜை முடிஞ்சுடுத்துப்பா! எழுந்திரு'' என்ருள்.

ஜுரம் வருவதற்கு மனமறிந்து வரம் தராவிட்டாலும் அது போவதற்கு வரம் தந்துவிட்டாள். உடனே விவேகானந்தர், ''காய்ச்சல் போயிடுத்து, பார்த்தியா?'' என்று கூறிக் கொண்டே துள்ளி எழுந்தார்.

அம்மாவின் பேரில் பூஜை செய்ததற்கேற்ப அம்மாவின் கையாலேயே பிராம்மணருக்குத் தக்ஷிணை வழங்கச் செய்தார் விவேகானந்தர். அவர் தக்ஷிணையாக இருபத்தைந்து ரூபாயைத் தூக்கிக் கொடுத்தார். அம்மா எல்லையற்ற மகிழ்ச்சி கொண்டாள். அது இக்கால இருநூற்றைம்பது ரூபாய்க்குச் சமானம் அல்லவா?

விவேகானந்தர் வேதாந்த வித்தகர்களும் வேந்தர்களும் வணங்கும் நவயுக மகாபுருஷராக வந்திருந்த போதிலும் அம்மாவிடம் பெட்டிப் பாம்பாகத்தான் இருந்தார். ஒரு சின்ன உதாரணம்:

அம்மா அப்போது போஸ்பரா சந்தில் வசித்து வந்தாள். திரிகுணாதீதர் இங்கேதான் 'உத்போதன்' என்ற வங்காளிச் சஞ்சிகையை நடத்தி வந்தார். அப்போது ராமகிருஷ்ண மடம் நீலாம்பர் பாபுவின் தோட்ட மாளிகையில் இருந்தது. அங்கே வேலைக்காரன் ஒருவன் எதையோ திருடிவிட்டான் என்பதால் விவேகானந்தர் அவனைத் திட்டி வேலையிலிருந்து தள்ளிவிட்டார். அவனுக்கு எது புகலிடம் என்று நன்ருகத் தெரிந்திருந்தது. நேரே போஸ்பரா சந்துக்கு வந்தான். அம்மாவிடம் முறையிட்டான்.

''குழந்தே, இன்னிக்கு இங்கேயே இரு. பசங்க யாராவது வருவா. நான் சொல்றேன்'' என்று அம்மா உடனே அபயம் தந்துவிட்டாள். லலிதாஸஹஸ்ரநாமத்தில் 'ஸத்ய ப்ரஸாதினி', 'க்ஷிப்ர ப்ரஸாதினி' என்று இரு நாமங்கள் உண்டு. 'வேண்டிய மாத்திரத்திலேயே அருள்பவள்; அப்போதைக்கப்போதே அருள் செய்பவள்' என்று அர்த்தம்—அம்மா அப்படித்தான் இருந்தாள்.

அன்று பிற்பகல் பிரேமானந்தர் வந்தார். அம்மா அவரிடம், ''அப்பா பாபுராம். இந்தப் பிள்ளையாண்டான் பிள்ளைகுட்டிக்காரன். தரித்திரத்தினுல் தான் திருட்டுப் புத்தி வந்திருக்கு. அதுக்காக நரேன் சத்தம் போட்டு வையலாமா? வேலையைவிட்டுத்தான் தள்ளலாமா? உலகத்துலே எத்தனையோ துன்பம். எல்லா ஜனங்களாலேயும் ஈடுகொடுத்துண்டு இருக்க முடியுமா? **உங்களைப்போல் சந்நி**

யாசிகளுக்குப் பாமர ஜனங்களின் மன நிலை தெரியற தில்லை. சரி, இப்போ இவனைத் திருப்பி வேலைக்கு எடுத்துக் கோங்கோ'' என்றாள்.

'உங்களைப்போல் சந்நியாசிகளுக்கு' என்று அம்மா சொன்னதில், எத்தனை உள்ளர்த்தம் துளும்புகிறது! அவள் கடைசி வரையில் காவி உடுத்தாமலே இருந்த கிருஹ லக்ஷ்மி அல்லவோ?

''அம்மா, நீங்க சொல்றபடி இவனை மறுபடி மடத் துக்கு அழைச்சுண்டு போனால் நரேனுக்கு ரொம்பக் கோபமும் அதிருப்தியும் உண்டாகும்'' என்று கூறி மென்று விழுங் கினார் பிரேமானந்தர்.

''நான் சொல்கிறேன், இவனை அழைச்சுண்டு போ'' என்று அம்மா அழுத்திச் சொன்னாள்.

பிரேமானந்தர் அந்த வேலைக்காரனோடு மடத்துக் காம்பவுண்டில் நுழையும் போது உள்ளேயிருந்து பார்த்தார் விவேகானந்தர். ''பாபுராமின் மதியீனத்தைப் பாருங்கள். அந்த ஆளை மறுபடி அழைச்சிண்டு வரான்'' என்று அவர் பக்கத்திலிருந்தவர்களிடம் கூறியது பிரேமானந்தர் காதிலும் விழுந்தது.

மறுபடியும் மென்று விழுங்கிக் கொண்டு, ''அம்மா சொன்னா'' என்று அவர் ஆரம்பித்தார்.

விவேகானந்தர் சிலைபோல் நின்றார்.

அம்மா சொன்ன அமிருத வாசகங்களைத் திரும்பச் சொன்னார் பிரேமானந்தர்.

ஏழையருக்கு அடியோடு குழையும் விவேகானந்தர். தமக்கும் அம்மாவின் பரிவு இல்லைதான் என்று கண்டு கொண்டார். மௌனமாக அந்த வேலைக்காரனை மீண்டும் உள்ளே சேர்த்துக் கொண்டார்.

மடத்தில் முக்கியமான பகுதிகள் கட்டி முடிந்ததும் 1898 டிஸம்பர் 9-ஆம் தேதி, விவேகானந்தர் தமது திருத் தோளில் டாகுரின் அஸ்தி கலசத்தை எடுத்துச் சென்று பேலூரில் நிரந்தரமாகப் பிரதிஷ்டை செய்தார். அம்மாவின் பாததூளியையும் பிரதிஷ்டை செய்தார். சில சாதுக்களும் அங்கேயே வாசம் தொடங்கினர். ''என் குழந்தைகளுக்குச் சொந்த இடம் கிடைச்சுது. அப்பாடா!'' என்று அம்மா ஆசுவாசப் பெருமூச்சுவிட்டாள்.

மகிழ்ச்சிகரமாகச் சிறிது காலம் உருண்டுவிட்டதே! கருமுகில்கள் வந்து சூழ்ந்தன, பயங்கரமாக இடித்துக் கொண்டு!

35. லோகமாதாவை மயக்க யோகமாயா!

தேவி பகவதியான அந்த மகாமாயை ஞானிகளின் சித்தத்தையும் வலுவிலே இழுத்து மோகத்தில் ஆழ்த்துகிருள்.

—துர்க்கா ஸப்த சதீ

யோகானந்தருக்கு அடித்த விசேஷ யோகத்தை முன்பு பார்த்தோம். அம்மாவிடம் முதன் முதலில் மந்திரோபதேசம் பெற்ற பாக்கியசாலி அவரே அன்ருே? அன்றிலிருந்து பன்னிரண்டாண்டுகள் அம்மாவின் அத்தியந்த கிங்கரராகப் பணிபுரிந்தார். அவர் ஒருவருக்கே இப்படி யோகம் அடிக்கக் கூடாதென்று போலும், விதி சதி செய்தது. விஷக் காய்ச்சலில் விழுந்தார் யோகானந்தர்.

யோகானந்தரின் நோய் முற்றியது. பிழைப்பது துர்லபம் என்ருயிற்று.

அம்மா பதறினுள். அந்தப் பதற்றத்திலும் அவளுக்கு இருந்த பரிவுப்பண்பு காரணமாக ஒரு தெளிவான யோசனைக்கு வந்தாள். யோகானந்தர் பூர்வாசிரமத்தில் திருமணம் ஆனவர். இப்போது அம்மா அவரது பூர்வாசிரம மனைவியை அங்கே அழைத்து வந்தாள். தன் பதியின் மூச்சு நீங்கும் வரையில் உடன் இருந்து பணி செய்த அம்மாவுக்குத்தானே இன்னெரு பெண் மனம் தெரிய முடியும்? ''யோகின்! எந்த மருந்து எப்போ தரணும், உனக்கு வேறே என்னல்லாம் செய்யணும்னு இந்தப் பெண்ணுக்கு எடுத்துச் சொல்லப்பா'' என்ருள். யோகானந்தரோ விரக்தியுடன் கண்களை மூடிக் கொண்டார். ''உங்கள் இஷ்டப்படி பண்ணுங்கோ. எனக்கு ஒண்ணும் சொல்லணும்னு இல்லை'' என்ருர்!

நோயாளியின் பராமரிப்போடு, நோயாளியின் மனைவியை மனம் நோகாமல் பராமரிக்கிற பொறுப்பையும் அம்மாவாக இழுத்துப் போட்டுக் கொண்டாள்!

ஒருநாள் காலை அம்மா செய்கிற பூஜைக்காகப் பூ எடுத்துச் சென்ற பணியாள், அவள் கால்களை நீட்டிக் கொண்டு திக்பிரமை பிடித்தாற்போல் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். அவளது கன்னத்தில் கண்ணீர்க் கோடுகள் உலர்ந்திருந்தன.

''பிள்ளாய்! விடியக் காலம் டாகுர் யோகினை அழைச்சிண்டு போக வந்திருக்கிறதைப் பார்த்தேன். நான் என்னடா செய் வேன்?'' என்று கூறி 'ஹோ' என்று அழுது விட்டாள்.

ஆம், டாகுர் யோகானந்தரை அழைத்துச் சென்றே விட் டார்! ''பிரம்மா, விஷ்ணு, சிவன் எல்லோருடனும் டாகுர் வந்திருக்கார் அம்மா'' என்று சொல்லிக்கொண்டே இறுதி மூச்சை விட்டார் யோகானந்தர்.

அம்மா வயிறு துடிக்கப் புரண்டழுதாள்.

அருமை யோகினைப் பற்றி அம்மா உள்ளம் மெழுகாகக் கரையப் பேசுவாள். அவள் தன்னைக் கவனித்துக் கொண்ட பாரிஷதர்களுக்குச் சிரமமே கொடுக்காதவள். இருந்தாலும், ''எனக்கு ஊழியம் செய்யறது லேசான காரியமில்லை. என் பாரம் முழுவதையும் அந்தக் குழந்தை தாங்கிண்டுது. இரண்டு பேர் என் சுமைதாங்கிகள். முதல்லே யோகின்; அப் புறம் ஷரத் (சாரதானந்தர்)'' என்பாள்.

''அவன் சாதாரண ஜீவகோடி இல்லே. ஈசுவர கோடியைச் சேர்ந்தவன். கிருஷ்ண பகவான் நம்ம ராமகிருஷ்ண பகவானு வந்தார்; இப்போ அர்ஜுனனே யோகினுக வந்தான். ஆமாம், டாகுரே அப்படிச் சொல்லியிருக்கார்'' என்று அம்மா மொழிவ துண்டு.

அம்மாவிடம் யோகானந்தருக்கு இருந்த பக்திக்கு ஓர் உதா ரணம் போதும். அவர் ஒரு நாளிலும் அவள் நிற்கும்போது அவளுக்கு நமஸ்கரித்ததில்லை. அவள் நகர்ந்த பின்பே அந்த இடத்தில் தமது தலையை உருட்டி, இதயம் பட வணங்குவார். தாம் நமஸ்காரம் செய்கிற ஒரு சில விநாடிகள் அம்மாவை நிறுத்தி வைப்பதும் அபசாரமாகும் என்று அவர் கருதியதே காரணம்!

''யோகினுக்கு எங்கிட்டே இருந்த கரிசனத்தைச் சொல்லி முடியாது. அந்தக் காலத்திலே பசங்களுக்கு லட்சுமி கடாட் சம் துளிக்கூடக் கிடையாது. அப்படியிருந்தும் யாராவது, யோகினுக்கு ஒரு சாது என்கிற முறையில் ஏதாவது பணக் காணிக்கைச் செலுத்தினுல் அதை அவன் எனக்காகவே வைச் சிருப்பான். 'அம்மா எங்கேயாவது போனு வண்டிச் சத்தம் கொடுக்க உதவும்'னு சொல்வான். ஜயராம்பாடியிலே எங் காத்திலே நடந்த ஜகதாத்ரி பூஜைக்கு வந்தப்போ, ஏகப் பட்ட பாத்திரங்களைப் போட்டுண்டு நான் தேய்க்கிறதைப் பார்த்ததும் அவனுக்குத் தாங்கலே. எங்கே போய், யார் கிட்டே பிச்சை கேட்டானே, மரப் பாத்திரங்கள் வாங்கிண்டு

வந்தான். 'பூஜைக்கும் சரி, இன்னும் முடிஞ்ச மட்டும் மற்ற காரியங்களுக்கும் சரி, மரப் பாத்திரங்களா இருந்தா நீங்க தேய்க்க வேண்டியிருக்காதுன்னுதான் வாங்கிண்டு வந்தேன்'னு சொன்னான்.'' இப்படி எல்லாம் பழைய சம்பவங்களைச் சொல்லி உருகுவாள் அம்மா.

அம்மாவின் படுக்கையில் பஞ்சு செத்து, பின்புறத் துணி கிழிந்து விட்டதைப் பார்த்து விபூதி பூஷண் கோஷ் அதற்குப் பஞ்சு அடைத்து, துணியை மாற்றுவதற்காக எடுத்துச் சென்றார். அம்மா அவரை அழைத்து, ''வேண்டாம்பா, அது இருக்கிறபடி இருக்கட்டும். அது யோகின் வாங்கித் தந்தது. அதை மாற்றவே வேண்டாம்'' என்றாள்.

ஒரு முறை யோகானந்தரின் படத்தைப் பேலூர் மடத்தில் பார்த்தபின் ராமகிருஷ்ண விக்கிரகத்தில் கூட அம்மாவின் மனம் பதியவில்லை. தன் 'சுமைதாங்கி' யின் படத்துக்கு எதிரிலேயே நீண்ட நேரம் தன்னை மறந்து நின்றாள்!

*   *   *   *

யோகானந்தர் தேக வியோகமான சிறிது காலத்தில் இன்னோர் இடியும் விழுந்தது. சாரதையின் வக்கிர சோதரர்களிடையே விலக்காக இருந்தவர் கடைக்குட்டி அபயசரணர். படிப்பிலும் துடிப்பாக இருந்து முன்னேறி, கல்கத்தாவில் வைத்தியக் கல்வி படித்து வந்தார் அபயன். இச்சமயத்தில் பிரஸன்னர், வரதன் ஆகிய அம்மாவின் இரு சகோதரர்கள் கல்கத்தாவில் புரோகிதத் தொழில் செய்து வந்தனர். அவர்களோடு அபயனும் இருந்து வந்தார். அந்நாள் வழக்கப்படி அந்த இளைஞனுக்குத் திருமணமாகி விட்டது. மனைவி ஸுரபாலா கருவுற்றிருந்தாள். இச்சமயத்தில் காலரா நோயை அனுப்பிக் காலன் அபயனை அபஹரித்துப் போய் விட்டான். ''அக்கா, ஸுரபாலா மேலே எப்பவும் ஒரு கண் வைச்சிரு'' என்று அருமைத் தம்பி மரணப் படுக்கையிலிருந்து சொல்லிப் போய் விட்டான்! ''அப்படியே செய்கிறேன்'' என்று அம்மா கண்ணீர் வழிய வாக்குத் தந்தாள்.

அதிலிருந்து சாரதாமணியின் சரிதையே ஒரு புதுத் திருப்பம் பெற்று விட்டது!

யோகானந்தரும் அபயசரணனும் மறைந்தபின் அம்மாவுக்கு வாழ்வே சப்பிட்டு விட்டது. முன்பு ராமகிருஷ்ணர் மறைந்தபோது தானும் உயிரை விட்டுவிட எண்ணியது போலவே இப்போதும் எண்ணலானாள்.

முன்பு மரண உத்தேசம் எழுந்த போது பதிதேவர் வந்து தடுத்ததுபோல், இப்போது ஒரு பத்து வயசுப் பெண் அவள்முன் தோன்றினாள். ''இவள் யார்?'' என்று அம்மாவின் வெளி மனம் யோசிக்கும்போதே, அவளது உள் மனம் எந்த யோசனையு மின்றி அந்தப் பெண்ணை இறுகப் பற்றிக் கொண்டது. இதை விளக்கி வைக்கப் பதி தேவரும் வந்தார். ''இவளையே உன் ஜீவனத்துக்கு மையமான பிடிப்பாக வைச்சுக்கோ. இவள் கிட்டே இருக்கிற ஆசையினால் உன்னை உலகத்திலே கட்டிப்போட் டுக்கோ. இன்னும் எத்தனை ஜனங்கள் உன் கிட்டே வந்து உய்வு பெறவேண்டியிருக்கு? நீ இப்போ புறப்படறதாவது?'' என்று கூறி மறைந்தார். அந்தச் சிறுமியும் மறைந்து விட்டாள்.

'யார் அந்தப் பெண்? தன் மனத்தை அப்படிச் சுண்டி இழுத்துக் கொண்டாளே! அந்த இழுப்பில் தெய்விகம் இழை யோடவில்லை. அதிலே ஓர் அஞ்ஞான பாசமே இருந்தது! அப் படி ஒரு பாசத்தை வீசி மறைந்த பாலகி யார்? அவளிடம் பாசத்தை வளர்த்துக் கொண்டாலே அதை முன்னிட்டு உல கத்தில் தனக்குப் பிடிப்பு ஏற்படும் என்று கூறி டாகுரும் இதற்கு அநுமதி தந்து போனாரே!' இதை எண்ணி அம்மா அடிக்கடி வியந்த வண்ணம் இருந்தாள்.

கருவுற்றிருந்த ஸுரபாலா பிறந்தகத்தில் இருந்தாள். அபயனுக்கு அபயவாக்குத் தந்ததற்கேற்ப அவளைத் தன் னுடனேயே வைத்துக் கொள்ள எண்ணினாள் அம்மா. பாலிய விதவையைக் கல்கத்தா நகருக்கு அழைக்க விரும்பாததால் ஜயராம்பாடி கிராமத்துக்குச் சென்றாள். ஸுரபாலாவைத் தன் பொறுப்பில் ஏற்றுக்கொண்டாள்!

ஸுரபாலாவைப் போன்ற துரதிருஷ்டசாலியைப் பார்க்க முடியாது. அவள் குழந்தையாக இருந்த போதே அன்னையை இழந்தாள். பிறகு தாய் வழிப் பாட்டியின் வீட்டில் வளர்ந் தாள். பாட்டியும் பெரியம்மாவும் தாயில்லாக் குழந்தையான ஸுரபாலாவைச் செல்லம் கொடுத்து வளர்த்தார்கள். இதனால் அவள் முரட்டுப் பிடிவாதக்காரியாக உருவானாள். சூல் கொண் டிருந்ததால் இயல்பாக உண்டாகும் சிரமங்கள் அவளை மேலும் புத்திக் கோணலாக்கி யிருந்தன. இச்சமயத்தில் கண்ணிறைந்த கணவன் மண்ணிலே மட்கி விட்டான். போதாக் குறைக்கு இதை அடுத்தே அவளது அருமைப் பாட்டியும் கண்ணை மூடி விட்டாள்.

ஸுரபாலா ஜயராம்பாடிக்கு வந்த சிறிது காலத்திலேயே அந்தத் துர்ப்பாக்கியவதியை இன்னொரு வாதனை துரத்தி

வந்தது. அவளது பெரியம்மாவும் காலமாகி விட்டாள். அடுத்தடுத்து மூன்று மின் விளக்குகள் ஃப்யூஸ் போனுல்கூட எவருக்கும் துணுக்கம் ஏற்படும். கணவன், பாட்டி, பெரியம்மை ஆகிய மூவரையும் அடுத்தடுத்துப் பறிகொடுத்த ஸுரபாலா ஏற்கனவே ஒருமாதிரிப் பேர்வழியாக இருந்தவள், அசல் பைத்தியமாகிவிட்டாள். இந்தப் பைத்தியத்தைப் பேணுகிற பொறுப்பை இழுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள் அம்மா. ஸுரபாலாவின் தகப்பஞர் இப்போதும் உயிருடனேயே இருந்தார். அன்பின் ஈரம் அறியா வறண்ட மனம் அவருடையது. ஸுரபாலாவின் சொந்தப் பிதாவான அவர் எடுத்துக் கொள்ளாத பொறுப்புச் சுமையை நாத்தியாகிய சாரதை ஏற்றுக் கொண்டாள்.

புத்தி தடம் புரண்டவளின் புத்திரியாக வந்து பிறந்தாள் ராதாராணி, 1900-ஆம் ஆண்டு ஜனவரி இருபத்தாறும் தேதி. நமது குடியரசு பிறந்ததற்குச் சரியாக ஐம்பதாண்டுகளுக்கு முன்பு அம்மாவின் மோட்ச சாம்ராஜ்யக் குடியரசு பறி போயிற்று! ஆம், அம்மாவின் வாழ்க்கையில் பரமஹம்ஸ ராம கிருஷ்ணருக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ, அவ்வளவு முக்கியத்துவம் இந்த ராதாராணிக்கு உண்டு! அது பரம ஞானமான முக்கியத்துவம்; இது பரம அஞ்ஞான முக்கியத்துவம்! ஆனுல் அம்மாவின் பரம ஞானம் உலகுக்குத் தொடர்ந்து கிட்ட இந்த அஞ்ஞான பந்தம்தான் காரணம். ராது என்று மற்றவர்களால் செல்லமாகவும், ராதி என்று அம்மாவினுல் அதி செல்லமாகவும் அழைக்கப்பட்ட ராதாராணி பிறந்த மாத்திரத்திலேயே அம்மாவுக்கு அவளிடம் பொங்கி எழுந்தது பாசம்.

அன்றெரு நாள் அவள் கண்ட பத்து வயதுப் பாலகியிடம் பெருகிய அதே பாசம்! இந்தப் பாசமே அம்மாவை உலகத்துடன் கட்டிப் போட்டது. யோகானந்தரின் மறைவால் வருந்தித் தேகவியோகமாக நினைத்தவளைப் பகவானது 'யோகமாயை' என்னும் பாசம் தடுத்து நிறுத்திவிட்டது.

ராதுவின் சொந்தத் தாய் சித்த ஸ்வாதீனம் இழந்திருக்க, குஸுமகுமாரி என்கிற காசி நகரப் பெண் செவிலித் தாய் போல் அவளைப் பார்த்துக் கொள்ள, சத்தியத் தாயான சாரதையே அவளைத் தன் குழந்தைகளிடை முதற் குழந்தையாக்கிக் கொண்டாள்!

ஒருநாள் துணிகளைக் கிழித்துப் புஜத்தின் கீழ் இடுக்கிக் கொண்டு, ஏதோ பெரிய காரியம் சாதிப்பது போல வாச

லுக்கு ஓடினுள் ஸுரபாலா. 'வீல் வீல்' என்று கத்திக் கொண்டு ராதுவும் அவளுக்குப் பின்னுல் தன் மெல்லிய உடல் முரட்டுத் தரையில் உராய இழுபட்டுக்கொண்டே போயிற்று. ஸுரபாலாவிடமிருந்து தாய்மை அடியோடு விடைபெற்று விட்டது. அவள் ராதுவை லட்சியம் செய்யாமல் போய்க் கொண்டிருந்தாள். குழந்தை வராந்தா ஒட்டிலிருந்து கிழே விழுகிற நிலே! அம்மாவுடைய இதயத்தின் உட்கருவுள் பரிவும் பரிதாபமும் அம்புகளாகப் புகுந்து வதைத்தன.

''அப்படியானுல், என்னுடைய விசித்திரப் பாசத்தை வளர்த்துக் கொண்டு இந்தக் குழந்தையை நான்தான் எடுத்து வளர்க்க வேண்டுமா? தகப்பனே இழந்ததோடு தாயையும் உயிருடனேயே இழந்த குழந்தைக்கு யார் கதி? அம்பிகே, உன் திருவுள்ளம் இதுதானு? டாகுர், என்னே உலகத்திலேயேதான் கட்டிப் போடுகிறீர்களா?'' என்று குழம்பியவாறே அம்மா அந்தக் குழந்தை பின் ஓடி அதை எடுத்துக்கொண்டாள். ஏனே அந்த ஸ்பரிசமே அவளே இனம் புரியாத பந்தத்தில் கட்டியது. ''இது எனக்குத் தகுமா?'' என்று தடுமாறினுள்.

அவள் எதிரே பிரஸன்னமானுர் ராமகிருஷ்ணர். ''அதே பெண்தான் இது: இவளேயே உன் ஜீவனத்துக்குப் பிடிப்பா வைச்சுக்கோ. இதுதான் யோகமாயை'' என்று கூறி அந்தர்தானமானுர்.

மனிதர்களுக்கு யோக **ஞானம்** மட்டுமே உண்டு. பரம்பொருளுக்கோ யோக **மாயை** என்றும் ஒன்று உண்டு. யோகம் என்ருல் 'சேர்ந்திருப்பது.' மனிதர்கள் பரமனேடு சேர்ந்திருப்பது யோகம். யோகத்தில் நிலேத்துவிட்டால் பிறகு 'சேருவது' என்கிற இருமை போய் ஒன்றே நிற்கும். ஒன்றேயான பரம்பொருளின் யோகம் என்ன? அது வேறு எதோடு சேர்ந்திருக்க முடியும்? தன் ஒருமையைத் தானே மறைத்துக் கொண்டு பலவாகக் காட்டுகிற மாயையுடன் அது சேர்கிறது. இந்த யோக மாயைதான் நமது லோக மாதாவை இப்போது மயக்குகிறது. எதற்காக? அவளே உலகோடு சேர்த்து வைக்கத்தான். மாயையான பராசக்தி ஞானிகளேயும் மோகத்தில் தள்ளுவாள் என்கிறது 'துர்க்கா ஸப்த சதீ'. அப்படித் தள்ளுவது கொடூரமல்லவா என்று தோன்றலாம். அது கொடூரம் அல்ல, பரம கருணேயே என்று சாரதையின் சரிதை எடுத்தியம்புகிறது. ஞானிகளும் யோகிகளும் உலகத்தை வெறும் மாயையாகவே உணருகிற நிலேயில், இதற்கு நல் வழி காட்டும் பணியிலும் பிடிப்பு இழந்து மூலத்தில் ஒன்றிவிட எண்ணுவார்கள். அச்சமயங்களில் உலக உத்தாரணத்துக்காகவே அவர்களேயும் ஏதோ ஒரு மாயையில்

ஈடுபடுத்தி உலகில் வாழச் செய்து, அவர்கள் மூலம் உலகை வாழவைக்கிருள் பராசக்தி.

ராமகிருஷ்ணர் புவிக்குத் திரும்பி வராமல் நிர்விகல்ப சமாதியில் கரைந்து விடாமலிருக்கவே அவருக்குள் சில அற்ப மயக்குகளைத் தூவி இருந்தாள் தேவி. புகைக் குழாய் பிடிக்க வேண்டும், பொன்னுங்கண்ணிக் கீரை உண்ண வேண்டும் என்பது போன்ற சிறிய ஆசைகள் அவரைப் புவிக்குப் பிடித்திழுத்து வந்தன. அம்மாவுக்குச் சிறிய பல ஆசைகளை வைக்காமல் ஒரே ஒரு பெரிய பாசமாக ராதாராணியை அனுப்பிவைத்திருந்தாள் அகிலாண்ட நாயகி. ஆகாய விமானத்தின் வேகத்தை மட்டுப் படுத்தப் பல சிறிய கருவிகள் அதற்குள்ளேயே இருப்பதுபோல் ராமகிருஷ்ணருக்குள்ளேயே சிறிய ஆசைகள் இருந்தன. பெருந் தேரை நிறுத்த வெளியிலிருந்து பெரிதாக ஒரே ஒரு முட்டுக்கட்டை போடுவது போல், அம்மாவின் உள்ளம் பரம் பொருளுக்குத் தாவாமல் தடுக்கும் ஒரே முட்டுக் கட்டையாக வந்தாள் ராது. சீதாதேவியின் சரிதத்தில் மாயமானுக்கு உள்ள முக்கியத்துவம், சாரதையின் வாழ்வில் யோகமாயா மருமாளுக்கு உண்டு.

''ராதி, ராதி'' என்று அல்லும் பகலும் அவளே நினைவாக அம்மா வாழத் தொடங்கி விட்டாள்.

''உங்களுக்கு இத்தனை பற்று இருப்பது நல்லதா தாயே?'' என்று அவளிடமே பலர் கேட்டதுண்டு.

''என்ன செய்யலாம்? நாங்க பொம்மனாட்டிகள்: எங்களுக்குப் பாசமே சுபாவமாயிருக்கு'' என்று கூறி அம்மா மழுப்பி விடுவாள்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில், ''ரொம்பப் பேர் சொல்கிரு, நான் ராதுகிட்ட மகத்தான பாசம் வைச்சிருக்கேன்னு. ஆனல் அந்தப் பாசம் இல்லேன்னு இந்தச் சரீரம் பூலோகத்திலே தங்கியிருக்காது. அவரிட்ட காரியத்தை நான் செய்யணும் என்கிறதுக்காகவே சதா ராதுவைப் பற்றிய சிந்தனையிலே என்னை ஆழ்த்தி விட்டிருக்கார்'' என்ருள். தொடர்ந்து உறுதியோடு கூறினுள்:

''**என் மனசு எப்போ ராதியை விட்டு விலகுமோ, அப்போ இந்தச் சரீரமும் போயிடும்.** நான் உலகத்திலே தொடர்ந்து இருக்கணும்னே இவளைப் பற்றிக் கவலைப்படுகிற மாயையை நானுக அங்கீகாரம் பண்ணிண்டிருக்கேன்.''

* * *

இரண்டுங் கெட்டானகை முரண்டு பிடிக்கும் ராது, பைத்திய ஸுரபாலா, பணத்துக்குப் பறக்கும் சகோதரர்கள் இவர்களிடையே சாரதாமணியின் ஜயராம்பாடி வாழ்வு ஓடிக்கொண்டிருந்தது.

தம்பி அபயன் காலமாகி விட்டதால் அவனது மனைவியையும், மகளையும் காக்கும் பொறுப்பு மற்றச் சகோதரருக்கு இருந்தும், அவர்களது துர்க்குணத்தால் அம்மாவே இந்த அநாதைகளைப் பராமரித்தாள். அம்மாவுக்கு அடியார் சிலர் தாமாகக் காணிக்கை அளித்ததால் இவ்விருவருக்கும் அவள் ஒரு குறைவுமின்றி அன்ன வஸ்திராதிகள் அளித்து வந்தாள். அதோடு அபலை ராதுவிடம் அவளுக்கு இருந்த வாஞ்சை காரணமாக, அவள் விரும்பியதை எல்லாம் வாங்கித் தந்தாள். அம்மாவின் மற்றச் சகோதரர்கள் இதை மனிதாபிமானக் கண்ணுடன் பார்க்கவில்லை. அந்தத் தம்பி பெண்டாட்டிக்கும் பெண்ணுக்கும் மட்டும் வாரி விடுகிறளே, நாமும் வலுக்கட்டாயமாக அவளிடமிருந்து தண்டிக்கொள்ள வேண்டும் என எண்ணினர். அவளை ஓயாமல் தொந்தரவு செய்தனர். அவர்களது குடும்பங்களுக்கும் அம்மா எவ்வளவோ திரவிய சகாயம் செய்தாள். இருந்தாலும் அவர்களுக்கு அது போதவில்லை. தாங்கள் எந்தப் பணப் பொறுப்பும் மேற்கொள்ளாமலே தங்கள் குடும்பங்களையும் சாரதையே ஸுரபாலாவையும் ராதுவையும் பேணுவது போல் முற்றிலும் பராமரிக்க வேண்டும் என்று எண்ணினர் போலும்! சாரதா தேவியைத் தவிர வேறு எவராலும் சகிக்கவொண்ணுத அளவுக்குச் சள்ளை செய்தனர்.

ஒருநாள் அம்மாவுக்கு வந்திருந்த கடிதங்களைப் படித்துக் காட்டிய சீடர் ஒருவர், ''ஏம்மா, உங்களோட சிரமத்திலே சிலதை நீக்கிக்க முடியாதுதான். சித்த ஸ்வாதீனமில்லாத ஸுரபாலாதேவியோடும், இரண்டுங் கெட்டான் ராதுவோடும் நீங்க தொல்லைப்பட்டுத்தான் தீரணும். ஆனல் உங்கள் சகோதரர்கள் செய்கிற ஹிம்சைக்கு நிவிருத்தி உண்டாக்கிக்கலாமே! அவாள் பணம், பணம்னுதானே பறக்கிறு? நீங்க ஒரு சொல் சொன்னல் போறும், அவாளோட பண ஆசையை (ஸ்ரீ ராமகிருஷ்ண) மடத்துக்காரா பூர்த்தி பண்ணிப்பிடுவா. அல்லது பெரிய தனிகர்களான பக்தர்களிடம் நீங்க ஜாடைமாடையாச் சொன்னலும் போறும். அவா உங்க. சகோதரர்கள் தேவையைத் தீர்த்துடுவா. அதெல்லாம் கூட வேண்டாம். நீங்க டாகுர்

கிட்டே பிரார்த்தனை பண்ணிவிட்டாலே இவாளுக்கு வேண்டிய அளவுக்கு லக்ஷ்மி தாண்டவம் ஆடுவாளே'' என்றார்.

அம்மா, 'அட அசட்டுப் பிள்ளையே' என்பது போல் குமுறிச் சிரித்தாள். ''அப்பாடா, என் திவ்வியமான தம்பிகளோட லட்சணம் உனக்குத் தெரியாததாலே இப்படிச் சொல்கிறே! இவாளுக்கு எத்தனைதான் கொடுத்தாலும், திருப்திப்பட்டுப் 'போறும்'னு சொல்வாளா, என்ன? அவா கேட்கறத்துக்கு அதிகமாகவே தந்தாலும் சந்துஷ்டி அடைய மாட்டா, முகத்தைத் தூக்கித்தான் வைச்சிண்டு இருப்பா. ஸம்ஸாரிகளின் சுபாவம் உனக்குத் தெரியலையடா, மகனே! முதல்லே கேளே (காளிகுமார்) ஒருத்தன்தான் பொருளாசை பிடிச்சு அலைஞ்சிண்டிருந்தான். அப்புறம் அவனைப் பார்த்து பிரஸன்னவுக்கும் பேராசை தொத்திண்டுது. அவனும் நச்சரிக்க ஆரம்பிச்சுட்டான், பாரேன்! பரது (வரதப் பிரஸாத்) மட்டும் அக்காளை உபத்திரவிக்கக் கூடாதுன்னு கொஞ்சம் தெரிஞ்சிண்டிருக்கான்'' என்றாள் அம்மா.

அவளுக்குச் சகோதரர், சீடர் என்கிற பேதங்கள் கடுகளவும் தெரியாது. அதனால்தான் உடன்பிறந்தோரைப் பற்றி அடியாரிடம் இப்படி ஒளிவில்லாமல் கூறினாள்.

* * * *

ஸுரபாலா செய்த இன்னல், ராது செய்த ஹிம்சை, சோதரர் செய்த உபத்திரவம் - இவற்றிடை அம்மாவின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. இதோடு விட்டதா?

இது போதாதென்று உலகத் துயரங்கள் வேறு ஜயராம்பாடியைத் தேடி வந்தன. 'ஹோலி மத'ராகப் பிரசித்திபெற்றுவிட்ட சாரதைக்குத் தங்கள் குறைகளை முறையிட்டுப் பலர் கடிதம் எழுதலானார்கள். அம்மா அதிமானுஷ்ய நிலையில் இருந்து கொண்டு அந்த முறையீடுகளுக்கு நிவாரணங்கள் எழுதச் செய்வாள். நேரிலே வருகிற அடியாரின் துயரத்தோடு கடிதம் எழுதும் அடியவர்களின் துயரங்களையும் தானே ஏற்றாள். இத்தனை துயருக்கிடையில் இன்முகத்துடன் வாழ்ந்து வந்தாள் தேவி. தன் சொந்த சிரமம் காரணமாக அவள் ஒருபோதும் எரிச்சல் கொண்டு இன்னொருவர் மனத்தைப் புண்படுத்தியதே கிடையாது.

சகோதரர்கள் தன்னிடம் ஓயாமல் பணம் பிடுங்கியும் திருப்திப்படாமல் நச்சரிப்பது குறித்து ஒரு நாள் அம்மா சீடப் பிள்ளையிடம் வேதனைச் சிரிப்புடன் சொன்னாள்: ''வேடிக்கைதான், என் உடன் பிறப்புக்கள்னு பேரு, தொண்டைத்

தண்ணி காயற மட்டும் 'பணம் பணம்'னு அடிச்சுக்கறதுகளே ஒழியத் தப்பித் தவறிக் கூட 'பக்தி வரணும், ஞானம் வரணும்'னு கேட்கிறதில்லே.''

தமக்கையைக் கவனித்துக் கொள்வதில், அதாவது, கவனித்துக் கொள்ளாமலிருப்பதில் அவர்களுக்குள் போட்டி வேறு! ஒருவர் அவளிடம் சிறிது அதிகமாகக் கரிசனம் காட்டினால், மற்றவர் அவரிடம் 'அக்காளைக் காக்காய் பிடித்தாயோ?' என்று சண்டை பிடிப்பார்! ஒரு முறை அம்மா கல்கத்தாவிலிருந்து ஜயராம்பாடிக்கு மாலை மங்கும் சமயத்தில் வந்த போது, முன் கூட்டியே அறிவித்திருந்தும், ஆமோதர் ஆற்றங் கரைக்குச் சோதரர் எவரும் வரவில்லை. வீட்டுக்கு வந்த அம்மா பிரஸன்ன குமாரிடம், ''என் பசங்கள் கூட வந்ததாலே நல்லபடியா ஆச்சு! நீயே வராவிட்டாலும் வேறு யாரையாவது அனுப்பிவச்சிருக்கக் கூடாதா?'' என்று கேட்டாள்.

''எனக்கு மட்டும் மனசிலே இல்லையா அக்கா! கேளே எதையாவது சொல்லுவான்னுதான் பயம். அதை எதிர்த்துண்டு காரியம் செய்யற பலத்தை பகவான் எனக்குக் கொடுக்கலே. உன் மகிமையும், உன் பசங்களான இந்தச் சாதுக்களின் பெருமையும் எனக்குத் தெரியாமல் போகலே'' என்று கூறிய பிரஸன்னரின் உள்ளத்தில் தன்னையுமறியாமல் தழுதழுப்பு உண்டாயிற்று. ''அக்கா! ஜன்ம ஜன்மத்துக்கும் உன் தம்பியா நான் பிறக்கணும். ஆசீர்வாதம் பண்ணு'' என்றார்.

அம்மா கூசினாள்; தோளைக் குலுக்கிக் கொண்டாள். ''மறுபடி இந்த அகத்திலேயா? போறும், போறும்! 'இந்தக் கௌசல்யை இன்னொரு ஜன்மா எடுக்காம இருக்கணுமே! இவள் தபஸ் பண்ணி நான் மறுபடி இவள் வயிற்றிலே வந்து பிறக்காமல் இருக்கணுமே' என்று ஸ்ரீ ராமசந்திரனே அலுத்துண்டாராம்'.' என்றாள்.

''அக்கா, எத்தனையோ பக்தாளுக்கு நீ சொப்பனத்திலே போயே மந்திரோபதேசம் பண்ணி, 'நான் காப்பாத்தறேன்'னு வாக்குக் கொடுக்கறே. நீ மடியிலே போட்டுண்டு வளர்த்த நாங்க மட்டும் இப்படி அஞ்ஞான பிண்டமாவேதான் இருக்கப் போறோமா?''

பிரஸன்னர் இப்படி இளகிப் பேசிய போது அம்மா பட்டுக் கொள்ளாமலே சொன்னாள்: ''பகவத் சங்கற்பப்படிதான் நடக்கும். கிருஷ்ணனோட விளையாடினவாளுக்கெல்லாம் அவன் யாருன்னு தெரிஞ்சுதா என்ன?''

''அக்கா, நாம ஒரு தாய் வயிற்றிலேயிருந்து வந்தவா. எங்க கதிதான் என்ன?''

சடேரென்று சாரதையைக் கருணைப் புயல் வந்து புரட்டியது: ''ஆமான்டா கண்ணு! நாம ஒரே வயிற்றிலிருந்து வந்தோம். அதுவே போறுமே! உனக்கு ஏன் இனியும் பயம்?''

''நானிருக்கப் பயம் ஏன்?'' என்கிறாள். இவள் அந்தக் குடும்பத்தில் பிறந்ததாலேயே அவர்கள் அனைவருக்கும் கதி மோக்ஷம் கிடைத்திருக்கும். தொல்லைக்கிடையிலும் தெளிந்து வாழ முடியும் என்று காட்டவே வந்த அவதாரமன்றோ அம்மா? எனவே இதற்கு அநுசரணையாக, தொல்லை கொடுக்கும் பாத்திரங்களாக அவளது உறவினர் உருவாயினர். பராசக்தியின் நாடகம் அது! அவள் கொடுத்த பங்கை நடித்த சோதரருக்கும் முடிவில் மீட்சியே கிட்டியிருக்கும்!

* * * *

சியாமசுந்தரிக்கு வயோதிகம். அவளது மாற்றுப் பெண்கள் ஏனோதானோதான். அம்மாவே அந்தப் பெரிய குடும்பத்துக்காக ஓயாமல் உழைத்தாள். நெல் விளைந்து வந்தது. அதையெல்லாம் கோட்டை அடுப்படியில் நாள் கணக்காக அமர்ந்து புழுக்கினாள். உரலில் குற்றிப் புடைத்தாள். இது தவிரச் சமையல், நீர் சேந்துவது, பாத்திரம் தேய்ப்பது போன்ற 'ஜாடுமாரி'கள் வேறு.

வேலை மிகுதியினால் அம்மாவின் கால்கள் தூண் தூணாக வீங்கியிருந்தன. சிறிது சிரம பரிகாரமாக அம்மா காமார்புகுரில் இருந்து வருவதற்காகச் சென்றாள். அவள் சிரம பரிகாரம் கொள்வது ஆண்டவனுக்கு அடுக்கவில்லை. காலராக் கண்டு ஜீவனொடுங்கி விழுந்தாள். முன்பு நமக்குப் பரிசயமான ஸாகரம்மாதான் வந்து பணிவிடை செய்தாள். ''அன்பே, அசிங்கம் பார்க்காம எல்லாத்தையும் சுத்தி பண்ணறியே! எனக்குக் கூச்சமா யிருக்கு'' என்றாள் அம்மா, நெகிழ்ந்து.

''என்னும்மா? ஒனக்கு செய்யிறதுக்கா அசிங்கம் பார்ப்பாங்க? நீ ஸும்மா இரு'' என்றாள் ஸாகரம்மா.

அம்மா காலராக் கண்டு கிடக்கிறாள் என்றறிந்து பேலூர் மடத்திலிருந்து இரு பசங்கள் வந்தனர். ஆனால் அம்மா அந்த ஸ்திதியில் கல்கத்தாவுக்குச் சென்று பக்தர்களை உபத்திரவிக்க விரும்பாமல் ஜயராம்பாடிக்குத் திரும்பினாள். போகுமுன் ஸாகரம்மாவிடம், ''உனக்கு அன்ன வஸ்திரத்துக்கு ஒரு நாளும் குறைவு வராது'' என்று மனமார வாழ்த்தினாள்.

பிற்காலத்தில் ஸாகரம்மா சொன்னாள்: ''அம்மா வாய் முகூர்த்தம், அதுக்கப்பறம் ஸோறு, துணி எனக்குச் செழுத்தி

யாக் கிடைச்சுக்கிட்டே இருக்குது. அம்மா பூஸை பண்ணு வாங்களே, அந்த டாகுருதான் எனக்காக எல்லாம் ஸெஞ்சுட் டிருக்காரு.''

ஜயராம்பாடிக்குத் திரும்பிய சாரதைக்கு இன்னொரு பொறுப்பும் வந்து சேர்ந்தது. எங்கேயோ சமையல் வேலை செய்து வந்த ஒன்றிக் கட்டையான அவளது சித்தப்பா நீலமாதவர், தள்ளாமை வந்ததால் வேலையை விட்டு, நம் அம்மாவிடம் வந்து விட்டார். அவருக்கும் மனம் கோணாமல் பார்த்துப் பார்த்துப் பணி செய்தாள் அம்மா. அம்மாவுக்கு அடியார் தரும் அபூர்வ மான கனிவர்க்கம், பட்சணம் முதலியவற்றை அவள் சித் தப்பாவுக்கே தந்து விடுவாள். இதில் சிலருக்குக் குறையும் உண்டு. ''வயசானவர், அப்பாவுக்குச் சமானமானவர். அவருக்கப்புறம்தான் நான்'' என்று நவில்வாள் அம்மா.

ராதுவையும் ஸுரபாலாவையும் உத்தேசித்து ஜயராம்பாடி யிலேயே தங்கி விட்ட அம்மாவுக்குக் கல்கத்தா பக்தர்கள் அன் புத் தொல்லை இழைத்தனர். அம்மாவுக்கும், அந்தக் குழந்தை கள் அனைவரும் தன் வீடு தேடி வந்தால்தான் அநுக்கிரகம் செய்வேன் என்று விட்டேற்றியாக இருப்பது நியாயமாகத் தோன்றவில்லை. ராது ஒருத்திக்காக மற்ற அத்தனை குழந் தைகளையும் தியாகம் செய்ய முடியுமா? பக்தர்கள், ''கல்கத்தா வுக்கு உங்கள் தம்பி மனைவி, மருமகள், சிற்றப்பா எல்லோரை யும் அழைத்து வரலாமே! எல்லோருக்கும் வசதி செய்து தரு கிறோம். அவ்வப்போது இப்படி எங்களிடை வந்து அநுக்கிர கிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டனர். அவ்வாறே அம்மா இந்தப் பரிவாரங்களுடன் கல்கத்தாவுக்குச் சென்று போஸ்பரா சந்தில் வசிக்கலானாள்.

கல்கத்தாவில் அம்மாவைப் பார்க்க மரியாதைப் பட்டவர் கள் பலர் வந்த போது ஸுரபாலா செய்த அநாகரிகத் தொல்லையைச் சொல்லி முடியாது.

ஸுரபாலா நல்ல இருட்டிலேயே விழித்துக் கொண்டு கொட்டம் அடிக்கத் தொடங்கி விடுவாள். ஓர் இரவு அவள் சமையலறைக்குப் போகும்போது பெரிதாக ஊளையிட்டு விட்டு அப்படியே மயங்கி விழுந்தாள். மற்றவர்கள் விழித்துக் கொண்டு ஓடினர். வெளி ஜன்னலை உடைத்துக் கொண்டு திருடன் உள்ளே வந்திருக்க வேண்டும் என்றும், அவனைக் கண்டு தான் ஸுரபாலா பயந்து மூர்ச்சித்திருக்க வேண்டுமென்றும் தெரிந்தது.

இதன் பின் ஸுரபாலாவின் ஹிம்சை அதிகமாயிற்று. ஓயா மல், ''திருடன் திருடன்'' என்று காபராப் பட்டுக்கொண்டும்,

படுத்திக்கொண்டும் இருந்தாள். "குஸும்குமாரிதான் சவரணை யாகப் பார்த்துக் கொண்டாளே! பிச்சி மாமியையும் (ஸூர பாலாவுக்கு அம்மாவின் பக்தர் கோஷ்டியில் 'பிச்சி மாமி' என நாமகரணம் இடப்பட்டது.) ராதியையும் ஜயராம்பாடிக்கு அனுப்பி, குஸும்குமாரியை அவாளுக்குப் பணிவிடை பண்ண அமர்த்திவிடலாம். அவளுடைய சம்பளத்துக்கு நாங்க ஏற் பாடு பண்ணறோம்" என்றாள் யோகின்மா. மற்றவர்களும் அதை ஆமோதித்தனர்.

ராதுவைப் பிரிந்தா? ஏனோ அம்மாவால் 'சரி' என்று சொல்ல முடியவில்லை.

தியானத்தில் அமர்ந்தாள் அம்மா. நிஷ்டை கலைந்த பின் "இல்லை. என்னைத் தவிர யாரும் இவாளைப் பார்த்துக்க முடியாது. நானேதான் இந்தப் பொறுப்பை வகிக்கணும்னு தீர்மானமாத் தெரிஞ்சுண்டேன்" என்றாள்.

இதன் பின் ஸூரபாலாவின் வெறியாட்டம் வலுத்தது. அம்மாவும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். கடைசியில் ஸூரபாலாவின் வெறியாட்டம் அதிகரித்ததால் அவளோடு ஜயராம்பாடிக்குத் திரும்பினாள் அம்மா.

அடுத்த இரண்டாண்டுகள் அம்மா நரகவாசமே செய் தாள் எனலாம். இரண்டாவது மூன்றாவது வயதில் எல்லாக் குழந்தைகளுமே இனம் புரியாமல் படுத்தும் அல்லவா? பொது வாக ராது சமர்த்துப் பெண் எனினும் ஒவ்வொரு சமயம் அவள் மகாஅடங்காப் பிடாரியாக ஆகிவிடுவாள். அவளையும் ஸூரபாலாவையும் சமாளிப்பதற்கு அம்மா பட்டபாடு சொல்லத் தரமன்று.

பணத்தாசையே பைத்தியம் போலும்! பணப்பைத்தி யம் என்று சொல்கிறோம் அல்லவா? ஸூரபாலா இதை நிதரிசன மாக்கினாள். மூளை தடம் புரண்டு விட்ட அவளுக்குப் பணத்தி டம் மட்டும் இழை புரளாத பற்றுதல் இருந்தது. அம்மா விடம் அடியார் செலுத்தும் காணிக்கைக்குத் தானும் ராதுவும் மட்டுமே பாத்தியதைப் பட்டவர்கள் என்பது ஸூரபாலா வின் கட்சி. சாரதாமணியை அவளுடைய தாயாரோ, தம்பி களோ, அவர்கள் மனைவி மக்களோ நெருங்க விட மாட் டாள் ஸூரபாலா. "அவாளுக்கு ஏதாவது கொடுத்தேளோ தெரியும் சேதி!" என்று நாத்தியிடம் உறுமுவாள். யாராவது பக்தர்கள் வீட்டுக்கு வந்தால், "எனக்கும் என் பெண்ணுக் கும் சேர வேண்டியதை யெல்லாம் கொட்டிண்டு போகப் பி ; ள் வந்திருக்காளே!" என்று பிரலாபிப்பாள். அம்மா

கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொண்டு வாயடைத்து நிற்பாள். இந்தச் சூழலில் அம்மாவைத் தாங்களும் சிரமப்படுத்த வேண்டாம் என்று கருதிப் பக்த கோடிகள் ஒதுங்கியே இருந்தனர்.

ஸுரபாலா தன் பெண்ணிடம், "உன் அத்தை ராட்சஸி. அவ கிட்டே போகாதே. உன் பெரியப்பா பசங்களுக்குத்தான் அவ வாரி வழங்குவா" என்றெல்லாம் உபதேசிப்பாள். ஆனால் ராதுவோ அத்தையை, "அம்மா" என்றழைத்து அவளிடமே ஒட்டிக் கொண்டது. ஸுரபாலா கைம்பெண் என்பதால் கூந்தலைக் களைந்திருந்தாள். அவளை, "வழுக்கைத் தலை அம்மா" என்று கூப்பிடுவாள் ராது. அதைக் கேட்கச் சாரதையின் குடல் மண்டி எழும்.

அம்மா அக்ஞாத வாசம் செய்த இந்தக் காலத்தில்தான் பாரத மாதாவின் தவப்புதல்வரும், நம் அம்மாவின் அருமை மகனுமான ஸ்வாமி விவேகானந்தர், நாற்பது யுகங்களில் சாதிக்க வொண்ணாத ஆத்ம மறுமலர்ச்சியை நாற்பதே ஆண்டுகளுக்குள் முடித்து விட்டு, "என் பணி தீர்ந்தது" என்று பராசக்தியிடம் போய்விட்டார். டாகுரின் பணி தீர்ந்தது; நரேன் பணி தீர்ந்தது; அவர்கள் விடுதலை கண்டனர்! அம்மாவின் பணிதான் தீருவதாக இல்லை. அவர்களுக்கில்லாத அத்தனை தொல்லைகளையும் அந்த மெல்லியலே தாங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்பது திவ்விய சங்கற்பமாயிற்று. பதியும் பிள்ளையும் மாயையைக் கடந்து போயாச்சு. மனமிடிந்த சாரதையோ மாயையே உருவான ராதுவுடன் மல்லுக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

36. 'அவரது' அடிமை; அம்சம்; 'அவரே'யும்!

ஒவ்வொருவனும் தன்னுடைய மதத்தையே பின்பற்ற வேண்டும். கிறிஸ்துவர் கிறிஸ்து மார்க்கத்தையும், மகம் மதியர் மகம்மதிய மார்க்கத்தையும் அநுசரிக்க வேண்டும். ஹிந்துக்களுக்கோ ரிஷிகள் ஏற்படுத்திய புராதன மார்க்கம் தான் உத்தமமானது.

—பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

அம்மாவால் குழந்தைகளை எத்தனை காலம்தான் விட்டுப் பிரிந்திருக்க முடியும்? குழந்தைகளும் எத்தனை காலம் அம்மாவைக் காணுதிருக்க முடியும்? பக்தர் மனம் அம்மாவிடம் பள்ளத்து நீராகப் பாய, அம்மாவின் அருளும் அவர்களிடம் வெள்ளமாகப் பாய, 1904-ஆம் ஆண்டில் மீண்டும் கல்கத்தா வுக்கு வந்தாள் அம்மா. பக் பஜார் சாலையில் அம்மாவுக்கு ஜாகை அமர்த்தப்பட்டது. யோகானந்தருக்குப் பிறகு அம்மாவால் 'என் சுமைதாங்கி' என்று போற்றப்பட்ட சாரதானந்தர் அவளுடனேயே துணையாகத் தங்கியிருந்தார். சாரதானந்தர் உண்மையிலேயே நம் சாரதைக்கு ஆனந்தராக வும், அவளுக்குத் தொண்டு புரிவதில் ஆனந்திப்பவராகவும் இருந்தார். அம்மாவின் பிரிய 'ஷரத்' அவரே.

பகவானைப் பராவுவது போலவே, பகவத் கைங்கரிய சிரேஷ்டர்களை ஸ்மரிப்பதும் மகா புண்ணியம். அம்முறையில், யோகானந்தரின் மறைவுக்குப்பின் சாரதானந்தர் அம்மாவின் ஆஞ்சநேயராவதற்கு முற்பட்ட இடைக்காலத்தில் தொண்டு புரிந்த ஸ்வாமி திரிகுணாதீதரின் பெருமையைச் சிறிது பார்க்கலாம். அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இரண்டே திருஷ்டாந்தங்களில் திரிகுணாதீதரின் திருப்பணிப் பெருமை தெள்ளென ஒளிர்கிறது.

அபயனின் மரணத்துக்குப் பின் அம்மா ஜயராம்பாடிக்குத் திரும்பிக்கொண் டிருக்கிறுள். இரவெல்லாம் கட்டைவண்டிப் பிரயாணம். அம்மாவுடன் வண்டியில் அமர்ந்து செல்வது மரியாதைக் குறைவான செயல் என்று கருதிய திரிகுணாதீதர், வண்டிக்கு முன்னுல் கையில் தடியுடன் 'வேகு வேகு' என்று ஓட்டமும் நடையுமாகச் செல்கிருர். அம்மா வண்டியினுள்ளே

கண் அயர்ந்து விடுகிருள். வழியில் ஓரிடத்தில் சமீபத்திய மழை நீரால் சாலை அரித்துப் பெயர்க்கப்பட் டிருக்கிறது. வண்டி அந்தப் பள்ளத்தில் இறங்கி ஏறுகையில் அம்மாவுக்குப் பெரிய குலுக்கல் உண்டாகும்; அடிகூடப் படலாம். வண்டிக் காரன் அம்மாவை எழுப்பி, அந்தப் பள்ளத்தைப் பாத சாரியாகக் கடந்து பிறகு ஏறிக் கொள்ளச் சொல்லலாம் என்று திரிகுணதிதரிடம் கூறுகிருன். ''கூடவே கூடாது'' என்கிருர் அவர். ''எங்கம்மா இப்படித் தூங்கின நாளே கிடையாது. எத்தனை அலுப்போ, இன்னிக்குத் தூங்குகிருள். அவளை எழுப்பப் படாது. ஒரு காரியம் கூசாமல் செய். நான் நல்ல பலசாலி. இதோ இந்தப் பள்ளத்திலே நான் படுத்துண்டா, அது சரியாக ரொம்பிவிடும். என் மேலேயே வண்டியை விட்டு ஓட்டிண்டு போ. பயப்படாதே! எங்கம்மாவும் எங்க டாகுரும் காப்பாத்துவா'' என்கிருர் திரிகுணதீதர். சொன்னதுமட்டு மல்ல. சிறிதும் தயக்குமின்றிச் சாலைப் பளளத்தில் திண்ணெனப் படுத்தும் விடுகிருர். இதோ, வண்டி அவர் மேல் ஏறப் போகிறது!

அதே சமயத்தில் அம்மாவின் உள்ளுணர்ச்சி சுளீரென அவளை விழிப்புறுத்துகிறது. எழுந்திருந்த தேவி நிலாவின் குளிரொளியில் தனது பிரிய மைந்தன் சாலைக் குழியை நிரப்பிப் படுத்திருப்பதைக் காண்கிருள். அவளது தாயுள்ளம் தவிப்பிலும் தயையிலும் திளைக்கிறது. வண்டியை நிறுத்தி, ''என் கண்ணே! என்ன காரியம் செய்யத் துணிஞ்சே!'' என்று திக்கியவாறு கீழிறங்குகிருள்.

காரியத்தையும் துணிவையுமா அவர் நினைத்தார்? அம்மாவுக்குத் தொண்டு செய்வது தவிர வேறு பிரக்ஞை அவருக்கு இருக்கவில்லையே!

இன்னெரு சமயத்திலே அம்மாவின் பரமஞான நிலையைப் பார்த்து யோகின்மாவுக்கு அச்சம் உண்டாயிற்று, அவள் உலகை உதறிக் கிளம்பிவிடுவாளோ என்று. அம்மாவுக்குக் காரசாரமான உணவு வகைகளைச் சேர்த்தால் அது அவளது சாத்விகத்தைக் குறைத்து ராஜஸகுணத்தை அதிகரிக்கக் கூடும் என்று எண்ணினுள். எனவே திரிகுணதிதரிடம், ''ஒரு மிளகாய் வைச்சால் கூட ஒரு செம்பு ரசம் உறைக்கணும். அப்படிப்பட்ட காரமான மிளகாயாகப் பார்த்து அம்மாவோட உபயோகத்துக்கு வாங்கிண்டுவா'' என்ருள் யோகின். ''அம்மாவுக்கு'' என்ற பிரம்மாஸ்திரப் பிரயோகம் திரிகுணதிதரிடம் எப்படி வேலை செய்தது தெரியுமோ?

மண்டியில் ஒவ்வொரு மிளகாய்த் தினுசையும் அவரே தின்று பார்த்தாராக்கும்! பட்டைவிட்ட நாக்கும் வீங்கித் தொங்கிய உதடுகளுமாக அவர் மிளகாய்ப் பொட்டலத்தோடு திரும்பினர். அம்மா என்கிற அமிருதமே அந்தக் காரமான எரிச்சலுக்குச் சஞ்சிவினியாக இருந்தது.

அம்மாவின் கிங்கரர்கள் அவளிடம் காட்டிய எல்லையற்ற அன்புக்கும் பக்திக்கும் காரணம், அவளது உள்ளார்ந்த மகிமையும், அவள் அவர்களிடம் பொழிந்த வாத்ஸல்யமுமே ஆகும். புகழ்கொண்ட எவரும் தம்மை நெருங்கியுள்ள பணியாட்களின் மதிப்பைப் பெறுவதில்லை—No o1e is hero to his valet—என்பது ஆங்கில முதுமொழி. வெளியாரிடம் உயர்ந்த குணங்களையே காட்டுபவர்களின் சிறுமைகளும் அவர்களது அந்தரங்க ஊழியருக்குத் தெரியுமல்லவா? ஆனல் நம் அம்மாவுக்கு வெளியார், உள்மனிதர் என்ற பேதமேது? அனைவருக்குமே அவள் மாதா—சிறுமையே அற்ற அகண்ட மாதா அன்றோ?

திரிகுணுதீதரின் பூர்வாசிரம நாமம் சாரதாப் பிரஸன்னர் என்பது. நம் சாரதையின் பிரஸன்னத்தில் அவருக்கு அற்புதமான பங்கு உண்டு! இவருக்குப் பின் அம்மாவின் 'சுமைதாங்கி' ஆனவரோ சாரதானந்தர் என்றே நாமம் கொண்டவர். அரிய பெயர்ப் பொருத்தம்தான்!

* * * *

அம்மாவின் புகழ் இப்போது வெளியுலகில் பரவிவிட்டது. நிறையப் பக்தர்கள் வரலாயினர். அம்மாவும் தன் ஜன்மப் பணிகளில் ஒன்ருன மந்திரோபதேசத்தைப் பலருக்கு அருளினுள். தவமிருந்து வேண்டினுலும் கிடைத்தற்கரிய மந்திரங்களை, சற்றும் எதிர்பாராது வந்தோருக்கும் தானே வலிய உபதேசிக்கலானுள் அம்மா. அது ஏதோ வெறும் அக்ஷரங்களை இன்னெருத்தருக்குச் சொல்கிற விஷயமாக இல்லை. அம்மா தனது அம்மாத் தன்மையை உருக்கி, அந்த அக்ஷரங்களில் திணித்து, அவற்றை மதுர மோதகங்களாக்கிப் பிள்ளைகளுக்கு ஊட்டினுள். அம்மாவிடமிருந்து மந்திரோபதேசம் பெற்ற பலரது அகவாழ்விலும் புறவாழ்விலும் அற்புத மாறுதல்கள் நிகழ்ந்தன. ஆதியில் இந்த மந்திரங்கள் எந்த ஞானவெளியில் தாமாக உதித்தனவோ, அந்தச் சிதாகாசத்தில் அம்மாவின் சித்த ஆகாசம் ஒன்றிவிடுமாதலால், மந்திரங்கள் அவற்றின் மூல சக்தி முழுவதுடனும் அவளினின்று வெளிப்பட்டன. "உரியபடி ஜபித்தால் மந்தி

ராக்ஷரங்கள் தாமே உள்ளிருந்து கொப்புளித்துக் கொண்டு வரும்'' என்று அம்மா சொன்னது ஸ்வாநுபூதி வாக்கிய மாகும்.

இவள் அவர்களுக்கு மந்திரத்தைத் தந்த அதே சமயத் தில், அவர்களிடமிருந்து இவள் ஒன்றை வாங்கிக் கொண் டாள்-அவர்களது பாபத்தை வாங்கிக் கொண்டாள்! அநாயா சமாக வாங்கிக் கொண்டாள்! அவளே சொல்லியிருக்கிறுள்- ஒருவருக்குத் திக்ஷை அளித்து வீட்டுக்கு அனுப்புவதோடு தன் பொறுப்பு முடிந்துவிடவில்லை என்றும், அவரை உண்மையான, சாசுவதமான பேரின்ப வீட்டில் சேர்க்கிற வரைக்கும் அவரது வாழ்க்கைப் பொறுப்பு முழுவதும் தனதாகி விடுகிறது என்றும். அவரவருக்கு உரிய இஷ்ட தெய்வத்தையும் மந்திரத்தையும் தனது தெய்விகத்தால் பளிச்சௌனப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உபதேசம் தரு வாள். அவர்களில் யாராவது அதன் பின் சரியாக ஜபம் செய்யவில்லை என்ருலும் அது அம்மாவுக்குத் தெரிந்துவிடும். அவர்கள் செய்யத் தவறியதற்கு ஈடாக, அம்மாவே தனது ஓயாத அலுவலுக்கிடையில் அவர்கள் பொருட்டு ஜபித்த வாறு இருப்பாள். இரவிலெல்லாம் கூட, கடும் காய்ச்சலின் போதும் எழுந்திருந்து அமர்ந்து ஜபம் புரிவாள். தனது சரீரம் விழுந்தபின்னும்கூட, தான் பொறுப்பேற்றுக் கொண் டவர்களை விடுவிக்கும் வரையில், தனக்கு ஓய்வு கிடையாது என்றும் தேவி திருவாய் மலர்ந்திருக்கிறுள். இப்படிப்பட்ட பெரும் பளுவை விரும்பி ஏற்பதை அவதாரம் அன்றி எங்கே பார்க்க முடியும்?

மந்திர ஜபம், ராமகிருஷ்ண பூஜை இவற்றையே அடியார்களுக்கு முக்கியமாக வலியுறுத்திஞள் அம்மா. தத்துவ விசாரத்தில் அதிகம் இறங்கியதில்லை, ஆத்மாவை நிச்சயமாகக் காப்பாற்றும் உபாயம் தெரிந்தபின் அது எதற்கு? ''மந்திரம் காப்பாற்றும், நன்ருக ஜப யோகத்தில் ஈடுபடுங்கள். டாகுர் காப்பாற்றுவார், அவரை ஆராதி யுங்கள்'' என்பாள்.

''பற்று செபத்தோர்க்கில்லை பாவங்கள்'' என்பதையே வலியுறுத்தியவள் அம்மா. பாபத்தைத் தேய்த்து, கர்மத் தைத் தீய்த்து, பரமனிடம் தோய்ந்திருக்க மந்திர ஜபமே மகா சாதனம் எனக் கொண்டவள் அம்மா. பக்தரை பவப் பிணியிலிருந்து விடுவிக்கும் ஒளஷதமாக அவள் மந்திரங் களை வழங்க வேண்டும் என்றே, ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவளுக்

குப் பற்பல மந்திரங்களை உபதேசித்தார். அவளும் ஸ்ரீ ராம கிருஷ்ணர் செய்திராத அளவுக்கு ஏராளமான அடியாருக்கு இவற்றை அருளினள்.

''இருதயத்தின் அடி ஆழத்திலே எப்பவும் பகவந் நாமத்தை ஜபிச்சுண்டே இரு. குருவிடம் அந்தரங்க சுத்தமாக அடைக்கலம் புகுந்துவிடு. விமோசனம் கிடைப்பது சர்வ நிச்சயம். 'ஜபம் பண்ணினலும் வெளி விஷயங்கள் என் மனசைப் பாதிக்கிறதே! ஆத்மிகத்திலே நான் முன்னேறுகிறதாத் தெரியலையே!' - அப்படின்னு ஓயாமல் கணக்குப் போட்டுண்டு உழப்பிக்காதே. தனக்குத் தானே முன்னேற்றத்தை ஓயாமல் எடை போட்டுக் கொள்கிறதும் ஒரு வித அகங்காரம்தான். குருவும், மந்திரமும், மந்திர லட்சியமான இஷ்டதேவதையும் நிச்சயமாக ரக்ஷிக்கும் என்கிற நம்பிக்கை வேணும். இந்த நம்பிக்கையோடு நாம் ஜபம் செஞ்சுண்டே வந்தால், தன்னால் கதிமோக்ஷம் கிடைக்கும்'' என்பது நம் அம்மா அடியாருக்குத் தந்த உறுதிமொழி.

ஜபம் செய்வதால் இறைவன் மகிழ்ந்து 'புதிதாக'க் கிருபை பொழிகிறன் என்று அம்மா சொல்லமாட்டாள். ''கிருபை எப்பவுமே இருந்துண்டுதான் இருக்கு. உள்ளூற இருக்கிற வஸ்து, கிருபை. சில தினுசுப் பூவுக்கு உள்ளூற வாசனை இருந்தாலும் அதுகளை நாம் மூக்கிலே வைச்சிண்டு மூச்சை இழுத்தால்தான் மணம் தெரியும். சந்தனத்துக்கு உள்ளார்ந்த சுகந்தம் இருந்தாலும், அதை இழைச்சால் தானே நமக்கு வாசனை வீசறது? அந்த மாதிரியே உள்ளூற ரகசியமாக இருக்கிற பகவத் கிருபையை நாம் மந்திர ஜபம், தியானம் இதுகளாலே சதா சிந்திச்சால்தான், அதை உணர்ந்து ஆனந்திக்க முடியும்'' என்பாள் சாரதாதேவி.

மந்திர ஜபத்துக்கும் பூஜைக்கும் தன் நானுவித அலுவல்களிடையே முக்கியமான இடம் தந்தாள் அவள்.

* * * *

அவள் டாகுருக்குச் செய்த வழிபாடு அழகு நிறைந்தது. அன்பு நிறைந்தது. காலையில் சிறிது கங்கா ஜலத்தை எடுத்துச் சென்று டாகுரின் படத்தின் மீது தெளிப்பாள். ''எழுந்திருங்கோ'' என்று சொல்லிக் கொண்டு, முன்னிரவு படுக்கப் போட்டிருந்த படத்தை மறுபடி செங்குத்தாக எடுத்து வைப்பாள். பிறகு வீட்டு வேலைகளைக் கவனிப்பாள். ஒன்பது மணி அளவில் பதிக்குப் பூஜை தொடங்குவாள். பகட்டும்

படாடோபமும், ஆடம்பரமும், அதியான ஆசார விதிகளும் இல்லாமல் எளிமையான பூரண பக்தி கமழ நடக்கும் அந்தப் பூஜை. படம் வைத்திருந்த ஆசனத்துக்குப் பக்கத்திலேயே ஸ்நானத்துக்கான கங்கை, சந்தனக் கல் - கட்டை, பஞ்ச பாத்திரம், தூபதீபக் கால்கள் இருக்கும். படத்தை அறை மத்தியில் வைத்துக் கங்கையை அதன் மீது புரோட்சித்து ஸ்நானம் செய்விப்பாள். சந்தனமிடுவாள். புஷ்பங்களால் அர்ச்சிப்பாள். அவருக்குப் பிடித்த சேமியா சொஜ்ஜி, ஜீராப் பாகு, பழங்கள் வைத்து நிவேதிப்பாள். அம்மாவின் வழிபாட்டைப் பிடிவாதமாகக் கேட்டுப் பெற்ற பிருந்தாவன கோபாலனும் டாகுரின் பக்கத்திலிருந்து இவற்றில் பங்கு பெறுவான்.

மடியில் திருக் கரங்களைச் சாந்தமாக விரித்து, நிச்சலனமாகச் சிறிது போது தியானம் செய்வாள் அம்மா: அச்சமயங்களில் வெளி உணர்வு அவளை விட்டு நீங்கிவிடும். பிறகு பக்திமயமாகப் பதிக்கு நமஸ்கரிப்பாள். படத்தைப் பழைய இடத்திலேயே வைப்பாள். பதிக்கு அபிஷேகமான புனித நீரில் சிறிதைப் பருகி, அர்ச்சித்த துளஸி அல்லது வில்வ தளத்தைப் பிரசாதமாக உட்கொள்வாள். ஜயராம்பாடியில் புஷ்பம் அதிகம் கிடைக்காது. ஆனல் இது போன்ற விஷயங்களைக் குறித்து அம்மா அலட்டிக் கொள்ள மாட்டாள். துளஸியோ, அட்சதையோ எது கிடைக்குமோ அதோடு திருப்தி அடைவாள். துளஸியிடம் அவளுக்கு அலாதிப் பற்றுதல். ''துளஸி மகா பவித்திரமானது. அது இருக்கிற இடத்துக்கே ஒரு சாந்நித்தியம் உண்டு'' என்பாள்.(தனக்குப் புஷ்பாஞ்சலி செலுத்தும் பக்தர்களிடம், ''துளஸியையும் வில்வத்தையும் என் காலில் போட்டுடாதீர்கள்! அதுகள் மகா புனித வஸ்துக்கள்'' என்பாள்.)

டாகுரின் முன் நைவேத்தியத்தை வைத்து, புது மணப் பெண் போல் பட்டுக் குரலில் பாங்குடனே, ''ம், ம், சாப்பிடுங்கோன்னு!'' என்று அவள் கொஞ்சுவதைக் கேட்டவர்களுண்டு. ''கோபாலா, சாப்பாட்டுக்கு வரயாடா?'' என்று பிருந்தாவன பிம்பத்திடம் செல்லமாகக் கேட்பாள்.

பூஜை காலையில் பத்தரை மணிக்குள் முடிந்துவிடும். பூஜைப் பிரசாதம் காலைப் பலகாரமாக யாவருக்கும் தரப்படும். அதற்கு மேல் பக்தர்களைக் காக்க வைக்கக் கூடாது என்றே பூஜையை முடித்துவிடுவதாக அம்மா சொல்லியிருக்கிருள். பகல் ஒரு மணிக்குச் சாப்பிடுவது அவர்கள்

வழக்கம். பரிமாறுமுன், சமயலறையிலே டாகுரின் திரு நாமத்தைச் சொல்லி, அன்னம், குழம்பு, கறி முதலியவற்றை நீரால் சுற்றுவாள் அம்மா. அதே போல் மாலையில் அப்பம், சப்பாத்தி, பால் முதலியவற்றைப் பதிக்கு நிவேதித்தபின்பே, பிறருக்கு அளிப்பாள்.

''நீங்க வாஸ்தவமாகவே டாகுரைப் பார்க்கறேளா?'' என்று வினவியவர்களிடம், ''ஆமாம்'' என்று தெளிவாகச் சொன்னுள் தேவி. ''எனக்கு மட்டுமில்லே. யார் அந்தரங்க சுத்தமாகப் பூஜை பண்ணினுலும் அதை அவர் உயிரும் உடலுமாக வந்து அங்கீகரிக்கிருர்'' என்று தேவி கூறினுள்.

தான் நிவேதனம் செய்கையில் படத்திலுள்ள டாகுரின் கண்களிலிருந்து ஓர் ஒளி புறப்பட்டு வந்து, நைவேத்தியத்தைத் தீண்டிச் செல்வதாகவும், அதுவே அவர் உண்டதாக அர்த்தம் என்றும் அம்மா சொல்வாள். அவளுக்குள்ளேயே வாழ்ந்த ராமகிருஷ்ணர், அவளை பக்தையாக்கிப் பார்த்து மகிழ்வதற்காக, பூஜா காலங்களில் அந்தப் படத்தில் எழுந்தருளி யிருந்தார்! பாலகோபாலன் கிண்கிணி சலசலக்க எழுந்திருந்து வந்து தன் நிவேதனத்தை ஏற்பதாகக் கூறுவாள்.

ஒரு நாள் அம்மா அதிகாலையிலேயே டாகுருக்குப் பூஜை செய்ய வேண்டியிருந்தது. அப்போது அவள் நிவேதனத்தை அவர் முன் வைத்து, ''இப்படிக் காலங்கார்த்தாலேயே சாப்பாடு போடறேனேன்னு பார்க்கிறேளா? இன்னிக்கு ஜகத்தாத்ரி பூஜையோல்லியோ? அதுக்குப் போயாகணும். அம்மாபூஜை முடியறமட்டும் உங்களைக் காக்க வைக்க வேண்டாம்னுதான் சுருக்கவே உங்களுக்கு நைவேத்தியம் வைச்சுட்டேன். வேளைகெட்ட வேளைதான். இருந்தாலும் தயவு செஞ்சு இதை எடுத்துக்கோங்கோ'' என்ருள்.

* * * *

பூஜா காலத்தில் மட்டுமின்றி, எப்போதுமே ராமகிருஷ்ணர் அப் படத்தில் ஒரு விநோதமான முறையில் வாழ்ந்து வந்தார், அவளைப் பொறுத்தமட்டில்.

உதாரணமாக:

அன்று அதிகாலையிலேயே அம்மா ஓர் ஊரிலிருந்து இன்னேர் ஊருக்குப் புறப்படவேண்டி இருந்தது. அவள் தயாராகி விட்டாளா என்று பார்ப்பதற்காகப் பிரம்மசாரிச்

சீடர் ஒருவர் காலை ஐந்து மணிக்கு அவளது அறைக்குச் சென்றார். அம்மா அதற்குள் பூஜை முடித்து, அவருக்கு திருஅமுது படைத்துவிட்டு, படத்தைத் துணியில் சுருட்டிக் கொண்டிருந்தாள். அப்போது அம்மா அந்தப் படத்திடம் வாய்விட்டுப் பேசிய விதத்தைக் கண்ட பிரம்மசாரி, பூஜை முடிந்த பின்னும் டாகுர் அந்தப் படத்தில் உயிர் கொண்டு விளங்குகிறார் என்று புரிந்து கொண்டார். அம்மா டாகுரிடம் இப்படிச் சொன்னாள்: ''கிளம்பறதுக்கு நாழியாச்சு. நீங்களும் கூட வாங்கோ.''

ஒரு சமயம் அம்மா கல்கத்தாவிலிருந்து ஜயராம் பாடிக்குக் கிளம்ப முடியாமல் ஏதாவது விக்கினம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அப்போது அம்மா பதியின் சித்திரத்தை எடுத்து வைத்துக் கொண்டு, ''ஜயராம்பாடிக்குப் போகலாம்னா! உங்களுக்கு என்ன, விசாலமான பாடுஜ்யே புகுர் ஜலமும், பச்சுனு இருக்கிற எங்காத்துத் துளஸியும் பிடிக்காமல் போயிடுத்தா?'' என்று கெஞ்சலாகவும், சிணுங்கலாகவும் கேட்டாளாம்!

இன்னொரு நாள் அம்மாவுக்குக் காய்ச்சல். அதனால் பாரிஷதர் எவரோ அன்று டாகுருக்குப் பூஜை செய்தார். பகலில் அம்மா கண்மூடிப் படுத்திருக்கையில், அவளது பதி தேவர் கட்டாந்தரையில் கிடப்பது போல ஒரு காட்சி தெரிந்தது. சரேலென எழுந்திருந்து அவரது சித்திரத்திடம் ஓடினாள். படத்தின் மீது ஈரமான பூக்கள் ஒட்டிக் கொண்டிருந்தன. ஈரம் தேடி வந்த எறும்புகள் சட்டத்தின் இடுக்கு வழியாகப் படத்தின் உள்ளேயும் போய் டாகுரின் சரீரத்தில் ஊர்ந்துகொண் டிருந்தன. அம்மாவுக்குத் தன் மீது தேள் ஊர்வதுபோல் இருந்தது. புஷ்பங்களை அப்புறப் படுத்தினாள். கணவருக்கு வலிக்காத விதத்தில் படத்தை நாசூக்காகத் தட்டித்தட்டி உள்ளே சென்றிருந்த எறும்புகளை வெளியேற்றினாள்.

பிற்காலத்தில் அம்மாவின் அத்தியந்த சிஷ்யைகளில் ஒருத்தியான ஸரளாதேவி. ''அம்மா, என்ன மந்திரங்கள் சொல்லி, என்ன நியமங்களை அநுஷ்டிச்சால், டாகுர் நிவேதனத்தை ஏற்றுக் கொள்வார்?'' என்று வினவினாள்.

''என் கண்ணே, பெரிய பெரிய தெய்வம்னு உசத்தி வைத்துப் பூஜை பண்ணறச்சேதான் ஏகப்பட்ட மந்திரங்களும், நியமங்களும் வேண்டியிருக்கு. பகவான் நமக்கு ரொம்ப ரொம்பச் சொந்தம்: அவன் நம்ம உடமை இல்லையா?

அவன் நமக்கே நமக்குன்னு, நம் சொத்துன்னு நினைக்கணும். நம்ம சொந்த மனுஷ்யாளுக்கு எதற்குப் பெரிய மந்திரங் களும் சடங்கும்? மனப்பூர்வமான அன்போடே, 'டாகுர் வாங்கோ, வந்து உட்காருங்கோ, இதைச் சாப்பிடுங்கோ'ன்னு சொல்லு. வந்து குதிப்பார். தன் வீட்டுக்கே வர, சொந்தக் காரருக்குப் பிரியம் ஒண்ணே போறுமே! நீ எதைச் சமர்ப் பிச்சாலும் டாகுர் அங்கீகரிப்பார். அன்பு வேணும் என்கிற தாலே ஆசாரமே வேண்டாம், மந்திரங்கள் வேண்டாம்னு சொல்றதா நினைக்காதே. அடிப்படையாக அன்பை வைச் சுண்டு, இதுகளையும் அதன் மேலே எழுப்பிண்டா விசேஷம் தான்'' என்றாள். ஸரளாவுக்குச் சில மந்திரங்களையும் பூஜா கிரமங்களையும் போதித்தாள் அம்மா.

இன்னொரு பக்தரிடம், ''எனக்குத்தான் பக்தி இருக் கேன்னு சொல்லிண்டு சாஸ்திர விதிகளை அலட்சியம் பண் ணக்கூடாது. பூஜா திரவியங்கள் கூடியவரை சுத்தமா இருக்கணும். சந்தனத்திலே திப்பி இருக்கக் கூடாது. புஷ்பம் பத்திரம் பூச்சி அரிக்காததா இருக்கணும். பூஜை பண்ணு கிறவர் தன் உடம்பையோ, சிகையையோ, வஸ்திரத் தையோ தொட்டுக்கக் கூடாது. நேரம் தப்பாமல் நைவேத் தியம் முதலானதுகளைப் பண்ணணும். தவிர்க்க முடியாமல் இடைஞ்சல் உண்டாகும்போது பகவான் க்ஷமிப்பார். அதே மாதிரி நம்மோட அறியமையாலோ, இயலாமையாலோ நேருகிற தோஷங்களையும் கருணாமூர்த்தி மன்னிப்பார்.''

* * * *

ராமகிருஷ்ணரை இறைவனாக வைத்துப் பூஜிப்பது, அவரது நாமத்தை பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம் போல் ஒரு மந்திரமாக ஜபிப்பது— ஆகிய இவ்விரண்டுக்கும் அம்மாவே மூல ஆசாரியர். சர்வ சாமானியமாக இருந்து கொண்டு எவ்வளவு பெரிய ஆத்மிகப் பணியைச் செய் திருக்கிறாள்! ராமகிருஷ்ணரின் மற்றச் சீடர்கள் வேதாந்த தத்துவத்தை முழக்கம் செய்தனர். அம்மா பூஜையும் மந்திரமும் தந்தாள். தத்துவத்தால் மெய்ப் பொருளை உணர்ந்தவர் அதிகமிருப்பரா, பூஜையாலும் ஜபத்தாலும் சாந்தி அடைந்தவர் அதிகம் இருப்பரா என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தப் பூஜையும் ஜபமும் தற்காலச் சாந்தி மட்டுமல்ல, அவை நிச்சயமாக மோக்ஷத்தையே அளிக்கும் என்று அம்மா பன்முறை அறுதியிட்டு உறுதி கூறியிருக்கிறாள். பூஜை யாலும் ஜபத்தாலும் தங்களிடம் எவ்வித விசேஷ முன்னேற்ற

மும் காணுமல் அலைப்புண்டு அம்மாவிடம் முறையிட்டவர்களிடம், ''அதனுல் என்ன? தொடர்ந்து செய்து வாருங்கள். நிச்சயம் பலன் கிடைக்கும். கடைசிமட்டும் பலன் இல்லாவிட்டாலும் இறுதிச் சுவாசத்தின் போதாவது சர்வ நிச்சயமாக டாகுர் வந்து அழைச்சுண்டு போவார்'' என்பாள். ஓர் அடியார், தாம் ராமகிருஷ்ணரையும் சாரதா தேவியையும் சரணடைந்து நீண்ட காலமாகியும் தமக்குப் பரிபக்குவம் ஏற்படவில்லை என்று குறைப் பட்டுக் கொண்டார். அப்போது அம்மா அர்த்த புஷ்டியுடன் கூறினுள்: ''சாதகனுக்குத் தன் ஆத்ம அபிவிருத்தி உடனுக்குடனே தெரியணும் என்கிறதில்லை. குழந்தே! நீ தூங்கிண்டு இருக்கும்போது, இன்னொருத்தர் உன்னைத் தூக்கிண்டு போய் வேறே ஒரு இடத்திலே சேர்க்கிறதாக வைச்சுக்கோ; உன்னை இடம் மாற்றுகிறபோதோ அல்லது புது இடத்திலே நீ முழிச்சுண்ட உடனேயோ, உனக்கு இடம் மாறியிருக்கோம்னு தெரிஞ்சுடுமா?''

சாமானியமாகத் தோற்றமளித்த அம்மா, சாமானியமாகவே பேசிய அம்மா ஆசாரிய ஸ்தானம் வகிக்கையில் எப்படி உயர்வு காட்டியிருக்கிருள், பாருங்கள்! தன்னையடைந்தோர்க்கு ஒருநாளும் தோல்வியில்லை என்று அடித்துச் சொல்லியிருக்கிருள். பொதுவில் உபமான உபமேயங்களுடன் அழகுபடப் பேச அறியாத அம்மா இதுபோன்ற சமயங்களில் அற்புத நயம் சொட்டும் வாக்குகளை அநாயாசமாக உதிர்த்திருக்கிருள்.

எனினும் இச்சமயங்களிலும்கூட அவள் தன்னை டாகுரின் கருவி மாத்திரமாகவே பெரும்பாலும் கூறிக் கொள்வாள்.

அம்மா மந்திரம் அளித்தவுடன், ''இது நான் தரவில்லை; டாகுராக்கும் தந்தார்'' என்பாள். ஆஞ்சனேய ஸ்வாமி, ''சில சமயங்களில் நான் ராமனுக்குப் பணி புரிகிற தாஸனுக அவனிடமிருந்து பிரிந்து நின்று துவைதத்தை ருசிக்கிறேன். சில சமயங்களில் ராமன் எனக்கு ஆதாரமாக உட்புகுந்து அவனது அங்கமாக என்னை இயக்குவதாகப் பாவித்து விசிஷ்டாத்வைதத்தை ரசிக்கிறேன். சில சமயங்களில் ராமனன்றி வேறெதுவுமே இல்லாததால், ராமனே நான் என்று உணர்ந்து அத்வைதத்தில் ரமிக்கிறேன்' என்று கூறினுர். இவ்விதமே சாரதைக்கும் டாகுருக்கும் மூன்று நிலைகளில் தொடர்பு இருந்தது. அவரது ஏதுமறியாச் சரண தாஸியாக இருந்தாள்; அவரது அங்கம் அல்லது அம்சம் போலவும் இருந்தாள்; அவராகவேயும் இருந்தாள். அடியார்களின் பக்குவத்தைப் பொறுத்து இந்த மூன்று நிலைகளில் ஒன்றை வெளிப்படுத்துவாள். சில

அபூர்வப் பிறவிகளிடமே தனக்கும் டாகுருக்கும் உள்ள சர்வ சாம்யத்தை அம்மா வெளியிட்டாள். தாஸ் குப்தா என்பவர் டாகுரைவிட அம்மாவைத் தியானிப்பதிலேயே தமக்கு மனம் பூரணமாக ஈடுபடுகிறது என்று அவளுக்கு எழுதியபோது, ''குரு மஹராஜ் யாரோ, அவரேதான் நான்'' என்று அம்மா வியக்த மாகப் பதில் எழுதச் செய்தாள். பிற்பாடு தாஸ் குப்தா அம் மாவை நேரில் கண்டபோது, ''குருநாதர் நாமத்தையும் நான் ஜபிக்க வேண்டுமா?'' எனக் கேட்டார்.

''ஜபிக்கத்தான் வேண்டும்.''

''ஏனம்மா! உங்கள் நாமத்தை ஜபித்தால் போதாதோ? நீங்களிருவரும் வேறு வேறில்லையே!''

''என்னதான் இருந்தாலும் குருமஹராஜ் நாமத்தைவிட்டு விடும்படி என்னால் கூற முடியாது.''

சிஷ்யரொருவர், ''குருமஹராஜை நீங்கள் எப்போதுமே தரிசிக்கிறீர்களா?'' என்று வினவியபோது அம்மா, ''அப்படியா னல் நாங்க வேறு வேறு என்ன?'' என்று பளீரெனத் திருப்பிக் கேட்டாள். உடனே அந்தச் சிஷ்யருக்கு இந்த உண்மையை உணரும் வன்மையில்லை என்று புரிந்து கொண்டு, ''ஏதோ உணர்ச்சிவசப்பட்டு உளறிவிட்டேன் குழந்தே'' என்று சுதா ரித்துக்கொண்டாள்.

பரமபக்குவிகளிடம் அம்மா தனக்கும் டாகுருக்கும் உள்ள ஐகாத்மியத்தைத் தயங்காமல் வெளியிட்டாள். கேதாரிநாத் தத்தர் கேசவானந்த ஸ்வாமிகளாக ஆனபின் ஒரு நாள் அம்மா விடம், ''டாகுரை நேரில் பார்க்கிறதுக்கு நான் கொடுத்து வைக்கலியே'' என்று உள்ளத்தின் அடியிலிருந்து குறைப் பட்டுக் கொண்டார். ''அதனாலே என்ன பையா?'' என்று அமுதூற ஆறுதல் சொன்ன அம்மா, தன் சரீரத்தைத் தொட்டு, ''அவர் இந்தத் தேகத்துக்குள்ளேதான் இருக்கார். சூக்ஷ்மமாக இருக்கார். அவரே அப்படிச் சொல்லியிருக்கார், அப்பனே'' என்றாள்.

நரேஷ்சந்திர சக்ரவர்த்திக்குத் தீக்ஷை அளிக்கையில் அம்மா, ''எனக்குப் பொன் வர்ணப் புஷ்பங்களிலே பிரீதி; டாகுருக்கு வெள்ளைப் பூக்களிலே பிரீதி'' என்றாள், புஷ்பமாக மென்னகை செய்தபடி.

அம்மா இதைச் சொன்ன பாணியிலிருந்து நரேஷ்சந்தி ரர் அதன் உட்கிடையைப் புரிந்து கொண்டு உடல் சிலிர்த் தார். இரு வண்ணப் பூக்களும் சேகரித்து வந்தார். அம்மா வின் வலப்பாதத்தில் வெண்மலர்களையும், இடப் பாதத்தில்

மஞ்சள் புஷ்பங்களையும் சொரிந்து, உளம் நெகிழ்ந்தார். பாத மலர்களைப் பாங்குறக் காட்டிக் கொண்டு, அர்த்த நாரீசுவர சிவ சக்தியாக அம்மா அற்புத தரிசனம் தந்தாள். "அவர்தான் மஹேசுவரன்; அவர்தான் மஹேசுவரி. 'ஓம் ஸ்ரீ மஹேசுவர மஹேசுவரீ ஸ்வரூபாய நம:' ன்னு சொல்லி அவருக்கு நமஸ் காரம் பண்ணுங்கோ" என்று பொதுவாகக் கூறும் அம்மா, இன்று தானே மஹேசுவர மஹேசுவரீ ஸ்வரூபியாக நின்றாள்!

மேதினிபுரைச் சேர்ந்த நளினி சர்க்கார் தம்மிடம் அம்மா, "நானே பகவானின் சக்தி, பகவான் அவதரித்த போதெல்லாம் நானும் கூட வந்திருக்கேன்" என்று வெளிப்பட மொழிந்த தாகக் கூறியிருக்கிறார்.

"ராமகிருஷ்ணரைக் குருவாகப் பாவிக்கிறோம்" என்று யாரேனும் கூறினால் அது அம்மாவுக்குப் போதாது. குரு மட்டும் அல்ல; அவரே சகலமும் என்பாள். அவராகவே இருந்த அவள் அவரை அப்படித்தான் சகலமுமாகக் கருதினாள். பலப்பல ஆண்டுகளுக்கு முன் தக்ஷிணேசுவரத்தில் அம்மாவும் ஏனைய பக்தர்கள் போல ராமகிருஷ்ணரைப் பிதா என்று குறிப்பிட்ட போது ஹிருதயர் பரிகாசம் செய்தார். சூக்ஷ்மதிருஷ்டி வாய்க் காத ஹிருதயருக்கு ஒரு பெண் தன் கணவனைப் போய் தந்தை என்கிறாளே என்று கேலியாகத் தான் இருந்தது. ஹிருதயரிடம் அடங்கி ஒடுங்கிக் கிடந்த சாரதாமணி இன்று பீறிக் கொண்டு கூறினாள்: "அவர் எனக்கு அப்பாதான். அப்பா மட்டும்தானா? அம்மாவும் அவர்தான். சிநேகிதர், உறவினர், நெருங்கினவர், அத்தியந்தப் பிரியமானவர், சகலமும் அவர்தான்."

அடியாரிடம் அவரே சகலமும் என்று கூறுகையில் தான் ஏதுமேயில்லை என்று மிகவும் நைச்சிய பாவத்துடன் கூறு வாள்: 'ராமகிருஷ்ணரை இன்ன விதத்தில் பாவிக்கிறோம்; உங்களை எப்படி பாவிப்பது?' என்று அவளிடமே கேட்டவர் கள் உண்டு. அச்சமயங்களில் அம்மா, "என்னை எதாகவும் பாவிக்க வேண்டாம். நானும் ஏதும் இல்லை. அவரைப் பாவிச் சாலே போறும். அவரே சகலமும். அவரை குருன்னு மட்டும் நினைக்காமல் இஷ்ட தெய்வம்னே நினைச்சு வழிபடுங்கோ" என்பாள்.

"பவதாரிணியை இஷ்ட தெய்வமாக வைச்சுக்கோ" என்று பக்தர் ஒருவரிடம் அம்மா சொன்னவுடன், அவர், "ஏனம்மா, அடியேனைச் சோதிக்கிறேள்? பிரத்தியட்சமாக நீங்கள் பேசிண் டும், நடந்துண்டும் எங்கள் கூட இருக்கும்போது பவதாரி ணியை ஏன் இஷ்டாவாக வைச்சுக்கணும்?" என்று குமுறிக் கேட்டார். குழந்தையின் குமுறலில் அம்மா குழைந்து விட்

டாள். ''சரி அப்பா! நீ நினைக்கிறபடியே வைச்சுக்கோ'' என்று அகமலர்ந்து கூறினுள்.

ஆனுல் இப்படிச் சொல்வது அபூர்வமே. அவள் பொதுவாகக் 'கிரெடிட்' முழுவதையம் டாகுருக்குத்தான் கொடுப்பாள். அதுதான் அம்பாளின் வழக்கம். நீலகண்ட தீக்ஷிதர் கூறியது போல், யமனை வதைத்த இடதுபாதம் அம்பாளுடையது; காமனை எரித்த நெற்றிக் கண்ணில் பாதி அம்பிகையடையது: ஆனுல் இவற்றுக்கான 'கிரெடிட்' டை அவள் ஈசுவரனுக்கே அல்லவா விட்டுக் கொடுத்திருக்கிருள்! சித் சபையில் தூக்கிய இடது திருவடிகூட அவளுடையதே அல்லவா? ஆனுல் இவள் சாக்ஷிமாத்திரமான சிவகாமியாகப் பதவிசுடன் ஒதுங்கிநிற்க ஈசுவரன் அல்லவோ பஞ்சகிருத்ய நடராஜனுகப் பெரும் பெயர் எடுக்கிருன்?

சாரதா தேவியிடம் எவரேனும், ''உங்கள் அநுக்கிரகத்தில் க்ஷேமமாக இருக்கிரேும்'' என்று சாதாரணமாகச் சொன்னுல் கூட, அந்தப் புகழை அவளால் ஏற்க இயலாது. ''என்னை ஏன் இழுக்கிறேள் குழந்தைகளா? 'டாகுர் அநுக்கிரஹத்திலே க்ஷேமமாயிருக்கோம்'னு சொல்லுங்கோ; அதுதான் சரி'' என்பாள்.

''டாகுரையே தேவியாக நினைக்கத்தான் பார்க்கிறன். ஆனுலும் ஜபம் பண்ணி முடிக்கிற போது, 'இந்த ஜபத்தை அங்கிகரிச்சு, எனக்கு ஸித்தி தா தேவி' ன்னு அவர் படத்தை பார்த்துண்டு சொல்கிறது என் மனசுக்குச் சரியாக வரல்லை'' என்று ஸுரேந்திரநாத் பௌமிக் அம்மாவிடம் கூறினுர்.

அம்மா ஏதோ பெரிய அதிசயத்தைக் கண்டாற் போலக் கடகடவென நகைத்தாள். ''பையா! துளிகூடச் சந்தேகப் படாதே! டாகுர்தான் மகாதேவன்! டாகுர்தான் மகாசக்தி! குட்டித் தேவதைகளான மனஸா (நாகர்), சீதளா (மாரியம்மன்) எல்லாமும் கூட அவர் தான். அது மட்டுமில்லை. சகல ஜீவ ராசிகளுக்குள்ளேயும் கூட டாகுரேதான் இருக்கார்'' என்று ஆணியடித்தாற்போல் கூறினுள்.

சகல ஜீவராசிகளுக்குள்ளும் அந்தர்யாமியாக அவர் உட்புகுந்திருப்பதை அம்மா பல சந்தர்ப்பங்களில் வெளிப்பட அநுபவித்துக் காட்டியிருக்கிருள்.

உதாரணமாக நைவேத்தியத்தில் எறும்பு மொய்க்கும். அம்மா அவற்றை அப்புறப்படுத்த மாட்டாள். ''அந்த எறும்புகளும் டாகுர்தான்'' என்று அநுபவித்துச் சொல்வாள்.

அவர் 'புருஷன்' அல்லது ஆத்மாவாக இருக்கும்போது அனைத்தின் உள்ளும் ஒன்ருக இருந்தார்; அவரே 'பிரகிருதி' அல்லது 'மாயை' யாக இருந்தபோது அனைத்தின் வெளிப்

பான்மைகளிலும் வேறு வேருக இருந்தார். அவரை அம்மா புருஷனுகவும் உய்த்துணர்ந்தாள்; பிரகிருதியாகவும் ரசித்து மகிழ்ந்தாள். புருஷனுகக் கண்டபோது எறும்பும் அவருக்கு அந்நியமில்லை என உணர்ந்தாள். பிரகிருதியாகக் கண்டபோது, இவர் ராமகிருஷ்ணர் என்ற மாய சரீரத்துடனும், எறும்புகள் தமக்குரிய மாய சரீரத்துடனும் அவளுக்குத் தெரிந்தபோது அந்த எறும்புகள் அவரை மொய்க்காமல் அவற்றை அப்புறப் படுத்தினுள். ''அவரே புருஷன் பரமாத்மா; அவரே பிரகிருதி பராசக்தி'' என்று அம்மா பன்முறை கூறுவாள்.

இந்த திவ்விய ரகசியங்களை நாம் அதிகமாக அகழ்ந்து பார்ப்பதற்கில்லை. பக்தியுடன் அவற்றில் நாம் சொக்கிவிட வேண்டும். அவ்வளவே! இந்தச் சொக்கலில் உண்டாகிற ஆனந் தத்துக்கு இடையூருக நம் அற்ப மூளையைக் கொண்டு வர வேண்டாம்!

பாரமார்த்திகத் துறையில் தேர்ச்சி பெற்றவர் தான் ஸ்வாமி வாசுதேவானந்தர். ஆனுல் அவராலும் இப்படிப் பக்தி யில் சொக்க முடியவில்லை. மூளை வேலை செய்தது! ஸித்தே சுவரியின் அபிஷேக தீர்த்தத்தில் டாகுரின் திருமஞ்சனநீரைக் கலந்தால் அபசாரமாகும் எனக் கருதினுர். எனவே இவ்விரு தீர்த்தங்களையும் தனித் தனிப் பாத்திரத்தில் பிடித்து வந்து அம்மாவுக்கு அளித்தார். அம்மாவுக்குச் சலிப்பு ஏற்பட்டது.

''முதலில் இரண்டு தீர்த்தத்தையும் கொட்டிக் கல'' என்று சற்றே சுள்ளெனக் கூறினுள். அப்போதும் ஸ்வாமிஜி தடுமாறினுர். ''நாளையிலிருந்து கலந்தே கொண்டு வரேன்'' என்ருர். இதயத்துக்கு மூளையைப் பணிய வைக்க ஒருநாள் அவகாசம் கேட்டார் போலும்! ஆனுல் தலையிலிருந்து கால் வரை இதயமாகவே இருந்த அம்மா அந்த ஒரு நாள் அவகாச மும் தர மறுத்தாள்! கண்டிப்பான குரலில், ''ஊஹூம். இப் பவே இந்த இரண்டு தீர்த்தங்களையும் கல'' என்ருள். அந்த அசாதாரண உறுதி வாஸுதேவானந்தருக்கும் அப்போதே உறுதியை அளித்துவிட்டது. அவ்விதமே கலந்தார். அம்மா மகிழ்ச்சியுடன் தீர்த்தத்தை உட்கொண்டாள்.

தன்னைப் பற்றி அவள் பலவிதமாகக் கூறிக்கொண்டாலும், ஸ்ரீராமகிருஷ்ணர் கடவுளேதான் என்பதைத் தவிர வேறெவ் விதத்திலும் அவரைப் பற்றிப் பேசியதில்லை. அவரைக் கடவுள் ஸ்தானத்திலிருந்து இறக்கி, ஞானி, மகான், குரு என்றெல் லாம் வைத்தால் அம்மாவுக்குப் பொறுக்காது.

ராமகிருஷ்ண பூஜை, அவரது நாம மந்திரம், ராமகிருஷ்ண லோகம் என்பதையெல்லாம் அம்மா வலியுறுத்தியதைப் பார்த்து அவள் நாம ரூபமற்ற அத்வைதத்தைச் சொன்னதேயில்லை என்று எண்ணிவிட வேண்டாம். அத்வைதமே பரம சத்தியம் என்று கருதியவள் அம்மா. இதில் அவள் ராம கிருஷ்ணரின் சாட்சாத் பத்தினி. சம்பிரதாய அத்வைதக் கொள்கைப்படி பக்தி என்பது மனத்தை ஒருமுகப்படுத்தும் என்றும் இந்த ஒருமைப்பாட்டுக்குப் பிறகு சாதகன் ஆத்ம விசாரத்தால் அகண்ட பிரம்மத்தை உணருவான் என்றும் கூறப்படும். அதாவது பக்தி அப்படி முக்திக்கு நேர்ச் சாதனம் அல்ல. அது ஓர் உபாங்கம்தான். ஆனால் ராமகிருஷ்ணரோ பெயரும் உருவும் குணமும் படைத்த இறைவனிடம் பக்தி செய்வதாலேயே நாம ரூபமற்ற நிர்க்குணப் பிரம்மத்தை நேராக எய்தலாம் என்றார். ''நிர்க்குணம் தான் குணமுள்ள தேவதையாக வந்திருக்கிறது. அதனிடம், 'என்னை நிர்க்குணத்தில் சேர்ப்பிப்பாயாக' என்று வேண்டிக் கொண்டால் அது அந்த அநுக்கிரகத்தையும் நிச்சயம் அருளும்'' என்றார்.

சம்பிரதாய ஞான மார்க்கத்தில் சாதகன் தானாக எடுத்துக்கொள்வதாகச் சொல்லப்படும் அத்வைத நிலையை, பக்தி புரிந்து பரமாத்ம சக்தியிடமிருந்து அவன் பெற்றுக்கொள்ளவும் முடியும் என்றார். நாம ரூபமற்ற பிரம்மத்தில் ஐக்கியமாவதையே அவர் மோட்சமாகக் கருதினார். அம்மாவும் இதே கருத்துடையவள் என்பதற்கு ஓர் உதாரணம்: இமாலயத்தில் மாயாவதியிலே அத்வைத ஆசிரமம் அமைத்திருந்தார் விவேகானந்தர். அங்கே முழுக்க முழுக்க ஆத்ம விசாரம்தான். அந்த ஆசிரமத்தில் உருவ வழிபாடே கூடாது என்று விதித்திருந்தார் விவேகானந்தர். இதை ஏற்கவொண்ணாத ஒரு குருபாயி அம்மாவிடம் முறையிட்டார். அம்மா பூஜா மார்க்கத்தையே உபதேசித்தவளாயிற்றே! ஆனால் அம்மா சொன்ன பதிலைப் பாருங்கள்: ''ஸ்ரீ ராமகிருஷ்ணர் பூரண அத்வைதி. அவர் அத்வைதத்தைத்தான் உபதேசித்தார். நீ ஏன் அத்வைதத்தைச் சம்பிரதாயப்படி கடைப்பிடிக்கக் கூடாது? அவரோட சிஷ்யாளெல்லாம் அத்வைதிகள்தானே?''

* * * *

ஸ்ரீராமகிருஷ்ணரின் சித்தாந்தத்தை அம்மா இவ்விதம் தெளிவாகக் கூறியது போலவே, அவர் வாழ்ந்து காட்டிய மேன்மையான லட்சியத்தையும் அம்மா ஸ்பஷ்டமாக எடுத்தியம்பியிருக்கிறாள். இந்த அம்சத்தில் ராமகிருஷ்ண பக்தர் பலருக்கு

அம்மா சொல்வது புதுமையாகத் தோன்றக் கூடும். ஏனெனில் ராமகிருஷ்ணர் இதர மதங்கள் உள்படச் சகல சமய ஆசரணை களையும் அநுஷ்டித்ததால் அவரது வாழ்வின் மைய தத்துவம் சர்வ மத சமரசம் என்றுதானே நாம் திரும்பத் திரும்பக் கேட்டிருக்கிறோம்? ஆனால் அவரில் அவராக, இவளுள் அவர் தோய, பாலும் சுவையும் போல ராமகிருஷ்ணரில் அபின்ன சக்தியாக உள்ள அம்மா சொல்வதைக் கேளுங்கள்! கேசவா னந்த ஸ்வாமிகளிடம் பேசுகிறாள் அம்மா: ''குழந்தே! எல்லா மதங்களுக்குள்ளும் ஐக்கியம் இருக்குன்னு நிரூபிச்சுக் காட்ட ணும் என்று **நோக்கம் வைச்சிண்டு** டாகுர் சகல மதங்களையும் அநுஷ்டிச்சதாக எனக்குத் தோன்றவே இல்லை. அவர் எப்போ தும் திவ்விய போதையிலே இருக்கத் திருவுளம் கொண்டவர். அதனாலே பகவானோட அநுக்கிரக லீலையைத் தினுசு தினுசாக ருசித்துப் பார்க்கணும்னே சகல மார்க்கங்களையும் அப்பியாசம் பண்ணினார். **உண்மையிலே உலகத்துக்கு அவர் தம் வாழ்க்கை யினாலே தந்த விசேஷமான உபதேசம், பற்றின்மைதான்.** சுயநலம் துளிக்கூடக் கலக்காமல் எப்படிப்பட்ட துறவறத்தை வாழ்ந்து காட்டினார்? சமய சமரசம் என்கிறார்களே, அதுவும் உண்மை தான். பூர்வ அவதாரங்களிலே ஒரு குறிப்பிட்ட மதக்காரர் களுக்கே பிடிப்பு ஏற்பட்டது. டாகுர் எல்லாருக்கும் பிடிப்பாக இருக்கிறார். ஆனாலும் அவர் இன்னிக்கு உள்ள லோகத்துக் குப் பற்றின்மையைக் காட்டி, பகவானை ஞாபகப்படுத்தவே முக்கியமாக அவதரிச்சார்.''

ராமகிருஷ்ணர் அவரவரும் தம் மதத்தை அந்தந்த ஒழுங் குப்படி அநுசரிக்க வேண்டும் என்றே கூறினார். அவர் ஒவ் வொரு சம்பிரதாயத்தையும் பின்பற்றியபோது அதன் விதி களைப் பூரணமாகப் பின்பற்றினார். ஆனால் அவருக்குப் பின், சர்வ மத சமரசம் என்கிற பெயரில் எல்லா மதங்களையும் கொட்டிக் கலந்து அவியல் செய்கிற காரியமும் அவர் பெயரி லேயே நடப்பதைப் பார்க்கும்போது அம்மா சொன்னதி லுள்ள அர்த்த புஷ்டி தெரிகிறது. பிற மதங்களைத் தாழ் வென்று எண்ணிப் பழிக்கக் கூடாது என்பதையே ராமகிருஷ் ணரின் வாழ்வில் படிப்பினையாகப் பெறுகிறோமேயன்றி, எல்லா மதங்களையும் கலவங்கீரையாக்க வேண்டும் என்றல்ல இதை எண்ணியே தேவி, இப்போது பிரமாதப்படுத்தப்படும் மத ஐக்கியத்தை இரண்டாம் பட்சமாகக் கூறினாளோ? ''அற்றது பற்றெனில் உற்றது வீடு'' எனக் காட்டுவதே இந்த அவதாரரின் முதல் நோக்கம் என்று நம் அம்மாவே சொன்னபின் பேச்சு ஏது?

37. தாயின் மறைவும் தாயாக அருளும்

எந்தத் தேவி தன் சக்தியால் பிரபஞ்சம் முழுவதையும் ஊடுருவி இருக்கிருளோ, எந்தத் தேவியின் திருவடியில் ஸகல தேவ சக்திகளும் ஒன்றுகூடி இருக்கின்றனவோ, எந்தத் தேவியைத் தேவரும் ரிஷிகளும் பூஜித்தபடி இருக்கின்றனரோ, அந்தத் தேவியை-தாயை-நாங்களும் நமஸ்கரிக்கிறோம். அவள் நமக்கு நலனளிப்பாளாக!

—துர்கா ஸப்த சதீ 4. 3

மந்திரோபதேசமும், பூஜைப் பயிற்சியும் மற்றவர்களுக்குத்தான் கிடைத்தது. பிச்சி மாமி என அழைக்கப்படாநின்ற ஸுரபாலா பிச்சி மாமியாகவேதான் இருந்தாள். மாறுதலே இல்லை. அப்படி ஏதாவது மாறுதல் இருந்தால் குணபேதம் முன்னிலும் முற்றியதாகச் சொல்லலாம்.

இடம் மாறுதலாக அம்மாவுடன் யாத்திரை செய்து வர விரும்பினர் பக்த கோடிகள். புரி ஜகந்நாதத்துக்கு க்ஷேத்திராடனம் செல்வதாக முடிவாயிற்று. ''பாட்டிக்கு ஜகந்நாத தரிசனம் பண்ணணும்னு கொள்ளை ஆசை. அவாளையும் அழைச்சிண்டு போகலாம்'' என்றனர் அம்மாவின் பசங்கள். சியாமாசுந்தரிதான் அந்தப் பாட்டி.

வேண்டாமென்கிற பாவனையில் அம்மா தலையை ஆட்டினுள். ''ஸுரபாலாவுக்கு அம்மாவை அடியோடு பிடிக்கிறதில்லே. இவா இரண்டு பேரையும் சேர்த்து அழைச்சுண்டு போனு, போகிற இடத்திலெல்லாம் ரகளையாயிருக்கும். ஸுரபாலாவை விட்டுட்டுப் போறதுக்கும் இல்லே. அம்மா இன்னெரு சந்தர்ப்பத்திலே நேர்ந்ததுன்னுப் பார்த்துக்கட்டும்'' என்ருள். யாத்திரைக்கு ஆர்வம் கொண்ட வயோதிகத் தாயை நீக்கி, பாடாகப் படுத்தும் பைத்தியமான தம்பி மனைவியின் பக்கம் பரிந்து நின்ற நம் அம்மாவைப் போல ஒரு பிறவியை எங்கே பார்க்க இயலும்?

புரி சென்ருர்கள். நிறைய தரிசனம் செய்துகொண்டாள் அம்மா. ஆலய அர்ச்சகர் ஐம்பது பேருக்கும் அன்னமிட்டாள்:

மகிழ்ச்சி சிறிது தூக்கலாகிவிட்டதால், அம்மாவின் ஜாதக விசேஷப்படி காலில் ஒரு கட்டி வந்தது. அது சொல்லி முடியாத குத்தல் வலி கொடுத்தது. ஏற்கனவே வாத ரோகத்

தால் விந்தி நடக்கும் அம்மா, இப்போது மிகுந்த சிரமத்துடன் ஆலயம் சென்று வந்தாள். ''ஆபரேஷன் செய்யலாம்'' என்று குழந்தைகள் சொன்னதற்கும், ''வேண்டாம்'' என்று மறுத்துவிட்டாள்.

அவளது அருமை பாபுராம் (ஸ்வாமி பிரேமானந்தர்) ஒரு சூழ்ச்சி செய்தார். டாக்டர் ஒருவரை பக்தர் என்ற ரீதியில் அழைத்து வந்தார். அம்மா தன் வழக்கப்படி தலையோடு கால் போர்த்திக்கொண்டு பாத விரலைமட்டும் வெளிக்காட்டித் திருவடி தரிசனம் தந்தாள். பாபுராமின் 'சதித் திட்டம்' நறுவிசாக நிறைவேறியது. பாதத்தைத் தொட்டுப் பணிவதாகச் சொன்ன டாக்டர் சட்டென்று அம்மாவின் கட்டியைக் கீறிவிட்டார். கட்டி கிழிக்கப்பட்ட பின்பே அம்மாவுக்கு விஷயம் தெரிந்தது.

''அம்மா, அபராதத்துக்கு க்ஷமிச்சுடுங்கோ'' என்றார் டாக்டர்.

டாக்டரையும் பாபுராமையும் 'அபராத'த்துக்காக மனப்பூர்வமாய் ஆசீர்வதித்தாள் அம்மா.

ஜகந்நாத தரிசனம் செய்யத் தன் தாயை விட்டுவிட்டு வந்தது சாரதையை உறுத்தலாயிற்று. ''எப்படியாவது சமாளிச்சுக்கலாம். அம்மாவை வரவழையுங்கோ'' என்று பசங்களிடம் சொன்னாள்.

சியாமாசுந்தரியுடன் காளிகுமாரும் சக குடும்ப சமேதராக வந்து சேர்ந்தார். அவருக்குத்தான் எப்போதும் ஸுரபாலாவுடன் போட்டி ஆயிற்றே!

அவர்கள் உள்ளே நுழைந்ததுதான் தாமதம். ஸுரபாலா அம்மாவின் எதிரில் கையையும் காலையும் நீட்டிக்கொண்டு கூப்பாடு போடத் தொடங்கினாள். ''ஏண்டியக்கா, என் புருஷனைக் கொன்னுட்டு இந்தச் சண்டாள மநுஷாளுக்கே என் பணத்தையெல்லாம் வாரி விடறே? இங்கேயும் வரவழிச்சியா? நீ நாசமாப் போ!'' என்று இரைந்துவிட்டு, வக்கணையாகப் பிலாக்கணம் பாடத் தொடங்கினாள்.

எல்லோரும் விக்கித்துவிட்டனர். அம்மா ஆலயத்துக்குக் கிளம்பினாள், அமைதி குலையாமல். ஜகந்நாதன் ஆலயத்தில் 'ஆனந்த பாஜார்' என்கிற இடத்திலே அனைவரும் ஸமம் என்று கருதி, ஜாதி வித்தியாசங்களைப் பாராட்டாமல் சேர்ந்து பிரசாதம் உண்பது தொன்று தொட்ட வழக்கம். அம்மா புண்பட்ட உள்ளங்களுக்குத் தண்மை கூட்ட விரும்பித் தானே அங்கே ஒவ்வொருவர் வாயிலும் பிரசாதத்தைப்

போட்டாள். பிறகு தானும் திருவாயைத் திறந்து கொண்டு, ''நீங்க ஒவ்வொருத்தரும் எனக்குப் பிரசாதம் போடுங்கோ'' என்றாள். ஆஹா! எப்பேர்ப்பட்ட மதுர நிகழ்ச்சி!

அவர்கள் அனைவரும் கல்கத்தாவுக்குத் திரும்பிய பின் சிறிது காலத்தில் சிற்றப்பா நீலமாதவர் காலகதி யடைந்தார். அந்திமத்தில் அம்மாவின் சீடர்கள் அவரைக் கவனித்துக்கொண்டாலும் அம்மாவும் சுசுருஷை செய்தாள். அவருக்குச் சுவாசம் கண்டபோது மற்றவர்கள் பிடிவாதமாக அம்மாவை உண்ண அனுப்பி வைத்தனர். அம்மா உண்டுவிட்டு வருவதற்குள் சிற்றப்பாவின் உயிர் பிரிந்துவிட்டது.

''சாப்பிடுவதற்கு என்னைப் பிடிவாதமாக அனுப்பிச் சேளே! நியாயமா?'' என்று அம்மா மற்றவர்களை வழக்கத்துக்கு விரோதமாக உக்கிரத்துடன் கேட்டாள். அது வெறும் அஞ்ஞானப் பேச்சில்லை. அந்திம நேரத்தில் சிற்றப்பாவின் தலைமாட்டில் அம்மா இருந்திருந்தால் அவரது ஆத்ம க்ஷேமத்துக்காக ஏதோ செய்திருப்பாள் என்பது அதிலே தொனித்தது. அம்மா அவசரமாக் [illegible]மாடியிலிருந்த தன் அறைக்குச் சென்று, நிர்மாலிய புஷ்பங்க[illegible]யும் பத்திரங்களையும் கொண்டு வந்தாள். சிற்றப்பாவினு[illegible]டைய சடலத்தின் சிரசிலும் நடு மார்பிலும் அவற்றைத் [illegible]வா[illegible]தன் கைகளால் வைத்து அழுத்தியபடியே ஏதோ ஜபித்தா[illegible]

ரமண பகவான் தமது அன்னை இறுதிக் கட்ட[illegible]லிருந்தபோது அவளது சிரத்திலும் இதயத்திலும் கை வை[illegible]மீள நெறி சேர்த்தார். நீலமாதவரின் வெளியேறிய ஜீவனை நிர்மால்யப் பூக்களால் மீண்டும் அச்சரீரத்துள் இழுத்து அவரை நிரந்தரமாக மீட்டிருப்பாளோ நம் அம்மா?

நீலமாதவரின் சடலத்துக்குத் தோள் கொடுக்க வந்த சாரதையின் குழந்தைகளில் ஒருவர் பிராம்மணரல்லாதவராக இருந்ததைக் கண்டு கோலாப்மா ஆட்சேபம் எழுப்பினள். ''டாகுரின் பக்தாளுக்குள் ஜாதி வித்தியாசமில்லை'' என்று அம்மா உறுதியாகக் கூறி, கோலாப்பை அடக்கினள். (ஆனலும் வெளி உலகுக்கு அம்மா வர்ணாசிரமங்களை நீக்குமாறு வலியுறுத்தி உபதேசிப்பதில்லை.)

* * * *

சாரதையின் சகோதரர் பிரஸன்னகுமாரரும் இப்போது கல்கத்தாவிலேயே தனி வீடு வைத்துக்கொண்டு வசித்து

வந்தார். அவரது மூத்த மகள் நளினியும், அவளது கணவர் பிரமதநாத்தும் அவருடன் வசித்தனர். பிரமதநாத்துக்கு டபிள் நிமோனியா கண்டது. அவருக்குச் சிகித்சை செய்த டாக்டர் ஓர் இளைஞர். அவருக்கும் அவரது மனைவிக்கும் ஒற்றுமை இல்லை. எப்போதும் சண்டை பூசலாக இருந்தது. ஊருக்கு வைத்தியம் செய்யும் டாக்டர் தமக்குத் தாமே மார்ஃபியா ஊசிகளைப் போட்டுக்கொண்டு உடம்பைக் கெடுத்துக்கொண்டார். அவரது முகம் கறுத்துப் போயிற்று. கண்ணின் கோடிகளில் கருந் திட்டுக்கள் தோன்றித் தடித்தன. பக்தர் ஒருவர் இந்த டாக்டரை அம்மாவிடம் அழைத்து வந்தார். வெறுமே தரிசனத்துக்காக வருவதாகவே எண்ணியிருந்த டாக்டரிடம், வருகிற வழியில், ''அம்மாவிடம் மந்திரோபதேசம் பண்ணிக் கொள்ளுங்கள். குடும்பப் பூசல், உடல் உபாதை எல்லாம் குணமாகும்'' என்றார் அந்த பக்தர். டாக்டர் தயங்கினார். ''உபதேசம் வாங்கிக்கொள்வதற்குரிய நியமப்படி நான் மடி உடுத்து வரவில்லை. காலையில் டிபனும் சாப்பிட்டு விட்டேன். இப்போது வேண்டாம்'' என்றார்.

அம்மாவிடம் வந்ததும் பக்தர், ''எனக்கென்னவோ டாக்டர் உபதேசம் வாங்கிண்டாத் தேவலைன்னு தோணித்து. ஆனால் அவர் 'பஞ்சகச்சம் இல்லை; உத்தரீயம் இல்லை; வயிறும் காலி இல்லை' என்று சொல்கிறார்'' என்றார்.

இந்த நியமங்களைக் கூடியவரை வழுவாது பின்பற்றும் அம்மாவுக்கு அந்த நிமிடத்தில் என்ன தோன்றிற்றோ! டாக்டரிடம், ''பிள்ளாய், நான் கொடுக்கிற மந்திரத்தை மறுக்காமல் வாங்கிக்கோ'' என்றாள். உடனே உபதேசமும் செய்தாள்.

மந்திரம் அற்புதம் விளைவித்தது! டாக்டரின் முகம் கருமையை உதிர்த்தது. பழைய அழகை மீண்டும் பெற்றது. கண்கோடியில் இருந்த தடிப்பு—அது மாயமாய் மறைந்து விட்டது! 'மந்திரம் போட்டாற்போல்' என்பார்களே, அப்படி! அதைவிட அதிகமாக வீட்டுப் பூசலும் விரைவில் தீர்ந்து அவர் உள்ளத்தில் உவகையும் உற்சாகமும் உதித்தன.

மணி, மந்திரம், ஔ ஷ த ம் என்பர்—டாக்டர், அம்மாவின் மருமாளுடைய புருஷனுக்கு ஔஷதம் தந்து டபிள் நிமோனியாவைக் குணப்படுத்தினார். அம்மாவோ அந்த டாக்டரை மந்திரத்தால் குணப்படுத்தினாள். அம்மா ஏன் தன் மருமாளின் கணவருக்கு இந்த அனுக்கிரகத்தைச்

செய்யவில்லை என்பதற்கு யாரே விடை காண முடியும்? மந்திர சக்தி பெற்றவர்களுக்கேதான் எப்படி எப்போது எவர்பொருட்டு அதைப் பிரயோகிப்பது என்பதும் தெரியும்!

இச்சமயத்தில் அம்மா தன் மைத்துனர் மகள், மருமகளிர் லக்ஷ்மி, நளினி, ராது முதலியவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டாள். இன்று டெலிவிஷனில் தோன்றுவது என்றால் எப்படி இருக்குமோ அப்படி அன்று அமர்க்களப்பட்டது அவ்வீடு.

*　　*　　*　　*

விநோத விஹாரி ஒரு விநோதப் பிறவிதான். இல்லாவிட்டால் ராமகிருஷ்ணரிடம் நெருங்கிய பின்னரும் இவருக்கு மதுப் பழக்கம் வந்திருக்குமா? ஆதியில் சாரதாநந்தர் இவருக்கு நெருங்கிய நண்பர். 'தோஸ்த்' என்றே சாரதாநந்தரைக் கூப்பிடுவார். ஒரு நாள் சாரதா தேவியும் சாரதாநந்தரும் இருந்த வீட்டு வழியே இவர் குடித்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தார். அம்மா இருக்கும் புனித ஸ்தலத்துக்கு அவர் வந்து தம்மிடம் உறவு கொண்டாடப் போகிறாரே என்று அஞ்சிய சாரதாநந்தர் மற்றச் சீடர்களிடம் அவரை உள்ளே விடக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தார்.

ஒரு நள்ளிரவிலே இவர் அம்மாவின் ஜாகைக்கு எதிரே வந்து நின்று தம்மை உள்ளே விடுமாறு குரல் கொடுத்தார். கதவு திறக்கப்படவில்லை. "உங்கள் தோஸ்த் உள்ளே விடக் கூடாதென்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்" என்றார்கள்.

"என் தோஸ்தா அப்படிச் சொன்னான்?" என்று வெதும்பினார் விநோத விஹாரி.

போதையில் இருந்த விநோதர் நடுத் தெருவில் நின்று கொண்டு நள்ளிரவில் பாடினார்:

தாயே எழுவாய், தாழ்ப்பாள் திறவாய்!

இருளுது உலகம், மருளுதென் இதயம்.
கூவிக் கூவியென் ஆவி தளர்ந்தேன்.
எத்தனை முறைதான் சத்தமிட் டழைப்பேன்?
தாரா காளீ! பாராமுகம் ஏன்?
இளகிய நெஞ்சம் இறுகியது ஏன்?
வெளியில் சேயை வெதும்பிட விட்டுக்
களிதுயில் கொள்வது காளீ தகுமா?

அம்மா அம்மா என்றே அகவியும்
சும்மா இருந்தாய், சவக்கூடானேன்.

ச்ருதி சுத்தத்துடன், ராக நயத்துடன்,
கதி தவருத தாள லயத்துடன்
த்ரிஸ்தாயிகளில் தீனன் இசைத்தேன்;
த்ரிலோக மாதா, துயில் நீங்காயோ?

விளையாட்டினில் நான் திளைத்தேன் என்று
வெறுப்புற் றேமுகம் திருப்பிவிட் டனையா?
இனி விளையாடேன், பனிமதி முகத்தைக்
கனிவுறக் காட்டித் தனியருள் தருவாய்!
மான மழிந்த ஈனமகன் சுமை
தாய் நீ அன்றித் தாங்குவதாரே?

மது போதையா அந்த மதுர இசை? அன்னையின் கமல பாத மதுவுக்கு அல்லவா ஏங்குவதாகக் காண்கிறது? இறைவனின் விளையாட்டை என்னென்பது? நத்தை வயிற்றில் முத்தைப் பிறப்பிக்கிறவன் எந்த இதயத்திலேதான் தெய்விக ஏக்கத்தைப் பிறப்பிக்க முடியாது?

அம்மா தூக்கத்தில் இருக்கிருளே என்ற ஏக்கத்துடன் விநோதர் தலை தூக்கி, மாடியைப் பார்த்தபோது, ஆஹா, மேலே ஜன்னல் கதவுகள் திறக்கப்பட்டன. திரைச் சீலையும் நகர்ந்தது. கருணைமயியாக அம்மா நின்றுகொண் டிருந்தாள்.

பாரதி வாக்கைச் சிறிது மாறுதலுடன் கூற வேண்டியது தான்:

மதலையர் எழுப்பவும்
தாய் துயில்வாளோ?
மாநிலம் ஈன்றவள்
இஃதுணராளோ?

விநோதரும் அம்மாவுக்கு விநோதப் பிள்ளையாகத் தெரியவில்லை. சொந்தப் பிள்ளை என்று வந்துவிட்டபின் சகஜமான பிள்ளை, விநோதப் பிள்ளை என்ற வேறுபாடு ஏது?

மாடியிலே பூரண அநுக்கிரகத்தைப் பொலியவிட்டு நிற்கும் அம்மாவைக் கண்டு, நடுத் தெருவில் நின்ற விநோத விஹாரி தாரைதாரையாகக் கண்ணீரைக் கொட்டினர். "அம்மா, இந்த அஸத்துப் பிள்ளைக்கும் இரங்கி எழுந்து வந்துட்டியா? இந்தா, இதை வாங்கிக்கோ" என்று சொல்லித் தெருவிலேயே நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்கரித்தார். "அம்மா, உன் பார்வை பட்ட இந்த இடத்துப் புழுதியே உன் பாத தூளிக்குச் சமம்" என்று சொல்லி, தெரு மண்ணை எடுத்துத் தலையில் தூவிக்கொண்டார். பிறகு மகிழ்ச்சி பொங்கப் பாடிக்

கொண்டே தம் மார்க்கத்தில் நடக்கலானூர். அடடா, துன் மார்க்கமும் ஸன்மார்க்கமும் எத்துணை நெருக்கத்தில் உள்ளன?

விநோதரின் குரலொலி, 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து' அம்மாவின் செவியில் தோய்ந்துகொண் டிருந்தது.

கருநிற அன்னையை இருதயக் கருவினில்
இருத்திக் கொள்வாய் நீ ரகசியமாய்!
உன்னையும் என்னையும் அன்றி, என் நெஞ்சே,
அன்னையை எவரும் அண்டவிடாதே!

தூரத்தே மெலிந்து கேட்ட குரல் திடுமென வலுப் பெற்றது. விநோதர் சொந்தமாக இரு வரிகள் அப்போதே கவனம் செய்து முடித்தார்:

ஆஸ்தி எனக்கென அன்னையைக் காண்பேன்;
'தோஸ்த்' இனித் தொலைவிலும் காணுதொழிக!

அந்தப் பிள்ளைக்குத் தனது தோஸ்த் சாரதாநந்தரிடம் உண்டான சுவாதீனமான கோபத்தை ரஸித்த அம்மா குமிண் சிரிப்புடன், சாளரத்தை விட்டு விலகிப் படுக்கைக்குத் திரும்பினுள்.

சன்மார்க்கம், துன்மார்க்கம் எல்லாவற்றுக்கும் அப்பாற் பட்ட இடத்தில் இந்தப் பிள்ளையை சொஸ்தமாகச் சேர்க்க வேண்டும் என்று அம்மா எண்ணினுள் போலும்! இச்சம்பவம் நடந்து சிறிது காலத்திலேயே விநோத விஹாரி நமது விநோத உலகிலிருந்து விடை கொண்டு விட்டார்! இறுதி நேரத்தில், ''டாகுரின் உபதேச மொழிகளைப் படியுங்கள்'' என்று அருகிருந்தோரிடம் கூறி, அண்ணலின் அமர வாசகங் களைக் கேட்டுக்கொண்டே அமிருதக் கண்ணீரை வழிய விட்டவாறு, அமர லோகத்தில் புகுந்தார் விநோதர்.

எல்லோரும், ''என்ன அதிசயம்!'' என்று வியந்தனர்.

அம்மாவோ நைந்துருகும் நளினக் குரலில், ''அதிசயம் என்ன? அவனும் எல்லோரையும் போலவே டாகுருடைய சொந்தப் பிள்ளைதானே? புழுதியிலே விளையாடினுன். இப்போ தனக்குச் சொந்தமான புஷ்ப மடியிலே போய் அக்கடான்னு விழுந்துட்டான்!'' என்றுள்.

அப்போது அவளும் டாகுரும் ஐக்கியமாகியிருந்ததாகவே தெரிந்தது.

* * * *

அம்மாவுக்கு மேலும் கால்கட்டுகள் ஏற்பட்டன. அவளது முதல் தம்பியான பிரஸன்னரின் மனைவி ராம

ப்ரியா தேவிக்குக் காலராக் கண்டு பன்னிரண்டே மணி நேரத்தில் அவள் கண்ணை மூடிவிட்டாள். அவளது பெண்கள் நளினியும், மாகு எனப்படும் சுசீலாவும் நம் அம்மாவின் அரவணைப்பைத் தேடி வந்துவிட்டனர். நளினிக்கு விவாகமாகிவிட்டாலும் இன்னமும் அவள் விவரமறியாத பெண் தான். அவளுக்கு விவரமாகத் தெரிந்த ஒரே ஒரு விஷயம் ஆசாரம்தான்; அளவுக்கு மீறிய மடிக்காரி அவள். நம் அம்மா ராமகிருஷ்ண சங்கத்தினருக்குள் அதிகமாக வித்தியாசங்கள் பார்ப்பதில்லையல்லவா? இதனால் நளினி, அம்மாவுக்குத் தந்த தொல்லையும், அவளைப் பார்க்க வந்தவர்களுக்குத் தந்த மனக் கசப்பும் கொஞ்சநஞ்சம் அல்ல.

பிரஸன்னரின் மனைவியை இழந்த இரண்டு மாதங்களுக்குள் அருமைத் தாயை இழந்தாள் சாரதை. அன்று சியாமாசுந்தரி வழக்கம்போலவே, கறிகாய்க்காரிக்கு நெல்லும் கடுகும் கொடுத்து, பதிலுக்குக் கீரைகள் வாங்கிக்கொண்டு உள்ளே வந்தாள். ''இன்னிக்கு என்னமோ ஓய்ச்சலா இருக்கு'' என்று சொலலிக்கொண்டே தவிடு புடைக்கிற இடத்துக்கு வந்து, தானும் உதவி செய்தாள். பழங்கால மநுஷி என்பது அதுதான். வாசல் ஓரத்தில் போய்ப் படுத்துக் கொண்டாள். வழக்கம்போல் ஊர்க் குழந்தைகள் சியாமாப் பாட்டியிடம் வந்து விளையாடிக் கதை கேட்டன. ஆனால் இன்று சிறிது போதானதுமே அவளுக்குப் பேசவும் அசக்தமாயிற்று.

வேலைக்காரரிடம், ''என்னவோ பண்றது, தலை கிறுகிறுன்னு...'' என்றாள்.

விஷயம் அறிந்த அம்மா விழுந்தடித்துக் கொண்டு வந்தாள்.

தன் அம்மாவை அணைத்து அமர்ந்தாள் நம் அம்மா. அவளுடைய காலம் முடிகிறது என்று நன்றாகத் தெரிந்தது. ''அம்மா, அம்மா! உனக்கு என்ன வேணும், சொல்லு?'' என்றாள் மகள்.

பரம ஞானியான சாரதையைப் பெற்றவளும், கூடிய வரை தானும் ஞானத்துடனேயே நீண்ட நெடிய வாழ்க்கை நடத்தியவளுமான சியாமாசுந்தரி, அந்த இறுதி நேரத்திலே, ''பூசணிக்காய்க் கறி சாப்பிடணும் போல இருக்கு'' என்றாள்! மஹாமாயாவின் மயக்கை என்னென்பது?

''உடம்பு சொஸ்தமாகட்டும், பண்ணிப் போடறேன்'' என்று கூறிய சாரதை கங்கா தீர்த்தத்தைக் கொண்டு

வந்து தாயின் வாயில் மும்முறை வார்த்தாள். சியாமையின் சரீரத்தில் சலனம் குறைந்தது. அம்மா அவளது சிரசிலும், இதய பாகத்திலும் தன் கைகளை அழுந்த வைத்து ஜபத்தில் ஆழ்ந்துவிட்டாள். அவளது எஞ்சிய கர்மத்தை எல்லாம் அந்த ஒரு சிறிது காலத்தில் அவள் அநுபவித்துத் தீர்க்குமாறு செய்து, அந்த ஜீவனை மெய்ப்பொருளில் நெய்திருப்பாள்!

படுக்கை போடாமல், எவரையும் பணிவிடை செய்ய வைக்காமல், தெய்வப் பெண்ணின் அண்மையில், நல்ல நினைப்புடன், அநாயாச மரணம் அடைந்தாள் அன்பே உருவான சியாமாசுந்தரி.

38. பாவத்தைப் பரிந்து ஏற்ற பாவனி

அம்பிகே! ஸ்பரிசவேதியில் வைத்த இரும்பும் உடனே பொன்னுவது போல, கங்கையில் கலந்த கழிவடை நீரும் புனித கங்கையே ஆகிவிடுவது போல, எத்தனையோ பாவங்களால் மிகவும் மாசுற்ற என் உள்ளமும் உன்பால் கொண்ட அன்பால் கட்டுண்டபின் எப்படி நிர்மலமாகாதிருக்கும்?

—ஆதி சங்கரரின் ஆனந்தலஹரி

சியாமாசுந்தரி மறைந்தவுடன் சாரதை கதறித் தீர்த்தாள். நீண்ட காலத்துக்கு முன்பே ராமகிருஷ்ணர் கூறியிருந்தது போல, அவ்வப்போது அம்மா உலகியல் இன்ப துன்பங்களில் ஒரேயடியாக மனத்தைக் கொடுத்து விட்டதாகத் தோன்றினாலும் அந்த ஆழ்ந்த உணர்ச்சி அதிசயமான விரைவில் சுவடே தெரியாமல் மறைந்துவிடும். அவதாரங்களின் அப்ராக்ருத சரீரத்தைப் பிரகிருதி சம்பந்தமான பிருதிவியில் நிறுத்தி வைக்கவே அவ்வப்போது இந்த உணர்ச்சி எழுச்சிகள் நேருகின்றன என்பார் ராமகிருஷ்ணர்.

சாரதாநந்தர் சியாமாப் பாட்டியின் உத்தரக்கிரியைகளை ஒரு குறைவுமின்றி, யதோக்தமாக நடத்தி வைத்தார். கிருஹயக்ஞத்தன்று அம்மா, தன் அம்மாவின் இறுதி ஆசைப்படிப் பூசணிக்காய்க் கறி சமைத்து ஊராருக்கெல்லாம் அன்னதானத்துடன் வழங்கினுள்.

சாரதை தனது அன்னையின் ஸ்தானத்தில் வைத்திருந்த இன்னெரு புண்ணியசாலினி உண்டு. ராமகிருஷ்ணரை கோபாலனுகக் கண்ட கிழவி கோபால மாதாவே அந்த பாக்கியசாலினி. பெற்ற தாயை இழந்த பின் கல்கத்தாவுக்கு வந்த சாரதை கோபால மாதாவை மரணப் படுக்கையில் கண்டாள்.

அம்மா உள்ளே நுழைந்ததும், ''கோபாலா, வந்தாயாடா, அப்பனே'' என்று கைகளால் துழாவினுள் அந்த மூதாட்டி.

சாரதை சிலை போல நின்றுள்.

பக்கலில் இருந்த பணிமகளிடம் கோபால மாதா ஏதோ ஜாடை செய்தாள். அந்தப் பெண் நம் அம்மாவிடம், ''உங்க பாத தூளி வேணும்கிருங்க'' என்றுள்.

தன் 'மாமியார்' என்றே எல்லோரிடமும் கோபால மாதாவைக் குறிப்பிடுவாள் அம்மா. அந்தக் கிழவியும், ''மாட்டுப் பெண்ணே!'' என்றுதான் நம் அம்மாவைக் கூப்பிடுவாள். இன்று 'மாமியார்' இவளையே கோபாலனுகக் கூப்பிட்டு, இவளது பாததூளியைக் கேட்டபோது, சாரதை எவ்விதத் தயக்கமும் ஆட்சேபமும் செய்யாமல் தன் திருவடியை நீட்டினாள். பணிப்பெண் அதனை வஸ்திரத்தால் ஒற்றி எடுத்துக் கோபால மாதாவின் உடல் முழுதும் தேய்த்து விட்டாள்.

சிறிது காலத்தில் கோபால மாதா பூலோகத்தை விட்டு கோலோகம் சென்றடைந்தாள்.

* * * *

அரசர்கள் 'காடு ஆறு மாதம், நாடு ஆறு மாதம்' என்று வாழ்ந்தது போல, கல்கத்தாவிலும் ஜயராம்பாடியிலும் மாறி மாறி வசித்த அம்மா, பிறந்த ஊருக்குத் திரும்பினாள். எந்த அவதாரமும் அநுபவிக்காத பிக்கல் பிடுங்கலுடன், எந்த அவதாரமும் செய்திராத ஓயாத உழைப்புடன் காலத்தை ஓட்டிக்கொண் டிருந்தாள்.

அதிசயத்திலும் அதிசயமாக அவளை விட்டுத் தாற்காலிகமாக ஓர் உபத்திரவம் விலகுவதாகத் தோன்றியது. ஸுரபாலாவின் தகப்பனர், மகளைத் தம் வட்டுக்கு அழைத்துச் சென்ருர். ஆதியில் ஸுரபாலா தாயை இழந்த பின் தாய்வழிப் பாட்டியிடம் வளர்ந்தாள். தந்தைக்கு அவளிடம் பிடிப்பே கிடையாது. எனவே, இப்போது மூளைக் கோளாறு பிடித்த மகளை அவர் அழைத்துப் போனது ஆச்சரியமாக இருந்தது. பிறகுதான் மர்மம் வெளியாயிற்று. பொருளாசையே உருவான அந்தத் தகப்பனர், அநாதையும் அவலமுமான ஸுரபாலாவின் நகைகளை ஈவு இரக்கமின்றிக் கழற்றி வைத்துக்கொண்டு அவளை சாரதையிடம் திருப்பி ஓட்டிவிட்டார். சித்தக் கோளாற்றிலும் பொருள் ஆசையை விடாத ஸுரபாலா நகைகளுக்காகப் புலம்பியபடி இருந்தாள்.

ஒரு நாள் அம்மா வீட்டிலே ஒரு பக்தரிடம் உரையாடிக்கொண் டிருந்தபோது திடீரென்று பேச்சை நிறுத்தினாள். ''நான் போறேன்; நான் போறேன். அந்தப் பைத்தியக்காரப் பொண்ணு **அம்மா**வை இம்சை பண்ணிண்டிருக்கு'' என்று சொல்லிக்கொண்டே வேகமாக வெளி வந்தாள். சிம்மவாஹினியின் கோவிலுக்கு வந்தாள். ஆம், அங்கே

ஸுரபாலா 'சிம்மவாஹினி'யிடம் நகைக்காகச் சண்டை பிடித்துக்கொண் டிருந்தாள்.

சாரதை அவளை நல்ல வார்த்தை சொல்லிக் கையைப் பிடித்து அழைத்து வந்தாள். 'சிம்மவாஹினி'யை சாரதை காப்பாற்றினுள்; 'சிம்மவாஹினி' சாரதையைக் காப்பாற்ற வில்லை! ஸுரபாலா தன் பல்லவியை மாற்றிக்கொண்டாள். சாரதையிடமே, ''எங்கேடி என் நகை, திருடி! அதைத் திருப்பித் தரயா இல்லையா?'' என்று போர் தொடுக்கலானுள்.

அம்மாவைக் காண வந்திருந்த பக்தர்கள் அவளது நிலை கண்டு உருகினர். அம்மா வேதனையோடு சிரித்துக் கொண்டே, ''கிரீஷ் சொல்வார்: சிவனையும் காளியையும் சுற்றிப் பேய் பிசாசுகள், பைத்தியங்கள் எல்லாம் இருக்கும்னு. இவ என் பைத்தியச் சேடி'' என்ருள்.

ஸுரபாலாவின் தந்தையை வரவழைத்தாள் அம்மா. பாரமார்த்திகப் பருவதங்களும் எவளைப் பணிந்து வணங் கினவோ அப்படிப்பட்ட சாரதை, 'சம்பந்திப் பிராம்மண ராகிய' ஸுரபாலாவுடைய தந்தையை நமஸ்கரித்து அவரது காலைப் பிடித்துக்கொண்டாள். ''மாமா, இந்தக் கஷ்டத் திலேயிருந்து என்னை விடுவிக்க மாட்டேளா?'' என்று பரிதாபமாக வேண்டிக்கொண்டாள்.

அந்தக் கொடூரச் சித்தரோ, ''என் காலில் விழுந்தால் காரியத்தைச் சாதிச்சுக்க முடியுமா என்ன? என் கிட்டே யிருந்து நகை நட்டு ஒண்ணும் பெயராது. நாளைக்கே காலம் எப்படி இருக்குமோ? நீங்களெல்லாம் இந்தப் பெண்ணையும் பேத்தியையும் என்ன செய்வேளோ?'' என்ருர்.

அம்மாவுக்கு ஒரு வேகம் வந்தது. 'மயிலே மயிலே இறகு போடு' என்ருல் இந்த மனிதர் மசிய மாட்டார். இவரைக் கேட்கிறபடி கேட்க வேண்டும் என்று தீர்மானித் தாள். லலித் சட்டர்ஜி என்ற பக்தர் ஒருவர் இருந்தார். அவர் அஞ்சா நெஞ்சர். எதற்கும் துணிந்தவர். அவரைக் 'கெய்ஸர்' என்றே அழைப்பார்கள். அம்மா அவருக்குத் தகவல் தெரிவித்தாள். 'கெய்ஸர்' கல்கத்தாவின் பெரிய போலீஸ் அதிகாரி ஒருவரிடமிருந்து கடிதம் பெற்றுக் கொண்டு, போலீஸார் சூழ, அமர்க்களமாக ஐரோப்பிய உடுப்பு தரித்து, ஒரு டல்லக்கில் ஆரோகணித்து ஸுரபாலாவின் தந்தை வீட்டில் வந்திறங்கினுர், அந்தப் பொல்லாத கிழவர் நடுநடுங்கிக்கொண்டு 'கெய்ஸ'ரின் காலைப் பிடித்துக் கொண்டார். தன்வினை தன்னைச் சுட்டது!

இங்கே அம்மா, சம்பந்தியின் வீட்டுக்குக் 'கெய்ஸர்' வந்தாயிற்று என்று அறிந்ததும் விலவிலத்துப் போனாள். மகாசயர் எனப்படும் மகேந்திரநாத் குப்தாவிடம், ''நீங்களும் கூடப் போயிருங்கோ. சம்பந்தியைக் கெய்ஸர் அவமரியாதை பண்ணிவிடப் போறான். அவனுக்குக் கோபம் வந்ததுன்னு எல்லையே இருக்காது. நீங்க கூட இருந்தால் கொஞ்சம் பதமாயிருப்பான்'' என்று கையைப் பிசைந்துகொண்டு கூறி அனுப்பினாள். அதுதான் தாய் உள்ளம்!

நகைகளுடன் வெற்றி வீரராக வந்தார் லலித் சட்டர்ஜி. 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டாள் அம்மா. ''ஸுர பாலாவை உத்தேசித்து நகைக்காகக் கவலைப்பட்டது போய் அந்தக் கிழவனுக்காகக் கவலைப்பட்டு எனக்குக் கை காலே ஓடவில்லை. அவரை ரொம்பப் பயமுறுத்திவிடவில்லையே?'' என்று 'கெய்ஸ'ரைக் கேட்டாள்.

* * * *

ஸுரபாலாவின் தந்தைபோல் பொருளாசைப் பேய் பிடித்தவர் உள்ள இவ்வுலகில் பொருள்களில் சிறிதும் பற்றே இல்லாத புனித ஜீவன்களும் இருக்கத்தான் செய்கின்றன. அப்படிப்பட்ட மூவர் கல்கத்தாவிலிருந்து அறுபது மைல்களும் நடந்தே வந்து ஓர் இரவில் அம்மாவை அடைந்தனர்.

''அம்மா, நாங்கள் எல்லாத்தையும் துறந்து பரிவ்ராஜக சந்நியாசிகளாக சஞ்சாரம் பண்ண சங்கல்பம் எடுத்திருக்கோம். ஆசிரமங்களில்கூட வாசம் செய்யாமல் திரியப் போறோம். தானாக லபிச்சால்தான் பிக்ஷை ஏற்கப் போறோம். தேவி, நீங்கதான் எங்களுக்கு சந்நியாசம் தந்து, எங்க சங்கல்பம் நிறைவேற அநுக்கிரகம் செய்யணும்'' என்று மூவரும் அம்மாவிடம் வேண்டினர்.

சந்நியாச ஆசிரமம் தழுவாமல், ஒரு குடும்பத்தில் இருந்து கொண்டு தம்பி மனைவி, தம்பி மகள் ஆகியோருக்காக ஓயாமல் உழைத்துக்கொண்டிருந்த சாரதாமணியிடம் தீவிர சந்நியாச பிக்ஷை கேட்கிறார்கள்! அவளது உள்ளத்துறவின் மகிமை அவர்களுக்குத் தெரியும்!

இருக்கையின்றி, உண்டிக்கும் ஏற்பாடு இன்றி அந்தப் பிள்ளைகள் பரம விராகிகளாகப் போக விரும்பியது அம்மாவின் நெஞ்சை நோக வைத்தது. ''பிற்பாடு ஜாகையும் சாப்பாடும் இல்லாமல் திரியறது கிடக்கட்டும், இப்போதைக்கு நான் போடறதைச் சாப்பிட்டுவிட்டு, ராத்திரி இங்கேயே

தூங்குங்கோ. கார்த்தாலே எழுந்து நான் சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்'' என்றாள் அம்மா.

அம்மாவின் அமுதக் கரத்தால் படைக்கப்பட்ட உணவை உண்டு அம்மூவரும் இரவில் இளைப்பாறினர்.

மறுநாள் காலை அம்மா ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்: ''நானே உங்களுக்கு சந்நியாசம் தரேன். தலையை முண்டனம் பண்ணிண்டு, ஸ்நானம் செய்துட்டு வாங்கோ. காவிக்கல் வாங்கி வஸ்திரத்துக்குச் சாயம் தோய்ச்சுக் கொண்டாங்கோ. அதை என் கையாலேயே உங்களுக்குத் தரேன்''—கடைசி வார்த்தைகளைச் சொல்கையில் தாயுள்ளம் விக்கியது!

அந்தத் தூய ஜீவன்கள் அவ்விதமே செய்தன.

அவர்களிடம் துவராடையை அளித்துவிட்டு, அம்மா கைகுவித்து, மனம் குவிந்து பிரார்த்தித்தாள்: ''டாகுர்! இந்த ஸத்புத்திராளுக்குப் பரிபூர்ண வைராக்கியம் குறையாமல் எப்பவும் ரட்சியுங்கோ! இவா எந்த வனாந்தரத்திலே சுற்றினாலும் இவாளோட வயிற்றுக்கும், வஸ்திரத்துக்கும், வாஸத்துக்கும் குறைவில்லாமே கவனிச்சுக்கோங்கோ!''

அந்தக் குழந்தைகளை வாஞ்சையுடன் பார்த்து, ''இவ்வளவு கடுமையா நீங்க பரிவ்ராஜகம் அநுஷ்டிக்கணும் என்கிறதே இல்லை. ஆனாலும் பிரதிக்ஞை பண்ணிட்டேள்; அப்படியே இருக்கட்டும். முதல்லே காசிக்குப் போங்கோ. அங்கே தாரக் (ஸ்வாமி சிவானந்தர்) இருக்கார். அவர்கிட்ட சந்நியாச நாமம் வாங்கிக்கோங்கோ. அவர் உங்களை நன்னா கவனிச்சுப்பார். நானும் அவருக்கு எழுதறேன்'' என்றாள்.

அவ்விதமே செய்த இம்மூவரும் விசுத்தாநந்தராகவும், சாந்தாநந்தராகவும், கிரிஜாநந்தராகவும் பர்ணமித்தனர்.

இச்சமயத்தில் ஒரு பக்தரிடம் அம்மா பேசிய பேச்சு ரத்தினத்துக்கும் மேலே உயர்வானது.

அந்த பக்தர், ''ராமகிருஷ்ணர் சாட்சாத் பரம்பொருளா?'' என்று கேட்டார்.

''சந்தேகமில்லாமல்'' என்றாள் அம்மா.

''மனைவிக்குக் கணவன்தான் கடவுள் என்கிற ரீதியில் சொல்கிறேளா?''

''கணவர் என்கிற முறையிலும்தான்; வாஸ்தவத்திலும்தான்.''

''சரி, அப்படீன்னா ஸீதைக்கும் ராமனுக்கும், ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் இருந்த மாதிரி உங்களிருவருக்கும்

ஐக்கியம் இருக்கணும். நீங்க சாதாரண மனுஷி மாதிரிச் சப்பாத்தி மாவை உருட்டிண்டு இருக்கேளே?''

''குழந்தே! இதுதான் மாயை, மானய என்கிறது. வைகுண்டத்திலே நாராயணனுக்குப் பக்கத்திலே மகாலக்ஷ்மியாக உட்கார்ந்திருக்கவேண்டியவள்தான், இங்கே புகை மூட்டத்திலே சமையல் பண்ணிண்டு இருக்கேன். என்ன காரணம்னு கேக்கிறியா? தெய்வத்துக்கு மநுஷ்யாளா ஆகி விளையாடணும்னு ஆசை. அதுதான் காரணம்.''

''அப்படியானல் உங்களுக்கு அப்பப்போ உங்களுடைய தேவத்துவம் பளிச்சிடுமா?''

''ஆமாம், அந்தச் சமயங்களில் என்னை நானே, 'இதென்ன இந்தக் காரியங்களைப் பண்ணிண்டு இருக்கியே, நீ யார் தெரியுமா?'ன்னு கேட்டுப்பேன். ஆனல் மாயையைப் பாரு. உடனே இந்த வீடு, வாசல், குழந்தைகள் முதலானதெல்லாம் மனசிலே வந்து டகுந்துக்கறது. மாயை என்னை ஆட்டிவைக்கிறதுன்னு அர்த்தமில்லை. நானேதான் மாயையை ஒப்புக்கொண்டு ஏத்துக்கறேன்.''

எதற்காக? நமக்காகத்தான்!

அந்த ஆண்டு நவராத்திரி துர்க்கா பூஜைக்காக அம்மா கிரீஷின் வேண்டுகோளை ஏற்று அவரது இல்லத்துக்கு எழுந்தருளினள். அப்போது அவளுக்கு மலேரியாக் காய்ச்சல்.

கிரீஷ் பெரிய அளவில் விழா எடுத்தார், நடமாடும் துர்க்கை வந்தாள் என்ற பூரிப்பில். ஏராளமான பக்தர்களுக்குத் தரிசனமும், பாதஸ்பரிசனமும் தரும் பொருட்டு அம்மா நெடுநேரம் போர்த்திக்கொண்டு நிற்க வேண்டியதாயிற்று. கிரீஷின் வீட்டிலிருந்து கிருஷ்ண பாவினியின் வீட்டுக்கும் சென்று அங்கே நடந்த பூஜையிலும் அம்மா கலந்துகொண்டாள். இதனல் உடல் மிகவும் நெகிழ்ந்து போயிற்று. அஷ்டமி - நவமி கூடுகிற ஸந்தியில் அதி விசேஷமான வழிபாடு நடக்கும். அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மியாக ஆவிர்பவித்த தேவி, மகிஷாசுரனை வதைத்த பரம புண்ணிய முகூர்த்தம் அதுவே. ஆனல் அச்சமயத்தில் அம்மாவுக்கு ஜுரம் அதிகரித்துவிட்டதால் அவள் தன் ஜாகையிலேயே முடங்கிக் கிடக்கும்படியாயிற்று.

கிரீஷுக்கு ஆற்ற மாட்டாத குறை. தன் வீட்டு மாடியில் துக்கத்துடன் அவர் அமர்ந்திருக்கையில், கீழேயிருந்து ஸந்தி பூஜை தொடங்குவதற்காகப் புரோகிதர் குரல் கொடுத்தார். கிரீஷ் உடனிருந்தவர்களிடம், ''எனக்கு

மனசே சூனியமாயிடுத்து. இதற்கென்றே ஊரிலிருந்து வந்த அம்மா இப்போது நம்மோடு இல்லை. அம்மா இல்லாத துர்க்கா பூஜையிலே அர்த்தமே இல்லை. நீமே என்ன வேணு மானு பண்ணட்டும். நான் வரவில்லை'' என்றார்.

அதே சமயத்தில் பின்புறக் கதவு மெல்லத் தட்டப் பட்டது. ''யார்?'' என்று கேட்டுக்கொண்டே வேலைக்காரி சென்றாள்.

வெளியிலிருந்து, ''நான்தான்'' என்று மிருதுவான குரல் வந்தது.

ஆஹா, அம்மா! கிரீஷ் மூர்ச்சித்து விழாமலிருந்தது ஆச்சரியம்தான்.

''அங்கே எனக்கு இருப்பாகவே இல்லை. அதுதான் வந்துட்டேன்'' என்று கூறிக்கொண்டு உள்ளே பிரவே சித்தாள் சாரதை. குழந்தைகளை ஏமாற்றக் கூடாதென்று காய்ச்சலைப் பொருட்படுத்தாமல் தன் விடுதியிலிருந்து நடந்தே வந்திருக்கிறாள்!

மின்னல் வேகத்தில் செய்தி பரவவே, திமுதிமுவென்று கூட்டம் சேர்ந்தது. ஒவ்வொருவராக அனைவரும் தன் பாதத்தில் மலரிட்டு வணங்கி முடிக்கும் வரையில் அப்படியே நின்றுகொண் டிருந்தாள். பொதுவில் அக்கால மகான்கள் அநு மதிக்க மறுத்த கிரீஷின் நடிக நடிகையர் கூட்டமும் அம்மாவை வணங்கி அருள் பெற்றது. தாபஜ்வரத்தை அம்மா தாங் கியது பெரிதே இல்லை; எத்தனையோ பேரின் பாப பாரத்தைப் பரம பவித்திர மாதா தாங்கினாளே, அதுதான் மகா பெரிசு! பாஸிடிவ் மின்சக்தி, நெகடிவ் மின்சக்தியை வாரி இழுத் துக்கொள்வது போல அம்மாவின் புனித சக்தி, பாவியரின் தீய சக்தியை வாரி இழுத்துக்கொள்ளும். பாவிகள் அம்மா வின் காலைத் தொட்டு வணங்கியவுடன் அவர்களின் பாபம் அம்மாவுள் புகும். அவளது உடம்பு, குறிப்பாகத் திருப் பாதங்கள் பற்றி எரியும். அம்மா அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சகிப்பு ஸ்வரூபிணியாக, சாந்த ஸ்வரூபிணி யாக நிற்பாள். அனைவரும் அகன்ற பின்னரே கங்கா ஜலத் தால் திரும்பத் திரும்பக் கால்களை அலம்பிக்கொண்டு அந்தத் தாபத்தைத் தீர்ப்பாள் அம்மா. இப்படி அவதிப் பட்டபோதிலும் அடியார் தன் அடி தீண்டுவதை அவள் தடுக்கவே மாட்டாள்.

இவ்விதம் பிறரது பாபங்களால் மலினமான தனது நளின பாதங்களை நள்ளிரவு வரையில் கழுவிக் கொண்டா

லும், அவளது அருட்கங்கை வற்றவில்லையே! அந்த நடு நிசியில் நடுத்தெருவிலிருந்து ஒரு பதிதனின் குரல் கேட்டு விட்டால் போதும், விரைந்தோடுகிறாளே வாயிற்புறச் சாளரத்துக்கு. பதிதனுக்கும் கருணைமயியாகத் தரிசனம் தந்து, தரிசனத்துடன் அவனது பாபத்தையும் பரிந்து வாங்கிக்கொள்கிறாளே!

அன்பின் எல்லைநிலம் நம் அன்னை சாரதை!

39. சாரதைக்கென வந்த சத்புத்திரர் சரத்

அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்(து) எய்தும் பராபரமே!

—தாயுமானவர்

ஜயராம்பாடிக்குத் திரும்பினாள் தேவி. மலேரியாக் காய்ச்சல் கண்டு ஜன்னி நிலைக்குப் போய்விட்டது. எப்படியோ பிழைத்தாள்.

அம்மாவைக் கல்கத்தாவுக்கு வருமாறு அழைத்தார் சாரதாநந்தர்.

அம்மா மெல்லப் பேசினாள்: "கல்கத்தாவிலேயும் பல தினுசு கஷ்டம் இருக்கு, சரத். முன்னே நான் ஒன்றிக் கட்டையா யிருந்தமட்டும் சரி. இப்போ பிச்சி மாமி (ஸுரபாலா), ராது எல்லாரையும் இழுத்துண்டு வீடு வீடா வர்றது நன்னாயில்லே. நான் இங்கேயே கிடக்கறேன்" என்றாள். கல்கத்தாவில் பக்தர்களின் வீடுகளிலும், வாடகை விடுதிகளிலுமாக மாறி மாறி இருக்கவேண்டி நேர்ந்ததால் அம்மா இப்படிப் பேசினாள்.

சாரதாநந்தரின் உள்ளத்தில் ஓர் உத்தேசம் உருவாயிற்று. ஆனால் கர்ம வீரர்கள் உத்தேசத்தைச் சொல்ல மாட்டார்கள்; அது பழுத்தபின் கனியைத்தான் கொண்டு வருவார்கள். ஏதும் பேசாமலே கல்கத்தாவுக்குத் திரும்பினார் சாரதாநந்தர்.

அன்றிலிருந்து அந்தத் துறவி பைசா பைசாவாகச் சேமிக்கலானார். விவேகாநந்தரின் உரைகளைப் புத்தகமாக வெளியிட்டதில் 2700 ரூபாய் கிடைத்தது. கங்கைக் கரையில் பாக் பாஜாரில் ஒரு பக்தர் முன்னமே அன்பளிப்பாகத் தந்திருந்த மனைக் கட்டில் கடைகால் எடுத்தார். "அம்மா, உன்னை நம்பி இதில் ஈடுபடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு கடன் தேடலானார். எட்டாயிரத்துக்கு மேல் கடனாகத் திரட்டினார். கடைகாலின்மீது கட்டடம் எழும்பியது. பதினோராயிரம் ரூபாய் செலவில் மூன்றடுக்குக் கட்டடம் எழும்பியது. ஆறு அறைகள் கொண்ட கீழ்ப் பகுதி 'உத்போதன்' என்ற சமய சஞ்சிகைக்கு அலுவலகமாயிற்று. முதன் மாடியிலிருந்த மூன்று அறைகளும், மேல்

மாடியில் உள்ள அறையும் அம்மாவுக்கே சொந்தமாக வைக்கப்பட்டன.

பராசக்திக்கு ஜீவராசிகள் அனைத்துமே குழந்தைகள் என்றாலும் கணபதியும் கார்த்திகேயனும் விசேஷமாகக் குழந்தைகள் அன்றோ? அம்மாவுக்கு இப்படி இரு சிறப்புப் புதல்வர்களா யிருந்தவர்கள், முதலில் யோகானந்தரும் பிறகு சாரதாநந்தரும் ஆவர். ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனை எதிர் பாராமல், தாமே பொருள் திரட்டி அம்மாவுக்கு ஆஸ்தானம் அமைத்துத் தந்த பெருமையைப் பெற்றவர் சாரதாநந்தர். எண்ணாயிரம் ரூபாய்க் கடனை அடைக்கவும் அவர் உபாயம் வைத்திருந்தார். அம்மாவுக்குக் கல்லால் வீடு கட்டியவர், 'அப்பா'வுக்குச் சொல்லால் வீடு கட்டிக்கொண் டிருந்தார். ஆம், 'ஸ்ரீ ராமகிருஷ்ண லீலாப் பிரசங்கம்' என்ற டாகுரின் அற்புத வாழ்க்கை வரலாற்றை இயற்றியவர் சாரதாநந்தரே. அந்த நூல் விற்பனையின்மூலம் பிற்பாடு கடனைத் தீர்த்தார்—குருமஹராஜுக்குப் பட்டிருந்த அன்புக் கடனையும்தான்! அன்புப் பணிமூலமே இன்ப நிலையான மோக்ஷத்தைத் தொட்டவர் சாரதாநந்தர்.

வீட்டு வேலை பூர்த்தியானதும் சாரதாநந்தரின் மனம் பூரித்தது. அம்மாவை அழைத்து வர அவர் எண்ணிய அதே சமயத்தில் அவருக்கு அம்மாவின் அழைப்பு வந்தது. அது காறும் கூட்டுக் குடும்பமாக இருந்துவந்த சாரதையின் சோதரர்கள் இப்போது பாகப் பிரிவினை செய்துகொண்டு பிரிந்து போக முடிவு செய்திருந்தனர். வெறும் நாளி லேயே பூசலிட்டுக்கொள்ளும் அவர்களிடை இப்போது புய லாகக் கிளம்பிய சர்ச்சைகளைச் சொல்லி முடியாது. தன் குழந்தைகள் அனைவரிலும் தெளிந்த புத்தியும், நிதானமும், உறுதியும் கொண்ட 'சரத்' வந்தாலே சுமுகமான தீர்வு பிறக்கும் என்று அம்மா கருதி, அவரை அழைத்தாள்.

சாரதாநந்தர் ஜயராம்பாடிக்குச் சென்றார்.

மழை பெய்து, சாரதாதேவியின் வீட்டு வெளிமுற்றம் குண்டும் குழியுமாகி இருந்தது. அந்த வடு எவர் பங்குக்கு வருமோ என்பதால் சகோதரர் எவருமே அதைச் செப்பனிட வில்லை. அவர்களது பெண்டிரும் 'நமக்கென்ன?' என்று இருந் தனர். அம்மாதான் அங்கு மண் கொட்டிக் கெட்டித்தும்,சாணம் பூசி மெழுகியும் சரிப்படுத்திக்கொண் டிருந்தாள். சாரதாநந்தர் பிரம்மசாரி ஒருவரோடு ஜயராம்பாடிக்கு வந்தபோது அம்மா இந்தக் கடும் உழைப்பில் ஈடுபட்டிருந்தாள். சரத்தின் மனம் வேதனையுற்றது. ஆனாலும் அவர் வாய்திறக்கவில்லை.

உடன் வந்த பிரம்மசாரி சாரதாநந்தரிடம், ''அந்த வேலையை நான் செய்கிறேனே!'' என்றார்.

அம்மாவைப் பூரணமாகப் புரிந்துகொண் டிருந்த சாரதாநந்தர் பகர்ந்தார்: ''அசடே! அம்மாவிடம் போய் உன் ஆசையைச் சொல்லிவிடாதே! அம்மா என்ன சொல்லுவா தெரியுமா? 'நான் இந்த ஊர்ப் பெண். உழைச்சுப் பழகின வள். அதனாலே நான் இந்த வேலை செய்யறது கிராம ஜனங்க ளுக்கு வித்தியாசமாத் தெரியாது. ஆனால் நீ இதே காரியத் தைச் செஞ்சேன்னு வைச்சுக்கோ. அது எல்லாருக்கும் பளிச் சுனு தெரியும். 'இந்த முகர்ஜியகத்திலே தடி தடியா மாட் டுப் பெண்களும் பேத்திப் பெண்களும் இருக்கே! அப்படியிருந் தும் பட்டணத்துலேயிருந்து வந்த பிள்ளையாண்டான்னு சாணி போட்டு மொழுகறான்? என்ன அக்கிரமம்னு ஊரே பேசும். அதனாலே இந்த ஜாடுமாரி எனக்கே இருக்கட்டும்'னு அம்மா தீர்மானமாகச் சொல்லிடுவா!''

'பிறர் சிறுமை புறங்காக்கும்' அம்மாவின் பண்பைப் படம் பிடித்துக் காட்டிவிட்டார் அவளுடைய சிறப்புப் புதல் வர் சரத்.

பாகப் பிரிவினை அடிதடி இல்லாமல் நடந்ததற்குச் சாரதா நந்தர்தான் காரணம். அவரது ஆத்மிக காம்பீர்யம் காரண மாக, அவரது தலைமறைவில் குஸ்தி பிடித்துக்கொண்ட அந்த அழகுச் சோதரர்கள், அவரைக் கண்ட மாத்திரத்தில் பெட்டிப் பாம்பாகி விடுவர். சகோதரர்கள் வெட்கக் கேடான முறையில் கணக்குப் போட்டுப் பிரிவினை செய்யும் போது, அம்மா சிறிதும் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி இருந் தாள். அவளது பற்றின்மையையும், நிச்சலனப் பாங்கையும் கண்டு அவளை நன்கு புரிந்துகொண்ட 'சரத்'துமே ஆச்சரி யப்பட்டார்.

கல்லுக்குள் ஈரம் என்பார்களே, அது போல, சாரதை யின் வறண்ட சகோதரர்களுக்குள்ளும் ஒரு குளிரிழை ஓடிற்று. வாழ்நாள் எல்லாம் தங்களுக்கு உழைத்துக்கொண் டிருப்ப வளும், பணத்தாலும் எவ்வளவோ செய்திருப்பவளுமான அக்காளுக்கெனப் பிதுரார்ஜிதக் குடிசைகளில் ஒன்றைத் தர அவர்கள் முடிவு செய்தனர். மத்தியஸ்தக் குழுவினர் அம்மா எந்தக் குடிலைத் தேர்ந்தெடுக்கிறாள் எனக் கேட்டனுப்பினர்.

அம்மாவின் முகத்தில் இகலோகத் தொடர்பில்லாத இளநகை அரும்பியது. ''இந்த எலிகள் இருக்கே, அதுகள் பாவம், தங்களுக்குன்னு வளை தோண்டிக்கும். அப்புறம் என்ன நடக்கும் தெரியுமோ? நாகப் பாம்பார் வந்து அந்த

எலிகளைத் தின்னுட்டு, வளையிலே ஜம்முனு வாஸம் பண்ணு வார்'' என்று பதில் சொல்லியனுப்பினாள்.

மத்தியஸ்தருக்கு இந்த வேதாந்தம் புரியவில்லை. அன் றாட உலகைக் கருத்தில் வைத்து அம்மா ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று சொல்லியனுப்பினார்.

''எனக்குன்னு எதுவும் வேண்டாம். நான் பிரஸன்னன் அகத்திலேயும், கேலே அகத்திலேயும் மாறி மாறி இருந்துக்க றேன்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டாள் அம்மா.

பிறகு சாரதாநந்தரிடம், ''சரத், நான் கல்கத்தாவுக்கு வரேண்டாப்பா'' என்றாள், அன்பு மயமாக.

சாரதாநந்தரின் உள்ளத்தில் ஆனந்த ஊற்றெடுத்தது. கல்கத்தாவில் சரத் கட்டியிருப்பதுதான் தனக்குச் சொந்த வீடு என்பதை அம்மா எப்படிச் சொல்லாமல் சொல்லிவிட்டாள்?

1909-ஆம் ஆண்டு மே 23-ஆம் தேதி சாரதாதேவி 'உத் போதன் சாலை' என்றே இப்போது பேர் பெற்றுவிட்ட அந்த பாக் பஜார் வீதியில் சாரதாநந்தர் எழுப்பியிருந்த கட்டடத் தில் பொன்னடி வைத்தாள். அங்கும் சில அசௌகரியங்கள் இல்லாமலில்லை. ஆனால் சாரதாநந்தர் கூர்த்த கவனத்துடன் அங்கே செய்திருந்த ஏற்பாடுகளைப் பார்த்து அம்மா அள வில்லாத மகிழ்ச்சி அடைந்தாள். ''குழந்தே! உன்னை இருதயம் நிரம்பி ஆசீர்வதிக்கிறேன்'' என்றாள்.

* * *

சாரதாநந்தரை 'அம்மா சொற்படி நடப்பவர்' என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அம்மா சொல்லுமுன்பே அவளுக்கான பணிவிடையைச் செய்துவிடுவார் அவர். அதோடு அம்மாவே சாரதாநந்தரின் சொற்படி நடப்பவளாக ஆகிவிட் டாள். எந்த விஷயமானாலும், ''சரத் எப்படிச் சொல்றானோ அப்படிச் செய்யலாம்'' என்பாள். இதனால் அவருக்குத் தலைக்கனம் ஏறவில்லை; முன்னிலும் எளியராக ஆனார். தம்மை யாராவது நமஸ்கரித்தால்கூட அதை, சாரதா நந்தரால் தாங்க முடியாது. ''நீங்க அம்மாவோட பிரதம சிஷ்யர் இல்லையா? அதுக்காக நமஸ்கரிக்கத்தான் வேணும்'' என்று யாரேனும் கூறினால், ''அந்த அம்மா உங்களுக்கும் அநுக்கிரகம் பண்ணுகிற அம்மாதானே? அவளோட கடாக்ஷத் துக்குக் காத்திருந்து பிரார்த்தனை பண்ணுகிறவன்தான் நான். அவள் திருஉள்ளம் கொண்டால் இந்த க்ஷணத்திலேயே என் இடத்திலே உங்களை அமர்த்த முடியுமே!'' என்பார்.

நம் பெரிய அம்மாவுக்குச் சின்னம்மை வார்த்தது. கடுங் கோடைக்காலம் வேறு. அம்மாவின் சூழலையும் உள்ளத்தையும் குளிர்விக்கச் சாரதாநந்தர் சகலமும் செய்தார். தினமும் சீதளா (மாரியம்மன்) கோயில் அர்ச்சகர் வந்து வேப்பிலை போட்டார். அம்மா கழுத்தைச் சுற்றிப் புடைவைத் தலைப்பை முடிந்து சம்பிரதாயப்படி அவரை நமஸ்கரிப்பாள்.

ஒரு பக்தர், "அம்மா, நீங்க ரொம்ப எளிமையானவா என்பது உண்மை. ஆனாலும் குரு மஹராஜின் பத்தினி என்கிறதுக்காகவாவது நீங்க இந்தப் பூசாரிக்கு விழுந்து நமஸ்காரம் பண்ணாம இருக்கணும். இவன் சாமானிய ஆள்" என்றார்.

"அது எப்படி வேணுமானு இருக்கட்டும். அவர் அம்பாளைத் தொட்டுப் பூஜை பண்ணுகிற பிராம்மணர். அவாளை நமஸ்காரம் பண்ணுவது சம்பிரதாயம். அவாவாளுடைய ஸ்தானத்துக்கான மரியாதையைத் தரத்தான் வேணும். குரு மஹராஜ் பழைய ஆசாரங்களை அழிக்கிறதுக்காக வர்றல்லேன்னு புரிஞ்சுக்கோ" என்றாள் தேவி.

அம்மாவுக்கு அம்மை இறங்கித் தலைக்கு ஜலம் விடப்பட்டது. அவள் சாரதாநந்தரிடம், "அப்பனே! சீதளா தேவிக்காக ஒரு நாள் பட்டினி கிடக்கணும். இப்போ எனக்கு ரொம்ப பலஹீனமாக இருக்கு, அதனாலே எனக்குப் பதில் நீ உபவாஸம் இருந்துவிடு" என்றாள். சாரதைக்கும் சரத்துக்குமிடையே தனித்தன்மை வாய்ந்த ஒட்டுதல் இருந்தது என்பதற்கு இது ஒன்றே போதுமான உதாரணம்! பிறர் சிரமத்தைத் தன்னிடம் வாங்கிக்கொள்வதையே வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டிருந்த அம்மா, தன் சிரமத்தை ஸ்வாதீனமாகச் சாரதாநந்தரிடம் தள்ளினாள் என்றால் என்னென்பது? பிள்ளைகளுக்கு உணவிட்டே மகிழ்ந்த நம் அன்னை, இந்த ஒரு பிள்ளைக்குமட்டும் உபவாசம் இட்டாள் என்றால், அவர் அவளது அதி விசேஷப் புதல்வர் அன்றோ? "சரத் இல்லாமல் என்னாலே ஒண்ணும் செய்ய முடியாது; அவன் இல்லாமல் ஒரு இடத்திலேயும் இருக்க முடியாது. என்னைப் பராமரிக்கிறது எத்தனை பாரம்னு உங்களுக்குத் தெரியாது. சரத்தான் என் சுமைதாங்கி. அவன்தான் என் வாசுகி! (பூமியை ஆயிரம் தலை கொண்ட வாசுகிப்பாம்பு தாங்குவதாக ஐதிஹ்யம்.) என் மேலே ஒரு சிறு தூறல் விழ இருந்தால்கூட, அவன் ஆயிரம் தலையிலே ஒண்ணைச் சடேர்னு நீட்டி அதைத் தன் மேலே வாங்கிப்பான்" என்று அடியார்களிடம் அம்மா உணர்ச்சியுடன் கூறுவது வழக்கம்.

''ஆர்ப்பாட்ட பக்தி பண்ணுகிறது வேறே; ஹிதமாக சுசுருஷை செய்கிறது வேறே. இந்தக் கால ஜனங்களுக்கு உணர்ச்சிக் கூத்து அடிக்கத் தெரியும். பக்குவமாகப் பணிவிடை பண்ண என் சரத்துக்கே தெரியும்?'' என்பாள்.

அவளை அழைக்க வரும் அடியார்களிடம், ''சரத்திடம் போங்கள். அவன் எப்படிச் சொல்கிருனே அப்படியே'' என்பாள்.

சரத் சொல்வதற்கு அதிகமாகவோ, மாருகவோ எந்த ஷரத்தும் விதிக்க மாட்டாள் அம்மா.

அவரை நீக்கிவிட்டுத் தன்னிடமே நேரடியாகப் பேசி முடிவு செய்யச் சிலர் விரும்புகிருர்கள் என்று ஒரு முறை கண்டுகொண்ட அம்மாவுக்கு கடுங்கோபமே வந்துவிட்டது.

அவர்களிடம் குரலை உயர்த்திச் சொன்னுள்: ''நீங்க என்ன நினைச்சுண்டு இருக்கேள்? சரத்தான் என் முடியிலே இருக்கிற சூடாமணி. அவன் முடிவுதான் என் முடிவு.''

ஒருநாள் அம்மா எங்கோ வெளியே சென்று மிகவும் களைப்புடன் திரும்பி வந்து சயனித்திருக்கையில் அவளைக் காண வந்தார் ஒருவர்.

அம்மா 'உத்போதன்' கட்டிடத்து மாடியில் இருப்பாள். கீழே இருப்பார் அவளுக்கு ஆனந்தம் தரும் நந்திகேசுவரரும், நேயம் மிகு ஆஞ்சநேயருமான சரத். அவர் அநுமதி பெற்றே எவரும் மேலேறி வர முடியும்.

மேற்சொன்ன நபர் சரத்தை மீறி மாடிக்குச் செல்ல யத்தனித்தார். சரத் அவரைத் தடுத்தபோது அவர், ''அம்மா உங்களோட ஏக போக்கிய சொத்தில்லை'' என்று காரமாகக் கூறிவிட்டு மாடி ஏறினுர்.

மாடியில் அம்மா சுருண்டு படுத்திருந்த நிலை கண்டதும் அவருக்கே பச்சாத்தாபம் உண்டாகிவிட்டது.

''அம்மா! தெரியாமல் வந்து தொந்தரவு கொடுத்துட்டேன். சரத் மகராஜிடம் அபசாரமாக வேறே பேசிட்டேன்'' என்று வருத்தத்துடன் கூறினுர்.

''பரவாயில்லே, குழந்தே! எனக்கு ஒருபோதும் குழந்தைகளாலே சிரமம் என்கிறது இல்லை. என் பிள்ளைக்கும் அபசாரமாக ஏதுமே தெரிகிறதில்லை. பொதுவாகவே என் பசங்கள் கிட்டே இரண்டு குண விசேஷங்கள். ஒண்ணு, அவாளுக்குத் தப்பே பண்ணத் தெரியாது; இரண்டு, தங்க

ளுக்குப் பிறத்தியார் செய்கிற தப்பும் அவாளுக்குத் தப்பா கத் தெரியாது'' என்று மனநிறைவோடு மொழிந்தாள் மாதா.

நூலைப்போல் சேலை; தாயைப்போல் பிள்ளை அல்லவா? கடைசிச் சுவாசம் வரையில் தவறு செய்யாமலும் பிறர் செய்யும் தவற்றைப் பொருட்படுத்தாமலும் வாழ்வதிலேயே உன்னிப்பாக இருந்த நம் அன்னையின் உன்னதப் பிள்ளைகளும் அந்த நல்லியல்பை அள்ளிச் சொரிந்துகொண் டிருந்தனர்!

அம்மாவின் தரிசனம் முடிந்து திரும்பிய அந்த மனிதர் கீழே சாரதாநந்தரிடம் மன்னிப்புக் கேட்டார்.

அவரைக் கட்டி யணைத்துக்கொண்ட சாரதாநந்தர், ''மன்னிப்புக் கேட்கும்படியாக நீங்க என்ன தப்புப் பண்ணினேள்? இத்தனை ஆர்வமும் உரிமையும் இருந்தால்தான் மகாமாதாவின் தரிசனம் கிடைக்கும்'' என்றார். அம்மா சொன்னதை நூற்றுக்கு நூறு மெய்யாக்கிவிட்டார்!

டிசம்பர் மாதம். ஊசியாக உடம்பைக் குத்தியது குளிர். அந்த நாளிலேயே பத்து ரூபாய் விலை பெற்ற 'கெர்ன்ஸி' எனப்படும் உயர் ரகக் கம்பளிச் சட்டை ஒன்றை வாங்கி வந்து அம்மாவுக்குத் தந்தார் சாரதாநந்தர். அம்மா மூன்று நாட்கள் அதை அணிந்துகொண்டாள். நான்காம் தினம், ''சரத்! நான் ஐம்பத்து அஞ்சு வயசான பொம்மனாட்டி. அதிலேயும் விதந்து. நான் சட்டை போட்டுக்கிறது லட்சணமா அப்பா? உன் திருப்திக்காக மூணு நாள் போட்டுண்டாச்சு'' என்று அம்மா கூறி, ஸ்வெட்டரை மடித்து வைத்து விட்டாள்.

இந்த நிகழ்ச்சியைக் கூறும் கம்பீரானந்த ஸ்வாமிகள், ''அம்மா வாழ்நாள் முழுதும் ரவிக்கை அணிந்ததில்லை. சேலையையே நன்றாக உடலில் சுற்றிக் கொண்டு, புஜத்தின் கீழே முடி போட்டுக்கட்டிக்கொள்வாள். ஆனால், சட்டை அணியாவிடினும் அவளது திருமேனி முற்றிலும் மறைந்தே இருக்கும்'' என்கிறார்.

நம் பெண்டிருக்கு அம்மா சொல்லாமற் சொன்ன பாடங்களில் இதுவும் ஒன்று.

சரத் அம்மாவுக்கு எத்தனையோ பணி செய்திருந்தாலும், அம்மாவே அவரிடம் விரும்பிக் கேட்ட பணி ஒன்று உண்டு. 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்று அருணைமுனி வேண்டியதுபோல், அம்மா சந்தி வேளையில்

சாரதாநந்தரை அழைத்து, ''கீர்த்தன் சொல்லப்பா, குழந்தே'' என்பாள். அவரும் அம்மாவின் விருப்பப்படி ஸ்ரீ காளிமாதா வின்மீதோ, பரமேசுவரன்மீதோ கணீரென்ற குரலில் உருக்கத்துடன் கானம் செய்வார். அம்மாவின் பிரீதிக்காக அவர் சுருதி வாத்தியம், தபலா ஆகியனவும் வாங்கி வைத்திருந் தார். நண்பர்களை வாத்தியம் இசைக்கச் சொல்லித் தாம் பாடு வார். அம்மா அதிலேயே மனத்தைப் பறிகொடுத்து அமர்ந் திருப்பாள்.

ஜதீந்திரநாத் மித்ராவின் வீட்டில் நடந்த நாம சங்கீர்த் தனத்துக்குச் சென்றாள் அம்மா. ஜதீந்திரர் வெகு உருக்கமாகப் பாடினார். கண்ணனைப் பிரிந்த கோபியர் மதுரஸ்வரத்தில் அழுத அழுகையை இன்று பக்தர் கண்முன் அல்லது காதுக்குள் கொண்டு வந்து விட்டார். அனைவரும் ஆர்வத்துடன் செவி மடுத்தனர். அன்று அவர் ஏதோ ஊருக்குப் போக வேண்டு மென்பதால் விரைவில் இசையை முடித்துவிட்டார். பாவ சமாதிக்கும் இக உலகுக்குமாக ஊஞ்சலாடிக்கொண் டிருந்த அம்மா, ''எல்லாம் விரகப் பாட்டாகவே இருந்துடுத்து. கோபிகைகள் கிருஷ்ணனை மறுபடி சேர்ந்து ஆனந்தமாகப் பாடினதிலே ஒரு கீதமாவது பாடட்டும்'' என்று சொல்லி யனுப்பினாள். அவ்விதமே ராதா கல்யாண கீதம் ஒன்று பாடப் பட்டது. ராதையும் கிருஷ்ணனும் ஊஞ்சலாடினர். பூலோகத் துக்கும் கோலோகத்துக்குமாக ஊஞ்சல் ஆடிக்கொண் டிருந்த அம்மா கோலோகத்திலேயே நிலைத்துவிட்டாள்.

நீண்ட நேரமாகியும் சாரதைக்கு வெளி உணர்வு ஏற்பட வில்லை. கோலாப் மா அவளது சரீரத்தைத் தேய்த்து, கைக ளைப் பிடித்து அணைத்தபடி அவளை எழுப்பி வாசல் வரையில் தள்ளிக்கொண்டு வந்தாள். அம்மாவை வாசலில் இருந்த சாரட்டில் ஏறச் செய்வது எவராலும் முடியவில்லை. அவ ளைத் தூக்கியே அமர்த்தும்படியாயிற்று. பிரயாணம் செய் ததோ, உத்போதனுக்குத் திரும்பி வந்ததோ எதுவுமே அம்மா வுக்குத் தெரியாது. திறந்திருந்த கண்கள் மணிக்கணக்காக இமை கொட்டாமல், விழி பெயராமல் குத்திட்டு இருக்க, சமாதியில் ஆழப் புதைந்திருந்தாள் அவள். ''பிருந்தாவனத் தில் டாகுர் இப்படியேதான் இருந்தார்'' என்றாள் கோலாப். உத்போதன் மாடிக்குத் தூக்கிப் போன பின்பும் அம்மாவுக்கு உலகப் பிரக்ஞை ஏற்படவில்லை.

பக்தர்களுக்குக் கலவரம் உண்டாயிற்று. திவ்ய நாமங் கள் பலவற்றை அம்மாவின் செவியில் கூறினர். அப்படியும் பலனில்லை.

''பகவந் நாமாக்கள் என்ன செய்யும்? அம்மாவை இன்னும் ஆழமாகச் சமாதியிலே சொருகத்தான் செய்யும். அம்மான்னு குரல் கொடுத்தா, அப்புறம் அவளாலே திவ்ய லோகத்தில் தரிச்சிருக்க முடியாது. நம்ம கிட்டே ஓடிவந்துவிடுவா'' என்று கூறிக்கொண்டே ஒரு புத்திசாலி பக்தர் அவள் காதிலே, ''அம்மா'' என்று கோஷித்தார்.

மலை அசைந்தது.

''என்னப்பா, என் குழந்தே!'' என்று ஸ்பஷ்டமாகக் கேட்டுக்கொண்டே அம்மா இந்த உலகுக்குத் திரும்பினுள்.

40. சென்னையில் அன்னை

ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட காலமாக வழிபட்டுப் பிரார்த்தனையும், தவமும், ஜபமும், தியானமும் செய்த க்ஷேத்திரங்களில் அந்த ஆத்மிக எண்ணங்களே உருக்கொண்டு விடுமாதலால், அங்கு ஈசுவர சாந்நித்யம் நிறைய இருக்கும் என்பதைப் புரிந்துகொள். புராதன காலந்தொட்டு, எண்ணிலா அடியார்கள் இந்த க்ஷேத்திரங்களுக்கு வந்து உள்ளார்ந்த பக்தியோடு கதறியிருக்கிறார்கள். ஆகையால் எங்கும் இருக்கும் ஈசுவரன் இங்கெல்லாம் தன்னை விசேஷமாகத் தோற்றுவித்திருப்பதை உணரலாம். பூமியின் அடியில் எங்குமே நீர் ஓடினாலும், நமக்கு நீர் வேண்டியபோது உடனே எடுத்துக் குடிக்கக் கிணறும் குளமும் இருப்பதுபோல், எங்கும் உள்ள இறைவனை நாம் எளிதில் உணர க்ஷேத்திரங்கள் உள்ளன.

—பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

1910-ஆம் ஆண்டு இறுதி, கிருஷ்ணபாவினி தேவீ அம்மாவையும், அவளது பெரிய கோஷ்டியையும் ஓரிஸ்ஸாவில் கோதார் என்ற ஊரில் இருந்த தனது எஸ்டேட்டுக்கு அழைத்துச் சென்று உபசரணை செய்தாள்.

கோதார் வாசத்தின்போது ஓர் உன்னத சம்பவம் நிகழ்ந்தது. அம்மாவுக்கு வந்திருந்த கடிதங்களைப் படித்துச் சொல்வதற்காகப் பாரிஷதர் ஒருவர், பகலில் அவள் போஜனம் செய்துவிட்டுச் சிரம பரிகாரம் செய்துகொள்கையில் அவளிடம் சென்றார். அம்மா காலை நீட்டிக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். அவளது பார்வைக்குள்ளும் ஓர் ஆகாயம் இருந்தது. கால்மணி நேரத்துக்கு மேலாகியும் ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்தாள். பாரிஷதர் கனைத்துக்கொண்டார். அம்மா மோனம் கலைந்து அவரைத் திரும்பிப் பார்த்தாள். அவள் நினைவு எங்கோ உயரே ஓடிற்று. பூமிக்கு அடியே ஓடுகிற நீர்ச் சுனையின் நாதம் மேல்நிலத்தில் காதை வைத்துக்கொண்டவருக்கு மெல்லக் குமுகுமுப்பது போல் அம்மாவிடமிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன;

"மறுபடி மறுபடி பூமிக்கு வந்துண்டே இருக்க வேண்டியிருக்கு. சிவனும் சக்தியும் சேர்ந்து சேர்ந்து வரா. இதிலேயிருந்து தப்பவே முடியாது. ஆமாம். ஆனால் ஜனங்களுக்கு எங்கே புரியறது? புரிஞ்சாலும் புரியாட்டாலும் ஜனங்களெல்லாம்

டாகுரோட சொந்தச் சொத்து. அதுக்காகத்தான் மறுபடி மறுபடி வரவேண்டியிருக்கு. சொத்துமட்டும்தானா? அவரே தானே எல்லாமும்? குருடன், நொண்டி எல்லாருங்கூட அவர்தான். யார் படுகிற கஷ்டத்தைப் பார்த்தாலும் அவர் கஷ்டப்படறார்னுதான் தெரியறது. அதைப் பார்க்கறச்சே தான் அவர் கஷ்டத்தைப் பங்கு போட்டுக்கணும்னு துடிச்சுண்டு நானும் கூட வரேன். எல்லையில்லாத அன்பிலே இருதயத்தை முழுக்கிண்டு கஷ்டத்தை வாங்கிக்கறேன்; தூக்கம், சாப்பாடு, சௌகரியம் இதெல்லாம் துச்சமாப் போயிடறது. எல்லாரும் ஒய்வு எடுத்துக்கறா. எனக்கு ஒய்ச்சல் ஒழிவே கிடையாது...அவருக்குந்தான். தினம் தினம் அதே சூரியன் வர்றமாதிரி, அவரேதான் அத்தனை அவதாரத்திலேயும் வந்திருக்கார். நன்னா சிக்கிண்டாச்சே, எப்படித் தப்பறது? மநுஷனைப் பார்த்துக் கவி பாடினார்:

ஜன்மம் போனால் பின்னொரு ஜன்மம்
துன்பம் கன்மம் தொடருது வன்மம்
இன்னலை நீக்கி இன்பம் தேக்கிட
இன்னமும் வழிநீ கண்டிலை அந்தோ!

''மநுஷா மட்டுந்தானா? டாகுருக்கும் இதே அவஸ்தை தான். அவர் படற அவதி யாருக்குத் தெரியும்?''

அம்மாவின் பனித்த நயனங்களிலிருந்து முத்து முத்தாக நீர் உதிர்ந்தது.

சிவனும் சக்தியும் சேர்ந்து வருவதாக அம்மா சொன்னாள். சிவன் போன பின்பும் இந்தச் சக்தியே அல்லவா அவதிப் படுகிறாள்? ''டாகுரைமட்டும் சொல்றேளே, உங்க துயரத்தைச் சொல்லுங்கோ'' என்றார் பாரிஷதர்.

சிவன் வேறெங்கும் போகவில்லை, இந்தச் சக்தியுள்ளேயே தான் போயிருக்கிறார் என்று அந்தக் குழந்தை உணராததைக் கண்டாள் தேவி. உடனே தன் மனத்தை இந்த உலகுக்கு இறக்கிக்கொண்டு, ''அசடு! அவரைச் சொல்லிவிட்டுப் போயும் போயும் என்னையும் அவரோடு சேர்த்துப் பேசறதாவது? நான் அவரோட சரணதாஸி, அவ்வளவுதான். 'அமீ யந்த்ர, துமீ யந்த்ரீ'ன்னு (நான் வெறும் கருவி, நீயே அதை இயக்கும் சக்தி) வசனம் சொல்வாளே, நீ கேட்டதில்லை?'' என்றாள்,

இதே வசனத்தை ராமகிருஷ்ணர் காளியிடம், அதாவது சாரதையிடம் சொல்வதுண்டு. சிவனைத்தான் சக்தி இயக்கி வைக்கிறது என்பது உலகப் பிரசித்தம்!

ராதாசியாமன் ஆலயத்தில் மணி முழங்கியது. ''என்ன, சாயரட்சையா ஆயிடுத்து! சரி, கடிதாசுகள் படி'' என்ருள்.

வங்காளிகள் அக்ரஹாயண மாதத்தில் (நமது கார்த்திகை அமாவாசைக்குப் பிறகு வரும் இரு பட்சங்கள்) ஒரு சரஸ்வதி பூஜை செய்வது வழக்கம். சாரதையின் சந்நிதி விசேஷத்தால் கோதாரில் சரஸ்வதி பூஜை விமரிசையாக நடைபெற்றது. அன்று ஒரு விசேஷம் நடந்தது. அதாவது, நம் அம்மா அன்று தன்னைத் தர்ம ஆசார்யர்களில் ஒருவராக வெளிக்காட்டிக் கொண்டு, சமயப் பிரச்னை ஒன்றுக்குத் தீர்வு வழங்கினுள்.

விஷயம் இதுதான்: கோதாரில் போஸ்ட்மாஸ்டராக இருந்த தேவேந்திரநாத் சட்டர்ஜி இளமையில் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியவர். இப்போது அவருக்கு மீண்டும் ஹிந்து மதத்துக்கே மாறவேண்டும் என்ற தாபம் உண்டாயிற்று. மறுபடி தாய்மதம் தழுவ வழி உண்டா என்று நம் தாயைக் கேட்டனுப்பினுர்.

அம்மாவும் தயங்காமல் தர்மாசாரியராகி உடனுக்குடனே உத்தரம் தந்தாள். ''தேவேந்திரநாத்தைச் சிகை வைச்சுண்டு, புண்யாஹவாசனம் பண்ணிக்கச் சொல்லுங்கோ. இந்த ஊர்த் தெய்வமான ராதாசியாமனுக்குப் பூஜை நடத்திவைக்கட்டும். அப்புறம் அவர் மறுபடி உபவீதம் (பூணூல்) போட்டுண்டு நிறைய காயத்ரி ஜபம் பண்ணட்டும். பழைய படி ஹிந்துவாகிவிடுவார். என்கூட வந்திருக்கிற கிருஷ்ணலால் சுத்தமான பிரம்மசாரி. அவனையே தேவேந்திரநாத்துக்கு உபவீதம் தரச் சொல்றேன். சரஸ்வதி பூஜைக்கு முதல் நாள் புண்யாஹமும், ஊர்த்தெய்வ ஆராதனையும் செய்யட்டும், சரஸ்வதி பூஜையின்போது இங்கேயே உபவீதமும், காயத்ரி உபதேசமும் வாங்கிக்கட்டும்'' என்று தெளிவாகக் கூறினுள் தேவி.

இதுபோன்றதொரு சமயப் பிரச்னையில் நம் அன்னை அபிப்பிராயம் சொன்னுல், அது ஏதோ சாதாரண மனித மனத்தில் தோன்றிய கருத்தல்ல எனலாம். திவ்ய ஆக்ஞையையே கூறும் சாஸ்திரப் பிரமாண வாக்கு அது என்றே கொள்ளலாம். அடக்கத்தின் உருவான அம்மா, பெரும் பிரச்னைகளில் மனம் போனபடி அபிப்பிராயம் கூறுவாளா, என்ன?

தேவேந்திரநாத்தின் தாபம் தீர்ந்தது. அம்மா விதித்த வண்ணம் செய்தார். பிரம்மசாரி கிருஷ்ணலாவிடம் பிரம்மோப

தேசம் பெற்று அம்மாவிடம் வந்து அடிபணிந்து ஒடுங்கி நின்றார். சரஸ்வதி பூஜையான அந்தச் சுபதினத்தில் சாரதையும் அவருக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து அருளினாள்!

பாரதத்துக்கே ஒருவிதத்தில் வழிகாட்டியாக விளங்கிய வங்கம் கிறிஸ்துவ மதத்திலும், அம்மதச் சார்புகொண்ட பிரம்ம சமாஜத்திலும் பெருத்த ஈர்ப்புக் கொண்டிருந்த சமயத்தில், ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சாரதாதேவியும் தோன்றினர். வங்கத்தையும், அதன் வழியே பாரதத்தையும், மீளவும் ஹிந்துமதத்துக்கு மீட்டுத் தந்தனர். வாதப் பிரதிவாதத்தால் அல்ல; தங்கள் வாழ்வின் சீலத்தாலேயே இந்த மாபெரும் புரட்சியை மௌனமாக, அநாயாசமாகச் சாதித்தனர். "ஒரு மதம் அதன் தத்துவப் பெருமையாலோ, அந்த மதத்தினரின் பௌதிக பலத்தாலோ, பண பலத்தாலோ விருத்தி அடைவதில்லை; உத்தம புருஷர்களின் உயிருள்ள உதாரணத்தாலேயே மதம் வளர்கிறது" என்று நம் காமகோடிப் பெரியவர்கள் கூறுவதற்கு அற்புதச் சான்று நம் ஹம்ஸதம்பதி. மௌனமாகச் செய்ததையே தேவேந்திரநாத்தின் விஷயத்தில் வெளிப்படச் சடங்குபூர்வமாகவும் செய்துகாட்டினாள் அம்மா.

கிருஷ்ணபாவினிக்கு ஓர் அற்புத ஆசை எழுந்தது. அது தமிழகம் செய்த பாக்கியம்! "இங்கேயிருந்தே ராமேசுவரத்துக்கு யாத்திரை போய்வரலாமே" என்றாள்.

அதைக் கேட்டதும் அம்மா துள்ளிக் குதித்தாள். "நிச்சயமாப் போகலாம். என் மாமனார் ராமேசுவரம் போயிட்டு வந்தவர் தெரியுமோ? இப்போ மாதிரி சௌகரியமா ரெயில் இல்லாத காலத்திலே நடந்தே போயிட்டு வந்தார். ஒரு வருஷம் ஆச்சாம் அவர் திரும்பறத்துக்கு. சேது பந்தத்திலேயிருந்து பாணலிங்கம் கொண்டு வந்தார். இப்பவும் எங்காத்துப் பூஜையிலே இருக்கு. அவர் திரும்பி வந்தவிட்டுப் பிறந்ததாலேதான் என் மச்சினருக்கு ராமேச்வர்னு பேரு. எனக்கு மகா சந்தோஷம் அங்கே போறதிலே" என்று கூறினாள்.

ராமேசுவர யாத்திரை கிளம்பினர்.

இப்போது பெரிதாகப் பிரகடனம் செய்யப்படும் தேசிய ஒருமைப்பாட்டை அப்போது காசியும் ராமேசுவரமும் மௌனமாகச் சாதித்து வந்தன!

இரண்டாம் வகுப்பு ரெயில் பெட்டியில் அமர்ந்து அம்மா காட்சிகளைப் பார்த்துக்கொண்டு வந்தாள்.

குந்தா ரோடை அடுத்து வந்த நீண்ட சில்கா ஏரி காலை இளம் பரிதி ஒளியில் பொற்பெருக்காக ஓடுவது கண்டு பேருவகை

பூத்தாள் அம்மா. ஏரியின்கரையில் கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்த வெண் நாரைகள் ரெயில் ஓசையில் பயந்து, சிவ்வென்று சிறகடித்து வானில் எழும்பும். அம்மாவின் வெள்ளை உள்ளமும் ஆகாயத்துக்கு எழும்பும். இதுபோன்ற காட்சி கண்டு டாகுர் பாலனாக இருக்கையிலேயே பாவ சமாதி அடைந்திருக்கிறாரே! நீலகண்ட பட்சிகள் வலமிட்டுப் பறப்பது கண்ட அம்மா, சிறு பெண்போல் கை எடுத்துக் கும்பிட்டாள். ''சுப சகுனம்'' என்றாள்.

ராமேசுவர க்ஷேத்திராடனத்தை முன்னிட்டு ஆசார சீலர்களுக்கு உரிய ஆகார நியமங்களை அம்மா மேற்கொண்டாள். பலவிதமான காய்கறிகளையும், பருப்பு, தானிய வகைகளையும் நீக்கிவிட்டாள். இத்தனை கவளங்கள்தான் உண்பது என்று ஒரு கணக்கும் வைத்துக்கொண்டாள்.

கிருஷ்ணபாவினி கோதாரில் சுசிருசியாகப் பலவித உணவு வகைகளைத் தயாரிக்கச் செய்வாள். அம்மாவே அவற்றைத் தன் வழக்கப்படி அடியாருக்குப் பரிந்து பரிந்து பரிமாறுவாள். ஆனால் அவற்றில் பெரும்பாலானவற்றை அவள் தள்ளும்படி செய்துவிட்டது அடியார் ஒருவருக்கு வருத்தம் அளித்தது. இதையொட்டி அவர் அம்மா தள்ளிவிட்ட ஆகார தினுசுகளைத் தாமும் ஒதுக்குவதென முடிவு செய்தார்.

ஆனால் அம்மாவா விடுவாள்? அவருக்கு ஒரு தட்டு சாதத்தை வெட்டி வைத்தாள். பலவித பட்சணங்களை அள்ளி அள்ளிப் போட்டாள். அவர் ஆட்சேபித்தார்.

''அசடு வழியாதே, ராஜா! எனக்காக நீயும் நியமம் இருக்கிறதாவது? நான் இந்த ஒரு வாயாலேதான் சாப்பிடறேனா, என்ன?'' என்றாள் அம்மா.

அவ்வளவு பெரிய பேச்சை அம்மா அலாக்காகத் தூக்கிப் போட்டதும் பக்தர் வாயை மூடிக்கொண்டார்; இல்லை, வாயைத் திறந்து உணவு வகைகளை எடுத்துத் திணித்துக் கொண்டார்!

ராமகிருஷ்ண தேவர் அந்திம காலத்தில் தொண்டையில் புற்றுநோய் கண்டு உண்ணவொண்ணாமல் இருந்தபோது, பக்தர்கள் அவரிடம், ''எங்கள் பொருட்டு நீங்கள் அம்பாளிடம் வேண்டிக்கொண்டு உண்பதற்கு வரம் வாங்கிக்கொள்ள வேண்டும்'' என்று நிர்பந்தித்தனர். அவ்விதமே அம்பிகையிடம் கேட்டுக்கொண்டபின் ராமகிருஷ்ணர் பக்தர்களிடம் சொன்னார்: ''நீங்க வலுக்கட்டாயப் படுத்தினேளேன்னு நானும் அம்மாவைக் கேட்டேன். அம்மா என்ன சொன்னா தெரியுமோ?

நீ இந்த ஒரு வாயாலேதான் சாப்பிடறயா?' ன்னு கேட்டா., எனக்கு வெட்கமாப் போச்சு.''

ராமகிருஷ்ணருக்கு பவதாரிணி உணர்த்தவேண்டியிருந்த உண்மையைச் சாரதாதேவி சுயமாக உணர்ந்து கூறினுள்!

விசாகப்பட்டினத்தில் ஒரு நாள் ஓய்வு கொண்டனர். குன்றின் மீதிருந்து அந்தத் துறைமுகப்பட்டினத்தைப் பார்த்து, ''சித்திரத்தில் எழுதினுப்பலே இருக்கு'' என்று வியந்தாள் தேவி.

அடுத்த நாள் நண்பகலில் சென்னை சென்டிரல் ஸ்டேஷனுக்குள், 'அன்னையை ஏற்றி வந்திருக்கிறேன்' என்று கூவிக் கொண்டே நுழைந்தது ஹவ்ரா-மெட்ராஸ் மெயில்.

எதிரொலியாக, ''மாதாஜிகி ஜய்'' என்று வானளாவக் கோஷமிட்டனர், திரண்டு வந்திருந்த சென்னைவாசிகள்.

வங்கம் தந்த விவேகானந்தரை உலகுக்குத் தந்த பெருமை தமிழகத்துக்கே அதிகம் உண்டு. அமெரிக்கா செல்லுவதற்கு அவருக்கு ஊக்கமும் பொருளுதவியும் பெருமளவில் அளித்தது தமிழகமே. சென்னையில் அம்மாவின் அன்புப்பிள்ளையான 'சசி' (ஸ்ரீமத் ராமகிருஷ்ணுநந்த ஸ்வாமிகள்) மடம் அமைத்து அற்புத சேவை செய்துகொண் டிருந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ண பிரேம பூஜையில் தம்மையே கரைத்துக் கொண்டிருந்த ராமகிருஷ்ணுநந்தர் அதற்குச் சிறிதும் குறைவற்ற பக்தியை ஸ்ரீ சாரதா தேவியிடமும் செலுத்தியவர். குருமஹராஜ் தீ எனில், தூய அன்னையே அதன் வெப்பம் என்று கருதியவர் ராமகிருஷ்ணுநந்தர். தமிழகத்துக்கு ஸ்வாமி விவேகாநந்தர் தமது பேரன்புப் பரிசாக ராமகிருஷ்ணுநந்தரை வழங்கியிருந்தார். அம்மா சென்னைக்கு வரவேண்டும் என்று நெடுங்காலமாகவே விரும்பிவந்த ராமகிருஷ்ணுநந்தர், இன்று அவள் மெய்யாலுமே தன் திருவடியைத் தமிழக மண்மீது வைத்தபோது எல்லையில்லா உவகை கொண்டார்.

தற்போது மயிலையில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக் காம்பவுண்டிலேயே சாலையை ஒட்டினுற்போல் அப்போதுள்ள மடம் அமைந்திருந்தது. சில ஆண்டுகளுக்குள் அது கட்டுமானக் கோளாறு காரணமாக இடிந்து விழுந்துவிட்டது. அதன்பின் இன்றைய மடம் எழுப்பப்பட்டது. மடத்துக்கு அண்மையிலேயே அம்மாவுக்கென ஒரு வீடு அமர்த்தப்பட்டது.

அம்மாவை ஸ்டேஷனிலிருந்து விடுதிக்கு அழைத்துச் செல்ல ஒரு மோட்டார் கார் ஏற்பாடு செய்திருந்தார்

ராமகிருஷ்ணநந்தர். வெயிலில் நிறுத்தப்பட்டிருந்த அந்தக் காரின் உள் ஆஸனமும்கூடச் சூடேறியிருந்தது. அம்மா அதில் ஏறி அமருமுன் ராமகிருஷ்ணநந்தர் ஓடோடி வந்து ஈரத்துணியால் ஸீட்டை நன்கு துடைத்தார். அன்புக்குகந்த 'சசி'யின் சுசுருஷையால் அம்மாவின் ஈர உள்ளமும் வழக்கத்தைவிடக் குளிர்ந்திருந்தது!

டாகுரைப் பூஜை செய்வதையே வாழ்வுப்பணியாகக் கொண்டு. அளவு கடந்த சிரத்தையுடன் வழிபாடு புரிந்து வந்த ராமகிருஷ்ணநந்தர், இப்போது அப்பூஜா பாத்திரங்களையே அம்மா பயன்படுத்திக்கொள்வதற்காக அர்ப்பணித்தார். இவர் டாகுருக்கும் தேவிக்குமிடையே பேதம் பாராததால் அவ்விதம் செய்தார். அம்மாவும் அவற்றை உவந்து ஏற்ருள். ஆயினும் அவளிடம் பாரத ஸ்திரீ தர்மம் எப்படி மிளிர்ந்தது பாருங்கள்! அந்தப் பாத்திரங்களில் இருந்த ஒரு குவளையால் நீர் பருகிய அம்மா, ''சசி, என்ன இருந்தாலும் அவர் மகா பெரியவர் இல்லையா? நான் தீர்த்தம் குடிச்ச இந்தப் பாத்திரத்தை இனிமேலே அவர் பூஜையிலே சேர்க்காதேயப்பா'' என்ருள். ராமகிருஷ்ணநந்தரும் அவள் ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டார்.

அம்மா மயிலையில் 1911-ஆம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து சுமார் ஒரு மாத காலம் வசித்தாள். 'மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை'யில் அவளது வாசம் மட்டிலா மகிழ்ச்சியுடன் நடைபெற்றது. அவளுக்கும் மகிழ்ச்சி. தமிழ் மக்களுக்கும் மகிழ்ச்சி. 'மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை'யில் அம்மா இருந்த வீதி விழாக் கோலம் கொண்டது. ஏராளமான பக்தர்கள் வந்தனர். அவர்களில் எத்தனையோ பேருக்கு அம்மாவே மந்திரோபதேசமும் அளித்தாள்.

இதில் ஒரு விந்தை: அம்மாவும் தமிழ்மக்களும் உரையாடுகையில் மொழிபெயர்ப்பாளர் உடன் இருப்பார். ஆனால் அம்மா ஒருவருக்கு மந்திர தீக்ஷை அளிக்க எண்ணியவுடன், மொழிபெயர்ப்பாளரை அப்பால் போய்விடச் சொல்வாள். இதன்பின் அவள் மந்திரத்தை அளித்து, அதன் செய்முறையை வங்க மொழியிலேயே கூறுவாள். எனினும் கேட்போருக்கு அது தெற்றெனப் புரிந்துவிடும். அதேபோல் அவர்கள் தமிழில் கேட்கிற சந்தேகங்களையும் அம்மா புரிந்துகொண்டு விளக்கம் தந்தாள்!

சென்னை வாசத்தில் பல கோஷ்டிகள் அம்மாவை வந்து தரிசித்தபோதிலும், அவள் மிகவும் ரசித்தது, பள்ளிச் சிறுமிகள் வந்து பைந்தமிழில் பாடி, வயலின் வாசித்ததைத்தான்.

கபாலீச்சுரத்திலும் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஆலயத்திலும் அம்மா வழிபாடு செலுத்தினுள்.

பிரசித்திபெற்ற மெரீஞ பீச்சில் உலவி அதன் பிரசித்தியை அதிகமாக்கினுள். அப்போது அரைகுறையாகக் கட்டப்பட்டிருந்த மீன் காட்சிச்சாலேக்குத் தன் வாழுளில் முதன் முறையாக ரிக்ஷா ஏறிச் சென்ருள்.

அம்மா தன்மீது பாதம் பதித்து, ஒரு மாதம் வசித்த பாக்கியம் தமிழகத் தலைநகருக்கு உண்டு என்பதே நமக்குப் பெருமை ஊட்டுகிறதல்லவா?

41. மதுரையில் மாதா; சேதுவில் சீதா!

மகாசமுத்திரத்தில் இதோ காணப்படும் இதுவே சேது பந்தனம் என்று கியாதி பெற்ற தீர்த்தமாகும். இது மூவுலகிலும் விசேஷமாகப் பூஜித்தற்குரியது. பரம பவித்திரமானது. மகா பாதகங்களையும் போக்குவது. இங்கேதான் முன்பு பிரபுவான மகாதேவன் எனக்குப் பிரஸன்னமாகி அருள் புரிந்தான்.

—வால்மீகத்தில் ஸ்ரீராமவசனம்

மீனாக்ஷி அருளாட்சி புரியும் மதுராபுரியில் வந்திறங்கினாள் நம் மதுர மாதா.

அம்மாவுக்கும் பரிவாரத்துக்கும் நகரசபைத் தலைவர் வீட்டில் இருக்கை தயார் செய்யப்பட்டது.

பிற்பகலில் அம்மா பொற்றாமரைக் குளத்தில் விதிவத்தாக நீராடிவிட்டு, ஆலவாய் அண்ணலையும் அங்கயற்கண்ணியையும் உள்ளம் குழைந்து தரிசித்தாள். ''இங்குள்ள அம்பாள் விக்கிரகம் ஜீவசக்தியுடன் திகழ்வது. காண்போர் உள்ளத்தில் புதியதோர் எழுச்சி அளிப்பது. இதற்கு நிகராக இன்னொன்றைக் காண்பது கடினமே'' என்கிறார் அம்மாவின் சரிதையைக் கூறும் ஸ்வாமி கம்பீராநந்தர்.

மீண்டும் பொற்றாமரைக் குளத்துக்கு வந்தாள் அம்மா. நிறைய அகல் விளக்குகள் வாங்கி, தன்னுடன் வந்த ஒவ்வொருவர் பெயரையும் சொல்லி அவரது க்ஷேமத்தைக் கோரி தீபமேற்றிக் கரையில் வைத்தாள். உடன் வந்தவர்களும் இவ்விதமே செய்தனர்.

உத்தர பாரதத்தில் எங்குமே கண்டிராத மாபெருங் கோபுரங்களையும் மண்டபங்களையும் சிற்பச் செல்வங்களையும் மதுராபுரியில் கண்டு வியந்தாள் அம்மா. திருமலை நாயகர் மகால், தெப்பக் குளம் இவற்றைக் கண்டு பிரமித்தாள். ''ஆஹா, டாகுர்தான் என்னென்ன அற்புத லீலைகள் பண்ணியிருக்கார்!'' என்றாள்.

அம்மா கோஷ்டியினர் ராமேசுவரத்தை அடைந்தபோது இரவு பதினொரு மணி. அர்த்த ஜாமமாகிக் கோயிலை மூடி இருந்தும், அங்கே சென்று கோபுர வாயிலுக்கு வெளியே நின்று வணங்கி வந்தாள் அம்மா. மறு நாள் அதிகாலையிலே சங்கல்பத்துடன் ஸ்நானம் முடித்து, ராமநாதஸ்வாமியின் ஆலயத்தை அடைந்தாள். உலகப் புகழ்கொண்ட அந்த மாபெரும் பிரா

காரம் உலகப் புகழ் கொண்ட அம்மா தன்மீது பிரதட்சிணம் செய்கிற பேற்றை அடைந்தது.

விவேகாநந்தரது வெளிநாட்டுப் பயணத்துக்கு ஒரு முக்கிய ஊன்றுகோலாக இருந்து உதவிய ராமநாதபுரம் மன்னர், 'தம் குருவுக்கு குருவாகிய' அம்மாவுக்கு விசேஷ வரவேற்பு அளிக்கவேண்டும் என்று தேவஸ்தானத்துக்குத் தெரிவித்திருந்தார். அதன்படி ஆலய நிர்வாகிகள் அம்மாவை விசேஷமாக உபசரித்து அழைத்துச் சென்றனர். அம்மாவையும் உடன் வந்தோரையும் கர்ப்பக்கிருகத்துக்குள்ளேயே அநுமதித்தனர். அம்மாவே நேராகத் தன் திருக்கரத்தால் ஸ்ரீராமநாதலிங்கத்துக்கு கங்காபிஷேகம் செய்து, அர்ச்சனை புரியலாம் என்றும் விண்ணப்பித்துக்கொண்டனர். காமகோடி, சிருங்கேரி பீடாதிபதிகளையும், நேபாள மன்னரையும் தவிர மற்ற எவருமே 'அதிகாரபூர்வமாக' இந்த அபிஷேக உரிமை பெற்றதில்லை. அதிகாரத்தை விஞ்சிய அன்பினால் நம் அம்மா பெற்றாள்.

ராமலிங்கத்தின்மீது அணிவிக்கப்பட்ட பொற்கவசம் கழற்றப்பட்டது. லிங்கத்தின்மீது பார்வை பதிந்ததும் குப்பென்று அம்மாவின் சரீரம் சிலிர்த்தது. அந்தச் சிலிர்ப்பிலே பதினாயிரம் ஆண்டுகள் தெறித்தோடின. ''ஆஹா! அன்னிக்கு நான் வைச்சுட்டுப் போன மாதிரியே இருக்கே!'' என்று லலிதமான குரலில் வாய்விட்டுச் சொல்லி, மகிழ்ந்து கொண்டாள் அம்மா!

கங்காதரனுக்கு கங்கை நீராட்டினாள். தயாராகக் கொண்டு வந்திருந்த நூற்று எட்டு சுவர்ண வில்வதளங்களால் அர்ச்சனை செய்தாள்.

ராமேசுவரத்தில் தங்கியிருந்த மூன்று நாட்களும் காலை மாலை இரு வேளையும் ஸ்வாமி தரிசனம் செய்துகொண்டாள் அம்மா. கடைசி தினத்தன்று கோயில் அர்ச்சகர் அனைவருக்கும் போஜனம் செய்வித்தாள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தீர்த்த பாத்திரம் தானம் செய்தாள். 'ராமேசுவர மாகாத்மியம்' படிக்கச் சொல்லிச் சிரவணம் செய்தாள். அதில் விதிக்கப்பட்டிருந்தபடி, புராணத்தைக் கேட்கும் நேரம் முழுதும் தன் கையில் தாம்பூலம் வைத்திருந்து பிறகு அதை விநியோகித்தாள்.

அம்மாவுக்கு ஆலயத் திருவாபரணங்களை எல்லாம் காட்டவேண்டுமென்றும், அதோடு மட்டுமின்றி அவற்றில் அவள் எதையேனும் விரும்பினால் அதை அவளுக்குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும் என்றும் ராமநாதபுரம் அரசர்

உத்தரவிட்டிருந்தார். ஆபரணங்களைப் பார்த்து மகிழ்ந்தாள் அம்மா.

"தாங்கள் இவைகளில் எதையேனும் எடுத்துக்கொள்ள லாம். ராஜாவுடைய விருப்பம்" என்று நிர்வாகிகள் கூறினர்.

"எனக்கு ஏதுக்கப்பா, இதெல்லாம்? என் தேவை என்னவோ அதை எல்லாம் சசி (ராமகிருஷ்ணாநந்தர்) கவனிச்சுக் கருன்; இந்த யாத்திரையிலே எனக்கு ஒரு குறையும் இல்லை."

"அப்படிச் சொல்லக் கூடாது. மகாராஜா விருப்பத்துக் காகவாவது.."

அம்மா சிறிது யோசித்தாள். பிறகு ராதுவைக் காட்டி, "இந்தக் குழந்தைக்கு ஏதாவது வேணும் என்றால் எடுத்துக் கட்டும்" என்றாள்.

இப்படிச் சொன்னவுடனேயே அம்மாவுக்குத் 'திக் திக்' என்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. 'ஐயோ, டாகுர்! யோசனையில்லாமல் என்ன காரியம் பண்ணிட்டேன்? இந்தப் பெண் விலை உசந்ததாக எதையாவது எடுத்துண்டா என்ன செய்வேன்? நீங்கதான் ராதுவுக்குச் சபலம் ஏற்படாமல் ரட்சிக் கணும்' என்று அழமாட்டாக் குறையாக முறையிட்டாள்.

முறையீட்டை டாகுர் கேட்டுவிட்டார்! பொன்னும் மணியுமாக ஜொலிக்கும் அத்தனை குவியலையும் குப்பையாக ஒதுக்கினாள் ராது. "நேக்கு இது ஒண்ணுமே பிடிக்கலை. என் காயித பென்சில் காணாமல் போயிடுத்து. எனக்கு அதுதான் வேணும்" என்றாள்.

ராது சமர்த்துக் குழந்தையாக வளர்ந்துகொண் டிருந்தாள். அம்மா அவளிடம் வைத்த அதீத பிரேமைக்குத் தக்க பாத்திரமாக, சூடிகையும் அழகும் நல்லியல்பும் கொண்டு அனைவரையும் மகிழ்வித்து வந்தாள். இன்றும் வழக்கப்படியே அம்மாவின் மனம் குளிரச் செய்தாள்.

அம்மா நிம்மதியாக நெடுமூச்சு விட்டாள். அரையணுவுக்கு ஒரு பென்சில் வாங்கி வரச் சொல்லி மருமானைத் திருப்தி செய்தாள்.

முதல் நாள் கோயிலைவிட்டு ஜாகைக்கு வந்தபின் அவளது பரிவாரத்தினர் அனைவரும் அவளை முற்றுகையிட்டனர்: "லிங் கத்தின் கவசத்தைக் கழட்டினதும் நீங்க சொன்னேளே, அதுக்கு என்ன அர்த்தம்?"

அம்மா அந்தக் காலப் புது மாட்டுப் பெண் போல் தலை குனிந்தாள்.

பிரம்மசாரி கிருஷ்ணலால், "உங்களை விடமாட்டோம். 'அன்னிக்கு நான் வைச்சுட்டுப் போன மாதிரியே இருக்கே'ன்னு

சொன்னேள். நாங்க நன்னுக் கேட்டுண்டோம். நீங்க மறுக்க முடியாது. அதை விளக்கினுல்தான் ஆச்சு'' என்ருர்.

''குழந்தைகளா, என்னை ஏன் துளைக்கறேள்? சில சமயத்திலே என் உதட்டிலே ஏதாவது உளறல் வந்துடறது. அதுக்கு அர்த்தம் கேட்டா என்ன பண்ணுவேன்?'' - அம்மா அவர்களை மேலே பேச விடவில்லை.

அவர்கள் கல்கத்தாவுக்குத் திரும்பிய பிறகு கேதார்நாத் தத்தருக்கு (பிற்காலத்தில் கேசவாநந்தஸ்வாமிகளாக ஆன பக்த சிரேஷ்டர்) தட்சிண யாத்திரைபற்றிய விவரங்களை அம்மா உற்சாகமாகச் சொல்லிக்கொண் டிருந்தாள். உற்சாகத்தில் மீண்டும் அவள் உதட்டிலிருந்து இதே 'உளறல்' உதிர்ந்துவிட்டது. ''குழந்தே! ராமேசுவரத்திலே, அடாடா! ராமநாதன்தான் எப்படியிருக்கான், தெரியுமோ? ஆதியில் நான் எப்படி வெச்சுட்டு வந்தேனே அப்படியே இருக்கான்'' என்று கூறியவள் நாக்கைக் கடித்துக்கொண்டாள்.

கோலாப் - மா அம்மாவைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டாள். அம்மாவோ, ''என்ன கோலாப், ஒண்ணுமில்லாத துக்கு அமர்க்களப்படுத்தறேள்?'' என்ருள்.

''ஒண்ணுமில்லாததோ? 'ஆதியில் எப்படி வைச்சேனே அப்படியே இருக்கான்'னு சொன்னேளாக்கும்.''

''இல்லவே இல்லை. 'ராமநாதனைப்பற்றி ஆதியில் எத்தனையோ கேள்விப்பட்டிருக்கேன். எப்படிக் கேட்டிருக்கேனே அப்படியே இருக்கான்'னு சொன்னேன்.''

''பொய், பொய். ஆனனப்பட்ட அம்மா பொய் சொல்றேளே!''

கோலாப் வெளியே போய் மற்றச் சிஷ்யர்கள் எல்லோரிடமும் ஆர்த்துக் கூறினுள்: ''சேதுவிலே ராம்ஜியோடு கூடச் சீதா மாதாவும் சேர்ந்து லிங்கம் பிடிச்சு, அர்ச்சனை பண்ணிப் பிரதிஷ்டை பண்ணிட்டு வந்தா, தெரியுமோன்னே? சீதாதேவி மட்டுந்தான் சமுத்திர மண்ணுலே லிங்கம் பிடிச்சா; அதையே ராம்ஜி பூஜை பண்ணினுர்னும் சொல்லுவா. அதைத்தான் அம்மா ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகச் சொல்லிட்டா. மாடியில் இருக்கிற நம்ப மாதா யார் தெரியுமா, சீதாவாக்கும்!''

இது தொடர்பாக இன்னொரு விஷயமும் இங்கே கூறலாம். சில ஆண்டுகளுக்குப் பின் அம்மா விஷ்ணுபூர் ரெயில் நிலயத்தில் கல்கத்தா வண்டிக்காகக் காத்திருந்தபோது, கூலியாள் ஒருவன் அவளிடம் ஓடோடி வந்தான். ''நீ என் அம்மா சீதை ஆச்சே! எம்மாம் நாளா உன்னைத் தேடிக்கிட்டு

இருந்தேன்? எங்கிட்டு ஒளிஞ்சிருந்தே, தாயே?'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினுன்.

அம்மா அவனைப் பரிவோடு தடவிக்கொடுத்தாள். ''போய் ஒரு புஷ்பம் பறிச்சுண்டு வந்து என் பாதத்திலே போடு'' என்ருள்.

அவன் அவ்விதமே செய்தான்.

உடனே அம்மா அந்த இடத்திலேயே அவனுக்கு மந்திரோபதேசம் செய்தாள்.

குருதக்ஷிணை தரவில்லை என்ற குறை அந்த ஏழைப் பிள்ளைக்கு இருக்கக் கூடாது என்றே முன்கூட்டி மலரைத் தன் பாத மலருக்கெனக் கேட்டு வாங்கிக்கொண்டாள்!

அந்தப் போர்ட்டர் என்ன தவம் செய்திருந்தானே - அம்மாவின் சுய ரூபத்தை அத்தனை உறுதியாக உணர்வதற்கு? பூரண எளிமையே எந்த மகாசத்தியத்துக்கும் திறவுகோல் அன்ருே?

இந்த எளிமை காரணமாகத்தான் போலும், அம்மாவின் மருமகள்மாரில் ஒருத்தியான மாகு என்பவளின் குழந்தையான நேதாவும் நம் மாதாவை சீதாவாக அறிந்திருந்தான். எக்காரணம் குறித்தோ அவன் சாரதாதேவியை 'சீதாப் பாட்டி' என்றே அழைத்து வந்தான்.

இந்த அபூர்வக் குழந்தையைப்பற்றியும், அவன் சோக முடிவுபற்றியும் பிற்பாடு பார்ப்போம். இப்போது அம்மாவுடன் ஸேது யாத்திரையைப் பூர்த்தி செய்வோம்.

தநுஷ்கோடிக்குப் போக அம்மாவுக்குச் சௌகரியப் படவில்லை. ஆயினும், இரண்டு சிஷ்யர்களை அனுப்பி வைத்து, தன் பெயரில் வழிபட்டு வரச் சொன்னுள். அவர்களிடம் வெள்ளியில் ஆன சிறிய வில்லும், அம்பும் கொடுத்து, ''தநுஷ்கோடியிலே சமுத்திர ராஜனுக்கு தநுசும் பாணமும் அர்ப்பணம் பண்ணணும்'' என்ருள்.

க்ஷேத்திரங்களைக் குறித்த சாத்திரங்களில் அம்மாவுக்கு அவ்வளவு சிரத்தை. அன்று ராம்ஜி ரௌத்ராகாரமாகக் கடலரசன் மீதுஎய்த தநுர் பாணங்களை இன்று சீதாமாதா அடக்கமயமாக அர்ப்பணிக்கிருள்!

மதுரை வழியாகச் சென்னைக்கு மீண்டும் வந்தாள் அம்மா. அவளது முன்னிலையில் அவ்வாண்டு ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று இந்தச் சென்னைக்கு டாகுரும் சூக்ஷ்ம ரூபத்தில் வந்திருக்கத்தான் வேண்டும்! அந்தப் புண்ணிய தினத்தில் பல புண்ணியசாலிகள் அம்மாவிடம் மந்திரம் பெற்றனர். பொதுவாக அம்மா,

டாகுர் ஜயந்தியன்று மந்த்ரோபதேசம் செய்வதில்லை. ஆயினும், விதிவிலக்காகச் சென்னைவாசிகளுக்கு இந்தப் பேற்றினை வழங்கினாள்.

1911-ஆம் ஆண்டு மார்ச் கடைசியில் அம்மா பெங்களூர் சென்றாள். விஸ்தாரமான பழமரத் தோட்டத்தோடு கூடிய பெங்களூர் ராமகிருஷ்ண மடத்தில் ஒரு வாரம் தங்கியிருந்தாள். அங்கே பக்தர் கூட்டம் அர்ப்பணிக்கும் மலர்கள் மலையாகக் குவியுமாம்.

ஒரு நாள் மாலை அம்மா கவிபுர ஆலயத்துக்குச் சென்று திரும்புவதற்குள் ஆசிரமத் தோட்டம் முழுதும் அடியார்களால் நிரம்பி வழிந்தது. அம்மா வந்ததும் அன்புப் புயலில் சாயும் பயிர்க் கதிர்களென நூறுநூறு சிரங்கள் படபட வெனத் தாழ்ந்து நிலத்தைத் தொட்டன. அவள் உருகி விட்டாள். கண்களிலிருந்து காருண்யம் நீராக வடிய, வார்த்த சிலையாக, வார்த்தையில் வருணிக்க முடியாத அருட் சிலையாக நின்றுவிட்டாள். அப்போது அவளது திருக்கரம் தானாக அபய முத்திரையுடன் ஓங்கி எழுந்தது! சூழலில் தெய்விகம் முட்டி நின்றது!

ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும் நிச்சப்தத்தில், அம்மா குளிரோடை என மெல்ல ஒசிந்து மத்திய மன்றத்துக்குச் சென்றமர்ந்தாள். பேச்சில்லாமலே அம்மாவுக்கும் குழந்தை களுக்கும் இடையில் அன்புமொழியில் உரையாடல் நடந்தது. பலப்பல நெஞ்சங்கள் தாபசமனம் கண்டன.

வெகு நேர மௌனத்தைக் கலைத்து, பெங்களூரில் ராமகிருஷ்ண தர்மத்தைப் பரப்பி வந்த ஸ்வாமி விசுத்தாநந்த ரிடம், "அடாடா! எனக்கு இவாகிட்டே சொல்கிறதுக்கு ஒரு இன்சொல்கூடத் தெரியலையே! நான்மட்டும் இப்போ கன்னடத்திலே நாலு வார்த்தை சொல்லிட்டா இவா எத்தனை சந்தோஷப்படுவா?" என்றாள் அம்மா.

அம்மா இப்படிச் சொன்னதையே விசுத்தாநந்தர் மொழி பெயர்த்துக் கூட்டத்தினருக்குக் கூறினார்.

அவர்கள் ஒரே குரலில், "மாதாஜி அப்படி நினைத்துக் குறைப்படக் கூடாது. தரிசனமாத்திரத்தில் எங்கள் இதயம் நிறைந்துவிட்டது" என்று மறுமொழி கொடுத்தனர்.

அம்மா அம்மாவாகச் சிரித்துக்கொண்டாள்.

பெங்களூர் அம்மாவுக்குத் தந்த அன்பு நிவேதனங்களில் தமிழராகிய டாக்டர் பி. வேங்கடரங்கம் அவர்கள் அம்மாவின் பணிக்கு என்றே அர்ப்பணித்த தம் இரு குமாரிகளை முதன்மை

யாகக் கூறவேண்டும். இவர்களில் ஸுநந்தாதேவி என்பவர் இன்றும் நம்மிடை வாழ்கிறார். அம்மாவின் இறுதிக்காலத்தில் அவளுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் பெற்ற தமிழ் மகள் இவர். தமிழ்நாட்டு வாசம் காரணமாக அம்மாவுக்கு நம்முடைய ரஸத்திலும், அரிசி அப்பளத்திலும் அலாதிப் பிரியம் உண்டானதாகத் தெரிவிக்கிறார் சகோதரி ஸுநந்தை. அது மட்டுமல்ல; தமிழ்ப் பாடல்களை அடிக்கடிப் பாடச்சொல்லிக் கேட்பாளாம்! நமது இசை மரபில் மட்டுமின்றி, தமிழ்மொழியிடத்துமே அம்மாவுக்குத் தனித்ததோர் பற்றுதல் இருந்திருக்கிறது. ஸுநந்தாதேவி தம் உற்றார் உறவினரோடு அம்மாவிடம் செல்கையில், அவர்களைத் தன் முன் தமிழிலேயே உரையாடிக்கொள்ளுமாறு சொல்லி, அதனை உன்னிப்புடன் கேட்டு மகிழ்வாளாம் அம்மா. 'செப்பும் மொழி பதினெட்டுடையாள்' அன்றோ?

ஆசிரமத்துக்குப் பின்புறத்திலே ஒரு குன்று உண்டு. ஒரு நாள் அஸ்தமன சமயத்தில் அம்மா அதன் உச்சிக்குப் போனாள். மலை வாயில் விழுகிற செக்கர்க் கோளத்தைக் கண்டு சொக்கிப் போனாள். தன்மயமாக, சின்மயமாக, குன்றுச்சியில் அமர்ந்தாள்.

இச்செய்தி அறிந்ததும் ராமகிருஷ்ணாநந்தர் பரவசமுற்றார். 'ராமேசுவரத்தில் பர்வதவர்த்தினியைப் பார்த்து வந்த அம்மா பர்வதவாஸினியாகவே ஆனாளா?' என்று பூரித்தார். தமது குன்றனைய பெரிய தேகத்தைத் தூக்கவொண்ணாமல் தூக்கிக் கொண்டு வேகமாகக் குன்றேறினார்.

அம்மாவின் அடியில் தம் முடிபட, உடல் முழுவதும் அவள் நடந்த பொடிபட விழுந்தார்:

ஸர்வ மங்கல மாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே |
சரண்யே த்ரயம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே ||
ஸ்ருஷ்டி ஸ்திதி விநாசானாம் சக்திபூதே ஸநாதனி |
குணாச்ரயே குணமயே நாராயணி நமோஸ்துதே ||
சரணாகத தீனார்த்த பரித்ராண பராயணே |
ஸர்வஸ்யார்த்திஹரே தேவி நாராயணி நமோஸ்துதே ||

சகல பிரபஞ்சங்களையும் இயக்கும் மகாசக்தியே சாக்ஷாத்தாக எதிரே அமர்ந்திருக்கிறது என்ற விழுமிய உணர்வுடன் சுலோகங்களை மொழிந்து வணங்கினார் ராமகிருஷ்ணாநந்தர்.

அம்மா அவர் சிரஸை அழுந்தத் தொட்டு ஆசி கூறினாள்.

பெங்களூரில் நடந்த வேடிக்கை நிகழ்ச்சி ஒன்றினைப் பாருங்கள்:

அம்மா சாமானியச் சேலை அணிந்து சாதாரண ஸ்திரீ போல் அறையோரத்தே அமர்ந்திருக்க, அவளைத் தரிசிக்க வந்த பணக்கார பக்தை ஒருத்தி பட்டும் பூஷணமுமாக மையத்தில் உட்கார்ந்திருந்தாள். பெண்கள் கோஷ்டியொன்று இந்த 'நடுநாயகி'யை சாரதா தேவி என்றெண்ணி அவள் எதிரே காணிக்கைகளை வைத்து நமஸ்கரித்தனர். அந்த அம்மை வில விலத்துப் போனாள். ''என்னை நமஸ்கரிக்காதீர்கள்'' என்று உடலை நெளித்தாள். அம்மா மிகவும் அடக்கமானவள் என்று கேள்விப்பட்டிருந்த அப்பெண்கள், அடக்கம் காரணமாகவே தன்னை வணங்கவும் கூடாது என்று சொல்கிறாள் என்றெண்ணிப் பிடிவாதமாக நடுநாயகிக்கு வணக்கம் செலுத்தினர். அதோடு நில்லாமல், ''பாத ஸ்பரிசம் தரணும்'' என்று வேறு கைநீட்ட ஆரம்பித்துவிட்டனர். அந்த அம்மாள் துள்ளி எழுந்து, படாத பாடு பட்டுக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு வெளியேறினாள். இத்தனையையும் பார்த்துக்கொண்டு அம்மா மாறாத முறுவலுடன் ஓரத்தே அமர்ந்திருந்தாள்.

இரண்டாண்டுகளுக்குப் பின் காசியில் நடந்த ஒரு சம்பவத்தையும் இங்கேயே பார்ப்பது பொருத்தம். பெங்களூரில் ஹாஸ்யக் காட்சியை சாட்சி மாத்திரமாகமட்டும் ரசித்த அம்மா, காசியில் தானே ஹாஸ்யத்தை அதிகப்படுத்தினாள்.

காசியில் தனது விடுதியிலே ஓர் ஒதுக்குப்புறத்தில் அம்மா அமர்ந்திருந்தாள், எளியவளாக. கோலாப்-மா எல்லோர் பார்வையும் படுகிற இடத்தில் உட்கார்ந்திருந்தாள். ஆத்மிக ஆசரணைகளை நீண்ட காலமாக அநுஷ்டித்து வந்த கோலாப் அம்மைக்கு இயல்பான கம்பீரத்தோடு, ஒரு விசேஷ தேஜஸும் உண்டு. எனவே அவளையே மாதாஜியாக எண்ணிச் சில பெண்கள் நமஸ்கரித்தனர். அவள் பதற்றத்துடன் நம் அம்மாவை அவர்களுக்குக் காட்டி, ''அவாதான் மாதாஜி'' என்றாள். அந்தப் பெண்கள் உடனே சாரதையிடம் சென்றனர்.

நடந்ததை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த தேவிக்குக் குறும்புப் புத்தி வந்தது. ''கண்மணிகளா, எனக்கு ஏன் நமஸ்காரம் பண்ணறேள்? பார்த்தாலே தெரியலையா, நான் ஒரு பட்டிக்காட்டுப் பாமரக் கட்டைன்னு? அதோ கம்பீரமா, பிரகாசமா உட்கார்ந்திருக்கிறவாதான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சாரதாமணி தேவியார். அந்த அம்மா சும்மாக்காக உங்ககிட்டே விளையாட்டுப் பார்க்கிறா, போய் அவாளையே சேவியுங்கோ'' என்றாள்.

சூர்ப்பணகையை லக்ஷ்மணனிடமே ராமன் திருப்பி அனுப்பி வைத்து வேடிக்கை பார்த்தான் அல்லவா? அவதார புருஷர்

களுக்கும் அவ்வப்போது வெள்ளையான விஷமத்தில் ஆசை எழும் போலும்!

காசிப் பெண்கள் சுவரில் எறிந்த பந்து திரும்புவதுபோல் கோலாப்-மாவிடம் வந்தனர். பிடிவாதமாக அவளைப் பாதம் தொட்டுப் பணிய முயன்றனர்.

பொதுவாகவே உருட்டலும் மிரட்டலும் செய்கிற கோலாப் சத்தம் போடத் தொடங்கினாள்: "அசட்டுச் சுப்பிகளா? உங்களுக்குக் கொஞ்சமாவது சூக்ஷ்மதிருஷ்டி இருக்கா? நான் அம்மாவைவிடச் சிவப்பாக இருக்கலாம்; வாட்ட சாட்டமாக இருக்கலாம். ஆனால், ஆனால்..." உத்தண்டமான குரல் தழுதழுத்தது: "ஆனால் அந்த தயாமயமான முகத்துக்கு மட்டுமே இருக்கிற தெய்விகத்தைக் கூடவா உங்களாலே கண்டுக்க முடியலே? அதுமாதிரி பிரேமையை, சாந்தியை இந்த அஞ்சு கண்டத்திலேயும் எந்த மநுஷ்ய முகத்திலாவது பார்க்க முடியுமா?"

மீளவும் அம்மாவிடம் வெட்கத்துடன் வந்தனர் அப் பெண்கள். வந்தனம் செய்தனர். அம்மா அவர்களை தட்டிக் கொடுத்து அநுக்கிரகம் புரிந்தாள்.

பெங்களூரிலிருந்து சென்னை மார்க்கமாக ராஜமகேந்திர புரம் சென்று கோதாவரியில் நீராடினாள் அம்மா. அங்கு ஸ்ரீமான் எம். ஏ. பார்த்தசாரதி அய்யங்கார் என்ற ஜில்லா நீதிபதியின் வீட்டில் தங்கினாள். ஜகந்நாதபுரியை தரிசித்துக் கொண்டு 1911 ஏப்ரல் மத்தியில் கல்கத்தாவுக்குத் திரும்பினாள்.

தட்சிண யாத்திரைக்குப்பின் அம்மா முன்னைவிட ஆரோக்கியத்துடன் திரும்பியிருந்தது கண்டு அனைவரும் மகிழ்ந்தார்கள். அம்மாவின் இந்தப் பிரயாணத்தில் அவள் எங்கும் பிரசங்கம் செய்தோ, பிரசுரம் விடுத்தோ பிரசாரம் செய்யாமலே ராமகிருஷ்ண சங்கம் தென்னகத்தில் விழுதுகள் விட்டுப் படர்ந்துவிட்டது. எனவே பேலூர், மத்ய மடத்தில் அவளுக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள். அவள் ஏறி வந்த ஸாரட்டு உள்ளே பிரவேசித்ததும் வேட்டுக்கள் வெடித்தனர். சண்டீ மந்திரங்களை ஓதினர். வானத்திலிருந்து இறங்கியதொரு சுத்த ஸத்வ தேவதைபோல், பளீரென்ற வெள்ளாடையில் தலையிலிருந்து கால்வரை போர்த்துக்கொண்டு தேவி வாகனத்திலிருந்து இறங்கி ஹம்ஸ கதியில் சென்றதைக் கண்டு அடியார் ஹாஹாகாரம் செய்தனர். மடத்து மத்திய மன்றத்தில் காளீ பஜனை நடந்தது. மடத்தின் தலைவராகிய ஸ்வாமி பிரம்மாநந்த

ருக்கு ஸமாதி கூடிவிட்டது. நீண்ட நேரமாகியும் அது கலையாத தால் அம்மாவிடம் தெரிவித்தனர். அம்மா உடனே ஒரு மந்திரத்தைக் குறிப்பிட்டு, அதை பிரம்மாநந்தரின் செவியில் ஓதுமாறு பணித்தாள். அவ்விதம் செய்த மாத்திரத்தில் பிரம்மாநந்தரின் சமாதி கலைந்தது. டாகுருக்குப் பூஜை செய்து அந்தப் பிரசாதத்தை அம்மாவுக்கு அளித்தனர். அதில் சிறிதை அம்மா அருந்தி, மீதத்தை டாகுர்-அம்மா இருவரது பிரசாத மாகக் குழந்தைகளுக்கே அனுப்பி வைத்தாள். மாலையில் அம்மா விடை கொண்டபோது மீண்டும் வேட்டுகள் வெடித்து ஜய கோஷம் செய்தனர்.

அப்போது அம்மாவுக்கு கேம்பிரிட்ஜிலிருந்து வந்திருந்த நிவேதிதையின் மடலை இந்த ''மாதா மாகாத்மிய''த்தில் ஒரு 'மூகபஞ்சசதி' என்று சொல்லவேண்டும். அந்த ரத்தினக் குவியலில் இதோ சில பொறுக்கு மணிகள்:

''அன்பு அம்மாவே! உங்கள் அறையிலேயே ஸந்தியா காலத்தில் தியானம் செய்யவேண்டும் என்று நான் அமருவேனே, அது எத்தனை முட்டாள்தனம்? வாத்ஸல்யம் வருஷிக்கும் உங்கள் பாதங்களிலே சிறு குழந்தையாகப் புரண்டாலே போதாதோ? 'தியானம்' என்ற பெத்தப் பெயரிலே தனியே ஏதோ செய்யவேணுமா என்ன? பிரேம மாதா! நீங்கள் பிரேமையில் நிரம்பி வழிகிறீர்கள். அந்த அன்பு எங்களுடைய அன்பு போன்றதல்ல. நாங்கள் ஆடம்பரமாக அன்பு செய் கிறோம். உங்கள் அன்போ மகா மென்மை! பரம சாந்தம்! ஒருத்தருக்கும் தீங்கே செய்யத் தெரியாமல், எங்கும் நலமே பொலிவிக்கும் பாங்கு அது!

''நீங்கள் தரும் ஆசியில் எத்தகைய அற்புத சுதந்தரத்தை நுகர்கிறேன்! ரொம்ப ரொம்ப அன்பான அம்மாவே! உங் களுக்கு ஓர் அற்புதத் துதி, பிரார்த்தனை கீதம் யாத்து அனுப்ப வேண்டும்போல் இருக்கிறது. ஆனல் அதுவுங்கூட ஒரே சத்த மாக, பேரிரைச்சலாகத்தான் ஆகிவிடும். [சாரதையின் சரிதையை எழுதுகிறவருக்கு இந்த உணர்ச்சி ஓயாமல் உண் டாகிக்கொண்டேதான் இருக்கிறது! - ரா. க.]

''அம்மா, பகவான் சிருஷ்டித்த பரம அற்புத வஸ்து நீங்கள் தான், சந்தேகமில்லை! ராமகிருஷ்ணர், குழந்தைகள் பருகும் பொருட்டுத் தமது அன்புக் கிண்ணத்தை நிரப்பி நீங்களாக வைத்துப் போயிருக்கிறுர். உங்கள் முன்னிலையில் ஏதோ கொஞ்சம் தமாஷ் பண்ணுவது தவிர, நாங்கள் சும்மாக் கிடந்தாலே போதும். பகவானின் அற்புத சிருஷ்டிகள் யாவும்

அமைதியாகத்தான் இருக்கின்றன. நம் பார்வையில் உரசாமலே வாழ்வுக்குள் திருட்டுத்தனமாகப் புகுகின்றன. காற்று, சூரிய வெளிச்சம், பூங்காவின் பசுமை, கங்கை எல்லாமே உங்களைப் போல் மௌனமாகத்தான் வாழ்வில் ஊடுருவுகின்றன....''

ஒரு நாள் ஸாதுக்கள் சமூகப் பணி செய்வதுபற்றிப் பேச்சு வந்தது. ராமகிருஷ்ண மடத்தில் சமயப் பணியோடு சமூகப் பணியை விவேகாநந்தர் பிணைத்ததிலிருந்து வாக்கு வாதங்கள் நடந்ததுண்டு. ஸாதுக்கள் முற்றும் பாரமார்த்திகத்திலேயே ஈடுபட்டிருக்க வேண்டும் என்றும், விவேகாநந்தர் வகுத்துள்ள சமூக சேவைத் திட்டம் டாகுரின் ஒப்புதலைப் பெற்றிருக்குமா என்பது சந்தேகத்துக்கு இடமானதே என்றும் குருபாயிக்கள் உள்படப் பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, இவ்விஷயத்தில் அம்மாவின் அபிப்பிராயத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. தனக்கே உரிய தெளிவுடன், பிரத்தியட்சக் கண்ணோட்டத்துடன் பட்டுக் கத்தரித்தாற்போல் அம்மா பேசினாள். ''ஒருவர் இருபத்துநாலு மணியும் ஜபம், தியானம் இதுகளையே செய்வது நடக்கிற காரியமா? அவை இல்லாதபோது புத்தியை வெறுமனே விட்டால் அது கண்டபடிதான் சஞ்சரிக்கும். அதனால் ஆத்ம ஆரோக்கியத்துக்கே ஹானி வரும். ஆகையால் ஸாதுக்களுங் கூட வேறே உபயோகமான காரியங்களில் மனசைச் செலுத்தத் தான் வேணும். அதுதான் மனசு சுத்தமாயிருக்க வழி. டாகுர் இப்படியெல்லாம் சேவை பண்ணினாரான்னு கேட்கிறு. அவர் ஒரு விதிவிலக்கு. அது சரி, அவருக்கு மதுர்பாபு இருந்தார், வேளா வேளைக்குச் சுசி ருசியா ஆகாரம் அனுப்பறதுக்கு. இந்தக் காலத்திலே எல்லா ஸாதுக்களும் வீடு வீடா பிட்சை கேட்டுண்டு போறது நடக்கிற காரியமா? தங்கள் வயிற்றுக்காக ஏதோ ஒரு தினுசில் உழைக்கத்தான் வேணும். அபூர்வமா சில பேர்தான் எப்பவும் தியானத்திலே முழுகியிருக்க முடியும். மற்றவா அது போக மற்ற வேளையிலே ஏதோ ஒரு வேலையிலே மனசைச் செலுத்தத்தான் வேணும். இதையெல்லாம் நன்றாகப் புரிஞ்சுண்டுதான் நரேன் சுயநலமில்லாத தொண்டு பண்ணணும்னு ஆரம்பிச்சான்.''

அம்மா இப்படிச் சொன்னது ராமகிருஷ்ண சங்கத்தினருக்கே ஒரு புதிய தெளிவையும் ஆர்வத்தையும் அளித்தது. இதுபோல் பல இனங்களில் அம்மா கண்ணுக்கு இடமுமலே வெகு பக்குவமாக சங்கத்தைப் பேணினாள்.

எதிலும் சமநிலை குலையாத அற்புதத் துலாக்கோல் நம் அம்மா. எனவேதான், சமூக சேவையைப் போற்றிய அவளே, உலக சம்பந்தத்தால் ஸாதுக்களின் தூய்மை பாதிக்கப்படுமளவுக்கு அதியாகச் சென்று விடக்கூடாது என்றும் தன் துறவிப் பிள்ளைகளிடம் கண்டிப்புடன் கூறினாள். சொல்வாள்: ''ஸாதுக்கள் ஒருபோதும் கிருஹஸ்தாள் விடுகளில் சேர்ந்து வசிக்கக்கூடாது. உடம்பு சரியாக இல்லை, அது இது என்று காரணம் சொல்லிண்டு குடும்பிகளோடு சந்நியாசிகள் வாழறது யுக்தமில்லை. ஓரிடத்திலேயும் தங்காமல் சஞ்சாரம் பண்ணிண்டே இருக்கா விட்டாலும், ஏதாவது ஒரு மடம் அல்லது ஆசிரமத்திலேதான் அவா வாசம் செய்யலாமே தவிர, வீடுகளில் கூடாது. துறவின்னு பேர் வைச்சுண்டு, இவாளே துறந்து காட்டலைன்னு என்ன அர்த்தம்? தெருவிலே ஒரு மரப்பாச்சிப் பெண் பொம்மை கிடந்தாக்கூட அதை ஒரு ஸாது பார்க்கப்படாது. தனக்கு என்று ஒரு ஸாது பணம் சேர்த்து வைச்சிண்டா அது மகா தோஷம். இந்தத் துக்குணியூண்டு வில்லைகள் (ரூபாய் நாணயத்தைக் குறிப்பிடுகிறாள்) பண்ணமுடியாத அனர்த்தமே இல்லை. யார் கிட்டேயும், எது கிட்டேயும் ஸாதுவுக்குப் பற்றுதல் இருக்கவே கூடாது. இப்போ என் மனசில் இருக்கிறதை வெளிப்படையாகச் சொல்றேன்:

''நம் மடத்தைச் சேர்ந்த ஒரு ஸாது, நான் ராமேசுவரத்திலேயிருந்து திரும்பினவுடனே, நாலு மாசமாக என்னைப் பார்க்காமல் தவியாய்த் தவிச்சதாகச் சொன்னார். இது எனக்கு சந்தோஷம் தரும்னு நினைச்சுச் சொன்னாப்பலே இருக்கு. வாஸ்தவத்திலே எனக்குச் சங்கடமாகத்தான் இருந்தது. என்னதான் நான் அம்மா என்றாலும், ஒரு சந்நியாசி 'தவியாகத் தவிச்சே'ன்னு சொல்கிற அளவுக்கா பற்றுதல் வைக்கிறது? அந்த ஒரு ஸாது மட்டுந்தானா? உங்களில் ரொம்பப் பேர், 'அம்மாவுடைய வாத்ஸல்யம் எனக்கு எப்போ பூரணமாகக் கிட்டும்?' என்கிற ரீதியில் பிரலாபிக்கிறேளே, அது எனக்கு ரசிக்கிறதே இல்லை. தாயன்பு, சேயன்பு-ன்னெல்லாம் ஸாதுக்கள் ரொம்பவும் பெரிசுபடுத்திப் பேசறது உசிதமில்லை. இப்போ சந்தர்ப்பம் வந்ததாலே சொல்றேன். என்னைச் சுற்றிப் புருஷ நடமாட்டம் அதிகரிக்கிறது எனக்கு வேண்டியிருக்கலை. இந்தக் கூடும் ஒரு மநுஷ்ய சரீரம்தானே? தெய்விகத்தைப்பற்றின சிந்தனை சரீரத்துக்கு அப்புறந்தானே வர்றது? என்கிட்டே எத்தனை மரியாதைப்பட்ட ஸ்திரீகளும், கன்யாக் குழந்தைகளும் வந்தபடி இருக்கா என்கிறதையும் கவனிக்கணுமோல்லியோ? இந்த

மாதிரி சந்தர்ப்பங்களிலே, 'பூஜைக்குச் சந்தனம் அரைச்சுத் தர்றேன், பூகொண்டு வர்றேன், தீர்த்தம் எடுத்துண்டு வர்றேன்' னெல்லாம் சொல்லிண்டு நீங்க யாராவது வருவது எனக்குப் பிடிக்கவேயில்லே.''

அம்மாவின் வாத்ஸல்யம் ஈடிணையற்றதுதான்! ஆனால் அந்த வத்ஸர்களில் துறவிகளாக இருப்பவர்களின் தூய்மையில் அவளுக்குள்ள ஈடுபாடோ அதனினும் ஈடிணையற்றதாக இருக்கிறது! இவள் துறவு பூணவில்லை. எனவே இவள் அந்த சந்நியாசிப் பசங்களிடம் எத்தனை வாஞ்சை வைத்தாலும் தவறில்லை! ஆனால் துரீயாசிரமம் தழுவிய அவர்கள் தன்னிடம் அதற்குப் பிரதியான அதீத வாஞ்சையை வைப்பது தகாது என்கிறாள்! தர்மலக்ஷ்மி அவள்! ''அம்மா அம்மா'' என்ற சொல்லுக்கு அனவரதமும் அவளது அந்தராத்மா அவாவிக்கொண்டிருந்தாலும், தன் விசேஷப் புத்திரர்களிடமே இப்படி விதி வகுக்கிறாள்!

ஸாதுக்களின் வாழ்முறைகளை இவ்விதம் கணித்த அம்மா, அவர்களது அரசியல் பற்றுக்களைப்பற்றியும் ஆணித்தரமாகப் பேசியதுண்டு. அதோடு அவளது அரசியல் கருத்துக்களும் பரம ஸ்பஷ்டமாக உருவாகியிருந்தன. இதைப் பார்க்குமுன் ஓர் இனிய நிகழ்ச்சியில் கலந்துகொள்வோம். ராதா கலியாணம் மிக இனிமை அல்லவா?

42. அம்மாவும் அரசியலும்

....மெய்ஞ்ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடும் போர் கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைத்திடத் துணிந்தனை!

—பாரதியார்: காந்தி பஞ்சகம்

ராமேசுவரத்தில் ராது 'காயித பென்ஸில்' கேட்டுக் கொண்டிருந்தபோதே, இங்கே ஜயராம்பாடியில் அவளுக்கு வரன் பார்த்து வந்தார்கள். ஏறத்தாழப் பத்து வயசாகி விட்டதல்லவா?

அனைவரது மனமும் கவர்ந்த செல்ல ராதுவுக்கு நல்ல படிப்பும், செல்வமும் உள்ள நகரத்துப் பிள்ளையாகப் பார்த்து மணமுடிக்கவேண்டுமென அம்மாவின் அடியார்கள் விரும்பினர். அம்மாவிடம் அவர்கள், ''உங்களது அத்யந்த பக்தரான மாஸ்டர் மஹாசயரிடம் (மஹேந்திரநாத் குப்தர்) மணி மணியான பசங்கள் படிக்கிறார்களே! நீங்க அவர் கிட்டே ஒரு வார்த்தை சொன்னால், அவர் ஒரு பேஷான வரனை நிச்சயம் பண்ணிவிடுவார்'' எனக் கூறினர்.

ராதுவிடம் பிராணனையே வைத்திருந்த அம்மா அதற்கு என்ன சொன்னாள் தெரியுமோ? ''சம்ஸார பந்தத்திலே ஒரு ஜீவனை மாட்டி வைக்கிறதுக்கு என் வாயைத் திறந்து நான் யாரையும் உதவி கேட்க முடியாது. அவளோட பெரியப்பன் மார்கள் என்ன முயற்சி பண்ணறாளோ அதைப் பண்ணட்டும். இந்த விஷயத்திலே என் 'சாய்காலை' உபயோகிக்கவேண்டிய தில்லை'' என்று தீர்மானமாகக் கூறினாள். நேர்மையின் உருவன்றோ அவள்?

தாஜ்பூரில் செல்வச் செழிப்புள்ள சட்டர்ஜி குடும்பத்தைச் சேர்ந்த மன்மதநாத், ராதுவுக்கேற்ற வரனாகத் தேர்வு செய்யப்பட்டார். ''அவா ரொம்பப் பணக்காரா, அவா மரியாதைக்குத் தக்க மாதிரி செய்ய நமக்கு முடியுமா?'' என்றாள் அம்மா. உடனே சாரதாநந்தர், ''பண விஷயத்தைப் பற்றி நீங்க ஏனம்மா அலட்டிக்கணும்? எங்கிட்ட விடுங்கோ'' என்றார். அம்மாவுக்கு வீடு எழுப்பிய அந்த அருமைப் புத்திரர்,

ராதுவின் திருமணத்துக்கு வேண்டிய நிதியமும் சேர்த்து வைத்திருந்தார். மன்மதநாத்துக்கே ராதுவை நிச்சயம் செய்தார்கள்.

ராதா கலியாணத்துக்காகக் கல்கத்தாவிலிருந்து ஜயராம்பாடிக்கு வருகிற வழியில் கோயால்பாராவில் இருந்த அருமையான ராமகிருஷ்ண ஆசிரமத்தில் அம்மா சிறிது தங்கினுள். கேதார் பாபுவின் நிர்வாகத்தில் இருந்த அந்த ஆசிரமத்தில் அம்மாவுக்கு அலாதியான பிடிப்பு உண்டாயிற்று. ''கல்கத்தா என்கிற வாசல் வராந்தாவுக்கும் ஜயராம்பாடி என்கிற உள்கூடத்துக்கும் நடுவிலே இதுதான் எனக்கு ரேழித் திண்ணை'' என்று சிலாகித்துக் கூறினுள்.

1911-ஆம் ஆண்டு ஜ்யேஷ்ட மாதம் 27-ஆம் தேதி சுபமுகூர்த்தத்தில் பதினெரு வயசு ராதாராணி பதினைந்து பிராய மன்மதநாத் சட்டர்ஜிக்குக் கன்யாதானம் செய்யப்பட்டாள். தந்தையற்ற அப்பெண்ணை மூத்த பெரியப்பாவான பிரஸன்னகுமார் கன்யாதானம் செய்தார். 'கன்யாம் கனக ஸம்பன்னும்' என்று சாஸ்திரம் விதிக்கிறபடியும், பிள்ளையகத்தாருக்குத் திருப்தி தருகிற விதத்திலும், ராதுவைத் தலையிலிருந்து கால் வரையில் கிண்டு கிண்டான தங்க, வெள்ளி நகைகளால் இழைத்திருந்தார் 'சரத் மாமா.'

விவாக விருந்தின்போது அம்மா நமது பாரத தேசத்தின் உபசரிப்புப் பண்பே உருவெடுத்து வந்ததுபோல், பந்தி விசாரித்தாள். ''சமையலெல்லாம் சரியாயிருக்கா? கவனிச்சுப் பரிமாறுகிருளா? சங்கோசம் இல்லாமல் சாப்பிடுங்கோ'' என்று பரிந்து பரிந்து கூறிக்கொண் டிருந்தாள்.

ராதா கலியாணம் வைபவமாக நடந்தேறியது.

வெளியில் அம்மா மகிழ்ச்சியாகக் காணப்பட்டாலும், உள்ளூறச் சற்றே கலக்கம் கொண்டிருந்தாள். கலியாணம் ஒருவாறு நிச்சயமானபின் யாரோ சோதிடர் ஜாதகங்கள் சேரவில்லை என்றும், மன்மதுக்குக் களத்ரதோஷம் இருக்கிறது என்றும் அம்மாவிடம் கூறியிருந்தார். அம்மாவுக்கோ சோதிடம் பார்க்காமலே எதிர் காலம் தெரிந்திருக்கக்கூடும். ராதுவின் மணவாழ்வு உண்மையிலேயே பரம அதிருப்திகரமாக ஆகப் போவதைப் பிறகு பார்ப்போம். அந்தக் கோளாருன வாழ்வில் அம்மா ஏற்ற பளுவே மிகப் பெரிது. ஆயினும் இப்போது கலியாண கோலாகலத்தின்போது அம்மா தன் சஞ்சலத்தை அடக்கிக்கொண்டு வெளிப் பார்வைக்குச் சாந்தமாகவும் சந்தோஷமாகவுமே சஞ்சரித்து வந்தாள். இனிய நிகழ்ச்சியில் கசப்பை வெளிக் காட்டவில்லை.

சிறிது காலத்துக்குப்பின் மாப்பிள்ளை மன்மதநாதர் தமக்கு மந்திரோபதேசம் வழங்குமாறு அம்மாவிடம் கோரினர். முதலில் அம்மா, ''நான் உறவுக்காரனுக்கு உபதேசம் தருகிற தில்லையே!'' என்ருள். ஆனல் உடனே மனத்தை மாற்றிக் கொண்டாள். ''பரவாயில்லை, உனக்கு மந்திரம் கொடுக்கிறேன்'' என்று கூறி மன்மதுக்கு உபதேசம் செய்தாள். இதற்குக் காரணத்தை அத்தியந்த சீடரிடம் கூறினள்: ''பகவத் சங்கல்பத்தில் குறுக்கிடக் கூடாதுதான். இருந்தாலும் இந்த ராது பாலிய விதவையாகிறதிலிருந்து தப்பினலும் தப்பட்டும் என்றே மாப்பிள்ளைக்கு மந்திரோபதேசம் பண்ணினேன்.''

உண்மையிலேயே ராது கைம்மையிலிருந்து காப்பாற்றப் பட்டாள்: ஆனலும் பிற்காலத்தில் அவள் கணவனல் தள்ளி வைக்கப்பட்டுத் துயர வாழ்வே நடத்தும்படியாயிற்று.

ராமகிருஷ்ணநந்த ஸ்வாமிஜி கல்கத்தா உத்போதனுக்கு வந்து மரணப் படுக்கையில் விழுந்தார். அம்மாவை அழைத்துவர ஜயராம்பாடிக்கு ஆள் பறந்தது. தக்ஷிண தேச விஜயத்தின் போது அம்மாவின் ஆதிசேஷனுகவும் கருடாழ்வானுகவும் இருந்த ஸ்வாமிஜியின் நிலை கேட்டு அவள் பதறி ஓடி வருவாள் என்றே எதிர்பார்த்தனர். ஆனல் அவளோ, ''நான் வரல்லே. நான் அங்கே வந்தால் எனக்காகக் கூட்டம் கூடறதும், என்னைச் சவரணை செய்யறதும்தான் பெரிசா இருக்கும். குழந்தை சசிக்குக் கவனிப்புக் குறைஞ்சுடும்'' என்ருள்.

குழந்தை சசி அம்மாவை வெகு ஆவலாக எதிர்பார்த்திருந்தார். அம்மா இப்படிச் சொல்லிவிட்டாளே என்று ஏமாற்றத்துடன் தூதர் திரும்பினர்.

அடி அடியாக அந்திமத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த ராமகிருஷ்ணநந்தர், குழந்தை சசியாகவே ஆனர். குழந்தையின் ஆனந்த நகை முகத்தில் பரவ, ''இதோ அம்மா வந்துட்டாளே! எங்கிட்ட உட்கார்ந்திருக்காளே!'' என்ருர்.

இதைக் கேட்டு கிரீஷ் பரவசமானர். அம்மா தந்த அந்த ரகசிய தரிசனத்தைக் கவிதையாக்கிப் பாடினர். அந்தப் பாட்டைக் கேட்டுப் புளகித்தார் ராமகிருஷ்ணநந்தர்; ராமகிருஷ்ணரில் நிரந்தரமாகக் கரைந்தார்.

அம்மாவுக்குச் சோகச் செய்தி தெரிவிக்கப்பட்டபோது, ''என் சசி போய்விட்டானு? என் முதுகெலும்பே முறிஞ்சு போச்சு'' என்று தேம்பி அழுதாள்.

அந்த வருஷம் ஜகத்தாத்ரி பூஜையின்போது கோயால் பாரா ஆசிரமத்தினர் நிறையக் காய்கறிகள் கொண்டுவந்தது கண்டு அம்மா மகிழ்ச்சி பூத்தாள். ''இந்த ஜயராம்பாடி கிராமத்திலே காய்கறி கிடைக்கிறதே இல்லே. நல்லவேளே, வருகிறவாளுக்கெல்லாம் திருப்தியாகப் போடறமாதிரி நீங்க கொண்டுவந்துட்டேள்'' என்றாள். அதிலிருந்து அந்த ஆசிரம வாசிகள் வாரத்தில் இரண்டு மூன்று தினங்கள் ஜயராம் பாடிக்குக் கறிகாய்கள் எடுத்துச் சென்றனர். பக்கத்து ஊர்களிலிருந்து மளிகைப் பொருள்களும் வாங்கிச் சென்று அம்மாவின் இல்லத்தைத் தானியலக்ஷ்மியின் நித்தியவாஸமாக்கினர். நாளடைவில் எந்தத் தூக்கில் எந்த எண்ணெய் வைக்க வேண்டும், எந்த டப்பாவில் எந்த வஸ்துவை வைக்கவேண்டும் என்பதெல்லாம் அந்தப் பிள்ளைகளுக்கே கரதலப்பாடமாயிற்று. அவர்கள் நறுவிசாகச் செய்கிற வேலையைக் கண்டு அம்மா பூரிப்படைவாள். அவர்கள் விடை கொள்ளும்போது, ஒவ்வொருவரின் அங்கவஸ்திரத் தலைப்பிலும் தானே அவல் கடலை முதலியவற்றை முடிச்சுப் போடுவாள். ''போற வழியிலே கொரிச்சுண்டு போகிறதுக்கு'' என்பாள். ஆத்மபிக்ஷையும் போடுபவள் அல்லவா? எனவே, ''உங்களுக்கெல்லாம் டாகுர் பூரண ஞானமும், பக்தியும், சிரத்தையும் அநுக்கிரகிக்கட்டும்'' என்று வாழ்த்தி அனுப்புவாள்.

ராதுவின் திருமணம் நடந்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு அம்மா மீண்டும் கல்கத்தா செல்வதாக முடிவாயிற்று. வழியிலே கோயால்பாரா ஆசிரமத்துக்கு அவளை அழைப்பதற்காகக் கேதார் பாபு வந்தார்.

அம்மா வெற்றிலைச் சுருள் தயாரித்துக்கொண்டே பேசினாள்: ''குழந்தே! உன் ஊரிலே டாகுருக்காக ஜாகை வைச்சுட்டே! எனக்கும் அதை சிரம பரிகாரத்துக்கு ஆசிரமமாக்கிட்டே! அதனாலே இப்போ அங்கே வரச்சே என் கையாலே டாகுரைப் பிரதிஷ்டை பண்ணப்போறேன். அதுக்கு எல்லாம் தயார் பண்ணு. நீயும் மற்றவாளும் பிரதி தினமும் கார்த்தாலே ஒழுங்கு தப்பாமல் பூஜை நடத்திண்டு வரணும். ஹவிஸ் வைச்சு நைவேத்தியம் பண்ணணும். சாயரட்சை தூப தீபம் காட்டி ஆராத்ரிகம் பண்ணணும்.'' குரலில் திடுமென உறுதி தொனிக்கத் தொடர்ந்தாள்: ''மகனே! 'சுதேசி சுதேசி'ன்னு இருக்கிற தாலேமட்டும் நீ என்ன அடைஞ்சுட முடியும்? நமக்கு டாகுர் தான் கதி. நம்மோட சகல காரியத்துக்கும் அவர்தான் மூலாதாரம்'' என்றாள்.

கேதார் பாபுவுக்கு நெஞ்சம் குறுகுறுத்தது. அம்மாவுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டார். வைஸ்ராய் கர்ஸனின் யதேச்சாதிகாரப் போக்குகளை - குறிப்பாக வங்காளத்தைப் பிளக்கும் உத்தேசத்தை - எதிர்த்து அப்போது அரசியல் இயக்கம் வலுப்பெற்றிருந்தது. அந்நிய வஸ்துக்களைப் பகிஷ்கரிக்கும் சுதேசி இயக்கமும் தொடங்கிவிட்டது. கோயால் பாரா ஆசிரமவாசிகளுக்கு அதில் ஈடுபாடு அதிகம். எனவே அங்கு ஓரளவு போலீஸின் கண்காணிப்புக்கூட இருந்தது.

ஆசிரமவாசிகளுக்குத் தீவிர அரசியல் பற்று உதவாது என்பதே அம்மாவின் கருத்தென்று நிச்சயமாகத் தெரிந்து விட்டது. ஆனால் இதைக் கேதார் பாபுவால் ஏற்க இயலவில்லை. வாய்விட்டு அப்படி எதிர்த்துச் சொல்லவும் முடியவில்லை.

மென்று விழுங்கிக்கொண்டு பேசலானார்: "ஸ்வாமிஜி (விவேகாநந்தர்) நம்ப மடத்துக்காரர்கள் ரொம்ப தேச சேவை செய்யணும்னு அடிக்கடி வற்புறுத்தினார். இப்போ அவரே ஜீவியவந்தராக இருந்தால் என்னவெல்லாம் பண்ணியிருப்பார்?"

பெற்ற தாயிடமா பிள்ளையைப்பற்றிப் 'புது'த் தகவல் தருவது? அம்மாவின் இதயத்தில் பிகு ஏறியிருந்த ஒரு தந்தியைச் சுண்டிவிட்டார் கேதார்! அது கம்பீர நாதம் எழுப்பியது. "நரேன் இன்னிக்கு இந்த மண்ணில் இருந்தால் என்ன பண்ணுவான்னு எனக்குத் தெரியாதா? அவனைக் கும்பெனிக்காரா * வெளியிலேயே விட்டு வைச்சிருக்கமாட்டாளே! என் செல்லப் பிள்ளையின் கையிலே விலங்கு ஏறி இருக்குமே! ஈசுவரா, என்னாலே அதைத் தாங்க முடிஞ்சிருக்குமோ? உறையில் ஒரு போதும் பதுங்காமல் மின்னிண்டே இருந்த கத்தியாச்சே என் நரேன்! ஆனால், மகனே கேதார், இன்னொண்ணும் நினைவு வைச்சுக்கோ! இதே நரேன் மேற்கத்திச் சீமைக்குப் போய் வெள்ளைக்காராகிட்டே பிரியத்தோடு நம்ம டாகுர் பெருமையைப் பரப்பிட்டு வந்தான். அந்த வெள்ளைக்காராளிலும் வெள்ளை மனஸோடு எத்தனையோ பேர் ஞானத்தைத் தேடிண்டு வந்தா, இன்னமும் வந்திண்டு இருக்கா. எனக்கு அவாளும் குழந்தைகள்தான். ஒப்புக்கிறாயா?" என்றாள் அம்மா.

---

* கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி 1857-லேயே முடிவுற்று, இந்தியாவில் பிரிட்டிஷ் முடியரசு நிர்வாகம் மேற்கொண்டு விட்டது. எனினும், இதற்கு நீண்ட காலத்துக்குப் பின்பும் பழங்கால மனிதர்கள், வெள்ளையரின் ஆட்சியைக் 'கும்பெனி ஆட்சி' என்றே குறிப்பிட்டு வந்தனர்.

அந்தக் காலத்தில் வெள்ளையர் ஆட்சியின் மீதிருந்த வெறுப்பு வெள்ளையரிடமே வெறுப்பாகத்தான் உருக்கொண்டிருந்தது. இந்த இரண்டுக்குமிடையே உள்ள மாறுபாட்டை அரசியல் தலைவர்களுள் முதல்வராக மகாத்மா காந்திதான் வலியுறுத்தினர். ஆனல் அவர் அரசியல் தலைமை மேற்கொள்ளுவதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே அம்மா அஹிம்ஸைப் போராட்டத்தை எடுத்தியம்பியிருக்கிருள்! அவளுக்கு அரசியல் நுணுக்கம் தெரியாதிருக்கலாம். ஆனல் அவள் அம்மா அல்லவா? அம்மா என்ருலே அஹிம்ஸைதானே?

பயங்கரப் புரட்சி இயக்கங்கள் வலுப்பெற்று வந்த வங்கத்திலே, அம்மா இப்படிக் குளிரக் குளிர அரசியலை அநாயாசமாக விண்டு பேசியவுடன் கேதார்நாத தத்தர் வாயடைத்துப் போனர். ஸ்வாமி விவோநந்தருக்கு எங்கு அன்பு செய்யவேண்டும், எங்கு எதிர்த்துப் போரிடவேண்டும் என்ற நுட்பங்கள் தெரிந்தது போல் தங்களுக்குத் தெரியாது என்பதையும் அம்மா நாசுக்காக இடித்துரைத்ததைப் புரிந்து கொண்டார். இந்த மாறுபாடு தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், பொதுவாகவே அத்யாத்ம மார்க்கத்தில் ஈடுபட்டவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பதே அம்மாவின் தீர்மானமான முடிவு என்று தெரிந்தது. அரசியல் அலையில் அடித்துச் செல்லப்படவிருந்த கோயால்பாரா ஆசிரமத்தை ஆத்மிகத்தில் நங்கூரம் பூட்டுவதற்காகவே அங்கு டாகுரைப் பிரதிஷ்டித்து, விதிவத்தான நித்திய பூஜையையும் அம்மா விதிக்கிருள் என்பது தெளிவாகப் புரிந்தது!

அம்மாவின் கருத்துக்குத் தலைவணங்குவது தவிரக் கேதார் வேறென்ன செய்யமுடியும்?

தேச சுதந்தர இயக்கத்தில் ராமகிருஷ்ண அடியார்கள் ஈடுபடவேண்டாம் என்று அம்மா கருதியது நம்மில் சிலருக்கு ஏற்காமல் இருக்கலாம். அதற்காக அம்மாவின் கருத்தைத் திரித்து எழுதுவதற்கில்லை. தாமரைக்கு வர்ணம் பூச நாம் யார்?

பொது மக்களின் சுதந்தர எழுச்சியை அவள் ஆட்சேபிக்கவேயில்லை. சமயத்துக்காக ஏற்பட்ட ஸ்தாபனங்கள் அரசியலில் ஈடுபடுவதையே ஆட்சேபித்தாள். சமய ஸ்தாபனங்கள் ஏனைய இனங்களில் சமூகப் பணிபுரிவதை அவள் மனமார ஆதரித்ததை முன்னரே பார்த்திருக்கிறேம். பகை உணர்ச்சி, துவேஷம், போட்டாபோட்டி முதலியவற்றுக்கு இடமான அரசியலில் ஆத்ம சாதகர்கள் பிரவேசிக்கக்கூடாது

என்பதில் தவறென்ன? சமய நிறுவனங்களும் அரசியலில் விழுந்து, நாட்டின் ஆன்மிகமே கெட்டுவிட்டால், அதன்பின் ஒரு தேசத்துக்கு அரசியலில் மட்டும் சுதந்தரம் வந்தால் என்ன, வராவிட்டால்தான் என்ன?

அம்மா தனது கருத்தைத் திட்டவட்டமாகச் சொன்ன பின்னுங்கூடக் கோயால்பாரா ஆசிரமவாசிகள் பலரிடை உள்ளூற சுதேச உணர்வு தீவிரமாக இருக்கத்தான் செய்தது. உதாரணமாக, ஒரு முறை நவராத்திரியின்போது அம்மாவின் மருமக்களுக்குத் துணிமணிகள் வாங்கிவந்த கோயால்பாரா பிரம்மசாரி, சுதேசியான மோட்டா ரகங்களையே வாங்கி வந்தார். அவற்றைக் கண்டு குழந்தைகள் முகம் சுளித்தனர். ''வெள்ளைப் பெருச்சாளிகள் பண்ணின 'நைஸ்' துணிதான் உங்களுக்குப் பிடிக்கும்'' என்று வெடிப்புடன் கூறினர் பிரம்மசாரி. இதைக் கேட்டுக்கொண் டிருந்த அம்மா, ''பிள்ளையே! அந்தப் பெருச்சாளிகளும் என் குழந்தைகள்தான். அவாளையும் நான் அரவணைச்சுண்டே போகணும். அது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த மருமான்களும் மருமாத்திகளும் பண்டிகைக்கு அத்தை புதிசு வாங்கித்தரப் போகிறாள்னு ஆவலாக இருந்ததுகள். நல்ல நாளிலே அதுகளுக்குப் பிடிக்காத வஸ்துவைத் தலையிலே கட்டறது சரிதானான்னு நீயே யோசிச்சுப் பாரு. என்னால் யார் உணர்ச்சியையும் நிர்ப்பந்தப் படுத்தி மாற்றமுடியாது'' என்றாள் அம்மா.

பலவந்தத்தின்மீது எதையும் செய்யக்கூடாது என்பதிலும் காந்திஜியின் கருத்தையே அம்மாவிடம் பார்க்கிறோம். எல்லோருடைய உணர்ச்சியையும் மதித்த அம்மா அந்த பிரம்மசாரியின் உணர்ச்சியையும் மதித்தாள். அதன்பின் அவரை எந்தப் பண்டமும் வாங்கி வருமாறு அம்மா பணித்ததில்லை. ''அவன் அபிப்பிராயத்துக்கு விரோதமாக அந்நிய வஸ்துக்களை வாங்கிண்டு வரும்படி அவனிடம் சொல்லக்கூடாது'' என்றாள்.

தேசத்தை வாழ்விக்க வந்த அம்மாவின் தேசபக்தி பொங்கி எழுந்த சம்பவங்களும் உண்டு. ஸிந்துபாலா விவகாரம் இதற்கு ஓர் உதாரணம்.

ஸிந்துபாலா ஒரு புரட்சி வீராங்கனை. அவளைப் போலீஸார் தேட்டம் போட்டுவந்தனர். ஜயராம்பாடி அமைந்திருந்த பாங்குரா மாவட்டத்தில் ஜூதவிஹார் என்ற ஊரைச் சேர்ந்த தேவேன் பாபுவின் மனைவி, சகோதரி இருவருக்கும் ஸிந்துபாலா என்றே பெயர். இவர்களில் சகோதரியான ஸிந்துபாலா அப்போது கர்ப்பிணி. வீராங்கனைக்கும் இவர்களுக்கும்

பெயர்ப் பொருத்தம் தவிர, வேறு ஒரு ஸ்நானப் பிராப்தியும் கிடையாது. ஆனால் போலீஸ் பிருஹஸ்பதிகளோ ஒன்றுக்கு இரண்டாக ஸிந்துபாலாக்கள் கிடைத்த மகிழ்ச்சியில் இவ்விரு நிரபராதிகளையும் கைதுசெய்தனர். கௌரவம் வாய்ந்த குலப் பெண்களை-அதில் ஒருத்தி கர்ப்பிணி வேறு - நடுத்தெரு வழியே நடத்திச் சென்றனர்.

இதை அம்மாவிடம் சகோதரர் காளிகுமார் தெரிவித்ததும் அவள், ''என்ன அநியாயம்?'' என்று அங்கமெல்லாம் பதறக் கூவினாள்.

தலையிலிருந்து கால்வரை அவளது திருமேனி ஆடியது. திருமுகம் தீப்பிழம்பாகச் சிவந்தது.

''இதுகூடக் கும்பெனி உத்தரவா? இல்லாட்டா அதி உற்சாகத்திலே உள்ளூர்ப் போலீஸ் பண்ணின அக்கிரமமா யிருக்குமா?'' என்றாள். பட்டிக்காட்டு அம்மா எத்தனை ராஜரீக அறிவுடன் பாகுபடுத்திப் பேசியிருக்கிறாள்! ஆவேசப்பட்டுக் 'கும்பெனிக்காரர்'களைப் பழிக்க அவளது சமநிலை அறிந்த இதயம் இடம் தரவில்லைபோலும்! தொடர்ந்து கூறுவாள்; ''விக்டோரியா காலத்திலே சர்க்கார் இப்படி மிருகத்தனமா நடந்துண்டதாக நாங்க கேள்விப்பட்டதில்லை. இதுமட்டும் கும்பெனி உத்தரவாயிருந்தால், இந்த ஆட்சி சீக்கிரமே அழிஞ்சு போகணும்னு ஈசுவரன் சங்கல்பிச்சிருக்கிறதாக அர்த்தம்......அது இருக்கட்டும், அந்தப் பெண் குழந்தைகளைப் போலீஸ்காரா தெருவோட இழுத்துண்டு போகிறபோது, ஊர் ஜனங்கள் யாருமே இல்லாமப் போயிட்டாளா? போலீஸ்காரா கன்னத்திலே அறைஞ்சு கல்தா கொடுத்து, அந்தக் குழந்தைகளை மீட்டுண்டு வருகிறதுக்கு அங்கே ஒரு புருஷப் பிரஜைகூட இல்லையா?'' என்று ஆவேசமாகக் கேட்டாள்.

அன்றிரவே இவ்விரு ஸிந்துபாலாக்களும் விடுதலை செய்யப் பட்டதாகச் செய்தி வந்தது,

அம்மாவின் படபடப்பு அப்போதுதான் தணிந்தது. ''இந்தத் தகவல்மட்டும் வரலைன்னா இன்னிக்கு ராத்திரி எனக்குத் தூக்கமே வந்திருக்காது'' என்றாள்.

அம்மாவின் ஜீவியகாலத்தில் முதல் உலக மகாயுத்தம் (1914—18) நடந்தது. போர் விவரங்களைப் பிரபோதசந்திர சட்டர்ஜி என்பவரிடம் அம்மா கேட்பாள். பிரபோதர் பிரிட்டிஷ் சர்க்காரிடம் பட்சம் கொண்டவர்.

''என்ன பயங்கர யுத்தம்! இப்படி ஏராளமான ஜனங்கள் பிராணத் தியாகம் பண்ணறதுகளே!'' என்று விசனித்தாள்

அம்மா. "கூண்டோடு கைலாஸத்துக்கு அனுப்புகிறதுக்குத்தான் புதிசு புதிசா எத்தனை ஆயுதங்கள் கண்டுபிடிச்சிருக்கா?.....ஹூம்" என்றாள் வேதனையுடன்.

"நவீனத்திலேதான் இந்த குண்டுகள் வந்திருக்கு" என்ற அம்மா, தனக்கே உரிய சம எடை தவறாத தராசுத் தன்மையுடன், "நவீனத்திலே சில நல்லதும் வந்துதான் இருக்கு. முன்னே நாலு நாள் நடந்தால்தான் ஜயராம்பாடியிலிருந்து கல்கத்தா போகமுடியும். இப்போ ரயில் வந்ததிலே, முதல் நாள் கிளம்பி மறுநாள் வந்து சேர்ந்துட முடியறது. தந்தியும் தபாலும் கண்டுபிடிச்சதாலே எத்தனையோ நல்லது நடக்கிறது" என்றாள்.

வாய்த்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் பிரபோதசந்திரர் காருண்யமிக்க பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவின் முன்னேற்றத்துக்காகச் செய்துள்ள நற்பணிகளை அடுக்கலானார்.

பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த அம்மா முடிவிலே சுருக்கென்று, நறுக்கென்று சொன்னாள்: "ஆனாலும் குழந்தே, இப்போ தேசத்திலே ஜனங்கள் அன்னவஸ்திரத்துக்குத் திண்டாடுகிறமாதிரி நான் என்னிக்குமே கண்டதுமில்லே, கேட்டதுமில்லே."

போர்முனைக்கு உணவும் துணியும் அனுப்பவேண்டுமென்பதால் பலவிதமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. வீடுகளில் புகுந்து பலாத்காரமாகத் துணிகளும், தானியமும் பறிமுதல் செய்த சிப்பந்திகளும் இருந்தனர். இந்த வஸ்திரப் பறிமுதல் காரணமாகக் குலமகள் ஒருத்தி தற்கொலை செய்துகொண்டதாகவும் வதந்தி பரவியது.

இதனைச் செவியுற்ற அம்மா கல்லாகச் சமைந்தாள். அவள் கன்னங்களில் கோடுகோடாகக் கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது. கண்ணீரைச் சுண்டி எறிந்தாள். கோப ஆவேசம் கொண்டாள். அடியுண்ட பெண்புலி என அடித்தொண்டையில் உறுமினாள். "இந்தக் கொடுங்கோல் வெள்ளைக்காரா எப்போ தேசத்தை விட்டுத் தொலைவா? எப்போ? எப்போ?" பிரளய காளிபோல் இருந்த அம்மாவை அணுகவே அப்போது மற்றோருக்கு அச்சமாயிருந்தது.

அவளாகவே நீண்ட நேரத்துக்குப் பின் சமனமானாள். நிதானமாகப் பேசினாள்: "நம்ம ஜனங்களும் ரொம்ப மாறிப் போயிட்டா. முன்னெல்லாம் ஊருக்கு ஊர் பருத்தித் தோட்டமும் வீட்டுக்கு வீடு ராட்டையும் இருக்கும். அவாவாளும் தங்களுக்கு வேண்டிய நூலை நூற்றுப்பா. நானும் எங்கம்

மாவும் எவ்வளவு நூற்றிருக்கோம், தெரியுமா? அவாவாளும் இப்படி நூல் நூற்றுண்டா இன்னிக்கு இருக்கிறமாதிரி துணிப் பஞ்சம் வருமோ? கும்பெனி வந்தாலும் வந்தது, நம்ம ஜனங் களோட நல்ல பழக்கம் எல்லாம் பாழாப்போச்சு. 'எல்லா ருக்கும் உழைக்காமலே சௌகரியம் பண்ணித் தருவோம்'னு ராஜாங்கம் இனிக்கச் சொல்லித்து. மில்லிலே துணி உற்பத்தி பண்ணித் தந்தது. ஒரு ரூபாய்க்கு நாலு வேஷ்டி - பேரம் பண்ணினுல் இன்னொரு கொசுறு வேஷ்டிகூட - கொடுத்தது. ஜனங்களும் உழைப்பை மறந்துட்டு ஹாய்யாக இருக்க ஆரம் பிச்சுட்டா. எல்லாருமே குசாலா வாழுகிற 'பாபு'க்களா மாறினு. இப்போ ஈதிபாதையா ஒரு நிலைமை ஏற்பட்டு 'பாபு' வெல்லாம் 'காபு'வாக (மூலையில் முடங்கியவர்களாக) ஆகியிருக்கா'' என்று எதுகையுடன் முடித்தாள் அம்மா!

தேச விவகாரத்தில் தெளிந்த விவேகமுடன் கருத்துத் தந்திருக்கிருள் அம்மா. பல இனங்களில் அவள் காந்தியின் முன்னேடி. இங்கு ராட்டையில் நூற்பதை வற்புறுத்துவதைப் பாருங்கள். அவள் இந்த அம்சத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதன்மீது சில காலத்துக்குப்பின் கோயால்பாரா ஆசிரமத்தில் ராட்டைகள் சுழலத் தொடங்கின. ''எங்கே. எனக்கும் கொண்டாருங்கள் ஒரு ராட்டை'' என்று உற்சாகத் தோடு இந்தக் காரியத்தை ஆரம்பித்துவைத்தாள் தேவி. விதேசி விரோதத்தைவிடத் தன் கையே தனக்கு உதவி என்ற ஆக்கபூர்வமான செயல்முறையே தேசநலனுக்கு உகந்தது என்பதைக் காட்டினுள்.

கூரிய கத்தி எந்த வஸ்துவையும் சுத்தமாக வெட்டித் தீர்ப்பதுபோல், பரிசுத்த வாழ்வினுல் கூர்த்திருந்த அம்மாவின் அறிவுத் திறன் அரசியல் பிரச்னைகளையும் பிசிரின்றி வெட்டித் தீர்த்ததில் விந்தை இல்லை.

அம்மா மனம் வைத்தால் சர்வதேச அரசியலிலும் எப்படித் தேர்ந்து தெளிந்திருக்க முடியும் என்பதற்கு ஓர் உதாரணம் போதும். யுத்தத்தின் முடிவில் அமெரிக்க ஜனதிபதி வில்ஸன் விடுத்த பதினுலு அம்ச சமாதானத் திட்டத்தை அம்மாவுக்குப் படித்துக் காட்டினர் ஜதீந்திரநாத் கோஷ். ''திட்டம் மதுரமாக இருக்கு. ஆனல் முகஸ்தமாகத்தான்; இதுவே அந்தஸ்தமாக இருந்தால் எத்தனையோ சிலாக்கியமா யிருக்கும்'' என்று ரத்தினச் சுருக்கமாக அபிப்பிராயம் சொன் ஞள் அம்மா. 'முகஸ்தம்' என்ருல் 'உதட்டளவில்' என்று பொருள். 'அந்தஸ்தம்' என்ருல் 'இதயபூர்வமாக' என்று

அர்த்தம். கூர்ப்புடன் விஷயத்தைப் புரிந்துகொண்டாற் போலவே, அதை வெளியிடுவதற்கும் மிகச் சரியான பதத்தைப் பிரயோகிக்கிருள் நம் பட்டிக்காட்டு அம்மா!

வெள்ளையர் ஆட்சியில் நடந்த பல துராக்கிரகங்களைக் கேட்டு அம்மா துடித்திருக்கிருள்; அழுதிருக்கிருள்; வெஞ்சினம் கொண்டிருக்கிருள். ஆனாலும் ராமகிருஷ்ண சங்கத்தினராகிய தாங்கள் இதற்கு நேரடி நடவடிக்கை எடுத்து விமோசனம் தேடுவதை அவள் ஒப்பவில்லை. தாங்கள் எடுக்கவேண்டிய ஒரே நேரடி நடவடிக்கை டாகுரிடம் பிரார்த்திப்பதுதான் என்ருள். தேசத்தின் இன்னல்களிலிருந்து உய்வு தரவும் டாகுரிடமே பிரார்த்திப்பதன்றி, சங்கத்தினர் அரசியல் ரீதியில் காரியம் செய்யக்கூடாது என்ருள்.

''தாயே, பாரதத்தாயின் சோதனையும் வாதனையும் தீரவே தீராதா?'' என்று ஒரு தெய்வ-தேசபக்தர் அவளிடம் புலம்பியபோது, ''மகனே! நம்ம ஜன்மபூமியின் க்ஷேமத்துக்காகத்தானே டாகுர் அவதாரம் பண்ணிஞர்? நீ ஏன் கவலைப் படணும்?'' என்று அபயவாக்குத் தந்தாள்.

இதெல்லாம் பிற்பாடு நடந்த கதை. முதன் முதலில் கேதார்பாபுவுக்கு அம்மா அறிவு விளக்கம் தந்த கதைக்குத் திரும்பலாம். அம்மாவின் விருப்பப்படியே கோயால்பாராவில் டாகுரைப் பிரதிஷ்டை செய்து, நித்திய பூஜை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தார் கேதார்.

கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் பிராம்ம முகூர்த்தத்திலேயே சிவிகை ஏறிக் கோயால்பாராவுக்குச் சென்ருள் அம்மா. நீராடிவிட்டு ஆசிரம மண்டபத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தைத் தன் பொற்கரங்களால் பிரதிஷ்டை செய்தாள். அதன் பக்கத்தில் தனது சித்திரத்தையும் தானே பிரதிஷ்டை செய்தாள்—ஸ்ரீராமாநுஜர் தாமே உகந்த திருமேனியாக ஸ்ரீபெரும்பூதூருக்குத் தமது விக்கிரகத்தை அனுப்பிஞர் என்பார்களே அதுபோல்! பிரதிஷ்டை செய்தது மட்டுமல்ல. ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர், ஸ்ரீ சாரதாமணி தேவி இருவருக்கும் சாரதையே விதிப்படி கந்த, புஷ்ப, தூப, தீப, நிவேதனங்களுடன் பூஜை செய்தாள். இதில் வியப்பதற்கு என்ன இருக்கிறது? அவள் வேறு ஒரு தெய்வ உருவை வைத்துப் பூஜை செய்தபோதுங்கூட, அது வேறு, தான் வேறு என்று நினைத்தா செய்தாள்?

அம்மா பாதசாரியாகக் கேதார் பாபுவின் வீட்டுக்குப் போகிருள் என்று கேள்விப்பட்ட பிரம்மசாரி பிரகாஷ், ஆசிரம ஊழியர்களை எல்லாம் திட்டித் தீர்த்துவிட்டு, ஒரு பல்லக்கு

அமர்த்திக்கொண்டு ஓடினர். பாதி வழியில் பல்லக்கில் ஏறிக் கொண்ட அம்மா, திரும்பி வந்தபின் பிரகாஷிடம் சொன்னாள்: ''அப்பனே! ஜயராம்பாடி, கோயால்பாரா மாதிரி கிராமங் களிலே காலாரச் சுதந்தரமாக நடந்தாலே எனக்கு சந்தோஷ மாயிருக்கு. கல்கத்தா பட்டணம். அங்கே நிலவரம் வேறே. அங்கே கூட்டிலேதான் அடைபட்டுக் கிடக்கணும். உன் பிரீதிக்காகவே இன்னிக்குப் பல்லக்கிலே ஏறிண்டேன்.''

அம்மா பெரும்பாலும் முடங்கி வாழ்ந்தவளே. இருந் தாலும் முடக்கம் இல்லாமல் திறந்த வெளியில் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதில் அவளுக்குத் தனித்த ஈடுபாடு உண்டு. இவ்விதம் நீலவானின் கீழ் தியானம், ஜபம் முதலியன புரிவதால் மனத்திலும் இறுக்கம் இல்லாமல் விசால விச்ராந்தி உண்டாகும் என்று அடியாருக்கு உபதேசிப்பாள்.

மாலை ஆறுமணிக்கு அம்மா கோஷ்டியினர் கோயால்பாரா ஆசிரமத்திலிருந்து புறப்படுவதாகவும், அவர்களுக்கு ஆசிரம வாசிகள் கட்டுச்சாதம் தயாரித்துக் கொடுப்பதாகவும் முதலில் ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அம்மா புறப்படத் தயாராகி விட்ட பின்பும் சமையல் வேலை முடியவில்லை. பிரகாஷ் மறுபடி பிரம்மசாரிகளிடம் படபடத்தார். ''அம்மாவை நிறுத்தி வைச்சா அபசாரம். அவா போகிறபடி போயிண்டிருக்கட்டும். நாம் செய்த தப்புக்குத் தண்டனையாக, சமையலை முடிச்சுட்டுச் சாப்பாட்டைத் தூக்கிண்டு ஓடுவோம்'' என்றார்.

இதைக்கேட்டுக்கொண்டே வந்த அம்மா, ''ஏண்டாப்பா, இப்படி அல்ப விஷயத்துக்குக்கூட நிதானம் இழக்கிறே? இதென்ன கல்கத்தாவா? அங்கே ஒரு சொடக்குப் போட்டா போதும், எந்த வஸ்துவும் கிடைச்சுடும். இந்தக் கிராமத்திலே என் பட்டாளம் அவ்வளவுக்கும் உப்பிலேருந்து பெருங்காயம் வரை எல்லாம் தயார் பண்ணறதுன்னு சாமானியமா? கொஞ்சம் முன்னே பின்னே இருந்தாலும் அநுசரிச்சுத்தான் போகணும். நான் என் திட்டப்படியே ராணி மாதிரி போகணும், அப்புறம் என் குழந்தைகள் அண்டாவையும் குண்டானையும் தூக்கிண்டு ஓடி வரணமாக்கும். குழந்தே! நான் அப்படி எல்லாம் தர்பார் நடத்தப் பிறக்கவில்லையப்பா. நீ என்ன சொன்னாலும் சரி, இன்னும் எத்தனை நாழியானாலும் சரி, இங்கேயே இருந்து சமையல் ஆனவிட்டு, சாப்பிட்டுட்டுத் தான் புறப்படப்போறோம்'' என்று முடிந்த முடிவாக மொழிந் தாள். சிரமப்படுவதையே தன் வாழ்க்கைக் கிரமமாக்கிக் கொண்ட அம்மாவைப் போல் பிறர் சிரமம் உணர்ந்தவர் எவரும் இல்லை.

43. "சாரதை சாகிறதாவது?"

முத்தொழிலுக்கும் மேம்பட்ட துரீயமாக உள்ள உன் மகிமைக்கு எல்லை ஏது? பரப்பிரம்மத்தின் பட்டமகிஷியாக விசுவம் முழுவதையும் மயக்கும் மகாமாயை அன்றோ நீ!

—ஆதிசங்கரர்: ஸௌந்தர்யலஹரி

இந்தியா முழுவதிலும் மாதர்குலத்தில் முதன்மை ஸ்தானம் வகிப்பவள் என்ற மகிமை அம்மாவுக்கு ஏற்பட்டு விட்டது. ராமகிருஷ்ணரை, அவர் ஊனுடலில் உலவிய போது, வங்கத்துக்கு வெளியே அறிந்தவர் இல்லை. ஆனால் அவரது மறைவுக்குப்பின் அந்நிய நாடுகளிலும் ஆன்ம சாம் ராஜ்யம் பரப்பிய சக்கரவர்த்தித் திருமகனான விவேகா நந்தரின் கவர்ச்சி விசேஷத்தால், ராமகிருஷ்ணரை மட்டுமின்றி அம்மாவைப்பற்றியும் அவளது காலத்திலேயே வெளி உலகு நன்கறியத் தொடங்கியது. பாரதத்தைப் பொறுத்தமட்டில் படிப்பறிவு பெற்ற அறிஞர்கள், பக்தர்கள், ஆன்ம சாதகர்கள் அனைவரும் 'ஹோலி மதரை' அறிந்திருந்தார்கள். அவளை நாடி இதர மாகாணங்களிலிருந்தும் அடியார் வரலாயினர். புகழ் பரவியதில் அம்மாவுக்கு எள்ளளவும் மகிழ்ச்சி இல்லை, அதை அவள் உணர்ந்ததாகவே தெரியவில்லை. தான் ஜன்மா எடுத்தது வீணாகாமல், டாகுர் பணித்தபடி இத்தனை பேருக்கு ஆறுதல் தர முடிவதில் நிறைவு கண்டது தவிர, அவளுக்கு இதனால் பிரத்தியேகப் பெருமிதம் எதுவும் இல்லை. பிள்ளைகள் புகழ்வ தில் தாய்க்கு ஆனந்தம் இல்லை. ஓர் அம்மாவுக்கு ஆனந்தம் குழந்தைகளோடு இருந்துகொண்டு, அவர்களுக்குத் தன்னால் ஆனதைச் செய்வதுதானே?

துரதிருஷ்டவசமாக நம் அம்மா பன்முறை புத்திர சோகத்துக்கு ஆளாக நேரிட்டது. துயரனைத்தும் அநுபவித்துக் காட்ட வந்த அவதாரம் இது. இதில் இரு நோக்கங்கள் உண்டு. ஒன்று, அம்மாவைப் போன்ற ஒரு மகா வியக்தி எந்தப் பூர்வ கர்மமும் இன்றியே துயர் அநுபவிப்பதால், அடியார் பலரது பூர்வ கர்ம வினை தீர்க்கப்படும். இரண் டாவதாக, உலக வாழ்வை ஒட்டி இந்தத் துயரங்கள் தாற்காலிகமாகத் தன்னைப் பாதிக்க அம்மா அநுமதித்தாலும், சிறிது போதிலேயே அவற்றினின்று அடியோடு விடுபட்டுத்

தெள்ளிய பளிங்காகி விடுவாள்-இதன்மூலம் உலகினருக்குத் துயரங்களைப் பொறுத்துக்கொள்வதற்குப் படிப்பினையை வழங்கினாள். பெண்களின் பெருந்துயரம் வைதவ்யமும், புத்திர சோகமும்தானே? உலகங்காணாப் பூரண அன்புக் கணவரை வாரிக்கொடுத்த அம்மா, ரத்தினமான குழந்தைகள் சிலரையும் பறிகொடுத்தாள்.

இப்போது கிரீஷ் சந்திர கோஷின் மறைவு அம்மாவுக்கு இடியாக வந்தது. அவளை நூற்றுக்கு நூறு சத விகிதமும் பராசக்தியாக அன்றி வேறெவ்விதத்திலும் பாவிக்க அறியாதவர் கிரீஷ். பாவியான தாம் அவளைப் பார்த்தலும் தகாது என்று ஆதியில் எண்ணினார். பிறகு தாம் அவளைப் பார்க்காவிட்டாலும், அந்தச் சர்வலோக சாக்ஷியான தேவியின் பார்வை தம் மீதும் இருக்கவே செய்கிறது என்று உணர்ந்தார். அம்மாவுக்கும் பிள்ளைக்கும் நடுவில் படுதா எதுவும் வேண்டியதில்லை என்று புரிந்துகொண்டு, அவளது அணுக்கத் தொண்டரானார். அம்மாவும் கிரீஷிடம் காட்டிய வாத்ஸல்யம் சொல்லத் தரமன்று.

கிரீஷ் காலமாகிவிட்டார் என்றறிந்ததும் அம்மா தனக்குள் அமுங்கிப்போனாள். ஈமச் சடங்குகளுக்கு அம்மாவை அழைத்தனர். அம்மாவோ கண்ணீரும் கம்பலையுமாக, ''என் கிரீஷ் இல்லாத அந்த வீட்டிலே என்னால் அடி எடுத்து வைக்க முடியுமா?'' என்று கூறிக் கதறினாள்.

வழக்கம்போல், பெருத்த சுழிப்புடன் தோன்றிய சோக வெள்ளம் அம்மாவின் அந்தரங்கமான சாந்த சாகரத்தில் அடங்கிப் போயிற்று. இன்முகத்துடன் அன்றாட அலுவல்களையும் அன்பருக்குத் தரிசனம் தருவதையும் மேற்கொண்டாள்.

அம்மாவின் சகோதரர் காளிகுமாரின் குமாரன் பூதேவ் அவளோடு இருந்து பணிவிடை செய்துவந்தான். பள்ளிப் பையனான அவன் தடவித் தடவி எழுத்துக்கூட்டி மகாபாரதம் படிக்க, அதைப் பொறுமையுடன் சிரவணம் செய்து வந்தாள் அம்மா. ஓர் அத்தியாயத்தைப் பாதியில் விடக்கூடாது என்கிற நம்பிக்கைப்படி, சில நாட்கள் பல மணிநேரம் தன் எண்ணற்ற அலுவல்களிடையே அம்மா இந்த மகாபாரதத் தடுமாற்ற படனத்தைப் பரபரக்காமல் கேட்டுவந்தாள். உலக வழக்குகளை அப்படி மதித்து, அநுசரித்து, வழி காட்டினாள்!

புரி ஜகந்நாதத்தில் பிரசித்தி பெற்ற ரதோற்சவம் நடக்கும்போது டாகுருக்கும் குட்டிரதம் வைத்து, கல்கத்தா உத்போதனைச் சுற்றி வீதியுலா நடத்த ஏற்பாடு செய்தான் பூதேவ். குட்டி ரதத்தில் ராமகிருஷ்ணரின் உருவப்படத்தைக்

கண்டதும் அம்மா ஏக மகிழ்ச்சி அடைந்தாள். கங்கையோரமாக, குருநாதனுக்குச் சிறுதேர் உருட்டிவிட்டு உத்போதனுக்குத் திரும்பிய ஆண் சீடர்கள், 'ரத'த்தை அம்மா இருந்த மாடிக்கு எடுத்து வந்தனர். மாடி வராந்தாவில் நம் அம்மா பச்சை பாலிகையாகப் பரம உற்சாகத்தோடு, ராதுவுடனும் நளினியுடனும் அந்த ரதத்தை வடம்பிடித்து இழுத்தாள்! நிவேதிதை நிறுவிய பெண்கள் பள்ளியில் சிறுமியாக வந்து சேர்ந்ததிலிருந்து அம்மாவிடம் ஒட்டிப்போன ஸரளா இப்போது மங்கையாக வந்திருந்தாள். அவளையும் ஒரு கை கொடுத்து ரதம் இழுக்குமாறு அம்மா ஊக்கினாள். ஆஹா! அம்மாதான் ராமகிருஷ்ணரை எத்தனை இதயங்களுக்குள் வலிய இழுத்து வைத்து அவர்களது மனோரதங்களைப் பூர்த்தி செய்திருக்கிறாள்!

* * *

அம்மாவின் மருமாள் நளினிக்குப் பெயரைத் தவிர எதிலுமே நளினம் கிடையாது. ஆசாரம், ஆசாரம் என்று சொல்லிக்கொண்டு நளின மனத்தைக் கடினமாக்கிக்கொண்டவள் அவள். உள்ளே யாரிடமோ அவள் எரிந்து விழுந்துகொண்டிருந்தாள். அம்மா அவளிடம் சொன்னாள். அதாவது, அந்த மருமகளை முன்னிலைப்படுத்தித் தன் பிற மகள் அனைவருக்கும் உபதேசிக்கலானாள்: ''பெண்ணாகப் பிறந்த நாம் இப்படி முன் கோபிகளாக இருக்கவே கூடாது. நாம் குழந்தைப் பிராயத்திலே அப்பாவின் ஆதீனத்திலேயும், மத்திமப் பிராயத்திலே அகத்துக்காரர் ஆதீனத்திலேயும், முடிவில் பிள்ளையின் ஆதீனத்திலும் இருக்க வேண்டியவா. நாம பொறுத்துண்டுதான் வாழணும். ஆனால் இந்தக் காலப் பொண்டுகளுக்கோ தொட்டால் சுருங்கியாக இருக்கிறதிலேயே ஒரு பெருமை, இந்த நாளிலே வாய்வார்த்தைக்கும் ஒரு வியவஸ்தையே இல்லை. சின்ன விஷயங்களுக்குக்கூடப் பொறுமையிழந்து பொம்மனாட்டிகள் வார்த்தைகளைக் கொட்ட ஆரம்பிச்சுடறா. இதெல்லாம் சரியில்லை. பெண்களுக்குப் பொறுமையைப் போல பூஷணம் வேறே இல்லை'' என்றாள்.

இப்படிச் சொல்லித் திரும்பிய அம்மாவின் கண்களில் ராது தென்பட்டாள். அம்மாவின் கண்களை எப்போதும் குளிர்விக்கும் ராதுவைக் கண்ட மாத்திரத்தில் இன்று ஏன் அவளுடைய கண்கள் கூசிக் குறுகுகின்றன? இதோ அம்மா பேசுகிறாள்: ''அச்சோடியம்மா! ஏண்டி ராது! நீ ஸ்திரீ ஜன்மா இல்லை? இதென்ன அக்கிரமம்? முழங்கால் தெரிகிறமாதிரி புடவை நகர்ந்திருக்கு. நீ பாட்டுக்கு சொரணை இல்லாமல்

உட்கார்ந்திருக்கியே! 'ஒரு பெண்ணோட முழங்காலைப் பார்த்தாலே போறும், திகம்பர ஸ்திரீயைப் பார்த்த பாவம் சேரும்'னு சொல்லுவா. பதவிசா இருடி, தாயே'' என்றாள்.

அம்மாவுக்கு எத்தனையோ பவிசும் பதவியும் வந்த பின்பும் இந்தப் 'பதவிசு'க்குத்தானே அவள் திவ்விய விக்கிரகமாக இருந்தாள்!

மேற்கண்டவாறு அம்மா கண்டித்தபோது ராதுவுக்கு வயசு பன்னிரண்டுதான். அதாவது நம் வீட்டுப் பெண் குழந்தைகள் 'ஸ்கர்ட்'டில் உலவுகிற வயசுதான்! இதைப் படிக்கும் தாய்மார்கள் கவனிக்க!

அம்மாவின் கர்நாடக மனப்போக்கைப் பார்த்து, அருகிலிருந்த ஆசாரக்கார பக்தை இதுதான் சமயமென்று, ''ராது கல்யாணமான விட்டும் ஸ்கூலுக்குப் போயிண்டிருக்காளே, இது சரியா?'' என்றாள்.

எதிலும் மிகையாகச் சாயாத துலாக்கோல் அன்றோ நம் அம்மா! பட்டுக் கத்தரித்தாற்போல் பதில் சொன்னாள்: ''ராதுவுக்கு இன்னும் பதிமூன்று வயசுகூடப் பிறக்கவில்லை. அவளுக்கு வயசும் வரவில்லை. கிராமாந்தரத்திலே பிறந்து கிராமாந்தரத்திலே வாழ்க்கைப்பட்டிருக்கா. ஊர்வம்பை உழக்காலே அளந்துண்டு நிர்மூடமாக நிற்காமல், நாலெழுத்துப் படிச்சுக் கொஞ்சம் புத்தியை விசாலமாக்கிக்கட்டும்னு நானேதான் அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிச்சுண்டு இருக்கேன். படிப்பறிவும், கைத்தொழிலும், கலைஞானமும் இருந்தால் பெண்கள் எத்தனையோ உபயோகமாக இருக்க முடியும். ஆமாம்'' என்றாள் தீர்மானமாக.

ரேடியோ 'மாஜிக்-ஐ' அலைவரிசைக்கு உரிய கேந்திரத்தை ஸ்பஷ்டமாகக் காட்டுவதுபோல், ஸ்திரீ தர்மத்தை இழையளவும் பிறழாமல் காண்பிக்கிற 'மாஜிக்-ஐ' அம்மாவிடம் இருந்தது!

* * *

பேலூர் மடத்தில் நவராத்திரி கடைசி மூன்று தினங்களில் நிகழும் துர்க்கா பூஜைக்கு முன்பு அம்பாளுக்குத் திருப்பள்ளி எழுச்சி செய்தார்கள். 'போதன்' என்று இந்த விழாவுக்குப் பெயர். நீண்ட நேரம் அம்மாவுக்காகக் காத்திருந்தும் அவள் வராததால் மிகுந்த வருத்தத்துடன் 'போதன்' செய்தனர். அம்பாள் விழிப்புறுகிற அதே விநாடியில் அம்மா உள்ளே பிரவேசித்தாள். அனைவருக்கும் ரோமாஞ்சனம் உண்டாயிற்று. பிரேமாநந்தர் (பாபுராம்) கீழேயே விழுந்து விடுவார்போல்

இருந்தது. அம்மா அநாயாஸ கம்பீரத்துடன், ''ஏற்பாடு எல்லாம் கனஜோராயிருக்கு. நானும் துர்க்காதேவி மாதிரியே ஜம்முனு வந்து சேர்ந்திருக்கேன்'' என்ருள்.

இரண்டாம் நாள் பூஜையின்போது மகான் பிரம்மாநந்தர் நூற்றெட்டு மலர்ந்த கமலங்களால் அம்மாவை அர்ச்சித்தது கண்கொள்ளாக் காட்சி!

விஜயதசமியன்று தேவியின் பிரதிமை விஸர்ஜனத்துக்காக கங்கைக்கு பவனி எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது டாக்டர் கஞ்ஜிலால் அதன்முன் சிறுபிள்ளைபோல் கேலிப் பாட்டுக்கள் பாடி ஆடிக்கொண்டும், சீட்டியடித்துக்கொண்டும், 'மூஞ்சி' காட்டிக்கொண்டும் சென்ருர். மடத்து மாடத்திலிருந்து ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டிருந்த அம்மாவிடம் பிரம்மசாரி ஒருவர், விழாவின் கௌரவத்துக்கே கஞ்ஜிலால் ஊறு விளைவிப்பதாகக் குறைப்பட்டுக்கொண்டார்.

''நீ ஏன் குழந்தே அப்படி நினைக்கிறே? நம்ம அம்மாவுக்குக் குழந்தைகள் பண்ணுகிற அசட்டுச் சேஷ்டைகளுங்கூட இஷ்டம்தான். இதெல்லாம் ஒரு கர்நாடகமான பத்ததி. இதுகளை நவநாகரிகத்துக்காக விட்டுவிட வேண்டியதில்லை'' என்ருள் தேவி.

விழாவின்போது மடத்தினர் உணவு தயாரிக்கும் நேர்த்தி கண்டு அம்மா மகிழ்ந்து போனுள்: ''ஆஹாஹா, என் குழந்தைகள் எந்தக் காரியமானுலும் சூராதிசூரர்களாகச் செஞ்சுப்பிடுவா'' என்று பெருமையடித்துக்கொண்டாள்.

துர்க்கா பூஜை நடந்தபோது மூன்று தினங்களும் உணவு வேளையில் மழைச்சூல் கொண்ட கார்முகில்கள் மந்தை மந்தையாகத் திரண்டு வந்தன. மூன்று தினங்களும் அம்மா, ''வெட்ட வெளியில் என் குழந்தைகள் எப்படி மழையிலே சாப்பிடுவா!'' என்று கேட்டுக்கொண்டு பத்மாஸனத்தில் அமர்ந்து துர்க்கா மந்திரத்தை ஜபித்தாள். அவர்கள் உண்டு முடியும்வரை மூன்று நாட்களும் ஒரு தூறல் விழவில்லை. 'பெய் எனப் பெய்யும் மழை' - பெய்யாதே எனப் பெய்யாதும் கூடத்தான்!

மூன்றும் முறையாகக் காசியம்பதிக்குச் சென்ருள் அம்மா, தன் கோஷ்டியுடன். இம்முறை அங்கே சுமார் மூன்று மாதங்கள் வாசம் செய்தாள்.

உத்போதனில் காசி யாத்திரைக்காக அம்மா மும்முரமாக மூட்டை முடிச்சுக் கட்டிக்கொண் டிருந்தபோது, கிரீஷ் சந்திர கோஷின் சகோதரி தரிசனத்துக்காக வந்தாள். விடைகொள்கையில், ''அம்மா, போய் வருகிறேன்'' என்ருள் அவள்.

கைக்காரியமாக இருந்த அம்மா, ''சரி, போம்மா'' என்றாள். அவள் அகன்றாள். அம்மா நாக்கைக் கடித்துக்கொண்டாள். ''ஏன் என் வாயிலிருந்து அவவாக்கு வந்தது? 'போயிட்டு வா'ன்னு சொல்லாமல் ஏன் வெறுமே 'போ'ன்னு சொன்னேன்? இது நல்லதுக்கில்லே!'' என்று கிலேசம் அடைந்து கூறினாள்.

அன்றிரவே கிரீஷின் சகோதரி சற்றும் எதிர்பாராத விதத்தில் கண்ணை மூடிவிட்டாள்!

காசியில் ராமகிருஷ்ண சங்கத்தின் சமூகசேவை இல்லம் சிறப்பாகப் பணி ஆற்றிவந்தது. அதுகண்டு சந்தோஷித்த அம்மா, ''இங்கே டாகுர் நித்யவாசம் பண்ணறார்! மகாலக்ஷ்மி நிருத்யம் பண்ணறா. நோயாளிகளுக்குச் செய்கிற மருத்துவப்பணி சாட்சாத் நாராயண சேவையாகவே எனக்குத் தெரிகிறது'' என்றாள்.

ராமகிருஷ்ண சங்கத்தினர் சமூகசேவையில் ஈடுபடுவதை இதுவரை ஆதரிக்காத மஹேந்திரநாத குப்தர் இதைக் கேள்வியுற்று, ''அம்மாவே அப்படிச் சொல்லிவிட்டாளா? அதற்கு மறுபேச்சு ஏது?'' என்றார்.

சேவை இல்லத்திலிருந்து விடுதிக்குத் திரும்பியவுடன் சாரதாதேவி தன்து அன்பளிப்பாகப் பத்து ரூபாய் அனுப்பி வைத்தாள். அந்த ரூபாய்நோட்டு இன்றும் அங்கே பொக்கிஷமாகக் காக்கப்பட்டு வருகிறது.

விசுவேசுவரனையும் விசாலாக்ஷியையும் அன்னபூர்ணியையும் கண்குளிரத் தரிசித்துத் திரும்புகையில் அம்மா, ''எப்பேர்ப்பட்ட க்ஷேத்திரம்! இங்கே மரிச்சாலே ஈ, எறும்பு உள்பட எல்லா ஜீவராசிக்கும் முக்தியாச்சே!'' என்று வியந்தாள்.

உடன் வந்த பிச்சிமாமி ஸுரபாலா, ''ஏ சாரதாக்கா! அப்போ நீ இங்கேயே செத்துப் போ, முக்தியடையலாம்'' என்றாள்.

அம்மா பரிதாபமாகச் சிரித்தாள்.

''சாரதாக்கா, என்ன கேடு உனக்கு? சிரிக்கவா சிரிக்கறே? என்னையும் என் பெண்ணையும் நடுத்தெருவிலே நிறுத்திட்டு, ஊரிலே இருக்கிறவாளுக்கெல்லாம் வாரி விடறயே, ராட்சஸி! இப்பவே செத்துத் தொலை'' என்று ஏகக் கூச்சலிட்டாள் பிச்சிமாமி.

அம்மா சிரித்துக்கொண்டே இருந்தாள். தம்பி மனைவிக்குப் பைத்தியமா, அம்மாவுக்கே பைத்தியமா என்று அடியார் சந்தேகிக்குமளவுக்கு அம்மா சிரித்தாள். உடன் இருந்தவர்

களுக்குக் கிலி எடுத்துவிட்டது. "ஏம்மா இப்படிச் சிரிக்கிறேள்?" என்றார்கள்.

"சிரிக்காமல் என்ன பண்ணுவது? இந்த சாரதா சாகிறதாவது? சாகவே முடியாத ஒரே ஒருத்தி நான்னு என் தம்பி பெண்டாட்டிக்குத் தெரியலையே! அவளுடைய ஆசையை நான் எப்படிப் பூர்த்தி பண்ணறது?" என்றாள்.

அனைவருக்கும் ஆகாயத்தில் பறக்கும் உணர்ச்சி உண்டாயிற்று. சட்டென்று அம்மா அதல பாதாளத்துக்கு வந்தாள்: "என்னைப் போல் துர்ப்பாக்கியசாலி பதினாலு லோகத்திலேயும் இருக்க முடியாது, டாகுர் ஒருமுறை ஸ்பரிசித்ததாலேயே எத்தனையோ மகா பாவிகளுடைய கர்மாவெல்லாம் தொலைஞ்சே போய், அவா வாழ்க்கை ஆனந்த மயமாயிருக்கு. நான் பிறந்த நாளாக ஒரு பாவம் பண்ணினதாக எனக்கு நினைவில்லை. என் அஞ்சாம் வயசிலே அந்த மகாப் பிரபு இதோ இந்தக் கையைப் பிடிச்சுப் பாணிக்கிரஹணம் பண்ணினார். அப்படியிருந்தும் என் கஷ்டம் ஏன் இன்னமும் தீரவில்லை?" என்றாள் தீனமாக.

பொங்கி எழுந்த உள்ளங்கள் அனைத்தும் சாம்பி விழுந்தன.

அம்பாளின் அவதாரத்தில் இது ஒரு புதுமை! ஹிமய சிகரத்திலிருந்து ஆழ்கடலின் அடிவரையில் அந்த வாழ்க்கையின் வீச்சு அமைந்திருந்தது. இந்த விநாடி மகா பராசக்தியாக இருப்பாள். அடுத்த விநாடியே அபலையிலும் அபலையாகி விடுவாள். அபலைகளும் உலக வாழ்வை முறைப்படி வாழ்ந்தால் பராசக்தியைப் பிடித்துவிடலாம் என்று காட்டிடவே வந்தவள் அவள். ஆதரிச மனித வாழ்வை எந்த மனிதருமே வாழ்வதில்லை. மனத்தின் சேஷ்டை மனிதராகப் பிறந்த எவரையுமே பல சந்தர்ப்பங்களில் தர்ம மார்க்கத்திலிருந்து வெளியே இழுக்கத்தான் செய்கிறது. எனவேதான் எந்த மானிடருமே வாழ்ந்துகாட்டாத ஆதரிச மனித வாழ்வை வாழத் தெய்வமே மநுஷ்ய அவதாரம் எடுக்கிறது அப்படி வந்தவள்தான் நம் சாரதை. மனிதர்களுக்கு வழிகாட்டியாக வாழ்வதோடு நில்லாமல் அவ்வப்போது அவர்களுக்குப் பேரநுக்கிரகம் புரியும் தெய்வமாகவும் தன்னைக் காட்டிக்கொண்டாள். பக்தியறியா மக்களுக்குத் தன்னைக் கண்ட மாத்திரத்தில் பக்தி துளும்பியதால், அப்போது தான் வெறும் மானுட ஸ்திரீயாக மட்டும் இருப்பது பொருந்தாது என்று தெய்வமாகவும் இருந்து வைத்தாள்! மானுடமான வழிகாட்டி, தெய்விகமான வரதாயகி என்ற இரு நிலைகளையும் அவள் இசைத்தது உண்டே—அதன் செவ்வியே செவ்வி! இந்தக்

கணம் மஹாயோகிகள் அவளை அமர்த்திவைத்து, சாங்கோ பாங்கமாகச் செய்கிற சண்டீபூஜையை சகஜமாக ஏற்றுக் கொள்வாள். பூஜைமுடிந்த மறுகணமே அதைவிட சகஜமாக, தன்னைப் பூஜிக்க உபயோகித்த பாத்திரங்களைக் கொல்லைக்கு எடுத்துச் சென்று கரகரவென்று தேய்ப்பாள்! இவளுக்கு சாஸ்திரோக்தமாக நிவேதனம் செய்யப்பட்ட உணவு வகைகளை இவளே அனைவருக்கும் பரிசாரகியாகப் பரிமாறுவாள். அவர்கள் உண்ட இடத்தில் எச்சில் எடுத்துச் சுத்தம் செய்வாள். எந்த அவதாரத்திலுமே கேட்டிரா விதத்தில் இங்கு மகிமையும் எளிமையும் பின்னிக் கிடக்கின்றன! மகிமையால் மாயாதீத மகாசக்தியாக இருந்தவள், எளிமையால் இந்த மாயைக்குக் கட்டுப்பட்டவளாகவும் தன்னைக் காட்டிக்கொண்டாள்!

இம்முறை அம்மா காசியில் நீண்ட காலம் தங்கியதால் தினந்தோறும் கிரமப்படி 'காசி கண்டம்' என்கிற ஸ்தல மாகாத்மியத்தை சிரவணம் செய்து வந்தாள். காசியிலேயே பாகவதமும் படனம் செய்யச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தாள். வாரணாசியாகிய காசியில் உள்ள எண்ணிறந்த ஆலயங்களுக்கும் சென்று வழிபட்டு வந்தாள். திலபாண்டேசுவரர் ஆலயத்தி லுள்ள லிங்கத்தைக் கண்டு, "இது ஒரு மகிமையுள்ள சுயம்பு மூர்த்தி" என்றாள். கேதாரீசுவரரைத் தரிசனம் செய்தபோது, "இந்த லிங்கம் சாக்ஷாத் கேதாரநாதத்திலிருக்கிற லிங்கத் துக்குச் சமதையானது" என்றாள்.

ஸாரநாதத்துக்குச் சென்று அங்குள்ள பௌத்தஸ்தூபியைக் கண்டாள் நம் அம்மா. அங்கே சில வெள்ளையர்கள், "ஆகா, இந்த இந்தியர்கள்தாம் என்ன விந்தை எல்லாம் செய்திருக் கிறார்கள்!" என்று வியந்துகொண் டிருந்தார்கள். "இவாள் இப்படி வியக்கிறதும் விந்தைதான்" என்றாள் அம்மா. அந்த 'விந்தை'யை அவிழ்த்துப் பேசினாள்: "பூர்வத்திலே இந்த ஸ்தூபியைக் கட்டினவாளேதான் இப்போ அந்நிய தேசத்திலே பிறந்து, மறுபடி இங்கே வந்து இதைப் பார்த்துட்டு, இதைக் கட்டினவாளை நினைச்சுப் பிரமிக்கிறா!" என்றாள்.

முன்னொரு முறை தனக்காக சாரதாநந்தரை உபவாசம் இருக்கும்படி அம்மா பணித்தது நினைவிருக்கிறது அல்லவா? இன்று அம்மா தனக்கு நேர இருந்த ஒரு சிறு விபத்தை பிரம்மாநந்த ஸ்வாமிகள் ஏற்பதற்கு அனுமதி தந்தாள். பிறர் இன்னலை மகிழ்ந்தேற்கும் அம்மா தன் இன்னலை இன்னொருவர் ஏற்க ஒப்பினாள் என்றால், அதற்குப் பாத் திரமானவரின் மகிமையையும், அவரிடம் அம்மாவுக்கிருந்த

ஸ்வாதீன உரிமையையும் என்னென்பது? ஸாரநாத இடி பாடுகளுக்கு அம்மா செல்வதற்காகக் குமாரி மக்லியாட் ஒரு ஃபேடன் வண்டி—அதாவது, இரட்டைக் குதிரை பூட்டிய திறந்த ஸாரட்டு வண்டியை—அனுப்பியிருந்தாள். ஆனால் அம்மாவோ பிடிவாதமாக அதில் ஏற மறுத்து, மற்றப் பெண்மணிகளோடும் குழந்தைகளோடும் ஒரு சாமானிய ஜட்காவிலேயே போக முற்பட்டாள். பிரம்மா நந்தரையும் மற்ற ஆடவர்களையும் ஃபேடனில் வருமாறு பணித்தாள். அம்மாவின் முன் பேசி அறியாத பிரம்மாநந்தர் இன்று அவளை எதிர்த்துப் பேசினார்! அம்மா கோஷ்டியினர் தான் ஃபேடனில் செல்லவேண்டும் என்று அவர் பிடிவாதம் பிடித்தார். அம்மா அந்தப் பிள்ளைக்கே கடைசியில் விட்டுக் கொடுக்கும்படி ஆயிற்று. பெண்டிர் ஃபேடனிலும், ஆடவர் ஜட்காவிலும் ஏறிக்கொண்டனர். வண்டிகள் புறப்பட்டன. சாலைத் திருப்பம் ஒன்றில் பிரம்மாநந்தர் கோஷ்டி ஏறி வந்த ஜட்கா கவிழ்ந்தது, அதிகம் அடி படாமல் அவர்கள் தப்பினர். ''அம்மாமட்டும் இந்த வண்டியில் வந்திருந்தால்..?'' என்று கூறிக் கலங்கினர் ஸ்வாமிஜி, அம்மாவும், ''எனக்கு நேர இருந்த விபத்தை ராகால் தன் தோளில் தாங்கிண்டான். பெண்டுகளையும் இந்த நான்கு சிண்டுகளையும் வைச்சுண்டு நான் அந்த ஜட்காவில் வந்திருந்தால் என்ன ஆயிருக்கும்?'' என்றாள்.

குரு நானக்கின் சீக்கிய சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஒரு மகானை அம்மா கங்கைக் கரையில் கண்டு, சாதாரணப் பெண் போல் அவர் பாதத்தில் ஒரு ரூபாய் வைத்து நமஸ்கரித்தாள்.

சாமேலிபுரி என்ற வயோதிகச் சாதுவையும் வாரணசியில் கண்டு வணங்கினாள், அம்மா. கோலாப்-மா அவரிடம், ''உங்களுக்கு யார் ஆகார வசதி பண்ணித் தருகிறு?'' என்று கேட்டாள். சாமேலிபுரி ஆழ்ந்த பக்தி தோய்ந்த குரலில், ''துர்க்கையம்மன்தான்! வேறே யாரு?'' என்றார். அம்மா அந்தப் பதிலில் பேருவகை பூத்தாள். விடுதிக்குத் திரும்பிய பிறகும், ''அந்தக் கிழவனுருடைய முகம் எப்படிக் குழந்தை முகமாக இருந்தது! என் கண்ணிலேயே கட்டி நிற்கிறது அந்தக் கவடற்ற முகம்'' என்றாள். சாமேலிபுரி தமக்கு துர்க்கா தேவியே பராமரிப்புத் தருகிறாள் என்று சொன்னதை மெய்ப்பித்துக் காட்டுவதுபோல் நம் அம்மா அவருக்கு இனிப்புப் பட்சணங்கள், ஆரஞ்சுப்பழங்கள், ஒரு போர்வை ஆகியவற்றை அனுப்பி வைத்தாள்.

பிற்பாடு ஒரு நாள் வாரணசி வாழ் சாதுக்களையெல்லாம் கண்டு வரலாம் என்று அடியார் ஒருவர் சொன்னபோது,

''கிழவனுரைத்தான் பார்த்தாச்சே! இனிமேலே பார்க்கிறதுக்குப் பாக்கி என்ன இருக்கு?'' என்று அம்மா நிறைவுடன் கூறினுள்.

ராமகிருஷ்ண அத்வைத ஆசிரமத்தில் குழந்தைகள் நடித்த ராஸலீலா நாடகத்துக்குச் சென்ருள் அம்மா. உலக மாதாவாகக் கருதப்பட்ட அம்மா, அன்று ராதையாகவும் கிருஷ்ணுகவும் வேஷமிட்ட குழந்தைகளின் பாதத்தில் உலக வழக்கப்படி பாதக்காணிக்கை செலுத்தினுள்! மாயாதீத மகாசக்தி மாயா உலகுக்குக் கட்டுப்பட்டு எளிமையுடன் வாழ்ந்து வழிகாட்டியது!

இந்த மாயை எல்லோருக்கும் புரியுமா? ஒரு நாள் காசி நகரப் பெண்மணிகள் சிலர் அம்மாவைத் தரிசிக்க வந்தனர். அப்போது அம்மாவை ஒருபுறம் பிச்சிமாமி வறுத்தெடுத்துக் கொண்டிருந்தாள்; இன்னெரு புறம் ராது அவளைப் பிடுங்கி எடுத்துக்கொண் டிருந்தாள். (சமீபகாலமாக ராதுவின் சமர்த்து உதிரத் தொடங்கி, அவள் பல விதங்களில் அசட்டுத்தனமும் முரட்டுத்தனமும் செய்யத் தொடங்கியிருந்தாள். இந்தக் கதையைப் பிறகு விரிவாகப் பார்ப்போம்.) போதாக்குறைக்கு மருமான் பூதேவ் வேறு ஏதோ நச்சரித்துக்கொண் டிருந்தான். இவர்களைத் தாஜா செய்துகொண்டு அமர்ந்திருந் தாள் அம்மா. இதைக் கண்டு, தரிசிக்க வந்த பெண்களில் ஒருத்திக்கு, 'தூய அன்னை ஸ்ரீஸ்ரீஸ்ரீ சாரதாமணி தேவி என்று பெரிதுபடுத்துகிற மநுஷி உண்மையில் இவ்வளவுதாஞ?' என்று சப்பிட்டுவிட்டது. இன்றுங்கூடச் சில அதி புத்திசாலிப் பெண் கள், ''ஹோலி மதர் என்ன கிழிச்சுட்டா? நம்ப மாதிரி குடும் பத்தைக் கட்டிண்டு மாரடிச்சுண்டுதானே இருந்தா? அவளை எப்படி டிவைன் பெர்ஸனலிடின்னு சொல்கிறது?'' என்று சண்டைக்கு வருகிருர்களே! குடும்ப வாழ்வில் இருப்பவர்களுக்கு ஆதரிச வாழ்வைக் காட்டத் தெய்வமே வரும்போது அந்தத் தெய்வமும் குடும்பப் பெண்ணுகத்தானே இருக்கவேண்டும்? பாசி ஜலத்தில் விழுந்தவரைக் கரையேற்ற வந்தவரும் அந்த நீரிலேயே குதித்துப் பாசியைப் பூசிக்கொண்டுதானே ஆக வேண்டும்? இந்த உண்மை மேற்படி காசிப் பெண்ணுக்குத் தெரியவில்லை. தன்னுடைய ஏமாற்றத்தை வாய்விட்டு நம் அம்மாவிடமே கூறிவிட்டாள், ''அம்மா! நீங்களும் என்ன ஒரேயடியாக மாயையிலே மூழ்கியிருக்கேளே!'' என்ருள்.

அம்மா சற்றும் சலனம் அடையவில்லை. மனம் விட்டு நகைத்து, ''ஆமாம், என் ராஜாத்தி! என்ன பண்ணலாம் சொல்லு, நானேதானே மாயை?'' என்ருள்.

44. "பக்த சாதி!"

ஆஉரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக் கரந்தார்க்(கு) அன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.

—அப்பர் சுவாமிகள்.

அம்மா காசியாத்திரை முடித்து, ஜயராம்பாடிக்குப் புறப்பட்டாள். விஷ்ணுபுருக்கு இருப்புப் பாதை போட்டாகிவிட்டதால், இம்முறையிலிருந்து அம்மா விஷ்ணுபுர் வழியாக ரெயிலில் சௌகரியமாகப் பிறந்தகம் செல்லலானாள்.

விஷ்ணுபுர் வழியாகப் போகிறோம் என்றறிந்ததும் அம்மாவுக்கு உடல் குப்பென்று சிலிர்த்தது. "ஆஹா! இந்த டாகுரின் லீலைகளே லீலை" என்றாள். தொடர்ந்து, "எத்தனையெத்தனையோ வருஷத்துக்கு முன்னாடி ஒரு நாள் அவர், 'விஷ்ணுபுருக்குள்ளே ஒரு பிருந்தாவனம் ஒளிஞ்சிண்டிருக்கு; நீ பார்க்கப் போறே!' என்றார். 'விஷ்ணுபுரில் எனக்கு யார் இருக்கா? அங்கே போகிற பிரமேயம் எனக்கு ஏது?'ன்னு நான் கேட்டேன். 'அதென்னவோ? நீயே ஒருநாள் தெரிஞ்சுப்பே!' என்றார், அந்தத் திரிகாலஞானி. அவர் வாக்கு உண்மையாச்சு. இனிமேலே ஜயராம்பாடி போகிறச்சே எல்லாம் விஷ்ணுபுரைப் பார்ப்பேன்" என்றாள்,

விஷ்ணுபுரில் ஸர்வமங்களாவின் ஆலயத்தில் தரிசனம் செய்துகொண்டு, "டாகுர் வாக்குப் பலிச்சுது" என்று திருப்தியுடன் கூறினாள். கண்ணபெருமான் தன் சகோதரி ஸர்வமங்களையின் ஆலயத்திலேயே பிருந்தாவனத்தைக் காட்டிவிட்டான் போலும்!

கல்கத்தாவுக்கும் ஜயராம்பாடிக்கும் இடையில் அமைந்த 'ரேஜி' என அம்மா குறிப்பிட்ட கோயால்பாரா ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் தமது ஊர் எல்லையிலேயே அம்மாவை வரவேற்றனர். அவர்கள் அமர்த்தியிருந்த மாட்டு வண்டியில் அம்மா ஏறிக்கொண்டாள். ஆசிரமத்தைச் சேர்ந்த 'துடி'யான பிள்ளையாண்டான் ஒருவனும் வண்டிக்காரனுக்குப் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டான். சுறுசுறுப்புச் சொட்டும் அந்தப் பிள்ளை, மாடுகளின் கால்களுக்கிடையே தன் காலை விட்டு 'ட்ரிய்யோ, ட்ரிய்யோ' என்று அவற்றை விரைவு படுத்திக்கொண் டிருந்தான். அம்மா இதை ரொம்பவும் ரசித்

தாள். ''எலே! படுசுட்டியா இருக்கியே! இப்படித்தான் நாலும் தெரிஞ்சுண்டிருக்கணும்'' என்று சிலாகித்தாள்.

ஆசிரமத்தருகே பாண்டுஜ்யே புகுர் ஏரியில் ஸ்நானம் செய்த அம்மா இந்தச் சமர்த்துப்பிள்ளையிடம், ''குழந்தே! இன்னிக்கு உன் கையாலே பறிச்ச புஷ்பத்தாலேதான் டாகுருக்கு அர்ச்சனை பண்ணப்போறேன். மடிவஸ்திரம் உடுத்திண்டு பூக் கொண்டு வாப்பா'' என்றாள்.

உடனே அந்த 'துருதுருப்பை' அம்மாவின் ஈரத்துண்டையே எடுத்து ஸ்வாதீனமாகக் கட்டிக்கொண்டான்.

ஆசிரமத் தலைவர் கேதாரின் அன்னைக்கு அது அபசார மாகத் தோன்றியது. ''டேய் முந்திரிக் கொட்டை! திவ்விய மாதாவின் வஸ்திரத்தை எடுத்துக் கட்டிக்கிறயே! உனக்குக் கொஞ்சமாவது மூளையில்லே?'' என்று அதட்டினாள்.

அம்மா மந்தஹாஸத்துடன், ''அவனை ஏனம்மா கோவிச் சுக்கிறேள்? கள்ளமறியாப் பிள்ளை, அவன் அம்மாவோட துணியை உடுத்திண்டா அபசாரம் வந்துடுமா என்ன?'' என்றாள். பாலனை நோக்கி, ''ஓடுடா ராஜா! டாகுருக்கு நிறையப் பூக் கொண்டா'' என்றாள்.

ஆசிரமத்தில் அம்மாவுடன் உரையாடிய கேதார் பாபு, ''இப்போ டாகுருடைய சிஷ்யர்கள் ரொம்பப் பேர் வெளி தேசங்களுக்குக்கூடப் போய் அவர் உபதேசத்தைப் பரப்பிண்டு இருக்கா. இங்கே நாங்கதான் எழுத்தறிவில்லாத நிரட்சர குட்சிகளாக நின்றுவிட்டோம்'' என்றார்.

உடனே அம்மா அந்த அதிதீவிர சுதேசவாதிக்கு உறைக் கிற மாதிரி பளிச்சென்று சொன்னாள்: ''அதற்கென்ன செய்ய லாம்? நீங்கள் உங்கள் தலைமுறையிலே நிரட்சரகுட்சிகளாக நின்னதோடு போச்சா? இப்பவும் உங்களுக்கு வெள்ளைக்காரா ளிடம் இருக்கிற துவேஷத்தினாலே, இங்கே இருக்கிற இளந் தலை முறைகள் இங்கிலீஷ் படிக்கக்கூடாதுன்னு தடுத்து வைச்சிருக் கேள். எதிர்காலத்திலே மேற்கத்திச் சீமைக்காராளோடு நமக்கு ரொம்பத் தொடர்பு இருக்கப் போறது. முதலில் இவாளுக்கு இங்கிலீஷ் போதிக்கிறதுக்கு ஏற்பாடு பண் ணுங்கோ!'' - அம்மாவின் பகையறியா நெஞ்சும், விவேகமும், தீர்க்கதரிசனமும் எத்துணை அருமையாயிருக்கின்றன!

வெறும் பேச்சோடு நிற்பவள் அல்ல அம்மா. டாக்காவைச் சேர்ந்த கிருஷ்ணபூஷன் பாபு, தர்மாநந்த ஸ்வாமி ஆகிய இருவரையும் அந்த ஆசிரமப் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்க அமர்த்தினாள்.

கேதார் பாபு போன்றவர்கள் தேசபக்தி என்ற பெயரில் விதேச விரோதத்தை வளர்த்துக்கொள்வதும், ஆக்க ரீதியில் ஏதும் செய்யாமல் எதிர்ப்புக் கோஷம் போட்டுக்கொண் டிருப் பதும் அம்மாவுக்குச் சற்றும் பிடிக்கவில்லை. எனவே, அவள் கேதாரிடம் கண்டிப்புடனே பேசவேண்டியிருந்தது. ''அப்பனே கேதார்! 'பந்தே மாதரம்', 'பந்தே மாதரம்'னு கத்திண்டிருந் தாலே போறும், அதுவே தேசத் தொண்டுன்னுதான் இன்னமும் நினைச்சுண்டிருக்கேளா? இல்லாட்டா, நான் அப்போதே சொன்ன மாதிரி ராட்டையிலே நூல் நூற்று, காரியரீதியிலே தேசத்துக்கு நல்லது பண்ணுகிறேளா? உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரியறது—நான் சொன்னபடி செய்யவில்லைன்னு. தப்பு என்னுடையது. முதலில் நானே ஒரு ராட்டையைச் சுழட்ட ஆரம்பிச்சிருக்கணும். அப்போ, தன்னுலே மற்றவாளும் அப்படிச் செய்திருப்பேள். எங்கே, கொண்டா ஒரு ராட்டை!'' என்றுள்.

கேதார் பாபு இரண்டுங் கெட்டானுக நடந்தும் பேசியும் பன்முறை அம்மாவின் கருர் கண்டிப்புகளுக்குப் பாத்திர மானுர்: அவரது உண்மையான பக்தியையும் நல்ல இதயத்தை யும் அம்மா அறிவாள். எனவே, அந்தக் குழந்தைக்குத் தன் சொல் சுட்டுவிடப் போகிறதே என்று இரங்கிச் சில்லெனக் கூறினுள்: ''பையா! நீ ஏன் நிரட்சரகுட்சின்னு நினைச்சு வருத்தப்படணும்? ஆனுனப்பட்ட டாகுர் என்ன படிச்சிருந்தார்? பகவான்கிட்டே மாருத பிரேமை ஒண்ணுதானே மநுஷ்யாளுக்கு வேண்டியது? அதுக்குப் படிப்புத் தேவை இல்லையே! மகனே, டாகுர் உன்மூலம் இந்த வட்டாரத்திலே தம் காரியத்தை நிறைய நடத்திக்கப் போருர். அவர் படிச்சவா - படிக்காதவா, புத்திசாலி-அசடு, பணக்காரா - ஏழை எல்லாரையும் வித்தியாசம் பார்க்காமல் கைதூக்கி விடுகிறதுக்குத்தான் வந்தவரப்பா. நீ கவலையே படாதே! என் அன்பு உனக்கு எப்பவும் உண்டு.''

ஜயராம்பாடி சென்றடைந்தாள் அம்மா. ரத்தக் கடுப்புக் கண்டு கஷ்டப்பட்டாள். பருவமழை பிடித்துக்கொண்டு எங்கும் வெள்ளக்காடாயிற்று. அதையும் பொருட்படுத்தாமல் கோயால் பாரா ஆசிரமவாசிகள் ஜயராம்பாடிக்குச் சென்று அம்மாவுக்கு சுசுரூஷை செய்தனர். அம்மா குணம் அடைந்தாள். ஆனல் மழை விட்டதும் ஊரெல்லாம் பரவிய மலேரியாக் காய்ச்சலில் ஆசிரமக் குழந்தைகள் படுத்துவிட்டனர். இப்போது பிரதியாக அம்மா அவர்களுக்கு சுசுரூஷை செய்து தேற்றி அனுப்பி வைத்தாள். அவர்களை அனுப்பிய பின்னும் தாயுள்ளம் அவர்களையே எண்ணியது. பக்தை ஒருத்தியிடம் அம்மா சொன்னுள்:

''கேதார் பாபு நம் டாகுருக்கு ரொம்பக் கைங்கரியம் செய்கிறது வாஸ்தவம்தான். இருந்தாலும் அவருக்கு மனிதாபிமானம் அவ்வளவாகப் போருது. பண விஷயத்திலும் அவர் செட்டு; மலேரியாவிலிருந்து எழுந்த குழந்தைகளுக்கு ரொம்ப பலஹீனமா யிருக்கும். அவாளுக்கு வயிறு நிறையப் புழுங்கரிசிச் சாதமும், மூணு நாலு தினுசுக் கறிகாய்களும் சேர்த்துப் போஷாக்குப் பண்ணணும். கேதார் எங்கே மனசு வந்து இத்தனை சவரணை செய்யப் போருர்?''

யோசனையில் ஆழ்ந்த அம்மாவுக்கு ஓர் உபாயம் தோன்றியது. ''அம்மாடி! கேதார் பாபுவுக்கு நான் சொல்கிற மாதிரி ஒரு கடிதாசு எழுது'' என்று கூறி, 'டிக்டேட்' செய்யலானுள்:

அன்புள்ள கேதார்,

ஆசி. ஆசிரமத்திலே என் கையால் டாகுரைப் பிரதிஷ்டை பண்ணினேன். அவருக்கு நான் செய்தது போலவே நைவேத்தியம் பண்ணணும். நான் சத்துள்ள ஆகாராதிகளையே அவருக்குப் பண்ணிப்போடுவேன். நீயும் இப்போது அதே மாதிரி நைவேத்தியம் பண்ணவேணும். புழுக்கின அரிசியில் வடித்த அன்னம்தான் அவருக்கு இஷ்டம். வேளா வேளைக்கு மூன்று நாலு கறிவகைகளுக்குக் குறைவில்லாமல் கூட்டு, ஸப்ஜி இத்தியாதிகளும் பண்ணு. டாகுர் பிரசாதம் ஆசிரமவாசிகளுக்கெல்லாம் வயிறு ரொம்பக் கிடைக்கணும், ஆமாம், மறந்துவிடாதே!

இப்படிக்கு,
அம்மா.

டாகுருக்குப் புழுங்கரிசிச் சோறும், காய்கறித் தினுசுகளும் பிரீதியோ இல்லையோ? அம்மா தந்திரம் செய்துவிட்டாள்! அவருக்கு நிவேதனம் என்ருல் கேதார் உடனே கீழ்ப்படிந்து விடுவார் அல்லவா? அன்னையன்புதான் நம் அம்மாவை எத்தனை விதங்களில் நாம் ரசிக்கும்படி இயக்கியிருக்கிறது? கள்ளமறியா அன்புக்குள்ளேயே சிறிது கள்ளம்கூட மனேஹரமாகக் கலந்து விடுகிறது, பாருங்களேன்! தன்னலக் கலப்பற்ற அந்தக் கள்ளத் தனமும் வெள்ளை வெளேரென்றுதான் இருக்கிறது. அம்மாவின் ஆக்ஞைப்படியே கேதார் டாகுருக்கு நிவேதனமும், ஆசிரமவாசிகளுக்குப் பிரசாத விநியோகமும் செய்து, ஆசிரமத்துப் பிள்ளைகளைத் தாம் அறியாமலே போஷாக்குச் செய்தார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அம்மாவின் அலாதியான ஸ்வாதீன அன்பைப் பெற்றவர் கேதார். இதனால்தான் அம்மா அவரிடம் உரிமையோடு, ''எனக்கென்றே கோயால்பாராவில் தனியாக ஒரு குடிசை போட்டுவை'' என்றாள். அவரும் அந்த உத்தரவைச் சிரஸால் வகித்து அம்மாவுக்கு ஓர் எளிய இருக்கை எழுப்பினார். அதற்கு 'ஜகதம்பா ஆசிரமம்' என்று பொருத்தமாகப் பெயரிட்டார்.

அம்மா குறிப்பிட்டிருந்த சுபதினத்தில் அவளை அந்த ஆசிரமத்துக்கு அழைத்து வருவதற்காகக் கோயால்பாராக் குழந்தைகள் வந்தனர். துரதிருஷ்டவசமாக அன்று கனமழை பிடித்துக்கொண்டிருந்தது.

அடாது மழை பெய்தாலும் விடாது வந்த அந்தப் பிள்ளைகளின் பக்தி அம்மாவின் சகோதரர் காளிகுமாருக்குப் புரியவில்லை. அவர்களிடம் அவர் சிறிதும் பண்பின்றி, ''குரங்குகளா! கேதாருக்கு என்ன, பன்றி மூளையா? இந்த அடைமழையில் என் அக்காவை ஹிம்சிச்சு இழுத்துண்டு போக உங்களை அனுப்பியிருக்கானே? அவன்தான் அனுப்பினால் உங்களுக்கு புத்தி இல்லே?'' என்று இரைச்சல் போட்டார். பிறரிடம் தமது அக்காள் விசுவாசத்தைப் பறைசாற்றிக் கொள்வது அவர் வழக்கம்!

அவர் அம்மாவுக்குத் தருகிற ஹிம்சை அந்தப் பிள்ளைகள் அறிந்ததே! இருப்பினும் நம் அம்மாவின் குழந்தைகள் உயர் பண்பில் அவளையே கொண்டிருந்தனர். ஆதலால் அவர்கள் பணிவாக, ''மாமா! அம்மாவுக்குத் தொல்லை தருகிற எண்ணம் எங்களுக்குக் கொஞ்சமும் இல்லை. அம்மாவே இன்னிக்குத் தேதி வைச்சிருந்தாங்க. நாங்கள் வந்து அழைத்துப் போகிறதாகச் சொல்லியிருந்தோம். அந்த வாக்கு தட்டிப் போகக்கூடாது என்றே வந்திருக்கோம். அவ்வளவுதான்! இந்த அசௌகரியத்திலே அம்மா வரணும் என்கிறதில்லை'' என்றனர்.

இத்தனையையும் கேட்டுக்கொண்டிருந்த அம்மா மலர்ந்து முன்வந்து, ''செல்லங்களா! உங்க வாக்கை நீங்க காப்பாற்றினால், நான்மட்டும் என் வாக்கைக் காப்பாற்றாமல் இருப்பேனா, என்ன? இப்போதே கோயால்பாராவுக்குக் கிளம்பிட்டேன்'' என்றாள் உற்சாகமாக.

ஆனால் அந்தப் பிள்ளைகள் பெருமழையில் தேவி வெளி வருவது உசிதமல்ல என்று கூறி, வேறொரு நல்ல நாளை நிர்ணயித்துக்கொண்டு திரும்பினர். அவ்விதமே இரண்டாவது தினத்தில் அம்மா ஜகதம்பா ஆசிரமத்துக்கு எழுந்தருளினாள்:

வழக்கம்போல் கேதார் பாபு இரண்டுங்கெட்டானாக நடந்துகொண்டார். அவர் முகத்தில் சோபையே இல்லாதிருப்பதை கவனித்த அம்மா, ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கே?'' என்று வினவினாள்.

''நான் சொல்கிறதை அம்மா தப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது'' என்ற பீடிகையுடன் கேதார் தொடங்கினார். ''எனக்குக் கொஞ்சம் முன்கோபம் உண்டு என்கிறது வாஸ்தவம். நான் சிக்கனக்காரன் என்கிறதையும் ஒப்புக்கிறேன். ஆனால் இதுகளைப் பெரிசாக எடுத்துண்டு, இந்த ஆசிரமத்துக்கு வருகிற பிரம்மசாரிகள் இந்த இடத்தையே விட்டுவிட்டுப் போய் விடறது சரிதானா? இப்படி ரொம்பப் பேர் போய்க்கொண்டிருக்கா. எங்கே போகிறா? ஒண்ணு, உங்ககிட்டே போகிறா, இல்லாட்டா ஷரத் மஹராஜ் கிட்டே போய்விடறா! நீங்களும் உடனே அவாளுக்கு அடைக்கலம் கொடுத்து விடுகிறேள்! உங்களுக்கும் மஹராஜுக்கும் செல்வாக்கு இருக்கு. அதனாலே பசங்களுக்கு நன்றாகப் போஷாக்குப் பண்ண முடிகிறது. இந்த மாதிரி ராஜோபசாரம் நடந்தால், அந்தப் பசங்கள் இங்கே ஏன் திரும்புவா? ஆள் போதாமல் இங்கே நான் திண்டாட வேண்டியிருக்கு. இங்கேயோ நாலாதினுசு வேலைகளை விஸ்தரிச்சிருக்கோம். ஏழைகளுக்காக இலவச வைத்தியசாலை வைச்சிருக்கோம் இல்லையா? வசதியுள்ளவாகூட அதுக்கு வர்றா. அந்தக் கூட்டத்தைச் சமாளிக்கவே நாலு ஆள் வேண்டியிருக்கு. நீங்கதான் இதுக்கு நிவாரணம் தரணும். இனிமேலே இங்கேயிருந்து உங்களிடம் வருகிற பசங்களை நீங்க அங்கீகாரம் பண்ணக்கூடாது. 'கோயால்பாராவை விட்டு வரப்படாது. கஷ்டமோ, நஷ்டமோ அங்கேயேதான் இருந்துண்டு இருக்கணும்'னு நீங்க கண்டிப்பாகச் சொல்லிடணும். முன்னெல்லாம் என்கிட்டே அடங்கிக் கிடந்தவாகூட, இப்போ உங்களுடைய அதித அன்பினாலேயே மாறிப்போயிட்டா. நீங்கதான் அவாளைக் கண்டிக்கணும். உங்களிடமும் வராமல் ஒரேயடியாக வெளியேறிவிடுகிறவாளும் இருக்கா. அவாளுக்கு வெளியிலே சௌகரியம் கிடைக்காமல், அவாளும் திரும்பி இங்கேயே வந்து சேருகிறமாதிரி நீங்கதான் உங்கள் சக்தியைப் பிரயோகிக்கணும்.''

கேதார், பாபு பேசப் பேச அம்மாவின் முகம் சப்பாத்திப் பழமெனச் சிவந்து வந்தது. சாதாரண மனிதர்கள் இப்படிப் பேசினால் அம்மா பொறுத்திருப்பாள். ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் பெயரில் அமைந்த ஓர் ஆசிரமத்தின் தலைவர் இப்படிப் பேசுவது அவளுக்குத் தாங்கவொண்ணாததாக இருந்தது. பல

சமயங்களில் அம்மாவிடம் சிக்கிக்கொண்ட கேதார் இன்று வகையாக மாட்டிக்கொண்டார்.

கண்டாமணிக் குரலில் அம்மா கர்ஜித்தாள்: ''என்னவெல்லாம் பேசிவிட்டாயப்பா? அடாடா! இதைக் கேட்கும்படி ஆச்சே! டாகுர் குடும்பத்துக்கு அன்புதான் மூலநிதி. அதிலேயும் நான் அம்மா. அப்படி இருக்கும்போது, உன் அடக்குமுறை தாங்காமல் என்கிட்டே தஞ்சம் தேடி வருகிற குழந்தைகளை நான் நிராகரிக்கணும்னு உபதேசம் பண்ணறியே! உன்னலே எப்படித்தான் இந்தமாதிரி சொல்ல முடிகிறதோ? அன்பு ஒரு பக்கம் இருக்கட்டும். பிரத்தியட்ச நிலையை உத்தேசிச்சாலும் சரி, ஒரு ஸ்தாபனத்தின் தலைமையில் இருக்கிறவா இங்கிதமாகவும் பரிவாகவும் இல்லாட்டா அது எப்படி நடக்கும்? உன் 'நியாயம்' எனக்குப் புரியவே இல்லையப்பா! நீ இந்தக் குழந்தைகளை எப்படி நடத்தினுலும், உன்னை விட்டால் கதியில்லைன்னு அதுகள் பொறுத்திண்டு இருக்கணுமா? உன்னை விட்டால் இந்த பூலோகத்திலேயே அவாளுக்குப் புகலிடம் இல்லாமல் போகணும்னு வேறே நான் சாபம் கொடுக்கணும்னு ஆசைப்படறியே! லட்சணம்தான்! யாரொருவரும் கஷ்டப்படணும்னு நினைக்கவோ, சொல்லவோ என்னலே முடியவே முடியாது. அப்பனே! இலவச வைத்தியசாலைபற்றி நீ நினைக்கிறதும் எனக்குப் புரியறது. சிலபேர் அதைத் துஷ்பிரயோகம் பண்ணிக்கிறதனல், என் அநுமதியோடு அதை மூடிவிடலாம்னு நினைக்கிறயா? என்னல் அப்படி அநுமதிக்க முடியவே முடியாது.''

அம்மாவின் யுத்த பேரிகை கருணை வீணையாக மாறிற்று. குளிர்ந்த குரலில், ''இதோ பார், மகனே! உன் நல்லதுக்காகவே சொல்கிறேன் - நீ ரொம்பக் கனியவேணும்'' என்று முடித்தாள்.

கேதார் பாபுவின் உள் நெஞ்சுக்குள் அந்த வார்த்தைகள் இறங்கின. உண்மையான பச்சாத்தாபத்துடன் அவர் அம்மாவிடம் மன்னிப்புக் கோரினர்.

அம்மா ஆசிரமத்துப் பிரம்மசாரிகளுக்கும் நல்லுரை கூறினள்: ''வாலிப தசையில் இருக்கிற நீங்கள் ரொம்பவும் சௌகரியம், வசதின்னு தேடி அலையக்கூடாது. ஆத்ம சாதகர்களும் பொதுப்பணியிலே இருக்கிறவர்களும் கஷ்டங்களைத் தாங்கிக்கத்தான் வேணும். 'பொறுமை - பொறுமை - பொறுமை: சஹனம் - ஷஹனம் - ஸஹனம்'னு டாகுர் முக்காலும் பொறுமையின் பெருமையைத்தான் வற்புறுத்துவார். அதையே நீங்கள் கடைப்பிடிக்கணும்'' என்றுள்.

அம்மா ஜயராம்பாடிக்குத் திரும்பியவுடன் அவளது திருமேனி முழுதும் வேர்க்குரு போன்ற கொப்புளங்கள் தோன்றின. அவற்றின் அரிப்பையும் எரிச்சலையும் அம்மா சகிப்பு மூர்த்தியாகப் பொறுத்துக்கொண்டாள், மூன்று ஆண்டுகளுக்கும் அதிகமாக இந்த ஹிம்சையை அநுபவித்தாள். ''மாசு மறுவில்லாத சரித்திரம் படைத்த மாதாவின் சரீரத்தை மாசுபடுத்த இந்தச் சொறி எங்கிருந்து வந்தது?'' என்ற ஒரு பக்தை கலங்கினாள். அம்மா அவளிடம் நிதானமாகச் சொன்னாள்: ''பலபேர் இங்கே வந்து தங்களுடைய குற்றம் குறைகளைத் தள்ளிட்டுப் போகிறாளோல்லியோ? அதுகள்தான் இப்படிக் கொப்புள ரூபம் எடுத்திருக்குதுகள்.''

சாதாரண ஜீவன் படவேண்டிய ஒரு பெரிய உபாதை, அம்மா போன்ற மகாத்மாக்களிடம் ஒரு சிறிய ஹிம்சையாகக் குறுகிப் பரிணமிக்கும். ஆனால் இப்படிப் பல ஜீவ கோடிகளிடமிருந்து சிறுசிறு ஹிம்சைகளை ஏற்றாலோ? பல துளி பெரு வெள்ளம் அல்லவா?

அவ்வருடம் அம்மா வழக்கம் போல ஜயராம்பாடியில் கொண்டாடிய ஜகத்தாத்ரி பூஜையில் கோயால்பாராக் குழந்தைகள் ஆர்வத்துடன் கைங்கரியம் செய்தனர். முன்பு நாம் ஒரு துருதுருப்பையைப் பார்த்தோமே, அவன் இப்போது அம்மாவிடம் உற்சாகத்துடன் வந்தான். ''அம்மா, வழக்கமாக உக்கிராணத்தைப் பார்த்துக்கிறவருக்கு உடம்பு சரியில்லையாம்; அதனாலே இந்த வருஷம் நான் பார்த்துக்கிறேன், அம்மா. எனக்கு மளிகை சாமானெல்லாம் அளந்துபோடறதுன்னு ரொம்ப இஷ்டம். வாரி இறைக்காமல், பேஷாகப் பண்ணுவேன், அம்மா'' என்றான்.

அம்மா சட்டென்று சாம்பிவிட்டாள். வேதனைக் குரலில், ''என் செல்லமே! இந்தக் கிராமத்திலே ஜாதி ஆசாரம் ரொம்பக் கடுமையப்பா! நீ உக்கிராணத்திலே இருந்தால் சமையல் காரியத்திலேயும் சம்பந்தப்பட வேண்டியிருக்குமே'' என்றாள்.

அவளுடைய தாயுள்ளம் கனத்தது. ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்: ''ராஜா! நீயே உக்கிராணத்தைக் கவனிச்சுக்கோ. ஆனால் வேகவைச்ச வஸ்துக்களைப் பார்க்காமலும், தொட்டுக்கொள்ளாமலும் இந்த வேலையைக் கவனமாகப் பண்ணு!'' என்றாள்.

அந்தக் குழந்தை சந்தோஷமாகத் தலை ஆட்டியது.

அம்மா என்றாலே சமத்துவம்தான்! பிள்ளைகளிடம் பேதம் பார்க்க முடியுமா? நம் அற்புத அம்மா அதே சமயத்தில் உலக வழக்குகளையும் மதித்தே நடந்தாள்; சமத்துவம் - பேதம்

இரண்டுக்குமிடையே அவள் செய்த ரஸவாதம் அருமையானது! நேராகச் சமையல் வேலையில் அவள் பிராம்மணரல்லாதாரை ஈடுபடுத்த மாட்டாள். ஆனால் பிரசாதத்தை அனைவரும் சேர்ந்து சாப்பிடும் சமபங்க்தி போஜனத்தை அநுமதித்து வந்தாள். இதுவும் அத்து மீறல் என்றே ஜயராம்பாடியின் ஜாதி நாட்டாண்மைக்காரர் கருதினர். திவ்விய மாதாவின் மகிமை அறியாமல், அவளையும் ஒரு சாமானிய ஜயராம்பாடிவாசியாகவே எண்ணி, அவளுக்கு அபராதம் விதித்தனர். அப்போது அம்மாவும் சாதாரண கிராமவாசியாகவே தன்னைக் கருதி அபராதத் தொகையைச் செலுத்தினாள்!

செய்தி அறிந்ததும் 'கெய்ஸர்' லலித் முகர்ஜிக்கு வந்ததே வேகம்! புத்திமானுகையால் கோபத்தைக் கொட்டி விடாமல், கிராமஃபோனும் கையுமாகக் கிராமத்துக்கு வந்தார். மிகுந்த சௌஜன்யத்துடன் கிராமஃபோனை ஊர் மக்களுக்குப் போட்டுக் காட்டினார். இந்த மகா அற்புதத்தைப் பார்க்க நாட்டாண்மைக்காரர்களும் வந்தனர். அந்த வாய்ப்பைப் பிடித்துக்கொண்டு லலித் முகர்ஜி 'கெய்ஸராக' உருக்கொண்டார். ''அம்மாகிட்டே மன்னிப்புக் கேட்டுண்டு, அவா செலுத்தின அபராதத் தொகையைத் திருப்பித் தந்தால்தான் கிராமஃபோன் போட்டுக் காட்டுவேன். இல்லாட்டா......'' என்று தமது துப்பாக்கியைத் தடவிக் கொடுத்தார். நாட்டாண்மைக்காரர் அரண்டே போயினர். 'கப்சிப்' என்று அம்மாவிடம் தொகையைத் திருப்பினர். இது பிறிதொரு சந்தர்ப்பத்தில் நடந்த சம்பவம். ஜகத்தாத்ரி பூஜைக்குத் திரும்புவோம்.

ஜகத்தாத்ரி பூஜை முடிவில் அம்மாவையே ஜகத்தாத்ரியாகப் பணிந்து அடியார்கள் பாடினர். ''சர்வ ப்ராணி மாதா, சர்வ ப்ரேம மாதா'' என்று அவர்கள் கானம் செய்தபோது அம்மா அடியோடு கரைந்து போய்விட்டாள்.

பிறகு உணவு வேளையின்போது தொண்டையடைக்கச் சொன்னாள்: ''நான் எல்லாருக்கும் ஒரே போல் அம்மான்னு நீங்க பாடறச்சே என்னை உலுக்கி எடுத்தது. நான் எல்லாரையும் ஒண்ணுகவே நடத்தத்தான் ஆசைப்படறேன். ஆனாலும் ஜாதிக் கட்டுப்பாடுகளைப்பற்றிச் சமூகத்துக்கு நான் புத்திமதி சொல்லப் பிரியப்படவில்லை. இருந்தாலும் டாகுர் சங்கமான நமக்குள்ளே - என்னை ஒரேபோல அம்மாவாகப் பாவிக்கிறவாளுக்குள்ளே-ஒருத்தர் தொட்டதை இன்னொருத்தர் சாப்பிடக்கூடாதுன்னு எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கு;

சமையல் வேலையிலே நான் பிறரை விடவில்லை. இப்போ சாப்பிடறபோது எல்லாரும் கலந்து சாப்பிட்டால் தப்பு இல்லைன்னுதான் தோணறது. அந்தச் சுட்டிப்பிள்ளை உக்கிராணத்திலே எத்தனை காரியம் செஞ்சான்? அவன் ஸ்பரிசம் கூடாதுன்னு ஒதுக்கி வைக்கலாமா? எல்லாருமா எடுத்துப் போட்டுண்டும், பரஸ்பரம் பரிமாறிண்டும் சாப்பிடறது நம்ம சீமையிலே வழக்கம். ஆனல் அவா எல்லாரும் ஒரே சமூகத்துக் காராளாக இருப்பா. இங்கே நாம் நாலு ஜாதிக்காராளும் ஒன்றாகச் சேர்ந்திருக்கோம். நாமும் கூட்டாஞ்சோறு சாப்பிடணும்னுதான் எனக்கு ஆசையாயிருக்கு. உங்களுக்கும் அதே ஆசைதான். ஆனாலும் ஊர் வம்பை விலைக்கு வாங்குகிற துக்கு நான் சம்மதம் தரமுடியாது. சமரஸமாக ஒரு யோசனை சொல்றேன். அவல், பொரி, தைலபாகம் (எண்ணெயில் வெந்த பலகாரங்கள்), தித்திப்பு இதுக்கெல்லாம் சம பங்க்தி தோஷமில்லைன்னு சொல்லுவா. அதனாலே காமார் புகுருக்குப் போய் ஸத்யாவின் மிட்டாய்க் கடையிலேருந்து ஒரு தூக்கு ஜிலேபி வாங்கிண்டு வாங்கோ. நான் வெல்ல அவல் கலந்து வைக்கிறேன். இதுகளைப் பொது வாக வைச்சிண்டு எல்லாரும் பரிமாறிக்கலாம்.''

இவ்விதமே ராமகிருஷ்ண பக்தர்கள் 'கூடியிருந்து குளிர்ந்து' உண்டனர். அம்மா அதைப் பார்த்துக்கொண்டே ரொம்ப ரொம்ப அம்மாவாக மனம் குளிர்ந்துகொண்டிருந்தாள். சமூகம் தர்மம் என நினைத்ததை மீறுமலே மாத்ரு தர்ம பரிபாலனம்!

ஊர் மக்களும் குழந்தைகளும்கூட அந்தக் கலப்புப் போஜனத்தில் கலந்துகொண்டனர். பட்சணங்களுடன் வெளியேறிய இரு சிறுவர்களில் ஒருவன் மற்றவனிடம், ''ஏண்டா, இங்கே நாம்பளே தொட்டு எடுத்துக்கிறதுக்கு விட்டுட்டாங்களே! இவங்க ஐயமாருங்களா, இல்லையா?'' என்று கேட்டான். அதற்கு அந்த இன்னொரு வாண்டு, ''டேய், உனக்குத் தெரியாதா? இவங்க எல்லாம் பக்த சாதி" என்றான்.

அம்மா ஆஹாகாரம் செய்தாள். ''குழந்தைகள் வாயிலிருந்து வருகிற வாக்கு தெய்வ வாக்கே!'' என்று மகிழ்ந்து கூறினாள்.

லோகரீதியை டாகுரும் அம்மாவும் எதிர்க்கவில்லை. பக்தியின் எல்லையில் அதைத் தளர்த்தினர். 'ஆத்மஞானம் பெற்ற சண்டாளனும் என் குரு' என்று ஆதி சங்கரர் கூறியதையும், சிவ பக்தியில் செழித்த புலையரும் தம் தெய்வம் என்று வாகீசப் பெருந்தகை கூறியதையும் நாம் அறிவோம் அல்லவா!

45. தீன ரக்ஷகி, பதித பாவனி

கெட்ட பிள்ளை பிறப்பதுண்டு; ஆனால் கெட்ட அம்மா என்ற ஒருத்தி ஒருபோதும் இருந்ததில்லை.

—தேவி அபராத க்ஷமாபன ஸ்தோத்திரம்

ராதுவுக்குக் காய்ச்சல். இரவு வேளையானதால் ஜுரம் அதிகமாகியிருந்தது. அம்மா அவளுக்கு ஸ்பூன் ஸ்பூனாகப் பால் வார்த்துக்கொண் டிருக்கிறாள்.

அம்மாவுக்கு முன்பெல்லாம் ராதுவிடமிருந்த அதீத வாஞ்சை இப்போதும் உள்ளது என்று சொல்வதற்கில்லை.

ஏனெனில், இப்போதைய ராது முன்னிருந்த ராதுவாக இல்லை!

அம்மாவை உலகில் கட்டிப்போட வந்த யோகமாயையான ராதுவின் சரித்திரமே ஒரு விசித்திரம்தான். கருவிலிருந்த நாளிலேயே தகப்பனை இழந்தாள்; புத்தி ஸ்வாதீனமற்றவளின் புத்திரியாகப் பிறந்தாள். ஆனால் இந்த மாபெருங் குறைகளை அடித்துச் செல்கிற மகத்தான பேறாக, அவளை நம் திவ்விய மாதா தன் செல்லக் குழந்தையாக எடுத்து வளர்த்தாள். மாயையை அழிப்பதே ஞானம். இங்கோ ஞானமாதா, மாயாரூபிணியைச் சீராட்டி வளர்த்தாள்! அதனால் மாயைக்கு ஞானம் வர முடியுமோ? ஒரு காலும் வர முடியாது என்பதற்கு அத்தாட்சியாக வளர்ந்தாள் ராது.

குழந்தைப் பருவம் வரையில் சமர்த்தாகவே இருந்தாள். தனது அழகாலும், சூட்டிகையாலும், பண்பாலும் அம்மாவின் பக்தர் அனைவருக்கும் அவள் செல்லமாகத்தான் இருந்தாள். இப்படிப்பட்ட அநாதைக் குழந்தையிடம் அம்மா மிகையான வாஞ்சை காட்டுவதுங்கூட நியாயமே என்று அடியார் கருதினர்.

ஆனால் போகப்போக சொரூபம் மாறத் தொடங்கியது. 'வெள்ளி மூக்குச் சிங்கம்' குட்டிப்பருவத்திலிருந்து வளர வளர அதன் கர்த்தப சொரூபம் வெளியாகத் தொடங்குமல்லவா? ராதுவின் சமர்த்தெல்லாம் காலக்கிரமத்தில் உதிரத் தொடங்கி விட்டது.

ராதுவை யோகமாயை என்று ராமகிருஷ்ணர் கூறினார். அம்மாவை இக உலகில் இழுத்துப் பிடித்து வைப்பதற்காகப் பராசக்தியால் அனுப்பப்பட்டவள் ராது. இப்படிப்பட்ட ஒரு

பாத்திரத்தை சாமானிய ஜீவன்போலக் கருதிப் பகுத்து ஆராய்வதற்கில்லைதான். ஆயினும் மாயையும் ஒரு நியதிப்படி இயங்குவதாகத் தோன்றுவதால் ராதுவை மனோதத்துவ ரீதியில் ஆராய்வதும் தவறில்லை எனலாம்.

ராதுவுக்கு விவரம் தெரிய ஆரம்பித்தபோதே, தான் தகப்பனற்றவள் என்பதும், தனது தாய் ஒரு பிச்சி என்பதும் புலனாகி இருக்கவேண்டும். இதனால் அவளிடம் தன்னையும் அறியாமல் தாழ்வுணர்ச்சி உண்டாகியிருக்கும். உள்ளூற இந்தத் தாழ்மை உள்ளபோது, வெளியிலோ அவளுக்கு ஒரே மேன்மையாக இருந்தது. உலகம் போற்றும் மாதா அவள்மீது வாத்ஸல்யத்தைக் கொட்டி முழுக்காட்டினாள்; அம்மாவுடைய பக்தர்கள் யாவரும் 'ராது ராது' என்று கொண்டாடினார்கள். இந்த மேன்மைக்குத் தகுதி பெற்றிராத ஒரு தாழ்வு தன்னுள்ளேயிருப்பதாகவே அவள் உணர்ந்திருக்க வேண்டும். அந்த உணர்விலே பிறந்த கசப்பும் காரமும்தான் இனிய ராதுவை இன்னாத பிரகிருதியாக்கிவிட்டன. எதிரிடைச் சக்திகள் மோதும் சந்தர்ப்ப நெரிசலில் தேன்கதலியானது எட்டிப் பழமாகத் தொடங்கியது. தாய் ஸுரபாலாவின் நரம்புத் தளர்ச்சி ராதுவுக்கு 'மாதுரார்ஜித'மாகச் சிறிதேனும் ஊறியிருக்குமாதலால் மேற்சொன்ன விபரீத பரிணாமம் வெகு விரைவாகவே, அதி விமரிசையாகவே நடந்தது.

அம்மா ஓரளவுக்கு ஏனைய பக்தர்களைப் புறக்கணித்தும் ராதுவிடம் ஈடுபாடு காட்டியதில் அவர்கள் ஒரு நியாயத்தைப் புரிந்துகொண்டபோது, ராதுவோ அவர்கள் அந்த அளவுக்கு அம்மாவின் அன்பைப் பெற்றிருப்பதுங்கூட அதிகமே என்று ஆத்திரம் அடைந்தாள். உள்ளூறிய தாழ்வுணர்ச்சி வெளியிலே அதிமேன்மை கொண்டாடியது. அம்மாவின் பாசத்துக்குத் தான் முற்றும் தகுதியானவள்; அவள் இப்போது காட்டும் பாசமும் போதாது; அவளது அன்பு முழுதும் ஏகபோக்கியமாகத் தன்னொருத்திக்கே கிட்ட வேண்டும் என்று பேராசை கொண்டாள். இந்த அன்பிலே தனக்குப் போட்டிகளாக அவள் கருதிய அம்மாவின் இதர பக்தர்களை அவமதிக்கத் தொடங்கினாள். அம்மாவின் அருமை மகள் என்பதால், தன்னை ஏதோ ராஜகுமாரிபோல நினைத்து மற்றவர்களை உதாசீனம் செய்யலானாள். அம்மா தன்னை ராணியாக நினைத்ததே இல்லை; 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றுதான் வாழ்ந்தாள். விந்தையிலும் விந்தையாக அவளது ஸ்வீகார புத்திரியான ராதுவோ பணிவு என்பதே அறியாமல் அடங்காப் பிடாரியாக மாறி வந்தாள்.

மன இயற்படி அவளது கோளாற்றுக்கு இன்னொரு காரணமும் காணலாம். அம்மா ஜயராம்பாடியிலும் கல்கத்தாவிலும் மாறிமாறி வாழ்ந்தாள் அல்லவா? அதனுல் ராதுவும் பட்டிக் காட்டுக்கும் பட்டணத்துக்குமாக ஊஞ்சலாடிக்கொண்டிருந்தாள். தான் நாகரிகம் அறிந்த நகரப் பெண் என்பதால் கிராமத்தில் மற்றவர்களைத் தாழ்வாக எண்ணி, அச்சிறுமிகளுக்குள்ள அடக்கம், பணிவு, உழைப்பு முதலிய நற்பண்புகளை உதறித் தள்ளுவதையே ஒரு பெருமைக்குரிய விஷயமாகக் காட்டிக் கொண்டாள். இவளே பட்டணத்துக்கு வந்து அம்மாவின் அடியாரைக் காணும்போது, 'என்ன இருந்தாலும் நான் பட்டிக் காட்டுக்குட்டி என்றுதானே இவர்கள் நினைப்பார்கள்?' என்று தாழ்மை உணர்ச்சி கொண்டாள். ரொம்பவும் மேன்மை கொண்டாடுவதுதானே தாழ்வுணர்ச்சியின் வெளி உருவம்? எனவே, அம்மாவின் நாகரிகமான பக்தர்களை ராது துச்சமாக நடத்தலானுள். கலியாணமான பின்பும் பள்ளியில் படிக்கிற நாகரிக நங்கை என்கிற உயர்வு உணர்ச்சியும், அப்பள்ளியில் போதிக்கிற ஆசிரியை உள்பட அனைவருக்கும் அரசியான அம்மாவின் அரசிளங்குமரி தானே என்கிற செருக்கும் ராதுவை அடியோடு குட்டிச்சுவராக்கிவிட்டன. அம்மாவின் செல்லம் என்பதால் அவளைக் கண்டிப்பதற்கு எவருமே இல்லை. அருக் கட்டையாக வளர்ந்தாள்.

இந்த விபரீதம் அம்மாவின் கண்ணுக்குத் தெரியாமலில்லை. ஆனுலும் அம்மா அந்த அருமைப் பெண்ணை நல்வழிப்படுத்த முடியாமலே இருந்தது. அம்மா சிறிது கண்டித்தாலும் ராது சுருண்டுவிடுவாள். ஸுரபாலாவின் நரம்புத் தளர்ச்சிக்கு இவள் வாரிசாக இருந்ததால், இந்தத் தொட்டாற் சுருங்கியிடம் கண்டிப்பே காட்ட முடியாமல் இருந்தது. ராது சுருண்டு விட்டால் அம்மாவும் சுருங்கிவிடுவாள். இவள் பிறக்கு முன்பே மரணப்படுக்கையிலிருந்து இவளைத் தன்னிடம் ஒப்புவித்த தம்பி அபயனை எண்ணுவாள்; பைத்தியம் பிடித்துப் பாயைப் பிருண்டும் ஸுரபாலாவை எண்ணுவாள். அதன்பின் ராதுவைக் கண்டிப்பது அவளால் இயலாத காரியமாகிவிடும். இதெல்லாம் மட்டும் காரணமில்லை! இதற்கெல்லாம் மேலாக ராமகிருஷ்ணர் இவளது நாடி நரம்புகளில் பாய்ச்சியிருந்த ராதுமோஹமும் இருக்கவே செய்தது!

அம்மாவின் பாசத்தைப் பெற்ற ராது அருங்குணச் செல்வியாக வளராததிலும் ஓர் அவதார காரியம் உண்டு. இன்னல்களை இன்முகத்துடன் ஏற்று வாழ்ந்து காட்டுவதில் அன்னைக்

குலத்துக்கு முன்னுதாரணமாக வந்தவளன்றோ சாரதை? அவளது பேரன்பைப் பெற்றிருந்த ஜீவனிடமே அவள் பலவிதத்தில் இன்னல்களை அநுபவிக்க வேண்டும், அந்த இன்னலிலும் தன் அன்புத்திறனை அணையாமல் காக்கவேண்டும் என்பது திவ்விய சங்கற்பமாக இருந்திருக்கவேண்டும்!

சமீபகாலமாக அம்மாவுக்கு ராதுமோஹம் சிறுகச் சிறுகக் குறைந்துதான் வந்தது. குழந்தைப் பருவத்தைக் கடந்து விட்ட அவளுக்கு முன்போல் மிகவும் 'செல்லம்' கொடுக்க அம்மாவினால் முடியவில்லை. அவளது போக்கும் செல்லம் பெறுவதற்கு உரியதாக இல்லை. இன்னும் ஓரிரு ஆண்டு ஆகிவிட்டால் ராதுவுக்கு வயசு வந்துவிடும், புக்ககம் அனுப்பிவிடலாம் என்றே அம்மா எண்ணி வந்தாள்.

அம்மா தன்னை முன்னளவு கவனிக்காமல் சிறிதே அலட்சியம் செய்கிறாள் என்று கண்டுகொண்ட ராது அவளை எப்படியேனும் தன்னிடத்தில் இழுத்து ஒட்டிக்கொள்வதற்கு ஓர் உபாயம் கண்டாள். அதாவது எப்போது பார்த்தாலும் தனக்கு ஏதாவது நோவு நொடிகளைக் கற்பித்துக்கொண்டாள். இப்படிச் செய்தால் அம்மாவின் இடையறாத கவனிப்புத் தனக்குக் கிடைக்கும் என்பது அவள் எண்ணம். அம்மாவும் அவளைக் கவனிக்கத்தான் செய்தாள். ஆனால் அப்படிக் கவனித்ததில் அந்தப் பெண் வேண்டுமென்றே மாய்மாலம் செய்கிறாள் என்று புரிந்துகொண்டாள். இதனால் ராது எதிர்பார்த்ததற்கு நேர் எதிரான விளைவே உண்டாயிற்று. அதாவது, ராதுவுக்கு மெய்யாகவே உடம்பு சரியில்லாதபோது அம்மா கண்ணும் கருத்துமாக அவளுக்குச் சுசுருஷை செய்தாலும், உள்ளத்தால் அவளிடமிருந்து சிறுகச் சிறுக ஒதுங்கவே செய்தாள். துள்ளித் திரிகிற பருவத்திலே ராது ஓயாமல் வியாதி கொண்டாடுவதில் அவ்வப்போது அம்மா வெளிப்படவே சலிப்புத் தெரிவித்தாள். தன் திட்டம் தோற்றுப்போய் ஆசாபங்கம் அடைந்ததில் மெய்யாகவே அந்தப் பெண்ணுக்கு நரம்புத் தளர்ச்சி அதிகமாயிற்று. முரட்டுத்தனமும் அதிகமாயிற்று. தன் ஆத்திரத்தை எல்லாம் நம் அம்மாவின்மீதே மிச்சம் மீதியின்றிக் கொட்டித் தீர்க்கலானாள். தான் வளர்த்தெடுத்த பெண் இவ்வாறு ஒரு நற்பண்பையும் பெறாமல் தன்னையே பாடாகப் படுத்துவதையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டாள் நம் அம்மா.

இன்று ராதுவுக்கு உண்மையாகவே காய்ச்சல். முன்பு நாம் கண்டிருக்கும் அந்தக் கள்ளம் கபடமற்ற சூட்டிகை முகம்

இப்போது புறக்காய்ச்சலிலும் அகக் காயச்சலிலுமாக அடியோடு மாறிவிட்டிருக்கிறது! அம்மா 'கடனே' என்றுதான் அவளோடு மல்லுக் கொடுத்துக்கொண்டு ஸ்பூன் ஸ்பூனுகப் பால் புகட்டுகிருள்! அம்மாவுக்கே தெரிகிறது, தான் ஓரளவு விட்டேற்றியாக இருப்பது. அது நியாயமில்லையோ என்று கலங்குகிருள். 'இந்தப் பெண்ணை ஆளாக்குகிற பொறுப்பை நான் ஏற்றவளாயிற்றே! இதை நல்லபடி உருவாக்குவதற்குள் இதனிடம் பாசத்தை இழந்தால், இதன் அபிவிருத்தியிலும் எனக்கு அக்கறை இல்லாமல் போய்விடுமே! தர்மத்திலிருந்து விழுந்தவளாகிவிடுவேனே?' என்று ஓர் உள்ளக் குறுகுறுப்பு அம்மாவிடம் ஏற்படுகிறது. நேர்மையின் வடிவமான அவள், "டாகுர்! இந்த அசட்டுப் பெண்ணைக் கவனிக்க யாருமில்லை. இவளைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி நீங்களே என்னை நியமிச்சதும் உண்டு. அபயனுக்கும் அப்படியே வாக்குத் தந்திருக்கேன். ஆனுல் கொஞ்ச காலமாக என் மனசு இந்தப் பொண்ணு கிட்டேயிருந்து விடுபட்டுண்டு வருகிறது! அப்பனே, இந்தப் பிரகிருதி ஒரு ரூபமாகி, புக்ககத்துக்குப் போய்ச் சேருகிற வரையில் இதை நான் அக்கறையோட பராமரிக்கிறதுக்கு நீங்க தான் கிருபை பண்ணணும். இன்னும் கொஞ்சகாலம் எனக்குப் பாசமோஹம் தெளியாமல் நான் பந்தப்பட் டிருக்கிறதுக்கு நீங்க தான் அநுக்கிரகம் செய்யணும்" என்று பிரார்த்தனை செய்கிருள்.

பாசபந்தம் போகவேண்டும் என்று எல்லோரும் பிரார்த்திப்பார்கள்; ஞான மாதாவோ பாசபந்தம் நீங்காதிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிருள்! பிறர்க்குரியாளராகும் தியாகத்தின் சிகரத்திலிருந்துகொண்டு அம்மா இப்படி வேண்டிக்கொண்டிருக்கிருள்!

'இந்த அவலக் குழந்தைக்கு நானே அம்மா' என்ற உணர்வை வருவித்துக்கொண்டு சாரதை ராதுவுக்குப் பால் புகட்டும்போது, அவளைப் பெற்றெடுத்த ஸுரபாலா உக்கிர ரூபம் கொண்டு நெருங்கி வருகிருள்.

மகள் தன்னை ஒதுக்கி, சாரதையிடமே ஒட்டிக்கொண்டிருப்பது அந்தப் பிச்சி அறிவுக்கும் புரிந்தது! இதற்காக ஸுரபாலா மகளைக் கண்டிப்பதில்லை. கண்டித்தால் மகள் இவளை விட உக்கிர ரூபம் கொள்வாளே! அதனுல் ஊருக்கு இளைத்த பிள்ளையார் கோயில் ஆண்டியாகிய சாரதையின்மீதே தன் எரிச்சலைக் குறைவில்லாமல் பொழிவாள் ஸுரபாலா! பைத்தியத்துக்கும்கூடப் பல நுட்பங்கள் தெரியத்தான் செய்தன!

ஸுரபாலாவின் போக்கை நாம் நன்கு அகழ்ந்து பார்த்தால், வெளியில் தெரிந்த அளவு அவளுக்கு உண்மையில் புத்திக் கோளாறு இல்லையோ என்றே தோன்றும். பிறர் கண்டனத்திலிருந்து தப்புவதற்கும், எவ்விதப் பொறுப்புமின்றி இஷ்டப்படி வாழ்வதற்கும் பைத்தியப் போர்வை உதவுகிறது என்பதால், தன்னுடைய மூளைக்கோளாற்றை அவள் வேண்டுமென்றே மிகைபடக் காட்டிக்கொண்டாளோ என்று எண்ணத்தோன்றுகிறது. வியாதியை அதிகப்படுத்திக் காட்டுகிற ஜாலம் இவளிடமிருந்தே பெண்ணுக்குத் தொற்றிக்கொண்டதோ என்னவோ?

''பால் கொடுக்கிறதாகச் சொல்லிண்டு, என் பொண்ணுக்கு விஷம் வைச்சுக் கொல்றா, இந்த ராட்சஸி சாரதாக்கா'' என்று ஊளையிட்டுக்கொண்டே வந்தாள் ஸுரபாலா. ராதுவை அம்மாவிடமிருந்து தன்னிடம் இழுத்துக்கொள்ள முயன்றாள்.

ராதுவுக்கோ பெற்ற தாயைக் கண்டாலே பிடிக்காது. 'பிச்சி மாமியின் பெண்' என்றே தன்னைப் பலர் அடையாளம் சொல்வதில் மாளாத அவமானம் கொண்டிருந்த ராது, தாயிடம் மாறாத விரோதம் பாராட்டினாள்! இப்போது அவள் தன்னைத் தொட்டிழுத்ததும் ராதுவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

''இந்த வழுக்கைத் தலை அம்மா அந்தண்டை ஒழிஞ்சாத்தான் என் ஜுரம் இறங்கும்'' என்று சொல்லிக்கொண்டே ஸுரபாலாவைப் பிடித்துத் தள்ளினாள் ராது.

ஸுரபாலாவும் அங்கிருந்து வேகமாகக் கிளம்பினாள். அப்போது அம்மாவின் கையை அறியாமல் மிதித்துவிட்டாள் அவள். தெரியாமல் மிதித்தது போதாது என்று தெரிந்தே மொலு மொலுவென்று அம்மாவிடம் வாய்ப்போர் தொடங்கினாள். ''ராட்சஸி! ஏன் உன் கையைக் கொண்டுவந்து என் கால் கீழே வைச்சே! வேணும்னுதானே அப்படிப் பண்ணினே? எனக்கு மகா பாபம் சேரணும்னுதானே உன் கையை நான் மிதிக்கிற மாதிரி வைச்சுண்டு சதி பண்ணினே? உன்னை என்ன செய்யறேன், பாரு!'' என்று கூச்சலிட்டாள் ஸுரபாலா.

நம்பவொண்ணாத பொறுமையுடன் அம்மா மௌனமாக அமர்ந்திருந்தாள்.

அம்மாவுக்குக் குறிப்பறிந்து தொண்டாற்றி வந்த பிரம்மசாரி ராஸவிஹாரி, ''வேடிக்கைதான், அம்மா! பிச்சி மாமி உங்களைக் கன்னா பின்னான்னு ஏசறாங்க. இருந்தாலும்

தன் கால் உங்க மேலே பட்டால் மகாபாவம்னு அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கே'' என்றார்.

''ஆமாண்டா குழந்தே'' என்றாள் அம்மா, ஏதுமே நடக்காததுபோல், நிதானமாக. அந்த நிதானத்துடனே, ''ராவணனுக்குக்கூடத் தெரியும், ஸ்ரீராமசந்திரமூர்த்திதான் ஆதி நாராயணன், ஸீதா தேவிதான் ஆதி பராசக்தின்னு. இருந்தாலும் அவன் அந்த வேஷத்தைப் போட்டுக்கும்படியா இருந்தது. பிச்சி மாமி இந்த வேஷத்தைப் போட்டுக்கும்படியா இருக்கு'' என்று முடித்தாள்.

அவதாரத்தின் ரகசியங்களில் ஒன்றை அநாயாசமாக அவிழ்த்துவிட்டிருக்கிறாள் அம்மா. குடும்பத்திலுள்ள பெண்களுக்கு வழி காட்டுவதற்காக அவள் அவதரித்தாள். அதனாலே இறுதிவரையில் சந்நியாசம் வாங்கிக்கொள்ளாமல் ஒரு குடும்பத்திலே இருந்தாள். அந்தக் குடும்பத்தில் எல்லோரும் அம்மாவின் பெருமையை அறிந்து அவளிடம் அன்புடன் அடங்கி வாழ்ந்திருந்தால், ஏனைய குடும்பிகள் என்ன சொல்வார்கள்? ''ஹோலி மதருக்கு என்ன குறைச்சல்? குடும்பத்தில் இருந்தாலும் நமக்கிருக்கிற சள்ளையும் சச்சரவும், பிக்கலும் பிடுங்கலும் அவளுக்கு இருக்கா? எல்லாரும் தாஸாநுதாஸர்களாக இருக்கா. அவளும் நிம்மதியாக, சாந்தமாக, சௌக்கியமாக இருக்கா. நம் மாதிரி அவஸ்தை இருந்தால், அந்த ஹோலி மதர்கூட இத்தனை அமைதியாக இருந்திருப்பாளோ?'' என்றுதான் சொல்வார்கள். இதை முன்னிட்டே, அமைதியின் அவதாரம் சம்பவித்தபோதே அவஸ்தைகளும் உடன் அவதரித்தன, அதில் ஒன்றுதான் ஸுரபாலா! இவர்களெல்லாம் அம்மாவைப் பாடாகப் படுத்தினார்கள் என்பதற்காக நாம் இவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. அவர்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்பதே ஈசுவர சித்தமாக இருந்தது! வைர மணியைக் கறுப்புத் துணியிலே வைத்து அதன் ஒளியைத் தூக்கிக் காட்டுமாப்போலே, சாரதாமணியின் அமைதி ஒளியைத் தூக்கிக் காட்டவே இந்த அவதிப் பட்டாளத்திடை அவளைக் கொண்டு வந்து வைத்தது, தெய்வ சங்கற்பம்.

நம் வீட்டுக்குப் பிற மனிதர் வந்திருக்கையில் நம் வீட்டவர் எவரேனும் தாறுமாறாக நடந்துகொண்டால் நாம் எப்படி நிலைகுலைந்து போவோம்? அம்மாவைத் தேடி மரியாதைப்பட்டவர்களும், அந்நிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் உள்பட எத்தனையோ பக்தர்கள் வந்தனர். அவர்கள் எதிரிலேயே ராது செய்த அநாகரிகமும், ஸுரபாலா செய்த காட்டுமிராண்டிக்

காரியங்களும் அனந்தம், ஆனல் அம்மா நிலை குலையவே இல்லை. காரணம், நமக்கெல்லாம் 'இவர்கள் நம் வீட்டார்; அவர்கள் வெளி மனிதர்' என்ற வித்தியாச எண்ணம் இருப்பது தான். அம்மாவுக்கோ உறவினர், பக்தர் இருவரும் ஒரே போல் சொந்தக் குழந்தைகளாகத்தான் இருந்தனர். சொல்லப் போனல் உறவினரைவிடவும் பக்தர்கள் அன்புக் குழந்தைகளாக இருந்தனர். அதனல்தான் இந்த உறவினர்களின் குறைபாடுகளை அவளுடைய சீடர்கள் அவளிடமே தயக்கமின்றி விமரிசித்துப் பேச முடிந்தது, அவளும் சிஷ்யர்களிடம் தன் பந்துக்களின் விந்தைக் குணங்களை விண்டு பேசுவாள்.

* * *

ராது மங்கையாகிவிட்டாள்!

ஆனல் அம்மா எதிர்பார்த்தது நடக்கவில்லை. அவளைப் புக்ககத்தில் கொண்டுவிட்ட பின்பு அவள் அவர்களோடு ஒத்து வாழவில்லை. 'ஹோலி மத'ரின் ஸ்வீகாரப் பெண்ணக ராஜவாழ்வு வாழ்ந்தவளுக்கு ஒரு கிராமக் குடும்பத்தின் மாற்றுப் பெண்ணகக் கட்டுப்பட்டு வாழ்வதில் பிடித்தமில்லை. பெரும்பாலும் கணவன் வீட்டை விட்டு வந்து அம்மாவிடமே இருந்து வந்தாள். அம்மா இதை விரும்பாமல் அவளை ஓரளவு புறக்கணித்ததால் அந்த விசித்திரப் பிறவியிடம் இன்னெரு விபரீதப் போக்கு உண்டாயிற்று. கணவனிடம் தீவிர வேட்கையுடன் உடும்புபோல் ஒட்டிக்கொள்ளத் தலைப்பட்டாள். இயல்பான நரம்புத் தளர்ச்சியும் புதிய இளமையும் அவளை அதிதமாகத் தூண்டிவிட்டன. பதினறே வயதான ராது, அறுபதாண்டுகளுக்கு முற்பட்ட அந்த நாளிலேயே, கணவன் வருகையை எதிர்பார்த்து மாலையிலிருந்து வாசல் முன்றிலில் கால்கடுக்க நிற்பாள். பிரம்மசரிய அக்கினியான அம்மாவுக்குத் தன் வளர்ப்புப் பெண் இப்படி இருப்பது கண்டு வெட்கமும் அருவருப்பும் பிடுங்கித் தின்றன. "ஆஹா! கடைசியில் நான் எடுத்து வளர்த்த பெண் இப்படியா மோக பாசத்தில் விழனும்?" என்று வெதும்பிக் கூறினள், பொங்கும் யௌவனத்திலும் தபஸ்வினியாக வாழ்ந்த தேவி,

ராதுவின் தீவிர வேட்கைத் துடிப்பு அவளது கணவர் மன்மதநாதருக்குத் தாங்கவொண்ணுததாக ஆயிற்று. அவர் அவளைக் கூடியமட்டும் தவிர்க்கப் பார்த்தார். அவர் வீடு திரும்பக் காலம் கடத்தியதால் அம்மாவிடமே ராது, "நான் வியாதிப்பிண்டமா ஆயிட்டேனேல்லியோ? அதனலே அவர்

அந்நிய சகவாசம் வைச்சுண்டுட்டார் போலிருக்கு'' என்றாள். இந்த கிராம்யமான பேச்சைக் கேட்டு அம்மாவின் காது கொப்புளித்தது.

மனைவியாதியால் உண்மையிலேயே ராதுவின் உடல் மிகவும் நலியலாயிற்று. உடலின் தளதளப்பெல்லாம் போயிற்று. உள்ளத்தின் பளபளப்பும் அடியோடு பல்லை இளித்துவிட்டது. ஓயாமல் குறைப்பட்டுக்கொள்வதும், குற்றம் சொல்வதும், எரிந்து விழுவதுமாக இருக்கலானாள். இவளையும் ஸுரபாலாவையும் கட்டி மாரடிப்பதே அம்மாவுக்குப் பெரிய வேலை ஆயிற்று.

அம்மா இப்படிக் குடும்ப வாழ்க்கையிலேயே உழன்று கொண்டிருப்பது கண்டு அவளது ஆத்மசகியான யோகின்-மாவுக்கே அம்மாவின் ஆன்மிக உயர்வில் ஐயம் வந்துவிட்டது. தக்ஷிணேசுவர நாட்களிலிருந்தே அம்மாவின் அதிமாநுஷ்ய தெய்விக சக்திகளை யோகின்-மா பலமுறை அநுபவபூர்வமாக அறிந்திருந்தபோதிலும், தற்போது அம்மாவின் நிலையைப் பார்த்தபோது அவள் மனத்தில் அவநம்பிக்கை தலைதூக்கத் தொடங்கியது. டாகுரோடு அம்மாவின் தெய்விக சக்தியும் போய்விட்டதோ என்று எண்ணினாள். அம்மாவின் அன்புச் சிறப்பையும், உழைப்புச் சிறப்பையும் அவள் போற்றினாள். இருப்பினும் அம்மா தன் குடும்ப மனிதர்களின் விவகாரங்களுக்கு இப்படி ஈடுகொடுத்துக்கொண் டிருப்பது பாமர மக்களுக்குரிய பாசத்தினால்தானே என்று யோகின்-மாவுக்குத் தோன்றலாயிற்று. இந்தச் சமயத்தில் அம்மாவுக்கு வெளிப்பட பாவ அல்லது நிர்விகல்ப ஸமாதிகள் கூடாததால் அவளது தெய்விகத்திலேயே யோகினம்மை ஐயம் கொண்டுவிட்டாள்.

இந்தக் கலக்கத்தில் தத்தளித்துக்கொண்டே யோகின்-மா ஒரு நாள் கங்கைக் கரையில் ஜபம் செய்ய அமர்ந்தாள். சித்தம் ஜபத்தில் ஒருமுகப் படவில்லை. தன் அத்தியந்தப் பிரியமான அம்மா கடைசியில் ஒரு சாமானிய ஸ்திரீதானே என்ற சம்சயம் அவளைக் குடைந்தது. 'டாகுருக்கும்தான் உறவினர்கள் இருந்தனர். அவர்கள் அவரை நெருங்கியும் வந்து வாழ்ந்தனர். ஆனால் அவர் எப்படிப் பட்டுக்கொள்ளாமலே, துறவிலேயே உறவாடினார்? அம்மாவோ தன் தம்பி மனைவி, மருமாள்-மருமான்மார், தம்பிகள் இவர்களுடைய எல்லா விவகாரங்களிலும் அல்லவா உழப்பிக்கொண் டிருக்கிறாள்!' என்று துக்கத்தில் சிந்தித்துக்கொண் டிருந்தாள் யோகினம்மை..

அப்போது பளீரென்று அவள் முன் பிரசன்னமானர், சாக்ஷாத் அந்த டாகுர். ''அதோ, கங்கையிலே என்ன மிதந்து வருகிறது, பார்!'' என்ருர் அவர் யோகினிடம்.

வியப்பு மீதூர யோகின்-மா வெள்ளத்தைப் பார்த்தாள். அவள் உடலைக் குலுக்கியது. ஒரு பச்சைக் குழந்தையின் சடலம் கங்கையில் மிதந்து வருகிறது. கொப்பூழ்க் கொடியை அறுத்து அதன் இடையிலே கட்டிய துணியைக்கூட இன்னும் எடுத்தாகவில்லை. பரிதாபம், அதற்குள் மரித்துவிட்டிருக்கிறது. அதிலும் கோரமரணம் நிகழ்ந்திருக்கிறது! சின்ன உடம்பிலே எங்கே பார்த்தாலும் குருதி! தகாத வழியில் பிறந்த குழந்தைகள் இந்தக் கதிக்கு ஆளாகிக் கங்கையில் போடப்படுவதுண்டு என்பதை யோகின்-மா நினைவு கொண்டாள்.

வெள்ளை வெள்ளம் அந்தச் செக்கர் உடலை அடித்துச் சென்றுவிட்டது.

கலவரம் அடைந்திருந்த யோகினைப் பார்த்து டாகுர் கலங்காமல் மென்னகை செய்தார். ''யோகின்! சவம் அருகிலிருந்தாலே சுத்தக் குறைவு என்பார்கள். அதிலும் துர்மரணம், துன்மார்க்கம் இதுகளின் சம்பந்தமும் இருந்தால் கேட்கவே வேண்டாம். ஆனாலும் கங்கையிலே இதுமாதிரி எத்தனையோ போயிண்டிருக்கு. அப்படியிருந்தும் கங்கையின் பரிசுத்தத்துக்குத் துளியாவது தோஷம் ஏற்படுகிறதா? அவளை இந்த மாதிரியே வைச்சுக்கோ. இந்த அசட்டுச் சந்தேகங்களுக்கு இனி இடமே தராதே'' என்று கூறிய ராமகிருஷ்ணர் முடிவாகத் தம் சரீரத்தைத் தொட்டு, ''இதுவும் அவளும் ஒண்ணேதான்—தீர்மானமாகத் தெரிஞ்சுக்கோ'' என்று முடித்து அந்தர்த்தானமானர்.

யோகினுக்குப் புதிய தெளிவு பிறந்தது.

* * *

கௌரி-மா பரவச சமாதிகளில் கூத்தடிப்பவள். ஆயினும் அடங்கிக்கிடந்த அம்மாவிடம் அவளுக்கு யோகின்போல் சந்தேகம் ஏதும் எழுந்ததில்லை. அம்மா சாமானிய மநுஷிபோல் குடும்ப பாரத்தை வகித்தாள் என்ருல் கௌரி-மா சாமானியக் குழந்தைபோல் அவளிடம் தமாஷ் செய்து மகிழ்வாள்.

அம்மா ஜயராம்பாடியில் தங்கியிருந்த சமயம்.

''ராப்பிச்சை, தாயே'' என்று வாசலிலிருந்து குரல் வந்தது.

அம்மாவிடம் ஓயாமல் போர் தொடுக்கும் ஸூரபாலா இராப்பிச்சைக்காரனை அகஸ்மாத்தாகப் பார்த்துவிட்டாள். உடனே அவளுக்கு ஏற்பட்ட கிலியில் தன் போர்த்திறனையும் மறந்து, "என் பிரிய அக்காவே! ராட்சஸன் வந்திருக்கான்" என்று அலறிக்கொண்டு சாரதையிடம் வந்து ஒண்டிக் கொண்டாள்.

மறுபடியும் வாசலிலிருந்து குரல் வந்தது:

"நான் போய் எதையாவது போட்டு அவனை அனுப்பிச் சுட்டு வறேன். பாவம், யாரோ பிச்சைக்காரன்தான். அவனைக் கண்டு நீ ஏனம்மா பயப்படறே?" என்று தம்பியின் மனைவியிடம் கூறியவாறு வாசலுக்கு வந்தாள் அம்மா.

'ராட்சஸன்' இல்லை, ராப்பிச்சைதான்!

'ராப்பிச்சைதானா?' அம்மா யோசிக்கும்போதே மீண்டும் குரல் வந்தது.

அம்மாவுக்கு சந்தேகம் பறந்தேவிட்டது. முகம் நிறைய முறுவலுடன் வாசலுக்கு வந்தாள். "கௌர்தாஸி! பேஷாக வேஷம் போட்டுட்டேள்! சரி, இன்னமும் தெருவில் நின்னு பிச்சை கேட்க வேண்டாம். உள்ளே வாங்கோ!" என்று இரண்டு கைகளையும் நீட்டி வரவேற்றாள்.

பெற்ற தாயிடமா கற்ற வித்தை பலிக்கும்? கௌரிமா அம்மாவிடம் ஓடிவந்தாள். அவளுக்குத் துணையாக வந்து இது வரை மறைவிலிருந்த பிரம்மசாரி வரதனும் வந்து சேர்ந்தார். எல்லோரும் ஏகமாகச் சிரித்தனர். எல்லோரையும்விடப் பெரிதாகச் சிரித்தாள் பிச்சிமாமி: நம் அம்மாவின் சோக சரிதத்தில் இப்படி ஒரு சிரிப்பு நிகழ்ச்சியும் நடந்தது.

ஆமோதர் நதிக்கரைக்கு வருகையில் கௌரிமாவுக்கு இந்த விசித்திர ஆசை ஏற்பட்டதாம். வரதனின் மேல்வேஷ்டியை வாங்கித் தலையில் முண்டாசாகச் சுற்றிக்கொண்டு, தன் வெள்ளைச் சேலையின் மேலாக்குப் பகுதியை ஆடவர்கள் உடலைப் போர்த்திக்கொள்வதுபோல் மாற்றிக்கொண்டு இராப் பிச்சைக்காரனாகி இருக்கிறாள் கௌரியம்மை. "பிக்ஷாம் தேஹி ச பார்வதி" என்ற பரமேசுவர சங்கரமே அம்மாவிடம் பிச்சை கேட்டு மகிழ்ந்ததே!

* * *

அம்மாவைத் தேடி ஜயராம்பாடிக்கு வருவோரின் எண்ணிக்கை பெருகலாயிற்று. எனவே, அவள் தன் சகோதரர்

பிரஸன்னரின் வீட்டில் இருப்பது சௌகரியமாக இல்லை. முன்பு பாகப் பிரிவினையின்போது, தம்பிமார்கள் அவள் பங்குக்குத் தனி வீடு தர முன்வந்தபோது, அதை ஏற்க அம்மா மறுத்துவிட்டது நினைவிருக்கலாம். இப்போது சிஷ்யகோடிகள் அம்மாவுக்கெனப் புண்ணிய புகுர் என்ற ஏரியின் மேற்குக்கரையில் நிலம் வாங்கிப் புது வீடு கட்டத் தொடங்கினுர்கள்.

இந்த வேலையில் தம் இதயத்தையே கொடுத்து உழைப்பாக உழைத்தார் பிரம்மசாரி ராஸவிஹாரி. ஒரு நாள் காலை பக்கத்துக் கிராமம் ஒன்றுக்கு இவ்வேலை நிமித்தம் சென்ற ராஸவிஹாரி முன்மாலை நாலு மணிக்குத்தான் திரும்பினுர். அம்மா அதுவரையில் போஜனம் செய்யவில்லை என்றறிந்து திடுக்கிட்டார். "அம்மா, சமீபத்திலேதான் காயலாக் கண்டு எழுந்திருந்தேள். இப்படிப் பட்டினி கிடக்கலாமா?" என்று உருகிக் கேட்டார். "அப்பனே, நீ போன இடத்திலே சாப்பாட்டு வசதி கிடையாதுன்னு எனக்குத் தெரிஞ்சுது. உன் உதரத்திலே அன்னம் இறங்கறத்துக்கு முந்தி இந்தக் குட்சி எப்படியப்பா சோற்றை ஏற்கும்?" என்ருள் அம்மா, வாத்ஸல்யத்துடன்.

புதுவீட்டு நிர்மாணம் அம்மாவின் அன்பு வாழ்வு என்கிற சாம்ராஜ்யத்துக்கு ஓர் அரண்மனையை எழுப்பியது. குறிப்பாக, ஒரு திருட்டு முஸ்லிம் அவளது அருமைப் பிள்ளையாக ஆனது இந்த அமர சரிதத்தில் ஓர் அமுதச் சுனையாகும்.

* * *

நீண்டகாலமாக ஜயராம்பாடியை அடுத்த சிரோமணிபுரில் முகம்மதியர் பலர் குடிசைத்தொழிலாகப் பட்டு உற்பத்தி செய்து வந்தனர். பட்டுப்புழுக்களின் உணவான மல்பரி அங்கே செழித்து வளரும். பட்டுப்புழுக் கூட்டை நுட்பமான இயந்திர உதவியின்றியே நூலாகப் பிரித்து நெசவு செய்வதில் இந்த முஸ்லிம்கள் கெட்டிக்காரர்கள். ஆனுல் 'கும்பெனி" ஆட்சியில் இயந்திர முறையில் ஆலைகள் வைத்துப் பட்டு உற்பத்தி செய்ய ஆரம்பித்தபின் இந்தக் குடிசைத் தொழில் தலைதூக்க முடியாமல் படுத்துப் போயிற்று. இத்தொழிலில் ஈடுபட்டிருந்த குடும்பத்தினரில் பெரும்பாலோர் வேறு தொழில் கிடைக்காததால் திருடர்களாக மாறினர். மல்பரித் திருடர்கள் (துந்தே-டாகாத்) என்றே இவர்களுக்குப் பெயர் ஏற்பட்டது.

அம்மாவுக்காகப் புது வீடு எழுப்புகையில் இந்த துந்தே-டாகாத்துக்களில் சிலரையும் கொல்லத்து வேலைக்காக அமர்த்தி

னர், மனிதாபிமானம் மிக்க ராமகிருஷ்ண மட சாதுக்கள், ஜயராம்பாடிவாசிகள் இதைக் குறித்து அஞ்சி ஆட்சேபம் தெரிவித்தனர்.

''நீங்க பயப்படாதேள். நான் பாத்துக்கறேன்'' என்ருள் அம்மா.

அம்மாவிடம் மாய மந்திரம் ஒன்று இருந்தது அல்லவா? அதைப் பிரயோகித்தாள். அன்பு என்ற மந்திரம்தான்! கள்வரும் கனிந்தனர்! ஆதியிலேயே பகடித் தம்பதியிடம் அம்மாவுக்கு அநுபவம் உண்டே!

அம்மா கொல்லத்துக்காரர்களுக்குக் கூலி தவிர, அவல், பட்சணம் எல்லாம் கொடுப்பாள். சமுதாய விரோதிகளாகக் கருதப்படும் தங்களிடம் காட்டப்பட்ட அற்புத அநுதாபத்தைக் கண்டு மல்பரித் திருடர்கள் அம்மாவிடம் தேவதா விசுவாசம் கொண்டனர். அக்கம்பக்கத்தில் வழக்கம் போலவே திருட்டுப் புரட்டுச் செய்தாலும் ஜயராம்பாடியில் அவர்கள் கைவரிசையைக் காட்டவே இல்லை.

மல்பரித் திருடர்களின் உள்ளங்களைத் திருடிவிட்டது அன்னையன்பு. அவர்கள் டாகுர் பூஜைக்காகக் கனிவகைகள் காணிக்கை தருவதுகூட உண்டு. அவர்கள் எட்டி நின்று கையுறையைக் கீழே வைக்கப்போனால், அம்மாவே அவர்களிடம் நெருங்கிச் சென்று அவற்றை நேராகத் தன் கைகளில் வாங்கிக் கொள்வாள்! ''திருட்டுப்பசங்களோட திரவியத்தை டாகுருக்குச் சேர்க்கிறது முறைதானா?'' என்று ஒரு பெண் கேட்டபோது, அம்மா அதைக் காதில் போட்டுக்கொள்ளாமலே, பழங்களை உள்ளே கொண்டுபோய் வைத்தாள். கள்வர் போனபின் அம்மா மேற்படி பக்தையிடம் வந்து ஒரு முறை முறைத்துச் சொன்னாள்: ''யார் நல்லவா, யார் கெட்டவான்னு எனக்குத் தெரியும்!''

திருடர் பயம் நீங்கி ஊராருக்கு மகிழ்ச்சியாயிற்று.

ஆம்ஜத் என்பவன் பலே திருடன். ஒடிசலாக, கன்னங்கறேலென்று இருப்பான். அள்ளு கந்தலைக் கட்டியிருப்பான். ஒரு நாள் அவன் வீடு கட்டும் இடத்தில் வயிறு ஒட்ட நின்று வேலை செய்வதைக் கண்டு வீட்டுக்கு அழைத்தாள் அம்மா. வராந்தாவில் அவனை உட்கார வைத்து இலை போட்டாள். மருமாள் நளினியைக் கூப்பிட்டுப் பரிமாறச் சொன்னாள். மடிக்காரியான நளினி பத்தடி தள்ளி நின்றுகொண்டே ஆம்ஜத்தின் இலையில் உணவு வகைகளை எறிந்தாள். அம்மாவுக்குக் கோபம் வந்தது.

''அம்மாடி, இந்த மாதிரியா அன்னலக்ஷ்மியை விட்டெறியறது? சாப்பிடறவாளுக்கு எத்தனை அவமரியாதை? உன்னாலே முடியாதுன்னு வேண்டாம்: நானே பரிமாறுகிறேன்'' என்றாள்.

'மானதன்' என்பது திருமாலின் ஆயிரம் நாமங்களில் ஒன்று. பிறரது மானத்தை மதிப்பவன் இறைவன்.

தெரியாத்தனத்தால் ஆம்ஜத் தான் உண்ட இடத்தைச் சுத்தம் செய்யாமலே போய்விட்டான். அம்மாவே முகம் கோணாமல் எச்சிலிட்டாள். ''அத்தை, விஷயம் தெரிந்தால் உன்னை ஊரார் ஜாதிப் பிரஷ்டம் பண்ணிடுவா'' என்றாள் நளினி.

அம்மா நிதானமாகச் சொன்னாள்: ''என்னை விட்டா வேறே யாரு இதைச் சுத்தம் செய்ய வருவா? எனக்கு ஒண்ணும் பேதகமாகப் படவில்லை. ஷரத் எப்படியோ, அப்படியே ஆம்ஜத்தும் என் சாக்ஷாத் பிள்ளை.''

அம்மாவுக்கு ஜுரம் வந்தது. வராந்தாவுக்கு அடுத்த அறையில் அம்மா கட்டிலில் படுத்திருந்தாள். வராந்தாவுக்கு மூங்கில் சிம்புகள் அடித்திருந்தது. ஒருநாள் காலை, ஆம்ஜத் தடியை ஊன்றிக்கொண்டு துயரத்தோடு தடுமாறி வந்தான். விரல் நுனியில் நின்றுகொண்டு மூங்கில் தடுப்புக்கு மேலாக அம்மாவை எட்டிப் பார்த்தான். ஜுரவேகத்தில் தலையைப் புரட்டிக்கொண்டிருந்த அம்மாவின் கண்களில் அவனது முகத்தின் மேல்பாதி பட்டுவிட்டது: ''குழந்தே ஆம்ஜத்! உள்ளே வாப்பா'' என்றாள்.

வாயெல்லாம் பல்லாக வராந்தாவைக் கடந்து வந்து அறைக் கதவருகே நின்றுகொண்டான் ஆம்ஜத். அம்மாவிடம் வழக்கப்படி அக்கப்போர் தொடங்கிவிட்டான். அவளும் காய்ச்சலைப் பொருட்படுத்தாமல் அந்த நச்சரிப்பை சந்தோஷமாக சகித்துக்கொண்டாள்.

பகலெல்லாம் ஆம்ஜத் அங்கேயேதான் இருந்தான். ''அவன் உடம்பு எப்படிக் காய்ஞ்சு கருவாடா இருக்கு! எண்ணெய் கொடுத்துத் தேய்ச்சுக்கச் சொல்'' என்று மருமாளுக்கு உத்தரவிட்டாள் அம்மா. ஆம்ஜத் எத்தனையோ காலத்துக்குப் பின் தைல ஸ்நானம் செய்து திரும்பினான். அன்று சம்பிரமமாகச் சாப்பாடும் அம்மா வீட்டு வராந்தாவிலேயே நடந்தது. அவனுக்கு பீடா கொடுக்கச் சொல்லி அம்மாவின் ஆக்ஞை பிறந்தது. மாலை வீடு திரும்புகையில் அவன் பையில் பழ வகைகளுடனும், கையில் ஏதோ ஒரு புட்டியுடனும் சென்றான். அது என்ன புட்டி என்கிற பாவனையில் பார்த்துக்கொண்டிருந்த பிரம்மசாரியிடம் அம்மா சொன்னாள்: ''இந்த அசட்டுப்

பிள்ளை லாகிரி வஸ்துக்கள் நிறையச் சாப்பிட்டு இவனோட மூளையே கொதிச்சுப் போயிருக்கு. ராவெல்லாம் தூக்கம் இல்லேன்னான். எங்கிட்ட நாராயண தைலப் புட்டி ஒண்ணு இருந்தது. அது மூளைக்கு ரொம்பக் குளிர்த்தி. அதைத்தான் கொடுத்துவிட்டேன்'' என்றாள்.

நாராயண தைலத்தைவிடக் குளிர்ந்த அம்மாவின் இதய விசேஷத்தால் விரைவிலேயே ஆம்ஜத்தின் மூளைச் சூடு நீங்கி அவன் ஆரோக்கியம் பெற்றான்.

அம்மா எள் என்னும் முன் எண்ணெயாக நிற்பான் ஆம்ஜத். 'அம்மாவுக்கு' என்று சொல்லிவிட்டால் புலிப்பாலானாலும் கொண்டு வந்துவிடுவான். ஒரு முறை அம்மாவுக்குப் பசி அடியோடு மந்தித்துப் போனபோது அன்னாசிப் பழரசம் சாப்பிடுமாறு டாக்டர் கூறினார். அந்தக் காலத்தில் அந்தப் பகுதியில் அன்னாசி கிடைப்பது அரிதிலும் அரிது. ஆனால் என்ன மாயம் செய்தானோ, அல்லது திருடத்தான் செய்தானோ, ஆம்ஜத் ஒரு கூடை அன்னாசி கொண்டுவந்துவிட்டான்.

ஆம், ஆம்ஜத்துக்கு ஏனோ திருட்டுப்புத்தி முற்றும் போகவில்லை. அவனது கர்ம பாக்கி அப்படி இருந்தது போலும்! அம்மாவும் அந்தப் பாக்கியை அப்படியே விட்டுவைத்திருக்கிறாள்! ஜயராம்பாடியில் திருட்டு புரட்டு செய்யாமல் இருப்பான். வெளியிடங்களுக்குப் போனால் பழக்க தோஷத்தால் அவன் கை அரிக்கும்; திருடுவான், பிடிபடுவான். இப்படியாக அடிக்கடி 'கம்பி எண்ணி'விட்டு வந்துகொண்டிருந்தான். ''பாவிப்பய மவன் மறுபடி மாமியா வூட்டுக்குப் போயிட்டான்'' என்று ஒப்பாரி வைத்துக்கொண்டு அம்மாவிடம் வருவாள் அவனது மனைவியான துருக்கப் பெண். அம்மா அவளிடம் பணத்தை அள்ளிக் கொடுத்து ஆறுதல் சொல்வாள். ஒருமுறை சற்றே நீண்டகாலம் சிறைவாசம் செய்துவிட்டு வீட்டுக்கு வந்த ஆம்ஜத்தின் கண்ணில் முதலில் பட்டது, கூரையின்மீது வாளிப்பாக உருட்டிவிட்டுக் கிடந்த சுரைக்காய்கள்தாம். ''அல்லாஹ்! எம்மாம் பெரிசாக் காய்ச்சிருக்குது? எங்கம்மாவுக்குக் கொண்டு போய்க் கொடுப்பேன்'' என்று உடனே சொல்லிக்கொண்டான் ஆம்ஜத். தாயாராகப்பட்டவளுக்கு ஒரு நல்ல தின்பண்டத்தைப் பார்த்த மாத்திரத்தில் குழந்தை நினைவு வருவது சகஜம்; இங்கே குழந்தை ஆம்ஜத்துக்கு அம்மாவின் நினைவே வந்தது.

நீண்ட காலத்துக்குப்பின் வாயெல்லாம் பல்லாகத் தன் முன் சுரைக்காய்க் கூடையுடன் நிற்கும் பிள்ளையைக் கண்டதும்

அம்மா சாரதைக்கு ஆனந்தம் மேலிட்டது. அவள் சுரைக்காய் உன்பாளோ, மாட்டாளோ அதைச் சந்தோஷமாக அங்கீகரித்து, ''என் அப்பனே ஆம்ஜத்! இத்தனை காலமாக எங்கே உன்னைக் காணவே காணும்? எத்தனை விசாரப் பட்டிருப்பேன், தெரியுமா?'' என்றாள், நெகிழ்ந்து.

''இந்த தபா ஆடுமாடுங்களைத் தஷ்கரம் பண்ணிட்டேன். செமுத்தியாத் தீட்டிட்டாங்க'' என்றான் அவன், கரவு இன்றி.

அம்மாவின் கண்களில் அந்தக் குற்றமும் குற்றமாகத் தெரியவில்லை. ''நல்லபடியாத் திரும்பி வந்து சேர்ந்தியே, குழந்தே! அதுவே போதும்'' என்றாள்.

அம்மா தன் இறுதிக் காய்ச்சலின்போது ஆம்ஜத்தைப் பற்றி விசாரித்தாள். ஏதோ ஒரு திருட்டு வழக்கில் நீண்ட காலமாக அகப்படாமல் தலைமறைவாக இருந்துவிட்டுக் கடைசியில் சிக்கிவிட்டான் என்று யாரோ தெரிவித்தார்கள். ''த்ஸொ த்ஸொ!'' என்றாள். ''அவன் திருட்டிலே நிபுணன்னு எனக்குத் தெரியும்!'' என்றாள். அதையும் அவளது தாயுள்ளம் ஒரு குற்றமாக நினைத்துப் பேசவில்லை; தன் பிள்ளை பொறியியல் நிபுணன், மருத்துவ நிபுணன் என்று ஓர் அன்னை சொல்கிற முறையில் பெருமையுடன் பேசினாள் அம்மா!

அம்மாவின் மறைவுக்குப் பிறகு ஆம்ஜத் திருட்டு நடத்திய போது, கத்திக்குத்துப் பெற்றான். அதுவே ஆறாத ரணமாகி அவனை அம்மாவிடம் அனுப்பிவிட்டது!

1916-ஆம் ஆண்டு மே 15-ஆம் தேதி அன்று அம்மா புதுமனை புகுந்தாள். சாரதா தேவியின் அருளிச் செயல்கள் பல நடைபெற்ற அற்புதக் கோயில் அது!

அம்மா கிருஹப் பிரவேசம் செய்தபோது அவளது அருமை சுரத் பிருந்தாவனத்தில் இருந்தார். அவர் திரும்பி வந்ததும் அம்மா அந்த வீட்டின் எதிர்காலத்தைக் குறித்து ஏற்பாடு செய்தாள். சியாமாசுந்தரி தொடங்கி வைத்த ஜகத்தாத்ரி பூஜை தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று கருதிய அம்மா அந்த வீட்டை பேலூர் மட நிர்வாகத்தின்கீழ் ஒரு டிரஸ்டாக்கி, ஜகத்தாத்ரி பூஜைக்கென்றே நிவந்தம் ஏற்படுத்தினாள். அதோடு சிறிது நிலமும் வாங்கி ஜகத்தாத்ரி பூஜைக்கு மூலதனமாக வைத்தாள்.

கோயால்பாராவில் இந்த டிரஸ்ட் விவகாரம் ரிஜிஸ்தராயிற்று. முகம்மதியரான ஸப்ரிஜிஸ்திராருக்கு சாரதாநந்தர்

சிகரெட் உபசாரம் செய்து, தாமே விசிறுவதைக் கண்ட அம்மா தன் பிள்ளையின் எளிமையை வியந்துகொண்டாள்.

தன் குழந்தைகளைக் கவனித்துக்கொண்டது போலவே நம் அம்மா தன்னுடைய மகா அம்மாவான ஜகத்தாத்ரியையும் கவனித்துக்கொண் டிருக்கிறாள். ஜகத்தாத்ரி பூஜை நிரந்தரமாக நடக்க நிவந்தம் வைத்துவிட்டாள் அல்லவா?

அவ்வாண்டு ஜகத்தாத்ரி பூஜை எப்போது வரும் என்று நீண்ட நாட்களுக்கு முன்னிருந்தே அம்மா எண்ணத்தொடங்கி விட்டாள். பூஜைக்குப் பத்துத் தினங்களுக்கு முன்பே, ''நிறையத் தீபம் போடணும். இப்பவே பிடிச்சுத் திரி திரிக்கப்போறேன், அம்மா அப்படித்தான் பண்ணுவோ'' என்றாள்.

பால்வளம் போதாத ஜயராம்பாடியில் அம்மாவின் புது வீட்டில் பசு ஒன்றைக் கொண்டுவந்து கட்டி ஏகப்பட்ட புண்ணியம் சம்பாதித்தார் ஓர் அடியார். பால் கறக்கக் கோவிந்தன் என்ற ஆயப் பிள்ளையை அமர்த்தி, அவனது ஊதியத்தையும் தாமே ஏற்றார்.

பன்னிரண்டு வயசுப் பாலன் கோவிந்தன் எப்போதும் சிரித்த முகமாக நேர்மையுடன் வேலை செய்து, அம்மாவின் பிரிய 'கோபி' ஆனான்.

சிரித்த முகத்துக்குத் திருஷ்டி வந்தது. கோபியின் உடல் முழுதும் சொறி வாரிக்கொட்டியது; அவன் முகம் சுண்டி வாடியது.

''கோபி! ஏண்டா கண்ணு, இப்படிக் கண்ணும் மூஞ்சியுமா இருக்கே?'' என்று அங்கலாய்த்தாள் அம்மா.

''ராவெல்லாம் தூக்கமில்லை ஆயீ! பிடுங்கி எடுக்குதுங்க. தூங்கவே முடியாம அளுதுகிட்டிருந்தேன்'' என்றான் நல்ல கோபி. பால் குவளையுடன் பசுமாட்டிடம் போய் அமர்ந்தான்.

''இந்த அழுகிச் சொட்டற கையாலே பால் கறந்து குடிச்சா நமக்கு வியாதிதான் வரும்'' என்றாள் நளினி.

அம்மா அவளைத் தீட்சண்யமாக ஒரு பார்வை பார்த்தாள். அதைத் தாங்க வலுவின்றி நகர்ந்தாள் நளினி.

அம்மா வேப்பங்கொழுந்துகள் உருவிவந்தாள். மஞ்சளோடு சேர்த்து அதை ஒட்டி ஒட்டி வெண்ணெயாக அரைத்தாள் அம்மியில். அந்தக் கல்அம்மியில் குழவி புரண்டது போல்தான் அம்மாவின் பூமனத்தில் குழந்தை கோபி புரண்டான்! அதனால் தான் அகிலலோக நாயகியாகக் கருதப்பட்ட அம்மா ஒரு

ஆயப் பிள்ளைக்காகத் தனது அறுபத்துமூன்ருவது வயதில் அநா யாசமாக அம்மியில் அரைக்கிருள்.

பால் கறந்து வந்து ஊற்றிய கோபியின் கையில் அம்மா வேப்பம் விழுதைச் சிறிது சிறிதாக உருட்டிப் போட்டு, சொறி கண்டிருந்த இடங்களில் எல்லாம் நன்ருக அப்பிக்கொள்ளச் சொன்னுள்.

மற்றவர்களுக்குச் சொறிக்காரரிடம் ஏற்படும் இயல்பான அருவருப்பு அம்மாவுக்குச் சிறிதேனும் ஏற்படவேணுமே! ஊஹூம்!

மருந்தின் மகிமையும் மாதாவின் மகிமையுமாகச் சேர்ந்து கோபியின் சொறி சிரங்குகள் பொடியாக உதிர்ந்தன. உடம்பு பட்டுப்போல் ஆயிற்று, முகத்திலே அந்த வஞ்சனையறியாத சிரிப்பு மீண்டும் வந்து குடிகொண்டது.

மனிதர்கள் என்று மட்டுமில்லை. வாயில்லா ஜீவன்களின் கஷ்டமும் அம்மாவுக்குத் தாங்காது. அவற்றுக்குங்கூடத்தான் அம்மாவே என்று சொல்லிக்கொண்டவள் அன்ருே?

ஒரு நாள் கன்று ஒன்று தீனமாகக் கதறும் குரல் கேட்டு, கனிந்து வரும் பசுவாக ஓடினுள் அம்மா அதனிடம். ''வயிற்று வலியாடா, குழந்தே?'' என்று கேட்டு அதை இறுகக் கட்டிக் கொண்டு, அதன் வயிற்றை இதமாக அழுத்திப் பிடித்து விட்டாள். கன்றின் வாதனை தீர்ந்தது.

அம்மா ஒரு மைனு வளர்த்தாள். அதற்கு 'கங்காராம்' என்று அழகு சொட்டப் பெயர் வைத்திருந்தாள். தினமும் அதற்குக் குளிப்பாட்டித் துடைத்துவிட்டு, பருப்பு வகைகளும் தண்ணீரும் கொடுப்பாள். குளித்த குளுமையிலும், அம்மாவின் குளிர் ஸ்பரிசத்திலும் பசிய உடம்பு முழுதும் சிலிர்த்துக்கிடக்க, கங்காராம் 'மடி' யாக உணவு உட்கொள்ளும்! அசிங்கம் பாரா மல் அம்மாவே அதன் கூண்டைச் சுத்தம் செய்வாள். அதனிடம் நின்றுகொண்டு, ''எலே கங்காராமா, பேசுடா! 'கிருஷ்ணு' சொல்லு! 'ஹரே ராமா' சொல்லு!'' என்பாள். அதுவும் ஹரே ராமா, கிருஷ்ணு என்று கிரீச்சிடும். அதோடு நிற்காது அந்தப் பொல்லாத மைனு! ''மா, மா, மா'' என்று அம்மாவைக் கூப்பிட்டுக்கொண்டு அவளைச் செல்லமாகக் கொத்தும். கங்கா ராமின் ''மா'' என்ற குரலைக் கேட்டுவிட்டால் போதும், உள்ளே என்ன கைக்காரியமாக இருந்தாலும் அதைப் போட்டு விட்டு வந்துவிடுவாள். ''மகனே கங்கு, இதோ இருக்கேன் மா, என்ன வேணும்?'' என்பாள். அதற்கு ''மா''வேதான்

வேண்டும். வேறென்ன வேண்டும்? அவளை அலகால் அருமையுடன் மெல்லக் கீறும். அம்மா அதனிடம் ஓடி வரும்போதே மறக்காமல் கை நிறையக் கடலை கொண்டுவந்திருப்பாள். அதை ஒவ்வொன்றாக அதற்கு ஊட்டுவாள். சாந்தமாகத் தின்னும்.

அம்மா ஜயராம்பாடியில் இருந்தபோது, ராது ஒரு பூனை வளர்த்தாள். பால் மிகவும் அரிதாக இருந்த அந்தக் கிராமத்தில் அம்மா எப்பாடு பட்டாவது தினமும் ஒரு ராத்தல் (சுமார் மூன்று ஆழாக்கு) பால் சேகரித்து அந்தப் பூனைக்குக் கொடுத்து வந்தாள். இந்தச் சவரணையில் பூனையம்மை கஷ்"க் முஷ்"க் கென்று வளர்ந்தாள். கலியாணம் செய்துகொண்டு பிள்ளை குட்டிகளையும் வஞ்சனையில்லாமல் பெற்றுக்கொண்டாள். இந்தப் பூனைக் குடும்பத்தின் பொறுப்பையும் சுணங்காமல் ஏற்றாள் அற்புத 'கிருஹிணி'யான நம் அம்மா. அம்மா எத்தனை உணவு படைத்தாலும் மார்ஜார சேனைக்குத் திருடித் தின்னாவிடில் திருப்தி ஏற்படாது. அவை அந்த வீட்டில் செய்த கலாட்டா சொல்லி முடியாது. தாய்ப்பூனைதான் திருட்டில் 'எக்ஸ்பெர்ட்'. வயிறும் அதற்கு ரொம்பப் பெரிசு. அது செய்யும் உபத்திரவம் தாளாமல் பிரம்மசாரி ஞான் அதை அடிக்க வருவார். ''ஞானு! அதை அடிச்சுடாதேயப்பா'' என்று அம்மா இடைமறிப்பாள். ''திருடறது பூனைக்குத் தப்பு இல்லை. பூனைக்கு ஸ்வாமியே திருட்டுப் புத்தியை ஸ்வபாவமாகக் கொடுத்திருக்கார். இல்லாட்டா இதுகளுக்கு யார் பிரியமா ஆகாரம் கொடுப்பா? இயற்கைக் குணம் யாரை விட்டுத்தான் போகிறது? நாம் நன்னாப் பராமரிச்சாலுங்கூட அதுகளுக்கு ஸ்வபாவ வேகம் தன்னையறியாமல் வந்துடறது. அதனாலே நாம்தான் பண்டங்களை ஜாக்கிரதையா வைச்சிருக்கணுமே தவிர அதுகளைத் துன்புறுத்தப்படாது'' என்பாள் அம்மா.

ஒரு நாள் அந்தப் பூனை செய்த தொல்லை தாங்காமல் ஞான் அதைத் தூக்கிக் கொல்லைக்கு வெளியே எறிந்து விட்டார். அம்மா அப்படியே செயலிழந்து உட்கார்ந்து விட்டாள். மெத்து உடலானதால் ஒரு முறிவும் இன்றி 'மியாவ்' கொடுத்துக்கொண்டு அந்தப் பூனை மறுபடி அம்மாவிடம் வந்து உரசி நின்றதோ, அம்மா மறுபடி உற்சாகம் கொண்டாளோ! அதைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்துக்கொண்டே, ''ஏண்டி இப்படி அசட்டுத்தனம் பண்ணிட்டு உதை படறே?'' என்று கேட்டாள் அம்மா, கனிவுடன்.

''நீங்க கொடுக்கிற இடந்தான் இதுகள் ரொம்பத் துளிர்த்துப் போறதுகள்'' என்று முணமுணத்தார் ஞான்.

அவரைத் திருப்திப்படுத்துவதற்காக அம்மா அருகிலிருந்து ஒரு குச்சியை எடுத்து அந்தப் பூனையின்முன் ஆட்டியபடி, "நீயும் ரொம்ப அட்டகாசம் பண்ணறே! இனி இப்படிப் பண்ணினுயோ நானே ஞானுக்கு மேலே இந்தக் குச்சியாலே உன்னை வைச்சு வாங்கிப்பிடுவேன்!" என்று பொய்க் கோபத்துடன் கூறினுள்.

உடனே அந்தப் பூனைக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. நாலுகால் பாய்ச்சலில் வெளியே ஓடிவிட்டது. ஞான் தண்டித்தபோதெல்லாம், "இந்த வீட்டில் நம் அம்மா இருக்க, இந்தப்பயல் யார் நம்மை விரட்ட?" என்று சுவாதீனத்துடன் இருந்துவந்த பூனையம்மை, இப்போது அந்த அம்மாவே தன்னைக் கடிந்துகொண்டவுடன் மானம் தாங்காமல் ஓடி விட்டது!

அம்மாவுக்கு இருப்பாகவே இல்லை. "அவள் இத்தனை ரோஷக்காரின்னு எனக்குத் தெரியாமல் போச்சே! இப்படிப் போயே போயிட்டாளே!" என்று வேதனையுடன் சொல்லிக் கொண்டு பூனையைத் தேடிக் கிளம்பினுள். அவள் காலடியிலேயே மெத்தென்று ஒட்டிக்கொண்டு 'மியாவ்' கொடுத்தது அந்த மாயப் பூனை! யசோதை வீட்டில் திருடி உண்டு மாயம் செய்த கண்ணனின் லீலைகளை இந்தப் பூனை அம்மாவிடம் அரங்கேற்றம் செய்துவந்தது.

கல்கத்தா புறப்படும்போது அம்மாவுக்கு மனம் கலங்கியது, தான் இல்லாதபோது ஞான் இந்தப் பூனைக் குடும்பத்தை என்ன பாடுபடுத்துவானே என்று. பொல்லாத புக்ககத்தினரிடம் பெண்ணை விட்டுச் செல்லும் தாய்போல் குழம்பினுள். பளிச் சென்று ஒரு தெளிவு வந்தது. ஞானிடம் சென்று அழுத்தமான குரலில், "அப்பனே! இந்தப் பூனையையும் குட்டிகளையும் ஹிம்சை பண்ணுமல் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கோ. ஏன்னு அதுகளுக்குள்ளேயும் நான் இருக்கேன்" என்ருள். சத்தியத்தையே சொன்னுள்!

அப்புறம் கேட்பானேன்? அம்மா இல்லாதபோதும் ஞான் பூனைப்பட்டாளத்துக்கு ஆசார உபசாரம் செய்துவந்தார்.

வாயில்லா ஜீவரிடத்தும் கருணை மழை பொழிந்த சாரதை மானிட குலத்தில் ஏழை எளியோரிடமும், தீனரிடமும், அபராதிகளிடமும் காட்டிய தயை அபாரமானது!

வயலின் வாசித்துக்கொண்டே பாட்டுப் பாடும் பைராகி ஹரிதாஸை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்! அம்மா புதுமனை

புகுந்தபின் இவர் வந்து புராணப் பாடல்கள் பாடினர். அம்மா அவர் எண்ணெய் முழுக்காடத் தைலம் கொடுத்தாள். அவருக்கு வயிறு நிரம்பச் சாப்பாடு போட்டாள்: அப்போது உலக யுத்தம் காரணமாகத் துணிப் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. பைராகிக்கு மாற்று உடை இல்லை எனக் கண்டாள் அம்மா. கடையிலேயே புது வேஷ்டி கிடைக்குமா என்பது சந்தேகந்தான். அம்மா தயங்கவில்லை. வாசலில் காய்ந்துகொண்டிருந்த தன்னுடைய புதிய வெள்ளைச் சேலையை எடுத்துவந்து பைராகியிடம் தந்தாள். ''இதைக் கிழிச்சு இரண்டு வேஷ்டியாகப் பிரயோஜனப் படுத்திக்கோப்பா! நான் இரண்டே தரந்தான் இதை உடுத்தி யிருக்கேன்'' என்ருள்.

தாழ்ந்தவர் என்று ஒருத்தர் மனத்தைப் புண்படுத்த அம்மாவால் ஒருபோதும் முடியாது. புது வீட்டில் முதல் ஜகத் தாத்ரி பூஜை நடந்தபோது ஸாத்பேரி என்ற மீனவன் அதில் தன் கோமாளிக்கூத்தை நடத்திக் காட்ட விரும்பினன். அது அநாகரிகமாக இருக்கும் என்று மற்றவர்கள் முகம் சுளித்த போதிலும் அம்மா ஒப்புதல் தந்தாள். அவனும் வெகு உற்சாகத்துடன் பூஜை முடிந்த மறு தினம் மாலை பாவுல் உடை அணிந்து வந்தான். தானே கொண்டுவந்த விதானத்தை வெளிப் புறத்தில் கட்டிக்கொண்டு, காஸ்லைட் போட்டுக்கொண்டு, உடுக் கடித்துக் கூத்து ஆடினன். அம்மா அந்த வலைஞர் கலைஞனுக்கும் ஆதரவு தந்து பிரசாதங்கள் வழங்கினள்.

இதே பூஜையில் வேதவித்துக்களுக்கும், தந்திர சாஸ்திரம் அறிந்தவர்களுக்கும் அம்மா குறைவற மரியாதை செய்தது குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் பிரதேச மொழிக் கலைஞர்களை யும் நாட்டுக் கலைகளையும் ஆதரிக்க வேண்டுமெனில், அதற் காக வேதவித்துக்களின்மீதும், பழைய சாஸ்திரங்கள்மீதும், சம்ஸ்கிருத மொழியின்மீதும் துவேஷம் பாராட்ட வேண்டும் என்பது ஓர் உட்கிடை போலவே ஆகிவிட்டது. இரு துருவங்களையும்-அல்ல, இவை ஒரே சநாதனப் பண்பாட்டின் இரு புறங்கள்தாம் என்று-இணைத்துக்காட்ட ஸ்ரீ காஞ்சி காம கோடிப் பெரியவர்கள் அற்புதசதஸுகளை நடத்தி வருகிருர்கள். அடக்கம், விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பாங்கு, அவ தார மகிமையை ஒளித்துக்காட்டுவது இவற்றில் ஸ்ரீ ஆசாரியப் பெருமானை நினைவுறுத்தும் அம்மா, வைதிகத்தோடு கிராமக் கலையைப் பேணியதிலும் ஒற்றுமையைக் காட்டியிருக்கிருள்!

பூஜை நடத்திய சாஸ்திரிகளுக்கும், சாக்த தந்திரங்களின் படி அதனை முறைப்படுத்திய தந்திர தாரகராகிய அகத்து

உபாத்தியாயருக்கும் முன் அம்மா விழுந்து நமஸ்கரித்தாள். 'ஞான, சீல, வயோ விருத்தாப்பியம்' என்றபடி சகலவிதத்திலும் பழமாக இருந்த அம்மா, சாஸ்திரங்களை அநுசரித்தே நடக்கவேண்டும் என்பதால் தனக்கு குருமுகமாக இருந்து அந்தப் பூஜை நடத்தியவர்களுக்குப் பிடிவாதமாக நமஸ்காரம் செய்தாள்! சாஸ்திரிகளுக்குப் பிரணமம், ஸாத்பேரிக்குப் பிரசாதம்!

''அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?'' என்ற வாக்கு நம் அம்மாவுக்குப் பொருந்தியதுபோல் எங்கணுமே காணக்கிடைக்காது எனலாம். ஒரு நாள் அம்மா கொயால் பாராவில் இருந்தபோது தோட்டிப் பெண் ஒருத்தி அம்மாவின் தரிசனம் கோரி வந்தாள். அவள் தோட்டி ஒருவனின் பெயரைச் சொல்லி, ''அவருதான் என்னை 'வைச்சுக்கிட்டு' இருந்தாரு. அவரு பேச்சை நம்பித்தான் என் மனுஸங்களை வுட்டுட்டு வந்துட்டேன். ஆனு இங்கே வந்தவிட்டு என்னைக் கண்ணாலம் கட்டாம சாக்குப்போக்குக் காட்டினரு. கடைசியில் இப்போ ஒரேயடியாகக் கை வுட்டுட்டாரு. நீதான் கதி, தாயே'' என்று பிரலாபித்தாள்.

அம்மாவின் கண் கலங்கிற்று, ஆசை வாய்ப்பட்ட அசட்டுக் குழந்தைகள் எப்படி எல்லாம் மோசம் போய் அவதி உறுகின்றன என்று அநுதாபத்துடன் உணர்ந்து, அந்தத் தோட்டிப் பெண்ணிடம் பரிதாபம் கொண்டாள்.

தோட்டியைத் தன்னிடம் அழைத்துவரச் செய்தாள்: ''ஏனப்பா, இந்தக் குழந்தை உன்னை நம்பித்தானே சகலத்தையும் தியாகம் செஞ்சுட்டு வந்திருக்கு? உனக்காக இது எவ்வளவு ஊழியம் பண்ணியிருக்கு என்கிறதையும் நினைச்சுப் பாரு. இப்போ நீ இந்தப் பொண்ணை நடுத்தெருவிலே நிராதரவா நிறுத்தறது உன் மனசுக்கே சரியாயிருக்கா, யோசிச்சுப் பாரு'' என்றுள் அவனிடம்.

அவன் தழைந்து போகிறவனுக இல்லை. இதைக் கண்டதும் அம்மா அதிசயமான உக்கிரக்கோலம் கொண்டாள். ''பயலே! நீமட்டும் இந்தக் குழந்தையைக் கைவிட்டே, அது மகா பாவம். அதுக்கப்புறம் உனக்கு நரகத்திலேகூட இடம் கிடைக்காது. ஆமாம்'' என்று உறுமினுள்.

அந்த ஆள் கதி கலங்கிவிட்டான். பெட்டிப் பாம்பாகித் தவடையில் போட்டுக்கொண்டான். ''நீங்க சொன்னப்படியே செய்யறேன், தாயே'' என்று பவ்வியமாகக் கூறினுன்.

"சரி, இப்பவே இவளை அழைச்சிண்டு போ. முறைப்படி கலியாணம் பண்ணிண்டு குடித்தனம் பண்ணு, இனிமேலே இந்த மாதிரிப் புகார் வரப்படாது. நல்ல குழந்தையா இரு" என்றாள் அம்மா, திருப்தியுடன்.

"வா, லே" என்றான் அவன், இடையிலே வெறுத்த தன் ஆசைநாயகியிடம்.

"என் வவுத்திலே பால் வார்த்த காளி ஆயி! நான் வாறேன்" என்று அம்மாவைக் கும்பிட்டு அவனுடன் வீடு திரும்பினாள் தோட்டிப் பெண்.

ஏழை எளியோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் அம்மா அன்பு வெள்ளம் பெருக்கியதை விட, மனத்தினால் தாழ்ந்து விட்ட மாபாவியருக்கும் அவள் தங்குதடையின்றிப் பொங்கும் அன்பைப் பொழிந்ததே அதிசயம். ஒரு நிலையில் அவர்களது பாபத்தை உணர்ந்திருந்ததாலேயே அது தீர அவர்களுக்கு மந்திரம் தந்தாள்; அல்லது பாபத்தைத் தான் உவந்து ஏற்றாள். ஆனால் இன்னொரு நிலையில் அவர்களைப் பாவியர் என்றே அந்த அம்மா இதயம் உணராததாகவும் தோன்றியது. தவறும் குற்றமும் இழைத்தவர்களை அம்மா கண்டிக்காமலிருக்கும் சமயங்களில், அவள் கண்ணில் தப்பே படுவதில்லை எனத் தோன்றும். உடனிருப்பவர்கள் இதற்காக அம்மாவிடம் குறைப்பட்டுக் கொள்வதும் உண்டு. அம்மா சிரித்து நவில்வாள்: "எனக்கு எவர் தப்பும் தெரியலேன்னே வைச்சுக் கோங்கோ. அப்படித் தெரியாமலிருக்கிறது என் தப்பாக இருந்தாலும் இருந்துட்டுப் போகட்டும். உலகத்திலே நீங்க அத்தனை பேருந்தான் பிறத்தியார் தப்புக்களைக் கவனிச் சுண்டே இருக்கேளே! நான் ஒரே ஒருத்திதான் அதைக் கவனிக்காமலிருந்தா பிரளயமா வந்துடப் போறது?"

தங்களிடையே ஏராளமான தோஷமுள்ள மக்கள் பிறரிடமுள்ள தோஷங்களைக் கண்டு துவேஷம் கொண்டபோது, தோஷமே இல்லாத அம்மா பிறர் தோஷத்தைக் காணாததால் எப்போதும் வாடாமல் சந்தோஷமாகவே இருந்தாள். பார்க்கப்போனால் மாசுமறுவற்ற வெள்ளை அன்னைக்குத்தான் பிறரது கருமையும் சிறுமையும் அதிகம் உறுத்தியிருக்கவேண்டும். ஆனால் அவளிடம் 'வெள்ளை'யை விடவும் அதிகமாகவே அல்லவோ 'அன்னை' கரைந்திருந்தது? அதனாலேயே, நாம் ரக்ஷிக்கிறோம் என்ற நினைவுமின்றி அவள் தீன ரக்ஷகியாகவும், பாவத்தை வாங்கிக்கொண்டு பாவனப்படுத்துகிறோம் என்ற நினைவின்றியே பதித பாவனியாகவும் இருந்தாள்!

46. இன்னுயிர் இரண்டு விண்ணுலகுற்றன!

''ஹா! கனவில் கண்ட கவின்பொருளாக என் கண் முன்னில் தோன்றி மறைந்தாயே! மனித வாழ்வுதான் நீர்க் குமிழிபோல் எத்துணை அநித்தியமானது! மகனே, உன்னை மீளமீளப் பார்த்தும் திருப்தியுருத என்னைக் காலமில்லாக் காலத்தில் கைவிட்டுப் போனுயே!....ஸ்ரீகிருஷ்ணனே நமக்கு நாயகனுக இருந்தும் நீ அநாதைபோல் மரித்ததால் தெய்வசதியை மகாபண்டிதரும் அறிய முடியாது என உறுதியாயிற்று....பொறுக்கவொண்ணுப் பெருந் துயரில் சோகாக்கினியால் தகிக்கப்பட்ட மனத்தை ஆற்றி உறுதியாக வைத்துக்கொள்பவர்களுக்கு எந்த நற்கதி உண்டோ அதை நீ அடைவாயாக!''

—மகாபாரத துரோண பர்வத்தில் சுபத்திரை அபிமன்யுவுக்காகப் புலம்பியது.

வங்கத்தில் சுதந்தர இயக்கம் வலுபபெற்று வந்தது. காந்தி சகாப்தம் இன்னும் மலராததால் வன்முறைவாதிகளே அதிகம் இருந்தனர். அம்மாவை நாடிப் பலவகைப்பட்டவர்கள் வந்ததாலும், கோயால்பாரா ஆசிரமவாசிகள் தங்கள் சுதேசியத்தை அடிக்கடி அவிவேகமாகப் பறைசாற்றி வந்ததாலும் போலீஸார் நம் தேவியின் கிருகத்தைக் கண்காணிக்கத் தொடங்கினர். ஆயினும் போலீஸ் தஸ்தாவேஜிகளில் அம்மாவின் இல்லம் 'மாதாஜி ஆசிரமம்' என்று மரியாதையுடன் குறிக்கப்பட்டிருந்தது கவனத்துக்குரியது. அரசாங்க வட்டாரங்களில் செல்வாக்குப் பெற்ற விபூதிபூஷண் கோஷ் என்ற அடியார், மாவட்டப் போலீஸ் அதிகாரியை ஆசிரமத்துக்கே அதிதியாக வரவேற்று உபசரிப்பு நடத்திய பின்பு, கண்காணிப்புச் சிறிது குறைந்தது. இருப்பினும் அங்கு வருகிறவர்களுடைய பெயர்களையும் விலாசங்களையும் சௌக்கிதார் குறித்து வைத்துக்கொண்டார். அம்மா அசாத்தியத் தெளிவுடன் இருந்தாள். அந்தக் காலத்துப் பெண்கள், அதிலும் வயதான கிராம மாதர் போலீஸ் என்றுல் கிலி கொண்டிருந்தனர். அம்மாவுக்கு அச்சம் சிறிதும் இல்லை. தன்னிடம் வருவோரின் விவரங்களைக் குறித்துக்கொண்டதால் தாழ்வு உணர்ச்சியும் கொள்ளவில்லை. நிதானமாகவே இருந்துவந்தாள்.

அம்மாவுக்கு எவ்விதத் தொந்தரவும் ஏற்படாதிருக்கும் பொருட்டு, பக்தர்கள் மிகையான தன்மான உணர்ச்சியும் தயக்கமும் காட்டாமல், போலீஸாருக்கு இந்தத் தகவல்களைத் தந்துவிடவேண்டும் என்று சாரதாநந்தர் உத்தரவு போட்டிருந்தார்.

ஞானநந்தர் என்பவர் ஜயராம்பாடிக்கு வந்துபோன பின்பு போலீஸ் கெடுபிடி மீண்டும் அதிகமாயிற்று. தலைமறைவாக இருந்த ஒரு புரட்சிவாதியே சந்நியாஸ வேஷத்தில் இப்படி வந்ததாகப்போலீஸார் கருதினர். அவர்கள் அம்மாவின் இல்லத்துக்கே வந்து புலன் விசாரித்துச் சோதனை செய்யப் போகிறார்கள் என்று தெரியவந்தது. அடியார் அனைவருக்கும் ஈயாடவில்லை. அம்மாவின் மதிப்புத் தெரியாமல் இப்படிச் செய்கிறார்களே என்று ஆத்திரமும் கொண்டனர். அம்மா வழக்கம்போலவே சாந்தமாக இருந்தாள். வழக்கம்போலவே ஸ்நானம் செய்தாள். சமைத்தாள், பூஜை செய்தாள். பரிமாறினாள். போலீஸார் என்னென்ன அதிக்கிரமம் செய்யக்கூடும் என்பதை ஸிந்துபாலா விவகாரத்தில் கண்டிருந்த அம்மா இத்தனை அமைதியாக இருந்தது அடியார்களுக்கு வியப்புத் தந்தது.

அன்று தெய்வமே அனுப்பிவைத்தாற்போல், ஆராம்பாக்கைச் சேர்ந்த வழக்கறிஞர் மணீந்திரநாத் போஸ் அம்மாவைத் தரிசிக்க வந்திருந்தார். அவர் போலீஸாரின் நன்மதிப்பைப் பெற்றவர். சிறிது நேரத்தில் விசாரணைக்காக இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் வந்தனர். மணீந்திரநாத்தைக் கண்டவுடனே அவர்களுக்கு ஓர் அடக்கம் உண்டாயிற்று. ஆசிரமம் முற்றிலும் ஆன்மிக, தெய்விக நெறிகளின் தொடர்புடையதே என்றும், அதில் அரசியல் கலப்புச் சிறிதும் இல்லை என்றும் போலீஸாருக்கு மணீந்திரநாத் விளக்கி வைத்தார்.

இங்கே ராமகிருஷ்ண சங்கத்தின் கௌரவத்தை அம்மா எப்படி விட்டுக்கொடுக்காமலே இருந்தாள் என்பது கவனத்துக்குரியது. கேதார்பாபுவிடம் அரசியல் பற்றுக்களை விடுமாறு அவள் எவ்வளவு அழுத்தமாகக் கூறினாள் என்பது வாசகர் அறிந்ததே. ஆயினும் ராமகிருஷ்ண சங்கத்தினர் சுதந்தரப் போராட்டத்தில் பங்குகொள்ளக்கூடாது என்பதே தன் முடிவான கருத்து என்று அவள் போலீஸுக்குச் சொல்லவில்லை!

அதே சமயத்தில் போலீஸாருக்கும் அவள் அம்மாவாக இருந்தாள். மணீந்திரநாத் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போதே, அம்மா உள்ளே சுவைமிக்க சிற்றுண்டிகள் தயாரித்தாள். தங்களுக்கு டிஃபன் காத்திருக்கிறது என்றறிந்த

போலீஸார் அந்தப் புதிய அநுபவத்தில் ஆசிரமத்தைக் குறித்து வெகுவாக நல்லெண்ணம் கொண்டனர். ஆனால் அம்மா இதை நோக்கமாகக்கொண்டு அவர்களுக்கு விருந்துபசாரம் செய்ய வில்லை. தன் வீட்டை மிதித்த எல்லாக் குழந்தைகளுக்கும் செய்த உபசாரத்தைப் 'போலீஸ் குழந்தைகளு'க்கும் செய்தாள்.

சிற்றுண்டி அருந்தியபின் போலீஸார் அம்மாவைத் தரிசிக்க விருப்பம் தெரிவித்தனர். அம்மா தரிசனம் தந்தாள். அவர் களிடை உரையாடல் ஏதும் நடக்கவில்லை. அம்மாவின் முழு உருவங்கூட அவர்களுக்குத் தெரியவில்லை. நன்றாகப் போர்த்திக் கொண்டே அமர்ந்திருந்தாள் தேவி. இருந்தாலும், இது ஐயுற வான காரியம் எதுவுமே நடக்க முடியாத சந்நிதானம் என்ற தெளிவு இன்ஸ்பெக்டருக்கு ஏற்பட்டுவிட்டது. சோதனையும் விசாரணையும் இல்லாமலே, பெயருக்கு நாலைந்து கேள்விகளை நட்பு முறையில் கேட்டுப் பதிலைக் குறித்துக்கொண்டு திரும்பி னார்.

அம்மா எந்தச் சூழ்நிலையிலும் அலுங்காமல் நலுங்காமல் இருப்பாள் என்பதைக் காட்டுவதற்கேபோல் அவளைச் சுற்றி ஏதேனும் தொந்தரவு உண்டாகிக்கொண்டேயிருந்திருக்கிறது. இவற்றில் மாறாத நித்தியத் தொந்தரவு அவள் உறவினர் களிடமிருந்தே ஏற்பட்டு வந்தது. பிடுங்கி எடுக்கவே பிறந் திருந்த இந்த உறவினர்களிடையில் அத்தி பூத்ததுபோல் இப்போது ஒரு சத்புத்திர மாணிக்கம் பிறந்தது. அம்மாவின் மருமாளான மாகு எனப்படும் சுசீலாவுக்குப் பிறந்த பிள்ளைதான் இந்த அற்புதப் பிறவி.

அம்மாவின் மூத்த தம்பியாகிய பிரஸன்ன குமாரரின் முதல் மனைவிக்குப் பிறந்தவர்கள் நளினியும் மாகுவும். முதல் தாரம் மரித்தபின் அவர் ஸுவாஸினியை மணந்தார். அவள் இந்தக் குடும்பத்திலேயே ஒரு விதி விலக்காக, உத்தமப் பண்பு களுடனும், அம்மாவிடம் நிறைந்த பக்தியுடனும் இருந்து வந்தாள். நளினியும் மாகுவும் துடுக்கு வாய்ந்த கிராமாந்தரக் குட்டிகளாதலால், இவர்களுக்கு மாற்றாந்தாய் ஸுவாஸினியிடம் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் அம்மாவே இவர்களைப் பரா மரித்து வந்தாள். அம்மாவின் ஜாதக விசேஷம், இந்த மருமாள் களும் ராதுவைப் போலவே திருமணமான பின்னருங்கூடப் பெரும்பாலும் அம்மாவிடந்தான் இருந்து உபத்திரவித்து வந்தனர். மாகுவின் புக்ககத்தினர் வசதி படைத்தவர்கள். அவள் புருஷனுக்குத் தனிப்பட வேலை வெட்டி இல்லை. புருஷ னோடு தனிக்குடித்தனமே மாகுவின் சுபாவத்துக்குச் சரிப்பட்

டிருக்கும். புக்ககத்து மனிதர்களிடம் ஒட்டுதலே இல்லாததால் சாரதையத்தையிடமே வந்து சேர்ந்தாள் இவள். இதனுல் சம்பந்திகள் கோபம் கொண்டுவிடப் போகிருர்களே என்ற கவலையில் அம்மா அவர்களுக்கு எல்லாப் பண்டிகைகளின் போதும் தாராளமாகச் சீர்வரிசைகள் அனுப்பிக்கொண்டிருந்தாள். ஆனுலும் மருமாளைப் புக்ககம் அனுப்பிவைப்பது மட்டும் சிரமமாயிருந்தது.

அநாதையான ராது, அம்மாவின் வாஞ்சையைப் பெரிதும் கவர்ந்திருந்ததில் நளினிக்கும் மாகுவுக்கும் உள்ளூற அசூயை உண்டு. அதனுலேயே அவர்களும் பிடிவாதமாக அம்மாவுடனேயே இருந்துகொண்டு, தங்களுக்கு வேண்டியதை எல்லாம் செய்துகொண்டனர். ஒரு பொறுப்பும் இல்லாமல் 'ஹோலி மதரின் நீஸ்'களாக ஆசிரமத்தில் சௌகரியமாக வாழ்ந்ததில் இவர்களுக்குப் புக்கக வாழ்வு கசந்துவிட்டது. அம்மா இவர்களுக்கு நல்ல புத்தி சொன்னுலும் கேட்கமாட்டார்கள். ''எங்களைப் புக்ககத்துக்கு ஓட்டிவிடு; ராதுவை மட்டும் செல்லம் கொடுத்து வளர்த்திண்டிரு'' என்று மரியாதையே இல்லாமல் இடித்துப் பேசுவார்கள். இதனுல் அம்மா இவர்களுடைய தொல்லையைப் பொறுத்துக்கொண்டு, சம்பந்திகளிடம் சௌஜன்யம் குலையாமலிருப்பதற்காகப் 'பிடிக்குப்பிடி நமசிவாயம்' என்று ஸம்பாவனை அனுப்பிக்கொண் டிருந்தாள்! அம்மாவின் வாழ்க்கை அதிவிசித்திரந்தான்!

மாகுவின் மகன் நேதா புதுமலராகப் பிறந்து அம்மாவைக் குளிர்வித்தான். அந்தக் குழந்தையிடம் இவ்வுலகைச் சேராத ஒரு தெய்விகம் இருந்ததாகக் கண்டு அன்பு செலுத்திஞள் அம்மா. ஒரு நாள் அம்மா பூஜை செய்கையில் நிவேதனத்துக்கு வைத்திருந்த பழங்களை நோக்கித் தவழ்ந்து வந்தான் குழந்தை நேதா. அம்மா குறுக்கே கை வைத்தாள். அதற்குள் ஒரு பாரிஷதர் ஓடி வந்து குழந்தையைத் தூக்கினுர். ''மா'' என்றது குழந்தை. அம்மா அதன் முகத்தைப் பார்த்தாள். அவளுக்குள்ளே ஒரு சந்தன ஊற்று பீரிட்டது; குழந்தையைக் கீழே விடுமாறு கிங்கரரிடம் சைகை காட்டினுள். சமர்த்துக்கட்டியாக அமர்ந்த நேதாவின் வாயில் அம்மாவே ஒரு வாழைப்பழத்தை உரித்து ஊட்டினுள். ''கோபாலா, என் கோபாலா, சாப்பிடப்பனே!'' என்ருள். அவள் கண்கள் வைரமாக மின்னின; குரலோ ஹம்ஸதூளியினும் மிருதுவாக இழைந்தது.

நேதாவுக்குப் பேச்சு வந்தது. அவன் சாரதாதேவியை அம்மா என்ருே, பாட்டி என்ருே, அத்தை என்ருே அழைக்க

வில்லை. "சீதா" என்றே அழைப்பான். அல்லது, "சீதாப் பாட்டி" என்பான். அதிசய பாலகன்தான்!

அம்மாவுக்கு இப்போது பல் விழுந்து, அவள் பொக்கை வாய்ப் பாட்டியாகி இருந்தாள். நேதாவுக்கு முல்லை அரும்பு போல் பற்கள் மொட்டு விட்டிருந்தன. அம்மாவைப் போலவே காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு அமர்ந்த நேதா, அந்த முத்துமுளை போன்ற பற்களைத் தொட்டு, "இதைப் பிடுங்கிப் போட்டுட்டா நானும் சீதாப் பாட்டி ஆயிடுவேன்" என்றான்.

இந்த அதி புத்திசாலித்தனத்தைக் கண்டவர்கள், 'இந்தப் பிள்ளை நன்றாக இருக்கணுமே!' என்று எண்ணுவார்கள். அம்மாவின் சோக வாழ்வில் இப்படி வேறு ஒன்று நடக்குமா?

அம்மா தன் பரிவாரங்களுடன் கோயல்பாரா ஆசிரமத்தில் தங்கி இருக்கிறாள். நண்பகல் வேளை. நளினி நீண்ட நேரமாக அலுத்துச் சலித்தவாறு எதையோ தைத்துக் கொண்டிருந்தாள். "அம்மாடி! இங்கே கொண்டா! ஒரு நிமிஷத்திலே தைச்சுக் காட்டறேன்" என்று கூறியவாறு அம்மா துணியையும் ஊசியையும் வாங்கிக்கொண்டாள். அறுபத்தைந்தாவது வயதிலும் மிஷின் தையல்போல அழகாகவும் வேகமாகவும் ஊசியை ஓட்டினாள். "நளினி! செய்கிற வேலையிலே பிடிமானமும், மனசிலே பொறுமையும் இருந்தா எந்தக் காரியமும் நன்றாக ஆயிடும். துரதிருஷ்டவசமாக உனக்குப் பொறுமையே இருக்கிறதில்லை. சகிப்புத்தன்மைதான் ஸ்திரீகளின் பூஷணம்னு டாகுர்...."

பேச்சு தடைப்பட்டது. 'டாகுர்' என்ற ஒரு வார்த்தையே நிகழ்காலத்தை முப்பதாண்டுகளுக்கு முந்திச் சேர்த்துக் கெட்டித் தையல் போட்டுவிட்டது! அம்மாவின் முகத்தில் முழுமதி கரைந்தாற்போன்ற அபூர்வமான குளிரொளி மண்டியது. நிலவில் குவியும் மலரென அவள் கண்கள் சமாதியில் சொருகிக்கொண்டன. "அத்தை, அத்தை" என்று கத்தியபடி நளினி அவள்மீது தண்ணீரை விசிறி அடித்தாள். இந்தக் குளிர் பட்டதும், அந்தக் குளிர் உதிர்ந்தது! அம்மாவுக்கு வெளி உணர்வு மீண்டது.

"என்ன அத்தை, திடீர்னு இப்படி ஆயிட்டே!" என்று கேட்டாள் நளினி. கேதார் வீட்டுப் பெண்டிரும் அம்மாவைச் சூழ்ந்துகொண்டனர்.

"ஒண்ணுமில்லை. வயசாச்சோ இல்லியோ? ஊசியிலேருந்து உருவிண்ட நூலை மறுபடி கோக்கணும்னு உறுத்துப் பார்த்தவுடனே தலையைச் சுத்திண்டு வந்துடுத்து" என்று அநாயாசமாக

ஒரு பொய்யை வீசினுள் சத்தியமாதா. எதற்கோ கர்ப்பூரவாசனை தெரியாது என்பார்களே, அதுபோல் பாவ சமாதியின் நறுமணத் தைப் புரிந்துகொள்ளத் தெரியாத நளினியிடமும் மற்றப் பெண்களிடமும் மறைத்துப் பேசினுள்.

பிற்பாடு பிரம்மசாரி வரதனிடம் உண்மையைச் சொன்னுள் அம்மா. "அன்னிக்குக் கேதார் அகத்துப் பெண்டுகள் அமர்க்களப் படுத்தப் போருளேன்னு மாற்றிச்சொன்னேன். வாஸ்தவத்திலே என்ன நடந்தது தெரியுமா? நான் 'டாகுர்'னு சொன்னவுடன் அவரே உள்ளே பிரவேசிச்சுட்டார். நேரே வராந்தாவுக்கு வந்து நிழலிலே உட்கார்ந்தார். ரொம்பக் களைப்பா இருந்தது போலிருக்கு. உட்கார்ந்திருந்தவர் அப்படியே கட்டாந்தரை யிலே சாயப்போனுர். நான் அவசரமா என் முந்தானையை விரிக்கலாம்னு..அப்பா! இப்போ நினைச்சாக்கூட.." என்று அம்மா புளகித்த தன் மேனியைக் கைகளால் அழுத்திக் கொண்டாள்.

அம்மா குடும்பத்திலே மிகவும் ஆழ்ந்து தோய்ந்திருந்த தாகக் காணப்பட்ட காலத்திலுங்கூட, அவளுக்கு அவ்வப்போது தெய்விகக் காட்சிகள் எளிதில் தெரிந்துகொண்டுதான் இருந்தன.

பிரம்மசாரி வரதன் அம்மாவுக்கு இப்போது அரும்பணி செய்துவந்தார். அவள் காலால் இடும் வேலையைத் தலையால் செய்யக் காத்திருந்தார். ஆனுல் அடக்கப் பொக்கிஷமாம் அம்மா 'காலால்' பணியிட்டதில்லை. சேர்த்துவைத்து ராதுதான் அவரை ஓயாமல், ஏதாவது எடுபிடிக் காரியத்தில் ஏவிக் கொண்டேயிருப்பாள். அம்மா ஒரு நாள் மன்னிப்புக் கேட்கிற குரலில், "என் பிரிய பரதூ (வங்காளிகளுக்கு 'வரதன்' 'பரத'ஞகி விடுவார்!), பிரம்மசரியம் முடிச்சு சந்நியாசத்தை வாங்கிக்க உனக்குப் பூர்ண யோக்கியதை இருக்கு. இருந்தும் நான் ஏன் உனக்குக் காஷாயம் தராமலிருக்கேன் தெரியுமா? நீ சந்நியாசியாகத் துரீயாசிரமம் வாங்கிண்டுட்டா, அந்த ஆசிரமத்துக்குக் கீழே இருக்கிற நானும் இந்தப் பொண்ணும் உன்னை இதுமாதிரி வேலை வாங்குவது அபசாரமாயிடும். அதனுல்தான் உன்னைத் தடுத்து வைச்சிருக்கேன். வருத்தப் படாதே! அப்புறமா (அம்மா இந்த வார்த்தையைச் சுழற்றிச் சொன்ன விதத்திலிருந்து 'தன் வாழ்வுக்குப் பிற்பட்ட அப்புற'த்தை அவள் சொல்லுவது புரிந்தது) நீ ஷரத்கிட்டே ஒரு வார்த்தை சொன்னு போறும். அவன் உன் ஆசிரம ஸ்வீகாரத்துக்கு ஏற்பாடு செய்வான்" என்ருள்.

அம்மா தன்னை சந்நியாசிகளோடு வைத்துப் பேசாமல் ஒரு படி குறைத்தே பேசியதால்தான், இந்த நூலில் அவளுடைய 'ஆசிரம'த்தையும் இல்லம் அல்லது வீடு என்றே கூறுகிறோம். தான் இல்லறத்தாருக்கு வழிகாட்டவே வந்தவள் என்பதை அம்மா ஒருபோதும் மறக்கவில்லை. நாமும் மறக்கக் கூடாது.

வரதனைப்போலவே பக்குவப்பட்ட ஹரி என்ற வாலிப சிடரையும் இதே காரணத்துக்காக அம்மா சந்நியாச தீக்ஷை தராமல் வைத்திருந்தாள். தன்னை அன்னையாக எண்ணிய குழந்தைகளையும், தன்னைத் தெய்வமாகக் கொண்ட அடியவர்களையும் தன்னைவிட அந்தஸ்தில் பெரியவர்களாக நினைக்கிற ஒரு மனசும் இருக்கமுடியுமா? ஆச்சரியந்தான் அன்னை சாரதை!

கோயால்பாராவில் அம்மா பயங்கரக் காய்ச்சலில் விழுந்தாள். மரணத்தின் வாயில்வரை சென்றுவிட்டாள். ஆனால் அவள் இன்னும் பல சோகமான, பயங்கரமான சோதனைகளுக்கு ஆளாகவேண்டும் என்பது ஈசுவர சித்தமாக இருக்கிறபடியால் பிழைத்துவிட்டாள். ஜயராம்பாடிக்குச் சென்று சில நாட்கள் இருந்துவிட்டுக் கல்கத்தாவுக்குப் போக முடிவு செய்தாள்.

ஜயராம்பாடி மக்கள் அம்மாவை மொய்த்துக்கொண்டனர். அந்த எளிய ஜனங்களுக்கு அம்மாவின் மகிமை இன்னதென்று தெரியாது. ஆனாலும் அவளுடைய அன்பு அந்தக் கிராமவாசிகளுக்கு வெகு நன்றாகப் புரிந்தது. அதோடுகூடத் தங்கள் கிராமத்தைச் சேர்ந்த சாரதாம்மாவைப் பார்க்க படேபடே சாதுக்களும், பெரிய மனிதர்களும் வருவதில் அவர்களுக்கு ஒரு பெருமிதம்!

"தாயே! உடம்பு சுகமாகி வந்து சேர்ந்தியே! நாங்க என்ன விசாரப்பட்டோம், தெரியுமா? உனக்காக, ஸிம்மவாஹினிக்கு ஆடு காவு குடுக்கறதாக்கூட நேர்ந்துகிட்டிருக்கோம்" என்றனர்.

"என் கண்மணிகளா! ஆடுபலி எல்லாம் வேண்டாம். நானே ரஸகுல்லா பண்ணித்தர்றேன்: அதை அம்மாவுக்குப் படையுங்கோ" என்றாள் அஹிம்ஸாரூபிணி.

ஸிம்மவாஹினிக்கு ஜீராவில் ஊறிய பால் பணியாரம் குறைவின்றிக் கிடைத்தது. அம்மா அந்த ஊர் மக்களை வரிசை வரிசையாக உட்காரவைத்து ரஸகோளங்களைப் பரிமாறினாள்.

''மவராசி, நீ இப்படியே எந்நாளும் இந்தக் கெராமத்தை லெச்சுமியாக் காப்பாத்திட்டு இருக்கணும்'' என்று அந்த ஏழை மக்கள் ஆழ்ந்த உணர்ச்சியோடு கூறினர்.

அம்மா பரிவும் துயரும் கலந்த சிரிப்பொன்றை இழைய விட்டாள். ''குழந்தைகளா! எனக்கு ரொம்பத் தள்ளாமையா யிருக்கோல்லியோ? அதனாலே இப்போ கல்கத்தாவுக்கு வந்து வைத்தியம் பண்ணிண்டு 'ரெஸ்ட்' எடுத்துக்கும்படியா அங்கே இருக்கிற ஷரத் சாமியார் சொல்கிறார். நீங்க சரின்னு சொன்னால் போறேன்'' என்றாள். ஸௌலப்பியத்தின் எல்லை-நிலம் அல்லவா?

அவள் அப்படி அந்த எளிய ஜனங்களையே யோசனை கேட்ட வுடன் அவர்கள் உருகிவிட்டார்கள். ''தாயே! உன் உடம்பு தான் இந்த பூமிக்கே முக்கியம். கல்கத்தாவுக்குப் போய் உடம்பை ஜாக்கிரதையாக கவனிச்சுட்டு நல்லபடியாத் திரும்பி வாம்மா'' என்று ஏகமனதாகக் கூறினர்.

ராமகிருஷ்ண சங்கத்தில் அநேகர் ஏனோ தீர்க்காயுள் வரம் பெற்றிருக்கவில்லை. அம்மாவின் அருமந்த பாபுராம்-ஸ்வாமி பிரேமாநந்தர்-உலக யாத்திரையை முடித்து விட்டார். அப்போது அம்மா கல்கத்தா உத்போதனில் இருந்தாள். அவருக்கு உடல்நிலை மிக மோசமான அன்று காலையிலிருந்தே அம்மா சிவந்த கண்களுடன் துடித்துக்கொண் டிருந்தாள். பிற்பகல் அந்தக் கொடிய செய்தி வந்தது. ''பாபுராம்! உன்னை என் இருதயத்துக்கு ரொம்பப் பக்கத்திலே வெச்சிண்டிருக் கிறதாக நெனச்சேனே! எப்படி என்னை ஏமாற்றிவிட்டு ஓடினே? பேலூர் மடம் என்கிறதே நீதானே? உன் சக்தியும் பக்தியும் புத்தியுந்தானே அந்த மடத்தை நடத்திண்டு இருந்தது? அதை விட்டுட்டு எங்கே போனே?'' என்று தேவி கதறினாள். ராமகிருஷ்ணரின் படத்தில் தலையை முட்டிக் கொண்டு, ''டாகுர்! அவனையும் எங்கிட்டே இருந்து பறிச்சுண்டுட்டேளே!'' என்று புலம்பினாள்.

அம்மாவுக்கு உலக வாழ்க்கை அடியோடு வெறுத்துப் போக அப்போதும் விடவில்லை ராமகிருஷ்ணர். யோகமாயையை முடுக்கிவிட்டார். ராது என்கிற ராதாராணிக்கு அம்மாவின் தேவை மிக அவசியமாகிவிட்டது!

'**வி**ரை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா?' என்பது பொது வழக்கு: வாஸ்தவந்தான்; எப்பேர்ப்பட்ட அற்புத ரசாயன உரமிட்டு வளர்த்தாலும் சுரை விதையிலிருந்து சுரைக்காய்தான் தோன்றுமே தவிர ஆப்பிள் பழுக்காது. அடி

நாளிலிருந்தே அம்மா ராதுவை எடுத்து வளர்த்தாலும் அவள் ஸுரபாலாவின் ரத்தத்தில் ஊறிப் பிறந்தவள்தானே? ராது அம்மாவின் திவ்விய குணங்களை எடுத்துக்கொள்ளாமல் ஸுர பாலாவின் அசுர அம்சங்களை ஸ்வீகரித்துக்கொண்டாள்.

சுரை விதை போட்டாலும்கூட அதை ஆப்பிளாக மாற்றும் அருந்திறன் அம்மாவுக்கு இல்லாமலில்லை. அவரவரும் இயற்கையான பாரம்பரிய குணங்களோடு மாற்ற முடியாமலே இருப்பார்கள் எனில், மக்களை நல்வழிப்படுத்த அவதாரங்கள் நிகழவேண்டியதே இல்லை. எத்தனையோ குணம் கெட்டவர்களை அம்மா மேம்படுத்தியிருக்கிறாள்; தீயவர்களைத் தூயவராக்கி இருக்கிறாள்: பாவிகளைப் பாவனராக்கியிருக்கிறாள்.

ராதுவை ஏன் மாற்ற முடியவில்லை? அது பராசக்தியின் சித்தம் போலும்! உலகில் பிடிப்புக்கொள்ளச் செய்யவே யோகமாயா சக்தி ராதுவாக வந்தது. ராது உத்தமப் பெண்ணாக இருந்து அம்மாவின் அன்பைப் பெறுவதைவிட, அவள் குணஹீனையாக இருந்து, அப்படியும் அம்மாவின் ஈடு பாட்டைப் பெற்றாலே சாரதையின் சரிதம் உலகுக்கு வழி காட்டுவதில் சிறப்புக்கொள்ளும் என்பது திவ்விய சங்கற்ப மாயிருந்தது போலும்! மாற்றவொண்ணாத அடங்காப்பிடாரி யாக ராது இருக்கவேண்டும் என்பதும் அவதார மகிமைக்கு மெருகு தரும் ஓர் அம்சமாகப் பராசக்தியால் நிர்ணயிக்கப் பட்டிருப்பின், அவளை அம்மா எப்படி மாற்றி நல்வழிப்படுத்த முடியும்?

குணக்குன்றாகிய அம்மாவின் கன்றாக வளர்ந்த ராது குணம் குன்றியவளாகவே நாளுக்கு நாள் பரிணமித்தாள். குணம் போனதால் ஏற்பட்ட ஆத்திர அதிர்வுகளில் உடல் நலமும் மோசமாயிற்று. உடல் மோசமான பலவீனத்தால் துர்க்குணம் மேலும் வளர்ந்தது. இப்படியே உடல் வியாதியும் குணஹீனமும் ஒன்றையொன்று தொடரும் விஷச்சுருளாக இருந்தன. இந்த விஷஜ்வாலையின் தாக்குதல் முழுவதற்கும் அம்மாவே ஆளானாள். ராதுவை ஆளாக்கப் பூரணப் பொறுப்பு மேற்கொண்ட அம்மாவே, அவளது விபரீத பரிணாம விளைவுகளை ஏற்றுக்கொண்டதும் ஒரு விதத்தில் நியாயந்தான்!

தாயின் புத்திக்கோளாறு புத்திரிக்கும் வந்துவிடப் போகிறதே என்று அம்மா பயந்துகொண்டிருந்த சமயத்தில் ராதுவின் உதரத்தில் இன்னோர் உயிர் வந்து கனத்தது. அவ்வளவுதான்! 'ஏற்கெனவே துர்க்குணி, அதிலும் கர்ப்பிணி என்பார்களே' அது நூற்றுக்கு நூறு மெய்யாயிற்று. ராது

நிமிஷத்துக்கொரு சித்தமாக, அம்மாவைப் பாடாகப் படுத்திப் பம்பரமாகச் சுழற்றிக்கொண் டிருந்தாள். 'விதியே!' என்று அம்மாவும் வியத்தகு பொறுமையுடன் ஈடுகொடுத்து வந்தாள்.

கணக்கற்ற கணைகளால் ராதுவும், பிச்சிமாமியும் அம்மாவைத் துளைத்தெடுத்துக்கொண் டிருந்த இந்த அழகான சந்தர்ப்பத்தில் அம்மாவை மலர் தூவிப் பூஜிப்பதற்காகப் பலர் வந்தனர்! இந்த இருவேறு துருவங்களை அம்மா அநாயாசமாக இணைத்தது உண்டே, அடடா!

துர்கா பூஜையின்போது நிகழும் மகா அஷ்டமி. அம்மாவையே அம்பிகையாகக் கருதிப் புஷ்பாஞ்சலி செலுத்திப் போக ஏராளமானவர் வந்தனர். அவர்கள் வரிசையாக வந்து அம்மாவின் திருவடிகளில் தாமரை மலர்களையும், வாசனைப் பத்திரங்களையும் பொழிந்து, ஆசிபெற்றுச் சென்றனர். பல பெண்கள் காளிகாட்டில் உள்ள மஹாகாளிக்குச் செய்வது போலவே அம்மாவுக்குப் புது வஸ்திரமும் போர்த்திப் போற்றினர். அம்மா குடும்பத்தொல்லை எதனாலும் தீண்டப் படாமல் காருண்ய நிர்மலமாக அமர்ந்திருந்தாள்.

குழந்தை நேதா வந்தான், சிறிய கை வழிய வழியச் குலஞ்ச மலர்களுடன்.

புஷ்பங்களை அம்மாவிடம் நீட்டி, "சீதாப்பாட்டி! இந்தப் பூவை எல்லாம் யார் இப்படிச் செக்கச் செவேல்னு கலர் குடுத்து வைச்சிருக்கா?" என்று கேட்டான் நேதா.

"உன்னோட தாத்தா டாகுர்தான்" என்றாள் அம்மா, நேதாவின் சிரத்தை வருடியவாறு.

"ஏன் சேப்புக் கலர் குடுத்தார்?"

"சேப்புப் பூ அவருக்கு ரொம்பப் பிடிக்கும். தனக்குப் பிடிக்கிற கலர்ங்கிறதாலே குலஞ்சத்தைச் சேப்பாப் பண்ணினார்."

"தாத்தாவுக்குச் சேப்புப் பூ பிடிக்குமா?" என்று கேட்டுக் கொண்டே செம்மலர்களை அம்மாவின் மலரடிகளில் கொட்டியது குழந்தை. தாத்தா - பாட்டியின் ஏகபாவத்தை அவன் அறிந்திருந்தானா, என்ன?

"இந்த மாமாகூட சேப்பா இருக்கிறதாலேதான் நோக்கு ரொம்பப் பிடிக்கிறதா?" என்று சாரதாநந்தரைக் காட்டிக் கேட்டான் நேதா.

அம்மா விழுந்து விழுந்து சிரித்தாள்.

சாரதாநந்தரை, "சேப்பு மாமா" என்றே அழைப்பான் நேதா. அவர் டெஸ்கில் எழுதுவது போலவே தானும் நடித்துக் காட்டி, "நான்தான் சேப்பு மாமா" என்பான். இரண்டு வயசுப் பிள்ளைக்கு என்ன எழுத வரும்? ஆயினும் அவன் 'எழுதும்' பாவனை மிகப் பாங்காக, தத்ரூபமாக இருக்கும்.

"என்ன கண்ணு எழுதறே?" என்று ஒரு நாள் அம்மா கேட்டாள்.

"சேப்பு மாமாவுக்குக் கடிதாசு எழுதறேன்." அப்போது சாரதாநந்தர் எங்கோ வெளியூர் சென்றிருந்தார்.

"என்ன சங்கதி எழுதறே?"

"இன்னிக்குக்கூட சீதாப்பாட்டிக்கு ரொம்பப் பேர் பூஜை பண்ணினான்னு எழுதறேன்."

நேதாவின் புத்திசாலித்தனத்தை வியந்த அம்மா, "இந்தப் பிள்ளை தீர்க்காயுஸா இருக்கணுமே" என்றாள். ஏனோ சொல் தடைப்பட்டது!

இப்போதெல்லாம் ராதுவுக்குச் சிறிய சத்தமும் தாங்குவதில்லை. தெருவில் வண்டி ஓடினால் வீட்டுக்குள்ளே இருக்கும் இவளுடைய இதயம் சம்மட்டியாக அடித்துக்கொள்கிறது. இத்தனை பலவீனத்திலும் பிடிவாதம்மட்டும் இரும்புத் தூண் போல் உறுதியாக இருக்கிறது. பேறுக்காலத்தின்போது அவள் வைத்திய வசதி மிகுந்த கல்கத்தாவில் இருப்பதே உசிதம் என அம்மாவும் மற்ற பெரியோர்களும் கருதினர். அவளோ உத்போதன் இரைச்சல் தன் உயிரையே குடிக்கிறது என்று முரண்டு செய்தாள். எனவே பேலூர் மடத்தருகே அமைதியான சூழலில் அம்மாவுக்கும் ராதுவுக்கும் ஒரு வசதியான ஜாகை அமர்த்தப்பட்டது. அங்கே பெயர இருந்த சமயத்தில் ராது முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டாள். "நான் அங்கே வர முடியாது. அங்கேயும் அமைதியாக இருக்காது. பக்கத்திலேயே உங்க மடத்திலே ஓயாமல் மணி அடிச்சுண்டும், சங்கு ஊதிண்டும், தாம்தூம்னு தபலா தட்டிண்டும் அமர்க்களப்படுத்துவா. கங்கையிலே வேறே ஸ்டீமர் கூவிண்டு போகும். அங்கே போனால் எனக்குச் சாவுதான்" என்று திருவாய் மலர்ந்தாள்.

அம்மாவைப் போலவே அவளது பசங்களும் ராதுவின் அடங்காப்பிடாரித்தனத்தைப் பொறுத்துக்கொண்டதுதான் அதிசயம். 'ஆனைப்பட்ட அம்மா மாட்டிக்கொண்டு தவிக்கும் போது, நாம் எம்மாத்திரம்? இப்போதுதான் நாம் முன்னிலும்

அம்மாவுக்கு இதமாக இருக்கவேண்டும்' என்பதொன்றே அவளது பிள்ளைகளின் லட்சியமாக இருந்தது.

எனவே அவர்கள் பேலூர் மாற்றத்தைக் கைவிட்டு விட்டு, நிவேதிதைப் பள்ளியில் இடம் ஒழித்து வைத்தனர். அம்மாவும் ராதுவும் அங்கு ஓர் இரவு வாசம் செய்தனர்.

மறுநாள் காலை. பேலூர் மடத்திலிருந்து ஸ்வாமி சிவா நந்தரும் பிரம்மசாரி வரதனும் வந்தனர். அம்மா அவர்கள் முன் தலைகுனிந்து நின்ருள். ''குழந்தைகளா! சங்கட சமுத் திரத்திலே முழுகிண்டு இருக்கேன். அந்தப் பொண்ணுக்கு இங்கேயும் இருப்பாக இல்லை. அதென்னதான் உடம்போ, எனக்குப் புரியலை. டாகுர்தான் ரட்சிக்கணும். இன்னும் எதிர் காலத்தில் என்னவெல்லாம் இருக்கோ, தெரியலை'' என்று அரற்றினுள்.

'அருள் ஞானம் பெற்ருேர்க்(கு) அநந்தம் விழி' என்ற முதுமொழிகேற்ப, அடியார் பலரது திரிகாலமும் கண்டு விளை தீர்த்த தேவி, தனக்கு எதிர்காலம் என்னவோ என்று தடுமாறி ளுள்! அதுதான் மகாமாயாப் பிரபாவம்!

ராதுவின் விருப்பப்படி ஜயராம்பாடிக்குப் புறப்பட்டாள் அம்மா.

வழியில் விஷ்ணுபுரில் அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்கு உரியவர், ஒரு பிரபல சோதிடரை அறிமுகப்படுத்தினுர். உடனே எல்லாருக்கும் சபலம் தட்டியது. ராதுவின் ஜாதகம் அவரிடம் காட்டப்பட்டது. ''கஷ்டப் பிரசவம்தான் ஆகும்'' என்று அவர் 'அருள்வாக்கு' நல்கினுர்.

ராதுவின் 'போட்டி'யான மற்ருெரு மருமாள் மாகு தன் ஜாதகத்தைக் காட்டினுள். அவ வாக்குச் சோதிடர் அவளிடம், ''உன் குழந்தைகளில் ஒண்ணு இன்னொண்ணைப் பார்க்காது!'' என்ருர்.

எல்லோருக்கும் எப்படி இருக்கும்? மாகுவின் முதற் குழந்தை நேதா அனைவருக்கும் செல்லம். இப்போது மாகுவும் (ராதுவிடம் போட்டியிலோ என்னவோ) கருத்தரித்திருந்தாள். இந்தப் பிரசவத்துக்குள் நேதாவுக்கு......?

அம்மாவே கதிகலங்கினுள். தன் குடும்ப விஷயத்தில் தீர்க்க திருஷ்டியை அவள் பிரயோகிப்பதில்லை. 'ஊருக்கெல் லாம் ஒளி தரும் சந்திரன் தன்னிடமுள்ள களங்கத்துக்கு ஒளி தந்து கொள்ளாததுபோல், மகாபுருஷர்கள் பிறருக்குச்

செய்கிற அருளைத் தங்களுக்கே செய்துகொள்ள மாட்டார்கள்' என்றொரு சுபாஷிதம் உண்டு. அம்மா அப்படித்தான் இருந்தாள்.

சோதிடரின் யோசனைப்படி நேதாவுக்காக ஏதேதோ சாந்திகள் செய்தனர். ஆனால் அம்மாவின் மனம் சாந்தி அடையவில்லை.

விஷ்ணுபுரிவிருந்து கூட்டுவண்டியில் பயணம் தொடங்கியது. வழியில் சாலையோரத்தில் சமையல் செய்யப்பட்டது. அன்னம் நன்கு பக்குவமாகி, கீழே இறக்கவிருந்த தருணத்தில் பானை படாரென்று வெடித்தது. இந்தப் பெரிய அபசகுனத்தில் அனைவரும் துணுக்குற்றனர். 'ஈசுவர சித்தப்படி நடக்கும்' என்று சொல்லிக்கொண்டு அம்மா தனக்கே உரிய அமைதியில் ஆழ்ந்தாள். நாற்புறமும் சிதறியிருந்த அன்னத்தில் மண்படாத பாகங்களாகச் சிறிதளவைச் சேகரித்தாள். அவற்றை ஓர் இலையில் இட்டு, ஏதோ ஒரு 'நிகா'வில் ஆட்டினாள். அதிலிருந்து கஞ்சி தனியாகப் பிரிந்து வடிந்தது. அம்மா கைகழுவிக் கொண்டு, பெட்டியிலிருந்து டாகுரின் சித்திரத்தை எடுத்து வெளியே வைத்தாள். இலையில் முளை முளையாக முழித்துக் கொண்டிருந்த அன்னத்தை அவர் முன் வைத்தாள். அதன்மீது பருப்புக்கூட்டை ஊற்றினாள். கைகுவித்து, ''ஸ்வாமீ! இன்னிக்கு இப்படித்தான்னு விதிச்சிருக்கேளாக்கும்! ரொம்ப சரி! ஆறிப் போகிறத்துக்குள்ளேயாவது அமுது பண்ணுங்கோ'' என்றாள்.

அவர் எப்படி விதித்தாலும் அதை முகம் கோணாமல் ஏற்றுக்கொண்ட அம்மா ஆயிற்றே!

அம்மா கோஷ்டியினர் அடுத்தபடியாகத் தங்கியது கோயால்பாரா ஆசிரமத்திலாகும். காட்டை அடுத்த அப்பகுதி மிகவும் அமைதியாக இருந்தது. அமளிதுமளி செய்யும் தேவி ராதாராணியும் இங்கு சற்றே அமைதியாக இருந்தாள்.

''அம்மா! சந்தடி இல்லாமல் இந்த இடம் ரொம்ப சௌக்கியமா இருக்கு. நாம் ஜயராம்பாடிக்குப் போகவேண்டாம். இங்கேயே இருந்துடலாம். பிரஸவமும் இங்கேயே வைச்சுண்டுடலாம்'' என்றாள் ராது.

''அப்படியே'' என்றாள் வளைத்தபடி எல்லாம் வளைந்து கொடுத்த சாரதாதேவி.

கரடி உள்ளிட்ட வனவிலங்குகள் சஞ்சரிக்கும் கோயால்பாராவில், பிரம்மசாரிகள் வரதனையும் ராஜேனையும் துணை வைத்துக்கொண்டனர். எல்லையற்ற தொல்லையிடையும் இச்சா

மாத்திரத்தில் அமைதி பூக்கும் தேவி, இப்போது ஏனோ இந்த அமைதியிடையும் இனம் தெரியா அச்சத்தில் கலங்கினாள்: ''உள்ளூற வெதுக்கு வெதுக்குன்னு இருக்கு'' என்று வரதனிடம் கூறினாள். அடிக்கடி நேதாவைக் கூப்பிட்டுத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

நேதாவின் அம்மா மாகுவுக்கு, ராதுவைக் கவனிக்கிற அளவுக்கு அத்தை தன்னை லட்சியம் செய்யவில்லை என்ற எண்ணம் அதிகரிக்கலாயிற்று. இந்தத் துர் எண்ணத்துக்குத் தூபம் போட்டாள் அக்காள் நளினி.

இந்தச் சிறிய பெண்களைக்கூட அம்மா மதித்து, எத்தனையோ விஷயங்களில் ஆலோசனை கேட்டிருக்கிறாள். உதாரணமாக இம் மூன்று மருமாள்களின் புக்ககங்களுக்கும் ஸங்கிராந்தி முதலிய விசேஷங்களில் சீர் அனுப்புகையில் வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதால் அவர்களையே கலந்துகொண்டு பொருட்களை வாங்குவாள். 'ஒண்ணும் தெரியாத இந்தப் பட்டிக்காட்டுக் குட்டிகளிடம் அம்மா இப்படி யோசனை கேட்கிறாளே' என்று எண்ணிய சிஷ்யரிடம் அம்மா அமரவாசகங்களைச் சொன்னாள்: ''சகலமான பேரையும் நன்றாகக் கவனிச்சு, மதிப்புத் தரணுமப்பா. எல்லார் அபிப்பிராயத்தையும் கேட்டறியணும். இதிலே மற்றவாளுக்குக் கொஞ்சம் அதிகமாகவே சுதந்திரம் தந்து நாம் பின்னாடி ஒதுங்கிண்டு பார்க்கணும். ஏதாவது எக்கச்சக்கமா தப்பு நடந்துட்டா, ஒதுங்கின இடத்திலிருந்து ஓடி வந்து சரி பண்ணணும். நம்மையே தாழ்த்திண்டுகூடப் பிறத்தியாருக்குச் சுதந்திரம் தரணும்.''

பட்சபாதம் என்பது அருகிலேயே வரமுடியாத, தருமத் துலாக் கோலாகிய அம்மா ஒரு நாள் பகலுணவு கொண்டு இளைப்பாறும்போது, நளினியும் மாகுவும் அவளை மாக்கு மாக் கென்று தாக்கினார்கள்.

''இந்த ராதுவுக்கு என்ன உடம்புக்கு? சும்மா மாய்மாலம் பண்றா! அதை வைச்சுண்டு, நீயும் அவளையே சீராட்டிப் பாராட்டிண்டு இருக்கே. அதனாலேயே அவள் பாழாப் போயிண்டிருக்கா. உடனுடத்தவள் மாகுவும் பிள்ளைத்தாச்சிதானே? அவள் தேமேனு இல்லை? ராதுவுக்கு நீ கொடுக்கிற இடம்தான்! உனக்கு ஒரு கண்ணுலே வெண்ணெய்; ஒரு கண்ணுலே சுண்ணாம்பு'' என்று பொரிந்து தள்ளினாள் நளினி.

'எண்ணமில்லார் சொல்லே மிகவும் சுடும்' அன்றோ! நளினியின் அக்கிரமமான குற்றச்சாட்டில் அம்மாவின் நளின உள்ளம் வெந்துவிட்டது. வாயே திறக்காமல் சிலையாக இருந்தாள்.

அம்மா எதற்கும் வாய் திறவாததில் நளினிக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. ஒரு பல்லக்கைக் கொண்டு வந்தாள்.

''ஏ மாகு, மூட்டை முடிச்செல்லாம் எடுத்துப் பல்லக்கிலே வை: வாஞ்சையே இல்லாத இந்த அத்தை கிட்டேயும், பித்துச் சித்தி கிட்டேயும் அவதிப்படறதைவிட, அங்கே அப்பன் வீட்டிலேயே போய் இளையாள்காரிகிட்ட அவதிப்படறது சிலாக்கியம்'' என்று கத்தினுள்.

அம்மா பேசாமல் தான் இருந்த இடத்திலேயே சுருட்டிக் கொண்டாள். அம்மாவுக்கு அறுபத்துநாலு வயசாகிவிட்டது. உண்ட களைப்பும், நேற்று முளைத்த சிறுக்கிகளிடம் வார்த்தை வாங்கிக்கொண்ட வேதனையும் அவள் வாயை அடைத்து அவளைக் கீழே சாய்த்தன.

வாசலிலிருந்து நளினியின் பிளிறல் கேட்டது: ''ஏ சனியனே, மாகு! உனக்கு வெட்கமில்லே? இங்கே அலட்சியத்துக்கு ஆளாயிண்டேதான் கிடக்கப்போறியா? 'ஏன் போறேள்?'னு ஒரு வார்த்தை கேட்காதார் வீட்டிலேயே தண்டச் சோறு தின்னுண்டு கிடக்கப்போறியா என்ன?''

விசுக் விசுக் என்று மாகு வாசலுக்குப் போகும் ஓசை கேட்டது. அதைவிடப் பரிதாபம், ''பாட்டி, பாட்டி'' என்று கதறும் நேதாவையும் அவள் கரகரவென்று இழுத்துப் போனுள்!

பிற்பகலில் கடிதங்களுடன் வந்த பிரம்மசாரி வரதனிடம் அம்மா, ''என் மகனே பரது! இப்போ நீங்களெல்லாம் எனக்குச் செஞ்சு தந்திருக்கிற வசதியிலே நூற்றில் ஒரு பங்கு தட்சிணேசுவரத்தில் கிடைக்காது, அப்போ நான் உழைச்ச உழைப்பும் சொல்லி முடியாது. ஆனுல் அந்தப் பிரபுவின் பிரேமையில், எனக்கு ஒரு குறை தெரியலேடா, கண்ணு! இப்போ நான் படற அவஸ்தை தாளலேடா! இந்த மருமாள்களுக்காக என் பொழுது, பணம், தேக பலம் எல்லாம் வீணுறது போருதுன்னு, என் ஜபத்தையும், தபத்தையுங்கூடப் பாழாக்கிக்க வேண்டியிருக்கு. அந்தப் பெண்கள் ரொம்பப் பேசிட்டா அப்பனே! எனக்கு அதையெல்லாம் பற்றிக்கூட இல்லே. என் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணுமல் குழந்தை நேதா ஓரிடத்துக்கும் போகாது. அதைக்கூடத் தடுத்து இழுத்துண்டு போனுளே மாகு! யார் தலையிலே எப்படி எழுதியிருக்கோ, அப்படித்தானே நடக்கும்? நான் என்ன பண்ணலாம்!'' என்றெல்லாம் சொல்லி வருந்தினுள்.

அவர்கள் அந்தப் பாடுபடுத்தியும் தினம் அவர்கள் க்ஷேம லாபத்தை வரதன்மூலம் அறிந்து வந்தாள். அம்மாவை அப்படி அபசாரமாகப் பேசியபின் க்ஷேமமும் லாபமும் ஏது? நேதாவுக்கு ஜுரம் வந்தது. அம்மாவுக்கு ராதுவைவிட்டு எப்படிப் போவது என்று புரியவில்லை. இருந்தாலும் டாக்டருக்கு அவளே ஏற்பாடு செய்தாள்.

மறு தினம் எப்படியும் தானே போகவேண்டும் என்று தீர்மானித்தாள் அம்மா. அம்மாவை முந்திக்கொண்டான் காலன். அநுதாபமற்ற சுற்றத்திடை அன்பே உருவாக மூன்றுண்டுகள் அம்மாவை வளைய வந்த மோகன நேதாவை டிஃப்திரியாக் காய்ச்சல் பறித்துக்கொண்டு போய்விட்டது. ஜோஸியர் சொன்னது பலித்துவிட்டது!

கண்களிலிருந்து கண்ணீர் வற்றாத அருவியாக வடிய அம்மா நீண்ட நேரம் அமர்ந்திருந்தாள்.

இரவு டாகுருக்கு நிவேதனம் செய்ய வேண்டுமே! அம்மாவிடம் சொல்வதா, வேண்டாமா என்று தயங்கித் தயங்கி வந்து நின்றான் ஒரு சிடப் பிள்ளை.

''என்னப்பா?'' என்றாள் தேவி.

''டாகுருக்கு....''

அம்மா அமைதியாக எழுந்திருந்தாள். அசாதாரணமான நிம்மதியுடன் பதிக்கு நிவேதனம் செய்தாள்.

பிறகு தன் அறையில் வந்து முடங்கிக்கொண்டாள்.

சிறிது பொழுதுக்குப் பிறகு அவளுக்கு என்ன தோன்றியதோ, அடுக்களைக்குச் சென்று எட்டிப் பார்த்தாள். அவள் நினைத்தது சரிதான்! அவள் உண்ணாததால் எவருமே உண்ணவில்லை. அங்கே நேதாவை அக்கினிதேவன் உண்டு முடித்தானே இல்லையோ, இங்கே அம்மா மற்றவர்களின் பொருட்டு மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு, ஓர் அப்பத்தை விண்டு வாயில் போட்டுக்கொண்டாள். 'இருக்கிறவர் க்ஷேமமாக இருக்கட்டும்' என்றெண்ணி ஒரு வாய்ப் பாலைப் பருகினாள். அதன் பின் மற்றவர்கள் உணவு கொண்டனர்.

அன்னபூர்ணியாகப் பிறருக்கு வழங்குவதைவிட, தனக்கே அன்னம் பாலித்துக் கொள்வதிலுள்ள மஹாத் தியாகத்தை அன்று அம்மா செய்துவிட்டாள்!

47. உறவினரிடையே துறவிராணி

கேடும் பெருக்கமும் இல் அல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்(கு) அணி:

—திருக்குறள்

ஒரு குடும்பம் என்றால் அதில் வாழ்வு தாழ்வுகள் வந்து கொண்டுதான் இருக்கும். அம்மாவின் குடும்பம் பெரிது. அதில் எத்தனையோ கோளாறுகள், துயரங்கள். நல்லது என்று விசேஷமாக ஏதுமே அந்தக் குடும்பத்தில் நடந்ததில்லை. தொல்லைகளும் வேதனைகளுமே அதிகம் இருந்தன. அம்மா அவற்றில் அலைப்புண்டதாக அவ்வப்போது தோன்றினாலும், அந்த அலைகள் அதிசய வேகத்தில் அமுங்கியே போய்விடும்.

"அவதார புருஷர்களுக்கும் அவ்வப்போது துக்கம் வரும், கோபம் வரும். மற்ற மனுஷ்யர்களுக்கு வழி காட்டவே இவை அவர்களுக்கும் ஏற்படும். ஆனால் இந்த உணர்ச்சி ஆட்டங்களை அவர்கள் இச்சா மாத்திரத்தில் போக்கிக்கொண்டு விடுவார்கள்''

என்று நமது பூஜ்ய ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்கள் அருளியிருப்பதற்கு அருஞ்சான்றாக அமைந்தது சாரதையின் சரிதை.

நேதாவைப்பற்றி நெஞ்சு குமுறி அடிக்கடி பேசுவாள் அம்மா. ஆனால் உடனுக்குடனேயே அந்தக் குமுறல் அடியோடு அடங்கிப் போய்விடும். ஏதுமே நடக்காததுபோல் நிச்சலனமாகி விடுவாள்.

''அந்தப் பிள்ளை, பூர்வஜன்மாவிலே பெரிய ஆத்மசாதகனாக இருந்தான். துளி கர்மா பாக்கி இருக்கிறபோதே கண்ணை மூடிட்டான். அதைத் தீர்த்துக்கத்தான் மறுபடி வந்து மூணு வருஷம் இந்த மண்ணிலே தங்கி இருந்தான். கர்மா தீர்ந்தது. பகவான் கிட்டே போயிட்டான். நான்தான் எல்லாத்தையும் பார்த்துண்டு குத்துக் கல்லாக இருக்கேன்'' என்று கண்ணீர் வடித்துக் கூறினாள் அம்மா—பூர்வகர்மாவே இல்லாமல் உலகின் துயரங்களுக்கு ஈடுகொடுக்க வந்த அம்மா.

இந்தத் துயர நிலையில் அம்மாவைக் கண்ட ஓர் அடியார், ''மாதாஜி! உங்களைப் போன்ற மகாத்மாவுக்கே இவ்வளவு மன

நோவு உண்டாறதிலிருந்து, சாமானிய ஜனங்களுக்கு ஏற்படுகிற புத்திரசோகம் முதலானதுகள் எத்தனை வலுவாயிருக்கும்னு ஊகிச்சுப் பாருங்கோ'' என்றார்.

''சாமானிய ஜனங்கள்'' என்பதாக மற்றவர்களை அவர் தம்மிடமிருந்து பிரித்துப் பேசியது அம்மாவுக்கு ஏற்கவில்லை. தானும் அசாமானிய மகாத்மா இல்லை என்று அவருக்கு உணர்த்த விரும்பி, ''மகனே! லோக ஜனங்களோட சோக பாரம் எனக்கு இப்போதான் தெரியணுமா என்ன? என்னென்னிக்கும் நானும் அவாளில் ஒருத்தியாகத்தான் இருந்துண்டிருக்கேன்'' என்று கூறினாள்.

ராதுவை உத்தேசித்து அம்மா கோயால்பராவிலேயே தங்கியிருக்க நேர்ந்தது. பக்கத்திலேயே ஜயராம்பாடி இருந்ததால் அவளது சகோதரர்கள் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தனர். அதாவது, அம்மாவுக்கு அந்த அமைதிச் சூழலிலும் நிம்மதி இல்லை. கல்கத்தா போன்ற ஒரு மாநகரில் ஏராளமான பக்தர் கூட்டத்திடை வாழ்வதைவிட, கிராமப்புறத்தில் 'சொந்த' மநுஷ்யர்களுடன் வாழ்வதுதானே நிம்மதி எனத் தோன்றலாம். ஆனால் அம்மாவின் விஷயத்திலோ 'வெளி' மனிதர்களும், 'வீட்டு' மனிதர்களும் இருந்த விதம் உலகம் காணாத விசித்திரம்! அவளை ஏனையோர் பக்தியுடன் பணிந்து அன்பு பொழிந்தபோது, வீட்டுமனிதர்கள் சில்லறைத் தொந்தரவாலும் பெரிய தொல்லைகளாலும் வதைத்தெடுத்தனர்.

வண்டுகள் எத்தனைதான் மொய்த்தாலும் கமலமலர் புத்தம் புதிதாகவே விளங்குகிறது; ஒரே ஒரு வெட்டுக்கிளி வந்துவிட்டாலும் அது தன் அழகைப் பறிகொடுத்து விடுகிறதல்லவா? அம்மாவிடம் பெருகும் கருணைத் தேனையே பக்தர் குழாம் பருகியது; அவளது 'திவ்வியமான' சகோதரர்களோ அவள் இதழ்களைக் கத்தரிக்கிற வெட்டுக்கிளிகளாக இருந்தனர். 'மாறில் உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்' என்றாள் அவ்வைப் பாட்டி. இவளுக்குத் திருவள்ளுவர் உடன் பிறப்பு என்று ஐதிஹ்யம். அதனால் அப்படிச் சொல்லியிருக்கலாம். அதில் வெகு ரஸமாக முதலிலேயே 'மாறில்' என்று அடைமொழி போட்டாள்! அம்மாவின் சகோதரர்களோ அவளுக்கு முற்றிலும் மாறுபாடான மனம் படைத்தவர்களாயிற்றே! குழந்தைப் பருவத்திலிருந்து அவர்களுக்காக உழைத்தே அம்மா உடம்பு பாழானாள்.

அம்மாவின் இரண்டாவது தம்பி காளிகுமார். ''கேளே'' என்று அவரை வீட்டார் அழைப்பர். 'காளி' என்று ஊரார்

அழைப்பதற்கேற்ப பயங்கர உருவம் கொண்ட அவரது மனத்தில் எத்தனையோ கோணல்கள். மரித்துவிட்ட தம்பி அபயனின் குடும்பமும், இரண்டாம் தாரம் கட்டிவிட்ட அண்ணன் பிரஸன்னனின் மூத்தாள் பெண்களும் அம்மாவுடனேயே வாசம் செய்வதில் இவருக்கு உள்ளூற அருயை. எனவே தம் வீட்டைவிட்டு இவர் அடிக்கடி அம்மாவின் இல்லத்துக்கே வந்து உண்பார். அவர் எப்போது வந்தாலும் அம்மா வெள்ளையப்பனை அவரிடம் உருட்டிவிடும்படி இருக்கும். ஓயாத தரித்திரப் புலம்பல். புலம்பல் தீனமாகவும் வராது; நிஷ்டுரமாகவே வரும். அம்மா எத்தனை கொடுத்தும் அவருக்குத் திருப்தியோ நன்றியோ உண்டாகவில்லை.

இத்தனை காலமாகப் பணம் ஒன்றுக்குமட்டும் வந்து கொண்டிருந்த காளி, இப்போது மற்ற விஷயங்களிலும் தலையிடலானார். அம்மாவின் இல்லத்தில் பிராம்மணரல்லாதாரின் தொடர்பு அதிகம் இருப்பதாக ஊரில் சிறிது 'கசமுச' பேச்சு ஏற்பட்டதால், காளியும் இவ்விஷயத்துக்காக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் அம்மாவிடம் தனுக்காகப் பேச ஆரம்பித்தார். ''ஆஹா! உன்னைத் தேடிண்டு பக்தாள் வந்தபடி இருக்கா. நீயும் அவாளுக்குச் சாப்பாடு போடறதுன்னு ஒரு வழக்கத்தை வைச்சுண்டுட்டே. ஆனாலும் நீ முன் மாதிரி பாலியமா? இன்னமும் பழைய மாதிரியே நீ உழைக்க முடியுமா? சமையலுக்கு ஒரு மாமியைமட்டும் வைச்சுண்டு, நீதான் ஓடாகத் தேய்ஞ்சுண்டு காரியம் செய்கிறே. இன்னொரு ஆண் பிள்ளையும் நல்ல பிராம்மண சமையல்காரனுக ஒருத்தனும் போட்டுக்கோயேன், அக்கா. உனக்கு ஓய்வு கிடைக்கும்'' என்று ஆரம்பித்தார்.

புத்திசாலினியாகிய அம்மாவுக்கா அவர் பொடி வைத்துப் பேசுவது புரியாமற் போகும்? ''கேளே! நீ சொல்கிறதன் உள்ளர்த்தம் எனக்குப் புரியறது. இப்போ இங்கே சமையல் காரியத்துக்கு ஆள் போதாமல், நான் என் அப்பிராம்மண சிஷ்யாளையும் அந்த வேலையில் விட்டிருக்கேன்னு உனக்கு சந்தேகம். அப்படித்தானே? வாஸ்தவத்திலேயே அந்தப் பசங்கள் காய்கறி நறுக்கறது, தயிர் சிலுப்பறது இத்தியாதி காரியங்கள் பண்ணிண்டுதான் இருக்குகள். ஆனல் ஊரார் அபிப்பிராயத்தை மதிச்சு இவாளை நேராக நான் அடுப்படி வேலைக்கு விடறதேயில்லே. இதோ பார் கேளே, தீர்மானமாகச் சொல்றேன்: இதையே தொடர்ந்து பண்ணுகிறதாகத்தான் எனக்கு உத்தேசம். புதிசா ஆண்பிள்ளை சமையல்காரன் போட்டுக்கிறதுக்கு

எனக்கு வசதியில்லே. அதோடு, இங்கே பெண்டுகள் நடமாட்டம் ஜாஸ்தி. ஆண்பிள்ளே வேலே செய்யறது பொருந்தாது; இந்தப் பசங்கள் இருக்காளேன்னு கேட்கலாம். இவாள் எல்லாம் என் பெண்களுக்குச் சமமானவா'' என்ருள் அம்மா.

அம்மாவுக்குத் தன் பிள்ளேகளிடம் அத்துணே உயர்வான அபிப்பிராயம் இருந்தபோது, தாம் மேலே பேசிப் பயனில்லே என்று காளி வாயை மூடிக்கொண்டார்.

காளியைப் போல மூத்த தம்பி பிரஸன்னகுமார் அதிகம் பட்டுக் கொள்ளமாட்டார். ஆனல் இது நல்ல சுபாவத்தில் பிறந்த போக்கு அல்ல.

''எனக்கு எங்கே சாதுரியமும், காரியம் சாதிச்சுக்கிற சூரத்தனமும் இருக்கு? அவனே அக்காகிட்டேயிருந்து எல்லாத்தையும் சுருட்டிக்கட்டும், நான் ஏமாந்தவனுகவே நிற்கிறேன்'' என்று மாளாத குறைப்பட்டுக்கொண்டு, சற்றே விலகி இருந்தார் இவர். இவரது பெண்கள் நளினிக்கும் மாகுவுக்கும் அம்மாவேதான் பொறுப்பு எடுத்துக்கொண்டு சம்ரட்சித்து வந்தபோதிலும் இப்படிக் குறை சொன்னுர்!

பிரஸன்னர் கல்கத்தாவில் புரோஹிதத் தொழில் மேற்கொள்ளச் சென்றபோது அம்மாவிடம், ''வயசுக் காலத்தில் நான் கிராமத்தை விட்டுப் பட்டணத்துக்கு உழைச்சுக் கொட்டப் போறேன். இனிமேலே கேளேக்கு கொண்டாட்டம்தான். குந்தின இடத்திலே பெரிய மனுஷ்யாள் ஆதரவிலே சௌக்கியமாக இருக்கலாம். நான் ஒய்வு எடுத்துக்கிற வயசுலே வீடு வீடா ஏறிண்டு திண்டாடப் போறேன்'' என்ருர்.

இதைக் கேட்டுவிட்ட காளி, ''வயசாகிறது வாஸ்தவம்; பின்னே ஏன் இரண்டாம் கலியாணம் பண்ணிண்டு பால சம்ஸாரத்தைப் பெருக்கிக்கணும்? வினே விதைச்சவன் வினே அறுத்துத்தான் ஆகணும். அக்கா! தன் பட்டாளம் முழுதையும் உன் காலிலே கட்டிட்டு, அது போருதுன்னு கல்கத்தாவில் இடம் பார்த்து அமருகிறதற்கு உன்னிடம் 'தட்சிணே' தண்டிண்டு போகத்தான் அண்ணுர் வந்திருக்கார்'' என்ருர் வெடிப்பாக.

அண்ணன் தம்பிகளுக்குள் காரசாரமாக, ரஸாபாஸமாகப் பேச்சு தடித்தது. முடிவில், ''அடேய் காளி! அக்காவைப் பிடுங்கி எடுக்கிறவன் நான் இல்லேயடா! நான் அவளுக்கு முதல் தம்பி. பிற்பட்டுப் பிறந்தவன்தான் நீ! உனக்கு அவள் மகிமை தெரியாது'' என்ருர் பிரஸன்னர். இப்படிச் சொன்ன

தால் சாரதையின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடித்து விட்டதாக அவருக்கு எண்ணம்.

தேவியையா ஏமாற்ற முடியும்?

அவள் தன் சிஷ்யப்பிள்ளைகளிடம் சிரித்துக்கொண்டே கூறினள்: "என் தம்பிகள் எப்பேர்ப்பட்ட நவரத்தினங்கள் பார்த்தேளா? இவாள் ஜன்மாந்தரத்திலே தங்களுடைய தலையையே வெட்டி ஹோம குண்டத்திலே போட்டுத் தபஸ் பண்ணியிருப்பாளோ, என்னவோ? இல்லாட்டா நான் ஏன் இந்தக் குடும்பத்திலே வந்து பிறக்கணும்?" வேடிக்கைபோல் சிரித்துப் பேசினலும் அவள் குரலில் ஓர் ஆழம் இருந்தது!

பிரஸன்னருக்குக் கல்கத்தாவில் பல பெரிய மனிதர்கள் வீட்டில் பௌரோஹித்தியம் கிடைத்தது. பணமாகவும் பண்டமாகவும் நிறையச் சேர்த்தார். அப்படியிருந்தும் ஜயராம்பாடியில் வீட்டுச் செலவுக்குத் தாம் பொருள் அனுப்பாமல், அவர்கள் அம்மாவையே பிடுங்கி எடுக்கும்படி விட்டிருந்தார். இந்த முறையின்மை தர்ம வடிவான அம்மாவுக்கு அடுக்கவே இல்லை. பிரஸன்னரின் இரண்டாவது மனைவி ஸுவாஸினி தேவி அம்மாவுக்கு மிகவும் பிரியமானவள் எனினும் அவளிடமே அம்மா இவ்விஷயமாக ஒளிவின்றிக் கடிந்துகொண்டாள். உத்தமியான ஸுவாஸினி ஒரு முறை கணவர் ஆட்டிவைத்தபடி ஆடி, ஓர் இக்கட்டான நிலையை சிருஷ்டித்துக்கொண்டு அம்மாவிடம் 'தேஹி' என்று வந்தாள். அம்மா இந்த நேர்மைக் குறைவு தாளாமல் நிர்தாட்சிண்யமாகப் பேசினள்: "மகளே! இது துளிக்கூட நியாயமில்லேன்னு உன் அகமுடையானுக்கு எடுத்துச் சொல்லு. அவனுக்கு வரும்படி நிறைய வர்றதுன்னு எனக்கு நன்னுத் தெரியும்: அவன் வருஷாவருஷம் குடும்பத்தைப் பெருக்கிண்டு, என்விக்கோ வர எதிர்காலத்துக்காக மூட்டை கட்டி வைக்கணும்: இங்கே நான் என் பக்தாளை உபத்திரவிச்சு உங்க குடும்பத்துக்குப் பணம் காய்ச்சி மரமாக உதவணும்—நல்ல நியாயம்மா! இதற்கு நான் கண்டிப்பாக இடம் தரப் போறதில்லே, ஆமாம்."

அம்மாவின் கடைக்குட்டி சகோதரர் வரதாப் பிரஸாத் மற்ற இருவரைப்போல் பணத்துக்காகப் பறந்து அம்மாவைப் படுத்தியதில்லை. ஆரம்ப காலத்தில் அவர் கூடிய வரையில் சாதுவாகவே இருந்தார். ஆனல் நாளாவட்டத்தில் மற்ற இருவரும் அக்காளிடமிருந்து பெறுகிற ஆதாயங்களைப் பார்த்துப் பார்த்து இவரும் ஓரளவு போட்டியிட்டார். முரடரான காளி எதையும் சாதித்துக்கொண்டதால் அவரிடம் மனவேற்றுமை

மிகுந்தது. இவ்விரு சோதரருக்குள் எப்போது பார்த்தாலும் அற்பத்தனமான சச்சரவு நடந்தபடி இருக்கும்.

அம்மாவின் கண்ணெதிரில் நடந்த ஒரு சச்சரவைப் பார்ப்போம். வரதாப் பிரஸாத்தின் நெல்வண்டி களத்திலிருந்து வந்துகொண் டிருந்தது. காளிகுமார் தெருவில் ஒரு பகுதியைச் சேர்த்து வேலி போட்டிருந்ததால் வரதரின் வண்டி போவதில் சிரமம் ஏற்பட்டது. "தெருவிலே துராக்கிரகம் பண்ணிண்டிருக்கயே! வேலியை முதலில் பிரி" என்று கூச்சலிட்டார் வரதர். ஆரம்பமே சண்டைதான். பதமாகப் பேசி அவர்களுக்குப் பழக்கம் கிடையாது.

சண்டையில் சண்டப் பிரசண்டரான காளி சும்மா விடுவாரா?

அடிதடிக்கு வந்துவிடும் போல வாக்குவாதம் முற்றியது.

இதை எல்லாம் தன் வீட்டு வாசலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அம்மா ஓடி வந்தாள். இரு தம்பியருக்கும் இடையே புகுந்து நின்றுள்—விழுகிற அடி தன்மீது விழட்டும் என்று!

குணம் கெட்ட அந்த சகோதரர்களின் கையும் கட்டுப் பட்டது. கைவரிசையில் இறங்காமல் இரு தரப்பும் அம்மாவிடம் புகார்ப் பட்டியல்களைப் படிக்க, அம்மா தலை விதியே என்று அதை எல்லாம் கேட்டுக்கொண்டு இருவருக்கும் மாற்றி மாற்றி புத்திமதி சொன்னுள். புத்திமதியைக் கேளாவிடினும் அவர்கள் கைகலப்பின்றி பிரிந்து சென்றுர்கள்.

அம்மா தன் வீட்டுவாசலுக்கு வந்து பழையபடி அமர்ந்தாள். இந்த அமர்க்களத்தின் நிழல்கூட அவள்மீது படிந்திருக்கவில்லை; சிஷ்யப்பிள்ளைகளிடம் சாவதானமாகப் பேச ஆரம்பித்தாள், ஒருவர் இந்தச் சச்சரவைப்பற்றிக் கேட்டார்; அம்மா மென்னகையுடன், "அதுவா? மகாமாயை இருக்காளே, அவ தன் மாயப்பின்னலை எப்படி எல்லாம் பின்னிவைச்சிருக்கா தெரியுமோ? இந்தப் பரந்த லோகத்தையும், இதிலே இருக்கிற சகல ஐசுவரியங்களையும் ஒருநாள் விட்டுட்டுத்தான் போயாகணும். அப்படிப் போகிறவாளைக் கண்முன்னுடி பார்த்துண்டே தான் இருக்கோம். ஆனுலும் இந்த அப்பட்டமான உண்மை மனுஷ்யாளுக்குப் புரியமாட்டேங்கிறதே! என்ன பண்ணலாம்?" என்றுள்.

நேரடியாக அம்மாவிடமிருந்து பணம் பெற்றது போதாது என்று, மறைமுகமாக அவளது மகிமையை துஷ்பிரயோகம்

செய்து காளிகுமார் கொள்ளை லாபம் அடிக்கப்பார்த்தது அவமானகரமாகும். பெங்களூரில் அம்மாவிடம் பக்தி பூண்ட நாராயண அய்யங்கார் என்ற செல்வந்தர் ஜயராம்பாடியைத் தேடி வந்தார். தண்ணீருக்காக அம்மா ஏரிக்குப் போக வேண்டியிருப்பதைப் பார்த்த அய்யங்கார், அவளது வீட்டை அடுத்திருந்த காலிமனையை வாங்கிக் கிணறு எடுத்துத் தர முன் வந்தார். எட்டாத் தொலைவைச் சேர்ந்த அந்த அடியார் தாராள மனத்துடன் இப்பணியை ஏற்றபோது, காலிமனையின் உரிமையாளரான காளிகுமார், ''வாய்த்தது சமயம்'' என்று அதற்கு வெட்கமில்லாமல் ஒரு பெருந்தொகையை விலை கூறினார். அந்தத் தொகையைக் கேட்ட அளவில் அய்யங்காருக்கே கிணற்றில் விழுந்த உணர்வு உண்டாகிவிட்டது! அந்தப் பேச்சை விட்டுவிட்டார்.

பிரம்மசாரி வரதனிடம் பிரமாதமாகப் பிரலாபித்தார் காளி: ''அக்காவோட நாக்கு நனையறத்துக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்யறது சாதாரணமான பாக்கியமா? நாலு காசுக்காக மூக்காலே அழுதுண்டு நாராயண அய்யங்கார் அந்த பாக்யத்தை இழந்துட்டாரே! அக்காமட்டும் செட்டும் கட்டுமாயிருந்தா கிணறு எடுக்கிறதுக்கு யாரையுமே எதிர் பார்க்க வேண்டியதில்லை. அதென்னவோ, அவள் ராதுவுக்கும் மற்றவர்களுக்கும் வாரிக் கொடுத்துண்டு ஓட்டாண்டியாக நிற்கிறாள். பரதா, அம்மாவுக்கு நீ பிரிய சிஷ்யன். எல்லாம் பக்குவமா எடுத்துச் சொல். இந்தக் காளிமாமாவின் கஷ்டங்களையும் விளக்கிச் சொல்லு. ஆஹா! உன் அதிருஷ்டமே அதிருஷ்டம் அப்பா! அக்காவின் மனசறிஞ்சு ஊழியம் செய்கிற மகாபாக்கியசாலியாச்சே!''

அம்மாவின் பிள்ளையான வரதன் இந்த ஐஸ் வைப்புக்கு மயங்கிவிடுவாரா? மரியாதையாகச் சிரித்து, காளிமாமாவிடம் விடைகொண்டார். அவர் கதைத்ததை எல்லாம் அம்மாவிடம் வரதன் சொன்னவுடன் அவள், ''பாரேன்! பணம் என்றால் பித்துக்கும் புத்திவரும்னு சொல்லுவா. என் தம்பிக்கு புத்தியோட பக்தியும் வந்திருக்கு பார்த்தியா?'' என்று கேட்டு நகைத்தாள்.

அம்மா நடத்தும் விழாக்களில் தன் சிஷ்யப் பிள்ளைகளிடமே பணம் கொடுத்துப் பண்டங்கள் வாங்கி வரச் சொல்வதில் காளிக்கு மாளாத குறை. தன்னிடம் பொறுப்புத் தந்து வெள்ளையப்பனைத் தள்ளினால் சந்தடி சாக்கில் தாமும் கொஞ்சம் கந்தகப் பொடி உற்சவம் பண்ணிக்கொள்ளலாமே

என்று அவரது கை அரிக்கும். இந்த ஆதங்கத்தை வைத்துக் கொண்டு, அந்தப் பிள்ளைகளிடம் எரிந்துவிழுந்து, விழா நாட்களிலெல்லாம் கசப்பை உண்டாக்குவார் காளிகுமார். இதைக் கண்டு அம்மா, ''தொலைகிறான்'' என்ற கருணையில் ஒருமுறை தனது ஜயந்தியின்போது பண்டங்கள் வாங்கும் பொறுப்பு முழுவதையும் காளிக்கே தந்தாள். ஆனால் அவருக்கு அது மட்டும் போதவில்லை. விழாவின் மற்ற அம்சங்களிலும் தாம் வைத்ததே சட்டம் என்று ஆரம்பித்து, அந்தப் பிள்ளைகளிடம் சச்சரவிட்டார். அன்று எல்லோரும் உண்டுவிட்டுச் சிரம பரிகாரம் செய்துகொண்டனர். அம்மா உண்ணாமலிருப்பதைப் பார்த்த கோபேஷ் என்ற சிஷ்யப் பிள்ளை, ''ஏனம்மா சாப்பிடாமலிருக்கேள்?'' என்று கேட்டார். ''கேளே சாப்பிடலை'' என்று கண் கலங்கிக் காரணம் கூறினாள். நல்ல நாளில் அம்மாவைக் கலங்க வைத்த கேளேமாமாவை திருச்சாத்துச் சாத்த வேண்டும்போலிருந்தது கோபேஷுக்கு. அம்மாவின் பொருட்டுக் கோபத்தை அடக்கிக்கொண்டு காளியைத் தேடிச் சென்றார்.

ஏற்கனவே காளிக்கு ரௌத்ராகாரமான முகம். இன்று அது மேலும் கோரம் கொட்ட, வைக்கோல் புரிகளை அடுக்கிக் கொண்டிருந்தார். அவரிடம் பேச்சே கொடுக்காமல் கோபேஷ் விருவிருவென்று வைக்கோல் புரிகளை எடுத்துப் போட்டுப் போரை நேர்த்தியாகப் பூர்த்தி செய்தார். ''பேஷடா பயலே! இந்தக் காளியைக்கூட லட்சியம் பண்ணுகிற ஜீவன் ஒண்ணு இருக்கா!'' என்று சிலாகித்தார் காளி. ''என்ன மாமா இப்படிச் சொல்லிவிட்டேள்? உங்களை லட்சியம் பண்ணித் தான் அம்மா இன்னும் சாப்பிடாமல் காத்துண்டிருக்கா'' என்று சமயமறிந்து கூறினார் கோபேஷ். ''அடடா, அக்கா இன்னும் பட்டினியா இருக்காளா? நான் நினைக்கவே இல்லை'' என்று சொல்லிக்கொண்டு சமர்த்துப் பிள்ளையாக வந்தார் காளி. சாரதை ஏதுமே நடக்காததுபோல் அவருக்குப் பரிவு சொட்டப் பரிமாறினாள்.

இன்றைய நிகழ்ச்சி காளிக்கே ஒரு நெகிழ்ச்சி தந்து விட்டது. ''அக்கா, நீ பிறந்த ஸ்தலத்திலே போட்டு வைச்ச கல்லு, குத்துக் கல்லாவே இருக்கு. அங்கே உன் பேரிலே மண்டபம் எழுப்பணும்னு முன்னாடியே சரத் சொல்லிண்டிருந்தாரே! அந்தப் பூமியை எடுத்துக்கச் சொல்லி அவருக்கு எழுதிப் போடு'' என்றார்.

அம்மா பிறந்த வீடு வெகுநாட்களுக்கு முன்பே தரைமட்டமாகிவிட்டது. இப்போது அந்தக் காலிமனை மூன்று சேதார

ருக்கும் சொந்தமாக இருந்தது. இந்த மனையிலிருந்து கொள்ளை லாபம் பெற விரும்பினர் அம்மாவின் திவ்வியமான தம்பிகள். இதனாலேயே சரத்தின் உத்தேசம் இதுவரை காரியமாக உருவெடுக்க முடியவில்லை. இப்போது காளி இறங்கி வருவதைப் பார்த்து அம்மா, சரத்துக்குக் கடிதம் எழுதச் செய்தாள். சாரதாநந்தரும் தருணத்தை நழுவ விடாமல் ஓடோடி வந்தார்.

உடனே காளிக்கு இடைக்காலத்தில் வந்த உதார குணம் பறந்துவிட்டது. அம்மாவிடம் கிசுகிசுத்தார். "அக்கா, நாங்க அவதிப்படறோம். உங்க மடத்துக்காராளுக்கு ஒரு குறைவில்லை. எங்களுக்கு மார்க்கெட் விலைக்கு மேலேயே நாலு காசு தந்தா அவாளுக்கு ஒரு கஷ்டமும் வந்துடாது" என்றார்.

"இப்படி எல்லாம் பேச நான் பிறக்கவில்லை" என்று சொல்லிவிட்டாள் அம்மா.

ஆனால் சாரதாநந்தரோ வந்த காரியம் வீணாக வேண்டாமென்று அந்த அழகுத் தம்பிகளுக்குத் திருப்திகரமாக அம்மாவின் ஜன்மபூமிக்கு விலை கொடுத்து அதை சாஸனம் செய்தார். "மா" என்ற அன்புக் கொடி தாங்கிய ஓர் அழகாலயம் இப்போது அங்கே ஓங்கி நிற்கிறது!

அம்மா தனது தம்பிகளின் மனைவியரிடம் கொண்டிருந்த தொடர்புகளைப் பார்ப்போம்:

அபயனின் மனைவி ஸுரபாலாவிடம் அம்மா பட்ட அவஸ்தையும், அவளுக்காக அம்மா செய்த தியாகங்களும் நாம் அறிந்ததே.

பிரஸன்னகுமாரின் மனைவி ஸுவாஸினிக்கும் அம்மாவுக்குமிடையே தூய அன்பு தழைத்தது. அந்தக் குடும்பத்திலேயே அம்மாவின் அருமை தெரிந்து நடந்துகொண்டவள் ஸுவாஸினிதான். அம்மாவிடமிருந்து வாங்கிக்கொள்ள மட்டுமே அறிந்திருந்த அந்தக் குடும்பத்தில் இவள் ஒருத்திதான் அம்மாவுக்கு பட்சணம் முதலியன செய்து அனுப்பிவைப்பாள். "எனக்குக்கூடப் பிறந்தகத்துச் சீர் வந்திருக்கு, பார்த்தேளா?" என்று அம்மா ஹாஸ்யமாகக் கூறி அதை ஏற்பாள்.

உமியைக் கருக்கி, கர்ப்பூரம், உப்புச் சேர்த்து அருமையான பற்பொடி தயாரித்து அம்மாவுக்குக் கொடுப்பாள் ஸுவாஸினி. எளிதில் பிரீதியடையும் 'ஆசுதோஷி'யான அம்மா அதை வானளாவப் புகழ்வாள். கல்கத்தாவில் அம்மா இருந்த

போதும் ஒரு முறை ஸுவாஸினி பற்பொடி கொடுத்தனுப்பினுள். அடுத்த தடவை அம்மா ஜயராம்பாடிக்கு வந்தவுடன் அவளிடம், ''ஸுபா, எங்களுக்கெல்லாம் விடிஞ்சவுடன் முதல்லே உன் நினைவுதான். முதல் காரியம் பல் தேய்க்கிறது தானே? பல்பொடியைப் பார்த்ததும் அதைப் பண்ணித் தந்த ஸுபா ஞாபகம் வந்துடும்'' என்று சிலாகித்துக் கூறினுள்.

ஸுவாஸினி நேர்மை மிக்கவள். ஒருநாள் அவள் பழங் குப்பைகளை ஒழித்துக்கொண் டிருக்கையில் சற்றும் எதிர்பாராமல் ஒரு கற்றை ரூபாய் நோட்டு கிடைத்தது. எண்ணிப் பார்த்தால் அறுபது ரூபாய் இருந்தது. எங்கிருந்து வந்தது என்று எண்ணிப் பார்த்தாள். எத்தனையோ காலத்துக்கு முன் அம்மா தான் கொடுத்தாள் என்று நினைவு வந்தது. அதை அம்மா மறந்தே விட்டிருக்கிருள். எப்படிப் பணம் பண்ணுவது என்பதே குறியான பிரஸன்னருக்கு மனைவி இவள். இருந்தாலும், (இன்றைய அறுநூறு ரூபாய்க்குச் சமமான) அந்த அறுபது ரூபாயை 'அமுக்கி'விட அவளுக்கு லவலேசமும் எண்ணமில்லை. உடனேயே அதை எடுத்துச் சென்று அம்மாவிடம் கொடுத்தாள். விரோதமான சூழ்நிலையிலும் மனமாண்பைப் பேணும் தம்பி மனைவியின் மோவாயைத் தொட்டுத் தன் உதட்டில் வைத்து முத்தமிட்டாள் அம்மா!

இப்படிப்பட்ட உத்தமிக்கு அம்மா மந்திரோபதேசம் செய்யத்தான் வேண்டும் என்று கௌரி-மா பிடிவாதம் பிடித்தாள். தன் குடும்ப அங்கத்தினருக்கு உபதேசம் தருவதில்லை என்ற கொள்கையை உடைய அம்மா கடைசியில் விட்டுக் கொடுக்கும்படி ஆயிற்று. ஸுவாஸினிக்குமட்டும் உபதேசித்தால் மற்றவர் அனைவரும் படை எடுத்து வருவர் என்பதால் மாகு, ராது, பூதேவ், அவனது குட்டிமனைவி ஆகியோருக்கும் உபதேசம் செய்தாள். ராதுவின் கணவர் மன்மதநாத் தாமே அம்மாவிடம் வேண்டி மந்திரம் பெற்றதை முன்பே கண்டோம்.

''அம்மா! மகாபட்டாவளான நீங்கள் உபதேசம் பண்ணியும்கூட என்னுலே ஒருமுகப்பட்டு ஜபம் பண்ண முடியலையே'' என்று ஸுவாஸினி துக்கப்பட்டுக் கொண்டாள்.

(அம்மாவுடைய தம்பி மனைவியர் அவளை, ''அக்கா'' என்று அழைக்காமல், ''அம்மா'' என்று அழைத்தனர். 'அம்மா' என்பதே அவளுக்கு இயற்பெயர்போல் இருந்தது!)

''கண்மணி, நீ ஏன் அதுக்காக வருத்தப்படணும்? நீ அகத்துக் கடமையை விடாமல் ஒழுங்காகச் செஞ்சுண்டு இருக்கியோன்னே? கிருஹஸ்தாளுக்கு அதுவே பெரிய ஆத்மசாதனை

தான். பக்தி தழைக்கணும்னு டாகுரை வேண்டிக்கோ. அருள் செய்வார்'' என்று கூறினுள் அம்மா.

ஒரு சமயம் ஜகத்நாத்ரி பூஜைக்கு முந்தைய தினம் ஸுவாஸினியின் மகள் விமலாவுக்கு பயங்கரமான காய்ச்சல் கண்டது; டாக்டர் நோயாளியின் வாயில் விட்ட மருந்து அப்படியே வெளியே வழிந்துவிட்டது. நாடியும் விழுந்துவிட்டது; ஸுவாஸினி, அம்மாவின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். விமலாவின் கொதிக்கும் உடலை அம்மா மெல்ல வருடினுள். ஜகத்தாத்ரியின்முன் வந்து நின்ருள். ''தாயே நாளைக்கு உனக்கு விசேஷப் பூஜை. அந்தச் சமயத்தில் என் தம்பி பெண்டாட்டி கண்ணைக் கசக்கிண்டு நிற்க வைச்சுடமாட்டாயே?'' என்று வாய்விட்டுக் கேட்டுப் பிரார்த்தித்தாள். சாதாரணப் பிரார்த்தனை அல்ல; அம்மாவை அப்போது ஒரு பக்திப் புயல் ஆட்கொண்டது; அம்மாவை ஒரு கருணைப்புயல் ஆட்கொண்டது. விதியின் எழுத்தையே அழிக்கிற மூலப் பொருளின் கருணையில் அம்மாவின் உள்ளம் முங்கித் தோய்ந்தது. அதன்பின் எதுதான் நடக்காது? அன்றிரவே விமலா கண்டத்திலிருந்து தப்பித்தாள். மறுதினம் பூஜை பரமானந்தமாக நடந்தேறியது.

ஸுவாஸினிக்கு மட்டுமின்றி காளியின் மனைவி ஸுபோத்பாலா, வரதரின் மனைவி இந்துமதி ஆகியோருக்கும் சாரதைதான் தாய்போலிருந்து வேலைகள் கற்றுக் கொடுத்து, கவனித்துக்கொண்டாள். ஆனுல் இவ்விருவரைப்பற்றிச் சொல்ல விசேஷமாக ஏதுமில்லை. இவர்கள் சாமானிய கிராமப் பெண்டிராகவே இருந்தனர். அம்மாவின் தெய்விகம் இவர்களுக்குத் தெரியாது; ஆனுல் அம்மா இவர்களிடம் காட்டிய அன்பு பூரணமாகவே இருந்தது; ஒரு திருஷ்டாந்தம் போதும்:

அம்மாவின் ஜயந்தி விழா: சிஷ்யப் பிள்ளைகளும், பெண்மணிகளும் வீட்டுக் கூடத்தில் அலங்காரம் செய்து, அம்மாவுக்கு மலராசனம் போட்டு அமர்க்களம் பண்ணிக்கொண்டிருக்கிருர்கள், பூஜை பெறவேண்டிய தேவதையோ அடுக்களையில் புகைச் சுழலிலேயே இருந்துகொண் டிருந்தது.

பிரம்மசாரி கோபேஷ் சமையலறைக்குச் சென்ருர்; ''அம்மா, இன்னிக்கு உங்க ஜன்மோத்ஸவம். இந்த ஒரு நாளாவது நீங்க அடுப்படியிலே புழுங்காமலிருக்கக்கூடாதா? இத்தனைபேர் ஊழியம் செய்யக் காத்திருக்கும்போது நீங்களே ஏன் இன்னிக்கும் வேலை செய்யணும்?'' என்று கேட்டார்;

அம்மா புன்னகைத்தாள். ''அவாளுக்கும் வேலை இருக்கு; எனக்கும் வேலை இருக்கு; அவா உங்களுக்கெல்லாம் விருந்து

தயார் பண்ணிண்டிருக்கா; எனக்கு இந்து (வரதனின் மனைவி இந்துமதி) நினைவுதான். அவள் 'உண்டாகி'யிருக்கா. ஏகமா மசக்கை பண்ணுகிறது. இந்த விருந்துச் சாப்பாடு அவளுக்கு ஒத்துக்காது. இதைச் சொன்னால் இங்கே நடக்கிற கோலா கலத்திலே யார் கவனிக்கப் போகிறா? அதனால்தான் நானே இந்துவுக்காக அன்னத்தைப் புனர்பாகம் வைச்சிருக்கேன். நாலு பிஞ்சு வெண்டைக்காயை நறுக்கிப் போட்டு ஒரு கறி பண்ணியிருக்கேன். இதோ ஓமத்தை மிதக்கவிட்டு எலுமிச்சம் பழ ரசமும் பண்ணியாச்சு. வேலை ஒருமாதிரி முடிந்துடுத்து. உங்களோட பூஜைக்கு அஞ்சே நிமிஷத்திலே வந்துடறேன்'' என்றாள்.

அம்மா இந்துமதிக்காகச் சமைத்ததோடு நிற்கவில்லை. தான் பூஜைக்கு அமர்ந்துவிட்டால் எவரும் பொறுப்பாக அவளுக்குப் பரிமாறாமல் இருந்துவிடப் போகிறார்களே என்ற கவலையில், தானே தம்பி வீட்டுக்குச் சென்று ஈருயிர்க்காரிக்கு உண விட்டு வந்தாள். அதன்பின்புதான் வழிபாடு பெறுவதற்கு அமர்ந்தாள். தன்னை வைத்துப் பூஜை செய்கிற விழா என்ற பெருமிதப் பதற்றம் ஏதுமின்றி அம்மா இளம்தென்றலாக எளிமையோடு இருந்த அழகை என்ன சொல்ல?

ஏதோ ஒரு நாள் அம்மா இந்துமதிக்காக உணவு தயாரித்து எடுத்துச் சென்றது மட்டுமில்லை; விஜய் என்கிற இரண்டாவது பிள்ளை பிறந்தபின் இந்து படுத்த படுக்கையானபோது அம்மா நாத்தியாக இல்லாமல் தாதியாகவே இருந்து அவளைக் கண்ணின் மணிபோல் காத்துப் பராமரித்தாள்.

இந்துமதி நளபாகமாகச் சமைப்பாள். அம்மா வாயார 'சர்ட்டிஃபிகேட்' கொடுப்பாள்.

''என்கிட்டே சமையல் கற்றுக்கொண்டு என்னையும் மிஞ்சி விட்டாள் இந்து! அத்திக்காயும், கிமாக் கீரையும் எப்படிச சப்புனு இருக்கும்? அதைக்கூட இந்து சமைச்சால் தேவாமிருத மாக ஆயிடறது!'' என்று புகழ்வாள்.

இந்துமதிக்குச் சோம்பேறித்தனம் அதிகம். ''அம்மாடி! கடமையைக் கவனமாகப் பண்ணி முடிக்கணும். டாகுர் சகலத் தையும் பார்த்துண்டே இருக்கார். சோம்பிக் கிடந்தாயானால் கோவிச்சுண்டுடுவார். வேலையிலே கவனக்குறைவாக இருக்கிறது தான் குடும்ப ஸ்திரீகளுக்குப் பெரிய பாவம்'' என்று அம்மா அவளுக்கு நயமாகவும் பயமாகவும் உபதேசிப்பாள்.

இந்துவின் முதல் பிள்ளைக்கு க்ஷுதிராம் என்று பெயர். நம் அம்மாவின் மாமனார் பெயரும் க்ஷுதிராம் என்பதே.

ஆகையால் மரியாதைக்குக் கட்டுப்பட்ட அம்மா இந்தப் பிள்ளையை அவனது இயற்பெயரால் அழைக்கமாட்டாள். 'ஃபுதிராம்' என்றே அழைப்பாள். அம்மா கல்கத்தாவில் இருக்கையில் பக்தர்கள் அர்ப்பணிக்கும் ஆப்பிள், பேரீச்சை முதலிய பழவகைகளை, ''ஃபுதிக்கு உசிரு'' என்று சொல்லி ஜயராம்பாடிக்குப் பார்ஸல் பண்ணுவாள்.

சாரதா அத்தையின் பால்பாயசத்தை ஒரு நாள் உண்ட ஃபுதி, ருசிகண்ட பூனையாகிவிட்டான். ஜயராம்பாடியில் பாலுக்குப் பஞ்சமாயினும் அம்மா அந்தக் குழந்தைக்கு தினமும் பால்பாயசம் செய்து கொடுத்தாள். திருக்கழுக் குன்றத்துப் பட்சிபோல் ஃபுதி சரியான சமயத்துக்கு ஆஜராகி விடுவான். ஒரு நாள் இந்துமதி, ''அம்மா, நீங்க இந்த மாதிரி பெரிய மநுஷாளோட ஆகாரம், பழவகைகளுக்கெல்லாம் இந்த ஏழை வீட்டுப் பிள்ளையைப் பழக்கம் பண்ணுதேள். நாளைக்கே நீங்க கல்கத்தாவுக்குப் போயிட்டா எங்களுக்குக் கட்டுபடியாகுமா?'' என்று கேட்டாள். அம்மா கல்கத்தாவுக்குப் போனாலும் ஸுரபாலாவையும் ராதுவையும் உடன் அழைத்துச் சென்று சீராட்டுகிறாளே என்ற பொருமையில் இந்து இப்படிக் குத்தலாகக் கூறினாள். அம்மா அந்தக் குத்தலைப் பொருட்படுத்தவில்லை. ''என் அன்பே இந்து! உனக்கு விஷயம் தெரியலே. 'ராஜா மாதிரி வாழுகிறவனை ராஜராஜேச்வரியே கவனிச்சு எந்நாளும் ராஜாவாக வைச்சுக்கிறு' என்று வசனம் சொல்வாளே, நீ கேட்டதில்லையா?'' என்றாள்.

அம்மாவுடன் கல்கத்தாவுக்கு வரவேண்டும் என்று ஃபுதி ஒருமுறை அடம் பிடித்தபோது, அந்த ராஜாவைத் தாஜா செய்வதற்காக அம்மா தன் சுண்டுவிரலிலிருந்த தங்க மோதிரத்தை எடுத்து அவனது கட்டைவிரலில் அணிவித்தாள். ஸ்ரீமதி சம்பு ராய் என்ற பிரிய பக்தை அத்தியந்த அன்போடு அம்மாவுக்கு அளித்திருந்த காணிக்கையே அம்மோதிரம். ஃபுதி அப்படியும் ஓயவில்லை. அம்மா ஒரு டப்பா நிறையக் கற்கண்டைக் கொடுத்தாள் அவனிடம். ''என்னைப் பார்க்கணும்னு உனக்குத் தோணறச்சே ஒரு கல்கண்டை எடுத்து வாயிலே போட்டுக்கோ!'' என்றாள். ரொம்பவும் பொருத்தம்; நம் அம்மா கற்கண்டுதான். தாயுமானவர் மொழியில் சொன்னால் 'கனி பழுத்த ஆனந்தக் கட்டிப் பேறு' அல்லவா அவள்! ஃபுதி சமாதானம் அடைந்தான்.

பின்னொரு முறை அந்தப் பிள்ளை கல்கத்தாவுக்கு வந்தான். அப்போது அம்மா ஜல்ஜல் என்று மணி குலுங்கும் தண்டை

வாங்கி அவனுக்கு அணிவித்தாள். ''கோபாலன் இப்படித்தான் ஜில்ஜில்னு குலுங்கி நடந்துவருவான்'' என்று ஆனந்தத்துடன் கூறினாள்.

கண்ணனை அம்மா நினைவு கூர்ந்ததற்கேற்ப ஃபுதி 'ஓயாமல் பொய் உரைப்பான்; ஒன்றுரைக்க வேறு செய்வான்.' ஒரு நாள் அம்மா அவனிடம், ''இன்னிக்கு உங்காத்தில் என்னடா சமையல்?'' என்று கேட்டபோது அவன் தயங்காமல், ''அம்மா இத்தனும் பெரிஸ்ஸா (இரண்டு கைகளையும் அகற்றிக் காட்டி) மாகுர் மீன் வாங்கிக் கறி பண்ணினா. ஆனா நேக்கு இத்துனூண்டு (குருவி மூக்குப்போல் இரு விரல்களைச் சேர்த்துக் காட்டுகிறான்!)தான் போட்டா'' என்று குற்றப் பத்திரிகை படித்தான்.

(வங்கத்தில் பிராம்மணர்களும் 'ஜலபுஷ்பம்' என்று கூறிக் கொண்டு மீன் உண்பார்கள். மிகவும் ஆசாரமுள்ளவர்கள் உண்ணமாட்டார்கள். அஹிம்ஸா ஸ்வரூபிணியான அம்மா மீன் உண்ணமாட்டாள் என்று சொல்லவே தேவையில்லை.)

இந்துமதி வந்தாள். அம்மா அவளிடம் ஃபுதி போலவே கையைக் காட்டி, ''இத்தனும் பெரிய மாகுர் வாங்கிட்டு, என் சின்னக் கண்ணனுக்கு இத்துனூண்டு போட்டியாமே, நியாயமா? உன் மூக்கை அறுத்துடட்டுமா?'' என்று சிரித்துக் கேட்டாள்.

இந்து அதைவிடப் பெரிதாகச் சிரித்தாள். ''உங்க மருமான் கற்பனைசக்தியிலே நிபுணனாகப் போயிட்டான். இந்த ஊரிலே மாகுர் விற்றே எத்தனையோ நாளாயிடுத்தே!'' என்றாள்.

ஒரு விழாவில் பக்தர்களுடன் ஃபுதியும் அம்மாவின் பாதத்தில் திரும்பத் திரும்ப மலரிட்டபோது அவள் அவனை வாரி எடுத்து வைத்துக்கொண்டு, ''ராஜா! நீ இவ்வளவு பூஜை பண்ணவேண்டியதே இல்லை. இந்த வீட்டிலே வந்து பிறந்த தாலே, பிறக்கும்போதே விடுதலையைத் தேடிண்டவாளாச்சே நீங்க?'' என்று குழந்தைக்குப் புரியாத பெருமொழிகளைக் கூறினாள்.

காளியின் மனைவி ஸுபோத்பாலா நுட்ப உணர்வே இல்லாதவள். நுட்ப உணர்வு இருந்தால் அவள் எப்படி இந்த அழகான கணவருடன் குடித்தனம் நடத்தி இருக்க முடியும்? அவளுடைய பிள்ளை பூதேவுக்குப் பதின்மூன்றாவது வயதிலேயே திருமணமாயிற்று. மாற்றுப் பெண்ணுக்கு வயது ஐந்தோ, ஆறோதான். சிறு குழந்தைதானே, விவரம் தெரியாமல் ஏதேனும்

செய்துவிடும். இதேபோல் பாலியத்தில் விவாகமாகி, இதே குழந்தைத்தனத்தை ஆதியில் செய்த ஸுபோத்பாலா அதை மறந்து, அந்தச் சிறுமியை எப்போது பார்த்தாலும் கண்டித்துக் கொண்டேயிருப்பாள். விளையாட்டுக் குழந்தையின் முகம் சுண்டுவது கண்டால் அம்மாவுக்குத் தாங்காது. ''அம்மா ஸுபோத்! சாந்தமாக இருடியம்மா, சாந்தமாக இரு. அந்தக் குழந்தை என்ன அந்தரத்திலேயிருந்து உங்காத்திலே திடீர்னு வந்து குதிச்சுதா? நீங்கள் எல்லாரும் போய்ப் பார்த்து, பேசி, ஊர் கூட்டித் தமுக்கு அடிச்சுத்தானே அதைக் கொண்டு வந்திருக்கேள்? அடடா, எத்தனை அன்புக்குரிய குட்டி. மாட்டுப் பொண், இது! இதைக் கடிஞ்சுக்கிறயே!'' என்பாள். ஆதியில் சந்திரமணி தேவி தன்னை அருமைக்கிட்டது அம்மாவின் நெஞ்சத் திரையில் நீங்காமல் பதிந்திருந்தது!

அம்மாவின் குடும்பத்தினருள் ஸுபோத் பாலாவுக்கும் ராதுவுக்கும் அடுத்தபடியாக அவளுக்குச் சர்ச்சை தந்தாள் நளினி. பிரஸன்னரது மூத்த தாரத்தின் மூத்த மகளாகிய இவளை நாம் முன்பே பன்முறை சந்தித்திருந்தாலும், இங்கே இவளது 'கலியாண' குணங்களைப் பிரத்யேகமாகப் பார்ப்போம்.

மூன்று விதங்களில் அம்மாவுக்குத் தொல்லை தந்தாள் நளினி. முதலாவது, அவளது இயல்பான சிடுமூஞ்சித்தனம். இரண்டாவது, அவளுடைய அதீத ஆசாரம். மூன்றாவது, அம்மா ஓரவஞ்சனை செய்கிறாள் என்று அவள் தீர்மானமாகக் கருதியது. ஓர வஞ்சனை செய்வதாகத் தோன்றினாலும் அத்தையிடமே இருந்து உபத்திரவித்து வந்தாள் அவள்.

நளினியின் புக்ககத்தார் மிகவும் தரித்திரத்துக்கு ஆளாகி விட்டதாலும், அவளுக்கு மாற்றாந்தாய் ஸுவாஸினியிடம் ஒத்துப் போகவில்லை என்பதாலுமே அவள் சாரதாமணி தேவியுடன் வசிப்பதாகத்தான் ஊரார் எண்ணினர். ஆனால் இது முழு உண்மையல்ல. நளினிக்குச் சிற்றின்பத்தில் நாட்டமில்லாததால்தான் அவள் அத்தையிடம் வந்துவிட்டாள். ''அத்தையைக் கொண்டிருக்கா'' என்று இந்த அம்சம் குறித்து அம்மாவும் அந்தரங்க பக்தர்களிடம் ஓரளவு பெருமையுடன் சொல்லுவாள். ஆனால் வேறெதிலுமே நளினி, அத்தையைக் கொள்ளாததுதான் பரிதாபம். அத்தையின் அதிசயப் பொறுமைக்கும், மருமகளின் அதியான பதற்றத்துக்கும் மலைக்கும் மடுவுக்குமாக இருந்தது. நளினியின் சகிப்புத்தன்மையற்ற போக்கை அம்மாவாலேயே சகித்துக்கொள்ள முடியாமற்போன சமயங்களும் உண்டு என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். 'எரி

பிரி' என்று எப்போதும் எள்ளும் கொள்ளும் வெடிக்க, பலர் வந்து கூடும் அம்மாவின் இருப்பிடத்தில், தொல்லை தந்து வந்தாள் நளினி.

இந்த எரிச்சல் உணர்வுக்கு ஒரு முக்கிய காரணம் அவளது தீவிர ஆசாரம். வயதுக்கும், சூழ்நிலைக்கும் பொருந்தாத அளவுக்கு மடி, விழுப்பு பார்ப்பவள் நளினி. சொல்லப் போனால் இந்த 'மடி' உணர்வால்தான் அவளுக்குப் பதியின் சகவாசமும் அருவருப்பாயிற்று.

ஆசார சீலர்களைப் போற்றுபவள் நம் அம்மா. தான் கைக்கொள்ளாத ஆசார நியமங்களை மேற்கொண்டிருந்த மற்றவர்கள் அந்த விதிகளை வழுவாமல் கடைப்பிடிப்பதில் அம்மா மகிழ்ச்சியே காட்டினாள். அவர்கள் அவ்விதமே ஒழுகுவதற்கு வசதியும் செய்துகொடுத்தாள். ஆயினும் ஆசாரக்காரர்கள் பிறரிடமிருந்து ஒதுங்கி, அமரிக்கையாகத் தம் மட்டில் விதி நிஷேதங்களை அநுசரிப்பதையே அம்மா ரசித்தாள். உலகினரோடு கலந்துகொண்டே, அவர்களிடமிருந்து பிரிந்து உச்ச ஸ்தானத்தில் நிற்பதாக எண்ணிக்கொண்டு, ஆசாரத்தின் பெயரில் பிறரைச் சிறுமைப்படுத்தி மனநோவு தருவதை அம்மாவினால் ஏற்கவே இயலாது. துரதிருஷ்டவசமாக நளினி இப்படித்தான் செய்துவந்தாள்.

அம்மா இருக்கிற இடத்தில் நானாவித மக்களும் குழுமியபடி இருப்பார்கள். அவர்களுடனேயே வசித்துக்கொண்டு அவர்களுக்குத் தாழ்மை உணர்ச்சி தரும் விதத்தில் மடி கொண்டாடினாள் நளினி,

''அம்மா நளினி! உனக்கு இந்த உலகத்திலே உன்னைத் தவிர ஸகலரும் அசுத்தம்னு தோணினாலும் சரி, எனக்குக் கோபமில்லை. நீ இந்த அசுத்தத்திலேயிருந்து ஒதுங்கி உன் பாட்டிலே ஆசாரமாக இருந்திண்டிரு. அதுக்கு நான் ஆட்சேபிக்கவில்லை. ஆமாம், இப்படி எங்க காரியத்திலே எல்லாம் வந்து விழாதே. என் குழந்தைகள் ஒவ்வொருத்தரைப்பற்றியும், 'இவா இங்கே நின்னது தப்பு', 'இவா இதைப் பார்த்தது தப்பு', 'இவா இதைத் தொட்டது தப்பு'ன்னு ஓயாமல் ரகளை கட்டிண்டு இருக்காதே, தாயே! உன்னையும் துன்புறுத்திண்டு மற்றவர்களையும் துன்புறுத்தாதேயம்மா! உன்னைவிடப் பிறத்தியார் தாழ்த்தியானவான்னு நினைச்சு நீ அவாளை இப்படி விரட்டி அடிச்சால் உன்னைவிட, எவ்வளவோ உசத்தியாக இருக்கிற பகவான் உன்னைத் தன்கிட்டே எப்படிச் சேர்த்துப்பான், சொல்லு?'' என்று அம்மா இதமாகவும் இங்கிதமாகவும்

அந்தப் பெண்ணுக்கு எவ்வளவோ புத்திமதி கூறினாள். ஆனால் அதெல்லாம் விழலுக்கு இறைத்த நீராகவே ஆயிற்று.

ஒருநாள் சட்டி பானைகளை வைப்பதற்கான பிரிமணைகளை விற்கச் சில ஹரிஜனங்கள் வந்தனர். வீட்டின் வெளியிலேயே வியாபாரம் முடிக்கப்பட்டது. ஆயினும் அவர்கள் ஏதோ சில பொருட்களின்மீது பட்டுவிட்டதாக நளினிக்குத் தோன்றியதால் தன் முரட்டு சுபாவப்படி நாக்கில் நரம்பில்லாமல் திட்டித் தீர்த்தாள். அந்தப் பொருட்களை வீட்டைவிட்டே வெளியில் எறிந்துவிட வேண்டும் என்று கூச்சல் போட்டாள். அந்தக் காலத்தில் தீண்டாதோர் பொதுவில் பயந்தவர்களாகவே இருப்பார்கள். நளினி படுத்திய பாட்டில் அவர்கள் அழமாட்டாக் குறையாக மன்னிப்புக் கோரினர்.

அம்மாவின் குரல் துடித்தது. அந்த விநாடியில் அவளுக்குத் தன் மருமகள் மறு மகளாகவே தெரிந்தாள்: அந்த ஹரிஜனங்கள்தாம் சொந்த மக்களாகத் தோன்றினர்.

நளினியைப் பார்த்து நோவுண்ட குரலில், "அசட்டுப் பெண்ணே! ஆசாரம், ஆசாரம்னு சொல்லிண்டு இப்படி நெஞ்சீரத்தைப் பஞ்சால் துடைச்சுட்டியே! என்ன பரிதாபம்! ஜீவ காருண்யம் இல்லாமல் நீ என்னதான் ஆசாரமாக இருந்தாலும் கருணாமூர்த்தியான பகவான் கிருபை பண்ணுவாரா?" என்று கேட்ட அம்மா, ஹரிஜனக் குழந்தைகளைத் தாயாகப் பார்த்துச் சொன்னாள்: "என் மக்களா! சின்ன அம்மா கோவிச்சுண்டுடுவாங்களேன்னு பயப்படாதீங்க! நீங்க ஒரு தப்பும் பண்ணலே. உங்களுக்கு ஒரு பாவமும் வராது."

உள்ளே சென்று நிறைய அவல் பொரி எடுத்து வந்து அவர்களுக்குக் கொடுத்தாள் அம்மா.

"எல்லாம் நீ கொடுக்கிற இடம்தான்" என்று நளினி பொருமிக்கொண்டேயிருந்தாள்!

நளினி பிறரைக் கொடுமைப்படுத்தியதுமட்டும் இல்லை. தன்னையும் வாட்டி வதைத்துக்கொண்டாள். எத்தனை பட்டினி, எத்தனை ஸ்நானம்! இவற்றைத் தாங்கிக்கொள்ளும் பதமான உள்ளம் இல்லாமலே, ஆத்திரத்தோடும் எரிச்சலோடும் செய்து வந்தாள்!

கடும்பனிக் காலம். கம்பளியைப் போர்த்துக்கொண்டாலும் ஊசிகுத்துவதுபோல் குளிர் வாங்கியது! இப்படிப்பட்ட ஓர் இரவில் எங்கோ வெளியே போன இடத்தில் தீட்டுப் பட்டுக்கொண்டதாக நளினிக்கு பிரமை ஏற்பட்டது! வீட்டுக்

குள் நுழையாமல் வெளியிலேயே நின்றுகொண்டு ஊளை யிட்டாள்.

''படு அநாசாரத்துக்கு ஆளாயிட்டேன். இந்தக் கடுங் குளிர்லே ஸ்நானம் பண்ண முடியாது. வீட்டுக்குள்ளேயும் நுழையமாட்டேன். ராத்திரி சோறு தின்னுமல், வெளிவராந்தா விலேயே கிடக்கப் போறேன்'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினுள்.

''அப்படியெல்லாம் சொல்லாதே, அம்மா'' என்று சமா தானம் சொன்னுள் சாரதை. ''கங்கா ஜலத்தைப் புரோக்ஷிக் கிறேன். 'கோவிந்தா கோவிந்தா'ன்னு சொல்லு. சகல தோஷ மும் பறந்துபோயிடும். வெளியிலே போகிறச்சேயே பசிக்கிற துன்னு சொன்னயோன்னு? பிடிவாதம் பண்ணுதே, கண்ணம்மா'' என்று குழைந்தாள் தேவி.

''வாஸ்தவம்தான், வயிற்றைக் கிள்ளித்தான் எடுக்கிறது. இருந்தாலும் தீட்டுலே உண்டைக் கட்டி தின்ன என்னுல் ஆகாது. கங்கா ப்ரோக்ஷணம், கோவிந்த நாமம்—இத்தி யாதிகள் எனக்குப் போருது. எல்லாத்தையும் விட்டுக் கொடுத்துட்ட நீ எதுவும் பரவாயில்லைன்னு சொல்லுவே! என் னுலே ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பனிவாடையிலேயே பட்டினியாகக் கிடந்து விறைச்சுப் போகத்தான் போறேன்'' என்று அருமையும் கொடுமையுமாகப் பேசினுள் நளினி.

''இப்படியெல்லாம் விவேகமில்லாமல் பேசப்படாது, ராஜாத்தி'' என்று அம்மா கெஞ்சும் குரலில் சொல்லும்போதே மிஞ்சி இடைமறித்தாள் நளினி. ''நான் விவேகமில்லாமலே இருந்துட்டுப் போறேன். உன் மாதிரி மடி, ஆசாரத்தை விட் டுட்டு விவேகமாக, விச்ராந்தியாக இருக்க எனக்குப் 'பக்குவம்' இல்லாமலே இருக்கட்டும்'' என்று நொடிப்பாகக் கூறித் தொடர்ந்தாள்: ''நீ பண்ணுகிற அநாசாரம் எல்லாம் எனக்குத் தெரியும். எச்சிலை மிதிச்சாக்கூடத் தலைக்கு ஸ்நானம் பண் ணறதில்லை. கங்கையைப் புரோக்ஷிச்சுண்டு, உள்ளுக்கும் சாப் பிட்டாலே போறும்னு உன் 'அதிவிவேக'த்துக்குத் திருப்தி ஆகி விடறது. இந்த வீட்டிலே கொஞ்சம் விழுப்பா சேர்த்திருக்கே! இந்த 'விவேகம்' எனக்கு வேண்டாம். அவிவேகியாகவே தர் மத்தைக் கட்டிண்டு அழுகிறேன்.''

அம்மாவின் வீட்டில் வந்து ஒண்டிக்கொண்டு, எந்த அசுத்த மும் தீண்டமாட்டாத நிர்மல மாதாவை இப்படித் திருணமாத் திரமாக வைத்துப் பேசினுள் நளினி. கீல்வாதமும், மலேரியா வும் உடம்போடு ஒன்றிவிட்ட அம்மா அறுபது வயதில் எடுத்த

தற்கெல்லாம் ஸ்நானம் செய்ய முடியுமா என்ன? அதுவும் அவளது மனநிலை எப்படிப்பட்டது? அப்படியிருந்தும் அம்மா, ''எனக்கெதற்கு ஆசாரக் கட்டுப்பாடு?'' என்ற கேட்ட நாளே இல்லை. தலைமுழுகுவதற்குப் பரியாயமாக, கங்கைத் துளிகளைத் தெளித்துக்கொள்ள அவள் தவறியதே இல்லை. தென்னகம் சென்றிருந்தபோது அரிசி அப்பளத்தில் பிரீதி கொண்ட அம்மாவுக்கென பெங்களூர் பக்தர் ஒருவர் அரிசி அப்பளப் பார்ஸல் அனுப்பியிருந்தார். அம்மா அதை உண்ணப்போகிற சமயத்தில், கோலாப்மா போன்ற ஆசாரப் பெண்கள், ரெயிலில் பார்ஸல் வந்த பொருளை அம்மா உண்பது அநாசாரமாகாதா என்ற பிரச்னையை எழுப்பினர். அம்மா அதற்குத் தலைவணங்கி அந்த அப்பளத்தைத் தொடவேயில்லை. இப்படி விதிக்குக் கட்டுப்பட்ட தேவியைத்தான் நாவைக் கட்டுப்படுத்தாமல் குற்றம் சொன்னாள் நளினி.

அம்மா அதைப் பொருட்படுத்தாவிட்டாலும், உடன் இருந்த அவளது பசங்கள் ஆடிவிட்டனர். ''அம்மா, நளினி தேவியை இன்னமும் நீங்கள் தாஜா பண்ணக்கூடாது. அறிவில்லாத பேச்சுப் பேசின அக்கா இன்னிக்கு ஒருநாள் பட்டினியா, வாசலிலேயே இருக்கட்டும்; அதுவும் வேண்டியதுதான்: நீங்க உங்களையே தாழ்த்திண்டு அவங்களைக் கெஞ்சிக் கூப்பிட்டா எங்களுக்கே கோபம் வரும்'' என்று அம்மாவையே மிரட்டினர் இந்த அன்புப் பிள்ளைகள்.

அம்மா மௌனமானாள்.

எல்லோரும் உண்டு உறங்கியாச்சு. இரண்டு ஆத்மாக்கள் மட்டும் உறக்கமில்லாமல் புரண்டன. வாசலில் நளினி; உள்ளே அம்மா. பனிவாடையில் பற்றி எரிந்துகொண்டிருக்கிறாள் ஒருத்தி. இன்னொருத்தியின் இதயத்தில் தயையே பனியாகக் கொட்டிக் குளிர்விக்கிறது.

அம்மா மெல்ல அடிமேல் அடிவைத்துச் சென்று வாயிற்கதவைத் திறந்தாள். அம்மாவின் மௌனம் ஜடமான கதவிற்கு வருமா? அதன் கீல்கள் கீச்சு கிச்சென்று ஸ்வரம் பாடின. சிஷ்யப்பிள்ளைகளின் தூக்கம் கலைந்தது, விஷயத்தைப் புரிந்துகொண்டனர். அம்மாவின் கருணைக்கு அதன் பின்னும் தங்களால் தடைபோட இயலாது என்று பேசாமல் இருந்தனர்.

நளினியின் அருகில் போய்க் குனிந்துகொண்டு அம்மா நளினமாகச் சொன்னாள்: ''குழந்தே! நீ சமர்த்தாச்சே! உனக்கு ஆசாரத்திலே இருக்கிற அபார பிடிமானத்திலே கோபமாகப் பேசிப்பிடறே! அதனாலே பிறத்தியார் உன்னை அசடுன்னு

வெறுக்கும்படி பண்ணிக்கிறே! நீ பச்சைக் குழந்தைதானே? என்ன பேசலாம்னு கண்டயா? பாவம்! இதோ அத்தை நான் சொன்னதைக் கேளு, தங்கம்மா! கங்கை புரோக்ஷிக்கிறேன். கோவிந்த நாமாவைச் சொல்லிண்டு மூணு கைக்குழி திவ்ய தீர்த்தம் உள்ளுக்குச் சாப்பிடு, நல்ல பெண்ணு என்பின்னலே உள்ளே வந்து சாப்பிட்டுட்டு என் பக்கத்திலேயே படுத்துக் கோம்மா. பசியிலே உன் வயிறு தகிக்கிறதும், பனியிலே உன் உடம்பு சில்லிட்டுப் போகிறதும் இந்தக் கிழ அத்தையை எத்தனை பாதிக்கும்னு யோசிச்சுப் பாரு.''

தான் உள்ளே போகாவிடில் அத்தையும் தன்னுடனேயே வெளியில் குளிரில் விறைத்துப் போவாள் என்று நளினிக்குத் தெரிந்தது: ராதுவிடம் போலவே தன் பொருட்டும் அத்தை இத்தனை கரிசனம் காட்டியதில் அவளுக்கு அலாதி திருப்தி உண்டாயிற்று. கன்றுக்குட்டி போல அம்மாவுடன் வீட்டுக்குள் வந்தாள்.

விழித்துக்கொண்ட சிடப்பிள்ளைகள் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு சிரித்தனர்.

இன்னேர் இரவு முழுவதும் அம்மா வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு உறங்காமல் உட்கார்ந்திருக்குமாறு செய்து புண்ணியம் கட்டிக்கொண்டாள் இந்த நளினி.

அன்று அவளை எப்படியும் தம் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் உத்தேசத்துடன் வந்திருந்தார் அவளது கணவர் பிரமதநாதர்.

தாம்பத்தியத்தை எண்ணியவுடன் நளினிக்கு உடம்பெல்லாம் உதறல் எடுத்தது. அம்மாவுடைய மருமக்களின் விசித்திரத்தைப் பாருங்கள்! ராது அதியான வேட்கைத் துடிப்புக் காட்டி அம்மாவைத் தலைகுனிய வைத்தாள். நளினியோ பதி சங்கமே கூடாது என்று நடுங்கி, அவளது கணவர் எதிரில் தலை குனிய வைத்தாள். இப்போது நளினி உக்கிராண அறைக்குள் போய்த் தாழிட்டுக்கொண்டுவிட்டாள். ''என்னை அவரோட அனுப்புகிறதாக நீ நினைச்சால், நான் இந்த உத்திரத்திலேயே தூக்கில் தொங்கிவிடுவேன்'' என்ற குண்டை வேறு உள்ளிருந்தே அம்மாவின்மேல் வீசினாள். அம்மா அலமந்து போனாள்; மரியாதைப்பட்ட மாப்பிள்ளையிடம் அவள் என்ன சொல்ல முடியும்? சற்றும் தேவையற்ற ஒரு கால்கட்டை ஏற்றுக் கொண்ட தேவி தவித்தாள்.

தர்ம சங்கடத்துடன் பிரமதநாத்திடம் வந்து பவ்வியமாகப் பேசினாள் அம்மா: ''ஐயா! நீங்கள் தவறாக எடுத்துக்கக்

கூடாது. இந்தப் பெண் என்னமோ இரண்டும் கெட்டானுக வளர்ந்துடுத்து. இதை ஒரு நாளிலே திருத்த முடியுமா? நான் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துச் சொல்லி அதுக்குப் புரிய வைக்கிறேன். இவள் உங்களை அநுசரிக்கிறமாதிரியாக ஆக்கி நானே பிற்பாடு அனுப்பி வைக்கிறேன். இப்போ இவளை நிர்பந்தமாக அழைச்சுண்டு போனுல் உங்களுக்கே தீராத் தலைவலியாக முடியும். கொஞ்சகாலம் ஆறப் போடுவோம். தயவு செஞ்சு பொறுத்துக்கோங்கோ'' என்ருள்.

பிரமதரும் அதற்கு இணங்கினர். கிராமாந்தரத்தில் இராப் பயணம் உசிதமல்லவாதலால், அம்மாவின் விருப்பப்படி அந்த இரவு அங்கேயே தங்கி, காலையில் விடைகொள்வதாக ஒப்புக்கொண்டார்.

அவர் அங்கே இருக்குமளவும் தான் உக்கிராணத்திலிருந்து வெளிவர முடியாது என்ருள் நளினி. அந்த அறையில் ஜன்னலே கிடையாது. ஏகப்பட்ட கண்டான் முண்டான் வேறு. அன்ருேர் இரவு பனிவடையில் சாவதாகப் பயமுறுத்தியவள் இன்று புழுக்கத்தில் சாவதாக அச்சுறுத்தினுள்.

''பாய் படுக்கை இல்லாமல், இந்தப் புழுக்கத்திலே, குப்பையிலே வேகாதே மகளே, வெளியே வா'' என்று அம்மா எத்தனை வேண்டியும் நளினியின் கடினம் இளகவில்லை!

தூக்கிலே தொங்குவதாக வேறு நடுவாந்தரத்தில் அந்தப் பெண் திருவாய் மலர்ந்திருந்தாள் அல்லவா? அதனுல் அம்மா அந்த இரவு முழுவதும் விசனமே வடிவாக ஓர் அரிக்கேன் லாந்தருடன் அந்த அறை வாசலில் கண்கொட்டாமல் அமர்ந்தபடி, கதவிடுக்கு வழியாக உள்ளேயிருக்கும் அருமை மருமகளைக் கவனித்துக்கொண் டிருந்தாள்.

சிவராத்திரிபோல் ஆயிற்று. பலபலவென்று விடிந்தது. அம்மா சிறிதும் அலுத்துக்கொள்ளவில்லை. அரிக்கேனை அணைத்தாள். ''கங்கா, கீதா, காயத்ரீ'' என்று நிமலமாக மொழிந்தபடி அன்ருட அலுவலுக்காக எழுந்திருந்தாள்.

காலையில் எழுகையில் 'க' வில் தொடங்கும் இம் மூன்று புனிதப் பெயர்களைக் கூறுவது ஆன்ருேர் வழக்கம்.

நளினியின் சிடுமூஞ்சித்தனமும், ஆசாரப்பித்தும் அவள் அம்மாவைத் தொல்லைப்படுத்தும் பொருட்டு மேற்கொண்ட ஆயுதங்கள் அல்ல. ஆனுலும் மறைமுகமாக இவை அம்மாவை ஹிம்சிப்பதாகவே ஆயின. நளினியே நேரடியாக அம்மாவைத் தாக்கியது இன்னுேர் அம்சத்தில்தான். ஸமபாவத்தின் ஸ்வரூபமான சாரதையை—பரமஞானியான சாரதாநந்தரையும் பலே

திருடனுன ஆம்ஜத்தையும்கூட சமமாகக் காணும் அந்த அன்புத் துலாக்கோலை—பாரபட்சத்தின் உருவமாகக் கருதித் தாக்கினுள் நளினி. ராதுவை நடத்துவது போல அம்மா தன்னையும் தன் தங்கை மாகுவையும் அருமைக்கிடவில்லை எனக் கருதி இவள் அநியாய அபாண்டப் பழி சூட்டி அம்மாவைத் துடிக்க வைத்ததை முன்பே கண்டோம். இந்தத் தகாத எண்ணம் அவளுக்கு எப்போதுமே உண்டு. அதனுல் அனவரதமும் அம்மாவை 'நறுக்' 'நறுக்' கென்று இடித்துக் காட்டியே பேசிக்கொண் டிருப்பாள். இன்னுேர் அத்தையாக இருந்தால், ''கலியாணமான பெண்கள் புருஷன் வீட்டுக்குப் போகாமல் என் பிராணனை வாங்கிக்கொண்டு எனக்குப் பாரமாக இருப்பானேன்? என் வீட்டில், என் பணத்தையும், என் மனப்பிரீதியையும் என் இஷ்டப்படி விநியோகிப்பேன். ஒண்ட வந்தவர்களுக்கு இதில் என்ன விசாரணை?'' என்று கேட்காதிருக்க மாட்டாள். ஆனுல் நம் அம்மா? அவள் தன்னை ஆசிரயித்து வந்த இந்த ஞானசூனியமான சிறு பெண்களிடமும்கூடத் தன்னைத் தாழ்த்திக்கொண்டே நடந்தாள். அதே சமயத்தில் அற்புதமான விவேகமும் காட்டினுள். ராதுவுக்குத் தான் எது செய்தாலும் நளினிக்கு அது அதிகப்படியாகவே தோன்றுவதால், ராதுவுக்காக ஏதேனும் செய்வதென்ருல் அதை சாட்சாத் அந்த நளினியின் பொறுப்பிலேயே விட்டுவிடுவாள்; 'திருடனின் கையிலேயே சாவியைக் கொடுப்பது' என்பார்களே, அந்தக் கதைதான். நளினியும் இப்போது ராதுவுக்கு விமரிசையாகவே வாங்குவாள். அம்மா அவளிடம் உட்சிரிப்புடன், ''நளினி! உன் புக்ககத்துக்கும் மாகுவின் புக்ககத்துக்கும் அனுப்புகிறதைவிட ஜாஸ்தியாக ராதுவுக்குச் சீர் எடுத்திருக்கயே, ஏன் இந்த வித்தியாசம்?'' என்று கேட்பாள். நளினி தன்னைப் பெருந்தன்மையின் உருவமாக்கிக்கொண்டு, ''அத்தை! அவ என்ன இருந்தாலும் தகப்பனுரில்லாத குழந்தை; சித்தியும் அப்படிப் பித்தியாக நின்னுப்பா. ஆதியிலிருந்து ராதுஊருக்கெல்லாம் செல்லம் வேறே; அதோடு அவ புக்ககமோ பெரிய இடம்; அதுக்குத் தகுந்தாற்போல்தான் நாம் செய்யணும்'' என்பாள். அம்மா தன் பசங்களைப் பார்த்துப் பொருள் பொதிந்த குமிண் நகை செய்வாள்.

நளினி ஒருத்திமட்டும் அல்ல; அந்தக் குடும்பத்தின் நளினமறியா முரட்டு அங்கத்தினர் அனைவரிடமுமே அம்மா இப்படித்தான் நளினமாகப் பழகினுள்; அவர்கள் அவளை ஓயாமல் உபத்திரவித்து வந்தபோதிலும், அவளோ—

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது
புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறு ஆகாது

என்ற முதுமொழிகளின் முறுகிய மூர்த்தியாக வாழ்ந்து வந்தாள். அவர்களை நாம் நிந்தித்துப் பயன் இல்லை. அவர்கள் காய்ச்சி எடுத்ததால்தான் இந்தப் பாலின் சுவை நமக்கு மிகுந்து தெரிகிறது; அவர்கள் புடம் போட்டதால்தான் இந்தச் செம்பொன்னின் ஒளி நமக்கு மேலும் பிரகாசம் தருகிறது; அவர்கள் அரைத்ததால்தான் இச்சந்தன மணத்தை நாம் முன்னிலும் உன்னி உணர்கிறோம்; அவர்கள் புகைத்ததால்தான் இந்த அகில் அகிலத்துக்கெல்லாம் அன்பு கமழும் பாங்கை நன்கு காணமுடிகிறது; எளிய ஓடைபோல் நலிந்து ஓடிய அம்மா உண்மையில் ஒரு மகா சமுத்திரம் என்பது, அவர்கள் இத்தனை கலக்கியும் அவள் அமலமாக இருந்ததிலிருந்தே தெள்ளெனத் தெரிகிறது.

* * *

உறவினர்களை அரவணைத்து வாழ்வதற்குச் 'சுற்றம் தழால்' என்று பெயர் தந்து போற்றினர் வள்ளுவப் பெருந்தகை. அரவமாகவே இருந்த உறவினரை அணைத்து வாழ்ந்த அம்மாவைப்போல் 'அரவணைத்தவர்' எவருமில்லை. பரம சந்நியாசியான பரமேசுவரனை அரவங்கள் அணைத்துச் சூழ்ந்தன. பரம சந்நியாசினியான அம்மா அரவங்களை அணைத்து வாழ்ந்தாள். அம்மா 'சுற்றம் தழால்' என்ற தர்மத்தைச் செவ்வனே ஆற்றியதுபோல் இல்லறவாசிகளில் எவரும் செய்ததில்லை; துறவிகளையோ 'சுற்றம் தழால்' தர்மம் பீடிப்பதேயில்லை. துறவிக்கு உறவு ஏது? உறவினரின் பொறுப்புத்தான் ஏது? உறவினர்களை விட்டுத் துறவு பூண்டவரைவிட, பிடுங்கி எடுக்கும் உறவினருக்கு ஈடு கொடுத்துக்கொண்டே, அந்தப் பிடுங்கலால் பாதிக்கப்படாமல் வாழ்ந்த நம் அம்மாவின் மனத்துறவு அதிவிசேஷமானது. அவள் துரியாசிரமம் பூணாவிடினும், துவராடை அணியாவிடினும், அவளைப்போல் சந்நியாசினி காணவொண்ணாது.

அதிசயமான அம்மாவுக்கு அதிசயமான சுற்றம்! உலகெல்லாம் அறிந்திருந்த மகிமை இவர்களுக்குமட்டும் புலனாகவில்லை; 'மகிமை' தெரியாவிட்டாலும் சாதாரண மநுஷி ஒருத்திக்குரிய

அன்பும் அநுதாபமுமாவது காட்டினரா? அதுவும்கூட இல்லை. எவளைப் பரமஹம்ஸ பரமபுருஷர் ராஜராஜேசுவரியாக வைத்து வழிபட்டாரோ, அவளது உழைப்பையும் பொருளையும் கொண்டே வாழ்க்கை நடத்திய சிறிய மனிதர்கள் அவளைக் கிள்ளுக்கீரையாகக் கருதினார்கள். சொல்லொணாத் தொல்லை தந்தார்கள். அப்படியும்,

—அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்காத கொம்பு

என்றவாறு, அம்மா என்கிற கற்பகக் கொம்பு இந்தக் கட்டைக் கசப்புக் காய்களையும் தாங்கிக்கொண்டே இருந்தது! உற்றமும் வேண்டாம், சுற்றமும் வேண்டாம் என்று உதறி விட்டுப் போய் உலைப்புறாமலே, உலப்பிலா ஆனந்த ஏகாந்த வாழ்க்கை நடத்தி இருக்கக்கூடிய சந்நியாசச் சக்கரவர்த்தினி, உலகினருக்கெல்லாம் ஓர் உதாரணத்தைக் காட்டவேண்டும் என்ற பரம கருணையினாலே ஒரு பெரிய குடும்பத்திடைப் பாங்குற வாழ்ந்து காட்டினாள். அவளது பெருமையைப் புலப் படுத்தவே பராசக்தி அந்தக் குடும்பத்தினரைக் கொண்டு அவளைப் பலவிதத்தில் வேகவைத்தாள். வெம்மையில் கனியும் காய்போல் அம்மா வேக்காட்டிலேயே மனக்கனிவின் மதுர எல்லையை எட்டினாள். ஆயினும் காயைப் பழுக்கப் போடுவதற்கும் குறிப்பிட்ட வேக்காட்டுக்கு அதிகமாகிவிடக் கூடாதல்லவா? அப்படி ஆகுமானால், காய் கனிவதற்குப் பதில் நொந்து வெம்பி விடுமல்லவா? அம்மாவின் வாழ்விலும் இந்த வேக்காடு எல்லை மீறப் போகிறது; அந்தக் கனி அப்படியே வெந்து போகப் போகிறது! இதுகாறும் நாம் கண்ட வெம்மை எல்லாம் உதகமண்டலம் என்னும்படியான ஒரு கொதிகலன் படலத்துக்கு அம்மா சரிதையில் நாம் போகவேண்டும். தயக்கமாகத்தான் இருக்கிறது. எனவே கொதிகலனுக்குள் நுழையுமுன் தண் சோலையில் சிறிது சஞ்சரிப்போம்.

48. உலகக் குடும்பம்

வேண்டிய கொடுத்திடுவாள்—அவை
விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்;
ஆண்டருள் புரிந்திடுவாள்—அவள்
இன்னருள் பாடுநற் றொழில்புரிவேன்.

—பாரதியார்: 'கண்ணன்-என் தாய்'

துர்கா பூஜை நடக்கிறது, ஜயராம்பாடியில்! அஷ்டமி-நவமி கூடும் புனித சந்தியிலே, அம்மாவின் புனித சந்நிதியிலே அடியார்கள் புஷ்பாஞ்சலி செலுத்திச் சென்றாயிற்று!

தனியாக இருந்த தேவி சாரதாமணி ஒரு பிரம்மசாரியை அழைத்தாள். ''நிறையப் புஷ்பம் கொண்டு வா'' என்றாள்.

பிரம்மசாரி அவ்விதமே செய்தார்.

அம்மா தன் பாதங்களைப் பீடத்தில் பாங்குறப் பொருத்திக்கொண்டாள்.

''குழந்தே! ராகால் (பிரம்மாநந்தர்), தாரக் (சிவாநந்தர்), ஷரத், கோகா (ஸுபோதாநந்தர்), யோகின், கோலாப்—இவாளை நினைச்சுண்டு, இவா ஒவ்வொருத்தர் பேரிலேயும் அந்தப் புஷ்பங்களை என் பாதத்திலே கொஞ்சம் கொஞ்சமாகத் தூவு. என்னுடைய தெரிஞ்ச குழந்தைகள், தெரியாத குழந்தைகள் அத்தனை பேருக்காகவும் புஷ்பாஞ்சலி பண்ணப்பா'' என்றாள்.

மகிஷனை வென்று தேவி துர்கா பரமேசுவரியானவள் வரதாயகியாக நின்ற அநுக்கிரக முகூர்த்தம் அல்லவா அது? யாருக்கு வரம்? தேவர்களுக்கு மட்டுமா? அல்ல. அவளைத் தெரிந்தவர், தெரியாதவர் அனைவருக்குமே அசுரநாசத்தால் வரம் தந்தாகிவிட்டது. அவளால் சம்ஹாரம் செய்யப்பட்டதால் அந்த அசுரருக்குக்கூட வரம்தான்! அவளைத் தெரியாதவர் இருக்கவாம்; ஆனால் அவளுக்குத் தெரியாதவருண்டோ? அந்தத் தெரியாக் குழந்தைகளுக்காகவும் சேர்த்து தேவர்களையே துதிக்குமாறு செய்து வரம் நல்கினாள். குழந்தைகள் ஸ்தோத்திரம், புஷ்பாஞ்சலி என்று ஏதும் செய்யாமலே அவர்களுக்கு வரம் தந்தால் அவர்கள் தன்னிடம் கடனாளியாகி விடுவார்கள் என்பதால் அன்று துதிசெய்ய வைத்துப் 'பிரதி' செய்துகொண்டாள்; இன்று மலர் தூவவைத்துப் 'பிரதி' செய்துகொண்டாள்.

பிரம்மசாரி, அம்மா சொன்னவாறே பூக்களைப் பொழிந்தார். உலகம் முழுவதும் நன்ருக இருக்கவேண்டும் என்ற அற்புத எண்ணத்தில் நினைந்து குளிரக் குளிர அமர்ந்திருந்தாள் அம்மா.

ஜயராம்பாடி ராமசந்திர முகர்ஜியின் பெண்ணுகப் பிறந்து அவரது வாரிசுகளுக்குத் தலைவியாகக் குடும்பம் நடத்திய சாரதைக்கு, அதைவிட மிகப் பெரிய ஒரு குடும்பம் நடத்திய சாரதைக்கு அதைவிட மிக மிகப் பெரிய ஒரு குடும்பம் இருந்தது. 'வஸுதைவ குடும்பகம்' எனப்படும் உலகக் குடும்பம்தான் அது!

ஸ்வாமி நிகிலாநந்தர் நயம்பட நவில்வதே போல, அம்மா அவதாரத்தில் பராசக்தியானவள் தனக்குத்தானே கண்ணுமூச்சி விளையாடிக்கொண்டாள். இந்த அம்சத்தை நாம் அவளது சரிதையில் மீண்டும் மீண்டும் நினைவுக்குத் தந்து கொள்ள வேண்டியது அவசியம். தன்னையே தான் கண்டு கொள்ளாதவளாகத்தான் அவள் பெரும்பாலும் தோன்றினுள். "நான் யார், சாதாரணப் பொம்மனுட்டித்தான்னு தோணறது. ராம முகர்ஜியோட சாமானியப் பொண்ணுன்னுதான் தோணறது" என்பாள். 'ஆத்மானம் மாநுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம்' என்று ஆதியில் ஆதரிச மானுட வாழ்வை வாழ்ந்து காட்டிய ஸ்ரீராமசந்திரமூர்த்தி சொன்ன மெட்டிலேயேதான் ராம முகர்ஜியின் மகளும் பேசுகிருள்!

"உடனெத்த பொம்மனுட்டிகள் பலபேர் இங்கே இருக்கும் போது எனக்கு மட்டும் எதுக்காகப் பெரிய பெரிய வக்கில்கள், அதிகாரிகள், மாஜிஸ்திரேட்டுகள், சாதுக்கள், உத்தமர்கள் எல்லாம் நமஸ்காரம் பண்ணருன்னு நானே யோசிக்கிறேன்" என்ருள் பிறிதொரு சமயம்.

அருகிருந்த பிரம்மசாரி, "என்னம்மா, இப்படிச் சொல்றேள்? அப்படியானுல் நாங்கள் எல்லோரும் நன்னு உணர்ந்திருக்கிற உங்களோட நிஜ ஸ்வரூபத்தை நீங்களே புரிஞ்சுக்காமல் இருக்கேளா, என்ன?" என்று வியப்பு மீதூரக் கேட்டார்.

அந்த விநாடியே மின்னல் வெட்டினுற் போல அம்மா தன் திவ்வியத்தன்மையை உணர்ந்துகொண்டாள். அதை சகஜமாக்கிக்கொண்டு, "அப்பா மகனே! நான் எப்போதும் ஸ்வ - ஸ்வரூபத்திலேயே திளைச்சிருந்தால், இந்தக் காரியங்களை எப்படி நடத்திக் காட்ட முடியும்? ஆனுல் இத்தனை வேலைக்கு மத்தியிலும் எனக்கு இச்சை வந்தால் போதும், உடனுக்

குடனே என் திவ்ய ஸ்வருபத்தைத் தொட்டுக்க முடியும். அப்போ இந்த உலக காரியமெல்லாம் மகாமாயையின் லீலை யாகவே தெரியும்'' என்றாள்.

கண்ணாமூச்சியில் தாய்ச்சி தொடப்படுவதுபோல், நம் தாய் ஆதித் தாய்ச்சியாகத் தன்னைத் தானே தொட்டுக்கொண்டாள் அவ்வப்போது. இந்த அநுபவம் தானாகவே பீரிக்கொண்டு வரும். 'இச்சை வந்தால்' என்று அம்மா சொன்னாளே, அந்த இச்சை எப்படி வரும், எப்போது வரும் என்பதை நாம் ஒரு காலும் விளங்கிக்கொள்ளவே முடியாது. மாயா சம்பந்தமே அற்ற சிந்தனாரஹித பரம்பிரம்மத்துக்கு எப்படி இச்சை வந்து அது தன்னைப் பராசக்தியாக உணர்ந்துகொண்டு பிரபஞ்சமாயத் தைச் செய்தது என்பது நம் சிற்றறிவுக்கு எட்டாதது போலவே மாயப்பிரபஞ்சத்து மானுட ஸ்திரியாகவே இருந்த அம்மாவுக்கு எப்படி இச்சை வந்து அவள் பராசக்தியைப் பொதிந்துள்ள பிரம்ம ஸ்வருபத்தை உணர்ந்துகொண்டாள் என்பதையும் நாம் அறியவொண்ணாது. இச்சை வந்தால் மாயா சம்பந்தமே அற்ற சுத்த சைதன்யமாக ஆவாள். அல்லது மாயாதீத சக்தியாகி, அந்த நிலையில் அற்புத அநுக்கிரகங்கள் செய்வாள்! ஸ்ரீ மா ஆனந்தமயி தேவி தமக்கு அவ்வப்போது வருவதாகக் கூறும் விளக்கவொண்ணா 'கோயால்' என்பது இந்த 'இச்சை' தான். அது வந்துவிட்டால், அப்புறம் பிரபஞ்ச சக்திகள் அனைத்தும் அதற்கு அடிபணிந்து போகவேண்டியதுதான்— விதியும் கர்மகதியும் கூடத்தான். இந்த நிலையில் ஐயராம்பாடி கிராமத்தைச் சேர்ந்த சாமானிய சாரதாமணி, விசுவ மகா சக்தியில் கரைந்து அதுவாகவே ஆகி அதனையும் செய்வது உண்டு. அல்லது அந்த மகாசக்தியின் மகாபக்தையாகி, இவள் எது கோரினாலும் அதை மகாசக்தி மறுக்கவொண்ணாத நெருக் கத்தில் நிற்பதும் உண்டு. ''எனக்கு ஓர் இச்சை வந்துவிட்டால் அதை பகவான் உடனுக்குடனே பூர்த்தி பண்ணிவிடறார். 'இது இப்படி நடக்கணும்'னு நான் சங்கல்பம் செய்துவிட்டால் டாகுர் அதை அப்படியே நடத்தி வைச்சுடுவார். இதைப் பார்க் கிறபோதும், என் வாழ்க்கையிலே தொடர்ச்சியாக நடந்திருக் கிற பல அசாதாரண சம்பவங்களை நினைக்கிறபோதும், மற்ற ஜனங்கள் என்னை அம்பாள்னு சொல்கிறதும் சரியாகத்தான் இருக்குமோன்னு தோணறது'' என்றாள் அம்மா ஒருமுறை.

தன் குழந்தைகளின் கர்மபாரத்தையும் குறைக்க வேண்டும் என்ற அதிமாநுஷ்ய இச்சாவேகம் உண்டான ஒரு சந்தர்ப்பத்தில்தான் இந்த அத்தியாயத் தொடக்கத்தில்

சொன்னதுபோல் அக்குழந்தைகளின்பேரில் தனக்கு மலரஞ்சலி செலுத்தச் சொன்னாள் தேவி சாரதாமணி.

எல்லோரும், எல்லாமும் அவளுக்குக் குழந்தைகள்தாம் இருப்பினும் அதிலும் ஒரு நுண்ணிய பாகுபாடு இருந்தது. அவளது உறவினர் குடும்பத்துக்கும், உலக குடும்பத்துக்கும் இடையே ஸ்ரீராமகிருஷ்ண சங்கக் குடும்பத்தினர் தனித்ததோர் இடம் பெற்றிருந்தனர். அதனால்தான் முதலில் இந்த ராமகிருஷ்ண சங்கத்தின் குழந்தைகளைக் குறிப்பிட்டுச் சொல்லி பிறகு உலகக் குழந்தைகள் அனைவரையும் சேர்த்துக் கூறி, பூ தூவச் சொன்னாள்.

எனவே நானும் முதலில் அவள் ராமகிருஷ்ண சங்கத்தினரிடம் கொண்டிருந்த சிறப்பான வாத்ஸல்யத்தைப் பார்த்து விட்டு, அதன்பின் பக்தருக்கெல்லாம் பாலனம் தந்த பரம மாதாவாக அவள் இருந்ததைப் பார்ப்போம்.

ராமகிருஷ்ண சங்கத்தில் அம்மா நேரடியாகப் பதவி ஏதும் வகிக்கவில்லை. ஆயினும் அவளே அதன் ஜீவநாடியாக இருந்தாள். ஏன், அதன் மூலமே அவள்தான். ராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பின் இந்த சிஷ்யப்பிள்ளைகள் சிதறிவிடாமல் ஓர் அமைப்பின் கீழிருந்து அறம் வளர்க்கவேண்டும் என்று அவள் கண்ணும் கண்ணீருமாகச் செய்த பிரார்த்தனையின் பலத்தில்தான் ராம கிருஷ்ண சங்கமே தோன்றிற்று. இந்தப் பிரார்த்தனையும் அதிமானுஷ்ய இச்சா பலத்தில் பிறந்ததாகவே இருக்கவேண்டும். ராமகிருஷ்ண சங்கத்தை வெளிப்படத் தோற்றுவித்த ஸ்வாமி விவேகாநந்தர் இதை உள்ளூறத் தோற்றுவித்தவள் தேவியே என்பதை உணர்ந்திருந்ததால்தான், தமக்கு ராமகிருஷ்ணர் அருளியுதவிடவும் பலப்பல மடங்குகள் அதிகமாகக் கருணை பொழிந்தவள் அம்மாவே என்று கூறினார்.

ராமகிருஷ்ண சங்க சிஷ்யர்கள் வெகு எளிதில் அம்மாவின் தெய்விகத்தை உணர்ந்துவிட்டனர். ஆரம்ப காலத்தில் அவளை குருபத்தினி என்று மட்டும் மதித்தவர்களும் விரைவிலேயே அவளுக்கே அவளுக்கு என்று இருந்த அவதார விசேஷத்தைப் புரிந்துகொண்டனர். இதனால் அம்மாவின் கருத்துக்குச் சங்கத்தினர் முழுமனத்தோடு அடிபணிந்தனர். அவளை ராம கிருஷ்ணர் வழிபட்ட காளி பவதாரணியின் மறு உருவாகவே அவர்கள் மதித்து அவள் கிழித்த கோட்டைத் தாண்டாமல் இருந்தனர்.

அவர்கள் இத்தனை மதிப்புத் தந்தபோது அம்மாவும் அந்த விசேஷ புத்திரர்களுக்கு விசேஷ மதிப்புத் தந்தாள். ஈசுவராவ

தாரமான தன் பதிதேவரின் பணியைச் செய்வதற்காகவே உலகில் வந்த இந்த சிஷ்யமணிகள் சாதாரண ஜீவகோடியைச் சேர்ந்தவரல்ல என்பதும், அவர்கள் தெய்வ சக்தி பொருந்திய ஈசுவர கோடியைச் சேர்ந்தவர்கள் என்பதும் அவளது துணிபு. அதனால் அவர்களுக்குத் தனித்த கௌரவம் தந்தாள்.

உதாரணம்: பிரம்மசாரி ராஸவிஹாரி (ராஷ்பிஹாரி) அவளுக்குப் பச்சைக் குழந்தை போல. ஒரு சமயம் அம்மாவின் குதிகாலில் எச்சில் ஒட்டிக்கொண்டபோது, இந்தப் பிள்ளை அவளது காலில் நீர் வார்த்துக் கழுவப் போனார். பதறிவிட்டாள் அம்மா. சரேலெனக் காலைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டாள். மாத்ரு பாவத்தோடு மரியாதையும் இழைகிற குரலில், "கூடாது ராஜா, இந்தக் காரியம் நீ செய்யத் தகாததப்பா. உங்களை எல்லாம் தேவர்களும் பூஜை பண்ணணும். அப்பேர்ப் பட்ட யோக்கியதை வாய்ஞ்சவா நீங்கள்" என்றாள்.

எப்போதுமே அவர்கள் உண்டு முடிந்த பின்தான் அம்மா உண்பாள். பிடிவாதமாக அவளே அவர்கள் உண்ட இடத்தில் எச்சில் எடுத்து சுத்தம் செய்வாள். இதற்கு ராமகிருஷ்ண சங்கத்தினரிடம் அவளுக்கிருந்த மதிப்புணர்ச்சிமட்டும் காரணம் என்பதற்கில்லை. சங்கத்தினர் மட்டுமின்றி எல்லா அடியார் விஷயத்திலுமே அம்மா இதை ஒரு விதிபோல் பின்பற்றினாள். தெய்வப் பிறவியும், குருஸ்தானம் கொண்டவளுமான தேவி இவ்விதம் செய்வதால் தங்களை அபசாரம் வந்தடைந்துவிடும் என்று பக்தர்கள் அஞ்சிக் கூறியபோது அம்மா மோகன முறுவலுடன், "தெய்வம், குரு எல்லாம் கிடக்கட்டும். நான் அம்மா, நீங்க குழந்தைகள் என்கிற ஒண்ணுதான் எனக்குத் தெரியறது. குழந்தை வயிறு ரொம்பினால் ஒழிய எந்தத் தாயா ருக்கும் ஆகாரம் ஏற்காது. எச்சில் எடுப்பதைப் பெரிசு படுத்த றேளே; குழந்தைகள் அம்மாக்காரியின் புடைவையிலேயே அசிங்கம் பண்ணினாக்கூட அது அவளுக்கு வித்தியாசமாகத் தெரியுமா? அசடுகளா, அம்மா கிட்டே போய் அபசாரம், அபராதம் என்றெல்லாம் பேசாதேயுங்கோ" என்றாள்.

நிற்க. தன் உறவினரைவிட ராமகிருஷ்ண சங்கத்தினரையே அம்மா மிக நெருங்கியவராகக் கருதினாள். உறவினரை இந்தப் பசங்களிடம் விட்டுக்கொடுத்துப் பேசுவதுபோல், இவர்களை ஒருநாளும் பந்துக்களிடம் விட்டுக்கொடுக்க மாட்டாள். தான் அந்தப் பிள்ளைகளை மதிப்புணர்ச்சியுடன் நடத்துவது போலவே தன் உறவினரும் நடத்தவேண்டும் என்பதில் கவன மாக இருந்தாள். அந்த அருமைக் குழந்தைகளின் தூய்மைக்குத்

தன் சுற்றத்தினரால் இம்மியும் ஊறு நேர்ந்து விடலாகாது என்பதில் கண்குத்திப் பாம்பாக இருந்தாள்.

ஒரு முறை 'கல்கத்தா' உத்போதனில் 'கல்கல்' என்று சலங்கை குலுங்க ராது நடந்தபோது சீறினாள் அம்மா. ''ராது! உனக்கு லஜ்ஜையே இல்லே? கஜ்ஜை கட்டிண்டு சதிர் பண்ணறயே! கீழே இருக்கிற என் தபஸ்விக் குழந்தைகள் வேடிக்கைக்காக இங்கே வந்திருக்கான்னு உனக்கு எண்ணமா? யம நியமாதிகளை அநுஷ்டிச்சுண்டு அந்தப் பசங்கள் இருக்கிற இடத்திலே இந்த ஜில்ஜில் பாதசரமெல்லாம் உதவாது. முதல் காரியமா அதை அவிழ்த்தெறி'' என்றாள் அருமந்த மருமாத்தியிடம்.

இன்னொரு நாள் ராது தலைக்கு ஸ்நானம் செய்துவிட்டுத் தன் அழகிய அளகபாரத்தை விரித்துப் போட்டுக்கொண்டு கண்ணாடி எதிரே நின்று குழல்களைச் சுருட்டி விட்டுக்கொண்டிருந்தாள். தேன் வாக்கே சிந்தும் அம்மாவின் மலர் வாயிலிருந்து அனல் கங்குகள் தெறித்தன. ''அடியே ராது! அடாத காரியம் பண்ணுகிறே! என் ரிஷிக் குழந்தைகள் இருக்கிற இடத்திலே இந்த மேனாமினுக்குத்தனமெல்லாம் இனியும் பண்ணினயோ உன்னை க்ஷணகாலம் இங்கே வைச்சுக்க மாட்டேன், ஆமாம்!'' என்றாள்.

அம்மாவின் பந்து ஒருத்தி வேகமாகச் செல்கையில் அவளுடைய முந்தாணி வீசிவந்து பிரம்மசாரி ஒருவரின்மீது பட்டுவிட்டது. அம்மாவுக்கு வந்ததே கோபம். ''அடியம்மா, மகராஜி! புடைவைத் தலைப்பைக் காற்றுப்போகிற வாட்டிலே நீ அலட்சியமாகப் போட்டுண்டு இருக்கிறதும், போறாக்குறைக்கு அதை என் பிள்ளைமேலே வீசிண்டு போறதும் லட்சணமாகத்தான் இருக்கு. இந்தக் குழந்தைகள் நமஸ்காரத்துக்கு உரியவா. மனசுலே மரியாதை இருந்தா, உடம்பிலே இத்தனை அலட்சியமும் அஜாக்கிரதையும் இருக்குமோ? முதல்லே அவனுக்கு நமஸ்காரம் பண்ணி மன்னிப்புக் கேட்டுக்கோ'' என்றாள் தேவி.

இவர்கள் அம்மாவின் உறவினர் ஆயிற்றே என்பதற்காக ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் அவர் பொருட்டுத் தங்கள் ஆசரணைகளை விட்டுக் கொடுப்பதற்கு அம்மா அநுமதிக்கமாட்டாள். ஒரு திருஷ்டாந்தம்; கிரிஜா என்ற பிரம்மசாரி நீண்ட நாட்கள் அம்மாவின் குடும்பத்தில் பழகியவர். இவரை அம்மாவின் சகோதரர் பிரஸன்னகுமார் தமது இரண்டாவது கல்யாணத்துக்கு அழைத்திருந்தார். அம்மா குறுக்கிட்

டாள். ''அவன் சந்நியாசியாகப்போறவன். கலியாணம். கார்த்திகைக்கெல்லாம் அவனை அழைக்கக்கூடாது'' என்ருள். தீர்மானமாக. அது மட்டுமல்ல, திருமணம் முடிந்து திரும்பிய பின்னர் அம்மா அனைவருக்கும் உணவு பரிமாறுகிருள். கிரிஜாவின் இலை எதிரே நின்று, ''அப்பனே, உனக்குத் தயிர் வார்க்கட்டுமா?'' என்று கேட்கிருள். கேட்காமலே பரிமாறுவதுதான் அம்மாவின் வழக்கம். இன்று அவள் கேட்பதில் ஏதோ சூக்ஷ்மம் உள்ளது என்று புரிந்துகொள்கிருர் அவளது புத்திசாலிப் பிள்ளை. ''வேண்டாம், அம்மா'' என்கிருர். ''நல்லவேளை! இது பெண் வீட்டார் கட்டுச் சாதத்தோடு வைச்ச தயிர். உனக்கு ஏன் அது சேரணும்?'' என்று கேட்டு அம்மா நிம்மதிப் பெருமூச்சு விடுகிருள். (ஈமச் சடங்குகளின் தொடர்பு கொண்ட அன்னத்தையும், விவாகம் முடிந்தபின் சாந்திக் கலியாணத்தில் நடத்தும் விருந்தையும் தம் சீடர்கள் ஏற்கலாகாது என ராமகிருஷ்ணர் விதித்தது நினைவுகொள்ளத் தக்கது.)

அம்மாவிடம் மிகுந்த ஈடுபாடுகொண்ட இல்லறச் சீடருடன் ஒரு சந்நியாசிப் பிள்ளை யாத்திரை புறப்பட்டார். அம்மா அவரிடம், ''யாத்திரை முழுக்க கிருஹஸ்தாளோடு நீ நெருங்கிப் பழகவேண்டியிருக்கும். ஒரே ரெயில் பெட்டியிலே அவாளோடு நெருக்கிண்டு பிரயாணம் பண்ண வேண்டியிருக்கும். அவா பலதினுசாப் பேசுவா, சாப்பிடுவா. அந்தச் சகவாசம் உனக்கு வேண்டாம்'' என்று கூறித் தடுத்தாள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து ஸ்வாமிகள், பிரம்மசாரிகள் ஆகியோர் ஒவ்வொருவருடனும் அம்மாவுக்கிருந்த நேயத்தை விவரிக்கப் புகுந்தால் அதுவே ஒரு மாபாரதமாக விரியும். ஓரிரு பொறுக்குமணியான நிகழ்ச்சிகளுடன் திருப்தி அடைவோம்.

ஒரு சமயம் பிரம்மாநந்த ஸ்வாமிகள் சிறிது காலம் கண்காணுப் பிரதேசங்களுக்குச் சென்று ஏகாந்தமாக, ஏகாங்கியாக வாழ எண்ணினுர். அம்மாவின் அநுமதி கோரி எழுதினுர். அதைக் கேட்டவுடன் அம்மா அனலிடை மெழுகாக உருகினுள். ''இந்தப் பனிக்காலத்தில் என் குழந்தை வனவாசம் செய்யப்படுமா? புரிஜகந்நாதத்திலேயே குளிர் தாங்காம அவனுக்கு ஜலதோஷம் வந்துடுத்தே! போகத்தான் வேணுமானுல் மாசி மாசம் போனவிட்டுக் கொஞ்ச நாள் எங்கேயாவது ஏகாந்தமாகத் தபஸ் பண்ணிட்டு வரச் சொன்னேன்னு எழுது'' என்று சீடப் பிள்ளையிடம் கூறினுள்.

விரஜேசுவராநந்தர் பாதாசாரியாகக் காசியாத்திரை செய்யும் உத்தேசத்துடன் அம்மாவிடம் வந்து உத்தரவு கேட்டார். அம்மா கசிந்து போனுள். "இது கார்த்திகை மாசம். மிருத்யு நாலு திசைக் கதவையும் திறந்து வைச்சிண்டிருக்கான்னு வசனம் சொல்வா. நான் ஒரு தாயார். 'நீ போகலாம்'னு என்னுலே எப்படிச் சொல்ல முடியும்? கையிலே கால் காசு வைச்சுக்காமல் பைராகியாகப் போகணும்னு உனக்கோ ஆசை. ஹூம்..." என்று நெடுமூச்செறிந்தாள்.

விரஜேசுவராநந்தர் தம் திட்டத்தை நிறுத்திவைத்தார். அவருக்கு எதனிடம் விரக்தி வந்தாலும் அம்மாவிடம் விரக்தி வரமுடியாதல்லவா?

தனது சந்நியாசி பிரம்மசாரிக் குழந்தைகளுக்கு போக போக்கியம் உதவாது என்று தேவி அறிவாள். ஆயினும் அவளது தாயுள்ளம் காரணமாக, அவர்கள் எப்போதும் வயிறு நிறைய உண்ணவேண்டும், கந்தலும், அழுக்கும் இல்லாமல் போதிய வஸ்திர வசதி பெற்றிருக்க வேண்டும், வானம் பார்க்கவோ, மரத்தடியிலோ வசிக்காமல் ஏதோ ஒரு குச்சில் வசிக்க வேண்டும் என்று எண்ணிப் பிரார்த்திப்பாள். இதனுல் பாதி தர்மத்துக்கு ஒவ்வாத ஆடம்பரங்களை அவள் ஆமோதித்ததாக ஆகாது. இந்த 'ஆடம்பர'ங்களில் முதலாவதாக அவள் கருதியது, 'நான் ஒரு யதி' என்ற எண்ணத்தில் பிறக்கும் உயர்வுணர்ச்சியேயாகும்.

அருபாநந்தரிடம் அம்மா சொல்வாள்: "சந்நியாச ஆசிரமமே ஒரு ஜம்பத்தை உண்டாக்கக்கூடும், தெரியுமோ? இது கிட்ட ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். 'லௌகிகத்திலே உழலுகிற மற்ற ஜனங்களைவிட நான் உசத்தி: என்னை அவா மரியாதையா நடத்தணும்'னு சந்நியாசிக்குத் தோணக்கூடும். 'மற்றவா செய்யாததை நான் செய்யறேன்'னு உள்ளூற சாதுக்களுக்குச் செருக்கும் ஏற்பட்டு விடலாம். நல்லவேளை! தப்பிச்சேண்டாப்பா!" என்று வெள்ளைக் குழந்தையாகச் சிரித்துச் சொன்ன தேவி, தன் வெள்ளைப் புடைவையைத் தொட்டுக் காட்டிக் கொண்டாள். கடைசி வரை காவி உடுத்தாதவளாயிற்றே!

பிழை செய்வோரிடமும் துறவிகளுக்கு அநுதாபம் இருக்க வேண்டும் என்பாள் தேவி. பேலூர் மடத்து சாது ஒருவர், அழிம்பு செய்து வந்த ஒரு பணியாளை அடித்துவிட்டார் என்று கேள்விப்பட்ட அம்மா கேலிச் சிரிப்பொன்றை வெடிக்கவிட்டாள். "என்ன விந்தையடா, ஈசுவரா! இவாளுக்கு 'சந்நியாசி'ன்னு பெத்தப் பேரு. நியாயமாப் பார்த்தால் இவா ஆகா

சமே கூரை, பூமாதேவியே தரைன்னு இருக்கவேண்டியவா: இவாளுக்கு மோக்ஷமாக 'சொந்த' மடம்! அந்த மடத்திலே இவாளுக்கு ஊழியம் செய்ய ஆள் வேறு! அதுவும் போறு துன்னு அந்த ஆளை அடிக்கிற அளவுக்கும் போயாச்சு! பிர மாதந்தான்!'' என்றாள்.

''சந்நியாசம் வாங்கிண்டதாலே டாகுர் உங்களுக்கு ஸ்பெஷல் அநுக்கிரஹம் தரணும் என்று எதிர்பார்க்க வேண் டாம்'' என்று வலியுறுத்துவாள் அம்மா.

''கடவுளைக் காண வேண்டும் என்ற ஒரே தாபத்துடன் ஹ்ருஷீகேசத்துக்கு வந்து கடுங் குளிரில் தவமிருக்கிறேன். இன் னமும் அவன் தரிசனம் தரவில்லையே!'' என்று ஒரு துறவிப் பிள்ளை எழுதியிருந்தார். அம்மா கடிதம் எழுதும் சிடரிடம் சொன்னாள்: ''நான் சொல்கிறதை அவனுக்குப் பதிலாக எழுதிப் போடு: 'நீ ரொம்ப தூரம் பிரயாணம் பண்ணி ஹ்ருஷீகேசம் வந்திருக்கே என்கிற காரணத்துக்காக சர்வலோக நாதனை பகவான் உன் எதிரிலே வந்து குதிக்கணும்னு கட்டுப்பட்டிருக்கலே. சந்நியாசியானவன் பகவானுக்காக மட்டுமே தபஸ் இருக்கிற திலே அதிசயம் எதுவும் இல்லே. ஜன்மா முழுக்கத் தபஸ் பண்ணுகிறதைத் தவிர அவனுக்கு வேறே என்ன வேலே வைச் சிருக்கு?'— இப்படி எழுதிப் போடு.''

ஆத்மிகத்தை விட்டுவிட்டும் சாதனைகளைத் தளர்த்திக் கொண்டும் சந்நியாசிகள் சமூகசேவை செய்வதை அம்மா ஒப்ப வில்லே. தன்மயாநந்தரிடம் கூறுகிறாள்: ''வீட்டுப் பந்தம் வேண் டாம்னு சந்நியாசி ஆனபிறகு, பொதுமனுஷாள்னு பந்தம் உண்டாக்கிண்டா அதிலே என்ன பெருமை? இருப்புச் சட்டியி லிருந்து நெருப்புக்கட்டியிலே விழுந்த மாதிரிதான். பகவத் ஸ்மரணைக்குப் பிரதிகூலமாக ஆகிற அளவுக்குப் பொதுத் தொண்டு வேண்டியதில்லே. தெய்வ சிந்தனை குறைஞ்சு, சமூக சேவையில் ஜாஸ்தி ஈடுபடறபோது, சில தனி மனுஷாள்கிட்டே தொடர்பும் அதிகமாயிடும். அதோடு, இந்தத் தொண்டிலே தனக்குப் பேரும் புகழும் வரணும்னு அரிக்கத் தொடங்கும். இந்தப் பாராட்டுக்காகவேகூடச் சிலபேர் மடத்திலே சேரக் கூடும். மடத்திலே புகழுக்குப் புகழ், சௌகரியத்துக்கு சௌ கரியம் கிடைக்கிறது என்றால் அத்தியாத்ம அப்பியாசங்களிலே நாட்டமே குறைகிற ஆபத்து உண்டாயிடும். வீட்டை விட்டு மடம்; ஆனால் அந்த மடத்தை விடவே முடியாது என்கிற அள வுக்கு ஆசையை வளர்த்துண்டால் அது சாது லட்சணமில்லே.''

எப்படி 'டான் டாண்' என்று பேசுகிறாள், பாருங்கள். சத்தியம் தவிர வேறெதற்கும் கட்டுப்படாத தூய்மையின் வாய்மை!

பிரம்மசாரி சிஷ்யர்கள் வயதில் சிறியவர்கள். இளம் பருவத்தில் வீடு வாசலை விட்டு வந்த இந்தப் பிள்ளைகளிடம் அம்மா 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவாக' நடப்பாள். எத்தனையோ உதாரணங்களை அடுக்கலாம். பிரம்மசாரி ஞானருக்குக் கைமுழுதும் சிரங்கு அப்பியிருந்தபோது அம்மாவே சாதம் பிசைந்து அவர் வாயில் ஊட்டிவிட்டாளே, அதொன்று போதாதோ?

ராஸவிஹாரியை எப்படி எல்லாம் சீராட்டினாள்? பாலப் பருவத்திலேயே தாயை இழந்த அவருக்கு எதையுமே 'அம்மா' என்றழைத்துப் பழக்கமில்லை. சாட்சாத் சாரதையைக்கூட அப்படி அழைக்க அவருக்குக் கூச்சமாகத்தான் இருந்தது. இதைக் கண்டும் காணாததுபோலிருந்த தேவி ஒரு நாள் அவரிடம் யாருக்கோ ஏதோ சேதி சொல்லி அனுப்பினாள். "நான் சொன்னதை அவர்கிட்டே சரியாகச் சொல்லுவியா? எங்கே, முதல்லே எங்கிட்டயே ஒப்பி. பார்க்கலாம்" என்றாள். உடனே ராஸவிஹாரி, "டாகுர் பத்தினி இந்த மாதிரி சொன்னாங்க...." என்று ஒத்திகையைத் தொடங்கினார். அம்மா தடுத்தாள். "ஆரம்பமே தப்பு! 'அம்மா இந்த மாதிரி சொன்னாங்க'ன்னு சொல்லணும். ஊம், சொல்லு பார்ப்போம்" என்று ஊக்கினாள். வெட்கத்துடன், "அம்மா" என்கிற மகாப்பிரேம மந்திரத்தைச் சொன்ன ராஸவிஹாரி, நாளடைவிலே மந்திரத்தில் கட்டுண்ட சர்ப்பமாக அம்மாவின் அன்பிலே கட்டுண்டு விட்டார். அம்மாவாகத்தான், அம்மாவாக மட்டுமே இருப்பேன் என்று இப்படிப் பிடிவாதம் செய்து அன்பை வருவித்திருக்கிறாள்!

பிரம்மசாரி ராமமயரிடம் பிரேம மயமாக இருந்தாள் சாரதாதேவி. அவருக்குத் தாயாக இருந்தது மட்டுமின்றி, சமவயதுச் சகோதரியாக, ஏன் அவரைவிடச் சிறிய தங்கையாகவுங்கூட இருந்து அவரிடம் விளையாட்டுச் சண்டை போட்டு முரண்டியும் இருக்கிறாள். அம்மா, ராமமயர் இருவரும் கோதுமைமாவு உருண்டைகளைக் குழவிகளால் சப்பாத்திகளாக இட்டுக்கொண் டிருக்கிறார்கள். நளினி அவற்றை அடுப்பில் வாட்டி எடுக்கிறாள். "அத்தே! ராமு இடுகிற சப்பாத்தி எல்லாம் குண்டு குண்டாப் பூரிச்சுண்டு வரது. நீ இடறது ஏனோ சவங்கிப் போறது" என்றாள். அம்மாவுக்குப் பொத்

துண்டு வந்தது பொய்க் கோபம். ''நன்றாகச் சொன்னாயம்மா! நான் காலில் நகம் முளைச்ச நாளாகச் சப்பாத்தி இட்டு 'நிபுணி'ன்னு பேர் வாங்கினவ. இது நேத்திப் பிள்ளை. இவன் தொண்டையை அமுக்கின தாய்ப்பால் வாயிலேயிருந்து பீச்சி அடிக்கும். இவன் என்னை மிஞ்சிவிட்டானா? போ போ! அப்போ இவனையே சப்பாத்தி இடச் சொல்லி வாட்டிண்டிரு'' என்றாள். அதே கோபத்துடன் தன் பலகை, குழவி, மாவு எல்லாவற்றையும் தூரத் தள்ளிவிட்டு 'உர்' ரென்று உட்கார்ந்து விட்டாள். மகாத்மாக்களைப் போன்ற பச்சைக் குழந்தைகளை எங்குமே பார்க்க முடியாது!

கிழவிக்கு இத்துணை ரோஷம் என்றால் அந்தக் காளை சும்மா இருப்பாரா? ''நீங்க இடமாட்டேள்னா நானும் இட முடியாது, போங்கோ'' என்று சொல்லிவிட்டு ராமமயரும் உம்மணா மூஞ்சியாக உட்கார்ந்தார்.

நளினிக்கோ, இதேதடா தன் வாயால் வந்த வம்பு என்றாயிற்று.

நீண்ட நேர மௌனத்திற்குப் பின்னும் அம்மா இறங்கி வராதது கண்டு, ராமமயரே தழைந்து போகும்படி ஆயிற்று. ''நளினியக்கா! இப்போதான் தெரியறது. நீங்க நானும் அம்மாவும் இட்ட சப்பாத்திகளை மாற்றி நினைச்சுத் தப்பாகச் சொல்லிட்டேள்'' என்றார்.

''வந்தயா வழிக்கு'' என்று கேட்டபடி அம்மா பலகையை யும் குழவியையும் இழுத்துக் கொண்டாள்!

தோட்டக் கலையில் தனி ஆர்வம் கொண்டவர் ராமமயர். அந்தப் பிள்ளை ஓயாமல் தோட்ட வேலை செய்கிறதே என்று அம்மாவுக்கு ஏக கரிசனம். ஒரு நாள் பிற்பகல் அவர் எங்கோ சென்றிருந்தபோது அம்மாவே மல்லிகைச் செடிகளின் வேரைக் கிளறி விடலானாள். எங்கிருந்தோ குதித்து அவளைத் தடுத்தது அருமைப் பிள்ளை. அம்மா விடவில்லை. ''ராஜா! தோட்ட வேலை முழுக்க நீயேதானே செய்கிறே? டாகுருக்குப் பிரீதியான மல்லிகைக்காவது நான் துளி காரியம் பண்ணுகிறேன்! இது அரும்பு கட்டுகிற பருவம், இந்த மாதிரி வேர் மண்ணைக் கிளறி விட்டா, நீ சாயங்காலம் கொட்டுகிற ஜலம் நன்னா உள்ளே ஊறும்'' என்றாள்.

பத்மகரவீரம் என்ற அடுக்கரளி கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த சமயம். யாரோ பறிக்கப் போனார்கள். ''ஊஹூம்'' என்று ஆட்சேபித்தாள் அம்மா. ''இது ராம்மயீ வைச்ச பதிய

ளுக்கும். அவன் வந்து செடியிலே பொல்லுன்னு பூத்திருக்கிறதைப் பார்த்துத் தானும் மலரட்டும். அவன் கையாலேயே முதல் மாசூலைப் பூஜைக்குப் பறிச்சுத் தரட்டும்'' என்றாள்.

ராமமயர் வந்தார். அம்மா எதிர்கொண்டு சென்று அவர் கையைப் பற்றி இழுத்து வந்து அடுக்கரளிச் செடியருகே நிறுத்தினாள். ''ராமூ! என்ன அழகு பார்த்தியா? மெல்லிசா ஒரு மணம்கூட இருக்கு. உன் கை விசேஷந்தான். நீயே பறிச்சு டாகுருக்கு எடுத்துண்டு வா'' என்றாள். பூக்கூடையைக் கொண்டு வந்து அவர் கையில் திணித்தாள்.

ராமமயர் அன்பு மலரின் அடுக்கடுக்கான செவ்வி கண்டு சொக்கி நின்றார்.

அடை அடையாக நெல்லிக்காய்கள் அப்பியிருந்த ஒரு கிளையை அப்படியே ஒடித்துவந்து அம்மாவிடம் ஒரு நாள் கொடுத்தார் ராமமயர். ''ராம்மயீ! கிளையை ஒடிக்கிறது தோஷமப்பா! அதிலும் நெல்லி மரத்தின் கிளையை முறிக்கவே கூடாது. தேவகணங்கள் அத்தனையும் ஆமலக விருட்சத்தின் அடியில் இருக்கிறதாக ஐதிஹ்யம். அதுவுமில்லாமல், இந்த நெல்லிமரம் ஆமோதர் நதி உத்தரவாஹினியாக (தெற்கிலிருந்து வடக்கு நோக்கி) ஓடுகிற திருப்பத்தில் இருக்கிறதாலே இது மகா புனிதமானது. இதைப்போய் ஒடிச்சுட்டியே! போனது போகட்டும். ஒரு பரிகாரம் சொல்றேன்: இந்த நெல்லி இலைகளைப் பக்குவமாகக் கிள்ளி வை. அது பில்வத்துக்கு சமானம். அதனாலே டாகுருக்கு அர்ச்சனை பண்ணறேன்'' என்றாள் அம்மா.

ராமமயரிடம் அவளுக்கிருந்த அதே தாயன்பு, மரம் செடி கொடிகளிடமும் இருந்தது!

வயதில் சிறியவர்களான பிரம்மசாரிகள் தவறு செய்யும் போது பெரிய சாதுக்கள் அன்பு வழியிலேயே அவர்களைத் திருத்துவதில் முனைப்புக் காட்டவேண்டும் என்பது அம்மாவின் கருத்து. அராக்கட்டைகளிடம் கண்டிப்புக் காட்டுவதை அவள் ஆட்சேபிக்கவில்லை. இருப்பினும் இளையோரிடம் முதியோர் இளகிய மனத்துடன் நடக்கவேண்டும் என்பதே அவளது பொதுக் கொள்கை.

பேலூர் மடத்தில் பிரம்மசாரி நாகேன் ஏதோ தவறு செய்துவிட்டு, மானேஜர் சிவாநந்தர் தம்மைத் தண்டிப்பார் என்ற பயத்தில், கட்டிய துணியுடன் ஜயராம்பாடிக்கு ஓடிவந்துவிட்டார், அம்மாக் கோட்டையில் அடைக்கலம் பெற. அவர்

என் வந்தார் என்று வினவுமுன்னரே அவரது பஞ்சடைந்த கண்கள்தாம் அம்மாவின் நெஞ்சில் குத்தின. அவரை உட்கார வைத்து வயிறுமுட்ட உணவு படைத்தாள். அவரது அழுக்கான கிழிசல் வேஷ்டியைக் களையச் சொல்லி, நல்ல வேஷ்டியும் மேல் துண்டும் குடுத்தாவும் கொடுத்தாள். அப்புறம்தான் அவரைப் பேசவிட்டாள். நாகேன் பயந்து பயந்து சங்கதியைச் சொன்னார். ''இவ்வளவு தானேயப்பா?'' என்று அம்மா ஆறுதல் வழியச் சொல்லிவிட்டு, சிவாநந்தருக்குக் கடிதம் டிக்டேட் செய்தாள்.

என் பிரிய தாரக்!

அம்மாவாகப்பட்ட எவளும் தன் பிள்ளையின் குற்றத்தைப் பொருட்படுத்தியது என்பது உண்டா? நாகேனும் என் பிள்ளை. உனக்கு அஞ்சி என்னிடம் தஞ்சம் என்று வந்திருக்கிறுன். மகனே, அவனைத் திரும்பவும் பேலூருக்கே அனுப்பிவைக்கிறேன். அவன்மேல் நடவடிக்கை எதுவும் எடுக்காதேயப்பா!

உன் அன்பு

அம்மா.

நாகேன் மீளவும் பேலூர் மடத்தில் நுழைந்தவுடன் சிவாநந்தர் ஓடோடி வந்து அவரை ஆரத் தழுவிக்கொண்டார். ''தம்பி! ஹைகோர்ட்டுக்கே போய் என்மேல் பிராது கொடுத்து ஜயிச்சுண்டு வந்துட்டியா? பேஷடா ராஜா!'' என்று ஆர்ப்பரித்தார். நல்ல அம்மாவுக்கேற்ற நல்ல பிள்ளைகள்!

பிரம்மசாரி ஒருவர் காலம் கடந்து உத்போதகனுக்கு வந்து உணவுக்காக நின்றுர். சற்றே கடின மனமும் தடித்த வாக்கும் கொண்ட கோலாப்-மா அந்தப் பிள்ளையிடம் சுடுசொற்களை வீசிவிட்டாள். அம்மா உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள். ''என் பிரிய கோலாப். வேளை கெட்ட வேளையில் வந்தால் அதற்காக ஆத்திரமா படுவது? வேளை கெட்ட வேளையில் வந்தானேன்னு வழக்கத்தைவிட அவசரமாக இலையைப் போட்டுச் சாப்பாடு பரிமாறவேண்டாமா? டாகுர் குடும்பம் பெரிசாயிண்டே வர்றது; குழந்தைகள் இங்கே அன்னத்துக்காக வந்தபடிதான் இருப்பா. அதனாலே கூடுதலாகவே சமைச்சு, எப்பவும் இரண்டு அதிகப்படி மனுஷ்யாளுக்கு ஆகாரம் ஸித்தமா வைச்சிருக்கணும்.''

* தாரக் என்பதே சிவாநந்தரின் பூர்வாசிரம நாமம்:

இப்படிச் சொல்லிக்கொண்டு அம்மாவே வந்து அந்தப் பிள்ளைக்கு ஆசனமும் இலையும் போட்டு, ''நீ சாப்பிட உட்காரு, ராஜா!'' என்றாள்.

பரிமாற வந்த கோலாப் அம்மை கொஞ்சலான கோபத்தோடு, ''ஆமாம், இவரு உங்க மாமனார். எப்பவேனு சக்கரவர்த்தியாட்டம் வருவாரு. பயந்து நடுங்கிண்டு ஊழியம் பண்ணுங்கோ'' என்றாள்.

''வாஸ்தவம்தான். இவாளெல்லாம் எனக்கு மாமனார்தான். என் மாமனாருக்கு நான் பணிவிடையே பண்ணினதில்லையோன்னோ? அந்தக் குறை தீரத்தான் இவாளெல்லாம் வந்திருக்கா'' என்றாள் சாரதாதேவி.

* * *

பெண்களிலும் பலரைப் பிரம்மசாரிணிகளாகப் பயிற்றுவித்தாள் நம் அம்மா. தூய்மையைக் காக்கக்கூடிய ஜீவன் என்று அவளுக்கு உறுதிப்பட்டுவிட்டால் போதும்; இரு பாலாருக்கும் பிரம்மசரிய நியமம் தருவாள். மைசூர் நாராயண அய்யங்காரின் மகள் பிரம்மசாரிணியாக இருக்க விருப்பம் தெரிவித்தவுடன், அதற்குச் சம்மதம் தருமாறு அவளது தகப்பனாருக்கு அம்மா சாரதாநந்தரைக்கொண்டு எழுதினாள்.

''என் பெண் கலியாணம் பண்ணிக்கமாட்டேன் என்கிறா. ஸ்திரீ ஜன்மா எடுத்துட்டு நல்லபேரோடு ஏகாங்கியாக வாழ முடியுமா? நீங்கதான் அவளுக்குப் புத்தி சொல்லணும்'' என்று அம்மாவிடம் விஞ்ஞாபித்தாள் ஒரு தாய்.

அம்மா அந்தப் பெண்ணைப் பரீட்சித்து, அவளது தகுதியைப் புரிந்துகொண்டாள். அவளது தாயிடம், ''கலியாணம் பண்ணிக்காமல் காலம் முழுக்க இருக்கிற வெளி இடுக்கண், உள் இடுக்கண் இரண்டும் இருக்கத்தான் செய்யறது. ஆனாலும்கூட உன் பெண்ணைப் பலாத்காரமாக விவாக சந்தத்திலே சிக்க வைக்காதே! இன்னொருத்தனுக்கே அடிமையாக, அவன் இச்சைப்படியே ஆடிண்டிருக்கிற துன்ப ஜீவனம் இந்தக் குழந்தைக்கு வேண்டாம்'' என்று தீர்ப்புக் கூறினாள்.

பிரம்மசரியம் அநுஷ்டித்துத் தேறியவர்கள் பிற்பாடு கிரமமாக சந்நியாசம் பூணுவர்.

சந்நியாசத்துக்கு யோக்கியதாம்சம் உள்ள புள்ளி என்று அம்மாவின் ஞானதிருஷ்டிக்குத் தெரிந்துவிட்டால் உடனே அப்படிப்பட்ட நபருக்குத் தயங்காமல் துறவு தந்துவிடுவாள். அவளுடைய மருமான்களும், தம்பி பெண்ஜாதிகளும் தடுத்

நாலும் பொருட்படுத்தமாட்டாள். "ஹர்ப் பாவம் உங்கள் தலையில் விடியும். இந்தப் பிள்ளைகளைப் படிக்கவைச்சு ஆளாக்கினவாளும், கைப்பிடிச்ச பெண்ணும் உங்களைச் சபிப்பா" என்று அவர்கள் அம்மாவுக்கு 'பயம்' காட்டுவார்கள். அவளா பயப்படுவாள்? பயம் அவளுக்கு இல்லை. தயை அவளுக்கு இல்லாமலும் இல்லை. இந்தப் பிள்ளைகளின் பெற்றோரும், கலியாணமாயிருப்பின் இளம் மனைவியும் இவர்கள் துறவேற்பதால் படும்பாடு தயாமயியான அம்மாவுக்கா தெரியாது? நன்றாகத் தெரியும். அதைவிட நன்றாக அவர்கள் எல்லாரது பூர்வகர்மமும் அவளுக்குத் தெரியும். ராமகிருஷ்ண தர்மத்தின் எதிர்காலமும் அம்மாவுக்கு இதேபோல் தெள்ளெனத் தெரியும். ஓர் அணைகட்டி நீர் தேக்குவதென்றால் எப்படிச் சில கிராமங்களைக் கூட முழுகடிக்க வேண்டியிருக்கிறதோ, அப்படியே ஆத்மிகத் தேக்கம் ஒன்றை எழுப்பச் சில குடும்பங்களில் துன்பம் விளைவித்தே யாகவேண்டியிருந்தது!

அம்மாவின் உறவினர்கள் இந்தப் பிள்ளைகளின் மற்ற உறவினரைப்பற்றிப் பேசினார்கள். அம்மாவோ இதற்கெல்லாம் அடிப்படையான ஒரே பெரிய உறவைத்தான் முக்கியமாக எண்ணினாள்:

"இவளுடைய 'பெற்றோர் பெற்றோர்'னு நீங்க யாரையோ சொல்கிறேளே, உங்களுக்கு உண்மை தெரியுமா? இந்தப் பசங்கள் காக்காக் கூட்டிலே இருந்த குயில் முட்டைகளாக்கும். இப்போதான் நிஜமான குயிலம்மாவைத் தெரிஞ்சுண்டு வந்திருக்குகள்!" என்பாள் தேவி சாரதாமணி.

பெற்றோருடன் நில்லாமல், அம்பாளையே இழுத்து அத்தையை பயமுறுத்தினாள் மாகு. "அத்தே! கிருஹஸ்தாசிரமும் எத்தனையோ உசத்தியானதுன்னு சாஸ்திரங்கள் சொல்றதாம். லோக விவகாரம் தொடர்ந்து நடக்கணும்னே ஆதி பராசக்தி அதை நியமிச்சிருக்கா. அதுக்கு மாறாக நீ இப்படி சந்நியாசிகளை சிருஷ்டி பண்ணினால் மகாமாயாதேவிக்கு உன்கிட்ட மகா கோபம் உண்டாயிடும். சிவா சந்நியாசம் வாங்கிக்கிறதுன்னா வேறே யார் கிட்டேயாவது போய்ச் சேரட்டும். நீ பழிக்கு ஆளாகவேண்டாம்" என்று பெரிய பேச்சுப் பேசினாள் மாகு. மகாமாயையின் பிரபாவத்தை அம்மாவிடமே அளந்தாள்.

அம்மாவோ முறுவலுடன், "அதே மகாமாயைதான் இதுகளைத் தெய்விகக் குழந்தைகளாக படைச்சிருக்கா; யாரும் மோந்து பார்க்காத நிர்மல புஷ்பத்தாலே பகவானை அர்ச்சிக்கிறமாதிரி, இந்தத் தூய பிள்ளைகள் ஈசுவரனை ஸ்மரிக்கிறதுக்கே

ஏற்பட்டிருக்கா. ஏண்டியம்மா, நீ பார்க்காத சம்ஸாரக் கஷ்டமா? உங்களோடு இருக்கிற சகவாஸ தோஷம் அவ்வப்போது என் எலும்புக்குள்ளேயே குடும்பத் தொல்லைகள் ஜ்வாலை வீசி விரிக்கிறதே! அதிலிருந்து இந்தக் குழந்தைகளை நான் காப்பாத்துவது ஒரு தப்பாகுமா?'' என்றாள்.

ஒருவரது குடும்ப நிலையை அம்மா அடியோடு புறக்கணித்து அவருக்கு சந்நியாசம் தந்தாள் என்று பொருள் கொள்ளக்கூடாது. நோயால்பாரா மடத்தின் தலைவர் கேதார் பாபு அவரது தாய்க்கு ஒரே ஆண் சந்ததி. இவர் துறவறம் யாசித்தபோது அம்மா, ''உன் அம்மா சம்மதம் தந்தால்தான் நீ சந்நியாசம் வாங்கிக்கலாம்?'' என்றாள். அவரது அன்னையிடமும் அவர் எவ்வாறோ ஒப்புதல் பெற்றுவிட்டார். சாரதையின் நவநீத நெஞ்சு நைந்திருக்கும் விதத்தில் அந்த மூதாட்டி சொன்னாள்: ''அம்மா, கேதாருக்கு ஆஸ்துமா உபாதி அதிகமாயிருக்கு. பொதுவாகவே பலகீனமா இருக்கான். நான் கண்ணை மூடுகிறதுக்கு முன்னால் அவனைப்பற்றிக் கெட்ட செய்தி என் காதிலே விழாமல் ரட்சியுங்கோ, தேவீ!''

''உங்கள் இஷ்டப்படியே நடக்கும்'' என்றாள் வரப்பிரஸாதினி.

அப்படியே நடந்தது.

கேதார் பாபுதான் பிற்காலத்தில் கேசவாநந்தஸ்வாமிகளாகி ராமகிருஷ்ண தர்மம் பரப்பியவர்.

தெய்வ தரிசனமோ, ஆத்மாநுபவமோ பெறுவதைவிடக் குடும்பத் தொல்லையிலிருந்து விடுபடுவதையே முக்கியமாகக் கருதி, மனைவி மக்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டுத் துறவு கொள்ள எண்ணுகிறவர்களுக்கு அம்மா சம்மதம் தரமாட்டாள். ''இப்போ சந்நியாச ஆசை வந்திருக்கிறது வாஸ்தவம். ஆனால் பூர்வத்திலே கலியாணம் பண்ணிண்டு. குழந்தை குட்டிகளைப் பெற்றிருக்கியோன்னோ? அவாளுடைய ஜீவனோபாயத்துக்கு வழி செய்யாமல் 'நான்பாட்டுக்குக் குஷாலா முண்டனம் பண்ணிண்டு கிளம்பறேன்'னு சொல்றயே! இது கொஞ்சமாவது நியாயமா?'' என்று கேட்பாள்.

அம்மாவிடம் கண்ணீரும் கம்பலையுமாக முறையிட்டுக் கொண்ட வயோதிக அன்னையரும், இளம் மனைவியரும் பலர் உண்டு. அம்மாவின் இளகிய நெஞ்சு பாடாகப் படுகிற தர்ம சங்கட சம்பவங்கள் அவை. ஒருவருக்கு சந்நியாசத்தில் அந்தரங்க சுத்தமான ஈடுபாடு இருந்து அவர் குடும்பத்தின் பராமரிப்புக்கும் போதிய வசதி செய்திருப்பின், அம்மா நிச்சய

மாக அவருக்குத் துறவுதர முடிவு செய்துவிடுவாள். ஆயினும் ஓர் அன்பு மகன், ஓர் ஆசை மணாளன் நிதி வசதி செய்து விட்டான் என்பதால் எந்தத் தாயோ, தாரமோ அவனை இழக்க முன்வருவாள்? அம்மாவிடம் ஆத்திரத்துடனும் க்ஷாத்திரத்துடனும் வந்து சாடிய பெண்களும் உண்டு. பரிவின் எல்லை நிலமாக, பொறுமையின் கொடுமுடியாக அவர்களுக்கு அம்மா சமாதானம் சொல்வாள், அதென்ன அற்புதமோ, அவர்களும் தாற்காலிகமாக அம்மாவிடமிருந்து விடைகொள்வர்.

பொதுவாக, ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையாக இருப்பவரும், பொருள் வசதியில்லாத குடும்பத்தவரும், சம்பந்தப்பட்டவர்களின் சம்மதம் பெற்று வந்தாலே அம்மா அவரது சந்நியாச ஸ்வீகரணத்துக்கு அநுமதி தருவாள்.

துறவு என்னும் துரீயாசிரமம் வழங்குவதில் அம்மா பின்பற்றிய மாறுபாடுகளின் உட்பொருள் அவள் ஒருத்திக்கே தெரியும். எடுத்த எடுப்பிலேயே சிலருக்கு அவள் தன் கையால் காஷாயம் அளித்து, சந்நியாச நாமமும் தருவாள். சிலரிடம் சம்பிரதாய பூர்வமாக விரஜா ஹோமம் செய்து அதன் பின் துறவறம் தழுவுமாறு பணிப்பாள். சிலரை ஸ்ரீராமகிருஷ்ண மடத்துக்கு அனுப்பி வைத்து பிரம்மாநந்தர், சாரதாநந்தர் போன்ஞேரிடம் சந்நியாச தீக்ஷை வாங்கிக்கொள்ளச் சொல்வாள். சிலருக்குத் தானே துறவாடை தந்தபோதிலும் துறவற நாமத்தை மடத்து சாது ஒருவரிடம் பெறுமாறு அனுப்பி விடுவாள்.

இவ்வாறு அம்மாவின் சந்நியாச குடும்பத்தில் ராமகிருஷ்ண மடத்துக்கு ஒரு விசேஷத் தொடர்பு இருந்தபோதிலும், ராமகிருஷ்ண மடத்தோடு அம்மாவின் அம்மாத்தன்மை முடிந்து விடவில்லை. ஒரு சந்நியாசி ராமகிருஷ்ண மடத்தை விட்டே போய்விட்டாலுங்கூட, அம்மாவின் மனத்தை விட்டு அவர் நீங்க இயலாது. மடத்தை விட்டுப் புறப்பட்ட ஒரு சாது அம்மாவிடம் வந்தபோது அவரும் உருகிவிட்டார்: அம்மாவும் உருகிவிட்டாள். புடவையால் முகத்தை மூடிக்கொண்டு அம்மா விம்மி விம்மி அழுதாள். அவரும் துரீயாச்ரமி என்பதை மறந்து கண்ணீர் விட்டார். 'அழுத முகத்தோடு அம்மாவிடமிருந்து போகப்படாது. முகத்தை அலம்பிண்டு வா'' என்ருள் தேவி. அவர் அவ்விதமே செய்து, புறப்படுகையில், ''குழந்தே! என்னை மறந்துடாதேயப்பா! நீ மறக்கமாட்டே என்கிறது தெரியும். இருந்தாலும் சொல்லணும் போலத் தோணினதாலே சொன்னேன்'' என்ருள்.

''நீங்களும் என்னை...'' என்று திணறினர் அவர்.

அம்மா இடைமறித்து, ''தாயார்க்காரி ஒருத்தி குழந்தையை மறக்கிறது சாத்தியமே இல்லையப்பா. நான் எப்பவும் உன் கூடவே இருந்துண்டிருப்பேன். ஆமாம், நம்பு. நிர்ப்பயமாக, ஆனந்தமாக இருந்துண்டிரு'' என்றாள்.

''நானிருக்க பயமேன்?'' என்றாள். மடத்தையே விட்டுப் போகிறவருக்கு எத்தனை அநுக்கிரஹம்?

சந்நியாசத்துக்குப் பக்குவம் பெறுமலே, ஏதோ ஓர் உணர்ச்சி வேகத்தில் துறவு கேட்பவர்களிடம் நமது மதுர மாதா, ''உனக்கு யோக்கியதாம்சம் இல்லை'' என்று புண்படப் பேசமாட்டாள். மாருக, கிருஹஸ்தாச்ரமத்தின் பெருமைகளை அவர்களிடம் விளக்கி அவர்கள் அதிலேயே வேருன்றுமாறு செய்வாள். ''உலகத்திலே எல்லாமே ஜோடி ஜோடியாகத்தானே இருக்கு? மநுஷ்ய சரீரத்திலேயே இரண்டு கண், இரண்டு காது, இரண்டு கை, இரண்டு கால் இப்படி வைச்சிருக்கு, பார்த்தியா? கலியாணத்தைப் பண்ணிண்டு ஜோடியாக தர்மங்களை அநுஷ்டிச்சுண்டிரு. மகாபட்ட டாகுரே கலியாணம் பண்ணிண்டவர்தானே?'' என்று ஓர் இளைஞனிடம் அம்மா கூறியது இதற்கு உதாரணம்.

இவ்விதம் அம்மா ஒவ்வொருவரிடம் ஒவ்வொருவிதம் சொல்வதில் குழப்பம் அடைந்த 'நவாஸன் மாட்டுப்பெண்' என்ற கிங்கரி அம்மாவிடமே தன் குழப்பத்தை வெளியிட்டாள்.

அப்போது அம்மா பகர்வாள்: ''சில பேர் ஏதோ விளையாட்டுப்போல் சந்நியாசம் வாங்கிக்க வந்துடரு. எனக்கு அவாளுடைய பூர்வ வாசனு பலம் நன்ருகத் தெரியறது. நான் அவாளுக்கு தீக்ஷை கொடுத்துட்டு, 'இந்திரிய நிக்கிரகம் பண்ணுங்கோ'ன்னு சொன்னுலும், அவாளைப் பசு வேகம் இழுத்துண்டு போகும்னு எனக்குத் தெரியறது. ஆசிரமத்துக்கு அபசாரம், தீக்ஷா குருவான என் வார்த்தையை மீறின அபசாரம் இரண்டும் அவாளுக்கு ஏற்படக்கூடாதுன்னுதான் அவாளை இல்லறத்திலேயே ஈடுபடுத்தறேன். குடும்ப வாழ்வைப்பற்றி நல்ல வார்த்தை சொல்லித்தான் ஈடுபாடு உண்டாக்க முடியும். அதனுலே கார்ஹஸ்தியத்தை சிலாகிச்சுப் பேசறேன். ஆனுல் சம்ஸாரத்திலேருந்து விடுபடணும்னு அடிமனசிலேருந்து தவிக்கிற மகாபாக்கியவசமான தாபம் ஏற்பட்ட குழந்தைகளுக்கு எத்தனை தடங்கல் வந்தாலும் நான் கைகொடுக்கத்தான் செய்வேன். எத்தனை எதிர்ப்பு இருந்தாலும் அவாளுக்கு

சந்நியாசம் தந்துடறேன். உண்மையிலே எனக்கு உகந்தது கிருஹஸ்த தர்மமா, சந்நியாசமான்னுதானே உனக்குச் சந்தேகம்? சொல்றேன், கேட்டுக்கோ: குடும்பத்தில் இருக்கிறவா ஒருநாளும் சந்நியாசிக்குச் சமதையாக முடியாது. குடும்பத்திலே இருந்தால் பலவிதமான ஆசாபாசங்களுக்கு இரையாகிண்டே தான் இருக்கணும். பகவானைத் தவிர வேறே எந்த நினைப்பும், எந்தத் துணையும் இல்லாத சாதுக்களோடு கிருஹஸ்தர்களை ஒப்பிடறதுக்கே இல்லை. இப்படிப்பட்ட சத்துக்களான சந்நியாசிகள்மட்டும் என்கூட இல்லைன்னு நான் உயிர் வாழவே முடியாது.''

குடும்பிகளும் சாதுக்களும் சம எடை இல்லை என்று கருதினாலும் அம்மா இவ்விரு தரப்பாரிடமும் சமமாகவே அன்பைப் பொழிந்தாள் என்பது மறுக்கவொண்ணாத சத்தியம். இங்கேதான் அம்மாவின் உலகமகா குடும்பம் விரிகிறது.

* * *

ஏழையரும் ஏதலரும் இழிந்தோர் தாமும்
இருக்குமிடம் ஐயாஉன் பாதபீடம்

என்று கவீந்திரரான ரவீந்திரர் பாடியது நம் அம்மாவுக்கு அலாதியாய்ப் பொருந்தும். கருணைக்கொரு காமதேனு அவள்.

மிக மிக எளியோரும் தயக்கமின்றித் தன்னிடம் வந்து உய்வு பெறவேண்டுமென்றே அவள் 'ஜோதிப் பிரபை' ஏதுமின்றி சாமானியமாகத் தன்னைக் காட்டிக்கொண்டாள். ஒதுங்கி ஓடும் எளியோரையும் தன்னிடம் இழுத்து அன்பு செய்தாள்.

நெசவுத் தொழில் செய்யும் 'யுகி' வகுப்பைச் சேர்ந்த பக்தர் ஒருவர் அம்மாவை வணங்கிய மாத்திரத்தில், அவள் அவரைப் பற்றி ஏதுமே கேளாமல் ஒரு மந்திரத்தை உபதேசித்தாள். அவர் 'ஐயமாருங்க'ளுக்கு மத்தியில் தாம் இருந்து கொண்டிருப்பது முறைதானா என்று தயங்கி ஓரத்தே ஒதுங்கி நின்றார். அம்மாவின் பார்வை அவர்மீது விழுந்தது- ''குழந்தே! ஜாதியை நினைச்சா ஒதுங்கி நிற்கிறே! நீயும் இவா மாதிரி ராமகிருஷ்ண புத்திரன்தான். நாம் ஒரு குடும்பம். வா இங்கே! உன் சிறுமை உணர்ச்சி எனக்குத் தெரியும். அதனாலேதான் உன் ஜாதியை விசாரிக்காமலே, எடுத்த எடுப்பில் உனக்கு மந்திரம் தந்தேன்'' என்றாள்.

'பகடி' வகுப்பைச் சேர்ந்தோரையுங்கூட வலிய அழைத்து, மற்றவரைப் போலவே தனக்கு மலரஞ்சலி செய்யச் சொன்னவள் அவள்!

ஜயராம்பாடியில் பொம்மை செய்கிற குயவனுர் குஞ்சாவை சாரதாமணி உலகம் போற்றும் 'ஹோலி மத'ரான பிற்பாடும். "மாமா மாமா" என்றே அழைப்பாள்.

ஊர்த் தலையாரி அம்பிகா அவளிடம் வணக்க ஒடுக்கத்தோடு நின்றபோது, "தம்பீ! நாம் எத்தனை காலமாக அக்கா-தம்பி யாக இருந்தவா? இப்போ எதுக்கடா இந்தப் பக்தி விநயம்? உலகம் என்னைப் பராசக்தி, அது, இது அப்படீன்னு முழக்கினுல் முழக்கிட்டுப் போகட்டும். அம்பி என் தம்பியாகவே இருக்கணும். என்னை 'அக்கா'ங்கிறது தவிர வேறெப்படியும் நீ நினைக்க வேண்டாம். என்ன?" என்ருள்.

அடியார்களிடம் அம்மா செய்த அன்பு ஆயிரமாயிரம் காவி யங்களாக விரியும். பானை சாதத்துக்கு ஒரு சோறு பதம் பார்ப் பது போல நாம் அல்ப சந்தேகிகளாகத் திருப்தி அடைய வேண்டியதுதான்!

ஏகப்பட்ட குழந்தைகளுடன் ஓர் ஏழைத் தம்பதி அம்மா வைத் தரிசிக்க வெளியூரிலிருந்து ஜயராம்பாடிக்கு வந்திருக் கிருர்கள். அம்மா அந்தத் தம்பதிக்கு மந்திரோபதேசம் செய்தாள். காலம் தப்பி வந்த அந்தப் பெரிய குடும்பத் தினருக்கு அவசரமாக எதையோ ஆக்கிப் போட்டாள். "சுசி ருசியாக உங்களுக்குச் சமைச்சுப் போடாமல் இப்படி ஆயிடுத்தே!" என்று மாய்ந்து போனுள்.

உண்டு சிறிது போதில் அவர்கள் புறப்பட்டார்கள். நெகிழ்ச்சி மயமாக விடை தந்தாள். கிருஷ்ணபரமாத்மா குசேலரை அன்புக்கிட்டதை நினைத்தபடி அவர்களும் மனமுருகி விடைகொண்டனர்.

அவர்கள் போனபின் அந்த ஸ்திரீ தன் துண்டை விட்டுப் போனதாகத் தெரிந்தது. "அள்ளு கந்தல். மகா பழசு" என்று அதைப்பற்றி யாரோ விமரிசித்தனர். அம்மாவோ, "அந்த ஏழைக் குழந்தைகளுக்கு இதுவே சீனப்பட்டு மாதிரி, அப்பா கோபேஷ், நீ ஓடிப்போய் இதை அந்தப் பொண்கிட்டே சேர்த் துட்டு வந்துடறியா?" என்ருள்

அம்மா இட்ட பணியைச் செய்து கோபேஷ் திரும்பியபின், அந்த ஏழை மாது ஏரியில் குளித்துவிட்டுக் கரையில் காயப் போட்டிருந்த சேலையையும் எடுத்துக்கொள்ளாமலே போன தாகத் தெரிந்தது.

"அத்தனை குழந்தைகளையுமாவது ஞாபகம் வைச்சுண்டு, மறந்து போகாமல் எல்லாத்தையும் அழைச்சுண்டு போனுளே!" என்று யாரோ நொடித்தார்கள்.

அம்மாவினால் இந்த நையாண்டியைத் தாங்க முடியவில்லை. ''மகளே! அப்படிப் பேசாதேயடி! அங்கே என் ஏழைப் பொண்ணு நாளைக்குக் குளிச்சுட்டு மாற்றுப் புடவை இல்லாமல் தவிப்பா. எனக்கு அதுதான் மனசு குடைகிறது. அவளோடே ஞாபகமறதியை ஏன் கேலி செய்யறேள்? என்னை விட்டுட்டுப் போகவேண்டியிருக்கே என்கிற துக்கத்திலே அந்தப் பொண்ணுக்குக் கையும் ஓடல்லை: காலும் ஓடல்லை, புத்தியும் ஓடல்லை, புடவையையும் துண்டையும் அவளாலே நினைவு வைச்சுக்க முடியல்லை'' என்று கூறிய தேவி, பிரம்மசாரி கோபேஷைத் திரும்பவும் பார்த்தாள். அந்த சத்புத்திரனுக்கா அம்மாவின் எண்ணம் தெரியாது? மீண்டும் ஓடினார், புடவையைத் தூக்கிக்கொண்டு.

பக்தர்களுக்காகச் சமைத்துப் போடுவதும், அவர்களுக்குப் பொருளுதவி செய்வதும் அம்மாவின் இயல்பிலே கரைந்துவிட்டன. அதோடு, பக்தர் குடும்பத்தில் நோய் நொடி வந்தால் —குறிப்பாக அம்மை வார்த்தால்—அம்மாவே கோயில் குளங்களுக்கு அவர் பொருட்டு வேண்டிக்கொண்டு நேர்த்திக் கடன் செலுத்துவாள். ''இதிலென்ன அதிசயம்! நான் அம்மா. குழந்தைகளுக்காகச் செய்யறேன்'' என்பாள்.

அம்மா பெற்ற தாய்க்கும் மேற்பட்டவள் என்பதை அந்தப் பெற்ற தாய்மார்களே பிரத்தியட்சமாக உணர்ந்த சம்பவங்களும் உண்டு. தமது பிள்ளைமார் துறவு பூண சம்மதம் தந்த அன்னையர் பலர், நம் அம்மாவைப் பார்த்துவிட்டு, ''இந்த மாதாவின் கருணை இருக்க என் பிள்ளைக்குக் குறை என்ன?'' என்ற நிறைவுடனேயே மகவை மனமொப்பித் தியாகம் செய்திருக்கின்றனர்.

விபூதிபூஷண் கோஷுக்கு நம் அம்மா அள்ளி அள்ளிப் பரிமாறுகிறாள். அவரும் மகிழ்ச்சியுடன் உண்கிறார். இதைப் பார்த்துக்கொண்டேயிருந்த அவரது பெற்ற தாயின் கண்கள் வியப்பில் விரிகின்றன.

அந்த ஜனகமாதா நமது ஆதிமாதாவிடம், ''இதென்ன அதிசயம், அம்மா! அகத்திலே இந்த விபூதிபூஷண் இத்தனூண்டுதான் சாப்பிடுவான். அதுக்கு மேலே சாப்பிட்டா அவனுக்கு எதிர்த்து வரும். இங்கேயானா உங்க கையாலே....'' என்னும்போது அம்மா இடைமறித்தாள்.

''உஷ்......என் பிள்ளைக்கு திருஷ்டி போடாதேள், மாமீ! நான் ஒரு பிச்சைக்காரி, ஏதோ என்னாலே முடிஞ்ச உண்டைக் கட்டியை என் பசங்களுக்குப் போடறேன்; அதுகள் சகிச்சுண்டு

சந்தோஷமாகச் சாப்பிடறதுகள், நீங்க கண் வைச்சுடாதேள்'' என்றாள் அம்மா.

கல்கத்தா உத்போதன்; ஏதோ உத்ஸவ நாள். பக்தர் கூட்டம் நெரிந்து வழிகிறது. அத்தனை பேருக்கும் பாத நமஸ்கார பாக்கியம் தருகிறாள் அம்மா. மணிக்கணக்கில் அந்த மணித் திருவடிகள் பக்தருக்காக நீட்டியபடி இருக்கின்றன.

கோலாப்-மாவுக்கு அழுகையே வந்துவிட்டது. ''அம்மா! ஆகாரமோ, ஓய்வோ ஏதும் இராமல் இன்னும் எத்தனை நேரம் இப்படிப் பாதம் பாலிச்சுண்டு இருக்கிறதாக உத்தேசம்?'' என்று தொண்டை அடைக்கச் சண்டைக்கே வருகிறாள் கோலாப்.

''நான் என்ன பண்ணுவேன், கோலாப்?'' என்று குழந்தையாகக் குழறுகிறாள் அம்மா. 'நான் நிரபராதி' என்று அவளது நிர்மல நயனங்கள் கோலாப்பிடம் மன்றாடுகின்றன. அவளையும் மீறிய அன்பு வேகத்துக்கு அவள் எப்படிப் பொறுப்பாளியாவாள்? வார்த்தை வார்த்தையாக, ''அவா அம்மான்னு கூப்பிட்டுண்டு வரா. அந்த ஒரு சொல் என் காதிலே விழுந்துட்டா அப்புறம் என்னை என்னாலேயே கட்டுப்படுத்திக்க முடியாமப் போயிடறது'' என்றாள்.

ஆதியில் பகவான் ராமகிருஷ்ணரிடம் அவள் மொழிந்த அதே மகாவாக்கியந்தான்! மகாவாக்கியங்கள் என்றும் மாறுவதில்லை.

அம்மா பாதம் பாலிப்பதில் கோலாப் அத்தனை துன்பம் கொண்டதும், அவளுடைய துன்பம் நியாயமானதே என்கிற ரீதியில் அம்மா நடந்துகொண்டதும் ஏன் என்று வாசகர்கள் அனுமானிக்க முடியும்.

சாரதாதேவியின் பாதத்தைப் பாதகர்கள் ஸ்பரிசித்த மாத்திரத்தில், உலையில் கனன்றுகொண்டிருக்கும் இரும்பு, நீர்த்துளியை உறிஞ்சிக்கொள்வதுபோல், இந்தத் திருவடிகள் அவர்களது பாபத்தை உட்கொண்டு விடும். ஒரு வித்தியாசம்: இங்கே தண்ணிய பாதம் வெம்மையான பாபத்தை உறிஞ்சிக் கொள்கிறது! பாபிகள் பலர் அம்மாவிடம் பாபம் தீரவோ, அல்லது பாபத்தை மறைத்து வேஷம் போட்டுக்கொண்டோ வருவார்கள். இவர்கள் திருவடி தீண்டியதும் இவர்களது பாப பாரத்தை அம்மாவின் பாதம் இவளுக்குள் அனுப்பி வைக்கும். செய்த பாபத்துக்காக அவர்கள் அநுபவிக்கவேண்டிய வாதனையை இவள் அநுபவிப்பாள். ஆனால் அவதார வியக்தியான அம்மாவின் உள்திட்பம் சாதாரண ஜீவர்களுடையதை விடக் கோடாநுகோடி மடங்கு பெரிதாகையால், ஒருவருடைய

கர்மமூட்டை முழுவதையும் இவள் ஒரு சில நிமிட, அல்லது மணி நேரத்தில் படும் அவஸ்தையிலேயே அநுபவித்துத் தீர்த்துவிடுவாள்.

இங்கே கவனிக்க வேண்டிய அம்சம், ஒருவரது கர்மத்தை வாங்கிக்கொண்ட அம்மா, அந்தக் கர்மம் செய்வதற்குக் காரணமான அவரது மனத்தையும் சேர்த்து உறிஞ்சிக்கொள்வதில்லை. அவள் அப்படிச் செய்திருந்தால், அவளைத் தொட்டவர்கள் தமது பூர்வ கர்மத்தைத் தீர்த்துக்கொண்டதுமட்டுமின்றி, அதன்பின் புதிதாகவும் கர்ம பாரம் சேர முடியாதவராகியிருப்பர். தம் மனம் இவள் வசப்பட்டபின்பு, அவர்கள் புதுப் பாபம் ஏதும் செய்ய முடியாமலே போயிருக்கும் அன்றோ? ஆனால் சாரதை இவ்விதம் அவர்கள் மனத்தைத் தன் வசமாக்கிக்கொள்ளவில்லை.

இது ஒரு ஸூக்ஷ்மமான விஷயம். சாரதை மட்டுமின்றி, எந்த மகானுமே சரி, அடியார் அனைவரின் மனத்தையும் அப்படியே தம் வசமாக்கிக் கொள்வதில்லை. பூரணமாக சரணாகதி செய்தவர்களின் மனம், புத்தி, ஆவி சகலத்தையும் மகான்கள் எடுத்துக்கொள்வது உண்மையே. ஆனாலும் ஒரு மகானை அண்டுகிற ஆயிரம் அடியாரில் ஒருவர்தான் இவ்விதம் பூரண சரணாகதராக இருப்பார். ஏனையோரிலும், அவர்களது பூர்வ பரிபாகத்தைக் கருதி அபூர்வமாக யாரோ ஒருவரை ஒரு மகாத்மா முற்றிலும் தன் பொறுப்பில் ஏற்றுக்கொள்வதுமுண்டு. ஆயினும் இது விதிவிலக்கான விஷயமே அன்றி, பொது விதியாகாது. பொதுவாக அடியாரின் மனத்துக்குப் புது விழிப்பு ஊட்டுவதோடு மகான்கள் நின்றுவிடுவர். விழித்துக் கொண்ட மனம் தானாக—மனமறிந்து என்று சொல்கிறோமே, அவ்விதத்தில் ஒருவரின் சுயேச்சையுடன்—திருந்துவதற்கு மட்டுமே வழிகாட்டுவர். அந்த வழியில் அந்த மனமே செல்லட்டும் என்று விடுவர். தப்பான அடி வைத்தால் கை கொடுக்கவும் செய்வர். இத்தனை செய்தாலும் தாமே அந்த மனத்தை ஸ்வீகரித்து இயக்கி வைக்கவோ, அல்லது இயக்கமற்ற நிர்விகல்ப நிலையில் கரைக்கவோ மாட்டார்கள். ஒரு ஜீவனுக்குப் பராசக்தி கொடுத்துள்ள தனிச் சிறப்புப் பெற்ற அம்சம் இந்த மனமே. இதனால்தான் பிரபஞ்ச விளையாட்டே நடக்கிறது. மனத்தைக் கொண்டு ஒருவர் பந்தத்தில் மேலும் ஆழப் புதையலாம்; அல்லது விடுபட்டுப் பராசக்தியின் மூலமான மெய்ப்பொருளில் கரையவும் செய்யலாம். இந்த அற்புத வஸ்துவான தனி மனித மனத்தை மகாபுருஷர்கள் தம்மிஷ்டப்படி

ஸ்வீகரித்துக் கொள்வதில்லை. இரண்டாம்தர, மூன்றும்தர யோகிகளும் சித்தர்களுந்தான் கூசாமல் மனோவசியம் செய்து, பிறரைக் கருவி மாத்திரமாக ஆட்டிவைத்துத் தங்கள் காரியங்களை நடத்திக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்கள் வசம் செய்வதால் ஒரு மனம் உருப்பட்டு, அதாவது நசித்து (மனத்தின் விஷயத்தில்மட்டும் அதன் முழுமையானது அதன் அழிவில்தான் இருக்கிறது!) அடியாருக்கு மோட்சம் சித்திக்காது. சரணாகதர்களின் மனத்தைமட்டுமே ஸ்வீகரித்துக்கொள்ளும் மகாபுருஷர்களோ அவர்களை மோட்சத்திலேயே சேர்த்து விடுவார்கள். பொதுவில், இம்மகான்கள் மற்ற அடியார்கள் அதுவரை செய்த பாபத்தை மட்டுமே வாங்கிக்கொண்டு, சிறிதே சுதந்திரம் பெற்றிருப்பது போன்ற தனி மனங்களின் அச் சுதந்திரத்தைக் கெடுக்காமல், தன்னைத்தானே அது பக்குவப் படுத்திக்கொள்ள விட்டுவிடுவர்.

இதை இவ்வளவு விவரித்துச் சொன்னதற்குக் காரணம், அம்மாவைச் சார்ந்திருந்த பின்னருங்கூடப் பலர் பழைய வழியிலேயே சென்றதுதான். அம்மாவிடம் நாடகக்காரர், நாட்டியமாதர் முதலியோரும் சர்வ சுதந்திரமாக வந்ததுண்டு. அம்மாவின் அத்தியந்த சீடர்களே இவர்களில் சிலரைக் குறிப்பிட்டு, ''உங்களிடம் வந்த பின்னும் இவர்களுக்குப் பாப குணம் போகவில்லையே!'' என்று கேட்டிருக்கிறார்கள். அப்போது அம்மா சொல்வாள்: ''அவாளுக்கு எத்தனை ஜன்மாந்தர வாசனை சேர்ந்து தடிச்சிருக்கு தெரியுமா? அதுக்கு ஏற்றபடி தானே எதிர்காலமும் இருக்கும்? கர்மகதியிலேருந்து சர்வஜனங்களும் ஒரேயடியாகத் தப்பிச்சுட முடியாது.'' சிறிது சிந்தனை, வயப்பட்டிருந்தபின் தென்றலெனத் தொடர்ந்தாள்: ''ஆனாலும் கர்மப்படி கத்திக்குத்துப் படவேண்டிய ஒருவர் இங்கேயே சரணாகதி என்று வந்துட்டால், ஒரு முள்ளைத் தைச்சுக்கறதோடு அந்தக் கர்மம் தீர்ந்து போகலாம்!''

முள் குத்தும் வலிக்கும் கத்திக்குத்து நோவுக்கும் எத்துணை வித்தியாசம்? வித்தியாசப்படும் அத்தனை வாதனையையும் தாங்கியது...? சரணாகதி என்று வந்தோருக்குக் கருணாநிதியாக நின்ற அம்மாதான்.

''என் தாயே! வாழ்க்கையிலே நான் பட்ட கஷ்டம் அதிகமா, நான் பண்ணின பாபம் அதிகமான்னு சொல்ல முடியாது. நீயே என் குரு, தெய்வம்னு வந்து விழுந்துட்டேன். உன்கிட்டக்கூட நான் சொல்கிறதற்கு வெட்கப்படும்படியான அபராதங்களைப் பண்ணின என்னையும் நீ கைதூக்கி விடணும்'' என்று கூறி, ஓர் இளைஞர் விம்மியழுதார்.

அம்மா அவரது தலையைக் குளிரக் குளிரக் கோதிவிட்டாள். ''கண்ணு! அம்மாவுக்குப் பிள்ளை அம்மாவுக்குப் பிள்ளைதானே?'' என்று நாத் தழுதழுக்கக் கூறினாள்.

இப்படிப்பட்ட பக்தசிகாமணிகளின் பூர்வகர்மத்தை வாங்கிக்கொண்டதோடு அம்மா நில்லாமல், அவர்களது எதிர்காலத்துக்கும் பொறுப்பேற்றாள். சிலர் எதிர்காலத்தில் பாபமே புரியாதபடி அவர்களை அடியோடு ஸ்வீகரித்துக்கொண்டாள். வேறு சிலர் எதிர்காலத்தில் பாபம் புரிந்தாலும் அந்தப் பாபம் அவர்களைத் தீண்டாமல் தன்னையே வந்தடையும்படிச் செய்தாள் இந்த மகாத் தியாகி.

சாரதாதேவி எவருக்கெல்லாம் மந்திரோபதேசம் தந்தாளோ அவர்கள் அனைவரின் எதிர்காலத்துக்கும் தானே பொறுப்பேற்றாள். தனது இந்த சரீரம் மரித்துவிழுந்த பின்னருங்கூட, தன்னிடம் மந்திரம் பெற்றவர் அனைவரையும் மோட்சத்தில் சேர்க்கிறவரையில் தனக்கு ஓய்வில்லை என்று அம்மாவே கூறியிருக்கிறாள்.

இந்த உலகில் எதை எல்லாமோ தியாகம் என்கிறோமே. மகாபுருஷர்கள் ஒரு காரணமும் இன்றி, காருண்யமூர்த்திகளாகப் பிறர் பாபத்தை அந்தப் பிறருமே அறியாமலும், அவர்களுக்கே அறிவிக்காமலும், அநாயாசமாகத் தம்மிடம் வாங்கிக்கொண்டு இன்னல் உறுவதற்கு ஈடாக எந்தத் தியாகத்தைக் கூறமுடியும்? காரணகாரிய விளைவுகளைச் செய்த பராசக்தியிலேயே பதிந்துள்ள இம்மகான்கள், அதன் விளைவையும் அநுபவித்துத்தான் தீர்க்க வேண்டுமென்பதில்லை. வினைப்பயனை அற்றுப் போகும்படியும் அவர்களால் செய்ய இயலும். இருப்பினும் ஒரு செயலுக்கு ஒரு விளைவு உண்டு என்று பராசக்தி நியமித்துள்ள நியதியை மீறக் கூடாது என்றே இவர்களும் பிறர் பாபத்துக்காகத் தங்கள் இன்னலை இன்முகத்தோடு ஏற்று அநுபவிப்பார்கள். பாபவிளைவை அடியாரிடமிருந்து தம்பால் இடம் மாற்றிக்கொள்வரே அன்றி, அடியோடு அற்றுப் போகச் செய்யமாட்டார்கள். சாமானிய ஜீவன் அநுபவிக்க வேண்டிய சுமை மகாபுருஷர்களுக்கு லேசாக இருக்கும் என்று முன்பே சொன்னோம். ஆனால் இவர்கள் எத்தனை எத்தனை ஜீவன்களின் சுமைகளை ஏற்றார்கள்? ஹம்ஸதூளியாயினும் ஒரு வண்டி சேர்த்தால் கனக்கத்தானே செய்யும்?

அம்மா தணலில் வெந்ததுபோல் தவித்துத் தன் பாதங்களை இரவெல்லாம் கழுவிக்கொண்ட நாட்கள் உண்டே, அன்று ஏராளமான பாபிகள் அவளை ஸ்பரிசித்துப் பாபத்தை உட்செலுத்தியதாக அர்த்தம். ஒருநாள் அவளாலேயே தாங்க முடியாத நிலை வந்தது. பஞ்சமா பாதகம் செய்த அபராதிகள் பலருக்கு

அன்று மனமறிந்து மலரடி தந்திருந்தாள் தியாகமாதா. சிறிது போதில் அது வேலை செய்யத் தொடங்கிவிட்டது. சாரதையின் சரீரம் முழுதும் தாங்க முடியாத எரிச்சல் உண்டாயிற்று. அக்னிமயமான ரம்பங்களின் மேல் படுத்திருப்பது போன்ற சித்ரவதை! ''மகனே, ராஷ்பிஹாரி! இனிமேல் யாரும் என் காலைக் கையாலோ தலையாலோ தொட்டுவிடாமல் பார்த்துக் கோப்பா'' என்று தன்னையும் மீறி அரற்றிவிட்டாள். உடனேயே அந்தக் கருணை சமுத்திரம், தானும் கரை மீறலாமோ என்ற நியாய உணர்வில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டது. ''அப்பனே! நான் சொன்னதை மறந்துவிடு. இதை ஒருகாலும் ஷரத்கிட்டே சொல்லிவிடாதே. அப்புறம் அவன் எவரையுமே என்கிட்ட அண்டவிட மாட்டான்.''

நினைத்துப் பார்க்கவும் இயலாத தயை!

''சுத்த ஜீவன்களுக்கு நான் தேவைப்படவே இல்லை. அவா தாங்களாகவே கரையேறிப்பா. குப்பை மேட்டிலே குப்புற விழுந்து தவிக்கிற குழந்தைக்குத்தான் இந்த அம்மா லோட தேவை அதிகம். அதுகளைத்தான் நான் வாரி எடுத்து சுத்தி செய்யணும்'' என்றாள்.

''இது குற்றம்'' என்று உணராமலே ஒருவரது குற்றத்தைத் தன்னிடம் ஏற்கப் பழகிக்கொண்டாள் அற்புத அம்மா. மாசு மறுவற்ற அம்மா பிறர் மாசுகளை இப்படிக் காணாமலே ஏற்றுக்கொண்டதால்தான், அவளால் பிறர் சொல்கிற குற்றச் சாட்டுகளையும் பொறுக்க முடியாமலிருந்தது. ''யாரார் என்னென்ன தப்புப் பண்ணினா என்கிறதை விமரிசிக்காதேயுங்கோ! தப்புச் செய்யறவாளைத் திருத்த முடியுமானால் திருத்துங்கோ. அதைப்பற்றிப் பேச்சு வேண்டியதில்லை. யார் கிட்டேயும் குற்றம் காணப்படாது என்றே ஆதியில் பங்கே விஹாரிகிட்டே நான் பிரார்த்தனை பண்ணிண்டேன்; அவனும் செவிசாய்ச்சுட்டான். ஆனால் இந்த நாளில் பிறத்தியாருடைய குணங்களை சிலாக்கிக்கிற வழக்கம்போய், தோஷங்களை விமர்சிக்கிறதே எல்லாருக்கும் தொழிலாயிடுத்து. அவாவாளும் தங்களுடைய தோஷங்களையும், பிறத்தியாருடைய குணங்களையும் பார்க்கிறதுன்னு ஆரம்பிச்சுட்டா எத்தனை நன்னா இருக்கும்?'' என்பாள் அம்மா. தனது ஜீவயாத்திரையின் கடைசி கட்டத்தில் இந்த அமிருத ஸ்வரத்தையே நம் ஹம்ஸினி இசைத்ததைப் பிற்பாடு பார்ப்போம்.

அம்மாவுக்கு எத்தனையோ விசித்திர பக்தர்கள். விசித்திரக் கோரிக்கைகள் விடுப்பார்கள். வேளைகெட்ட

வேளையில் வருவார்கள். ஜுரத்துடன் வந்து இவளது வீட்டிலேயே படுக்கை போடுவார்கள். அம்மா மலர்முகம் மாருமல் அனைவருக்கும் அன்பு செய்துகொண்டேயிருப்பாள்.

பலவிதமான நோய் நொடிகளுக்கு ஆளான சாரதைக்கென டாக்டர்கள் விதித்தபடி அன்னுசி, மாதுளை முதலிய கனிகளை சிஷ்யர்கள் சிரமப்பட்டு சேகரித்து வவப்பார்கள். இவளோ அவற்றையும் பக்தர்களுக்கு எடுத்து வழங்கிவிடுவாள். வாத முற்ற காலால் விந்திக்கொண்டே அம்மா தம் அடியார்களுக்காக அடுக்களையில் அவதிப்பட்டது போல எத்தனை அவதாரத்தில் பார்த்திருக்கிறோம்?

ஜயராம்பாடி கிராமத்தில் நகரவாசிகளான சீடர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அம்மா எடுத்துக்கொண்ட அக்கறை சொல்லத்தரமன்று. தங்களுக்காக அவள் படும் சிரமத்தைப் புரிந்துகொள்ளாத சில நாகரிகக் குழந்தைகள், ''என்னம்மா, திரும்பத் திரும்ப இந்த சேமியா சொஜ்ஜியும், அவல் உசிலியுமே பண்ணுகிறேள்?'' என்று முகத்தைச் சுளிக்கும். ''செல்லங்களா! இந்தப் பட்டிக்காட்டிலே வேறே ஒண்ணுமே கிடைக்கமாட்டேங்கிறதே. அம்மாவுக்காகப் பொறுத்துண்டு சாப்பிடுங்கோ; டாகுர் பிரசாதமோல்லியோ, உடம்புக்கும் மனசுக்கும் இதுவே நல்லது பண்ணும். நான் கல்கத்தாவுக்குப் போனவிட்டு அங்கே வாங்கோ! நீங்க இஷ்டப்பட்டதெல்லாம் தினுசு தினுசாப் பண்ணிப் போடறேன்'' என்று குழைவாள் அம்மா. பெற்றெடுத்த தாயிடம் காணமுடியுமா இந்தக் குழைவு? அவள் அடியாரிடம் காட்டிய அன்பு, அடியார் அவளிடம் காட்டிய ஸ்வாதீன உரிமை ஆகிய இரண்டுமே வேறெந்த மகாபுருஷர் சரித்திரத்திலும் காணக் கிடைக்காதவைதாம்.

பட்டணச் சீடர்கள் சிலர் இவளிடம் இப்படி அதிருப்திப் பட்டுக்கொண்டாலும், இவள் அவர்களை விட்டுக்கொடுத்துப் பேசமாட்டாள்.

''அவாளோடு உங்களுக்கு எத்தனை தொல்லை?'' என்று அவளது தம்பி மனைவி சொன்னபோது அம்மா, "இவாளாலே எனக்குத் தொல்லையே இல்லை'' என்று அர்த்தபுஷ்டியுடன் சொன்னாள். ''என் குழந்தைகள் நூறு பேர் ஒரே சமயத்தில் வந்தால்கூட நான் ஒண்டிக்காரியாகவே சமாளிச்சுடுவேன்'' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டாள். பெருமை தன்னைப்பற்றி அல்ல; தான் எது செய்தாலும் அநுசரித்துப் போகும் அடியாரைப்பற்றித்தான் பெருமை!

* * * *

பக்த விசித்திரங்களில் ஒன்று பாருங்கள்: ஒருத்தி பாத நமஸ்காரம் செய்கையில் அம்மாவின் கட்டைவிரலை நறுக்கென்று கடித்துவிட்டாள். தேவி சரேலெனக் காலைப் பின்னுக்கு வாங்கிக்கொண்டு, ''மகளே! இதென்ன காரியம்?'' என்றாள். ''அம்மா, நீங்க எந்நாளும் என்னை நினைவு வைச்சிட்டு இருக்கணுமின்னே இப்படி யுக்தி பண்ணினேன்'' என்றாள் அந்த அதிசயமான பக்தை. ''ஓஹோ'' என்று பெரிதாகச் சிரித்தாள் அம்மா. ''ஒருத்தர் ஞாபகத்திலே நீங்காமலிருக்கிறதுக்கு இப்படியும் ஒரு வழியா? எனக்குத் தெரியலை பாரேன். நல்லவேளை, மற்ற பக்தாளுக்கும் இந்த வழி தெரியலையோ, நான் பிழைச்சேனோ?'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

இந்த விசித்திர பக்தையின் உடன்பிறந்தவரோ என்னவோ இன்னொருத்தருக்கும் இப்படிப்பட்ட 'யுக்தி' தெரிந்திருந்தது. அம்மாவின் பாதத்தைத் தம் தலையால் முட்டுமுட்டு என்று முட்டித் தரையோடு சேர்த்து நசுக்கினார் அவர். ''நீ என்னை மறக்காம இருக்கறதுக்குத்தான் இப்படிச் செய்யறேன்'' என்றார்! பிரசவ வேதனையையும் மகிழ்ச்சியுடன் ஏற்கும் தாய் போல் இந்த அன்பு வாதையை அம்மா இன்பத்துடன் ஏற்றாள்.

பக்தர் அனைவருக்கும் தரிசனம் தரவேண்டுமென்பதற்காகப் புழுக்கமான இடத்தில் போர்வையை அழுந்தப் போர்த்திக்கொண்டு (அம்மா விருத்தாப்பியம் அடைந்த பின்னருங்கூட ஆடவ அடியார் முன் பர்தாப் பெண்ணாகவே இருந்தவள்!) மணிக்கணக்கில் நின்று, அதனால் தூணாக வீங்கிய வாதக்காலுடன் அம்மா படுக்கச் சென்ற தினங்கள் பல.

நள்ளிரவில் அவசரப் பிரார்த்தனைகளுடன் வருபவர் உண்டு. ''அர்த்தராத்திரியில் வந்து ஹிம்சை தருகிறீர்களே! காலைவரை பொறுங்கள்'' என்று வெளியே சீடர் தடுத்து நிறுத்துவது உள்ளே அம்மாவுக்குத் தெரிந்துவிடும். விழுந்தடித்துக்கொண்டு வாசலுக்கு வருவாள். அவசர பக்தரின் குறை கேட்டு அனுக்கிரகம் புரிவாள். அதுமட்டுமல்ல, அந்த நடுநிசியில் அவர்கள் உதரத்தை நிரப்பவும் ஊழியம் தொடங்குவாள்.

நமது சாஸ்திரங்களில் - குறிப்பாக பகவத்கீதையில் - ஒருவரது கடைசி நினைவுப்படியே மறுபிறப்போ, முக்தியோ அமையும் என்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அந்தக் கால வங்காளிகளுக்கு இந்தக் கோட்பாட்டில் மிகுந்த நம்பிக்கை. இவர்களில் பலர் அம்மாவிடம், தமது அந்திமப் பிரக்ஞையில் அவள் தரிசனம் தந்தேயாகவேண்டும் என்று வாக்குறுதி கேட்பார்கள். எளிமையின் உருவான அம்மா, ''நான் என்

டாகுருக்கு வேண்டிக்கிறேன். அவர் கடைசி காலத்திலே உங்ககூடவே இருந்து ஸத்கதியிலே சேர்ப்பார்'' என்பாள். விடாக்கண்டர்களான பக்தர்களோ, ''டாகுர் வேண்டாம். எங்களோட பிரிய மாதாவான நீங்கதான் வரணும். சத்தியம் பண்ணிக்கொடுங்கோ'' என்று வற்புறுத்துவார்கள். ''சரி. நீ சொன்னபடியே ஆகட்டும்'' என்று அம்மா கசிந்து நவில்வாள்.

இன்னும் சில விசித்திர பக்தர்கள் அம்மா முக்காட்டின் வேக்காட்டில் மணிக்கணக்காகத் தவிப்பதையும் உணராமல் அவளுக்கு நீட்டி முழக்கிப் பூஜை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். ஒருமுறை அடியார் ஒருவர் சாங்கோபாங்கமாக ஷோடச உபசார பூஜையே தொடங்கிவிட்டார். கோலாப்மாவுக்குப் பொறுக்கவில்லை. ''ஏன் ஐய்யா! அம்மாவை என்ன கல் சிலேன்னு நினைச்சிண்டிருக்கியா? அம்மாவுக்கும் மநுஷ்ய சரீரம் உண்டு. கடுங்கோடையிலே அம்மா வேர்த்துக்கொட்டிண்டு போர்த்துக் கிடக்கா. சட்டுனு இரண்டு புஷ்பத்தைத் தூவிவிட்டுப் போய்ச் சேர், ஐயா!'' என்றாள். அவள் அப்படி வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகப் பேசியபின்தான் அந்த பக்தருக்கு 'ஞானோதயம்' வந்தது.

இன்னொரு பக்தருக்கு—இவர் ஒரு துறவி—அம்மா உண்டு மிகுந்த உச்சிஷ்டத்தைத் தாம் புசிக்க வேண்டும் என்று ஆசை; மற்றவர் அனைவரும் உண்ட பின்னரே அம்மா உணவு கொள்வாள் என்று அறிந்ததும் இவர் மனம் வாடிவிட்டது. இவர் தமது உள்ளார்ந்த ஆசையை எவரிடமும் தெரிவிக்கவே இல்லை. ஆனாலும் அன்புக் கண்ணாடியான அம்மாவினுள் பிரதிபலிக்காத பக்த உள்ளமும் உண்டா? எல்லாப் பிள்ளைகளோடும் போஜனத்துக்கு அமர்ந்த இந்தப் பிள்ளைக்குமட்டும் அம்மா சிற்றுண்டி பரிமாறிவிட்டு, மற்றவர்களுக்குச் சம்பிரமமாகச் சாப்பாடு போட்டாள். அதன்பின், தான் உணவு கொண்டாள். சாதுவைச் சமையலறைக்கு அழைத்துவரச் செய்தாள். ''மகனே! இதோ இந்த இலையில்தான் நான் சாப்பிட்டேன். அதுக்கு எதிரே உட்கார்ந்து சாப்பிடு'' என்று பிரகாசமான புன்சிரிப்புடன் கூறினாள். அம்மா ஸால இலையில்தான் உணவிட்டுக் கொண்டு உண்பாள். இன்று அம்மா உணவு எடுத்து உண்ட ஸால இலையில் உச்சிஷ்டத்துடன் உணவு வகைகள் அழகாகப் பரிமாறப்பட்டிருந்தன. சாதுவுக்கு வயிறு நிரம்பு முன்னே, நெஞ்சு நிரம்பியது அம்மாவின் கருணையில்!

இன்னொரு விநோத பக்தர், ''உங்கள் இலையிலிருந்து எனக்குக் கொஞ்சம் அன்னத்தை எடுத்து உங்கள் அபயஹஸ்தத்தால் தாருங்கள். அதை வெயிலில் நன்றாகக் காயவைத்து,

ஒரு சிமிழில் போட்டு, எப்போதும் என் கூடவே வைச்சிருக்கப் போகிறேன். அதுதான் எனக்கு க்ஷேம தண்டுலம்; அதுதான் எனக்கு மந்திராட்சதை'' என்றார்.

அவ்விதமே அன்று அம்மா அவருக்குத் தான் உண்ணும் அன்னத்தில் ஒரு பிடியைத் தன் கையால் கொடுத்தாள். அவர் அதை வாசலில் வெயிலில் உலர்த்திவிட்டு எங்கோ போய் விட்டார். நீண்ட நேரம் சென்றபின் அவர் திரும்பியபோது, அம்மா பகலில் சிரம பரிகாரமே செய்துகொள்ளாமல் வாசற் குறட்டில் உட்கார்ந்துகொண்டு அந்த அன்னத்துக்குக் காவ லிருப்பது கண்டு துணுக்குற்றார். ''நீ பாட்டுக்கு வைச்சுட்டுப் போயிட்டே! காக்கா, குருவி ஏதாவது கொத்திண்டு போயிட்டா அப்புறம் நீ தவிப்பியேன்னுதான் காவல் இருக்கேன்'' என்று சாவதானமாகச் சொன்னாள் அம்மா.

மகா முரட்டு பக்தர் ஒருவரைப்பற்றிச் சொல்லவேண்டும். இவர் அம்மாவின் பாதத்தை அழுந்தப் பற்றி அப்படியே தடா லென்று இழுத்தார். முக்காட்டில் இருந்த அம்மா க்ஷணகாலத் தில் தன் நிலையைப் புரிந்துகொண்டு சுவரோடு முதுகை அழுந்த ஒட்டிக்கொண்டு சமாளித்தாள். அவள் சிறிது தாமதித்திருந் தாலும் தடுகுட்டமாகக் கீழே விழுந்து அடிபட்டுக் கொண் டிருக்க நேர்ந்திருக்கும்.

''என்ன ஐய்யா? உமக்கு மூளைக் கோளாறு? இப்படி அசம்பா விதமாகச் செய்தீரே!'' என்று அடியார்கள் அந்த நபரைப் பிடித்துக்கொண்டார்கள்.

அவரோ நிதானமாக, ''அம்மா அவங்களோட உள்ளங் காலை என் உச்சித் தலையிலே அழுந்த வைச்சுக்கணுமின்னு ஆசை. அவங்களா அப்படிச் செய்வாங்களோ மாட்டாங்க ளோன்னு காலைப் பிடிச்சிழுத்தேன்—தலையிலே வைச்சுத் தேய்ச் சுக்கிறதுக்காக'' என்றார்.

அவர் விரும்பிய அநுக்கிரகம் கிடைத்ததா இல்லையா என்று அம்மாவின் சரித்திரகர்த்தர்கள் கூறவில்லை. குரு ஸ்தானமான ஒருவரது சிரஸில் அம்மா தானாகப் பாதம் பதித் திருப்பாள் என்று எண்ணுவதற்கில்லை.

'பாத நமஸ்காரம்' என்கிற பெயரில் பொதுவாக அவளது புறங்காலில் பிறர் தலையை ஒற்றிக்கொள்வதை அவள் அநும தித்தாலும், பக்தரின் பிரம்மரந்திரத்தில் தன் உள்ளங்காலை சாங்கியமாக வைக்க உடன்பட்டிருக்க மாட்டாள். துளஸி, வில்வம் ஆகிய பத்திரங்களையே, ''அதுகள் ரொம்பப் புனித மானதுகள். அதை என் காலில் அர்ச்சிக்கக்கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறியிருந்த அம்மா, ஸஹஸ்ராார பத்மம் இருக்

கும் முடியுச்சியில் தன் அடிபடுவதற்கு உடன்பட்டிருக்கமாட்டாள்! அத்தியந்தமாக உண்மை உணர்ந்த சரணுகதர்களின் விஷயம் வேறு; அவர்களுக்கு சிரஸில் நிற்கும் குருவும், ஸஹஸ்ரார நாயகியான மகாகாமேசுவரியும் இவளேதானே?

* * *

குருவாகவும், தெய்வமாகவும் தன்னைக் காட்டிக்கொள்வதில் அவள் அடியாருக்கிடையே பாகுபாடு வகுத்தாலும் அம்மா என்கிற ரீதியில் சகலருக்கும் ஒன்ருகவே இருந்தாள்.

ஆம், சகலருக்கும் தாழ்ந்தவர்களாகக் கருதப்படும் பகடிக்கும் அம்மாவாக இருந்தாள். உயர்ந்தவர்களாகத் தம்மை எண்ணிய ஆங்கிலேயர்களுக்கும் அம்மாவாக இருந்தாள். அந்த நாளில் ஒன்று, இந்தியர்கள் ஆங்கிலேயர்களை தேவஜாதி என்று நினைத்து பயந்து நடுங்கினுர்கள்; அல்லது அவர்கள் அடக்குமுறையிலேயே ஊறிய அரக்கர்கள் எனக் கருதி அடிமனத்திலிருந்து வெறுத்து ஒதுக்கினுர்கள். இந்தச் சூழலில் அம்மா சர்வ சகஜமாக அவர்களையும் மற்றெல்லாரையும் போன்ற குழந்தைகளாகவே, குழந்தைகளாகமட்டுமே பார்த்தது அதிசயந்தான்! அவளது இந்த மனேபாவம் எப்படியோ தெரிந்துதான் ஒரு சில ஆங்கிலேய பக்தர்களும் அவளிடம் வந்தபடி இருந்தனர். ஹிந்துக்கள் என்ருலே ஏளனமாக எண்ணுகிற வெள்ளைக்காரர்கள் 'ஹோலி மத'ரை நாடி வந்து வணங்கினர்.

ஐரோப்பிய மாதர்களை அம்மா 'ஷேக் ஹாண்ட்' கொடுத்தாக்கும் வரவேற்பாள்! அவர்களுடைய சம்பிரதாயப்படி வரவேற்றபின், தன் சம்பிரதாய வரவேற்பையும் தருவாள். அதாவது வெள்ளைப் பெண்ணின் மோவாயை விரலால் தொட்டு அந்த விரலை உதட்டில் வைத்துக்கொள்வாள். இவ்விதம் அம்மாவிடம் அன்பு பெற்று, அன்பு செய்த ஓர் ஆங்கில மாது, தன் நோயாளி மகளைக் காக்க அம்மாவே கதி எனக் கொண்டாள். அம்மா டாகுருக்குப் பூஜித்த நிர்மாலிய மலர்களை அவளுக்குத் தந்து, அவற்ருல் நோயாளிப் பெண்ணைத் தொடச் சொன்னுள். மென் மலரான அம்மா தந்த வாடிய மலர்கள் எப்படியோ அந்தப் பெண்ணின் உக்கிரமான நோயை விரட்டி அடித்துவிட்டன! ஆரோக்கியம் கூடிய மகளுடன் அம்மாவிடம் மகிழ்ந்து வந்தாள் மாது. அம்மா இன்னெரு பேரநுக்கிரகம் செய்தாள். அந்தத் தாய், மகள் இருவருக்கும் மந்திரோபதேசம் செய்தாள்.

சுதேசியத்தின் ஸ்வரூபம் என்று ஒன்றைச் சொல்ல வேண்டுமானுல் அது நம் அன்னை சாரதாவைத்தான். யுகயுகாந்

தரமான பாரத ஸ்திரீதர்மத்தின் பூரண வடிவம் அவளே அன்றோ? ஆனால் அவள் அரசியல் சுதேசி இயக்கத்தைத் துவேஷ உணர்ச்சி மாசு படுத்துவதாகவே உணர்ந்தாள். தம் சீடர்கள் பிரிட்டிஷாரிடம் மாறாத பகை பூணுவதை அவள் ஆமோதிக்கவில்லை. ''எந்த மனிதரிடமுமே துவேஷம் கூடாது. சந்தேகத்துக்கு இடமில்லாமல், வெள்ளைக்காரர்களும் என் சொந்தக் குழந்தைகளே!'' என்பாள்.

உலகம் முழுவதும் பரவியுள்ள தன் அத்தனை குழந்தைகளும் க்ஷேமமாக இருக்கவேண்டும் என்பதொன்றே நம் சாரதா மாதாவின் திவ்விய மனத்தில் எப்போதும் நிறைந்திருந்த சிந்தனை. ''லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து'' என்ற சுயசிந்தனை தாயின் கனத்த கனிவில் மண்டிக்கிடந்தது.

ஒரு நாள் பிச்சிமாமி ஸுபொலா, அம்மாவை வாயில் வராத வசவுமாரியால் தாக்கித் தீர்த்தாள். அத்தனை தாக்குதலையும் தாங்கிக்கொண்டு மௌனமாயிருந்தாள் அம்மா. கடைசியில் பிச்சிமாமி, ''ஏ சாரதாக்கா! நீ சர்வ நாசத்துக்காகத்தான் வந்திருக்கே'' என்று சொன்னவுடன் அம்மாவினால் தாங்கமுடியாமல் போயிற்று. சகலரையும் வாழ்விக்கவே வந்த தேவி, சுட்டாற்போல் தவித்து, ''அடியம்மா ஸுபொலா! நீ என்னை என்ன வேண்டுமானாலும் திட்டு, கேட்டுக்கறேன். ஆனால் என்னை சர்வநாசக்காரின்னு மட்டும் சொல்லாதேடியம்மா! உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. என் குழந்தைகள் லோகம் முழுக்கப் பரவி இருக்கா. அதனாலே அந்தச் சொல்லை மட்டும் சொல்லாதே!'' என்று பதறிக் கூறினாள்.

தினந்தோறும் ஸ்நானம் செய்தவுடன், இயல்பான நிர்மலம் மேலும் நிர்மலமாக, அம்மா ஜகன்மாதாவின் பிம்பத்திடம் வந்து நிற்பாள். ஒரு புறம் ஜகன்மாதாவிடம் அன்பும் மறுபுறம் ஜகத்தின் குழந்தைகளிடமெல்லாம் அன்புமாகப் பரம நிர்மலமாகிவிடுவாள். அம்பாளை நமஸ்கரித்து எழுந்து கை கூப்புவாள். அப்போது பிரதிதினமும் அவளது அதரத்திலிருந்து உதிரும் மதுரம் இதுதான்: ''லோகத்துக்கெல்லாம் மாதாவான பிரேம ஸ்வரூபிணி! லோகமெல்லாம் க்ஷேமமாக இருக்கக் கிருபை பண்ணம்மா!''

''ச்ரேயோ பூயாத் ஸகல ஜனானாம்'' என்று இதைத்தான் நமது காஞ்சிப் பெரியவர்களும் கூறுகிறார். இந்த வார்த்தைகளை நாமும்கூட ஒப்பித்துவிடலாம். ஆனால் அதன் சாரத்தில் ஊறியிருப்பதற்கு ஒரு காஞ்சிப் பெரியவர்களாலும், ஒரு சாரதா தேவியாலும்தான் முடியும்!

49. அதிமாநுஷ்ய அற்புதங்கள்

நீயே பரப் பிரம்மம், நீயே மேலான உறைவிடம், நீயே பரமபவித்திரப் பொருள், நீயே உடலுள் உறையும் திவ்விய மான சாசுவத புருஷன், நீயே ஆதி தேவன், நீயே பிறப்பற்ற சர்வ வியாபி—இவ்வாறு நாரதர், அஸிதர், தேவலர், வியாஸர் போன்ற தேவரிஷிகளும் ஒருமுகமாக இயம்புகிறார்கள்? நீயுமே என்னிடம் இவ்வாறு எடுத்துக் கூறுகிறாய்.

—கண்ணனிடம் அர்ஜுனன் கூறியது (கீதை 10-12, 13.)

அவதாரங்களுக்குள்ளே மிகமிக எளிய அம்மா! அன்பு என்கிற எளிய, ஆனால் அரிய அற்புதத்தை அனவரதமும் செய்து வந்த அம்மா!

இந்த அம்மா தன் எளிமையை விட்டு வெளிப்பட்டு அதீந்திரியமான பௌதிக அதீதமான அற்புதங்கள் செய்ததும் உண்டு.

இயற்கைக்கு மேம்பட்ட அற்புதங்களைச் செய்வதால்தான் ஒருவர் மகான் என்பதில்லை. அதேபோல், அற்புதம் செய்கிறார் என்பதாலேயே ஒருவர் வெறும் அணிமாதி ஸித்திமான்தான், பிரம்மஞானி அல்ல என்பதும் சரியல்ல. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவைக் காட்டிலும் ஒரு பிரம்மஞானி உண்டா? அவர் அற்புதங்கள் செய்யவில்லையா? ஏன், சமீப காலத்தில் சித்து விளையாட்டு என்று தோன்றுமளவுக்குக் கூட அற்புதங்களைச் செய்த ஸ்ரீசதாசிவ பிரம்மேந்திரர்களை பிரம்மஞானி அல்ல என்று எவரேனும் கூற முடியுமா? ஊன்றிப் பார்த்தால், பிரக்ருதி தர்மத்தை அதன் போக்கிலேயே விட்டு, பிரம்ம ஸ்வரூபத்திலேயே திளைத்திருக்கும் மகான்களில்கூட ஒருவரேனும் ஒரு சில சந்தர்ப்பங்களிலாவது அற்புதம் செய்யாமற் போகவில்லை என்பது தெரிகிறது-சுகப்பிரம்மம், ஆதிசங்கரரிலிருந்து தொடங்கி, நம் காமகோடிப் பெரியவர்கள் வரை: ஆனால் அதை அற்புதமாக நினைத்து அவர்கள் செய்வதில்லை. அந்த நிலையில் அற்புதம் இயற்கையாக இருக்கும்.

மகான்கள் ஏன் அற்புதம் செய்ய வேண்டும், ஏன் சிலர் பொருட்டுமட்டும் இதைச் செய்ய வேண்டும் என்பது நம் சிற்றறிவுக்குப் புரியாத விஷயம். அவர்களது பேரறிவு நிலையிலேயே அதன் உண்மை தெரியும். எனவே புத்திக்கும் புரியாத இவ்விஷயத்தில் பக்திமட்டுமே செலுத்தி, இந்த அத்தியாயத்தில் பிரவேசிப்போம்:

குறிப்பிட்ட ஸித்திகள் பெறவேண்டும் என்ற உத்தேசத்தோடு குறிப்பிட்ட தேவதைகளை வழிபட்டு, அதற்குரிய மந்திரங்களைக் குறிப்பிட்ட ஆவிருத்திகள் ஜபித்தவள் அல்ல நம் அம்மா. மற்ற மஹாஞானிகளும் அப்படியே. அவர்கள் உலகம் முழுதையும் இயக்கும் மகா மனத்தோடு தங்கள் மனத்தை ஒன்றவைத்து, விடுவதாலேயே அந்த நிலையில் எதை சங்கற்பித்தாலும் அது நடந்துவிடும்.

ஸித்திகளை இயற்கையாகப் பெற்ற இந்த ஞானியர், எந்த அற்புதமும் செய்யாவிடில், (அவர்களது மகத்தான ஞானம் வெளி உலகுக்குத் தெரியாதாகையால்), 'இவர்களும் சாமானிய மனிதர் போலத்தானே இருக்கிறார்கள்?' என்று மக்கள் எண்ணிவிடக்கூடும். இதனால் மகான்கள் பாதிக்கப்படுவதில்லை. அந்த மக்களே பாதிக்கப்படுகின்றனர். ஒரு மகானை அண்டிப் பெறுகிற புனித ஆனந்தத்தை அவர்கள் இழந்து விடுகிறார்கள் அல்லவா? மகான்கள் ஆத்ம மோக்ஷத்தோடு, லோக சங்கிரஹத்தையும் (உலகின் உய்வையும்) கருதுகிறவர்கள். எனவேதான் அவர்களும் உலகினருக்குத் தங்கள் அதீத நிலையை உணர்த்தவே அற்புதங்கள் புரிந்து அவற்றால் ஈர்த்து, முடிவில் ஞானம் அருள்வர் போலும்! நம் அம்மா விஷயத்தில், அவள் எந்த உத்தேசத்தில் அற்புதம் செய்தாளோ, நாம் அறியோம். எளிமையாகத் தோன்றிக்கொண்டே ஆழ்கடலாக இருந்த தேவியின் திரு உள்ளத்தை யாரே உட்புகுந்து பார்க்க முடியும்? அவள் எந்த உத்தேசத்தில் அற்புதம் செய்தாலும் சரி, அவள் இந்த அதிமாநுஷ்யமான செயல்களைப் புரிந்ததால் தான் இன்று பலர் அவளைத் தெய்வமாக உணர்ந்து வழிபட்டுப் பயன்பெற முடிகிறது. அவள் இவற்றைச் செய்திராவிடில் அன்று அவளுடன் வாழ்ந்த மக்களும் சரி, இன்று அவளது சரிதையைப் படிப்பவர்களும் சரி, 'அம்மா நல்லவள், ரொம்ப ரொம்ப நல்லவள்—வாஸ்தவம்தான். ஆனாலும் சாதாரணப் பெண்கூட இத்தனை நல்லவளாக இருக்க முடியாது என்பதில்லையே! நல்லவளாக இருப்பதுமட்டுமின்றி, அநுக்கிரக சக்தி பெற்ற அசாதாரண வியக்தி அவள் என்பதற்குச் சான்று இல்லையே!' என்று எண்ணக்கூடும். அற்புதமாக வெளித் தெரியாமலே அவள் பல உள்ளங்களைச் செம்மை செய்திருப்பது அப்படிப்பட்ட பாக்கியத்தைப் பெற்ற ஒரு சிலரின் அந்தரங்க அநுபவமாயிருக்குமே யன்றி, அதனால் உலகோர் அவளது உயர்வை உணர்ந்து உய்வு பெற்றிருக்க முடியாதல்லவா? இதில் இன்னம் விசித்ரம் யாதெனில், உள்ளநுபவம் பெறுவோருமேகூடச் சில சந்தர்ப்பங்களில் அது தன் வசமாக

நடந்ததாக மயங்குவதும் இச்சமயத்தில் அவர்க்குமே வெளி அற்புதத்தால் உள்மாறுதலின் காரணகர்த்தாவைக் காட்டிக் கொடுக்க நேருவதும் உண்டு. ஆதரிச மானுட வாழ்வை வாழ்ந்து காட்டிய அதித சக்தி அம்மா என்பதற்கு இந்த அற்புதங்களே அத்தாட்சி கூறுகின்றன.

* * *

அம்மாவின் அதிமாநுஷ்ய இயல்பு தவறாமல் வெளிப்பட்டது அவள் மந்திரோபதேசம் தந்த சந்தர்ப்பங்களில்தான். 'யாரோ ஓர் அம்மாள் ஏதோ ஒரு மந்திரம் தருகிறாள். இது பலன் தந்தாலும் தரும், தராமலும் போகலாம்' என்று உபதேசம் பெறுபவர் எண்ணிவிடக்கூடாது என்றே போலும், அரிதான மந்திரத்தை ஒருவருக்குத் தந்து அவரது வாழ்வின் பொறுப்பைத் தன்னிடம் மாற்றிக் கொள்ளும்போதெல்லாம் அம்மா தன் தெய்விகத்தைத் தயங்காமல் வெளிக்காட்டுவாள்.

அம்மா மந்திர ஜபத்தையே வலியுறுத்தியவள் என்று முன்னரே கண்டிருக்கிறோம். ''இந்த ஜபமெல்லாம் ஏதோ பொம்மனாட்டி சமாசாரம். உங்களுக்கு ஸ்வரூப தியானம்தான் முக்கியம்'' என்று அவள் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் துறவி சிரேஷ்டர்களிடம் கூறியது உண்மையே. ஆனால் அது அவர்களை அவர்களது ஆத்மவிசார மார்க்கத்திலேயே நிலைப்படுத்துவதற்காகச் சொன்ன வார்த்தைதான். பொதுவாக மக்களின் சித்தத்தை ஒருமுகப்படுத்திச் சுத்தம் செய்வதற்கு மந்திர ஜபத்தையே மகா ஔஷதமாகத் தந்தவள் அம்மா.

ஏராளமானவர்களுக்கு மந்திரோபதேசம் செய்த மகா ஆசார்யை அவள். பூஜை அறையில் மட்டுமின்றி, சாலை ஓர மரத்தடியிலும், ரெயில்வே ஸ்டேஷனிலும், நோய்ப் படுக்கையில் இருந்துகொண்டும்கூட, அதற்கான ஆவேசம் வந்தபோதெல்லாம் அடியாருக்கு மந்திரம் வழங்கினாள் அம்மா.

மந்திர மூர்த்தியான பரமஹம்ஸரே தனக்குத் தந்த இந்த மந்திரங்களின் சக்தி ஜீவனுடன் செயற்படுவதாக அவள் சொல்வாள். வெறுமே பகவந் நாமங்களைச் சொல்வதைவிடவும், தோத்திரங்கள் கூறுவதைவிடவும், பீஜாக்ஷரங்கள் சேர்ந்த மந்திரங்களை ஜபிப்பது சித்த சுத்திக்கும், கர்ம நாசத்துக்கும் அதிக வலுத் தருவதாகும் என்பாள். அதே சமயத்தில், ''ஆனாலும் வெறும் அக்ஷர சக்தியால்மட்டும் மோக்ஷம் பெறுவது நடக்காத காரியம். மந்திர ஜபத்தால் மனத்தூய்மை பெறலாம்; பழவினையைத் தீர்த்துக்கொள்ளலாம்; ஆனால் ஜபிப்பதில்

உள்ளம் உருகிய பக்தியும் கலந்தாலே மோக்ஷம் பெற முடியும்; சரணுகதி செய்யாமல் முக்தி கிட்டாது'' என்பாள்.

ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவருக்கு இன்ன மந்திரத்தை உபதேசிக்கவேண்டும் என்று அம்மாவுக்குத் தெரிந்துவிடும். அப்படிப்பட்ட ஒருவர் விரும்பாவிட்டாலும்கூட அவருக்கு அம்மா உபதேசித்தே தீருவாள். இதனுல் தனக்கு ஏற்படும் மகத்தான பொறுப்பையும் சொல்வாள்! ''மந்திரோபதேசத்தின்போது குருவின் நல்ல அம்சங்கள் சிஷ்யனுக்குள் பாயும். சிஷ்யனின் கெட்ட அம்சங்கள் குருவுக்குள் பாயும். நான் ஒருத்தருக்கு உபதேசிச்சுவிட்டால், அப்புறம் அவரை மோக்ஷத்தில் சேர்க்கிற வரை என் பொறுப்பு தீருகிறதில்லே. இந்த சரீரம் நசிச்ச பிறகும்கூட அவாளுக்காக நான் உழைச்சே ஆகணும்'' என்பாள்.

உபதேசம் பெற்றவர்கள் ஒரு நாளேக்குப் பதினையாயிரம் அல்லது இருபதாயிரம் ஆவிருத்தி ஜபித்தாலே விரைவில் ஸித்தி உண்டாகும் என்று அம்மா கூறுவாள். கண்டிப்பாக நூற்றெட்டு ஆவிருத்தியாவது அதமபக்ஷம் ஜபித்தேயாக வேண்டும் என்று விதித்தாள். அவ்விதம் ஒரு சீடர் ஜபிக்காவிடில் அது அம்மாவுக்குப் பளீர் என்று தெரிந்துவிடும். அவர்களுக்குத் தான் பொறுப்பாளி யாதலால் அவர்கள் செய்யாமல்விட்ட ஜபத்தையும் இவளே செய்வாள். நல்ல காய்ச்சலின்போது கூட நள்ளிரவு வரை இவ்விதம் மற்றவர்களுக்கு 'ஈடுகட்டுவதற்காக' அம்மா ஜபம் செய்திருக்கிறுள்.

இது அம்மாவின் அத்தியந்த சீடர்களுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. ''அம்மா, இதோடாவது உங்கள் சிஷ்ய வர்க்கத்தைக் கட்டுப்படுத்திக்கோங்கோ. இனிமேலே யாருக்கும் மந்திரோபதேசம் தரவேண்டாம்'' என்று கேட்டுக்கொண்டார்கள். அம்மாவோ அதைப் பொருட்படுத்தாமல், ''இந்த உலகத்திலே என்னே டாகுர் வைச்சுட்டுப் போனதே இதுக்காகத்தானே? இந்த உபதேச சமாசாரம் முழுக்க அவர் கையிலே இருக்கு. இதை நான் கட்டுப்படுத்த மாட்டேன்'' என்றுள்.

ஆழ்ந்து பார்த்தால் அவள் இப்படிக் கூறியதில் ஓர் உண்மை தெரிகிறது. ''என்னே ஒருத்தர் அம்மான்னு கூப்பிட்டுவிட்டால் அப்புறம் நானே என்னேக் கட்டுப்படுத்திக்க முடியாது'' என்று இவள் டாகுரிடம் கூறியிருந்தாள் அல்லவா? 'பல்லாயிரம் பேர் இவளே அம்மா அம்மா என்று கூப்பிட்டுக் கொண்டு வருவார்களே! அவர்கள் அனைவரின் பாபத்தையும் இவள் வாங்கிக்கொண்டு அவதிப்பட்டால் என்னுவது?' என்று

தரிசனம் மிகுந்த அந்தக் கணவர் சிந்தித்தார் போலும்! அவளைச் சாரும் பாப பாரம் ஓரளவேனும் குறையவே அவளைப் பலருக்கு மந்திரோபதேசம் தருமாறு செய்தார்போல் இருக்கிறது! ஏனெனில் மகாமாதாவிடமிருந்து மந்திரோபதேசம் பெறுவதை நூற்றுக்குத் தொண்ணூறுபேர் பெரும் பாக்கியமாகக் கருதிக் கூடிய வரையில் சிரத்தையுடனே ஜபிப்பர் அல்லவா? இவர்கள் மந்திர ஜபத்தினுலேயே தங்கள் கர்மத்தைக் கழித்துக்கொள்வதால் இவர்களது கர்மாவுக்காக அம்மா அநுபவிக்க வேண்டியிராது. அநேகமாக இப்படிப்பட்டவர்கள் அதிக பூர்வ பாவம் இல்லாத உத்தம ஜீவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் தங்களது ஆத்ம க்ஷேமத்துக்கும் 'உபரி'யாகச் செய்கிற ஜபம், அம்மாவின் இரண்டாந்தரச் சீடர்களை உயர்த்திவிட உதவியிருக்கும்! இவ் விதத்தில், தம் பிரிய பத்தினியின் பளுவை ஓரளவு இலேசாக்கவே பரமஹம்ஸர் அவளை மந்திரோபதேச குரு ஆக்கினர் என ஊகித்துணரலாம்.

ஆனல் அம்மாவின் 'ஜாதக' விசேஷம் அவளது பதிதேவர் சௌகரியம் செய்து தந்தாலும் அதிலும்கூட ஓர் அசௌகரியம் ஏற்பட்டிருக்கிறது! இவளிடம் உபதேசம் பெற்றுவிட்டுப் பிறகு அதில் சிரத்தை இல்லாமல் விட்டுவிட்ட பிரகிருதிகளுக்காக இவளே இரவும் பகலும், நோயிலும் துயரிலும் ஜபிக்கவேண்டி யிருந்திருக்கிறது!

ஆயினும் அவளுக்கு, உபதேசிப்பதில் உற்சாகம் குன்றவே இல்லை. மாருக, 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்பது போல் தன்னிடம் உபதேசம் பெற யாரும் வராத நாள் வீணன நாளே என்று வாடினுள். ஆதியில் ராமகிருஷ்ணர் ஸர்வேசுவரியைக் காணுதபோதும், தமக்கென தெய்வ நிர்மிதமாக விதிக்கப்பட்ட சீடர்கள் தம்மிடம் வராதபோதும், ''இன்னெரு நாள் வியர்த்தமாகச் சென்றதே'' என்று புலம்பினுர் அல்லவா? அது போலவே மந்திரோபதேசத்துக்கு சிஷ்யர் கிடைக்காத நாட்களில் தேவி சாரதை தவிப்புண்டு டாகுரிடம் கேட்பாள். ''பிரபோ! என்னை உலகத்திலே நீங்க வைச்சுட்டுப்போன காரியத்துக்குப் பிரயோஜனம் இல்லாமல் ஒருநாள் பாழாகப் போகப்படுமா? நான் தூங்கறதுக்குள்ளே எங்கேயிருந்தாவது யாரையாவது அனுப்பி வையுங்கோ, ஸ்வாமீ!''

இப்படி வேண்டிக்கொண்டு நெஞ்சார்ந்த நம்பிக்கையோடு வெளிவராந்தாவுக்கு வந்து யாராவது வருகிருர்களா என்று பார்ப்பாள். அந்த நம்பிக்கை வீண் போன நாளே கிடையாது.

நிச்சயமாக எவரேனும் வருவர், அவருக்கு அம்மா மந்திரம் வழங்குவாள்!

ஒரு பக்தர் தொண்டை அடைக்க, "அம்மா, எனக்கு மந்திரம் தரவேண்டாம், அம்மா! இதோ, நீங்கள் வாதக் காலை மடக்க முடியாத அவஸ்தையுடன், தைலம் தேய்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கேளே—இந்தக் கொடுமைக்குக் காரணம் உங்களிடம் உபதேசம் வாங்கிண்டவா செய்த தப்புத்தானே? அந்த அபராதிகளின் கோஷ்டியிலே அடியேனையும் சேர்க்காதேள், தாயே!" என்றார்.

அம்மாவின் பிரேம ஸௌந்தர்யத்துக்கு ஓர் இளநகை வளம் செய்தது. "நீ சொல்றது எப்படிச் சரியாகும், அப்பா? குழந்தைகள் க்ஷேமமாக இருக்கிறதுக்காக ஒரு தாயார்க்காரி கொஞ்சம் சிரமப்படறதுதானே லோக நியதி? உங்களுடைய க்ஷேமத்திலே என் அவஸ்தை பறந்து போயிடறது" என்றாள். "இந்தா, இந்த மந்திரத்தைச் சமர்த்தா வாங்கிக்கோ" என்றாள்.

பக்தரால் பணியாமல் இருக்க முடியவில்லை.

* * *

தடம் புரண்டுவிட்ட ஒருத்தி கூசிக் குறுகிக்கொண்டு அம்மாவின் அறைவாசலுக்கு வெளியிலேயே நின்றுகொண்டு முனகினாள்: "தேவி, தாயே! புனிதமான உங்களுக்குச் சமீபத்திலே வரவே இந்தப் பாவிக்கு யோக்கியதை இல்லை. என்னவோ அசட்டு தைரியத்திலே இவ்வளவு தூரம் வந்துட்டேன். இனியும் உங்க சந்நிதானத்தை அசுத்தம் பண்ணாமல், இதோ போகிறேன், அம்மா!"

அம்மா அதிவேகமாக அவளிடம் ஓடினாள்; தன் புண்ணியக் கரங்களால் பதிதையின் கழுத்தை வளைத்து அவளைத் தன்னிடம் நெருக்கிக் கொண்டாள். "என் செல்ல ராஜாத்தி! பாபத்தைப் பாபம்னு தெரிஞ்சுண்டுட்டியோன்னோ? பச்சாத்தாபம் வந்துடுத்தோல்லியோ? நீ என் பிரிய மகள்தான். துளிக்கூடக் கவலைப்படாதே; கொஞ்சம்கூட பயப்படாதே" என்று இனிக்கச் சொல்லி அவளுக்கு மந்திரோபதேசம் செய்தாள் தேவி சாரதை.

அன்றிரவு அனலிற் புழுவாக அம்மாவின் உடல் பாடுபட்டது; கங்கா ஜலத்தால் எத்தனையோ முறை புரோக்ஷித்துக்கொண்டும் வாதை தீரவில்லை.

"ஐயோ, எங்கம்மா! எத்தனை கஷ்டத்தை இப்படி அலாக்காக வாங்கிக்கறேன்!" என்று அவளது பசங்கள் அரற்றினர்.

அத்தனை வாதைக்கிடையில் வாடாநகை ஒன்று அம்மாவின் வதனத்தில் இழைந்தது. ''பசங்களா! இந்த வங்காளத்திலே குண்டு குண்டா ரஸகுல்லா கிடைக்கிறதே என்கிறதுக்காகவா நாங்க இங்கே ஜன்மா எடுத்திருக்கோம்? எதுக்காகப் பிறந்திருக்கோமோ, அதை சந்தோஷமாகச் செய்யத்தானே வேணும்? சரீரம்னு ஏற்பட்டால், அது என்னிக்கோ ஒருநாள் அழியத்தான் வேணும். அதன் சௌகரியத்தைப்பற்றி எதுக்கு இத்தனை விசாரப்படணும்?'' என்றாள்.

இன்னொரு சமயம், ''அசட்டுக் குழந்தைகளோட பாவத்தையும் தாபத்தையும் நாங்ககூட வாங்கிண்டு ஜீரணிக்காவிட்டால் அவா கதிதான் என்ன?'' என்று கேட்டாள்.

இந்தப் பதிலில் திருப்தி அடையாத பக்தர்களைத் திருப்திப்படுத்தவோ என்னவோ, தொடர்ந்து சொல்வாள்: ''இங்கே வர அபராதிகளால் எனக்கு ஏற்படுகிற அவஸ்தையையமட்டும் கவனிக்கிறேளே! இங்கே எத்தனையோ சுத்தாத்மாக்கள் வராளே! அவா என் காலை ஸ்பரிசிச்ச உடனே எனக்குள்ளே எத்தனை ஆனந்தம் பாயறது என்கிறதையும் கவனியுங்கோ!''

ஒரு சமயம் ஸ்வாமி பிரம்மாநந்தர் மூவரை அம்மாவிடம் உபதேசம் பெற அனுப்பினார். கல்பகத்தருவான அம்மாவும் தட்டாமல் உபதேசம் தந்தாள். இதன்பின்தான் பிரம்மாநந்தருக்குத் தாம் அனுப்பிவைத்த நபர்கள் எப்பேர்ப்பட்ட அதமாதமர் என்று தெரிந்தது. அவர்களுக்கு உபதேசித்ததால் அம்மா ஒரு பாப பர்வதத்தையே உட்கொண்டிருக்கிறாள் என்று உணர்ந்து அப்படியே விக்கித்து அமர்ந்துவிட்டார் ஸ்வாமிஜி. நெடுமூச்செறிந்தார். கைகளைக் குவித்துக்கொண்டு, ''ஆஹாஹா! இப்படியும் ஒரு கருணை உண்டா? அம்மாவே தான் நாம் அவர்களுக்கு உபதேசிக்காமல் தடுத்து தன்னிடம் அனுப்பச் செய்திருக்கிறாள்! அவள் உட்கொண்ட அந்த ஆலஹால விஷத்தை நாம் ஏற்றிருந்தால் அப்போதே பஸ்பமாகிப் போயிருப்போம். அம்மா சதா சர்வகாலமும் நாமறியாமலே நம்மைச் சூழ்ந்திருந்து ரட்சிக்கிறாள்'' என்று விம்மிக் கூறினார்.

எதற்கும் 'ஷரத்'தை யோசனை கேட்டு அவர் விதிக்கும் ஷரத்துப்படியே நடக்கும் சாரதை, மந்திரோபதேச விஷயத்தில் மட்டும் அவர் தடுத்தாலும் அதை மத்தகஜமென ஒதுக்கி எறிவாள்! அடங்கிக் கிடக்கிற அம்மாவுக்கு இப்படி ஒரு காருண்ய வெறி!

தங்களால் முறைப்படி ஜபத்தில் ஈடுபட முடியவில்லை என்பதாலோ, ஜபித்தால் விசேஷ பலன் தெரியவில்லை என்பதாலோ, அம்மாவிடமே மந்திரத்தைத் திருப்பிக் கொடுக்கவந்த பிருஹஸ்பதிகளும் உண்டு! "அசடுகளா! டாகுர் வார்த்தை ஒருநாளும் பொய் ஆகாது. ஜபத்தை விடாமல் செஞ்சுண்டு வாங்கோ, கடைசியாகக் கண்ணை மூடறபோதாவது இஷ்டதெய்வம் தரிசனம் தரும், டாகுரும் தரிசனம் தருவார். என் குழந்தைகளுக்கு விமோசனம் இல்லாமல் போகுமா? ஒருநாளும் இல்லை. என் பசங்களை நரகத்துக்கு அனுப்புகிறதுக்கு விதிதேவதைக்கே தைரியம் கிடையாது. விடாமல் ஜபத்தைப் பண்ணுங்கோ. போகப்போக சிரத்தையும் வளரும்; பலனும் தெரியும்" என்று அமுதத்தை அழுத்தமாக மொழிவாள். எளிய அம்மா பேசுகிற பேச்சா இது!

"சின்னூண்டு விதைக்குக் கவனமாக ஜலம் வார்த்துண்டு வந்தா, அது எத்தனை பெரிய மரமாகிறது! ஏதோ நாலஞ்சு எழுத்துதானேன்னு மந்திரத்தை அலட்சியம் பண்ணுமல் மனசை அதிலே வார்த்துண்டு வந்தா, அது கர்மச் சூட்டிலேருந்து காப்பாற்றுகிற மரமாக நிழல் தரும். ஆமாம்" என்பாள் தேவி. "தினம் பதினையாயிரம் ஆவிருத்தி ஜபியுங்கோ. பலன் தெரியலை என்றுல் என்கிட்ட சண்டைக்கு வாங்கோ" என்று 'சவால்' விடுப்பாள்.

"கடிகாரம் ஒரு விநாடிகூட விடாமல் 'டிக்' 'டிக்'னு அடிக்கிறமாதிரி, உன் மனசு சதாகாலமும் ஜபிச்சுண்டேயிருக்கப் பழக்கணும். உழைக்கும்போதும் அடி மனத்திலே ஜபம் நடக்கணும். உழைப்பை நிறுத்திட்டு, காலையும் மாலையும் ஸந்தி வேளைகளில் கிரமப்படி ஜபிக்கணும். இப்படிச் செஞ்சால் கட்டாயம் கதிமோக்ஷம் உண்டு" என்று அடித்துக் கூறுவாள்.

'கிரமப்படி' ஜபிக்கணும் என்று அம்மா சொன்னதால், ஜபம் புரிவதற்கு அவள் விதித்த நியமங்களைப் பார்ப்பது பொருத்தமாகும்.

கூடியமட்டும் வெறும் வயிற்றேடு ஜபிப்பது நல்லது என்பாள். இருப்பினும், விழித்தவுடன் காபி, டீ அருந்தும் பழக்கமுள்ளவர்கள் இவற்றைப் பானம் செய்துவிட்டுப் பிறகு ஜபிப்பதில் தவறில்லை என்று விட்டுக்கொடுப்பாள் - இல்லாவிடில் இந்தப் பானங்களைப் பருகவில்லை என்ற நினைவே அடி மனத்தில் 'ஜப'மாகிவிடும் என்பதால். ஜபிக்கையில் பத்மாஸனத்திலோ சப்பணம் கூட்டியோ அமரலாம். இது பொது விதியாயினும் குறிப்பிட்ட ஸாதகருக்கு எந்த நிலையில் நீண்ட நேரம் சௌகரியமாக உட்கார முடிகிறதோ அதில் அமரலாம்

என்பது அம்மா செய்த விதி. கொஞ்சம் கொஞ்சமாகப் பத்மாஸனத்தில் இருக்கப் பயில்வது நலம் என்பாள். ஆரம்ப நாட்களில், இவ்விதம் அமர்கையில் காலில் ரத்தம் கட்டிக் குறுகுறுப்பு ஏற்படும்போது கால்களை மாற்றிப் போட்டுக் கொள்வதில் தவறில்லை; பிடிவாதமாக ஒரே நிலையில் அமர்ந்திருக்கவேண்டும் என்று கருதினால், கருத்து ஆசனத்தில்தான் இருக்குமே தவிர, மந்திரத்தில் ஒருமுகப்படாது என்பாள். அப்பியாசத்தின் மூலம் நாளடைவில் ஒரே நிலையில் நீண்ட நேரம் அமர்ந்திருக்க இயலும் என்பாள்.

ஜபம் தொடங்குமுன் நேற்றைவிட இன்று என் மனம் முன்னேறியிருக்கிறதா, அல்லது பின்னுக்குப் போயிருக்கிறதா என்று சற்றே சிந்திக்கவேண்டும். முன்னேறியதாகத் தோன்றினால், அதற்காக அகம்பாவப்படாமல், எளிமையோடும் மகிழ்ச்சியோடும் பகவானுக்கு நன்றி சொல்லி, அந்த நல்ல நிலையில் ஜபம் தொடங்கவேண்டும். பின்னேறியதாகத் தோன்றினால் தளர்ச்சியும் துக்கமும் அடையக்கூடாது. "பரம்பொருளே! இன்றேனும் என்னைக் கொஞ்சம் சுத்தப்படுத்துவாய்!" என்று குழைவுடனும் நம்பிக்கையுடனும் பிரார்த்தித்துக்கொண்டு ஜபிக்கவேண்டும். இதெல்லாம் அம்மா கூறும் புத்திமதி.

பிராணாயாமம் முதலிய சுவாசப் பயிற்சிகளை ஜப ஸாதகர்கள் ஓரளவு மேற்கொள்வது மன ஒருமைப்பாட்டுக்கு நன்மை பயக்கும். ஆனால் இவற்றை அதீதமாக அப்பியசிக்க வேண்டியதில்லை. சுவாச பந்தத்தை அதிகப்படுத்துவதால் மூளை சூடேறிப் போகும். நிறைந்த பக்தியோடும் நிம்மதியோடும் ஜபித்தால், விசேஷப் பிராணாயாமாதிகள் இன்றியே மனம் ஒருமுகப்படும் என்று அம்மா உபதேசிப்பாள்.

அவள் அழகுபடக் கூறுவதைக் கேளுங்கள்: "ஆகாரத்தைப் பொருட்படுத்தாமல், குளிர் வெயிலைக் கவனியாமல் இருக்கிறதற்கு—அதாவது சரீரப் பிரக்ஞையை விடுகிறதற்கு—தீவிர யோகாப்பியாசம் வழி செய்யறது, வாஸ்தவம். ஆனால் 'எனக்குப் பசி பட்டினி பெரிசில்லை; குளிர் வெயில் பெரிசில்லை'ன்னு இதுகளையே ஒருத்தன் நினைச்சால் அப்போ அவனும் சரீரப் பிரக்ஞையைத்தான் முக்கியமாக்கிக் கொள்கிறான். யோகிகளில் பலருக்குத் தங்களுக்கு ஆகாரம் வேண்டியதில்லை, தங்களுக்கு வியாதி வரதில்லை, தங்கள் சரீரம் கட்டுமஸ்தாக அதீத சக்தியோடு இருக்கு என்கிறதையெல்லாம் மற்றவாளுக்கு வெளிக்காட்டுகிறதே லட்சியமாகவும் ஆயிடறது. அதாவது

சரீரத்தைப் புறக்கணிக்கிறதுக்காக யோகசாதனை பண்ணிட்டு, கடைசியிலே அதைக்கொண்டு சரீரத்துக்குப் பிராதான்யம் கொடுக்கிறதாகவே முடியறது. ஆத்மாநுபவத்துக்குப் பதில் ஆரோக்கியமே நோக்கமாயிடறது. இதுக்கு நேர்மாருகச் சிலர் பக்தி, பஜனைன்னு சொல்லிண்டு, தங்களுக்குக் கஷ்டமாக இருந்தாலும் விடாப்பிடியாகப் பட்டினி கிடந்துண்டும், ராக் கண் முழிச்சுண்டும், நாஞ இடங்களுக்கு அலைஞ்சுண்டும் ஆரோக்கியத்தைக் குட்டிச் சுவர் ஆக்கிக்கிரு. சரீரம் ஆரோக்கியமாயிருந்தாலொழிய சாதனை பண்ணறதே கஷ்டமாயிடும். எதையுமே மிகைப்படுத்தாமல், சுலபமான பகவானை சௌக்கியமா ஆராதிச்சே பூரண பலன் பெறலாம்.''

கீதாசாரியனும் புத்தரும் சொன்னபடி, 'அதி'களை விடுத்து இடைவழியில் இனிக்கப் போகவேண்டும் என்கிருள் தேவி. பராசக்தியுடன் அனவரதமும் ஜீவத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்ற ஆர்வ வெறியில் அதி தீவிர சாதனைகளைச் செய்த பரமஹம்ஸ ராமகிருஷ்ணரும், ஏனைய சாமானிய ஸாதகர்கள் 'பிபீலிகா ரீதி'யில் எறும்புபோல் சிறிது சிறிதாக ஊர்ந்தே இறைவனை அடைய முடியும் என்று கூறியருளினுர். அவர்தான் இப்போது அம்மாவை முடுக்கிவிட்டு ஆயிரமாயிரம் மக்களுக்கு அருமந்திரங்களில் உபதேசம் தந்தார். மந்திரோபதேசம் தந்தவுடன், அதைப் பெற்றவருக்கு டாகுரின் படத்தைக் காட்டுவாள் அம்மா. ''அவர்தான் உபதேச குரு. நான் கருவி மாத்திரமே'' என்பாள். ''அவர் ஜீவியவந்தராக இருக்கச்சே, பொறுக்கி எடுத்த மாதிரி சிலபேருக்குத்தான் மந்திரோபதேசம் பண்ணினுர். அவாள் எண்ணிக்கையில் குறைச்சலாக இருந்ததாலே டாகுரோட அபரிமிதமான ஆத்மசக்தியிலே அவாளுக்குக் கணிசமாகப் பங்கு கிடைச்சது. இதனுலே அவா 'மள மள'ன்னு முன்னேறி ஸமாதி முதலான உன்னத நிலைகளை அடைய முடிஞ்சுது. எங்கிட்டேயோ அவர் சாரிசாரியாக பக்தாளைத் தள்ளி விட்டுண்டே இருக்கார். அத்தனை பேரையும் வேகமாக மேலுக்கு உசத்துகிறது முடியுமா? சிறுகச் சிறுகப் பலன் கிடைக்கிறமாதிரி நானும் இவ்வளவுபேருக்காகவும் ஏதோ பண்ணிண்டு இருக்கேன்'' என்று அவள் சொல்வதுண்டு.

பெருமளவிலே இந்தக் காரியத்தைச் செய்ததால்தான், அவர்களுக்கு எப்படி சௌக்கியமாக விதிகள் தந்தாளோ, அப்படியேதான் உபதேசம் செய்வதற்கும் நீக்குப் போக்கான நடைமுறைகளைப் பின்பற்றினுள். மந்திரோபதேசத்தின் போது தானும் சரி, சிஷ்யரும் சரி வெறும் வயிற்ருேடு இருக்க

வேண்டும்; இருவரும் தரையில் உட்காராமல் ஆசனத்தில் அமரவேண்டும் என்பதிலெல்லாம் அம்மா கூடியவரையில் கூர்ந்த கவனம் செலுத்தினுள். ஆனுல் வலியதோர் உந்துதல் வந்தவிடத்து இந்த விதிகளையும் விலக்கிவிட்டு, உபதேசம் அளிப்பாள். ஒரு விதியை இறையளவேனும் அநுசரிக்க வசதி இருக்குமாயின், 'பொன்னை வைக்கிற இடத்தில் பூவை வைத்து' அதைத் தவருமல் பயன்படுத்திக்கொள்வாள். உதாரணமாக, கோயால்பாராவில் ஒரு பிரம்மசாரியைத் திறந்த வெளியில் சந்தித்த அம்மா, அந்த நேரத்திலேயே அவருக்கு மந்திரம் தர உந்துதல் பெற்றுள். அவரிடம் அருகே இருந்த வைக்கோற் போரைக் காட்டி, "அதிலேருந்து நாலு வைக்கல் தாளை இழுத்து உனக்கும் எனக்கும் ஆசனம் மாதிரிப் பரப்பிவை. உபதேசம் பண்ணுகிறேன்" என்றுள்.

விதிகள் சிலவற்றைக் கடைப்பிடிக்க இயலாத ஒரு சிஷ்யர் அதை உண்மையான வருத்தத்தோடு அம்மாவிடம் கூறி, "தாயே! இதனுல் அநுக்கிரகத்தைக் குறைச்சுவிடுவேளா?" என்று கேட்டார். "அசடே, பெற்ற தாய் எப்போதாவது மாற்றுந்தாயாக மாறுகிறது உண்டா?" என்று அர்த்தபுஷ்டி யுடன் ஆறுதல் வாக்குத் தந்தாள் அன்னை.

மந்திர தீக்ஷை பெற்றவர்களும், பூஜை எடுத்துக்கொண்ட வர்களும் எல்லா ஆசாரங்களையும் வழுவறப் பின்பற்றி, சடங்கு களை ஸவிஸ்தாரமாகச் செய்தால் அம்மாவுக்குத் திருப்திதான். ஆனுல், "பூஜையிலே பக்திதான் முக்கியம் என்கிறதை மறக்கக் கூடாது. தன்னையும் ஹிம்சிச்சுக்கொள்ளாமல், பிறரையும் ஹிம்சை செய்யாமல் பூஜை பண்ணனும். ஒவ்வொன்றுக்கும் நியாஸம், மந்திரம், தனித்தனி திரவியம் என்று நீட்டிண்டே போகிறச்சே, இந்த விஷயங்களிலேயே கருத்து ஊன்றுகிறதாலே பக்திக் கசிவிலே மனசு ஒருமுகமாகிறதுக்கே ஹானி ஏற்பட் டாலும் ஏற்படும். அதனுலே மூலமந்திரத்தைச் சொல்லியே சகல உபசாரங்களும் செஞ்சுடலாம்: அதிலேயே முழுப்பலனும் கிடைச்சுடும்" என்பாள். மனிதமனத்தின் சஞ்சல சுபாவத்தை நன்கு அறிந்த அம்மா தந்த அறிவுரை இது:

அம்மா கூறிய ஆகார நியமம்—ஆதியில் டாகுர் கூறியது தான். விசேஷ விதி நிஷேதங்கள் போடாத அம்மா, பகவானுக்கு மன உறுத்தல் இல்லாமல் நிவேதிக்கக்கூடிய எதையும் நிவே தனம் செய்துவிட்டு உண்ணலாம் என்பாள். "ஆனுலும் டாகுர் சொல்வார்—இழவு வீட்டிலும், விவாகத்துக்கு அப்புறம் செய்

கிற சாந்திக் கல்யாண விருந்திலும் சாப்பிடக்கூடாதுன்னு'' என்பாள்.

* * *

இந்த அத்தியாயத் தொடக்கத்தில் சொன்ன அதிமாநுஷ்யச் செயல்களுக்காக வாசகர் பலர் ஆர்வமுடன் காத்திருப்பார்கள். மந்திரகுருவாக அம்மா காட்டிய அதீத சக்திகளைப் பார்க்கலாம்.

முதலில் இத்துறையில் அம்மாவுக்கிருந்த தலைமை ஸ்தானம் சாட்சாத் விவேகாநந்த மகாபுருஷராலேயே பூரணமாக ஒப்புக்கொள்ளப்பட்டதைப் பார்ப்போம்.

ஸ்வாமி விவேகாநந்தரிடம் மந்திரோபதேசம் பெறுவதற்காகச் சென்றார், சுரேந்திரநாத் ஸேனர் என்ற பக்த சிரேஷ்டர். அவருக்கு தீக்ஷை வழங்குமுன் தியானத்திலிருந்தார் ஞானசிம்மமான சுவாமிஜி. சட்டென்று தமது மகாசரீரத்தை உலுக்கிக் கொண்டார். கண்திறந்து ஸேனரைப் பார்த்து, ''என்னைவிடச் சக்திவாய்ந்த ஒரு வியக்தியே உமக்கு உபதேசம் தருவார் என்று குருமஹராஜ் சொல்கிறார். நான் உங்களுக்கு மந்திரம் தருவதற்கில்லை'' என்று முடிந்த முடிவாகக் கூறினார். விவேகாநந்த ஸ்வாமியை விடவும் ஆத்மசக்தியில் பெரிய ஒருவர் இந்த விசுவம் முழுவதிலும் உண்டோ என்று வியந்தபடி ஏமாற்றத்தோடு திரும்பினார் ஸேனர்.

ஓரிரு நாட்கள் ஓடின. ஸேனர் ஒரு கனவு கண்டார். கனவிலே, அவர் ராமகிருஷ்ணரின் மடியில் அமர்ந்திருக்கிறார். மெல்லிய சிவப்புக்கரை போட்ட சேலையும், கையில் கங்கணமும் அணிந்த ஒரு மாதரசி அங்கு வந்து அவருக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறாள். உடல் சிலிர்க்கிறது. கனவு கலைகிறது. மந்திரம் மட்டும் மறையாமல் மனத்தில் பதிந்திருக்கிறது!

பலப்பல ஆண்டுகள் கடந்துவிட்டன. முன் சொன்ன சம்பவம் நடந்தபோது சுரேந்திரநாத ஸேனரும், பொதுவாக வெளியுலகு முழுதுமே, அறியாதிருந்த சாரதாமணி இப்போது புனித அன்னையாகப் புவிக்குளே முதன்மை பெற்றுவிட்டாள். அவளைத் தரிசிப்பதற்காக ஜயராம்பாடியில் நடந்த துர்கா பூஜைக்கு வந்திருந்தார் ஸேனர். அது சாதாரண தரிசனமா? அவரது உடல் முழுதும், உள்ளம் முழுதும் மின்சாரம் பாய்ந்தாற்போல் இருந்தது. எத்தனையோ காலத்துக்குமுன் சொப்பனத்தில் வந்த அதே புண்ணிய மாதா அல்லவா எதிரே நிற்கிறாள்? அதே சேலை, அதே கங்கணம்!

கனவில் உபதேசித்தவள் இன்று நனவிலும் உபதேசித்தாள் —கனவில் உபதேசித்த அதே மந்திரம்தான்!

பரிவாய் ஒரு சொல் கனவில் கொண்டு பிழைக்கும் வழி தொட்டவர் இன்று அந்த வழியின் லக்ஷ்யத்துக்கே வந்து விட்டார்!—ஸேனர் மூர்ச்சித்து விழுந்துவிட்டார்.

இதுபோல் பலருக்குக் கனவில் தீக்ஷை தந்த அம்மா, நேரிலே அவர்களைக் கண்டபோது அதை உறுதிப்படுத்தியிருக்கிருள்.

தீக்ஷாகாலத்தில் அவள் எய்தும் அதிமாநுஷ்ய நிலை காரணமாக, எம்மொழியினரும் தாய்மொழியில் விடுக்கும் ஐயங்களைப் புரிந்துகொண்டு விளக்கம் தருவாள். அவர்களும் அவள் வங்காளியில் கூறும் விளக்கங்களைப் புரிந்துகொண்டு விடுவர். அம்மாவின் தென்னக யாத்திரையின்போது இந்த அதிசயத்தை நாம் பார்த்திருக்கிறோம்.

குலதேவதை, குலமந்திரம், குலகுரு ஆகியன உடையவர்கள் அம்மாவிடம் உபதேசத்துக்கு வந்த மாத்திரத்தில் அவளுக்கு அவர்களுடைய பரம்பரை வழக்கம் தெரிந்துவிடும். சிலரிடம் "குலதேவதை மந்திரமே போறும். உங்கள் குலகுருவிடமே உபதேசம் வாங்கிக்கோங்கோ" என்பாள். வேறு சிலரிடம், "குலகுருவுக்கு சம்பாவனையை நிறுத்திடணும்னு இங்கே வந்து விட்டே! அகத்து தெய்வத்தையும், குடும்ப ஆசாரியரையும் அலட்சியம் பண்ணினவாளுக்கு நான் உபதேசிக்கிறதில்லை" என்று கூறியிருக்கிருள். ஒரு சிலருக்குக் குலதேவதா மந்திரத்தோடு தானும் ஒரு மந்திரத்தைச் சேர்த்து உபதேசிப்பாள்.

குல குருமார் விஷயத்தில் அம்மா இவ்வளவு நேர்மையாக நடந்துகொண்டும்கூட, ஒரு குரு தமது சிஷ்யையை அம்மா அபகரித்துக்கொண்டுவிட்டாள் என்று கருதி அம்மாவின்மீது சாபம் இட்டாராம்! அந்த சிஷ்யை பயந்து நடுங்கி அழுதவாறு இதை அம்மாவிடம் தெரிவித்தாள். அம்மா மலர்ந்து சிரித்தாள். "டாகுர் கிட்டே சரணுகதி பண்ணின என்னை மகாபட்ட பிரம்ம ரிஷிகளின் சாபம்கூடத் தீண்டாது, மகளே! பயப்படாதே!" என்றுள்.

தங்களது குடும்ப குரு சாமானிய மனிதராக இருக்கிறுர், அல்லது ஒழுக்கம் குறைந்தவராக இருக்கிறுர் என்பதால் அம்மாவிடம் உபதேசம் நாடி வந்தோர் உண்டு. இவர்களில் பலரிடம் அம்மா, "மந்திரத்தைத் தருபவர் எப்படிப்பட்டவராயிருந்தாலும், மந்திரத்துக்கே தனிப்பட்ட சக்தி உண்டு; அது

உங்களை ரக்ஷிக்கும். அவர்கிட்டேயே தீக்ஷை வாங்கிக்கோங்கோ'' என்று கூறியிருக்கிருள். ''இந்த நாளிலே யோக்கியதை இல்லாத பலபேர் மந்திரோபதேசம் செய்கிறதையே ஒரு தொழிலாக வைச்சுண்டு பணம் பண்ணுகிரு. அது தப்புதான். ஆனால் இவாளாலேயும் ஒரு நல்லது நடக்கிறது. மந்திரம் வாங்கிண்டு பலபேர் பகவானை ஸ்மரிக்கும்படியாகச் செய்கிரு ளோன்னே, அந்த மட்டும் நல்ல காரியம்தானே?'' என்பாள் தனக்கே உரிய உதார குணத்தோடு.

ஆனாலும் மந்திரோபதேசம் செய்த மற்றோருக்கும் அம்மா வுக்குமிடையே இருந்த வேற்றுமை மடுவுக்கும் மலைக்கும் உள்ள மாறுபாடாகும். அம்மாவின் உள்ளத்தில் மந்திரமும், மந்திர மூர்த்தியும் தெள்ளத் தெளியப் பொங்கி நின்றதுபோல் வேறெந்த உபதேசகரிடம் இருந்திருக்க முடியும்? அவ்வாறே சீடரின் முற்கருமம், பிற்காலம் எல்லாமும் அவளுக்குப் பூரண மாகத் தெரிந்ததுபோல் வேறெந்த மந்திரகுருவுக்குத் தெரிய முடியும்? சீடரின் விஷயம் மட்டும்தானு? அவருக்கே தெரியாத அவரது குடும்ப வழிபரட்டு ரகசியங்களும்கூட அல்லவா அம்மாவுக்கு உபதேச காலத்தின்போது உள்ளங்கை நெல்லிக் கனியாகத் தெரிந்தன?

ரஸிக்லால் ராய்க்குத் தமது குலதெய்வம் இன்னதென்றே தெரியாது. அவரிடம் அம்மா, ''இதுதான் உன் குலதேவதை'' என்ற குறிப்பிட்டுச் சொல்லி, அதற்குரிய' மூலமந்திரத்தை உபதேசித்தாள். அதன்பின் அவர் தம் குடும்பப் பெரியவர் களிடம் வினவியபோது அம்மா சொன்னது அப்படியே சரி என்று ஊர்ஜிதமாயிற்று. ரஸிக்லால் ஆச்சரியம் அடைந்தார். ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அந்தந்த மூர்த்தியுமேயான அபரிமித ஆற்றல் படைத்த அம்மா அதிசாமானியமாக அடங்கிக் கிடந்தாளே, அதுதான் ஆச்சரியம்!

டாக்காவிலிருந்து வந்த சசிபூஷண முகர்ஜி, ''எனக்கு சக்தி பீஜம் உபதேசியுங்கள், அம்மா'' என்று பிரார்த்தித்தார். அம்மாவோ பளிச்சென்று, ''உங்காத்துப் பரம்பரை மந்திரம் ராமதாரகமாச்சே! அதை ஏன் மாற்றணும்? குழந்தே, ஸ்ரீராம னும் தேவி பராசக்தியும் முழுக்க முழுக்க ஒண்ணேதான் அப்பா! சந்தேகமே வேண்டாம். வித்தியாசம் பாராட்டாமல், ராம மந்திரமே வாங்கிக்கோ, தயங்காதே'' என்றாள். அம்மா உறுதியோடு சொன்னதில் சசிபூஷணரின் மனத்தில் நல்ல தெளிவு பிறந்தது. உற்சாகத்தோடு தாரக மந்திரம் பெற்றார்.

உண்மையிலேயே அதுதான் அவர்களது குலதெய்வம் என்று கூறவும் வேண்டுமோ?

அம்மாவின் இதயசுத்தம் காரணமாகத்தான் அந்தத் தெள்ளிய மன அரங்கிலே சகல ரகசியங்களும் தாமாக அவிழ்ந்து விழுந்தன. தான் வாழும் இடமே பரம சுத்தமான சிவபூமி என்று அம்மாவே வெளிப்படக் கூறியதுண்டு. மிகவும் தூய்மை குறைந்த சிலரை உபதேசம் பெறுமுன் மூன்று இரவுகள் தனது இல்லத்தில் தங்குமாறு பணிப்பாள் தேவி சாரதை. "இது சிவ ராஜதானி. இங்கே அசுத்தமெல்லாம் ஓடிப் போயிடும்" என்று சொல்லி, தன் வீட்டு எல்லை முழுவதையும் விரலால் வளைத்துக் காட்டுவாள்.

இப்படி அதிகார பூர்வமாக மொழிந்த அம்மாவே சாசுவத சிவராஜதானியாகிய காசி க்ஷேத்திரத்தில் மட்டும் மந்திரோபதேசம் செய்யமாட்டாள்; "இங்கே விசுவநாதஜி ஒருத்தர் தான் குரு. இந்த மஹாக்ஷேத்திரத்தில் போயும் போயும் நான் உபதேசம் பண்ணறதாவது?" என்று ஒடுங்கிச் சொல்வாள்.

* * *

பொதுவாக, பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே அம்மா மந்திரம் தருவாள். மந்திரத்தின் மகிமை உணர்ந்து அதைப் பொறுப்புடன் மனனம் செய்வதற்கு இந்த வயசு நிர்ணயம் அவசியம் எனக் கருதினாள் அம்மா. எந்த விதிக்கும் விலக்கு உண்டு ஆதலால், இந்த விதிக்கும் அம்மா விலக்களித்த ஓரிரு சந்தர்ப்பங்கள் வெகு இனிமையானவை. இவள் உபதேசம் செய்த விசேஷத்தால் அந்தக் குழந்தைகளின் வாயிலும், ஸம்புடம் எனப்படும் கூட்டு பீஜாக்ஷரங்கள் வெகு ஸ்பஷ்டமாக வரும்!

ஒரு நாள் உத்போதன் மாடியில் பன்னிரண்டு வயசுப் பையன் ஒருவன், "சிவே பாஹி! தாயே ரக்ஷி" என்றெல்லாம் சொல்லியபடி அம்மாவுக்கு விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தான். அவனது செய்கை கூடியிருந்தோருக்குக் கேலியாகவே இருந்தது: பெரியவர்களைப் பார்த்துக் 'காப்பி' அடிக்கிறான் என்று பேசிக்கொண்டார்கள். அம்மா ஒன்றுமே சொல்லவில்லை.

எல்லோரும் போய்விட்டார்கள்.

அம்மா ராதுவைக் கூப்பிட்டு, "கீழே வராந்தாவில் அந்தப் பிள்ளை உட்கார்ந்திருக்கும். அதை அழைச்சுண்டு வா" என்றாள்.

அம்மா சொன்னபடியே அவன் வராந்தாவில் தீர்க்க சிந்தனையாக அமர்ந்திருந்தான். ராது அவனை மாடிக்கு இட்டு வந்தாள்.

அதற்குள் அம்மா எதிரும் புதிருமாக இரண்டு மனைகள் போட்டு, பஞ்சபாத்திரங்களில் தீர்த்தம் எடுத்து வைத்திருந்தாள்.

''குழந்தே! அந்தப் பலகையில் உட்காரு. முதல்லே ஆசமனம் பண்ணு'' என்றாள்.

தானும் ஆசமனம் செய்தாள்.

அடுத்து, அந்தப் பன்னிரண்டு வயசுப் பாலனுக்கு மந்திர ரூபிணியான சாரதாமணிதேவி ஒரு மஹா மந்திரத்தை உபதேசித்தாள்.

அந்தப் பிள்ளைக்கு மகிழ்ச்சி கரைபுரண்டது.

''அம்மா, குருதக்ஷிணை தந்தால்தானே உபதேசத்துக்குப் பலன் கிடைக்கும்? பழமும் கோவாவும் வாங்கிண்டு வரேன். நீங்க அங்கீகாரம் பண்ணிக்கணும்'' என்று அஞ்சலியஸ்தனாக வேண்டிக்கொண்டான்.

''எலே போக்கிரி! பெரிய வார்த்தை எல்லாம் தெரிஞ்சிண்டிருக்கியே! பணம் வேறே வைச்சிருக்கே! பேஷ்! உன் குஞ்சுக் கையாலே தருகிற குருதக்ஷிணையை அங்கீகரிக்காமல் இருப்பேனா? ஓடிப்போய் வாங்கிண்டு வா'' என்று கூறிய அம்மா, ''ஒரு நிமிஷம் இரு'' என்று சொல்லிவிட்டு உள்ளே மறைந்தாள்.

அரை நிமிஷத்தில் திரும்பிவந்த அம்மாவின் கைகளில் இரண்டு லாடுகள் உருண்டன. ''இந்தா, முதலில் உனக்கு என் பிரஸாதம்! அப்புறம்தான் எனக்கு உன் தக்ஷிணை'' என்று முறுவல் முகிழ்த்து அவனிடம் லாடுகளை அளித்தாள்.

* * *

பல பெண்களுக்கு அம்மா மந்திரம் வழங்கியிருக்கிறாள். கலியாணமான பெண்கள் கணவனிடம் அநுமதி பெற்று வந்தாலே அம்மா உபதேசம் தருவாள். பெண்களுக்குத் தலையாய மந்திரம் பாதிவிரத்யமே என்று அம்மா கருதியதால் இவ்விதம் செய்தாள். சதிபதிகளாகப் பலருக்குச் சேர்த்து வைத்தே உபதேசம் தந்தும் இருக்கிறாள். தீட்டுக் காலத்திலும், பெண்களுக்கு ஏற்படும் அசந்தர்ப்பங்களின் போதும் ஜபம், பூஜை முதலியன செய்யக்கூடாது என்பாள் அம்மா. ''பக்தி முற்றிப் போய்விட்டால் அது வேறே விஷயம். அப்போது எந்த விதியும்,

நிஷேதமும் ஒருத்தரைக் கட்டுப்படுத்தாது. ஆனால், 'நாம இந்த நிலையில் இருக்கோமே, இப்போ தெய்வ காரியம் செய்யறது சரிதானா?' என்று மனசிலே தோணுகிறவரையில் இதுகளைப் பெண்கள் செய்யாமல்தான் இருக்கணும்'' என்பாள்.

சாஸ்திரங்களையும் சம்பிரதாயங்களையும் மீறிப் புரட்சி செய்ய வேண்டும் என்று அம்மா துளிக்கூட எண்ணியதில்லை. வழி வழியாக ஆசாரம் கூறி வரும் ஆசாரிய பீடம் எதிலும் அவள் ஆரோகணித்திருக்கவில்லை. அவள் சுயேச்சையாக எதை விதித்தாலும் அதையே வேதமாக ஏற்க ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினரும், அவளது மற்ற அடியார்களும் தயாராக இருந்தார்கள். இருப்பினும் அம்மா பெரும்பாலும் சம்பிரதாயத்துக்குக் கட்டுப்பட்டு அடங்கியே நடந்தாள்.

* * * *

அடங்கிய அம்மா உபதேச காலத்தில் தன் அமாநுஷ்ய சக்திகளைக் காட்டியதற்குச் சில எடுத்துக்காட்டுக்கள் பார்த்தோம்.

இது தவிரவும் அவள் அபூர்வமாகத் தன் உள்ளார்ந்த மகிமையைக் காட்டிய சில சந்தர்ப்பங்களைப் பார்ப்போம்.

பகடித் தம்பதியர் அவளது யௌவன தசையிலேயே அவளிடம் காளியன்னையைக் கண்டது வாசகர்களுக்கு மறந்திராது. மைத்துனர் மகனும், தன் அருமை ஷிபுவுமான சிவராமிடம் பல்லாண்டுகளுக்கு முன்பே அம்மா, தன்னைக் காளியாக ஒப்புக்கொண்டது நினைவிருக்கலாம். ஆனாலும் ஸம்சயாத்மாக்கள் இவற்றை அழுத்தந்திருத்தமான அவதாரச் சான்றாக ஏற்பாரா என்பது சந்தேகமே. அம்மாவின் விருத்தாப்பியத்தில் இதே ஷிபு மீண்டும் ஒரு முறை அவள் தன்னைக் காளி மாதாவாக ஒப்புக்கொண்டு அவரது பாரமெல்லாம் தீர்த்து வைப்பதாக வரம் தரவேண்டும் என்று பிடிவாதமாக மன்றாடினார். ''அப்படியே'' என்று சொல்லி அம்மா அவர் சிரத்திலே தன் கர புஷ்பத்தைப் பதித்தாள். அப்போது அகஸ்மாத்தாக அங்கே வந்த பிரம்மசாரி வரதன், தாம் அநுதினமும் கண்டுகொண்டிருந்த சாரதாதேவி அதிசயமான தேஜோரூபிணியாக விளங்கியதாகவும், அப்போது அவளிடமிருந்து பிரவகித்த தெய்விக சோபையையும் காருண்ய வெள்ளத்தையும் கண்டு தாம் ஸ்தம்பிதமாகிவிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

அம்மாவோடு நெருங்கியிருந்து தொண்டு செய்தவர்களும், சுத்தமான சரிதம் படைத்தவர்களும், ஆத்ம சாதகர்களுமான

வரதன் போன்றோர் கூறும் சான்றுக்கு மிகுந்த மதிப்பு உண்டு: எதையும் கேள்வி கேட்டுக்கொண்டே போவதில் பயனில்லை: ஏதாவது ஓரிடத்திலாவது நம்பிக்கையும் சிரத்தையும் வைத்தால்தான் அவதார ரகசியத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

அம்மாவின் மகிமைக்கு அம்மாவைவிட வேறு சான்று தேடவேண்டுமா? அவளே தன் உத்கிருஷ்டமான தன்மையை உறுதியாக இயம்பிய சந்தர்ப்பங்களும் உள்ளனவே! ஓர் உதாரணம்: ஆசாரசீலையான சமையற்காரியம்மாள் குளிர் இரவு ஒன்றில் நாயைத் தீண்டிவிட்டு, குளிப்பதற்கில்லையே என்ற மன உறுத்தலுடன் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிருள்.

"கோவிந்த நாமாவைச் சொல்லிண்டு, கால் கையை மட்டும் அலம்பிண்டு வேறே வஸ்திரம் மாற்றிக்கோங்கோ, மாமி! கார்த்தாலே குளிச்சுக்கலாம்" என்கிருள் அம்மா.

அந்த அம்மாளுக்கு இது திருப்தி தரவில்லை.

நடுக்கும் குளிரில் அந்தக் கிழவி பச்சைத் தண்ணீரில் முழுகிவிடப் போகிருளே என்று அம்மாவுக்குப் பரிவு மேலிட்டது.

"மாமி! உங்க தீட்டுப் போகணும்—அவ்வளவுதானே! அப்படியானல் என்னைத் தொடுங்கோ, சகலதோஷ நிவாரணம்" என்கிருள் தூய அன்னை.

அன்றுடம் அம்மாவிடம் பழகிக்கொண்டிருந்த அந்தக் கிழவிக்கு அந்தக் கணத்தில் அவளிடம் ஓர் அற்புத உன்னதம் தெரிகிறது.

அம்மாவை ஸ்பரிசிக்கிருள். தீட்டு தீர்ந்தே போயிற்று என்று தெளிவும் பெறுகிருள்.

* * *

ராது அம்மாவின் கண்களில் விரலை விட்டு ஆட்டிய கொடூரம்பற்றி அம்மா அணுக்க சிஷ்யை ஒருத்தியிடம் சொல்லிக்கொண்டிருக்கிருள். அப்போது, தன் சரீரத்தைத் தொட்டுக் காட்டி, "மகளே, இது தெய்விகமானதுன்னு தெரிஞ்சுக்கோ; இதுமட்டும் வெறும் மநுஷ்ய காயமாக இருந்தா இவா படுத்திவைச்ச பாட்டைத் தாங்கியே இருக்க முடியாது; ஆனலும் இவாளுக்கு மத்தியிலே இந்த சரீரம்

உலாவிண்டு இருக்கிறவரையிலே இவாளுக்கு இதன் மகிமை தெரியாது!'' என்ருள்.

* * *

ஆத்மிகத்தில் மிக உயர்ந்த ஜீவன்களுக்கு அவளைக் கண்ட மாத்திரத்தில் இது ஒரு திவ்ய வியக்தி என்று தெரிந்துவிடும். இப்படிப் பூரணமாகத் தெளிந்தவர்களிடம் அவளும் தனது தெய்விகத்தை மறைக்கமாட்டாள்.

தன்மயானந்த ஸ்வாமி அவளது திருவடிகளைத் தம் தலையில் தரிக்க விரும்பினுர். அப்போது அம்மா, ''நீ எத்தனை பெரிய சாதகன்! நீ இப்படிச் செய்யலாமா? சிரஸில் குரு பாதுகை இருக்கு, சிவசக்தி நித்ய வாஸம் செய்கிற ஸஹஸ்ராரம் இருக்கு. அங்கே என் காலை வைச்சுக்கலாமோ?'' என்ருள்.

அவர் அம்மாவையே உற்றுப் பார்த்தார். அம்மாவின் வாக்குப்படியே அவர் பெரிய ஆன்ம சாதகர் ஆயிற்றே! எனவே அவள் யார் என்று உறுதிப்பட்டது.

''என்னம்மா, இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று சிரித் தார். ''சிரஸில் சிவசக்தி இருக்கிறது வாஸ்தவம். அந்த சிவனே குருவான ஸ்ரீ ராமகிருஷ்ண மகராஜராக இருக்கிறதும் வாஸ்தவம். ஆனுல் நீங்கள்மட்டும் யாராம்?''

''வேறே யார்?'' என்று அம்மாவும் திருப்பிக் கேட்டு விட்டு ஒரே மலர்ச்சியாக மலர்ந்து சொன்னுள்:

''நான் வேறே யாரா இருக்க முடியும்? பராசக்தி மாதாவே தான்!''

ஒரு சமயம் அம்மாவிடம் கேதார்பாபு, ''உங்களைக் கண்ட பிறகு ஷஷ்டிதேவி, சீதளாதேவியை எல்லாம் யார் பெரிசா நினைக்கப் போகிறு?'' என்ருர். உடனே அம்மா, ''நியாயம் தானே? அந்தத் தேவதைகளெல்லாம் என் அம்சம்தானே?'' என்ருள்!

(ஆயினும் உலகத்தின் கண்களுக்குமுன் அம்மா இந்த தேவதைகளுக்கும் தப்பாமல் நேர்த்திக்கடன் செலுத்திக் கொண்டுதான் இருந்தாள்!)

* * *

முன் அறிமுகமே இல்லாத கோகுலதாஸ் டே என்ப வருக்கு—பிற்காலத்தில் இவர் பேராசிரியராகப் பெயர் எடுத்த வர்—அம்மா தனது தெய்விகத்தை வெளிப்படுத்தியது ஓர் அருமையான நிகழ்ச்சி.

அப்போது டே கல்லூரியில் படித்துக்கொண் டிருந்தார். அந்தப் பருவத்திலேயே அவருக்கு அம்பிகையிடம் ஆழ்ந்த பக்தி இருந்தது. பொழுது புலருமுன், மோகன மெல்லொளியில் கங்கைப் படித்துறையின் மேல் கரையில் உலவிக்கொண்டிருந்தார். தொலைவிலே, நதியைத் தொடுகிற அடிப்படியிலே வார்த்தெடுத்த விக்கிரகமாக சாரதாதேவி தியான சமாதி கூடி அமர்ந்திருக்கக் கண்டார். அந்த சுப வேளையிலே, மங்கள கங்கைக் கரையில், சிவ ஸ்வரூபிணியாகப் பரம சாந்தத்துடன் அமர்ந்திருந்த அம்மாவைக் கண்டதும் டேக்கு நெக்குருகியது. அவரை அறியாமலே அவரது உதடுகள்,

ஸௌம்யா ஸௌம்யதராசேஷ
ஸௌம்யேப்யஸ்து அதி ஸுந்தரி

(சந்திரனைப்போல் குளிர்ந்தவள்; இல்லை, சந்திரனையும்விடக் குளிர்ந்தவள்; குளிர்ச்சி கொண்ட அனைத்தையும்விடக் குளிர்ந்த சௌந்தர்ய வடிவினள்) என்ற சண்டீ வாசகத்தை மெல்ல முணுமுணுத்தன.

அம்மாவையே கண் பனிக்கப் பார்த்தார்.

எட்டத்தில் கண்மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்த அம்மாவுக்கு உலகரீதியில் இவர் இங்கு வந்து நிற்பதோ, சுலோகத்தை ரகசியக் குரலில் கிசுகிசுத்ததோ, கண் மல்கி நிற்பதோ தெரிவதற்கு நியாயமே இல்லை. ஆனாலும் என்ன அதிசயம்!

அதோ அங்கே தியானத்திலிருக்கும் தேவி சடேரென்று தன் திவ்யதிருஷ்டியை டேயின்மேல் திருப்புகிறாள். அக்கணமே அவளது திருக்கரங்கள் அபய வரத முத்திரைகளுடன் ஓங்குகின்றன. ஒரு விநாடிதான்! மீண்டும் தியான சமாதி!

ஒரு விநாடி போதாதா? மின்னல் ஒரு மணிநேரமா வீசும்?

கோகுல்தாஸ் டே புளகித்தார்.

பிறிதொரு நாள் அவருக்கு அம்மாவின் அருகே வந்து தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இம்முறையும் அவளது அதிமாநுஷ்யத்தை அநுபவிக்கும் பாக்கியம் அவருக்குக் கிட்டியது.

கோகுல்தாஸைப்பற்றி எந்த விவரமும் அம்மாவுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவ்வாறிருந்தும் அவள் எவ்வாறோ அவரது குடும்ப அங்கத்தினர்களின் பெயர்களைக்கூடத் தானாகக் கூறி, அவர்களது க்ஷேமநலன்களை விசாரித்தாள். 'லலித்' என்ற சகோதரரைமட்டும் அவள் 'நளின்' என்று குறிப்பிட்டது அவருக்கு விசித்திரமாக இருந்தது. வீட்டுக்குத் திரும்பியபின் இந்த விவரங்களை அவர் கூற அவரது தாய்,

''ஆஹா, லோகமாதா எங்கேயாவது தப்பாகச் சொல்லு வாளா? லலித்துக்கு நளின்னுதான் பேர் வைச்சுது. அப்புறம் எப்படியோ லலித் என்கிற பேர் வந்துடுத்து'' என்றாள்!

* * *

சாமானிய ஸித்தர்களும்கூடப் பிறரது சித்தத்தை ஊடுருவித் தெரிந்துகொள்ள முடிகிறபோது, சித்தேசுவரியான சாரதாமணி தேவி மற்றவர் மனங்களைத் தான் மனம் வைத்து விட்டால் உடனே படம் பிடித்தாற்போல் அறிந்துகொண்டதில் வியக்க ஏதும் இல்லை. தன்னைத் தேடி வருகிற பிள்ளைகளுக்கு எந்தக் காய்கறி, எந்த பட்சணம் பிடிக்கும் என்பதெல்லாம் உடனுக்குடனே அன்னபூரணியான அவளுக்குத் தெரிந்துவிடும். அவற்றை அவர்களின் உண்கலன்களில் அப்படியே வெட்டிச் சாய்ப்பாள். அம்மாவின் வாதக்காலுக்குத் தைலம் தேய்க்க வேண்டும், அவளுக்குப் படுக்கை தட்டிப் போட வேண்டும், அவள் உண்ட மிகுதியைப் புசிக்க வேண்டும் என்பது போன்ற ஆசைகளை வெளியில் சொல்லத் தயங்கிய பக்தர் பலருண்டு; அம்மாவாக அவர்களது அந்த ஆசைகளைத் தவறாமல் பூர்த்தி செய்துவிடுவாள். ஓரிருமுறை இவ்விதம் நடந்திருந்தால் அகஸ்மாத்தாக நடந்தது எனலாம். ஆனால் அம்மா இவ்விதம் அடியார் வெளியிடாத ஆசைகளைத் தானாகப் பூர்த்தி செய்தது அனந்தம் முறை நடந்த நிகழ்ச்சியாகும்.

சில சமயங்களில் சாரதை அடியாரிடம், ''இன்னாரிட மிருந்து இதைத் தெரிந்துகொள்ளுங்கள்; இன்னாருக்கு இதைச் சொல்லுங்கள்'' என்பாள். அந்த 'இன்னாரை'த் தாங்கள் சந்திக்கிற வாய்ப்பே இல்லையே, அம்மா இப்படிச் சொல்கிறாளே என்று அடியார்கள் எண்ணுவர். ஆனால் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவர்கள் அன்றைய தினமோ, அல்லது ஓரிரு நாட்களுக்குள்ளோ அந்தக் குறிப்பிட்ட நபரைச் சந்தித்து விடுவார்கள்!

* * *

சாரதா தேவி அளித்த டாகுரின் நிர்மாலியப் பிரசாதத்தைப் பெற்றுச் சென்ற பலப்பலரது உடல் உபாதைகள் தீர்ந்திருக்கின்றன; எத்தனையோ பேருடைய குடும்பச் சழக்குகள் மறைந்தோடி யிருக்கின்றன; பலரது அலுவலக சிரமங்கள் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கின்றன. இது டாகுரின் மகிமையாலேயே நடந்திருக்கலாம் என்று சம்சயாத்மாக்கள் எண்ணிவிடலாம். ஆனால் அம்மா டாகுரின் பிரசாதம் ஏதும் தராமல், வெறுமே வாய்ச் சொல்லில் ஆசி கூறியோ அல்லது

அபயகரம் மட்டும் காட்டியோ எத்தனையோ பேரின் குறைகளைத் தீர்த்திருக்கிருளே! பிரசாதம், ஆசீர்வசனம்; அபய முத்திரை ஏதுமே இங்கு முக்கியமல்ல—அவளது சங்கல்ப பலத்தாலேயே சங்கடங்கள் தீர்ந்தன. சங்கல்பம் அடியார் கண்ணுக்குத் தெரியாதாகையால், அவர்களின் மனத் திருப்திக்காகவே பிரசாதம், அருள்வாக்கு, அபயஹஸ்தம் என்று எதையோ வழங்கினுள் தேவி.

இத்தகைய அநுக்கிரகங்களில் பூர்ணுநந்த பௌமிக் என்பவரின் பிரச்னை தீர்ந்ததைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். அவர் காரியாலயத்தில் ஒரு பெரிய விவகாரத்தில் சிக்கிக்கொண்டு விட்டார். வேலை போய்விடும்; அதோடு சிறை தண்டனைக்கும் ஆளாக வேண்டியதுதான் என்கிற அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. அம்மாவிடம் முறையிட்டார் பௌமிக்; ஆனுல் அம்மாவும்கூட இதை எப்படித் தீர்க்க முடியும் என்றே எண்ணினுர். அவளோ சர்வ சகஜமாக, ''பயமே வேண்டாமப்பா! உனக்கு ஒரு கெடுதலும் நேராது'' என்ருள். அதெப்படி நடக்கும் என்றுதான் தோன்றியது. ஆனுலும் அப்படியே நடந்துவிட்டது. மலையாக வந்தது பனியாக மறைந்தது. பௌமிக்கின் மீதிருந்த குற்றச்சாட்டுக்கள் யாவும் மாயமாகப் பிசுபிசுத்துப் போயின; அவருக்கு இம்மியும் ஹானி ஏற்படவில்லை.

* * *

'ஆன்டிபயாடிக்' மருந்து ஏதும் கண்டு பிடிக்காத காலம் அது. எனவே காச நோய் வந்துவிட்டால் காலனிடமிருந்து ஓலை வந்துவிட்டதாகவே அர்த்தம். பரிஸலைச் சேர்ந்த சுரேந்திரநாத் ராய்க்குக் காசநோய் முற்றி யமனுலகின் நுழைவாயிலுக்கே போய்விட்டார். வைத்தியர்களும் அவரைக் கைவிட்ட நிலை! அவர் அம்மாவை நினைந்தார். நோயைச் சொஸ்தப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல. அந்த நம்பிக்கை சிறிதும் இல்லை. ஆனுல் உலகம் போற்றும் அந்த மகா மாதாவைத் தாம் கண்மூடுமுன் ஒருமுறை காணவேணும் என்றே அவாவினுர் சுரேந்திரநாத். அவர் இருந்த ஸ்திதியில் படுக்கையை விட்டு நகரமுடியாது. எனவே அம்மாவைக் கருணை கூர்ந்து தமது இருப்பிடத்திற்கு எழுந்தருளி, தரிசனம் தருமாறு கோரிக் கடிதம் எழுதச் செய்தார்.

உருக்கமான அந்தக் கடிதம் அம்மாவுக்குப் படித்துக் காட்டப்பட்டது. ''நான் அங்கே போகணும்கிறது இல்லே. என் ஃபோட்டோ ஒண்ணே அனுப்பி வையுங்கோ. 'உத்போதன்'

(வங்க சமய சஞ்சிகை) தொகுப்பும் அனுப்புங்கோ. அவர் அந்தக் கட்டுரைகளைப் படிச்சுண்டும், என் படத்தைப் பார்த்துண்டும் இருக்கட்டும். காசம் சரியாய்ப் போயிடும். கவலைப் பட வேண்டாம்னு அவருக்கு எழுதுங்கோ'' என்றாள் அம்மா.

அவ்விதமே செய்யப்பட்டது.

சுரேந்திரநாத் ராய்க்கு அம்மா வரவில்லையே என்ற குறையே தோன்றவில்லை. ஏதோ ஒரு விதத்தில் அந்தப் புகைப் படமே அவருக்கு ஜீவமாதாவாக இருந்தது. அம்மாவின் அருட்சக்தி அதிலிருந்து தம்பால் பொழிவதை அவர் நன்கு உணர்ந்தார். வைத்திய சாத்திரமே வியக்கும் விதத்தில் அவரது பயங்கரக் காச நோயும் பறந்தோடிவிட்டது!

* * *

ஜயராம்பாடியில் அடுத்தடுத்து இரண்டு பருவங்கள் வானம் அடியோடு பொய்த்துவிட்டது. பயிர்நிலமனைத்தும் வெடித்துப் பாலையாகக் கிடந்தது. குடிபடைகள் அம்மாவிடம் வந்து ஹோ என முறையிட்டனர். ''இந்த வாட்டியும் வெள்ளாமை இல்லாட்டி நாங்க புள்ளை குட்டிங்களோட சாவ வேண்டியது தான்! நீதான் கைகொடுத்துக் காப்பாத்தணும்'' என்று அழுதனர். அம்மா உருகிப் போனாள். அவர்களுடனே வயல் வெளி முழுவதும் நடந்தாள். பிளந்த நிலத்தைக் கண்டு அவள் மனமும் பிளந்தது. கருணைமழை மனக் குருத்திலிருந்து பொழிந்தது. ''பகவான்! இதென்ன லீலையப்பா? இத்தனை ஜீவன்கள் பட்டினியில் சாகிறதும் உன் திருஉளச் சம்மதமா?' என்று வாய்விட்டுக் கதறினாள்.

இவள் கருத்தில் உருவான கருணை அன்றிரவே மழைக் கருவாகிக் கார்முகில்களை வானெங்கும் பரப்பியது. ஆகா! அடித்துப் பொழியத் தொடங்கிவிட்டது; மழையான மழை! ஊர் குளிர்ந்தது. உள்ளங்கள் குளிர்ந்தன. இரண்டாண்டுகளுக்குமாகச் சேர்த்து விளைச்சல் பொங்கிற்று. அந்த வருடத்தின் வெள்ளாமைச் செழிப்பை ஜயராம்பாடி மக்கள் பல்லாண்டுகளுக்குப் பின்னும் நினைவு கூர்ந்து வியப்பதுண்டு! இயற்கை சக்திகளும் மகா புருஷர்களுக்குக் கைகட்டிப் பணிபுரிபவை தாமே!

* * *

க்ஷீரோதபாலா இளமையிலேயே புருஷனைப் பறிகொடுத்தவள். அம்மாவின் நெருங்கிய பணிமகளிரில் ஒருத்தியாகும் பேற்றினை அவள் பெற்றாள். அவளுக்குப் பன்னிரண்டு

நீண்ட ஆண்டுகளாக நகங்களைச் சுற்றி ஆறாத புண்ணாக இருந்தது: தண்ணீர் பட்டால் புண் அதிகமாகிவிடும். இதற்கு அம்மா தந்த அருமருந்து என்ன தெரியுமா? தனது கமண்டலுவிலிருந்த தீர்த்தத்தில் அவளது கரங்களை முக்கி எடுக்குமாறு சொன்னாள்: க்ஷீரோதபாலா அவ்விதமே செய்தாள். ஆறாத புண்கள் அடையாளமே இல்லாமல் மறைந்தன!

* * *

"விரஜேசுவரி! உனக்கு எதுக்கு இந்தத் தாயத்து? அதை அவிழ்த்துப்போடு" என்று அம்மா பணித்தபோது விரஜேசுவரி தயங்கத்தான் செய்தாள். காக்கை வலிப்பு என்ற கொடூரமான வியாதிக்கு ஆளாகி அவள் பட்ட அவஸ்தை அவளுக்குத்தானே தெரியும்? கையும் காலும் கோணக் கோண இழுத்துக்கொண்டு மணிக்கணக்கில் கிடந்தவள் அல்லவா இந்த விரஜேசுவரி? தாயத்து அணிந்தபின்தான் அபஸ்மார நோய் சிறிது சமனப்பட்டு வந்தது. அதை எடுத்து விடும்படி அம்மா சொல்கிறாளே எனக் கலங்கினாள் அப் பேதை.

நான் சொல்கிறதைக் கேளு! இனி உன்னை அந்தப் பொல்லாத வியாதி அண்டாது! ஊம்" என்று ஊக்கினாள் அம்மா.

தயக்கத்துடன் தாயத்தைக் கழற்றினாள் விரஜேசுவரி: தயங்கியே இருக்கவேண்டாம். தாய் என்கிற தாயத்தைவிடப் பெரிய ரட்சை உண்டா? விரஜேசுவரியின் வலிப்பு நோய் ஓட்டம் பிடித்துவிட்டது!

* * *

அம்மாவின் அதிமானுஷ்ய லீலைகளில் இன்னொன்று இதோ!

அம்மாவுக்குக் கைங்கரியம் செய்துவந்த ஸ்வாமி மஹாதேவாநந்தர், ஹால்தார்புகுர் சென்று ஒரு டின் மண்ணெண்ணெய், பலவிதமான மளிகைப் பொட்டலங்கள் முதலியன வாங்கிக்கொண்டு ஜயராம்பாடிக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார். இந்தப் பண்டங்களை வாங்கி வருமாறு அவரைப் பணித்த அன்னை, கூலிக்கு ஆள் வைத்துக்கொள்ளும்படி அவரிடம் கூற மறந்துவிட்டாள். அம்மா சொல்வதற்கு அப்பால் ஒரு மயிரிழையும் செய்ய அறியாத புத்திர சிகாமணி நமது மஹாதேவாநந்தர். எனவே ஒரு டின் மண்ணெண்ணெயையும், கூடை நிறைந்த மளிகைப் பொருள்களையும் தாமே சுமக்க முடியாமல் சுமந்து வந்தார். ஜூலை மாதம். தென்மேற்குப் பருவக்காற்று மழை வஞ்சனையின்றிக் கொட்டியிருந்த சமயம்,

வழியெல்லாம் ஒரே உளை. ஒவ்வோர் அடியும் வழுக்குகிறது. அக்கம் பக்கத்தில் ஆளே இல்லாத இடத்தில் தவிக்கிறார் மஹாதேவர். எதிரே நீளநெடுக ஒரே சகதி. தலையிலும் தோளிலும் உள்ள பாரம் அழுத்த, புதை சேற்றில் முழுகிப்போக வேண்டியதுதான் என்கிற இக்கட்டில் சிக்கிக்கொண்டார். ''நீ விட்ட வழி'' என்று அம்மாவை தியானித்துக்கொண்டு, அந்தச் சேற்றுப் பாதையில் காலை வைத்தார்.

இதென்ன விந்தை! திடுமெனத் தலையிலிருந்த சுமையும் தோளில் இருந்த பாரமும் பஞ்சாகிவிட்டாற்போல் இருந்தது! வழுக்கலும் இல்லை! கால்களை சுகமாக வீசி நடக்க முடிந்தது. ராஜபாட்டையில் நடப்பதுபோல் புதை சேற்றுப் பாதையை லாகவமாகக் கடந்தார்!

ஜயராம்பாடியில் அம்மாவின் வீட்டில் அவர் நுழை வாசலில் ஓர் அசாதாரணக் காட்சி கண்டார். பெண்மையே உருத்தரித்து மென்னடை இடுகிறதோ என எண்ணுகிற விதத்தில் ஒசிந்து நடக்கும் சுபாவம் படைத்த அம்மா, அதோ வீட்டு முன் வராந்தாவில் திம் திம் என்று அடிவைத்து, குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறாள்! அவளுக்கு மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்குகிறது! மஹாதேவாநந்தர் அவளை நெருங்க நெருங்க, அவள் முகமெல்லாம் சிவந்து, கண்கள் பிதுங்கியிருப்பதும் தெரிகிறது; பெரிய பாரத்தைச் சுமக்கிற வலி அவளது திருமேனி முழுவதும் தெரிகிறது.மஹாதேவர் பாகாகக் கரைந்து விட்டார். 'பார ப்ருத்'—சுமையைத் தாங்குபவன்—என்பது பகவானின் ஆயிர நாமங்களில் ஒன்று, பக்தரின் வினைச்சுமை மட்டுமின்றி, பௌதிகமான சுமையையும் தாங்குகிறாள் பராசக்தி!

''இந்தப் பிள்ளையைக் கூலியாள் வைச்சுக்கச் சொல்லாமல் போனேனே!'' என்று அம்மா வாய்விட்டுச் சொல்கிற அதே சமயத்தில் மஹாதேவர் டின்னையும் கூடையையும் இறக்கி வைத்தார்.

அம்மாவின் அருள்விழி அவர்பால் திரும்பியது: பிதுங்கிய நயனம் யதாஸ்தானத்தில் சமனமாகி அன்பு சுரந்தது. முகத்தின் இறுக்கம் மறைந்து, பட்டாகத் திகழ்ந்தது. நடையில் இளக்கம் ஏற்பட்டது. ''மகனே! நீ கூலிக்கு ஆள் வைச்சுண்டா அம்மா எங்கேயாவது ஆட்சேபிப்பேனா? இந்த மாதிரி விபரீதமா சேற்றுக் குழியிலே இறங்குவாளா?'' என்று கருணையில் தோய்ந்த கண்டிப்புடன் வினவினாள் சாரதா தேவி;

''ஸம்ஸார பங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா'' என்பது ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுரஸுந்தரியின் திவ்ய நாமங்களில் ஒன்று. 'சம்ஸாரம் என்கிற சேற்றுக் குழியில் அழுந்தியவர்களைக் கைதூக்கி எடுத்துப் போடுவதில் அபாரத் திறமை வாய்ந்தவள்' என்பது இதன் பொருள். இந்த ஒரு நாமத்தையே ஒரு முழு சுலோகமாக விவரிக்கிறார் ஸ்ரீ ஆதிசங்கரர் தமது 'தேவீ புஜங்க'த்தில்.

அகாதே (அ)த்ர ஸம்ஸார பங்கே நிமக்னம்
களத்ராதி பாரேண கின்னம் நிதாந்தம் |
மஹா மோஹ பாசௌக பத்தம் சிரான் மாம்
ஸமுத்தர்த்தும் அம்ப த்வம் ஏகைவ சக்தா ||

''ஆழங்காணவொண்ணு சம்சாரச் சேற்றுக்குழி! மனை மக்களான பாரம் வேறு அழுத்துகிறது! இதிலிருந்து விடுபட மாட்டாமல் மோகக் கயிறு உடலை எல்லாம் கட்டியிருக்கிறது. இந்நிலையில் என்னைக் கடைத்தேற்ற, நீயொருத்தியே ஆற்றல் பெற்றவள்'' என்கிறார் பகவான் சங்கரர்.

அம்மாவின் அமாநுஷியத்தைப் படிப்பவர்களெல்லாம், அது அவளுக்குப் புகழூட்டுவதற்காகச் செய்யப்பட்ட பகட்டு ஜாலமல்ல; சம்ஸாரச் சேற்றிலிருந்து அடியாரைக் கைதூக்கி விடுவதற்கு ஒரு பூர்வாங்கமாகவே இந்த அருளிச் செயல்கள் நிகழ்ந்தன என்பதை மறவாதிருப்பார்களாக!

50. மனிதரோடு மனிதராக!

மேலோர் எவ்வெவ்விதங்களில் நடக்கின்றனரோ, அவற்றையே ஏனைய மக்களும் பின்பற்றுகின்றனர். ஆகவேதான், பார்த்தா, இந்த மூவுலகிலும் நான் கர்மம் செய்து அடைய வேண்டியது ஏதுமே இல்லாவிடினும், நானும் ஓயாமல் கர்மத்தில் முயன்றுகொண்டே இருக்கிறேன். நான் அனவரதமும் அயர்வின்றிக் கர்மத்தில் ஈடுபடாவிடில், ஏனைய மானுடரும் என்னையே பின்பற்றுவர்; இவ்வுலக வாழ்வே பாழ்பட்டுப் போகும்.

—கீதையில் கண்ணன் (3 : 11-14)

அற்புதங்களைக் கண்டோம் சென்ற அத்தியாயத்தில். அதற்கு நேர் எதிர் வெட்டு இந்த அத்தியாயம். உலகோடு ஒட்டி வாழ்ந்த ஒரு சாதாரண ஸ்திரீயாக அம்மாவை இங்கே பார்ப்போம். உலக வழக்குகள் குறித்து அவளது கருத்துக்களைக் காண்போம்.

''இந்த உலகில் மனித ரூபத்தில் அவதரிக்கும்போது பரம்பொருளும் அநேக அம்சங்களில் சாமானிய மானுடர் போலவேதான் நடந்துகொள்கிறது. அவதாரங்களுக்கும் பசி, தாகம், நோய்,—ஏன், துயரம் பயம் இவையும்—கூட இருக்கத்தான் செய்கின்றன. அதனால்தான் ஓர் அவதாரத்தை அவதாரம் என்றே பலராலும் புரிந்துகொள்ள முடியாமற் போகிறது'' என்று அவதார வரிஷ்டரான ராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார்.

தங்களைப் போன்ற ஒரு மனிதராக அவதார வியக்தி தோன்றுவிடில், மக்கள் அவரை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ளவே முடியாது. 'இது தனி ரகம். இதன் தர்மங்களை சாமானிய மாந்தராகிய நாம் எப்படி அனுசரிக்க முடியும்?' என்று இருந்துவிடுவார்கள். மேலும் மனிதன் அணுகிவந்து, நுணுகிப் பார்த்துப் பயனடைய வேண்டுமாயின் அவதார புருஷர்கள் எட்டாக் கொம்புப் பழமாக இருக்க முடியுமா? இதனால்தான் மானுடத்தன்மையைப் பின்னிப் பிணைத்துக் கொண்டே தெய்விக புருஷர்கள் உலவுகிறார்கள். அவதார வியக்திகளிலும், தங்கள் திவ்விய மேன்மையை மறந்தேவிட்டது போன்ற அளவுக்குச் சென்று, மானுட பாவத்தை முற்றிலும் ஏற்று ஏனையோருக்கு ஆதரிச வாழ்வு படைத்துக் காட்டியதில்

ஸ்ரீராமசந்திரமூர்த்தியும், ஸ்ரீசாரதாமணி தேவியும் தன்னிகரில்லா இருவராவர்:

''சக்கரவர்த்திகளின் தலைவிதியையும் நிர்ணயித்து ஆட்டிப் படைக்கிற மகாசக்திதான், குடும்பமக்களுக்குக் கடமைகளைச் செயலுருவில் போதிப்பதற்காக, இதோ நம் கண்முன் சாணம் போட்டு மெழுகுகிறது; பாத்திரங்களைத் தேய்க்கிறது; அரிசி புடைக்கிறது; எச்சில் இலைகளைத் திரட்டி எடுக்கிறது. அபரிமிதமான பொறுமையும், எல்லையில்லாத தயையும், அகம்பாவ வாடையே வீசாத அடக்கப் பாங்கும் அம்மாவிடம் எப்படி மேவியுள்ளன, பாருங்கள்!'' என்று பிரேமாநந்த ஸ்வாமி ஒரு முறை கேசவாநந்தரிடம் கண்ணீர் மல்கக் கூறினார்.

*　　*　　*

உலகுக்கு அம்மா தந்த பெரிய பாடம் உழைப்பின் மகிமையே.

''உங்களுக்கோ வயசாகிவிட்டது. உங்களுக்குப் பணி செய்ய ஆட்கள் போட்டி போடுகிறார்கள். இன்னமும் நீங்கள் வாதக்காலால் விந்திக்கொண்டு, கையில் தடியை ஊன்றிக் கொண்டு வேலை செய்கிறீர்கள். இப்போது நளினி தேவிக்காக நீங்கள் மடியாகச் சப்பாத்தி மாவு பிசையாவிட்டால் என்ன, இந்தக் காரியத்தைச் செய்ய வேறு மநுஷ்யாள் இல்லையா?'' என்று பிரம்மசாரி கோபேஷ் கேட்டபோது, அம்மா தன் ஜீவ தத்துவத்தையே சாரமாக்கி வார்த்தை வார்த்தையாகச் சொன்னாள்:

''என் மகனே! ஊக்கத்தோடு உழைச்சுண்டே இருக்கிறது எப்பவும் நல்லதப்பா!''

சிறிது நிறுத்தினாள். தொடர்ந்து ஒரு மகாமந்திரத்தை மொழிகிற கம்பீர அடக்கத்துடன், ''குழந்தே! என் மூச்சு பிரிகிறமட்டும் நான் இப்படியே உழைச்சுண்டிருக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணப்பா'' என்றாள்.

உழைப்பினால் அகங்காரம் அடியோடு கரைந்துபோயிருந்ததால்தான் நம் அம்மா குழந்தை கோபேஷிடம் ஆசி கேட்கிறாள்!

அம்மா 'நிறைய' வேலை செய்தாள் என்பது மட்டுமல்ல; அந்த வேலையை 'நேர்த்தி'யாகச் செய்தாள். செய்து தொலைக்கவேண்டும் என்றில்லாமல், இருதயத்தையே வேலையில் கொடுத்து, வேலையை மதித்து, சிரத்தையுடன் ஒரு பூஜையாகச் செய்ததால்தான் இந்த நேர்த்தி அவள் தொட்ட பணி

யில் எல்லாம் பொன்னிட்டது. பிறரும் இதே ஊக்கத்துடன், உற்சாகத்துடன் நறுவிசாகக் காரியம் செய்யவேண்டும் என்பாள். ஒரு துடைப்பக் கட்டையை அலட்சியமாகப் போட்டு வைத்திருந்தால்கூட நாசுக்காகக் கடிந்துரைப்பாள். "விளக்குமாற்றுக்கும் மரியாதை தரணும். சின்ன விஷயங்களிலும் சிரத்தை குறையக் கூடாது" என்பாள்.

* * *

அம்மா வீண் விரயங்கள் செய்யவே மாட்டாள். பிறரையும் இவ்விதமே ஒழுகுமாறு எடுத்துக் கூறுவாள். அவசியம் ஏற்பட்டால் இடித்தும் கூறுவாள்.

ஓர் உதாரணம்: பக்தர்கள் கூடைகளில் கொண்டுவரும் பழங்களைச் சிஷ்யர்கள் எடுத்து வைத்துவிட்டுக் கூடைகளை எறியப்போனால், "அதுக்கும் ஒரு பிரயோஜனம் இருக்கும். ஏன் வெளியிலே எறிகிறேள்?" என்பாள் அம்மா. அதை வாங்கிச் சாமான் அறையில் போட்டு வைப்பாள்.

"இங்கே நம்ப மநுஷாள் சாப்பிட்டு மிஞ்சினதை ஏழை எளியவாளுக்குத் தரலாம். எச்சிலான மிச்சமானால் குறவாளுக்குப் போடலாம். அவாளும் சாப்பிட முடியாததை ஆடுமாடுகளுக்குப் போடலாம். ஆடுமாடு தின்னாததை நாய்க்குக் காட்டலாம். நாய்க்கும் வேண்டாததை ஏரியிலே போட்டா மீன்கள் தின்னும். ஆகக்கூடி, எதையும் வீண் செய்யக்கூடாது" என்று ஒரு படிவரிசையே அமைத்து அழகுறக் கூறுவாள் அம்மா.

பகவான் ரமணரும் இதே தத்துவத்தை உபதேசித்தும், நடத்திக் காட்டியும் இருக்கிறார்.

காய்கனியின் தோல், வாழை இலைக் கட்டை முதலியவற்றை அம்மா கவனமாகச் சேர்த்துவைத்து மாட்டுக்குப் போடுவாள். இதை ஒரு பெரிய கோரட்சண கைங்கரியமாகவே நமது காமகோடி பெரியவர்கள் வலியுறுத்தி வருகிறார் அல்லவா?

* * *

பகட்டு, படாடோபம், ஜம்பம் முதலியன அம்மாவின் பக்கத்திலேயே வர முடியாது. பெண்கள் அனைவரையும் இவற்றிடம் ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி உஷார்ப் படுத்துவாள்.

பெண்கள் ஏராளமாக நகைகள் அணிவதையும், பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்துகொள்வதையும் அம்மா ஒப்பவில்லை. மங்களகரமாக இருப்பதை உத்தேசித்து ஸ்திரீகள்

மூளிகளாக நில்லாமல் கழுத்திலும், கையிலும், காதிலும் ஓரிரு ஆபரணம் அணியவேண்டும் என்பாள்.

* * *

ராமகிருஷ்ணர் பொன்னையும் காசையும் தீண்டினாலேயே உடலில் எரிச்சல் கொள்வார். அம்மாவோ இவற்றை லக்ஷ்மீகரமானவை என்று சொல்லிக் கண்களில் ஒற்றிக் கொள்வாள். அவர் துறவிகளுக்கு உதாரணம். இவள் குடும்ப மக்களுக்கு உதாரணம். பணமின்றிக் குடும்ப வாழ்வு உண்டா? பணத்துக்காக வாழாமல், பணத்தைக் கொண்டு வாழக் கற்றுக் கொடுத்தாள்.

அம்மாவுக்குப் பொன்னிடமும் பணத்திடமும் பாசம் கிடையாது. அவளது பணப்பெட்டியின் சாவி பணியாளிடமே தான் இருக்கும். ராதுவின் கலியாணமானபோது, ஆயிரம் ரூபாய் வைத்திருந்த ஒரு பெட்டியை அவள் நினைவில்லாமல் சம்பந்தி வீட்டுக்கு அனுப்பிவிட்டாள் என்பதிலிருந்தே அவளுக்குப் பொருளில் பற்று இல்லை என்பது நன்கு தெரிய வரும். பிறிதொரு சமயம் அவள் மறந்து வைத்திருந்த கட்டு ரூபாய் நோட்டுகளை நீண்ட காலத்துக்கு அப்பால் தம்பி மனைவி திருப்பியபோதும் அவளுக்கு இந்த நினைவு வரவேயில்லை. அம்மாவைப் போன்ற ஓர் உத்கிருஷ்டமான ஆத்மாவுக்குப் பணத்தில் பற்று இல்லை என்பதை ஒரு பெரிய விஷயமாக விவரிக்க வேண்டியதே இல்லை. ஆயினும் அவள் ஒரு பெரிய குடும்பத்தின் நிதி விவகாரங்களை நிர்வகித்ததாலும், அடியார் செலுத்தும் திரவிய காணிக்கையை ஏற்றுக் கொண்டதாலும் இந்த அம்சத்தைக் கூறவேண்டியிருக்கிறது: உலக வாழ்வை நடத்துவதற்கும், தானதர்மம் செய்வதற்கும் பொருள் வேண்டித்தான் இருக்கிறது. அதை ஏன் வெறுக்க வேண்டும் என்று எண்ணினாள் அம்மா. இதில் ராமகிருஷ்ணருக்கும் சாரதா தேவிக்கும் வெளிப் பார்வையில் தெரிகிற வித்யாசத்தை ஸ்வாமி கம்பீராநந்தர் நயம்பட விளக்குவார்: "உலகத்தை மாயை என ஒதுக்குவது ஞானம். உலகமும் பிரம்மமே என்று உணர்ந்து அதை ஏற்பதும் ஞானமேதான். அம்மா பின் சொன்னதையே செய்தாள்." உலகில் இருந்து கொண்டே அதன் மாயம் தன்னைத் தொடாமல் வாழ்ந்தாள்.

அம்மா வரவு செலவுக் கணக்குப் பார்த்த நாளே கிடையாது. அவளால் ரூபாயை எண்ணிக் கொடுப்பதே இயலாத காரியம் என்றால் பாருங்களேன்! ஏதாவது பொருள் வாங்கி வரும் சீடர்கள் மீதிப் பணம் கணக்குப் பார்க்கும்போது, "அம்மா, என்னிடம் எவ்வளவு கொடுத்தீர்கள்?" என்று

கேட்பது சகஜம். ''தெரியவில்லையே'' என்று அம்மா பதில் சொல்வதும் அதைவிட சகஜம்.

சாமுயி அம்மா என்பவள் அம்மாவுக்கு ஜயராம்பாடியில் காய்கறி வாடிக்கையாக விற்றுவந்தாள். அந்தக் கிராமத்தில் தாவரவளம் போதாது. பக்கத்துக் கிராமத்திலிருந்து சாமுயி காய்கறி கொண்டு வருவாள். அம்மா அவளுக்குச் சில்லறை கொடுப்பது ஒரு விசித்திரம். கையில் ஒரு குத்துக் காசை அள்ளி வந்து போடுவாள். சாமுயி அம்மாவேதான் அதிலிருந்து தனக்குச் சேரவேண்டியதை (அல்லது அதற்கு அதிகமாகவோ!) எடுத்துக்கொள்வாள்.

பணத்தைத் தொடவே முடியாமல் உடல் எரிச்சல் கொண்ட ராமகிருஷ்ணர், பணத்தைத் தொட்டுக்கொண்ட போதும் அதில் ஒட்டிக்கொள்ளாமல் வாழ்ந்த இந்த பாரியாளின் கனவில் வந்து, ராதுவின் சம்பந்தி வீட்டுக்குப் போன பெட்டியடியில் ஆயிரம் ரூபாய் இருக்கிறது என்று ஞாபகப் படுத்தவேண்டியிருந்தது! இதிலிருந்தே அவரைவிட அவளது துறவு எள்ளளவும் குறைந்ததல்ல என்று அவரே சாட்சி சொன்னதாகிறது அன்றோ?

அம்மா பணவிஷயத்தில் பிரத்தியட்சக் கண்ணோட்டம் இல்லாதவள் அல்ல. அதாவது ஏமாளி அல்ல. ஞானநந்தர் ஒரு ரூபாய்க்குப் பத்துப்படி பால் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தபோது, அம்மா சொன்னதைக் கேளுங்கள்: ''ஞான்! அசட்டுக் காரியமாக்கும் பண்ணுகிறே! இந்த ஊரில் காலணுவுக்குக் கால்படி பால் என்கிறது வாடிக்கையான விலை; அதாவது, படி பால் விலை ஓரணாத்தான். ரூபாய்க்குப் பதினாறு படி ஆகிறது. நீ ஏன் இப்போ விலையை ஏற்றியிருக்கே? இதிலே இரண்டு தப்பு இருக்கு. முதலாவதாக, இந்தக் கிராமத்திலே பசுவளமே கிடையாது; எவனாவது ஒரு நோஞ்சான் மாட்டை வைச்சுண்டு அரைப்படி கறந்து கொடுத்துட்டு அரையணா வாங்கிண்டு போறான். இங்கே ஒரு இடையன் பத்துப்படி பால் தரேன்னு சொன்னால் அது மோசடிதான். ஒருத்தன் பாலில் தண்ணியைக் கொட்டித் தப்புப் பண்ணுகிறதுக்கு நீ வழி பண்ணியிருக்கே! அவன் அப்படிக் கலப்படம் பண்ணாமல் கறந்த பாலைக் கறந்தபடி தரணும்னுதான் விலையை உசத்தியிருக்கிறதாக உன் கட்சி, இல்லையா? ஆனால் வாஸ்தவத்திலே விலையையும் ஜாஸ்தி கொடுத்துத் தண்ணிப் பாலை வாங்கப்போறே! இந்தத் தப்பு ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போ நீ விலையை அதிகமாக்கினதாலே இனிமேலே பால்

காரர்கள் ஊரார் எல்லார் கிட்டேயுமே இதைக் காரணமாகக் காட்டி விலையை உசத்தப் போரு! ஏழை ஜனங்கள் நஷ்டப் படப்போரு! உன் ஏற்பாட்டை நான் ஏற்றுக்க முடியாது. ஒரணுவுக்கு ஒரு படி வீதம் கையிலிருக்கிறதைக் கொடுத்தால் கொடுக்கட்டும். இல்லாட்டா வேண்டாம்!''

களுராக இருக்க வேண்டிய இடத்தில் களுராக இருந்தாள். கருணை காட்ட வேண்டியபோது கருணமயியாக இருந்தாள். கல்கத்தா உத்போதனில் நளினி, துப்பட்டி விற்கும் பெண் ஒருத்தியிடம் நீண்ட நேரம் பேரம் பேசிக்கொண் டிருந்தாள். ''ஒரு நாளும் ஒண்ணேகால் ரூபாய் தரமாட்டேன். ஒரு ரூபாய்க்கு மேலே சல்லிக்காசு பெயராதாக்கும்'' என்று சர்ச்சை செய்தாள். வெகுநேரம் பொறுத்துப் பார்த்த அம்மா எழுந் திருந்து வந்தாள். ''அம்மா நளினி! அவ ஏழைப்பட்டவ. நாலு இடம் ஏறி இறங்கி வியாபாரம் பண்ணி வயிற்றைக் கழுவிக்க வேண்டியவ. அவளைக் கால் ரூபாய்க் காசுக்காக நீ இங்கேயே எத்தனை நாழியா மெனக்கெடுத்திண்டு இருக்கே? வாஸ்தவத்திலே உனக்குப் போர்வை இல்லாமப் போயிடுத்தா, என்ன? ஏதோ கண்ணுலே கண்டவுடனே, வியாபாரம் பண்ணிப் பார்க்கலாமே என்கிற அரிப்பு. போறும் இந்தப் பேரம். உள்ளே போய் ஒண்ணேகால் ரூபாய் எடுத்துண்டு வா. போர் வையை எடுத்துக்கோ. என் மாட்டுப் பொண்ணுக்கு அதைக் கொடு. அவதான் கீழே விரிச்சுக்கிற ஜமுக்காளத்திலேயே ஒரு மூலையை மடிச்சு மேலுக்கும் போர்த்திக்கிறு'' என்றுள் அம்மா.

'மாட்டுப்பொண்' என்று அம்மா சொன்னது அவளது பணிப்பெண்ணுகிய க்ஷீரோதபாலாவைத்தான். இளவயதிலேயே காலமாகிவிட்ட அவளது கணவன் அம்மாவுக்குப் 'பிள்ளை' யாத லால் இவள் மாற்றுப் பெண்ணுகி விட்டாள்! இவளது நகங்களை சுற்றிப் பன்னிரண்டாண்டுகளாக இருந்த ஆறுத புண்ணை அம்மா அற்புதமாக ஆற்றியது நினைவிருக்கலாம்! தனக்குப் போர்வை இல்லாததை அம்மா எப்படியோ கவனித்து வைத் திருந்து, இப்போது அன்பளிப்பு வழங்கியது க்ஷீரோதபாலாவின் கண்களைக் குளமாக்கியது.

அவ்வளவாக வசதியற்றவர்களும்கூட அம்மாவிடம் உள்ள பிரியம் காரணமாக நிறையப் பழங்கள், இனிப்பு வகைகள் வாங்கி வருவர். இச்சந்தர்ப்பங்களில் அம்மா மிகுந்த மன வேதனை கொள்வாள். ''அகத்திலே உன் பசங்களும் பெண் டாட்டியும் இந்தப் பழதினுசுகளைக் கண்ணுலேகூடப் பார்த்

திருக்கமாட்டா. எனக்காக இப்படிச் செலவழிக்கலாமா?'' என்று அரற்றுவாள். கண்டிக்கவும் செய்வாள்.

பல்லாண்டுகளுக்குப் பின் அருணாசலத்தில் இதே குரலை எழுப்பியிருக்கிறது ரமண காருண்யம். ஏழையர்க்குத் தம்மால் எள்துணையும் சிரமம் கூடாது என்பதால் ஸ்ரீ ஸத்யஸாயி, கையுறை செலுத்தும் சம்பிரதாயத்தையே அடியோடு நிராகரித்திருப்பதையும் இங்கே குறிப்பிடலாம்.

பிள்ளைகுட்டிக்காரர்கள் அவர்களது எதிர்காலத்தை முன்னிட்டுச் சேமிக்க வேண்டியதன் அவசியத்தை அம்மா பல சமயங்களில் வலியுறுத்தியது உண்டு. கலியாணம் என்று செய்துகொண்டு, குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்கள் அவர்களுக்கான தமது கடமையைச் செய்வதே முறை என்பது அம்மாவின் உபதேசம்.

அவளது உலகியல் விவேகத்தைத்தான் என்னென்பது? ஒரு நடுத்தரக் குடும்பத்தவர் குதிரை வாங்குவதாக இருந்தார் (அந்த நாட்களில் வங்காளத்தில் குதிரைச் சவாரி செய்கிறவர்கள் உண்டு). அம்மா அவரிடம் சொல்வாள்: ''குதிரைக்குப் பதில், இப்போதான் சைக்கிள்னு ஒண்ணு வந்திருக்கே, அதை வாங்கிக்கோ! குதிரையானால் அதுக்கு லாயம், தினசரித் தீனி, இப்படிப் பல மேல்செலவு இருந்துண்டேயிருக்கும். நோய்நொடி வந்தால் வைத்தியம் வேறே பண்ணணும். அதனாலே சைக்கிள் வைச்சுக்கிறதே சிலாக்கியம்.''

அவளது பிரத்தியட்சக் கண்ணோட்டத்துக்கு இன்னோர் உதாரணம்: ஜயராம்பாடி வீட்டுக்குப் பஞ்சாயத்தார் நாலு ரூபாய் வருடாந்தர வரி விதித்தனர். அம்மா கிங்கரரிடம், ''இந்த வீட்டுக்கு வரி விலக்குக் கேட்டுப் பார். கொடுப்பார்'' என்றாள். அவள் அப்படிச் சொன்னது பணியாளருக்கு வியப்பாக இருந்தது. 'நாலு ரூபாய்க் காசுக்காகவா அம்மா பிசுகுகிறாள்! இது ஒரு ஆசிரமம், ஆனபடியால் வீட்டுவரி போடக் கூடாது என்று கேட்கலாம் என வேறு எவரேனும் சொல்லியிருந்தால் ஆட்சேபித்திருக்கக் கூடியவள் அல்லவா அம்மா? ஏன் இப்படிச் சொல்கிறாள்?' என்று யோசித்தார். அம்மா புரிந்துகொண்டாள்! ''குழந்தே! எனக்கோ வயசாயிடுத்து. என்னிக்குக் கண்ணை மூடுவேனோ? அதுக்கப்புறம் இந்த வீடு என்னவாகும்னு யோசிச்சுப் பாரு: இங்கே பிச்சை எடுத்துச் சாப்பிட்டுண்டு யாராவது சாதுவோ பிரம்மசாரியோ மட்டும் இருக்கலாம். இப்போ போடுகிற வரி அப்பவும் நீடிக்கும். அவா வரிப் பணத்துக்கு எங்கே போவா? அவாளுக்குப் பஞ்சா

யத்துலே காரியம் சாதிச்சுக்கச் சாய்காலும் இருக்காது: அதனலே என் காலத்திலேயே இதுக்கு விலக்கு வாங்கிடணும்.''

எத்தனை பொறுப்புணர்ச்சி!

அம்மா சொன்னவண்ணமே அவளது இருக்கைக்கு வீட்டு வரியிலிருந்து விலக்குப் பெறப்பட்டது.

* * *

தனது ஆசிரமம் என்கிற பெயரைச் சொல்லி, அதற்கு ஒரு பிரத்தியேகச் சலுகை கேட்பதை அம்மா ரசிக்கமாட்டாள் என்று அந்தக் கிங்கரர் எண்ணியதிலும் நியாயம் உண்டு. அம்மா தன் பெயரைப் பயன்படுத்தி எந்தப் பிரத்தியேக நலன் பெறுவதையும் அறவே ஆட்சேபித்தவள். அவளது அத்தியந்தப் பிரியமான ராதுவுக்கு வரன் தேடியபோது, தன் பக்தர் குழாத்தில் எவரேனும் அம்மாவின் 'சம்பந்தம்' கிடைக்கிறது என்பதற்காகப் பெண் கொள்ள இடம் தந்துவிடக்கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தாள். அம்மாவின் பெயரை உபயோகித்துப் பணம் பண்ண எண்ணிய சகோதரர்களுக்கு அவள் பிடியே கொடுத்ததில்லை.

அவளை வரவேற்று உபசரிப்பதற்காக எங்கேனும் கமிட்டி அமைத்து நிதி சேகரிக்க முற்பட்டால் உடனுக்குடனே அதைத் தடுத்து நிறுத்திவிடுவாள். மகா மானினீ அவள்!

''மகான்னு ஒருத்தர் பேரைச் சொல்லிப் பணம் கேட்டால், இஷ்டமில்லாதவாகூடத் தட்ட முடியாமல் கொடுக்கும்படி ஆகும். இது சரியில்லை. மனசாரப் பிரியம் இருக்கிறவா, தங்களுக்குள்ளே காதும் காதும் வைச்சமாதிரி செய்ய வேண்டியதைப் பகிரங்கப்படுத்தவே கூடாது. ஆனல், நான் சொல்லி என்ன பிரயோஜனம்? இப்போ பல பெரிய மநுஷாளுக்கு டாகுர் ஒரு அந்தஸ்துச் சின்னமாயிருக்கார். தாங்கள் டாகுரோட சம்பந்தப்பட்டவாள்னு காட்டிக்கிறதிலே பலருக்கு அந்தஸ்து ஏற்படறது: அதனலே டாகுர்பத்தினிக்கு வரவேற்பு நடத்தணும், அதுக்காகக் கமிட்டி போடணும், அதிலே தாங்களும் பிரதானமாக இருக்கணும்னு இப்படியெல்லாம் செய்யரு. வரவேற்பு, உபசரிப்பு, ஊர்வலம், அது இதுன்னல் பணம் வேண்டித்தானே இருக்கு? அதுதான் பிட்சாபாத்திரத்தை எல்லோருக்கும் முன்னடி நீட்டரு! எனக்கு இது உபசாரமில்லை, அவமானமாகத்தான் இருக்கு'' என்று அம்மா வெட்டொன்றும் துண்டிரண்டுமாகச் சொன்ன சந்தர்ப்பங்கள் பல.

அம்மா உயிர் பிரியும் வரையில் ஓரிடத்தில்கூட வரவேற்பு, ஊர்வலம் இவற்றை ஏற்றதே கிடையாது. அத்தியந்த பக்தர்கள் 'காதும் காதும் வைத்தாற்போல்' இவற்றுக்கு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இடங்கள் பல உண்டு. ஆனால் அது மற்ற இடங்களில் உள்ளவர்கள் தவருகச் செய்வதற்கு இடமளித்துவிடும் என்ற காரணத்துக்காக அம்மா எங்குமே இந்தத் தடபுடல்களை அங்கீகரித்ததில்லை. இதைவிட ஒரு பெரிய காரணம் உண்டு. அதுதான் அவளது சநாதன ஸ்திரீ தர்மம். பெண்ணுகப் பிறந்த ஒருத்தி பொதுஸ்தலத்திலும், வீதிகளிலும் விழாவுக்குப் பாத்திரமாவது அம்மா வாழ்ந்த காலத்துக்கு உகவாதது என்றே அவள் கருதினுள். இதனுல்தான் உலகம் போற்றிய இந்த மகாமாதா ஒரு முறைகூடப் பொது மேடை ஏறியதோ, பிரசங்கம் செய்ததோ அறிக்கை விடுத்ததோ கிடையாது.

(இந்த நூலாசிரியரை இங்கே சிறிது பேச அநுமதிக்க வேணும். மேலே எழுதியிருப்பது, தற்காலத்தில் தேவி ஸ்ரீ ஆனந்தமயீ மா, ரமாபாய் மாதா ஆகிய பல பெண்ஞானிகள் பெற்றுவரும் வரவேற்பு உபசரணைகளைக் குறிக்காது. சாரதா தேவி தன் காலத்தில் வழக்கத்திலிருந்த பர்தா முறையைப் பின்பற்றியவள். நல்லதோ, கெட்டதோ இன்று பெண்கள் அந்தக் கண்டிப்பான கோஷா விதிகளைப் பின்பற்றுவர் என்று எதிர்பார்க்க இடமே இல்லை. எனவே, இன்றைய சூழலில் ஞானப் பெண்மணிகள் நம் அம்மாவைப்போல் மூடி மறைந்திருக்க வேண்டும் என்று சொல்வதற்கில்லை. அதுவுமன்றி அம்மா, தான் ஞானி என்பதைவிட, தான் குடும்ப ஸ்திரீகளுக்கு ஓர் உதாரணம் என்பதாகவே வாழ்ந்து காட்டியவள். மா ஆனந்தமயி போன்றவர்களை இவ்விதம் சொல்வதற்கில்லை அல்லவா? முக்காடிட்டுக் கோஷாவாக வாழாவிடினும் பொதுவாகப் பெண்குலம் அடங்கி வாழ்வதே நல்லது என்பது அம்மா உதாஹரித்துக் காட்டிய தத்துவம் என்பதை இங்கு நினைவில் கொள்ளலாம்)

ஒரு பெரிய மனிதரின் பெயரைக் காட்டி, அதனுல் மறைமுக நிர்ப்பந்தம் செய்வதை அம்மாவின் நேரிய உள்ளம் ஒப்பவில்லை. இதனுல் ராமகிருஷ்ண பக்தர்களே நடத்திய இலவச வைத்தியசாலை முதலிய நற்பணிகளுக்குக்கூடத் தன் பெயரில் நிதி வேண்டுகோள் விடுப்பதை அவள் அங்கீகரிக்கவில்லை. "என் பேரைப் போட்டுட்டால் அது அதிகாரப் பிச்சைதான்: சை, அவமானம்!" என்று ஒரு முறை சுள்ளென்று கூறிவிட்டாள்.

தம் சம்பந்தப்பட்ட வரவேற்பு மட்டுமின்றி, பொதுவான சமய சேவையிலும்கூட வசூல் சம்பந்தமே இருக்கக் கூடாது என்பதில் இன்று ஸ்ரீ ஸத்யஸாயி காட்டும் கண்டிப்பை அன்று அம்மா காட்டியதாகத் தெரிகிறது.

* * *

உயர்வு மனப்பான்மை தன்னிடம் நெருங்க முடியாமல், அதனிடமிருந்து வெகு உயரத்தில் வாழ்ந்தவள் தேவி சாரதை. அந்த மகா உயரத்துக்குத்தான் எளிமை என்று பெயர். தன் 'ஸ்தான'த்தை எண்ணுமல் அனைவரிடமும் இழைந்து பழகினுள். இந்த எளிமையைப் புரிந்துகொள்ளாமல் அவள் சந்நிதியில் உளறிக் கொட்டியவர்களும் அபசாரமாக நடந்துகொண்டவர் களும் உண்டு. உளறலையும் குழந்தையின் மழலையாக, அபசா ரத்தையும் உபசாரமாக பாவித்தாள் அம்மா.

ஓர் எடுத்துக் காட்டு: பாவினி தேவி, அம்மாவைக் காண வந்தபோது, அம்மா அவளுக்கு இரு மாதுளம் பழங்களை அளித் தாள். பாவினியம்மை கிளம்புகிற சமயத்தில் ராஞ்சியிலிருந்து பக்தர்கள் அனுப்பியிருந்த பழக்கூடைகள் வந்து சேர்ந்தன. அதைப் பார்த்ததும் பாவினி தேவிக்கு நைப்பாசை வந்தது. நெடுமூச்செறிந்தாள். வாய்விட்டு, "ஆதியிலே என்னைத்தான் பரமஹம்ஸ தேவருக்குப் பெண் பேசினு; அவர் புத்தி ஸ்வாதீன மில்லாதவர்னு நினைச்சு என் அப்பா மறுத்துவிட்டார். அப்படி மறுக்காமல் இருந்திருந்தால், இந்தக் காணிக்கை எல்லாம் என்னைத் தேடித்தான் வந்துண்டிருக்கும்" என்று கூறினுள். இது போலும் அவிவேகமான, அபசாரமான, அசம்பாவிதமான ஒரு பேச்சு இருக்க முடியுமா? தேவி சாரதைக்கு சுயமாக எந்த மகிமையும் இல்லாதது போலவும், குருமஹராஜின் பத்தினி என்பதாலேயே அவளுக்கு எல்லா வைபவமும் நடப்பது போலவும், அது அவளுக்குத் தான் விட்டுக்கொடுத்த ஸ்தானமே என்பதாகவும் அல்லவா பாவினி பேசிவிட்டாள்! அடியார் களுக்குப் பரம விரசமாக இருந்தது அவளது பேச்சு!

சாரதையோ அதனல் சிறிதும் பாதிக்கப்படவில்லை. முகம் மலர, "பாவினியக்கா! நீங்க அந்தக் கூடைகளிலிருந்து உங்களுக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கோங்கோ! டாகுர் நைவேத்தியத்துக்குமட்டும் கொஞ்சம் எடுத்து வைச்சு டுங்கோ" என்ருள்.

* * *

பிறரை உபசரிக்கும் பண்பில் உயர்ந்து நின்றவள் அம்மா: பிறரது உபசரணையை ஏற்பதிலும் பண்புச் செல்வமாக இருந்

தாள். ஓர் அற்ப உபகாரம் செய்தவர்களையும் பலபேர் முன்னிலையில் வாயாரப் பாராட்டுவாள்

எம்பிராய்டரி, க்ரோஷா, கம்பளிப் பின்னல் முதலியவற்றில் அம்மாவுக்கு நல்ல தேர்ச்சி உண்டு. பெண்கள் பலர் தங்களது இந்தக் கலைத்திறனைக் காட்டிப் பரிசுகளை அம்மாவுக்கு வழங்குவர். அம்மா அவற்றை எல்லோருக்கும் பிரித்துக் காட்டுவாள்: ''என் பெண்கள் எத்தனை அழகாகச் செய்திருக்கா, பாருங்கோ'' என்று சிலாகிப்பாள்.

அன்பையே அவள் முக்கியமாகக் கருதியதால், அற்பமாகத் தோன்றும் காணிக்கையையும் உவப்புடன் ஏற்றாள். ஒரு பக்தர் கடும் புளிப்பான மாம்பழங்களை அவளுக்குச் சமர்ப்பித்தார். பல்லைக் கூசச் செய்த அந்தப் பழங்களை பக்தர் எவரும் சிந்தவில்லை. அம்மாவோ சந்தோஷமாக அந்தப் பழத் துண்டுகளைக் குதப்பிக்கொண்டே, அதைக் கொண்டுவந்தவரிடம், ''குழந்தே! உனக்குத்தான் என் ருசி சரியாகத் தெரிஞ்சிருக்கு. எனக்குப் பித்த சரீரமோ இல்லியோ? அதனாலே இப்படிப் புளிப்புத் தித்திப்பா இருந்தா அலாதியாப் பிடிக்கிறது'' என்றாள்.

கன்னிப் பருவத்தில் அதிகாரம் செய்த பைரவி பிராம்மணியின் அதிகாரமான சமையலைச் சகித்துக்கொண்டு, சபாஷ் சொன்னவளாயிற்றே! அது அச்சத்தின்மீது செய்தது. இப்போது அன்பின்மீது எந்தக் கையுறையையும் இதயமார ஏற்றுக்கொண்டு பக்தரை மகிழ்வித்தாள்.

* * *

நீண்டகாலமாக வந்துள்ள சமூக ஆசாரங்களை மாற்றுவதற்கு அம்மா முற்படவில்லை. ''அவாளவாளும் தங்களுடைய குலசம்பிரதாயத்தையும் குடும்ப சம்பிரதாயத்தையும் விடாமல் அநுஷ்டிக்கணும். சமூகத்திலே குடும்பஸ்தர்களாக இருக்கிறவரையில் ஜாதி தர்மங்களை விடக்கூடாது'' என்பாள். 'சமூகத்திலே இருக்கிற வரையில்' என்று அவள் கூறியது அர்த்த புஷ்டி வாய்ந்தது. தீவிரமாக ஆத்மிகத்தில் ஈடுபட்டவர் விஷயத்திலும், ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தினரிடையிலும் அம்மா ஜாதி வித்தியாசங்களை வலியுறுத்தவில்லை. தம் துறையில் வல்லமை பெற்ற ஒருவர் பிராம்மணரல்லாதவராக இருந்தாலும், அவரை வயதில் சிறிய தனது மருமக்கள் நமஸ்கரிக்கவேண்டும் என்பாள். பல சந்தர்ப்பங்களில் இவ்விதம் முகர்ஜியகத்துப் பெண்கள் 'இதரர்'களை வணங்கும் 'விசித்திர'த்தைக் கண்டு கிராமப் பெண்டுகள் கசமுசத்ததுண்டு.

லௌகிகர்களாக இருப்பவர்கள் பண்டைய வர்ண தர்மப் படியே ஒழுகவேண்டும் என்று அம்மா விதித்ததற்கு ஓர் அழுத்தமான உதாரணம் அவளது இறுதிக் காலத்தில் நடந்தது. அப்போது அம்மா படுத்த படுக்கையாகிவிட்டாள். அவளைக் காண மைத்துனர் மக்களான ராமலாலும், லக்ஷ்மியும் வந்திருந்தனர். காமார்புகுரிலிருந்த ஸ்ரீராமகிருஷ்ணரது இல்லத்தை ஆலயமாக மாற்றுவதற்கு ஏற்பாடு தொடங்கிய சமயம் அது. ராமலால், சிவராம் பரம்பரையினருக்கே இக் கோயிலில் அர்ச்சக பாத்தியதை கிடைக்கவேண்டும் என்பது ராமலாலின் ஆசை. ஸ்ரீராமகிருஷ்ண மட நிர்வாகிகளிடம் அம்மா ஒரு வார்த்தை சொல்லிவிட்டால், தங்களுக்கே தலைமுறைத் தத்துவமாகப் பூஜா உரிமை கிடைத்துவிடும் என்று நம்பினர்.

லக்ஷ்மிதேவி இவ்விஷயமாகக் 'கோடி' காட்டிப் பேசியவுடனே அம்மா சற்றும் தயங்காமல், "அதெப்படி முடியும்? (ராமகிருஷ்ண) மடத்துக்காரா ஜாதிக்கட்டுப்பாடுகள் பார்க்கிறதில்லை. இந்தக் கோயிலிலே வேள்ளைக்காரர் உள்பட எல்லாரையும்தான் அநுமதிப்பா. பூஜாரியாகப்பட்டவர் எல்லாருக்கும் பிரசாதம் தரவேண்டியிருக்கும். ராமுவும் ஷிபுவும் குடும்பஸ்தர்கள் இல்லையா? நாளைக்கே நம்மகத்துக் குழந்தைகளைக் குலம் கோத்திரத்திலே கலியாணம் பண்ணித் தரவேண்டாமா? நீங்க மடத்து மநுஷ்யாளோடே ஒரேயடியாகக் கலந்துட்டா, வெளியிலே நாலுபேர் என்ன சொல்லுவா? நம்மகிட்டே அவா கொள்வினை - கொடுப்பினை வைச்சுப்பாளோ? டாகுர் ஆலயத்தைக் கட்டுகிற மடத்துக்காரர்களேதான் அதிலே பூரணமாக நிர்வாகம் பண்ணணும்" என்றாள்.

ராமலாலுக்கு ஏமாற்றமாகிவிட்டது. வர்ணதர்மத்தைச் சிறிது விட்டுக் கொடுத்தேனும், சர்வதேச யாத்ரிகர்களைக் கவரக் கூடிய ஓர் ஆலயத்தில் அர்ச்சனை உரிமை பெறுவதன் லாபத்துக்கு அவர் ஆசைப்பட்டார் போலும்! சூட்சும புத்தி வாய்ந்த அம்மா இதை உணராமல் போவாளா? "நான் மடத்திலே சொல்லி உங்களுக்கும் சாமானியமா ஒரு வீடு கட்டித் தரச் சொல்கிறேன். டாகுரின் ஜன்மஸ்தலம்னு பலபேர் பார்க்க வரும் போது, அவரோட குடும்பத்தைச் சேர்ந்தவா ஒரு கௌரவமான நிலையிலே இருந்தால்தானே நன்னாயிருக்கும்? என் குழந்தைகள் உங்களுக்கு இந்த வசதி பண்ணித் தருவா. அவாளே நம்ம குலதெய்வமான ரகுவீருக்கும், சீதளாவுக்கும் சின்னதாக சந்நிதி கட்டித் தருவா. இந்த அகத்துப் பூஜை வம்சாவளியா உங்ககிட்டேயே இருக்கும்" என்றாள் அம்மா.

மடத்தினரிடம் தன் 'சாய்காலை' ஒரு போதும் பிரயோகிக்காத அம்மா, இப்போது தன் மைத்துனர் மக்களுக்காகப் பரிந்துரைத்தபோதும், தனது நேர்மை பிசகிவிடவில்லை. ராமகிருஷ்ணரின் குடும்பத்தவரும், குலதெய்வங்களும் அவர் கோயில் கொண்டுள்ள ஸ்தலத்திலேயே கவனிப்பாரற்றிருந்தால் மடத்துக்கே கெட்ட பெயர் வரும் என்பதால்தான் அம்மா இப்படிச் சிபாரிசு செய்தாள். தர்ம நியாயத்திலிருந்து அவளால் விலகவே இயலாது!

* * *

அம்மாவின் அந்திம காலத்தில் கடைரொட்டியை அவளுக்கு ஆகாரமாக விதித்தார் டாக்டர். "இதர மதஸ்தர்கள் தொட்ட பண்டம் கண்ணை மூடுகிற காலத்தில் எனக்கு வேண்டாம்" என்று தீர்மானமாக மறுத்துவிட்டாள் அம்மா.

பயிற்சி பெற்ற ஒரு நர்ஸை அம்மாவின் பணிவிடைக்கு அமர்த்துமாறு கூறினர் டாக்டர். "இந்தத் தேசத்துப் பெண் ஒருத்தி கவுனும் பூட்ஸும் போட்டுண்டு வந்து எனக்குப் பணிவிடை பண்ணுவதை நான் அநுமதிப்பேன்னு டாக்டர் எப்படித்தான் நினைச்சாரோ? இப்போ ஸரளா செய்யற சுசுரூஷையே எனக்குப் போறும்" என்று முடிவாகச் சொல்லி விட்டாள் அம்மா.

சர்வதேச இயக்கமான ராமகிருஷ்ண மடத்தின் மாதாஜி இப்படிப் பத்தாம் பசலியாகப் பேசியிருக்கலாமா என்று இதைப் படிக்கிற சிலருக்குக் குறையாக இருக்கலாம். அதற்காக என்ன செய்வது? அம்மா எப்படியிருந்தாளோ அப்படித் தானே அவளைக் காட்ட முடியும்? ஒரு வேலியைச் சிறிது உடைத்தால், அப்புறம் எல்லா வேலியும் படிப்படியாக உடைந்து போகிறது. பழைய சம்பிரதாயங்கள் எப்படியும் மாறத்தான் செய்யும். ஆனால் 'மாற்றுங்கள்' என்று ஏதோ ஓர் இடத்தில் மகான்கள் சொல்லிவிட்டால், மக்கள் எல்லா இடத்திலும் மாற்றம் செய்து, தேசத்தின் இயல்பான ஆசாரங்களை அடியோடு கல்லி எறிந்துவிடுவார்கள். இதனால்தான் வேலியில் கையே வைக்கவேண்டாம் என்று ஆதிகாலத்தில் ஸ்ரீராமனும், கிருஷ்ணனும், சங்கரரும், சமீபகாலத்தில் சாரதையும்,—ஏன், த்வைதப் பிரபஞ்சமே தீண்டாத ரமணர் கூடவுந்தான்!—இன்று நம் காமகோடிப் பெரியவர்களும் கூறி வந்திருக்கிறார்கள்.

* * *

ஆனாலும் பழைய வழக்கம் என்பதாலேயே முற்றும் மூடத்தனமான ஒன்றை அம்மா ஆதரிக்கமாட்டாள். பெண்கள் கல்வியறிவு பெற வேண்டியது அவசியம்; வீட்டுக்குள்ளேயே பெண் குழந்தைகள் அடைந்து கிடக்காமல் பள்ளிக்குச் சென்று புத்தியை விசாலமாக்கிக் கொள்ளவேண்டும் என்பதில் அம்மா தீவிரமாக இருந்தாள். ஊர்வழக்கை மீறி ராதுவுக்குத் திருமணமான பின்னரும்கூட அவள் வயசுக்கு வரும்வரையில் பள்ளிக்கு அனுப்பிவைத்தாள்.

பெண்கள் பள்ளிப் படிப்புப் பெறுவது அவர்களுக்கும் நல்லது, குடும்பத்துக்கும் நல்லது, சமூகத்துக்குமே நல்லது என்று அம்மா கூறுவாள்.

பெண்களுக்குத் தனிப் பள்ளி வைத்துப் பெண்களே பாடம் சொல்லித் தருவதுதான் முறை என்று அம்மா எண்ணினாள். அதாவது, பெண்கள் உபாத்திமைத் தொழில் புரிவதை அவள் ஆதரித்தாள். நிவேதிதைப் பள்ளியில் சிறப்பாக ஆசிரியப் பணி ஆற்றி வந்த ஸுதீரா தேவி போன்றவரை அம்மா மிகவும் மெச்சிப் பேசுவாள்.

பெண்கள் ஆண்களோடு சேர்ந்து படிப்பதையோ, உத்தியோகம் செய்வதையோ அம்மா ஆதரித்திருக்க மாட்டாள் என்றே தோன்றுகிறது. ஆசிரியையாக இருக்கும் பெண்களும் 'உத்தியோக புருஷி'களாகப் பெண்மையை இழந்து பரிணாமம் பெறுவதை அம்மா விரும்பவில்லை. ''ஜயராம்பாடியில் ஒரு பெண் பள்ளிக்கூடம் வைச்சு, குழந்தைகளை அதிலே கொண்டு தள்ளணும்னு ஆசையா இருக்கு. ஆனா இதிலே ஒரு கஷ்டம், சரியான வாத்தியாரம்மாக்கள் கிடைக்கிறதில்லை. ஏனென்றால், பெண்கள் படிக்கிறதாலே புத்தியை விசாலமாக்கிக்கிறதோடு நிற்கிறதில்லை. அவாளுக்கு ஃபாஷனும் வந்துடறது. இப்படிப்பட்ட வாத்தியாரம்மாக்கள்கிட்டே படிக்கப்போகிற குழந்தைகள் கல்வியைவிட, இவளோட ஃபாஷனையே அதிகமா எடுத்துப்பா. இதைப் பார்த்தால் கிராமக் குழந்தைகள் நிரக்ஷரகுக்ஷிகளா நிற்கிறதே தேவலைன்னு தோணறது'' என்று அம்மா சொன்னது ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

பெண்கள் ஆடவர்களுடன் நெருங்கிப் பழகுவதை அம்மா விரும்பவில்லை. பணம் படைத்த ஓர் இளம் விதவையிடம், ''புருஷரூபத்தில் இருக்கிற தெய்வ ரூபங்களைக்கூடப் பூஜை பண்ணாதே!'' என்று எச்சரித்திருக்கிறாள்! இது அந்தக் குறிப்பிட்ட மங்கையின் தனிப்பட்ட மனநிலை, சூழ்நிலையைக் கருத்திற்

கொண்டு மிகைப்படக் கூறிய உபதேசம்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் பொதுவாகவே பெண்கள் இளம் சந்நியாசிகள், வாலிபர்களான மகான்கள் ஆகியோரிடம் அதிகம் செல்லுவதைக்கூட அம்மா ஆட்சேபித்தே இருக்கிறாள். யௌவனப் பருவத்திலுள்ள ஒரு சாதுவை அடிக்கடி தரிசித்து வந்த பெண் ஒருத்தியிடம் அம்மா கண்டிப்பாக, "அங்கெல்லாம் போகிறதை நிறுத்து" என்று கூறினாள். "மகளே, நீ நல்ல எண்ணத்தோடு போறே; அவாளும் நல்லவாளா இருக்கலாம். ஆனால் மநுஷ்ய மனசு எப்போ எப்படியிருக்கும்னு சொல்ல முடியாது. அதுவுமில்லாமல் லோகம்னு ஒண்ணு இருக்கு. ஊரிலே ஒரு பேச்சுக் கிளம்ப இடம் தர்றது நல்லதில்லை" என்றாள்.

பெண்குல மகாத்மாவாக இருந்த நம் அன்னை, நாற்பது வயதைக் கடந்த பிறகுதானே ஆடவரைத் தன் சந்நிதிக்கு அநுமதித்தாள்? அதன் பின்னரும் அறுபத்தேழாவது வயதில் நிர்யாணம் ஆகும் வரையில், அவள் அணுக்கத் தொண்டர்களைத் தவிர மற்ற புருஷர் முன்னிலையில் முகத்திரை போட்டுக் கொண்டே இருந்தாள் அல்லவா? அம்மாவின் இறுதிக் காய்ச்சலின்போது ஒரு நாள் அவள் ஸ்மரணை தப்பிக்கிடந்து, மீண்டும் மீண்டும் நினைவு பெற்றபோது, யாரோ ஆடவர் வந்து போனதாக அறிந்து, "அப்போ நான் இப்படியேவா முக்காடில்லாமல் இருந்தேன்? நீங்கள் யாராவது என் பர்தாவை இழுத்து விட்டிருக்கக்கூடாதா?" என்று சிஷ்யபெண்ணைச் சிறிதே கடிந்துகொண்டாளாம்!

* * *

பச்சைக் குழந்தைப் பருவத்தில் கலியாணம் செய்வதை ஆட்சேபித்தவள் ஸ்ரீ சாரதா தேவி. சிறிய பிராயத்திலேயே தாம்பத்தியத்தில் ஈடுபடுவதன் விகாரங்களை அருவருத்தாள் கன்னியாகுமாரியான நம் அம்மா. ஆனால் இது காரணமாக அம்மா பதினெட்டு, இருபது வயதுவரையில் பெண்களுக்கு மணம் செய்யாமலிருப்பதை ஆதரித்தாள் என்பதற்கில்லை.

சிற்றின்பத்துக்கு இல்லறத்தினர் ஆளாகிவிடக்கூடாது என்று எச்சரிப்பாள் அம்மா. "டாகுர் சொல்லுவார்: பொதுவாக எல்லாருமே ஒண்ணு, இரண்டு குழந்தைகளைப் பெற்ற பிறகு இந்திரிய நிக்கிரகம் பண்ணணும்—அப்படின்னு. இதைச் சொல்லி யார் கேட்கப் போகிறு?" என்று அலுத்துக் கொள்வாள்.

ஒருபுறத்தில் ராது கணவனிடம் வைத்திருந்த அதிமோகத்தைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தாள் அம்மா - மறுபுறத்தில் கணவன் சங்கமே கூடாது என்று இருந்த நளினியை நல்ல வார்த்தை சொல்லிப் புக்ககம் அனுப்பப் பாடுபட்டாள். இதிலிருந்து சதிபதி உறவுபற்றி அம்மாவின் கருத்துத் தெற்றெனத் தெரியவில்லையா? கீதாசாரியன்போல் மத்திம மார்க்கத்தை ஆதரித்தாள்.

*　　　*　　　*

"ஊரோடு ஒத்து வாழணும்; ஊர்ப் பழக்கங்களை விடாமல் அநுசரிக்கணும்" என்பது அம்மாவின் உபதேசம். வாய் உபதேசத்தை வாழ்வில் காட்டியவள் அவள்.

தன்னுடைய அம்சங்கள் என்று எந்தக் கிராமதேவதைகளை அவள் கேசவாநந்தரிடம் ஒப்புக்கொண்டு கூறினளோ, அந்த மாரியம்மனுக்கும் (சீதளா), நாகம்மாவுக்கும் (மனஸா) அவள் எத்துணை பக்தியோடு நேர்த்திக் கடன் செலுத்தினள்? தனக்கு வரும் காணிக்கைகளில் ஞாபகமாக ஒரு பங்கினைக் கிராம தேவதைகளுக்கு என எடுத்துவைப்பாள். கங்கையிலோ, ஏரியிலோ ஸ்நானம் செய்து வருகையில் சாலையிலுள்ள அசுவத்த விருட்சங்களுக்கு நீர் வார்த்து, நமஸ்கரிக்கத் தவற மாட்டாள்.

தன் வீட்டில் பூஜை செய்கிற சாமானிய புரோஹிதருக்கும், வேறு கோவில் பிரசாதம் கொண்டுவரும் சாதாரணப் பூஜாரிக்கும்கூட நமஸ்காரம் செய்வாள் உலகம் தொழுத சாரதா தேவி. தன் சமையற்காரி ஒருத்தி பழுத்த பிராம்மண ஸ்திரீ என்பதால் அவளையும் அறுபது வயதுக்கு மேற்பட்ட நம் அம்மா நமஸ்கரித்திருக்கிருள்.

கங்கை போன்ற புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யும்போது அம்மா தைலம் தேய்த்துக்கொள்ள மாட்டாள். "அம்மா, உங்கள் வாத ரோகத்துக்கு ஒரு நாள்கூடத் தைலம் தேய்க்காமல் இருக்கக்கூடாது" என்று ஆசாரக்காரியான கோலாப்-மாவே வற்புறுத்திச் சொல்வாள். அம்மாவின் பிகு தளராது. "புண்ணிய தீர்த்தங்களிலே தைல ஸ்நானம் கூடாதுன்னு சாஸ்திரம். அதை நான் மீறினல் மற்றவாளும் 'இதிலே என்ன இருக்கு, அதிலே என்ன இருக்கு?'ன்னு சம்பிரதாயங்களை விட ஆரம்பிச்சுடுவா. அதுக்கு இடம் தரப்படாது" என்பாள் சாரதை. 'ந புத்திபேதம் ஜனயேத் அக்ஞானும் கர்மஸங்கினும்' (அவிவேகிகளிடம் புத்திமாருட்டம்

உண்டாக்கக்கூடாது) என்று மொழிந்த கீதாசாரியனின் குரல் கேட்கிறது!

பூண்டைப் பாலில் வேக வைத்து உண்பது அம்மாவின் உடல் நலத்துக்கு மிகவும் உதவும் என்றும், 'மருந்து' என்கிற ரீதியில் இதை அம்மா ஏற்கவேண்டும் என்றும் நாட்டு வைத்தியர் கூறினர். ஆயினும் அந்தண விதவையாகிய தான் பூண்டு உண்பதற்கில்லை என்று அம்மா மறுத்துவிட்டாள்.

தன்னைக் கட்டுப்பாடுகளுக்குப் பாத்திரமான ஒரு சாதாரண பிராம்மண விதவையாகவே அம்மா சில இனங்களில் கருதியது, நம் இதயத்தையே தொட்டுவிடும். இந்த ஜகன் மாதாவின் சரணாரவிந்தங்களில் செவ்வரக்குக் குழம்பு பூசி, அடிச்சுவட்டினை வஸ்திரத்தில் ஒற்றி வைத்துக் கொண்டு பூஜிக்க ஆசைப்பட்ட பலர் உண்டு. ஆனல் அம்மா இதற்கு இணங்கியதே இல்லை. "வளையைக் கழட்டாமலும், கேசத்தை விசர்ஜனம் பண்ணாமலும் நான் இருக்கிறதை உலகம் ஒப்புக்கொள்கிறதே பெரிய சமாசாரம்; விதவை காலில் நலங்குவேறே இட்டுக்கிறதாவது! ஊர் சிரிக்கும்; நீங்க ரொம்பத் தாபப்படறேளேன்னு நான் என் பாதத்தை நீட்டிவிட்டா, அப்புறம் ஊர் ஜனங்கள் வரச்சே என் காலைத் துணியிலே சுத்திண்டு மறைக்க வேண்டியதுதான்" என்பாள். தான் நித்யகல்யாணி என்று நன்ருகத் தெரிந்திருந்தும் ஊராருக்காகக் கைம்மையை அநுஷ்டித்தாள்! ஊரார் பேச்சுக்காகக் கல்யாணியான சீதையைத் தியாகம் செய்தான் ஸ்ரீராமன்; அம்மாவோ அதே காரணத்துக்காகத் தனது கல்யாண சுந்தரத்தையே துறந்தாள். கண்ணன் வாக்கும், ராமன் வாழ்வும் அம்மாவின் சரிதத்தில் இடைவிடாமல் எதிரொலிக்கின்றன!

விதவைகள் வெளி உலகையே காணுமல், இருட்டில் அடைபட்டுக் கிடப்பதை அம்மா ஒருபோதும் ஒப்பியதில்லை. அவர்கள் ஏகாதசி முதலிய தினங்களில் தங்களால் முடியாவிட்டாலும் கொலைப்பட்டினி கிடப்பதை அம்மா அவசியம் என எண்ணவில்லை. "முடியாதவா பிடிவாதமாகப் பூரண உபவாசம் இருக்க வேண்டியதில்லை; அது ஆத்மஹத்திதான். அதாவது பாபம். பழமும், பற்றுப் படாமல் எண்ணெயில் வெந்த பட்சணங்களும் சாப்பிடறதில் விரதத்துக்கு பங்கம் இல்லை. இதுகளை பகவானுக்குக் காட்டிட்டுப் பிரசாதமாகச் சாப்பிடறதில் தப்பே இல்லை" என்பாள். அம்மாவும் இவ்விதம் கனிகள், தைலபாகமான சிற்றுண்டிகளை உபவாச தினங்களில் உட்

கொள்வாள். ஆயினும் தானும் சரி, பிற விதவையரும் சரி, நீரில் வெந்த உணவு வகைகளையும் அன்னத்தையும் உபவாஸ தினங்களில் புசிக்கக்கூடாது என்றே அம்மா கருதியிருக்கிறாள்.

சம்பிரதாயங்கள் என்கிற பெயரில் புத்தியையும் மனத்தையும் குறுக்கிக்கொள்ளாத நம் அம்மா, விதவைகள் முடி களைவதை ஆட்சேபிக்கவில்லை என்பது பலருக்கு வியப்பூட்டும். "'விதவைகள் உபவாசம் இருக்கிறது அவா தங்களைத் தாங்களே அடக்கிண்டு இந்திரிய நிக்கிரகம் பண்ண உதவும். கேச விசர்ஜனம், வெள்ளாடை, முக்காடு, நகை போடாமலிருக்கிறதெல்லாம் பிறத்தியார் சபலத்திலிருந்து விடுபட உதவும்'' என்பாள்.

அம்மா நாள் நட்சத்திரம் பார்த்துத்தான் எந்தக் காரியமும் செய்வாள். குறிப்பாக, பஞ்சாங்கம் பார்க்காமல் பிரயாணம் கிளம்பமாட்டாள்.

* * *

'ஞானத்தில் நிலைத்தவன் எப்படி இருப்பான், எப்படிப் பேசுவான், எப்படி நடப்பான்?' என்றெல்லாம் அர்ஜுனன் கண்ணனைக் கேட்டான். ஞானியின் ஒவ்வொரு செயலிலும், சைகையிலும் முக்கியத்துவம் உண்டு, அலாதி அழகு உண்டு. அவர்கள் செய்கிறதனைத்தும் பார்க்கப் பார்க்க ஆனந்தமாக இருக்கும். சின்னச் சின்ன விஷயங்களிலும் ஒரு சுந்தரம் சொட்டும். மகானின் ஒரு பெரிய காரியத்தை விட இந்தச் சின்ன அம்சங்களிலேயே தமக்கு ஈடுபாடு அதிகரிப்பதாக ஸ்வாமி விவேகாநந்தர் பகர்ந்துள்ளார். நம் அம்மாவின் பேச்சு, நடை, உணவு முதலிய அம்சங்களைப் பார்த்து ரசிப்போம்.

அவளது குரல் அதிமதுரமானது. ஓங்கிப் பேசவே மாட்டாள். பரமரசிகரான டாகுர் மகிழ்ந்து கேட்கும் விதத்தில் பாடியவள் அவள். 'காதுக்கு அமுதமான இன்குரலாள்' (கர்ணபீயூஷ ஸுஸ்வரா) என்பது அவளது அஷ்டோத்தர சதத்தில் ஒரு நாமம்.

ஜயராம்பாடியிலும், காமார்புகுரிலும் கிராம மக்களுக்கே உரிய இழுவலுடன் வார்த்தைகளை மிகவும் சிதைத்துப் பேசிப் பழகிய அம்மா, கல்கத்தாவின் நாகரிகப் பேச்சையும் பேசும் தோரணையையும் சுலபமாகக் கற்றுக்கொண்டாள். அதன் பின்னும் அவளது உயர்பண்பைப் பாருங்கள்: கிராமத்துக்கு வந்து தங்கியிருக்கும்போது நாகரிக பாஷையில் பேசினால் அந்த ஜனங்களுக்குத் தான் உச்சிக் கொம்பாகிவிடுவோம் என்பதால்,

அச்சமயங்களில் கிராமக் கொச்சையிலேயே பேசுவாள்; தன்னைப் பட்டணவாசி என்பதைவிடப் பட்டிக்காட்டுப் பெண்ணாகவே கருதிக்கொண்ட அம்மா நாகரிக மொழியில் பேசும்போதும் அவ்வப்போது கிராமாந்தரத்து இழுவல் பிராசம் வந்துவிடும். அதைக் கேட்க வெகு அழகாக இருக்கும். செயற்கைப் பெருமைக்கு நடுவே ஓர் இயற்கை எளிமை தோன்றினால் அதற்கு ஒரு தனி அழகு உண்டுதானே? கொச்சையும், இழுவலும் இடையிலே வந்துவிடுகிறபோது, "நான் பட்டிக்காடு தானே?" என்று சிரித்துச் சொல்வாள்.

அம்மா நிறையப் பழமொழிகள் விரவப் பேசுவாள்; "வசனம் சொல்லுவா" என்று சொல்லிக்கொண்டு மூதுரைகளை வீசுவாள்.

உபமான உபமேய நயங்கள் சொட்டும் உபதேசங்களை அம்மாவிடம் அதிகம் காண முடியாது. எளிமையாகவே பெரிய விஷயங்களைச் சொல்லுவாள்;

எப்போதேனும் அவள் உவமை சொல்லி உபதேசித்தால் அது உவமையிலா அழகோடிருக்கும். அவளை அடுத்துவந்த பின்னும், 'தாம் சாதனமார்க்கத்தில் முன்னேறி வருகிறோமா, இல்லையா?' என்று அறியாமல் குழம்பியவர்களுக்கு அவள் கூறிய உபதேசம் ஒன்றே உதாரணத்துக்குப் போதும்; "ஒருத்தன் தூங்கிண்டு இருக்கும்போது அவனை வேறே இடத்துக்குத் தூக்கிண்டு போனால், அப்படி எடுத்துண்டு போகிறபோதோ, அல்லது புது இடத்திலே முழிச்சுண்ட உடனேயோ அவனுக்கு இடம் மாறி இருக்கிறது தெரியுமோ?" என்று நயம்படக் கேட்டாளே!

தன்னைவிட வயதிலும் ஸ்தானத்திலும் மிகவும் கீழ்நிலையில் உள்ளோரிடமும் அம்மா உத்தரவு போடும் பாணியில் பேச மாட்டாள். அவர்கள் செய்வதற்கு மாறாக அம்மா விரும்பினாலும், "இதை இப்படிச் செஞ்சாத் தேவலையோன்னு தோணறது. நீயும் யோசிச்சுப் பார்" என்பாள். ஆனால் அபூர்வமாக எழுச்சிகொள்ளும் சமயங்களில், "நான் சொல்றேன்; இப்படிச் செய்" என்று அடித்துச் சொல்வாள்; 'ஸர்வாநுல்லங்க்ய சாஸனா' (எவராலும் மீறவொண்ணாக் கட்டளை இடுபவள்) என்று லலிதா தேவியைச் சொல்வது அப்போது அம்மாவுக்குப் பொருந்தும்.

அம்மாவின் நடையழகு அலாதியானது. பரமஹம்ஸினியாகிய அவள் ஹம்ஸ கதியில் பெண்மையின் மென்மை

பொருந்த நடந்து வருவாள்: நடத்தை அழகே நடை அழகாகப் பிரதிபலித்தது எனலாம்!

கண்ணை உறுத்தும்படியாக ஒரம்சமும் இல்லாதவள் அம்மா: எல்லாவற்றோடும் அன்பில் இழைந்தாலும், ஏதோ ஓர் ஒதுக்கமும் அவளது உடம்போடு பின்னி வைத்திருந்தது. மரத்தில் குயில் எங்கே இருக்கிறது என்று தெரியாவிடினும் அதன் குரல் நாற்புறமும் ஒலிப்பதுபோல், அம்மா எத்தனைதான் ஒதுங்கி, அடங்கி வாழ்ந்தாலும் அவளது அன்பு எங்கெங்கும் இன்னொலி பரப்பியது.

அன்னபூரணியான அன்னை என்ன உண்டாள்? பகலில் அன்னமும், இரவில் லுசி முதலிய அப்ப வகைகளும் உட்கொண்டாள். பயற்றங் கீரை, முள்ளங்கிக் கீரை (வங்கத்தில் ஆசாரக்காரரும் முள்ளங்கி சேர்ப்பர்) இவற்றை விரும்பிச் சாப்பிடுவாள்; கத்திரிக்காயும் உருளைக்கிழங்கும் சேர்த்து எண்ணெய்க் கறிசெய்து, அதில் காரம் தடவிய மொச்சை வறுவலும் சேர்த்தால் ருசித்து உண்பாள். ரசிகைதான்! வறு பயறுகளை டாகுருக்கு நிவேதித்து அடியாருக்குக் கொடுத்து, தானும் கொறிப்பது அம்மாவின் வழக்கம்; பொட்டுக்கடலை உருண்டையில் அவளுக்கு ஒரு பிரீதி. வங்கத்தின் சிறப்புப் பட்சணங்களாகப் பாலாடை சேர்த்துச் செய்கிற பலவித ஸந்தேஷ்களில் ராதாபி, ரஸபுலி இவற்றை அம்மா விரும்பி உண்பாள். முதுமை வந்தபின் அம்மா தினமும் காலையில் சிறிது ஜீரா அருந்தி வந்தாள். பித்த சரீரக்காரியாதலால் அவளுக்குப் புளிப்புப் பழங்களில் பிடித்தம் உண்டு. வாதரோகம் காரணமாக அவள் தயிர் சேர்த்துக்கொள்வதில்லை. வைத்தியர் விதித்தபடி இரண்டு வேளை பால் அருந்துவாள். கால்படி பால் எடுத்து அதில் பாதியைக் குடிப்பாள். மீதிப் பாதியில் அன்னமும் சர்க்கரையும் கலந்து தன் பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்குவாள்.

பகலில் சுமார் ஒரு மணிக்கு அன்னம் கொள்ளும் தேவி, இரவு எட்டு மணிக்குப் பின் இரண்டு அல்லது மூன்று அப்பங்களும் காய்கறிகளும் உண்பாள்.

அம்மாவை மகாசந்நியாசினி என்றால் அவள் இப்படி ருசி பார்த்து உண்டது எப்படிப் பொருந்தும் என்று தோன்றலாம். அம்மா உலகை மாயையாகத் தள்ளிய சந்நியாசினி அல்ல. உலகும் பிரம்மம் என ஏற்றுக்கொண்ட குடும்பினி. உலகைப் பிரம்மமாகக் காண்பவர்களை அதன் மாயை தீண்டவே தீண்டாது. எனவே அவர்கள் உலகை வெறுத்தோ,

பயந்தோ அதைத் துறக்க வேண்டிய அவசியம் ஏற்படாமற் போகிறது. அவர்கள் உலகத்தில்-பிரம்ம ஸ்வரூபமான உலகத்தில்; மாயா பாசங்களால் கட்டிப் போடும் உலகத்தில் அல்ல - நன்கு பொருந்தி இருக்கிருள்: உலக மாயைக்குப் பயந்து அதனைத் துறப்பது முதல் நிலைதான். உலகைத் துறந்து, ஞானத்தால் தன்னிலோ அல்லது பக்தியால் பரமனிடமோ ; முதலில் நன்கு பொருந்தி சந்நியாசியாகிறவன், பிறகு தானேதான் இந்த உலகு, பரமனேதான் இந்தப் பிரபஞ்சம் என உணர்ந்து, அதனிடமும் நன்கு பொருந்திவிடுகிருன். ஸந்நியாசம் இப்போதே முழுமை பெறுகிறது. ஆத்மஸத்தியத்திலே ஸதாகால ஸமாதி பெற்ற ரமணரும் இப்படி உலக ருசிகளை அறிந்ததுண்டுதான். அறிந்தனரே அன்றி அவற்றுக்காகத் தவிப்பவரல்ல ஆன்மஞானியர். ஒன்றை ரஸித்தனர் என்றதால் அந்த ரஸனையில் அவர்கள் வேட்கை கொண்டிருந்தனர் என்றெண்ணுவது அபத்தமாகும். அம்மா இப்படிப்பட்ட பூரண ஞான சந்நியாசினியே என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அனைத்துமான கண்ணன் அழகு வஸ்துக்களில் தன் விபூதி விசேஷமாகப் பிரகாசிப்பதாகச் சொன்னுன் அன்றே? அந்த அழகுகளில் நல்ல கானத்தை, கலைப் பொருள்களை, காய்கனிகளை, உணவுவகைகளை அம்மா விசேஷமாக ரசித்ததில் தவறென்ன? ''தர்மம் மீருத ஆசைகளாகவும் நான் இருக்கிறேன்'' என்று கண்ணன் சொன்னுன். அம்மாவின் 'ஆசைகள்' ஒரு நாளும் தர்மம் மீருதவை. நாம் ஆசை வாய்ப்பட்டுவிட்டால் அப்புறம் அந்த இனத்தில் தர்மம் என்கிற ஒழுங்குக் கட்டுப்பாட்டைக் காப்பாற்றுவது கஷ்டம். அம்மா விஷயம் இப்படி இல்லை. அம்மா ரசித்து ருசித்து உண்டதுபோலவே, உணவைப் பொருட்படுத்தாமலும் இருந்திருக்கிருளே! வியாதிக்காலத்தில் அவளுக்கு விருப்பமானதும், வைத்தியர்கள் அத்தியாவசியம் என விதித்ததுமான அன்னுசி, மாதுளை முதலியன அபூர்வமாகக் கிடைக்கும் பருவத்தில் அடியார்கள் பிரம்மப் பிரயத்தனம் செய்து இவற்றை வாங்கி வருவார்கள். அம்மாவோ இந்தக் கனி வர்க்கங்களைத் தன்னைக் காணவரும் அடியாருக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டு, ஒட்ட ஒட்டக் கிடப்பாள். அம்மா ருசித்து உண்டதைக் கவனிப்பவர்கள், அவளுக்குத் தியாகத்தில் இருந்த அதி ருசியையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

''நீ உணவு உட்கொள்; ஆனல் உன்னை உணவு உட்கொள்ள விடாதே'' என்பார் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா. அம்மா ஒருபோதும் நாவுக்கு அடிமையாகாதவள். ஒரு குழந்தை

பொம்மைகளை ரசிப்பதுபோல் அவள் சில வியஞ்சனங்களை மகிழ்ந்து உண்டாள். அதனால் அவள் நம்மைப்போல் ஆகிவிட மாட்டாள்!

* * *

"உலகை உற்பாதத்திலிருந்து உத்தாரணம் செய்யவே உற்பவிக்கும் அவதாரங்களும் இந்த உலகையே நிலைக்களனாகக் கொண்டு செயல்பட வேண்டியிருக்கிறது. தங்களுடைய முக்கியமான அவதார நோக்கத்துக்கு அநுசரணையாக உள்ள வரையில் அவதாரங்களும் உலகைச் சேர்ந்தவர்களாகவே தம்மைக் காட்டிக்கொண்டு, உலகின் சம்பிரதாயங்களை மதித்துக் காப்பாற்றுவர். மனித மூளைக்கும் மனத்துக்கும் எட்டாத நிலையிலேயே அவதாரங்கள் செயற்பட்டால், மக்கள் இவர்களிடமிருந்து எதையுமே புரிந்துகொண்டு கிரகித்துக்கொள்ள முடியாதல்லவா? அவதாரங்கள் மானுட இயலில் இயங்காவிடில், அவ்விதம் அந்த நிலையில் உள்ளவர்களைப் பின்பற்ற முடியாமல் மக்கள் நிராதரவான நிலையில் இருப்பார்கள். அதனால்தான் அவதார புருஷர்களும் மக்களைப் போல வாழ்கிறார்கள்! மக்கள் அநுஷ்டிக்கவேண்டிய கிரமங்களைத் தாங்களே அவர்களுக்கு எடுத்துக்காட்டாகச் செய்கிறார்கள். இப்போது தான் மக்களை தர்மத்தில் ஈடுபடுத்தி, அவதார காரியமான தர்மோத்தரணத்தை எளிதாகச் செய்ய முடிகிறது" என்று ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா கூறுவார். குழந்தைக்கு நடக்கக் கற்றுத் தருவதற்காகப் பெற்றோர் நடைவண்டியைப் பிடித்துக் கொண்டு நடப்பது போலவும், இளம்பிள்ளைக்குப் போதிப்பதற்காக ஆசிரியர் ஆனா ஆவன்னா என்று எழுத்துக் கூட்டிப் படிப்பது போலவும், மக்களுக்கு தார்மிக வாழ்முறையைக் கற்றுக் கொடுப்பதற்காக அவதார வியக்திகளும் உலக தர்மங்களை அநுஷ்டித்து காட்டுவார்கள் என்பார் ஸ்ரீபாபா.

அம்மாவின் வாழ்க்கை இதற்குப் பரம அற்புதமான விளக்கமாகும். லௌகிக தர்மங்களை அநுஷ்டிப்பதை ஓர் அம்சமாக மட்டும் கொண்ட அவதாரங்கள் பல உண்டு. ஆனால் ஸ்ரீராமசந்திர மூர்த்தியும், ஸ்ரீசாரதாமணி தேவியும் உலகியல் அறங்களைப் பின்பற்றுவதையே பரிபூரண நோக்கமாகக் கொண்டிருந்த அவதாரங்கள். லோக தர்மங்களை வழுவற அநுஷ்டிப்பதாலேயே ஒரு ஜீவன் சித்தசுத்தி பெற்று, லௌகிகத்தைத் துறந்து பரிபூரண ஆன்மிகத்தில் ஈடுபடமுடியும் என்பது ஆதி சங்கரரும் வகுத்துத்தந்த வழியாகும். ஸ்ரீராமனது ஜீவிதத்

த்தையும், நம் அம்மாவின் வாழ்க்கையையும் பார்க்கும்போதோ, லோக தர்மங்களை வழுவறப் பின்பற்றுவதால், ஜீவனுக்கு இந்த லோகமே பிரம்மமயமாகி, அவன் உலகைத் துறக்கவே அவசியம் இல்லாமற் போகும் என்று தோன்றுகிறது. பிரபஞ்சத்திலே அழகும் தூய்மையும் நிறைந்து விளங்கும் மாபெரும் மலைகளும் சின்னஞ்சிறு மலர்களும் மோட்சம் என்று எதையோ தேடிப் போகவேண்டியதில்லையே! தன் தர்மத்தைச் செய்துகொண்டு அழகாக ஆனந்தமாக இருக்க அறிந்துவிட்டால் மனிதனும் மோட்சம் என்று தனியாக எதையோ ஏன் நாட வேண்டும்? வேத காலத்தவர் இப்படித்தான் உலகியலிலேயே மோட்ச சுகம் கண்டனர். ஆனால் மலைக்கும் மலருக்கும் இல்லாத பெரிய பிரதிகூலம் அந்த ஸத்ய யுகத்துக்குப் பிற்பட்ட மானுடனுக்குமட்டும் உள்ளது. அவற்றுக்கு இல்லாத மனோவேகம் இவனைத் தன் தர்மத்திலிருந்து அகற்றி, காமக்குரோதங்களில் கொண்டு தள்ளுகிறது. விளைவாக, அழகும் ஆனந்தமும் தொலைந்து போகின்றன. காமக்குரோதங்களிலிருந்து விடுபட வேண்டும் என்பதால் ஒருவழியாக மனித வாழ்விலிருந்தே விடுபட்டு மோட்சம் என்று எதையோ பெறவேண்டும் எனத் தவிக்கிறான்! இவனுக்கு ஆறுதல், ஆதரிச நிலையைத் தெரிவிப்பதாகக் காமக்குரோதம் பாழ்படுத்தாத தூய வாழ்வை வாழ்ந்து காட்டுகிறாள் சாரதை. அவள், 'உலக வாழ்விலிருந்து எப்போது தப்புவேன்? என்று மோட்சம் பெறுவேன்?' என்றெல்லாம் அந்திம தசையிலும்கூடப் புலம்பவில்லை. 'நாம் ஒழுங்காக வாழ்ந்துவிட்டால் போதும்; அதுவே நிம்மதி. அதன் பின் இதேபோல் மேலும் பலகாலம் வாழ்வதோ, அல்லது சம்ஸாரச் சக்கரத்திலிருந்து விடுபட்டு மூலத்தில் ஒன்றுவதோ அந்த மூல சக்தியின் திருவுளப்படி நடக்கட்டுமே!' என்பது போல அறுபதாண்டுகளுக்குமேல் வாழ்ந்தாள். இந்த வாழ்க்கையில் வெளிச் சூழல் படுத்திய பாடு அனந்தம். ஆயினும் அதனால் அவள் அதிகம் பாதிக்கப்படவில்லை. ஒரேயடியாக பாதிக்கப்படாமலிருந்தால், உலக மக்களுக்கு, 'இது தங்கள் இனம்; இதன் வழியை நாம் அநுசரிக்க வேண்டும்' என்ற எண்ணமே ஏற்படாதல்லவா? அதனால்தான் போலும், ஸ்ரீராமனைப் போல சாரதையும் அவ்வப்போது சற்றே நிலை குலைந்த மாதிரி இருப்பாள். எளிதிலே நிலை மீண்டும் கூடிவிடும். இப்படி நிலை கூடியிருப்பதற்குத்தான் தர்மம் என்று பெயர்.

* * *

மனித தர்மத்துக்கு விரிவுரை அம்மாவின் வாழ்க்கை. குறிப்பாகப் பெண்ணறத்துக்குப் பொன்னான முன்னுதாரணம்.

ஸ்ரீசாரதாதேவி சரிதைக்கு 'ஸ்திரீ தர்ம உபநிஷதம்' என்றே பெயர் தந்தாலும் பொருந்தும்.

ஆசாபாசங்கள் மனத்தில் ஆழப் புகுந்துவிடாமல் பெண்கள் அழகாக இல்லறம் நடத்துவராயின், அதுவே அவர்களுக்கும் இன்பம், உலகுக்கும் பேரின்பம் என்று விளக்கி வைத்தாள். "பெண்களே! எவரிடமும் அதிகப் பாசம் வைக்காதீர்கள்! வீட்டில் நடக்கும் கொண்டாட்டங்களில்கூட மிதமிஞ்சி மனத்தை ஈடுபடுத்தாதீர்கள். ஏகாந்தத்தைப் பயிலவேண்டும் என்பதை மறவாதிருங்கள். பிறர் விவகாரங்களை அறிவதில் ஆர்வம் கொள்ளாதீர்கள். பிரார்த்தனை, தியான நேரத்தைச் சிறுகச் சிறுக அதிகரித்து வாருங்கள். பகவான் ஒருவனிடமே பாசம் வையுங்கள்'' என்று உபதேசித்தாள். குடும்பத்தில் இருந்துகொண்டே இப்படிப் பற்றின்றி வாழ முடியுமா என்று ஐயப்பட்டவர்களுக்கு, "உலக ஆசைகள் மனத்தை மேகமூட்டமாகக் கவ்வும் என்பது உண்மை. ஆனால் மேகத்தை அடித்து விரட்டுகிற காற்று ஒன்று இருக்கிறது. பகவந் நாமமே அந்தக் காற்று'' என்றாள். "இதய ஆழத்தில் எப்போதும் பகவந் நாமத்தை ஜபித்துக்கொண்டே இரு. குருநாதனிடம் இதய பூர்வமாக அடைக்கலம் புகு. உய்வு பெறுவது திண்ணம். 'வெளி விவகாரங்களால் என் மனம் எந்த அளவு பாதிக்கப்படுகிறது? ஆத்மிகத்தில் எவ்வளவு முன்னேறியிருக்கிறேன்?' என்றெல்லாம் ஓயாமல் கணக்குப் போட்டுக்கொண்டு கஷ்டப்படாதே. தன் முன்னேற்றத்தை சதா எடை போட்டுக் கொள்வதும் ஒருவித அகங்காரம்தான். குருவிடமும், இஷ்ட தேவதையிடமும் அசையா நம்பிக்கையுடன் நாம ஜபம் செய்துவந்தால், லட்சியம் தன்னால் கைகூடும்'' என்று நம்பிக்கை தந்தாள். பகவான் எங்கோ வெளியே இருக்கிறான் என்றால்தான் அவனது கிருபையை அடைவதில் ஐயம் கொள்ளவேண்டும். "அவன் உள்ளேயே இருக்கிறான். கிருபை எப்போதும் உள்ளூற இருப்பதேயாகும். ஆயினும் பூவுக்கு உள்ள மணத்தை நாம் மூக்கில் வைத்து இழுக்கும்போதே நன்றாக உணர முடிவது போல், 'பகவத் கிருபை இருக்கிறது' என்பதைச் சித்தத்தில் மறவாமல் வைத்து நமக்குள்ளேயே இழுத்துக்கொண்டால் நன்கு அநுபவிக்கலாம். சந்தனத்தின் உள்ளே இருக்கும் மணத்தை இழைப்பதன்மூலம் அறிவதே போல, நம் உள் இருக்கும் கிருபையை ஸ்மரணையால் இழைத்துக்கொள்ள வேண்டும்'' என்றாள். இவ்விதம் உள்ளுக்குள் கிருபா சுகந்தத்தை உணர முடிந்துவிட்டால் வெளிச் சூழலைப்பற்றி என்ன

கவலை? தாராளமாகக் குடும்பத்தில் இருந்துகொண்டே தெய்விக வாழ்வு நடத்த முடியும் அன்றோ?

பகவத் ஸ்மரணையைக் குலைப்பதற்குக் குடும்பச் சூழலில் பல இடையூறுகள் உண்டானபடிதான் இருக்கும். இதற்கு ஒரே மருந்து பொறுமைதான்; பகவானிடம் முதலில் அந்தப் பொறுமையைத்தான் பிரார்த்திக்க வேண்டும். சகிப்பு என்ற சாதனையில் சித்தி பெற்றுவிட்டால், அதன்பின் பெண் ஜன்மம் தெய்விகமயமே என்பதை அம்மா அறுபது நீண்ட ஆண்டுகளுக்கும் அதிகமாக வாழ்ந்து காட்டினுள்.

மனம் ஆடாமலிருப்பதே சகிப்புத் தன்மையின் ஸித்தி நிலை. ஜீவன்முக்த நிலையும் இதுதானே? இந்நிலையிலேயே சுமார் எழுபதாண்டு வாழ்ந்த அம்மா....கடைசியில்....?

அடடா, அந்த கட்டத்துக்கும் நாம் வந்துதான் ஆக வேண்டும். காலையில் கசப்பு மருந்துக்குப் பயந்து பொய் யுறக்கம் செய்யும் குழந்தைபோல், இந்த கட்டத்துக்கு வர வேண்டாம் என்றே பலப்பல வளைத்துப் பேசினுலும் அம்மாவின் புண்ணிய சரிதையின் மையமான இந்த மகா பரிதாப சம்பவத்தையும் கூறத்தான் வேண்டும். 'காமன் புகாத கோட்டையாகிய துர்வாசர் இதயத்திலும் நான் புகுந்தேனுக்கும்!' என்று பெருமையடித்துக்கொண்ட குரோதன், காமம் தீண்டாத நம் கன்னியம்மையின் நெஞ்சிலும் புகுந்து அவளை வஞ்சினம் கொள்ளவைத்த வஞ்சனையை நாம் பார்த்துத்தான் ஆக வேண்டும். தேவாமுதமே க்ஷணகாலம் ஆலகாலமாக மாறிய கொடுமையை நாம் வர்ணிக்கத்தான் வேண்டும். சுற்றத்தார் அம்மாவைப் படுத்தி வைத்த பாடெல்லாம் கொதிகலனுகப் பொங்க, அப்போது அன்புப் பனிமலையாம் அம்மாவுமே கொதித்துப் பொங்கிவிட்ட துர்பாக்கிய சம்பவத்துக்கு வருவோம்!

51. சோதனையின் சிகரம்

சினம் கொள்வார் தம்மைத் தாமே தீயாற் சுட்டுச்
செத்திடுவார் ஒப்பாவார்....
சினம் பிறர்மேல் தாம் கொண்டு கவலையாகச்
செய்த(து) எண்ணித் துயர்க்கடலில் வீழ்ந்துசாவார்.
மாகாளி பராசக்தி துணையே வேண்டும்.

—பாரதியார் : சுயசரிதை

சினத்தின் வாய்ப்படாமலிருப்பதற்கு மாகாளி பராசக்தியின் துணையை வேண்டினார் கவி. சினத்தின் சின்னமான அந்த மாகாளியின் மாதுர்ய வடிவாகவே கருதப்பட்ட அம்மா தன் வயமிழந்து சினம் கொண்டதையும், பிறகு தன்னைத் தானே தீயால் சுட்டுக்கொண்டாற்போல் அதற்காக வெந்து நொந்ததையும் என்னென்பது?

ராது கருவுற்ற நாளாக அம்மாவின் பொறுமையை மிகமிகச் சோதிக்கலானாள். தனக்கு உயிராபத்தான வியாதி வந்துவிட்டதெனக் கற்பனை செய்துகொண்டு அவள் தன்னை வருத்திக்கொண்டதோடு, முரட்டுப் பிடிவாதத்தின் எல்லைக்கே சென்று சாரதையையும் வறுத்தெடுத்தாள்.

நளினியும் மாகுவும் அம்மாவிடம் அபாண்டமாகச் சண்டையிட்டுச் சென்றது நினைவிருக்கும். அப்போது நளினி சொன்னதிலும் ஓர் அம்சத்தை அம்மா எடுத்துக்கொண்டாள்: ராது வெறுமே மாய்மாலம் செய்கிறாள் என்றும், அதை மெய்யாக நம்பி ராஜவைத்தியம் செய்வதை நிறுத்திவிட்டு, திரோல் என்ற ஊரிலுள்ள 'வெறிகாளி'க்கு வேண்டிக்கொண்டால் அவளுடைய சில்லறைக் கோளாறு தீர்ந்துவிடும் என்றும் நளினி சொல்லியிருந்தாள். முன்பு ஸுரபாலாவின் சண்டித்தனம் மிதமிஞ்சிப் போயிருந்த ஒரு சமயத்தில் அம்மா இந்த 'வெறிகாளி'க்கே வேண்டிக்கொண்டு, காளிக்கு வளை சார்த்தி, பின் அந்த வளைகளை ஸுரபாலாவுக்கு அணிவித்தாள். சண்டித்தனமும் சற்றே கட்டுப்பட்டது. இப்போதும் அம்மா அதே போல் வெறிகாளியின் வளையல்களை ராதுவுக்கு அணிவித்தாள். ஆனால் காளியின் சக்தியும் ராதுவிடம் சாயவில்லை!

போதாக்குறைக்கு ஸுரபாலா அம்மாவைத் தொணப்பி எடுத்தாள். "கல்கத்தாவிலிருந்த என் பெண்ணை இந்தக்

கோயால்பாராக் காட்டுக்குக் கொலை பண்ணணும்னே அழைச்சுண்டு வந்திருக்கே! இங்கே வைத்திய வசதி இல்லை. வெய்யிலோ பொசுக்கறது. ராது செத்துத்தான் போகப் போறு. நீ அவளோட பணத்தை எல்லாம் அமுக்கிட்டு ஹாய்யா இருக்கப் போறே'' என்று சாரதையைச் சாடினுள் பிச்சிமாமி.

காட்டுப் பகுதிதான் குளிர்ச்சியாக இருக்கும் என்றும், ராதுவின் இஷ்டத்தின் மீதே கோயால்பாராவுக்கு வந்திருப்பதாகவும் அம்மா எத்தனைதான் சொல்லியும் ஸுரபாலா கேட்டபாடாக இல்லை.

''இப்போ ராது இருக்கிற ஸ்திதியிலே நிச்சயமாகக் கல்கத்தா பிரயாணம் வைச்சுக்க முடியாது'' என்ருள் அம்மா.

''அப்படியானுல், இங்கேயே அவளுக்கு நிறைய ஐஸாவது வைச்சால்தான் ஆச்சு'' என்று ஆரம்பித்துவிட்டாள் ஸுரபாலா.

துளைப்புத் தாங்காமல் அம்மா ஐஸ் வாங்கி ராதுவின் தலையில் வைத்தாள்.

அப்போது காளிகுமார் அங்கு வந்து சேர்ந்தார். ''அக்கா! அந்தப் பைத்தியம்தான் சொல்லித்துன்னு, நீ ஒரு கர்ப்பிணிக்கு ஐஸ் வைக்கலாமோ? சீதள ஜன்னியே பிறந்துடுமே'' என்ருர் காளி.

''கேளே! இவா என்னைப் பிய்ச்சு எடுக்கிறதிலே என் புத்தியே மழுங்கிப் போச்சுப்பா. நீதான் சொல்லு, என்ன பண்ணலாம்னு'' என்று அழமாட்டாக் குறையாகக் கேட்டாள் அம்மா.

''அக்கா, இந்தப் பொண்ணுக்கு உடல் கோளாறு ஒண்ணுமில்லை. ஷரத் கல்கத்தா டாக்டர்களிடமெல்லாம் இவளைக் காட்டியிருக்கார். அவா ஒண்ணும் கெடுதலாகச் சொல்லலை. இவளுக்கு சொல்ப சித்தப் பிரமையோ, தெய்வக்குற்றமோதான் இருக்கு. சுஷ்ணிகேடேயிலே ஒரு சண்டாள மாந்திரீகன் இருக்கான். ரொம்ப சக்தி வாய்ஞ்சவனும். அவனை அழைச்சுக் காட்டலாம்'' என்று யோசனை சொன்னுர் காளி.

'எத்தைத் தின்னுல் பித்தம் தெளியும்' என்று தவித்துக் கொண்டிருந்த தேவி அந்த மந்திரவாதியை வரவழைத்தாள். சகல மந்திர ஸ்வரூபிணியாக அடியார் பலரது கொடுவினைகளை மந்திர உபதேசத்தால் தீர்த்தவள் இவளே! மகாமாயையின் லீலை இப்போது இப்படிச் செய்தது!

சண்டாள் வந்தான். 'ஹ்ராம், ஹ்ரூம்' என்று ஏக முழக்கம் செய்தான். பேய்களின் நீண்ட பட்டியலைப் பாடி,

அவை அனைத்தும் ராதுவைப் பிடித்திருப்பதாகச் சொன்னான்: "நாலு மூட்டை எள்ளை நாட்டுச் செக்கில் ஆடி எண்ணெய் பிளியுங்க. அதிலே செம்மீன் எண்ணெய் பதினைஞ்சு படியும், செம்மீன் ஈரல் பதினைஞ்சு வீசையும் சேர்த்துக் கொதிக்க வையுங்க.." என்று அவன் படையலுக்கும் மருந்துக்கும் சரக்குகள் சொல்லத் தொடங்கியபோதே அம்மாவுக்குத் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. அவனே மயானம் உள்படப் பல இடங்களிலிருந்து பல பொருள்களைக் கொண்டு வரச் சொன்னான். அவற்றை மேலே சொன்ன கலவையோடு சேர்த்து ராதுவின் உடல் முழுதும் பூசிவர வேண்டும் என்றான். தான் தருகிற தாயத்தையும் அவளுக்கு அணிவிக்க வேண்டும் என்றான்.

ஏற்க முடியாத வைத்தியம்! மறுத்தாலோ புதிதாக பில்லி சூனியம் வைத்தாலும் வைத்துவிடுவான்! ராதுவைப் பேய் பிடித்ததோ இல்லையோ, அம்மாவை மந்திரவாதி பிடித்தான், பிடித்தான்! இக்கட்டான நிலையில் அம்மா மிகுந்த புத்திசாலித் தனம் காட்டினாள்.

மந்திரவாதியிடம் அம்மா கைகுவித்துச் சொன்னாள்: "உங்களோட மந்திர சக்தியைப் பெரிசா மதிக்கிறேன். நீங்க சொல்கிற கிராமதேவதை, குட்டிச்சாத்தான் எல்லாத்துக்கும் நமஸ்காரம் பண்ணறேன். ஆனாலும் இப்போ என் நிலைமையிலே நீங்க சொன்ன பரிகாரங்களைப் பண்ணறத்துக்கு வசதியில்லை. அப்படியே பண்ணினாலும்கூட, எங்களோட மாபாவத்திலே காத்தவராயன் கிருபை பண்ணுவானான்னு சந்தேகமாத்தான் இருக்கு. கடவுள் சித்தப்படி ஆகட்டும்னு விட்டுடறதுதான் தேவலை. இந்தப் பெண்ணின் தலையெழுத்துப்படி ஆகட்டும்: உங்களை மெனக்கெடுத்தினதுக்கு வருத்தப்படறேன்" என்று தழைந்து பேசி, அவனைத் திருப்பி அனுப்பினாள்.

ஸுரபாலாவின் வாயை மூடுவதற்காகச் சண்டன் என்ற க்ஷுத்ர தேவதைக்கு நேர்த்திக் கடன் செய்தாள்.

சண்டனுக்கும் அடங்காத சண்டித்தனம் செய்தாள் ராது.

"கல்கத்தாவிலிருந்து பெரிய டாக்டரை வரவழைக்கலாமா?" என்று யாரோ கேட்டார்கள்.

சலிப்புற்ற அம்மா ஜன்மத்தில் முதன் முறையாக எரிச்சலுடன் சொன்னாள்: "நாயும் நரியும் சௌகரியமாக் குட்டி போடலை? அந்த மாதிரி ஈசுவர கடாக்ஷத்திலே நடந்தா நடக்கட்டும்..."

ராதுவுக்குப் பேற்றுக் கால அறிகுறிகள் ஏற்பட்டன: அப்படியே மூர்ச்சித்துப் போனாள். கல்கத்தாவிலிருந்து டாக்டர் வைகுந்தர் வந்தார். அம்மா டாகுரே கதி என்று குலை நடுங்கி உட்கார்ந்துவிட்டாள். டாகுரும் அப்போதைக்குக் கைகொடுத்தார். ராதுவுக்கு சுகப்பிரசவமாயிற்று. ஆண் குழந்தை பிறந்தது: கோயால்பாரா காட்டிலே பிறந்த அந்தக் குழந்தைக்கு பன பிஹாரி (வன விஹாரி) என்று அம்மா பெயரிட்டாள். 'பனு' என்று சுருக்கி அதைக் கொஞ்சினாள்.

பிரசவமான பின் ராது சவம்போல் ஆனாள். முன்னிலும் துர்ப்பலமானாள். தன்னால் ஆடையும் அணிய முடியவில்லை என்று சொல்லிக்கொண்டு, பிறந்த குழந்தை போலவே அவளும் கிடந்தாள். அந்த அதிசயமான பெண்ணுக்கு இப்போது மேலும் அதிசயமான ஒரு பரிணமம் ஏற்பட்டது. அதாவது, வன்புலிக்கும் வெந்நாகத்துக்கும்கூடத் தாங்கள் ஈன்ற குட்டிகளிடம் வாத்ஸல்யம் இருக்கையில், அனைவருக்கும் அம்மாவான சாக்ஷாத் சாரதையின் ஸ்வீகாரப் பெண்ணான இந்த ராதுவுக்குத் தாய்ப்பாசம் என்பதே இல்லை, ஆதியில் தம்பி அபயனை எடுத்து வளர்த்து, மத்தியில் அவன் மகள் ராதுவை எடுத்து வளர்த்த அம்மா, இப்போது முடிவில் அவள் மகன் பனுவையும் தானே வளர்த்தாள். அம்மாவை விதவிதமாகச் சோதித்து, ஒவ்வொன்றிலும் அவளது வெற்றியைப் பிரகடனம் செய்யவே ராதுவும், இதர 'உறவினர்'களும் நூதன குணாதிசயங்களைக் காட்டுமாறு பராசக்தி பொம்மலாட்டம் ஆடினாள் போலும்!

* * *

ராது எத்தனையோ மரியாதைக் குறைவாகப் பேசியதையெல்லாம் பொறுத்து வந்த அம்மா, இன்று அவள் ஒரு வார்த்தையைச் சொன்னவுடன் பொறுக்கமுடியாமல் தவித்தாள். 'அபின்' என்பதுதான் அந்த வார்த்தை. ராது தனக்கு அபின் வாங்கித் தருமாறு அம்மாவைக் கேட்டாள். தூய அன்னையிடம் வளர்ந்த அந்தப் பெண்ணுக்கு எப்படியோ இந்தத் தீய பழக்கம் சில நாட்களாகவே ஏற்பட்டிருக்கிறது; இன்று கறிகாய் நறுக்கிக்கொண்டிருந்த அம்மாவிடமே தவழ்ந்து வந்து (தனக்கு நடக்கச் சக்தி இல்லை என்று அவளுக்கு ஒரு கற்பனை!) அபின் வாங்கித் தருமாறு நச்சரித்தாள்.

'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்வாரைப் பொறுத்து' வந்த அம்மாவுக்கு இப்போது ராது தன்னைத்தானே இழிவுபடுத்திக் கொள்வதைப் பொறுக்க முடியவில்லை. அந்த பூமிதேவியும் பொங்கிவிட்டாள். "போறு

மடியம்மா! உன்னோடு எனக்குப் போறும்! இன்னும் எத்தனை நாள் இப்படியே பண்ணிண்டிருக்கப் போறே? எழுந்திரு, சுரு சுருன்னு ஓடியாடி வேலை பண்ணு; உனக்காக நான், என் மற்ற குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய கடமையைத் தொலைச்சதும், என் பூஜை புரஸ்காராதிகளைத் தொலைச்சதும் போறும்; சகல தினுசுலேயும் இனியும் பக்கிரியாக என்னாலே முடியாது'' என்று சொல்லிக்கொண்டு காய்கறி நறுக்கிக்கொண்டே இருந்தாள் அம்மா.

டாகுர் தமது ஸகல அநுபூதிகளையும் விவேகாநந்தருக்குத் தந்துவிட்டு, ''பக்கிரியானேன்'' என்று நிறைந்து மகிழ்ந்தார்; ஆத்மிகத்தில் அணுமாத்திரத்தையும் வாங்கிக்கொள்ளத் தெரியாத ராது முதலியவர்களுக்காக உடல், பொருள் ஆவியால் பக்கிரியான தேவியோ வெதும்பினுள். ராமனைவிட ஸீதை உற்ற துயரம்தானே பெரிது? புது அவதாரத்திலும் அப்படியே!

சேலை கட்டிக்கொள்வதற்கும் நடப்பதற்கும்கூடத் தனக்குச் சக்தி இல்லை என்று கருதிய ராது அப்போது ஒரு பெரிய பேரிக்காயை எடுத்து ராட்சத பலத்துடன் சுழற்றி, தேவியின் நடுமுதுகில் படுமாறு ஓங்கி எறிந்தாள்; அது குறி தவறாமல் அம்மாவின்மீது திம்மென்று விழுந்தது;

அம்மா சுருண்டு விழுந்தாள். முதுகில் அடிபட்டு வீங்கிச் சிவந்தது. இதயத்தில் அதைவிடப் பெரிய அடி!

முதுகை அழுந்தத் தேய்த்துக்கொண்டே பூஜை அறைக்கு ஓடினுள் தேவி. ராமகிருஷ்ணரின் சித்திரத்துக்கு முன் கை குவித்து, ''என் டாகுர்! ராது அறியாக் குழந்தை. நீங்க இதை அபசாரமா எடுத்துக்கப் படாது!'' என்று கண்ணீர் வழிய மன்ருடினுள்.

தனக்குச் சிறிய தலைவலி வந்தால்கூடப் பொறுக்காத டாகுர், இன்று தன் முதுகு சிவந்தது கண்டு ராதுவிடம் சினந்து விடுவாரோ என்று அம்மாவுக்கு அச்சம், அவரது கோபத்துக்கு மருந்து யார்? அவளேதான் வேதவாக்கின்படி. சிவாதானே ''ருத்ரஸ்ய பேஷஜீ?''

ராதுவை அம்மா வாரி மடியில் போட்டுக்கொண்டு, தன்னுடைய பாததூளியை எடுத்து அவளது தலையில் தேய்த்தாள். ''ராது! இந்தக் கட்டையைப்பற்றி அந்த மகாப் பிரபு ஒரு கடுஞ் சொல் சொன்னதில்லை. நீ இந்த சரீரத்துக்கு எத்தனை வலி உண்டாக்கிவிட்டே? ஆமாம், உன்னைச் சொல்லி என்ன? உனக்கெப்படி என் மதிப்புத் தெரியும்? நானே மனசு

வெச்சு வந்து உங்களுக்கெல்லாம் மத்தியிலே வாழறதாலே என்னை இத்தனை லேசா நினைச்சுட்டேள்! ராது, நான் எதையாவது அபசாரமாக எடுத்துண்டேனே, அப்புறம் மூணு லோகத்திலேயும் உனக்குப் புகல் கிடையாது: மும்மூர்த்திகளும் உன்னைக் காப்பாற்ற முடியாது.''

இப்படிச் சொன்ன தேவி, மீண்டும் கைகுவித்து, ''டாகுர், இவள் பண்ணினதை அபசாரமா நினைக்காதேள். அறியாக் குழந்தை, அறியாக் குழந்தை!'' என்று விம்மினாள்.

ராதுவும் விக்கினாள்.

உடல் வீங்கித் துடித்தபோதும், 'இந்தக் கட்டை!', 'இந்தச் சரீரம்!' என்று அதனிடமிருந்து அம்மா பிரிந்திருந்தே பார்க்கிறாள். தனக்கு இழைத்த தவற்றைத் தான் பொருட்படுத்தாவிடினும், டாகுர் தண்டிப்பார் என்று அஞ்சும் அம்மா அந்த டாகுரும் தானேயல்லவா என்ற உணர்விலும் ஊறியிருக்கிறாள்! மகா கொடிய சம்பவத்திலும் இப்படியொரு மகிமை.

மகாலட்சுமியே ஓர் அடியாரின் குற்றத்தைக் கூறினாலும் திருமால் அதை ஏற்கமாட்டார் என்றார் ஆழ்வார். அம்மாவோ டாகுரிடம், ''ராது செய்த குற்றத்தைப் பொருட்படுத்தாதீர்கள்'' என்று மன்றாடியும் அவரால் ராதுவை மன்னிக்க முடியவில்லை. ராது அவரது அடியார் அல்ல; யோகமாயை அல்லவா? அம்மாவை உலகில் கட்டிப் போடவே வந்தாள் அவள். அம்மா அவளுக்கு அத்தனை ஊழியம் செய்தும் அவள் இப்படி அட்டூழியம் செய்தபின், டாகுர் அம்மாவை அவளிடமிருந்து - அதன்மூலம் உலகிடமிருந்து - விடுவிக்கத் திருஉளம் பற்றிவிட்டார்!

அன்றிலிருந்து அம்மாவின் மனம் ராதுவிடமிருந்து கழலத் தொடங்கிவிட்டது.

ராதுவும் அப்போதைக்கு அழுதாளே தவிர, மீண்டும் தனது சொரூபத்தைக் காட்டத் தொடங்கிவிட்டாள்.

கோயால்பாரா வாசத்தை முடித்து ஜயராம்பாடிக்குக் கிளம்பினார்கள். வண்டியில் போகும்போது, தனக்கு இடைஞ்சலாக அம்மா இடத்தை அடைத்துக்கொண்டு அமர்ந்திருப்பதாகக் குற்றப்பத்திரிகை படித்தாள் ராது. அம்மா வண்டியின் ஓட்டுக்கு வந்து ஒடுங்கி அமர்ந்த பின்னும் அந்த மூடப் பெண் - எழுதவே கை கூசுகிறது - தேவியைக் காலால் உதைத்து, ''வண்டியிலேருந்தே இறங்கித் தொலை!'' என்றாள்.

''வண்டியை விட்டுப் போகிறேன்; சம்ஸார சகடத்தை விட்டும் கழண்டு போகிறேன். ஆனல் அப்புறம் உனக்காகப் பிராயச்சித்தம் செய்கிறது யார்?'' என்றாள் தேவி. அம்மா வுக்கு ராது தவறு இழைத்தால் அதற்கான கழுவாயாக அந்த அம்மாவே தவமிருந்திருக்கிறாள்! இப்படி ஒரு தயை எந்த இதிஹாஸ புராணத்திலாவது கண்டதுண்டா?

* * *

ஜயராம்பாடியில் ஒருநாள் பிச்சிமாமி, மாப்பிள்ளை ஏரியில் விழுந்துவிட்டதாகக் கற்பனை செய்துகொண்டு, தானும் ஏரிக்குள் இறங்கித் தேடினாள். பிறகு ஈரம் சொட்டச் சொட்ட அம்மாவிடம் வந்து, ''பாவி! இன்னிக்கு உன் வயிறு குளிர்ந் ததா? மன்மத்தை ஏரியிலே அமுக்கிக் கொன்னூட்டியே! உன் க்ஷாத்திரம் தீர்ந்ததா?'' என்றாள்.

ராதுவுக்குக் களத்ர தோஷம் உண்டு என்று முன்னரே அம்மா அறிந்திருந்ததால் ஸுரபாலா சொன்னதைக் கேட்ட தும் அம்மாவுக்கு ஸப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. அருகிலிருந்த வர்களை ஏரிக்கரைக்கு ஓடச் சொன்னாள். அதற்குள் யாரோ மன்மதநாத் பக்கத்திலேயேதான் மளிகைக் கடையில் சீட்டா டிக்கொண் டிருக்கிறார் என்று உறுதிப்படுத்தினார்கள்.

அம்மாவுக்கு நிம்மதி பிறந்தது.

ஆனல் பிச்சிமாமிக்குத் தான் 'தோல்வி' அடைந்து விட்டதால் அம்மாவின்மேல் ஆத்திரம் அதிகரித்தது. அம்மா வைப்பற்றியும் அவளது தெய்விகப் பெற்றோரான ராமசந்திர முகர்ஜி, சியாமாசுந்தரிபற்றியும் எழுதக்கூடாத நாராசப் பழிகளை அள்ளி வீசினாள். ராதுவைத் தன்னிடமிருந்து பிரித்து அம்மா அவள்மேல் ஏகாதிபத்தியம் செய்வதாகச் சொல்லம்பு களைத் தொடுத்தாள்.

''ஸுரபாலா! என் அம்மாவைப்பற்றி, என் அப்பாவைப் பற்றி இப்படிப் பேசினல் பொறுக்கமாட்டேன். இருந்தாலும் இதெல்லாம் புத்தி பூர்வமான பேச்சில்லை என்று கோபத்தை அடக்கிண்டு இருக்கேன். உன் பெண்ணை நான் பெட்டியில் வைச்சுப் பூட்டியிருக்கவில்லை. இந்தப் பிருகிருதியையும் ஒரு உருவமாக்க முடியுமான்னு பாடுபட்டேன். அவ்வளவே! நான் மனசு வைச்சேன்னா இப்பவே கர்ப்பூரம் மாதிரி மறைஞ்சு போயிடுவேன். ஆனல் உங்களுக்குச் செய்ய வேண்டியது இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கு'' என்றாள் அம்மா.

''பின்னே ஏண்டி, ராதுவுக்கு அபின் கொடுத்துப் பழக்கப் படுத்தினே? அவ மூளையைக் கெடுத்து, உடம்பைக் கெடுத்து,

உன் கட்டை விரல் கீழேயே அவளை நசுக்கி வைக்கணும்னு தானே?'' என்ருள் பிச்சிமாமி.

இது பைத்தியத்தின் பேச்சாகவா இருக்கிறது? ராது உடல்நலக் குறைவு இருப்பதாக மிகைப்படுத்தியதுபோல், ஸூரபாலாவும் வேண்டுமென்றே தன் புத்திக் கோளாற்றை மிகைப்படுத்திக் காட்டி, பிறர் கண்டனத்திலிருந்து தப்பிக்க முயன்ருளோ என்று தோன்றுகிறது அல்லவா?

கடைசியில் அவள் அம்மாவின் கண்டனத்துக்கே ஆளானதும், அதற்காக அம்மா தன்னையே தண்டித்துக்கொண்டதும்தான் மகா பரிதாபம்!

தன் மகள் ராது, தன்னைப் பொருட்படுத்தாமல் சாரதையிடம் ஒட்டிக்கொண் டிருக்கிருளே என்ற ஆத்திரத்தில் ஸூரபாலா தகாத பழியைச் சுமத்தினுள் திவ்விய மாதாவின் மீது.

அம்மா மிகவும் தெளிவாக, ''சரி ஸூரபாலா! இதோ உன் பெண் கண் எதிரிலேயே படுத்திண்டிருக்கா. நான் உங்களுக்குக் குறுக்கே நிற்கவில்லை. இப்பவே இவளை அழைச்சுண்டு போய்ச் சேரேன்'' என்ருள்.

இப்படி அம்மா தீர்மானமாகச் சொன்னதும் ஸூரபாலாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் சற்றும் எதிர்பாராத பேச்சு அது. திகைத்தாள். பிறகு முன்னிலும் கொதிப்படைந்து, ''எங்களையா போகச் சொல்கிறே? எங்களோட சொத்தையெல்லாம் அமுக்கிட்டு வெளியிலேயும் துரத்தறயா, ராட்சஸி! நீ தொலை இங்கேயிருந்து! ஓடு இந்த வீட்டை விட்டு'' என்று கூச்சலிட்டாள்.

ஸூரபாலா முகம் செந்தணலாயிற்று. அடுக்களைக்குச் சென்ருள். அடுப்பிலிருந்து ஒரு கொள்ளிக்கட்டையை எடுத்துக்கொண்டு அஸுர பலத்துடன் அம்மாவை நோக்கிப் பாய்ந்தாள் ஸூரபாலா.

வீட்டிலிருந்த பெண்டுகள், பிரம்மாசாரிகள், அடியார் அனைவரும், ''ஹா ஹா'' என்று பேயறைந்தாற்போல் அலறி, ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள்.

இதோ, அம்மாவின் தலையில் கொள்ளிக்கட்டையின் பலத்த அடி விழப் போகிறது! ''ஒரு பைத்தியத்தின் கையாலே இதோ சாகிறேன். யாரும் இங்கே இல்லையா?'' என்ற தீனமான அலறலுடன் நம் மாதா சாய்ந்தாள்.

இயேசுநாதன் தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களும் அறியாத்தனத்தாலேயே அவ்விதம் செய்ததாக இறைவனிடம் மன்னிப்பு வேண்டிய திவ்விய நிலை, ஆணிகளின் அடி தாங்காது "ஏலோய் ஏலோய் லாமா ஸாபக்தானி" என்று அலறிய ஸாமானிய தீனமானுட நிலை இரண்டையும் காட்டியது போலவே, அம்மாவின் வாழ்விலும் அடுத்தடுத்து ஏற்பட்டதை இங்கே பார்க்கிறோம்.

பிரம்மாசாரி வரதனுக்கு ஓர் ஆவேசம் வந்தது. மின்னல் வேகத்தில் பாய்ந்து ஸுரபாலாவின் கையிலிருந்த கொள்ளியைப் பிடுங்கினார். அதை அவளை நோக்கியே ஓங்கினார். அவள் மகாபீதிகரமாகக் கூச்சலிட்டுக்கொண்டே வெளியில் ஓடினாள்.

அம்மா உடல் படபடக்க எழுந்து அமர்ந்தாள். ''பைத்தியக் காரி! என்ன காரியம் பண்ண இருந்தே! அந்தக் கை உன் உடம்பிலே தரிச்சு நிற்குமா?'' என்ற வார்த்தைகள் அவள் வசமில்லாமலே உதட்டிலிருந்து உதிர்ந்தன.

''நான் என்ன சொன்னேன்?'' என்றாள் அடுத்த விநாடி. ''என்ன சொன்னேன், என்ன சொன்னேன்?'' என்று பைத்தியம் போல் சிறிது நேரம் கேட்டுக்கொண்டேயிருந்தாள். ஒரு பரம பரிதாபமான விம்மல் அவள் தொண்டையிலிருந்து வெடித்தது.

நடக்க முடியாமல் நடந்து சென்று டாகுரின் படத்தின் முன் கைகுவித்து அஞ்சலி செய்தாள். கண்கள் மழையாகப் பொழிந்தன. டாகுரின் பாதத்தில் விழுந்து உடலே பிளந்து போவதுபோல் தேம்பித் தேம்பி அழுதாள்.

உடைந்து உடைந்து வார்த்தைகள் வெளியாயின: ''என் பிரபோ! நான் அபராதியாகிவிட்டேன். ஜன்மா எடுத்ததுக்கு ஒரு பெரிய குற்றமும் பண்ணிவிட்டேன்! என்ன காரியம் செய்துட்டேன்! இதுக்குத் தண்டனை என்ன? டாகுர், டாகுர், என்னோட இந்த வாயிலிருந்து சாபம் வந்துடுத்தே, நான் என்ன பண்ணுவேன்? அறுபத்தைஞ்சு வருஷமா ஈ எறும்பைக் கூட தூஷிக்காமல் இருந்ததெல்லாம் சொப்பனமாப் போச்சு, அப்பனே! நான் அம்மாவாக மட்டுமே இருக்க முடியும்னு நினைச்சுண்டிருந்தேன். இன்னிக்கு அம்மாத்தன்மை என்னை விட்டுப் போச்சே! இனி இந்தச் சரீரமும் போய்விட வேண்டியது தான், பிரபு. உங்களோட உலகத்துலே அம்மாவாக வாழத் தெரியாத எனக்கு ஏது இடம்? போறும் ஸ்வாமி, போறும். இன்னமும் பராமுகம் பண்ணுதேள்! இனியும் காலம் கடத்திச் சோதிக்காதேள், ஸ்வாமீ.''

கேட்கிறவர்களின் நெஞ்சமெல்லாம் கரைந்துருகக் கதறினாள் அம்மா.

மாத்ரு தர்மமாகிய அன்பிலேயே ஊன்றியிருந்த வரையில் அம்மா மோட்சத்தை எண்ணவில்லை, அன்பு செய்வதே மோட்ச இன்பமாயிருந்தது. இன்று தர்மம் தவறியவுடன் உலகை விட்டுப் பெறுகிற மோக்ஷத்தை டாகுரிடம் யாசித்தாள்.

டாகுர் செவி சாய்த்துவிட்டார்! அன்று அம்மா படுத்த படுக்கையானதுதான். அதுவே அவளை மீளா நித்திரைக்கு இட்டுச் சென்றது.

52. உடலை உகுத்தாள்; உலகை உகுப்பாளா?

அனைத்திலும் நிறைந்துள்ள பொருள் எதுவோ அது அழிவதேயில்லை என்று உணர்வாய். என்றும் மாறா அப்பொருளை அழிக்கும் ஆற்றல் எதற்கும் இல்லை. நித்திய வஸ்துவாய், நாசமற்றதாய், அளவிடற்கரியதாய் உள்ளவன் சரீரி; அவன் எடுக்கும் சரீரங்களுக்கே அழிவுண்டு.

—பகவத் கீதை 2-17, 18

1919 டிஸம்பர் பதின்மூன்றும் தேதி; ஜயராம்பாடியில் ஒரே ஜயகோஷம். அம்மாவின் ஜயந்தித் திருநாள் அல்லவா? உடல்நலம் இழந்த அம்மா நீராடவும் முடியாமல் கடற் பஞ்சைத் தோய்த்து உடம்பைத் துடைத்துக்கொண்டாள். பக்தி தரும் சக்தியைக் கொண்டு டாகுருக்குப் பூஜை செய்தாள்; பிறகு அன்பு தரும் பலத்தைக் கொண்டு நீண்ட நேரம் தரிசனம் தந்தாள். அடியார் பலர் அவளுக்குச் சந்தன குங்குமம் மட்டித்தனர். மெலிந்த தோளில் ஏராளமான மலர் மாலைகள் ஏறின. அன்று அவற்றை மறுக்காமல் ஏற்று, மஹா சுமங்கலியாக, நித்திய கல்யாணியாகக் கட்டிலில் அமர்ந்து அனைவருக்கும் பாத ஸ்பரிசன பாக்கியத்தை வழங்கினாள்;

அடியார் எல்லோரும் உண்டு முடிந்த பின்பே ஆகாரம் கொள்ளுவதை ஒரு விரதமாக வைத்திருந்த அம்மா இன்று அதிசயத்திலும் அதிசயமாக, டாகுரின் பிரசாதத்தில் ஒரு சிறிதைத் தானே முதலில் உட்கொண்டாள். உணவு வகைகளைத் தனது பிரசாதமாகவும் ஆக்கி, இரட்டிப்புப் புனிதமாக்கி அடியாருக்கெல்லாம் பரிமாறச் செய்தாள். இதுநாள் வரை அம்மாவிடம் எத்தனையோ அனுக்கிரகங்களை எளிதிலே பெற்றவர்களுக்கும் அவள் புசித்து எஞ்சிய பிரசாதத்தைப் பெறும் பாக்கியம்மட்டும் கிடைத்ததில்லை. இன்று அந்தக் குறையைத் தீர்த்துவிட்டாள் தேவி. இதில் ஆனந்தம் கொள்ளும்போதே சில உள்ளங்கள், 'அம்மா வழக்கத்துக்கு மாறாக நடந்துகொண்டாளே! இந்த ஜயந்திதான்...?' என வேதனையில் சிந்தித்தன.

அதன் பின் அம்மாவின் காய்ச்சல் உக்கிரமாயிற்று. அப்போதும் அடியார்கள் வந்தவண்ணம் இருந்தனர். முன்னிலும் அதிகமாகவே வந்தனர் - அம்மா இந்தப் புவியில் இருப்பதற்குள் அவளைக் கண்டுவிட வேண்டும் என்பதால். எல்லையிலா

அசக்தியுற்றிருந்த போதிலும் அம்மாவுக்கு அவர்களை ஏமாற்ற மனம் வருவதில்லை. அவர்களிடம் பேச முடியாமல் பேசினுள். ஏன், மந்திரோபதேசம்கூடச் செய்தாள். சிதைந்துகொண்டே யிருக்கும் சரீரத்தில் அவர்களது பாவத்தை வாங்கிப் புதைத்துக்கொண்டு மேலும் துயர் அநுபவித்தாள்.

காசியில் ஏதோ முக்கியமான பணியில் ஈடுபட்டிருந்த சாரதாநந்தர், அம்மாவைக் கல்கத்தா உத்போதனில் 'கடுங் காவல்' வைத்தாலே பக்தர்களின் படையெடுப்பைத் தடுக்க முடியும் என்று தீர்மானித்தார். அப்படிச் சொன்ஞல் அம்மா வரமாட்டாள் என்பதால் அவளுக்கு நிபுணர்களைக்கொண்டு சிகித்சை செய்ய வேண்டியது தங்கள் கடமை என்றும், அதன் பொருட்டு அவள் கல்கத்தாவுக்கு வந்தாக வேண்டும் என்றும் தகவல் அனுப்பினுர்; அம்மாவும் சம்மதித்தாள்.

ராது, ஸுரபாலா, நளினி, மாகு, பிரம்மசாரி வரதன் ஆகியோர் புடைசூழ அம்மா ஜயராம்பாடியை விட்டுப் புறப்பட்டாள். (இடைக்காலத்தில் அம்மாவிடம் அநியாயமாகச் சண்டை போட்டுப் பிரிந்த நளினி, மாகு ஆகியோரையும் சிறிது காலத்துக்குள் சகிப்பு சொரூபிணியான சாரதை ஜயராம்பாடியில் தன்னுடன் சேர்த்துக்கொண்டு விட்டாள்.)

* * *

'ஸ்வர்காதபி கரீயஸீ' (பொன்னுலகினும் மேலானது) என்று சொல்லி எந்தப் பிறந்தவூர் மண்ணை அம்மா தலையில் தூவிக்கொள்வாளோ அந்த ஜன்ம ஸ்தலத்திலிருந்து அம்மா விடை கொண்டது அன்பும் சோகமும் இழையும் நிகழ்ச்சி.

ஊர்த் தெய்வங்களனைத்திடமும், "போகிறேன்.. போகிறேன்!" என்று சொல்லிக்கொண்டாள்.

குழந்தைப் பிராயத்திலிருந்து எத்தனையோ முறை தன் புண்ணிய மேனி திளைக்க நீராடிய புண்ணியபுகுர் ஏரிக் கரைக்குச் சென்று நிமலமாக நின்ருள். அங்கிருந்து திரும்புகையில் படித் துறையில் தடுக்கி விழுந்தாள் தேவி. ஊராருக்கு நெஞ்சிற் பட்டாற்போல் இருந்தது.

டாகுருக்குப் பூஜை செய்துவிட்டு அந்தப் படத்தைத் துணியில் சுற்றி ஒரு பெட்டியில் வைத்தாள். விழுந்து நமஸ்கரித்தாள். அந்தப் பூஜா கிருகத்தில் பிரேமைச் சிகரமான அம்மாவின் சிரம் கடைசி முறையாகப் படிந்தது.

வாசலில் பல்லக்கு வந்து நின்றது.

அம்மா சிரித்தாள். ''என் சிம்மவாஹினியோட எல்லைக்குள் நான் பல்லக்கிலே ஆரோகணிச்சுப் போவேனா? ஊஹூம்! கிராம எல்லை முடிகிற வரை நடந்தே வருவேன்'' என்று கிளம்பினாள். வயோதிகம், வியாதி, அதோடு காலையில் குளக்கரையில் தடுக்கி விழுந்த வலி வேறு. உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. ஆயினும் பல்லக்கில் ஏறாமல் பாதமலர் நோக நடந்தாள்.

ஊர் ஜனங்கள் வந்து மொய்த்துக் கொண்டனர்.

''தேவீ, காளீ! உடம்பெல்லாம் குணமாகி, சீக்கிரமே திரும்பி வா, தாயே! எங்க கண்கண்ட தெய்வமே!'' என்று கூறி அவர்கள் நமஸ்கரித்தார்கள்.

''சகலமும் டாகுர் கையிலே இருக்கு; அவர் விட்டபடியாகும்'' என்று அம்மா விட்டேற்றியாக விடை பகர்ந்தாள்.

''அப்படிச் சொல்லாதே, மகராஜீ! எங்களை மறந்துடாதே, தாயே!'' என்று மக்கள் முறையிட்டனர்.

''உங்களை மறக்கறதா? அது நடக்காத காரியமாச்சே'' என்று கருணை கொட்டச் சொல்லிக்கொண்டே நடந்தாள் அம்மா.

கிராம எல்லையைக் கடந்ததும் ஜயராம்பாடி என்ற அந்தப் பரம பாக்கியம் செய்த கிராமத்தைத் திரும்பிப் பார்த்துக் கைகுவித்தாள். ''ஸிம்மவாஹினி, நமஸ்காரம்! ஷஷ்டி மாதா, நமஸ்காரம்'' என்று ஊர்த் தெய்வங்களின் பெயர்களைச் சொல்லி வணங்கினாள்.

அவள் பல்லக்கிலே அமருகிற தருணத்தில் தம்பி பிரஸன்னரின் இரண்டாவது மனைவி ஸுவாஸினி, அம்மாவுக்குத் தாம்பூலம் அர்ப்பணித்து நமஸ்கரித்தாள். ''ஸுவாஸின்யர்சன: ப்ரீதா'' என்று லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்வதற்கேற்ப, அதை அம்மா பிரீதியுடன் ஏற்று அவளைத் தழுவி ஆசி வழங்கினாள். அவள் கொண்டு வந்திருந்த கும்ப தீர்த்தத்தால் தன் பாதத்தைக் கழுவுமாறு பிரம்மசாரி ஹரியைப் பணித்தாள் அம்மா. அவர் அவ்விதமே செய்தார். ''இந்தா என் ஞாபகார்த்தம்'' என்று அவரிடம் தான் போர்த்திக் கொள்ளும் துப்பட்டாவை வீசினாள்.

கிராம மக்கள் அனைவரும் நனைந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருக்கையில், 'ஜய் மாதாஜி' என்ற கோஷத்துடன்

சிவிகைதூக்கிகளின் தோள்மீது பல்லக்கு உயர்ந்தது. விருவிரு வென்று நகர்ந்தது: பார்வையிலிருந்து மறைந்தது.

பல்லக்குக் குலுக்கலில் அம்மாவின் உடல் ஆடிக் களைத்து விட்டது. வழியில் சாந்திநாதர் ஆலயம் வந்தவுடன் இறங் கினாள். ஸுவாஸினி செய்து அனுப்பியிருந்த பட்சணங்களை சாந்திநாத சிவனுக்கு நிவேதனம் செய்தாள்; அங்கே கூடி யிருந்த ஏழைப் பாலகர்களுக்குத் தானே அதை விநியோகம் செய்தாள். உடன் வந்த மற்றவர்களுக்கும் அளித்தாள். ராது வேறு ஒரு பல்லக்கில் முன்னமே சென்றுவிட்டதால், ''ராது வுக்கு'' என்று சொல்லிக்கொண்டு சிறிது பட்சணத்தைப் புடவைத் தலைப்பில் முடிந்துகொண்டாள். பாச முடிச்சு இன் னும் பூரணமாக அவிழவில்லைதான். முற்றிலும் அவிழ்ந்திருந் தால் அம்மாவின் உடல் இந்த உலகில் இருந்திருக்கவே முடியாதே!

''என்னுடைய ரேழி'' என்று பிரீதியுடன் கூறும் கோயால் பாரா ஆசிரமத்தில் கடைசி முறையாக சிரமபரிகாரம் செய்து கொண்டாள் அம்மா. வழியிலே சில வஸ்துக்கள் களவு போனதாகவும், ஜயராம்பாடியிலேயே சில பொருள்களை மறதியில் விட்டதாகவும் தெரிந்தது. ''கார்த்தாலே எழுந்ததி லிருந்து எல்லாம் அபசகுனமாயிருக்கு'' என்றாள் அம்மா.

அங்கிருந்து புறப்பட்டுப் பல்லக்கில் ஏறும் சமயத்தில், ''அடடா, இது பிரஸன்னனுடைய கைத்தடி. நான் உபயோகிச் சுண்டிருந்தேன். கைப் பிசகா எடுத்துண்டு வந்துட்டேன். அவன் கிட்டே சேர்த்துடு'' என்று கூறி, ககன் என்ற பிரம்ம சாரியிடம் கழியைக் கொடுத்தாள். பிறந்தகத் துரும்பும் தன்னிடம் இருக்கக் கூடாதாம்! அதற்குக் கூலியாக இந்த அழகான வீட்டில் இன்னொரு பிறவி எடுக்க வேண்டி வருமோ என அஞ்சினாளோ என்னவோ?

ககனை அருமையாகப் பார்த்தாள். ''உன்னைப் பார்த்துக்க ஷரத் இருக்கான்'' என்றாள்.

ககனுக்கு ரத்தம் சில்லிட்டது.

ஜய்ப்பூரில் பல்லக்கை இறக்க சொன்னாள். ''போன தடவை நாம் சமைச்சுச் சாப்பிட்ட குடிசை அதோ பாழாகிக் கிடக்கு. நம்ம குடிசை....'' என்று சிரித்தாள் அம்மா. அவள் எந்தக் குடிசையைச் சொல்கிறாள் என்று உடன் வந்தவர் புரிந்துகொண் டிருப்பார்களா?

மேலும் பல காதங்கள் சென்றபின் அம்மா மீண்டும் பல்லக்கை விட்டு இறங்கினாள். மரத்தடியில் ஜமுக்காளத்தை

விரித்து அமர்ந்துகொண்டாள். பல்லக்குத் தூக்கிகளுக்கு அவல் வாங்கி வருவதற்காக வரதனிடம் இரண்டு ரூபாய் கொடுத்து அனுப்பினாள். அங்கிருந்த சுள்ளிகளைக் கொளுத்தி மாகுவின் கைக்குழந்தைகளுக்குப் பால் காய்ச்சிக் கொடுத்தாள். அன்பும் ஊழியமும் அவளது உடலோடு அப்படி ஊறிப் போயிருந்தன!

கல்கத்தா உத்போதனில் வந்திறங்கிய அம்மாவைக் கண்டதும் யோகின்-மாவும் கோலாப்மாவும் பதறிவிட்டனர்.

''அம்மா, இப்படி எலும்புக் கூடாக ஆயிட்டேளே! உங்களுக்கு இத்தனை 'உடம்பு'ன்னு எங்களுக்கெல்லாம் தெரி விக்காமலே கிராமத்தில் இருந்துட்டேளே'' என்று அவ்விரு வரும் அரற்றினர். அம்மா அவர்களைத் தடவிக்கொடுத்து ஆசுவாசம் செய்தாள்.

டாக்டர் கஞ்ஜிலால் என்ற ஹோமியோபதி வைத்தியர், கவிராஜ் சியாமாதாஸ் வாசஸ்பதி என்ற ஆயுர்வேத நிபுணர், டாக்டர் விபின் விஹாரி கோஷ் என்ற ஆங்கில முறை மருத்துவர் ஆகியோர் அம்மாவுக்குச் சிகித்சை செய்தனர். என்ன செய்து என்ன? அம்மாவின் நோய் அவர்களுக்குப் பிடிபடவே இல்லை. அவளை வறுத்தெடுத்தது தாபஜ்வரம். தினமும் மாறி மாறித் தேக உஷ்ணம் ஏறுவதும் இறங்குவது மாக, வாரக் கணக்கில் ஓடியது.

எப்பேர்ப்பட்ட இனிய அம்மாவுக்கு எப்படிப்பட்ட கொடூர சித்திரவதை! உடல் வதையைவிட உள்ளத்தின் வதைப்பே அதிகமாக இருந்தது. அவளைப் பொறுத்த மட்டில் அது தாபஜ்வரம் அல்ல; சாப ஜ்வரமாகவே இருந்தது. அன்று கொள்ளிக்கட்டையை ஓங்கி வந்த ஸுரபாலாவைச் சபித்த தற்காகத் தனக்குள்ளேயே கொள்ளியைச் செருகிக்கொண்டு மாதக் கணக்கில் கடுங் காய்ச்சலை அநுபவித்தாள். அவளே பகர்ந்ததுபோல், நினைத்த மாத்திரத்தில் தன் உடம்பைக் கர்ப்பூரமாகக் கரைத்துச் செல்லக் கூடியவள்தான் அம்மா! ஆயினும் உலக நியதிப்படி தவற்றுக்குத் தண்டனை அநுபவிக்க வேண்டும் என்றே, பிறரது பாபங்களை வாங்கிக்கொண்ட தற்காகவும், தன் வாய் திறந்து சபித்ததற்காகவும் அநுப வித்தாள்! மனித காயம் படைத்த எவரும் அம்மாவைப்போல் உழைக்க முடியாது, பொறுமை காட்ட முடியாது, அன்பு செய்ய முடியாது என்பது மட்டுமின்றி, அவளைப்போல் எந்த மனித காயத்தாலும் அத்தனை நீண்டகாலம் காய்ச்சலைத் தாங்கியிருக்கவும் முடியாது!

ஆனாலும் ஏனோ அந்தச் சாபம் அதனால் சக்தி இழக்கவில்லை. தன்மீது கொள்ளி வீச வந்த கை சரீரத்திலிருந்து இற்று விழும் என்று அம்மா மறைமுகமாகச் சொன்னது மெய்யாகத் தொடங்கியது. அம்மா உலகிலிருந்து மறைந்தவுடனே ஸுரபாலாவின் கையில் குஷ்டம் கண்டு அது அழுகத் தொடங்கியது. இது அம்மாவுக்கு முன்னரே தெரியாதா என்ன? ஸுரபாலாவின் கை அழுகி அவள் காணாவிட்டாலும் தன் மனசு அழுகிற்றே என்று அழுதுகொண்டாள்.

வாலி வதத்துடன் ராமாயணம் முடிந்திருந்தால் எத்துணை மாளா வேதனையாக இருக்கும்? அம்மாவின் பரம புண்ணியமான சரிதையின் முடிவில் இப்படி ஒரு பயங்கர சோதனை ஏன்தான் நிகழ்ந்ததோ? ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியாவது வாலி வதத்தில் தன் நடத்தை முற்றிலும் தர்மமானது என்று உறுதியாகக் கருதியதாகவே காண்கிறோம். நம் அம்மாவோ தன்னைக் குற்றவாளியாகவே கருதிக் குமைந்தாள். விசுவமனைத்துக்கும் தன்னை அன்னையாக உணர்ந்த அம்மாவின் துயரம் விசுவ வேதனையே எனலாம். இந்தச் சரிதையைப் படிப்பவர் யாவரும் அந்த விசுவ வேதனையில் பங்கு பெறுவதால் ஒருவேளை உலகின் பாப பாரம் சிறிது குறையுமோ என்னவோ? உலக வாழ்வில் பங்குகொண்டு உலகத் துயரையும் பாபத்தையும் வாங்கிக்கொண்ட அம்மா, தன் குழந்தைகளான நம்மை அவளுக்குக் கடனாளியாக நிறுத்திவிடக் கூடாது என்று காருண்ய மனத்தில் எண்ணினாளோ? அதற்காகவே அவளது துயரத்திலும் பாபத்திலும் நாம் பங்குகொள்ள வேண்டும் என இப்படிச் சாபமிட்டு, தானும் பாபம் சம்பாதித்ததாக ஒரு நாடகம் நடித்தாளோ? நம் அம்மாவின் தவற்றுக்காக, பச்சாத் தாபத்துக்காக இன்று நாம் வடிக்கும் கண்ணீரே பரம புனித மானது. வாழ்நாள் முழுதும் சாரதை புரிந்த அநுக்கிரகத்தைப் போலவே, வாழ்நாளில் ஒரே முறை அவளிட்ட சாபமும் நம்மைத் தூய்மைப் படுத்துகிறது!

பராசக்தியின் சங்கற்பத்தை நாம் அறியவொண்ணாது. எக்காரணத்தாலோ அம்மாவினால் தான் இட்ட சாபத்துக்கு விமோசனம் தர முடியாமலிருந்தது. ஆயினும் அம்மா உடலை உகுத்த சிறிது காலத்திலேயே அவளது 'வெறித் தோழி' ஸுரபாலாவும் அவளைச் சென்றடைந்துவிட்டாள். குஷ்ட ரோகியாக அவள் நீண்ட காலம் தவிக்காமல் அம்மா அவளைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டாள்.

ராதுவிடம் அம்மாவின் பாச முடிச்சு பெருமளவு அவிழலாயிற்று.

அத்தை படுத்துவிட்டாள், இனி எழுந்திருக்க மாட்டாள்; துர்ப்பல பிண்டமாகவும் துர்க்குண முண்டமாகவும் உள்ள தன்னைக் கணவனும் பிரியமாக வைத்து நடத்தமாட்டான் என்று ராதுவுக்குத் தெரிந்துவிட்டது. ஆத்திரத்திலும், அவலத்தனத்திலும் அடியோடு அறிவிழந்தாள் ராது. தான் பெற்றெடுத்த பச்சைக் குழந்தையையே கரித்தாள். அம்மாவுக்கு அற்புதமாக சுசுரூஷை செய்த சரளாதேவிதான் ராதுவின் குழந்தைக்கும் செவிலித்தாயாக இருந்தாள்.

தாய் கொடுமைப்படுத்திய சேய் நோய்வாய்ப்பட்டது. டாக்டர் கஞ்ஜிலால், "ராது ஒரு வழியாக இந்தக் குழந்தையை விட்டுப் போனாலொழிய நான் வைத்தியம் செய்து பயன் இல்லை" என்று அம்மாவிடம் கூறினார்.

அந்நியர் அசலார் அனைவருக்கும் அன்னையாக இருந்த சாரதைக்கு, ராதுவின் போக்கு சொல்லொணா வேதனையை-ஏன், தோல்வி உணர்ச்சியையே-கொடுத்தது. "ராது! உன்னை நானுக்கும் எடுத்து அரும்பாடுபட்டு வளர்த்தேன். உனக்காக என் மற்றக் குழந்தைகளை எல்லாம் ஒரளவு அலட்சியம் செஞ்சேன். அப்படி யிருந்தும் உன்னை உத்தம ஸ்திரீயாக உருவாக்க என்னாலே முடியவில்லையே! நீ எங்கிட்டேயிருந்து எதையுமே எடுத்துக் கொள்ளவில்லையே!" என்று கண்ணீர் முட்டக் கூறினாள்.

பரிதாபம்!

கலியின் கோர தாண்டவத்துக்கு இடையில் பாரத ஸ்திரீ தர்மத்தைப் பூர்ணமாக வாழ்ந்து காட்டி ஜயக் கொடி நாட்டிய தேவி, தோல்வி உணர்ச்சியும் கொண்டாள்! அரற்றினாள்: "டாகுர் சித்தத்திலே என்ன இருக்குன்னே புரியலை; தன்னையே ரட்சிச்சுக்கத் தெரியாத ராதுவுக்குக் குழந்தை வரம் வேறு ஏன் கொடுத்தாரோ?"

அம்மா ஒருவிதத்தில் அமானுஷ்யமானவள் எனில், அவளையே உலகில் கட்டிப்போட வந்த ராதுவும் இன்னொரு விதத்தில் அமானுஷ்யமானவள்தான். அம்மாவே புரிந்து கொள்ளாத அந்தப் புதிரை நாம் எப்படி விளங்கிக்கொள்ள இயலும்? அற்புத தர்மம் கொண்ட பிரபஞ்சத்தைப் பிரம்மத்திடம் தோற்றுவிக்கும் ஸ்ரீ வித்யை நம் அம்மா. அந்த தர்மத்தைக் குலைக்கும் சக்தியும் அவளுக்கு உண்டு. இந்த அவித்யா வடிவே ராது. அதுவே விளக்கவொண்ணாத 'மாயை'.

அன்று புத்தாண்டு தினம். உத்போதனில் மாலை வழிபாடு அப்போதுதான் முடிந்திருந்தது. ராதுவின் குழந்தை தீனமாக அழுகிறது. ''சரளா எங்கே போய்த் தொலைஞ்சா? அவளைக் கூப்பிட்டு இந்தப் பீடைக்குப் பால் போட்டச் சொல்லுங்கோ'' என்று ராது கத்துகிறாள்.

அம்மா தன் படுக்கையிலிருந்தே, ''இப்போ பால் கொடுக்கிற வேளையில்லை. சித்த முன்னாடிதான் பால் கொடுத்துட்டுப் போனா....'' என்று ஈன ஸ்வரத்தில் குரல் கொடுக்கிறாள்.

ராது ரௌத்திராகாரமாக இடைமறிக்கிறாள்: ''இந்த வீட்டிலே மூணு தலைமுறையா உனக்கு அடிமையாயிட்டோம். முதலில் எங்கம்மா. அப்புறம் நான். இப்போ இந்தக் குழந்தையும் உன் அடிமை. நீ மனசு வைச்சாத்தான் அதன் பசிக்கிற வயித்துக்குப் பால்!'' குழந்தையன்பே அறியா ராது சொல்லத் தகாத வார்த்தைகளால் அம்மாவைச் சுட்டெரிக்கிறாள்.

''போறும், போறும், எனக்கு உங்களோடு போறும். மகராஜி! உன் பிள்ளையை எடுத்துண்டு நீ இந்த நவகண்டத்திலே எங்கே வேணா போய் க்ஷேமமாய் இரு'' என்றாள் அம்மா.

''நான் ஏன் போவேன்? நீதான் போயேன்! ஒரேயடியா உலகத்தை விட்டுப் போ. என் குழந்தை வாயை நனைச்சுக்கப் பால் கிடையாதுன்னு சொன்ன உன்னைச் சிதையிலே வைச்சு உன் வாயிலே எல்லாரும் அரிசி கொட்டட்டும்!'' மனிதர்களால் பேச முடியாத கொடூரத்தை அன்புத் தத்துவமான அம்மாவின் தத்துப் பெண் மொழிந்தாள்.

அம்மா கரை கடந்த வேதனையும், எல்லையற்ற அநுதாபமும் பொங்க, ''பெண்ணே! என்னைப் போகச் சொல்லிட்டே. நான் போக வேண்டியவள்தான். ஆனால் என்னைத் தவிர உன்னை யார் பார்த்துக்க முடியும்? நான் போனவிட்டு உனக்கு என்ன கதி என்கிறது என் கண் முன் தெரியறது. அதை நினைக்கிறச்சே, வருஷப் பிறப்பா இருக்கிற இன்னிக்கு, 'எனக்கு முன்னாடி இந்த அவலப் பெண் போய்ச் சேராதா?'ன்னு வேண்டிக்கிறேன். உன்னை விட்டுட்டு நிம்மதியில்லாமல்தான் சாகப் போகிறேன். நீ போயிட்டா நிம்மதியாப் போவேன். ஆனால் டாகுர் சித்தத்தை யார் மாற்ற முடியும்?'' என்றாள்.

(அம்மா மறைந்து ஒன்பது மாதத்துக்குள் ராதுவை அவளது கணவர் ஒதுக்கி வைத்து மறுமணம் செய்துகொண்டு விட்டார். ஸ்வாமி சாரதாநந்தர் கருணையுடன் வழங்கி வந்த

மானியத்தைக் கொண்டு அவள் ஜயராம்பாடியில் நடைப்பிணமாகக் காலம் தள்ள வேண்டியதாயிற்று. ஆனால் இது ஸுரபாலாவுக்கு அம்மா கொடுத்தது போன்ற சாபமல்ல. 'இப்படி நடக்கவேண்டும்' என்று அம்மா சபிக்கவில்லை. 'இப்படித்தான் டாகுர் நடத்தப் போகிறார்' என்று முன் கூட்டியே கண்டு அதை வெளியிட்டாள்!)

பக்கத்திலிருந்த பக்தையிடம் திரும்பி, "மகளே! என் எலும்புக்குள்ளேகூட இவாளுடைய உபாதை துளைச்சுண்டு போய் ஜ்வாலை வீசித் தகிக்கிறதம்மா! விசிறியைத் தண்ணியிலே தோய்ச்சுண்டு வந்து கொஞ்சம் விசிறுவியா?" என்றாள் அம்மா.

உலகெல்லாம் திவ்விய மாதாவாகப் போற்றிய சாரதையைச் சுற்றத்தினர் புரிந்துகொள்ளாமல் பாடாகப் படுத்தியது விந்தையாகத் தோன்றலாம். இதில் விந்தையில்லை; அதுவே அவதார உத்தேசம். ஓயாத தொந்தரவுக்கிடையிலும் ஆத்ம சுதந்தரத்தையும் அன்புச் சுதந்தரத்தையும் வாழ்ந்து காட்ட வந்தாள் அம்மா. அப்படியானால் அவளைச் சுற்றியிருந்தவர் ஓயாமல் உபாதைப்படுத்தித்தானே ஆகவேண்டும்? அவதாரமும் ஒரு நாளில் முடிந்தாக வேண்டும்; அன்பு குறைந்தாலொழிய உலகைவிட்டுப் புறப்பட முடியாது! எனவேதான் அம்மாவும் அலுப்புக் கொண்டாள்!

*　　　*　　　*

பிரபல வைத்திய டாக்டர் பிராணதன போஸ் அம்மாவின் முக்கிய வைத்தியரானார். ஆனால் அவராலகூடப் பிராணனைத் தர முடியுமா என்ன? அம்மா நலிந்துகொண்டே வந்தாள்.

வைத்தியர்களிடம் அம்மா காட்டிய அன்பு அபரிமிதமானது. அவர்களுக்குப் பிரசாதமும் பட்சணமும் வாரி வாரி அளிக்கச் செய்வாள்; கிறிஸ்துவரான பிராணதன போஸ் ஆரம்ப காலத்தில் எக்கச்சக்கமாகப் பணம் வாங்கி வந்தார். ஆனால் நாளடைவில் அம்மாவின் அன்பில் உருகி, தமக்குப் பணம் ஏதும் வாங்கிக்கொள்ளாததோடு தம் செலவிலேயே டாக்ஸி வைத்துக்கொண்டு வரலானார்.

காய்ச்சலோடு கடுங் கோடையும் சேர்ந்து தேவியைத் தகித்தது. "எங்கேயானும் ஜலத்துக்கு அடியிலே கொடி அடர்ந்த இடத்திலே முழுகிக் கிடக்கணும் போல இருக்கு. என்னைக் கங்கைக் கரையிலே கிடத்துங்கோ" என்பாள்.

உலகுக்குத் தண்மை சொரிந்த அம்மாவைச் சுற்றி ஐஸ்மயமாக்குவார் அருமை ஷரத். தமது ஜிப்பாவைக் கழற்றி

விட்டு முதுகைக் குனிந்துகொண்டு அம்மாவின் கையை எடுத்து அதில் வைத்துக் கொள்வார். "குளிர்ச்சியாக இருக்கடா, குழந்தை" என்பாள் மாதா. அவர் சரத்; இவளோ சாரதை. சரத்சந்திரனின் அன்புக் குளிர்ச்சிக்குக் கேட்பானேன்?

இப்போதெல்லாம் பக்தர்களை அம்மாவிடம் அனுமதிப்பதில்லை. இருப்பினும் சிலர் அம்மாவின் அண்மைக்கு வந்துவிடுவர். இத்தனை இன்னலிலும் அம்மா இன்முகம் காட்டுவாள். அவர்களது க்ஷேம லாபங்களை வினவுவாள். ஜுர வேகத்தில் தன் வயமிழந்தபோது யாரார் வந்திருந்தார்கள் என்று கேட்டறிந்து, "அவாளை விசாரிக்காமல் போயிட்டேனே என்று வருத்தப்பட்டுண்டு போயிருப்பா. நான் அவாளுக்கெல்லாம் ஆசீர்வாதம் பண்ணறேன்னு தெரிவியுங்கோ" என்பாள்.

இச்சமயத்தில் அவளுக்குச் சுசுரூஷை செய்வதைப் பரம பாக்கியமாக எண்ணிப் பலர் போட்டி போட்டபோதிலும் அவள் அத்தியாவசியம் தவிர வேறெதற்கும் எவரது பணிவிடையையும் ஏற்க மறுத்தாள். ஊழியம் புரியவே வந்த அவளால் பிறர் ஊழியத்தை ஏற்க முடியுமா? பசு எங்கேனும் பால் குடிப்பதுண்டா?

அடியார் ஒருவர் தனக்கு விசிறுவதை அரை ஸ்மரணையில் இருந்த அம்மா மனத்தில் வாங்கிக்கொண்டாள். விசிறுவதை நிறுத்துமாறு ஜாடை செய்தாள். "இந்த மெலிசான கைவிசிறியாலே விசிறுகிறதில் சிரமமே இல்லை, அம்மா. அப்படி எனக்குச் சிரமம் தெரிஞ்சால், நானே விசிறுவதை நிறுத்திவிடறேன்" என்றூர் அந்த பக்தர். அம்மா கண்களை மூடிக்கொண்டாள். உறக்கமின்மையால் அவதியுற்ற அம்மா விசிறியின் இதமான காற்றில் நித்திரை கொண்டதாக எண்ணி அடியார் மகிழ்ந்தார். அம்மாவின் நயனங்கள் சிரமத்துடன் திறந்துகொண்டன. "உன் கை வலிக்குமே என்கிற நினைப்பிலே எனக்குத் தானாக வருகிற தூக்கம்கூடப் போய்விடுகிறது, ராஜா! போறுமப்பா, இந்தக் கட்டைக்கு உபசாரம்" என்று பேச முடியாமல் பேசினாள் தயாமயி. பக்தர் விசிறியைக் கீழே வைத்தபின்தான் உறங்கினாள்! இப்படிப்பட்டவளே தனக்குத் தண்ணீர் தோய்ந்த விசிறியால் விசிறிவிடுமாறு சொன்னாள் எனில், ராது அவளை எப்படி தகித்திருக்க வேண்டும்?

அம்மா இறுதிப் படுக்கையிலும் மும்முறை புத்திர சோகத்துக்கு ஆளானாள். காசியில் அத்புதாநந்தர் (அம்மாவின் அத்தியந்த 'லாடு') காலகதி அடைந்தார். பலராம் போஸின்

மகன் ராமகிருஷ்ண போஸும் ராமகிருஷ்ணரிடம் போய் விட்டார்: தம்பி என்பதைக் காட்டிலும் பிள்ளை என்றே கருதி அம்மா எடுத்து வளர்த்த வரதாப் பிரஸாத் நிமோனியாக் காய்ச்சலில் கண் மூடிவிட்டார்: அம்மா தானும் கண்ணை மூடுகிற நாளுக்கு அவாவலானாள்,

'லாடு'வும் ராமகிருஷ்ண போஸும் மறைந்தபோது புலம்ப மாட்டாமல் புலம்பிய அம்மா, அருமை 'பரது' காலமான போதோ அசாத்தியத் தெளிவுடன் இருந்தாள்; நிமோனியாக் காய்ச்சலில் கிடந்த வரதரின் உடல்நிலைபற்றி அம்மா தினமும் விசாரித்து வந்தாள். ஒருநாள், "இன்னிக்கு இந்த வராந்தா விலே நின்னுண்டு பரது என்னைப் பார்த்தான். போயிட்டானா என்ன?" என்று வினவினாள்.

அதுவரை அம்மாவிடம் மூடி வைத்திருந்த துயர சம்ப வத்தை அடியார்கள் வெளியிட வேண்டியதாயிற்று.

'செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச் சாம்பிணங்கள் கத்தும் கணக்கென்ன?' என்றார் பட்டினத்தடிகள்; 'நானும் இதோ போகப் போகிறேன்: சிறிது முந்திக்கொண்ட தம்பிக் காக ஏன் அழவேண்டும்?' என்று அம்மா எண்ணினாள் போலும்! பிரம்மசாரி கோபேஷிடம் அவள், "பரது செத்துப் போயிட்டான், தெரியுமோ?" என்று சகஜமாகக் கேட்டபோது, அவரால் அம்மா தன் அருமைத் தம்பியைத்தான் குறிப்பிடு கிறாள் என்றே புரிந்துகொள்ள இயலவில்லை. உறுதிப்படுத்தும் முறையில், "ஃபுதியோட அப்பாவைத்தான் சொல்கிறேன்" என்றாள் அம்மா, அழுகைப் பசை கலவாத குரலில்;

* * *

"இந்தச் சரீரத்தாலே டாகுருக்கு என்ன காரியமெல்லாம் பண்ணணும்னு இருந்ததோ, அத்தனையும் பண்ணித் தீர்த் தாச்சு. மற்றவாளுக்கு வழிகாட்டறதுக்கு எவ்வளவு செய்ய ணுமோ அதுக்கும் அதிகமாகவே செஞ்சு காட்டியாச்சு; இப்போ என் மனசு அவர் ஒருத்தரைத்தான் தேடி ஓடறது; பாருங்களேன், ஒரு காலத்தில் இந்த ராதுகிட்ட எத்தனை பாசம் வைச்சிருந்தேன்? இப்போ அவள் என்கிட்ட வந்தாலே, எங்கே மறுபடி இந்த மனசைக் கீழே இழுத்துடுவாளோன்னு கிலியாயிருக்கு. டாகுர்தானே தம் காரியத்தை நடத்திக்கிற துக்காக என்னைத் தளையாலே லோகத்துலே பிணைச்சிருந்தார்? இல்லாட்டா அவர் போனவிட்டு க்ஷணகாலம் என்னாலே ஜீவிச் சிருக்க முடியுமா?" என்று நிச்சலனமாகக் கூறினாள் அம்மா.

ராமகிருஷ்ணர் அந்திம காலத்தில் தம்மால் பிரம்மத் தியானம் தவிர வேறு ஏதும் செய்ய இயலவில்லை என்றார். பிரம்மத்தில் ஒன்றிவிடப் போகிறார் என்பதற்கு அதுவே அறிவிப்பாயிருந்தது. இப்போது அம்மா, டாகுர் தியானம் தவிர வேறெதுவும் தனக்கில்லை என்கிறாள். குடும்ப விவகார அழுக்குகளில் அழுந்தப் புதைந்தும் நிர்மலமணியாகவே இருந்த சாரதாமணி, குடும்பத்தை விடுத்து, அவளது குடும்பமாகிய உலகை விடுத்து, டாகுரில் ஒன்றிவிட மனம் கொண்டுவிட்டாள்! அல்லது, அந்த டாகுரே அப்படி மனம் கொண்டுவிட்டார்! இதொன்றே அவளது ஒரே நினைப்பானதால், உலகை ஒதுக்கியே விட்டாள்!

அனைத்துயிரையும் அணைத்தெடுத்துக் கொண்ட அன்னை இப்போது கௌரி - மா போன்ற அத்தியந்த பக்தர்களைக் கூட அருகில் நெருங்க விடவில்லை! பிரேம மயமாக வாழ்ந்த சாரதை தன்னால் விரக்தி மயமாகவும் இருக்கமுடியும் என்று காட்டினாள். விரக்தி வந்தாலொழிய அவதார வியக்தி உலகை விட்டு விலகுவது எப்படி?

ராதுவை ஜயராம்பாடிக்கு உடனே அனுப்பிவிட வேண்டும் என்று அம்மா கட்டளையிட்டபோது அனைவரும் அதிர்ந்து விட்டனர். அதன்பின் அம்மாவின் முடிவு வெகு வெகு நெருக்கமாகிவிடும் என்பது அவர்கள் அறிந்ததே. "நீங்கள் இப்படி மனசை எங்க கிட்டேயிருந்து நீக்கி, உள்ளுக்கு வாங்கிண்டா அப்புறம் எங்கள் கதி?" என்றனர்.

"இதென்ன பேச்சு? பக்தாள் என்னிக்கும் தேடி வந்துண்டேதான் இருப்பா. அதுக்காக, சரீரம்னு ஏற்பட்ட ஒரு வஸ்து அழியாமலே இருக்க முடியுமா? என் காரியம் ஆச்சு, பாசம் போச்சு. குறுக்கே வராதேள்" என்று கண்டிப்பாகச் சொன்னாள் அன்னை.

ராதுவின் குழந்தை 'பனு' தவழ்ந்துகொண்டே வந்து அவள் மீதேற முயன்றபோது, "யாரங்கே, இந்தக் குழந்தையை எடுத்துண்டு போங்கோ!" என்றாள். குழந்தையைப் பார்த்து, "அப்பாடா! நான் எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபட்டுட்டேன். உன் ஜாலக்கு இங்கே பலிக்காது" என்றாள்.

மாகு, நளினி முதலியவர்களை ஊருக்கு அனுப்பிவிட வேண்டியதுதானா என்று சாரதாநந்தர் யோசித்தபோது, நளினி அவரிடம் வந்து, "அத்தைக்கு எங்களை அவ்வளவு கரிக்கிறதுன்னா நாங்க போகத்தான் வேணும். ஆனால் ஊரிலே என்ன சொல்லுவா? 'அந்த அம்மாகிட்டேயே வளர்ந்து ஆளான

சிறுக்கிகள் அவளை மரணுவஸ்தையிலே விட்டுட்டு வந்துடுத்து கள்'னு சொல்லமாட்டாளா?'' என்ருள்.

ஷரத் அம்மாவிடம் இதை விளக்கினர். ''சரி, சரி; அப்போ அதுகள் இங்கேயே இருந்துவிட்டுப் போகட்டும். ஆனு அவா நிழல்கூட என் மேலே விழாமல் பார்த்துக்கோ'' என்ருள் அம்மா.

சாரதாநந்தரின் கரத்தைப் பிடித்துக்கொண்டு, ''ஷரத், எல்லாரையும் உன்கிட்டே விட்டுட்டுப் போறேன்'' என்று கூறினுள். விராகத்திடையிலும் அநுராகத்தின் செம்மைக் கீற்று சிறிது தலை தூக்குகிறது!

இன்னெரு நாள், ''இந்த ஸரளாவுக்குச் 'சாப்பிடு', 'சாப்பிடு'ங்கறதைத் தவிர வேறெதுவும் சொல்லத் தெரியலே, ஷரத். இல்லாட்டா அந்தக் குச்சியை (தெர்மோமீட்டர்) சொருகிறதுக்கு வரா. இம்சை தாங்கலே'' என்ருள்.

''அம்மா, இனிமேலே உங்களை யாரும் இம்சைப்படுத்த மாட்டா; அது போகட்டும், ஒரு வாய் பால் நான் விடட்டுமா, அம்மா?'' என்று பரிவு வழியக் கேட்டார் சாரதாநந்தர்.

''சரி, அப்பனே! உன் கையாலே நாலு சொட்டுப் பால் விடு. இந்த ஸரளா ஒண்ணும் பண்ணவேண்டாம்'' என்று குழந்தை போல் கூறினுள் அம்மா.

மூக்கு வைத்த கோப்பையிலிருந்து சிறிது சிறிதாக, தேவியின் திருவாயில் பால் வார்த்தார் சாரதாநந்தர். இரண்டு விழுங்கு விழுங்கியதும் அம்மா போதுமெனக் கையைக் காட்டினுள். உடனே நிறுத்திவிட்டார் சாரதாநந்தர். அம்மாவின் தலையணைகளைச் சரிசெய்துவிட்டு, ''அம்மா, கொஞ்சம் தூங்குங்கோ. அப்புறம் இன்னெரு வாய் பால் சாப்பிடலாம்'' என்ருர்.

''பார்த்துக்கோ, ஸரளா! என் பிள்ளை எப்படி அமிருதமாப் பேசருன், பாரு. நீ நச்சுப் பண்ணறியே?'' என்ருள். ''என் மகனே! பாதி ராத்திரியிலே உனக்கு என்னலே எத்தனை இம்சை? தூங்கப்பா'' என்று கூறி அவரைத் தட்டிக் கொடுத்தாள். அவர் கொசு வலையைப் படுக்கைக்குக் கீழே சொருகிவிட்டு, அம்மாவை வணங்கிச் சென்ருர்.

அம்மாவின் 'சுமைதாங்கி' அவரே எனினும், தம் கைப்பட அம்மாவுக்கு உண்பித்ததில்லையே என்று அவருக்கு ஓர் ஆருத குறை உண்டாம்! அதை இன்று ஆற்றிவிட்டாள் அம்மா!

அம்மா தன்னிடம் அதிருப்தி கொண்டதால் ஸரளா தேவி இரு தினங்கள் ஒதுங்கியே இருந்தாள்: அரைப் பிரக்ஞையில் இருந்த தேவி இதைக் கவனித்தவுடன் ஸரளாவை அழைத்து வரச்செய்தாள்: அவள் தலையைத் தன்மார்பின் மீது சாய்த்துக் கொண்டு அவளது கன்னத்தை வருடினாள். "செல்லப் பொண்ணூ! இந்த அசட்டு அம்மாகிட்ட கோவிச்சுண்டுட்டியா? நான் ஏதாவது ஏறுமாறாகச் சொல்லியிருந்தாக்கூட மனசுலே வைச்சுக்காதே, என் ராஜாத்தி" என்று உருகிச் சொன்னாள். அம்மாவின் கொதிக்கும் உடலை ஸரளாவின் கண்ணீர் பன்னீராக நனைத்தது.

உடல் வீக்கம் கண்டுவிட்டது! அருகே ஏதோ நிழலாடியதால் அம்மா தலையைத் திருப்ப முடியாமல் திருப்பிப் பார்த்தாள். கதவருகே அன்னபூரணியம்மா தயங்கி நின்றாள். அருகில் வருமாறு சைகை காட்டினாள் அம்மா.

அம்மாவின் பக்கத்தில் வந்து நின்ற அன்னபூரணியம்மா தொண்டை அடைக்க, "அம்மா, எங்களை நிர்க்கதி ஆக்கிடுவேளா?" என்றாள்.

குளிர்ந்த துளிர்க் குரலில் அம்மா, "பெண்ணே! டாகுரைச் சரணடைஞ்சபின் ஏதுக்குப் பயப்படணும்?" என்றாள். பேச்சுத் தடைப்பட்டது: டாகுரைச் சரணடைந்து அறுபது ஆண்டுகளுக்குப் பின்னும் தான் ஒருமுறை தடுமாறி விழுந்து ஸுரபாலாவைச் சபித்தது அந்த வேளையிலும் அவளது உள் மனத்தை அரித்தது போலும்! முன்னிலும் மிருதுவான குரலில், "மகளே! ஒண்ணு மட்டும் நிச்சயமாகச் சொல்வேன்: சாந்தம் தானே சகலத்துக்கும் முடிவு? நீ சாந்தமாக வாழணும்னா, பிறத்தியார் எத்தனை தப்புப் பண்ணினாலும் அதை மனசில் வாங்கிக்காதே. மற்றவாளுடைய குற்றங்களைப் பாராட்டாமல் இரு, அம்மா. ஒவ்வொருத்தரும் தங்களுடைய குற்றங்களையே பார்த்துக்கணும். அதுதான் சிலாக்கியம். உலகம் முழுவதையும் உன்னுடையதாக ஆக்கிக்கணும். அப்படி ஆக்கிக்க முடியும். அதுக்கே அப்பியாசம் பண்ணிண்டிரு: ஆமாம், யாருமே அந்நியம் இல்லை. என் பிரிய மகளே! இந்த உலகம் பூராவும் உன்னுடையது" என்றாள்.

அம்மாவின் வாழ்க்கைத் தத்துவமே அதுதான். உலகை ஒதுக்காமல் தனதாக ஏற்ற ஆதரிச வாழ்வு அது. எதை வாழ்ந்து காட்டினாளோ அதையே வார்த்தையிலும் தந்து விட்டாள். தேவியின் மதுர அதரத்திலிருந்து உதிர்ந்த கடைசி

உபதேச மொழி இதுவே. அதன் பின் மௌனத்தில் முழுகலானாள்.

* * *

1920-ஆம் ஆண்டு, ஜுலை 21-ஆம் தேதி ஆடி மாதம் சுக்ல ஷஷ்டி. காலை ஒன்றரை மணி. ஆழ்ந்த சுவாசம் ஒன்று, சுவாச மூலமான ஹம்ஸத்திலே, ஸ்ரீ ராமகிருஷ்ண ஹம்ஸத்துள்ளே நம் அன்பு அம்மாவை இரண்டறக் கரைத்துவிட்டது.

* * *

அம்மா போய்விட்டதாகச் சொன்னார்கள். அம்மா எப்படிப் போக முடியும்? ''இந்த சாரதா சாகிறதாவது?'' என்று அவளே ஒருமுறை சொல்லியிருக்கிறாளே! ''உலகம் எல்லாம் தன்னுடையது'' என்று அப்பியசிக்கச் சொன்ன அம்மா உலகத்தை விட்டுப் போவதுண்டா?

பஞ்சபூத சரீரம் ஒன்று உண்டானால் அது அழிந்தே தீர வேண்டும். ஆனால் பஞ்சபூதங்களையும் செய்த அன்பு எப்படி அழிய முடியும்?

பஞ்ச பூதத்திடை மாட்டிக்கொண்டதற்குக் கூலியாக அந்த அன்பும் ஒரு சமயத்தில் அலப்புறுகிறது. அப்போது உலகை வெறுத்து ஓட எண்ணுகிறது. சரீரச் சட்டையை அவிழ்த்து ஓடியும் விடுகிறது. அப்புறம் பஞ்சபூதச் சட்டை கழன்று, பரமாகாசமாக ஆனவுடன் அலப்புற எதுவுமே இல்லை என்று அது உணர்கிறது. அரூபமாகவே மீண்டும் மீண்டும் தன் அன்பைப் புரியத் தொடங்குகிறது.

நம் அம்மா சாராதாமணி நம்மை விட்டுப் போகவேயில்லை. தஞ்சம் புகுந்த நெஞ்சுக்கெல்லாம் அஞ்சல் பாலிக்கப் பக்கத்திலேயே நிற்கிறாள்!

'ராம ராம ராம ராம' என்று தாரக நாமத்தைச் சொல்லிக்கொண்டே தேவியின் தேகத்தைச் சுமந்து சென்று பேலூர் மடத்தைத் தொடும் கங்கை விளிம்பில் இறக்கினார்கள். அம்மாவின் அருமைப் பெண்கள் புண்ணிய சரீரத்தை கங்கையால் நீராட்டினர்.

அறிவுக் கனலான ஸ்வாமி விவேகானந்தர் அக்கினியில் கலந்த ஸ்தலத்துக்கு சில கெஜ தூரம் வடக்கே சந்தனக் கட்டைகள் அடுக்கியிருந்தன. சார்ந்தார்க்கு மட்டுமின்றி சாரா தார்க்கும் சந்தனமாக இருந்த சாரதா தேவியின் சரீரம் பாவன அக்கினியை மேலும் பாவனமாக்கிற்று.

விசுவதேவியின் சோகமூட்டம் போலத் தலைக்கு மேலே மழைக் கொண்டல்கள் மண்டிக் கிடந்தன. தகன காரியம் தடையின்றி நடக்குமா என்று அடியார் ஐயுற்றனர். ஆயினும் முட்டிக்கொண்டு நிற்கும் மழையைப் பொழியாமலே கண்ணீரை அடக்கிக்கொண்டு பல மணி நேரம் காத்திருந்தாள் வானமா தேவி.

அக்கினி பகவான் தன் புனிதப் பணியை முடித்துவிட்டு மௌனமாக அடங்கிப் போனார்.

வானம் தாரை தாரையாகப் பொழியலாயிற்று. அந்த மழை நீர் நிலத்திலே ஊறும்போது—

அன்புக்கு ஆசிரயமாகவும், உழைப்புக்கு உறைவிடமாகவும், பெண்மைக்குப் பேடகமாகவும், எளிமைக்கு உருவகமாகவும், அடக்கத்துக்கு அணிகலனாகவும், தூய்மைக்குத் தாயகமாகவும் பூவுலகில் அறுபத்தாறுண்டுகள் உலவிய பூஉடலின் நுண் அணுக்கள் புண்ணிய பாரத மண்ணினுள் ஊறி உறைந்தன.

அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

சக்தி ஓம்!